Koviloor Digital Library

வெளியீடு எண் 545.

உ

சிவமயம்

திருநாவுக்கரசு நாயனார்

அருளிச்செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

ஆறுந் திருமுறை


A·No:1685
Q23

ருமபுர ஆதீனம்

உரிமைப் பதிவு

விலை ரூ. 8—00.

Koviloor Digital Library



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

திருத்தருமையாதீன முதற்குரவர்


ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா மலர்

சோபகிருதுஸு - வைகாசிமீ - 20 - திங்கட்கிழமை

12—6—1963

Koviloor Digital Library



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

வெளியீடு எண் 545

1685

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

திருநாவுக்கரசு நாயனுர்

அருளிச்செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

ஆறுந் திருமுறை

[குறிப்புரையுடன்]

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம்
இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்

திருவருளாணையால் வெளியிடப்பெற்றது.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 1685

உரிமைப்பதிவு] 1963 [தருமையாதீனம்

1963 — 8/=

Koviloor Digital Library

பதிப்பாசிரியர் :

வித்துவான்.

ஒடுக்கம். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தருமையாதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

குறிப்புரையாசிரியர் :

தருமையாதீனப்புலவர், சித்தாந்தக் கலைமணி, வித்துவான்.

திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்

தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

பதிப்பகம்

ஞானசம்பந்தம் அச்சகம்,

தருமபுரம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

குருபாதம்

முன்னுரை

திருச்சிற்றம்பலம்

நன்று மாதரம் நாவினுக் கரசடி நளினம்வைத் துயினல்லால்
ஒன்று மாவது கண்டில முபாயமற் றுள்ளன வேண்டேமால்
என்று மாதியு மந்தமு மில்லதோ ரிகபரத் திடைப்பட்டுப்
பொன்று வார்புகும் சூழலிற் புகேம்புகிற் பொறியிலேம் புலனேடே.

திருச்சிற்றம்பலம்

— நம்பியாண்டார் நம்பிகள்.

திருமுறைகளுள் தேவாரத் திருமுறைகளே முதன்மையானவை. அவற்றுள்ளும், ஞானசம்பந்தர் நாவுக்கரசர் திருமுறைகளே ஒப்ப உயர்ந்தவை. இதனைச் சேக்கிழார், அவ்விரு பேராசிரியரையுமே, 'சைவ சமயத்தின் இரு கண்கள்' என அருளிச்செய்யும் முகத்தால் அருளினர்.

அவற்றுள் திருஞானசம்பந்தர் திருமுறை, உண்மைப் பொருள்களைக் கேட்பிக்கும் நிலையில் ஒரு சொல்லால் முடித்துக் கூறும் தொகைமொழியாயும், திருநாவுக்கரசர் திருமுறை, அவைகளைச் சிந்திப்பிக்கும் நிலையில் இனிது விளங்கத் தெரித்துக் கூறும் விரிமொழியாயும் அமைந்துள்ளன. அதுபற்றியே, சேக்கிழார், திருநாவுக்கரசரை, "அலகில் கலைத்துறை தழைப்ப அவதாரம் செய்தார்" என்று அருளினர்.

அதற்கேற்பத் திருநாவுக்கரசரது திருமுறைகளுள் எத்தனை விரிவான திருப்பதிகங்களைக் காண்கின்றோம்! 'சிவனெனும் ஓசை', 'இலிங்க புராணம்'. 'ஆதி புராணம்', 'நின்ற திருத் தாண்டகம்'. 'பாவநாசத் திருப்பதிகம்', 'பாவநாசத் திருக் குறுந்தொகை', 'திரு அங்க மாலை', 'திருமறு மாற்றத் திருத் தாண்டகம்', 'திருவடித் திருத்தாண்டகம்', 'சித்தத் தொகை' முதலாக மற்றும் பலப்பல திருப்பதிகங்கள் ஒரு பொருளை எவ்வளவு தெளிவாக இனிது விளங்க விரித்துரைக்கின்றன!

Koviloor Digital Library

அதனுல், பழம் பாடல்களாகிய வேதம், ஆகமம், உபநிடதம் என்பவற்றின் பொருள்கள் பலவும் நாவரசரது திருமுறைகளிலே இடம் பெற்றுத் திகழ்தல் காணப்படுகின்றது.

நாவரசர் திருமுறை மூன்றனுள்ளும் திருத்தாண்டகத் திருமுறையே, நீண்ட அடிகளாலாகிய பெரிய பாடல்களால் இயன்றிருத்தலின், மேற்கூறிய எல்லாத் தன்மைகளையும் நிரம்ப வுடையதாய் விளங்குகின்றது. திருத்தாண்டகம் ஏனைய ஆசிரிய ரது தேவாரத் திருமுறைகளில் இல்லாமையால், இத் திருமுறை தனிச் சிறப்புடையதொரு திருமுறையாகும். சேக்கிழாரும், ஏனைய ஆசிரியன்மார் அருளிச்செய்யாத திருத்தாண்டகத்தை அருளிச் செய்த சிறப்புப் பற்றி நாவுக்கரசரை, "தாண்டகச் சதுரர்" எனச் சிறப்பித்துப் போற்றிஞர். "காழித் - தலைவராம் பிள்ளை யாரும் தாண்டகச் சதுரராகும் - அலர்புகழரசும் கூட அங்கெழுந் தருள" என்பது அவ்வழகிய பகுதி (பெரிய புராணம் - குங்குலியக் கலயர் - 32.).

இங்ஙனமாகவே, இத்திருமுறை மேற்கூறியவாறு விரிந்த பொருள்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு இலங்குகின் றது. பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை அங்ஙனம் பல பெயர்களாலும் போற்றிப் பரவும் போற்றித் திருத்தாண்ட கங்கள், அவனது திருவடியின் பெருமைகள் பலவற்றையும் தனித் தனிச் சிறு சிறு தொடர்களால் எடுத்தோதிப் புகழும் திருவடித் திருத்தாண்டகம், அவனது திருவுருவின் நிலையை விளக்கும், 'தோன்றும்' என்னும் முடிபுடைய பல தொடர்களால் இயன்ற திருவுருத் திருத்தாண்டகம் ("வடியேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்"), மற்றும், 'தாமே', 'போலும்', 'கண்டாய்', 'காண்', 'நீயே' என்னும் முடிபுகளை யுடைய எண்ணற்ற தொடர்களால் இறைவனது இயல்புகளை யெல்லாம் வகுத்து வகுத்துக் கூறும் திருத்தாண்டகங்கள், அடையாளத் திருத் தாண்டகம், "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே", "திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே", "திருநாகேச் சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே", "இறைவன் தன்னை ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே", "நீடூரானை நீதனேன் என்னேநான் நினையாவாறே", "ஆரூரில் அம்மான் தன்னை அறியா தடிநாயேன் அயர்த்த வாறே", "ஊன்கருவி னுள்நின்ற சோதியானை உத்தமனைப் பத்தர்மனம் குடிகொண்டானைத்

Koviloor Digital Library

தீங்கரும்பைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத் தீவினை யேன் அறியாதே திகைத்த வாறே", "புள்ளிருக்கு வேளூ ரானைப் போற்றுதே ஆற்றநாள் போக்கினேனே", "ஆவடுதண் டுறையுள் மேய அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே", "தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே", "தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே", "பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே", "கற்குடி யில் விழுமி யானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே", "கஞ்சனூ ராண்ட கோவைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே", "கீழ்வேளூ ராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடி லாரே", "காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே", "ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே", "வலிவலத் தான் காண்அவன்என் மனத்து ளானே", "திருப்புத்தூரில் திருத்தளியான்காண் அவன் என் சிந்தை யானே" என்றாற் போலும் முடிபுடைய திருத்தாண்டகங்கள், எத்துணைப் பரந்து பட்டுப் பலவாய உறுதிப் பொருள்களைப் பசுமரத் தாணிபோல நம் உள்ளத்திற் பதிவிக்கின்றன! இவை யெல்லாம் இத் திருமுறைக்கே உரிய சிறப்பியல்புகளாகும்.

திருமுறைகள் பன்னிரண்டனையும் பல சிறந்த குறிப்புக் களுடன் முறையாக வெளிவரச் செய்து, அன்புடையார் பலரும் ஒருவாறுன பொருளுணர்ச்சியுடன் அவற்றை ஓதி உய்யச் செய்தல் வேண்டும் என்று திருவுளங்கொண்டு. இதுகாறும் ஐந்து திருமுறைகளைத் தக்க புலவர்களைக் கொண்டு தக்க வகை யில் செய்வித்தருளிய. திருத்தருமை யாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஆறாந் திருமுறை யாகிய இவ் வரிய பெரிய திருமுறைக்குக் குறிப்பெழுதும் தொண் டினை அடியேனுக்குப் பணித்தருளினர்கள்.

> "மெய் - உருஞானத் திரள்மனம் உருகாநெக் கழுதுகண்
> உழவாரப் படைகையி லுடையான்வைத் தனதமிழ்"

என நம்பியாண்டார் நம்பிகள் அருளியவாறு, நாவரசர், நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும், நைந்துருகிப் பாய்வது போல் அன்பு நீர்பொழி கண்ணுமாய்ச் சிவானுபூதியில் திளைத்து நின்று திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களின் திருக்குறிப் பைத் தேவர்தாமும் அறிதல் அரிதெனின், ஒன்றுக்கும் பற்றாத

Koviloor Digital Library

சிறியேன்கொல்லோ அதனைத் தெரிந்துணர வல்லேன்! எனினும்,

" உலகின் மாயப் பிறவி யைத்தரும்
உணர்வி லாவப் பெரும யக்கினை
ஒழிய வாய்மைக் கவிதை யிற்பல
உபரி பாகப் பொருள்ப ரப்பிய "

(நம்பியாண்டார் நம்பிகள்) இத் திருமுறையின் பொருளை ஒருவாறு உணர்ந்து ஓதுமாறு செய்விக்க மகாசந்நிதானத்தில் எழுந்த, உலகுக்கு உதவியாம் அவ்வொருபே ரருளாணையை ஏற்கும் கடப்பாட்டினாலும், அவ்வருளாணை இத் திருமுறை உணர்விலே பொழுது கழியவும், அவ்வுணர்வில் தோன்றும் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கற்றல் கேட்டலுடைய பெரியார் முன் வைத்துக் கொண்டுங் கொடுத்தும் பயன் பெறுதற்கும் வாய்ப்புத் தருவதாகும் என்னும் எண்ணத்தினாலும் இதற்குச் சில குறிப்புக்களை எழுதத் தொடங்கினேன்.

நாவுக்கரசரது திருமுறைகளின் இயற்கைப்படி திருத்தாண்டகத் திருமுறையுள்ளும் சொற்களே சில பிறவிடத்துப் பயின்றறியாதன; பொருள்களும் அத்தகையன. கல்லலகு, கோடாலம், நகழ்தல், நமைப்புண்ணல் முதலியன அத்தகைய சொற்களாகும். அவற்றுள், 'கல்லலகு' என்பது, திருக்கைலாய ஞான வுலாவிலும் வந்துள்ளது.

" பிரியாத குணம் உயிர்கட்கு அஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத குணமொருகால் நான்கே யென்பர்
விரிவிலாக் குண நாட்டத் தாறே யென்பர்
தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னாரும் " (165)

" புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டும் காப்பெட்டும் காட்சி யெட்டும்
கழற்சே வடியடைந்தார் களைக ணெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மை யெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளெட்டும்
திகையெட்டும் தெரிப்பதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. "

Koviloor Digital Library

என்றாற்போலும் பகுதிகளின் பொருளை யறிய யாதும் துணை செய்யவில்லை. இன்னோரன்ன இடங்கள் பொருள் காணுதற்கு அரியனவேயாம். அவ்விடங்களுக்கெல்லாம் இயன்ற வகையில் பொருள் காணப்பட்டது.

இவைபற்றி யாக, வேறு எவைபற்றி யாக, எவ்வாற்றானும், 'இத் திருமுறையின் குறிப்பை யான் காண்பேன்' என்னும் முனைப்புச் சிறிதேனும் உடையேனாய் அடியேன் இதன்கண் புகுந்திலேன்; 'எல்லாவற்றையும், எல்லார்க்கும், வேண்டும் பொழுது ஏற்ற பெற்றியால் உள் நின்று உணர்த்தி வரும் சிவமுதற் பொருளின் திருவருள், சிறியேன் உளத்திலும் நின்று சில உணர்த்தும்' என்னும் உறுதி பற்றியே புகுந்தேன், அங்ஙனம் உணர்த்த உணர்ந்து குறித்த நல்லன உளவாயின் அவைகளை ஏற்று, உணர்வின்மையால் நேர்ந்த குறைகளை அறிஞர் உலகம் அன்பினாற் பொறுத்துத் திருத்திடும் என நம்புகின்றேன்.

இவ் அரிய பணியில் ஈடுபடும் வாய்ப்பு அடியேனுக்கு உண்டாகத் திருவுளம் பற்றியருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களது பொன்னார் திருவடிகளுக்கு எனது மன மொழி மெய்களாலாகிய, என்றும் மறவா நன்றியறிவோடு கூடிய பெரு வணக்கத்தினைச் செலுத்திக்கொள்ளுகின்றேன்.

அப்பர் திருமுறைகளில் முடிவான திருமுறையாகிய இவ் ஆறாந் திருமுறை, குறிப்புரையோடு மற்றும் பல சிறப்புக்களைப் பெற்றுத் திகழும் வண்ணம் அப்பர் தேவாரத்தில் இலக்கியப் பண்புகளை எழுதி உதவிய, தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் செஞ்சொற் கொண்டல். வித்துவான். திரு. சோ. சிங்காரவேலன் M. A., அவர்கட்கும், திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறுகளை எழுதி உதவிய, அக் கல்லூரிப் பேராசிரியர் திருநெறிச்செம்மல். வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கட்கும், அப்பர் திருமுறையில் குறிக்கப்பட்ட புராண வரலாற்றுக் குறிப்புக்களைக் கண்டு தொகுத்து விளக்கம் எழுதி உதவிய. அக் கல்லூரிப் பேராசிரியர். சிரோமணி வித்துவான். திரு. வி. சபேசன் அவர்கட்கும், திருத்தலங்களின் கல்வெட்டு வரலாறுகளை எழுதியுதவிய திருவையாறு கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர். வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கட்கும் தனித்தனியே எனது உளங் கலந்த நன்றி என்றும் உரியது.

Koviloor Digital Library

இவ் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி உதவியதனோடு, இத் திருமுறையை அச்சிடுங்காலத்துப் பிழைதிருத்தியும், பாட்டு முதற்குறிப்பு அகராதி சொல்லகராதிகளைத் தொகுத்துக் கொடுத்தும் பல்லாற்றான் உதவிய இம் முப்பெரும் புலவர்கட்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவிக்கும் கடப்பாடுடையேன்.

ஏனைய திருமுறைகளைப் போலவே இதனையும் சீரிய முறையில் அச்சிட்டு உதவிய ஞானசம்பந்தம் அச்சகத்தார்க்கும் எனது நன்றி உரியது.

எல்லாவற்றையும், முன்னின்று இனிது முடித்தருளும் திருவருளை, இடையறாது எண்ணி இறைஞ்சுகின்றேன்.

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் குருபூஜை விழா மலராகிய இவ் ஆறாந் திருமுறை, நான்கு ஐந்தாந் திருமுறைகளுடன், திருவாரூர் திருநாவுக்கரசர் திருக்கோயில் மகாகும்பாபிடேகத்தன்று, திருவதிகையில் ஸ்ரீ வீரட்டானேசுவரர் திருவடியிலும், திருவாரூரில் திருநாவுக்கரசர் திருவடியிலும் சாத்தி எடுக்கப்பெற்றது.

ஏனைய திருமுறைகளும் இங்ஙனம் இனிது வெளிவரல் வேண்டும் என்பது, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது திருவுள்ளம். அஃது இனிது நிறைவெய்தத் திருவருள் முன்னிற்கும் வண்ணம் அனைவரும் வேண்டுவோமாக.

வாழ்க திருமுறைகள்! வளர்க திருநெறி!

இங்ஙனம்,

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள்
அருளாணைப்படி

அடியேன்

சி. அருணைவடிவேல்

தருமை யாதினம்
14—7—1963

Koviloor Digital Library

உ

சிவமயம்

குருபாதம்

பொருளடக்கம்

		பக்கம்
1	முன்னுரை	V
2	பொருளடக்கம்	xi
3	தலங்களின் வரலாற்றுக் குறிப்பு	௧
4	அப்பர் தேவாரத்தில் இலக்கியப் பண்புகள்	௧௨
5	நாவுக்கரசர் அருளிய நன்ஞானம்	௬௩
6	புராண வரலாற்றுக் குறிப்புக்கள்	௮௮
7	திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறு	௧௧௫
8	அரும்பொருள் அகராதி	௧௪௮
9	மேற்கோள் அகராதி	௧௮௩
10	தலப் பதிக அட்டவணை	௧௮௭
11	தேவாரத் திருப்பதிகங்கள்	1
12	பாட்டு முதற்குறிப்பு அகராதி	743
13	சொல்லகராதிச் சுருக்கம்	759
14	ஆதீன வெளியீடுகள்	794
15	தருமையாதீனம் இயற்றிவரும் பணிகள்	814
16	பிழை திருத்தம்	817

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

குருபாதம்

ஆறுந்திருமுறையில் உள்ள

தலங்களின் வரலாற்றுக் குறிப்பு*

கல்வெட்டாராய்ச்சிக்கலைஞர்,

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார்

கல்வெட்டு ஆராய்ச்சி விரிவுரையாளர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம், அண்ணுமலைநகர்.

திருக்கொட்டையூர்க் கோடீச்சுரம்

தலம் :- 'நாடெல்லாம் நீர் நாடு தனையொவ்வா நலமெல்லாம்' என்று சேக்கிழார் சுவாமிகளாற் சிறப்பிக்கப்பெற்ற சோழவளநாட்டிலுள்ள சிவ தலங்கள் பலவற்றிற் சிறந்ததொன்றும் மட்டறு நலமிகு கொட்டையூர் என்பது.

இருப்பிடம் :- இத்தலம் தஞ்சாவூர்ச் சில்லா கும்பகோணத்திற்கு வடமேற்கே ஒரு மைல் தூரத்தில் காவிரியாற்றின் வடகரையில் அமைந்துள்ளது.

வேறுபெயர்கள் :- இத்தலத்திற்கு வில்வாரண்யம், ஏரண்டபுரம் என்னும் வேறு பெயர்களும் உள. எனினும் கொட்டையூர் என்ற பெயரே தேவாரத்திலும் கல்வெட்டுக்களிலும் ஆளப்பட்டுள்ளது.

திருக்கோயில் :- சிவதலங்கள்சிலவற்றிற்கு ஊரின்பெயரும், திருக்கோயிலின் பெயரும் வேறு வேருக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாகத் திருவாரூர்ப் பூங்கோயில், சாந்தை அயவந்தி, செங்காட்டங்குடிக் கணபதீச்சரமென்பன. இம்முறையில் இவ்வூர்த் திருக்கோயிலுக்குக் கோடீச்சரம் என்பது பெயர்.

கோடீச்சுரப் பெயர்க் காரணம்:- பத்திரயோகி முனிவருக்கு இக்கொட்டையூர்க்கோமான் கோடிவிநாயகர், கோடிஅம்மையார்,

* ஏனைய திருமுறைகளில் தரப்பெருத தலக் குறிப்புகள் மட்டும் இங்குக் காட்டப்பெறுகின்றன.

Koviloor Digital Library

கோடிமுருகர், கோடிசண்டேசுவரர்களோடு தாமும் கோடித் திருவுருவம்கொண்டு காட்சியருளினர். இதனுல் இவ்வூர் இறைவர்க்குக் கோடீச்சுரன் எனப் பெயராயிற்று. இங்ஙனம் கோடீச்சரன் உறைவது கோடீச்சுரமாயிற்று. இன்னும் சிவலிங்கப் பெருமான் திருவுருவம் பலாக்காய் போன்று முள்முள்ளாகத் திருமேனியெங்கும் உடைமை நேரிற் கண்டறியத்தகும். ஒவ்வொரு முள்ளும் ஒவ்வொரு சிவலிங்கமாகும். கோடிவிநாயகர் திருமேனியிலும் பல விநாயக வடிவங்கள் காணப்படும்.

மூர்த்திகள் :- கோயிலில் மூலஸ்தானத்துள்ள சிவலிங்கத்திற்குக் கோடீச்சுரர் என்பது பெயர். அம்மையார் பந்தாடு நாயகி. இத்திருப்பெயர் அப்பர் பெருமானுல் இவ்வூர்ப் பதிகத்தில் 'பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்' - என எடுத்து ஆளப்பட்டிருப்பது பெருமகிழ்வு தருவதாய் உள்ளது.

தீர்த்தங்கள் :- காவிரியாறு, அமுதக்கிணறு (அ) கோடி தீர்த்தம் என்பவை. அமுதக்கிணறு கோயிலின் முதலாம் திருச்சுற்றுலேயில் உள்ளது.

தல விருட்சம் :- கொட்டைச் செடி.

தலச் சிறப்புக்கள் :- திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஐந்து மூர்த்திகளேயும் காண்போர், வேறு தலங்களில் கோடித் திருவுருவம் கண்ட பயனடைவர். இங்குச் செய்த எப்புண்ணியமும் பிற தலங்களிற் செய்த புண்ணியங்களினும் கோடி மடங்கு பயன் தருமென்றும், இத்தலத்திற் செய்த பாவமும் அப்படியே கோடிமடங்காகிக் கழுவாய் இலதாமென்றும் பெரியோர் கூறுவர். 'கொட்டையூரிற் செய்த பாவம் கொட்டையோடே' என்ற பழமொழியும் இத்தலத்தின் சிறப்பை உணர்த்தும்.

தலத்தைப்பற்றிய நூல்கள் :- கொட்டையூர், திருவலஞ்சுழி என்ற இரண்டு தலங்களேயும் இணைத்துத் திருநாவுக்கரசர் தேவாரம் பாடியுள்ளார். இத்தலத்திற்கு அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாட்டும் உண்டு. இத்தலத்துப் பிறந்து வளர்ந்த சிறந்த புலவரான சிவக்கொழுந்துதேசிகர் கோடீச்சுரக் கோவை ஒன்று பாடியுள்ளார். அது டாக்டர் உ. வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய உலா ஒன்றும் இத்தலத்திற்கு உளது என்பர். அது இதுபொழுது கிடைப்பது அரிதாய் இருக்கிறது. இத்தல மான்மியம் உரைநடையில் அச்சில் வெளிவந்துள்ளது.

Koviloor Digital Library

கல்வெட்டு வரலாறு :- இக்கோயிலில் இரண்டாம் இராசாதி ராச சோழன் (கி. பி. 1163 - 1178) காலத்தது ஒன்றும், இவ னுக்குப் பின் பட்டம் எய்திய மூன்றுங் குலோத்துங்கன் (கி. பி. 1178 - 1216) காலத்தவை மூன்றுமாக நான்கு கல்வெட்டுக்கள் * இருக்கின்றன. இவைகளன்றி அம்மன் கோயிலில் ஒரு கல் வெட்டும் உண்டு.

இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டு :- இஃது அர்த்த மண்டபத்துத் தென்புறச் சுவரின் அடித்தளத்தில் இருக்கிறது. இது இம்மன்னன் அரியணை ஏறிய மூன்றும் ஆண்டு அதாவது கி. பி. 1166 இல் பொறிக்கப்பெற்றது. இன்னம்பர் நாட்டு ஏர் என்னும் ஊரிலிருந்த அரையன்பொற்சோழன் மனைவியாகிய அருமொழி நங்கையார் இக்கொட்டையூர்க் கோடீச்சுரமுடையார் கோயிலில் புராணலிங்கதேவரை எழுந்தருளுவித்து அவர்க்கு அமுதுபடி உள்ளிட்டவைகளுக்கு நிபந்தம் அளித்துள்ள செய்தியை உணர்த்துகின்றது.

மூன்றுங் குலோத்துங்கன் கல்வெட்டு I :- இது மகாமண்ட பத்தின் வடபுறச் சுவரில் இருக்கிறது. இஃது இம்மன்னன் அரியணை ஏறிய 32 ஆம் ஆண்டு அதாவது கி. பி. 1210 இல் பொறிக்கப்பெற்றது. திருக்கோடீசுரமுடையார்க்கு மங்கலவன் பெரியதேவன், நச்சினார்க்கினியன் முதலான சிலர் ஒரு பித்தளை குத்துவிளக்குக்கொடுத்ததை இக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

மூன்றுங் குலோத்துங்கன் கல்வெட்டு II :- இதுவும் மகா மண்டபத்தின் வடபுறச் சுவரிலுள்ளது. இது இம்மன்னன் அரியணை ஏறிய 27 ஆம் ஆண்டில் அதாவது கி. பி. 1205 இல் செதுக்கப்பட்டது. இக்கோயில் திருமடைவிளாகத்து இருந்த பொன்னூரம்புடையான் அபயம்புக்கானின் மனைவியாகிய உதயஞ்செயல் என்னும் அம்மையார் திருக்கோடீச்சுரருக்குக் கோவை திருவிலைத்தட்டு, ஊதுசங்கு, வட்டில், பஸ்மதளிகை இவைகளைக் கொடுத்துள்ளார் என்ற செய்தியைப் புலப்படுத்து கின்றது.

மூன்றுங் குலோத்துங்கன் கல்வெட்டு III :- இது முதற் கோபுரத்தின் தென்பால் கீழ்புறச் சுவரில் இரண்டு துண்டுக்

* See the Annual report on South Indian Epigraphy for the year 1927. Nos 241 - 244.

Koviloor Digital Library

கல்வெட்டுக்களில்காணப்படுகிறது. இது இம்மன்னன் அரியணை ஏறிய 36 ஆம் ஆண்டு அதாவது கி. பி. 1214 இல் தீட்டப் பட்டது. இது திருப்புகலூரில் இருந்த மும்மேலிரனதாள நாயகன் திருநந்தவனத்திற்கு உடலாகப் பொருள் வைத்துள் ளான் என்று எண்ணக்கூடிய குறிப்புக்கள் அடங்கியதாய் உள்ளது.

அம்மன்கோயிற்கல்வெட்டு:- 'சுவஸ்திஸ்ரீ எழுபத்தொம்பது வளநாடும், நகரமும் பதினெண்ணே விஷையத்தாரும் தன்மம்'- என்பதாகும். இதனால் பலரிடத்தும் பொருளீட்டி இத்திருக் காமக்கோட்டம் எடுப்பிக்கப்பெற்றது என்பதை அறியலாம்.

கொட்டையூர் வேங்கடாசலம்பிள்ளையின் கல்வெட்டு :- இது முதல் கோபுர வாசலடியில் இருக்கின்றது. கலியுகாதி 5014 தமிழ் பரிதாபி தை 4 இல் இது செதுக்கப்பட்டது. கோடீச்சுரப் பெருமானுக்கு, காலைசந்திக் கட்டளை, சோமவாரக் கட்டளை, சிவராத்திரிக்கட்டளை இவைகளுக்காக மேலைக்காவேரியில் 3 ஏக்கர் 85 செண்ட் நன்செய்நிலம் விட்டிருப்பதை அறிவிப்பதாகும்.

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்ட நாடு :- இன்னம்பர் நாட்டுப் பிரமதேயம் என்று கொட்டையூர் கூறப்படுகிறது. இவ் வின்னம்பர் நாட்டை உள்ளடக்கிய வளநாடு முதலாம் இராச ராசன் காலத்தில் இராசேந்திரசிங்க வளநாடு என்றும், முதற் குலோத்துங்கன் காலத்தில் இதன் மேலைப்பகுதி உலகுய்யவந்த சோழ வள நாடு என்றும், விககிரமசோழன் காலத்தில் விக்கிரம சோழ வளநாடு என்றும் வழங்கப்பெற்றிருந்தது. இவ்விக்கிரம சோழ வளநாடு என்ற பெயரே இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங் குலோத்துங்கன் இவர் காலத்திலும் நின்று நிலவுவ தாயிற்று. இககொட்டையூர்க்கு வடக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருக்கும் ஏர் என்னும் வைப்புத்தலத்தின் பெயர் இக்கல்வெட்டில் காணப்படுகிறது. இந்த ஏர் என்னும் ஊர்க்கு குலோத்துங்கசோழ வானவன்மங்கலம் என்ற வேறு பெயர் உண்மையையும அறியலாம. இக்காலம் இவ்வூர் ஏரகரம் என்று வழங்கப்பெறுகின்றது.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்

இருக்குமிடம் :- உம்பர் ஏறிய புகழ். கும்பகோணம் நகரின் நடுவில இருக்கும் நாகேச்சுரர்கோயிலே குடந்தைக்கீழ்க்கோட்ட மாகும்.

Koviloor Digital Library

இறைவரின் திருப்பெயர் :- நாகேசுவரர்.

இறைவியாரின் திருப்பெயர் :- பெரியநாச்சியார்.

தலச்சிறப்பு :- ஆதிசேடன், நாகேசுவரர் இவர்கள் வழிபட்டுப் பேறு எய்தினர். ஆண்டுதோறும் சித்திரைமாதம் 11, 12, 13 தேதிகளில் காலையில் சூரியனின் ஒளி இறைவரின் திருமேனியில் படுகின்றது. இக்கோயிலில் கங்கைக்கணபதியின் திருமேனி மிக மிக அழகு பொருந்தியது. இங்குக் கூத்தாடுந் தேவர் கோயில் மிக்க வேலைப்பாடு உடையது. இங்கு எழுந்தருளியிருக்கும் துர்க்கையம்மன் மிகச் சக்திவாய்ந்தவர்.

கல்வெட்டு வரலாறு :- இத் திருக்கோயிலில் சோழமன்னர்களில் முதற் பராந்தகசோழன், இரண்டாம் ஆதித்தகரிகாலன், உத்தமசோழன், முதலாம் இராசேந்திரசோழன், 'சீர்மன்னு இருநான்கு திசையும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய இராசகேசரிவர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவன், மூன்றாங் குலோத்துங்கசோழன் இவர்கள் காலங்களிலும், மகாமண்டலேசுவரன் கோனேரிதேவமகாராசன் காலத்திலும் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

சோழர் கல்வெட்டுக்களில் இறைவர் திருக்குடமூக்கில் திருக்கீழ்க்கோட்டத்துப் பரமசுவாமி, திருக்கீழ்க்கோட்டத்துப் பட்டாரகர், திருக்கீழ்க்கோட்டத்துப் பெருமாள், திருக்கீழ்க்கோட்டத்து மகாதேவர் என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளனர்.

எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனி :- திருக்குடமூக்கில் உடையார் திருக்கீழ்க்கோட்டமுடையார்கோயில் முதல் பிராகாரத்துக் கீழைத் திருமாளிகையில், வேளூர் கிழவன் ஆழ்வான் திருப்புறம்பியமுடையானான செம்பியன் பல்லவரையன், திருப்புறம்பியத்து இறைவரை எழுந்தருளுவித்து நிவந்தம் அளித்துள்ளான்.

இதை உணர்த்தும் கல்வெட்டு :- ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளி விஜயாபிஷேகமும் வீராபிஷேகமும் பண்ணி அருளின ஸ்ரீ திரிபுவன வீரதேவர்க்கு யாண்டு முப்பத்தஞ்சாவது உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர்நாட்டுத் திருக்குடமூக்கில் திருக்கீழ்க்கோட்டமுடையார் கோயில் முதல் பிராகாரத்துக் கீழைத் திருமாளிகையில் வேளூர் கிழவன் ஆழ்வான் திருப்புறம்பியமுடையானான செம்பியன் பல்லவரையன்

Koviloor Digital Library

எழுந்தருளுவித்த உடையார் திருப்புறம்பிய முடையார்க்கு அமுதுபடிக்கு நாளொன்றுக்கு அரிசி நானாழியும் இவ்வரிசியால் வந்த அப்பமுதும் கறியமுதும் உப்பமுதும் மிளகமுதும் தயிரமுதும் நெய்யமுதும் அடைக்காயமுதுபாக்கும், இலையமுது மற்றும் திருமஞ்சனமும் திருப்பள்ளித் தாமமும், திருமேற்பூச்சும் உள்ளிட்ட விஞ்சனத்துக்கும் சிறுகாலைச் சந்தி விளக்கு இரண்டும், உச்சிச் சந்தி விளக்கு ஒன்றும் இரவைச் சந்தி விளக்கு நாலும். இச் சந்திவிளக்கு ஏழுக்கும் வேண்டுந் திருவிளக்கு எண்ணையும் இந்நாயனார் ஸ்ரீ பண்டாரத்து உடலிலே இத் திருப்புறம்பிய முடையார்க்குப் பூசைக்கும் அமுதுபடிக்கும் விடக்கடவதாகவும். இப்படிவிடுமிடத்து முப்பத்தஞ்சாவது சித்திரைமாஸ முதல் நிமந்தக் கட்டாக விடக்கடவதாகவும். பூசிக்கும் நம்பிமார் சிவப்பிராமணர்......சமைப்பார்க்கும் வேண்டும் நிவந்தத்துக்கு இக் கோயிலில் உடலிலே விட்டு இத்திருப்புறம்பியமுடையார் அமுது செய்தருளின சோறு நானாழியும் சோற்றடைப்பிலே கூட்டிக் கொள்ளக் கடவதாகவும். இப்படியால்வந்த நிமந்தக்கட்டுப் படியே சந்திராதித்தவற் விடக்கடவதாகவும். இதுக்கு உபயமாக உடையார் திருக் கீழ்க்கோட்டமுடையார்க்கு திருமகரதோரணம் பண்ணிச் சாத்துகைக்கு உபையமாக வேளூர் கிழவன் ஆழ்வான் திருப்புறம்பியமுடையானான செம்பியன் பல்லவரையன் முப்பத்தஞ்சாவதுநாள் ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கின காசு பதினேழாயிரமும் ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கினமைக்கு இவை கோயிற்கணக்கு இராமனூருடையான் மூலபருஷப் பரியனெழுத்து. இக் காசு பதினேழாயிரமும் சீபண்டாரத்துக்கு ஒடுக்கினமைக்கு தேவ கன்மி உய்யக்கொண்டான் பட்டன் எழுத்து. இக்காசு பதினேழாயிரமும் கோயிலில் ஒடு

[N. B:- இக்கல்வெட்டு இதுவரை வெளிவந்திலது. படித்து எழுதலாயிற்று.]

கூத்தாடும் திருஞானசம்பந்த ஈஸ்வரமுடையார்கோயில்:- இப்பெயருடைய கோயில் ஒன்று இக் கீழ்க்கோட்டமுடையார் கோயிலில் இருக்கின்றது. அதைக் கட்டியவர் கூத்தாடும் திருஞானசம்பந்தர் மாணிக்கவாசகர் ஆவார். இக் கோயிலுக்குப் பழுது ஏற்படுங்கால் அதைப் புதுப்பிப்பதற்கும், இறைவர்க்கு அணிகலன்களுக்கும் ஆகக் கூத்தாடும் திருஞானசம்பந்தர் மடந்தைபாகர் நிவந்தம் ஏற்படுத்தியிருந்தார்.

மடந்தைபாக நாயனார் கோயில் :- இப்பெயருடைய கோயில் ஒன்று இக் கீழ்க்கோட்டமுடையார் கோயிலில் இருப்பதைத்

Koviloor Digital Library

திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவரின் 20ஆம் இராச்சிய ஆண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

செல்வபிரான் திருமேனி:- முதலாம் இராசேந்திரசோழன் கல்வெட்டு ஸ்ரீ விமானத்தில் செல்வபிரான் திருமேனியைப்பற்றிக் குறிப்பிடுகிறது.

பொதுச்செய்திகள் :- குடமூக்கின் ஒரு பகுதியாகிய மேல் காவிரியில் 24 வேலியை திருக்குடமூக்குச் சபையார் அரசனிட மிருந்து அபிஷேக தட்சிணையாகப் பெற்றனர். அதில் இரண்டு மா நிலத்தை இங்கணாட்டுச் சிற்றிங்கண் சிற்றிங்கணுடையான் கோயில்மயிலையான பராந்தக மூவேந்தவேளானுக்குக் குட மூக்குச் சபையார் விற்றுக்கொடுத்தனர். அதை அவன் கீழ்க் கோட்டத்தில் பிரபாகரம் வக்காணிப்பார்க்குப் பட்டவிருத்தி யாகக் கொடுத்துள்ளான். [வக்கணிப்பார் - விவரித்துரைப்பார். பட்டவிருத்தி - கல்வியில்வல்ல பிராமணர்களுக்கு இறையிலி யாக விடப்பட்ட நிலம்.] முதற் பராந்தகசோழனின் 38 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, திருக்குடமூக்குச் சபையார் அரிசலூரில் நிலம் விற்றதைக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு, பாண்டிப் படையையும் ஜலசயனம் என்னும் கோயிலையும் குறிப்பிடு கின்றது. மலைநாட்டு நெடும்புறையூரிலிருந்த பூவன்கண்ணன் இக்கீழ்க்கோட்டமுடையார் கோயிலுக்கு விளக்குக்கு 25 கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். அபூர்விகளுக்கும் சிவயோகிகளுக் கும் உணவின் பொருட்டு நிவந்தங்கள் அளிக்கப்பெற்றிருந்தன. [அபூர்விகள் - தலயாத்திரை செய்யும் வேதம்வல்ல பிராமணர்.] உத்தமசோழர் மனைவியாரின் பெயர் வீரநாராயணியார் என்ப தையும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு:- கும்ப கோணம் பழங்காலத்தில் திருக்குடமூக்கு என்றே கல்வெட்டுக் களில் குறிக்கப்பெற்றுள்ளது. இரண்டாம் ஆதித்தகரிகாலனின் 3 ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இக்குடமூக்கை, குடந்தை என்னும் மரூஉ மொழியால் குறிப்பிட்டுள்ளது. இக்குடமூக்கு பழங்காலத் தில் பாம்பூர் நாட்டிற்கு உட்பட்டிருந்தது. பின் முதலாம் இராச ராசன் காலத்தில் உய்யக்கொண்டார் வளநாட்டுக்கு உட்பட்ட தாயிற்று.]

திருமுண்டீச்சுரம்

இருக்குமிடம்:- தென்னார்க்காடு சில்லாவில் திருவெண் ணெய் நல்லூர்க்குக் கிழக்கே சுமார் மூன்று மைல் தொலைவில்

Koviloor Digital Library

உள்ளது. இவ்வூர் இதுபொழுது கிராமம் என்று வழங்கப் பெறுகின்றது.

இறைவரின் திருப்பெயர் :- சிவலோகநாதர்.

இறைவியாரின் திருப்பெயர் :- கானார்குழலியம்மையார்.

தலச்சிறப்பு :- பிரமன் இந்திரன் இவர்கள் வழிபட்டுப் பேறுஎய்திய தலம்.

*கல்வெட்டு வரலாறு :- இத்திருக்கோயிலில் சோழ மன்னர்களில் முதற்பராந்தக சோழன். இரண்டாம் ஆதித்தகரிகாலன், முதலாம் இராசேந்திரன், குலோத்துங்க சோழன் முதலானோர் காலங்களிலும்; பாண்டியர்களின் கோனேரின்மை கொண்டானாகிய சுந்தரபாண்டிய தேவன், வீரபாண்டிய தேவன் இவர்கள் காலங்களிலும்; இராஷ்டிரகூட மன்னரில் கன்னர தேவர் காலத்திலும்; விஜயநகர மன்னரில், வீரவிருப்பண்ண உடையார் காலத்திலும் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

கோயிலைக் கட்டியவரும், கட்டப்பெற்ற காலமும், ஊரின் பெயரும் :- இக்கோயிலைக் கருங்கல்லால் கட்டியவர் கேரள சிற்றரசனாகிய வெள்ளாங்குமரன் ஆவர். இதை இவர் கட்டியது முதற்பராந்தக சோழனின் முப்பத்தாறும் இராச்சிய ஆண்டாகும்; அதாவது கி. பி. 943. எனவே இக்கோயில் கட்டப்பெற்று இற்றைக்கு 1020 ஆண்டுகள் ஆகின்றன.

இதை உணர்த்தும் கல்வெட்டு, தமிழிலும் கிரந்தத்திலும் இருக்கின்றது. கிரந்தப்பகுதியில் இவ்வூர் மௌலி கிராமம் என்று கூறப்பெற்றுள்ளது. இரண்டாம் ஆதித்த கரிகாலன் கல்வெட்டு இக்கோயிலை, திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருமுடியூர் ஆற்றுத்தளி மகாதேவர் கோயில் என்று குறிப்பிடுகின்றது. எனது கிரந்தப் பகுதியில் உள்ள மௌலி என்பதை விட்டுவிட்டு, மக்கள் கிராமம் என்ற பெயராலே இன்றும் இவ்வூரை வழங்குகின்றனர்.

*See annual report on South Indian Epigraply for the year 1905—Nos. 735—745

do. do. 1906—Nos 180—198.

Koviloor Digital Library

பொதுச்செய்திகள் : கோனேரின்மை கொண்டானின் 18 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இக்கோயில் இறைவர் ஆற்றுத்தளி மூலஸ்தானம் உடையார் பொக்கணம் கொடுத்தருளிய நாயனர் என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளனர். வீரபாண்டிய தேவன், இக்கோயிலில் சுந்தர பாண்டியன் சந்தியை ஏற்படுத்தினன்.

திருக்கஞ்சனூர்

இருக்குமிடம் :- தஞ்சாவூர்ச் ஜில்லாவில், நாரசிங்கன் பேட்டை ரயில்வே நிலையத்திலிருந்து சுமார் 1½ மைல் தூரத்திலிருக்கிறது.

இறைவரின் திருப்பெயர் :- அக்நீஸ்வரர்.

இறைவியாரின் திருப்பெயர் :- கற்பகநாயகி.

தீர்த்தம் : அக்நி தீர்த்தம். இது திருக்கோயிலுக்குக் கிழக்கில் உள்ளது.

தலச்சிறப்பு :- அக்நியும், பிரமனும் வழிபட்டுப் பேறு எய்தினர். நடராசப்பெருமான் சிவகாமி அம்மையார் இவர்களின் திருமேனிகள் கருங்கல்லால் ஆக்கப்பெற்றவை. அரதத்த சிவாசாரியார் சைவத்தின் பெருமையை நிலை நாட்டிய இடம்.

* கல்வெட்டு வரலாறு :- இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் விக்கிரமசோழதேவன், இராசகேசரிவர்மன் திருபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் திருபுவனச்சக்கரவர்த்தி வீரராஜேந்திரதேவன் இவர்கள் காலங்களிலும்; விஜயநகரமன்னரில் கிருஷ்ணராய மகாராயர் காலத்திலும் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இக்கல்வெட்டுக்களில் இறைவர் திருஅக்நீஸ்வரம் உடையார் என்னும் பெயரால் குறிக்கப்பெற்றுள்ளனர். இக்கோயிலில் விழாக்காலங்களில் எழுந்தருளும் கற்பகப்பிள்ளை எழுந்தருளுவித்தவர் பாஸ்கரபட்டர்மகன், கனகசபைப்பட்டர் ஆவர். இதை இவர் எழுந்தருளுவித்தது சகம் 1447 அதாவது கி. பி. 1525 ஆகும். இவ்வூரில் விக்கிரமசோழன் கல்வெட்டு ஐந்நூற்று எண்மன் மடத்தைக் குறிப்பிடுகிறது. இவ்வூர் விருதராச பயங்கர வளநாட்டு நல்லாற்றூர் நாட்டுக்கு உட்பட்டிருந்தது.

* See the Annual report on South Indian Epigraphy for the year 1931— Nos. 59 — 67.

Koviloor Digital Library

திருவாலம்பொழில்

இருக்குமிடம் :- தஞ்சாவூர்ச் சில்லாவில் திருப்பூந்துருத்திக்கு மேற்கில் ஒருமைல் தொலேவில் உள்ளது.

இறைவரின் திருப்பெயர் :- ஆத்மநாதேசுவரர்.

இறைவியாரின் திருப்பெயர் :- ஞானம்பிகை.

தலச் சிறப்பு :- இக்கோயில் மேற்கு நோக்கிய சந்நிதியை உடையது. அஷ்டவசுக்களால் வழிபடப்பெற்றது.

கல்வெட்டு வரலாறு :- இதிலுள்ள கல்வெட்டுக்கள் சிதைந்துள்ளன. அவைகளை அரசாங்கத்தார் படியெடுத்து ஆண்டு அறிக்கையில் வெளியிட்டிலர். அக்கல்வெட்டுக்களேப் படித்துப் பார்த்தபொழுது அவைகளில் இறைவர் தென்பரம்பைக்குடி திருவாலம்பொழில் உடைய மகாதேவர் எனக் குறிக்கப்பெற்றுள்ளனர். இவ்வூர்த் திருத்தாண்டகத்திலும் 'தென்பரம்பைக் குடியின்மேய திருவாலம் பொழிலானேச் சிந்திநெஞ்சே' எனப் பாடப்பெற்றிருக்கின்றது. இத் திருவாலம்பொழிலுக்குத் தெற்கே வெள்ளான்பிரம்பூர், தென்பிரம்பூர் என்னும் ஊர்கள் இருக்கின்றன.

திருத்தலேயாலங்காடு

இருக்குமிடம் :- இது தஞ்சாவூர்ச் சில்லாவில் திருக்குடவாயிலுக்குக் கிழக்கே ஐந்துமைல் தூரத்தில் இருக்கின்றது.

இறைவரின் திருப்பெயர் :- ஆடவல்லயீசுவரர்.

இறைவியாரின் திருப்பெயர் :- திருமடந்தையம்மை.

தலச்சிறப்பு :- கபில முனிவர் வழிபட்ட தலம். தாருகாவனத்து இருடிகள் அனுப்பிய முயலகனைக் கீழே கிடத்தி அவன் முதுகின்மீது நடித்தருளிய தலம்.

திருப்பள்ளியின்முக்கூடல்

இருக்குமிடம் :- தஞ்சாவூர்ச் சில்லாவில் திருவாரூர்க்கு வடக்கிலுள்ள விற்குடி இரயில்வே நிலேயத்திலிருந்து ஒருமைல் தொலேவில் இருக்கின்றது.

Koviloor Digital Library

இறைவரின் திருப்பெயர் :- முக்கோணநாதேசுவரர்.

இறைவியாரின் திருப்பெயர் :- மைம்மேவுகண்ணி.

தலச்சிறப்பு :- இராமர் வழிபட்ட தலம்.

திருக்கன்ருப்பூர்

இருக்குமிடம் :- தஞ்சாவூர்ச் சில்லாவில் மாவூர்ரோட் இரயில்வே நிலையத்திற்கு வடகிழக்கே சுமார் ஆறுமைல் தூரத்தி லிருக்கிறது.

இறைவரின் திருப்பெயர் :- நடுதறியப்பர்.

இறைவியாரின் திருப்பெயர் :- மாதுமையம்மையார்.

ஊர்க்கும் இறைவர்க்கும் முறையே கன்ருப்பூர், நடுதறியப்பர் எனப் பெயர் ஏற்பட்டமைக்குக் காரணம் :- சைவர் குடியில் தோன்றிய ஒரு பெண்ணை, அவரது பெற்றோர் வைணவர் ஒரு வர்க்குத் திருமணஞ் செய்துகொடுத்தனர். அப்பெண் மாமியார் வீட்டார்க்குப் புலப்படாதவாறு கன்றுக்குட்டி கட்டியிருக்கும் முளையையே சிவலிங்கமாகப் பாவித்து வழிபட்டுவந்தனர். ஒரு நாள் கணவன் அதைக்கண்டு அம்முளையைக் கோடாரியால் வெட்ட இறைவர் அம்முளையிலிருந்து வெளிப்பட்டகாரணத்தால் அவர் நடுதறியப்பர் என்னும் பெயர் எய்தினர். ஊரும் கன்ருப்பூர் என்னும் பெயர் எய்திற்று.

Koviloor Digital Library

உ

குருபாதம்

அப்பர் தேவாரத்தில் இலக்கியப் பண்புகள்

செஞ்சொற்கொண்டல்,
வித்துவான். திரு. சோ. சிங்காரவேலன் எம். ஏ.,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர்.

கலைநோக்கு :

உலகின் அழகைக் கண்டு வியந்து போற்றும் இயல்பு நம்மிடம் இல்லை ; துன்பங்களைக் கண்டு நொந்து கவலைப்படும் இயல்பே நம்மிடம் கால்கொண்டிருக்கின்றது. ஆனால் அழகு கூத்தாடும் இயற்கைச் செல்வத்தை அறிந்து, உணர்ந்து பாராட்டிசைக்கும் பண்பு பாவலனிடத்தேயே உள்ளது. கவிஞன் உலகின் அழகுக் கூத்தைத் தன் சொற்களாற் காவியமாக்குகின்றான் ; சொல்லோவியமாக்கி மகிழ்கின்றான். இதற்குக் காரணம் என்ன ? கவிஞன் பெற்றிருக்கும் கவிதைக்கண் - கலைநோக்குத்தான் இதன் காரணமாகும். நம் பார்வை மேம்போக்காக நின்று விடுகின்றது ; கவிஞன் அல்லது கலைஞன் பார்வை ஊடுருவிப் பாய்கின்றது. நம் நோக்கு புறத்தோற்றத்திலேயே நின்று வலியிழந்து விடுகின்றது ; கவிஞன் அல்லது கலைஞன் நோக்கு அகத்தோற்றத்தில் ஆழ்ந்து அச்சிறப்பியல்புகளால் வலுப்பெற்று விடுகின்றது. இதனாலேயே பாட்டுக் கவிஞனின் உயர்கருவியாகின்றது. மற்றவர்க்குப் பாட்டை நுகர இயலுகின்றதே தவிர புனையும் ஆற்றல் இல்லை. இந்த நுட்பம் சிந்தித்தால்தான் விளங்குவதாகும். இந்த நுட்பம் இயற்கையின் அழகுக் கூத்தை மெய்ம்மறந்து சுவைத்துக் களி வெறி கொள்ளும் கலைஞர்களுக்குத் தனிச்சிறப்பாக உள்ளது

கவிதையநுபவம் :

அழகை மட்டுமின்றி உலகத் துயரங்களையும் கவிஞன் காணுமல் இல்லை ; அவற்றையும் படம்பிடித்துக்காட்ட அவன் தவறவில்லை. ஆனால் கவிதையில் அத்துன்பங்களை மிகவும் விரும்புகின்றோம் நாம் ; உலகியலில் துன்பங்களை வெறுத்தொதுக்கும் நம்மைக் கலைத்துறை அவலங்கள் கவர்ந்து

Koviloor Digital Library

விடுகின்றன. கலைத்துறைத் துன்பங்களைக் கண்டு கண்ணீர் விடுகின்றோம்; ஆனால் இக்கண்ணீரை நாம் விரும்புகின்றோம். நுட்பமான உணர்ச்சிகளைத் தூண்டும் சொல்லாட்சி, கற்பனை, அமைப்புடைய கவிதைகளை உருவாக்கி நம்மைத் தன்வயப்படுத்தி விடுகின்றான் கவிஞன், இவ்வாறு நம் உணர்ச்சியோடு ஒன்று படும் கவிதைச் செல்வத்தை நாம் வாழ்வில் இடையறாது சுவைத்தல் வேண்டும். உயர்ந்த கவிஞர்கள் கைம்மாறு கருதியா கவிதைகளை யாத்துள்ளார்கள்? தம் அநுபவத்தை எடுத்து, கைம்மாறு வேண்டாக் கார்மழைபோல் பொழிந்து உள்ளார்கள் அவர்கள். சுவைக்கும் உள்ளத்துடன் - இலக்கியப் பசியுடன் - அவர்களை அணுகுதல் ஒன்றே நாம் செய்யவேண்டுவது, அணுகி விட்டால் நம்மை அவர்கள் ஆட்கொண்டுவிடுகின்றார்கள். வேறு உலகுக்கு - கவியுலகுக்கு அழைத்துச்சென்று பலப்பல காட்சி களைக் காட்டிக் களிப்பிக்கின்றார்கள்; உலகியல் மறந்து அவ் வின்பக்காட்சியில் காலம், இடம், முதலிய வேற்றுமைகளையிழந்து கிடக்கின்றோம் நாம், ஆம்: கவிதை அநுபவம் இதுவேயாகும்.

"கவிஞனுடைய கண் விண்ணுக்கும் மண்ணுக்கும் மண் ணுக்கும் விண்ணுக்குமாகச் சுழல்கின்றது; சுழன்று நோக்கிக் கற்பனை வடிவங்களைப் படைக்கின்றது. அவ்விழிமியோனுடைய எழுதுகோலால் அறியப்படாத பொருள்கள் வடிவம் பெறுவ துடன் உயிர்த்தன்மையும் எய்துகின்றன." என்று நாடகப் பெருங்கவிஞராகிய சேக்ஸ்பியர் கூறும்பகுதி இங்கு ஒப்பிட்டு மகிழத்தக்கது.*

அருட்பாடல்களின் ஆற்றல் :

இத்தகு கவிஞர்களின் உறவு உள்ளத்தைத் திருத்தும் உயர்வுடையது; உலகியற்றுன்பங்களினின்று உயர்ந்து உயிர்ப் பறவையை மேலே மேலே பறக்குமாறு செய்து எங்கும் - என்றும் இன்பமாய பெரும்பேற்றிற்கு உய்ப்பது. அதிலும் திருநாவுக் கரசுப் பெருமானாரைப் போன்ற அருட் புலவர்கள் பாடல்கள் என்றால் கூறவாவேண்டும்! அருளே வடிவாகிய இறைவனை

* "The poet's eye, in a fine frenzy rolling, Doth glance from heaven to earth, from earth to heaven; And as imagination bodies forth The forms of things unknown, the Poet's Pen Turns them to shapes, and gives to airy nothing A local habitation and a name."

— Shakespeare.

Koviloor Digital Library

அகமுருகப்பாடி மகிழும் அருளாசிரியர்கள் அவர்கள். அவர்களது அருங்கவிதைகள் பக்தியை விளக்கும் பண்புடைய பாடல்கள்; இசை தழுவிய எண்ணக் குவியல்கள்; பண் கலந்த பாடல் தொகுப்புக்கள். இறைவனுடைய கருவியாக நின்று தாம் இயங்குகின்றோம் என்ற எண்ண அழுத்தம் உடைய அவ்வருட் செல்வர்களின் உணர்ச்சிப் பிழம்புகளாகிய கவிதைகள் நம் வாழ்வுக்கு நெறிகாட்டும் வான்புகழ்க் கலங்கரை விளக்குகள் என்றே கூறலாம்.

அவர்கள் தம் வாழ்வில் என்ன கண்டார்கள், தம் வாழ்வில் பட்டறிந்த உண்மைகளால் என்ன உணர்வு பெற்றார்கள், அவ்வுணர்வினின்றும் அவர்கள் தெளிந்ததென்ன, நம்மனோர்க்கு அத்தெளிவினால் அவர்கள் உரைக்கும் செய்திகள் யாவை என்பதற்கு அவர்களது இலக்கியமே சான்று பகரும்; இவையனைத்தையும் காட்டுவதே இலக்கியப் பண்பு என்பர்.*

அருட்செல்வர்:

திருநாவுக்கரசு சுவாமிகள் சிறந்த தோத்திரப்பாக்களை அருளிய ஞானசிரியர்; அவ்வருட்செல்வரை இத்தகு இலக்கியப் பண்புகள் கனிந்த பனுவல்களை - பக்தி உணர்ச்சிப் பாடல்களை யாத்த ஓர் அருட்புலவராகவும் காணலாம்; அவ்வருட் புலவருடைய பாக்களில் காணப்படும் இலக்கிய நலங்களைக்கண்டு, அத்தெய்வக் கவிஞரது பாக்களில் புலனாகும் அவருடைய திருவுள்ளத்தை அறிந்து, தெளிவுறுத்துவதே இச்சிற்றாராய்ச்சியின் நோக்கமாகும். பழுத்த அநுபவம் உடைய இப்பெரியார் பழுத்த தமிழ்ப்புலமை எய்தியிருந்த பண்பட்ட பாவலரும் ஆவர் ஆதலின் இவ்வாராய்ச்சி இவ்வருட்புலவருடைய இனிய திருவாக்குகளை அடியாகக்கொண்டே இயங்குவதாகும்.

முருகியல் அமுதம்:

இலக்கியம் என்பது சொல். பொருள் ஆகிய அடிப்படையில் நயம் தோன்ற - கற்பனை விளங்க - உணர்த்தும் திறம் ஒளிர

* Literature is a vital record of what men have seen in life, what they have experienced of it, what they have thought and felt about those aspects of it which have the most immediate and enduring interest for all of us. — W. H. Hudson.

Koviloor Digital Library

ஆசிரியனுடைய அநுபவ வெளியீடாக இருப்பது; ஆதலினு லேயே ஆசிரியனுடைய அநுபவ இன்பத்தை இலக்கியத்தில் நாமும் அநுபவித்தின்புற முடிகின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருட் புலவராக விளங்கிய நல்லாசிரியராதலின் அவருடைய கனிந்த உளத்தின் முருகியல் அமுதம் தமிழ்க்கவிதை யாக வெளிவந்தது; அப்பெருமானுரின் கவிதைகள் கல்மனத்தை யும் கசிந்துருக்கும் திறன் உடையவை; உறுதியான சொற்களால் இயன்றவை; பொருட்சிறப்பு பொதுளிய அமைப்புடையவை.

அப்பர் அருளுருவம் :

இறைவன் திருவடிகளிலேயே பதித்த நெஞ்சுடைய இப் பெருமானுடைய அருள் பழுத்த திருக்கோலத்தைச் சேக்கிழார் பின்வருமாறு சொல்லோவியமாக்கியுள்ளனர் :

“ தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோலன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே ” (1410)

இதனுள் இறைவனைப்பற்றிய ‘பொருள்சேர் புகழ்’ விரிக்கும் செந்தமிழ் அமுதத் திருப்பாடலை ஓதிக்கொண்டேயிருக்கும் ஓட்பம் தோன்றப் ‘பதிகச் செஞ்சொல் மேய செவ்வாய்’ என்றருளிய திறம் இனிது உணரத்தக்கது.

தோடையருச்சேவ்வாய் :

சிவஞான சுவாமிகளும் அப்பரடிகள் அழகுருவத்தைத் தமிழாற்சிறப்பித்துள்ளனர். அதனுள் ‘ஞானப்பாடல் தொடை யருச் செவ்வாய்’ என்று இப்பெருமானுருடைய பாவன்மை தோன்றப் பாடியருளியுள்ளனர்; அவ்வருந் தமிழ்ப்பாடல் பின் வருவதாகும்.

“ இடையருப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவாரத்திண்
படையருத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்தநெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப்பாடல்
தொடையருச் செவ்வாயும் திருவேடப் பொலிவழகும்
துதித்து வாழ்வாம் ”

Koviloor Digital Library

திருவாரூர்ப் புராணமுடையார் :

" சாலமிகு பாவமுது வேனில் வெம்மைத் தழலாற
ஆகமநூற் றருமஞ்சான்ற
சீலநிறை சைவநெறி நிழல்பரப்பும் திருநாவுக்கரசு "

என்று புகழ்தல் இங்கு ஒப்பிட்டுணர்தற்குரியது.

" தேவரசு மனமகிழத் திருப்பதிகம் இசைத்தமிழிற்
சிறக்கப்பாடும் நாவரசு "

என்று புகழ்வர் சிவராத்திரிப்புராண ஆசிரியர்.

" மதுரமாந்திருத் தாண்டகச் செந்தமிழ்வகுத்த
சதுரன் நாவினுக் கரையன் "

என்று சிவரகசியம் பாடும். இவ்வாறு புகழப்பெறும் சிறப்பு உடைய அப்பரடிகள் அமுதத் தமிழ்வாக்கும், அப்பெருமானுர் வகுத்தருளிய தமிழ்மரபும், இலக்கிய நுட்பங்களும் பிற மாண்பு களும் கருதிய சேக்கிழார் இவரைத் தமிழ்மொழித் தலைவர் (2501) என்றே கூறிப் போற்றுவர். 'இன்தமிழ்க்கு மன்னுன வாகிசத் திருமுனி' (1415) 'உடையவரசு உலகேத்தும் உழவாரப் படையாளி' (229) 'வாக்கின் பெருவிறல் மன்னர்' (2172) என்றெல்லாம் சேக்கிழார் பாடும் பகுதியைக் காணலாம்.

பாவலர் - அப்பர் :

திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரப் பாக்களில் பெரிதும் ஈடுபட்ட பிற்காலப் பெரியார் ஒருவர் பாடும் பகுதியும் இங்குச் சிந்திக்க இனிக்கும். தண்ணிய தமிழ்க் கவிதைகளை சிவபிரான் திருவைந்தெழுத்துத் திருப்புகழோடு குழைத்துப்பாடி கடலில் மிதந்த தாண்டக வேந்தருடைய அருளாற்றல் அப்பெரியார்க்கு எண்ண எண்ண இன்பமளிக்கின்றது; கல்லும் உருகும் கவி பாடிய அப்பரடிகளைப் 'பாவலர்' என்றே அழைக்கின்ருர் அவர்.

" செற்ருர் புரம்எரிசெய்தவில் வீரன் திருப்பெயரே
பற்ரு மறிவெண் டிரைக்கடல்நீந்திய பாவலனே "

ஆம் ; சிவப்பிரகாச சுவாமிகளுடைய புகழுரை இது.

Koviloor Digital Library

அப்பர் தேவாரப் பெயரமைப்பு :

அப்பரடிகள் தேவாரப் பாக்களின் பெயர்க்காரணத்தைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்.*

(1) பொருளமைப்பு ; திருஅங்கமாலை, தசபுராணம். குறைந்த திருநேரிசை, காலபாசத் திருக்குறுந்தொகை, ஆதி புராணத் திருக்குறுந்தொகை, இலிங்கபுராணத் திருக் குறுந்தொகை - முதலியன.

(2) பாடல்தோறும் பயின்ற சொற்பொருளமைப்பு: கொப்ப ளித்த திருநேரிசை , நினைந்த திருநேரிசை, ஆருயிர்த் திருவிருத்தம், சரக்கறைத் திருவிருத்தம், திருவடித் திருத்தாண்டகம், புக்க திருத்தாண்டகம் முதலியன.

(3) முதற்குறிப்பு ; "சிவனெனும் ஓசை" என்ற பதிகம்.

(4) ஈற்றுத்தொடர் : பாவநாசத் திருப்பதிகம்.

(5) பொருட்டொகை : மனத்தொகை, சித்தத்தொகை, உள்ளத் தொகை, க்ஷேத்திரக்கோவை முதலியன.

(6) பாடல்களிற் பயின்ற ஈற்றுச்சொல்: மறக்கிற்பனே, தொழற் பாலதே எனுங் குறுந்தொகைகள்.

(7) சிறப்பு : நமச்சிவாயப்பதிகம்.

(8) பொதுவகை : தனித்திருநேரிசை, தனித்திருக்குறுந் தொகை, தனித்திருத்தாண்டகம், பலவகைத் திருத் தாண்டகம்.

அப்பர் மேற்கோண்ட யாப்புவகைகள் :

அப்பரடிகள் தமிழ்க்கவிதையாப்பில் மேற்கொண்டுள்ள வகைகள் தமிழ் இலக்கணத்துடன் மாறுகொளாதவை ; சந்த விருத்தங்களும், விருத்த வகைகளும், கலிவிருத்தங்களும், கட்டளைக் கலித்துறைகளும், ஆகியவற்றுடன் தாண்டகம் என்ற வகையும் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார். தாண்டகம்

* பன்னிருதிருமுறை வரலாறு : திரு. க. வெள்ளைவாரணனார் பக். 563 — 564.

Koviloor Digital Library

என்ற பாட்டியல்வகையை அடிகள் கையாண்டு வெற்றி பெற்றுள்ளமையாலேயே "தாண்டகச்சதுரர்" என்ற சிறப்புப் பெயருக்குரியவரானார்.*

"விளங்குபெருந் திருமுன்றில் மேவுதிருப்பணி செய்தே
உளங்கொள்திரு விருத்தங்கள் ஓங்குதிருக் குறுந்தொகைகள்
களங்கொள் திரு நேரிசைகள் பலபாடிக் கைதொழுது
வளங்கொள் திருப்பதியதனில் பலநாள்கள் வைகினர்"(1607)

எனவரும் சேக்கிழார் திருப்பாடலால் (1) விருத்தம் (2) குறுந் தொகை (3) திருநேரிசை (4) தாண்டகம் ஆகிய யாப்பு வகைகளை அடிகள் மேற்கொண்டார் என்பது விளங்கும்.

திருநேரிசை நேரிசைக் கொல்லி எனவும், திருவிருத்தம் விருத்தக் கொல்லி எனவும் கொல்லிப்பண்ணில் அடக்கப்பெறும், திருநேரிசை "கூவிளம் புளிமாதேமா கூவிளம் புளிமாதேமா" எனவரும் கட்டளையடி உடைய செய்யுள் என்றும், அறுசீர்களால் இயன்ற இக்கட்டளை யடியில் முதற்சீரும் நான்காம்சீரும் ஒரோவழிக் கருவிளம் ஆதலும், இரண்டாம்சீரும் ஐந்தாம்சீரும் ஒரோவழி தேமாவாதலும் உண்டு என்றும், மூன்றும் சீரும் ஆறும் சீரும் எப்பொழுதும் தேமாவாக நிற்பன என்றும் இந்த யாப்பமைதியை யாழ்நூல் ஆசிரியர் (பக். 217) விளக்குவர்.

திருவிருத்தம் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பமைதி உடையது. 'அடியடிதோறும் ஐஞ்சீராகி, முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது, கடையொரு சீரும் விளங்காயாகி, நேர் பதினறு நிரை பதினேழு என்று, ஓதினர் கலித்துறை ஓரடிக்கு எழுத்தே' என்னும் இலக்கணப்படி அமைந்தபகுதி திருவிருத்தம்.

திருக்குறுந்தொகை, நாற்சீர் நாலடியாய் அடிதோறும் தேமா புளிமா என்பவற்றுள் ஒன்று முதற் சீராகவும், கருவிளம் கூவிளம் என்பவற்றுள் ஒன்று நான்காம் சீராகவும், இடையிரு சீர்கள் பெரும்பாலும் விளச்சீர்களாகவும், சிறுபான்மை மாச்சீர் களாகவும், அமையவரும் செய்யுள்வகை. சிலப்பதிகார வேட்டுவ வரியில் இவ்வமைப்பை உடைய பாடல்கள் உள்ளன. ஆதலால் கி. பி. 2 ஆம் நூற்றுண்டிலேயே இந்தயாப்பும் பெருகியிருந்த தென்பர். † பிற்காலயாப்பிலக்கணப்படிக் கலிவிருத்தம் என்பர்.

* பெரியபுராணம் - குங்குலிய - 32. † பன்னிருதிருமுறை வரலாறு திரு. க. வெள்ளைவாரணனூர் - பக். 326.

Koviloor Digital Library

தாண்டக விளக்கம் :

இவற்றுள் தாண்டகம் என்ற செய்யுள் வகையை அப் பரடிகள் மிகச்சிறப்பாக எடுத்தாண்டுள்ளார் ; ஆறும்திருமுறை முழுதும் இத்தாண்டக யாப்பாலேயே விளங்குகின்றன. இத் தாண்டகம் வடமொழி இலக்கணம் பற்றிவந்த செய்யுள் என்றும் இது தமிழ் யாப்பேயாகும் என்றும் இருவேறு கருத் துக்கள் உண்டு. யாப்பருங்கல விருத்தி 2ம் சூத்திர விளக்க வுரையிலிருந்து (1) அளவியல் தாண்டகம் (2) அளவழித் தாண்டகம் என்ற இருவகைகள் அறியப்படும். பன்னிரு பாட்டியல் என்ற நூலிலிருந்தும் அதன் உரையிலிருந்தும் அறியப்படும் வகைகள் (1) குறுந்தாண்டகம் (2) நெடுந் தாண்டகம் என்ற இரண்டாம்; 'ஒவ்வோரடியினும்' அறு சீரேனும்' எண்சீரேனும்' வகையாக அமைத்து இயற்றப்பட்ட நான்கடிச் செய்யுளான் ஆடவரையும் கடவுளரையும் புகழ்வது, தாண்டக இயல் என்பது பன்னிருபாட்டியற் கருத்தாகும். இவற்றுள் அறுசீரடிப்பாக்களாலாயது குறுந்தாண்டகம் ; எண் சீர்ப்பாக்களாலாயது நெடுந்தாண்டகம்.

"மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளரைப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர் குறியது நெடியதெண் சீராம்"

என்பது பன்னிருபாட்டியலார் கூற்று. (110)

"அறுசீர் எண்சீர் அடிநான்கு ஒத்தங்கு
இறுவது தாண்டகம் இருமுச் சீரடி
குறியது நெடியதிரு நாற் சீரே"

என்பது பல்காயனார் வாக்கு.

"மங்கல மரபின் மானிடர் கடவுளர்
தம்புகழ் உரைப்பது தாண்டக வகையே"
"தாண்டகம் மானிடர் கடவுளர்க் குரித்தே"

என்பன மாபூதனர் நூற்பாக்கள்.

"அடிவரை நான்கும் எழுத்தெண்ணி
நேரடி வருவது தாண்டகம் ஆகும்"

என்பர் சீத்தலையார்: இருபத்தேழெழுத்து முதலாக உயர்ந்த எழுத்தடியினவாய் எழுத்தும். குருவும், லகுவும் ஒத்து வருவன

Koviloor Digital Library

அளவியல் தாண்டகம் எனவும், எழுத்தொவ்வாதும் எழுத்தலகு ஒவ்வாதும் வருவன அளவழித் தாண்டகம் எனவும் பெயர் பெறும் என்பது யாப்பருங்கல விருத்தியுரைகாரர் விளக்கம் ஆகும்.

அப்பரடிகள் அருளிய தாண்டக அமைப்பு, ஒற்றும் குற்றிய லுகரமும் நீக்கி எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட ஐவகை அடிகளுள் கழிநெடிலடிக்கு மேலெல்லையாகிய இருபதெழுத்தென்னும் அள வினைக் கடந்து இருபத்தேழெழுத்திற்கு உட்பட்டு வருவ தாகும். ஆனால் யாப்பருங்கல விருத்தி கூறும் இலக்கணம் இதனின் வேறுபட்ட தென்பது மேலே காட்டப்பட்டது. யாப்பருங்கல விருத்தி உரையின் கருத்துப்படி இந்தயாப்பு அமையவில்லை என்பது அறிந்துணரத்தக்கது. "எனவே, தமிழ்ச்.செய்யுள் இலக்கணத்தை அடியொற்றியமைந்த திருத் தாண்டகப்பாவும், வடமொழித்தண்டக யாப்பினை அடியொற்றிப் புதியன புனைந்த யாப்பருங்கல விருத்தி உதாரணச் செய்யுட் களும் இலக்கண வகையால் தம்முள் வேறுபட்டன என்றுணர்தல் வேண்டும்."*

தாண்டக வேந்தராகிய அப்பரடிகள் இந்தவகையை மிக அழகு படுத்தி இதனை நயம்பெறக்கையாண்டு விளக்கம் புரிந்துள்ளார். கி. பி. 7-ம் நூற்றுண்டிற்கு முன் அடைந்திராத செல்வாக்கை இவ்வகை யாப்புலகிற் பெறுவதாயிற்று. பின்வந்த திருமங்கை யாழ்வாரும் இந்தயாப்பை மேற்கொண்டு காத்தனர். தாண்டவமாடும் சிவன்தாள் மலரின்பம் நுகர்ந்த அடிகள் அப் பெருமான் புகழ்பாட இதனை மேற்கொண்டது வியந்து போற்றுதற்குரியதாகும். இப்போது கிடைத்துள்ள அப்பர் திருத் தாண்டகங்களின் தொகை தொளாயிரத்து எண்பத்தொன்று (981) ஆகும் என்பது இங்கு அறியத்தக்கது.

அகப்பொருட் பதிகங்களின் அமைப்பு :

தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பழுதறக்கற்ற பண்பினர் அப்பரடிகள் ஆதலின், அப்பெரியார் அமுதவாக்குகளில் இலக்கிய ஒட்பங்களும் இணைந்து நிற்கக் காணலாம். அவற்றை

* பன்னிரு திருமுறை வரலாறு - க. வெள்ளைவாரணனார் - பக் 330 காண்க. இப்பகுதியில் இவ்யாப்பு அமைதி விரிவை ஆசிரியர் அழகுற ஆராய்ந்து முடிவு போக்கியிருத்தல் அறிந்தினபுறத்தக்கதாகும்.

Koviloor Digital Library

இங்கு அறிந்து இன்புறுவோமாக ; அகப்பொருள் தமிழ்க்குச் சிறப்பு ; மற்ற எம்மொழிக்கும் இல்லாப் பெருஞ் சிறப்பாக அகப் பொருள் இலக்கணம் தமிழ்க்கு வாய்த்துள்ளது. அகத்தே நிகழும் தன்மையதாய்ப் புறத்தார்க்கு உணர்த்துதற்கரிதாய் இருப்பது அகத்திணை. அவ்வகவொழுக்கம் பற்றிய சங்கப் பாடல்கள் மிக்க நுட்பமும் சீர்மையும் வாய்ந்தவை. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு. கலித்தொகை, அகநானூறு ஆகிய தொகைநூல்கள் முற்றும் இவ் வைந்திணை நெறியளாவி வரும் இயல்புடையவை ; தமிழ்ப் பாவலர் திலகம் போல்வாரும். நடையருப் பெருந்துறவியாரும் ஆகிய திருநாவுக்கரசர் பெருந் தகையும் இறைவன் திருவருளில் தோய்ந்து நின்று புனையும்' கவிகளில் இவ்வமைப்புடையனவாகப் பலவற்றைப்புனைந்துள் ளார் ; அவை இலக்கியச் சிறப்புடையனவாய் இலங்குகின்றன.

இப்பெருந்தகையார் திருவாக்கில் வரும் அகத்துறைப்பகுதி கள் கீழ்வரும் முறைப்படி அமையும் பெற்றியன.

திருமுறை	4	பதிகம்	6	பாடல்	1—10
,,	4	,,	12	,,	1—10
,,	4	,,	97	,,	1—10
,,	5	,,	29	,,	1—10
,,	5	,,	40	,,	1—10
,,	5	,,	45	,,	1—10
,,	5	,,	53	,,	1—12
,,	6	,,	9	,,	1—10
,,	6	,,	13	,,	1—10
,,	5	,,	7	,,	6— 8
,,	5	,,	46	,,	1— 5
,,	5	,,	64	,,	0— 6
,,	5	,,	66	,,	0— 9
,,	5	,,	88	,,	4— 9
,,	6	,,	25	,,	0— 7
,,	6	,,	35	,,	3— 7
,,	6	,,	45	,,	1— 4—8
,,	6	,,	58	,,	3— 7—0

முழுப்பதிகங்களாக ஒன்பதும் ஏனைய பாடற்பகுதிகளும் அகத்துறை விளக்கமாக அமைந்து இவற்றுள் அழகு செய்கின்றன. தலைவியின் காதல் நிலைகண்டு இரங்கிக்கூறும் தாய் அல்லது தோழியின் கூற்று, தலைவி கூற்று, ஆகிய இரண்டு

Koviloor Digital Library

துறைகளிலேயே இவ்வகச் செய்திகள் அமைந்துள்ளன. இவை நயம் பொருந்தியனவாயும், காதல் உணர்வைக் கடவுள் உணர்வாக மாற்றித்தரும்மாண்பினவாயும் அமைந்துள்ளன.

தமிழின் மாட்டுத் தண்ணளி :

அப்பரடிகள் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கூர்ந்துணர்ந்து தேர்ந்து பழுத்த தமிழ்ப் புலவர் ஆதலின் இம்மொழிச் சிறப்பை இனிது உணர்ந்து அதனைப் பன்முறையும் எடுத்து ஓதுவதிற் பெருமை கொள்கின்றார். 'பொருள் நீத்தம் கொளவீசிப் புலன்கொளுவ மனம் முகிழ்த்த சுருள்நீக்கி மலர்விக்கும் கலை' (சேக்கிழார் - 1290) பயின்றவர் எனவும், 'சிந்தை மலர்ந்தெழும் உணர்வில் செழுங் கலையின் திறங்களெல்லாம். முந்து முறைமையிற் பயின்று முதிர அறிவு எதிரும் வகை. மைந்தனர் மறுஒழித்த இளம்பிறைபோல் வளர்கின்றார்' (சேக்கிழார் - 1291) எனவும், 'அங்கவரும் அமண் சமயத்தருங் கலை நூலான வெலாம், பொங்கும் உணர்வுறப் பயின்றே அந்நெறியிற் புலன்சிறப்ப" (சேக்கிழார் - 1309) எனவும் இப்பெருந்தகையாருடைய கலைப்பயிற்சியையும், ஆழ்ந்த புலமையையும் விளக்கிய சேக்கிழார் 'உலகின்கண் ஒளிஉடைய வித்தகராய்' என்று முடிவு போக்கியுள்ளமை இங்கு அறியத் தக்கதாகும். இவ்வாறு பலகலைகளையும் நன்கு உணர்ந்த இப்பெருந்தகையார் தம் அருட்டிறத்தால் அக்கலைகளையும், அவற்றுள் சிறந்து தோன்றும் தமிழையும் சிவபரம்பொருளாகக் கண்டு சிந்தை கனிந்து பாடுகின்றார்; அவ்வமுதப்பாடற் பகுதிகள் கலைகளின் மாட்டும், தமிழின் மாட்டும் அடிகள் கொண்டிருந்த அயராவன்பை விளக்குவதாகும்.

"இளம்பிறையும் முதிர்சடைமேல் வைத்தான்கண்டாய்
எட்டெட்டிருங் கலையுமானான் கண்டாய்" (6-73-9)

"கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன்
செல்வ மல்கு திருக்கானூரீசனை
எல்லியும் பகலும் இசைவானவா
சொல்லிடீர் நுந் துயரங்கள்தீரவே" (5-76-6)

"மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான்கண்டாய்" (6-23-6)

Koviloor Digital Library

" வானவன்காண் வானவர்க்கும் மேலானான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண்" (6 - 87 - 1)

" ஆரியந் தமிழோடிசை யானவன்
கூரிய குணத்தார் குறிநின்றவன்" (5 - 18 - 3)

இவ்வாறு கூறும் அடிகள் சிவபிரானையே ஆரியன் என்றும் தமிழன் என்றும் கூறும் பகுதிகள் அழகுடையவை; தமிழ் ஆகிய மொழி பேசுவோனை - மொழிக்குரியவனைக் குறிக்கும் சீரிய இனப் பெயராகத் 'தமிழன்' என்றசொல் நிற்றல் அறிந்தின்புறத் தக்கது; இவ்வாறு 'மொழி வழி இனம்' என்ற புது மரபினைத் தோற்றுவித்து அப்பரடிகளே முதன்முதல் 'தமிழன்' 'ஆரியன் என்ற பெயர்களை மொழிந்துள்ளார் என்பது அறிஞர் கருத்தாகும்.

" ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலையுறையெம் மண்ணல் கண்டாய்" (6 - 23 - 5)

" செந்தமிழோடாரியனைச் சீரியானை" (6 - 46 - 10)

இன்று நாம் தமிழர் எனப் பெருமிதத்துடன் பேசுதற்கு அன்றே வித்திட்ட பெருமை அப்பரடிகட்கே உரியதென்பதை நாம் மறந்துவிடலாகாது. இதைப் பின்னும் ஒருமுறை சிந்திப்போம்

தமிழ்ப்பண்களும் தாண்டகவேந்தரும் :

இலக்கியம் என்பது பண்ணோடு கூடிய கருத்து என்று கூறுவர்; ஆதலின் பாடலுக்குப் பண் எத்துணை இன்றியமையாத தென்பது விளங்கும். எம்மொழியிலும் பாட்டுப் பண்ணொடு குழைந்தே விளங்கி இயங்குவதாகும். நம் தமிழ் நாட்டிலும் பழையகாலந்தொட்டே பண்ணும் வளர்ந்து வந்திருத்தல் நம் இலக்கியங்களால் இனிது துணியப்படும். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை - ஆகிய ஐம்பெரும் பண்களினைச் சங்க நூல்களிற் காணலாம். அப்பண்கள் பலவகைகளை உடையவா யிருந்தன; அவற்றை ஓதி வளர்த்துவந்த கலைஞர் குடும்பம் 'பாணர்' என்ற பெயரான் நிலைபெற்றது. தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள் என்ற மூவகைப்பட்ட இசைக் கருவிகளில் பண் வளர்த்தனர் பழந்தமிழர், பழந்தமிழ் மரபினை நன்கு உணர்ந்து தெளிந்த அடிகள் வாழ்ந்த காலம் கிறித்து பிரானுக்குப் பின் 7-ம் நூற்றாண்டு என்பர். சமணர்கள்

Koviloor Digital Library

இசைத்தமிழை மறுத்தும் பழித்தும் பிரசாரம் செய்தமையின், மக்கள் புறக்கணித்து வந்த காலம்; அக்காலத்தேயே தமிழ் இலக்கண இலக்கியப் பெரும்புலவராக விளங்கிய அடிகள் தெய்வத்திருவருளால் சைவம் பரப்ப முற்பட்டார்; பண், இசை, ஆகியவற்றில் இறைவன் திருவீற்றிருக்கின்ருன் என்று கூறிய துடன், பழந்தமிழ்ப் பண்களிலேயே தம் கருத்தைத் தமிழ் கூறு நல்லுலகெங்கும் பரப்பத் தொடங்கினர்; இவ்வாறே திருஞான சம்பந்த சுவாமிகளும் 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்' திருத்தொண்டு புரிந்து சைவம் வளர்த்தார்.

இறைவன் பண் பொருந்தியபாடல்களை விரும்பிக்கேட்கும் கருணை உடையவன் என்ற கருத்தை' அப்பரடிகள் தம் பண் கலந்த பாடல்களாலேயே எடுத்து விளக்கிய புதுமைக் குரலைத் தமிழ்ப் பெருமக்கள் கேட்டனர்.

'பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை' (5-18-4)

'பண்ணிற் பாடல்கள் பத்திசெய்வித்தற்கு
அண்ணித்தாகும் அமுது' (5-44-8)

'பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி' (6-5-2)

என்றெல்லாம் பாடியருளினர்; கொல்லி, காந்தாரம் பியந்தைக்காந்தாரம், சாதாரி, பழந்தக்கராகம், பழம்பஞ்சுரம், சீகாமரம், குறிஞ்சி, இந்தளம், காந்தாரபஞ்சமம், ஆகிய பத்துப் பண்களில் அமைந்த பதிகங்களையும், திருநேரிசை, திருவிருத்தம் முதலிய பதிகங்களையும் அடிகள் பாடியிருத்தல் காணலாம். பாட்டுக்கும் பண்ணுக்கும் பருந்துக்கும் நிழலுக்கும் உள்ள தொடர்பு இருத்தல் வேண்டும் என்பர் பழந்தமிழ் நூலோர்; 'பாட்டோடு இயையாத பண்ணினல் என்ன பயன்? கண்ணோட்டமில்லாத கண்போன்றது அது' என்று உரைப்பர் ஆசிரியர் திருவள்ளுவரும். அப்பரடிகளுடைய அமுதப்பாக்கள் இனிய பண்ணமைப்பிற்கு இனியவையாய் உள்ளமையை அன்பர்கள் நன்கு அறிவர் *

* அப்பரடிகள் அருளிய மூன்று திருமுறைகளின் பண்களையும் அவற்றின் கட்டளையடி, யாப்புவிகற்பங்களையும், "பன்னிரு திருமுறை வரலாறு" பக். 391-399 - விரிவாகக்காணலாம். திருமுறைகண்ட புராணத்தில் வரும் கட்டளையடிக்குறிப்பினை நன்கு பொருந்த விளக்கி இவ்வாசிரியர் ஆராய்ந்து விளக்கி யுள்ளமை பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

Koviloor Digital Library

இவ்வாறு தக்க பண்களுடன் விளங்கும் பழுத்த அநுபவப் பாடல்களாகிய இவற்றிற் காணப்பெறும் இலக்கிய அழகுகளை இனி ஒவ்வொன்ருக இங்குக் காண்போம்; இவ்விலக்கிய அழகுகள், ஒன்பான் சுவையமைப்புடனும், கவிதைச் சீரியல்பு களுடனும் கலந்து திகழுமாற்றையும், பழந்தமிழ்ப் பாடல்களுடன் கருத்தொற்றுமைகொண்டு கவினுமாற்றையும் நுகர்ந்து மகிழ் வோம்.

உவமை நலம் :

உவமை இலக்கியக் கலையெழில்களில் முதலிடம்பெறுவதாகும். கவிதையில் உவமை கருத்து விளக்கம் செய்வதுடன் அழகும் தருகின்றது. உவமை யமைந்த கவிதை அணிகலம் பூண்ட அரிவை யொருத்தியைப் போன்ற தென்பர். எல்லா அணி களுக்கும் தாயாகும் பெருமையும் உவமைக்குண்டு. தொல் காப்பியரும் இவ்வுவமையணி யொன்றையே விரிவாக ஆராய்ந்து தம் நூலில் அமைத்துள்ளார்; 'வேறுபடவந்த உவமத் தோற்றம்' என மற்றவற்றைத் தழுவி அவை உவமவிகற்பங்களே என விளக்கியுள்ளார். அருட்புலவர்கள் அருள் வாக்குகளிலும் சீரிய உவமைகள் பலவற்றை நுகர்ந்து மகிழ்கின்ருேம். அப்பரடிகள் தேவார அருளிச் செயல்களிலும் பலவகைப்பட்ட உவமைகளைக் காணலாகும். வினை, பயன், மெய், உரு எனு நான்கு வகைகளில் இவ்வுவமைகள் பெரும்பாலும் வினையுவமை யாகவே விளங்குகின்றன எனலாம்,

நீர்நிலை பற்றியது :

நீர்நிலையொன்றினைக் காவல் செய்து வருவோர் சிலரும் உள்ளனர்; அக்காவலைப் பொருட்படுத்தாமல். நீர்நிலைக்கரைக் கண் நின்றவர், அந்நீர்நிலையின் ஆழம் அறிய வினவியவரை 'நீரே இறங்கிக் கண்டு கொள்வீராக;' என்று கூறிவிட, இறங்கு துறையிலேயே மூழ்கித் தவிக்கும் மக்களை நமக்குக் காட்டுகின்ருர்' அடிகள். தாம் சைவசமயத்தை விட்டுச் சமண சமயம் புகுந்து இடர்ப்பட்டதை இப்பிறிதுமொழிதல் உவமை யினல் அடிகள் விளக்குகின்ருர். திலகவதியார் முதலியோருடைய அறிவுரைகளையெலாம் இகழ்ந்து, அவற்றையெல்லாம் பொருட் படுத்தாது வேற்றுச் சமய நூல்களை ஆராய்ந்தறிந்து, சமண சமய உண்மைகளை ஆராய்ந்து கண்டுகொள் என்று சமண் சமயத்தார் கூற, சமண் சமயம் புகுந்து அதனை மேற்கொண்டு,

Koviloor Digital Library

மீளும் வகையின்றி இடர்ப்பட்டவர் அடிகள். இந்நிலையை விளக்கும் அடிகள் கூருமற் கூறித் தம் துயரநிலையைத் துவக்குகின்ருர் ; ஆழப்பொருளை அகத்தே உடைய அப்பாடற்பகுதி பின்வருவதாகும் :-

" காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
 கரைநின்றவர் கண்டுகொ ளென்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
 நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன் " (4 - 1 - 5)

' கருதிய பொருளைத் தொகுத்து, அதனைக் கூருது ஒத்தபொருள் ஒன்றை, உரைப்பதை இவ்வணியாகக் கூறுவர் ' திருவள்ளுவர் நுனிக்கொம்பர் ஏறினர் ; 'பீலிபெய சாகாடும்' ஆகிய குறட்பாக்களில் கூறும் முறையை ஒட்டியவையாக இவ்வமைப்புக்களை நாம் காணலாம்.

எல்லாம் சிவம் எனல் :

எல்லாம் சிவமயமாகக் காணும் பெருந்தகை அப்பரடிகள். எப்பொருளைக் கண்டாலும் அதனூடு இறைவனைக்கண்டு ஏத்துவது இப்பண்பட்ட அருட் புலவரின் இயல்பு ; இதனைத் திருவையாற்றுப் பதிகத்தில், காந்தாரப் பண்ணில் அமைத்து அருளியுள்ளார். சோலைகளும், பிற இன் பூங்காக்களும் நிறைந்த திருவையாற்றில், பிடியும் களிறும், கோழியும், பெடையும், குயிலும் பெடையும், மயிலும் பெடையும், பகன்றில்களும், ஏனங்களும், நாரையும், மானும், கிளியும், நாகும், ஏறும் ஆகியவற்றைக் காண்கின்ற அடிகள் சிவமும் சத்தியுமாகவே இவற்றைக் கண்டு களிக்கின்ருர் ; கவிதை இசைக்கின்ருர் ;

" கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் "

என்று இனிக்கப் பாடுகின்ருர் ; ஆணும் பெண்ணுமாகிய அஃறிணை உயிர்களிலும், அம்மையப்பரை உவமைகொண்டு அருளிச்செய்வாராயின் இக்கனிந்த உள்ளத்தின் ஏற்றத்தை என்னென்பது ! மெய்ப்பொருளாக விளங்கும் இறைவனை எல்லாமாகக் கண்டு ஏத்தும் பண்பாட்டில் தலைசிறந்து விளங்குகின்ருர் தாண்டகவேந்தர்.

Koviloor Digital Library

சைவத்தின் மாண்பும் புறச்சமயப் புன்மையும் :

இறைவன் திருவாரூரில் எழுந்தருளி அருள்வழங்கவும் தாம் அவனைத் தொழாது சமண சமயம் சார்ந்து இடருற்றமைக்குத் தக்க பழமொழிகள் பலவற்றை உவமைமுகத்தான் எடுத்தாளும் திருப்பதிகம் ஒன்றைக் காந்தாரப் பண்ணில் காண்கின்றோம். (4-5-1-10)

" கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும்ஆரூரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருப்பக்காய் கவர்ந்த
கள்வனேனே "

" முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப்பின்
போனவாறே "

" அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க மறம்விலைக்குக்
கொண்டவாறே "

" பண்டெலாம் அறியாதே பனிநீராற் பாவைசெயப்
பாவித்தேனே "

" என்னகத் திருத்தாதே ஏதன்போர்க்கு ஆதனாய்
அகப்பட்டேனே "

" எப்போதும் நினையாதே இருட்டறையின் மலடுகறந்து
எய்த்தவாறே "

" விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்மினித்தீக்
காய்ந்தவாறே "

" பாவியேன் அறியாதே பாழூரிற் பயிக்கம்புக்கெய்தவாறே "

" தட்டானைச் சாராதே தவ மிருக்க அவஞ்செய்து
தருக்கினேனே "

" கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க இரும்புகடித்
தெய்த்தவாறே "

கனியிருப்பக் காய்கவர்தல், முயல்விட்டுக் காக்கைபின் செல்லல், அறமிருப்பமறம் விலைக்குக்கொள்ளல், பனிநீராற் பாவை செய்ய முனைதல், ஏதன்போர்க்கு ஆதனாய் அகப்படல், இருட்டறையில்

Koviloor Digital Library

மலட்டுப்பசுவைக் கறந்து இளைத்தல், விளக்கிருக்க மின்மினித் தீயிற்குளிர் காய்தல், பாழூரிற்பிச்சை யெடுக்கச் செல்லல், தவம் இருக்க அவம் செய்து தருக்கல், கரும்பிருக்க இரும்புகடித்து எய்த்தல் - ஆகிய உவமைகள் அனைத்தும் சைவசமயம் விட்டுச் சமணசமயம்புக்கு மயங்கியமைகுறித்த கழிவிரக்கத்தான் விளைந்த உவமைகள், கனி, முயல், அறம், விளக்கு, தவம், கரும்பு - ஆகிய ஆறும் சைவத்தை விளக்கும் உவமைகளாக வந்துள்ளன. கனிந்து இனிக்கும் சுவையநுபவமும், முத்தி நோக்கி விரையும் செலவும், அறமே செழிக்கும் உயர்வும், அறிவின்மையை அறுக்கும் விளக்காம் விழுப்பமும், தவநெறியாகும் தாழ்வின் மையும், கரும்பென இனிக்கும் திறமும் உடையது சைவசமயம் என்பது இவ்வுவமைகளாற் பெறப்படும்.

திருவைங்தெழுத்துப்பற்றிய தெளிவு :

நமச்சிவாயப் பதிகத்தில் நலஞ்செறிந்த உவமைகள் பல நயம் பொருந்தித் திகழ்கின்றன. பூவினிற் சிறந்த தாமரை போலவும், அரன் அஞ்சாடுதலாற் சிறந்த ஆவினைப்போலவும், கோட்டமில்லாத கோவினைப் போலவும் நாவினுக்கு அருங்கல, மாகச் சிறப்பது திருவைந் தெழுத்து (2) என்கின்றார் அடிகள் விண்ணளவும் மிகுமாறு அடுக்கி வைக்கப்பட்ட விறகுக்குவிய லிடையே, அழல் உண்ணப் புகுந்தால் ஒன்றும் எஞ்சாது; அதுபோல், உலகினில் பண்ணிய பாவத்தின் குவியலைத் திருவைந்தெழுத்தே நண்ணிநின்று அறுக்கும். (3) என்னும் பகுதியும் மிக இனிய அறவுரைப் பகுதியாகும். விரதம் கொண்டார்க்கு அருங்கலம் திருநீறே ஆதல்போலவும், அந்தணர்களுக்கு அருமறையாறங்கங்கள் அருங்கலம் ஆதல் போலவும், சிவபிரானுக்குத் திங்கள் அருங்கலம் ஆதல், போலவும், அடியார்களுக்குத் திருவைந்தெழுத்தே அருங்கலம் ஆகும். (5) என்ற திருப்பாடற் கருத்துச் சீரிய உவமைகளைக் கொண்டுள்ளது.

அகத்திருளைக் கடியும் அகவிளக்கு என்றும், சொல்லின்கண் விளங்கும் சோதி விளக்கு என்றும், எண்ணில்லாத உயிர்களின் அகந்தோறும் ஒளிபெருக்கும் விளக்கு என்றும், அறிவிற்கு அறிவாய் விளங்கும் நல்லக விளக்கு என்றும் திருவைந் தெழுத்தை இனிய உவமைகளால் விளக்கும் திருப்பாடலும் (8) இங்கு அறிதற்குரியதாகும்.

Koviloor Digital Library

அறுகயிறூசல் அருமைப்பாடு :

கயிற்றிற் கட்டப்பட்ட ஊசலைத் தம் நிலைக்கு உவமையாக்கு கின்றார் பிறிதோரிடத்தில், நெஞ்சு ஒன்றுவிட்டு ஒன்று பற்றும் இயல்புடையது. பற்றியதை விட்டு வரும். சென்று பற்றுதலும் பற்றியதை விட்டு நீங்குதலும் அதன் இயல்புகள். தன்னிடத்தை, விட்டுப் பிறிதொன்றைச் சேர்ந்து பற்றுவது 'உறுகயிறூசல்'. மீண்டும் தன்னிலைக்கு ஆடிக்கொண்டே திரும்புவது 'மறு கயிறூசல்', இவ்வாறு ஆடிக்கொண்டிருக்கும் ஊசலை உடைய வனாகிய அடியேன், அவ்வூசல் அற்று நின்பாதமாகிய நிலத்தை அடைந்தேன் என்கின்றார் அடிகள்; இவ்வழகிய திருப்பாடல் பன்முறை ஓதி ஓதி உணர்தற்குரியதாகும்; நாமும் அறுகயி றூசலாகி அவனருள் சேர்தல் வேண்டும் என்பதை இத்திருப் பாடல் உணர்த்துவதாகும்; 'ஊசல் கயிறற்றால் தாய் தரையே யாந்துணையான்' என்பது சிவஞானபோதம்.

"உறுகயி றூசல்போல ஒன்றுவிட் டொன்றுபற்றி
மறுகயி றூசல்போல வந்துவந் துலவுநெஞ்சம்
பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையாய்பாதத்து
அறுகயி றூசலானேன் அதிகைவீ ரட்டனீரே" (4-26-6)

துயரங்களுக்குத்தரும் உவமைகள் :

தாம் அடைந்து வருந்துதற்குக் காரணமான துயரங்களை எண்ணி எண்ணிக் கனிகின்றார் அடிகள்; மன்றத்தில் இருக்கும் புன்னை மரத்தினைப்போல் நான் ஆனேன் என்கின்றார். மன்றத்தில் இருக்கும் புன்னை ஊரார்க்குப் பொதுவானதாகும். இன்னார்க்கு உரியது என்றிருந்தால் மரத்திற்குத் துன்பமில்லை. பொதுவாயிருப்பதால்தான் துயரத்திற்கேதுவாகின்றது. இது போல் இறைவனுக்குரிய தனிமரமாக உயிர் இருந்தால்தான் ஐம்பொறிகளாகிய பிறரால் வரும் தொல்லையின்றி இருத்தல் முடியும் என்பது அடிகளார் திருவுள்ளமாதல்வேண்டும்.

"மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரமெய்தி
ஒன்றினால் உணரமாட்டேன்" (4-26-8)

உப்பங்கழியில் தோணிபோல உழலுகின்றேன் என்றும் இவ் வருந்துயர்நிலையை விளக்குவர் அடிகளார்.

"அழிவுடைத்தாய வாழ்க்கை ஐவரா லலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணி போன்றேன் கடவூர்வீ ரட்டனாரே"
(4-31-6)

Koviloor Digital Library

தான் விரும்பியபடி எங்கும் உலவும் நிலையைக் கழியிடைத் தோணியிடம் காணவியலாது; கடலிடைத் தோணியாயின் அந்நிலைமை காணலாம். குறுகிய கழியின் இருகரைகளாலும் அலைக்கப்பட்டு அமிழாதும் மிதவாதும் துயருறும் தோணியை, ஐம்பொறிகளால் அலைக்கப்படும் உயிர்க்கு ஒப்பிட்டுள்ள ஆழம் அறிந்தின்புறத்தக்கது.

மத்தினால் இடிபட்டுத் தயிர் சுற்றிச் சுழன்று உடைந்து உருவமும் கெடுமாறுபோல, சித்தத்துள் ஐவர் தீயவினை பலவும் செய்ய மறுகும் உள்ளத்தை ஒரு திருப்பாடலில் உரைக்கின்றார் இவ்வருளாளர்.

"சித்தத்துள் ஐவர்தீய செய்வினை பலவும்செய்ய
மத்துறுதயிரே போல மறுகுமென் னுள்ள ந்தானும்"

(4-52-9)

இவ்வாறெல்லாம் ஒருபுறம் அலைக்கப்பட்டும், இறைவனை - உள்குவார் உள்ளத்தின் குடியிருக்கும் உணர்வெனும் பெருமானை, உள்கிக்கொண்டிருக்கின்றார் இவ்வருளாசிரியர்; இருதலையிலும் தீப்பற்றிக்கொண்டுள்ள கொள்ளியின்மேல் எறும்பைத் தமக்கு உவமையுரைக்கின்றார். திருவாசகத்தும் முத்தொள்ளாயிரத்தும் இவ்வுவமை வருதல் இங்கறியத்தக்கது.

"எள்கினேன் எந்தைபெம்மான் இருதலை மின்னுகின்ற
கொள்ளிமேல் எறும்பென்னுள்ளம் எங்ஙனம் கூடுமாறே"

(4-75-6)

சோற்றுருண்டையைக் கண்ட காக்கைகள் அதனைக் கூடி மொய்த்து உண்ணுவதுபோல, வல்வினைகள் மொய்த்து வருத்துவதனை உரைக்கின்றார்.

"மோத்தையைக்கண்டகாக்கைபோலவல்வினைகள்மொய்த்துஉன்
வார்த்தையைப் பேசவொட்டா மயக்கநான் மயங்குகின்றேன்"

(4-75-7)

இறைவன் அருள் :

இறைவனுடைய இன்னருள் தேனூறு பாய்வதுபோல் அடிகளார் உள்ளத்தில் 'சிறைபெருநீராய்'ப் பாய்கின்றது; களிவிஞ்சக் கவிதை யிசைக்கின்றார் தாண்டகவேந்தர்.

Koviloor Digital Library

" நான் ஐயாறு புக்கேற்கு அவன் இன்னருள்
தேனையாறு திறந்தாலே ஒக்குமே" (5 - 27 - 9)

பண்ணில் ஓசைபோலும், பழத்தினில் சுவைபோலும், கண்ணில் மணிபோலும் கலந்துள்ளான் இறைவன் என்று கனிகின்றார்.

" பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை......
கண்ணில் உண்மணி கச்சியேகம்பனே" (5 - 47 - 8)

திருவரிசிற்கரைப்புத்தூர் இறைவனைச் சிந்தைசெய்யச்செய்ய அவன் மிகச் சுவை பயக்கும் நிலையில் கரும்புச்சாறுச்சுவையாய் அடிகளின் திருவாக்கில் முந்துகின்றான்.

" திருப்புத்தூரனைச் சிந்தை செயச் செயக்
கருப்புச்சாற்றிலும் அண்ணிக்கும் காண்மினே"
(5 - 61 - 5)

இறைவன் இணையடி நீழலை நீற்றறையில் காண்கின்றார் அடிகள். இணையடி நிழல் இன்பத்தினைக் கண்டும், கேட்டும், உண்டும், உற்றும், உயிர்த்தும் வெறிகொண்டிசைக்கின்றார்' குற்றமற்ற வீணையிசையும், மாலையில் தோன்றும் மதியின் நிலவும்' வீசும் தென்றல் இனிமையும், இளவேனில் மாண்பும், வண்டொலிக்கும் தாமரைப் பொய்கையும் போன்றதென்று, திருவாய் பொலியப் பாடுகின்ற அத்திருப்பாடல் வருமாறு :-

" மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன்எந்தை இணையடி நீழலே" (5 - 90 - 1)

கோடி தீர்த்தங்கள் கலந்து குளித்து அவை ஆடினாலும் அரனுக்கு அன்பில்லையேல் பலனில்லை ; ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தில் கொட்டி மூடிவைத்ததுபோலும் அச்செயல், அரனுக்கு அன்பில்லையேல் தீர்த்தங்கள் ஆடினாலும் பலன் இல்லை; என்பதைக் 'கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென், கொங்கு தண் குமரித்துறை ஆடிலென், ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென், எங்கு மீசன் எனாதவர்க் கில்லையே' என்று அருளும் அடிகள் இவ்விடத்துத் தெளிவாக உவமையின் மூலம் இதனை விளக்கி விட்டார் ;

Koviloor Digital Library

" ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடிவைத்திட்ட மூர்க்கனேடொக்குமே" (5-99-9)

எள்ளல் உவமை :

தேவதேவனாகிய சிவபிரான் ஞானத்தால் கண்டு தொழத் தன்னையருளும் தலைவன்; பாவகாரிகளாக உள்ளவர்களே அவனைப்பார்க்க அரியவன் என்றுரைப்பர். அவர்களுக்கு ஓர் அழகிய உவமை கூறுகின்றார் அடிகள்; கிணற்றில் வாழும் ஆமை, கடலில்வாழும் ஆமையைச் சந்தித்து. 'இக்கிணற்றி னளவைவிடப் பெரியதா உன் கடல்' என்று கேட்பது போன்றது இது என்று உரைக்கின்றார்; எள்ளி நகையாடுகின்றார்;

" கூவலாமை குரைகட லாமையைக்
கூவலோ டொக்குமோ கடலென்றல்போல்
பாவகாரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவதேவன் சிவன் பெருந்தன்மையே" (5-100-5)

ஐம் பொறிகளால் அலைக்கப் பட்டுத் துன்புறும் தம் நிலைக்கு இவ்வாறே ஆமையை அணிபெற உவமை கூறும் பகுதியும் இவ்விடத்து அறிந்தின் புறத்தக்கது. உலைநீரில் இட்ட ஆமை சூடேறச் சூடேறத் திளைத்துநின்று இன்புற்றுடிப்பின் அழிந்தொழிவது போலத் தாம் வளைத்துநின்ற கள்வராகிய ஐவரால் தளைக்கப்பட்டு வருந்துவதாக உரைக்கின்றார்.

" உலையை ஏற்றித் தழல் எரிமடுத்த நீரில்
திளைத்து நின்றாடுகின்ற ஆமை போல் தெளிவிலாதேன்"
(4-79-6)

பிறபல உவமை நலங்கள் :

வெள்ளிக் குன்றம் போல்வது விடை (6-3-2) என்றும், தோன்றும் செஞ்ஞாயிறுபோன்றது திருவடி (6-6-4) என்றும், தண்ணீர்நிறைந்த ஏரி போன்று தண்ணளிச் செல்வம் உடைய கருணைக்கடலாயுள்ளான் மறைக்காட்டுறையும் மணாளன் (6-23-5) என்றும், ஆலைப்படு கரும்பின் சாறுபோல அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத்தான்காண் (6-52-2) என்றும், கருதியது முகக்கமாட்டாத தாம் காம்பிலா மூழை என்றும், பலபல நினைவுகளைத் தாம் கொண்டொழுகுவது பாம்பின்வாய்த் தேரையின் நினைப்புப் போல்வது என்றும் (4-46-1) பிற இடங்களில்வரும் உவமைகளும் இலக்கிய அழகு செறிந்தவை.

Koviloor Digital Library

உவமனில்லி :

உவமைகள் பலவற்ருல் இறைவனை எடுத்துப் போற்றும் அடிகள், இவ்வுவமைகள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு விளங்குபவன் அவன் என்பதை நன்கு உணர்ந்தவர். அந்தக் கருத்தமைய அடிகள் பாடியருளும் பகுதிகள் பல.

" மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்
ஓரூரனல்லன் ஓருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே "

(6 - 97 - 10)

தனக்குவமை இல்லாதான் என்று திருவள்ளுவர் கூறும் கருத்துரையை நன்கு தம் அநுபவத்தில் தெளிந்துள்ள அடிகள் இவ்வாறு கூறியருளுவது நன்கு சிந்தித்துத் தெளிதற்குரியதாகும்.

உருவக அமைப்பு நுட்பம் :

உவமைகளாற் கூற இயலாத அடிகள் உருவகத்தால் அழகு படுத்தும் உயர் கவிதைகள் பலவாகும். அவ்வுருவகங்கள் அனைத்தும் ஆழ்ந்த இலக்கியநலம் அமைந்தவை. உவமையின் செறிவே உருவகம் என்பர். பல திருப்பதிகங்களை இவ்வமைப்பில் அடிகளருளியுள்ளார். 6 - 38, 6 - 15, முதலிய பதிகங்களைக் காணலாம். மெய்ம்மையெனும் உழவினல் சிறந்து, விருப்பமெனும் வித்தை வித்தி, பொய்ம்மையாம் களையை நீக்கிப் பொறையெனும் நீர் பாய்ச்சித் தகவு எனும் வேலியிட்டுச் செம்மையுள் நின்ருல் சிவகதி எனும் நல்விளைவு உண்டாகும் என்பது (4-76-2) ஓர் அழகிய உருவகமாகும். காயக் கோயிலில் மனமே அடிமையாக, வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக, நேயமே நெய்யும் பாலுமாகச் செய்யும் அன்புப் பூசனையை (4 - 76 - 4) அடிகள் அருள்வதும் ஓர் இனிய பகுதியாகும். துன்பக் கடலிடைத் தோணித்தொழில் பூண்டதொண்டர் தம்மை இன்பக் கரைமுகந்து ஏற்றுந்திறத்தன ஐயாறன் அடித்தலம் (4 - 92 - 6) என்பதும் இவ்வருளாளர் அருள்வாக்கு. பித்தராம்

Koviloor Digital Library

அடியார்க்கு முத்திகாட்டும் ஏணியாகவும், இடர்க்கடலுட் சுழிக்கப்பட்டு இளைப்போர்க்கு அக்கரைக்கே ஏறவாங்கும் தோணியாகவும், சுடர் பொற்காசின் ஆணியாகவும் உருவகம் செய்யும் (6 - 46 - 4) அமைப்பு அழகுடையதாகும். இவ்வாறே 'தோணியாகிய சோற்றுத்துறையர்க்கே பூணியாய்ப் பணிசெய் மடநெஞ்சமே' என்றும் (5 - 33 - 7) பாடியருள்வர்.

பத்தர் நெஞ்சுள் தேனும் இன்னமுதுமாகவே தித்தித் திருப்பான் (4 - 28 - 1) என்று இறைவனைப் பரவுகின்றார். வித்தினில் முளையர், (4 - 64 - 9) கனியினும் கட்டிபட்ட அரும்பினும் பனிமலர்க்குழற் பாவை நல்லாரினும் தனிமுடிகவித் தாளும் அரசினும் இனியர். (5 - 14 - 10) நீற்றுத்தண்டத்தராய் நினைவார்க்கெலாம் ஊற்றுத்தண்டாவர். (5-24-3) மாலை யெழுந்தமதி, காலை முளைத்தகதிர்; (6 - 56 - 3) உருகும் மனத்து அடியவர்கட்கு ஊறும் தேன்; உண்மை நின்ற பெருகுநிலைக் குரியாளர் அறிவு; மெய்த்தவத்தோர் துணை. (6 - 84 - 3) தேவர் வேண்டச் சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கம் (6 - 99 - 2) என்றெல்லாம் உருவகம்செய்து இறைவனை ஏத்துவது அடிகள் இயல்பு. உருவகம் செய்யுங்கால் அணிபெற அவற்றை எடுத்து விளக்குவதும், சிலவும் பலவுமாய அடை மொழிகளால் எடுத்து மொழிவதும், உயர்கருத்தை அருள நுபவம் குழைத்துத் தொடுத்து இனிய கவிதையாக்கி இனிய பண் கலந்து இறைவன் திருவடியிற் சார்த்தி மகிழ்தலும் அடிகளார் அருளிச்செயல்களில் நாம் எங்கெங்கும் கண்டு களிகூரத்தக்க செய்திகளாகும்.

"முடிவண்ணம் வான மின் வண்ணம்; தம்மாரமார்பின் பொடிவண்ணம் தம்புகழூர்தியின் வண்ணம்; படிவண்ணம் பாற்கடல் வண்ணம்; செஞ்ஞாயிறு அடிவண்ணம் ஆரூர் அரநெறியார்க்கே" என்று (4 - 17 - 9) வரும் அருள் உருவ கத்தை மறக்கலுமாமோ?

உடல் நிலை உருவகங்கள் :

உடலை அடிகள் பலவாறாக விளக்கி, ஐம்பொறித் துயரங் களையும் பலவாறாக உருவகம் செய்து எள்ளுவர்; பொய்யினால் மிடைந்த போர்வை புரைபுரை அழுகிவீழ மெய்யனாய் வாழ மாட்டேன். (4 - 26 2) அஞ்சினால் இயற்றப்பட்ட ஆக்கைபெற்று அதனுள் வாழும் அஞ்சினால் அடர்க்கப்பட்டு இங்கு உழிதரும்

Koviloor Digital Library

ஆதனேன், (4-26-5) கால்கொடுத்து இருகையேற்றிக் கழி நிரைத்து இறைச்சி மேய்ந்து. தோல்படுத்து உதிர நீரால் சுவரெடுத்து. இரண்டுவாசல் அமைத்து ஏழுசாலேகம் பண்ணி, மால்கொடுத்து ஆவிவைத்தார், (4-33-4) 'பொந்தையைப் பொருளா எண்ணிப் பொருக்கெனக் காலம் போனேன்' (4-41-5) 'ஒருமுழம் உள்ள குட்டம்; ஒன்பது துறை உடைத் தாய் அரைமுழம் அதன் அகலம்; அதனின்வாழ் முதலே ஐந்து (4-44-2) 'மனம் தோணி; மதிகோல்; சினம் சரக்கு; பிறவி கடல்; மதனெனும் பாறைதாக்க மறிந்து வீழ்கின்றது தோணி' (4-46-2) 'முப்பதும் முப்பத்தாறும் முப்பதும் இடுகுரம்பை அப்பர்போல் ஐவர்வந்து 'அது தருக, இது விடுக' என்று ஒப்பவே நலியலுற்ருல் உய்யுமாறு அறியமாட்டேன். (4-54-3) 'மெய்யுளே விளக்கை ஏற்றி வேண்டளவுயரத் தூண்டி உய்வ தோர் உபாயம்பற்றி உகக்கின்றேன்; உகவா வண்ணம் ஐவரை அகத்தே வைத்தீர்' (4-5-49) ஒழுகுமாடத்துள் ஒன்பது வாய் தலும் கழுகரிப்பதன் முன்னம் கழலடி தொழுக (5-31-7) என்றெல்லாம் வரும் அருள்மொழி விளக்கங்கள் மறக்க வியலாத மாண்பும், பாடி மகிழ்வோர் நெஞ்சைப் பண்படுத்திக் கனிந்துரு குவித்து இறையொளிக்கு ஆட்படுத்தும் திறனும் உடையவை. சிறந்த உருவக அமைப்புடன் கூடிய செய்யுள்களாகவும் இவை திகழ்கின்றன.

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே" (4-75-4)

என்பது அகவிளக்குப்பற்றி அடிகள் அருளும் அழகிய கவிதை.

அருளியற் கற்பனை:

கற்பனை நலம் கனிந்த அப்பரடிகள் கவிதைகள் என்றும் அழியாச் சிறப்புடையவை. கற்பனை என்பது இலக்கிய அழகு களில் தலைசிறந்து நிற்கின்றது. கற்பனை கலவாதகவிதை உயிரின்றி நிற்கும் உடல்போல் உள்ளது; அதற்கு இயக்கம் இல்லை; கற்பனை உயிரூட்டச் சக்தியாக நின்று கவிதையை உயிர்படைத்து இயக்குகின்றது. சங்ககாலக் கவிதைகள் முதல் அனைத்தும் கற்பனை நலம் செறிந்து விளங்குகின்றன. பழுத்த அருளியற் புலவரான அடிகள் கற்பனை செய்து தம் படைப்புத் திறத்தால் (Creative Power) சிற்சில அரிய கவிதைகளை இனிக்கப்

Koviloor Digital Library

பாடுகின்றார். மேலைநாட்டுக் கவிஞர்கள் கற்பனையை இரு கூறுக்குவர்; ஒன்று ஆக்கக் கற்பனை; (Constructive Imagination) மற்றது நினைவுக்கற்பனை. (Recollective Imagaination) இவற்றுள்; ஆக்கக் கற்பனையே மிக விரிந்ததும் ஆழமானதும் ஆகும், பொருளைக் கண்டவுடன் அதன் புறத்தோற்றம் முதலியவற்றில் ஈடுபடாமல் அதன் அகத்தை ஊடுருவி நோக்கியும், உட்கருத்தை அறிந்தும் அவற்றின் பயனாகத்தோன்றுவது இந்தக் கற்பனை. இம்மட்டோடு நில்லாமல் இக்கற்பனை ஆக்கல் தொழிலில் ஈடுபடுகிறது. அப்பொருளின் உண்மைத்தன்மை, இவ்வுலகில் அது நிலவுவதற்குரியகாரணம், ஏனைய பொருள்களோடு இதற்குள்ள தொடர்பு முதலியவற்றை வரிசைப்படுத்திக் கவிஞன் கூறுகையிற்றான் அவனது ஆக்கச்சக்தி வெளிப்படுகிறது என்பர்.[1]

"சிதம்பரத்தில் ஆனந்த தாண்டவம் செய்யும் பெருமானைக் கோடிக்கணக்கான மக்கள் கண்டதுண்டு, எனினும் திருநாவுக்கரசர் என்ற ஒரு கலைஞர் மட்டுமே அக்கலையின் உயிர்ப்புத் தன்மையை உணருகிறார். "தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம் என்று வந்தாய் என்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே" (4-81-2) என்று அவர் பாடும் பொழுது பெருமானின் எடுத்த திருக்கை அவருடன் பேசியதை அறிய முடிகிறது.[2]

கற்பனையின் கடமை:

மனம் அல்லது ஆத்மாவின் சக்தியே கற்பனை; அது புலனுணர்வு, ஞாபகம், உணர்ச்சி. பகுத்தறிவு என்ற அனைத்தினும் வேறுபட்டு உள்ளது. அது, இவற்றின் வேறுபட்ட ஒன்றையினும் மனத்தின் பல்வேறு வகைப்பட்ட இவற்றின் துணைக் கொண்டே செல்கிறது. அழகால் உலகம் விரிந்து வளர்கிற தென்றால் ஆக்குவது கற்பனையின் கடமையாம் என்பர்[3]. இக் குறிப்பை அடிகள் திருவாக்கில் தெளிவுபெறக்காணலாம்.

[1] திரு. அ. ச. ஞானசம்பந்தர் - "இலக்கியக்கலை" பக். 71-72

[2] ,, ,, பக். 76.

[3] The energy of the mind or the soul - for it welds all Psychical activities - Which is the agent of our World winning's and the Procreator or our growing life, we term imagination...... Through beauty the world grows, and it is the business of the imagination to create the beautiful. —A study of Poetry - B. Perry - P-67.

Koviloor Digital Library

அற்புதமான அழகு :

சிவபிரான் திருமுடியிற் பாம்பும், பிறையும் உள்ளன ; அவர் கரத்தில் நகுதலையும் உள்ளது. அம்மையொருபாகத்தில் உள்ளாள். இத்திருக்காட்சி அடிகள் உள்ளத்தே விரிகின்றது. பாம்பைக் கண்டு அஞ்சுகின்ருளாம் அம்மை ; அம்மையை, நீலமயிலோ என்று அப்பாம்பு ஐயுற்று அஞ்சுகின்றதாம். பிறையோ அம்மையின் நுதலைக்கண்டு இவ்வழகு தனக்கில்லையே என்று எண்ணி ஏங்குகின்றதாம் ; கையிற் பிடித்த கபாலமோ இதனைக்கண்டு நகுகின்றதாம். ஆம் ! இப்படித் தோன்றுகிறது அடிகளின் கற்பனைக் கண்ணுக்கு. அச்சம், ஐயம், ஏக்கம், நகை ஆகிய பண்புகளை இப்படிக் கண்டு காட்டுகின்ருர். முரண்பட்ட இப்பண்புகளை இணைத்து அற்புதமான அழகை உருவாக்குகின்ருர் அருளியற்புலவர் ; கவியின்பம் ததும்பும் இக்கற்பனைக் கருவூலம் பின்வருவதாகும் :-

" கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடிலவாணரே " (4 - 10 - 8)

அச்சக் கற்பனை :

உலகெலாம் ஈன்று காத்தளிக்கும் அன்னை ஒரு பாம்பைக் கண்டு அஞ்சுவாள் என்பது அறிவுக் கண்ணுக்குப் பொருந்தாத காட்சிதான் ; ஆனல் கற்பனைக்கண்ணுக்கு, கலைக்கண்ணுக்கு, உணர்வுக்கண்ணுக்கு ஒத்த காட்சியாகவே அஃது உள்ளது. அடிகள் பாடும் அருங்கவிதையே இதுவும்.

" நாகத்தை நங்கைஅஞ்ச நங்கையை மஞ்ஞைஎன்று
வேகத்தைத் தவிர, நாகம் வேழத்தின்உரிவை போர்த்துப்
பாகத்தின் நிமிர்தல்செய்யாத் திங்களை மின்னென்றஞ்சி
ஆகத்திற் கிடந்தநாகம் அடங்கும் ஆரூரனுர்க்கே "

(4 - 53 - 2)

நாகம் திங்களை மின்னென்று கருதி அடங்கியொடுங்கும் என்றும் கூறுவது நயம் மிக்க பகுதியாகும்.

இறைவன் அருளாடல் பற்றி :

இறைவனுடைய திருவிளையாடலை எண்ணி எண்ணி மகிழ்கின்ருர் அடிகள். அவற்றை அடிகள் இலக்கிய அழகுடன் எடுத்

Koviloor Digital Library

துரைக்கும் இனிய கவிதைகள் பல; அவற்றுட் சிலவற்றை இங்குக் காண்போம்.

இறைவன் வினவுவோர்போல ஏதோ வினவிநின்றவன் திடீலென்று அடிகள் உள்ளத்திற் புகுந்து ஒளித்துக்கொண்டானும். அடிகள் பக்கமெங்கும் தேடி வினவிவந்தவனைச் சுழன்று சுழன்று தேடுகின்றாராம்; "கள்ளரோ? என்னையறியாது என் உள்ளத்தே புகுந்துகொண்டீர்" எனக் கேட்கின்றாராம். அதற்கு இறைவன் மலர்ந்து சிரித்தபடியே "நாம் வெள்ளரோம் (வஞ்சனையில்லாதேம்)" என்று கூறிக்கொண்டே வெளிப்பட்டுத் திருக்காட்சி வழங்கினாராம். இவ்வற்புதக் கற்பனையை உடைய திருப்பாடல் இது:-

" வெள்ளநீர்ச் சடையனார்தாம் வினவுவார் போலவந்தென்
உள்ளமே புகுந்துநின்றார்க் குறங்குநான் புடைகள்போந்து
கள்ளரோ புகுந்தீர்என்னக் கலந்துதான் நோக்கிநக்கு
வெள்ளரோம் என்றுநின்றார் விளங்கிளம் பிறையனாரே."

(4-75-9)

இவ்வாறு தம் உள்ளத்தே இறைவன் இருந்தாலும், மூச்சினோடு வெளியே வந்தாலும் தம்மால் அறியப்படமுடியாதபடிக் கள்ளத்தால் நிற்றலையும் அடிகள் கனிந்து பாடுகின்றார்.

" உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும்
கள்ளத்தே நிற்றியம்மா எங்ஙனம் காணுமாறே." (4-76-7)

என்னைவிடயாரும் எனக்கினியவர் என்றில்லை. என்னைவிட எனக்கு இனியவன் ஒருவன் உள்ளான் என்று சுவைபெறக் கூறத்தொடங்கி, அவன் என்னுள்ளே நிற்பவன் என்று முடிக்கும் அழகுடைத் திருப்பாடல் இங்கு அறியத்தக்கது.

" என்னி லாரும் எனக்கினி யாரிலை
என்னிலும் மினியா னொருவன் னுளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே." (5-21-1)

இவ்வாறு தம்முள்ளமே கோயிலாகப்புகுந்த இறைவன் புகுந்த சுவடும் தெரியவில்லை என்கின்றார் அடிகள்; 'யாதும் சுவடு படாமல் ஐயாறடைந்த' உத்தமரன்றோ அடிகள்! அவர் கயிலை

Koviloor Digital Library

யிலிருந்து ஐயாறு புகுந்த சுவடு தெரியாமற்போனதுபோலவே இச்சுவடும் தெரியவில்லையாம் ; நயப்புறப் பாடுகின்றார் ;

" என்மனமே ஒன்றிப்புக்கனன் போந்த சுவடில்லையே "

(4-81-3)

என்று.

பிறவி வேண்டும் :

மனிதப்பிறவி வேண்டும் என்று அப்பரடிகள் கூறுவது கருத்துப் புரட்சிபோல் தோன்றும். 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்ற குறள்நெறி பிறழாத் தவவேந்தரா இவ்வாறு கூறுகின்றார் என்று தோன்றும் ; ஆனால், 'குனித்த புருவம் கொவ்வைச்செவ்வாய், குமிண் சிரிப்பு, பனித்தசடை, பவளமேனி, பால்வெண்ணீறு, எடுத்தபாதம் ஆகியவற்றைக் காணப்பெற்றால் தான் மானிடப்பிறவி வேண்டுவது' என்று விளக்கங் கூறுங்கால் அமைதியும் இன்பமும் கொள்கின்றோமல்லவா ? 'உயிராவணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக்கிழியில் உருவெழுதி' உருகி உரைக்கும் அப்பரடிகளது அருட்கவிதை இது.

" குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்தமா நிலத்தே "

(4-81-4)

இத்திருப்பாடல் அழகிய சொல்லாட்சியும், அரும்பொருட் செறிவும், அடைமொழிச் சிறப்பும், கற்பனையிற் கண்டாலும் கனிவிக்கும் அருள்நலமும் உடைய அருட்பனுவல் திருவிருந் தாக உள்ளமையைத் தமிழ் அன்பர்களும், சமய அன்பர்களும் உணரலாம்.

திருவோற்றியூரர் திருமுடி :

திருவொற்றியூர்ப் பெருமானின்மேல் தேன்போலுந் திருப் பதிகம் ஒன்றை அடிகள் அருளியுள்ளார். அப்பெருமானுடைய திருமுடி, அடிகளுடைய கற்பனைப் பார்வையை எழுப்புகின்றது ; கொன்றை, வெண்டலை, கங்கை, அரவம், திங்கள் ஆகிய அனைத் தையும் அங்குக் காண்கின்றார். கொன்றை எந்த நிலத்தின் கருப்பொருள் ? முல்லையென்பது நினைவுக்கு வருகின்றது

Koviloor Digital Library

கபாலம் சுடுகாட்டை நினைப்பூட்டுகின்றது; கங்கை கலத்தற்கு இடமாகிய கடல் நினைவுக்கு வருவதும் இயல்பே; பாம்பு உறையும் இடமாகிய புற்றை நினையாமல் இருக்கவியலாது; திங்கள் ஒளிவிரிக்கும் விசும்பும் தோன்றுகின்றது. இவ்வாறு முல்லையாக (கொன்றையினால்) - களர் நிலமாக (வெண்டலையினால்) - கடலாக (கங்கையால்) - புற்றாக (அரவத்தால்) - வானமாக (திங்களால்) விளங்குகின்றதாம் பெருமான் திருமுடி. இனிக்க இனிக்க எழுகின்றது இலக்கிய எழிலுடன் அருட்கவிதை;

" அங்கட் கடுக்கைக்கு முல்லைப்புறவம்; முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக்களரி; பருமணிசேர்
கங்கைக்கு வேலை; அரவுக்குப்புற்று; கலைநிரம்பாத்
திங்கட்கு வானம்; திருவொற்றியூரர் திருமுடியே"

(4 - 86 - 10)

இவ்வாறு பாடும் அடிகள் நகைச்சுவையெழில் தவழ ஓர் விண்ணப்பம் செய்கின்றார்; அவ்வழகிய வரிகள் :-

" வங்கமலி கடல்நாகைக் காரோணத்தெம் வானவனே
எங்கள் பெருமானோர் விண்ணப்பம் உண்டது கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாய் அக்கள்ளத்தை மெள்ள உமை
நங்கை அறியிற்பொல்லாது கண்டாய் எங்கள் நாயகனே"

(4 - 103 - 8)

எவ்வளவு அழகாக அமைந்துள்ளது இத்திருப்பாடல்!

சடைமுடியில் :

இவ்வாறு கங்கையைச் சடையில் வைத்துள்ளமை உமையம்மைக்குத் தெரிந்தால் பொல்லாது என்று கூறுவது உலகியல் நலம் உரைக்கும் பகுதியாகவும் உள்ளது. தனக்குத் தெரியாமல் வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொள்வதுடன் அவளைத் தனக்குத் தெரியாமல் ஒளித்துக்கொள்ளும் கணவனை அவன் மனைவி எப்படி உணர்வாள், என்ன நிகழும் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும்; அதனைப் 'பொல்லாது கண்டாய்' என்ற இருசொற்களில் விளக்குகின்றார். இப்படியே ஒன்றற்கொன்று பகையாந்தன்மையுடைய பிறையையும் பாம்பையும் உடன் சடையில் வைத்தமை குறித்தும் அடிகள் அருளும் நயப்பகுதி இனியதாகும் :

" பைதற் பிறையொடு பாம்புடன் வைத்த பரிசறியோம்
எய்தப் பெறின் இரங்காது கண்டாய்நம் இறையவனே"

(4 - 106 - 1)

Koviloor Digital Library

திருவடிச் செம்மாப்பு:

திருமாலொடு நான்முகனும் தேடித் தேடவொண்ணுத தேவனைத் தம்முள்ளே தேடிக் கண்டுகொண்டவர் அப்பரடிகள் தம் அரிய அருள்வாய்ப்பை எண்ணி எண்ணி இறுமாந்திருக்கும் தலைவர்; செம்மாந்து நிற்கும் செந்தமிழ் நாவலர்.

"திருவடி தரித்துநிற்கத் திண்ணம் நாம் உய்ந்தவாறே"
(4-71-10)

என்றும்,

"திருவடி சுமந்துகொண்டு காண்கநான் திரியுமாறே"
(4-75-10)

என்றும் பாடி மகிழ்வர்; உடலுயிர் வேறுபட்டால் இறைவன் திருவடிக்கீழ்த் தலைமறைவு வேண்டி உருக்கமுடன் ஓதுகின்ருர்:

"இருகாற்குரம்பை இதுநா னுடையதிது பிரிந்தால்
தருவாய் எனக்குன் திருவடிக்கீழொர் தலைமறைவே"
(4-113-2)

தொழப்படுதலும் தொழுவித்தலும்:

தனக்குத் தொண்டுபுரிவோர்க்கு இனிது விளங்கி அருளிப் பாடு புரியும் ஏந்தலாக உள்ள இறைவனை எண்ணுந்தொறும் கழிமகிழ்வெய்துகின்ருர் இக்கவியரசர்; தொண்டர்களைத் தேவர்களால் தொழுதற்கேற்ற சிறப்புடையவராக்குகின்ருனும்; தன்னைத் தேவர்கள் தொழுதேத்தும் தகுதி உடையவன் அவன். அத்தகு சிவபுண்ணியம் செய்த தேவர்களும் தொண்டர்களுக்கு வழிபாடு செய்யவைப்பன் எனின் அவன் கருணைக்கு அளவும் உண்டோ? அக்கருணையைச் சொற்பொருட் பின்வருநிலையணி விளையப் பாடும் பகுதி இது:

"தொழப்படுந் தேவர் தொழப்படுவானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம்மால் தொழுவிக்குந்தம் தொண்
டரையே" (4-112-5)

தம் நிலைபற்றிய கற்பனை:

தம் நிலைகளைக் கற்பனை செய்கின்ருர் அடிகள்; துறக்கப் படாத உடலைத் துறக்கவேண்டும் என்பது அவர் எண்ணம்;

Koviloor Digital Library

உறுதியான எண்ணம். அப்படித் துறந்தால் ஒருவேளை தூது வரோடு இறத்தலும் கூடும்; ஆயின் அதன்பின்? இருவிசும்பில் ஏறுதல் அடுத்தநிலையாதலும் கூடும். அதன்பின் மீண்டும் பிறத்தலும் கூடும். அப்படிப் பிறக்கும் நிலை வந்துற்றால், என் இறைவனை, பிறையணிந்த நீள்சடைப் பெருமானை மறந்துவிடு வேனோ என்று உள்ளம் அழல்கின்றார்; தம் நிலைகளைக் கற்பனை செய்து, அவ்வாறு வருமுன்னர்க் காத்தல் செய்வது தம் குறிக்கோளாதல் வேண்டும் என்பது அடிகள் கருத்து. அவ்வற்புதக் கற்பனையமைந்த திருப்பாடல் பின் வருவதாகும் :-

"துறக்கப் படாதஉடலைத் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்பேறுவன்; ஏறிவந்து
பிறப்பன்; பிறந்தாற் பிறையணிவார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ என்றென்னுள்ளங் கிடந்துமறுகிடுமே"

(4 - 113 - 8)

ஒன்றரைக்கண்ணன் :

இறைவனை ஒன்றரைக்கண்ணன் என்று நயம்பெற அப்ப ரடிகள் பாடுகின்ற திருப்பாடல் இனியதாகும். முக்கண்ணன் பெருமான்; உமைக்கு ஒருபாகம் கொடுத்தவுடன், செம்பாதித் திருமேனியில் ஒன்றரைக்கண் உடையனாயினன் என்கின்றார்;

"இன்றரைக் கண்ணுடையார் எங்குமில்லை இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமையாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூருறை உத்தமனே"

(4 - 86 - 7)

மற்றும் பல கற்பனை மாண்புகள் :

இறைவன் கீழ்க்கணக்குப் பதிவேடு வைத்துக்கொண்டுள் ளான் என்றும், அதில் தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று அழுது காமுற்று அரற்றுகின்றாரையும், பொழுதுபோக்கிப் புறக் கணிப்பாரையும் எழுதிக்கொள்வான் (5 - 21 - 8) என்றும் அப்பரடிகள் அருளும் திருப்பாடல் கவிநயம் தோன்றும் பகுதி யாகும். 'மெய்யானைத் தன்பக்கல் விரும்புவார்க்கு, விரும்பாத அரும்பாவி யவர்கட்கென்றும் பொய்யானை' (6 - 66 - 5) என் றும், 'ஒருவரும் ஈங்கு அறியாவண்ணம் என்னுள்ளத் துள்ளே வைத்த சிறையானை' (6 - 66 - 7) என்றும், 'தன்னுடைய

Koviloor Digital Library

திருவடியென் தலைமேல்வைத்த தீங்கரும்பை' (6-68-4) என்றும், 'பிறப்பானைப் பிறவாத பெருமையானைப் பெரியானை எளியானைப் பெண் ஆண் ஆய. நிறத்தானை நின்மலனை நினையாதாரை நினையானை நினைவோரை நினைவோன் தன்னை' (6-80-7) என்றும் பாடும் பகுதிகள் படிக்கப்படிக்க இன்பமூட்டிச் சிந்திக்க வைத்துச் சிவநெறிகாட்டும் சீர்க்கவிதைகள்.

நின்றதிருத்தாண்டகத்துப் (6-94) பாக்கள் முழுதும் எல்லாமாய் விளங்கும் இறைவன் அருளெழிலை வகுத்துரைப்பன. 'ஊரல்ல அடவி காடே' என்று உறுதியாக உரைக்கும் (6-95-5) கருத்தை எவ்வளவு அழகாகக் காண்கின்றோம்!

" ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஒட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே"

(6-95-3)

என்னுந் திருப்பாடல் நல்ல வடிவும், சொல்லமைப்பும், உடைய நறுங்கவிதையாக நின்று, எல்லாவற்றிற்கும் அவனருள் துணை நிற்க வேண்டும் என்ற பேருண்மையை மிக அழகாக அறிவுறுத்துகின்றது.

அருள்வீரம் :

கவிஞர்களுக்கே உரிய அருள்வீரம் அடிகட்கு இயல்பாக உள்ளது ;

" என்றும்நாம் யாவர்க்கும் இடைவோமல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாருமில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேரப்பெற்றோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோமன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப்போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்துளோமே"

(6-98-5)

Koviloor Digital Library

" நாவலந்தீவகத்தினுக்கு நாதரான
காவலரே ஏவிவிடுத்தாரேனும் கடவமலோம் "
(6-98-6)

" மண்பாதலம் புக்கு மால்கடல்மூடிமற் றேழுலகும்
விண்பால்திசை கெட்டுஇருசுடர் வீழினும் அஞ்சல்
நெஞ்சே " (4-94-9)

" வானந்துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும்
தானந்துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்
மீனம்படிலென் விரிசுடர்வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனமொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட உத்தமர்க்கே "
(4-112-8)

என்றெல்லாம் வரும் பகுதிகள் அடிகளாரது அஞ்சாமையை விளக்கும் பெருமிதச் சுவையுடைய பாடல்களாய்ப் பிறங்குகின்றன.

அகப்பொருட் கற்பனைகள் :

தலைவனுடைய பெரும்புகழ்கேட்டுத் தலைவி மகிழும் நிலையில் நிகழும் மெய்ப்பாட்டை 'உறுபெயர் கேட்டல்' என்பர் தொல்காப்பியர்; அகத்துறைப்பாடல் ஒன்றில் இம்மெய்ப்பாட்டை அமைத்து அடிகள் அருளியுள்ளார். முதற்கண் தலைவி தலைவனின் (ஆரூர் இறைவன்) பெயரைப் பிறர்கூறல் கேட்டாள்; அவன் இருக்கும் வண்ணம் பின்னைக்கேட்டாள்; அவன் ஊர் வளம் பிறகு கேட்டாள்; அவன் மேலேயே காதல் ஊன்றினாள்; பித்தானாள்; தாய்தந்தையரை, உலகிய லொழுக்கநிலைகளை நீத்து மறந்தாள்; தன்னை மறந்து தன் நாமமும் கெட்டுத் தலைவன்தாள் தலைப்பட்டாள் என்கின்றார். ஒரு தலைவியின் அன்புநிலையைக் கூறுவதுபோன்று, உயிர் இறைவனைத்தோய்ந்து இன்புற்றிருக்கும் பேரின்ப நெறியை இலக்கிய அழகுபட எடுத்துரைக்கும் இத்திருப்பாடல் ஓதுதற்கினியது;

" முன்னை யவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்

Koviloor Digital Library

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே'' (6-25-7)

அடிகள் அருளியுள்ள அகத்துறைப் பாடல்கள் முழுவதும் இலக்கிய அழகு ததும்புகின்ற கற்பனைக் கருவூலங்களாக உள்ளன. பழனத்திறைவனிடம் தன் துயரைக் கூறும்படி ஒரு தலைவி இரக்கின்றாள்; குயில்கள், கண்டகங்கள், முண்டகங்கள், கைதைகள், நெய்தல்கள், இளங்குருகு, தென்றல், நாரை, பூவைகள், ஆகியவற்றை நோக்கி உரைக்கின்றாள். ''என் புது நலம் உண்டு இகழ்வானோ'' (4-12-1) ''என் எழில்நலம் உண்டு இகழ்வானோ'' (4-12-7) என்ற தொடர்களில் அவலம் ததும்பி நிற்கின்றது.

'' உண்டற்குரிய வல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே'' (1159)

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்ப, இவ்விடத்து 'உண்டு' என்ற சொல்லாட்சி அழகு பயந்து நிற்றலைக் காணலாம்.

''நேற்று ஓடொன்று கரத்திலேந்திப் பிச்சைக்கென்று வந்தார் வெண்காடு மேவிய விகிர்தர்; 'வந்தேன் இதோ' என்று இல்லம்புக்கு மீண்டேன்; அவர் அந்நிலையிலேயே நின்றார்; ஐயம் கொண்டாரில்லை; அருகே வருவார் போல் நோக்கினார்; 'நும் ஊர் ஏது' நும் நிலைமை ஏது?' என்று கேட்டேன்; ஒரு விடையும் கூறினாரில்லை என்று ஒரு பெண் கூறுவதாகக் கூறும் திருப்பாடல் (6.30-3) அழகும் நயமும் உடையது. புணர்ந்துழி உவகை, பிரிவுழிக்கலக்கம் அமைய வரும் பாடல்களும் பல.

எட்டு மலர் கொண்டு இறைவனை வழிபடல் வேண்டும் என்ற கருத்தைத் திருவதிகைத் திருப்பதிகம் ஒன்றில் முழுதும் (5-54) உரைக்கின்றார். ''எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி, மட்டலர் இடுவார் வினை மாயுமால்'' என்கின்றார். (அன்பு, கொல்லாமை, பொறியடக்கம், வாய்மை, பொறை, அருள், அறிவு, தவம் என்பவற்றை எண்மலர்கள் எனலாம் - பன்னிருதிருமுறை வரலாறு. ப. 560.)

Koviloor Digital Library

பழமொழியழகு :

பழமொழிகளைப் பல இடங்களில் வைத்து அழகு செய்யப் பெற்ற பாடல்கள் பல. 4-5-3, 4-97-6, 4-5-6, 4-75-6, 4-5-10, 4-5-1, 5-100-5, 4-99-2, 5-90-3, 4-27-5, 4-5-4, 4-5-8, 4-96-3, 4-52-9, 4-26-8, 4-5-2, 4-75-7, 4-5-7, 5-97-23 ஆகிய பாடல்களில் நம்நாட்டுப் பழமொழிகள் பலவற்றை நயம் பெறக் கூறியுள்ளமை காணலாம்.

இயற்கை வருணனைகளிற் சில :

அப்பரடிகள் அருள்மணம் கமழக்கமழ வாழ்ந்து வண்டமிழ் பாடி இறைவனை வணங்கியவராதலின் வருணனைகளுக்கு விரிவாக அப்பெருந்தகையாரின் அருளிச் செயல்களில் இடமில்லை; திருஞானசம்பந்தர் கவிதைகளில் இயற்கை வருணனைகள் விரிவாக இடம் பெற்றிருப்பதுபோல் அவ்வளவு இல்லாததற்குக் காரணம் இதுவே. ஆயினும் சிற்சில இடங்களில் இவ்வருணனைகள் வனப்புச் செய்யவும் காணலாம் ;

" மடுக்களில் வாளைபாய வண்டினம் இரிந்தபொய்கைப்
பிடிக்களி றென்னத்தம்மிற் பிணைபயின் றணைவரால்கள் "
(4 - 55 - 2)

" செங்கயல்சேல்கள் பாய்ந்து தேம்பழமினிய நாடித்
தங்கயம் துறந்து போந்து தடம்பொய்கை அடைந்து நின்று ' (4 - 55 - 7)

" அருகெலாங் குவளைசெந்நெல் அகவிலை ஆம்பல் நெய்தல்
தெருவெலாம் தெங்கும்மாவும் பழம்விழும்படப்பை எல்லாம்
குருகினங்கூடி ஆங்கே கும்மலித் திறகுலர்த்தி
மருவலாம் இடங்கள் காட்டும் வலம்புரத் தடிகளாரே "
(4 - 55 - 8)

" பைங்கால் தவளை பறைகொட்டப் பாசிலைநீர்ப்படுகர்
அங்காற்குவளை மேல் ஆவி உயிர்ப்ப அருகுலவும்
செங்காற் குருகிவை சேரும் செறி கெடிலம் " (4 - 104 - 2)

" பொன்காட்ட கடிக்கொன்றை மருங்கேநின்ற
புனற்காந்தள் கைகாட்டக்கண்டுவண்டு
தென்காட்டும் செழும்புறவில் திருப்புத்தூரில்
திருத்தளியான்காண் அவன் என் சிந்தையானே "
(6 - 76 - 3)

Koviloor Digital Library

" வளங்கொள் மேதி, சேடேறிமடுப்படியும்
திருப்புத்தூரில்" (6-76-4)

அறங்கூறும் இயல்பு:

இலக்கியம் என்றல் கற்பனை முதலிய அனைத்துடன் அறங் கூறும் இயல்பும் அதில் இருத்தல்வேண்டும். ஆங்காங்கு உல கர்க்கு நெறிகாட்டும் உண்மைகள் அதனுள் பொதிந்திருத்தல் வேண்டும். அவ்வரிய உண்மைகள் நேரடியாக உரைக்கப் பெறுதலும் உண்டு. தோத்திரப்பாக்களின் தொகுதியாக உள்ளமையால் அத்தகு உண்மைகளை - நீதிக்கருத்துக்களை - அப்பர் வாக்கில் ஆங்காங்குக் காணலாம்.

ஈகை என்பது தலையாய அறம்; 'செல்வத்துப்பயனே ஈதல்' என்று புறநானூறு கூறும். 'ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்' என்று ஔவையார் வாக்கு விளக்கும். ஈகை எனும் உயர் பண்பு உலகில் இருத்தலே உலகின் இன்ப வாழ்வுக்கு அடிப்படை. 'வறியார்க்கொன்றீவதே ஈகை' என்று விளக்கிய திருவள்ளுவர், 'அற்றார் அழிபசிதீர்த்தல்' என்று பொருள் வைப்புழியை இனிது காட்டி, 'உரைப்பார் உரைப்பவையெல் லாம் இரப்பார்க்கொன்று, ஈவார்மேனிற்கும் புகழ்' என முடித்து ஈவார்க்கே புகழுண்டு என்று நிறுவியுள்ளார். 'ஈபவர்க்கே புகழ்' உண்டு என்று ஆசிரியர் திருவள்ளுவர் கூறினர்; அருளாசிரியராகிய அப்பரடிகளோ, 'ஈபவர்க்கே அருள்' உண்டு என்று பாடுகின்றார்; 'கரவு கொள்வோர் நிலையை எண்ணினல் உள்ளம் கரைந்து ஒளிக்கும்' என்று வள்ளுவர் கூற, அடிகள் அவ்வாறு கரப்பவர் கடுநரகங்கள் சேர்வர் என விளக்குகின்றார்; அடிகளின் அவ்வறவுரை இது:

" இரப்பவர்க்கீய வைத்தார் ஈபவர்க்கு அருளும்வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்"

(4-38-10)

இவ்வாறே கரவுடையார் நெஞ்சிற்கு அரியவனக. கரவாதவர் பால் விரவுவோனக உள்ளான் இறைவன் என்றிசைக்கின்றார்;

" கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை" (4-7-1)

Koviloor Digital Library

அறம் ஒன்றையே உள்ளம் நாடவேண்டும்; அவ்வாறு அறம் கனிந்த நெஞ்சுடையாரே, ஆசை, சினம், வெறுப்பு முதலிய தீக்குணங்களிலிருந்து விடுபட முடியும். அவ்வாறு வீடுபடுதலே அறிவின் பயன் என்று குறிப்பாக உணர்த்தும் பகுதி பின் வருவது :-

“ அறத்தையே புரிந்த மனத்தனாய் ஆர்வச்செற்றக்
குரோதம் நீக்கியுன்
திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம்மானே ” (4 - 20 - 8)

“ காலமும் கழியலான கள்ளத்தை ஒழியகில்லீர்
கோலமும்வேண்டா ஆர்வச்செற்றங்கள் குரோதம்நீக்கில்
சீலமும் நோன்புமாவர் திருச்செம்பொன் பள்ளியாரே ”
(4 - 29 - 6)

இறைவனைப் பற்றிச் சொல்லிச் சொல்லிக் காலங்கழித்தல் அறிவுடைமையாகாது; நீதியால் தியானித்தலே அறிவுடைமையாகும் என்பது ஒரு தக்க அறிவுரை :

“ ஓதியே கழிக்கின்றீர்கள் உலகத்தீர் ஒருவன்தன்னை
நீதியால் நினையமாட்டீர் நின்மலன் என்றுசொல்லீர் ”
(4 - 41 - 9)

உலகியலிற் கிடந்து அழுந்திப் பின்னும் பின்னும் துயரப்படுதலினின்றும் விடுபட இறைவனை நினைத்தலில் வன்மை எய்துவீர்களாக என்ற உபதேசம் இனிய ஒன்றாகும் :

“ மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ்நாகை மன்னுகா ரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே ”
(4 - 71 - 1)

சாத்திரம் பல பேசிச் சிலர் வம்புடன் காலம் கழித்துத் திரிதலையும், அவர்கள் பெரிதாகக் கருதும் கோத்திரமும் குலமும் கொண்டு ஒன்றும் செய்யலாகாது என்பதையும் மிக உறுதியாக உரைக்கின்றார் :

“ சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்

Koviloor Digital Library

பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே" (5-60-3)

மனிதரில் தலையான மனிதராக வாழவேண்டும் என்ற உறுதி ஒவ்வொருவர்க்கும் வேண்டும்; 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பார் ஆசிரியர் திருவள்ளுவர். கல்வி கற்பதுடன் இறைவனைக் கனிந்து போற்றுவோரே தலையானவர் என்று உரைக்கின்றார் அடிகள்:

" கனிமனத் தொடு கண்களும் நீர்மல்கிப்
புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார்
மனிதரில் தலையான மனிதரே" (5-65-6)

" நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்றமேறி யிருந்தவம் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்றும் ஈசனென்பார்க் கன்றியில்லையே" (5-99-8)

" செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்திசெய் மனப் பாறைகட் கேறுமோ" (5-100-2)

" வாதுசெய்து மயங்கும் மனத்தராய்
ஏதுசொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவரெனப் படுவார்க்கெலாம்
மாதேவன்னலால் தேவர்மற் றில்லையே" (5-100-4)

என்பனவும் தக்க செவியறிவுறூஉக்களாக இலங்குகின்றன. "திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்" எனத் தொடங்கும் திருத்தாண்டகம் (6-95-6) உலகமாந்தர் நெறியறிந்து உய்தி பெறற்குரிய உயர்ஞான விருந்தாக ஒளிர்கின்றது. இவ்வாறு ஆங்காங்கு அறவுரைகள் பலவற்றையும் அப்பர் அருளிலக்கியத்தில் காணலாம்.

சொல்லாட்சியழகு:

"சொற்குறுதிக் கப்பரெனச் சொல்லு" என்ற வெண்பாவடி அப்பரடிகளின் சொல்லாட்சிச் சிறப்பை எடுத்துரைப்பதாகும். கவிஞரின் கவிதைச்சிறப்பு சொல்லாட்சியில் விளங்குகின்றது. சொற்களை இடமறிந்து, தரமறிந்து எடுத்தாளும் எழில் உயரிய பெருங்கவிஞர்களுக்கே வருவதாகும். 'சொல்வன்மை' எனும்

Koviloor Digital Library

அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவன சொல்லுதல் வன்மை மட்டுமன்று ; எழுதுங்கால் சொல்லின் வன்மையறிந்து எழுதும் திறமையும் குறித்ததாகும், 'வெல்லும்சொல் இன்மை யறிந்து சொல்லைப் பயன்படுத்துவர் உயர்பெருங்கவிஞர் அப்பரடிகள் ஆளும் சொற்கள் இனிய - எளிய - தமிழ்ச்சொற்களாக உள்ளன; உணர்ச்சிப் பிழம்புகளாக உள்ளன. சங்கநூல், திருக்குறள் - ஆகிய சான்றோர் நூற்சொற்கள் ஆங்காங்கு அப்பரடிகள் திருக் கவிதைகளில் திகழ்ந்து, தமிழ்மையின் தனிநலங்காட்டி நிற்கின் றன. ஏற்ற சொல்லை ஏற்ற இடத்தில் பயன்படுத்தி இனிய தொரு பொருளைப் பெறவைப்பதை மேலைநாட்டார் சொல் லாட்சிச் சிறப்பு* எனப்போற்றுவர்.

" இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை
நச்சுவார்க்கினியர் போலும் நாக ஈச்சுரவனுரே "

(4 - 66 - 1)

என்ற பகுதியில், 'நச்சுதல்' என்ற சொல்லைக்காணலாம். நசை - நச்சு - நச்சினர் - நச்சினர்க்கு இனியர் என வருவது இச் சொல்; விருப்பம் என்ற பொருள் உடையது. விரும்புவார்க்கு இனியவராய் - கற்றவர்கள் உண்ணுங்கனியாய் - கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியாய் உள்ள, இறைவனை நல்ல சொற் களால் ' நச்சுவார்க்கினியர் ' என்று போற்றுகின்றார் அடிகள். உளமார விழைதலே நச்சுதல். இச்சை வெறும் ஆசையைக் குறிக்கும் மேம்போக்கான சொல்லாக இருக்க, நச்சுதல் ஆழ மான சொல்லாய்ச் சுடர்விடுகின்றது. அதனை அடுத்துப் பெய்து அச்சொல்லினை ஆளும் திறத்தில் முந்துகின்றார் அடிகள்.

" நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று "

எனக் குறளிலும் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. " ஒன்றி யிருந்து நினைமின்கள் " என்று உரைக்கும் உத்தமராதலின், அவ்வாறு ஒன்றித்த விழைவை இச்சொல்லாற் குறித்த அருமை பாராட்டற்குரியது.

இவ்வாறே நம்பு, மேவு எனும் இரண்டு சொற்களும் நசை என்னும் பொருளைக்குறிக்கும் பழந்தமிழ் உரிச்சொற்கள் §.

* Poetic diction.

§ " நம்பும் மேவும் நசையாகும்மே " - தொல் - சொல் - 812.

Koviloor Digital Library

இவற்றையும் அடிகள் உரிய இடங்களில் கையாண்டு ஒளி. பெறுவிப்பர்.

"நம்புவார்க் கன்பர்போலும் நாகஈச் சுரவனூரே" (4-66-4)

இவ்விடத்து, நச்சுவார் எனும் பொருளிலேயே நம்புவார் என்னுஞ்சொற்கு விளக்கம் கூறுமாறு அடிகள் அருளியுள்ளார்

அன்னை எனுஞ்சொல்லை 'அன்' என்றும் சில இடங்களில் ஆளுவது அடிகள் இயல்பு; இதனை அடியொற்றிச் சுந்தரர் பாடுவதும் இங்கு ஒப்பிடத்தக்கதாகும் ‡ 'ஐ' வியப்பு எனும் பொருளிலும், 'கை' ஒழுக்கம் என்ற பொருளிலும் வருவன. இவற்றை அடிகள் அருளும் திறம் அறியத்தக்கது. †

உறைப்பு என்னும் சொல்லை உறுதி எனும் பொருளில் அடிகள் வழங்குவர். நன்கு உள்ளத்தில் உறைந்து பலன் பெருக்கும் நிலைதானே உறுதி என்பது! இந்த உறைப்பு என்பது ஓர் அரிய சொல்லாட்சி:

"திறக்கப்பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப்பாடி அடைப்பித்தார் உந்நின்றார்" (5-50-8)

அப்பரடிகள் அருளிய இச் சொல்லின் அருமையைச் சேக்கிழார் மிகவியந்து போற்றி உள்ளங்கொண்டிருத்தல் வேண்டும். இந்த உறைப்பு - அல்லது அன்பின் உறுதியைத் தமிழால் அழகு படுத்தி இன்னும் விளக்குகின்றார்:

"பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதொர்பாகம் மலர்த்தாள் மறப்பிலர்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதிலாத குணப்பெருங் குன்றனார்" (பெரிய - 142)

இறைவன் அருட்புகழைக் கேளாத செவியினை உடையாரை அடிகள் கூறும் வகையில் 'துளையிலாச் செவித் தொண்டர்காள்' என்கின்றார். இவ்விடத்துக் 'கேட்பினும் கேளாத் தகையவே

‡ "அன்னெப்பானை" (5-3-8) "அன்னே உன்னை யல்லால்"

† "ஐயொப்பானை அரத்துறைமேவிய கையொப்பானை" (5-3 5)

Koviloor Digital Library

கேள்வியால், தோட்கப்படாத செவி' எனுங் குறளில் வரும் 'தோட்கப்படாதசெவி' எனுந்தொடரை இன்னும் விளக்கமாகத் 'துளையிலாச் செவி' என்று அருளியுள்ளமை அறியத்தக்கது;

"இளையகாலமெம் மானை அடைகிலாத்
துளையிலாச் செவித் தொண்டர்காள்" (5-66-3)

தோட்கப்படுதல் என்ற சொல் விளங்குதற்கருமையின் துளைக்கப் படுதல் என்ற சொல்லால் அதனை எளிமைப்படுத்தி ஆளுவது அடிகளுக்கு அவசியமாயிற்று. அரிய சொற்களை ஆண்டு புரியாமல் வைப்பதைவிட, எளிய சொற்களை எடுத்துரைத்து விளங்க வைப்பது அறிஞர் இயல்பாதலை எடுத்துரைக்கவும் வேண்டுமோ?

நண்பன் என்ற சொல்லால் காதலனைக் குறிக்கும் (5-66-9) இடமும் உண்டு. பாடி என்னும் சொல் ஊரைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். பட்டினம், பாடி, பாக்கம் என்பன நெய்தனிலத்தூர்களுக்கு வழங்கிய பெயர்கள்; இவை சிறுபான்மை உண்ணாட்டு ஊர்களுக்கும் மாறிவழங்கும் இயல்பையும் பின்பு பெற்றன. ஊர்க்காவலைப் 'பாடிகாவல்' என்பதும் மரபே, அடிகள் வாக்கில் இதனைக் காண்கின்றோம்;

"கோடி காவனைக் கூறிரேற் கூறினேன்
பாடிகாவலிற் பட்டுக் கழிதிரே" (5-78-2)

"கோடிகாவனைக் கூறுத நாளெலாம்
பாடிகாவலிற் பட்டுக் கழியுமே" (5-78-6)

பறைதல் எனும் சொல்லைக் கெடுதல் எனும் பொருளிற் கையாண்டுள்ள அருள்வாக்குகள் பல.

இணர் என்றால் பூங்கொத்து எனப் பொருள்படும்; அப் பெயர்ச்சொல்லினடியாக ஓர் இலக்கிய நயமிக்க மென்சொல்லை அடிகள் படைத்துள்ளார்; கொத்தாக மலர்ந்து எனப் பொருள் படும் வினையெச்சத்தை அதிலிருந்து உருவாக்கி இசைக்கின்றார்;

"இணர்ந்து கொன்றைபொன்தாது சொரிந்திடும்"
(5-97-20)

தயாமூலதன்மநெறி:

'தயாமூல தன்மம்' (அன்பும், அன்பிற்கு அடிப்படையான அறமும்) என்னும் புதிய சொற்றொடரை அடிகள் வாக்கிற் காண்

Koviloor Digital Library

கின்றோம். அன்பும் அறமுமாகிய பண்புகள் செறிந்த மெய்ம்மையைத் 'தயாமூலதன்மம்' என்ற நறுஞ்சொற்றொடரால் ஆண்டு விளக்குகின்றார் :

"தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க்கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை" (6 - 20 - 6)

"தயாமூல தன்மவழி எனக்கு நல்கி
மனம் திருத்தும் மழபாடி வயிரத்தூணே" (6 - 40 - 6)

இவ்விடத்துச் சைவசித்தாந்தச் செந்நெறியைக் குறிக்க இத் 'தயாமூல தன்ம வழி' எனுஞ் சொற்றொடரை அடிகள் கனிந்து அருளியுள்ளமை காணலாம். மனிதர்களாகப் பிறந்த நாம், அன்பும் அறமும் கொண்டு உயர்ந்தால் அதனினும் சீரிய வாழ்வு உண்டோ? அவ்வாழ்வினை அடையும் நெறியே இத் தயாமூல தன்மம் என்னும் முப்பெருஞ்சொற்களிலே அடங்கியிருக்கின்றது; உலகு இந்நெறி நின்றால் பூசல் உண்டோ? அமைதியன்றோ உலகிற் செழிக்கும்! அவ்வமைதி உலகை, மாந்தரினத்தை வாழ்விக்கும் மெய்ம்மருந்து. அதனை உலகிற்கு எடுத்துரைக்கும் தமிழ்மையை இத் திருக்கவியிற் காணலாம்.

பரம்பொருளையே தெய்வமென்று பற்றாது, சிறுதெய்வங்களைப் பற்றுவோர் மனத்தைப் பாறையாக்கி 'மனப்பாறை'கட்கு நல்லுரை ஏறுமோ (5 - 100 - 2) என்கின்றார் ஓரிடத்து.

மயில் + ஆர்ப்பு + ஊர் = மயிலாப்பூர் என்று காண்கின்றோம்; இதனை (மயிலா(ர்)ப்பு)மயிலாப்பு என்று அடிகள் கூறக் காண்கின்றோம். (6 - 2 - 1; 6 - 7 - 12; 6 - 45 - 6).

பழவினையை, பண்டைவல்வினை (5 - 7 - 11) தொல்வினை (5 - 97 - 23), முன்னை நான்செய்தபாவம் (5 - 64 - 7) என்றும், மேலைவினையை மேலை ஏதங்கள் (4 - 35 - 5) மேலைவினை (5-5-8; 5-14-5) என்றும் ஆளுவது அடிகள் இயல்பு. சில சொற்களை விளக்கியுரைத்தலும், சில சொற்களைக் குறிப்பான் விளக்கலும் அடிகள் இயல்புகள். இறைவன் அருள் உடையனாதலின் 'அருளன்' என்றே அழைத்து மகிழ்வதும் (4 - 90 - 10) அடிகள் இயல்பு. இதனைச் சற்றே விரித்து 'அருளாளன்' (7 - 1 - 1) என்று சுந்தரர் முதலியோர் கொள்வர்; ஆயினும் அருளன் என்பது எளிய சொல்லாய், இறைவனது அருட்பெற்றி தோன்ற நின்று இனிமைபயத்தல் கண்கூடு.

Koviloor Digital Library

'தவ' எனும் உரிச்சொல்லைத் தக்க இடத்தில் வைத்து 'தவப்பெருந்தேவு' செய்தார் என்று (4-65-8) பாடுதல் அறியத்தக்கது. இத்தொடரில் ஈடுபட்ட பிற்கால உலகு கல்வெட்டுக்களிலும் இதனைப் பொறித்து இச்சொல்லாட்சி அருமையைப் போற்றியுள்ளமை நன்கு உணரத்தக்கது. *

இன்று குறிக்கோள் † எனும் சொல்லை எங்கும் காண்கின்றோம். இதனை முதன்முதல் தமிழுலகிற்கு வழங்கிய பெருந்தகையார் அடிகளே ஆவர்; ஒரு குறியினைக்கொண்டொழுகுவது என்ற பொருளில் இது வழங்கப்படும்; 'குறிக்கோள் இலாது கெட்டேன்' (4-67-9) எனவரும் திருக்கொண்டீச்சரத் திருப்பதிகம் காண்க.

'தமிழன்' என்று மொழியினடியாகத் தமிழ் மகனை முதன் முதலாக அழைத்த சொல்லாட்சித்திறமும் அடிகட்கே உரியது என்பது முன்னும் விளக்கப்பட்டது. தமிழை உடையான் என்ற பொருள்பட, மொழியை விழியாகப்போற்றும் புவிமுதல் மகனாகிய இனக்கொழுந்தைத் தமிழன் என்று வாயார. உளமார, இனிய புதுச்சொல்லால் எடுத்துக் கிளக்கும் அப்பரடிகள் அருளமுதம் ஆரா இன்ப ஆரமிர்தமாகும்.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலை யுறையெம் மண்ணல் கண்டாய்
வாரிமதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன்தானே" (6-23-5)

சங்ககாலத்தும் அதன்பின்னும் தமிழ் என்ற சொல்லாலேயே தமிழ் மக்கள், தமிழ்ப் பண்பு, தமிழ் நிலம் முதலிய அனைத்தையும் குறிக்க நேர்ந்தது; புதிதாக முதன்முதல் இந்த மரபை (Convention) மாற்றி அடிகள் புரியும் கருத்துப் புரட்சி (Revolt) யின் கால்கோளாக அமைகின்றது இந்தத் தமிழன் என்ற சொல்லாட்சி; 'தமிழன் என்றொரு இனமுண்டு' என இன்று நாம் தலைநிமிர்ந்து செம்மாந்து பேசுவதற்கு இஃதன்றோ அடிப்படையாகும்!

* திருவாரூர்த் திருநாவுக்கரசர் திருக்கோயிற் கும்பாபிடேக (63) விழா மலரில், 'தவப்பெருந்தேவு செய்தார்' என்னும் கட்டுரையில் (திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள்) இதுபற்றிய விரிவு காணலாம்.

† Ideal என்பர் ஆங்கிலவர்.

Koviloor Digital Library

பிழைப்பு என்ற சொல்லைப் பிழைசெய்வது என்ற பொருளில் அடிகள் ஆளக்காணலாம் :*

" அழைக்கும் அன்பின ராய அடி யவர்
பிழைப்பு நீக்குவர் பேரெயி லாளரே " (5 - 16 - 8)

பொக்கம் என்ற சொல்லை அடிகள் ஆளும் திறம் இனியது;

" பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர் " (5 - 95 - 4)

" பொக்க மிக்கவர் பூவுநீரும் கண்டு
நக்குநிற்பன் அவர்தம்மை நாணியே " (5 - 90 - 9)

தாம் ஆளும் சொற்கள் தமிழ்ப்பழமையும், உறுதியும், அழகும் உடையவாய் இருத்தல் வேண்டும் என்று அடிகள் திருவுள்ளம் கொண்டாராதல் வேண்டும். வடசொற்கள் அடிகள் அருள் மொழியில் பெரும்பங்குபெருமை குறிப்பிடத்தக்கதாகும்.

தோல்காப்பியர் கூறும் இலக்கிய வனப்பும் அப்பரடிகள் வாக்கும் :

ஆசிரியர் தொல்காப்பியர் வனப்பு என்று ஓதுவன இலக்கிய அழகுகள் என்று கூறலாம்; † எட்டு வகைப்பட்ட வனப்புக்களை அச்சான்றோர் அருளுவர் ;

" அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனு அப்
பொருந்தக்கூறிய எட்டொடு ' (தொல் - செய்யுள் - 1)

'வனப்பென்பது பெரும்பான்மையும் பல உறுப்புந் திரண்ட வழிப்பெறுவதோர் அழகு' என்பர் பேராசிரியர். இவ்வாறே நச்சினார்க்கினியரும் கூறுவர்; 'சமுதாய சோபை' எனச்

* " பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன் " என்பது மணிவாசகம்.

† Tamil culture - Vol. X No. 3 - (71 - பக் - 96 பக்.) திரு. வை. கா. சிவப்பிரகாசம் அவர்கள் எழுதிய வனப்பிலக்கியம் என்ற கட்டுரை காண்க. வனப்பிலக்கியம் பற்றிய தொல்காப்பியர், உரையாசிரியர்கள், கருத்துக்களை இக்கட்டுரையில் ஆசிரியர் தெளிவுற ஆராய்ந்து முடிவுபோக்கியுள்ளார்.

Koviloor Digital Library

சிந்தாமணியுரையில் வருவது இதுவே மாத்திரை முதலிய இருபத்தாறும் செய்யுளிலக்கணத்தினைத் தனியே நோக்கிக் கூறியவை; வனப்பு எட்டும் முழுநோக்காகக் கூறியவை. இவ்வனப்புத் தனிச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் இரண்டிற்கும் உரிய தென்பர் உரையாசிரியர்கள்.

இந்த எட்டு வனப்புக்களும் (இலக்கிய எழில்களும்) அப்பரடிகள் அருள்வாக்கில் ஆங்காங்குப் பொருந்திவிளங்குகின்றன. அவற்றுள் சில இடங்களை இங்கு ஆய்ந்து கண்டு இன்புறுவோம் ;

அம்மை :

அம்மையின் இலக்கணம்; 'சின்மென்மொழியாற்சீர்புனைந்து யாப்பின் அம்மைதானே அடிநிமிர்பின்றே' என்பது ; (செய்யுளியல் 235) சிலவாய மெல்லியவாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லாதது என்பது இதன் பொருள். அமைதிப்பட்டு நிற்றலின் அம்மையென்ருயிற் றென்பர் பேராசிரியர். சின்மொழியாட்சி, மென்மொழி யாட்சி, தாயபனுவலுடைமை, அடிநிமிர்வின்மை என்பனவெல்லாம் அம்மை எனல் விளக்கும் :

சுருங்கக்கூறல் என்பதனை இதனுள் காணலாம் ; மென்மொழி - மெல்லிசை வண்ணம் அமைதல், அறம் பொருள் இன்பம்பற்றிக் கூறுவது. அவ்வாறு கூறும்போது இடையிடை வேறுபொருள் பற்றிக் கூறுவது ஆகியனவும் அம்மை இயல்புகளே :

அப்பரடிகளருளிய 'திருக்குறுந்தொகை' முழுதும் அம்மை என்னும் வனப்பிலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகும். அவ்விலக்கிய அழகு முழுதும் நிரம்பியது ஐந்தாம் திருமுறை என்றே கூறலாம் ; எடுத்துக்காட்டுகளாகக் கீழ்வரும் அருங்கவிதைகளைக் காண்க :

"எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபரன்
அந்தமில்புகழ் ஆரூர் அரநெறி
சிந்தையுள்ளும் சிரத்துளும் தங்கவே" (5 - 7 - 2)

Koviloor Digital Library

1685
023
ருள

"ஏற தேறும் இடைமரு தீசனார்
கூறுவார்வினை தீர்க்கும் குழகனார்
ஆறுசெஞ்சடை வைத்த அழகனார்க்கு
ஊறி ஊறி உருகுமென் னுள்ளமே" (5-14-6)

"நேசமாகி நினைமட நெஞ்சமே
நாசமாய குலநலஞ் சுற்றங்கள்
பாசமற்றுப் பராபர ஆனந்த
ஆசையுற்றிடும் ஆனைக்கா அண்ணலே" (5-32-9)

"உள்ளம் உள்கி உகந்து சிவனென்று
மெள்ள உள்க வினைகெடும் மெய்ம்மையே
புள்ளினார் பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே" (5-79-8)

"வேதம் ஓதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதிநூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதியங்கமொராறு முணரிலென்
ஈசனை உள்குவார்க்கன்றி இல்லையே" (5-99-4)

அழகு :

தொல்காப்பியர் கூறும் இரண்டாவது இலக்கியவனப்பு அழகு என்பதாகும்; 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமே அழகு' என்பர் பேராசிரியர். கற்போர் உள்ளத்தை யீர்க்கும் திறம் என்று கூறலாம் :

"செய்யுள் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப்படுமே" (செய்யுள் - 228)

செய்யுட்குரிய சொற்களாற் சீர்புனைந்து தொடுத்தலும், ஓசை உடைமையும் இதில் காணலாம். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவற்றால் பாடப்படுவது; "வழக்குச் சொற் பயிலாமல் செய்யுளுட் பயின்றுவருஞ்சொல்" (நச்சினார்க்கினியர்) வழங்குவது. சொல்லழகு, பொருளழகு, கூறுந்திறன் ஆகியவற்றால் கற்பவர் உளத்தையீர்க்கும் இவ்வனப்பாகிய அழகு அப்பரடிகள் வாக்கில் எண்ணற்ற பல இடங்களில் உள்ளன. எடுத்துக்காட்டாக இரண்டொன்றை இங்குக் குறிப்பாம் :

Koviloor Digital Library

"குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை என்றும்
நறவிள நறுமென் கூந்தல் நங்கையோர் பாகத்தானைப்
பிறவியை மாற்றுவானைப் பெருவேளூர் பேணினானை
உறவினால் வல்லனாகி உணருமா றுணர்த்துவேனே"

(4 - 60 - 3)

"பழியுடையாக்கை தன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன் மாயமும் தெளியகில்லேன்
அழிவுடைத் தாயவாழ்க்கை ஐவரால் அலைக்கப்பட்டுக்
கழியிடைத் தோணிபோன்றேன் கடவூர் வீரட்டனாரே"

(4 - 31 - 6)

"பேணியநற் பிறைதவழ்செஞ் சடையினானைப்
பித்தராம் அடியார்க்கு முத்திகாட்டும்
ஏணியை இடர்க் கடலுட் சுழிக்கப்பட்டிங்கு
இளைக்கின்றேற் கக்கரைக்கே யேறவாங்கும்
தோணியைத் தொண்டனேன் தூயசோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற்காசின்
ஆணியை ஆவடுதண் துறையுள்மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே"

(6 - 46 - 4)

தோன்மை :

தொன்மையென்ற மூன்றுவது இலக்கியவனப்புக்கு ஆசிரியர் தொல்காப்பியர் தரும் விளக்கம் :-

"தொன்மைதானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" (செய்யுள் - 237)

உரைவிரவிப் பழையனவாகிய கதைப்பொருள்மேல் வருவது. 'உரையொடு புணர்தல், நெடுங்காலமாகப் பலராலும் சொல்லப் பட்டு வருதல்' என்ற க. வெள்ளைவாரணனர் கருத்திற்கேற்ப, அப்பர் வாக்கில் பழங்கதைக் குறிப்புக்கள் பற்பல இடங்களில் வரக்காணலாம். இவை தொன்மை அழகு துலங்கும் பகுதிகள் :

பாண்டவசரிதம், இராமசரிதம் தொன்மைக்கிலக்கியமாக உரைகாரர்களாற் கூறப்படும்.

Koviloor Digital Library

" செங்கண்மால் சிலைபிடித்துச் சேனையோடும்
சேதுபந்தனம் செய்து சென்றுபுக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடிவாய்வீழ " (6-58-10)

" பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிந்தவனுக் கிராவணனென் றீந்தநாம
தத்துவனை " (6-79-10)

" அருச்சுனற்குப் பாசுபதம் கொடுத்தானை " (4-7-10)

" வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
வில்பிடித்துக் கொம்புடைய ஏனத்தின்பின்
கூடினார் உமையவளும் கோலம் கொள்ளக்
கொலைப்பகழி உடன் கோத்து " (6-83-5)

" அருச்சுனற் கம்பும் வில்லும் துடியுடை
வேடராகித் தூயமந் திரங்கள் சொல்லி " (4-50-1)

என்பன முதலிய அப்பர் கவிதைப் பகுதிகள் இத்தொன்மையழகு துலங்கும் பகுதிகள் எனலாம்.

தோல் :

தோல் என்னும் இலக்கிய வனப்புக்கு ஆசிரியர் கூறும் இலக்கணம் :-

" இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப்புலவர் " (செய்யுள்-238)

'மெல்லென்ற சொல்லான் அறம்பொருளின்பம் வீடென்னும் விழுப்பொருள் பயப்பச்செய்வன' என்பர் பேராசிரியர். இழுமென் மொழியாப்பு, விழுமிய பொருளுடைமை, பரந்தமொழி உடைமை, அடிநிமிர்ந்தொழுகல் ஆகியவை தோலின் இயல்புகள் எனலாம். ஒழுகிசை - ஆற்றொழுக்குப் போன்ற ஓசையின்பம்; மக்கள் வாழ்வைப் பண்படுத்தும் உயர் கருத்துக்கள் - இவை ததும்பிநிற்கும் அழகு தோல் என்று கூறலாம்.

அப்பரடிகள், இறைவனாகிய சிவபிரானையே பாடும் இயல்பினராதலின் 'விழுமியது நுவலல்' - அச்சான்றோருடைய

Koviloor Digital Library

அருட்பாடல்களனைத்திலும் இஃது இலங்கக் காணலாம். அடி நிமிர்ந்தொழுகும் இயல்பைக் காணவியலாதாயினும் முப்பது பாடல்களை உடைய சித்தத்தொகைக் குறுந்தொகை (5-97)த் தொகுப்பைக் கூறலாம்.

அப்பரடிகள் பண்ணொடு குழைந்த திருப்பதிகங்கள் பாடியருளியுள்ளாராதலின் ஒழுகிசையின்பம் தழீஇய அவர் உயர் பாடல்கள் அனைத்திலும் இவ்வழகினைக் காணலாம்.

விருந்து :

விருந்து என்பது ஆசிரியரால்,

"விருந்தேதானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (செய்யுள் - 239)

என்று விளக்கப்பெறும்.

பொருள், உருவம், கூறும்முறை ஆகியவற்றிற் புதுமை தவழக்கூறும் வகையுடைய அப்பரடிகள் அருட்கவிதைகளை இவ்விருந்திற் கூறலாம். தாண்டகம் என்ற புதிய வகையைத் தமிழில் செல்வாக்கு அடையச் செய்த அப்பர் 'விருந்து' அழகு தோன்ற வித்தகப்பாடல் பாடினர் என்பதற்குத் தடையும் உண்டோ?

சித்தத்தொகைக் குறுந்தொகையில் (5-97) அகரமுதல் ஔகார இறுவாயும், ககரமுதல் னகர இறுவாயும் முதற்கண் எழுத்தாகத் தொடரக் கவிதைகள் அருளியுள்ளார். இதுவும் விருந்து வகையாதல் ஓர்ந்துணரலாம்.

இயைபு :

இயையு, தொல்காப்பியரால்,

"ஞகாரை முதலா னகார வீற்றுப்
புள்ளியிறுதி இயைபெனப் படுமே" (செய்யுள் - 240)

அப்பரடிகள் அருள்வாக்கில் இவ்வியையு காணப்பெறவில்லை. இவ்வாறு தொடர்ந்து பாடத்தக்க பா இனப்போக்கை அடிகள் மேற்கொண்டிலராதலின இவ்வழகை நாம் காண இயலவில்லை.

Koviloor Digital Library

புலன் :

அடுத்து வருவது புலன் ; ஆசிரியர் தொல்காப்பியர் இதன் இலக்கணத்தை,

“ சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே” (செய்யுள் - 241)

என்பர்.

கற்றோர்க்கும் மற்றோர்க்கும் எளிதிற் பொருள் புலப்படுமாறு தெரிந்த சொற்களால் இயற்றப்படும் செய்யுளில் புலன் என்னும் அழகு செறிந்ததென்பர் அறிஞர். “சேரி மொழி யென்பது பாடி மாற்றங்கள்” என்பர் பேராசிரியர்.

“ ஆற்றிற் கெடுத்துக் குளத்தினிற்றேடிய ஆதரைப்போல்”
(4-97-6)

“ மத்தார் தயிர்போல் மறுகுமென் சிந்தை” (4-96-3)

“ முயல் விட்டுக் காக்கைப்பின் போனவாறே” (4-5-2)

“ மோத்தையைக் கண்டகாக்கைபோல” (4-75-7)

என்பன முதலிய உலக வழக்குகளை அடிகள் ஓட்டிப் பொருத்தி உரைக்கும் கவிகளில் இப்புலன் என்னும் அழகு பிறங்கக் காண லாம். பொந்தை, களேபரம், பட்டி. பாடி, மொண்ணை முதலிய உலக வழக்குச் சொற்களை அடிகள் புணர்த்துப்பாடியுள்ள கவிதைகள் புலனுக்கு ஏற்ற நலன் அமைந்தவை.

இழைபு :

இறுதியாக, ஆசிரியர் தொல்காப்பியர் கூறும் இலக்கிய அழகு இழைபு ஆகும்; அதற்கு அவர் தரும் இலக்கணம் :

“ ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கனம் ஒழுகின்
இழைபி னிலக்கணம் இயைந்த தாகும்” (செய்யுள் - 242)

Koviloor Digital Library

வல்லெழுத்துப் பயிலாமை, ஐவகையடிகள் பயிலல், ஓங்கிய மொழியாட்சி, பொருள் புலப்பாடு ஆகியன இழைபின் இயல்புகள். இவற்றுள் பின்னைய இரண்டும் அப்பர் தேவாரத்தில் காணக்கிடக்கும் கவின்களே என்பதை இதுகாறும் காட்டிய எடுத்துக் காட்டுக்களான் இனிது உணரலாம். வல்லிசை வண்ணம் நீங்கி நெடுஞ்சீர்வண்ணமும் பயின்றுவரும் பாடல்கள் இவ்வழகின்பாற்படும். விடந்தீர்த்த பதிகம் (4 - 18) இதற்குத் தக்க இலக்கியமாக அருளரசர் திருவாக்கில் அமைவதாகும்.

இங்ஙனம் ஆசிரியர் தொல்காப்பியர் இலக்கிய எழினலங்களாக ஓதியுள்ள எட்டழகும் அப்பர் அருட்கவிதைகளில் இலங்குதலை ஆராய்ந்து அறியுங்கால், பேரின்பமும் பெருமகிழ்வும் தோன்றுதல் இயல்பேயாம்.

முடிவுரை :

இதுகாறும் ஆராய்ந்தவற்றால், அப்பர் அருட்பாடல்கள் இலக்கியப் பண்புகளாகிய அழகு ததும்பும் பேரருட் கருவூலங்களாம் என்பதும், உவமை உருவகம் முதலிய அணிவிகற்பங்களும், கற்பனை, சொல்லாட்சிச் சிறப்பு முதலிய கவிதையியல்புகளும் செறிந்த சீர்மை உடையன என்பதும், இலக்கிய நயமிகுந்த ஏற்றமுடையன என்பதும் இனிது பெறப்படும். ஆளுடைய அரசராகத் திகழும் இவ்வருளாசிரியரின் அருளிச் செயல்களை ஓதி ஓதி இன்புறுதலும், அவ்வின்ப நெறியே இறைநெறிபற்றி இருமைப் பயன்களை எய்துதலும் தமிழைக் கற்றறிந்த தகைசால் மாந்தர் கடனாகும்.

“நெருக்கி யம்முடி நின்றிசை வானவர்
இருக்கொடும் பணிந் தேத்த இருந்தவன்
திருக்கொடும் முடி என்றலும் தீவினைக்
கருக்கெடும் இது கைகண்ட யோகமே”

—திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருவடி மலர்கள் வாழ்க !

Koviloor Digital Library

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நாவுக்கரசர் அருளிய நன்ஞானம்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்,
தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

'ஞானம்' என்பது, 'அறிவு' எனப் பொருள்படும்; ஆயினும், அது தலைமைபற்றிப் பேரறிவையே குறிக்குமல்லது, சிற்றறிவைக் குறியாது. சிற்றறிவை, 'புல்லறிவு' என்றும், பேரறிவை, 'நல்லறிவு' என்றும் கூறுதல் உண்டு. "நில்லாதவற்றை நிலையின என்றுணரும் - புல்லறிவாண்மை கடை" என்னும் திருக்குறளால், ஒன்றை மற்றொன்றாக உணரும் மயக்க உணர்வே புல்லறிவாம் என்பது பெறப்படும். ஒன்றும் அறியாத தன்மையாகிய அறியாமையே அஞ்ஞானம் ஆயினும், அந்நிலை அறிய நில்லாமையின், அறியநிற்கும் மயக்க உணர்வாகிய விபரீத ஞானமே பெரும்பான்மையும், 'அஞ்ஞானம்' என வழங்கப் படும். ஆகவே, அவ் விபரீத ஞானத்தை நீக்கியருளும் அருள் மொழிகளே ஞானத் திருமொழிகளாம். அத்தகைய ஞானத் திருமொழிகள் சிலவற்றால் அப்பர் அருளும் ஞானத்தின் தன்மையை ஒருவாறு ஈண்டு உணர முயல்வோம்.

உண்மை உணர்த்தல் :

விபரீத ஞானங்களுள் முதலாவது, 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என நினைத்து, காணப்பட்ட உலகம் ஒன்றே மெய்யானது; இதற்குவேறாக, 'கடவுள் உண்டு; உயிர் உண்டு; இருவினை உண்டு; மறு பிறப்பு உண்டு' என்றாற் போலக் கூறுவனவெல்லாம் அறியாமையின் காரியமாகும்' என அறியும் அறிவேயாகும். இந்த விபரீத ஞானத்தை அப்பர் பெருமான் அடியோடு அகற்றி, உண்மையை உணர்த்தியருளும் இடங்கள் பல.

Koviloor Digital Library

"நடையை மெய் என்று நாத்திகம் பேசாதே" (5-31-6) என்று உறுதியாக அருளுகின்றார்.

"மிறைபடும்இவ் வுடல்வாழ்வை மெய்யென் றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவேல் நெஞ்சே,"

"பேசப் பொருளலாப் பிறவி தன்னைப்
பெரிதென்றுன் சிறுமனத்தால் வேண்டி ஈண்டு
வாசக் குழல்மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே,"

"தினைத்தனையோர் பொறையிலா உயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியால் இந்த
அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும்
ஆங்காரம் தவிர்நெஞ்சே"

என்பனவும் (6-42-6, 7, 5) அவரது அருட்டிருமொழிகள். இவை போன்றவற்றால், உலகத்தையே உறுதியாக நினைந்து பற்றுதல் கூடாது என்பதனை உணர்கின்றோம்.

இறையுண்மை :

இனி இறைவனைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது.

"அந்திவட் டத்திளங் கண்ணியன் ஆறமர் செஞ்சடையன்
புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும் பொய்யென்பெனோ"

என அருளுகின்றார். (4-98-1) இன்னும்,

"உள்ளத்தில் ஒளியைக் கண்ட துள்ளமே"

என்றும் (5-98-3),

"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்றும் (4-9-12),

"தானலா துலக மில்லை"

"தோன்றாத்துணையாய் இருந்தனன் தன்னடி யோங்களுக்கே"

Koviloor Digital Library

என்றும் (4-40-1, 4-94-1.) வருவனபோன்ற திருமொழிகள், கடவுள் உண்மையைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

"பாட அடியார் பரவக் கண்டேன்"

என்னும் திருத்தாண்டகத்தால், (6-77-1) இறைவன் உண்மை கண்கூடாய் அறியப்படுகின்றது. இறைவன் உண்மையைச் சித்தாந்த சாத்திரங்கள் காரண காரிய முறையில் வைத்து ஆராய்ந்து அளவை முறையால் அரிதில் நிலைநாட்டுகின்றன. நாயனுர் அதனைத் தமது அனுபவத்திலிருந்து எளிதில் விளக்குதலைக்காண்கின்ருேம்.

வினையுண்மை :

"பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே" (5-47-1)

"கொடுவினையார் என்றுங் குறுகா அடி" (6-6-2)

என்ருற்போலும் பகுதிகள் வினை உண்மையை இனிது விளக்கும்.

உயிர் முதலியன உண்மை :

"துறக்கப் படாத உடலைந் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து
பிறப்பன்" (4-113-6)

என்னும் திருவிருத்தப் பகுதியால், உடலுக்கு வேருன உயிரும், மறுபிறப்பும், சுவர்க்கமும் இருத்தல் அறியப்படும்.

"புள்ளி ருக்குவே ளூர்அரன் பொற்கழல்
உள்ளி ருக்கும் உணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே" (5-79-1)

என்று நரகம் உண்மையைக் குறிப்பித்தருளினுர்.

முப்பொருள் உண்மை :

இனி, ஒருசாரார், 'ஒருபொருளே உள்ளது; இரண்டாவது பொருள் இல்லை' என விபரீத வாதம் பேசுவர்; நாவுக்கரசர்,

Koviloor Digital Library

" சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை "

என்று அருளுகின்றார் (6 - 67 - 2). இதனுள் இருள் ஒன்றும், இருள் அடைந்த மனத்தை உடையவர் பலரும், அவ்விருளை நீக்குகின்ற தலைவன் ஒருவனும் ஆகிய முப்பொருள்கள் கூறப் படுதல் தெளிவு. அம் முப்பொருள்களே 'பாசம், பசு, பதி' எனச் சைவ சித்தாந்தத்துள் கூறப்படுதல் வெளிப்படை. இன்னும்,

" பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி" (6-55-6) என்கின்றார். இவையெல்லாம், ஏகான்ம வாதமாகிய விபரீத ஞானத்தை அகற்றி, 'உயிர்கள் எண்ணிறந்தன' என்னும் உண்மை ஞானத்தை இனிது பெறுவிப்பன.

நிலையாமையும் நிலையும் :

மேற் காட்டிய,

" நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை "

என்ற திருவள்ளுவர் திருமொழியின்படி, நிலையாத பொருள்களை நிலைப்பனவாக உணரும் திரிபுணர்ச்சியே எல்லாத் துன்பங் கட்கும் அடிநிலையாகலின், அவற்றது நிலையாமை, நூல்களில் யாண்டும் இனிதெடுத்து விளக்கப்படும். ஆயினும், நிலைத்த பொருள் இது என்பது, அவைகளில் இனிது விளங்குதல் இல்லை. திருமுறைகளே அதனை இனிது விளக்குவனவாம். அவற் றுள்ளும், திருநாவுக்கரசர் திருமொழியுள் அவை இரண்டும் நன்கினிது விளங்கக் காணலாம்.

" கொப்புளே போலத் தோன்றி அதனுளே மறையும்......
இக்களே பரம் "

என்று, யாக்கை, நீர்மேற் குமிழியாதல் விளக்கப்படுகின்றது (4 - 79 - 2).

" கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனார் " (5 - 86 - 1)

Koviloor Digital Library

' நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி ஞர்கிட ந் தூர்முனி பண்டமே" (5-90-4)

"கொல்லத் தான் நம ஞர் தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய லாவதென் ஏழைகாள்" (5-43-1)

" உற்ருர் ஆருளரோ - உயிர் - கொண்டு போம்பொழுது"
(4. 9 10.)

" இளமை கைவிட் டகறலும் மூப்பினுர்
வளமை போய்ப்பிணி யோடு வருதலால்" (5-97-28)

என்ருற்போலும் திருமொழிகள், யாக்கையது நிலையின்மையை யும், அதன்கண் இளமை அதனினும் நிலையின்மையையும் நம்ம ஞேர் நெஞ்சில் ஆழப்பதிவித்து, உலகியலில் அழுந்தாதவாறு எடுப்பன.

இனி, நிலையாமை மட்டில் நினைவூட்டி, 'எல்லாப் பொருளும் நிலையாமையுடையனவேயாகலின், செய்வது என்' என்பார்க்கு ஒன்றும் கூருதொழியாது, அதனைத் தெளிவுபடுத்தும் திரு மொழிகள் நம்மனோரால் நன்குணர்தற்பாலன.

யாவரும் எல்லாப் பொருள்களும் நிலையில்லாதனவாக, சிவ பிரான் ஒருவனே என்றும் நிலையுடையன் என்பதனை அறை கூவி அருளிச்செய்கின்ருர், ஆளுடைய அரசர்.

" சிவன்எனும் ஓசைஅல்லது அறையோ உலகில்
திருநின்ற செம்மை உளதே"

என்பது அத்திருமொழி (4·8·1). 'திரு' என்பது, 'நன்மை அல்லது இன்பம்' எனப் பொருள்தரும். 'அஃது என்றும் நிலைபேறுடையதாய் நிற்றல், சிவபிரானிடத்தன்றிப் பிறர் எவ ரிடத்தேனும் உண்டோ? சொல்மின்' என்கின்ருர் நாவரசர். 'சிவபிரானையன்றிப் பிறிதொருபொருளும் நிலையுடையனஅல்ல' என்னும் தெளிவான உணர்வே 'சிவஞானம்' எனப்படுவது. அதனையே நமக்கு அவர் பலவாற்ருனும் அறிவுறுத்த முயல் கின்ருர்.

" நூறு கோடி பிரமர்கள் நொந்தினுர்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே

Koviloor Digital Library

ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே" (5-100-3)

"………வந்த - நஞ்சமு செய்தானை, அமுதம் உண்ட - மற்ற
மரர் உலந்தாலும் உலவா தானை" (6-50-5)

"சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கமே"
(6-99-2)

என்றற் றொடக்கத்தன காண்க.

உலக இன்பத்தின் நிலை :

நிலையாத பொருள்களை நிலையுடையன என்று பற்றுதலால் இன்பம் உளதுபோலத் தோன்றினும், உண்மையில் விளைவது பெருந்துன்பமே என்பதனை நாவுக்கரசர்,

"தளைத்துவைத் துலையை ஏற்றித் தழலெரி மடுத்தநீரில்
திளைத்துநின் றாடுகின்ற ஆமைபோல்"

என்று (4-79-6.) ஓர் அரிய உவமையால் அருளிச்செய்தார். 'ஆமையை அட்டு உண்பவர், அதனை உலைநீரில் இட்டு அடுப்பில் ஏற்றி வைத்தபொழுது, அவ் ஆமை, தனக்கு நல்ல தண்ணீர் கிடைத்தது என்று எண்ணி அதில் மூழ்கிக் களிக்கின்ற இன்பம் போன்றதே, உலகில் ஐம்புல நுகர்ச்சியால் வரும் இன்பம்' என்னும் இவ் அரிய உவமை, உலகியலின் உண்மை நிலையை நமக்கு எத்துணைத் தெளிவாக உணர்த்துகின்றது!

இறை இன்பத்தின் (சிவானந்தத்தின்) நிலை :

இனி, 'இறைவன் திருவடி இன்பம் எத்துணைச் சிறப்புடையதாய் நிற்கின்றது' என்பதை அவர், 'குற்றம் அற்ற நல்ல வீணையின் இசையும், மாலைக் காலத்தில் எழுகின்ற நிலவின் ஒளியும், மெல்லென வீசுகின்ற தென்றற் காற்றும் வண்டுகள் ஒலிக்கின்ற தாமரைத் தடாகமும் ஆகிய இவை எல்லாம், இளவேனிற் காலத்தில் ஒருங்கு சேர்ந்ததுபோன்றதாய் உள்ளது என விளக்கும் அரிய திருப்பாடல்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்பது, (5-90-1.) இன்னும்,

Koviloor Digital Library

" கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவை நல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்அடைந் தார்க்கிடை மருதனே" (5-14-10)

என வகுத்து அருளுகின்றூர்

இறை இன்பம், உலகில் உள்ள எக்கனியின் சுவையும், உயிரோவியம்போல மிக்க அழகினையுடைய மங்கை நல்லாரது மெய்யூற்றமும், உலக முழுதும் ஒரு குடைக்கீழ் வைத்து ஆளும் பேரரசாட்சியும் துச்சமென ஒதுக்கத் தக்கவாறு எல்லையற்று விளையுமாம் அவன் அடியார்க்கு. அதனை அனைவரும் அடைதல் வேண்டும் என்பது நாவரசரது திருவுள்ளம். அதனுல்,

" மனிதர்காள் இங்கே வம்ஒன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லிரே"

என அழைத்து வினவி,

" புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே"

என்று அறிவிக்கின்றூர் (5-91-7). மற்றும் இறைவனை அவர், 'தேன்' என்றும், 'பால்' என்றும், 'கரும்பின் தேறல்' என்றும் 'அமுதம்' என்றும் பலவாறு உள்ளம் அண்ணித்து ஓதும் இடங்கள் எண்ணில.

இறைபணி :

இனி, துன்பத்திற்கு நிலைக்களமாகிய பிறவியினின்றும் நீங்கி, இன்பக் கடலாகிய இறைவனை அடைதல், அவன் பணியினுலே கிடைப்பதாகும்; வேறொரு வழியும் அதற்கு இல்லை என்பதைத் திருநாவுக்கரசர் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் உரைத்தருளுகின்றூர். இறைவன் பணியே, சைவசித்தாந்த சாத்திரத்துள், 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என நான்கு வகையாக வகுத்துணர்த்தப்படுகின்றது. இந்த நான்கும் ஞானத்தின் படிமுறையான வளர்ச்சி நிலைகளே என்பதைத் தாயுமான அடிகள்,

" விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்று, அழகான உவமையில் வைத்து அருளிச்செய்தார்.

Koviloor Digital Library

சரியை முதலிய நான்கும் இறைவனுக்குச் செய்யும் வழிபாடு களே என்பதைச் சிவஞான சுவாமிகள் தமது சிவஞான சித்தி உரையுள்,

" புறத் தொழில் மாத்திரையானே உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு, 'சரியை' எனப்படும்" என்றும்,

" புறத் தொழில் அகத் தொழில் என்னும் இரண்டானும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு, 'கிரியை' எனப்படும்" என்றும்,

" அகத் தொழில் மாத்திரையானே அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு, 'யோகம்' எனப்படும்" என்றும்,

" புறத் தொழில், அகத் தொழில் இரண்டும் இன்றி, அறிவுத் தொழில் மாத்திரையானே, அம் மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபிரானிடத்தில் செய்யும வழிபாடு, 'ஞானம்' எனப்படும்" என்றும் இனிது விளக்கியுள்ளார். எனவே, பிற பிற சமய ஆசிரியர்கள் வேறு எவ்வெவற்றையோ, 'ஞானம்' என்று அறிவிப்பதுபோலல்லாமல், சைவ சமய ஆசாரியர்கள் சரியை முதலிய நான்கையுமே, 'ஞானம்' என உபதேசித்தருளு வார்கள் என்பதை நன்குணரலாம். அந்நிலை திருநாவுக்கரசரது திருமொழிகளில் மிக விளக்கமாக இருத்தல் காணலாம்.

'திருஅங்க மாலை' என்னும் திருப்பதிகத்துள், தலை முத லாகக் கால் வரையில் உள்ள உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக, "தலையே, நீ வணங்காய்". "கண்காள், காண் மின்களோ", "செவிகாள், கேண்மின்களோ", "மூக்கே, நீ முரலாய்", "வாயே, வாழ்த்து கண்டாய்", "நெஞ்சே, நீ நினையாய்", "கைகாள், கூப்பித்தொழீர்", "கால்களாற் பயன் என்" என்று இவ்வாறு விளித்து, 'உங்களுக்கு உரிய இறைவன் பணியை நீங்கள் செய்யுங்கள்; இல்லாவிட்டால், உங்களால் யாதும் பயன் இல்லை' என்று அறுதியிட்டு அருளும் அருளிச்செயல், மிகமிக நாம் நம் உள்ளத்தில்கொள்ளத்தக்கது. இத் திருப்பதிகத்தில் சரியையும் கிரியையும் வெளிப்படையாக விளங்குதல் காணலாம். நுனித்து நோக்கினுல், "நெஞ்சே நீ நினையாய்" என்பதில் யோகமும் அடங்கியிருத்தல் புலனுகும். 'சரியை, கிரியை' என்னும் இரண்டையும், திருக்களிற்றுப் படியார், 'சிவதன்மம்' என ஒன்ருகக் கூறுகின்றது. அதனை இத்திருப்பதிகம் நன்கு வலியுறுத்துகின்றது.

Koviloor Digital Library

இன்னும், "ஆக்கையாற் பயன் என், அரன் கோயில் வலம் வந்து - பூக்கையால் அட்டிப் போற்றி என்னுத இவ் - வாக்கை யாற் பயன் என்" என்பது, 'மனிதப் பிறப்பினுல் அடையும் பயன், சிவ வழிபாடாகிய சரியை கிரியை யோகங்களைச் செய்து சிவஞானம் முதிரப் பெறுவதே' என்பதைத் தெள்ளத் தெளிய விளக்குகின்றது. எனவே,

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக் காக அன்ருே"

என்ற சிவஞானசித்திச் செய்யுள், இதனையே விளக்குவதாதல் அறியலாம்,

சரியை முதலிய நான்கும் இறைவன் பணியே என்பதை மேலே காட்டினேம்.

சிவஞான சித்தியும் அவ்வாறே,

"ஞானயோ கக்கிரியா சரியைநாலும் நாதன்றன்பணி"

என்கின்றது (சூ. 12 - 5). அதனுல், இங்கு, "அரன் பணி" என்றது சரியை முதலிய நான்கையுமே குறிக்கும் என்பது பெறப் படும். ஞானத்தையும், 'இறைவன் பணி' என்றும், 'ஞானமே சரியை முதலிய நான்கு நிலைகளாய் நிகழ்கின்றது' என்றும் சைவ சமயம் கொண்டுள்ளமையால்தான், ஞான நெறியில் நிற்போர் அனைவரையும், சைவ சமயம், 'திருத்தொண்டர்' எனக் குறிப்பிடுகின்றது. ஆகவே, ஆளுடைய நம்பிகள் அருளிச் செய்த திருத்தொண்டத்தொகையினுலும், அதன் வகையும் விரியு மாகிய, 'திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம்' என்பவற்ருலும் உணர்த்தப்பட்ட நாயன்மார் அனை வரும் ஞான நெறியில் நின்றவர்களே என்பது தெளிவு.

சரியை :

புறத் தொழில் மாத்திரையானே சிவபிரானது உருவத் திரு மேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாவது, திருக்கோயிலுள் இருக்கும் திருமேனிகளையே சிவபெருமாஞகக் கண்டு, அக் கோயிலில் திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்தல், திருவிளக் கிடுதல், திருநந்தவனம் வைத்தல், பூக் கொய்து கொடுத்தல், பூமாலை கட்டித் தருதல், திருவுருவங்களை வணங்கிச் சிவபிரானது புகழ்ப் பாடலைப் பாடுதல், ஆடுதல், சிவனடியார்களைக் கண்டால்,

Koviloor Digital Library

அடியேன் செய்யவேண்டிய பணி யாது? எனக் கேட்டு, அவர்களுக்குப் பணிவிடை செய்தல் முதலிய பலவகைப் புறத்தொண்டாகும் ஆதலின், அதனைத் திருநாவுக்கரசரே பெரிதும் எடுத்தோதியுள்ளார் என்பது நன்கறியப்பட்டது.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே." (6-31-3)

"எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே." (6-61-3)

என்னும் திருத்தாண்டகங்கள், சரியைத் தொண்டினை இனிதெடுத்து விளக்குவனவாம். இவைகள் ஆங்காங்குப் பல இடங்களில் குறிக்கப்படுவதையும் நாம் நாவரசர் திருமுறையில் காணுதல் கூடும்.

கிரியை :

இனி, புறத்தொழில், அகத்தொழில் என்னும் இரண்டானும் சிவபிரானது அருஉருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாவது, பூவும் நீரும் ஆனைந்தும் புகையும் ஒளியும் திருவமுதும் முதலிய பொருள்களைச் சேர்த்துக் கொண்டு ஐவகைச் சுத்திகளைச்செய்து, இலிங்கத்தில் அகத்தும் புறத்தும் மந்திரங்களால் ஆசனம் முதலியவைகளைக் கண்டு, சிவபிரானை வருவித்தல் (ஆவாகனம்) முதலியவைகளைச் செய்து, நீராட்டுதல், ஒற்றுடை சாத்துதல் முதலாகத் திருமேனியைத் தீண்டிச் செய்யும் பணிவிடைகளாகிய அணுக்கத் தொண்டாகும். இதனை,

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்" (4-1-6)

Koviloor Digital Library

" போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன் "
(4-3-1)

" பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை உள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்டனாரே. "
(4-31-4)

" நகமெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் வார முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலால் கோயிலில்லை ஐயன்ஐ யாற னார்க்கே " (4-40-8)

" நின்போ லமரர்கள் நீண்முடி சாய்த்து நிமிர்த்துகுத்த
பைம்போ துழக்கிப் பவளந் தழைப்பன; பாங்கறியா
என்போ லிகள்பறித் திட்ட இலையும் முகையும் எல்லாம்
அம்போ தெனக்கொள்ளும் ஐயன்ஐ யாறன் அடித்தலமே "
(4-92-10)

என்பன முதலிய திருப்பாடல்கள் விளக்கும்

" காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே "

என்னும் திருப்பாடல், அகப் பூசையைச் சிறப்பாக விளக்குவது.

அகப்பூசை புறப்பூசைகளில் அட்ட புட்பம் (எட்டுப் பூக்கள்) சாத்துதல் என்பது சிறப்பாகச் சொல்லப்படுவது. அதனை ஒரு திருப்பதிகம் முழுவதும் அப்பர் பெருமானார் அருளியுள்ளார்.

" எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால் "

எனத் தொடங்குவது அத்திருப்பதிகம் (5-54-1).

ஆனைந்து (பஞ்ச கௌவியம்) ஆடுவதில் சிவபிரான் மிக்க விருப்பம் உடையவன் என்பதை நாயனார் பல இடங்களில் எடுத்தோதியருளுவார்.

Koviloor Digital Library

"ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்" (4-11-2)

"பாலுநெய் முதலா மிக்க பசுவில்ஐந் தாடு வானே" (4-63-9)

"பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடு மவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்" (5-99-1)

"ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி" (6-57-1)

என்பவற்றை எடுத்துக்காட்டாகக் காணலாம். இன்னும்,

"நெய்யினொடு பால்இளநீர் ஆடி னான்காண்" (6-52-5)

"நறப்படுபூ மலர்தூபம் தீபம் நல்ல
நறுஞ்சாந்தங் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்கும் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெம் செல்வன் தானே" (6-30-5)

என்றற் றொடக்கத்துத் திருப்பாடல்கள், கிரியையாகிய வழிபாட்டினை நன்கு வலியுறுத்துவனவாம்.

'இங்ஙனம் பூவும் நீரும் பிறவுங் கொண்டு சிவபெருமானைப் பூசிக்குங்கால், இன்றியமையாது வேண்டப்படுவது, உள்ளத்துள் இருக்கும் அன்பே' என்பதையும், அவ்வன்பு இல்லாது புறத்தோற்றதிற்குமாத்திரம் பூசிப்பவரது பூசையைச் சிவபிரான் எள்ளி நகையாடி, ஆங்கு வருவதற்கு அருவருப்புக்கொண்டு அப்பாலே ஒதுங்கி நிற்கின்றான்' என்பதையும் நாயனர் அருளிச் செய்திருத்தல் பெரிதும் போற்றி உணர்தற்குரியது.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்;
பொக்கம் மிக்கவர் பூவும்நீ ருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே" (5-90-9)

என்னும் திருக்குறுந்தொகைப் பாடலைக் காண்க.

'சரியையில் நின்று வழிபடுவார்க்குச் சிவபெருமான் இலிங்கத்தில் மறைந்து நின்று அருள் செய்கின்றான்' எனவும், கிரியையில் நின்று வழிபடுவார்க்கு, விறகில் மறைந்து நிற்கின்ற நெருப்பும், பாலில் மறைந்து நிற்கின்ற நெய்யும் அவைகளைக் கடையுங் காலத்து வெளிப்படுதல்போல, மந்திர நியாசங்களைச் செய்யுங் கால் அவற்றில் வெளிப்பட்டு நின்று அருளுவன் எனவும் சாத்திரம் கூறும். அதனை,

Koviloor Digital Library

" விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" (5-90-10)

என்னும் திருக்குறுந்தொகைப் பாடலே நமக்கு அருளுகின்றது.

யோகம் :

" உயிரா வணம்இருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிர் ஆ வணம்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி" (6-25-1)

என்னும் திருத்தாண்டகம், ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, மனத்தை ஓடாது நிறுத்தி, உள்ளமாகிய கிழியில் சிவபிரான் உருவத்தை எழுதி, அதிலே ஒன்றியிருக்கும் அகத்தொழிலாகிய யோக முறையை அறிவுறுத்துகின்றது.

"ஞானி நாலினுக்கும் உரியன்" (சிவஞானசித்தி. சூ. 12.5.) என்பதனுல், சரியை முதலிய மூன்றும் சிவப்பேற்றை அடைய விரும்புவார்க்கு அதனை அடையும் சாதனமாய்மட்டும் இல்லாமல், ஞானத்தாற் சிவனைப்பெற்றூர்க்கும், அதனை இழக்காதிருத்தற்கும் சாதனமாம். ஆகையால், மேற்காட்டியவை எல்லாம் ஒவ்வொரு சாரார்க்குமட்டும் இன்றி, எல்லோருக்குமேயாம் என்க.

சந்தியானுட்டானம் :

சரியை முதலியவற்றில் நிற்பவர்கள் சமய தீக்கை முதலியன பெற்றுக் காலை நண்பகல் மாலைகளில் சந்தியானுட்டானங்கள் செய்யுங்கால், அவ்வனுட்டானங்களைச் சிவபிரான் சந்தித்தெய்வ மாய்நின்று ஏற்று அவர்களுக்கு அருள்புரிதலை,

" புரிகாலே நேசம் செய்ய இருந்தபுண் டரீகத் தாரும்
எரிகாலே மூன்று மாகி இமையவர் தொழநின் ருரும்
தெரிகாலே மூன்று சந்தி தியானித்து வணங்க நின்று
திரிகாலங் கண்ட எந்தை திருச்செம்பொன் பள்ளியாரே"
(4-29-7)

என்று, சொல்வேந்தர் குறித்தருளுகின்ருர்.

Koviloor Digital Library

ஞானம் :

இனி, சரியை முதலிய நான்குமே ஒருவகையில் ஞானமாயி னும், சிவப்பேற்றை நேரே அடைவிப்பதாய், 'ஞானம்' எனச் சிறந்தெடுத்துப் பேசப்படுவது, 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருளின் இயல்புகளை உள்ளவாறு உணர்தலேயாகும். இதுவே, 'தத்துவ ஞானம்', 'ஆத்தும ஞானம்' என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படுவது. இதனையே நாம் சாத்திரங்களில் விரிவாகக் காண்கின்றோம்.

பொருள் வகை :

தத்துவ சாத்திரங்களில் முதற்கண் பொருள் உண்மையும், பின்னர் அப்பொருள்களின் இயல்பும் கூறப்படும். இவை இரண்டு கருத்துக்களிலும் சமயங்கள் தம்முள் மாறுபடும். உலகாயதம் 'உலகமே உண்டு; ஏனைய, உயிர் கடவுள் முதலிய எவையும் இல்லை' என்று கூறும். மீமாஞ்சகம், சாங்கியம் முதலி யன, 'உலகமும், உயிரும் உண்டு; கடவுள் இல்லை' என்று கூறும். ஏகான்மவாதம், 'கடவுள் ஒன்றே உண்டு; ஏனைய உலகம், உயிர் எதுவும் இல்லை' என்று கூறும். இவைகள் பிற கொள்கையை மறுத்துத் தம் கொள்கையை நிலைநாட்டுதற்குக் கூறும் வாதங்களால் மயங்காது, 'பதி, பசு, பாசம் என்னும் முப் பொருள்களும் என்றும் உள்ளன' என்று உணர்வதே மெய் யறிவு. அதனை, நாவுக்கரசர் தமது அனுபவத்தினின்றும் எடுத் தருளிச் செய்தலை மேற்காட்டினோம்.

இறையியல்பு :

இனி முப்பொருளின் தன்மைகளை வேறு வேறு வகையாகக் கூறும் சமயங்களும் உள்ளன. அவற்றுள், 'கடவுளுக்கும் பிறப்பு உண்டு' என்று கூறுவது பாஞ்சாரத்திரம். ஞான நோக்கு உடையார்க்கு, இழிவுகளில் எல்லாம் பேரிழிவாகத் தோன்றுவது உடம்பும், துன்பங்களில் எல்லாம் பெருந்துன்பமாகத் தோன் றுவது பிறப்பும், அவை நீங்குதற்கு வாயிலாக அவர் காண்பது, அவ்விழிவும் துன்பமும் சிறிதும் இல்லாது, பெருந்தூய்மையும், பேரின்பமுமே வடிவாய் உள்ள இறைவனை அடைதலுமேயாய் இருக்க, அவை எல்லாவற்றையும் மறந்து, அப்பேரிழிவும் பெருந் துன்பமும் கடவுளுக்கும் உள்ளன என்று கூறும் விபரீத ஞானத்தை, அப்பரடிகள்,

Koviloor Digital Library

" செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ " (5-100-2)

என்று மிக வன்மையாகக் கடிந்தருளுகின்றார். கடவுளுக்கும் அக் குறைபாடுள்ளனவாக, மாயோன் தனது நூலுட் கூறினுயின். அவனது எத்துணையோ மாயங்களில் அதுவும் ஒன்றென்று கொள்ளல் வேண்டும் என்பதை,

" தாயி னும்நல்ல சங்கர னுக்கன்ப
ராய வுள்ளத் தமுதருந் தப்பெருர்
பேயர் பேய்முலை யுண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துட் பட்ட மனத்தரே " (5-100-9)

என விளக்கியருளினுர். சிவபிரானது 'பிறப்பிறப்பில்லாத நிலையை அப்பர் பெருமான் பலவாறு எடுத்தோதிப் புகழ்தலை, அவரது திருமுறையிற் பல இடங்களில் காணலாம்.

இனி, பௌத்த சமண மதங்கள், பந்தத்துள் அகப்பட்டிருந்து முதலில் வீடு பெற்ற ஒருவன்தான், 'கடவுள்' எனப்படுகின்றான் எனக் கூறும். இக்கொள்கையில் சமண சமயம் மிகச் சிறந்துநிற்பது. அதுபற்றி, கடவுளை, "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்று கூறினமையால், திருவள்ளுவரும் சமணரே என வாதிப்பாரும் உளர்.

இறைவன் எஞ்ஞான்றும் பந்தத்துட் படாதவன் என்று கூறும் சைவ சமயம், அதனை இருவகையில் வைத்துக் காட்டும்; ஒன்று இயல்பாகவே பாசங்கள் இல்லாத நிலை; மற்றொன்று பாசங்களையுடைய உயிர்களோடும், பாசங்களோடும் இரண்டறக் கலந்து நிற்பினும், அவற்றின் தன்மையால் தன் தன்மை சிறிதும் மாறாத நிலை. இவற்றுள், முதலில் உள்ள நிலையை, நாயனுர், 'தூயன், நின்மலன், விமலன், அமலன்' முதலிய சொற்களாலும், பிறவாற்றாலும் விளக்கி, இரண்டாவது உள்ள நிலையை,

" துறவாதே கட்டறுத்த சோதி யானை " (6-11-1)

" நேரிழையைக் கலந்திருந்தே புலன்க ளைந்தும் வென்றானை "
(6-50-3)

என்றாற்போலும் திருமொழிகளால் விளக்கியருள்வர். இரண்டாவதாகக் குறிக்கப்பட்ட நிலையையே, திருவள்ளுவநாயனுர்,

Koviloor Digital Library

''பொறிவாயி லைந்தவித்தான்'' எனக் குறித்தார் ஆதலின், அதுபற்றி அவர் சமணராதல் இல்லை.

அன்றியும். முதலிற்குறித்த இயல்பாகவே பாசங்களின் நீங்குதலை, ''வாலறிவன்'' என்றும். ''வேண்டுதல் வேண்டாமை இலான்'' என்றும் அவர் முன்பே கூறிப் போந்தமையால், பின்னர் வந்து கூறிய, ''பொறிவாயில் ஐந்தவித்தான்'' என்பது, அவரைச் சமணராக்க முயல்வோர்க்கு ஒரு பயனையும் தாராது.

இனி, சூரியன் அக்கினி முதலிய பொருள்களையோ. அவற்றிற்கு முதல்வராய தேவர்களையோ கடவுளர் என்றும். முதற் கடவுள் என்றும கூறும் பல தெய்வக் கொள்கை, பிற தெய்வக் கொள்கை ஆகிய அனைத்தையும் நாவுக்கரசர் விலக்கி, சிவபெருமானது முழுமுதற் றன்மையை இனிதுணர்த்துகின்றார்.

'' அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்க னுவான் அரனுரு வல்லனே''

'' எரிபெ ருக்குவர் அவ்வெரி ஈசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்'' (5 - 100 - 8, 7)

இன்னும், இலிங்க புராணத் திருக்குறுந்தொகை, 'தொழற் பாலதே' என்னும் திருக்குறுந்தொகை முதலியவற்றால் சிவபிரானது முதன்மையை நாயனார் பலவாற்றாலும்விளக்கியுள்ளார். ''மற்றெல்லாரையும் விடுத்துத் தியானிக்கப்படத் தக்கவன் சிவன் ஒருவனே'' என்னும் அதர்வசிகோபநிடதத்தின் பொருள் 'தொழற்பாலதே' என்னும் திருக்குறுந்தொகையில் அமைந்துள்ளது.

'சிவபிரான், முழுமுதல் தன்மையாகிய பேராற்றலேயன்றிப் பெருங்கருணையையும் உடையவன்' என்பதை விளக்க, அவன் அமரர்க்காக நஞ்சுண்டமை. திரிபுரம் எரித்தமை, மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்தமை. அருச்சுனனைக் காக்க வேடனாகச் சென்றமை முதலிய வரலாறுகளைப் பலவிடத்தும் பாராட்டி அருளிச்செய்கின்றார். இன்னும், அவன் உயிர்கள் செய்யும் பிழைக்காக முன்பு சிறிது ஒறுத்தலைச் செய்யினும், பின்பு அப் பிழையை உணர்ந்து தன்னை அடையின், மனம் இரங்கி அருளுதலைக் குறிக்க, இராவணனுக்கு அருள்செய்த வரலாற்றை ஒவ்வொரு திருப்பதிகத்தின் இறுதிப்பாடல்களிலும் அருளிச் செய்வார். ''ஆறாத ஆனந்தத் தடியார் செய்த அனுசாரம் பொறுத் தருளி அவர்மேல் என்றும் - சீறாத பெருமான்'' (6 - 80 - 5)

Koviloor Digital Library

என்பதைவிடச் சிவபெருமானது கருணைத் திறத்தை விளக்கும் சிறந்த தொடர் வேண்டாவன்றே !

சிவபிரானுடைய பெருமைகள் பலவற்றையும் பல்லாற்றானும் விரித்தோதும் சிவபுராணங்கள் சிறப்புடையன என்பதை வலி யுறுத்தற்கு, தசபுராணத் திருப்பதிகத்தை அருளிச்செய்தார். இலிங்க புராணத்திற்கு மட்டும் ஒரு தனித் திருப்பதிகமே ஐந் தாந் திருமுறையில் உள்ளது என்பதை, மேற் கூறினோம்.

இனி. இறைவன் உயிர்களோடும் உலகத்தோடும் வேறறக் கலந்து நிற்றலை, 'அத்துவித சம்பந்தம்' என்றும், 'அஃது ஒன்றாய் வேறாய் உடனாய்' இருத்தல் என்றும் சாத்திரம் கூறும். ஒன்றாய் இருக்கும் நிலை பெரும்பான்மையாகப் பலவிடத்தும் கூறப்படுதல் காணலாம். சிறப்பாக, நின்றதிருத்தாண்டகம் அதனையே விரித்தோதுகின்றது. இவ் வொன்றாம் நிலையை. 'அட்ட மூர்த்தம்' எனக் கொண்டு போற்றிவருதல், சைவ சமயத்தின் தொன்றுதொட்ட மரபு. அதனை. நின்ற திருத் தாண்டகத்தின் தொடக்கத்தே,

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்த மாகி"

என இனிது விளங்க அருளிச்செய்தார். வேறாய் இருத்தலை,

"விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணும் நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறுதீயு மல்லர்
தெளிநீரு மல்லர்" (4-8-2)

"மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை
மலையல்லை கடலல்லை வாயு வல்லை
எண்ணல்லை எழுத்தல்லை எரியு மல்லை
இரவல்லை பகலல்லை யாவு மல்லை" (6-45-9)

என்பன முதலியவற்றில் அருளியிருத்தல் காணலாம். உடனாய் இருத்தலை,

"அசிர்ப்பெனும் அருந்தவத்தால் ஆன்மாவி னிடமதாகி
உசிர்ப்பெனும் உணர்வுமுள்ளார் ஒற்றியூ ருடையகோவே"

Koviloor Digital Library

" நினைக்குமா நினைக்கின் றருக்
குணர்வினோ டிருப்பர் போலும் ஒற்றியூ ருடைய கோவே"

(4-45-2, 7)

"தானும் யானும் ஆகின்ற தன்மையனை" (6-98-7)

என்றாற்போல்வனவற்றால் உணரவைத்தருள்வார்.

'இறைவன் உலகுயிர்களோடு ஒன்றாய் வேறாய் உடனாய் இருந்து செய்வன ஐந்தொழில்கள்' என்பதும், 'அவை, 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்பன' என்பதும் சைவத்தின் கொள்கைகள். அவற்றுள், யாவரும் அறிந்த நிலையில் உள்ள, படைத்தல் முதலிய மூன்று தொழில்கள் பெரும்பான்மையாக யாண்டும் கூறப்படும். அதனை, நாவுக்கரசர்,

"மூன்று மூர்த்தியுள் நின்றிய லுந்தொழில்
மூன்று மாயின மூவிலைச் சூலத்தன்" (5-89-3)

"மூவாதி யாவர்க்கும் மூத்தான் தன்னை
முடியாதே முதல்நடுவு முடிவா னானை" (6-74-3)

"நாரணன்காண் நான்முகன்காண் நால்வேதன்காண்"

(6-8-3)

என்றாற்போல வெளியிடுவர். இறைவனது தொழில்களை மூன்றாகக் கூறுமிடத்து, மறைத்தல் காத்தலிலும், அருளல் அழித்தலிலும் அடங்கி நிற்கும் என்றலே சிவநெறி மரபு.

இனி, ஐந்தொழில்களில், 'மறைப்பு' என்பது, முத்தொழிலின் வேறாய் நிகழ்வது அன்று; அவற்றிற்கு அடிநிலையாய் நிற்பதே. அஃது உயிர்களைப் பிறவியிற் செலுத்தி நிற்பதாகலின், அதுவே உயிர்கட்குப் பந்தமாம். அருளல் என்பது, முத்தொழில்கட்கு வேறாயினும், அஃது அம்முத்தொழில்போல ஏனையவற்றோடு ஒப்ப நின்று மாறிமாறி வாராது. அவற்றிற்கு மேலாய் நிலைத்து நிற்கும்; எனவே, அஃது உயிர்களைப் பந்தத்தினின்றும் நீக்குவதாகலின், அதுவே உயிர்கட்கு வீடாம். ஆகவே, மறைத்தலும், அருளலும் முறையே, 'பந்தம்' எனவும், 'வீடு' எனவும் வழங்கப்படும். இதனை,

Koviloor Digital Library

"பந்தமாய் வீடு மாகிப் பரம்பர மாகி நின்று
சிந்தையுள் தேறல்போலும் திருச்சோற்றுத் துறையனாரே"

என்றாற்போல்வனவற்றால் அருளுவர் நாயனார். இதனால், ஐந் தொழில்களும் ஒருவாற்றால், 'பந்தம், வீடு' என இரண்டாய் அடங்குதலை அறியலாம்.

இறைவன் செயல் முறை :

தனது தொழில்கள் அனைத்தையும் நம்மைப்போலக் கரணத்தாற் செய்யாது, சங்கற்ப (நினைவு) மாத்திரையாற் செய்தலே இறைவனுக்குள்ள தனிச்சிறப்பு. எல்லாவற்றையும் சங்கற்ப மாத்திரத்தாற் செய்தலாலே அவனுக்கு நம்மைப்போன்று, தொழில்களால் வரும் வேறுபாடுகள் இலவாயின. இதனை, நாயனார்,

"நோக்காதே யெவ்வளவும் நோக்கி னானை
...
ஆக்காதே யாதொன்றும் ஆக்கி னானை" (6-11-5)

என்று அருளுதலால் அறியலாம்.

இறைவன் வடிவம் :

உயிர் உடம்பை இயக்குதற்கு வேறோர் உடம்பு வேண்டாமை போல, தனது திருமேனியாகிய உயிர் உலகங்களை இயக்குதற்கு இறைவனுக்கு வேறோர் உடம்பு வேண்டுவதில்லையாயினும், உயிர்களது மன மொழி மெய்கட்குத் தான் அகப்படுதற் பொருட்டுப் பல அருட்டிருமேனிகள் கொண்டுநிற்பன் இறைவன் என்பதனை,

"அரிதரு கண்ணி யாளை ஒருபாக மாக
அருள்கா ரணத்தில் வருவார்" (4-8-2)

என்னும் திருமொழியால் நன்குணர்கின்றோம். அவ்வருட்டிருமேனிகள்தாம் எண்ணற்றனவாதலே, திருப்பதிகங்களுள் எவ்விடத்தும் எல்லையின்றி விளங்கும். 'இறைவன் திருமேனிகள் பலவும் பிறரால் படைத்துக் கொடுக்கப்பட்டு அவனைப் பந்தப் படுத்தும் மாயா சரீரங்களாகாது, அவன் தனது இச்சையால் விரும்பியபடி கொள்ளும் அருட்டிருமேனிகளே' என்பதனையும், அத்திருமேனிகளின் அருமை பெருமைகளையும் சிவஞான சித்தி,

Koviloor Digital Library

இரண்டாம் சூத்திரத்தில் தடைவிடைகளால் மிகத் தெளிவாக விளக்கும்.

உணர்த்தும் முறைமை :

'உயிர்கள் இறைவன் உணர்த்தினுலன்றி உணரமாட்டா' என்பதையும், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதை யும், "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்பது முதலாகத் தொடங்கி, "காட்டுவித்தால் ஆரொருவர்காணுதாரே காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்று, வகுத்து வகுத்தருளினர் நாயனர். (6 - 95 - 3).

" சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமைசெய்ய
எந்தைநீ யருளிச் செய்யாய் யாதுநான் செய்வதென்னே "
(4 - 23 - 4)

என்பதும் அப்பொருளுடையதே.

தத்துவங்கள் :

உயிர்களின் பொருட்டு மாயையினின்றும் இறைவன் படைத் துக் கொடுப்பன, தத்துவங்களும் அவற்றின் காரியங்களாகிய தாத்துவிகங்களுமாகும். அவை அனைத்தும் தொண்ணூற்ருறு என்னும் தொகையுடையன. அவை நாவரசர் திருமொழியிற் பல இடங்களிற் பலவாறு கூறப்படுதலைக் காணலாம்.

" துருத்தியாங் குரம்பை தன்னில் தொண்ணூற்றங்
கறுவர் நின்று " (4 - 25 - 4)

" முப்பதும் முப்பத்தாறும் முப்பதும் இடுகு ரம்பை "
(4 - 54 - 3)

" எண்பதும் பத்தும் ஆறும் என்னுளே இருந்து மன்னி "
(4 - 70 - 3)

என்றுற்போல்வன, தத்துவங்களையே குறித்தன. ஆன்ம தத்து வம் இருபத்துநான்குடன் புருட தத்துவம் கூடத் தத்துவம் இருபத்தைந்தாம். காலம் முதலிய வித்தியா தத்துவங்களைப் புருடதத்துவம் என ஒன்ருக வழங்குவர் என்று கொள்க. சுத்த தத்துவங்கள் உயிர்கட்கு உடம்பாகாமையின், அதனை நீக்கி, 'தத்துவம் முப்பத்தொன்று' என்றல் உண்டு.

Koviloor Digital Library

தத்துவம் முப்பத்தாறனுள், தூல பூதங்கள் ஐந்தும், ஞானேந்திரியங்களின் புலங்கள் ஐந்தும் யாவர்க்கும் இனிது விளங்குதல்பற்றி யாண்டும் சிறந்தெடுத்துக் கூறப்படும். அந்தக் கரணங்கள் நான்கும், 'மனம்' என ஒன்ருக அடக்கிக் கூறப் படும். இவைகள் உயிருக்கு இட்ட தளைகளாய் நின்று துன்பு றுத்தும் முறையை அப்பர் பலப்பல வகையில் பாடியருளுவார். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுக் கூறுதல் இயல்வதன்று.

தூல பூதங்கள் ஐந்தின் குணங்களை,

" மண்ணதனில் ஐந்தை, மா நீரில் நான்கை,
வயங் கெரியில் மூன்றை, மா ருதத்தி ரண்டை,
விண்ணதனில் ஒன்றை " (6-60-3)

என அருளக் காண்கின்ருேம்.

தத்துவ நீக்கம் :

'இத்தத்துவக் கூட்டங்கள் நீங்கப் பெற்ருல், ஆன்மா இறை வன் திருவடியையே தனக்குப் புகலிடமாக அடையும்' என்பதனை, கயிறுகள் யாவும் அறப்பெற்ற ஊசல் தரையையே சென்று அடைதலாகிய உவமையில் வைத்து, நன்கு விளக்கியுள்ளார்.

" உறுகயி றூசல் போல ஒன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவும் நெஞ்சம்
பெறுகயி றூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூச லானேன் அதிகைவீ ரட்டனீரே " (4-26-6)

என்பது, அவ்வழகிய திருப்பாடல். இதனையே மெய்கண்டதேவ நாயனுர், தமது சிவஞானபோத வார்த்திகத்துள், " இவ்வான் மாத் தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமது முதல் சீபாதத்தையணையும் என்றது; ஊசல் கயிறற்ருல் தாய் தரை யேயாந் துணையான் " என்று உரைத்தருளினுர். (சூ - 8.)

வினை நீக்கம் :

" கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகடல் என்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே " (5-100-5)

என்னும் திருப்பாடலால், 'வினை நீங்கினுலன்றி மெய்யுணர்வு தோன்ருது' என்பதையும்,

Koviloor Digital Library

" பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லா லொருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூ ராஎன்றே போற்று நில்லே "

(6-31-7)

என்னும் திருப்பாடலால், சிவபிரானை வழிபடுதல் ஒன்றே வினை நீக்கத்திற்கு வாயில் என்பதையும் அருளினார்.

திருவைந்தெழுத்து :

'சிவபிரானைச் சரியை கிரியை யோகங்களான் வழிபட்டு வினை நீங்கப் பெறுதற்கும், பின்னர்ச் சிவஞானம் பெற்றுச் சிவனை அனுபவமாகக் கண்டு, அந்நிலையிலே நிலைத்து நிற்றற்கும் துணையாய் இருப்பது திருவைந்தெழுத்தே' என்பது சிவநெறியின் முடிந்த முடிபு. அதனை அப்பரடிகள் மிக நன்றாக வலியுறுத்தருளிச் செய்துள்ளார், "சொற்றுணை வேதியன்" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம் அதன் கருவூலமாகும். அது, நாயனார், தமது அனுபவத்தின் வைத்து அருளிச்செய்தது. "மாசில் வீணையும்" என்னும் திருக்குறுந்தொகைப் பதிகத்துள்,

" நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நா நவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே " (5-90-2)

என்னும் திருப்பாடலும் அத்தகையதேயாகும், இன்னும், 'திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாக வைத்து ஓதுதல் சிறந்தது' என்பர். அதனையும் நாயனார்,

" வைத்த பொருள்நமக் காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவாய நமஎன் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ அறிவிலாப் பேதைநெஞ்சே"

Koviloor Digital Library

என்று அருளிச்செய்தார் (4 - 94 - 5) இது, நாயனுர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை அருளிச்செய்து, கல்லே மிதப்பாகக் கடலேக் கடந்து கரையேறியவுடன் அருளிச்செய்ததாதல் அறியத்தக்கது.

அருட்கண் :

இவ்வாற்ருல் வினே நீங்கித் திருவருள் கிடைக்கப்பெற்று, 'அவ்வருளே கண்ணுகக் காண்பவரே இறைவனேக் காணுதல் கூடும்; அல்லாதார்க்குக் கூடாது' என்பதை நாயனுர் மிக அழுத்தமாக அருளியுள்ளார்.

'' அயிரா வணமேஎன் அம்மா னேநின்
அருட்கண்ணுல் நோக்காதார் அல்லா தாரே. ''

(6 - 25 - 1)

'' மைப்படிந்த கண்ணுளும் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன்ஓர் உவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணுகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவன்இறைவன் என்றெழுதிக் காட்டொ ணுதே ''

(6 - 97 - 10)

என்பன காண்க.

உள்ளுறைப் பொருள் :

நல்லாசிரியர் திருவைந்தெழுத்தை அறிவுறுக்கக் கேட்டு அதனே முறைப்படி நியமமாக ஓதுதல் முதலியவற்ருல் இறைவன் திருவடி ஞானம் வளர்ந்து முதிர, அம் முதிர்ச்சிக்கேற்ப அவன் மாட்டு அன்பும் முறுகி வளரப் பேரன்பினே எய்தி, அவனுடைய திருவடியைத் தலேப்படுமாற்றினே நாயனுர் அகப்பொருள் வகையில் உள்ளுறையாக வைத்து நன்கருளிச் செய்திருத்தலேச் சைவ உலகம் நன்கறியும். அத்திருப்பாடல்,

'' முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னே அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனுள்

Koviloor Digital Library

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

என வரும் (6-25-7.).

அணைந்தோர் தன்மை:

இங்ஙனம் இறைவன் தாளைத் தலைப்பட்டவர்க்கு இவ்வுலகில் எவ்வகையான துன்பமோ அச்சமோ யாதும் இல்லை; அவர் யார்க்கும் பணிந்து வாழ்தலும் இல்லை என்பதை நாயனார் விதந்தோதி யருளியதுபோலப் பிறர் ஓதியதில்லை என்றே கூறலாம். "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" (6-98) என்னும் மறுமாற்றத் திருத்தாண்டகம் அதனையே விரித்துரைக்கின்றது.

"வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவு தீர்ந்தோம் இடுக்க ணில்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி
அனலாடி ஆனஞ்சும் ஆட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
செவ்வான வண்ணரென் சிந்தை யாரே" (6-95-2)

என்னும் திருத்தாண்டகமும் அத்தகையதே. இதனுள், 'எங்கெழில் என் ஞாயிறு' என்னும் அரிய தொடரைக் காண்கின்றோம்.

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே."
(4-94-9)

"வானம் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டூனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே."
(4-112-8)

Koviloor Digital Library

" கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான் மறுப்பினும் பஞ்சமுண்டென்
றென்னொடும் சூளறு மஞ்சல் நெஞ்சேஇமை யாதமுக்கண்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண் டீர்ப் புகலிடத்தே"

(4-113-10)

என்னும் நாயனர் திருமொழிகளை யாவரும் தெளிந்து அந்நிலையைப் பெறுதல் வேண்டும்.

இங்ஙனம் ஞான நெறியினை நன்கு தெரித்து அருளிச்செய்த நாவுக்கரசரது அருளிப்பாட்டினை உலகம் உணர்ந்து உயர் பயன் எய்துவதாக.

Koviloor Digital Library

உ
சிவமயம்

புராண வரலாற்றுக் குறிப்புக்கள்

சிரோமணி. வித்துவான். திரு. வி. சபேசன்
தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

"ஆசையருய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

—குருஞானசம்பந்தர்.

புராணச் சிறப்பு:

திருமுறைகள் சிவபெருமானது முழுமுதற்றன்மையையும் அடியார்களுக்கு அவன் அவ்வப்பொழுது தோன்றி அருள்செய்த பேருளையும் இனிது விளக்கி அவனிடத்தில் அன்பு விளையச் செய்வன. ஆகவே அவை தோத்திரங்களாய் அமைந்தன வாகும். சைவசமயத்திற்குத் தோத்திரம் சாத்திரம் என்னும் இருவகை நூல்களும் இரண்டு கண்களாய் அமைந்துள்ளன. தோத்திரங்கள் இறைவனிடத்தில் அன்பை விளைவிப்பன. சாத்திரங்கள் அவனைப்பற்றிய அறிவை உண்டாக்குவன. அறிவின் பயன் அன்பேயாகும். ஆகவே அன்பை விளைவிக்கும் தோத்திரங்கள் சாத்திரங்களினும் மேலானவையாய்த் திகழ்கின்றன.

தோத்திரம் என்பது புகழ்மாலை. இறைவனைப்பற்றிய புகழ் மாலைகளே தோத்திரங்களாகிய திருமுறைகள். ஏனையோரைப் புகழும் புகழ்ச்சிகளெல்லாம் முகமனுரையாகக் கூறுவன. சிறிது இருப்பதைப் பெரிதாகப் புனைந்துரைப்பன. இறைவன் புகழ் அவ்வாறின்றி உண்மையையே எடுத்துக் கூறுவதாகும். மற்றும் உள்ளதை முழுதும் கூறமுடியாதபடி அவனது புகழ் அளவிறந்துள்ளது. அதனை எத்தகையோரும் ஒரு சிறிதே கூறமுடியும். இறைவனது புகழின் தன்மையைப் "பொருள் சேர் புகழ்" என்று திருவள்ளுவ நாயனர் குறித்தருளினர்.

Koviloor Digital Library

பிறரைப்புகழ்வதால் உடல்நலத்துக்குவேண்டியவைகளையே சிறிது பெற்று சிலநாள் வாழ்தல் கூடும். இறைவனது பொருள் சேர் புகழைக் கூறுவதால் பிறவித் துன்பத்திற்குக் காரணமாகிய இருவினைகளும் நீங்கி உயிர்நலம் பெற்று அந்தமில் இன்பத்தில் நீடுவாழலாம்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்பது திருவள்ளுவர் திருமொழி.

இறைவனது பெருமைகளில் அவன் அவ்வப்பொழுது ஆங் காங்கு வேண்டிய உருவத்தில் தோன்றி வேண்டுவார் வேண்டிய வற்றை அருளிய அருள் நிகழ்ச்சிகள் தொன்றுதொட்டு என்றும் நிகழ்ந்து வருவதால் அவ்வரலாறுகள் புராணம் எனப்படு கின்றன. ஆகையால் தோத்திரங்களாகிய திருமுறைகளில் புராணவரலாறுகளே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. நாயன்மார் வரலாறுகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன.

புராணம் என்பது பழைய வரலாறு எனப்பொருள் தரும். ஆயினும் அது கடவுள் வரலாற்றையே குறிக்கும். வேதம் முதலிய கலைகளிலும் புராணங்கள் சிறப்புடையன என்பது ஆன்ஞோர் துணிபு. "சிறப்புடைய புராணங்கள்" என்ஞர் அருணந்தி சிவாசாரியார். வியாசமுனிவரும் வேதங்களை ஓதாது உணர்ந்து புராணங்களைச் சனற்குமாரமுனிவரிடம் கேட்டார் என்ப. வேதத்தின் நுண்ணிய பொருள்களை யாவரும் தெளிய உணருமாறு செய்வன புராணங்கள் என்பதும் அதஞல் புராணத்தை நன்கு உணர்ந்தவர்களே வேதத்தின்பொருளையும் நன்கு உணர்தல் கூடும் என்பதும் தொன்று தொட்டுச்சொல்லப் பட்டுவரும் மரபு.

மேற்குறித்த திருக்குறளிஞல் புராண வரலாறுகள் சிறப் புடையன என்பது திருவள்ளுவருக்கும் கருத்தாதல் விளங்கும். அவ்வகையில் திருநாவுக்கரசரது திருமுறைகளில் புராண வரலாறுகளும் பிறவும் விரிவாகவும் தெளிவாகவும் பல இடங் களில் அருளப்படுகின்றன. அத்தகைய இடங்கள் சிலவற்றை உணர்தல் பயன்தருவதொன்ரும் என்னும் கருத்தால் இவ் வரலாறுகள் கீழே தரப்படுகின்றன.

Koviloor Digital Library

அருச்சுனற்குப் பாசுபதம் தந்தது *

இந்திரப் பிரஸ்தம் என்னும் நகரை ஆண்டுவந்த பஞ்ச பாண்டவர்களில் ஒருவன் அருச்சுனன். துரியோதனனோடு சூதாடி நாட்டையிழந்து வனவாசம் செய்யும்பொழுது "பாசுபதாஸ்திரம்" பெறுவதற்காகத் தவஞ் செய்தான் அருச்சுனன். அப்பொழுது துரியோதனனால் ஏவப்பட்ட மூகன் என்னும் அரக்கன் பன்றியுருக்கொண்டு அருச்சுனனைக் கொல்லவந்தான். அருச்சுனன் அப்பன்றியைக்கொல்ல முயலுகையில் பெருமான் வேடருருக்கொண்டு வந்து எதிர்த்தார். அவரால் துன்புற்று வருந்திய அருச்சுனன், பெருமான் உண்மையுருக் காட்டக் கண்டு வணங்கி வரமும் பாசுபதாஸ்திரமும் வேண்டிப்பெற்றான். இந்நிகழ்ச்சியைச் சுவாமிகள்,

"வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
வில்பிடித்துக் கொம்புடைய ஏனத்தின்பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ளக்
கொலைப்பகழி உடன் கோத்து" (6-83-5)

என்றும், மற்றும் பல இடங்களிலும் (4-7-10,4-50-1) குறித்துப் பாடியிருத்தல் கண்டு மகிழத்தக்கது.

ஆலின் கீழறமுரைத்தது ‡

பார்வதி இமயமலையில் மலையரசன் மகளாய்த் தோன்றித் தவஞ் செய்கையில், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் முதலிய நான்கு முனிவர்களும் தவம்செய்தும் ஞானநிலை பெறாதவர்களாய்த் திருக்கயிலையடைந்து பெருமானிடம் சிவாகமத்து உட்பொருளை உணர்த்தியருள வேண்டினர். பெருமான் தக்ஷிணாமூர்த்தியாய்க் கல்லாலமரநிழலில் எழுந்தருளி ஆகமத்தின் முதல் மூன்று பாதமாகிய சரியை, கிரியை, யோகங்களை உபதேசித்து நான்காவது பாதமாகிய ஞானத்தை "ஞானமுத்திரை அமைந்த திருக்கரத்தைத்" தம் மார்பில் வைத்து ஒரு கணப்பொழுது யோகம் செய்வார்போல் இருந்து உணர்த்தியருளினார். இதைச் சுவாமிகள் "ஆலின்கீழ் அறம் நால்வர்க்கு

* பாரதம் சபா பருவம் - அரிச்சுனன் தவநிலைச் சருக்கம்.

‡ கந்தபுராணம் - மேருப்படலம்.

Koviloor Digital Library

அன்றுரைத்தான்'' (4-6-10) என்பது, (5-25-10, 5-59-2' 4-107-6). முதலிய பல இடங்களிலும் கூறியிருத்தல் காணலாம்.

இராவணன் குபேரனது புட்பக விமானத்தைக் கைப்பற்றியது: ‡

இலங்கையை ஆண்டுவந்த இராவணன் தேவர்களைத் துன்புறுத்தினன். குபேரன் தூதுவன்மூலம் தேவர்களைத் துன்புறுத்தக்கூடாது என்று தெரிவித்தான். அதனுல் சினந்த இராவணன் குபேரனேடு போரிட்டு வென்று அவனது புட்பக விமானத்தைக் கைப்பற்றினன். இந்நிகழ்ச்சியை நாயனர் ''பொருள் மன்னனைப்பற்றிப் புட்பகங்கொண்ட மருள்மன்னனை'. என்று கூறியிருத்தல் காண்க.

இராவணன் கயிலை பெயர்த்து பெயரும், வாளும், நாளும் பெற்றது:

குபேரனிடமிருந்து புட்பக விமானத்தைக் கைப்பற்றிய இராவணன் புட்பக விமானத்தின்மீதேறி கயிலைக்கு வந்தான். இறைவன் வீற்றிருக்கும் இடமாகிய கயிலையில் செல்லுதல் கூடாது என்று கூறித் தடுத்தார் நந்திபெருமான். அவரை யிகழ்ந்துபேசிச் சினங்கொண்டு கயிலையைப் பெயர்த்தான் இராவணன். அதனுல் தேவர்களும், முனிவர்களும் நடுங்கினர், இதையுணர்ந்த பெருமான் காற்பெருவிரலால் சிறிதே அழுத்தினர். அதனுல் துன்புற்று அழுத இராவணன் அமைச்சர்கள் * சொற்படி தன் தலையைத் தடிந்து தன் கை நரம்பை வீணையாகக்கொண்டு வாசித்துச் சாமகானம் பாடினன். அதனுல் மகிழ்ந்த பெருமான் இராவணன் என்ற பெயரும், நீண்ட ஆயுளும், ஆற்றல்மிக்க சந்திரவாளும் ஈந்தருளினன். இவ்வரலாறுகளை நாயனர், ''பத்திலங்குவாயாலும் பாடல்கேட்டுப் பரிந்தவனுக் கிராவணனென் றீந்தநாம தத்துவனை'' (6-79-10) என்றும், ''கடுத்தமேனி அரக்கன் கயிலையை........கொடுத்தனன் கொற்றவாளொடு நாமமே'' (5-87-10) என்றும், ''கடுகியதேர் செலாது கயிலாயமீது கருதேல் உன் வீரமொழி நீ' (4-14-11) என்றும் குறிப்பிடுதல் காண்க.

‡ இராமாயணம் - உத்தரகாண்டம் - வரையெடுத்த படலம்.

* நாரதர் கூறினர் என்றலே பெருவழக்கு.

Koviloor Digital Library

இராவணனை இராமன் கொன்றது : ‡

கயிலையைப் பெயர்த்த இராவணன் சிவபெருமான் அருளால் வரங்கள் பெற்று இலங்கையை ஆட்சி புரிந்து செருக்குற்றுத் தேவர்களுக்குத் துன்பம் விளைத்தான். தேவர்களின் வேண்டுகோட்கிணங்கி இராமன் என்னும் பெயருடன் அயோத்தி மன்னன் தசரதன் திருமகனுய்த் திருமால் அவதரித்துக் காட்டில் வசித்து வந்தபொழுது இராவணன் இராமபிரான் மனைவியாகிய சீதையைக் கவர்ந்து சென்ருன். அதனுல் சினந்த இராமன் சுக்கிரீவன்முதலிய வானரசேனைகளுடன் சேதுபந்தனஞ் செய்து இலங்கையடைந்து போரிட்டு இராவணனைக்கொன்ருன். இவ்வரலாற்றைச் சுவாமிகள் "செங்கண்மால் சிலை பிடித்துச் சேனையோடுஞ் சேதுபந்தனஞ் செய்து சென்றுபுக்குப், பொங்கு போர் பலசெய்து புகலால் வென்ற போரரக்கன்" (6 - 58 - 10) என்று கூறியிருத்தல் காண்க.

உபமன்னியுவுக்குப் பாற்கடலீந்தது : §

இவர் வியாக்கிரபாத முனிவரின் புதல்வர். இவர் வசிட்டரது காமதேனுவினது பாலை உண்டு வளர்ந்தார். அத்தகைய பால் வேண்டுமெனத் தாயிடம் கேட்க, தாய் மாவைக் கரைத்துப் பால் எனக் கொடுத்தாள். அஃதறிந்த குழந்தை தாயைப் பார்க்கத் தாய் தந்தையைப் பார்க்க எல்லாமுடையானுனை பெருமானை வேண்டித் தவம்புரிக என்று தந்தை கூற அதன்படி தவம் புரியலானுர். சிவபெருமான் இந்திரனுருவில் தோன்றிச் சிவனையிகழ்ந்து கூறி அவரது பேரன்பைக்கண்டு பாற்கடலையுண்ண அளித்தான். இப்புராண வரலாற்றைச் சுவாமிகள் திருக்கடவூர்த் திருப்பதிகத்திலும், (4 - 107 - 6) திருக்கோளிலித் திருப்பதிகத்திலும் (5 - 56 - 6) கூறியுள்ளார்கள்.

உமைகாண நடனமாடியது : *

சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் பெத்தமுத்திகளைத் திருவருள் செய்தற்பொருட்டுப் பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு பஞ்சகிருத்தியத் திருநடனத்தை யெப்பொழுதும்

‡ இராமாயணம்.

§ கோயிற்புராணம்.

* சிவபராக்கிரமம்.

Koviloor Digital Library

இயற்றியருள்வர். பெருமான் மூன்று திருக்கரங்களாலும், இரண்டு திருவடிகளாலும் பஞ்சகிருத்தியம் குறித்து நடனம் புரிகின்ருர். உடுக்கையேந்திய திருக்கையால் தோற்றமும், அமைத்த திருக்கையால் நிறுத்தலும், தீயேந்திய திருக்கையால் அழித்தலும் முயலகன் முதுகிலூன்றிய திருவடியால் மறைத்தலும் தூக்கிய திருவடியால் அருளலும் புரிகின்ருர். அன்றியும்,

'' உரையுணர்வுக் கெட்டா வொருவன்மிகு பஞ்சாக்
கரத்தால் வரைமகள்தான் பாதி - பரையிடமாய்க்
காணும்படியே கருணை யுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு ''

(உண்மை விளக்கம்)

என்று கூறியவாறே ஆன்மாக்கள் அநாதியாகத்தொடர்ந்துள்ள பாசம் போக்கி முத்தியடைதற்பொருட்டு அருள்வடிவாகிய அம்மையார், அடியார்களுக்கு அருள்புரியப் பஞ்சாக்கர வடிவமாகிய ஆனந்தத் திருநடனத்தை இடப்பாகத்திலிருந்து தரிசிப்பர். இதனைச் சுவாமிகள் '' இவர் ஆடுமாறும் இவள் காணுமாறும் இதுதா னிவர்க்கொ ரியல்பே '' (4 - 8 - 3) என்று அருளியுள்ளமை காண்க,

உமைதழுவக் குழைந்தது : ‡

பெருமானும் பெருமாட்டியும் திருக்கயிலையில் வீற்றிருக்கும் பொழுது பெருமானின் கண்களைப் பெருமாட்டி தனது திருக்கரங்களாற் புதைத்தார். அதனல் உலகம் முழுவதும் இருள் சூழ்ந்து செயலற்றது. கைகளை எடுத்ததும் உலகம் ஒளிமயமாகி இலங்கியது. கண்ணை மூடியதற்குப் பிராயச்சித்தமாகத் தன்னை வழிபட வேண்டுமென இறைவன் அருளினன். அவ்வாறே காஞ்சீபுரத்தில் மாமரத்தடியில் வாழ்கின்ற பெருமானை நாள்தோறும் அம்மையார் பூசித்தார். ஒருநாள் இறையருளால் கம்பாநதி பெருக்கெடுத்தது. அதுகண்டு திகைத்த அம்மையார் செயலற்று இறைவனைத் தழுவிக்கொண்டார். அதனல் தழுவக் குழைந்த திருமேனியுடன் காஞ்சியில் காட்சிவழங்குகின்ருன் பெருமான். இவ்வரலாற்றை,

'' கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி
கொங்கையிணை அமர்பொருது கோலங்கொண்ட ''

‡ காஞ்சிப்புராணம் - தழுவக்குழைந்த படலம்.

Koviloor Digital Library

தழும்புளவே வரைமார்பில்" (6-4-10) என்பது முதலிய (4-96-7, 4-14-8) மற்றும் பல இடங்களிலும் சுவாமிகள் கூறியிருத்தல் காணலாம்.

காலனை உதைத்தது: †

கடகம் என்னும் நகரில் குச்சகர் என்னும் அந்தணர் வாழ்ந்தார். அவரது புதல்வர் கௌச்சிகர் (மிருககண்டுயர்) தந்தையின் வற்புறுத்தலால் விருத்தை என்பவளை மணந்தார். அவ்விருவரின் புதல்வரான மிருகண்டு மருத்துவதியை மணந்து மக்கட்பேறு இல்லாமல் வருந்திக் காசியை யடைந்து மணிகர்ணிகை என்னும் திருக்கோயிற்குச் சென்று பெருமானை வழிபட்டுத் தவம் இயற்றிப் பெருமானருளால் நற்குணங்கள் நிரம்பிய 16 வயதுடைய பிள்ளையைப்பெற்று மார்க்கண்டேயர் என்று அவருக்குப் பெயரிட்டார். 16 ஆவது வயது நெருங்குவதையறிந்து பெற்றோர் வருந்தினர். அதன் காரணம் அறிந்த மார்க்கண்டேயர் பெற்றோரைத் தேற்றிச் சிவபெருமானை நாள்தோறும் பூசனைகள் வழுவாது இயற்றிவந்தார். பதினாறும் வயது முடிந்தது. இயமன் வந்து அழைக்க வாராமையால் பாசத்தை வீசி இழுத்தான். பெருமான் "அஞ்சற்க" என்று கூறி இலிங்கத்தினின்றும் தோன்றி இடது பாதத்தால் இயமனை உதைத்தார். இயமன் இறந்தான், மார்க்கண்டேயர் என்றும் பதினாறு வயதுடையவரானார் நாயனார் இவ் வரலாற்றை,

"பாலனை யோடவோடப் பயமெய்து வித்த உயிர்
வவ்வுபாசம் விடுமக்
காலனை வீடுசெய்த கழல்போலும்" (4-14-6)

என்பது முதலாக மற்றும், (4-31-9, 4-49-2, 4-64-1. 4-100-2) பல இடங்களிலும் குறித்துள்ளமை காண்க.

காளி காண நடனமாடியது *

திருவாலங்காட்டில் காளி காண நடனமாடினார் பெருமான், ஆலமரங்கள் நிறைந்திருந்ததால் வந்த பெயரே திருவாலங்காடு என்பது. இவ்வனம் காளிக்கு உரியதாக இருந்தது. முஞ்சிகேச முனிவர், கார்க்கோடமுனிவர் இருவரும் இங்கு இருந்து இறைவனை

† கந்தபுராணம் - மார்க்கண்டேய படலம்.

* திருவாலங்காட்டுப் புராணம்.

Koviloor Digital Library

வழிபட்டனர். அவர்கட்காக இறைவன் ஆனந்த நடன மாடினுர். அப்பொழுது அங்குத் தாருகன் என்னும் அசுரனை அழித்துச் செருக்குற்றிருந்த காளிக்கும் நடராசப்பெருமானுக்கும் நடனத்தில் போட்டியேற்பட்டது. முடிவில் பெருமான் ஊர்த்துவ தாண்டவம் புரிந்தான். காளி நாணமுற்றுத் தோல்வியடைந் தாள். சுவாமிகள் இவ்வரலாற்றை "பைதற் பிணக்குறை காளிவெங் கோபம் பங்கப்படுப்பான் செய்தற்கரிய திருநடம் செய்தன" (4-100-2) என்று குறிப்பிடுதல் காண்க.

சலந்தரனைக் கொன்றது §

தேவேந்திரன் இறுமாப்புடன் கயிலையை அடைந்தான். பெருமான் பூதவுருவில் அவன் எதிரில் தோன்றினுன். இந்திரன் தனது வச்சிராயுதத்தைப் பூதத்தின்மீது எறிந்தான். பூதவுருக் கொண்ட பெருமான் தமது சீற்றத்தைக் காட்டி இந்திரன் வேண்டுகோட்படி, சினத்தைக் கடலில் விடுத்தார். அது குழந்தையுருவில் வளர்ந்தது. அக் குழந்தை ஜலத்தால் தாங்கப் பெற்றதால் சலந்தரன் எனப் பெயர் பெற்றது. சலந்தரன் பிரமனை வேண்டி வரம் பெற்றுத் தேவர்களைத் துன்புறுத்திப் பலரையும் வென்று கயிலைக்குப் போர்க்குச் சென்றனன். பெருமான் கிழவேதியராய்த் தோன்றி, 'எங்குச் செல்கின்ருய்' என வினவியறிந்து, பூமியில் வட்டமாகக் கோடுகிழித்து, இதைப் பெயர்த்து எடு என்று கூறினுர். அவ்வாறே பெயர்த்து எடுத்துத் தலையில் வைத்தான். அதுவே சக்கரமாகி அவன் உடலைக் கிழித்து அழித்தது. இப்புராண வரலாற்றை "நேமிவான் படையால் நீளுரவோன் ஆகங்கீண்டானை" (6-54-1) என்று சுவாமிகள் குறித்துள்ளார்கள்.

சிவபெருமான் நஞ்சுண்டது : ‡

தேவர்களும் அசுரர்களும் ஒன்றுசேர்ந்து போர்செய்கையில் இருவர் பக்கமும் எண்ணிலாதவர் இறப்பது கண்டு போரினை விடுத்தனர். பின்னர் அளவற்ற காலம் உயிர்வாழக் கருதி நான்முகன், திருமால் இவர்களை வேண்டி, அமுதுண்ணத் திருப்பாற்கடலை மந்தரமலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறுக வும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் கடைந்தனர். கடலைக்

§ கந்தபுராணம் ததீசியுத்தரப் படலம்.

‡ கந்தபுராணம் - ததீசியுத்தரப்படலம்.

Koviloor Digital Library

கலக்கக் கயிருகப் பயன்பட்ட வாசுகி பொறுக்கலாற்ருது விடத்தைக் கக்கியது. அதற்கு அஞ்சிய திருமால் முதலிய தேவர்கள் கயிலையில் வீற்றிருந்தருளும் கண்ணுதற்பெருமானை வேண்ட, பெருமான் அணுக்கத்தொண்டராகிய சுந்தரன் மூலம் விடத்தைக் கொணர்ந்து அருந்தி தேவர்களையும். உலகங்களையும் காத்தான். இதனைச் சுவாமிகள்

"வடங்கெழு மலைமத் தாக வானவர் அசுர ரோடு
கடைந்திட எழுந்த நஞ்சங் கண்டுபஃறேவ ரஞ்சி
அடைந்துநுஞ் சரணமென்ன அருள்பெரி துடைய ராகித்
தடங்கடல் நஞ்சம் உண்டார் சாய்க்காடு மேவி ஞரே"

(4-65-2) என்பது முதலாகப் பல இடங்களில் (5-53-6, 6-99-2) கூறியிருத்தலைப் படித்து இன்புறலாம்.

சிவபெருமான் வீணை வாசித்தது*

இறைவன் திருக்கயிலையில் வீற்றிருந்தருளியபொழுது தும்புரு, நாரதர், சுகர் முதலிய முனிவர்கள் இசையறிவையடையவும், சாமகீதத்தை வீணையிலிசைக்கவும் அருள்புரியவேண்டுமென வேண்டினர். அவ்வாறே இசையை அருள் புரியும் பெருமான், நால்வகை இசைக்குற்றத்தை யுண்டுபண்ணும் மரங்களை நீக்கி, நன்மரங்களால் செய்யப்பட்ட நால்வகை யாழ்களிலும் அவ்வவற்றுக்குரிய நரம்புகளைத் தொடுத்து எண்வகையான இசைகளைப் பாடவேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளினுர். அதற்கடையாளமாகத் தாமேயாழ் ஏந்தி இசையெழுப்பியருளினுர். இவ்வரலாற்றை நாயனுர் "தங்கையின் யாழும் வைத்தார் தாமரை மலரும் வைத்தார் (4-30-1) என்பது முதலிய பிற இடங்களிலும் (6-35-2, 4-112-7) கூறியுள்ளமை காணலாம்.

சிவபெருமான் தருமிக்குப் பொற்கிழியளித்தது: ‡

பாண்டிய நாட்டை ஆண்டுவந்த வங்கிய சூடாமணியென்னும் சண்பகமாறன், சண்பகத்தோட்டம் உண்டாக்கி மலர்களைச் சோமசுந்தரக் கடவுளுக்குச் சாத்துவித்து வந்தான். இளவேனிற் காலத்தில் ஒருநாள் அரசியுடன் சண்பக வனத்திற்குச் சென்றபொழுது புதிதாக ஒரு மணம் வீசுவதையறிந்து

* சிவபராக்கிரமம்.

‡ திருவிளையாடல் - தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்.

Koviloor Digital Library

இது தேவியின் கூந்தல் மணமே என்று உணர்ந்தான். பின்னர்த் தனக்கு ஏற்பட்ட ஐயத்தைப் பாடலால் நீக்கும் புலவர்க்கு ஆயிரம் பொன்னளிக்கப்படும் என்று சங்க மண்டபத்தில் பொற் கிழியைத் தொங்கவிட்டான். ஆதிசைவச் சிறுவனுகிய தருமி யென்பவன் திருமணத்தில் விருப்பமுடையவனுய், சோமசுந்தரக் கடவுளை வேண்டி, "கொங்கு தேர் வாழ்க்கை" என்று தொடங் கும் பாடலைப் பெற்று அரசனிடம் கொடுத்துப் பொற்கிழிக்கு உரியவனுனன். நக்கிரர், பாடலில் குற்றமுளது என்று கூறித் தடுத்தார். தருமியின் வருத்தத்தைப் போக்க இறைவனே புலவர் வடிவில் தோன்றி நக்கீரருடன் வாதிட்டு நெற்றிக் கண்ணினுல் வெப்பம் உண்டாக்கிப் பொற்றுமரையில் விழச் செய்து பொற்கிழியைத் தருமிக்குரியதாக்கினுர். இவ்வரலாற் றைச் சுவாமிகள் "நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக் கிழி தருமிக்கருளினேன் காண்" (6-76-3) என்று குறிப்பிடுதல் காண்க.

சிவபெருமான் சந்திரனைச் சடையில் தரித்தது †

அத்திரி முனிவரின் புதல்வன் சந்திரன். பிரமனது மானச புதல்வர்களில் ஒருவனுகிய தக்ஷன் தனது அசுவினி முதலிய நட்சத்திரங்களாகிய இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்கு மணஞ் செய்து வைத்து 'நீ இப்பெண்களிடத்தில் வேறுபா டின்றி அன்புகொள்ளவேண்டும்' என்று கூறி அனுப்பினுன். ஆனுல் சந்திரன் சிறிது நாளில் ரோகிணி என்ற பெண்ணிடம் மட்டுமே சிறந்த அன்புடையவனுய் மற்றவர்களைப் புறக்கணித் தான். அதனுல் வருந்திய பெண்கள் தன் தந்தையிடம் தெரிவிக் கவே, அவன் 'நாளுக்கொரு கலையாய்க் குறைந்து அழிவாய்' எனச் சந்திரனைச் சபித்தான்.

சாபத்தால் கலைகளை இழந்த சந்திரன் சிவபெருமானிடம் சென்று தன் குறையைப் போக்க வேண்டினுன். சிவபெருமான், எஞ்சியுள்ள ஒரு கலையைத் தனது சடைமுடியில் சூடி 'உனது கலைகளில் ஒன்று என் சடைமுடியில் இருத்தலால் நாளுக்கொரு கலையாக வளர்ந்தும், தக்ஷன் சாபத்தால் நாளுக்கொரு கலை யாய்க் குறைந்தும் இருப்பாய்' என்று அருளினுர். இவ்வர லாற்றைத் "திங்களைத் திகழவைத்தார் திசைதிசை தொழவும் வைத்தார்" என்பது (4-38-1) முதலிய பல இடங்களில் அருளியுள்ளமை காணலாம்.

† கந்தபுராணம்.

Koviloor Digital Library

சிவபெருமான் கங்கையைச் சடையில் தரித்தது *

சிவபெருமானின் கண்களை உமாதேவியார் விளையாட்டாகப் புதைத்தார். அதனால் உலகம் இருளில் மயங்கியது. ஆன்மாக்களுக்கருள்புரியப் பெருமான் தனது நெற்றியில் ஒரு கண்ணைத் தோற்றுவித்து ஒளியுண்டாக்கினான். இதையுணர்ந்த உமாதேவி பிரமித்துத் தனது இருகைகளையும் எடுக்கும்பொழுது அம்மையாருக்கு ஏற்பட்ட அச்சத்தால் பத்து விரல்களிலும் வியர்வு தோன்றிப் பத்து கங்கைகளாகிப் பெருக்கெடுத்து சமுத்திரத்திற்குச் சென்றன. உலகம் முழுவதையும் மூடிப் பரவுவதைக் கண்ட திருமால் முதலிய தேவர்கள் சிவபெருமானிடம் விண்ணப்பித்தனர். வேண்டுகோட்கிரங்கிய பெருமான் அவ்வெள்ளத்தை வருக என அழைத்துத் தனது திருச்சடையில் தரித்தார். பகீரதன் வேண்டுகோளால்வந்த கங்கையை அவன் வேண்டுகோட்கிரங்கிச் சடையில் தரித்தார் என்ற வரலாறும் சொல்லப்படுகிறது. இவ்வரலாற்றை, "தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேல்" (4-7-8) என்பது முதலாகிய பல இடங்களில் சுவாமிகள் கூறியிருத்தல் காண்க.

தக்கன் யாகத்தை அழித்தது : §

பிரமனது மானச புதல்வர்களில் ஒருவன் தக்கன். இவன் தவஞ்செய்து சிவபெருமானிடத்தில் உமையைத் தனது புதல்வியாகப் பெறவும், பெருமானை மருமகனாகப் பெறவும், வரம் வேண்டி அவ்வாறே பெற்றான். அதன்படித் தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்குத் தாக்ஷாயணி என்று பெயரிட்டுப் பெருமானுக்குத் திருமணஞ்செய்துவைத்தான். பின்னர்த் தனது மகளைப் பார்க்கக் கயிலைக்குச் சென்றபோது பூதகணங்களால் தடுக்கப்பட்டுச் சினமடைந்து மீண்டும் வந்து சிவபெருமானை நீக்கித் திருமால் முதலியவர்களைத் தலைவராக்கி யாகம் செய்தான். யாகத்திற்கு வந்த தனது மகளை வரவேற்காமல் இகழ்ந்தான். அதனால் பெருமான் வீரபத்திரரை அனுப்பி யாகத்தை அழித்தார். இப்புராண வரலாற்றைச் சுவாமிகள் "ஆமயந்தீர்த்தடியேனை யாளாக்கொண்ட" என்னுந் திருப்பதிகத்தில் (6-96-9) விளக்கமாகக் கூறியுள்ளார்கள்.

* சிவபராக்கிரமம்.

§ கந்தபுராணம் - யாக சங்காரப் படலம்.

Koviloor Digital Library

திருமால் சக்கரப்படை பெற்றது: ‡

குபன் என்னும் அரசன் காரணமாகத் ததீசி முனிவருடன் போரிட்டுச் சக்கரத்தை யிழந்த திருமால் பெருமானை வேண்டிப் பூசனை புரிந்தார். நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூக்களால் அருச்சித்து வழிபட்டார். அவரது அன்பை உலகவர்க்கறி விக்கத் திருவுளங்கொண்ட பெருமான் ஒரு நாள் ஒரு மலரை மறைவாக்கினர். அர்ச்சிக்குங்கால் ஒரு மலர் குறைந்ததால் தம் கண்ணைப் பறித்து மலராக இட்டு வழிபட்டார். அதனல் மகிழ்ந்த பெருமான் சலந்தாரசுரனைக்கொன்ற சுதர்சனமென்னும் சக்கராயுதத்தையும் கண்ணையும் அருளினர். இவ்வரலாற்றைச் சுவாமிகள்

"ஏறுடன் ஏழடர்த்தான் எண்ணிஆ யிரம்பூக்கொண்டு
ஆறுடைச் சடையினனை அர்ச்சித்தான் அடியி ணைக்கீழ்
வேறுமோர் பூக்கு றைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக்
கூறுமோர் ஆழி ஈந்தார் குறுக்கைவீ ரட்ட னரே"

(4-49-5) என்பது, முதலிய பல (4-14-10) இடங்களிலும் கூறியிருத்தல் காண்க.

திருமால் இரணியகசிபுவை அழித்தது. *

இரணிய கசிபு என்ற பெயருடைய அசுரன் சிவபெருமானை வேண்டித்தவமியற்றினன். அத்தவத்திற்கிரங்கிய பெருமானிடம் 'ஐம்பூதங்கள்' ஆயுதங்கள், வானவர், மானிடர், பறவை, விலங்கு முதலிய பிராணிகளால் இரவிலும், பகலிலும், இறவாவரம் வேண்டிப் பெற்ருன். தேவலோகம் முதலிய எல்லாவுலகங்களையும் வென்று தன்னையே கடவுளாக வணங்கவேண்டுமென ஆணை யிட்டான். அதனல் வருந்திய தேவர்கள் திருமாலிடம் வேண்டினர். திருமால் தனது ஒரு கூற்றை இரணியகசிபுவின் புதல்வனுகத் தோற்றுவித்தார். அப்புதல்வனுக்குப் பிரகலாதன் என்று பெயரிட்டுப் பள்ளியில் கல்விபயிலவைத்தான் இரணியகசிபு. ஆசிரியர் இரண்யாய நம: என்று கூறுவதைக் கேட்டும் தான் நாராயணுய நம: என்று கூறினன் பிரகலாதன்.

‡ சிவபராக்கிரமம்.

* பாகவதம்

Koviloor Digital Library

இதை யுணர்ந்த இரணியகசிபு சினந்து பிரகலாதனிடம் நீ கூறும் பரம்பொருள் எங்குளது என்று வினவ, இறைவன் தூணிலுமுளன் துரும்பிலுமுளன் என்று கூறினன் பிரகலாதன். அப்பொழுது இரணியகசிபு இந்தத் தூணில் "அவனைக்காட்டு என்று கையாலறைந்தான். திருமால் தூணினின்றும் நரசிங்க மாய்த் தோன்றி இரணியகசிபுவை அழித்தார். இவ்வரலாற்றைச் சுவாமிகள், " துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித் தொகுதிறலவ் விரணியனை ஆகங்கீண்ட அங்கனகத் திருமாலும்" (6-84-2) என்று கூறியருளியிருத்தல் காண்க.

திருமால் சேதுவில் வழிபட்டது §

திருமால் இராமனாக அவதரித்துச் சேதுவில் அணைகட்டி இலங்கை சென்று இராவணனைக் கொன்று திரும்பினன். இராவணன் சிவபூஜை செய்தவனாதலின் அவனைக் கொன்ற பழி (பாவம்) இராமனைத் தொடர்ந்தது. அதனால் அவன் சேதுவை அடைந்து சீதையுடன் இருந்து சிவலிங்கந் தாபித்து வழிபட்டான். பெருமான் அவனுடைய வழிபாட்டிற்கு இரங்கி அவனுடைய பழியைப் போக்கினன். இராமன் வழிபட்ட தலம் இராமேச்சுரம் என்று வழங்கப்படுகிறது. இவ் வரலாற்றைச் சுவாமிகள் "கடலிடை மலைகள் தம்மால் அடைத்துமால் கருமம் முற்றித், திடலிடைச் செய்த கோயில் திரு இராமேச்சுரத்தைத் தொடலிடை வைத்து நாவிற் சுழல் கின்றேன்" என்று (4-61-3) இது முதலிய பல இடங்களில் அருளியிருத்தல் காண்க.

நந்திக்கருளியது: *

சிலாதமுனிவருடைய திருப்புதல்வராகிய செப்பியேச்சுரர் திருவையாற்றில் ஐவகைத் தீர்த்தங்களால் அபிஷேகித்து வழி பட்டார். அதனால் மகிழ்ந்த பெருமான் மூன்றுவித தீக்ஷைகளும் திருவடி தீக்ஷையும் செய்து திருநந்திதேவர் என்னும் திருநாமம் சாற்றி சனற்குமாரருக்குத் திருநந்தி தேவரைக்கொண்டு சிவ ஞானோபதேசமுஞ் செய்வித்தார். பின்னர் நந்தியெம்பெருமான் திருக்கயிலாயம் செல்ல அங்குப் பெருமான் கயிலைமலைக்குக் காவ லுரிமையும் சிவகணங்களுக்குத் தலைமையும் அருளினர். நாயனர் பெருமானை "நந்திக்கருள்செய்தாய் நீயே யென்றும்" (6-41-5) என்று குறிப்பிடுதல் காண்க.

§ சேது புராணம்.

* திருவையாற்றுப்புராணம் - நந்திகேசச் சருக்கம்.

Koviloor Digital Library

பிரமன் தலையைக் கொய்தது : *

பிரமனும் திருமாலும் மேருமலையில் இருக்கும்பொழுது முனிவர்கள் சிலர் மும்மூர்த்திகளுக்கும் முதன்மையானவரும், அநாதியாயுள்ளவரும், உயிருக்குயிராய் உள்ளவருமாகிய கடவுள் யார் என்று வினவினர். இருவரும் தானே பரம்பொருள் என்று கூறிப் போர்விளைத்தனர். பெருமான் சோதிவடிவாய்த் தோன்றியருளினர். அதையுணர்ந்த திருமால் அகந்தை நீங்கிப் பெருமானை வணங்கினர். பிரமன் வணங்காது இகழ்ந்துரைத்தார். பெருமான் வைரவக் கடவுளை உண்டாக்கிப் பிரமனுடைய உச்சித் தலையைக் கிள்ளி ஏந்தச் செய்தார். இந் நிகழ்ச்சியை நாயனர் "அறுத்ததோர் கையுடையான் படைத்தான் தலையை" (4 - 93 - 3) "அறுத்திருந்த கையானுமந்தாரல்லியிருந்தானை யொருதலையைத் தெரிய நோக்கிக் கறுத்திருந்த கண்ட முடையான்" (6 - 15 - 10) என்று குறிப்பிடுகிறுர்.

புள்ளரசைக் கொன்றது : †

திருமால், திருக்கயிலை சென்று நந்திதேவர் அனுமதிப்படிப் பெருமானிடம் சென்று வழிபாடுசெய்துகொண்டிருந்தார். காலந் தாழ்ப்பதையறிந்த கருடன் தானும் உள்ளே செல்லமுயன்ற போது, நந்திபெருமான் தடுத்தார். அதனல் சினந்த கருடன் நந்திதேவரையும் பெருமானையும் இகழ்ந்தமையால் சினந்த நந்திதேவர் கருடன்மேல் நிசுவாச உசுவாசங்களைச் செலுத்தினர். அதனல் துன்புற்ற கருடன் திருமாலிடம் வேண்ட, திருமால் பெருமானிடம் வேண்டி உயிர்ப்பித்தார். இந்நிகழ்ச்சியை நாயனர் "புள்ளரசைக் கொன்றுயிர் பின் கொடுத்தார்" (6-53-8) என்று அருளியுள்ளமை காண்க,

மன்மதனை எரித்தது ‡

மன்மதன் திருமாலின் மனத்தில் உதித்தவன். இவன் உயிர்களுக்குக் காமத்தை விளைவிப்பவன். இவன் தேவியின் பெயர் இரதி. இவனுக்குக் கரும்பு வில்லாகவும், வண்டுகள் நாணகவும்,

* கந்தபுராணம் - ததீசியுத்தரப்படலம்.

† சிவபராக்கிரமம்.

‡ கந்தபுராணம் - காமதகனப் படலம்.

Koviloor Digital Library

தாமரை, அசோகம், மாம்பூ, முல்லை, நீலம் இவை அம்புகளாக வும், கயல்மீன் கொடியாகவும் மங்கையர்கள் சேனையாகவும். தென்றல் தேராகவும், இருள் யானையாகவும், கடல் முரசமாகவும், குயில் எக்காளமாகவும், சந்திரன் குடையாகவும் பயன்பட்டன, இவற்றால் இவன் உலகத்தவரை அடக்கியிருந்தான். சூரபன்மன் முதலிய அரக்கர்களால் துன்புற்ற தேவர்கள் முருகப்பெரு மானின் தோற்றத்திற்காக சிவபெருமான்மீது படையேவ இவனை அனுப்பினர். பெருமான் யோகத்திலிருக்கும்பொழுது தன்னிட முள்ள ஐந்து அம்புகளையும் ஏவினான். அதனால் பெருமான் சிறிதே கண்விழித்துப் பார்த்தவுடன் எரிந்து சாம்பலானான். சுவாமிகள் இவ்வரலாற்றை "கண்ணினாற் காமவேளைக் கனலெழ விழிப்பர்போலும்" (4-68-3) என்பது முதலிய பல இடங்களில் (6-8-4, 6-69-4, 4-102-5, 5-63-9) கூறியுள்ளமைபடித்தின்புறற் பாலது.

மாவலி சக்கரவர்த்தியானது ‡ (எலிவிளக்கேரித்தது)

திருமறைக்காட்டுத் திருக்கோயில் அர்த்தயாம வழிபாட் டிற்குப் பின் பெருமான் திருமுன் இருந்த திருவிளக்கு அணை யும் நிலையில் இருந்தது. இவ்விளக்கைத் தூண்டி யெரிய விடுபவர்க்கு மூவுலகாட்சியும் அளிக்கப் போகிறேன் எனப் பெருமான் பெருமாட்டியிடம் அருளினான். அப்பொழுது விளக் கில் இருக்கும் நெய்யை உண்ணவந்த எலி திரியைத் தள்ள விளக்கு சுடர்விட்டெரிந்தது. அதைக்கண்ட உமாதேவியார் இவ் வெலிக்கு மூவுலகாட்சி தரவேண்டுமென்று வேண்ட, அவ் வண்ணமே வரமருளினான் பெருமான். இவ்வரலாற்றை,

" நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக்கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும்விண்ணும் நீண்டவா னுலகம்எல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்டனாரே"

(4-49-8)

என்று, சுவாமிகள் கூறியிருத்தல் காணலாம்.

மாவலியை அழித்தது : *

மாவலி விரோசனன் என்னும் அசுரனுக்குப் பிறந்து யாகஞ் செய்து பல சிறப்புப்பொருள்களைப் பெற்று சுவர்க்கம் முதலிய

‡ * வேதாரண்ய புராணம் - மாவலிச் சருக்கம்.

Koviloor Digital Library

உலகங்களை வென்று அரசாண்டவன். தேவர்களுக்கு இடையூறு விளைவித்ததால் அவர்கள் வேண்டுகோட்கிணங்கிய பெருமான் திருமாலிடம் '' நம்வரத்தால் மூவுலகாட்சி புரியும் மாவலியைக் கொல்லாது தேவர்களின் துன்பத்தை நீக்குக '' என்று அருளினுர். அவ்வாறே காசிபரிடத்தில் மகனுகத் திருமால் வாமன உருவத்துடன் தோன்றி மாவலியிடம் சென்று மூன்றடி மண் இரந்து பெற்று ஈரடியால் மூவுலகங்களையும் பொருள்வலி முதலியவற்றையும் அளந்து மற்றும் ஓரடியைத் தலையில்வைத்து பாதாளவுலகில் பெருமானின் வாக்குப்படி சிறைவைத்தார். இவ்வரலாற்றை நாயனுர் '' மாவலிபால் காணிக்கு இரந்தவன் காண்டற்கரியன '' (4-108-1) என்று அருளியுள்ளார்.

முயலகனையடக்கியது : ‡

தாருகாவனத்து முனிவர்கள் சிவபெருமானைக் கொல்ல ஆபிசாரயாகஞ்செய்ய அதில் எழுந்த பூதன் முயலகன். இவன் சிவபெருமானிடம் தன் உக்கிரமான வடிவுடன் வர பெருமான் இவன் முதுகில் திருவடியூன்றி மிதித்து நடமாடியிடுப்பையொடித்தான். இவ் வரலாற்றை '' தருக்கழிய முயலகன்மேல் தாள் வைத்தானை '' (6-90-9) '' அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார் '' (6-96-3) என்று பல இடங்களில் சுவாமிகள் குறிப்பிடுதல் காண்க.

யானைத்தோல் போர்த்தது : *

யானை வடிவம்கொண்ட கயாசுரன் மேருமலையில் நான்முகனை நோக்கித் தவஞ்செய்து அழியாத ஆயுளையும், வலிமையையும் வேண்டினுன். நான்முகனும் நீ விரும்பும் வரம் தந்தோம்; ஆனுல் சிவனுக்கெதிரில் சென்ருல் உன்வரம் அழியும் என்று கூறிச் சென்ருர். எல்லாவுலகங்களையும் வென்று காசியில் உள்ள முனிவர்களைத் துரத்திச்சென்ருன் கயாசுரன். அவர்கள் மணிகர்ணிகை என்னும் ஆலயவாயிலை அடைந்து விசுவேசரை வணங்கினர். அப்பொழுது பெருமான் உக்கிரவடிவோடு தோன்றி, திருவடிகளால் மிதித்துத் திருக்கரங்களால் அவனுடைய தோலை உரித்துப் போர்த்தார். இவ்வரலாற்றைச் சுவாமிகள் '' விரித்த பல்கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை தரித்ததோர் கோல கால பயிரவனுகி வேழம் உரித்து'' (4-73-6) என்று குறிப்பிடுகிருர்கள்.

‡ * கந்தபுராணம் - ததீசியுத்தரப் படலம்.

Koviloor Digital Library

விநாயகர் கயாசுரனைக் கொன்றது *

விபுதையென்ற அரக்கர் குலப்பெண் வசிட்டர் மரபில் வந்த மரகத முனிவரை வேண்டித் தவமியற்றினுள். முனிவர் தவத்தி னின்றும் கண்விழித்துப் பார்க்கும்போது யானைகள் கலவி செய்வதைக் கண்டு காமக்குறிப்புடனிருந்தார். அதையறிந்த விபுதை அவர் அருகில் செல்ல அவளைப் பெண்யானையாக்கித் தான் ஆண்யானையாகிக் கலந்தார். யானை முகத்துடன் கயா சுரன் தோன்றி சிவபெருமானை வேண்டித் தவமியற்றி வரங்கள் பெற்று மதங்கபுரத்தில் அரசாண்டு தேவர்களை வருத்தினுன். தேவர்கள் வேண்டுகோட்கிணங்க விநாயகர் தமது கொம்பை ஏவி அவனை அழித்தார். பின்னர் அவன் அவருக்குப் பெருச்சாளி வாகனமாயினன். கயாசுரன் வரலாற்றை நாயனுர் '' கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும் கயாசுரனை யவனுற் கொல் வித்தார் போலும் '' (6 - 53 - 4) என்று குறிப்பிடுதல் அறிந்து மகிழ்தற்குரியது.

விருத்தகுமாரபாலரானது : †

விக்கிரம பாண்டியனின் ஆட்சிக்காலத்தில் மதுரையில் விரு பாக்கன் என்ற வேதியர் பிள்ளைப் பேறின்றி வருந்திச் சத்த மாதர்களை வேண்டிக் கௌரி என்ற ஒரு பெண் பெற்ருர். அது ஐந்து வயதில் தன் தந்தையிடம் பிறவியைப் போக்கும் மந்திரம் யாது என்று வினவியறிந்து உமாதேவியின் மந்திரத்தைச் செபித் தது. அதனுடைய 8-ஆம் வயதில் பிச்சைகேட்டுவந்த வைணவப் பிரமசாரிக்கு நீர் வார்த்துக்கொடுத்துத் திருமணம் செய்து அவனது ஊருக்கு அனுப்பி வைத்தார் வேதியர். அங்கு அவன் தாய்தந்தையர் கௌரியின் சிவவேடத்தைக்கண்டு வருந்தினர். ஒருநாள் தாங்கள் வேற்றூருக்குச் செல்லும்பொழுது கௌரியைத் தனியே வீட்டில் இருக்கச்செய்து உணவுப்பொருள் இருக்கு மிடத்தைப் பூட்டிச்சென்றனர். அப்பொழுது ஒரு வேதியர் வர, கௌரி அவரை வரவேற்று அவர் சொற்படி பூட்டில் கைவைத்துக் கதவைத் திறந்து உணவு தயாரித்துப் படைத்தாள். உண்ட வேதியர் காளைப் பருவத்துடன் தோற்றமளிக்கக் கண்டு அஞ்சி யாதுசெய்வதெனத் தெரியாமல் திகைத்தாள். அப்பொழுது வேற்றூருக்குச் சென்ற மாமன் மாமியர் வர காளைப்பருவத்தில்

* கந்தபுராணம் - கயமுகன் உற்பத்திப்படலம்.

† திருவிளையாடற்புராணம் - விருத்தகுமாரபாலரானபடலம்.

Koviloor Digital Library

இருந்த வேதியர் குழந்தை யுருக்கொண்டார். மாமன் மாமியர் இக்குழந்தை ஏது என்று வினவி குழந்தையுடன் கௌரியை வெளியில் அனுப்பிவிட்டனர். பெருமான் குழந்தையுருவம் நீங்கித் தம் திருவுருவம் காட்டிக் கௌரியைத் தம் இடப்பாகத்தில் ஏற்றுக்கொண்டார். இவ்வரலாற்றைச் சுவாமிகள் "விருத்த னுய்ப் பாலனுகி விரிநிலா எரிக்கும் சென்னி நிருத்தநானுர்" (4-22-9) என்பது முதலிய பல இடங்களில் (4-22-10, 4-43-2) கூறியருளியுள்ளார்கள்.

வெள்ளையானை வழிபட்டது: ‡

சூரபன்மன் முதலான அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நிகழ்ந்தபோது தந்தங்கள் ஒடியப்பெற்ற வெள்ளையானை (ஐராவதம்) திருவெண்காட்டை யடைந்து சிவலிங்கம் தாபித்து வழிபட்டது. பெருமான் அருளால் தந்தங்கள் மீண்டும் வளர்ந் தன. இவ்வரலாற்றை நாயனுர் "வித்தகத்தால் வெள்ளானை வில்லா அன்பு விரவியவா கண்டதற்கு வீடுகாட்டி" (6 - 83 - 6) என்று குறிப்பிட்டுள்ளார்.

நாயன்மார் வரலாற்றுக் குறிப்புக்கள்

அப்பூதி அடிகள் நாயனுர்: *

திருநாவுக்கரசு என்னும் திருநாமத்தையே மூலமந்திரமாகக் கொண்டு முத்தி எய்திய இவர் சோழமண்டலத்தில் திங்களூரில் அந்தணர் குலத்தில் அவதரித்துத் திருநாவுக்கரசு நாயனுரின் வரலாற்றைக் கேட்டறிந்து அவர்பால் பேரன்புகொண்டு, அவர் பெயரையே தம் மனைக்கண்ணுள்ள எல்லாப் பொருள்களுக்கும் தம்மக்களுக்கும் வைத்து வழங்கினுர்.

திங்களூருக்கு எழுந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகள், இச் செய்தியைக் கேள்வியுற்று, அப்பூதியடிகள் இருக்குமிடம் சென்று, "உம்பெயரால் தண்ணீர்ப் பந்தல் வையாமல் வேறொருவர் பெயரால் தண்ணீர்ப் பந்தல் வைத்த காரணம் யாது" என வினவினுர்- அப்பூதியடிகள், அப்பரடிகளை அறியாமல், "சமண சமயத்தினின்றும் நீங்கிக் கல்லைத் தெப்பமாகக்கொண்டு கடலைக்

‡ கந்தபுராணம் - அமரர் சிறைபுகு படலம்.

* பெரியபுராணம்.

Koviloor Digital Library

கடத்த அவர் பெயரினும் வேறுபெயர் சிறப்புடையதோ?சைவராக இருந்தும் இவ்வாறு கேட்கும் நீர் யார் என்றார். திருநாவுக்கரசு சுவாமிகளோ, "சமண் சமயத்தினின்று கரையேற இறைவனுல் சூலை கொடுத்து ஆட்கொள்ளப்பெற்று உய்ந்த சிறுமையேன் யான்" என்றார். அதுகேட்டு அப்பூதியடிகள் ஆனந்தக்கடலில் மூழ்கி அடிபணிந்து திருவமுது செய்யவேண்டி இசைவு பெற்றார்.

பின்னர், திருவமுது பரிமாறத் தமது மூத்த குமாரனை இலை கொணர ஏவினர். மூத்த குமாரர் வாழைஇலை யறுக்கும்போது அரவு தீண்ட, அடியவர் திருவமுதுக் கிடையூறு ஆமெனக் கருதி இலையைத் தாயிடம் கொணர்ந்து கொடுத்து மயங்கி வீழ்ந்தார். அப்பூதியடிகள், குமாரரது உடலை மறைத்து, சுவாமிகளைத் திருவமுதுக்கு அழைக்க, சுவாமிகள் திருநீறு அளிக்குங்கால், மூத்த திருநாவுக்கரசு எங்கே என வினவி நிகழ்ந்தது அறிந்து,திருவருள் நாடி "ஒன்றுகொலாம்" என்னும் திருப்பதிகம் அருளி, உயிர்ப்பித்து அப்பூதியடிகள் வேண்ட அமுதுண்டு சென்றார். பின்னர் அப்பூதியடிகள் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவடி தொழுது இறையடிநீழல் அடைந்தார். அப்பூதியடிகளார் திருநாவுக்கரசர் திருவடியே சிந்தித்து வாழ்ந்தார் என்பதைச் சேக்கிழார் சுவாமிகள்

"அப்பூதி அடிகளார்தம் அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை விரும்பு சொன்மாலை வேய்ந்த
இப்பூதிபெற்ற நல்லோர் எல்லையில் அன்பால் என்றுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக்கரசர் பாதம்"

என்று குறிப்பிடுகிறார்கள்.

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளை, "அஞ்சிப் போய்க்கலி மெலிய அழலோம்பும் அப்பூதி, குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்" (4-12-10) என்று அகப்பொருள் துறையமையப்பாடும் திருப்பழனத் திருப்பதிகத்தில் குறிப்பிடுதல் ஓர்ந்து உணரத் தக்கது.

அமர்நீதி நாயனர் : *

இவர் சோழவள நாட்டில் பழையாறை நகரில் வணிகர் குலத்தில் அவதரித்துத் திருமடம் ஒன்றமைத்து நாள்தோறும்

* பெரியபுராணம்.

Koviloor Digital Library

அடியவர்களுக்கு அமுது செய்வித்து அவர்கள் கருத்தறிந்து கீளுடை கோவணம் உதவி வந்தார். இவரது பெருமையை உலக வர்க்கு அறிவிக்கத் திருவுளங்கொண்ட பரமன் ஒரு சிவனடியார் போல் வந்தார். அமர்நீதி நாயனர் முகம் மலர்ந்து கடிது வந்து எதிர்வணங்கி இங்கமுது செய்தருளும், எனவேண்டினர். வணங்கிய அன்பரை நோக்கி இக்கோவணத்தைப் பாதுகாப்பாக வைத்திரும்; நீராடி வருவேன் என்று கூறிக் கொடுத்துச் சென்று மீண்டு வந்து கேட்கையில் அக்கோவணத் தைக்காணுது திகைத்தவராய் வேறு கோவணம் தருகின்றேன் எனப் புகன்றர் நாயனர். அதுகேட்ட வேதியரும் முன்கொடுத்த கோவணத்திற்கொத்த கோவணம் வேறென்றுளது. அதற்கு ஒத்தது உன்னிடம் உளதேல் நிறுத்துத்தருக எனக் கூறிக் கோவணத்தை நிறையிடவைத்தார். தம்மிடமுள்ள கோவணம் நிறைக்குச்சரியாக இல்லாமையால் தம்மிடமுள்ள எல்லாப் பொருள்களையும் வைத்தார். அவையும் நிறைக்குச்சரியில்லாமற் போகவே, தாமும் மனைவி மக்களுடன் அஞ்செழுத்து ஓதி ஏறி நின்றர். கோவணமும், அடியவர் அடிமைத்தொண்டும் ஒத்த லால் நேர் நின்றது துலை. பெருமானும் காட்சி வழங்கினர். அமர் நீதி நாயனர் வரலாற்றில் சேக்கிழார் அவரது திருத் தொண்டின் சிறப்பை அழகாக எடுத்துக்கூறுகின்றர். "சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதொன்றில்லார், அந்திவண்ணர்தம் அடியவர்க் கமுது செய்வித்துக் கந்தை கீளுடை கோவணம் கருத்தறிந்துதவி, வந்த செல்வத்தின் வளத்தினல் வரும் பயன் கொள்வார்". இவரை இறைவன் ஆட்கொண்ட திறத்தைச் சுவாமிகள் திருநல்லூர்த் திருப்பதிகத்தில் கூறும் திறம் கண்டு மகிழத்தக்கது.

"கீட்கொண்ட கோவணங் காஎன்று சொல்லிக் கீறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடும் அங்கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்கு மன்றேஇவ் வகலிடமே"
(4-97-7)

கணம்புல்ல நாயனர் *

இவர், இருக்கு வேளூரில் அவதரித்து சிவாலயத்துள் விளக்கெரிக்கும் திருப்பணி புரிந்து செல்வம் குறைய திருத் தில்லைநகர் சென்று தமது வீட்டில் உள்ள எல்லாப் பொருள் களையும் விற்றுத் திருப்பணிசெய்து வந்தார். பொருள் முட்டுப் படவே கணம்புல்லையரிந்து விற்று அதனல் கிடைக்கும் வருவா

* பெரியபுராணம்.

Koviloor Digital Library

யைக்கொண்டு திருப்பணி செய்தார். ஒருநாள் அப்புல்லும் விலைபோகாமையால் அப்புல்லையே விளக்காக எரித்து அதுவும் போதாமையால் தமது சிகையை எரித்துப் பெருமானருளால் முத்தி யெய்தியவர். இவர் இருவினையறுத்த ஏற்றத்தை, "...தந்திருமுடியை என்புருக மடுத்தெரித்தார் இருவினையின் தொடக்கெரித்தார்" என்று குறிப்பிடுகிறார் சேக்கிழார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்குறுக்கை வீரட்டத்துத் திருப்பதிகத்தில் "கணம் புல்லர்க்கருள்கள் செய்து" (4-49-9) என்றும், திருக்கழிப்பாலைத் திருப்பதிகத்தில் "எண்ணிறைந்த குணத்தினாலே கணம்புல்லன் கருத்துகந்தார்" (6-12-7) என்றும் கூறியுள்ளமை உணரத்தக்கது.

கண்ணப்ப நாயனார் : *

இவர் பொத்தப்பி நாட்டு உடுப்பூரில் வேடர் தலைவனாகிய நாகன் என்பவனுக்கு மகனாகப் பிறந்து திண்ணன் என்ற பெயருடன் வளர்ந்தார், காடன், நாணன் என்ற இருவருடன் காட்டில் பன்றி யொன்றை வேட்டையாடிக் களைத்து நீர்வேட்கை யால் பொன்முகரியாற்றங்கரைக்குச் சென்றார். அங்குள்ள காளத்திமலையைக் கண்டு காடனிடம் பன்றியைப் பதப்படுத்து மாறு கட்டளையிட்டு நாணனுடன் மலைமீது சென்று காளத்தி யப்பரைத் தரிசித்து மனங்கசிந்து பூசனை புரிய எண்ணினார். பின்னர், மலைமீதிருந்து கீழிறங்கி பொன்முகரியாற்று நீரை வாயி லும், மலர்களைப் பறித்துத் தலையிலும், சுவைத்துப் பார்த்த பன்றியிறைச்சியைக் கையிலுமாக எடுத்துக்கொண்டு சென்று வாயிலுள்ள நீரால் அபிஷேகித்துத் தலையிலிருந்த பூக்களைச் சூட்டி, இறைச்சி முதலிய வுணவுகளைத் திண்ணனார் உண்பித்தார். நாணன், காடன் இருவரும் வலிந்தழைத்தும் திரும்பாதது கண்டு திண்ணனின் தந்தையிடம் கூற அவனும் வந்து அழைத்துப் பயனின்றித் திரும்பினான். நாடோறும் சிவ பூசனைபுரியும் சிவகோசரியார் வந்து பார்த்து வருந்தி சம்பு ரோக்ஷணம் செய்து பூசனை முடித்துச் சென்று வருத்தத்துடன் துயிலும் பொழுதில் கனவில் "திண்ணனாரின் செயல்களைக்கூறி வழக்கம்போல் பூசனை முடித்து மறைந்திருந்து அவரது அன்பினைப் பார்க்க" என்று அருளினான் இறைவன். அவ் வண்ணமே சிவகோசரியார் பூசனையை முடித்து மறைந்திருந் தார். வழக்கம்போல் திண்ணனார் பூசனையியற்ற வந்தார்.

* பெரியபுராணம்.

Koviloor Digital Library

பெருமானின் வலக்கண்ணில் உதிரம் சோர்ந்தது கண்டு மனம் பதைத்தார். பலவகை மூலிகைச்சாறுகளினாலும் அது நிற்கா திருக்கக்கண்டு தமது கண்ணைத் தோண்டி அப்பியதும் நின்றது கண்டு மகிழ்ச்சிக்கடலில் திளைத்தார். பின்னர் இடக் கண்ணி லிருந்தும் உதிரம் சோர்வதைக் கண்டு தமது மற்றொரு கண்ணை யும் தோண்டி அப்ப முயன்றார். அது பொழுது "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப, என்னன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று திருவாய்மலர்ந்து தடுத்துத் தமது வலப்புறமிருக்கும் பேறளித்தான் இறைவன்.

பெரியபுராணத்தில்இறைவன் சிவகோசரியாருக்குத்திண்ண னாரின் (கண்ணப்பரின்) அன்பைக் கூறும் பகுதி படித்தின்புறத் தக்கது.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வாறறி நீ என்றருள் செய்வார்"

திருநாவுக்கரசு சுவாமிகள் கண்ணப்பரின் வரலாற்றையே தமது திருப்பாடல்களில் சுருக்கமும் அழகும் தோன்றக் குறிப் பிடுகின்றார். திருக்குறுக்கை வீரட்டத் திருப்பதிகத்தில்

"காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர் இறைச்சிப்பாரம்
தோற்பெருஞ் செருப்புத்தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெறும் கண்கள் செய்யகுருதிநீர் ஒழுகத்தங்கண்
கோப்பதும் பற்றிக்கொண்டார் குறுக்கை வீரட்டனாரே.
(4 - 49 - 7)

என்றும், திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகத்தில் "குவப்பெருந் தடக்கை வேடன் —" என்றும், திருக்கழிப்பாலைத் திருத் தாண்டகத்தில்" "கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்" (6 - 12 - 6) என்றும், திருமழபாடித் திருத்தாண்டகத்தில் "கண்ணப்பர்க்கருள் செய்த காளைகண்டாய்" (6-39-9) என்றும் குறிப்பிடுகின்றார்,

கோச்செங்கட்சோழ நாயனார் †

சோழநாட்டில் சந்திரதீர்த்தத்திற்கு அருகாமையிலுள்ள சோலையில் வெண்ணாவல்மரத்தின்கீழ் உள்ள சிவபெருமானை

† பெரியபுராணம்.

Koviloor Digital Library

யானை ஒன்று வழிபட்டது. அதனால் அவ்வூர் திருவானைக்கா என வழங்கிற்று. அவ்விலிங்கத்தின்மீது சருகுகள் விழாமல் சிலந்தி ஒன்று தன் வாய்நூலால் பந்தல் அமைத்து வழிபட்டது. அப்பந்தலை யானை அநுசிதம் என்று அழித்தது. சிலந்தி மீண்டும் பந்தல் அமைத்தது. மறுநாள் வழிபடச்சென்ற யானை அதை அழித்தது. சினந்த சிலந்தி யானையின் துதிக்கையில் புகுந்தது. யானை கையைத் தரையில் புடைக்கச் சிலந்தியும் யானையும் இறந்தன. இறையருளால் சிலந்தி சோழர் குலத்தில் கோச்செங்கட்சோழனாய்த் தோன்றியது. செங்கணான் அரசாளுகையில் முன்னுணர்வு பெற்றுத் திருவானைக்காவிலும் மற்றும் பல இடங்களிலும் திருக்கோயில்கள் எடுப்பித்துச் செங்கோலாட்சி புரிந்து தில்லைக் கூத்தப்பெருமானைத் தொழுது திருவடி சேர்ந்தார்.

இவரதுவரலாற்றைச் சுவாமிகள்பல இடங்களிலும் எடுத்துச் சிறப்பித்திருத்தல் காணலாம். திருக்குறுக்கைத் திருப்பதிகத்தில் ' சிலந்தியும், ஆனைக்காவில் திருநிழற்பந்தர் செய்து. உலந்தவன் இறந்தபோதே கோச்செங்கணானுமாகக், கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள், குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்டனாரே '' என்பது (4-494, 4-62-9, 4-65-3, 6-20-5, 6-23-3, 6-65-6, 6-75-8, 6-83-6) முதலிய பல இடங்களிலும் கூறியுள்ளமை வரலாற்றிற்கு உரிய மூலங்களாக உள்ளன.

சண்டேசுவர நாயனார் *

சோழநாட்டுத் திருச்சேய்ஞலூரில் அந்தணர் குலத்தில் எச்சதத்தன் என்பவருக்கு அவதரித்து, விசாரசருமர் என்ற பெயருடன் வேதம் முதலியன உணர்ந்து சிவபக்தியுடையவராய் இருந்தார். ஒருநாள் இடையன் ஒருவன் பசுக்களை மேய்க்க ஓட்டிச்செல்லும்பொழுது ஒரு பசுவைக் கோலால் அடிக்கக் கண்டு பொறாது இடையனுக்குப் பசுவின் தன்மைகளை எடுத்துக் கூறித் தானே பசுக்களை மேய்க்கத் தொடங்கினார். பசுக்கள் விசாரசருமரிடம் மிக்க அன்புடையனவாய்த் தாமே பாலைச் சொரிந்தன. இதைக்கண்ட விசாரசருமர் மண்ணியாற்றங்கரையில் மணலால் சிவலிங்கம் எடுத்துப் பாலைக் குடத்தில் பிடித்து அபிஷேகித்து வந்தார்.

* பெரியபுராணம்.

Koviloor Digital Library

இந்நிகழ்ச்சியை ஒருவன் கண்டு பசுக்களுக்குரியவர்களிடம் தெரிவித்தான். அவர்களும் எச்சதத்தனிடம் குறைகூறினர். மறுநாள் தாமே நேரில் காண எண்ணியவனாய் எச்சதத்தனும் விசாரசருமர் பசுக்களை ஓட்டிச் செல்லும் பொழுது மறைந்து சென்று ஒரு மரத்தின்மீது ஏறி மறைந்திருந்தான். நாள்தோறும் செய்வதுபோன்று வழிபாடு செய்வதைக் கண்ட எச்சதத்தன் சினந்து கோல்கொண்டு புடைத்து, பாற்குடத்தைக் காலால் இடறினான். திருவருளில் தோய்ந்து திளைத்திருந்த விசாரசருமர் அருகிருந்த கோலை எடுத்தார்; அதுவே மழுவாக மாறிற்று; அம்மழுவால் தந்தையின் தாளை எறிந்தார். விசாரசர்மர்க்கு இறைவன் காட்சிகொடுத்துத் தொண்டர்க்கு நாயகமாந் தன்மையும் சண்டீசர்பதமும் அளித்தார். இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார்,

" அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிபனாக்கி அனைத்துநாம்
உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம்பதந்தந்தோம்என்றங்கவர்பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றை மாலைவாங்கிச் சூட்டினார் "

என்று குறிப்பிடுகிறார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருஆப்பாடித் திருப்பதிகத்தில்,

" அண்டமார் அமரர்கோமான் ஆதிஎம் அண்ணல்பாதங்
கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாபரத்தைக்
கண்டவன் தாதைபாய்வான் காலற எறியக்கண்டு
தண்டியார்க் கருள்கள்செய்த தலைவர் ஆப் பாடியாரே "

(4-48-4)

என்பது முதலிய பல இடங்களிலும் (4-49-3, 4-65-6, 4-73-5, 5-2-4, 6-18-10) கூறுவது கண்டு மகிழத்தக்கது.

சாக்கிய நாயனார் *

இவர் திருச்சங்க மங்கை கிராமத்தில் வேளாளர் குலத்துதித்து நன்ஞானம் அடைவதற்குரியவழியை நாடுவாராய்க் காஞ்சியை அடைந்தார். அங்கு சாக்கியர்தம் அருங்கலைநூல் ஓதி, அகச்சமயங்களும், புறச்சமயங்களும் பொருளில்லை என உணர்ந்து, சிவநன்னெறியே பொருளாவது என்றுணர்ந்தார்.

* பெரியபுராணம்.

Koviloor Digital Library

'எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும், மன்னிய சீர்ச்சங்கரன் தாள்மறவாமை பொருள்' என்றுணர்ந்து சிவத்தை மறவாது, தான்கொண்ட வேடத்தைத் துறக்காமல் சிவலிங்கம் கண்ட பின்னரே உண்ணுவது என்ற முடிவில் சிவலிங்கம் கண்டு யாது செய்வதென அறியாது பக்கத்திலிருந்த கல்லை எடுத்து எறிந்தார். இவ்வாறு நாள்தோறும் தவறாது செய்து வரும் நாளில் ஒருநாள் மறந்து உண்ண முற்பட்டவர் நினைந்து கல்லெடுத்து எறிந்து முத்தியெய்தியவர். இவரது வரலாற்றில் சேக்கிழார் இந்நிகழ்ச்சியை,

" கல்லாலே எறிந்ததுவும் அன்பானபடி காணில்
வில்வேடர் செருப்படியுந் திருமுடியின் மேவிற்றால்
நல்லார்மற் றவர் செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்பார் அரனார்க்கஃதலராமால் "

என்று குறிப்பிடுகிறார்.

சுவாமிகள் திருக்குறுக்கை வீரட்டத் திருப்பதிகத்தில்,

" கல்லினால் எறிந்து கஞ்சிதாமுணும் சாக்கியனார்
நெல்லினாற் சோறுணாமே நீள் விசும்பாள வைத்தார் "
(4-49-6)

என்றும், திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில் "புத்தன் மறவாதோடி எறிசல்லி புதுமலர்கள் ஆக்கினான்காண்" (6-52-8) என்றும் குறிப்பிடுதல் காண்க.

திருஞானசம்பந்தர் : †

சைவசமயாசாரியர்களுள் முதல்வராகிய இவ்வருளாளர் சோழ நாட்டில் சீகாழியில் கௌணியர் குலத்தில் சிவபாத இருதயருக்கு மகவாக அவதரித்தார். தமது மூன்றாவது வயதில் பிரமதீர்த்தத்தில் நீராடச் சென்ற தந்தையாருடன் சென்று அங்கு நீரில் அகமருஷண ஜபம் செய்யும் தந்தையைக்காணாது அழுதார். உயிர்த்தந்தையாகிய பெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளி சிவஞானத்துடன் திருமுலைப்பால் ஊட்டச் செய்தார். தந்தையார் நீராடி வந்து யார் கொடுத்த எச்சிற்பாலை உண்டாய், எனக் கோல்கொண்டு ஓச்சிவினவ "தோடுடைய செவியன்"

† பெரியபுராணம்.

Koviloor Digital Library

என்னுந் திருப்பதிகம் பாடித் தமக்குப்பால் கொடுத்தருளிய பெருமானைச் சுட்டிக் காட்டினர். அதுமுதல் பலதலங்களுக்கும் சென்று திருப்பதிகம் பாடிப்பரவி பல அருட்செயல்கள் புரிந்தார்,

திருவீழிமிழலையில் பஞ்சம், ஏற்பட்டபோது அடியார் துயர் துடைக்கத் திருவுளங்கொண்ட பெருமான் திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞான சம்பந்தர் இருவருக்கும் படிக்காசு அருளினர். சம்பந்தர்க்கு அளித்த காசு வாசியுடைய தாயிருக்க "வாசிதீரவே காசு நல்குவீர் " என்ற திருப்பதிகம்பாடி வாசி யில்லாக்காசு பெற்ருர். இந்நிகழ்ச்சியைத் திருவாய்மூர்த் திருப் பதிகத்தில் "பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு, வாடிவாட்டந் தவிர்ப்பாரவரைப்போல்" என்றும் திருவாய்மூரில் பெருமான் காட்சிகொடுத்ததை,

" திறக்கப்பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப்பாடி அடைப்பித்தார் உந்நின்ருர்
மறைக்கவல்லரோ தம்மைத் திருவாய் மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே"

என்றும் குறித்துப்பாடியுள்ளார்.

மேலும் சிவபாத இருதயர் வேள்விக்காகத் திருவாவடுதுறையில் பொன்வேண்டிப் பெற்ருர் ஞானசம்பந்தர். அந்நிகழ்ச்சியைச் சுவாமிகள், "மாயிருஞாலமெல்லாம்" என்று தொடங்கும் ஆவடுதண்டுறைத் திருப்பதிகத்தில் 'கழுமலவூரர்க் கம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனுரே' என்று குறிப்பிடுதல் காண்க.

நமிநந்தியடிகள் நாயனுர் : *

இவர் சோழநாட்டு ஏமப்பேரூரில் தோன்றி சிவத்தொண்டு புரிந்தவர். திருவாரூரில் புற்றிடங்கொண்டாரை வணங்கி மாலைக் காலத்தில் அருகில் இருந்த வீட்டில் சென்று விளக்கெரிக்க எண்ணெய் வேண்டி நின்ருர். அவ்வீடு சமணர் வீடாயிருந்த மையின் அவர்கள் நாயனுரிடம் உங்கள் பெருமான்கையில் தீயிருப்பதால் விளக்கெரிக்கத் தேவையில்லையே என்றும், வேண்டுமாளுல் தண்ணீரை ஊற்றி விளக்கு எரிய விடும்' என்றும் கூறினர். அது கேட்டு வருந்திய அடியவர், பெருமான்

* பெரியபுராணம்.

Koviloor Digital Library

சந்நிதியில் முறையிட, பெருமான் அசரீரியாகத் திருக் குளத்து நீரை ஊற்றி விளக்கெரிக்கச் சொல்ல. அதன்படி விடியு மளவும் திருவிளக்குத் திருப்பணி புரிந்து வந்தார். ஒரு நாள் வீதிவிடங்கப் பெருமான் பவனி வருகையில் உடன் சென்று. மீண்டு வந்து பலருடன் சென்று வந்ததால் உட்புக மனமில்லா மல் தமது வீட்டின் புறத்தே துயின்ருர். இறைவன் கனவில் “திருவாரூர்ப் பிறந்தாரனைவரும் நமது சிவகணங்கள்” என்று கூறக்கேட்டு இல்லின் உள்ளே சென்று சிவார்ச்சனை செய்து பொழுதுவிடிந்தபின் திருவாரூர்ப்பிறந்தாரனைவரையும் சிவ கணங்களாகக் கண்டு தரிசித்தார். நம்பிநந்தியடிகள் என்ற பெயரே நமிநந்தியடிகள் என மாறி வழங்கும் என்பர்.

இவ்வரலாற்றை நாயனர், தொண்டன் நம்பி நந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீணடறியுமன்றே” (4-102-2) என்பது முதலிய பல இடங்களில் (4-102-4, 6-33-4, 4-102-9) குறிப்பிடுதல் காண்க.

முடிவுரை :

நம் தமிழ்நாட்டில் தத்துவக் கருத்துக்களைப் பரப்ப எழுந் தனவே புராணங்கள் என்று கூறலாம். அவை எளிய மக்களும் படித்து இன்புறும் வகையில் அமைந்துள்ளன. அதனல் அவற் றைப் படிப்பவர்கள் தத்துவக் கருத்துக்களை அறிவதோடு கடவு ளுணர்ச்சியையும் இனிது பெறுகிருர்கள். அத்தகைய புராணக் கருத்துக்களை. அப்பர் சுவாமிகள் தமது அனுபவத்தின் பிழிவாக எழுந்த தோத்திரப் பாமாலையாகிய தேவாரத் திருப்பதிகங்களுள் ஆங்காங்கு எடுத்துக் கூறியருளிப் பொருள் விளக்கம் புரிந்துள் ளார்கள். அதனல் அத்தேவாரத் திருப்பதிகங்கள் ஒட்பமும் திட்பமும் நுட்பமும் உடையவையாய்த் திகழ்கின்றன. அப்பர் சுவாமிகள் கூறியருளிய சில புராண வரலாற்றுக் குறிப்புக்கள் இக்கட்டுரையில் நம் சிந்தனைக்குரியவாயின. அப்புராண வரலாறு களையும், தேவாரத் திருப்பதிகங்களையும் படித்து அவற்றிலுள்ள தத்துவக் கருத்துக்களையறிந்து, கடவுளுணர்வைப் பெற்று உய்தல் அனைவர்க்கும் உரியதாயினும், இறைவன் பொருள்சேர் புகழையே இனிது விளக்கும் இக்குறிப்புக்களினூடே இலங்கும் திருவருட் பெற்றியறிந்து தெளிவு பெறல் கற்றறிந்த மாந்தர் கடனகும்.

Koviloor Digital Library

உ
சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறு

[அகச்சான்றுகளுடன்]

திருநெறிச்செம்மல்,
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்
தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

" திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திரு நாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்."
— திருத்தொண்டத்தொகை

திருவவதாரம் :

திருமுனைப்பாடி நாட்டில் தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாமூர் என்னும் ஊரில் வேளாண் மரபில் குறுக்கையர் குடியில் புகழனர் மாதினியார் இருவரும் இணைந்து இல்லறம் நடத்தி வந்தனர். இவ்விருவர்க்கும் திருமகளாய்த் திலகவதி யாரும், சில ஆண்டுகள் கழித்து மருணீக்கியாரும் உலகில் அலகில் கலைத்துறை தழைப்பவும் அருந்தவத்தோர் நெறிவாழ வும் திருவவதாரம் செய்தனர். பெற்றோர் உரிய நாளில் மருணீக்கியாரைப் பள்ளியில் அமர்த்திக் கலைபயிலச் செய்தனர். எல்லாக் கலைகளையும் திறம்பெறக் கற்றுத் தேர்ந்தார் மருணீக் கியார். திலகவதியார்க்கு வயது பன்னிரண்டு தொடங்கி நடை பெற்றது.

பெற்றோர் தம்மகளார்க்குத் திருமணம் செய்விக்க எண்ணி னர். அவ்வேளையில். குலம், குணம், ஆண்மை, அரன்பால் அன்பு, உரு, திரு ஆகியன ஒருங்குவாய்க்கப்பெற்றவராய் விளங் கிய கலிப்பகையார் திலகவதியாரைத் திருமணஞ் செய்துகொள்ள விரும்பிப் பெரியோர் சிலரைப் புகழனர் பால் அனுப்பினர். கலிப்பகையாரின் பண்புகளை அறிந்து பெற்றோரும் இசை வளித்தனர். பெரியோர்கள் இம்மகிழ்வுச் செய்தியைக் கலிப் பகையார்க்கு அறிவித்தனர்,

Koviloor Digital Library

திருமணம் நிகழ்வதற்குள் வடநாட்டு மன்னர் சிலரின் படை எழுச்சி காரணமாகத் தமிழ்நில மன்னன் ஒருவன் பேராற்றல் மிக்க கலிப்பகையாரைச் சேனைத் தலைவராக்கிப் படைகளுடன் வடபுலம் செல்ல விடுத்தனன். நீண்டநாள் போர் நடந்தது. இவ்வாறு கலிப்பகையார் போரில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் புகழனார் விண்ணுலகடைந்தார். கற்புநெறி வழுவாத அவர் தம் மனைவியாரும் சுற்றமொடு மக்களையும் துகளாகவே நீத்துக் கணவனாருடன் சென்றார். பெற்றோரை இழந்த திலகவதியாரும் மருணீக்கியாரும் ஆற்றொணாத் துயரில் அழுந்தினர். இந்நிலையில், போர்மேற் சென்ற கலிப்பகையாரும் போர்க்களத்தில் பூத உடல் நீத்துப் புகழுடம்பெய்தினர். இச்செய்தியைக்கேட்டுத் திலகவதியார் திடுக்கிட்டார். 'என் தந்தையும் தாயும் என்னை அவர்க்குக் கொடுக்க இசைந்தார்கள். அந்த வகையால் அவர்க்கே நான் உரியவள்; ஆகையால் இந்த உயிரை அவர் உயிரோடு இசைவிப்பேன்' என்று கூறி உயிர்விடத் துணிந்தார். மருணீக்கியார் தமக்கையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிப் புலம்பினர். 'தந்தையாரை இழந்தபின் தங்களை வணங்கப் பெறுதலால் யான் இதுகாறும் உயிர் தரித்திருக்கிறேன். இந்நிலையில் என்னைக் கைவிட்டுத் தாங்கள் பிரிவீராயின் தங்களுக்கு முன் நான் உயிர் துறப்பேன்' என்று உறுதிமொழிந்தார்.

தமக்கையார் தவநிலை :

தம்பியின் மனக்கலக்கம் திலகவதியாரின் மனத்தை மாற்றியது. 'தம்பியார் இவ்வுலகில் உளராகவேண்டும்' என்று எண்ணித் தம் முடிவை மாற்றிக்கொண்டார். அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும அருள் தாங்கி மனையின்கண் இருந்து மாதவம் பெருக்கி மருணீக்கியாரைப் பேணி வளர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டார்.

மருணீக்கியாரும் துயர் நீங்கி மகிழ்வுற்றார். வயது ஏற ஏற உலகியல் அறிவும் நன்கு வாய்க்கப்பெற்றார். உலகின் நிலையாமையை எண்ணி அறப்பணி மேற்கொண்டு அறச்சாலை, தண்ணீர்ப்பந்தர், சோலை, குளம் முதலிய அமைத்தார். வருந்தி வந்தோர்க்கு வேண்டியன ஈந்தார்; விருந்துபுரந்தந்தார். புலவரைப் போற்றினர். சமயங்களின் நன்னெறியினைத் தெரிந்துணர்தற்கு எண்ணினர். சிவபெருமானருள் செய்யாமையால் கொல்லாமை என்னும் நல்லறப் போர்வையில் உலவிய சமண சமயத்தைச் சார்ந்திட எண்ணினர்.

Koviloor Digital Library

தருமசேனராதல் :

அக்காலத்தில் சமணம் மேலோங்கியிருந்தது. சமண முனிவர்கள் பாடலிபுத்திரம் போன்ற பகுதிகளில் தங்கித் தம் மதம் பரப்பிவந்தனர். பள்ளிகளும் பாழிகளும் அமைத்துக் கொண்டு பல்லவமன்னன் மகேந்திரவர்மன் ஆதரவில் சமண சமயத்தினைப் பரவச்செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். மருணீக்கியார் பாடலிபுத்திரம் வந்தார். சமணரின் பள்ளியைச் சார்ந்தார். சமண முனிவரும் தங்கள் தர்க்கவாதத் திறமையால் தங்கள் சமயமே மெய்ச்சமயம் என்றுகூறி அவர் அறிவைமருட்டித் தங்கள் மதத்தில் ஈடுபடுத்தினர். மருணீக்கியாரும் அம்மத நூல்களில் வல்லவரானார். அதுகண்ட சமணரும் 'தருமசேனர்' என்னும் சிறப்புப் பெயர் அளித்து அவரைப் பாராட்டினர். தரும சேனராகிய மருணீக்கியாரும் புத்தருள் தேரரை வாதில்வென்று சமண் சமயத் தலைவராய் விளங்கிவந்தார்.

சூலை மடுத்து ஆட்கோள்ளல் :

மனையில் இருந்து தவம்பெருக்கிவந்த திலகவதியார், தம்பி புறச்சமயம் சார்ந்த செய்தி கேட்டு மனம் புழுங்கினார். சுற்றத் தொடர்புவிட்டுத் தூயசிவ நன்னெறி சார்ந்து பெருமான் திருவருள்பெற விரும்பித் திருவதிகைவீரட்டானம் அடைந்து சிவசின்னம் அணிந்து திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல் மாலை புனைதல் முதலான திருப்பணிகளை மேற்கொண்டு இறைவன் திருவருளைப் போற்றிவந்தார். தீவினைத் தொடர்பால் தம்பி புறச்சமயம் சார்ந்ததை எண்ணி வருந்தி அதிகைப் பெருமான் திருமுன் நின்று 'என்னை ஆண்டருளினீராகில் அடியேன் பின் வந்தவனைப் புறச்சமயப் படுகுழியினின்றும் எடுத்தாளவேண்டும்' என்று விண்ணப்பம் செய்துவந்தார். பெருமான் திலகவதியார் கனவில் தோன்றி 'உன்னுடைய மனக்கவலையை ஒழி உன்தம்பி முன்னமே முனியாகி எனை அடையத் தவம் முயன்றவன். அவனை சூலைநோய் தந்து ஆட்கொள்வோம்' என்று அருள்செய்து மறைந்தனன். அவ்வண்ணமே சூலைநோய் தருமசேனர் வயிற் றிடைச் சென்று பற்றியது.

மருணீக்கியாரைப்பற்றிய சூலை வடவைத்தீயும், வச்சிரப் படையும், நஞ்சும் கூடி வருத்தினாற்போலத் துன்பந்தந்தது. தருமசேனர் நடுங்கித் தனியறை ஒன்றில் மயங்கி விழுந்தார். சமண் சமயத்தில் தாம் கற்ற மந்திரங்களால் அந்நோயைத் தடுக்கமுயன்றும் அந்நோய் தணியாது மேலும் மேலும் முடுகி

Koviloor Digital Library

வருத்தியது. தருமசேனரின் துயர்கண்ட சமணர் நெஞ்சழிந் தனர். குண்டிகை நீரை மந்திரித்துக் குடிக்கச் செய்தனர். பீலி கொண்டு தடவினர். இயன்றன அனைத்தும் செய்து ஓய்ந் தனர். இவற்றிற்கெல்லாம் நோய் மேலும் அதிகரித்ததே ஒழியக் குறையவில்லை. 'ஐயோ இனி என்செய்வது' என்று கலங்கி அமணர் அனைவரும் கைவிட்டகன்றனர்.

சூலை நோயினல் சோர்வுற்ற தருமசேனர்க்குத் தம் தமக்கை யாரின் நினைவு வந்தது. தமக்கு அடிசில் அமைப்பவனை அருகில் அழைத்துத் தமக்கையாரிடம் நிலைமையைச் சொல்லி வரும்படி அனுப்பினர். அவனும் அவ்வாறே திருவதிகை வந்து நந்த வனத்திற்கு மலர்கொய்யச் செல்லும் திலகவதியாரைக்கண்டு வணங்கி 'நும்முடைய தம்பியாரின் ஏவலினல் இங்கு வந்தேன்' என்றனன். அதுகேட்ட அம்மையார் 'தீங்குளவோ' என வினவினர், அவனும் 'சூலைநோய் உயிரைமட்டும் போக்காமல் நின்று குடரை முடக்கித் துன்புறுத்தலால் அமணரெலாம் கைவிட்டகன்றனர், இச்செய்தியைத் தங்கட்குச் சொல்லிவிட்டு இருளாகும் நேரத்திலேயே திரும்பி வருமாறு என்னை அனுப்பி ஞர்' என்று கூறி நின்றனன். அது கேட்ட திலகவதியார், 'நன்றறியா அமண்பாழி நண்ணேன்' இதை அவனிடம் சொல், என மறுமொழிகூறி அனுப்பினர். அவனும் தருமசேனரிடம் சென்று தமக்கையார் கூறியதை அறிவித்தான்,

தமக்கையார் மறுமொழி கேட்டுத் தருமசேனர் சோர்வுற்ருர். இறையருள் கைகூட "இப்புன்சமயத் தொழியாத என் துன்பம் அழியத் திலகவதியார் திருவடிகளை அடைவேன்" என்று எண் ணினர். அவ்வளவிலேயே சிறிது நோய் குறைவதாக உணர்ந் தார். குண்டிகை, பீலி, பாய் முதலியவற்றை உதறி எறிந்து வெள்ளிய ஆடை உடுத்து உண்மைப் பணியாளன் ஒருவனைத் துணைக்கொண்டு நள்ளிரவில் சமண் பாழிகளைக் கடந்து திருவதிகையை அடைந்து திலகவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து 'நம்குலம் செய்த நற்றவத்தின் பயன் அனையீர்! உய்ந்து கரையேறும் உபாயம் அருள்க' என வேண்டினர்.

திருநாவுக்கரசராதல் :

திலகவதியார் தம்பியை நோக்கி இறைவன் திருவடிகளை எண்ணித் தொழுது 'குறிக்கோளில்லாத புறச்சமயப் படுகுழியில் விழுந்து துயருழந்தீர் எழுந்திரீர்' என மொழிய, அவ்வாறே எழுந்து தொழுத மருணீக்கியாரைப் பார்த்துத் திலகவதியார்,

Koviloor Digital Library

'சூலைநோய் வருதற்குக்காரணம் இறையருளேயாகும்; தன்னைச் சரணடைந்தாரைக் காக்கும் சிவபெருமானை வணங்கிப் பணிசெய்வீராக' என்று பணித்துத் திருவதிகைத் திருக்கோயிலினுட் புகுதற்குத்தகுதி உடையராகும்படித் திருவைந்தெழுந்தோதித் திருவெண்ணீறளித்தனர். திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப் பெருவாழ்வு வந்ததென மகிழ்ந்து மருணீக்கியாரும் வாங்கித் தரித்துக்கொண்டு தமக்கு உய்யும் நெறிதரும் தமக்கையார்க்குப் பின் தாமும் புறப்பட்டார்.

மருள் நீக்கியாரின் அகத்திருள் நீங்குமாறு புறத்திருள் நீங்கிப்பொழுது புலர்ந்தது. திலகவதியார்தொண்டு புரியத் திருவலகு திருமெழுக்கு தோண்டி முதலியகொண்டு திருக்கோயிலுட் புகுந்தார். தமக்கையார் பின் சென்ற மருள் நீக்கியார் திருக்கோயிலினுட் சென்று வலஞ்செய்து நிலமிசை வீழ்ந்து இறைஞ்சினர். இறைவன் திருவருளால் தமிழ்மாலை சாத்தும் உணர்வுவர, சூலையும் மாயையும் நீங்கும் பொருட்டுக் "கூற்றாயின வாறு" என்று தொடங்குந் திருப்பதிகம் அருளிச் செய்தார்.

திருப்பதிகம் பாடும்பொழுதே சூலைநோய் நீங்கியது. சிவபெருமான் திருவருட்கடலில் மூழ்கித் திளைத்தார். கண்களில் ஆனந்தவெள்ளம் பெருகத் தம்மைப் புறச்சமய இருளிலிருந்து மீட்டருளிய சூலைநோய்க்கு நன்றிதெரிவித்துத் திருவருள் இன்பத்தில் திளைத்துநின்றூர். இவ்வேளையில் யாவரும் வியப்பவானிடை இறைவன் திருவாக்கு எழுந்தது 'செந்தமிழ்ச் சொல்மலராலாகிய பாமாலை பாடிய தன்மையால் நின்பெயர் 'நாவுக்கரசு' என உலகேழினும் வழங்குக' என்றெழுந்த அருள்மொழி கேட்டு 'இப்பெருவாழ்வு அடைதற்குரியதோ' என வியந்து இராவணனுக்கும் அருள்செய்த இறைவனது வள்ளன்மையைப் பாடுவதையே கடமையாகக்கொண்டு அதிகைப்பெருமானை வணங்கிப் போற்றினூர்.

இவ்வாறு மருள்நீக்கியார் இறைவன் திருவருள்பெற்றுத் திருநாவுக்கரசராகப் புறச்சமய இருள்நீக்கப் புறப்பட்டதை எண்ணி உலகம் மகிழ்ந்தது. திருநாவுக்கரசர் சிவச்சின்னங்கள் அணிந்து உழவாரப்படை ஏந்தி, முக்கரணங்களாலும் பக்தி செய்ய முற்பட்டார்.

"நாமார்க்கும் குடியல்லோம்"

திருநாவுக்கரசர் சிவநெறி சேர்ந்தசெய்தி சமணர் செவிகட்கு எட்டியது. தம் சமயத்தை நிலைநிறுத்திவந்த தருமசேனர்

Koviloor Digital Library

'சைவம் சார்ந்து ஒருவராலும் நீக்கமுடியாத சூலைநோய் நீங்கப் பெற்ருர்' என்பதைஉலகம் அறியின். நம்மதம் அழியும், என்றஞ்சி னர். மன்னனுக்கு இச்செய்தியை மறைத்து மொழிந்தனர். 'தருமசேனர் தம் தமக்கையார் மேற்கொண்டிருக்கும் சமயத்தைச் சார விரும்பிச் சூலைநோய் வந்ததாகப் பொய்கூறிச் சைவராய் நம் மதத்தையும் கடவுளரையும் இழித்துரைக்கின்ருர்' என்று பொய்ச்செய்தி சித்திரித்து மெய்யுரைபோல் வேந்தனிடம் விளம்பினர். இத்தகைய குற்றத்திற்குத் தரப்படும் தண்டனை யாதென அவர்களையே வினவினுன் அரசன். 'நன்ருகத் தண்டித்து ஒறுக்கவேண்டும்' என்றனர் சமணர். மன்னவன் அமைச்சரை வரவழைத்துத் திருநாவுக்கரசரைத் தம்மிடம் அழைத்துவருமாறு அனுப்பினுன். அமைச்சரும் திருநாவுக்கரசரிடம் சென்று அரசன் ஆணையை அறிவித்து நின்ருர்கள். திருநாவுக்கரசர் 'சிவபெருமானுக்கே மீளா ஆளாய் அவன் திருவடிகளையே சிந்திக்கும் நாம் யார்க்கும் அடங்கிவாழும் எளிமையுடையோமல்லம். நமன் வரினும் அஞ்சோம்' என்னும் பொருள் பொதிந்த தொடக்கத்தை உடைய நாமார்க்கும் குடியல்லோம் என்று தொடங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகப் பதிகம் பாடியருளினர்.

நீற்றறை குளிர்ந்தது :

அமைச்சர் அரசதண்டத்திலிருந்து நாங்கள் உய்யுமாறு தாங்கள் எழுந்தருளவேண்டுமென வேண்டினர் திருநாவுக்கரசரும் 'ஈண்டு வரும் துயர்கட்கு இறைவனுளன்' என்னும் உறுதியோடு அரசன் முன் அடைந்தார். அரசன் சமணர்களைக் கலந்தாலோசித்து நீற்றறையிலிடுமாறு அவர்கள் கூறியபடியே தண்டனை விதித்தான். அவ்வாறே, ஏவலர் சிலர் அடிகளை நீற்றறையிலிட்டுத் தாளிட்டனர். நாவுக்கரசர் பெருமான் திருவடி நிழலைத் தலைமேற்கொண்டு சிவபெருமானைத்தியானித்து இனிதே இருந்தார். வெய்ய அந்நீற்றறை நிலவொளி, தென்றல், யாழிசை தடாகம் இத்தனையும் கூடிய இளவேனிற் பருவத்து மாலைக்காலமாய் இன்பம் செய்தது ஏழு நாட்கள் சென்றன. சமணர்கள் நீற்றறையைத் திறந்து பார்த்தனர். சிவானந்த வெள்ளத்தில் மூழ்கி அம்பலவாணரின் திருவருள் அமுதுண்டு எவ்வகை ஊனமும் இன்றி வீற்றிருந்த திருநாவுக்கரசரைக் கண்டு அதிசயித்தனர், வியந்தனர்.

நஞ்சும் அமுதாயிற்று :

பிறகு சமணர்கள் ஒன்றுகூடி மன்னனிடம் சென்று 'நம் சமயச்சார்பில் பெற்ற சாதகத்தால் இவன் சாவாது பிழைத்திருக்

Koviloor Digital Library

கின்ருன். இனி விடம் ஊட்டுவதே தரத்தக்க தண்டனே என்று கூறினர். அரசனும் இசைந்தனன். கொலபாதகத்திற்கும் அஞ்சாத அக்கொடியோர் விடங்கலந்த பாற்சோற்றைத் திருநாவுக்கரசர்க்கு அளித்து உண்ணும்படிச் செய்தனர். 'எம் பிரான் அடியார்க்கு நஞ்சும் அமுதாம்' என்றுகூறி அதை உண்டு எவ்விதத் தீங்கும் அடையாமல் விளங்கினுர் அடிகள். திருப்பாற் கடலில் தோன்றிய ஆலகாலவிடம் சிவபெருமானுக்கு அமுதமாக ஆயிற்று. அவனடியார்க்கு நஞ்சு அமுதாயிற்று.

மதயானே பணிந்தது:

நஞ்சும் இவனுக்கு அமுதாயிற்று. இவன் பிழைப்பானுகில் இனி, நமக்கு இறுதி வருவது உறுதி என்றெண்ணி முன்போல் அரசன்பாற் சென்று 'நம் சமயத்திற் கற்ற மந்திர வலிமையால் உயிர் பிழைத்தான், அவன் இறவாதிருந்தால் எங்கள் உயிரும் நும் அரசாட்சியும் அழிவது திண்ணம்,' என்று கூறினர். மத யானேயை விடுத்து இடறச்செய்வதே தண்டனே என்று தீர்மானிக் கப்பெற்றது. குன்றுபோல் விளங்கிய மதயானே கூடத்தை விட்டுப் புறப்பட்டது. பயங்கரமான அந்த யானே திருநாவுக் கரசரை இன்று காலால் இடறிச் சிதறிவிடும் என்றே எல்லோரும் எண்ணினர். திருநாவுக்கரசர் 'சுண்ணவெண் சந்தனச்சாந்தும்' என்று தொடங்கித் திருப்பதிகம்பாடி யானே யுரித்தபிரான் கழல்போற்றியிருந்தார். மதயானே மும்முறை வலம்வந்து வீழ்ந்து வணங்கித் தன்னே ஏவிய பாகரையும் சமண ரையும் மிதித்துக் கொன்று சென்றது.

கல் மிதந்தது:

யானேக்குத் தப்பி ஓடிய சமணர் மன்னவனிடம் சென்றனர். பலவாறு வீழ்ந்து புலம்பினர். பல்லவனும் இனி என்செய்வது என்று வினவினுன். அவன் அழிந்தால்தான் நம் அவமானம் தீரும்; எனவே கல்லோடு கட்டிக் கடலில் தள்ளுவதே வழி என்று சமணர் கூறினர். அவ்வாறே பல்லவனும் பணித்தான். கொலே யாளர்களும் திருநாவுக்கரசரைக் கல்லோடு பிணேத்துக் கடலில் தள்ளித் திரும்பினர்.

உண்மைத் தொண்டின் உறைப்புடைய திருநாவுக்கரசர் எந்தை பிரானேயே ஏத்தி இறைஞ்சுவன் என்று கூறிச் 'சொற் றுணே வேதியன்' என்று தொடங்கித் திருவைந்தெழுத்தின் பெருமையைத் திருப்பதிகத்தால் அருளிச் செய்தார். இருவினேக்

Koviloor Digital Library

கயிறுகளால் மும்மலக் கல்லில் கட்டிப் பிறவிப் பெருங்கடலில் போடப்பெற்ற உயிர்களைக் கரையேற்றவல்ல திருவைந்தெழுத்தின் பெருமையால் கல் தெப்பமாகக் கடலில் மிதந்தது. கயிறு அறுந்தது. கடல் மன்னனாகிய வருணன் திருநாவுக்கரசரை அலைகளாகிய கைகளால் திருமுடிமேல் தாங்கிக்கொண்டுவந்து திருப்பாதிரிப்புலியூர் என்னும் தலத்தின் பக்கத்தில் கொண்டு வந்து சேர்த்தான்.

திருப்பாதிரிப்புலியூரில் உள்ள சிவனடியார்கள் இச்செய்தி கேட்டு மகிழ்ந்தனர். எல்லோரும்கூடி அரஹர முழக்கம் செய்து திருநாவுக்கரசரை வரவேற்றனர். திருநாவுக்கரசர் அடியார் கூட்டத்தோடு திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமானை ''ஈன்றாளுமாய்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தால் போற்றிப் பரவினார். அத்தலத்திலேயே சிலநாள் தங்கியிருந்தார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் திருவதிகை செல்லும் விருப்பமுடையவராய்த் திருமாணிகுழி, திருத்தினை நகர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருவதிகையை அடைந்தார்.

சமணர் இழைத்த துன்பங்களிலிருந்து திருவருளால் மீண்டு கடலில் கல்லே தெப்பமாகக் கரையேறிய திருநாவுக்கரசர் திருவதிகை எழுந்தருளுவது கேட்டு மக்கள் மகிழ்வோடு சிறந்த முறையில் அவரை வரவேற்றனர். '' தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் நாயகன் சேவடி தைவரும் நெஞ்சும் நைந்துருகிப் பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்மேய செவ்வாயும் உடையராய்'' திருநாவுக்கரசர் அடியார் புடைசூழ திருவதிகைத் திருவீதியுள் புகுந்து திருக்கோயிலை அடைந்து ''வெறிவிரவு கூவிளம்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிப் போற்றினார். சிலநாள் திரு அதிகையிலேயே தங்கி உழவாரப்பணி செய்துகொண்டிருந்தார்.

குணபரஈச்சரம் :

சமணர் தூண்டுதலால் தீவினை செய்த பல்லவவேந்தன் தன் பழவினைப் பாசம் நீங்க திருவதிகை வந்து திருநாவுக்கரசரை மன்னிப்புவேண்டிப் பணிந்தான். சைவனாக மாறினான். பாடலிபுத்திரத்திலிருந்த பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துக் கொணர்ந்து திருவதிகையில் 'குணபரஈச்சரம்' என்ற பெயரில் திருக்கோயில் எடுப்பித்தான்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசர் சிவதல யாத்திரை செய்து திருப்பதிகம் பாடித் திருத்தொண்டு செய்ய விரும்பினர். திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலான தலங்களுக்குச் சென்று திருப்பதிகம் பாடித் திருப்பெண்ணுகடம் அடைந்தார்.

இடபக்குறி சூலக்குறி பேற்றது :

திருப்பெண்ணுகடத்துத் தூங்கானைமாடம் என்னும் திருக்கோயிலில் உள்ள பெருமானைப் பணிந்து சமண் சமயத் தொடக்குண்ட உடல் தூய்மைபெற இடபக்குறி சூலக்குறி பொறித்தருள வேண்டினர். "பொன்னர் திருவடிக்கு" என்று தொடங்கித் திருவடிக்கு விண்ணப்பமும் தெரிவித்தார். இறைவன் திருவருளால் சிவபூதம் ஒன்று வந்து திருநாவுக்கரசர் தோள்களில் இடபக்குறி சூலக்குறி பொறித்தது. திருநாவுக்கரசர் சிவபிரான் திருவருளை வியந்து மகிழ்ந்து உய்ந்தேன் என்று பணிந்தார். சிலநாள் தங்கி உழவாரப்பணி செய்து சுடர்க் கொழுந்திசனைப் பாடிப் பரவினர்.

பிறகு, திருநாவுக்கரசர் திருவரத்துறை, திருமுதுகுன்றம் முதலான தலங்களைத் தரிசித்து நிவா நதியின் கரைவழியாகக் கடந்து தில்லையம்பதியை அடைந்தார். தில்லையில் பறவைகளும் சிவநாம முழக்கம் செய்வது கேட்டு இன்புற்று சிவனடியார் பலரும் வரவேற்க சிவமே நிலவும் திருவீதியை அடைந்து திருக்கோயிலுக்குள் புகுந்தார். தில்லையம்பலத்தில் திருநடம் புரியும் பெருமானைப் பணிந்து தெவிட்டாத இன்பம் பெற்ருர். கைகளைத் தலைமேல் குவித்து, கண்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிய, கரணங்கள் உருக வீழ்ந்து எழுந்து என்று வந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பைப் போற்றி 'கருநட்ட கண்டனை', 'பத்தனய்ப் பாடமாட்டேன்' 'அன்னம்பாலிக்கும்' முதலான திருப்பதிகங்களால் பரவிப் பணிந்தார். தில்லையில் சிலநாள் தங்கித் திருவேட்களம், திருக்கழிப்பாலை முதலான தலங்களைத் தரிசித்து உழவாரப்பணி செய்து இன்புற்ருர்.

சம்பந்தர் சந்திப்பு 1 :

தில்லையில் திருநாவுக்கரசர் தங்கியிருந்த பொழுது சீகாழிப் பதியில் சிவபெருமானது திருவருளால் உமையம்மை தம் திருமுலைப்பாலோடு சிவஞானங்குழைத்தூட்ட உண்டு, 'இவர்

Koviloor Digital Library

எம்பெருமான்' என்று சுட்டிக்காட்டி ஏழிசை இன்தமிழ்ப்பாமாலை பாடிய திருஞானசம்பந்தரின் சிறப்பினை அடியார்கள் சொல்லக் கேட்டு, அவரது திருவடிகளை வணங்குதற்குப் பேரவாக்கொண்டு சீகாழிக்குப் புறப்பட்டார். திருநாரையூர் முதலான தலங்களை வணங்கிக்கொண்டு சீகாழிக்குவிரைந்தார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசர் வருகையைக்கேட்டு எதிர்கொண்டழைத்தார். திருநாவுக்கரசர் அன்புப்பெருக்கால் திருஞானசம்பந்தரைவணங்கினுர். திருஞானசம்பந்தர் கைகளைப்பற்றிக்கொண்டு தாமும் வணங்கி 'அப்பரே' என்று அழைக்க, நாவுக்கரசரும் 'அடியேன்' என்ருர். மகிழ்ச்சியால் இருவர் உள்ளமும் இணைந்து இதயங் கலந்து திருத்தோணியப்பர் தம் திருக்கோயிலை அடைந்தனர். அருட்கடல் அன்புக்கடல், சைவநெறிபெற்ற புண்ணியக் கண்கள் இரண்டு, சிவபிரானது அருளும் அன்னை அருளும், இவைகளின் இணைப்பை இவ்விருவர் கூட்டுறவு அன்பர்கட்கு நினைவுறுத்தியது. திருக்கோயிலுக்குள்சென்ற அடியவர் இருவரும் பெருமானைப் பணிந்தெழுந்தனர். சம்பந்தர் அப்பர் பெருமானைப்பார்த்து 'நீர் உங்கள் பெருமானைப் பாடுவீராக' என்ருர். அப்பரும் ஆனந்தம் மேலிட்டுப் "பார்கொண்டுமூடி" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடியருளினுர். பல நாட்கள் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரோடு உடனுறைந்து பிரியாவிடை பெற்ருர். சம்பந்தரும் திருக்கோலக்காவரை உடன்சென்று வழியனுப்பினுர்.

அப்பர், ஞானசம்பந்தரிடம் விடைபெற்றுக்கொண்டு கருப்பறியலூர், புன்கூர், நீடூர், குறுக்கை முதலிய தலங்களையும் செம்பொன்பள்ளி மயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவாவடுதுறை, திருவிடைமருதூர் முதலிய தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருச்சத்திமுற்றத்திற்கு எழுந்தருளினுர்.

திருவடிதீக்ஷை :

திருச்சத்திமுற்றத்துப் பெருமானுகிய சிவக்கொழுந்தீசனைப் பணிந்து 'கோவாய்முடுகி' என்று தொடங்கி கூற்றம் குமைப்பதன் முன் பூவார் அடிச்சுவடு என்தலைமேற் சூட்டியருளுக' என்று திருவடி தீக்ஷை செய்யுமாறு வேண்டினர். சிவக்கொழுந்தீசர் 'நல்லூருக்கு வருக' என்று அருளிச்செய்தார். அவ்வருள் வாக்குக் கேட்ட அப்பரடிகள் மகிழ்ந்து நன்மை பெருகும் அருள் வழியே, நல்லூரை அடைந்து பெருமானை வணங்கி எழுந்தார். 'நினைப்பதனை முடிக்கின்ரேம்' என்று அருளி அப்பரடிகள் திருமுடிமேல் பெருமான் திருவடி சூட்டியருளினுன். "நினைந்துருகும் அடியாரை" என்று தொடங்கி இறை அருளை வியந்து

Koviloor Digital Library

"நனைந்தனைய திருவடி என்றலைமேல் வைத்தார் நல்லூர் எம் பெருமான்" என்றுபாடிப் பரவி மகிழ்ந்து பலநாள் அங்குத் தங்கிச் சிவதல தரிசனங்கள் பலவும் செய்து இன்புற்றார்.

அப்பூதி அடிகள் :

நல்லூரிலிருந்து நாவுக்கரசர் விடைகொண்டு திருப்பழனம் முதலான தலங்களைத் தரிசித்துத் திங்களூரை வந்தடைந்தார். திங்களூரில் அந்தணரில் மேம்பட்ட அப்பூதி அடிகள் என்பார் திருநாவுக்கரசர் பெருமையைக் கேள்வியுற்று சாலை, குளம், கிணறு, தண்ணீர்ப்பந்தல் முதலான தருமங்களைத் திருநாவுக் கரசர் பெயரால் அமைத்தும், புதல்வர்களுக்கு அவர் பெயரையே வைத்தும் பக்தி செய்தார். இவற்றை அறிந்த திருநாவுக்கரசர் அப்பூதிஅடிகள் திருமனையை அடைந்தார். அடியார் ஒருவர் வந்துள்ளார் என்று அப்பூதிஅடிகள் வணங்கி வரவேற்றார். திருநாவுக்கரசர் அப்பூதிஅடிகளைப் பார்த்து 'நீர்செய்து வரும் அறப்பணிகளைக்கண்டும் கேட்டும் இங்கு வந்தோம். நீர்செய்த அறப்பணிகளில் நும்பேர் எழுதாது வேறொரு பேர் எழுதிய காரணம் யாது?' என்றுகேட்டார். அவ்வளவில் அப்பூதிஅடிகள் திருநாவுக்கரசர் பெயரையா வேறொரு பெயர் என்றீர்! அவர் தம் பெருமையை அறியாதார் யார்? மங்கலமாம் சிவவேடத்துடன் இவ்வாறு மொழிந்தீரே நீர் யார்? என்று வெகுண்டு கேட்டனர். திருநாவுக்கரசர் அப்பூதிஅடிகளாரின் அன்பின் திறம் அறிந்து 'இறைவன் சூலைதந்து ஆட்கொள்ள அடைந்துய்ந்த தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான்' எனப் பணிமொழி புகன்று தம்மை அறிமுகம் செய்துகொண்டார். அவ்வுரை கேட்ட அப்பூதிஅடிகள் தம்குல தெய்வமே எழுந்தருளினரென பெரு மகிழ்ச்சிகொண்டு மனைவி மக்கள் உற்றார் மற்றோர் எல்லோரை யும் அழைத்துவந்து வணங்கச்செய்து தாமும் வணங்கித் தம் இல்லத்தில் திருவமுது செய்தருளும்படி வேண்டினர். அப்பர் பெருமானும் அதற்கு இசைந்தருளினர்.

விடந்தீர்த்தது :

அறுசுவை அடிசில் தயாராயிற்று. தம் மூத்தமகனராகிய மூத்த திருநாவுக்கரசை அழைத்துத் திருவமுது படைக்க வாழைக் குருத்து அரிந்து வருமாறு அனுப்பினர். மூத்ததிருநாவுக்கரசும் தமக்கு இப்பணி கிடைத்ததே என்னும் பெருமகிழ்வோடு விரைந்துசென்று வாழைக்குருத்துஅரியமுற்பட்டார். அப்போது விஷநாகம் ஒன்று மூத்த திருநாவுக்கரசைத் தீண்டியது. ஆனல்

Koviloor Digital Library

மூத்த திருநாவுக்கரசோ அதைப் பொருட்படுத்தாது திருவமுது படைத்தற்கு இடையூறுநேருமோ என்றஞ்சி ஓடிவந்து இலையைத் தாயார் கையில் கொடுத்துக் கீழே விழுந்தார். தந்தைதாயார் இருவரும் 'இதனைத் திருநாவுக்கரசர் அறியின் அமுதுண்ண இசையார்' என்று எண்ணித் தன் மகன் இறந்ததையும் பொருட்படுத்தாது அப்பிள்ளையை ஒருபால் மறையவைத்து அப்பரடிகட்கு விருந்தூட்டும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

அப்பூதி அடிகள், திருநாவுக்கரசரை விருந்துண்ண அழைத்துவந்து அமர்த்தி வணங்கித் திருநீறுபெற்றார். திருநாவுக்கரசர் திருவுளத்தில் இறைவனருளால் ஒரு தடுமாற்றம் உண்டாக, மூத்த திருநாவுக்கரசை அழையும் என்றார். அப்பூதியாரோ 'இப்போது அவன் இங்கு உதவான்' என்று கூறினார். திருநாவுக்கரசர் நிகழ்ந்ததறிந்து மூத்த திருநாவுக்கரசைத் திருக்கோயிலுக்குமுன் எடுத்துவரச் செய்து இறையருளால் உயிர்பெற்றெழும்வண்ணம் 'ஒன்றுகொலாம்' என்ற திருப்பதிகம் பாடியருளினர். உறங்கி எழுவாரைப்போல மூத்த திருநாவுக்கரசும் எழுந்து பணிந்தார். அப்பூதியாரின் வேண்டுகோளின்படி மீண்டும் அவர்தம் வீட்டிற்கு எழுந்தருளி எல்லோரையும் ஒக்க இருக்கச்செய்து அமுது செய்தருளினர். பின் சில நாட்கள் திங்களூரில் தங்கியிருந்து அப்பூதி அடிகளுடன் திருப்பழனம் சென்று பணிந்து பாடினர். அங்குப் பாடிய திருப்பதிகத்தில் அப்பூதிஅடிகளின் பெருமையையும் அமைத்துப் பாடினர்.

திருப்பழனத்திலிருந்து திருநல்லூர், வலஞ்சுழி, குடமூக்கு முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாரூர் வந்தார். அடியார் பெருமக்கள் பலரும் எதிர்கொண்டழைத்துப் போற்றினர். திருவாரூரில் புற்றிடங்கொண்டாரையும் தியாகேசனையும் பணிந்து " பாடிளம் பூதத்தினானும் " என்று தொடங்கிப் பதிகம் பாடினர். அப்பொழுது ஆரூரில் திருவாதிரைத் திருநாளில் வீதிவிடங்கப்பெருமான் திருவுலாப் போந்தருளியது கண்டு வணங்கி மகிழ்ந்து திருப்புகலூர்க்குப் புறப்பட்டார்.

சம்பந்தர் சந்திப்பு 2 :

திருவாரூரிலிருந்து வழியில் பல சிவதலங்களையும் தரிசித்துக் கொண்டே திருப்புகலூருக்கு வந்தார். அப்பொழுது முருக நாயனர் திருமடத்தில் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தரும்

Koviloor Digital Library

அப்பரை எதிர்கொண்டழைத்தார். திருவாரூரில் நிகழ்ந்த சிறப் பினைத் திருஞானசம்பந்தர் வினவத் திருநாவுக்கரசர், "முத்து விதானம்" என்று தொடங்கித் திருவாதிரைச் சிறப்பை எடுத் துரைத்தார். இதைக்கேட்ட சம்பந்தர் 'நானும் திருவாரூர் சென்று மீண்டும் உம்மோடு உடனுறைவேன்' என்று கூறித் திருவாரூர் சென்ருர். திருப்புகலூரை அடைந்த திருநாவுக்கரசர் பெருமானை வணங்கிப் பாமாலைகள் பாடியும், உழவாரப்பணி செய்தும் அங்கிருந்துகொண்டே அருகில் உள்ள சிவதலங்களை யெல்லாம் சென்று தரிசித்திருந்தார். திருவாரூர் சென்ற திரு ஞானசம்பந்தரும் திருப்புகலூர் மீண்டார். இருவரும் முருக நாயனுர் திருமடத்தில் அளவளாவி மகிழ்ந்திருந்தனர்.

படிக்காசு பெற்றது :

சிலநாட்கள் தங்கியிருந்து திருப்புகலூரில் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் சிறுத்தொண்டர், நீலநக்கர், முருக நாயனுர் ஆகியோரிடம் விடைபெற்றுப் புறப்பட்டுத் திருக்கடவூர் வந்தனர். குங்குலியக்கலய நாயனுர் திருமடத்தில் உபசரிக்கப் பெற்றுத் தங்கி அமுதகடேசரை வணங்கி இன்புற்று ஆக்கூர் முதலிய தலங்களைப் பணிந்து திருவீழிமிழலைக்கு வந்த னர். விண்ணிழி விமானத்திலிருக்கும் இறைவனைப் பணிந்து பரவினர். பிறகு இருவேறு திருமடங்களில் திருவீழிமிழலையில் தங்கினுர்கள். அந்நாளில் மழையின்மையாலும் ஆற்றுநீர்ப் பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாயிற்று. இறைவன் ஞானசம்பந்தர் நாவுக்கரசர் கனவில் தோன்றி, 'காலவேறுபாட் டால் துன்புறவேண்டாம். அடியவர்க்கு உணவளிக்கும் பொருட்டுப் படிக்காசு தருகின்ரேம்' என்றுகூறி திருக்கோயிலில் மேற்கு கிழக்குப்பீடங்களில் நாள்தோறும் படிக்காசு அளித்தான். அக்காசுகளைப் பெற்று 'சிவனடியார்கள் இருபொழுதும் எய்தி உண்க' எனப் பறைசாற்றி அடியார்க்கு அமுதளித்தார்கள். திருநாவுக்கரசர் கைத்தொண்டு புரிவதால் அவர்க்கு வாசியில் லாக் காசும் திருஞானசம்பந்தர்க்கு வாசியுள்ள காசும் கிடைத் தன. சம்பந்தர் இறைவனைப் பாடி வாசி நீங்கப் பெற்ருர். சிலகாலம் கழித்து எங்கும் மழை பெய்து வளம் பெருகியது.

மறைக்கதவம் திறப்பித்தது :

திருவீழிமிழலையிலிருந்து புறப்பட்ட இருவரும் திருவாஞ்சி யம் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருமறைக்காட்டை அடைந்து வலம் வந்து திருக்கோயிலை 'அடைந்தார்கள்.

Koviloor Digital Library

பண்டை நாளில் வேதங்கள் இறைவனை வழிபட்டு அடைத்திருந்த திருவாயிற் கதவுகள் அந்நாள்முதல் திறக்கப்படாமலே இருந்தது. அவ்வூர் மக்கள் வேருெரு வழியே சென்று வழிபட்டு வந்தனர். இச்செய்தியை அறிந்த திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை நோக்கி 'நாம் நேர் முகவாயில் வழியே சென்று மறைக்காட்டுறையும் பெருமானை வழிபட வேண்டும். ஆதலால் இக்கதவு திறக்கும்படிப் பதிகம் பாடியருளும்' என்று கூறினர். ஆளுடைய பிள்ளையாரின் அருள் மொழிப்படியே அப்பரும் 'பண்ணினேர் மொழியாள்' என்று தொடங்கித் திருப்பதிகம் பாடினர். செந்தமிழ்ச் சுவையைத் துய்க்க விரும்பிக் கதவம் திறக்க காலந் தாழ்ந்தான் இறைவன். நாவுக்கரசர் வருந்தி இறுதித் திருப்பாடலாக 'இராவணனை அடர்த்த பெருமானே இரக்கம் சிறிதும் இல்லையோ' என்று பாடினர். அந்நிலையில் கதவுகள் திறந்தன. இருவரும் இறையருளை நினைந்து இன்புற்று நேர்முகவாயில் வழியே சென்று வழிபாடாற்றினர். திருக்கோயிலிலிருந்து வெளியில் வரும்போது அப்பர் பிள்ளையாரை நோக்கித் திருக்கதவம் அடைக்கப் பாடும்படி வேண்டினர். சம்பந்தரும் அவ்வாறே 'சதுரம்மறை' என்று தொடங்கிப் பாடிய முதல் திருப்பாடலிலேயே கதவு அடைக்கப்பெற்றது. அன்று முதலாக அக்கதவு அடைக்கவும் திறக்கவும் பெறுவதாயிற்று.

திருவாய்மூரில் திருக்காட்சி :

திருவருள் நலம்பெற்ற இரு பெருங்குரவர்களும் அடியார் புடைசூழ திருமறைக்காட்டில் திருமடத்தில் தங்கினர். அன்றிரவு திருநாவுக்கரசர் தாம் அரிதில் திறக்கப்பாடியதையும், ஆளுடைய பிள்ளையார் விரைவில் அடைக்கப் பாடியதையும் எண்ணித், தம் பாடலுக்கு கதவு திறக்கக் காலந்தாழ்ந்தமைக்குக் காரணம், இறைவன் திருக்குறிப்பை நாம் உணராது அயர்த்தமையே என்று கவலைகொண்டு திருமடத்தில் ஓர் பால் அறிதுயில் கொண்டார். அவர் கனவில் இறைவன் தோன்றி நாம் திருவாய்மூரில் இருப்போம் எம்மைத் தொடர்ந்து வா' என்று கூறி மறைய உடனே துயிலெழுந்து நாவுக்கரசரும் இறைவனைப் பின் தொடர்ந்து 'எங்கே யென்னை' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிக்கொண்டே வாய்மூருக்குச் சென்ருர். முன்னே சென்று கொண்டிருந்த பெருமான் பொற்கோயில் ஒன்றைக் காட்டி மறைந்தனன். ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசர் வாய்மூருக்குச் சென்றதை யறிந்து அவரைத் தொடர்ந்து வாய்மூரை அடைந்தார். 'திறக்கப்பாடிய என்னினும் அடைக்கப்பாடிய

Koviloor Digital Library

ஞானசம்பந்தரும் வந்துவிட்டார் இனியும் தம்மைக் காட்டாது மறைப்பரோ '' என்று பாடினுர். இறைவன் ஞானசம்பந்தர் காணக் காட்சி வழங்கினன். ஞானசம்பந்தர் காட்ட நாவுக் கரசரும் இறைவன் திருக்காட்சி கண்டு இன்புற்று '' பாட அடியார் '' என்று தொடங்கிப் பாடிப் பணிந்தார்.

திருவாய்மூரில் இருவரும் சிலநாள் தங்கித் திருமறைக் காட்டிற்கு எழுந்தருளினர். அப்போது பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் விடுத்த தூதர் சிலர் ஞானசம்பந்தரைக் கண்டு பாண்டிநாடும் பாண்டியனும் சமணம் சார்ந்து வருந்துவதைக் கூறினர். திருவெண்ணீற்றின் துணையை நினைந்து ஞானசம்பந்தரும் பாண்டிநாட்டுக்குப் புறப்படத் துணிவு கொண்டார்.

திருநாவுக்கரசர் பிள்ளையாரை நோக்கி தீயோராகிய அமணர் வஞ்சனையில் மிக வல்லவர். தேவரீர் அங்குச் செல்லல் ஆகாது. மேலும் இன்று நாளும் கோளும் நன்ருக இல்லை என்றனர். ஞானசம்பந்தர் 'வேயுறுதோளிபங்கன்' என்று தொடங்கிக் கோளறு திருப்பதிகம் பாடிக்கொண்டு மதுரைக்குப் புறப்பட்டார்.

அமணர் வஞ்சம் அகற்றியது :

திருநாவுக்கரசர் பின்பு திருமறைக்காட்டிலிருந்து புறப்பட்டு திருநாகைக்காரோணம், திருவீழிமிழலை, திருவாவடுதுறை, முதலான தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பழையாறைவடதளி என்னும் தலத்தை அடைந்து திருக்கோயில் விமானத்தைத் தொழுதார். அங்குள்ளோர் இது சமணர் தெய்வத்தின் விமானம் என்றனர். நாவுக்கரசர் மனம் புழுங்கிச் சிவபெருமான் திருவுருவத்தை இக்கோயிலுட் கண்டாலன்றி மேற்போகேன் என்று திருவமுதுகொள்ளாது பட்டினி கிடந்தார். அடியார் பசி பொருது ஆண்டவன் சோழமன்னன் கனவில்தோன்றி 'நாவுக் கரசன் நம்மைக்காணச்சிந்தித்துக்கொண்டிருக்கின்ருன், அமணர் நம்கோயிலை மறைத்தனர். நீ அவர்களை அழித்து நமக்கு ஆலயம் செய்க' என்று கட்டளையிட்டனன். அவ்வாறே அரசனும் சமணர் மறைத்திருந்த சிவலிங்கத்தை வெளிப்படுத்தி நாவுக் கரசரை வணங்கினுன். அமணர்களை யானையை ஏவி அழிக்கச் செய்தான். வடதளியில் பெரிய சிவாலயமெடுத்து சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து மகிழ்ந்தான். திருநாவுக்கரசரும்

Koviloor Digital Library

ஆலயத்துட்சென்று "தலையெலாம்" என்று தொடங்கிப் பதிகம் பாடிப் போற்றினர்.

போதிசோறு பேற்றது :

திருநாவுக்கரசர் அங்குநின்றும் நீங்கி ஆனைக்கா, எறும்பியூர், கற்குடி, திருச்சிராப்பள்ளி, திருப்பராய்த்துறை முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பைஞ்ஞீலியை அடைந்தார். பைஞ்ஞீலிக்குச்செல்லும் வழியில் நடையால் வருந்தி இளைத்தும் மனந்தளராமல் சென்றுகொண்டிருந்தார். தொண்டர் வருத்தம் தரியாத பெருமான் அவர் வரும் வழியில் சோலை குளம் உண்டாக்கி அந்தணர் வடிவோடு பொதிசோறு சுமந்து வீற்றிருந்தார். திருநாவுக்கரசர் அருகில் வந்தவுடன் வழிநடை வருத்தத்தால் மிக இளைத்தீர் என்பால் பொதிசோறு இருக்கிறது உண்டு இளைப்பாறிச் செல்க என்று கூற அவ்வண்ணமே பொதிசோறு உண்டு இளைப்பு நீங்கிய நாவுக்கரசரும் 'தாங்கள் யார் எங்கு செல்கின்றீர்கள்' என்று கேட்க அந்தணரும் நாம் திருப்பைஞ்ஞீலி செல்கின்றோம் என்று கூற இருவரும் திருப்பைஞ்ஞீலிக்குப் புறப்பட்டனர். அந்தணர் பின்னே அப்பரும் சென்றார். திருப்பைஞ்ஞீலியை அடைந்ததும் இறைவன் மறைந்தான். அப்பர் இறைவனின் எளிவந்த தன்மையை வியந்து பாடித் துதித்தார். அங்குச் சிலநாள் தங்கித் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டார்.

திருவண்ணாமலை, திருவோத்தூர், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருவொற்றியூர், மயிலாப்பூர், திருப்பாசூர், திருவாலங்காடு, காரிகரை முதலான தலங்களைத் தரிசித்துத் திருக்காளத்திக்கு வந்தார். கண்ணப்பர்க்கருள் செய்த காளத்திநாதனைப் பாடிப் பரவி இன்புற்றார். திருக்கயிலையங்கிரியில் இறைவனைக் காணும் பெருவிருப்பு விளைந்தது. அங்கிருந்து திருக்கயிலாய யாத்திரையை மேற்கொண்டார்.

திருக்கயிலைக் காட்சி :

வடதிசைப் பெருந்தலங்களாக வழியில் உள்ள திருப்பருப்பதம் முதலான தலங்களைத் தரிசித்துக்கொண்டு தெலுங்கு, கன்னடம், மாளுவம், இலாடதேசம், மத்தியப் பிரதேசங்களைக் கடந்து காசியை அடைந்து விசுவேசனைத் தரிசித்து இன்புற்றார். அங்கிருந்து அடியார்களை விடுத்துத் தனியே இரவுபகலாய் காடு மேடு மலை மணல்பரப்புக்களில் நடந்துசென்றார். இரவுபகலாய்

Koviloor Digital Library

நடந்துசென்றதால் நாவுக்கரசரின் திருவடிகள் பரடுவரைதேய்ந் தன. கால்களால் நடக்கலாற்ருது கைகளால் தாவிச் சென்ருர். கைகளும் மணிக்கட்டுவரை தேய்ந்தன. மார்பினுல் உந்திச் சென்ருர். என்புகளும் தேய்ந்து முரிந்தன. எப்படியும் கயிலே நாதனைக் கண்டு இன்புற வேண்டும் என்ற வேட்கையால் புரண்டு புரண்டு சென்று உடலுறுப்புக்கள் முழுதும் தேய்ந்து ஓரிடத்தில் செயலற்றுத் தங்கிக்கிடந்தார்.

பெருமான் திருநாவுக்கரசர் இன்னும் சிலகாலம் இவ்வுலகில் தீந்தமிழ்ப் பாமாலே பாடவேண்டும் என்று திருவுளங்கொண்டு அவர் கிடந்த இடத்தின் அருகே தடாகம் ஒன்று தோற்றுவித்து தாம் ஒரு முனிவர் வேடம் பூண்டு எதிரே நின்று நோக்கினுர்' 'அங்கம் சிதைய இவ்வருங்கானில் வந்தது என்கருதி' என்று முனிவர் கேட்க, அப்பரும் இறைவனைத் திருக்கயிலேயில் கண்டு தரிசித்து இன்புறவேண்டும் என்ற விருப்பத்தால் வந்ததைக் கூறினர். எழுந்தருளிய சிவபிரான் 'திருக்கயிலே மானிடர் சென் றடைதற்கு எளிதோ? திரும்பிச் செல்லும்; இதுவே தக்கது. என்று கூற அப்பரும், 'என்னே ஆளும் நாயகன் கயிலேயில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்' என்று உறுதி மொழிந்தார். முனிவராய் வந்த பெருமான் மறைந்து அசரீரியாய் 'நாவினுக்கரசனே! எழுந்திரு' என்று கூறினன். அப்பொழுதே உடல் நலம் பெற்று நாவுக்கரசர் எழுந்து பணிந்து 'அண்ணலே கயிலேயில் நின்திருக்கோலம் நண்ணி நான்தொழநயந்தருள்புரி' எனப் பணிந்தார். பெரு மான் மீண்டும் அசரீரியாய் 'இத்தடாகத்தில் மூழ்கித் திருவை யாற்றை அடைந்து நாம் திருக்கயிலேயில் வீற்றிருக்கும் காட்சி யைக் காண்க' என்று கூறினன். அவ்வாறே அப்பரும் திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டே அத்தடாகத்தில் மூழ்கி எழுந்தனர்.

திருவையாற்றில் உள்ள தடாகத்தில் திருநாவுக்கரசர் எழுந் தார். உலகம் வியப்பக்கரையேறி .ஆனந்தக் கண்ணீர் சொரிந் தார். ஐயாற்றிறைவரை வணங்கப் புகுமளவில் அங்குள்ள உயிர்கள் அனைத்தும் சத்தியும் சிவமுமாம் காட்சிகளைக் காட்டின. அப்பெருங்கோயில் கயிலேயங்கிரியாய்க் காட்சி அளித்தது. திருமால், பிரமன், இந்திரன் முதலானேர் போற்ற வேதம் முழங்க விண்ணவர், சித்தர். வித்யாதரர்களுடன் மாதவர் முனி வர் போற்ற இறைவன் அம்பிகையோடு எழுந்தருளியிருக்கும் அருட்காட்சிகண்டு ஆனந்தக் கூத்தாடினுர்; பாடினுர்; பல்வகைப் பாமாலேகளாலும் போற்றிப் பரவிப் புகழ்ந்து மகிழ்ந்தார்.

Koviloor Digital Library

பெருமான் கயிலைக் காட்சியை மறைத்தருளினான். திருநாவுக்கரசர் திகைத்து இதுவும் இறைவன் திருவருளே என்று எண்ணித் தெளிந்து 'மாதர்ப் பிறைக்கண்ணியானை' என்ற திருப்பதிகம் பாடித் தொழுதார். பின்னும் பல பதிகங்கள் பாடித் திருவையாற்றில் பலநாள் தங்கி உழவாரப்பணி புரிந்து இன் புற்று இருந்தார்.

திருவையாற்றிலிருந்து நெய்த்தானம் மழபாடி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருப்பூந்துருத்திக்கு வந்தார். சிலநாள் பூந்துருத்தியில் தங்கும் விருப்புக்கொண்டார். மிக உயர்ந்த திருமடம் ஒன்று நிறுவினார். அங்குத் தங்கியிருந்து பல்வகைப் பதிகங்களையும் பாடிப் பரவி வந்தார்.

சம்பந்தர் சந்திப்பு 3 :

திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியிலிருந்தபொழுது திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டில் சமணரை வாதில் வென்று பாண்டியனையும் மக்களையும் சைவத்தின் சிறப்புணரச்செய்து திரும்பியவர் திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் இருப்பதை அறிந்து அவரைக் காணும் விருப்பம்கொண்டு பூந்துருத்தியை அடைந்தார். ஞானசம்பந்தர் வருகையைக் கேட்ட நாவுக்கரசர் அவரை நேரேகாணும் பெருவிருப்போடு திருஞானசம்பந்தரைச் சூழவந்த அடியார் கூட்டத்தை வணங்கி ஞானசம்பந்தர் ஏறி வரும் சிவிகையைத் தாமும்ஒருவராய்த்தாங்கிவந்தார். பூந்துருத்திக்கு அருகாக வந்ததும் சம்பந்தர் 'அப்பர் எங்குற்றார்' என வினவ அப்பரும் 'உம் அடியேன் உமது திருவடிகள் தாங்கும் பெருவாழ்வு வந்து எய்தப்பெற்று இங்குற்றேன்' என்று கூறி யருளினார். அதைக்கேட்ட பிள்ளையார் பதைபதைத்து விரைந்து கீழே இறங்கி அப்பரைப் பணியவந்தார். அவர்க்கு முன் நாவுக்கரசர் பணிந்தார். இவ்வாறு இருவரும் சந்தித்து இறைவன் திருமுன் சென்று பணிந்து அத்தலத்தில் உடன் எழுந்தருளி அளவளாவியிருந்தனர்.

திருஞானசம்பந்தர் வாயிலாக மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் பெருமையைக் கேட்ட திருநாவுக்கரசர் அவர்களைக் கண்டு மகிழவும் பாண்டியநாட்டுத் தலங்களைத் தரிசிக்கவும் புறப்பட்டார். திருஞானசம்பந்தரும் தொண்டைநாட்டுத் தலங்களைத் தரிசிக்கச்சென்றார்.

Koviloor Digital Library

பாண்டிநாட்டுத் தலயாத்திரை :

திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியினின்றும் புறப்பட்டு திருப்புத்தூர் சென்று பணிந்து பாடி திருவாலவாய்க்குச் சென்ருர். செந்தமிழ்ச் சொக்கனையும் அங்கயற்கண்ணியையும் பாடி வணங்கினர். பாண்டியமன்னன் நெடுமாறனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அடிபணிந்துபோற்ற மதுரையில் சிலநாள் தங்கினர்.

பிறகு மதுரையிலிருந்து புறப்பட்டு திருப்பூவணம் இராமேச்சுரம் நெல்லை கானப்பேர் முதலிய தலங்களைத் தரிசித்துச் சோனுடு திரும்பினர்.

பல பதிகளையும் மீண்டும் தரிசித்துக்கொண்டு திருநாவுக்கரசர் திருப்புகலூரை அடைந்தார். நாடோறும் இறைவனைப் பல பதிகங்களால் பாடியும் உழவாரப்பணி செய்தும் திருப்புகலூரில் தங்கியிருந்தார்.

திருப்புகலூரில் திருவடிப்பேறு :

இறைவன் திருநாவுக்கரசரின் பற்றற்ற நிலையை உலகிற்குக் காட்டத் திருவுளங்கொண்டான். ஆண்டஅரசு உழவாரப்பணி செய்யும் இடங்களில் பொன்னும் நவமணிகளும் கிடக்கும்படிச் செய்தான். திருநாவுக்கரசர் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் இயல்புடையாராதலின் அவற்றை ஏனைய கற்களோடு வாரித் தடாகத்துள் எறிந்தார். அப்பரின் தூய துறவற நிலையை மேலும் உலகிற்கு விளக்க எண்ணிய இறைவன் அரம்பையர் பலரை அங்குவரச் செய்தனன். அரம்பையர் ஆடல் பாடல்களால் பல்லாற்ருனும் திருநாவுக்கரசரை மயக்க முற்பட்டனர். ஒன்றினுலும் மனம் திரியாத அப்பர் அவர்களைநோக்கி 'உம்மால் இங்கு எனக்கு ஆகவேண்டியகுறை யாதுளது? நான் திருவாரூர் அம்மானுக்கு ஆளாயினேன்' என்னும் கருத்தமைந்த 'பொய் மாயப் பெருங்கடலில்' என்று தொடங்கும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தால் தெரிவித்தருளினர். அரம்பையரும் சோர்ந்து அரசை வணங்கி அகன்றனர்.

இறைவன் திருவடி அடையும் காலம் அணித்தாக திருநாவுக்கரசர் திருப்புகலூரிலேயே தங்கியிருந்தார். முன்னுணர்ச்சியால் 'புகலூர்ப்பெருமான் சேவடிக்கீழ்த் தம்மைப் புகலாகக்கொள்வான்' என்ற கருத்துப்பட திருவிருத்தங்கள் பலவும் பாடினர்.

Koviloor Digital Library

எல்லாவுலகமும் போற்ற "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே" என்று தொடங்கித் திருத்தாண்டகத் திருப் பதிகம் பாடிப் போற்றி நண்ணரிய சிவானந்த ஞானவடிவே யாகி ஆண்ட அரசு ஒரு சித்திரைமாதச் சதய நாளில் அண்ண லார் சேவடியை அடைந்து இன்புற்று அமர்ந்தருளினர்.

அகச்சான்றுகள்

காலக் குறிப்பு:

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அடியார்களில் சிறுத்தொண்டரும் சமகாலத்தவர் என்பது வரலாற்றுல் இனிது விளங்கும் உண்மை. திருநாவுக்கரசர் முதிர்ந்தவயதிலேயே திருஞானசம்பந்தரைச் சந்தித்திருக்கவேண்டும் என்பதுதெளிவு. சம்பந்தர் நாவுக்கரசரை அப்பரே என்று அழைத்த வரலாற்றுக் குறிப்பும் இதனை வலியுறுத்தும். இவர்கள் காலங்களில் குறிக்கப் படும் மன்னர்கள் பல்லவர்களில் மகேந்திரவர்மனும், பாண்டியர் களில் நெடுமாறனும் சளுக்கியர்களில் புலிகேசியும் ஆவர்.

மகேந்திரவன்மன் கி. பி. 600 முதல் 630 வரை காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்தவன். சமணர் சொற்கேட்டு திருநாவுக்கரசரைத் துன்புறுத்தியவனும் பின் திருநாவுக்கரசர் பெருமையை உணர்ந்து சிவபிரான் திருவருட்பேற்றுக்குரியவ னுய்க் குணபரன் என்ற தன் பெயரால் குணபரஈச்சரம் என்ற திருக்கோயிலைத் திருவதிகையில் கட்டியவனும் இம் மன்னனே யாவன். இவன் ஆட்சிக்காலம் மேலே குறித்துள்ளதாகும். சைவனுக மாறியபிறகு சமணம் புத்தம் முதலிய மதங்களை இழித் துக் கூறியுள்ளான். தான் நிறுவிய திருச்சிராப்பள்ளிக் குகை கோயிலில் தான் சமணனுக இருந்து சைவனுன நிகழ்ச்சியைக் குறித்துள்ளான்.

பாண்டியர்களில் திருஞானசம்பந்தரால் சைவனுக்கப்பெற்ற மன்னன் நெடுஞ்செழியன் கி. பி. 640 முதல் 670 வரை ஆட்சி புரிந்தவன்.

நரசிங்கவர்மனது படைத்தலைவராயிருந்து வடபுலத்திற் சென்று செய்த வாதாபிப்போரில் வெற்றி கொண்ட பரஞ்சோதி யாரே சிறுத்தொண்டராவர். வாதாபிப்போர் கி. பி. 642 இல் நடந்திருக்கவேண்டும்.

Koviloor Digital Library

இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள இக் குறிப்புக்களைக் கொண்டு கி. பி. 574க்கும் 655க்கும் இடையே அப்பர் சுவாமிகள் வாழ்ந்திருக்கவேண்டும் என்று கோவைகிழார் ஆராய்ந்து கூறி யுள்ளார். பழைய வெண்பா ஒன்று அப்பருக்கு வயது எண்பத்தொன்று' என்று கூறுகிறது.

முன்னைநிலை :

திருநாவுக்கரசர் ஒரு முனிவராய்த் திருக்கயிலையில் தவம் இயற்றிய பெரியார் என்றும் இறைவனருளால் திருநாவுக்கரச ராகத் திருவவதாரம் செய்தார் எனவும் பெரியபுராணத்துள் குறிப்பிக்கப்படுகிறது.

" உன்னுடைய மனக்கவலை ஒழிநீ உன்னுடன் பிறந்தான்
முன்னமே முனியாகி எனையடையத் தவம்முயன்ருன் "

(பெரிய. 48.)

" நாயேன் முன்னைப், பந்தமறுத்தாளாக்கிப் பணிகொண் டாங்கே பன்னிய நூற்றமிழ்மாலை பாடுவித்தென், சிந்தை மயக் கறுத்த திருவருளினானை " (அப். தே.)

" நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க நிறைதவத்தை அடியேற்கு நிறைவித்து என்றும் செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானை " (அப். தே.)

" மறப்படுமென் சிந்தைமருள் நீக்கினுன் காண் " (அப். தே.)

திலகவதியாரைத் துதித்தல் :

திலகவதியாரே திருநாவுக்கரசரின் முதல் ஆசிரியர். திலக வதியார் திருவைந்தெழுத்தோதிக் கொடுத்ததே இவர்க்குரிய முதல் தீக்ஷையாயிற்று. திருநாவுக்கரசர் திலகவதியாரைச் சிவனருளே என்று பல இடத்தும் துதிக்கின்ருர்.

" ஈன்ருளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன்தோன்றினராய்
மூன்ருய் உலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்ருன் " (அப். தே.)

" துணையா யென்னெஞ்சம் துறப்பிப்பாய் நீ " (அப். தே.)

Koviloor Digital Library

"எம்மை யாரிலை யானும் உளேனலேன்
எம்மை யாரும் இதுசெய வல்லரே
அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்கு
அம்மை யாரைத் தந்தார்ஆரூர் ஐயரே" (அப். தே.)

சூலை நீங்கியது :

திருநாவுக்கரசர் சூலைநோயால்வருந்தியதும் இறையருளால் நீங்கியதும் அவர்பாடியதிருப்பதிகத்துட் குறிக்கப்பெற்றுள்ளது·

"தோற்றுதென் வயிற்றினகம்படியே குடரோடு துடக்கி
முடக்கியிட, ஆற்றேன்" (4-1-1)

"சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்" (4-1, 3-4)

"பிணிகாட்டி ஆட்கொண்டு பிணிதீர்த்த ஆரூரர்" (4-5-3)

"உறுபிணியார் செறலொழிந்திட்டு ஓடிப்போனார்" (6-98-5)

"சூலைதீர்த்தடியேனை ஆட்கொண்டாரே" (6-96-3)

சமணராயிருந்தது :

திருவாரூர்த் திருப்பதிகத்துள் எல்லாப் பாடல்களிலும் திருநாவுக்கரசர் தாம் சமண்சமயம்சார்ந்து வருந்தியதைக் குறிப்பிடுகின்றார்கள். மற்றும் பல பாடல்களாலும் சமணருள் ஒரு பிரிவினரான குண்டர் குழுவிற் சேர்ந்திருந்தமையைக் குறிப்பிடுகின்றார்கள்.

"குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார் நகைநாணாது
உழிதர்வேனை." (4-5-4)

"பல்லுரைச் சமணரோடே பலபல காலமெல்லாம்
சொல்லிய செலவு செய்தேன்" (4-39-7)

"பண்ணிய சாத்திரப் பேய்கள் பறிதலைக் குண்டரைவிட்டு
எண்ணில்புகழ் ஈசன்தன் அருள்பெற் றேற்கும்" (4-101-7)

"குண்டரோடு அயர்த்துநாளும் மறந்தும் அரன்திருவடிகள்
நினையமாட்டா மதியிலியேன்.........
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே."
(6-91-8.)

Koviloor Digital Library

என்பன முதலிய பல பாடல்களாலும் தாம் சமணராயிருந்ததையும் மீண்டும் சைவராய் இறையருள் பெற்றதையும் குறிப்பிட்டுள்ளார்.

அரசனழைக்க மறுத்தது :

சிவனுக்காட்பட்டுத் தொண்டுபூண்ட உறுதியும் வேந்தர்க்கு அஞ்சாத மனஉறுதியும் பல(6·98)பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

" நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம் " (6)

" துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற்றோமே "

" பாராண்டு பகடேறி வருவார்சொல்லும் பணிகேட்கக்
கடவோமோ பற்றற் றோமே "

" நாவலந் தீவகத்தினுக்கும் நாதரான
காவலரே ஏவி விடுத்தாரேனும் கடவமலோம் "

" சிவன்என் சிந்தை சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன்
தானேவந்து கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலும்
குணமாகக் கொள்ளோம் எண்குணத் துளோமே "

நீற்றறையில் இருந்தது :

திருநாவுக்கரசரைச் சமணர் நீற்றறையில் இட்டனர் அவர் இறைவன் திருவருளால் எத்தகைய துன்பமும் இன்றியிருந்தனர். அந்நீற்றறை இறைவன் திருவடி நிழல் போலக் குளிர்ந்திருந்தது. இவ்வற்புத நிகழ்ச்சியை நம்பியாண்டார்நம்பிகள் குறிப்பிட்டுள்ளார்.

" சிவசம்பந்தத் திடைத்தவம் செய்து திரியும்
பத்தியிற் சிறந்தவர்
திலகன் கற்றசிட்டன் வெந்தொளிர் திகழும்
பைம்பொடித்த வண்டணி
கவசம்புக்கு வைத்து அரன்கழல் கருதும்
சித்தனிற் கவன்றிய
கரணம் கட்டுதற் கருத்துள களகம்புக்க
நற்கவந்தியன் "

Koviloor Digital Library

நஞ்சுகலந்தளிக்கப்பெற்றது.

சமணர் நஞ்சுகலந்த பாற்சோறளித்து உண்ணச் செய்த னர் என்பது திருநாவுக்கரசர் பாடலால் தெளிவாகின்றது. "துஞ்சிருள் காலைமாலை" என்று தொடங்கும் திருப்பாடலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"வஞ்சனைப்பாற் சோருக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமுதாக்குவித்தார்" (4-70-5)

'விடம் அடையார்இட ஒள்அமுதாத்துற்றவன்' எனவரும் நம்பியாண்டார்நம்பிகள் திருவாக்காலும் இதனையறியலாம்.

மதயானையை ஏவப்பெற்றது.

சினமிக்க மதயானையை திருநாவுக்கரசர்மீது சமணர் ஏவினர் நாவுக்கரசர் இறைவன் தமர் நாம் நாம் எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை என்று 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' என்ற திருப்பதிகம்பாடி இறைவன் திருவடிகளை எண்ணி இருந் தார். வந்த யானை வலம்வந்து பணிந்து சென்றது. 'சுண்ண வெண் சந்தனச்சாந்தும் என்ற திருப்பதிகத்துள் அஞ்சுவதியா தொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என்று அஞ்சாமையும்

"தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே(ா)"

என்ற திருப்பாடலில் இந்நிகழ்ச்சியையும் குறிப்பாகப் புலப் படுத்தியுள்ளார்.

கல்லோடு கடலில் இடப்பெற்றது:

சமண குருமார்களின் சொற்படி பல்லவமன்னன் திருநாவுக் கரசரைக்கல்லொடு பிணைத்துக் கடலில் தள்ளுமாறு கட்டளையிட் டான். கடலில் இடப்பெற்ற திருநாவுக்கரசர் திருவைந்தெழுத் தைத் துதித்து 'சொற்றுணை வேதியன்' என்னும் திருப்பதிகம் பாடிக் கல்லே புணையாகக் கரைசேர்ந்தார்.

"கற்றுணைப் பூட்டி யோர்கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே" (4-11-1)

Koviloor Digital Library

"கல்லினோ டெனைப்பூட்டி அமண் கையர்
ஒல்லைநீர் புக நூக்களன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே" (5-72-7)

"நெடுநீரில் நின்றேற நினைந்தருளி ஆக்கினவாறடியேனை"

"நெடுநீரில் நின்றேற நினைந்தருளி உருக்கினவாறடியேனை"

என்பன அகச்சான்றுகள். நம்பியாண்டார்நம்பிகளும் இதனைப் போற்றுவர்.

"தெண்கடலிற்பிணியன கல்மிதப்பித்தன
நாவுக்கரசர் பிரான்றன் அருந்தமிழே"

—திருத்தொண்டர் திருவந்தாதி.

சூலக்குறி இடபக்குறி பேற்றது:

திருப்பெண்ணாகடத்துத் தூங்கானைமாடத் திருக்கோயிலில் திருநாவுக்கரசர் சூலக்குறி இடபக்குறி பொறிக்கப்பெற்றனர். பிறமதத்துள்ளும் இதுபோன்ற சமயச்சின்ன முத்திரை பொறிக்கும் வழக்கம் உள்ளது.

" மின்னாரும் மூவிலைச்சூலம் என்மேற் பொறி"

"இடவம் பொறித்தென்னை யேன்று கொள்ளாய்"(4-109-1,10)

திருவடி சூட்டப் பேற்றது:

திருச்சத்தி முற்றத்துள் இறைவனைத் திருவடி தீக்ஷை செய்யுமாறு வேண்டி இறைவன் அருள்வாக்குப்படித் திருநல்லூர் சென்று சிவபெருமானால் திருவடி தீக்ஷை செய்யப்பெற்ற வரலாற்றுக்குரியே அகச்சான்றுகள்.

" பூவாரடிச்சுவடு என்மேற் பொறித்துவை
......திருச்சத்தி முற்றத்துறையும் சிவக்கொழுந்தே"(4-96-1)

" நனைந்தனைய திருவடி யென்தலைமேல் வைத்தார்
நல்லூர் எம் பெருமானார் நல்லவாறே" (6-141-1-11)

" காலனை வீழச்செற்ற கழலடி இரண்டும் வந்தென்
மேலவாய் இருக்கப் பெற்றேன்" (4-37-1)

Koviloor Digital Library

" அடியேனை ஆளாக்கொண்டு தன்னுடைய திருவடி என்
தலைமேல் வைத்த தீங்கரும்பை" (6-68-4)

" பிரானாய்அடி என்மேல் வைத்தாய் நீயே" (6-38-1)

நம்பியாண்டார் நம்பிகளும் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

" நற்றவன் நல்லூர்ச்சிவன் திருப்பாதம்தன்
சென்னிவைக்கப் பெற்றவன்"

(திருத்தொண்டர் திருவந்தாதி)

விடந் தீர்த்தது :

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரையே தெய்வமாகக் கருதி அவர் பெயரையே தாம் செய்யும் அறங்களுக்கும் வழங்கியதை வரலாறு கூறுகிறது. நம்பியாண்டார்நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில்,

" தனமாவது திருநாவுக் கரசின் சரணமென்று
மனமார்புனற்பந்தர்வாழ்த்திவைத்தாங்கவன்வண்டமிழ்க்கே
இனமாத்தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயற்றிங்களூரினில் வேதியன் அப்பூதியே"

(திருத்தொண்டர் திருவந்தாதி)

என்று குறிப்பிட்டுள்ளார். அவரைச் சந்தித்தற்குச் சான்றாக "வஞ்சித்தென்" என்று தொடங்கும் பாடலில் அப்பூதியாரின் பக்தி போற்றப்பட்டுள்ளது. மூத்த திருநாவுக்கரசரை விடந் தீண்டியதும், திருநாவுக்கரசர் "ஒன்றுகொலாம்" என்று தொடங்கி விஷந் தீர்க்கப் பாடியதும், பாடியவுடன் சிறுவன் எழுந்து வணங்கினான் என்பதும் வரலாறு.

திருவாதிரைத் திருநாள் :

திருப்புகலூரில் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைச் சந்தித்தபொழுது திருவாரூர்த் திருவாதிரைச் சிறப்பைச் சொல்லி யருளியதற்கு அப்பதிகமே சான்றாக உள்ளது. "அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்" என்று முடியும் தொடர் ருவாதிரைச் சிறப்பைத் தெரிவிக்கிறது.

Koviloor Digital Library

படிக்காசு பெற்றது :

திருவீழிமிழலையில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் நாடோறும் படிக்காசு பெற்று தொண்டர்க்கு அமுதளித்தனர் என்பதும், திருஞானசம்பந்தர்க்கு வாசியுள்ளகாசும், திருநாவுக் கரசர்க்கு வாசியில்லாக்காசும் இறைவனுல் அளிக்கப்பெற்றன என்பதும், திருஞானசம்பந்தர் வாசிதீரப்பாடிக் காசுபெற்ருர் என்பதும் வரலாறு.

" பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடிவாட்டம் தவிர்ப்பா ரவரைப்போல் " (5-50-7)

நம்பியாண்டார்நம்பிகள் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியில் இதனைக் குறித்துள்ளார்.

" பாடிய செந்தமிழாற் பழங்காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக்கரசோ டெழில்மிழலைக்
கூடிய கூட்டத்தினுலுள தாய்த்திக் குவலயமே. "

சேந்தனர் திருவீழிமிழலைத் திருவிசைப்பாவிலும் இச்செய்தியைக் கூறியுள்ளார்.

" பாடலங்காரப் பரிசில்காசருளிப் பழுத்தசெந்தமிழ் மலர்சூடி
நீடலங்காரத் தெம்பெருமக்கள் நெஞ்சினுள் நிறைந்து
நின்ருனை "

மறைக்கதவம் திறப்பித்தது :

திருமறைக்காட்டில் வேதங்கள் அடைத்தகதவைத்திருநாவுக் கரசர் " பண்ணினேர் மொழியாள் " என்று தொடங்கித் திறக் கப்பாடியதும், திருஞானசம்பந்தர் அடைக்கப் பாடியதும் வரலாறு.

" கண்ணினுல் உமைக்காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே " (5-10-1)

" திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித் தாரும்நின்ருர் " (5-50-8)

" சரக்க இக்கதவம் திறப்பிம் மினே " (5-10-11

Koviloor Digital Library

நம்பியாண்டார்நம்பிகள் திருவந்தாதியிலும் இச்செய்தி குறிக்கப்படுகிறது.

" மணியினை மாமறைக்காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கதவம் திறப்பித்தன "

வாய்மூருக்குவா என்றழைக்கப்பெற்றது :

திருமறைக்காட்டுத் திருமடத்துள் உறங்கிக்கொண்டிருந்த திருநாவுக்கரசரைத் திருவாய்மூருக்கு வருக என்றழைத்ததும் அங்கே காட்சி வழங்கியதும் வரலாறு.

" உன்னி உன்னி உறங்குகின் றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவன் ஆமா சொல்லி
என்னை வாவென்று போனுர் " (5-50-2)

" எங்கேஎன்னை இருந்திடம் தேடிக் கொண்டு
அங்கே வந்து அடையாளம் அருளினுர்......
திருவாய்மூர்ச் செல்வனுர் அங்கே வாவென்று
போனுர் " (5-50-1)

" தஞ்சே கண்டேன் தரிக்கிலாது ஆரென்றேன்
அஞ்சேல் உன்னை அழைக்கவந்தேன் என்ருர் " (5-503)

" கழியக் கண்டிலேன் கண்ணெதிரே கண்டேன் "

" ஓடிப்போந்திங் கொளித்த வாறென் கொலோ "

" செந்தமிழ் உறைப்புப்பாடி
அடைப்பித் தாரும்நின்ருர் மறைக்கவல் லரோதம்மை "
(5-50-4,7,8)

" பாட அடியார் பரவக்கண்டேன்......வாய்மூர்
அடிகளை நான்கண்ட வாறே " (6-77-1)

உண்ணு நோன்பு மேற்கொண்டது :

பழையாறைவடதளித் திருக்கோயிலுள் இருக்கும் இறைவரை ஒளித்து சமணர் தம் பாழியாகக்கொண்டிருந்தனர். திருநாவுக்கரசர் அங்குச் சென்றபோது மீண்டும் அக்கோயிலுள்

Koviloor Digital Library

சிவபிரானைத் தரிசித்தாலன்றி உண்பதில்லை என விரதங்கொண்டதும், அரசன் கனவில் இறைவன் தோன்றி மீண்டும் கோயில் எடுக்கச் செய்ததும், சமணர்களை அழிக்கச் செய்ததும் வரலாறு.

" தலையெலாம் பறிக்கும் சமண் கையருள்
நிலையினுன் மறைத்தால் மறைக் கொண்ணுமோ "

" ஆளுரு ஆயிரம் சமணும் அழிவாக்கினுன் "

" மூக்கினுன் முரன்றேதியக் குண்டிகை
தூக்கினுர் குலந் தூரறுத்தே தனக்கு
ஆக்கினுன் " (5 - 58 - 1,9,2)

போதிசோறு பெற்றது :

திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலி செல்லும்போது வழிநடை வருத்தமும் பசியும் தீர இறைவன் பொதி சோறு அளித்ததும், திருப்பைஞ்ஞீலி வரை அழைத்துச் சென்று மறைந்ததும் வரலாறு. சேக்கிழார்பெருமான் " ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளா அளித்த கருணையெனப் பாடல் புரிந்து " திருநாவுக்கரசர் வணங்கினுர் என்று குறிப்பிட்டுள்ளார். திருப்பைஞ்ஞீலித் திருப்பதிகம் ஒன்றே உள்ளது. அதில் இக்குறிப்பில்லை. ஆகையால் இத்திருப்பதிகம் கிடைக்கவில்லை என்றறிகின்றேம். C. K. S. அவர்களும் இதனைக் குறித்துள்ளார்கள்.

கயிலைக் காட்சி :

திருக்காளத்திமலையில் இறைவனைத் தொழுத திருநாவுக்கரசர்க்குத் திருக்கயிலாய தரிசனம் செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. " கனத்தகத்தான் கயிலாயத் துச்சி உள்ளான் காளத்தியான் அவன்என் கண்ணுளானே " என்று காளத்தியிலிருந்தே பாடிப் பரவினுர். அங்கிருந்து திருக்கயிலாய யாத்திரை சென்றதும் இறைவன் இன்னும் சிலகாலம் தமிழ்மாலை பாடவேண்டுமென்ற கருத்தால் திருநாவுக்கரசரைத் திருவையாற்றில் தோன்றச்செய்து கயிலைக் காட்சி காட்டியருளியதும் வரலாது.

கயிலைக் காட்சியை அப்பர் நேரிற் கண்டு அதன் இயல்புகளை உள்ளவாறு பாடியருளியதை திருப்பதிகக் குறிப்புக்கள் நன்கு உணர்த்தும். மேலும் காடொடு நாடும் மலையும் கைதொழுது போற்றிச்சென்ற திருநாவுக்கரசரைப் பெருமான் தவமுனிவராய்

Koviloor Digital Library

வந்து பொய்கையில் மூழ்கும்படிச் செய்து திருவையாற்றில் தோன்றச்செய்து கயிலைக் காட்சி வழங்கியருளிய இவ்வரலாற்றினை, (4-3)

" ஏடுமதிக் கண்ணியினானை ஏந்திழையா ளொடும்பாடிக்
காடொடு நாடும் மலையும் கைதொழுதாடா வருவேன் "

எனவும்,

" யாதும் சுவடுபடாமல் ஐயா றடைகின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் "

" நெடுநீரில் நின்றேற நினைந்தருளி
ஆக்கினவா றடியேனை ஐயாறன் "

" நெடுநீரில் நின்றேற நினைந்தருளி
உருக்கினவா றடியேனை ஐயாறன் " (4-91-3,4)

எனவும் கூறிய தொடர்களால் நாம் நன்கு அறியலாம்.

திருவையாற்றில் தென்கயிலை என வழங்குவதும், அப்பரடிகள் கயிலைக் காட்சி கண்ட திருவிழாக்கள் முதலிய இத்தலத்து நிகழ்தலும் அறிதற்குரியன.

திருப்புகலூரில் :

திருநாவுக்கரசர் புகலூர்ப்பெருமான் திருவடிகளையே சரணெனக்கொண்டு உழவாரத் தொண்டு செய்து திருப்பதிகங்கள் பாடித் தங்கியிருந்தார். பொறிவாயில் ஐந்தவித்த அவருடைய பற்றற்ற நிலையை இறைவன் பலவாறு வெளிப்படுத்துகின்றான். பெண்ணாசை, பொருளாசை இவற்றிலும் தூய்மையுடையார் என்பதை உலகம் அறிய உழவாரம் செய்யும் இடங்களில் பொன்னும் மணியும் தோன்றச்செய்தும், ஊர்வசி முதலான அரம்பையரை ஆடச்செய்தும் இவை இரண்டாலும் இவர்தம் உளஉரத்தைப் புலப்படுத்துகின்றான் இறைவன்.

" பொய்ம்மாயப் பெருங்கடலில் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள்......இடையிலேன்
கெடுவீர்காள் இடறேன் மின்னே " (6-27-1)

நம்பியாண்டார் நம்பிகள் இவ்வற்புத நிகழ்ச்சியைத் திருஏகாதசமாலையில் விவரித்துள்ளார்கள்.

Koviloor Digital Library

"திருநாவுக் கரசடியவர் நாடற் கரியவர்
தெளிதேனைத் தினியசொல் மடவார்ஊர்ப் பசிமுதல்
வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில
வசியாகச் சொலுமவை துகளாகக் கருதிமெய்
உருநானத் திரள்மனம் உருகாநெக் கழுதுகண்
உழவாரப் படைகையில் உடையான்வைத் தனதமிழ்
குருவாகக் கொடுசிவன் அடிசூடத் திரிபவர்
குறுகார் புக்கிடர்படுகுடர் யோனிக்குழியிலே"

திருப்புகலூரில் இறைவன் திருவடியடையும் முன்னுணர்வு தோன்றப் பல பதிகங்களைப் பாடியுள்ளார் அப்பர்.

"தன்னைச் சரணென்று தாளடைந்தேன் தன்அடியடையப்
புன்னைப்பொழிற்புகலூரிலண்ணல்செய்வனகேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினை கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்கலொட்டான் சிவலோகத் திருத்திடுமே"

"உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய
புண்ணியனே"

கல்வெட்டுக்களில் :

இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் தென்னவன் மூவேந்தவேளான் என்பவன் (கி. பி. 1013 - 14) திருநாவுக்கரசர் திருவுருவத்தை எழுந்தருளுவித்துத் திருவிளக்கு அணிகலன் முதலியன அளித்துள்ளசெய்தி குறிப்பிடப்படுகிறது.

"பாதாதிகேசாந்தம் :இருபத்து இருவிரலே இரண்டு தோரை உயரத்து இரண்டு திருக்கை உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த திருநாவுக்கரசர் பிரதிமம் ஒன்று; இதனொடுங் கூடச்செய்த எண்விரலே ஆறுதோரைச் சம சதுரத்து நால்விரல் உயரத்து பீடம் ஒன்று" என்பது கல்வெட்டு வாசகம்.

மேலும், தஞ்சைப் பெரியகோயிலில் திருமுறை ஓதுதற்கு நாற்பத்தெட்டுபேரும் உடுக்கை கொட்டி மத்தளம் வாசிப்பார் இருவரும் நியமிக்கப்பெற்றிருந்த செய்தி பிறிதோர் கல்வெட்டில் காணப்படுகிறது. இக்கல்வெட்டுக்களிலிருந்து இராஜராஜ சோழன் காலத்தும் இராஜேந்திரசோழன் காலத்தும் சமயாசாரியர் வழிபாடு சிறந்திருந்த செய்தி அறியலாம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவவதாரத் தலமாகிய திருவாமூர்ப் பசுபதீசுவரர் ஆலயத்தில் குலோத்துங்கன் I காலத்தில் இரவீசுவரம் உடையார் கோயிலில் தாபித்திருக்கும் திருநாவுக்கரையதேவர் திருக்கோயில் திருப்பணிகளுக்குத் திருமுனைப்பாடி நாட்டுக் கிழாமூர் மக்கள் ஒரு வேலி நிலம் விற்று அளித்த செய்தி காணப்படுகிறது. மேலும் பிற்காலத்து திருவாமூர்க்கு அருகில் முத்து ரெட்டியார் என்பவர் (1933-1934) மூன்றுகாணித் தோப்பு ஒன்றை விளக்கு வைப்பதற்காக அளித்துள்ளார்.

திருவதிகைக் கோயிலில் குலோத்துங்கன் வாகீசர்மடத்திற்கு நிலம் அளித்த செய்தியும், அவ்வரசன் காலத்தில் அதிராசமாங் கலியபுரத்துக் குடிமக்கள் 4800 குழி நிலத்தைத் திருநாவுக்கரசர் மடத்தில் அன்னதானமளித்தற்கு வழங்கியருளிய செய்தியும் கூறப்படுகிறது. குலோத்துங்கனின் போர்ப்படைத் தலைவனாகிய கருணாகரத் தொண்டைமான் செய்த திருநாவுக்கரசர் ஆலயத்தைத் திருப்பணி செய்த விபரம் பாடல்களால் குறிக்கப்பெற்றுள்ளது.

"ஈசன் அதிகையில் வாகீசன் எழுந்தருள
மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான்—பூசல்
விளைவித்த வேணாடும் வெற்பனைத்தும் செந்தீ
விளைவித்தான் தொண்டையர் மன்"

என்பது அக்கல்வெட்டுப் பாடல்.

திருவாரூர், தியாகேசர் திருக்கோயிலில் குலோத்துங்கன் II காலத்தில் மூவர் திருவுருவங்களைத்தாபித்து நிலதானம் அளித்த செய்தி காணப்படுகிறது. கல்வெட்டில் வடமொழி வாசகத்தில் திருநாவுக்கரசரை வாக்கதிபதி என்று குறிக்கப்படுகிறது.

திருப்புகலூரில் திருநாவுக்கரசர் கோயிலுக்கு இராஜராஜன்I நித்திய பூஜைக்கு நிபந்தம் அளித்துள்ளான். இங்குள்ள கல்வெட்டொன்றில் குளிச்செழுந்த நாயனார் என்று வரும் பெயர் கயிலைகாணச் சென்று தடாகத்து மூழ்கி எழுந்த காரணத்தால் அப்பரடிகளைக் குறிப்பிடும் பெயரெனக் கொள்ளலாம். மேலும் திருமுறை ஓதுவார்க்கு நிபந்தமளித்த செய்தியும் காணப்படுகிறது. மேலும் திருவீழிமிழலை, திருமயானம், தீர்த்தநகரி, திருக்கச்சூர், திருப்புத்தூர், கோயிலூர், சூலமங்கலம், கீரனூர் முதலிய

Koviloor Digital Library

தலங்களில் திருநாவுக்கரசர் தொடர்பான செய்திகள் குறிக்கப் பட்டுள்ளன.

இராஜசோழன் II காலத்தில் திருவலஞ்சுழியிலும், குலோத் துங்கன் III காலத்தில் திருக்கச்சூரிலும், குலோத்துங்கன் III காலத்து சித்தூரிலும், இராஜேந்திரன் III காலத்தில் கோயிலூ ரிலும், ஜடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் சேரமாதேவி யிலும், வீரபாண்டியன் காலத்து தீர்த்தநகரியிலும், விக்கிரம பாண்டியன் காலத்தில் திருப்புத்தூரிலும், பராக்கிரமபாண்டியன் காலத்தில் சூலமங்கலத்திலும் திருநாவுக்கரசர் திருவுருவப் பிரதிஷ்டை திருவிழாக்கள் முதலிய நிகழ்த்திய செய்தியும் நில தானம் முதலிய வழங்கிய செய்தியும் குறிக்கப்பெற்றுள்ளன.

திருவீழிமிழலை, திருவதிகை, திருவான்மியூர், திருக்குறுக்கை பூதக்குடி முதலிய இடங்களில் அப்பரடிகளுக்குத் திருமடமிருந்த செய்தி கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

திருநாவுக்கரசர் திருப்பெயரை மக்கள் பெயராகவும் திருவீதி யின் பெயராகவும் அளவு கருவிகளின் பெயராகவும் வழங்கி வந்தமையையும் கல்வெட்டுக்களில் காணலாம்.

Koviloor Digital Library

உ

குருபாதம்

ஆரூந் திருமுறை

அரும்பொருள் அகராதி

பக்கம்

அ

அகப்பகை ஆறு	108
அஞ்சொல்	40
அடவிகாடு	699, 700
அடிகள் என்னுஞ் சொல்லின் விளக்கம்	380, 381
அடியவராவார் இவர் எனல்	7
அடியார் இலக்கணம்	114, 115
அடையாளத் திருத்தாண்டகம்	28
அட்டமூர்த்தம்	32, 119
அட்டவீரட்டங்கள்	518
அண்ணு	164, 125, 275
அத்துவித விளக்கம்	374, 375
அப்பனேயேயன்றி அம்மையையும் நாயனர் வேண்டுதல்	344
அப்புலிங்கம்	455
அப்புறுத்தகடல்	196
அப்புறுத்தகடல் நீரகம்	196
அமருலகம்	34
அயிராவணம்	187
அரநெறி	53, 24
அரற்றுதல்	44
'அரா' என்பது 'அர' எனக் குறுகிநிற்றல்	109
அரியான்	2
'அரும்பு' என்பது 'அருப்பு' என நிற்றல்	143
அரும்பித்த செஞ்ஞாயிறு	46
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக்கொண்டாய்	703
அலந்தார்	4

Koviloor Digital Library

பக்கம்

அல்லாதகாலன் 139
அளவிலான் 7
அளியற்ருர் பிறந்தவாறு இது என்பது 701
அறமும் மறமும் இறைவனேடு பொருந்தியவழி நன்மை பயத்தலும் முரணியவழித் தீங்குபயத்தலும் 83
அறமே சிவபெருமானைத் தாங்கவல்லதாகும் 623
அறம் அருளிச் செய்தது 11
அறம், பொருள், இன்பம், வீடு இன்னவெனல் 479
அறவிடை 76
அறிவுப் பணியும் அன்புப் பணியும் 277
அறுகுணம் 554, 127
அறுபகை 31
அறுமூன்று 126
அற்ருர் 4
அனவரத தாண்டவம் 79
அஃறிணை உயிர்களும் வானிடத்தவரும் மண்மேல் அரன்றனை அருச்சித்தல் 537

ஆ

ஆகாயம் தேர் ஊர வல்லான் 286
ஆக்கச்சொல் உவமை குறித்தல் 49, 211
ஆக்காதே ஆக்குதல் 86
ஆசனம் 41, 36
ஆட்டு 36
ஆட்டுவதோர் நாகம் அசைத்தாய் 36
ஆட்டுவித்தல், அடக்குவித்தல் முதலியவற்றின் விளக்கங்கள் 695, 697
ஆணவம் நீங்கினவரைப் பிராரத்தம் தாக்காமை 341
ஆணவம் நீங்குதற்கு வழி 341
ஆண்மையும், அருளும் உடைய ஆடவரிடத்து மகளிர்க்குக் காதல் பிறக்கும் 424
ஆ தங்கு 75
ஆதியான்மிகம் முதலிய மூன்று 174

Koviloor Digital Library

	பக்கம்
ஆதிரைநாள்	163
ஆத்தன்	152
ஆரம்பவாதம்	668
ஆரியன்	177
ஆலாலம்	489
'ஆவடுதுறை' என்னும் பெயர்க்காரணம்	332
ஆவணம்	182
ஆவா (ஆ ஆ)	735, 272
ஆறங்கம்	161
ஆறு சமயங்கள்	363
ஆறு சமயத்தவருந் தொண்டரே	496
ஆறென்று	126
ஆற்றியேன்	25. 26
ஆன் ஐந்து	39
ஆன்மதரிசனம்	311
ஆன்மாவினது சிறப்பியல்பும் அது முத்தியில் பெறுந் தன்மையும்	663, 664

இ

இசை வகைகள்	375
இசையால் ஏத்துவார்க்கு உளதாம் பயன்	251
இச்சை முதலிய மூன்று சத்திகளே இறைவனுக்கு அந்தக் கரணங்கள்	668, 669
இடியபலி	328
இண்டை	78
இந்திரம்	212
இராமன் சிவபெருமானைப் பூசித்துத் துன்பம் நீங்கப் பெற்றமை	532
'இராவணன்' என்பதன் பொருள்	179
இருதய கமலத்தின் இயல்பு	584, 585
இருதலங்களை இணைத்துப் பாடிய திருப்பதிகம்	82
இருதிருப்பதிகங்கள் ஒரு தன்மையாய் அமைதல்	471
இருவகை இடர்	227

Koviloor Digital Library

	பக்கம்
இருவர், மூவர் - விளக்கம்	742
'இலம்' என்னுஞ் சொல்லின் புணர்ச்சி விதி	440, 441
இலிங்க புராணச் சிறப்பு	541
'இல்லாத தரவு' விளக்கம்	742
இழிவிற்கு நாயை உவமை கூறுதல்	487
இறக்கம் செய்தல்	457
இறக்குங்காலத்து இறைவனை நினைத்தல் வேண்டும் எனல்	340
இறப்பில் நிகழ்வு	70, 630
இறவாதார்	14
இறை ஒன்றே	701, 702
இறைச்சிப் பொருள்	
இறையுணர்விற்குக் கல்வி கேள்விகள் இன்றியமையாதனவாதல்	617, 618
இறைவனது பெருமையும் உயிர்களது சிறுமையும்	192, 193
இறைவனுக்கு அணியாய பாம்புகள் என்றும் ஒரு பெற்றியவாதல்	420, 925
இறைவனை இகழ்ந்து நினையினும் வீடு கூடும் என்பாரது கூற்றுப் பொருந்தாமை	45
இறைவன் உலகத்தோடு அத்துவிதமாய் நிற்றல்	684, 685
இறைவன் கலப்பினல் எல்லாப் பொருளுமாய் நிற்றலை அருளிச்செய்த திருப்பதிகம்	685
'இறைவன்' - சொல்லாக்கம்	19
இறைவன் நூலின் மூன்று பகுதிகள்	121

ஈ

ஈமஞ்சூழ்ந்த இடுபிணக்காடு	78

உ

உடம்பு உள்ள நிலை வீடுபேறு ஆகாமை	594
உடனிலை உள்ளுறை	603
'உடை', 'ஆடை' - விளக்கம்	359
'உண்டு' என்னுஞ் சொல்லின் இயல்பு	721
உயிரெதுகை	10
உயிர்களிடத்து இரக்கம் வேண்டும்	441

Koviloor Digital Library

பக்கம்

உயிர், மகனைத் தோன்றுதல் 189, 190
'உருத்திரன்' என்னும் பெயர் விளக்கம் 655, 656
உருத்திர பல்கணத்தார் 731
உரைமாலை 49
உலகியல் மெய்ந்நெறிகளின் இயல்புகள் 708
உழிதர்வான் 29
உளர் ஒளி 490
உள்ளக்கிழியின் உருவெழுதல் 186
உள்ளத்துள்ள உறுபிணி 31
உறவு பகை உணர்ச்சிகளும், யான் என்பதும் நீங்கி இன்பம் பெறுமாறு 447

ஊ

ஊண் 36
ஊணலா ஊண் 86

எ

எங்கும் சிவமாகக் காணும் நிலை 448
'எங்கெழில் என் ஞாயிறு' என்பதன் விளக்கம் 695
எண்குணம் 125
எதிர்வில் இறப்பு 177
எத்துணைப் பெரியோர்க்கும் திருக்கோயில் வழிபாடு தவிரற்பாலதாகாமை 672, 673
எந்தையார் (இறைவன்) திருப்பெயர் இது எனல் 683
எரியோம்பல் சந்தியாவந்தனம் இவை பற்றிய விளக்கம் 542, 543
எல்லாம் ஒடுங்குங்காலத்து இறைவன் ஆடல் புரிதல் 64
எல்லாம் சிவன் 35
எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்தான் 145
எழில் ஆரும் பொழில் 463
எழுவர் முனிவர் 720
என்னவன் 323
என்னன் 332

Koviloor Digital Library

பக்கம்

ஏ

'ஏகம்பன்' என்பதன் பொருள் 323
ஏகாசம் 100
ஏகாந்தர் 707
'ஏழிசையாய் இசைப்பயனாய்' 6
ஏழில் ஓசை 135
ஏழுலகுங் கடந்து அண்டத்து அப்பால் நின்ற பேரொளி 8
ஏழைத்திருத்தாண்டகம் 19
ஏழ்கடல் 235, 236
ஏழ்பொழில் 236
'ஏறூர்ந்த செல்வன்' என்பதன் உண்மைப் பொருள் 688, 694

ஐ

ஐகாரம் உருபாகாது சாரியையாதல் 95
ஐம்புரி 59
ஐயம் உடையார் வீடு பெருமை 501
ஐயான் 336
ஐயிரண்டு 126
ஐராவதம் சிவபெருமானை வழிபட்டமை 263
ஐவகை வேள்வி 382, 383

ஒ

ஒண் உள் 736
ஒப்பில் போலி 70
'ஒப்புடைய மாதர்' - விளக்கம் 693
ஒரு தலத்தில் பிற தலங்களை நினைந்து பாடியருளுதல் 6
ஒரு தொடரே மீள மீள வருதல் 42
'ஒருவீர்' என்னும் பெயர் 202

ஓ

ஓங்காரம் 181
ஓங்கார விளக்கம் 546
ஓசையும் ஒலியும் 278, 280

Koviloor Digital Library

பக்கம்

க

கங்காவிசர்சனமூர்த்தி 466
கங்காளம் 653, 713
கச்சியின் சிறப்பு 33, 34
கச்சிமயானம் 725
கண்ணப்பர் வரலாறு 95
கண்ணன் குருந்தொசித்த வரலாறு 26
'கண்ணுதலாய்' என்ற குறிப்பு 697
கண் மாயம் 189
கதி அஞ்சு 128
கதிரோர் இருவர் 385
கந்தருவம் செய்யும் இருவர் 21
கபாலப்பனுர் 91
கயிறு 96
கயிலாயநாதனையே காணவும் வாழ்த்தி வணங்கவும் வேண்டும் 508
கயிலைப் போற்றித் திருத்தாண்டகங்களில் சிந்தையில் நிற்றலை அருளியது 417
கரக்கோயில் 521
கருடன் செருக்கு நீங்கிய வரலாறு 197
கருமான் 4
கல்லாதார் 36
கலாநியாசத்திற்கு உரிய திருப்பதிகம் 137
கலை எட்டு 253
கல் அலகு 52, 53
'கல் உயிர்' - விளக்கம் 399
கணம்புல்லன் கருத்துகந்தார் 95
கலை கண் எட்டு 254
கள்ளிறு உயர்திணைப்பன்மை உணர்த்துதல் 53
கற்றவர்கள் 234
கற்றூர் 36
கற்றுணை 3
கனவயிரக் குன்றனைய காட்சியான் 5

Koviloor Digital Library

பக்கம்

கா

கா	740
காட்சி எட்டு	253
காணுவண்ணம் நின்ற ஒளி	8
காபால வேடம்	718
'காப்பு' என்பது இடத்தைக் குறித்தல்	52
காப்பு எட்டு	253
காமக்கோட்டம்	33
காமக்கோட்டி கம்பரைத் தழுவிய வரலாறு	33
காரோணமாவது இதுவெனல்	14
காலனும் காலன்	118
காளியின் வரலாறு	384
காறை	30
'கான்' என்பது மயிலின் தோகையை உணர்த்தல்	91

கி

கிளர் ஒளி	490

கு

குடந்தைக் குளத்தில் தீர்த்தங்கள் பலவும் கலந்துநிற்றல்	554
குணமும் குறியும்	348
குயவர்	116
குரவிக் குடிவாழ்க்கை	308
குருகாம் வயிரமாம்	112
குலவரை	4
குலாவுதல்	15
குறைந்தடைந்தார் ஆழாமைக் காத்தல்	45
குன்றவார் சிலே, நாண் அரா அரிவாளிகாற்றின் மும்மதில்வென்றது	6

கூ

கூர் எரி	6
கூடல் ஆலவாய்	145, 146

Koviloor Digital Library

பக்கம்

'கூருடைய' என்பது 'கூறுடைய' எனத் திரிதல் 722, 724
'கூறு ஏற்கக் கூறமர வல்லான்' என்றதன் பொருள் 22, 23

கே

கேள்வி உணர்வை எய்திச் சிந்தனை உணர்வில் தலைப் பட்டவரது நிலை 259

கை

கையலகு 724

கொ

கொகுடிக்கோயில் 521
கொடுகொட்டி 70
'கொல்' என்பது கொன்று என வருதல் 214
கொல் ஏறு 15
கொல்லுங் கூற்று ஒன்று 36
'கொல்லையேறு' என்பதன் பொருள் 132

கோ

கோசரம் 33
கோடாலவேடம் 131
கோவண ஆடை 725
கோவண உடை 188
கோவாடல் 735

ச

'சங்கநிதி', 'பதுமநிதி' இவற்றின் விளக்கம் 707
சங்கரர் 15
சங்கரநாராயணர் நிலை 419, 420
சண்டேசுரர் வரலாறு 553
"சத்தம், ஒலி" - பொருள் 395
சத்திநிபாதத்து உத்தமர்களது நிலை 191, 192
சந்தி 242
சந்தோகசாமம் 361

Koviloor Digital Library

	பக்கம்
சமணத் துறவிகளுள் பெண்பாலர் இயல்பு	26
சமணரது தெய்வத்தின் இயல்பு	616
சமணர் அறந்தெரியாமை	668
சமணர் இயல்பு	22, 23, 24, 89, 297, 523
சமணர் தவம் அவமாதல்	27
சமண் சமயத்தின் இயல்பு	500
சமிதை அஞ்சு	128

சா

சாபமொழி	202

சி

சிட்டர்	17
சிட்டன்	722
சிந்தைதனை மயக்கம் தீர்க்கும் ஏரொளி	8
சிந்தையில் தீர்வினை	21
சிரை	37
சிலந்தியை அரசனுக்கிய வரலாறு	156, 552
சில்லை	37
'சிவ' என்று சொல்வாரது சிறப்பு	708, 710
சிவஞானிகட்கு மலவாசனை தாக்குமிடத்து அதனின் நீங்குதற் பொருட்டுத் தோன்றிய திருப்பதிகம்	201
சிவநெறி ஒழுகுவார்க்குச் செந்நெறியருளும் திருப்பதிகம்	437
சிவநெறிக்கு இன்றியமையாத் திருப்பதிகம்	228
சிவபிரானே பரம்பொருள் என்பதே வேதத்தின் துணிபு	64, 65
சிவபிரானது அம்பு அமைந்த முறை	231
சிவபிரான் தேவருள் ஒருவனுகாமை	632
சிவபுரத்தில் வராக அவதாரங்கொண்ட திருமால் வழிபட்டமை	637
சிவபூதங்களின் இயல்பு	649
சிவபெருமான் அகத்தியனை உகந்தவன்	361
சிவபெருமான் அங்கங்கே சிவமாகி நிற்றல்	270
சிவபெருமான் அங்கணன்	235
சிவபெருமான் அசங்கையன்	492

Koviloor Digital Library

	பக்கம்
சிவபெருமான் அடக்கமுடையவன்	415
சிவபெருமான் அடியவரது அகவழிபாட்டினை ஏற்றருளுதல்	41
சிவபெருமான் அடியவரது அனுசாரத்தைப் பொறுப்பவன்	589
சிவபெருமான் அடியார் அடிமை அறிபவன்	416
சிவபெருமான் அடியார் குடியினன்	134
சிவபெருமான் அடியார்க்கு அணியவன்	350
சிவபெருமான் அடியவர்க்கு அன்பனுதல்	485
சிவபெருமான் அண்டங்கடந்து நிற்கும் ஒளி	459
சிவபெருமான் அண்டத்தார்க்குச் சேயவன்	350
சிவபெருமான் அண்டத்துக்கு அப்பாலாய் இப்பாலாதல்	30
சிவபெருமான் அண்டத்துக்கு அப்பாலைக்கு அப்பாலான்	580
சிவபெருமான் அண்டங்களின் உள்ளும் புறம்புமாய் நிற்றல்	46
சிவபெருமான் அருமணி	334
சிவபெருமான் 'அவன், இவன்' என்று அறிய ஒண்ணுதவன்	622
சிவபெருமான் அவியை உண்ணுதல்	80, 81
சிவபெருமான் அவ்வச் சமயத்தார் கொண்ட தேவனுதல்	115, 116
சிவபெருமான் அழலாய் நீண்டமை	51
சிவபெருமான் அளவில் புகழுடையனவாதல்	47
சிவபெருமான் அறம் நால்வர்க்கு அறியவைத்தமை	107
சிவபெருமான் அறவன்	342
சிவபெருமான் அறியாதார்தம் திறத்து அறியாதான்	669
சிவபெருமான் அறிவரிய நிறத்தன்	550
சிவபெருமான் அற்ருர்க்கு அற்ருன்	596
சிவபெருமான் அனுதி சைவன்	553
சிவபெருமான் அந்தகனுக்கு அந்தகன்	540
சிவபெருமான் அந்தணனும் ஏனைய வருணத்தானுமாய் இருத்தல்	658
சிவபெருமான் அந்தியில் அரனுதல்	41
சிவபெருமான் அந்தியும் சந்தியுமாதல்	575
சிவபெருமான் அபரமுக்தர்க்குச் சார்பாய் நிற்றல்	44
சிவபெருமான் அப்பாலைக்கு அப்பாலைக்கு அப்பாலான்	197
சிவபெருமான் அமுதமுண்ட அமரர் உலந்தாலும் உலவாதான்	362

Koviloor Digital Library

	பக்கம்
சிவபெருமான் அயனுக்கும் மாலுக்கும் முழுமுதல்	614
சிவபெருமான் ஆகாயவண்ணம் உடையவன்	412
சிவபெருமான் ஆணி	334
சிவபெருமான் ஆதி	78
சிவபெருமான் ஆதி மாதவன்	31
சிவபெருமான் ஆம்பல் மலர் அணிதல்	38
சிவபெருமான் ஆயிரம் தோள் உடையவன்	325
சிவபெருமான் ஆரேனுந்தன்னடியார்க்கு அன்பன்	291
சிவபெருமான் ஆரேனும் அடியவர்கட்கு அணியான்	7
சிவபெருமான் உயிர் உணர்வைப் பிணித்துக்கோடல்	46
சிவபெருமான் உலக இன்பத்தினைப் பயத்தல்	47
சிவபெருமான் ஊழிதோறும் உயர்தல்	47
சிவபெருமான் எண்குணங்களையும் குறிக்கும் திருத்தாண்டகம்	413
சிவபெருமான் ஒருகாலத்து ஒன்ருகிநிற்றல்	47
சிவபெருமான் ஒறுத்தல்	46
சிவபெருமானது காலில் கழலும் சிலம்பும் ஆர்த்தல்	47
சிவபெருமானது கோலங்களின் அனுபவம்	564
சிவபெருமான் கரவிலார்க்கு அருள் செய்தல்	46
சிவபெருமானது தடத்தநிலை சொரூபநிலை முதலியன	113
சிவபெருமானது தன்மையை அவன் அடியவர் தன்மையைக்கொண்டே அறிதல் கூடும்	452
சிவபெருமானது திருக்கூத்தின் உண்மை	321, 322
சிவபெருமானதுதிருவடி அணியனவும் சேயனவும் அல்லவாதல்	50
சிவபெருமானது திருவடி அருமை உடைத்தாதல்	51
சிவபெருமானது திருவடி அருள்வடிவாதல்	50
சிவபெருமானது திருவடி அரைமாத்திரையில் அடங்கல்	49
சிவபெருமானது திருவடி அவரவர் வணங்கும் உருவமாதல்	352
சிவபெருமானது திருவடி இயல்பு	43
சிவபெருமானது திருவடிகளின் முதன்மை	45
சிவபெருமானது திருவடிகளைச் சிலர் அடையாமைக்குக் காரணம்	45

Koviloor Digital Library

பக்கம்

சிவபெருமானது திருவடிகள் உலகரை ஆட்கொள்ளுதல் 48
சிவபெருமானது திருவடிகள் காரணக் கடவுளர்க்குச் சார்பாய் நிற்றல் 44
சிவபெருமானது திருவடிகள் கரவுடையார்க்கு அருளாமை 45, 46
சிவபெருமானது திருவடிகள் மன, மொழி, மெய்கட்கு அகப்படுதல் 46
சிவபெருமானது திருவடியும் விரல்களும் 31
சிவபெருமானது திருவடி பிணிப்புண்டார்க்குப் பயன்தருதல் 46
சிவபெருமானது புகழைப் பேசுதல் வேண்டும் 444
சிவபெருமானது பொய்யாத சேவடி 741
சிவபெருமானது பொருந்தாத செய்கைகள் 569
சிவபெருமானது மூவகை வடிவம் 248
சிவபெருமானது வேடங்களெல்லாம் சத்தி வடிவமே 446
சிவபெருமானது வேடங்கள் ஞானத்தைத் தருவன 428
சிவபெருமனது வேடம் ஒன்றோடு ஒன்று ஒவ்வாமை 47
சிவபெருமானுக்கு அடியவராயினரது பெருமையை விளக்கும் திருப்பதிகம் 728
சிவபெருமானுக்கு அர்ச்சனை பாட்டேயாதல் 410
சிவபெருமானுக்கு ஆலாலசுந்தரர் இருகவரி வீசுதல் 714
சிவபெருமானுக்கு வாயில் காவலர் மாகாளராதல் 714
சிவபெருமானுக்கு வாயு முதலியோர் அம்பாயினமை 365
சிவபெருமானுடைய உண்மை இயல்பின் தன்மை 726
சிவபெருமானை அடைந்தவர் கேடிலராதல் 485
சிவபெருமானை அடைந்தோர் அவனது எண்குணங் களையும் பெறுதல் 735
சிவபெருமானை அடையாமல் பிறவி நோய் நீங்காதெனல் 392
சிவபெருமானை ஞானத்தால் வணங்குவோர் மிகச் சிலரே 452
சிவபெருமானைத் தொண்டர் பரவும் இடங்கள் 407
சிவபெருமானை நாள்தோறும் தொழுதல் வேண்டும் 438
சிவபெருமானைப் பாட்டின் பொருள் தெரிந்து துதித்தல் வேண்டும் 486
சிவபெருமானைப் பொதுநீக்கி நினைதல் 5
சிவபெருமானை முப்பத்தெட்டுக் கலைவடிவில் வழிபடுதல் 643

Koviloor Digital Library

பக்கம்

சிவபெருமானை யாவரும் உருவறியார் 480
சிவபெருமான் ஆல்நிழலிலிருந்து நான்கு முனிவர்கட்கு நான்கு வேதங்களை அருளியது 139
சிவபெருமான் ஆழ்ந்து ஆழாதான் 87
சிவபெருமான் ஆறு சமயத்திற்கும் தலைவன் 475
சிவபெருமான் இகழாது பரந்து ஒன்றானவன் 90
சிவபெருமான் இசையை மிக விரும்புபவன் 414
சிவபெருமான் இந்திரனைத் தோள் துணித்தமை 228
சிவபெருமான் இயல், இசை, நாடகமாய் இருத்தல் 349
சிவபெருமான் இயல்பாய ஈசன் 95
சிவபெருமான் இருதிறப்பட்டும் ஒருவனாகியும் நிற்றல் 113
சிவபெருமான் இருளாய் நிற்றல் 198, 199
சிவபெருமான் இருளும் ஒளியும் ஆதல் 645, 646
சிவபெருமான் இல்லவன் 347
சிவபெருமான் இல்லார்க்கு ஒன்று அல்லார்க்கு அல்லான் 312
சிவபெருமான் இறையான் 25
சிவபெருமான் இன்ன உரு என்று அறியவொண்ணாதான் 357
சிவபெருமான் உடலின் வினைகளை அறுத்தல் 405
சிவபெருமான் உடனாய் விளங்கிநிற்கப் பெறுமாறு 186, 187
சிவபெருமான் உமை அஞ்ச யானையை உரித்துப் போர்த்த வரலாறு 369
சிவபெருமான் உமையம்மை செய்த தவத்தை அளக்கச் சென்றது 361
சிவபெருமான் உமையோடு பொய்த்தல் 317
சிவபெருமான் உயிருணர்வைப் பிணித்தல் 51
சிவபெருமான் உயிர் அறிவினுள் நிற்பவன் 395
சிவபெருமான் உயிர்களது அறியாமையை நாள்தோறும் தேய்த்துவருதல் 562
சிவபெருமான் உரையால் உணரப்படாமை 49
சிவபெருமான் உலகத்தை நடத்துதல் 50
சிவபெருமான் உலகியலுக்கு வேறுபட்டவன் 87
சிவபெருமான் உலகிற்குக் கண்ணாய் நிற்றல் 113, 282, 402
சிவபெருமான் உலகுக்கு அப்பாலும் இப்பாலுமாய் நிற்றல் 496

Koviloor Digital Library

பக்கம்

சிவபெருமான் உலகை முத்தொழிற் படுத்தல் 46
சிவபெருமான் உள் நின்று உணர்த்துதல் 85
சிவபெருமான் உள்ளத்தின் உள்ளே நின்ற கருவாதல் 338
சிவபெருமான் உள்ளவன் 347
சிவபெருமான் உள்ளூறும் அன்பர் மனத்தான் 269
சிவபெருமான் உறவாதல் 338
சிவபெருமான் உறுதி உணரவல்லார்க்கு உறுதிப் பொருளாதல் 84
சிவபெருமான் ஊனும் உள்ளமும் ஆதல் 338
சிவபெருமான் எங்கும் ஒழிவற நிறைந்தவன் 623
சிவபெருமான் எண்ணரும் பல்குணன் 183
சிவபெருமான் எண்ணிறந்த தலங்களில் எழுந்தருளி இருத்தல் 85, 91
சிவபெருமான் எண்ணும் எழுத்துமாய் நிற்றல் 687
சிவபெருமான் எரிசுடராய் நிற்றல் 36, 42
சிவபெருமான் எல்லாத் தேவர்களுமாய்த் திரண்டுநிற்றல் 499
சிவபெருமான் எல்லாமொடுங்கியபின் வீணை வாசித்துக் கொண்டிருத்தல் 258
சிவபெருமான் எல்லாவற்றையும் நினைவுமாத்திரையால் செய்பவன் 321, 356
சிவபெருமான் எவ்வுயிர்க்கும் துணையாதல் 498
சிவபெருமான் என்றும் உள்ளவன் 134
சிவபெருமான் என்றும் ஒரு தன்மையனாய் இருத்தல் 132
சிவபெருமான் ஏகன் 471
சிவபெருமான் ஏணி 333
சிவபெருமான் ஏழுலகிலும் சென்று நடனமாடுதல் 597
சிவபெருமான் ஐவகையாக நினைக்கப்படுதல் 139, 140
சிவபெருமான் ஒரு மணி 334
சிவபெருமான் 'ஒருவன்' எனப்படுதல் 656
சிவபெருமான் ஒன்றாய் இரண்டாகி மூன்றாதல் 198
சிவபெருமான் ஒன்றாய் இருந்து பல ஆயினமை 572
சிவபெருமான் ஓங்காரத்து உட்பொருள் 293
சிவபெருமான் ஓங்காரத்து ஒருவன் 348, 471

Koviloor Digital Library

	பக்கம்
சிவபெருமான் ஓங்கார மெய்ப்பொருள்	627
சிவபெருமான் கங்கையை அணிந்த இரு வரலாறுகள்	366
சிவபெருமான் கங்கையை ஒரு சடையில் கரந்தது	615, 616
சிவபெருமான் கங்கையைச் சடையில் தாங்கி, உலகம் அழியாமல் காத்தமை	673
சிவபெருமான் கங்கையை நங்கை காண ஆடுதல்	527
சிவபெருமான் கடலில் ஒளியாய முத்து	405
சிவபெருமான் கடவுளர்க்கெல்லாம் கடவுள்	388
சிவபெருமான் கண்டன்	63
சிவபெருமான் கண்ணும் கண்ணிற் கருமணியும் மணியில் ஆடும் பாவையுமாதல்	339
சிவபெருமான் கமல மலரை ஆசனமாகக் கொள்ளுதல்	108
சிவபெருமான் கரியமனத்தார்க்குக் கரத்தல்	133
சிவபெருமான் கல்விகளைத் தோற்றுவித்தலேயன்றி, அழித்தலையும் செய்தல்	475
சிவபெருமான் கற்பகமாதல்	338
சிவபெருமான் கற்றதோர் நூலினன்	96
சிவபெருமான் கனத்துக் கனவாதான்	87
சிவபெருமான் கனவில் தோன்றி அருளும் முறை	31
சிவபெருமான் காபாலி	62
சிவபெருமான் காரணக் கடவுளர்கட்கும் காரணன்	290
சிவபெருமான் காரணமாய்த் தனக்குக் காரணமின்றி நிற்றல்	51
சிவபெருமான் கார்க்கொன்றை சூடுதல்	12
சிவபெருமான் குழையும் தோடும் அணிந்தவன்	138
சிவபெருமான் கூத்தாடவல்லான்	5
சிவபெருமான் கொக்கிறகை அணிந்த வரலாறு	288
சிவபெருமான் கோவாத கணையை உடையவன்	420
சிவபெருமான் கையிலும் தலைமாலை ஏந்தியிருத்தல்	101
சிவபெருமான் சகரர்களை ஆட்கொண்டது	256
சிவபெருமான் சங்குத்தோடு அணிதல்	103
சிவபெருமான் சண்டேசுவர நாயனார்க்குக் கொன்றை மாலையை அணிவித்தது	143

Koviloor Digital Library

	பக்கம்
சிவபெருமான் சந்தியாய் நிற்றல்	41, 647
சிவபெருமான் சர்வைஸ்வரிய சம்பந்நன்; சர்வேஸ்வரன்; சம்பு	573
சிவபெருமான் சலந்தராசுரனை அழித்த வரலரறு	503
சிவபெருமான் சாரணன்	60
சிவபெருமான் சார்தற்கு அரியன்	456
சிவபெருமான் சிந்தையாய் நிற்றல்	40
சிவபெருமான் சிலந்தியை அரசாண்டு சிவகணத்துப் புகச்செய்தது	690
சிவபெருமான் சிலையால் புரம் எரித்தமை	85
சிவபெருமான் சிவபுவனத்து அமுதம்	555
சிவபெருமான் சிற்றின்பம் பேரின்பங்களை அருளுதல்	48
சிவபெருமான் சீலன்	117
சிவபெருமான் செம்மைதரும் பொருள்	435
சிவபெருமான் செய்யவளை மாலுக்கு ஈந்தவன்	638
சிவபெருமான் செய்யன், கரியன், வெளியன்.	411
சிவபெருமான் செல்வத்திற்கு நிலைக்களமாதல்	48
சிவபெருமான் செல்வமாதல்	338
சிவபெருமான் செல்வன்	484
சிவபெருமான் சென்றடையாச் செல்வன்	633
சிவபெருமான் சொல்லுவார் சொல்லெல்லாம் சோதிப்பவன்	119
சிவபெருமான் சொற்பொருளும் கடந்த சுடர்ச் சோதி	545, 546
சிவபெருமான் சோதிமிக்க உருவாதல்	338
சிவபெருமான் ஞானத்தார் ஞானமாதல்	81
சிவபெருமான் ஞானத்து ஒளி	64
சிவபெருமான் ஞானம் பெற்றவன்	8
சிவபெருமான் தக்கார்க்கெல்லாம் காரணன்	60
சிவபெருமான் தக்கிணாமூர்த்தி	42
சிவபெருமான் தத்துவங்களுக்குச் சார்பாய் நிற்றல்	30
சிவபெருமான் தத்துவன்	41
சிவபெருமான் தந்த அத்தன் தலையைத் தாங்குதல்	353
சிவபெருமான தந்தை தாய் இல்லாதவன்	304
சிவபெருமான் தமிழோடு ஆரியன்	337

Koviloor Digital Library

பக்கம்

சிவபெருமான தருமிக்குப் பொற்கிழி அளித்த வரலாறு 558
சிவபெருமான் தவநெறிகள் சாதித்தல் 20
சிவபெருமான் தற்பரமாம் தற்பரம் 378
சிவபெருமான் தற்பரம்; சதாசிவம்; தானும் யானும் ஆகின்ற தன்மையன், 733
சிவபெருமான் தன் அடியார்க்குப் பாங்கனுதல் 115
சிவபெருமான் தன்மைக்கண் தானேயாயினவன் 60
சிவபெருமான் தன்னிடத்து அன்புடையாரைப் பிறப்பின் சார்புபற்றி இகழ்தல் இல்லே 708
சிவபெருமான் தன்னே நினேபவரை உலகம் போற்றச் செய்தல் 96
சிவபெருமான் தன்னேத் தொடர்ந்தோரைத் தன்கண் அடங்கச் செய்பவன் 201
சிவபெருமான் தன்னேப் புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப்பவன் 460
சிவபெருமான் தாங்கரிய சிவம் 291, 292
சிவபெருமான் தானே அயனும் மாலும் ஆதலும், பிறரை அதிட்டித்து நிற்றலும் 652
சிவபெருமான் தான்தோன்றி 160
சிவபெருமான் தான் நினேத்த வடிவத்தைக் கொள்ளுதல் 114
சிவபெருமான் திரியம்பகன் 96
சிவபெருமான் தியானிக்கப்படுதற்குரியவன் தான் ஒருவனேயாதல் 124
சிவபெருமான் திருமணி 334
சிவபெருமான் திருவடிகள் ஏனேயோரது அடிகள் போலாமை 48
சிவபெருமான் திருவடிகள் மறைப்பாய் நிற்றல் 45
சிவபெருமான் திருவாதல் 338
சிவபெருமான் திறம் பலவும் வழிகாட்டினவன் 249
சிவபெருமான் தீயாடி 60
சிவபெருமான் தீராநோய் தீர்ப்பவன் 392
சிவபெருமான் துறக்க இன்பம் அருளுதல் 49
சிவபெருமான் துறந்தோருள்ளப் பெரும்பயன் 6
சிவபெருமான் துறவாமே கட்டறுத்தவன் 83
சிவபெருமான் துன்பம் துடைத்தாளவல்லான் 149

Koviloor Digital Library

	பக்கம்
சிவபெருமான் தூநெறிக்குத் தூநெறியாய் நிற்றல்	83
சிவபெருமான் தூநெறிக்கு வழிகாட்டும் தொழிலான்	245
சிவபெருமான் தேசம்பரவப்படுதல்	397
சிவபெருமான் தேவதேவன்	13
சிவபெருமான் தேவர் அறியலாகாத திருவடியையுடையான்	88
சிவபெருமான் தேனுதல்	338
சிவபெருமான் தொழில்நோக்கி ஆள்பவன்	407
சிவபெருமான் தொழுதகை துன்பம் துடைத்தல்	40
சிவபெருமான் தோணி	333
சிவபெருமான் தோத்திரமும் சாத்திரமுமாதல்	575, 576
சிவபெருமான் தோற்றநிலை இறுதிப் பொருள்	464
சிவபெருமான் நடுங்காத தலையை உடையவன்	78
சிவபெருமான் நந்திசனை வாசகனுகக் கொண்டமை	718
சிவபெருமான் நரகத்தைத் தூர்ப்பவன்	170
சிவபெருமான் நல்லாரை நன்மை அறிபவன்	283, 284
சிவபெருமான் நல்வினையும் தீவினையும் ஆதல்	84
சிவபெருமான் நற்பதத்தார் நற்பதம்	698
சிவபெருமான் நாயனுருக்கு எளியன் ஆனமை	703
சிவபெருமான் நாயனுருக்கு விண்ணிலே நின்று அருள் புரிந்தமை	417
சிவபெருமான் நாயனுரைச் சங்கை தவிர்த்து ஆண்டமை	332
சிவபெருமான் நாயனுர் உள்ளச் சிறையில் இருந்தமை	482
சிவபெருமான் நாயனுர்க்குச் செய்த கருணைச் சிறப்பு	450
சிவபெருமான் நாரணனும் நான்முகனுமாதல்	50, 60
சிவபெருமான் நாரணனை இடப்பாகத்துக் கொள்ளுதல்	381
சிவபெருமான் நாவலன்	652
22. வெறி - வாசனை. கூவிளை - வில்வம். தொங்கல் - மாலை. பொறி அரவு - (படத்தில்) புள்ளிகளை உடைய பாம்பு. புள் ஊர்தியான் - திருமால். பொன் நிறத்தினன் - பிரமன். சிவபிரானை இவ்விருவராகவும் அருளிச்செய்தது, காத்தல் படைத்தல் என்னும் அவற்றைச் செய்தும், செய்வித்தும் நிற்றல்பற்றி. 'செய்தல் தூய உலகங்களிடத்து' என்றும், 'செய்வித்தல் தூயவல்லாத உலகங்களிடத்து என்றும்' அறிக. "ஒரு விண்முதல் பூதலம் - ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும் - படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை" (திருமுறை 1. 128. திருவெழுகூற்றிருக்கை) என்றருளியதும் இக்கருத்துப்பற்றி. இனி அவ்விடத்து, "இருவரோ டொருவ னாயினனை" (ஷை ஷை) என்றருளிச்செய்தது, 'இருவர்க்கும் முன்னேனாய் நின்று அவரைத் தோற்றுவித்துப் பின்னர், அவரோடு ஒப்பவைத்து 'மூவர்' என்று எண்ணுமாறு நின்றனை' என்றருளியவாறும். அதியரைய மங்கை, அதிகை. வேறுதலமாகவும்கூறுவர். கெடிலம், திருவதிகையைஅடுத்துஓடும் நதி. இறை - இறுத்தல்; எல்லாப் பொருளினும் தங்குதல். இது வகர இடை நிலை பெற்று இறைவன் என வந்தது, 'துறைவன், தலைவன்' முதலியனபோல. இடைநிலை பெறுதவழி இறையன், இறையான் என வரும். பண்டு - முன்பு. 'இகழ்ந்தவாறு இரங்கத்தக்கது' என்க.

Koviloor Digital Library

23 வெள்ளிக் குன்றன்ன விடையான் தன்னை
வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் தன்னைப்
புள்ளி வரிநாகம் பூண்டான் தன்னைப்
போன்பிதிர்ந் தன்ன சடையான் தன்னை
வள்ளி வளைத்தோள் முதல்வன் தன்னை
வாரா வுலகருள வல்லான் தன்னை
எள்கவிடு பிச்சை யேற்பான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 2

24 முந்தி யுலகம் படைத்தான் தன்னை
மூவா முதலாய மூர்த்தி தன்னைச்
சந்தவெண் திங்க.ளணிந்தான் தன்னைத்
தவநெறிகள் சாதிக்க வல்லான் தன்னைச்
சிந்தையில் தீர்வினையைத் தேனைப் பாலைச்
செழுங்கெடில வீரட்டம் மேவி னானை
எந்தை பெருமானை யீசன் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 3

23. வில்வலான்-காமவேள். வில் வட்டம்-வில்லை வட்டித்த (கையாண்ட) செயல். பிதிர்தல் - பொடியாதல். வள்ளி வளை - வள்ளிபோலும் வளை ; வள்ளி - கொடி. வாரா உலகு - மீண்டு வாராத உலகு ; வீட்டுநிலை. "மீண்டு வாரா வழி யருள் புரிபவன்" (திருவாசகம், கீர்த்தித்திருவகவல் - 117) எனவும், "மற்றீண்டு வாரா நெறி" (குறள் - 356) எனவும் அருளிச்செய்தன காண்க. 'எள்க ஏற்பான்' என இயையும். எள்க - (உலகர்) இகழுமாறு.

24. மூவா - கெடாத. மூத்தல், கெடுதல் என்பது, "மலைத் தலங்கள் மீதேறி மாதவங்கள் செய்து - முலைத்தலங்கள் நீத்தாலும் மூப்பர்" என்னும் ஆளுடையபிள்ளையார் திருமும் மணிக்கோவையாலும் (14) அறிக. முதல் - தலைவன். 'வடிவ முடையவன்' என்னும் பொருளையுடையதாகிய 'மூர்த்தி' என்னும் சொல், 'அருட்டிருமேனியை யுடையவன்' என்னும் பொருளில் வழங்கப்படும். சந்தம் - அழகு. தவநெறிகள் - தவமாகிய நெறிகள். சாதித்தல் - முற்றுவித்தல் ; இது, தன்னை உணர்ந்தார்க்கு என்க. இதனானே, உணராதார்க்கு முற்றுவியா

Koviloor Digital Library

25 மந்திரமும் மறைப்பொருளு மானான் தன்னை
மதியமும் ஞாயிறுங் காற்றுந் தீயும்
அந்தரமு மலைகடலு மானான் தன்னை
யதியரைய மங்கை யமர்ந்தான் தன்னைக்
கந்தருவஞ் செய்திருவர் கழல்கை கூப்பிக்
கடிமலர்கள் பலதூவிக் காலை மாலை
இந்திரனும் வானவருந் தொழச்செல் வானை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 4

26 ஒருபிறப்பி லானடியை உணர்ந்துங் காணார்
உயர்கதிக்கு வழிதேடிப் போக மாட்டார்
வருபிறப்பொன் றுணராது மாசு பூசி
வழிகாணா தவர்போல்வார் மனத்த னாகி

மையும் பெறப்பட்டது. இவ்விரண்டனையும் மார்க்கண்டேயர்வாழ் நாள் பெற்றமையும், தக்கன் தலையிழந்தமையுமாகிய வரலாறுகள் பற்றி யுணர்ந்துகொள்க. சிந்தையில் தீர்வினை - சித்தம் முதலிய கருவிகளின் நீங்கும் செயல்கள், அவை : கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் பகுதியவாய்ப் பல்வேறு வகைப்பட நிகழ்வன. இஃது ஆகுபெயராய், அதன் பயனைக் குறித்தது. எந்தை பெருமான் - என் தந்தையாகிய பெருமான். ஈசன் - ஐசுவரியம் உடையவன்.

25. மறைப் பொருள் வேதத்தின் பொருள். அவை, அறம் முதலிய நான்கு. அந்தரம்-ஆகாயம். கந்தருவம்-இசை. இருவர்: 'ஆகா, ஊகூ' என்னும் கந்தருவர். 'செய்து' என்பதனைச் 'செய' எனத் திரித்து, 'இருவர் கந்தருவம் செய இந்திரனும் வானவரும் கூப்பித் தூவித்தொழ' என இயைக்க. 'காலை மாலை' என்றது அடியவர் வழிபடுங் காலங்களை வகுத்தருளிச்செய்த வாறு. செல்லுதல், அடியவர் வழிபாட்டினை ஏற்றருளுதற் பொருட்டு. 'கந்தருவம் செய்து' என்பது முதல், 'தொழ' என்பதுகாறும் இறைவனது முதன்மையையும், 'செல்வான்' என்றது, அவனது எளிமைத்தன்மையையும் வியந்தருளியவாறு.

26. இத் திருத்தாண்டகம் திருவிலராய அமணர்களது இரங்கத்தக்கநிலையில் தாமும் பன்னாள் இருந்தமையை நினைந்து இரங்கி யருளியது.

Koviloor Digital Library

அருபிறப்பை யறுப்பிக்கும் அதிகை யூரன்
அம்மான்றன் அடியிணையே அணைந்து வாழா
திருபிறப்பும் வேறுவியரா யிருந்தார் சோற்கேட்
டேழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 5

27 ஆறேற்க வல்ல சடையான் தன்னை
அஞ்சனம் போலும் மிடற்றான் தன்னைக்
கூறேற்கக் கூறமர வல்லான் தன்னைக்
கோல்வளைக்கை மாதராள் பாகன் தன்னை
நீறேற்கப் பூசும் அகலத் தானை
நின்மலன் தன்னை நிமலன் தன்னை
ஏறேற்க வேறுமா வல்லான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 6

'ஒரு பிறப்பும்', 'ஒன்றும்' என்னும் சிறப்பும்மைகளும், 'அரும் பிறப்பு' என்னும் மகர ஒற்றும் தொகுத்தலாயின. உணர்ந்தும் காணார் - நினைந்தும் அறியார் என்றவாறும். வரு பிறப்பு-தொன்றுதொட்டு இடையறாது வருகின்ற பிறப்பு; இஃது ஆகுபெயராய் அதன் காரணத்தைக் குறித்தது. நீராடாமையே யன்றி, மாசு பூசிக்கொள்ளுதலும் சமண முனிவரது ஒழுக்கம் என்க. 'வழி காணாதவர்' என்றது, குருடர் என்றருளியவாறும். மனத்தனாகி - மனம்போல் நடப்பவனாகி; என்றது, 'அவர்வயப் பட்டு' என்றவாறு. இருபிறப்பு - இம்மை மறுமை. வெறு வியர் - பயன் ஏதும் பெறாதவர்; ஐம்புல இன்பங்களைக் காய்ந் தமையின் இம்மைப் பயனை இழந்தமையும், அறத்தின் மெய்ம்மை யாகிய திருவருளை உணராமையின் மறுமைப் பயனை இழந்தமை யும் அறிக; "பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்" (திருமுறை - 1 - 116 - 10.) என்றருளிச்செய்தார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். "ஆகி, வாழாது, கேட்டு இகழ்ந்தவாறு இரங்கத்தக்கது" என முடிக்க. "அடியிணையே" என்னும் பிரிநிலை ஏகாரம், இடைக்கண் அதனை விடுத்து வேறொன்றைப் பற்றி அல்லலுற்ற நிலையை விளக்கிநின்றது.

27. 'கூறு' இரண்டனுள் முன்னையது, 'உடற்கூறு, நிலக் கூறு' முதலியனபோல, 'தன்மை' என்னும் பொருளது; பின்னது, 'பகுதி' என்னும் பொருளது. 'தன்மை' என்றது,

Koviloor Digital Library

28 குண்டாக்க னாயுழன்று கையி லுண்டு
குவிமுலையார் தம்முன்னே நாண மின்றி
உண்டி யுகந்தமணே நின்றார் சொற்கேட்
டுடனாகி யுழிதந்தேன் உணர்வொன் றின்றி
வண்டுலவு கொன்றையங் கண்ணி யானை
வானவர்க ளேத்தப் படுவான் தன்னை
எண்டிசைக்கும் மூர்த்தியாய் நின்றான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 7

நுண்ணிலையை. 'பகுதி' என்றது. சத்தியை. எனவே, 'கூறு ஏற்க' என்றது, 'எல்லாப் பொருள்களின் நுண்ணிலையையும் ஏற்று, அவற்றிற்குப் பற்றுக்கோடாய் நிற்க' எனவும், 'கூறு அமர' என்றது, அவற்றின் பருநிலையில் அவற்றுக்கு உள்ளும் புறம்பும் அறிவாய் நிறைந்து நிற்க' எனவும் அருளிச்செய்த வாறும். "கோல்வளைக்கை மாதராள் பாகன்" எனப் பின்னர் அருளிச்செய்தலின், இவற்றை மாதொருபாகராதலின்மேல் வைத் துரைத்தல் கூடாமை யறிக. 'கூறேற்கவும் கூறமரவும் வல்லான்' என்க. நீறு ஏற்க - நீறு, தன்னையே சார்பாகப் பொருந்த. எல்லாம் நீறாயினமையின் அந்நீற்றிற்குப் பிறிதொரு சார்பு இன் றாயிற்று, நின்மலன் - மலம் இல்லாதவன். நிமலன் - மலத்தை நீக்குபவன்; எனவே, 'உலகத்தில் தோய்ந்தும், தோயாது நிற்பவன்' என்றதாம். ஏற்க ஏறுதல் - தக்கவாற்றால் நடத்து தல். ஏறு, அறமும் உயிரும் ஆதலின், அவற்றைத் தக்கவாற்றால் நடத்துபவன் என்பது உள்ளுறைப் பொருள்.

28. அரசரை 'அரசு' என்றல்போல, குண்டரை 'குண்டு' என்றருளினார். குண்டர் - மூர்க்கர்; என்றது. சமணரை; கொண்டது விடாமைபற்றி அங்ஙனம் கூறினார்; "திருந்தா அமணர்" என்றார் திருவிருத்தத்திலும் (திருமுறை 4. 94. 10). குண்டு ஆக்கன் - மூர்க்கர் இனமாகிய செல்வத்தை உடையவன்; என்றது, 'அவரையே ஆக்கந் தருவாராக மயங்கியவன்' என்றவாறு. 'குண்டரக்கனாய்' என்பதும் பாடம். 'ஆய், கேட்டு, ஆகி உழந்தேன்' என இயையும். 'உண்டி உகந்து' என்பதனை, கையில் உண்டு என்பதன் பின்னாக வைத்துரைக்க. 'கையில் உண்டு' என்றது 'கையில் உண்ணும் ஒழுக்கத்தை யுடையாராய்' என்றவாறு. கையில்

Koviloor Digital Library

29 உறிமுடித்த குண்டிகைதங் கையிற் றூக்கி
யூத்தைவாய்ச் சமணர்க்கோர் குண்டாக்கனுய்க்
கறிவிரவு நெய்சோறு கையி லுண்டு
கண்டார்க்குப் பொல்லாத காட்சி யானேன்
மறிதிரைநீர்ப் பவ்வநஞ் சுண்டான் தன்னை
மறித்தொருகால்வல்வினையேன்நினைக்கமாட்டேன்
எறிகெடில நாடர் பெருமான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 8

நின்று உண்ணுதல். இலை முதலியவற்றை நிலத்தில் இடின் சிற்றுயிர்கள் பற்றி இறக்கும் என்று. 'உழன்று, உண்டு, உகந்து, இன்றி நின்றார்' என்க. அமண் - சமண் முனிவரது கோலம் (உடையின்றி யிருத்தல்). உடனுகி - கூடி. 'உணர்வு ஒன்று இன்றி இகழ்ந்தவாறு' என இயையும். 'உழிதந்தேன்' என்பதனை, 'உழிதந்தேனுய்' என எச்சப்படுத்துக. மூர்த்தி - தலைவன்.

29. 'உறியில் முடித்த' என்க. முடித்த - முடியிட்ட; சுருக்கிட்ட. குண்டிகை - கரகம்; இது கஞ்சியை யுடையது. இவ்வாறு உணவை உறியில் வைத்துத் தூக்கித் திரிதல், ஈ எறும்பு முதலிய சிற்றுயிர்கள் வீழ்ந்து இறவாமல் காத்தற்பொருட்டு என்க. 'தூக்கிய' என்னும் பெயரெச்சத்தின் இறுதி அகரம் தொகுத்தலாயிற்று. ஊத்தை வாய், பல் விளக்காமையாலாயிற்று. 'சமணர்க்கோர் குண்டாக்கனுய்' என்றது, 'குண்டர்க்கேற்ற குண்டனுய் அகப் ட்டேன்' என்றிரங்கி யருளியவாறு. 'நெய் விரவு கறி சோறு' என்க. பொல்லாத காட்சி - அருவருக்கத்தக்க கோலம்; அஃது உடையின்றித் திரிதல். 'மறித்து நினைக்க மாட்டேன்' என்றது, 'முன்பு நினைந்த பொருளாய் இருந்தும் பழக்கம்பற்றியும் நினையாதொழிந்தேன்' என்றதாம். 'ஒருகாலும்' என உம்மை விரித்துரைக்க. 'வல்வினையேன்' என்றது, 'அத்துணை வலிதாய் இருந்தது என்வினை' என்றிரங்கி யருளியவாறு. 'நினைக்க மாட்டேனுய் இகழ்ந்தவாறு' என்க. கெடில நாடர் பெருமான் - கெடில நாடர்க்காக எழுந்தருளியுள்ள பெருமான்.

Koviloor Digital Library

30 நிறைவார்ந்த நீர்மையாய் நின்றான் தன்னை
நெற்றிமேற் கண்ணொன் றுடையான் தன்னை
மறையானை மாசொன் றிலாதான் தன்னை
வானவர்மேல் மலரடியை வைத்தான் தன்னைக்
கறையானைக் காதார் குழையான் தன்னைக்
கட்டங்கம் ஏந்திய கையி னானை
இறையானை எந்தை பெருமான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 9

31 தொல்லைவான் சூழ்வினைகள் சூழப் போந்து
தூற்றியே னாற்றியேன் சுடராய் நின்று
வல்லையே இடர்தீர்த்திங் கடிமை கொண்ட
வானவர்க்குந் தானவர்க்கும் பெருமான் தன்னைக்
கொல்லைவாய்க் குருந்தொசித்துக் குழலும் ஊதுங்
கோவலனும் நான்முகனுங் கூடி எங்கும்
எல்லைகாண் பரியானை எம்மான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 10

30. நிறைவு ஆர்ந்த நீர்மை - நிறைவு பொருந்தியதாகிய குணம். "குறைவிலா நிறைவேகுணக்குன்றே" எனச்சுந்தரமூர்த்தி நாயனாரும், (70 - 6) " குறைவிலா நிறைவே " என ஆளுடைய அடிகளும் (கோயிற்றிருப்பதிகம்-5) அருளிச்செய்தவாறறிக. அக் குணமே அவற்கு வடிவாதலை நினைவார், 'நீர்மையனாய்' என்னாது, " நீர்மையாய் " என்றருளிச் செய்தார். 'நிறையார்ந்த' என்பதும் பாடம். மறையான் - வேதத்தின்கண் உள்ளவன். மாசு - மலம். ஒன்று - சிறிது. 'ஒன்றும்' என்னும் உம்மை தொகுக்கப்பட்டது. கறையான் - நஞ்சை உடையவன். இறையான் - யாண்டும் இறுத்தலை (தங்குதலை) யுடையவன். 'எல்லாவற்றையும் இறத்தலை உடையவன்' என்பாரும் உளர்; அப்பொருள், 'கடவுள்' என்பதனான் அமை தலின், இச்சொற்கு வேறு பொருள்வேண்டும் என்க.

31. தொல்லை வான் சூழ்வினைகள் - பழைய, பெரிய, நிறைந்த வினைகள் ; என்றது சஞ்சிதத்தை. சூழ - (அவை பிராரத்தமாய் வந்து) பற்றினமையால். போந்து - (ஆற்ற மாட்டாது) வந்து. 'இயற்றியான்', 'எண்ணியார்', 'தேறியார்', என்றாற்போல (குறள் - 1062, 494, 1154), 'தூற்றினேன்"

Koviloor Digital Library

32 முலைமறைக்கப் பட்டுநீ ராடாப் பெண்கள்
முறைமுறையால் நந்தெய்வ மென்று தீண்டித்
தலைபறிக்குந் தன்மையர்க ளாகி நின்று
தவமேயென் றவஞ்செய்து தக்க தோரார்
மலைமறிக்கச் சென்ற இலங்கைக் கோனை
மதனழியச் செற்றசே வடியி னானை
இலைமறித்த கொன்றையந் தாரான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. 11

திருச்சிற்றம்பலம்

'ஆற்றினேன்' என்பன, 'தூற்றியேன்' 'ஆற்றியேன்' என வந்தன. தூற்றியது, அவ்வினை காரணமாக நிகழ்ந்தவற்றைப் பலரும் அறியப் பாடியருளியது. அதனை, "காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்" என்பது முதலிய திருப்பாடல்களில் (திருமுறை 4 - 1. 5) காண்க. ஆற்றியது, நோயின் முதலினையும், அது நீங்கும் வாயிலினையும் தமக்கையார் அருளக்கேட்டு ஒருவாறு ஆற்றியது. சுடராய்-சோதியுட் சுடராய்; (திருமுறை 5-97 - 3.) அறிவுக்கறிவாய். 'தூற்றியேனும், ஆற்றியேனும் ஆகிய எனக்குச் சுடராய் நின்று' என்க. யமுனை யாற்றில் ஆடையின்றி நீராடிய மகளிர் பலதேவன் வருகையால் நாணமடைய, அவர்கள் மானம் இழவாதபடி கண்ணன் குருந்த மரத்தின் தழைநிரம்பிய கிளையை வளைத்து உதவினான் என்பது பழைய வரலாறு. ஓசித்து - வளைத்து. தானவர் - அசுரர்.

32. 'உடை உடாமை, நீராடாமை' என்னும் சமணநோன்பு களுள் பெண்டிர்க்கு உடை உடாமை உரித்தாகாது, நீராடாமை மட்டுமே உரித்தாகலின், "முலைமறைக்கப்பட்டு நீராடாப் பெண்கள்" என்றருளிச்செய்தார். எனவே, இப்பெண்கள்சமணத் துறவெய்தியவர்என்றதாயிற்று. இவர்க்குத்தவமாவது ஆடவராய சமணத் துறவியர்க்குப் பணிவிடைகள் செய்தலே யாகலானும், அவற்றுள் சிறந்ததொன்றாகிய தலைமயிரைப்பறித்தலை ஒவ்வொரு வராய்ப் போந்து அவர்க்குச் செய்வராகலானும், "முறைமுறை யால் நம்தெய்வம் என்று தீண்டித் தலைபறிக்கும் தன்மையர்கள்" என்று அருளிச்செய்தார். "தீண்டி" என விதந்தோதியது, தீண்டலாகாமையை உட்கொண்டென்க. கானலை நீரென்றே மயங்கி, அதனைத் தெருட்டுவார் சொற்கும் செவிகொடாது

Koviloor Digital Library

செல்லும் பேதைபோல, அவச்செயலைத் தவச்செயலென்றே மயங்கினர் என்பார், "தவமே யென்று அவம் செய்து தக்கது ஓரார்" என்றருளிச்செய்தார். அவர் செயல் அன்னதாதல், 'தவமும் அவமும், வகுத்தான் வகுத்த வகை' (குறள்-377) என்பதும், 'அதனுல் அவனை யறிதலே தவம்; அவனை யறியாமை அவம்' என்பதும் உணராது, அறம்முதலிய உறுதிப் பொருள்களை அடைதற்பொருட்டுக் கிடைத்த, அரிய உடம்பை, ஆற்றப் பகையாக வெறுத்து ஒறுத்தலான் என்க.

"காண்பவன் சிவனே யானுல் அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம்; அரன்றன் பாதம் மறந்துசெய் அறங்களெல்லாம்
வீண்செயல்; இறைவன் சொன்ன விதி அறம்"

என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தினை (சூ. 2. 27.) ஈண்டுக் கருதுக. மதன் - வலிமை,

மற்று மினையன வண்டமிழ் மாலைகள் பாடிவைகி
வெற்றி மழவிடை வீரட்டர் பாத மிகநினைவில்
உற்றதொர் காதலி னங்குநின் றேகியொன் னார்புரங்கள்
செற்றவர் வாழுந் திருவதி கைப்பதி சென்றடைவார். 135

தேவர் பிரான்றிரு மாணி குழியுந் தினை நகரு
மேவினர் சென்று விரும்பிய சொன்மலர் கொண்டிறைஞ்சிப்
பூவலர் சோலை மணமடி புல்லப் பொருண்மொழியின்
காவலர் செல்வத் திருக்கெடி லத்தைக் கடந்தணைந்தார். 136

வெஞ்சமண் குண்டர்கள் செய்வித்த தீய மிறைகளெல்லாம்
எஞ்சவென் றேறிய வின்றமி ழீச ரெழுந்தருள
மஞ்சிவர் மாடத் திருவதி கைப்பதி வாணரெல்லா ந்
தஞ்செயல் பொங்கத் தழங்கொலி மங்கலஞ் சாற்றலுற்ருர். 137

மணிநெடுந் தோரணம் வண்குலைப் பூக மடற்கதலி
யிணையுற நாட்டி யெழுநிலைக் கோபுரந் தெற்றி யெங்குந்
தணிவில் பெருகொளித் தாமங்க ளுற்றிச்செஞ் சாந்துநீவி
யணிநகர் முன்னை யணிமே லணிசெய் தலங்கரித்தார். 138

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

4. திருஅதிகை வீரட்டானம்

திருப்பதிக வரலாறு

திருவதிகையில் நாயனுர் பணிசெய்திருக்கும் நாட்களில் மனம் பரிவுறு செந்தமிழ்ப் பாட்டுப் பல பாடியவற்றுள் அமைந்தது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 144). எல்லாப் பாட்டுக்களிலும் இறைவனது அடையாளங்களை எடுத்துக் கூறிப் பாடப்பட்டிருத்தலால் இது, 'அடையாளத் திருத்தாண்டகம்' எனப் பெயர் பெற்றது.

அடையாளத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

33 சந்திரனை மாகங்கை திரையால் மோதச்
சடாமகுடத் திருத்துமே சாம வேத
கந்தருவம் விரும்புமே கபால மேந்து
கையனே மெய்யனே கனக மேனிப்
பந்தணவு மெல்விரலாள் பாக னுமே
பசுவேறு மேபரம யோகி யாமே
ஐந்தலைய மாசுணங்கோண் டரையார்க் கும்மே
அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. 1

அடையாளம் அருளிச் செய்யுங் கருத்து, மேல் இரண்டாம் திருப்பதிகத்து இறுதித் திருத்தாண்டகக்குறிப்பிற் கூறப்பட்டது.

" உரிய அன்பினில் காண்பவர்க்கு உண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினுர் "

என்ற சேக்கிழாரது விளக்கத்தினைக் காண்க. (திருஞான. 825.)

இத்திருப்பதிகத்துள் எல்லாத் திருத்தாண்டகங்களிலும், இறுதி நின்றன வொழித்து ஒழிந்த ஏகாரங்களெல்லாம் வினுப் பொருள ; இறுதி நின்றன தேற்றம். வினுவியது சிவபிரானைக் கண்ட அடியவரை என்க.

33. 'கனகமேனிமெய்யனே' எனமாற்றியுரைக்க. அணவும்- பொருந்திய. சுடர்த்தொடி அணிதல் முதலியன போல, பந்தடித்தலும் செல்வமகளிர்க்குச் சிறப்பாவதாம். மாசுணம்-பாம்பு. 'பசு,

Koviloor Digital Library

34 ஏறேறி யேழுலகும் உழிதர் வானே
இமையவர்கள் தொழுதேத்த இருக்கின் றானே
பாறேறு படுதலையிற் பலிகொள் வானே
படஅரவந் தடமார்பிற் பயில்வித் தானே
நீறேறு செழும்பவளக் குன்றொப் பானே
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித் தானே
ஆறேறு சடைமுடிமேற் பிறைவைத் தானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. 2

35 முண்டத்திற் பொலிந்திலங்கு மேனி யானே
முதலாகி நடுவாகி முடிவா னானே
கண்டத்தில் வெண்மருப்பின் காறை யானே
கதநாகங் கொண்டாடுங் காட்சி யானே
பிண்டத்தின் இயற்கைக்கோர் பேற்றி யானே
பெருநிலநீர் தீவளிஆ காச மாகி
அண்டத்துக் கப்பாலாய் இப்பா லானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. 3

என்பது ஆனினத்து இருபாற்கும் பொது; அஃது ஈண்டு அதன் ஆணினைக்குறித்தது. "இருத்துமே" முதலிய எல்லாவற்றிற்கும், 'உம்மாற் காணப்பட்டவன்' என்னும் எழுவாய் வருவித்துரைக்க. 'இருத்தும்' என்பது முதலிய எதிர்கால முற்றுக்கள் இயல்புகுறித்துநின்றன. 'அவன்' என்பது, 'அத்தன்மையன்' என்னும் பொருட்டாய் நின்றது. கந்தருவம் - இசை.

34. 'உழிதருவான்' என்பதில் இடைநின்றஉகரம் தொகுத்தலாயிற்று. பாறு - பருந்து; அஃது ஏறுதல், ஊன் உண்மையால் என்க. 'நீறேறும் செழும் பவளக் குன்றொப்பான்' என்றது இல்பொருளுவமை.

35. 'முண்டம்' என்றது, இறந்த பிரமர்களது தலைகளை; அவற்றால் இயன்ற மாலை சிவபிரான் மார்பில் உளதென்க. 'முண்டத்தின்' என்னும் இன்னுருபு, ஏதுப்பொருட்டு. 'முதல் நடு முடிவு' என்றது, உலகத்தின் தோற்றம் நிலை இறுதிகளை; அவற்றைச் செய்வோனை அவையாகவே உபசரித் தருளினார்; "அந்தம் ஆதி, ஒடுங்கின சங்காரம், சங்காரமே முதல், ஈறே முதல்" எனப் பலவிடத்தும் இவ்வாறே சிவஞான போதத்தும் கூறப்பட்டது. 'வெண்மருப்பு' என்றது, மாயோன் பிறப்பாகிய

Koviloor Digital Library

36 செய்யனே கரியனே கண்டம் பைங்கண்
வெள்ளெயிற்று டரவனே வினைகள் போக
வெய்யனே தண்கொன்றை மிலைத்த சென்னிச்
சடையனே விளங்குமழுச் சூல மேந்துங்
கையனே காலங்கள் மூன்று ஞனே
கருப்புவில் தனிக்கோடும்பூண் காமற் காய்ந்த
ஐயனே பருத்துயர்ந்த ஆனேற் றுனே
அவனுகில் அதிகைவீ ரட்ட ஞமே. 4

37 பாடுமே யோழியாமே நால்வே தம்மும்
படர்சடைமேல் ஒளிதிகழப் பனிவெண் டிங்கள்
சூடுமே அரைதிகழத் தோலும் பாம்புஞ்
சுற்றுமே தோண்டைவாய் உமையோர் பாகங்
கூடுமே குடமுழவம் வீணை தாளங்
குறுநடைய சிறுபூதம் முழக்க மாக்கூத்
தாடுமே அந்தடக்கை அனலேந் தும்மே
அவனுகில் அதிகைவீ ரட்ட ஞமே. 5

வராகத்தின் கொம்பினை, அவ் வராகத்தின் செருக்கினுல் உண்டாகிய இடரை நீக்குதற் பொருட்டு, அதனை இறைவன் அழித்து, அவ்வெற்றிக்கு அடையாளமாக அதன் கொம்பினை அணிந்து கொண்டான் என்பது வரலாறு. காறை - கம்பியாக அமைத்து அணியும் அணிகலம். பன்றிக் கொம்பு மார்பில் உள தாகவும் சொல்லப்படும். கதம் - கோபம். கொண்டு - அணிந்து. பிண்டம் - உடம்பு; 'அதன் இயற்கை' என்றது, அதற்கு முதல் களாய் உள்ள தத்துவங்களை; 'அவற்றிற்கு ஓர் பெற்றி' என்றது, சார்பாய் நிற்றலை. அப்பாலாய் இப்பாலாதல் - உள்ளும் புறம்பு மாய் நிறைந்து நிற்றல்.

36. 'செய்யன்' என்பதற்கு, 'மேனி' என்னும் எழுவாய் வருவித்து, 'கண்டம் கரியனே' என மாற்றியுரைக்க. 'போக' என்னும் வினையெச்சம், 'வெய்யன்' என்பதில் தொக்கு நின்ற 'ஆனுன்' என்பதனேடு முடிந்தது; 'வினைகள் நீங்குமாறு அவற்றுக்குப் பகைவனுய் நின்றுன்' என்றவாறு. கொடும் பூண் - வளைந்த அணிகலம்; கழல்.

37. தொண்டை - கொவ்வைக்கனி. குடமுழவம் - குடமுழா; கடம். ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத்தாகிய

Koviloor Digital Library

38 ஒழித்திடுமே உள்குவார் உள்ளத் துள்ள
உறுபிணியுஞ் செறுபகையும் ஒற்றைக் கண்ணால்
விழித்திடுமே காமனையும் பொடியாய் வீழ
வெள்ளப் புனற்கங்கை செஞ்ச டைமேல்
இழித்திடுமே ஏழுலகுந் தானு குமமே
இயங்குந் திரிபுரங்க ளோரம்பினுல்
அழித்திடுமே ஆதிமா தவத்து ளானே
அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. 6

39 குழலோடு கொக்கரைகைத் தாளம் மொந்தை
குறட்பூதம் முன்பாடத் தான்ஆ டும்மே
கழலாடு திருவிரலாற் கரணஞ் செய்து
கனவின்கண் திருவுருவந் தான்காட் டும்மே
எழிலாருந் தோள்வீசி நடமா டும்மே
ஈமப் புறங்காட்டில் ஏமந் தோறும்
அழலாடு மேஅட்ட மூர்த்தி யாமே
அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. 7

(பெரிய புராணம் - திருநீலகண்ட நாயனர் - 1) ஐந்தொழில் நடனமாகலின், "மாக் கூத்து" என் றருளிச்செய்தார்.

38. உள்ளத்துள்ள உறுபிணி, பழவினை, 'உறு', மிகுதி யுணர்த்தும் உரிச்சொல். செறுதல் - தம்மை உடையாரை அழித்தல். பகை, ஆறு; அவை: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம். இழித்தல் - இறக்கிக்கொள்ளுதல். 'தவம்' என்றது ஆகுபெயராய், அந்நிலையைக் குறித்தது, தவம் செய்வார் பலர்க்கும் முதலாய் நின்று காட்டிய தவமாகலின், ஆதி மாதவம்ஆயிற்று இங்குக் கண்ணுருபு விரிக்க. திரிபுரங்களை அழித்தலும், ஆதி மாதவத்திருத்தலும் ஒன்றெடொன் றெவ்வாச் செயல்களாய். புத்தியும் முத்தியும் தரும் முதல்வன் சிவபிரான் ஒருவனேயாதலை விளக்கி நின்றன.

39. கொக்கரை-சங்கு. மொந்தை-ஒருதலைப்பறை. கழல் ஆடு திருவிரல் - திருவடியின்கண் அசையும் சிறந்த விரல்கள், ஞான சத்தியும் கிரியாசத்தியுமே திருவடிகளாதலின், விரல்கள் அவற்றின் கூறுகள் என்க. கரணம் செய்தல் - அசைத்தல்; இது உயிர்களின் நுண்ணுடம்பை அசைத்தலாகக்கொள்க. இறைவன் கனவில் தோன்றியருளுதல் இவ்வாறென்பது இதனுற்பெறுதும்.

Koviloor Digital Library

40 மாலாகி மதமிக்க களிறு தன்னை
வதைசெய்து மற்றதனின் உரிவை கொண்டு
மேலாலுங் கீழாலுந் தோன்ரு வண்ணம்
வெம்புலால் கைகலக்க மெய்போர்த் தானே
கோலாலம் படவரைநட் டரவு சுற்றிக்
குரைகடலைத் திரையலறக் கடைந்து கொண்ட
ஆலால முண்டிருண்ட கண்டத் தானை
அவணுகில் அதிகைவீ ரட்ட ஞமே. 8

41 செம்பொனற் செய்தழகு பெய்தாற் போலுஞ்
செஞ்சடையெம் பெருமானே தெய்வ நாறும்
வம்பினுண் மலர்க்கூந்தல் உமையாள் காதன்
மணவாள னேவலங்கை மழுவா ளனே
நம்பனே நான்மறைகள் தொழநின் ருனே
நடுங்காதார் புரமூன்றும் நடுங்கச் செற்ற
அம்பனே அண்டகோ சரத்து ளானே
அவணுகில் அதிகைவீ ரட்ட ஞமே. 9

ஈமம் - பிணம் சுடும் விறகு. புறங்காடு - சுடுகாடு. 'யாமம்' என்பது. 'ஏமம்' என மருவிற்று. அழல் ஆடுதல் - நெருப்பின் கண் நின்று ஆடுதல். அட்ட மூர்த்தி - எட்டுரு உடையவன். அவை : நிலம், நீர், தீ, காற்று. வானம், ஞாயிறு, திங்கள், உயிர்.

40. 'மதம் மிக்கு மாலாகிய களிறு' என மாற்றியுரைக்க. 'மேலால், கிழால்' என்புழி நின்ற ஆல் இரண்டும் அசைநிலை. 'கை' என்பது இடைச்சொல். 'மெய் போர்த்தான்' என்புழி ஏழாவதன் பொருட்கண் வல்லெழுத்து மிகாமை, இரண் டாவதற்குத் திரிபோதிய இடத்துத் (தொல். எழுத்து. நச். 157.) தன்னின முடித்தலாற் கொள்ளப்படும் ; அன்றி, இரண்டாவது விரிப்பினும் ஆம். 'கோலாகலம்' என்பது குறைந்து நின்றது. கோலாகலம் - ஆரவாரம். பட - உண்டாக. கொண்ட - (தேவர் தமது அறியாமையால்) தேடிக்கொண்ட.

41. 'அழகு பெய்தாற் போலும்' என்றது, 'ஊட்டி யன்ன ஒண்டளிர்ச் செயலை' (அகம்-68) என்ருற்போல இயற்கையைச் செயற்கையோடுவமித்து வியந்தருளியவாறு. "எம்" என்றது,

Koviloor Digital Library

42 எழுந்ததிரை நதித்திவலை நனைந்த திங்கள்
இளநிலாத் திகழ்கின்ற வளர்சடையனே
கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி
கொங்கையிணை அமர்பொருது கோலங் கொண்ட
தழும்புளவே வரைமார்பில் வெண்ணூ லுண்டே
சாந்தமொடு சந்தனத்தின் அளறு தங்கி
அழுந்தியசெந் திருவுருவில் வெண்ணீற் றானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. 10

பிற அடியாரையும் உளப்படுத்து. தெய்வம் - தெய்வ மணம்; இயற்கை மணம். 'தெய்வம் நாறும் கூந்தல், நாண்மலர்க் கூந்தல்' எனத் தனித்தனி முடிக்க. 'வலக்கை' என்பது மெலிந்து நின்றது. மழுவாள், இருபெயரொட்டு. கோசரம் - தேயம்; என்றது உலகங்களை. 'அண்டகோ சத்து ளானே' என்பதும் பாடம்.

42. எழுந்த - ஓங்கிய. 'நதியது எழுந்த திரைத் திவலை களால் நனைந்த திங்களினது இள நிலவு விளங்குகின்ற சடை' என்க. இனி, 'நனைந்த' என்பதனையும் சடைக்கு அடை ஆக்கலுமாம். கோட்டி - கோட்டத்தை யுடையவள். காமக் கோட்டம், கச்சியில் உள்ளது. பொருது - பொருததனால். கோலம் - அழகு. 'கோலமாக' என ஆக்கச் சொல் வருவிக்க. வரை - ஆடவர் மார்பில் இருத்தற்குரியவாகக் கூறப்படும் கீற்று. 'சாந்து' பூசப்படுவ தெனவும், 'அளறு' அப்பப்படுவதெனவும் உணர்க. அழுந்திய - நீங்காது நின்ற.

'உமையம்மையார் கச்சியில் கம்பையாற்றங்கரையில் இறைவனை இலிங்கத்தில் வழிபட்டுக்கொண்டிருக்கும்பொழுது, அவனது திருவிளையாடலால் கம்பையாறு பெருக்கெடுத்துவர, அதனைக் கண்டு, அம்மையார்செய்வதறியாது இறைவனைத்தழுவிக்கொள்ள, வெள்ளம் நெருங்கி வாராது சூழ்ந்து சென்றது' என்பதனையும், 'பின்னர் அம்மையார் தழுவிய கைகளை வாங்க, அவரது தனத் தழும்பும், வளைத்தழும்பும் இறைவரது திருமேனியில் நீங்காது நின்றன' என்பதையும் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள்ளும், காஞ்சிப் புராணத்துள்ளும் காண்க.

இவ்வரலாறு இறைவனது வழிபாட்டினைவலியுறுப்பதாகலின், இதனைச் சிறந்தெடுத் தோதியருளினார். இக்கருத்துப் பற்றியே

Koviloor Digital Library

43 நெடியானும் நான்முகனும் நேடிக் காணு
நீண்டானே நேரொருவ ரில்லா தானே
கோடியேறு கோலமா மணிகண்டனே
கோல்வேங்கை யதளனே கோவ ணவனே
பொடியேறு மேனியனே ஐயம் வேண்டிப்
புவலோகந் திரியுமே புரிநூ லானே
அடியாரை அமருலகம் ஆள்விக் கும்மே
அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. 11

திருச்சிற்றம்பலம்

பிற பல இடங்களினும் கச்சித் திருவேகம்பத்தினை நினைந்தருளிச் செய்தலை ஆண்டாண்டுக் கண்டுணர்க.

கச்சியம்பதி இச்சிறப்பினை யுடைத்தாதல் பற்றியே, திருக் கயிலையில் உபமன்னிய முனிவர், தம் மாணுக்கர்க்கு, 'மாதவம் செய்த தென்றிசை, (பெரிய புராணம் - திருமலைச் சிறப்பு - 25) எனத் தென்றிசையின் உயர்வைக் கூறியருளியபொழுது. அவர் கள், 'மானுடர் வாழும் அத்தென்றிசை, கடவுளர் வாழும் இவ் வடதிசையினும் சிறந்ததாதல் எவ்வாறு?' என ஐயுற்று வினவியதற்கு, 'அங்குள்ள சிவ தலங்களே அச்சிறப்பிற்குக் காரணம்' என்பதுணர்த்துவார், சிறந்தெடுத்தோதிய மிகச் சிலவாகிய தலங்களுள், இதனை எடுத்தோதி யருளினுர் என்க.

43. நெடியான் - திருமால். நேடி - தேடி 'காணுமை' என்பது, ஈறு குறைந்து நின்றது. 'கொடி' என்பது பாம்பிற்கு உவமையாகுபெயராயிற்று. 'மணிகண்டம்' என்னும் உவமத் தொகை, வடநூன் முடிபு. 'புவலோகம்' பூவுலகத்திற்கு மேல் உள்ளது. இதனுனே, இனம் பற்றிப் பிற மேல் உலகங்களும் கொள்ளப்படும் என்க. 'அமரர் உலகம்' என்பது குறைந்து நின்றது.

மன்னிய வன்பின் வளநகர் மாந்தர் வயங்கிழையார்
இன்னிய நாதமு மேழிசை யோசையு மெங்கும்விம்மப்
பொன்னியல் சுண்ணமும் பூவும் பொறிகளுந் தூவியெங்குந்
தொன்னக ரின்புறஞ் சூழ்ந்தெதிர் கொண்டனர் தொண்டரையே.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

5. திருஅதிகை வீரட்டானம்

திருப்பதிக வரலாறு

திருவதிகை வீரட்டானத்தில் தங்கிப் பணிசெயும் நாட்களில் பரிவுறு மனத்தால் பாடிய செந்தமிழ்ப் பதிகங்கள் பலவற்றுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 144), இதன் பாடல்கள் எல்லாவற்றிலும் 'போற்றி, போற்றி' என்று பன்முறையாக அருளப்பெற்றிருத்தலால், இது, 'போற்றித் திருத்தாண்டகம்' எனப் பெயர்பெற்றது.

போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

44 எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங்கூற் றென்றை யுதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி. 1

போற்றித் திருத்தாண்டகம் - போற்றியை யுடைய திருத்தாண்டகம். இதில், 'போற்றி' என்பது அச் சொல்லைக் குறித்தது.

"போற்றினர்" என்பதனை, 'போற்றி செய்தார்' என்றல் வழக்காதலின், 'போற்றி' என்பது இகர ஈற்றுத் தொழிற் பெயராகக் கொள்ளப்படும். அது, 'வணக்கம்' எனப் பொருள்தரும். அதனால் அச்சொல், ஆரியத்துள் 'நம:' என்பது போலத் திருமுறைகளுட் பயின்று வரும் என்க. இனி, 'போற்றிய' என்னும் வியங்கோள் ஈறு கெட்டுப் 'போற்றி' என நின்றதெனவும், இகரம் செயப்படுபொருண்மை யுணர்த்து மெனவும் கொண்டு, 'பாதுகாக்கப்படுக' எனப் பொருள் கூறுவாரும் உளர். அவ்வாறுரைப்பனவெல்லாம் பொருந்தாமை யறிந்து கொள்க.

44. 'சிவன்' என்பது விடாதவாகுபெயராய், 'சிவன் வடிவம்' எனப் பொருள்தரும். என்ன நின்றாய் - என்று

Koviloor Digital Library

45 பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி
பல்லூழி யாய படைத்தாய் போற்றி
ஓட்டகத்தே ஊணு உகந்தாய் போற்றி
உள்குவா ருள்ளத் துறைவாய் போற்றி
காட்டகத்தே ஆடல் மகிழ்ந்தாய் போற்றி
கார்மேக மன்ன மிடற்றாய் போற்றி
ஆட்டுவதோர் நாக மசைத்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. 2

சொல்லுமாறு கலந்து நின்றவனே. 'போற்றி' என்பதன் முன்னும் பின்னும், 'நினக்கு' என்பதும், 'ஆகின்றது' என்பதும் எஞ்சிநின்றன. யாண்டும் இவ்வாறே கொள்க. எரி சுடர் - எரிகின்ற சுடர்; ஒளிப் பிழம்பு. ஆக்கம், உயிர்களின் பொருட்டு அவ்வுருவத்தினை மேற்கொள்ளுதலை யுணர்த்திற்று. இவ்விரு தொடர்களும், 'ஆசனம் - மூர்த்தி - மூலம்' என்னும் முறையிற் செய்யும் வழிபாட்டில் முறையே ஆசனத்திற்கும், மூர்த்திக்கும் உரிய மறைமொழிகளாதற் குரியனவாதலறிக. 'கொல்' கொல்லுதல் என முதனிலைத் தொழிற் பெயர். 'கூற்று' என்பது அஃறிணை வாய்பாடாகலின், 'ஒன்றை' என அருளிச்செய்தார்; அத்தொழில் பெற்று வாழ்ந்து நீங்குவார் பலராகலின், அவருள் ஒருவனே உதைக்கப்பட்டான் என்க. இனி, 'கூற்றாகிய ஒன்றை' என்றுரைப்பினும் ஆம். கல்லாதார் - நல்லாசிரியர் மொழியை உணராதார். அவர் ஒரு மொழியாகச் செவியறிவுறுப்பது திருவைந்தெழுத்தும், நூல்களாலும் பொருந்துமாற்றாலும் விளக்குவது அதன் பொருளுமாகலின், வாளாதே, "கல்லாதார்" எனவும், "கற்றார்" எனவும் அருளிப் போயினார். 'காதல்' என்பதன் பின் 'செய்யும்' என்பது தொகுத்தலாயிற்று.

45. பாட்டு - பாடுதல். ஆட்டு - ஆடுதல். பண்பன் - செம்மையன்; வல்லவன். "பாடுமே யொழியாது நால்வே தம்மும்" என மேலே (திருப்பதிகம் - 4 - 5.) அருளிச் செய்தமையின். இறைவன் பாடுதலுடையனாதலை யறிக. ஊண் - உண்ணுதல். 'ஊண் ஓட்டகத்தே ஆக உகந்தாய்' என மாற்றியுரைக்க. காடு - சுடலை. அசைத்தல் - கட்டுதல்; 'ஆட்டுதற்குரிய பாம்பைக் கட்டிக்கொண்டுள்ளாய்' என வியந்தருளிச் செய்தவாறு. 'ஓர் நாகம்' என்றதில் 'ஒன்று', ஒரு தன்மையைக் குறித்து நின்றது. 'அலை கெடிலம்' என இடத்து நிகழ்பொருளின்

Koviloor Digital Library

46 முல்லையங் கண்ணி முடியாய் போற்றி
முழுநீறு பூசிய மூர்த்தீ போற்றி
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி
ஏழ்நரம்பி னோசை படைத்தாய் போற்றி
சில்லைச் சிரைத்தலையில் ஊணா போற்றி
சென்றடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி
தில்லைச்சிற் றம்பலம் மேயாய் போற்றி
திருவீரட் டானத்தெஞ் செல்வா போற்றி. 3

47 சாம்ப ரகலத் தணிந்தாய் போற்றி
தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி
கூம்பித் தொழுவார்தங் குற்றே வலைக்
குறிக்கொண் டிருக்குங் குழகா போற்றி
பாம்பும் மதியும் புனலுந் தம்மிற்
பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி
ஆம்பல் மலர்கொண் டணிந்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. 4

தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. வீரட்டத்து ஆள்வாய் - வீரட்டத்தின்கண் எழுந்தருளியுள்ள தலைவனே.

46. முல்லை நிலத்தார் செய்யும் வழிபாட்டினையும் ஏற்றருளுதல் பற்றி, முல்லைக்கண்ணியும் இறைவற்கு உரித்தாயிற்று. பிறநிலப் பூக்களும் இவ்வாற்றான் உரியவாம் என்க. இதனானே சிவபிரான் யாவராலும் வணங்கப்படும் முழுமுதற் கடவுளாதல் உணரப்படும். முழுநீறு - மேனி முழுவதுமாகிய நீறு. 'எல்லையாய்' என ஆக்கம் வருவித்து, 'எல்லாக் குணங்கட்கும் எல்லையாய் நிரம்பி (உயர்ந்து) நிற்கும் அருட்குணங்களையுடையவனே' என உரைக்க. படைத்தல் - உடையனாதல். சில்லை - வட்டம். சிரை - மழிப்பு. செல்வன் - இன்பத்திற்கு ஏதுவாய் உள்ள பொருளாய் உள்ளவன்.

47. தவநெறிகள், அடியவர் மேற்கொண்டவை. சாதித்தல்- (துணையாய் நின்று) முற்றுவித்தல். கூம்புதல் - மனம் ஒருங்கி நிற்றல். குற்றேவல் - (அவர் செய்யும்) வழிபாடு; இங்குப் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. குறிக்கொண்டிருத்தல் -

Koviloor Digital Library

48 நீறேறு நீல மிடற்றாய் போற்றி
நிழல்திகழும் வெண்மழுவாள் வைத்தாய் போற்றி
கூறே றுமையொருபாற் கொண்டாய் போற்றி
கோளரவம் ஆட்டுங் குழகா போற்றி
ஆறேறு சென்னி யுடையாய் போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
ஏறேற என்றும் உகப்பாய் போற்றி
யிருங்கெடில வீரட்டத் தெந்தாய் போற்றி. 5

49 பாடுவார் பாட லுகப்பாய் போற்றி
பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
வேழத் துரிவெருவப் போர்த்தாய் போற்றி
நாடுவார் நாடற் கரியாய் போற்றி
நாக மரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடும்ஆன் ஐந்தும் உகப்பாய் போற்றி
அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. 6

பொருளாக நோக்கியிருத்தல். நஞ்சுடைய பாம்பிற்கு நீர் பகை என்க. "சந்திரனை மாகங்கை திரையால் மோதச் சடாமகுடத் திருத்துமே" என மேல் (திருப்பதிகம் - 4-1) அருளிச்செய்தமையால், அது மதிக்கும் பகையாதல் அறிக. பகை தீர்த்தலாவது. ஒன்றால் மற்றொன்று அழிந்தொழியாது என்றும் இருக்கச் செய்தல். "ஒற்றி யூரும் ஒளிமதி பாம்பினை - ஒற்றி யூருமப் பாம்பு மதனையே - ஒற்றி யூர வொருசடை வைத்தவன்" (திருமுறை - 5-24. 1.)என அருளிச்செய்தமையுங்காண்க. இஃது இறைவனது திருவருளின் வன்மையைக் குறிக்கும் குறிப்பாதல் உணர்க. ஆம்பல் மலர்க்கு மேல் (திருத்தாண்டகம் 4) முல்லைக்கு உரைத்தவாறே யுரைக்க.

48. கூறு ஏறு உமை - கூறாய்ப் பொருந்திய உமையை. உமையது கூற்றினை என்றவாறு. கோள் - கொடுமை. 'ஏறவே; என்னும் ஏகாரம் தொகுத்தலாயிற்று. உகப்பாய் - விரும்புவாய்'

49. பழையாறு, பட்டீச்சுரம் சோழநாட்டுத் தலங்கள், பழையாற்றின்கண் உள்ள, என்க. "பட்டீச்சுரத்தாய்" என்பது.

Koviloor Digital Library

50 மண்துளங்க ஆடல் மகிழ்ந்தாய் போற்றி
மால்கடலும் மால்விசும்பு மானாய் போற்றி
விண்துளங்க மும்மதிலு மெய்தாய் போற்றி
வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி
பண்துளங்கப் பாடல் பயின்றாய் போற்றி
பார்முழுதும் ஆய பரமா போற்றி
கண்துளங்கக் காமனைமுன் காய்ந்தாய் போற்றி
கார்க்கெடிலங் கொண்ட கபாலீ போற்றி. 7

'இறைவனே' என்னும் அளவாய் நின்றது. வீடுவார் - பாசம் நீங்கப்பெறுவார். 'வீடுவார்க்கு' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. வன்மை, பிறர் அது மாட்டாமை விளக்கிற்று. 'வெருவ' என்றது, இறைவியுங் கண்டு அஞ்சுதல் பற்றி. ஆடுதல் - மூழ்குதல். ஆன் ஐந்து - ஆவினின்றும் உளவாகின்ற ஐந்து; அவை, 'பால், தயிர், நெய், நீர், சாணம்' என்பன. இவை ஐந்தும் ஒருங்கு சேர்ந்ததே 'ஆனைந்து' (பஞ்சகௌவியம்) எனப்படும். இவற்றுள் ஆனீர் (கோசலம்) சிலதுளிகளாகவும், சாணம் அதனினும்மிகக்குறைந்த அளவுமாகச் சேர்க்கப்படும் என்க. "இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில் - நின்ற மலம்அனைத்தும் நீக்குவது" (திருக்களிற்றுப்படியார் - 7) என்பதனான் ஆப்பியது பெருந்தூய்மையையும், அந் நயத்தானே ஆனீரினதுதூய்மையையும் தெற்றெனவுணர்க. இக்காலத்து இஃதறியாத சிலர், ஆனீரினையும் சாணத்தினையும் பிறவுயிர்களுடையவற்றோடொப்ப வாலாமையுடையனவென மயங்கி அவற்றை மறுத்து, மோரும் வெண்ணெயும் கொண்டு, தம் மனஞ்சென்றவாறே கூறுப. மோரும் வெண்ணெயும் தயிர் நெய்களின் வேறாகாமைதானும் அவர் நோக்கிற்றிலர் என்க.

50. விண்துளங்க-விண்ணுலகம் அதிருமாறு. விகிர்தன் - (உலகியலின்) வேறுபட்டவன். 'கார்' என்னும் மேகத்தின் பெயர், நீருக்கு ஆயிற்று.

Koviloor Digital Library

51 வெஞ்சினவேள் ஏறூர்தி யுடையாய் போற்றி
விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய் போற்றி
துஞ்சாப் பலிதேருந் தோன்ருல் போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
நஞ்சொடுங்குங் கண்டத்து நாதா போற்றி
நான்மறையோ டாறங்க மாஞய் போற்றி
அஞ்சொலாள் பாகம் அமர்ந்தாய் போற்றி
அலேகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. 8

52 சிந்தையாய் நின்ற சிவனே போற்றி
சீபர்ப் பதஞ்சிந்தை செய்தாய் போற்றி
புந்தியாய்ப் புண்டரிகத் துள்ளாய் போற்றி
புண்ணியனே போற்றி புனிதா போற்றி
சந்தியாய் நின்ற சதுரா போற்றி
தத்துவனே போற்றி யென்தாதாய் போற்றி
அந்தியாய் நின்ற அரனே போற்றி
அலேகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. 9

51. சினம், இன அடை. 'துஞ்சாது' என்பதன் ஈறு தொகுத்தலாயிற்று. 'கை' என்பது இடப்பகுதியை யுணர்த்தல் போலக் காலப் பகுதியையும் உணர்த்துமாகலின், "தொழுதகை" என்பதற்கு, 'தொழுத பொழுதே' என உரைக்க. "தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" என்பது திருவாசகத்துப் போற்றித் திருவகவலுள்ளும் (131) வந்தமை காண்க. அம் சொல் - அழகிய சொல். சொற்கு அழகாவது, கேள்வியிலும் பயனிலும் இன்பந் தருதல். அமர்தல் - விரும்புதல். "அஞ்சொலாள் பாகம் அமர்ந்தாய் போற்றி" என்னும் இதுபோல்வன. சார்த்துவகையால் அம்மைக்குரிய மறைமொழிகளாத லுணர்க.

52. 'சிந்தை' என்றது சிந்திக்கப்படும்பொருளே. எனவே, அசிந்திதனுயினும் சிந்திதனுய் நின்று அருளுதலைக் குறித்தருளியவாறும். "சிந்தையாய் நின்ற சிவனே போற்றி" என்பது வழிபாட்டில் மூலமறையாய் நிற்றற்குரியதாதலறிக. சீபர்ப்பதம், 'சீசைலம்' என்னும் தலம். இது தெலுங்கநாட்டில் உள்ளது' 'புந்தியாய்ப் புண்டரிகத்துள்ளாய்' என் றருளினுரேனும், 'புந்திப் புண்டரிகமாய் அதனுள் இருப்பவனே' என்றல்

Koviloor Digital Library

53 முக்கணு போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணு போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றியென் தாதாய் போற்றி
தோக்கணு வென்றிருவர் தோள்கை கூப்பத்
துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய் போற்றி
எறிகெடில வீரட்டத் தீசா போற்றி. 10

திருச்சிற்றம்பலம்

திருக்குறிப்பென்க. இஃது ஆசனம், மூர்த்தி இரண்டற்கும் ஒருங்கே யுரித்தாத லறிக. இதனால், அடியவர் உள்ளத்திருந்து அவரது அகவழிபாட்டினை ஏற்றருளுதலைக் குறித்தருளினமை காண்க. புண்ணியன் - அறவடிவினன். சந்தி; 'காலை, நண்பகல், மாலை' என்னும் முப்போதுகள். சந்திக்குரிய இறைவனை, 'சந்தி' என்றருளினர். இம்முப்போதுகளினும் இறைவி முறையே படைப்பாள் (பிராமி), காப்பாள் (வைணவி), துடைப்பாள் (இரௌத்திரி) என நிற்க, இறைவன் அவளோடு அவ்வாறே உடனாய் நின்று. அவைகளில் செய்யப்படும் தொழுகைகளை ஏற்று அருள்புரிவன் என்க. இதனால் பல தெய்வ உணர்வின்றி, ஒருமுதல் உணர்வோடு செய்யும் சிவநெறி வழிபாட்டு முறை பெறப்படுதல் காண்க. சதுரன் - திறலுடையவன். தத்துவன் - உண்மைப் பொருளாய் உள்ளவன். தாதை - தந்தை; இது விளியேற்று, "தாதாய்" என நின்றது. அந்தி-மாலை; 'முனிவர் வந்தார்; அகத்தியனும் வந்தான்' என்பதுபோல, அருளுதலாகிய சிறப்புப்பற்றி மாலைப்போதினைச் சிறந்தெடுத்தோதினமையின், மேல் "சந்தி" என்றது, ஏனை இரண்டனையுமே எனக் கொள்க. அரன் - அழிப்பவன். உயிர் அழிக்கப்படாமையின், அழித்தல். உயிரைப்பற்றியுள்ளமாசுகளையே என்க. அந்திக்கண் அரனாய் நிற்றல் குறிக்கப்பட்டவாறறிக.

53 'முதல்வன். தலைவன், பதி' என்பன ஒரு பொருட் சொற்கள். ஒரு சில முதன்மையன்றி, எல்லா முதன்மையுமுடைமையின், 'முதல்வன்' என்றருளிச்செய்தார்; கிளந்தோதுமிடத்து. 'முழுமுதற் கடவுள்' எனக் கூறுப. 'பயந்தாய்' என்றது, உலக நலத்தின் பொருட்டு மகன்மை முறையாற்

Koviloor Digital Library

படைத்தருளினமை பற்றி; இதனை, "கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும் - கயாசுரனை அவனாற்கொல் வித்தார் போலும்" எனப் பின்னர் (திருப்பதிகம் 53 - 4) மூத்த பிள்ளை யார்க்கு அருளிச்செய்யுமாற்றான் அறிக. "முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி" என்னும் இதுபோல்வன, சார்த்துவகையால் முருகக்கடவுளுக்குரிய மறைமொழிகளாதலுணர்க. 'தக்கிணன்' என்பது, எதுகை நோக்கித் 'தக்கணன்' என நின்றது; இது, தென்முகக் கடவுளாய் இருந்து அருள்செய்தலைக் குறித்தருளிய வாறு. தருமன் - அறவடிவினன். "தத்துவனே போற்றி என் தாதாய் போற்றி" என்பன மேலும் அருளிச்செய்யப்பட்டன. இவ்வாறு வருதல், அன்புமேலிட்டால் பாடப்படும் வாழ்த்துச் செய்யுட்களுக்கு இயல்பென்க. தொக்கு - கூடி, 'அண்ணல்' என்பது மருவி, 'அண்ணு' என வழங்கும்; அஃது இங்கு இடைக்குறைந்து நின்றது. "தோளும் கையும் கூப்ப" என்றருளியது, கைகளைத் தலைக்கு மேலாக எடுத்துக் குவித்தலை உணர்த்துதற் பொருட்டென்க. துளங்காது - அசையாது; இங்கு 'எரிசுடராய்' என்றருளியது, மாலும் அயனும் அடியும் முடியும் தேடநின்ற உருவத்தினை. எக்கண்ணும் - எவ்விடத்தும். "கண்ணிலேன்" என்பதில் 'களைகண்' என்பது, முதற்குறை யாய், 'கண்' என நின்றது; புகலிடமுமாம். 'எறிகெடிலம்' என்பதற்கு, 'அலைகெடிலம்' என்பதற்கு உரைத்தவாறேயுரைக்க. "எக்கண்ணும் கண்ணிலேன்" என்பதனை ஈற்றில்வைத்து 'நீயே எனக்குக் களைகண்' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமு
நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொன்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே. 140

கண்டார்கள் கைதலை மேற்குவித் திந்தக் கருணைகண்டா
மிண்டாய செய்கை யமண்கையர் தீங்கு விளைக்கச்செற்றம் [னுந்
உண்டா யினவண்ண மெவ்வண்ண மென்றுரைப் பார்கள்பின்
தொண்டாண்டு கொண்ட பிரானைத் தொழுது துதித்தனரே. 141

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

6. திருஅதிகை வீரட்டானம்

திருப்பதிக வரலாறு

திருவதிகை வீரட்டானத்திறைவரை வணங்கி நாயனுர் திருத் தொண்டியற்றியிருக்கும் நாட்களில், உளத்து மிதூர்ந்த பேரன்பினுல் அருளிச் செய்த செந்தமிழ்த் திருப்பதிகங்களுள் ஒன்ருகும் இது. (திருநாவுக். பு - 144.) இத் திருத்தாண்டகப் பாடல்கள் எல்லாவற்றிலும் இறைவன் திருவடியையே சிறப்பித்துக் கூறி யிருத்தலால் ; இது. 'திருவடித் திருத்தாண்டகம்' ஆயிற்று. அகத்தியர் தேவாரத் திரட்டில், திருவடிப் பெருமைக்கு. இத்திருப் பதிகமே சிறந்தெடுத்து வைக்கப்பட்டது.

திருவடித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

54 அரவணையான் சிந்தித் தரற்றும்மடி
அருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணுமடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி
பதினெண் கணங்களும் பாடும்மடி
திரைவிரவு தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. 1

கடவுட் பொருள், பொருளால் ஒன்ருயினும், தீயும் வெம்மையும்போல 'சிவமும் சத்தியும்' எனக் குணிகுணத்தன்மையால் இருதிறப்பட்டு இயைந்துநிற்கும். தீ சுடுதல், அதனது கூருகிய வெம்மையானேயாதல் போல, சிவம் உலகத்தைத் தொழிற்படுத்தல் அதனது கூருகிய சத்தியானேயாம். இனி. உலகத்தைத் தொழிற்படுத்துதற்கு அச்சத்தி முழுவதும் வேண்டப்படாது ஒரு சிறு கூறுதானே அமையுமாகலின், அது இறைவனது திருவடியேயாய் நிற்கும். சத்தி, 'ஞானம், கிரியை (அறிவு, செயல்)' என இருதிறனுய் நிகழுமாதலின், அவை இரண்டுமே இறைவனது இரண்டு திருவடிகளாகும். இதனுனே இறைவனுக்குரிய பெருமைகள் பலவும் அவனது திருவடிக்கே உரியனவாகக் கூறப்படும்.

Koviloor Digital Library

"வாலறிவன் நற்றுள் தொழாஅர் எனின்", "மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்". "வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்", "தனக்குவமை யில்லாதான் ருள்சேர்ந்தார்". "அறவாழியந்தணன் ருள்சேர்ந்தார்", "எண்குணத்தான் தாளை வணங்காத் தலை", "இறைவ னடிசேரா தார்" என. 'நினைதல்' வணங்கல் முதலிய அனைத்தும் திருவடிக்கேயாக யாண்டும் கூறப் படுதல் காண்க. (குறள். 2, 3, 4, 7, 8, 9, 10). திருவடியே வீடுபேருய் நிற்கும் என்பதும் இது பற்றியே என்க. இங்ஙன மாகலின், திருவடியின் பெருமைகளை இத் திருப்பதிகத்தால் வகுத்தருளிச்செய்கின்ருர்; மேல் நான்காந் திருமுறையுள்ளும் திருவையாற்றுத் திருவிருத்தம், திருவின்னம்பர்த் திருவிருத்தம் இவற்றுள் திருவடியின் பெருமை அருளிச்செய்தமை காண்க. "போற்றி யருளுக" என்னும் திருவெம்பாவை இறுதித் திருப் பாடல், சிறப்பாக இங்கு அறியத்தக்கது.

இத்திருப்பதிகத்தின் திருத்தாண்டகங்கள் அனைத்தும், மூன்று. ஆரும் சீர்கள் மாங்கனிச் சீர்களாய் வந்த அறுசீரடி யானே அருளப்பட்டுள்ளன. அதனுல், அச்சீர்களின் இடையசை யீற்றில் ஒற்ருய் நின்றன பலவும், 'விரித்தல்' என்னும் விகார வகையால் வந்தனவே யாதல் காண்க. இவ்வாருகவே, சில விடங்களில் அங்கு வகர யகர ஒற்றுக்கள் இன்றி ஓதுதல் பாடமாகாமை அறிக.

54. அரவணையான் - திருமால். அருமறையான் - பிரமன். சரவணத்தான் - முருகப்பெருமான். அரற்றுதல் - கூப்பிடுதல், "ஐயனே அரனேயென்றரற்றினல் - உய்யலாம்" (திருமுறை. 5-60.7) என்றருளிச் செய்தமை காண்க. முதல் இரண்டு தொடர் களாலும், காரணக் கடவுளர்களுக்குச் சார்பாய் நிற்றல் அருளிச் செய்தவாறு. மூன்ருவதனுல் அபர முத்தர்க்குச் சார்பாதல் அருளிச்செய்தவாறு. நான்காவதனுல். பரமுத்தியாதல்அருளிச் செய்தவாறு. ஐந்தாவதனுல், வினைநீக்கத்திற்கு வாயிலாதல் அருளிச்செய்தவாறு, ஆருவதனுல், யாவராலும் வணங்கப்படுதல் அருளிச்செய்தவாறு. 'தென்கெடிலம்' என்றதில், "தென்னங் குமரி" (பதிற்றுப்பத்து - 2 - 1) என்ருற்போல, இனமில்லாத அடை அடுத்தது; 'தென்' அழகுமாம், செல்வன் - எல்லாம் உடையவன். ஏழு எட்டாம் தொடர்கள் எழுவாய்கள்; ஏனையவை பயனிலைகள்; எழுவாயாய் நிற்கும் 'அடி' என்பன அடைவேறு பாட்டால் ஒரு பொருள் மேற்பல பெயராயின. பின்வருவன வற்றுள்ளும் இவ்வாறுணர்க.

Koviloor Digital Library

55 கொடுவினையா ரென்றுங் குறுகாவடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும்மடி
படுமுழவம் பாணி பயிற்றும்மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவ்வடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சேவடி
கடல்வையங் காப்பான் கருதும்மடி
நெடுமதியங் கண்ணி யணிந்தானடி
நிறைகெடில வீரட்டம் நீங்காவடி. 2

56 வைதெழுவார் காமம்போய் போகாவடி
வஞ்ச வலைப்பாடொன் றில்லாவடி
கைதொழுது நாமேத்திக் காணும்மடி
கணக்கு வழக்கைக் கடந்தவ்வடி
நெய்தொழுது நாமேத்தி ஆட்டும்மடி
நீள்விசும்பை ஊடறுத்து நின்றவ்வடி
தெய்வப் புனற்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. 3

55. முதல் தொடரில் சிலர் அடையாமைக்குக் காரணம் அருளிச் செய்தவாறு. குறைந்து - நலிவுற்று. ஆழாமை - அழியாமல். இதனால் அருள் மிகுதி அருளியவாறு. பயிற்றுதல் - நன்கு உணரச் செய்தல்; இது அவை கற்றாரை என்க. இதனால் முதன்மை அருளியவாறு. நான்காவதனால் ஆற்றல் மிகுதி அருளியவாறு. ஐந்தாவது முதலிய நான்கு தொடர்களும் எழுவாய்கள்.

56. வைதல் - கேடு கூறுதல், எழுதல் - துயிலுணர்தல். போகா அடி - போகாமைக்கு (அவர்கள் அழுந்துதற்கு) ஏதுவாய அடி; இதனால், மறைப்பாய் நிற்றல் அருளியவாறு. இவ்வாறருளிச் செய்தமையின், இறைவனை உறவாக நினையாது பகையாய் நினையினும், உள்பொருளாக நினையாது இல் பொருளாக நினையினும் வீடு கூடும் என்பாரது கூற்றுப்பொருந்தாமையறிக. வஞ்சவலை - வஞ்சனையாகியவலை. பாடு - படுதல்; ஒன்று - சிறிது. 'ஒன்றும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று.

Koviloor Digital Library

57 அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
அழகெழுத லாகா அருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவ்வடி
சோமனையுங் காலனையுங் காய்ந்தவ்வடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்லவ்வடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. 4

இதனால், கரவுடையார்க்கு அருளாமை அருளியவாறு. 'நாம்' என்றது, கரவிலாதார் அனைவரையும் உளப்படுத்து. இதனால், கரவிலார்க்கு அருள்செய்தலும், அவர் அவ்வருளைப்பெறுமாறும், அருளப்பட்டன. கணக்கு - எண். வழக்கு - சொற்றொடர். இதனால், மனமொழிகளைக் கடந்து நிற்றல் அருளப்பட்டது. நெய்' என்றது, எண்ணெய். ஆனெய் தேனெய் என்பன பலவும் அடங்க. இனம்பற்றிப் பால், தயிர் முதலிய பலவுங் கொள்க. 'நெய் ஆட்டும் அடி' என இயையும். இதனால், 'மன : மொழி மெய்கட்கு அகப்படுதல் அருளியவாறு. ஆறுவது தொடரில் அண்டங்களின் உள்ளும் புறம்புமாய் நிற்றல் அருளிச் செய்யப்பட்டது.

57. 'அரும்புவித்த' என்பது, 'அரும்பித்த' எனத் தொகுத்தலாயிற்று, அரும்புவித்தல், தாமரையை என்க. தாமரையை மலர்விப்பதேயன்றி அரும்புவிப்பதும், உலர் விப்பதும் ஞாயிறேயாகலின், இங்கு அரும்புவித்தல் கூறப் பட்டது. இவ்வுவமையால் திருவடி உலகை முத்தொழிற்படுத்தல் விளங்கும். இதனையே, "வானின் - முந்திரவி யெதிர்முளரி யலர்வுறும்ஒன் றலர்வான் முகையாம்ஒன் றொன்றுலரு முறையி னுமே" எனச்சிவப் பிரகாசத்துள் (17) எடுத்தோதினர் என்க. இரண்டாவது தொடரால் உயிருணர்வைப் பிணித்துக் கோடல் அருளியவாறு. 'சுரும்பும் வண்டினங்களும்' என்க. 'மதம்', 'மத்தம்' என நிற்றல்போல, 'இதம்', 'இத்தம்' என நின்றது. இதம் - இனிமை, பிணிப்புண்டார்க்குப் பயனுந்தருதல் அருளிய வாறு. சோமன் - சந்திரன். நான்காவது தொடரில் குற்றம்செய்த லும், செய்தற்கு உடம்படுதலும் உடையாரை ஒறுத்தல் அருளிய வாறு. பித்தர், அன்பர். "பெரும்பித்தர்" என்றதும், 'பிதற்றும்' என்றதும் பழித்தது போலப் புகழ்ந்தவா றென்க. இதனால், பயன்

Koviloor Digital Library

58 ஒருகாலத் தோன்ருகி நின்றவ்வடி
ஊழிதோ றூழி உயர்ந்தவ்வடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும்மடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவ்வடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும்மடி
இன்புற்ருர் இட்டபூ ஏறும்மடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. 5

எய்தினர் அம்மகிழ்ச்சி மேலிட்டால் பலபட வாழ்த்துதல் அருளிய வாறு பிழைத்தல் - பிழைசெய்தல். பிழைப்பு - பிழை. அதை அறிய வல்லுதலாவது, அவர், 'யாம் இதனை மறைத்துவிட்டேம்' என்று உள் மகிழாதவாறு அப் பிழைக்கேற்ப ஒறுத்தலும், மறைக்க வொண்ணுதவாறு வெளிப்படுத்தலும். இதனுல், நடுவுநிலைமை நடாத்தும் திறன் அருளிச் செய்யப்பட்டது. திருந்துதல் - தெளிதல்.

58. 'ஒருகாலம்' என்றது, படைப்புக்காலத்தை. 'ஆண்டு, இறைவர் ஒரு திருவடியினராய் (ஏகபாதராய்) நின்று, தமது இடப்பாதியில் அரியையும், வலப்பாதியில் அயனையும் தோற்று வித்தருளினர்' எனப் புராணங் கூறலின், "ஒன்ருகிநின்றஅடி" என்றருளிச்செய்தார். இதனுல், முதலுருவாதல் அருளப்பட்டது. "ஊழி" என்றது, முற்றழிப்புக் (சருவசங்கார) காலத்தை. ஆண்டு உயர்தலாவது, மாயையைத் தொழிற் படுத்தாதொழிதல், இதனுல், தன்னிலையில் நிற்றல் அருளியவாறு. கழல் ஆடவர்க் கும், சிலம்பு பெண்டிர்க்கும் உரியன. இதனுல், அப்பனும் அம்மையுமாய்ச் செம்பாதியாய் இயைந்து நிற்றல் அருளிச் செய்யப்பட்டது. வருகின்ற திருத்தாண்டகத்துள் "உருவி ரண்டும் ஒன்ருேடொன் ருெவ்வாவடி" என்றருளிச் செய்தலும் இது பற்றி, இஃது அவற்றின் அணிகலன்களையும், அஃது அவற்றின் உருவத்தையும் வியந்தவாறென்க. இந்நிலை உலகின் கண் வைத்தறியப்படாத அதிசய நிலையாகலான் வியப்புத்தருவ தாயிற்று. புகழ் - புகழ்தல்; முதனிலைத் தொழிற் பெயர், தகைத்தல் - தடுத்தல். தகைத்தல், முற்றுப் பெருமையால் இடைக்கண் ஒழியச் செய்தல், இதனுல், அளவில் புகழுடைமை அருளியவாறு. நிலத்தவர் இன்புறுதல், உலகின்பம் பெற்றமை பற்றி. இதனுல் உலகவின்பத்தினைப் பயத்தல் அருளிச் செய்யப்

Koviloor Digital Library

59 திருமகட்குச் செந்தா மரையாமடி
சிறந்தவர்க்குத் தேனுய் விளக்கும்மடி
பொருளவர்க்குப் பொன் னுரையாய் நின்றவ்வடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவ்வடி
உருவிரண்டு மொன்ருேடொன் ருேவ்வாவடி
உருவென் றுணரப் படாதவ்வடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. ௬

பட்டது.' இன்புற்ருர் ' என்றது, அவர்தம்மையே. ' ஏறும் ' என்றது, பயன் பெற்றமை காரணமாக இட்டமையின், ஏருத வாறு ஓதுக்கத் தக்கதென்பதும், அன்னதாயினும், அப்பயன் வழித்தோன்றிய அன்பு காரணமாக இட்டமையானும், அவ்வன்பு தானே பின்னர்ப் பயன்கருதாது செய்யும் அன்பாய் முறுகி வளர்தல் வேண்டுமாகலானும் ஏறக் கொள்ளப்பட்ட தென்பதும் தோன்ற நின்றன. இதனுன், உலகவரை ஆட்கொள்ளுமாறு அருளிச்செய்யப்பட்டது.

59. முதல்தொடர் செல்வத்திற்கு நிலேக்களமாதல் அருளிய வாறு. வீடுபெறுதலே, 'சிறத்தல்' என்பவாகலின், சிறந்தவர், வீடுபெற்ருர். ' தேனுய் ' என்புழி ' இன்பம் ' என்றது எஞ்சி நின்றது. உலகர்க்குச் செல்வம் வாயிலாக இன்பத்தை யருளி, வீடுபெற்ருர்க்குத் தானே நேராய் இன்பம் அருளும் என்றவாறு. இவை யிரண்டனுலும் சிற்றின்பம் பேரின்பங்களே யருளுதல் அருளப்பட்டது. பொருளவர் - செல்வர். ' உரை ' என்றது கட்டளேக் கல்லினே. இதனுல், செல்வம் படைத்தாரது செல்வத் தின் நன்மை தீமைகளே நுண்ணிதாக அளந்து அவற்றிற் கேற்பப் பயன்கொடுத்தல் அருளப்பட்டது. நான்காவது தொடர் மேலேத் திருத்தாண்டகத்துள்ளும் வந்தமை காண்க. உரு வென்று உணரப்படாத - உருவுடைமையே இயல்பென உணரப் படாத ; உருவம் அருவம் இவை அனேத்தையும் கடந்துநிற்றலே இயல்பென உணரப்படுகின்ற; இதனுல், ஏனேயோரது அடிகள் போலாமை அருளப்பட்டது.

Koviloor Digital Library

60 உரைமாலை யெல்லா முடையவ்வடி
　　உரையா லுணரப் படாதவ்வடி
வரைமாதை வாடாமை வைக்கும்மடி
　　வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும்மடி
அரைமாத் திரையி லடங்கும்மடி
　　அகலம் அளக்கிற்பா ரில்லாவடி
கரைமாக் கலிக்கெடில நாடன்னடி
　　கமழ்வீரட் டானக் கபாலியடி. 7

61 நறுமலராய் நாறும் மலர்ச்சேவடி
　　நடுவா யுலகநா டாயவ்வடி
செறிகதிருந் திங்களுமாய் நின்றவ்வடி
　　தீத்திரளா யுள்ளே திகழ்ந்தவ்வடி
மறுமதியை மாசு கழுவும்மடி
　　மந்திரமுந் தந்திரமும் ஆயவ்வடி
செறிகெடில நாடர் பெருமானடி
　　திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. 8

60. உரைமாலை - சொற்கோவை; இது பாட்டும் உரையுமாய் அமையும்; அவை எல்லாவற்றையும் உடைய என்றதனால், புகழ்தக்க பொருள் தாமேயாதல் அருளியவாறு. உரையால் - உரையளவையால்; பிரிநிலைஏகாரம் தொகுத்தலாயிற்று. இதனால், தலைப்பட்டே உணரற்பாலவாதல் அருளிச் செய்யப்பட்டது. வாடாமை - பிரிவால் வருந்தாதவாறு. வைக்கும் - ஒருகூறாகக் கொள்கின்ற. இதனால், வரைமாது பொருளால் வேறாகாமை அருளியவாறு. வானவர்கள் வாழ்த்துதல், துறக்கத்து அழியாது வாழ்தற்பொருட்டு. இதனால், துறக்க இன்பம் அருளுதல் அருளப்பட்டது. மாத்திரை - அளவு. அவை எண்ணல் முதலாக உலகத்தார் கொள்வன. 'அரை' என்றது, அவற்றின் நுணுக்கம் குறித்தவாறு. 'அரை மாத்திரை, பிரணவகலை' என்பாரும் உளர். அளக்கிற்பார் - அளக்க வல்லார். ஐந்து ஆறும் தொடர்களால் முறையே நுண்மையும் பெருமையும் அருளியபடி. கலி - நீராடுவாரது ஆரவாரம். 'மாங்கலி' என்பது பாடமாயின், மாமரங்களின் எழுச்சி என்க. கமழ் - பூவும் புகையும் கமழ்கின்ற.

61. 'நறுமலராய்' என்பதில் ஆக்கம் உவமை குறித்தது, 'பஞ்சாய்ப் பறந்தான்' என்றாற்போல. 'ஏனையோர் அடிகள் மலரோடு உவமிக்கப்படுதல் பொலிவு பற்றியே; இறைவர்

Koviloor Digital Library

62 அணியனவுஞ் சேயனவு மல்லாவடி
யடியார்கட் காரமுத மாயவ்வடி
பணிபவர்க்குப் பாங்காக வல்லவ்வடி
பற்றற்ருர் பற்றும் பவளவ்வடி
மணியடி போன்னடி மாண்பாமடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவ்வடி
தணிபாடு தண்கேடில நாடன்னடி
தகைசார்வீ ரட்டத் தலைவன்னடி. 9

அடிகள் அவ்வாறன்றி நறுமணம்பற்றியுமாகும்' என்பார், இதனை அருளிச்செய்தார். இதனுல், அருள்வடிவாதல் அருளப்பட்டது. 'நடு' என்றது அறத்தையும் நீதியையும். 'உலகம்', 'நாடு' என்பன ஆகுபெயராய், அவற்றது நடையினை உணர்த்தின. இம்மையோடு மறுமையையும் வேண்டி ஒழுகும் ஒழுக்கம் உலகியல்; இம்மை ஒன்றனையே வேண்டி ஒழுகும் ஒழுக்கம் நாட்டியல். அவ்விரண்டனையும் முறையே அறக் கடவுளிடத்தும், அரசனிடத்தும் நின்று நடத்துதலின் இவ்வாறு அருளிச் செய்தார்; இதனுல், உலகத்தை நடத்துதல் அருளியவாறு. மூன்ருவது தொடரால், வெம்மையும் தண்மையுமாய் நின்று உதவுதல் அருளிச் செய்யப்பட்டது. தீத்திரள் - ஒளிப்பிழம்பு. உள்ளே - (யோகியர்) உள்ளத்தே. இதனை, 'தகர வித்தை' என உபநிடதங் கூறும். இதனுல், யோகியர்க்கு அருளுதல் உணர்த்தப்பட்டது. ஐந்தாவது தொடர் தக்கன் வேள்வியில் நிகழ்ந்ததனைக் குறித்தது. அதனுல், மறக் கருணையால் மாசு நீங்குதல் விளங்கும். மந்திரம் - வழிபாட்டுச் சொல். தந்திரம் - வழிபாட்டு நூல். இதனுல், அவையிரண்டாயும் நின்று பயன் தருதல் அருளப்பட்டது. செறி - (நீர்) நிறைந்த; இவ்வாறன்றி நாடருக்கு அடையாக்கலுமாம்.

62. அணியன அன்மை அடியவரல்லார்க்கும், சேயன அன்மை அடியவர்க்கும் என்க; இவ்வாறு எதிர்மறை முகத்தால் அருளிச்செய்தது வலியுறுத்தற்பொருட்டு. இரண்டாவதுதொடர் அடியவர் அல்லார்க்கு அணியன வன்மை மாத்திரையேயன்றிச் செய்யும் தீங்கொன்றுமில்லை, அடியவர்க்கு அணியனவாய்ப் பேரின்பம் பயக்கும் என்றருளியவாறு. பாங்கு-பக்கம். பக்கமாதலாவது, துணையாய்நிற்றல். வல்லுதல், எவ்வகையான இடர்களையும் களையவும், எல்லா இன்பங்களையும் அளிக்கவும் வல்லுதல். 'பற்றற்ருர்' என்றது, உலகப்பற்றின் உவர்ப்புத் தோன்றப்

Koviloor Digital Library

63 அந்தா மரைப்போ தலர்ந்தவ்வடி
அரக்கனையும் ஆற்ற லழித்தவ்வடி
முந்தாகி முன்னே முளைத்தவ்வடி
முழங்கழலாய் நீண்டஎம் மூர்த்தியடி
பந்தாடு மேல்விரலாள் பாகன்னடி
பவளத் தடவரையே போல்வானடி
வேந்தார் சுடலைநீ றுடும்மடி
வீரட்டங் காதல் விமலன்னடி. 10

திருச்சிற்றம்பலம்

பெற்றுரையும், அவ்வாறு தோன்றப் பெற்று அதனின் நீங்கினு ரையும். 'பற்றுதல்' என்றது, துணையாகப் பற்றுதலையும், பேருகப்பெற்று நிற்றலையும். இந்நான்கனுலும், பெறும்பேருதல் அருளியபடி. 'மணியடி'. 'பொன்னடி'. உவமத்தொகைகள்; இவற்ருல் அருமை கூறியவாறு. மாண்பு - ஒப்பற்ற பெருமை; இதனுல், ஒருசொல்லாகப் பெருமை அருளியவாறு. 'பிணி' என்றது பிறவி நோயை. இதனுற் பிறவிப் பிணிக்கு மருந்து தானன்றி வேறின்மை அருளப்பட்டது. தணி - இனிய இசை. தகைசார் - பெருமை பொருந்திய.

63. போது அலர்ந்த - போது அலர்ந்தது போன்ற. அரக்கனையும், உம்மை உயர்வு சிறப்பு. இவையிரண்டனுலும், முறையே மென்மையும் வன்மையும் அருளியவாறு. முந்தாகி - முதற்காலமாய் நின்று. முன்னே முளைத்தல் - ஏனைப்பொருள் களின் தோற்றங்கட்கெல்லாம் முன்னே தோன்றுதல்; இதுவே. சிவதத்துவ நிலையாகச் சொல்லப்படுவது, நான்காவது தொடர் அரியும் அயனும் அடியும் முடியும் தேட நின்ற நிலை; இதுவே. சதாசிவ தத்துவ நிலையாகச் சொல்லப்படுவது, ஐந்தாவது தொடர் உருவத் திருமேனி கொண்டு உலகத்தைத் தொழிற் படுத்தி நிற்கும் நிலை; இதுவே, ஈசுர தத்துவ நிலையாகச் சொல்லப்படுவது. சுத்தவித்தை ஈசுர தத்துவத்துள்ளும், சத்தி தத்துவம் சிவதத்துவத்துள்ளும் அடங்க, சுத்த தத்துவம் மூன்ருகக் கூறப்பட்டவாறு உணர்க. ஆருவது தொடரால் உயிருணர்வைப் பிணித்தற்றன்மை அருளியவாறு. வெந்தார் - எரிக்கப்பட்டார். 'வெந்தாரது நீறு' என்க. இதனுல். எஞ்ஞான் றும் அழிவின்றி நிற்றலையும், யாவும் அழிந்தபின் மீளத்தோற்று தற்கு முதலாதலையும் அருளியபடி. 'முந்தாகி' முதலிய ஐந்த னுலும், உலகிற்குக் காரணமாய்த் தனக்கு ஒருகாரணமின்றி நிற்றல் அருளிச்செய்யப்பட்டது.

Koviloor Digital Library

7. திருஅதிகை வீரட்டானம்

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசு நாயனுர் திருவதிகை வீரட்டானேசுவரரை வணங்கித் திருப்பணி செய்துவரும் நாட்களில் அன்பு மிக்க மனத்தினல் அருளிய திருப்பதிகங்களுள் இஃது ஒன்ருகும். இவை இவை இறைவனுடைய காப்புக்கள் (இடங்கள்) என்றே எல்லாப் பாடல்களும் முடிவதால், 'காப்புத் திருத்தாண்டகம்' எனப் பெயர் பெற்றது. (திருநாவுக். பு - 144.)

காப்புத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

64 செல்வப் புனற்கெடில வீரட்டமும்
சிற்றேமமும் பெருந்தண் குற்ருலமும்
தில்லேச்சிற் றம்பலமுந் தென்கூடலும்
தென்னுனேக் காவும் சிராப்பள்ளியும்
நல்லூரும் தேவன் குடிமருகலும்
நல்லவர்கள் தொழுதேத்து நாரை யூரும்
கல்லலகு நெடும்புருவக் கபால மேந்திக்
கட்டங்கத் தோடுறைவார் காப்புக்களே. 1

காப்பென்னும் தொழிற் பெயர், காக்கப்படுவதாகிய இடத்தினேக் குறித்தது. எனவே, இறைவர் நீங்காதுறையும் இடங்களே யுணர்த்திய திருத்தாண்டகத்தை, 'காப்புத் திருத்தாண்டகம்' என்றதாயிற்று.

இத்திருப்பதிகத்துள் எல்லாத் திருத்தாண்டகங்களிலும் முதற்கண் வீரட்டானத்தை அருளிச்செய்தது, ஆங்கு இறைவரை வணங்கி இன்புறுங்காலத்து, அதுவாயிலாகப் பிற திருப்பதிகளே யும் திருவுள்ளத்து நினேந்தருளினமையான் என்க. இதன் திருப் பாடல்களிலும், மேலேத் திருப்பதிகப் பாடல்களிற் போலவே, இரண்டு மாச்சீர்கட்கு ஈடாக ஒரு கனிச்சீர் பயிலுதல் அறிக.

64. தேவன்குடி - திருந்துதேவன்குடி. கல் அலகு - தாளம். ஓர் ஆயுதம் என்பாரும் உளர். 'ஒருவாச்சியம்' என்றது

Koviloor Digital Library

65 தீர்த்தப் புனற்கெடில வீரட்டமும்
திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
ஆர்த்தருவி வீழ்சுனைநீ ரண்ணுமலை
அறையணிநல் லூரும் அரனே றிய்யும்
ஏத்துமின்கள் நீரேத்த நின்ற ஈசன்
இடை மரு தின்னம்பர் ஏகம்பமும்
கார்த்தயங்கு சோலைக் கயிலாயமும்
கண்ணுதலான் தன்னுடைய காப்புக்களே. 2

66 சிறையார் புனற்கெடில வீரட்டமும்
திருப்பா திரிப்புலியூர் திருவா மாத்தூர்
துறையார் வனமுனிக ளேத்த நின்ற
சோற்றுத் துறைதுருத்தி நெய்த்தானமும்
அறையார் புனலோழுகு காவிரி சூழ்
ஐயாற் றமுதர் பழனம் நல்ல
கறையார் போழில்புடைசூழ் கானப் பேரும்
கழுக்குன்றும் தம்முடைய காப்புக்களே. 3

தமிழ்ப் பேரகராதி (லெக்ஸிகன்), 'கல்லலகும் கபாலமும் ஏந்தி' என்க. வேண்டும் இடங்களில் எல்லாம் உம்மை விரிக்க.

65. தீர்த்தம் - தூய்மை; தெய்வத் தன்மை. அரநெறி - சிவ நெறி; அஃது ஒரு தலத்திற்குப் பெயராயிற்று; அது, திருவாரூரில் உளது. கார்த்தயங்கு - காரொடு (மேகத் தொடு) தயங்குகின்ற (விளங்குகின்ற). 'வீரட்டம் முதலியன, நீர் ஏத்துதற்பொருட்டாகத் திருக்கோயில்கொண்டு நின்ற ஈசனாகிய கண்ணுதலானது காப்புக்களாம்; ஆதலின், அவற்றைச் சென்று ஏத்துமின்கள்' என முடிவு செய்க,

66. சிறை - அணை. துறை - ஆசிரியர் நிறபித்த நெறி. 'முனிகள்' என்பதில் கள் ஈறு உயர்திணைப் பன்மை யுணர்த்துதல், "கடிசொல் லில்லைக் காலத்துப் படினே" (தொல் - சொல் - 452) என்பதனாற் கொள்ளப்பட்டது. 'ஐயாற்றமுதராகிய 'தம்முடைய காப்புக்கள்' என்க. இதனானே ஐயாறும் கொள்ளப் பட்டது. 'அமுதன்' என்பது பாடம் அன்று. கறை-கறுப்பு;

Koviloor Digital Library

67 திரையார் புனற்கெடில வீரட்டமும்
திருவாரூர் தேவூர் திருநெல் லிக்கா
உரையார் தொழுநின்ற ஒற்றி யூரும்
ஒத்தூரும் மாற்பேறும் மாந்து றையும்
வரையா ரருவிசூழ் மாந தியும்
மாகாளம் கேதாரம் மாமேருவும்
கரையார் புனலொழுகு காவிரி சூழ்
கடம்பந் துறையுறைவார் காப்புக்களே. 4

68 செழுநீர்ப் புனற்கெடில வீரட்டமும்
திரிபுராந் தகம்தென்னூர் தேவீச்சரம்
கொழுநீர் புடைசூழிக்குங் கோட்டுக் காவும்
குடமூக்கும் கோகரணம் கோலக் காவும்
பழிநீர்மை யில்லாப் பனங்காட் டூரும்
பனையூர் பயற்றூர் பராய்த்து றையும்
கழுநீர் மதுவிரியுங் காளிங்கமும்
கணபதீச் சரத்தார்தங் காப்புக்களே. 5

69 தெய்வப் புனற்கெடில வீரட்டமும்
செழுந்தண் பிடவூரும் சென்று நின்று
பவ்வந் திரியும் பருப்ப தம்மும்
பறியலூர் வீரட்டம் பாவ நாசம்

மேகம் ; இருள் என்றலுமாம். "காவிரிசூழ் என்பது இருமாச் சீர்க்கு ஈடாக ஒரு விளங்காய்ச்சீர் வந்தது ; வருகின்ற திருப் பாடலிலும் இவ்வாறு வருதல் காண்க.

67. உரையார் - உரைத்தல், புகழ்தல் உடையவர். மாநதி, மாகாளம், ம்ாமேரு இவை வைப்புத் தலங்கள். 'கடம்பு' என் னும் மரப்பெயர் அம்முச்சாரியை பெற்றது.

68. திரிபுராந்தகம், தேவீச்சரம், கோட்டுக்கா, காளிங்கம் - இவை வைப்புத் தலங்கள். கணபதீச்சரம்-திருச்செங்காட்டங்குடி. குடமூக்கு - குடந்தை. (கும்பகோணம்.)

69. பிடவூரும், பாவநாசமும் வைப்புத்தலங்கள். அவற்றுள் பிடவூர் சோழநாட்டின்கணுள்ளது ; சேரமான்பெருமாள்நாயனர்

Koviloor Digital Library

பவ்வந் திரையு மணிமுத்தமும்
மறைக்காடும் வாய்மூர் வலஞ்சு ழிய்யும்
கவ்வை வரிவண்டு பண்ணே பாடுங்
கழிப்பாலை தம்முடைய காப்புக்களே. 6

70 தெண்ணீர்ப் புனற்கெடில வீரட்டமுஞ்
சீகாழி வல்லந் திருவேட்டியும்
உண்ணீரார் ஏடகமும் ஊறல் அம்பர்
உறையூர் நறையூர் அரண நல்லூர்
விண்ணார் விடையார் விளமர் வெண்ணி
மீயச்சூர் வீழி மிழலை மிக்க
கண்ணார் நுதலார் கரபு ரம்முங்
காபாலி யாரவர்தங் காப்புக்களே. 7

71 தெள்ளும் புனற்கெடில வீரட்டமுந்
திண்டீச் சரமுந் திருப்பு கல்லூர்
எள்ளும் படையான் இடைத்தானமும்
ஏயீச் சுரமுநல் லேமங் கூடல்

அருளிச்செய்த ஞானஉலாவினைத் திருக்கயிலையிற் கேட்டு மாசாத்தனார் நிலவுலகில்வந்து வெளிப்படுத்திய இடம். பவ்வம் சென்று நின்று திரியும் - கடல் சென்று நிறைந்து திரும்பும்; என்றது, 'ஊழியினும் அழியாத' என்றவாறு. 'ம' என்பது ஏழிசைகளுட் சிறப்புடையதொன்று, 'இமும்' என்பது எனலுமாம். 'வந்து மவ்வினை இரையும்' என்க. இரைதல் - ஒலித்தல். மணிமுத்தம், வைப்புத் தலம். கவ்வை - ஆரவாரம்.

70. 'சீக்காலி' என்பதும் பாடம். இப்பெயருடையதொரு வைப்புத்தலம் உண்டு. திருவேட்டி, அரணநல்லூர், கரபுரம் - இவை வைப்புத் தலங்கள். உறையூர் - திருமுக்கீச்சரம். 'விடையான்' என்பது பாடம் அன்று.

71. கூடல் - மதுரை. திண்டீச்சரம், இடைத்தானம், நல்லேமம் இவை வைப்புத் தலங்கள். எள்ளும் படை - பூதப் படை. இலயம் - கூத்து. குறும்பலா - திருக்குற்றாலம். களிப்பைத் தருதலின் திருவடிஞானமும் 'கள்' எனப்படும் என்பது, "காயத்தின் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே -

Koviloor Digital Library

கோள்ளு மிலயத்தார் கோடி காவும்
குரங்கணின் முட்டமுங் குறும்ப லாவும்
கள்ளருந்தத் தேள்ளியா ருள்கி யேத்துங்
காரோணங் தம்முடைய காப்புக்களே. 8

72 சீரார் புனற்கேடில வீரட்டமும்
திருக்காட்டுப் பள்ளி திருவேண் காடும்
பாரார் பரவுஞ்சீர்ப் பைஞ்ஞீலியும்
பந்தணை நல்லூரும் பாசூர் நல்லம்
நீரார் நிறைவயல்சூழ் நின்றி யூரும்
நேடுங்களமும் நேல்வேண்ணேய் நேல்வாயிலும்
காரார் கமழ்கோன்றைத் தாரார்க் கேன்றும்
கடவூரில் வீரட்டங் காப்புக்களே. 9

73 சிந்தும் புனற்கேடில வீரட்டமும்
திருவாஞ் சியமும் திருநள் ளாறும்
அந்தண் போழில்புடைசூழ் அயோகந்தியும்
ஆக்கூரும் ஆவூரும் ஆன்பட்டியும்
எந்தம் பேருமாற் கிடமாவதாம்
இடைச்சுரமும் எந்தை தலைச்சங் காடும்
கந்தங் கமழுங் கரவீரமும்
கடம்பூர்க் கரக்கோயில் காப்புக்களே. 10

மாயக்கள் ளுண்டாரென் றுந்தீ பற - வறட்டுப் பதக்களென் றுந்தீ பற" என்னும் திருவுந்தியாரால் (43) உணர்க. தெள்ளியார் - சத்திநிபாதம் பெற்றவர். 'இலயத்தார் தம்முடைய காப்புக்கள்' என்க. 'திருப்புகலூர்' என விரித்தல் இன்றி ஓதுதல் பாடம் ஒன்று.

72 'கடவூரில் உள்ள வீரட்டமும்' என விரித்து மேலே கூட்டி, 'என்றும் காப்புக்கள்' என முடிக்க.

73. அயோகந்தி, ஆன்பட்டி இவை வைப்புத் தலங்கள். அயோகந்தி, 'அசோகந்தி' என்றும் சொல்லப்படும். 'இடமாவது' என்பது பாடம் அன்று.

Koviloor Digital Library

74 தேனூர் புனற்கெடில வீரட்டமும்
திருச்செம்பொன் பள்ளி திருப்பூவணம்
வானோர் வணங்கும் மணஞ்சேரியும்
மதிலுஞ்சை மாகாளம் வார ணாசி
ஏனோர்க ளேத்தும் வெகுளீச்சரம்
இலங்கார் பருப்பதத்தோ டேணூர் சோலைக்
கானூர் மயிலார் கருமாரியும்
கறைமிடற்றூர் தம்முடைய காப்புக்களே. 11

75 திருநீர்ப் புனற்கெடில வீரட்டமும்
திருவளப்பூர் தெற்கேறு சித்தவ்வடம்
வருநீர் வளம்பெருகு மாநிருபமும்
மயிலாப்பில் மன்னினூர் மன்னியேத்தும்
பெருநீர் வளர்சடையான் பேணிநின்ற
பிரம புரம்சுழியல் பெண்ணாகடம்
கருநீல வண்டரற்றுங் காளத்தியும்
கயிலாயந் தம்முடைய காப்புக்களே. 12

திருச்சிற்றம்பலம்

74. உஞ்சை - உஞ்சேனை மாகாளம். உஞ்சேனை. மாகாளம், வாரணாசி, வெகுளீச்சரம், கருமாரி வைப்புத் தலங்கள். ஏண் - பெருமை. எகுளீச்சரம் என்பதும் பாடம்.

75. அளப்பூர், சித்தவடம், மா நிருபம் இவை வைப்புத் தலங்கள். சில தலங்களைப் பின்னும் வேறு பெயராற் கூறியது, அப் பெயரால் அறியப்படும் சிறப்புப்பற்றி. சீகாழி - பிரமபுரம். தெற்கு ஏறு - தென்றிசையில் பொருந்திய.

இவ்வண்ணம் போல வெனைப்பல மாக்க ளியம்பியேத்த
மெய்வண்ண நீற்றொளி மேவுங் குழாங்கள் விரவிச்செல்ல
அவ்வண்ண நண்ணிய வன்பரும் வந்தெய்தி யம்பவளச்
செவ்வண்ணர் கோயிற் றிருவீரட் டானத்தைச் சேர்ந்தனரே.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

8. திருக்காளத்தி

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசர் பழையனூர்த் திருவாலங்காடும் பிற பதியும் பணிந்து, வடதிசைமேல் வழிக்கொண்டு, திருக்காரிகரையீசரைத் தொழுது, பொன்முகலியாற்றில் முழுகி வலங்கொண்டு திருக் காளத்தி மலைமிசையேறிக் காளத்திநாதரை யிறைஞ்சிப் பாடி யருளியது இத் திருப்பதிகம். இது பாடல் தோறும் காளத்தி யப்பரை, "என் கண்ணுளான்" என்று பாடியருளிய சிறப் புடையது. (திருநாவுக். பு - 345.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

76 விற்றூணொன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லால்
மற்றூணொன் றில்லாத மாசது ரன்காண்
மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
பொய்யாது பொழிலேழுந் தாங்கி நின்ற
கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண்அவனென் கண்ணு ளானே. 1

76. 'விற்று' என்னும் எச்சம், 'ஊண்' என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயரைக் கொண்டது. "ஊண்" என்பது ஆகுபெயராய், அதற்கு ஏதுவாய பொருள்மேல் நின்றது. 'மற்றூண்' என்றதும், அவ்வாறே நின்றது. 'பிச்சை' என்பதும், அதனாற்பெறும் உணவையே குறித்தது. மா சதுரன் - பெருந் திறமையன். "பிச்சையல்லால் மற்றூண் ஒன்றில்லாத மா சதுரன்" என்றது, எள்ளி நகைத்தல்போலக் கூறி, இறைவரது இயல்பாய பற்றற்ற நிலையை வியந்தருளிய வாறு. மயானத்து மைந்தன் - சுடலைக்கண் வாழும் ஆற்ற லுடையவன்; என்றது, 'யாவரும் ஒடுங்குங் காலத்துத் தான் ஒருவனே ஒடுங்காது நிற்கும் முதல்வன்' என்றபடி. மாசின்மை பொன்னுக்கு அடை. "பொன் தூண்", அருமையும் பற்றிய உருவகம். பொய்யாது - இடையறாது. பொழில் - உலகம்.

Koviloor Digital Library

77 இடிப்பான்காண் என்வினையை ஏகம் பன்காண்
எலும்பா பரணன்காண் எல்லாம் முன்னே
முடிப்பான்காண் மூவுலகு மாயி னுன்காண்
முறைமையால் ஐம்புரியும் வழுவா வண்ணம்
படித்தான் தலையறுத்த பாசு பதன்காண்
பராய்த்துறையான் பழனம்பைஞ் ஞீலி யான்காண்
கடித்தார் கமழ்கோன்றைக் கண்ணி யான்காண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 2

78 நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க் கேல்லாம்
காரணன்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணு ளானே. 3

தாங்குதல் - நிலைபெறுவித்தல். "கல் தூண்" என்றதும் உருவகம். கண நாதன் - சிவகணங்கட்குத் தலைவன். 'சிவகணம்' என்பது மெய்யுணர்ந்தார் திரட்சி. "கண் உளான்" என்றது, "கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார் - நுண்ணியர் எம் காதலவர்" (குறள் 1126) என்றாற்போல, காதல் மிகுதியால் நிகழ்ந்ததோர் அனுபவம்.

77. இடித்தல் - அழித்தல், முடித்தல் - வகுத்தமைத்தல். எனவே, உலக நிகழ்ச்சிகள் யாவும் அவன் வகுத்தவகையே நிகழ்வன என்பதாம். 'ஐம்புரி' என்றது, 'பஞ்சாதி' என்னும் வேத உறுப்பினை. இஃது ஐம்பது சொல்லாற் புரிக்கப்பட்டதாயினும், இப்பெயராற்கூறப்படுதல் வழக்கு. வேதத்தைப் படித்தான், பிரமன். பாசுபதன்-பசுபதியாதலை விளக்கும் அடையாளங்களை யுடையவன். கடி - புதுமை. 'கடிக்கொன்றைக் கமழ்தார் கண்ணியான்' என மாற்றிப் பொருள் கொள்க. தார், மார்பில் அணியும் மாலை. கண்ணி, முடியில் அணியும் மாலை. "கண்ணி கார்நறுங்கொன்றை; காமர் - வண்ண மார்பிற் றாருங்கொன்றை" என்னும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துங் காண்க.

78. 'காப்பவன், படைப்பவன்' என்னும் பொருளுடையனவாய, "நாரணன், நான்முகன்" என்பன, முத்தொழில்களும்

Koviloor Digital Library

79 சேற்றன்காண்என்வினையைத்தீயாடிகாண்
திருவொற்றி யூரான்காண் சிந்தை செய்வார்க்
குற்றன்காண் ஏகம்பம் மேவி னான்காண்
உமையாள்நற் கொழுநன்காண் இமையோ ரேத்தும்
சொற்றன்காண் சோற்றுத் துறையு ளான்காண்
சுருவேந்தன் ஏவலத்தை நீறு நோக்கக்
கற்றன்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணு ளானே. 4

சிவபிரானுடைய தொழில்களே என்பதை அறிவுறுத்து நின்றன. எனவே, அவற்றுள் ஒரோவொரு தொழிலை நல்வினை மிகுதியாற் பெற்று நின்ற கடவுளரையும் சிவபிரானையும் ஒருவரேயாக மயங்கிக்கொள்ளுதல் வேண்டா என்பதாம். நாவாய் - மரக்கலம். ஞானத்தின் கரையை அடையச்செய்தலின் அக் கடற்கு நாவாய் அன்னவன் என்றருளினர். புண்ணியன் - அறவடிவினன். புராணன் - பழையோன்; யாவர்க்கும் முன்னோன். சாரணன் - எங்கும் இயங்குபவன், எல்லாவற்றையும் அறிபவன்; எங்கும் தோற்றுபவன். சந்திர சூரியர்களது தட்ப வெப்பங்களும், ஒளிகளும் இறைவனுடைய திருவருளின் பயனே யாதல்பற்றி, "சந்திரன்காண் கதிரோன் தான்காண்" என்றருளினர்; "நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள; நின்தண்மையும் சாயலு ந் திங்களுள" என்னும் பரிபாடற் பகுதியும் (4.25,26) காண்க. "தன்மைக்கண் தானே" என்றது, தன்மையிடத்தில் தன்னோடு உளப்படுத்திக்கூறத்தக்கார்ஒருவரும்இன்றித்தான்ஒருவனேயாய் நிற்பவன்; தனக்குவமை யில்லாதான் என்றருளியவாறு. இனி, 'எல்லாப் பொருள்களும் தம்தம் இயற்கை நிலையில் நிற்குங்கால், தன்னின் வேறுதல் தோன்றுது நிற்ப, தான் ஒருவனேயாய் நிற்பவன்' என்றருளியதூஉமாம். 'தக்கோர்க்கெல்லாம்காரணன்' என்றது, 'தக்கார்க்காயின் முதற்பொருள் தானேயாய்த் தோற்றுபவன்' என்றபடி. தகுதியாவது, மெய்யுணர்வு (அருட் கண்). எனவே, 'மயக்க உணர்வுடையார்க்குத் தான் முதல் வனுய்த் தோன்றுன்' என்பதாம்.

79. தீ ஆடி - நெருப்பின்கண் நின்று ஆடுபவன்; சுடலைக் கண் சாம்பர்போல நெருப்பும் பரந்திருத்தல் அறிக. "காடுடைய சுடலைப் பொடி பூசி" (திருமுறை 1. 1. 1.) என்றாற்போலவரும்

Koviloor Digital Library

80 மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான் [ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 5

பொடிபூசுதல் வேறு; "மண்பொடிக் கொண்டெரித்தோர்சுடலை மாமலை வேந்தன் மகண்மகிழ-நுண்பொடிச்சேரநின் ருடி நொய்யன செய்ய லுகந்தார்" (திருமுறை 1. 39. 6.) என்ருற்போல வரும் பொடியாடுதல் வேறு. அவ்வாறே தீ ஏந்துதல் வேறு; தீ ஆடுதல் வேறு என்க. "கையெரி வீசி நின்று கனலெரி யாடுமாறே" (திருமுறை 4. 22. 4.) என்புழி இரண்டும் ஒருங்கு அருளிச் செய்யப்பட்டமை காண்க. "தழலில்நின் ருடி" (பெரிய நாயகியம்மை பெருங்கழிநெடில் விருத்தம் - 3) எனப் பிற்காலத் தாருங் கூறுதல் நோக்கத்தக்கது. உற்ருன் - உறவினன். "இமையோர் ஏத்தும் சொல்" என்புழிச் 'சொல்' என்றது உருவகமாய், 'சொல்லே உருவாய் நிற்பவன்' எனப் பொருள் தந்தது, "அறிந்தோர் சொன்மலை" (திருமுருகாற்றுப்படை-263) என்ருற்போல. சுரு வேந்தன் - மீனக் கொடியுடைய தலைவன்; மன்மதன். ஏ வலம் - அம்பின் வலிமை. "கற்ருன்" என்றது, "நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந் - தீயாண்டுப் பெற்ரு ளிவள்" (குறள் - 1104) என்ருற்போலக் காதல்பற்றி இயற்கையைச் செயற்கையாக்கி அருளிய பான்மை வழக்கு.

80. "மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்" என்றது, 'மனம், மொழி, மெய்' என்னும் முப்பொறிகளினும் நின்று அவற்றைத் தொழிற்படுத்துவோன் என்றருளியவாறு. இப்பால் - இவ்வுலகத்துள். செம்பொன் புனத்தகத்தான் - செவ்விதாகிய பொன்னையுடைய குறிஞ்சி நிலத்து உள்ளவன்; இங்ஙனம் கூறவே, இனம் பற்றி ஏனைய மூன்று நிலங்களும் கொள்ளப்படும். இனி இவ்வாறன்றி, 'செவ்விய பொன்போல்வதும், புனங்களில் உள்ளதும் ஆகிய (கொன்றைப் போது)' என்று உரைத்தலும் ஆம். இப்பொருட்கு, "புனம்" என்றது முல்லை நிலத்தைக் குறித்ததாகவும், புனத்தகத்தான் என்புழி "ஆன்" என்பதனை மூன்றன் உருபாகவும்கொள்க. 'புனத்தகத்

Koviloor Digital Library

81 எல்லாம்முன் தோன்ருமே தோன்றி ஞன்காண்
ஏகம்பம் மேயான்காண் இமையோ ரேத்தப்
பொல்லாப் புலனைந்தும் போக்கி ஞன்காண்
புரிசடைமேற் பாய்கங்கை பூரித் தான்காண்
நல்லவிடை மேல்கொண்டு நாகம் பூண்டு
நளிர்சிரமொன் றேந்தியோர் நாணு யற்ற
கல்லாடை மேற்கொண்ட காபாலி காண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 6

82 கரியுருவு கண்டத்தெங் கண்ணு ளான்காண்
கண்டன்காண் வண்டுண்ட கொன்றை யான்காண்
எரிபவள வண்ணன்காண் ஏகம் பன்காண்
எண்டிசையுந் தானுய குணத்தி ஞன்காண்
திரிபுரங்கள் தீயிட்ட தீயாடிகாண்
தீவினைகள் தீர்த்திடுமென் சிந்தை யான்காண்
கரியுரிவை போர்த்துகந்த காபாலிகாண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 7

தார்' எனவும் பாடம் ஓதுப. 'கொன்றைப் போதின் உள்ளான்' என்றது, கொன்றைப்பூ சிவபிரானுக்கு அடையாளப்பூவாதற் சிறப்புப் பற்றி, அதன்கண் விளங்கி நிற்பான் என்றவாறு. கனம் - மேகம்.

81. "தோன்ருமே" என்புழி, 'நிற்க' என ஒரு சொல் வருவிக்க. 'எல்லாம் தோன்ருமே முன் தோன்றினுன்' எனக் கூட்டுக. "தோன்றினுன்" என்றது, 'உள்ளான்' என்பதையும், "புலன் ஐந்தும் போக்கினுன்" என்றது, இயல்பாகவே பாசங்களின் நீங்கினமையையுமே குறித்தன. 'பாசத்துட் பட்டவராகிய இமையோர் ஏத்துமாறு, பாசம் இலனுய் நிற்பவன்' என்றருளியவாறு. பூரித்தல் - நிரப்புதல். நளிர் - குளிர்ச்சி; இரத்தம் முதலிய தாதுக்கள் இல்லாமை. "ஓர் நாணுய்" என்பது, 'நாணத்தைக் காப்பதொரு பொருள்' என்னும் அளவாய்நின்றது. அற்ற கல்லாடை - துறந்தமையைக் காட்டும் காவியுடை. காபாலி - 'காபாலம்' என்னும் கூத்தையுடையவன். 'கபாலி' என்பது நீட்டலாயிற்று என்றலுமாம்.

82. கரி உருவு - கரிபோன்ற நிறம்; கரிந்த உருவம் எனலுமாம். "எம் கண் உளான்" என்றது 'அடியவர் கண்ணில்

Koviloor Digital Library

83 இல்லாடிச் சில்பலிசென் றேற்கின் றான்காண்
இமையவர்கள்தொழுதிறைஞ்சஇருக்கின்றான்காண்
வில்லாடி வேடனா யோடி னான்காண்
வெண்ணூலுஞ் சேர்ந்த அகலத் தான்காண்
மல்லாடு திரள்தோள்மேல் மழுவா ளன்காண்
மலைமகள்தன் மணாளன்காண் மகிழ்ந்து முன்னாள்
கல்லாலின் கீழிருந்த காபாலிகாண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 8

84 தேனப்பூ வண்டுண்ட கொன்றை யான்காண்
திருவேகம் பத்தான்காண் தேனார்ந் துக்க
ஞானப்பூங் கோதையாள் பாகத் தான்காண்
நம்பன்காண் ஞானத் தொளியா னான்காண்
வானப்பே ரூரு மறிய வோடி
மட்டித்து நின்றான்காண் வண்டார் சோலைக்
கானப்பே ரூரான்காண் கறைக்கண் டன்காண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 9

உள்ளான்' என்றதாகக் கொள்க. கண்டன் - வரையறைப் பட்டவன்; 'அருளால், ஏற்ற பெற்றியிற் பல்வேறு வடிவுடைய வனாய் நிற்பவன்' என்றவாறு. எரி பவளவண்ணன் - நெருப்பும் பவழமும் போன்ற நிறமுடையவன். "குணம்" என்றது. முற்று முணர்தலை; உணர்தல் கூறவே, இயக்குதலும் தானே பெறப் படும். "தீர்த்திடும்" என்னும் எச்சம், "சிந்தையான்" என்பதன் இறுதி நிலையோடு முடியும். எனவே, 'தீர்த்திடுவான்' எனவும், 'சிந்தையான்' எனவும் அருளியவாறும்.

83. 'இல் ஆடிச் சென்று சில்பலி ஏற்கின்றான்' என இயைக்க. இல் ஆடி - இல்லங்கள் தோறும் நடந்து. சில் பலி, அட்டனவும் அடுதற்கு உரியனவும் ஆகிய பொருள்கள். வில் லாடி - வில் விளையாடல் செய்து. அகலம் - மார்பு. மல் ஆடு - வலிமை பொருந்திய. மழு வாள் - மழுவாகிய படைக்கலம்; கையில் ஏந்துவனவற்றைத் தோளின்கட் சார்த்துதலும் உண்டா கலின், மழுவைத் தோளின்கண் உளதாக அருளினர்.

84. "தேனப் பூ" என்பதில் அகரம் சாரியை. "உண்ட" என்னும் பெயரெச்சம், அதன் காரணந் தோன்ற நின்று,

Koviloor Digital Library

85 இறையவன்காண் ஏழுலகு மாயி ஞன்காண்
ஏழ்கடலுஞ் சூழ்மலையு மாயி ஞன்காண்
குறையுடையார் குற்றேவல் கோள்வான் தான்காண்
குடமுக்கிற் கீழ்க்கோட்டம் மேவி ஞன்காண்
மறையுடைய வானேர் பெருமான் தான்காண்
மறைக்காட் டுறையு மணிகண் டன்காண்
கறையுடைய கண்டத்தேங் காபாலிகாண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 10

'உண்ணுதற்குச் சென்ற' எனப் பொருள் தந்து நின்றது, "அறிவறிந்த மக்கட் பேறு" (குறள் 61) என்புழிப் போல. இவ்வாறருளினுரேனும், 'கொன்றையினது வண்டு உண்ட தேனைப் பூவினன்' என்றல் திருவுள்ளமாகக் கொள்க. தேன் ஆர்ந்து உக்க - தேன் நிரம்பித் ததும்பிய. 'உக்க பூ' என இயைக்க. "பூங்கோதையாள்" என்பது ஒருசொற் றன்மை யாய், 'மகடு' என்னும் பொருள் உடையதாய் நின்று, "ஞானம்" என்னும் அடையடுத்து நின்றது. 'ஞானமே வடிவாகிய அம்மை' என்றருளியவாறு. 'ஞானப் பூங்கோதை' என்பதே இத் தலத்து அம்மைக்குப் பெயராக வழங்குதல் இங்கு அறியற்பாலது. "ஞானத்து ஒளியானுன்" என்புழி நின்ற ஞானம், உயிரறிவு. அதன்கண் ஒளியானுன் என்றருளியது, அவ்வறிவுக்கு அறிவாய் நின்று அறிவித்தலை. 'வானப் பேரூர்' என்புழி, ஊர் என் றருளியது, உலகத்தை. உம்மை சிறப்பும்மை. மறிய - அழிய - ஓடி - விரைந்து, 'மடித்து நின்றுன்' எனற்பாலது, 'மட்டித்து நின்றுன்' என விரித்தலாயிற்று; 'எல்லா உலகத்தையும் எஞ்சாது ஒடுக்கவல்லவன்' என்பது பொருள்; 'எல்லாம் ஒடுங் கியபின் ஆடல் புரிந்து நின்றுன்' என்றலுமாம். கானப்பேர், பாண்டிநாட்டுத் தலம்.

85. இறைவன் - யாவர்க்கும் முதல்வன். குறைஉடையார் - பல்வகையான குறைபாடுகளை உடைய மக்கள். குற்றேவல் - சிறிய தொண்டு. கொள்வான், - குறைநோக்கி ஒழியாது, மாட்டாமை நினைந்து ஏற்றுக்கொள்பவன், மறை உடைய - வேதங்கள் தமக்குப் பொருளாக உடைய, (வானேர்) என்க; 'வேதங்களிற் சொல்லப்பட்ட பலதேவர்கள்' என்றபடி. "வானேர்" எனவே, உயிர்வகையினர் என்பதும், "பெருமான்" எனவே, பரம்பொருள் என்பதும் பெறப்படும். படவே,

Koviloor Digital Library

86 உண்ணு வருநஞ்ச முண்டான் தான்காண்
ஊழித்தீ யன்னுன்காண் உகப்பார் காணப்
பண்ணுரப் பல்லியம் பாடி னுன்காண்
பயின்றநால் வேதத்தின் பண்பி னுன்காண்
அண்ணு மலையான்காண் அடியா ரீட்டம்
அடியிணைகள் தொழுதேத்த அருளு வான்காண்
கண்ணுரக் காண்பார்க்கோர் காட்சி யான்காண்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 11

திருச்சிற்றம்பலம்

வேதங்களுள் ஓரோவிடத்தில் அவர்களைப் பரம்பொருள் போலக் கூறுதல், ஒரோஒரு கருத்துப் பற்றி எனவும், சிவபிரானே பரம் பொருள் என்பதே வேதத்தின் துணிபு எனவும் தெளிவித்த வாறும்.

86. உண்ணு - உண்ணலாகாத, அரு நஞ்சம் - மீட்டல் இயலாத பெருவிடம், 'அதனை உண்டான்' என்றருளினமையால், அவனது பேராற்றலுடைமையையும், பேரருளுடைமையையும் விதந்தருளிச் செய்தவாறு. "ஊழித்தீ அன்னுன்" என்றது, நிறமாகிய பண்பும், முழுவதூஉம் அழித்தலாகிய தொழிலும் பற்றி வந்த உவமை. உகப்பார் - விரும்புவார் ; என்றது தாருகா வனத்து முனிவர் மனைவியரை, ஆர - பொருந்த 'பண்பாடினுன்' என இயையும். பல் இயம் - வீணை, துடி முதலிய வாச்சியங்கள், 'பல்லியத்தோடு' என உருபுவிரிக்க. "எஞ்சிய பொருள்களை ஏமுற நாடி" (திருமுருகாற்றுப்படை. 97.) என்ருங்கு, வெளிப்படாது நிற்கும் மறைகளும் உளவாதலின், வெளிப்பட்டு வழங்கும் நான் மறைகளை, "பயின்ற நால்வேதம்" என்றருளிச் செய்தார். "வேதத்தின் பண்பு" என்னும் ஆரும் வேற்றுமைத் தொகையை, 'காட்டதுயானை' என்பதுபோல, வாழ்ச்சிக்கிழமையாகக்கொண்டு, 'வேதத்தின்கண் விளங்கும் பண்பு' என உரைக்க. 'பண்பு' என்றது, இறைமைக் குணங்களை. அவை சத்தாதல், ஏகனுதல், பலவுந் தானுதல் முதலியன. கண் ஆரக் காணுதலாவது, அன்பாகிய காரணத்தால், கண்ணுக்கு நிறைந்த, இன்பப் பொருளாகக் காணுதல். அங்ஙனங் காண்பாரது கண்ணையும், கருத்தையும் தன்னை யன்றிப் பிறிதொன்றையுங் காணுதவாறு ஈர்த்து நிற்றலை, "ஓர் காட்சியான்" என்றருளிச் செய்தார்.

Koviloor Digital Library

"கண்டார் காதலிக்கும் கண நாதன் எங்காளத்தியுள் அண்டா" (திருப்பதிகம் 26-1.) என்றருளிச் செய்தார், ஆளுடைய நம்பிகளும். "மேவினர் பிரியமாட்டா விமலனர்" என்ற கண்ணப்ப நாயனர் புராணமும் (174) ஈண்டு உணரற்பாலது. இத் திருமொழிகட்கெல்லாம் இலக்கியமாய் நின்றது, கண்ணப்ப நாயனர் அனுபவமேயாம். அவர் காளத்தியப்பரைக் கண்ட பின்னர், தம் உடம்பைத்தானுங் காணுதொழிந்தமை யறிக.

உம்பர்தங் கோனை யுடைய பிரானையுள் புக்கிறைஞ்சி
நம்புறு மன்பி னயப்புறு காதலி னுற்றிளைத்தே
யெம்பெரு மான்றனை யேழையே னுன்பண் டிகழ்ந்ததென்று
தம்பரி வாற்றிருத் தாண்டகச் செந்தமிழ் சாற்றிவாழ்ந்தார். 143

அரியயனுக் கரியானை யடியவருக் கெளியானை
விரிபுனல்சூழ் திருவதிகை வீரட்டா னத்தமுதைத்
தெரிவரிய பெருந்தகைமைத் திருநாவுக் கரசுமனம்
பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப் பலபாடிப் பணிசெயுநாள். 144

புல்லறிவிற் சமணர்க்காப் பொல்லாங்கு புரிந்தொழுகும்
பல்லவனுந் தன்னுடைய பழவினைப்பா சம்பறிய
வல்லலொழிந் தங்கெய்தி யாண்டவர சினைப்பணிந்து
வல்லமணர் தமைநீத்து மழவிடையோன் ருளடைந்தான். 145

வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிகளுங்
கூடவிடித் துக்கொணர்ந்து குணபரவீச் சரமெடுத்தான். 146

இந்நாளிற் திருப்பணிகள் செய்கின்ற வின்றமிழ்க்கு
மன்னுன வாகீசத் திருமுனியு மதிச்சடைமேற்
பன்னுக மணிந்தவர்தம் பதிபலவுஞ் சென்றிறைஞ்சிச்
சொன்னுமத் தமிழ் புனைந்து தொண்டுசெய்வான் ருெடர்ந்
தெழுவார். 147

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

9. திருஆமாத்தூர்

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசு நாயனுர் திருவதிகை வீரட்டத்திலிருந்து பல்லவ மன்னனைச் சைவனுக்கிய பின்னர்ப் பல தலங்களையும் வணங்க நினைந்து திருவெண்ணெய் நல்லூர் மேவியிறைஞ்சி, திருவாமாத்தூர் சென்று, பணிந்து பாடியருளியது இத் திருப் பதிகம் (திருநாவுக். பு - 148.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

87 வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றேய்து கனலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபாலியார்
சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்ருர் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர்ஐய ருரே. 1

இத் திருப்பதிகம், கடவுள் வாழ்த்துப் பாடாண் பகுதியுள், கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்துப் பெருந் திணை வகையாக அருளிச் செய்யப்பட்டது. துறை, தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்.

அஃதாவது, ஆமாத்தூர் இறைவர் பிச்சைக்கு வர, பிச்சை யிடச் சென்று அவரை எதிர்ப்பட்டு, வேட்கை தோன்றி, அவரது நோக்கினைத் தெளிந்து, தனது நோக்கினல் உடம்பட்டு அவர்க்கு உரியளாயினள் ஒருத்தி, பின்பு அவர் தன்னை வரையாது நீங்கு தல் கண்டு தெளிவொழிந்து. பலரொடும் முறையிட்டு அவரைக் கூட்டுவிக்குமாறு வேண்டியது.

பேதைமை காரணமாகப் பொருளல்லவற்றையே (உலகத் தையும் தம்மையுமே) பொருளென்றுணரும் மருள்நிலை தவங் காரணமாக நீங்கி அருள்நிலை எய்திய ஞான்று, இறைவன்

Koviloor Digital Library

வெளிநின்று அருள் வழங்கப் பெற்று, அவ்வருளே கண்ணுக அவனை யறிந்து அன்பு செய்து, உடல் பொருள் ஆவியனைத்தும் அவனுடையனவாக்கித் தம்மை இழந்து நின்ற அடியவர், பண்டைப் பயிற்சி வயத்தால் அந்நிலையின் நிற்கப் பெருது முன்னை மருள்நிலை தோன்றியவழி அதனைப் பொருது வருந்தி, அது நீங்குமாறு இறைவனை அருளுவிக்க அடியவரை வேண்டுதல் இதன் உண்மைப் பொருள்.

அவர், அன்பரை வேண்டுமாற்றினை, "எந்தை யிருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" என்றருளிச் செய்தாற் போலும் (திருமுறை. 7. பதிகம். 73.) திருமொழி களிற் காண்க.

87. வண்ணங்கள் - தாளத்தொடு பொருந்தப் பாடும் இசைகள். இவற்றை இசை நூலார், 'நிறம்' என்ப. வலி செய்தல் - வலாற்காரம் செய்தல். அஃது இவ்வாறென்பது அடுத்துக் கூறப்படுகின்றது. "வகையால்", 'நாம் மனம் நெகிழும் வகையால்' என்க. கனல - காமத்தீ மூண்டெழுமாறு. கண்ணம்பால் எய்தமையும், கனலப் பேசினமையுமே வலாற் காரஞ் செய்தனவென்க. சுண்ணங்கள் - வெண்பொடிகள் (சாம்பர்கள்). பொடியாயின பொருள்கள் பலவாகலின், பொடிகளும் பலவாயின. துதைய - நெருங்க; 'திருமேனி மூழ்க' என்றவாறு. தோன்றுவது திருவுருவமாகக் கொள்க. அடுக்கு மிகுதி பற்றி வந்தது; 'நன்கு தோன்ற' என்றபடி. அண்ணலார் - தலைவர்; தந்நிகரில்லாதவர். "அண்ணலார்" என்புழி 'ஒருவர்' என்பது வருவிக்க. அழகியர் - நல்லியல்புடையவர் ஏகாரம் தேற்றம். "கண் அம்பால் நின்றெய்து கனலப்பேசி...... போகின்றார் வந்து காணீர்" என்றது, 'வஞ்சித்து வரையாது நீங்குகின்றார்; இதனை நீவிர் காண்மின்கள்' என்னுங் கருத்தினலாகலின், 'அண்ணலார்' என்றதும், 'அழகியரே' என்றதும் குறிப்பினாற் கூறிய நகைமொழியாதலறிக. பன்மையாற் கூறியதும் அது பற்றி. "வந்து காணீர்" என்பதனை இறுதிக்கண் வைத்துரைக்க. காண்போர் தடுத்து நிறுத்துவாராதல் பயன், 'மற்றுப் பற்றறுத்துத் தம்மையே பற்றுகப் பற்றுமாறு ஆண்டுகொண்ட அடியவர்களது பற்றினை முற்றுங் களையாது தளரவிடுகின்றார்; 'இஃது இவர்க்குத் தக்கது போலும்!' என்பது உண்மைப் பொருள். இதனை,

Koviloor Digital Library

88 வேந்தார்வெண் பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேற் றுஞ்சூடி வீணை யேந்திக்
கந்தாரந் தாம்முரலாப் போகா நிற்கக்
கரைசேர் மணிமிடற்றீ ரூரே தென்றேன்
நோந்தார்போல் வந்தேன தில்லே புக்கு
நுடங்கே ரிடைமடவாய் நம்மூர் கேட்கில்
அந்தா மரைமலர்மேல் அளிவண்டி யாழ்செய்
ஆமாத்தூர் என்றடிகள் போயி னாரே. 2

" சிந்தையைத் திகைப்பி யாதே செறிவுடை யடிமை செய்ய
எந்தைநீ யருளிச் செய்யாய் யாதுநான் செய்வதென்னே "

(திருமுறை. 4-23. 4.)

எனவும்,

" நின்னையெப் போதும் நினையலொட் டாய்நீ நினையப்புகின்
பின்னைஅப் போதே மறப்பித்துப் போர்த்தொன்று நாடுவித்தி"

(திருமுறை. 4-112. 4.)

எனவும் தம் நிலைக்கு இரங்கியும்,

" உன்னைஎப் போதும் மறந்திட் டுனக்கினி தாயிருக்கும்
என்னைஒப் பாருள ரோசொல்லு வாழி இறையவனே "

(ஷ)

என தம்மைத் தாமே நகைத்தும் அருளிச்செய்தன போன்ற திருமொழிகள் நோக்கி யுணர்க. இவையெல்லாம் வருகின்ற திருப்பாடல்கட்கும் ஒக்கும். ஐயனார் - முதல்வனார்.

88. வெந்தார் - வெந்தவரது. வெள்ளை மாலை, கொக்கிறகு ஊமத்தை முதலியவற்றாலாகிய மாலை. காந்தாரம், ஒருபண்; கந்தாரம் எனக் குறுக்கலாயிற்று. முரலுதல் - பாடுதல். 'பிச்சை யிடச் சென்ற யான் மனநெகிழ்வுற்று, அவர் பிச்சை ஏலாதே பாடிச் செல்லுதல் பற்றி நகைத்துரைப்பேன்போல ஊர் ஏதென்றேன்' என்க. நோதல் - பசியினாலாயது. வாயிலில் நிற்றல் முதலியவற்றினின்று பிரித்தமையின், 'இல்லே' என்னும் ஏகாரம் பிரிநிலை. 'இல்லே புக்கு' என்றமையான், பிறவாற்று னும் தெளிவித்து அவளைத் தமக்கு உரியளாக உடம்படுவித்தமை

Koviloor Digital Library

89 கட்டங்கந் தாமோன்று கையி லேந்திக்
கடிய விடையேறிக் காபா லியார்
இட்டங்கள் தாம்பேசி யில்லே புக்கு
இடும்பலியும் இடக்கோள்ளார் போவா ரல்லர்
பட்டிமையும் படிறுமே பேசா நின்றார்
பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின் றார்தாம்
அட்டிய சில்பலியுங் கோள்ளார் வில்ளார்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 3

பெறப்படும். 'நுடங்கு ஏர் இடை மடவாய்' என்றது நலம் பாராட்டியது. அளி வண்டு - 'அளி' என்னும் பெயர்த்தாகிய வண்டு; 'அளிக்கத்தக்க (இரங்கத்தக்க) வண்டு' என்பது உடனிலைப் பொருள். 'அளிவண்டியாழ்செய் ஆமாத்தூர்' என்றதினின்றும், 'அருள்பண்ணத் தக்கார்க்கு அருள் பண்ணுவேம் யாம்' என்னும் இறைச்சிப்பொருள் தோன்றியது. 'ஆமாத்தூர் என்று போயினார்' என்றது, 'ஊரேது' என்று வினாவிய எனது கருத்தினை யறிந்து அதற்கு உடம்படுவார்போல விடைகூறி, அக்கருத்தை முற்றுவியாதே போயினார் என்றபடி. கருத்து வரைந்து கோடல். 'அவரைக் கூட்டுவியுங்கள்' என்பது குறிப்பெச்சம்.

89. இட்டங்கள் - வேட்கையொடு பொருந்திய சொற்கள். 'போவாரல்லர்' என்னும் எதிர்காலச் சொல், நிகழ்காலத்தின் கண் வந்த காலமயக்கம். பட்டிமை - நெறிப்படாமை. படிறு - வஞ்சனை. இவை இரண்டும் இத்தன்மையவான சொற்களைக் குறித்தன. "போல்கின்றார்" என்பதனை ஒப்பில் போலியாக்கி, 'பரிசழிக்கின்றார்' என்றவாறாகக் கொள்க. "இடக் கொள்ளார்; பேசாநின்றார்; போல்கின்றார்" என்பன, 'வந்து போகின்றானைக் கண்டேன்' என்புழி நிற்கும் நிகழ்காலச் சொற்போன்ற இறப்பில் நிகழ்வாய், "புக்கு" என்னும் செய்தெனெச்சத்தோடு இயைந்தன. பார்ப்பார் - தம்மை நோக்குவார். பரிசு - நிறை. 'போல்கின்றார்' என்பதன்பின், 'அதனால் யான் என் பரிசழிந்தேன்; பின்னர் வாளாபோகின்றார்' என நின்ற இசையெச்சம் வருவிக்க. அட்டிய - இட்ட. 'கொள்ளார் விள்ளார்' என்றது பெயர்த்துரை. ஆண்டும், 'நீங்குகின்றார்' என்பது எஞ்சி நின்றது, இவை அனைத்தையும் வினைப் பெயராக்கி, "ஆமாத்தூர் ஐயனார்" என்பதனோடு இயைத்து, 'இவ்வாறு செய்யும்

Koviloor Digital Library

90 பசைந்தபல பூதத்தர் பாட லாடல்
படநாகக் கச்சையர் பிச்சைக் கேன்றங்
கிசைந்ததோ ரியல்பினர் எரியின் மேனி
இமையாமுக் கண்ணினர் நால்வே தத்தர்
பிசைந்ததிரு நீற்றினர் பெண்ணோர் பாகம்
பிரிவறியாப் பிஞ்ஞகனார் தெண்ணீர்க் கங்கை
அசைந்த திருமுடியர் அங்கைத் தீயர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 4

91 உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றிருளுடைய கண்டத்தர் செந்தீ வண்ணர்
இமையவர்கள் தொழுதேத்தும் இறைவ னார்தாம்
பொருளுடைய ரல்லர் இலரு மல்லர்
புலித்தோ லுடையாகப் பூதஞ் சூழ
அருளுடைய அங்கோதை மாலை மார்பர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 5

இவர் அழகியரே' என இரங்கியவாறாக உரைக்க. 'கொள்ளார், வில்லார்' என்பன சொல்லுவாளது குறிப்பினால் இறந்தகால மாயின வென்க.

90. பசைந்த - விரும்பிய. 'கச்சையர்' என்புழி நின்ற 'அர்' என்னும் இறுதிநிலை, 'பாடல் ஆடல்' என்பத னோடும் இயையும். இசைந்தது - இசையச் செய்துகொண்டது. எரியினது மேனிபோலும் மேனியை, 'எரியின்மேனி' என்றது உபசாரம். பிசைந்த - வடித்த. அசைந்த - தங்கிய. 'இவ் வாற்றான் அழகியரே' என்க. 'அழகியரே' என்றது, ஈண்டு, 'பார்ப்பாரைப் பரிசழித்தற்கு உரியரேயாகின்றார்; அதனால், என்பரிசினையும் அழித்துச் செல்கின்றார்' என இரங்குதற் பொருட்டாய் நின்றது. இது, வருகின்ற திருப்பாடல்கட்கும் ஒக்கும்.

91. "ஒன்றாலும் குறைவில்லை" என்புழி, 'ஆயினும்' என்பது எஞ்சிநின்றது. பிச்சைக் கோலம் பூண்டமையின், "பொருளுடையரல்லர்" எனவும், இமையவர்கள் தொழுதேத்த நின்றமையின், "இலரும் அல்லர்" எனவுங்கூறினார்; "தானும்

Koviloor Digital Library

92 வீறுடைய ஏறேறி நீறு பூசி
வெண்டோடு பெய்திடங்கை வீணை யேந்திக்
கூறுடைய மடவாளோர் பாகங் கொண்டு
குழையாடக் கொடுகொட்டி கொட்டா வந்து
பாறுடைய படுதலையோர் கையி லேந்திப்
பலிகொள்வா ரல்லர் படிறே பேசி
ஆறுடைய சடைமுடியெம் மடிகள் போலும்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 6

93 கையோர் கபாலத்தர் மானின் தோலர்
கருத்துடையர் நிருத்தராய்க் காண்பார் முன்னே
செய்ய திருமேனி வெண்ணீ றுடித்
திகழ்புன் சடைமுடிமேல் திங்கள் சூடி
மெய்யொரு பாகத் துமையை வைத்து
மேவார் திரிபுரங்கள் வேவச் செய்து
ஐயனார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 7

பிச்சை புகும்போலும் தன்னடியார்-வானுள மண்ணுள வைத்து' என்ற நக்கீரதேவர் திருமொழியுங்காண்க. (கயிலைபாதி - 53.) "அருளுடைய" என்பது, 'மார்பர்' என்பதன் இறுதிநிலையோடு முடியும். கோதை, மாலையின் வகை.

92. சங்கினால் ஆயினமையின், வெண்தோடாயிற்று. 'இடக்கை' என்பது மெலிந்துநின்றது. இடப்பக்கத்திற்கையில் வீணை ஏந்தி' என்றுரைத்தலுமாம். 'கொடுகொட்டி' என்பது, சிவபிரான் ஆடிய ஒரு கூத்து. அஃது ஈண்டு ஆகுபெயராய் அதற்கேற்ப அடிக்கப்படும் வாச்சியத்தைக் குறித்தது. படுதலை-பட்ட (இறந்த) தலை; பட்டாரது செயல் அவர் தலைமேல் ஏற்றப்பட்டது; 'பட்டதனாற் கிடைத்ததலை' எனலுமாம். "எம் அடிகள்" என்பதனை முதலிலும். "பலிகொள்வாரல்லர்" என்பதனை. "படிறே பேசி" என்பதன் பின்னும் வைத்துரைக்க; "போலும்" என்பது உரையசை. "பலிகொள்வாரல்லர்' என்பதற்கு, மேல், (பக் - 70.) "போவாரல்லர்" என்பதற்கு உரைத்தவாறே யுரைக்க.

93. கருத்து-பிச்சையேற்றலன்றி மற்றோர் எண்ணம்; அது, மகளிரை நிறையழியச் செய்தல். 'நிருத்தராய்' என்புழி நின்ற

Koviloor Digital Library

94 ஒன்ருலுங் குறைவில்லை ஊர்தி வெள்ளே
ற்றுேறியூர் உம்மூரே யுணரக் கூறீர்
நின்றுதான் என்செய்வீர் போவீ ராகில்
நெற்றிமேற் கண்காட்டி நிறையுங் கொண்டீர்
என்றுந்தான் இவ்வகையே இடர்செய் கின்றீர்
இருக்குமூ ரினியறிந்தோம் ஏகம்பமோ
அன்றித்தான் போகின்றீர் அடிக ளேம்மோ
டழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 8

95 கல்லலகு தாங்கொண்டு காளத்தியார்
கடிய விடையேறிக் காணக் காண
இல்லமே தாம்புகுதா இடுமின் பிச்சை
யென்ருருக் கேதிரேழுந்தே னேங்குங் காணேன்

'ஆய்' என்பது, 'கபாலத்தர்' முதலியவற்ருேடும் இயையும். 'ஆடி' என்பதனை, 'ஆட' எனத் திரிக்க. அன்றிச் சினைவினை முதன்மேல் நின்றதுமாம். ஆடுதல் - மூழ்குதல். சடைக்குப் புன்மை, உலகினரால் விரும்பிக் கொள்ளப்படாமை.

94. "ஒன்ருலுங் குறைவில்லை" என்பதன்பின், 'என்பது ஆக' என்னும் முற்றுத்தொடர் வருவிக்க. 'உம் ஊரே' என்புழி நின்ற ஏகாரம் வினுப்பொருட்டு. அஃது "ஒற்றியூர்" என்பதனோடு பிரித்துக் கூட்டப்பட்டு, "வெள்ளேறு" என்பதனோடும் இயையும். "உம்" என்பதும் "ஊர்தி" என்பதனோடும் இயையும். "என்செய்வீர்" என்றது, 'எம்மை வனயமாட்டீர்' என்றவாறு. "அறிந்தோம்" என்றது, 'யாமே அவண் வந்து சேர்வோம்' என்னும் குறிப்பினது. "ஏகம்பமோ" என்னும் சிறப்போகாரம், 'அஃது எம்மால் நன்கறியப்பட்டதே' என்பதுணர்த்தி நின்றது. 'எம்மோடு அன்றித்தான் போகின்றீர்; போவீராகில்' என இயைத்து, 'கொண்டீர்' என்பதன்பின் வைத்துரைக்க. "அடிகள்" என்றதும், "ஐயனுரே" என்றதும் விளி. இத் திருப்பாடல், நீங்கிச் செல்கின்ருரை எதிர்பெய்து கொண்டு கூறியது.

95. கல்லலகு - (குறிப்பு பக். 64. பார்க்க.) கடிய - விரைந்து செல்வதாகிய. "காணக்காண" என்றது, 'பலருங்காண' என்றவாறு. புகுதா - புகுந்து. அயலாரோடு இரங்கிக் கூறுகின்றவள்.

Koviloor Digital Library

சொல்லாதே போகின்றீர் உம்மு ரேது
துருத்தி பழனமோ நெய்த்தா னமோ
அல்லலே செய்தடிகள் போகின் றீர்தாம்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 9

96 மழுங்கலா நீறுடும் மார்பர் போலும்
மணிமிழலை மேய மணாளர் போலும்
கொழுங்குவளைக் கோதைக் கிறைவர் போலும்
கொடுகொட்டி தாள முடையார் போலும்
செழுங்கயி லாயத்தேஞ் செல்வர் போலும்
தென்னதிகை வீரட்டஞ் சேர்ந்தார் போலும்
அழுங்கினா ரையுறவு தீர்ப்பார் போலும்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 10

திருச்சிற்றம்பலம்

ஆற்றாமை மிகுதியால் இடையே இறைவனை எதிர்பெய்து கொண்டு, "சொல்லாதே போகின்றீர்........நெய்த்தானமோ" என்றாள் என்க. ஓகாரங்கள் ஐயப்பொருள ; "துருத்தி" என் புழியும் அவ்வோகாரம் விரிக்க.

96. மழுங்கலா - ஒளிகுறையாத (வெள்ளிய). மணி - அழகு. மணாளர் - தலைவர். குவளைக் கோதை - குவளை மலரா லாகிய மாலையணிந்த உமையம்மை. "கொடுகொட்டி" என்பதற்குமேலே (6) உரைத்தாம். அழுங்கினார் - வருந்தினவர். ஐயுறவு - 'துன்பங்களைவரோ களையாரோ' என்னும் ஐயம். இத்திருப்பாடலை, முன்னெல்லாம் ஆற்றாளாய் இரங்கிக் கூறியவள், இறுதிக்கண், 'பெரியோர் பிழையுட்படார்; அதனால், பின்பு வந்து வரைவார்' எனத்தேறி, ஆற்றியுரைத்ததாகக் கொள்க. அதனால், 'அழகியரே' என்றதும் புகழுரையேயாம்.

திருவதிகைப் பதிமருங்கு திருவெண்ணெய் நல்லூரும்
அருளுதிரு வாமாத்தூர் திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும் வணங்கிவளத் தமிழ்பாடிப்
பெருகுவிருப் புடன்விடையார் மகிழ்பெண்ணை கடமணைந்தார்.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

10. திருப்பந்தணை நல்லூர்

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசு நாயனர் திருமயிலாடுதுறை வணங்கிக் காவிரிக்கரைத் துருத்தி, வேள்விகுடி, எதிர்கொள்பாடி ஆகிய திருத்தலங்களைப் பாடிப் போற்றி, பரமர் திருப்பதி பிறவும் பணிந்து பாடியருளியவற்றுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு.190.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

97 நோதங்க மில்லாதார் நாகம் பூண்டார்
நூல்பூண்டார் நூன்மேலோ ராமை பூண்டார்
பேய்தங்கு நீள்காட்டில் நட்ட மாடிப்
பிறைசூடுஞ் சடைமேலோர் புனலுஞ் சூடி
ஆதங்கு பைங்குழலாள் பாகங் கோண்டார்
அனல்கோண்டார் அந்திவாய் வண்ணங் கோண்
பாதங்க நீறேற்ருர் பைங்க ணேற்ருர் [டார்
பலியேற்ருர் பந்தணை நல்லூ ராரே. 1

97. 'நோவதங்கம்' என்பது இடைக்குறைந்து, 'நோதங் கம்' என நின்றது; 'வருந்துவதாகிய மாயை உடம்பு' என்பது பொருள். ஆமை - ஆமை ஓடு; ஆகுபெயர். 'ஆதங்கு' என்பதில், 'ஆ' முதனிலைத் தொழிற்பெயர். 'ஆதல் (வளர்தல்) பொருந்திய' என்பது பொருள். அந்திவாய் வண்ணம் - அந்தி பொருந்திய நிறம்; என்றது செவ்வானத்தினை. பாதம் கம் - பாதம் முதல் தலைவரையிலும். பைங்கண் ஏற்ருர் - பசிய கண்ணையுடைய இடபத்தையுடையவர். பலி ஏற்ருர் - பிச்சை கொண்டார். இத்தலத்தில் இறைவரைப் பிச்சைக்கோலம் உடையவராகவே அருளிச்செய்தார், நாயனர். "பைங்கண் ஏற்ருர்" என்பதனையும் உடன் கூறுதலின், விடையேறிய பிச்சைக்கோலமாக அருளினமை பெறப்படும்.

Koviloor Digital Library

98 காடலாற் கருதாதார் கடல்நஞ் சுண்டார்
களிற்றுரிவை மெய்போர்த்தார் கலன தாக
ஓடலாற் கருதாதார் ஒற்றி யூரார்
உறுபிணியுஞ் செறுபகையு மொற்றைக் கண்ணால்
பீடுலாந் தனைசெய்வார் பிடவ மோங்கை
குடமுழவங் கோடுகோட்டி குழலு மோங்கப்
பாடலா ராடலார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. 2

99 பூதப் படையுடையார் போங்கு நூலார்
புலித்தோ லுடையினார் போரேற்றினார்
வேதத் தொழிலார் விரும்ப நின்றார்
விரிசடைமேல் வெண்திங்கட் கண்ணி சூடி
ஓதத் தோலிகடல்வாய் நஞ்ச முண்டார்
உம்பரோ டம்போன் னுலக மாண்டு
பாதத் தோடுகழலார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. 3

98. கலன் - உண்கலன். ஒற்றைக்கண், நெற்றிக்கண்; ஒருகண்ணாலே என்றுமாம். பீடு உலாம்தனை செய்வார் - வலிமை கெடும் அளவு செய்வார். ஈண்டு, 'உலக்குந்தனை' என்பது. "உலாந்தனை" என நின்றது, 'பிடவம்' முதல் குழல் ஈறாக உள்ளன. வாச்சியவகைகள்.

99. திரிபுரம் எரித்த காலத்தில் திருமால் உருத்திரிந்து தாங்கிய இடபம் 'போர்விடை' என்றும், அறக்கடவுள் உருத் திரிந்து தாங்கும் இடபம் 'அறவிடை' என்றும் உணர்க. இனி, "போர்விடை" என்புழி, "போர்" என்றதனை, 'இன அடை' என்றலுமாம். இவை 'செங்கண் விடை' என வருகின்றுழியும் ஒக்கும். வேதத்தொழில் வேதத்தின் வழிப் பட்ட தொழில்; வேள்வி. அதனை உடையவர், அந்தணர்; அவர் விரும்ப நிற்றலாவது, வேள்விக்கு முதல்வனாகக்கொண்டு முதற்கண் அவியளித்து அவர் வழிபட, அதனை யேற்று அவர் எண்ணியவற்றை முற்றுவித்தல். சிவபிரானையே வேள்வியின் முதல்வனாக வேதம் கொண்டுள்ளது என்பது, "மேத பதிம் காத பதிம் ருத்ரம்" (मेधपतिं रुद्रं - இருக்குவேதம். 1. 43. 47.)

Koviloor Digital Library

100 நீருலாஞ் சடைமுடிமேல் திங்க ளேற்றார்
நெருப்பேற்றார் அங்கையில் நிறையு மேற்றார்
ஊரெலாம் பலியேற்றார் அரவ மேற்றார்
ஒலிகடல்வாய் நஞ்சம் மிடற்றி லேற்றார்
வாருலா முலைமடவாள் பாக மேற்றார்
மழுவேற்றார் மான்மறியோர் கையி லேற்றார்
பாருலாம் புகழேற்றார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. 4

என்பதனை அறிக. இதற்கு மாறாகச் செய்யத் தொடங்கிய தக்கன் வேள்வி அழிந்தது; அவனும் தன்தலை இழந்து யாட்டுத் தலை பெற்றான் என்க. ஓதம் - அலை. உம்பர் - தேவர். தேவரை அடியவராகவும், அவரது உலகத்தை உடைமையாகவும் உடைய வர் என்றவாறு. 'ஆண்டு' என்னும் எச்சம் எண்ணுப் பொருளாய் நின்று. 'கழலார்' என்னும் வினைக்குறிப்பொடு முடிந்தது. 'பாதக்கழலார்' என இயையும். தொடு - சுற்றிக் கட்டப்பட்ட. "போரேற்றினர்" என்பதும், இருமாச்சீர்கட்கு ஈடாக மாங் கனிச்சீர் வந்தது.

100. 'அங்கையில் நெருப்பேற்றார்' என்க. நிறையும் ஏற்றார் - தாருகாவன முனிவர் பத்தினிமாரது கற்பினை வாங்கிக் கொண்டார்; நெஞ்சைப் புலன்வழி ஓடாது நிறுத்துதலைப் பொருந்தினர் என்றுமாம். "ஊரெலாம் பலியேற்றார்" என்றது செயலையும், "பலியேற்றார்" என்றது கோலத்தையும் குறிக்கும். இறுதித் திருப்பாடலிலும் இவ்வாறே கொள்க. "ஓர்கையில்" என்பது, "மழுவேற்றார்" என்பதனோடும் இயையும். மறி - கன்று. பார் உலாம் - பூமி முழுவதும் உலாவுகின்ற; என்றது, யாவராலும் புகழப்படுகின்ற என்றபடி. "ஏற்றார்" என வந்தன பலவற்றுள். "பைங்கண் ஏற்றார்" என்புழி உள்ளது ஒன்றும், 'விடையை உடையார்' எனவும், ஏனைய எல்லாம் 'ஏற்றலைச் செய்தார்' எனவும் பொருள் தரும். வருகின்ற திருப் பாட்டினுள்ளும் இவ்வாறே நிற்றல் காண்க.

Koviloor Digital Library

101 தொண்டர் தொழுதேத்துஞ் சோதி யேற்றூர்
துளங்கா மணிமுடியார் தூய நீற்றூர்
இண்டைச் சடைமுடியார் ஈமஞ் சூழ்ந்த
இடுபிணக்காட் டாடலா ரேமந் தோறும்
அண்டத்துக் கப்புறத்தார் ஆதியானூர்
அருக்கனு யாரழலா யடியார் மேலைப்
பண்டை வினையறுப்பார் பைங்க ணேற்றூர்
பலியேற்றூர் பந்தணை நல்லூ ராரே. 5

101. ஏத்தும் - ஏத்துதற்கு ஏதுவாகிய. சோதி - ஒளி; ஞானம்; அது, தானே எல்லாவற்றையும் ஒருங்கே அறிந்தாங் கறிதல். இதுவே ஏனைய அருட்குணங்கட்கும் முதலாமாறுணர்க. துளங்கா மணி முடியார் - நடுங்காத அழகிய தலையையுடையவர்; அஞ்சுவதொன்றில்லாத முதல்வர் என்றபடி 'அச்சம் வரின் தலை நடுங்கும்' என்பதை "அரசுதலை பனிக்கும் ஆற்றலை" (புறம் 42.) என்பதனாலறிக. இண்டை, முடியில் அணியும் மாலை. ஈமம் - பிணத்தைச் சுடுங்காடு, பிணத்தை இடும் (புதைக்கும்) காடு அதனைச் சூழ்ந்திருக்கும் என்பது பற்றி, "ஈமஞ்சூழ்ந்த இடு பிணக்காடு' என்று அருளிச்செய்தார். இடுபிணக்காடு - இடப்படும் பிணத்தையுடைய காடு. ஏமம் - இரவு. 'ஏமந் தோறும் இடுபிணக் காட்டு ஆடலார்' என்க- ஆடலார் - ஆடுதலை உடையவர். 'சுடுகாட்டு ஆடுதல், இடுகாட்டு ஆடுதல்' எனவருவன, இறைவன் எல்லாவற்றையும் அழித்த முற்றழிப்புக் காலத்தில் (சருவசங்கார காலத்தில்) மீளத் தோற்றுவித்தற்கு உரியவற்றைச் செய்தலைக் குறிப்பனவாம். இதுவே, 'சூக்கும நடனம்' எனப்படும். "அண்டத்துக்கு அப்புறத்தார்" என்றது, மாயைக்கு அப்பாற்பட்டு நிற்றலை உணர்த்தும். ஆதியானூர் - எப்பொருட்கும் தாமே முதலாயும், தமக்கொரு முதல் இல்லாதவராயும் உள்ளவர். இதுபற்றியே சிவபிரானுக்கு 'ஆதி' என்னும் பெயர் வழங்கும். அஃது ஆதிபுராணத் திருக் குறுந்தொகை' (திருமுறை 5. 100.) என்பதனாலும், "ஆதியன் ஆதிரையன்" (திருமுறை 7-97-1) என்றற்றொடக்கத்துத் திருப் பாடற் பகுதிகளாலும் அறியப்படும். "ஆதி பகவன்" எனத் திருவள்ளுவ நாயனூர் தமது முதல் திருக்குறட்கண்ணே இரு பெயரொட்டாக அருளிச்செய்ததும், 'முதற்கடவுளாவான் சிவபிரானே எனச் சிறப்புவகையான் உணர்த்துதற் பொருட்டே'

Koviloor Digital Library

102 கடமன்னு களியானை யுரிவை போர்த்தார்
　　கானப்பேர் காதலார் காதல் செய்து
மடமன்னு மடியார்தம் மனத்தி னுள்ளார்
　　மானுரிதோல் மிசைத்தோளார் மங்கை காண
நடமன்னி யாடுவார் நாகம் பூண்டார்
　　நான்மறையோ டாறங்கம் நவின்ற நாவார்
படமன்னு திருமுடியார் பைங்க ணேற்றூர்
　　பலியேற்றூர் பந்தணை நல்லூ ராரே. 6

103 முற்று மதிச்சடையார் மூவ ரானுர்
　　மூவுலகு மேத்தும் முதல்வ ரானுர்
கற்றூர் பரவுங் கழலார் திங்கள்
　　கங்கையாள் காதலார் காம்பேய் தோளி
பற்றுகும் பாகத்தார் பால்வெண் ணீற்றூர்
　　பான்மையா லூழி யுலக மானுர்
பற்றூர் மதிலேரித்தார் பைங்க ணேற்றூர்
　　பலியேற்றூர் பந்தணை நல்லூ ராரே. 7

எனச் சிவஞான முனிவரர் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவில் அருளினுர் (1).

102. கடம் மன்னு - மதம்மிக்க. களி - மயக்கம். கானப்பேர், பாண்டிநாட்டுத் தலம். மடம் - அறியாமை; அவனருளியவாறன்றித் தாமாக ஒன்றையும் அறியாமை. மான் உரி தோல் - மானை உரித்த "தோல். மிசைத் தோளார்" என்பதனை, 'தோள்மிசையார்' என மாற்றிப் பொருள்கொள்க. 'மன்னி மங்கை காண நடம் ஆடுவார்' என இயைக்க. மன்னி - நிலைபெற்று. 'என்றும் இடையருது' என்றவாறு. "ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத்தாடும் நாதனுர்" (திருநீலகண்ட நாயனுர் புராணம்-1) என்றருளிச் செய்தமை மேலும் (பக். 30.) கூறினும். இதனை; 'அனவரததாண்டவம்' என்பர். "படம்" என்றது பாம்பினை, சினையாகு பெயர்.

103. மூவர், 'அயன், மால், உருத்திரன்' என்னும் காரணக் கடவுளர், ஒரோவோர் அதிகாரத்தை இவரிடத்து வைத்து அவர் வாயிலாக, 'படைத்தல், காத்தல், அழித்தல்' என்னும்

Koviloor Digital Library

104 கண்ணமரு நெற்றியார் காட்டார் நாட்டார்
கனமழுவாட் கொண்டதேன் கையார் சென்னிப்
பெண்ணமருஞ் சடைமுடியார் பேரொன் றில்லார்
பிறப்பிலார் இறப்பிலார் பிணியொன் றில்லார்
மண்ணவரும் வானவரும் மற்றை யோரும்
மறையவரும் வந்தெதிரே வணங்கி யேத்தப்
பண்ணமரும் பாடலார் பைங்க ணேற்றூர்
பலியேற்றூர் பந்தணை நல்லூ ராரே. 8

105 ஏறேறி யேழுலகு மேத்த நின்றூர்
இமையவர்கள் எப்பொழுது மிறைஞ்ச நின்றூர்
நீறேறு மேனியார் நீல முண்டார்
நெருப்புண்டார் அங்கை யனலு முண்டார்

தொழில்களை நடத்துதலால், 'மூவரானூர்' என்றும், முத்தொழிற்கும் தாமே உரியராதல் பற்றி, "முதல்வ ரானூர்" என்றும் அருளிச்செய்தார். திங்கள் கங்கையாள் காதலார் - திங்களையும் கங்கையாளையும் காதலித்தலைச் செய்வார்; திருமுடியில் அணிவார். "காதலார்" என்பதை இருபெயரோடும் தனித்தனி இயைக்க. காம்பு - மூங்கில். ஏய், உவம உருபு. 'ஊழி ஆனூர், உலகமானூர்' என்க. ஊழி, உலகம் ஒடுங்குங்காலம். பற்றூர் - பகைவர்.

104. காட்டார் - காட்டில் வாழ்பவர். நாட்டார் - நாட்டில் வாழ்பவர். ஈண்டு, மலை காட்டினுள்ளும், கடல் நாட்டினுள்ளும் அடக்கப்பட்டன. எனவே, நிலமுழுதும் உள்ளவர் என்றபடி. இதனை, நாடனென்கோ ஊரனென்கோ' (புறம் 94.) என்பதனோடு வைத்து நோக்குக. 'சென்னியில் முடியார்' (முடியினையுடையார்) என்க. "பெண்" என்றது, கங்கையை. சடைமுடி - சடையாகிய மகுடம். "பேரொன்றில்லார்" என்றது. 'சொல்லுட்படாதவர்.' என்பதையும், "பிறப்பிலார் இறப்பிலார் பிணியொன்றில்லார்" என்றது, கருவிகளுள்ளும் வினையுள்ளும் படாதவர் என்பதையும் குறிக்கும். மற்றையோர், உரகர் முதலிய கணத்தவர். ஏத்த - ஏத்துதலினூல், பாடலார் - பாட்டுக்களை உடையவர்.

105. நீலம் - நீலநிறத்தை உண்டாக்கும்விடம். நெருப்பு உண்டார் - "நெருப்பு" என்றது, வேள்வித்தீயில் இடப்படும்

Koviloor Digital Library

ஆறேறு சென்னியார் ஆனஞ் சாடி
யனலுமிழும் ஐவா யரவு மார்த்தார்
பாறேறு வெண்டலையார் பைங்க ணேற்றூர்
பலியேற்றூர் பந்தணை நல்லூ ராரே. 9

106 கல்லூர் கடிமதில்கள் மூன்று மெய்தார்
காரோணங் காதலார் காதல் செய்து
நல்லூரார் ஞானத்தார் ஞான மாஞர்
நான்மறையோ டாறங்கம் நவின்ற நாவார்
மல்லூர் மணிமலை யின்மே லிருந்து
வாளரக்கர் கோன்தலையை மாளச் சேற்றுப்
பல்லூர் பலிதிரிவார் பைங்க ணேற்றூர்
பலியேற்றூர் பந்தணை நல்லூ ராரே. 10

திருச்சிற்றம்பலம்

அவியைக் குறிக்கும். " வட்டக்குண் டத்தில் எரிவளர்த் தோம்பி மறைபயில்வார்-அட்டக்கொண் டுண்ப தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே " (திருமுறை 7-18-2.) என்றருளிச் செய்தமை ஈண்டு உணரத்தக்கது. " அங்கை அனலும் உண்டார் " என்றதில் " உண்டார் " என்பது, 'ஏற்றூர்' என்னும் பொருள்பட நின்றது.

106. கல் ஊர் - கல் மிகுந்த. நல்லூர். நாயனுருக்கு இறைவன் திருவடி சூட்டிய திருத்தலம்; சோழநாட்டில் உள்ளது. ஞானத்தார் ஞானம் - தம்மை (இறைவரை) உணரும் ஞானியரது ஞானம். எனவே, இத்தகைய ஞானம் இல்லாதார் ஞானியராகார் என்பது பெறப்பட்டது. மல் ஊர் - வலிமை மிகுந்த. மணிமலை - அழகியமலை; கயிலாயம்.

கார்வளரு மாடங்கள் கலந்தமறை யொலிவளர்க்குஞ்
சீருடையந் தணர்வாழுஞ் செழும்பதியி னகத்தெய்தி
வார்சடையார் மன்னுதிருத் தூங்கானை மாடத்தைப்
பார்பரவும் திருமுனிவர் பணிந்தேத்திப் பரவினூர். 149

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

11. திருப்புன்கூரும் திருநீடூரும்

திருப்பதிக வரலாறு

ஆண்டவரசு ஆளுடையபிள்ளையாருடன் திருக்கோலக்காவை வணங்கி அவரிடம் விடைகொண்டு, திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர் தொழுது செல்லுங்கால் திருநீடூரில் திருப்புன்கூர்த் தலத்தையும் இணைத்துப் பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 189.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

107 பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்
பேணாதார் அவர்தம்மைப் பேணா தானைத்
துறவாதே கட்டறுத்த சோதி யானைத்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றான் தன்னைத்
திறமாய எத்திசையுந் தானே யாகித்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிறமா மொளியானை நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 1

இஃது இருதலங்களை இணைத்து அருளிச்செய்த திருப்பதிகம். தேவாரத் திருப்பதிகங்களில் சில திருப்பதிகங்கள் இவ்வாறு சில தலங்களை இணைத்து அருளிச்செய்யப்பட்டுள்ளன.

107. பிறவாதே தோன்றுதலாவது, பிற பொருள்கள் முதனிலையாய்க் கூடிநிற்க அக்கூட்டத்தின்வழித் தோன்றாது, தானே தனது இச்சையால், 'அருவம், அருவுருவம், உருவம்' என்னும் மூவகைப்பட்ட வடிவங்களைக் கொண்டு, நிற்றல்.' "பிறவா யாக்கைப் பெரியோன்" (சிலப்பதிகாரம் 5 - 169) எனப் பிறருங் கூறினர். இதனானே பிறந்து தோன்றுவார் யாவரது பிறப்பிற்கும் தானே காரணன் என்பதுந் தானே போதரும். "அம்மையப்ப ரேஉலகுக்கு அம்மையப்பர் என்றறிக" என்பது திருக்களிற்றுப்படியார் (1). "காரணம் காரணாநாம் தாதா" (**कारणं कारणानां धाता**) என்றது 'அதர்வசிகை' என்னும் உபநிடதம்.

Koviloor Digital Library

பேணுதல் - விரும்புதல். கட்டு - பந்தம். அதன்கண் என்றும் அகப்பட்டதின்மையால், துறத்தல் வேண்டாவாயிற்று. சோதி - ஒளி; என்றது, உணர்வை. எனவே, 'இயல்பாகவே மலம் அற்ற தூய உணர்வுடையான்' என்பது பெறப்படும். "வாலறிவன்" (குறள் - 2.) என்றருளினர், திருவள்ளுவ நாயனரும். அவ்வுணர்வுதானே அவற்கு வடிவமாகலின், "துறவாதே கட்டறுத்த சோதியானை" என் றருளிச்செய்தார். தூ நெறி - குற்றம் இல்லாத நெறி. அடையப்படும் பொருள்களது தூய்மையும், குற்றமும் அவற்றுக்கு வாயிலாகிய நெறிமேல் ஏற்றிக் கூறப்படும் என்க. தூநெறிக்குந் தூநெறியாய் நிற்றலாவது, நன்னெறிக்குச் சிறந்த பற்றுக்கோடாய் இருத்தல். அஃதாவது, அறம் தன்னெடு (இறைவனேடு) பொருந்தியவழிச் சிறந்த பயனுகிய வீடு பேற்றைத் தருதலும், பொருந்தாதவழி அதனைத் தராதொழிதலும், முரணியவழித் தீங்கு பயத்தலும் உடைத்தாமாறு நிற்றல். உம்மை சிறப்பும்மை. இறைவனெடு முரணிச்செய்யும் அறம் தீங்கு பயத்தல் தக்கன் செயலாலும், இறைவனெடு பொருந்திச் செய்யும் மறமும் வீடுபேற்றைத் தருதல் சண்டேசுரரது செயலாலும் நன்குணரப்படும்.

"அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்;
பரனடிக் கன்பி லார்செய் புண்ணியம் பாவ மாகும்;
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி,
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே"

என்றது சிவஞானசித்தி (சு. 2 - 29.) "அன்பிலார்" என்றது முரணிநிற்பாரை என்பது, எடுத்துக்காட்டால் விளங்கும். திறம் - பகுப்பு. திருப்புன்கூர்ப் பெருமானை, 'சிவலோகன்' என்றே நாயனர் அருளிச்செய்கின்றார். அப்பெருமானது திருப்பெயர் 'சிவலோகநாதன்' என்பதேயாய் இருத்தல் கருதத்தக்கது. நீதன் (நீசன்) - கீழ்மகன். 'நீதனேனய்' என எச்சமாக்கியுரைக்க. முன்னர் நினையாதிருந்த நெறியாகிய அறியாமை என்னே!' என்க. இது இவ்விருதலத்திலும் இறைவரை வணங்கிய பொழுது உண்டாகிய பேரின்பத்தில் திளைத்துநின்று, இளமைக் காலமெல்லாம் இதனைப் பெருதே வாளா (சமணரோடு) கழிந்தமையை நினைந்து கழிவிரக்கங்கொண்டு அருளிச்செய்தது. அஞ்ஞான்றை நிலைபற்றியே தம்மை, "நீதனேன்" என்றார். இவ்வாறே, "ஏழையேன்' முதலாக வருவன காண்க. இத்திருப்பதிகத்துள்ளும், "சிவலோகனை" என்னும் கனிச்சீர் நின்ற அறுசீரடிகள் வந்தன.

Koviloor Digital Library

108 பின்றானும் முன்றானு மானான் தன்னைப்
பித்தர்க்குப் பித்தனாய் நின்றான் தன்னை
நன்றாங் கறிந்தவர்க்குந் தானே யாகி
நல்வினையுந் தீவினையு மானான் தன்னைச்
சென்றோங்கி விண்ணளவுந் தீயா னானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நின்றாய நீடூர் நிலாவி னானை
நீதனேன் என்னே நான்நினையா வாறே. 2

109 இல்லானை எவ்விடத்தும் உள்ளான் தன்னை
இனிய நினையாதார்க் கின்னா தானை
வல்லானை வல்லடைந்தார்க் கருளும் வண்ணம்
மாட்டாதார்க் கெத்திறத்தும் மாட்டா தானைச்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நெல்லால் விளைகழனி நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 3

108. "பின், முன்" என்றவை காலங்குறித்து நின்றன. அவையாகிநிற்றல், உயிர்போல அவற்றோடு ஒன்றாய் நின்று அவற்றை இயக்குதல். பித்தர் - பிறிதொன்றையும் விரும்பாது தன்னையே விரும்பும் பேரன்பர். இத்தகைய அன்பு பித்தோடு ஒத்தலின், 'பித்து' எனப்படும். பித்தனாய் நிற்றல்-அவரிடத்துப் பேரருளுடையனாதல். இது, நம்பியாரூரர்க்குத் தூதனாய் இருகால் நடந்தமை முதலியவற்றாற் புலனாகும். நன்று - நன்மை; உறுதி. அவர்க்கு அவ் வுறுதிப்பொருள் தானேயாய் நின்றான்; என்றது, 'உறுதி யுணர வல்லார்க்கு அவனையன்றி உறுதிப் பொருள் வேறில்லை' என்றவாறு. ஆங்கு, அசைநிலை. நல்வினையும் தீவினையும் செய்தார்க்கு அவை பயனாய்வருதல் அவனை இன்றி ஆகாமையின், 'அவை ஆனான்' என்றருளினார். தீயாயது, மாலும் அயனும்தேட நின்ற நிகழ்ச்சியைக் குறிக்கும். ஆய - பொருந்திய. 'நீடூர் நின்று நிலாவினானை' எனக் கூட்டுக.

109. 'எவ்விடத்தும்' என்பது முன்னும் சென்று இயையும். இல்லாமை, ஊனக் கண்ணிற்குப் புலனாகாமை. எவ்விடத்தும் - எந்தப்பொருளிலும். இனிய-நல்லன. வல்லடைதல் - விரைந்து.

Koviloor Digital Library

110 கலைஞானங் கல்லாமே கற்பித் தானைக்
கடுநரகஞ் சாராமே காப்பான் தன்னைப்
பலவாய வேடங்கள் தானே யாகிப்
பணிவார்கட் கங்கங்கே பற்ரு ஞனைச்
சிலையாற் புரமெரித்த தீயாடியைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிலையார் மணிமாட நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 4

அடைதல். 'அருளும் வண்ணம் வல்லான்' என இயைக்க. வண்ணம் - முறைமை. மாட்டாதார், அது (வல்லடைதல்) மாட்டாதார். மாட்டாதான் - இயலாதவன்போல வாளா இருப்பவன். செல்லாத செந்நெறி - ஓர் இடம் விட்டு மற்ருேர் இடம் பெயராத நல்லநெறி; அணுவாந் தன்மை நீங்கி எங்குமாய் நிற்றற்குரிய நெறி. எனவே, பிறப்பின்றி வீடுபெறும் நெறி என்றதாம். "பேரா இயற்கை" (குறள் - 370.) என்ருர், திருவள்ளுவ நாயனரும். "விளை கழனி" என்பதற்கு, 'பயனை விளைக்கின்ற கழனி' என உரைக்க. 'நெல்லால்', என்பதில், 'ஆல், அசைநிலை' எனலும் ஆம்.

110. "பணிவார்கட்கு, தானே பலவாய வேடங்கள் ஆகி அங்கங்கே பற்ருனை" என்றியைத்து, அதனை முதற்கண் வைத்து, அதன் பின்னர், 'அவர்கட்கு' என்பது வருவித்துரைக்க. தானே - தான் ஒருவனே. பற்று - உறைவிடம். "ஆனுன்" என்றது, 'ஆக இருந்தான்' என்னும் பொருளது. இது, 'பணிய விரும்புவார்க்கு அவ்விருப்பத்தை எளிதில் நிறைவித்தற்பொருட்டுத் திருக்கயிலை ஒன்றையே இடமாகக் கொண்டிராது எண்ணிறந்த தலங்களில் எழுந்தருளியிருக்கும் பேரருளாளன், என்றருளியவாறு. கல்லாமே - கற்றல் வேண்டாதபடி. கற்பித்தான் - உள் நின்றே உணர்த்தினுன். இதனைத் திருஞானசம்பந்தரிடத்து இனிது காண்கின்ருேம். ஏனையோர்க்கும் மெய்ந் நூல்களின் முடிந்த பொருளை எளிதில் தெளிய அருளினமை அறிக. "சிலையால்புரம் எரித்த" என்றது, 'தானும் பிறரோடொப்பக் கரணங்களாற் செய்வான்போலச் சென்ருன்' என்றவாறு. நிலை ஆர் - பல நிலைகள் (அடுக்குக்கள், நிறைந்த).

Koviloor Digital Library

111 நோக்காதே எவ்வளவும் நோக்கி னானை
நுணுகாதே யாதொன்றும் நுணுகி னானை
ஆக்காதே யாதொன்று மாக்கி னானை
அணுகாதா ரவர்தம்மை அணுகா தானைத்
தேக்காதே தெண்கடல்நஞ் சுண்டான் தன்னைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நீக்காத பேரொளிசேர் நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 5

112 பூணலாப் பூணானைப் பூசாச் சாந்த
முடையானை முடைநாறும் புன்க லத்தில்
ஊணலா வூணானை யொருவர் காணா
உத்தமனை ஒளிதிகழும் மேனி யானைச்

111. நோக்குதல் - காத்தல். நோக்காதே நோக்குதல் - கரணத்தால் (கருவியால்) அன்றிச் சங்கற்பத்தால் (நினைவினாலே) நோக்குதல். எவ்வளவும் - எத்துணைப் பொருளையும் (எல்லாவற்றையும்). நுணுகாது - நுணுகாதபடி. யாதொன்றும் - பிறிதொன்றும். 'யாதொன்றும் நுணுகாதே' என்க. "நுணுகாதே நுணுகினான்" என்றது, 'இயல்பாகவே நுணுகினான்' என்றவாறு. எத்துணை நுண்ணிய பொருளாய் இருப்பினும், அதனினும் நுண்ணியனாய் அதன்கண் நிறைந்து, அதனால் தாக்குண்ணாது நிற்றலின், இறைவனினும் நுண்ணிய பொருள் பிறிதொன்றில்லையாதல் அறிக. ஆக்குதல்-படைத்தல். 'யாதொன்றும் ஆக்காதே' என்க. யாதொன்றும் - ஒன்றனையும். ஆக்கி - எல்லாவற்றையும் ஆக்கி. நோக்குதலை முன்னர் அருளிச் செய்தார், அஃது, உலகம் ஒடுங்கியபின் மீளத்தோன்றுதற்கு உரித்தாமாறு செய்தலையும் குறித்தற்கு. 'நோக்காதே நோக்கி' என்னும் சிவஞானபோத வெண்பாவினை (சூ. 1. அதி. 2.) இங்கு வைத்துக் காண்க. தேக்குதல் - நிறைதல்; அஃது இங்குக் 'குமட்டுதல்' எனப் பொருள் தந்தது. நீக்காத - நீக்குதற்கரிய. பேரொளி - மிக்க பொலிவு.

112. பூணலாப் பூண் - அணியலாகாத அணி; பாம்பு. பூசாச் சாந்தம் - பூசலாகாத சாந்து; சாம்பல். ஊணலா ஊண் - உண்ணலாகாத உணவு; பிச்சை. "இரந்து முயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து - கெடுக உலகியற்றி யான்"

Koviloor Digital Library

சேணுலாஞ் சேழும்பவளக் குன்றேப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நீணுலா மலர்க்கழனி நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 6

113 உரையார் பொருளுக் குலப்பி லானை
யொழியாமே எவ்வுருவு மானுன் தன்னைப்
புரையாய்க் கனமா யாழ்ந் தாழா தானைப்
புதியனவு மாய்மிகவும் பழையான் தன்னைத்
திரையார் புனல்சேர் மகுடத் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிரையார் மணிமாட நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 7

(குறள் - 1062.) என்றமையால், பிச்சை ஊண் உண்ணலாகாத தாத லுணர்க. 'பூணலாப் பூண் முதலியவற்றைக்கொண்டது, தன்பொருட்டன்றிப் பிறர்பொருட்டேயாதலின், அவை அவனுக்குப் புகழாவனவன்றி இகழாமாறு இல்லை' என அவற்றது பெருமை யுணர்த்தியவாறு. அதனுனே, அவன் உலகியற்கு வேறுபட்டவன் என்பதும் இனிது விளங்கும். "ஒருவர்" என்புழி, முற்றும்மை தொகுத்தலாயிற்று. காணு - உணராத. உத்தமன் - மேலானவன். ஒருவரும் காணுமை, யாவராலும் முற்ற உணர இயலாமை. சேண்உலாம் - உயர்ச்சி பொருந்திய. 'நீளுலாம்' என்பது, 'நீணுலாம்" எனத் திரிந்தது; 'மிகுதி பொருந்திய' என்பது பொருள். மலர், தாமரை முதலியன.

113. உரை ஆர் பொருள் - சொல்லின்கண் பொருந்திய பொருள்; சொற்பொருள். அதற்கு உலப்பிலாமை, முடிவு பெருமை; 'சொல்லி முடிக்கலாகாத தன்மைகளை உடையவன்' என்றபடி. உரு - பொருள். 'எவ்வுயிரும்' என்பதும் பாடம். புரை - உயர்ச்சி. கனம் - பருமை. 'ஆழாதானை' என்பதில் உள்ள எதிர்மறை, "புரை, கனம்" என்பவற்றையும் நோக்கி நின்றது. நிற்கவே, 'புரைத்துப் புரையாதானை, கனத்துக் கனவாதானை' என்றலும் அருளியவாருயிற்று. 'புரைத்து, கனத்து, ஆழ்ந்து' என்பன, காலத்தொடுபட்டு நிகழும் செயற்கையை உணர்த்திநின்றன. அதனுல், 'இயல்பாகவே, உயர்ந்தும், கனத்தும், ஆழ்ந்தும் இருப்பவன்' என அவனது பெருநிலையை உணர்த்தியருளியதாயிற்று. "புதியனவுமாய் மிகவும் பழையான்" என்றது, 'காரண காரியத் தொடர்ச்சியாய்

Koviloor Digital Library

114 கூரரவத் தணையானுங் குளிர்தண் பொய்கை
மலரவனுங் கூடிச்சென் றறிய மாட்டார்
ஆரொருவ ரவர்தன்மை யறிவார் தேவர்
அறிவோமென் பார்க்கெல்லா மறிய லாகாச்
சீரரவக் கழலானை நிழலார் சோலைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நீரரவத் தண்கழனி நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 8

115 கையெலாம் நெய்பாயக் கழுத்தே கிட்டக்
கால்நிமிர்த்து நின்றுண்ணுங் கையர் சொன்ன
பொய்யெலாம் மெய்யென்று கருதிப் புக்குப்
புள்ளுவரா லகப்படா துய்யப் போந்தேன்

மேலும் மேலும் தோன்றுவனவாய பொருள்கள் எல்லாமாய்த் தான் நிற்பினும், யாதொரு பொருளுந் தோன்றுது ஒடுங்கிப் பாழ்போலக் கிடந்த நிலையிலும் தான் ஒடுங்காது அவற்றைத் தோற்றுவிக்கும் தலைவனய் நின்றவன்' என்றருளியவாறு. 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருள்' (திருவாசகம். திருவெம்பாவை-9) என்றருளிச் செய்ததும் இப்பொருட்டு. "ஸதேவ ஸௌம்யேத மக்ர ஆஸீத்" (सदेव सौम्येत मग्र आसीत् சத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது) என்பது சாந்தோக்கிய உபநிடதம். "புதியனவுமாய்" என்பதில், புதியனவாயும்' என உம்மையை மாறிக் கூட்டியுரைக்க.

114. கூர் அரவம் - (பாம்புகள் எல்லாவற்றுள்ளும்) மிக்க பாம்பு. 'மாட்டார்' என்புழி, 'ஆயினர்' என்னும் ஆக்கச்சொல் தொக்கது. அவ்விடத்து, ஆகலான் என்னும் சொல்லெச்சம் வருவிக்க. ஆரொருவராயினும் அவரது தன்மையை அறிய வல்லாராகிய தேவர், (அவருள் ஒருவனக வைத்து) அறிவோமெனப் புகுவராயின், அவர்க்கெல்லாம் அறியலாகாத திருவடியை யுடையவன்' என்க. 'இதனை இனிது விளக்குவது, மாலும் அயனும் அறியலாகாது நின்ற நிலை' என்பார், அதனை முன்னர் அருளிச்செய்தார். 'கழலானை' என்புழியும், 'கழலுடையனுயினனை' என ஆக்கம் விரித்துரைக்க. சீர் - புகழ். "சீரரவம்" "நீரரவம்" என்புழி அரவம், ஓசை.

115. 'கழுத்தே' என்னும் ஏகாரம், பிரிநிலை. 'கழுத்தினைக் கைசென்று அடையச் செய்து உண்ணுது, கையினைக் கழுத்துச்

Koviloor Digital Library

செய்யேலாஞ் செழுங்கமலப் பழன வேலித்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நெய்தல்வாய்ப் புனற்படப்பை நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 9

சென்று அடையுமாறு செய்து உண்ணுங் கையர்' என்க. அவ்வாறுண்ணுதல், நெய் மிகுதியாக வழிந்தோடாமைப் பொருட்டும், உணவு வீழாமைப் பொருட்டுமாம். கலம் இன்றிக் கையில் உண்ணுதலால், மார்பிற்கு நேராக நீட்டி விரித்தகைகள் அதற்குமேல் உயர்த்தலாகாவாயின. கால் நிமிர்த்தல், நிற்றலால் உண்டாகும் நோயை நீக்கிக்கொள்ளுதற் பொருட்டு நேராக்குதல். கையில் உண்ணுதல், பொருட்பற்று உண்டாகாமைப் பொருட்டும், நின்றுண்ணுதல் இடப்பற்று உண்டாகாமைப் பொருட்டுமாம். இவ்வாறொழுகுவோர் ஒருசிலரே என்க. 'இவர் இவ்வாறு பற்றுக்களையெல்லாம் விடினும், பற்றக்கடவ பொருளைப் பற்றாமையின், பெறநின்றது என்னை' என்பார், இவ்வாறு இகழ்ச்சி தோன்ற எடுத்தோதியருளினார். நின்று உண்ணும் கையர் - நின்று உண்ணுதலாகிய ஒழுக்கத்தையுடையவர். இனி "கையர்" என்பதற்கு 'வஞ்சகர்' என்றுரைத்து, 'இங்ஙனம் புறத்தாரைமருட்டி நின்றவர்' எனலுமாம். சமணருட் பலர் வஞ்சகராய் இருந்தமையை, அவர் வைதிக சமயத்தார்க்கு அரசன் வாயிலாக இழைத்துவந்த கொடுமைகள்பற்றி யறியலாம். பொய் - பிழை. மெய் - ஒத்தது. " கருதிப்புக்கு " என்றதனால், நாயனார் சமண சமயத்துப் புகுந்த காரணம் நன்கு அறியப்படுகின்றது. 'அப் புள்ளுவர்' எனச் சுட்டு வருவித்துரைக்க. புள்ளுவர் - வேடர்; இஃது உவமையாகுபெயராயிற்று. 'வேடர்கள் பறவைகளையும், விலங்குகளையும் வலையில் வீழச் செய்தல்போல, மக்களைச் சொல்லில் வசப்படுத்துபவர்' என்றதாம். 'அகப்படுத்தப்படாது' என்பது, 'அகப்படாது' என விகாரமாயிற்று. 'வேடரது வலையிற் சிக்கிய ஒரு பறவையேனும் விலங்கேனும் அவராற் கொல்லப்பட்டு அவர்க்கு இரையாகாது தப்பியோடினாற்போல, இறுதிவரையில் சமண சமயத்திலிருந்து கெட்டொழியாது, மீண்டு வந்ததேன்' என்றருளிச்செய்தார். 'இத்துணைத் தாழ்த்து வந்தேன்; முன்பே நினையாதொழிந்த வினைதான் என்னே' என்றிரங்கியவாறு காண்க. படப்பை - தோட்டம்.

Koviloor Digital Library

116 இகழுமா றெங்ஙனே யேழை நெஞ்சே
யிகழாது பரந்தோன்றாய் நின்றான் தன்னை
நகழமால் வரைக்கீழிட் டரக்கர் கோனை
நலனழித்து நன்கருளிச் செய்தான் தன்னைத்
திகழுமா மதகரியி னுரிபோர்த் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவ லோகனை
நிகழுமா வல்லானை நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. 10

திருச்சிற்றம்பலம்

116. "ஏழை நெஞ்சே இகழுமாறு எங்ஙனே" என்பதை ஈற்றில் வைத்து, 'நான் நினையாவாறு என்னே! நீதானும் இகழுமாறு எங்ஙன் ஆயிற்று' என உரைக்க. இது தம் நெஞ்சினை வெருக்கி அருளிச்செய்தது. இகழாது - யாதொரு பொருளையும் இகழ்ந்தொழியாது; (எல்லாவற்றிலும் நிறைந்து அவற்றைத் தனது வியாபகத்துள் அடக்கி நிற்பவன்). நகழ - வருந்த. நகழ்வு - துன்பம்; வருத்தம்: "நகழ்வொழிந் தாரவர் நாதனை உள்கி" என்ற திருமந்திரத்தினைக் காண்க (2660). நிகழுமாவல்லான் தன் இச்சைவழியே செல்ல வல்லவன்; தன்வயமுடையவன்.

புன்னெறியா மமண்சமயத் தொடக்குண்டு போந்தவுட
றன்னுடனே யுயிர்வாழத் தரியேனுன் றரிப்பதனுக்
கென்னுடைய நாயகநின் னிலச்சினையிட் டருளென்று
பன்னுசெழுந் தமிழ்மாலை முன்னின்று பாடுவார். 150

பொன்னார்ந்த திருவடிக்கென் விண்ணப்ப மென்றெடுத்து
முன்னாகி யெப்பொருட்கு முடிவாகி நின்றானைத்
தன்னாகத் துமைபாகங் கொண்டானைச் சங்கரனை
நன்னாமத் திருவிருத்த நலஞ்சிறக்கப் பாடுதலும். 151

நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
வாடகமே ருச்சிலையா னருளாலோர் சிவபூத
மாடொருவ ரறியாமே வாகீசர் திருத்தோளிற்
சேடுயர்மூ விலைச்சூலஞ் சினவிடையி னுடன்சாத்த. 152

— அப்பர் புராணம்

Koviloor Digital Library

12. திருக்கழிப்பாலை

திருப்பதிக வரலாறு

ஆளுடையரசுகள் தில்லையிலிருந்து சென்று திருவேட்களம் பணிந்து பாடிய பின்பு, திருக்கழிப்பாலையை அடைந்து அங்கு மணவாளநம்பியாகிய இறைவனை வணங்கி, "வனபவளவாய் திறந்து" என்னும் திருப்பதிகம் பாடி வைகியிருந்தபோது அருளிச் செய்தது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 173.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

117 ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து
வோள்ளேலும்பு தூணு வுரோமம் மேய்ந்து
தாமேடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பலபடைத்தார் தாமரையினுர்
கானேடுத்து மாமயில்க ளாலுஞ் சோலைக்
கழிப்பாலை மேய கபாலப்பனுர்
வானிடத்தை ஊடறுத்து வல்லைச் சேல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 1

இத்திருப்பதிகம், 'உயிர்கள் பிறவி நீங்கி வீடடைதற் பொருட்டு எண்ணிறந்த தலங்களை இடமாகக்கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருக்குறிப்பினை உணர்ந்து, அக் குறிப்பின் வழியே அத்தலங்களை அடைந்து வணங்கி உய்தி பெறுதல் வேண்டும்' என அறிவுறுத்தருளிச்செய்தது.

117. ஊன் - தசை. உடுத்தி - வளைத்து; சுவராகச் செய்து. மேய்ந்து - மேற்பரப்பி. எடுத்த - கட்டிய. கூரை - குடில். தவிர - நீங்கும்படி. போவார் - (தக்காரிடத்துத்) தாமே வலியச் சென்று அருள்புரிவார். தயக்கம் - விளக்கம்; அது, வேடத்தை உணர்த்திற்று. படைத்தார் - உடையார். தா மரையினுர் - தாவுகின்ற மானை(க் கையிலே) உடையார். கான் - காடு; இஃது உவமையாகுபெயராய்த் தோகையை உணர்த்திற்று. எடுத்து - விரித்து. 'கபால' என்பதன் ஈற்று அகரம் தொக்கது.

Koviloor Digital Library

118 முறையார்ந்த மும்மதிலும் பொடியாச் செற்று
முன்னுமாய்ப் பின்னுமாய் முக்க ணெந்தை
பிறையார்ந்த சடைமுடிமேற் பாம்பு கங்கை
பிணக்கந்தீர்த் துடன்வைத்தார் பெரிய நஞ்சுக்
கறையார்ந்த மிடற்றடங்கக் கண்ட எந்தை
கழிப்பாலை மேய கபாலப்பனூர்
மறையார்ந்த வாய்மொழியான் மாய யாக்கை
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 2

'கபாலப்பனூர்' என்னும் கனிச்சீரினை இங்கும் மேலைத் திருப்பதிகத்திற்போலக் கொள்க. வானிடம் - மண்ணுலகின் வேறாய உலகங்கள்; அவற்றை ஊடறுத்துச் செல்லுதல், எல்லாத் தத்துவங்களையும் கடந்துசென்று அவரது திருவடியை அடைதல். வல்லைச்செல்லுதல், எளிதிற் செல்லுதல். "வழி" என்றது, "குறிகளும் அடையாளமும் கோயிலும்' (திருமுறை 5 - 90. 6) முதலாயினவற்றை. "வழி" என்பதன் பின், 'வைத்தார்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. "வைத்தார்க்கு" என்பது, 'வைத்த அவர்க்கு' எனப் பொருள்தரும். இவை வருகின்ற திருப்பாடல்கட்கும் ஆம். அவர்க்கு - அவர் பொருட்டு; என்றது, 'அவரது கருணைக்குக் கைம்மாறாக' என்றபடி. அவ்வழியே போதுதல், அவற்றாற் பயன்கொள்ளும் முறையை யறிந்து, அவ்வாற்றானே ஒழுகுதல். 'அங்ஙனம் ஒழுகிப் பயன்பெறுதலை யன்றி, அவர்க்கு நாம் செய்யும் கைம்மாறு வேறில்லை' என்றதாம். இஃது, அடித்தடித்து அக்காரம் தீற்றுதல்போலாம் (திருவாசகம் அற்புதப்பத்து 3) என்க.

118 முறை - ஆக்கும் முறை. முன்னுமாய்ப் பின்னுமாய் - தோன்றிக் கெடும் பொருள்கள் எல்லாவற்றின் தோற்றத்திற்கு முன்னும், ஒடுக்கத்திற்குப் பின்னும் உள்ளவனாகி; என்றது, 'அவை எல்லாவற்றையும் தோற்றி ஒடுக்கித் தனக்குத் தோற்றக் கேடுகள் இன்றி என்றும் ஒருபடித்தாய் இருப்பவனாய்' என்றவாறு. "முக்கண் எந்தை, கண்ட எந்தை" என்பன, ஒரு பொருள்மேற் பல பெயர்கள். அவை பன்மையொருமை மயக்கமாய், "கபாலப்பனூர்" என்பதனோடு இயைந்தன. பிறைக்குப் பாம்பு பகையாயிருப்ப, அவ்விரண்டனையும் அலைத்து ஈர்த்து ஓடுவது கங்கையாகலின், அவைகளை, "பிணக்கந் தீர்த்து உடன்வைத்தார்" என்று அருளிச்செய்தார். கறை - கறுப்பு.

Koviloor Digital Library

119 நெளிவுண்டாக் கருதாதே நிமலன் தன்னை
நினைமின்கள் நித்தலும்நே ரிழையா ளாய
ஒளிவண்டார் கருங்குழலி யுமையாள் தன்னை
யொருபாகத் தமர்ந்தடியா ருள்கி யேத்தக்
களிவண்டார் கரும்பொழில்சூழ் கண்டல் வேலிக்
கழிப்பாலை மேய கபாலப்பனார்
வளியுண்டார் மாயக் குரும்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 3

120 பொடிநாறு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடிநூறு கமலத்தர் ஆரு ராதி
ஆனஞ்சு மாடும் ஆதிரையினார்தாம்
கடிநாறு பூஞ்சோலை கமழ்ந்து நாறுங்
கழிப்பாலை மேய கபாலப்பனார்
மடிநாறு மேனியிம் மாயம் நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 4

'நஞ்சுக் கறையை (கறுப்பினை), ஆர்ந்த (அழகு நிறைந்த) மிடற்று அடங்கக் கண்ட (செய்த) எந்தை' என்க. மறை ஆர்ந்த - மந்தணம் நிறைந்த. "வாய்மொழியான்" என்றது, 'தனது வாய்மொழியால்' என்றவாறு. அவை வேத சிவாகமங்கள். 'யாக்கை மாய' என மாறுக.

119. நெளிவு - நெகிழ்வு. 'அஃது உண்டாமாறு கருதாது நினைமின்கள்' என்றது, 'உறுதியாக நினைமின்கள்' என்றதாம். "நிமலன்றன்னை" என்பது முதற்கண் நிற்கும். கரும்பொழில் - இருண்ட சோலை. கண்டல் - தாழை. வளி - பிராணவாயு. 'அதனை வாங்கியும் விட்டும் நுகர்தலாலே நிலைத்துநிற்கும் குரம்பை' என்க. உண்டு - உண்ணுதலால். ஆர் - பொருந்து கின்ற.

120. 'பூதிப் பையர்' என ஈண்டு அருளியவாறே திருமுறைகளுள் பிற இடங்களிலும் சிவபிரான் விபூதிப் பை உடையனாய் இருத்தல் குறிக்கப்படுகின்றது. கமலம், வழிபடுவோர் இட்டவை. ஆதி - முதல்வன். கடி - நறுமணம். "கமழ்ந்து நாறும்"

Koviloor Digital Library

121 விண்ணுனுய் விண்ணவர்கள் விரும்பி வந்து
வேதத்தாய் கீதத்தாய் விரவி போங்கும்
எண்ணுனுய் எழுத்தானுய் கடலே ழானுய்
இறையானுய் எம்மிறையே யேன்று நிற்கும்
கண்ணுனுய் காரானுய் பாரு மானுய்
கழிப்பாலே யுள்ளுறையுங் கபாலப்பனுர்
மண்ணுய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 5

122 விண்ணப்ப விச்சா தரர்க ளேத்த
விரிகதிரான் எரிசுடரான் விண்ணுமாகிப்
பண்ணப்பன் பத்தர் மனத்து ளேயும்
பசுபதி பாசுபதம் தேச மூர்த்தி
கண்ணப்பன் கண்ணப்பக் கண்டு கந்தார்
கழிப்பாலே மேய கபாலப்பனுர்
வண்ணப் பிணிமாய யாக்கை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 6

என்றது, 'மிகுதியாக நறுமணம் பெற்று வீசும்' என்றபடி. மடி நாறும் - இறப்புத் தோன்றும். 'மேனியாகிய இம்மாயம்' என்க. மாயம் - பொய்ம்மை; நிலேயாமை; அஃது அதனே உடைய பொருள்மேல் நின்றது.

121. "விண்ணவர்கள் விரும்பி வந்து, விண்ணுனுய் வேதத்தாய் கடல் ஏழானுய் கண்ணுனுய் காரானுய் மண்ணுனுய் இறையானுய் எம் இறையே என்று நிற்கும் கழிப்பாலேமேய கபாலப்பனுர்" என்றியைத்துக்கொள்க. இறை - எப்பொருட்கும் தலேவன். தமக்கு இறைவனுதலே வேறெடுத்துக் கூறினர் என்க. கண், அறிவு. 'தேவர்கள் பலவாருக ஏத்திப் பணியும் பெருமான்' என்றவாறு.

122. விண்ணப்பம்-வேண்டுகோள். விச்சாதரர்- வித்தியாதரர். விண்ணப்ப விச்சாதரர்கள் - வேண்டுகோளே உடைய வித்தியாதரர்கள். இவர்கள் இசைபாடுபவர் ஆதலின், அவர்களேயே ஏத்துவோராகவும், விண்ணப்பத்தை உடையவராகவும்

Koviloor Digital Library

123 பிணம்புல்கு பீறற் குரம்பை மெய்யாப்
பேதப் படுகின்ற பேதை மீர்காள்
நிணம்புல்கு சூலத்தர் நீல கண்டர்
எண்டோளர் எண்ணி றைந்த குணத்தி னாலே
கணம்புல்லன் கருத்துகந்தார் காஞ்சி யுள்ளார்
கழிப்பாலை மேய கபாலப்பனார்
மணம்புல்கு மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 7

124 இயல்பாய ஈசனை எந்தை தந்தை
என்சிந்தை மேவி யுறைகின் றானை
முயல்வானை மூர்த்தியைத் தீர்த்த மான
தியம்பகன் திரிசூலத் தன்ன கையன்

அருளினார். விரிகதிரான் - சூரியன். எரிசுடரான் - அக்கினி. பண் அப்பன் - எல்லாப் பொருள்களையும் ஆக்குகின்ற தந்தை; 'கதிரோன் முதலிய எல்லாப் பொருள்களுமாய் இருந்து, அவற்றை முதலாகக்கொண்டு தோன்றும் பொருள்களைத் தோற்றுவிப்பவன் என்றருளியவாறு. ஏயும் - பொருந்துகின்ற. பசுபதி - உயிர்கட்குத் தலைவன். பாசுபதன் - பாசுபத வேடத்தை உடையவன். தேச மூர்த்தி - ஒளியுடைய வடிவத்தை உடையவன். காளத்தி, கண்ணப்ப நாயனார் வழிபட்ட இடமாதலை நினைந்து உருகி அருளிச்செய்தவாறு. வண்ணம் - பல வகை.

123. பிணம் புல்கு - பிணமாதல் பொருந்தும். பீறற் குரம்பை - ஒழுக்கற் குடில்; "ஒட்டை மாடம்" (திருமுறை 5.) எனத்திருக்குறுந்தொகையிலும் அருளிச்செய்தார். 'எண்குணம்' நிறைந்த குணம்' எனத் தனித்தனி இயைக்க. அறுபான்மும்மை நாயன்மாருள், கணம்புல்லர் ஒருவர். கருத்து - கருதிச் செய்த தொண்டு; அது, தலைமயிரை விளக்காக எரித்தமை. 'அது குற்றமாயினும், அன்பினால் விரும்பி ஏற்றார்' என்றவாறு. ஆரூரரும் இதனை, "கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள் குற்றம் செய்யினும் குணம்எனக் கருதும் கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்" எனக் குறித்தருளினார் (திருமுறை 7.)

124. ஈசன்-ஆள்பவன்; தலைவன். 'ஒருவரது ஆணையால் தலைவனாகாது, தானே தலைவனாய் நிற்பவன்' என்பார், "இயல்பாய ஈசன்" என் றருளிச்செய்தார். ஐகாரங்கள் சாரியை.

Koviloor Digital Library

கயல்பாயுங் கண்டல்சூழ் வுண்ட வேலிக்
கழிப்பாலை மேய கபாலப்பனூர்
மயலாய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 8

125 செற்றதோர் மனமொழிந்து சிந்தை செய்து
சிவமூர்த்தி யென்றெழுவார் சிந்தை யுள்ளால்
உற்றதோர் நோய்களைந்திவ் வுலக மெல்லாங்
காட்டுவான் உத்தமன்ரு ன்ஞேதா தெல்லாம்
கற்றதோர் நூலினன் கயிறு செற்ருன்
கழிப்பாலை மேய கபாலப்பனூர்
மற்றிதோர் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 9

எந்தை - என்தந்தை. தந்தை - (அவன்) தந்தை. " சிந்தை" என்பது, 'எந்தை, தந்தை' என்பவற்ருேடும் இயையும். மேவி - விரும்பி. தம் குடிமுழுதாண்டமை அருளிச்செய்தவாறு. முயல்வான் - இடையருது தொழில்செய்து நிற்பவன். தொழில், ஐந்தொழில். மூர்த்தி - மூர்த்தம் உடையவன்; அவ்வத் தொழிற்கேற்ற திருமேனிகளை யுடையவன். தீர்த்தன் - தீர்த்தவடிவினன்; பரிசுத்தன் எனலுமாம். 'திரியம்பகன்' என்பது, " தியம்பகன் " என வந்தது. அம்பகம் - கண். திரியம்பகன் - முக்கண்ணன். 'திரிசூலத்தன், நகையன்' எனப் பிரிக்க. நகை, புன்முறுவல். " கயல்பாயுங் கண்டல்" என்றது மருதமும் நெய்தலும் மயங்கி நிற்றல் குறித்தவாறு. சூழ்வுண்ட - சூழ்தல் பொருந்திய. 'கண்டலால் சூழ்வுண்ட' என்க. மயல் - மயக்கம்.

125. செற்றது-பகைத்தது; முரணியது. 'சிந்தை உள்ளால்' என்புழி, ஆல் அசைநிலை. சிந்தையுள் உறும் நோய், கவலை. காட்டுவான் - காணச்செய்வான்; என்றது, 'உலக முழுதும் அவரைப் போற்றச்செய்வான்' என்றதாம். கற்றது ஓர் நூலினன் - பிறர் கற்ற ஒப்பற்ற நூலினது உணர்வினன்; இயல்பாகவே, எல்லா ஞானங்களையும் உடையவன் என்றபடி. கயிறு - பாசம். செற்ருன் - அறுத்தான். " நூலினன், செற்ருன் " என்பன பன்மை யொருமை மயக்கம்.

Koviloor Digital Library

126 பொருதலங்கல் நீண்முடியான் போர ரக்கன்
புட்பகந்தான் பொருப்பின்மீ தோடா தாக
இருநிலங்கள் நடுக்கெய்த எடுத்தி டுதலும்
ஏந்திழையாள் தான்வெருவ இறைவன் நோக்கிக்
கரதலங்கள் கதிர்முடியா றஞ்சி னோடு
கால்விரலா லூன்று கழிப்பாலையார்
வருதலங்க மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே. 10

திருச்சிற்றம்பலம்

126. 'பொருத அலங்கல்' என்பதில் அகரம் தொகுத்தல். அலங்கல், வெற்றிமாலை. "இறைவன்" என்பது, 'தான்' என்னும் பொருட்டாய் நின்றது. வருதல் அங்கம் - வருதலை (பிறத்தலை) உடைய உடம்பு 'அங்கமாகிய குரம்பை' என்க.

ஆங்கவர்தந் திருத்தோளி லார்ந்ததிரு விலச்சினையைத்
தாங்கண்டு மனங்களித்துத் தம்பெருமா னருணினைந்து
தூங்கருவி கண்பொழியத் தொழுதுவிழுந் தார்வத்தால்
ஓங்கியசிந் தையராகி யுய்ந்தொழிந்தே னெனவெழுந்தார். 153

தூங்கானை மாடத்துச் சுடர்க்கொழுந்தி னடிபரவிப்
பாங்காகத் திருத்தொண்டு செய்துபயின் றமருநாட்
பூங்கான மணங்கமழும் பொருவிறிரு வரத்துறையுந்
தேங்காவின் முகிலுறங்குந் திருமுதுகுன் றமும்பணிந்து, 154

வண்டமிழ்மென் மலர்மாலை புனைந்தருளி மருங்குள்ள
தண்டுறைநீர்ப் பதிகளிலுந் தனிவிடையார் மேவியிடங்
கொண்டருளுந் தானங்கள் கும்பிட்டுக் குணதிசைமேல்
புண்டரிகத் தடஞ்சூழ்ந்த நிவாக்கரையே போதுவார். 155

ஆனாத சீர்த்தில்லை யம்பலத்தே யாடுகின்ற
வானாறு புடைபரக்கு மலர்ச்சடையா ரடிவணங்கி
யூனாலு முயிராலு முள்ளபயன் கொளநினைந்து
தேனாறு மலர்ச்சோலைத் திருப்புலியூர் மருங்கணைந்தார் 156

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

13. திருப்புறம்பயம்

திருப்பதிக வரலாறு

நாயனர் பழையாறையில் சமணரால் மறைக்கப்பட்டிருந்த வடதளியை அரசனைக்கொண்டு வெளிப்படுத்திப் புதுக்கச்செய்து வணங்கிய பின்னர், காவிரியின் இருகரையிலும் உள்ள தலங்களை இறைஞ்சிச் சாத்திய தமிழ் மாலைகளுள் ஒன்ருகக் கொள்ளப்படுகின்றது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 301.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

127 கோடிமாட நீள்தெருவு கூடல் கோட்டூர்
கொடுங்கோளூர் தண்வளவி கண்டியூரும்
நடமாடு நன்மருகல் வைகி நாளும்
நலமாகு மோற்றியூ ரோற்றி யாகப்
படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்
பழையாறும் பாற்குளமுங் கைவிட் டிங்நாள்
போடியேறு மேனியராய்ப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரேன்று போயி ஞரே. 1

இது, பிச்சைக்கு வந்த பெருமானது காட்சியாலும், நோக்கு உரைகளாலும் நிறையழிந்தாளொருத்தி, நாள்தோறும் வரும் அவரது வருகையால் ஆற்றியிருந்து, பின்னர் அவர் வாராதொழிய ஆற்ருளாய் அவர்பால் தூதுவிடக் கருதித் தோழிக்குக் கூறியவாருக அருளிச்செய்யப்பட்டது. நாள்தோறும் கண்டு உரையாடுங்கால் அவர் தம் ஊரை வேறு வேருகக் கூற, அவர் உலகமுழுதுடையராத லுணர்ந்த அவள், ‘ அஃது ஒக்கும் ’ என்றிருப்ப, இறுதியில் அவர் தம் ஊர் புறம்பயமாகக் கூறிச் சென்றமையை ஈண்டுக் கூறுகின்ருள் என்க. இறைவன் வெளி நின்றருளப் பெற்ருர், அதன் பின்னர் அவனை அடைய விரையும் நிலை, இதன் உண்மைப் பொருள்.

127. கூடல்-மதுரை. இதுமுதலாகப்பலதலங்கள் இதன்கண் அருளிச்செய்யப்பட்டன. அவற்றுள், கொடுங்கோளூர், வளவி, பாற்குளம்’ என்பன வைப்புத்தலங்கள். வைகி - தங்கியபின்,

Koviloor Digital Library

128 முற்றொருவர் போல முழுநீ றாடி
முளைத்திங்கள் சூடிமுந் நூலும் பூண்டு
ஒற்றொருவர் போல உறங்கு வேன்கை
ஒளிவளையை ஒன்றொன்றா எண்ணு கின்றார்
மற்றொருவ ரில்லைத் துணையே னக்கு
மால்கொண்டாற் போல மயங்கு வேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 2

ஒற்றியாக - ஒற்றியாகையால். இங்கு, 'நீங்கி' என ஒரு சொல் வருவிக்க. "வைகி, கைவிட்டு" என்பன, அவர் அன்றன்று கூறிய தனைக் கூறியவாறே தெளிந்து கூறியன. "இந்நாள், 'நம் ஊர் புறம்பயம்' என்று (சொல்லிப்) போயினார்" என்க. முன்பெல் லாம் கண்ட நாட்களை இறந்த காலமாக மறந்து, இறுதியிற் கண்ட நாளையே நிகழ்காலமாக நினைந்துநின்று கூறுகின்றாளாத லின், அதனை, "இந்நாள்" என்றாள். 'மீண்டு வந்திலர்' என்பது குறிப்பெச்சம். இதனால் தனது விதுப்பு (விரைவு) அறிந்து தோழி தூது விடுவாளாதல் பயன் என்க. இறை வனை அடையப்பெறாது வருந்துவார்க்கு அவரது ஆற்றாமையை அறிந்து இறைவன் திருப்புறம்பயத்தில் வெளிநின்றருளல் இதன் உண்மைப் பயன்; ஆகவே, அதன்பொருட்டு இத்திருப் பதிகம் வெளியாயிற்றென்க.

128. முற்று ஒருவர் - (தவம்) முற்றிய ஒருவர். முழுநீறு - நீற்றுக்குரிய தன்மை நிறைந்த நீறு; அது, மிக வெள்ளிய தாதல். ஒற்று ஒருவர்போல உறங்குதலாவது, மறைந்துநின்று உண்மையை, கண்டும் கேட்டும் உணர்கின்ற ஒற்றர் ஒருவர், அதன்பொருட்டுப் பொய்யாக உறங்குதல்போல உறங்குதல். "ஒற்று ஒருவர்" என்பதும், "முற்றொருவர்" என்றதுபோல வினைத்தொகை. இறைவரது கருத்தினையறிதற் பொருட்டு அவ்வாறுறங்கினாள் என்க. வளையை ஒன்றொன்றா எண்ணியது' நலம்பாராட்டி. "எண்ணுகின்றார்" என்றது, இறப்பில் நிகழ்வு. "மற்றொருவர் இல்லைத் துணை எனக்கு" என்பதனை இறுதிக் கண் கூட்டுக. மால் - பித்து. "உறங்குவேன், மயங்குவேன்" என்பன, இறப்பின்கண், முந்நிலைக்காலமுந் தோன்றும் இயற்கை உணரநின்றன. (தொல் - சொல். 240.)

Koviloor Digital Library

129 ஆகாத நஞ்சுண்ட அந்தி வண்ணர்
ஐந்தலையமாசுணங்கொண்டம்பொற்றோள்மேல்
ஏகாச மாவிட்டோ டொன்றேந்திவந்
திடுதிருவே பலியென்றார்க் கில்லே புக்கேன்
பாகேதுங் கொள்ளார் பலியுங் கொள்ளார்
பாவியேன் கண்ணுள்ளே பற்றி நோக்கிப்
போகாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 3

130 பன்மலிந்த வெண்தலை கையி லேந்திப்
பன்முகில்போல் மேனிப் பவந்த நாதர்
நேன்மலிந்த நெய்த்தானஞ் சோற்றுத்துறை
நியமந் துருத்தியும் நீடூர் பாச்சில்
கன்மலிந் தோங்கு கழுநீர்க் குன்றங்
கடனாகைக் காரோணங் கைவிட் டிந்நாள்
பொன்மலிந்த கோதையருந் தாமுமெல்லாம்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 4

129. ஆகாத - தீங்கு தருகின்ற. ஏகாசம் - மேலாடை. 'ஏந்திவந்ந்'தென, அளபெடையாகவும் பாடம் ஓதுப. 'திருவே பலிஇடு' என்றியைக்க. திரு - திருமகள். பிச்சை ஏற்போர் அதனை இடுவாளை, 'திருமகளே' என்றழைத்தல் வழக்கு. பாகு - குழம்பு. பலி - சோறு. கண் உள்ளே - கண்ணினது உள்ளிடத்தையே. "பற்றி" என்றது, 'கண்ணிற் கருமணியி னுள்ள பாவையே யாகி' என்றதாம். "கருமணியிற் பாவாய்நீ போதாய் யாம்வீழும் - திருநுதற் கில்லை இடம்" (குறள் 1123) என்பதனை நோக்குக. 'கண்ணுளே' என்பதும் பாடம். "போகாத வேடத்தர்" என்றது. 'அவரது வேடம் என் கண்ணி னின்றும் நீங்காத இயல்பினது' என்றதாம். 'வேடத் தராய்ப் போயினர்' என்க.

130. பல் மலிந்த - பற்கள் நிறைந்த. பனி முகில்-பனியைப் பெய்யும் மேகம்; இது வெள்ளிதாய் இருக்கும். இனி, 'குளிர்ந்த முகில்' எனக்கொண்டு, 'அம்மை திருமேனியைக் குறித்தது' என்றலுமாம். 'பிரபந்தம்' என்பது, 'பவந்தம்' என்றாயிற்று.

Koviloor Digital Library

131 சேத்தவர்தந் தலைமாலை கையி லேந்திச்
சிரமாலை சூடிச் சிவந்த மேனி
மத்தகத்த யானை யுரிவை மூடி
மடவா ளவளோடு மானுன் றேந்தி
அத்தவத்த தேவர் அறுப தின்மர்
ஆறுநூ ருயிரவர்க் காடல் காட்டிப்
புத்தகங் கைக்கோண்டு புலித்தோல் வீக்கிப்
புறம்பயம்நம் மூரேன்று போயி னாரே. 5

132 நஞ்சடைந்த கண்டத்தர் வேண்ணீ ருடி
நல்லபுலி யதள்மேல் நாகங் கட்டிப்
பஞ்சடைந்த மேல்விரலாள் பாக மாகப்
பராய்த்துறையே னேன்றோர் பவள வண்ணர்

'பிரபஞ்சம்' என்பது, (திருவிளை. மண்சு. 72.) "பவஞ்சம்" என வந்ததுபோல. 'உரையும் பாட்டும் ஆகிய செய்யுட்களுக் கெல்லாம் உண்மையில் உரிய பொருள்சேர் புகழையுடைய தலைவர்' என்றவாறு. 'பவந்தர் - வஞ்சர்; கள்வர்' என்றுங் கூறுவர். நியமம், 'பரிதிநியமம்' என்னுந் தலம். பாச்சில் - பாச்சிலாச்சிராமம். 'நீர்க்கழுக்குன்றம்' எனமாற்றுக. பொன் - அழகு; கோதையார்; தேவியார்.

131. சிவபிரான், கையிலும் தலைமாலை ஏந்திநிற்றல், இத் திருப்பாடலாற் பெறப்படும். அத் தவத்த தேவர் - அந்தத் தவமுடைய தேவர். தேவர் அறுபதின்மருக்கும், ஆறுநூருயிர வர்க்கும் ஆடல் காட்டினமை இத்தலத்துள் நிகழ்ந்ததுபோலும். புத்தகம் கைக்கொள்ளல், ஆசிரியக்கோலம். "புறம்பய மதனில் அறம்பல அருளியும்" (திருவா. கீர்த்தி. 90) என்பதனுல், இறைவன் இங்கு ஆசிரியனய் இருந்து அருளினமை அறியப்படு கின்றது. "திறம்பய னுறும்பொருள் தெரிந்துணரும் நால் வர்க்கு - அறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்" என, ஆளுடைய பிள்ளையாரும் இங்கு அருளிச்செய்தார் (திருமுறை. 2. 30. 1.)

132. "பராய்த்துறையேன்" என்றது வேறு முடிபாகலின், பால்வழுவின்மை யுணர்க. இது, வருகின்ற பாடல்களிலும் ஒக்கும். 'ஓர் பவள வண்ணர்' என்றது, முன்னர் அறிந்தி லாமை குறித்தது. துஞ்சிடை - உறங்குமிடத்து. 'அதன்பின்

Koviloor Digital Library

துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத்
துண்ணென்றெழுந்திருந்தேன்சொல்லமாட்டேன்
புன்சடையின் மேலோர் புனலுஞ் சூடிப்
புறம்பயம்நம் மூரென்று போயி ஞரே. 6

133 மறியிலங்கு கையர் மழுவொன் றேந்தி
மறைக்காட்டே னென்ருேர் மழலை பேசிச்
செறியிலங்கு திண்தோள்மேல் நீறு கொண்டு
திருமுண்ட மாஇட்ட திலக நெற்றி
நெறியிலங்கு கூந்தலார் பின்பின் சென்று
நெடுங்கண் பனிசோர நின்று நோக்கிப்
பொறியிலங்கு பாம்பார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி ஞரே. 7

134 நில்லாதே பல்லூரும் பலிகள் வேண்டி
நிரைவளையார் பலிபெய்ய நிறையுங் கொண்டு
கொல்லேறுங் கொக்கரையுங் கொடுகொட்டியுங்
குடமுக்கி லங்கொழியக் குளிர்தண் பொய்கை

நிகழ்ந்தது உனக்குச் சொல்லமாட்டேன்' என்க. நிகழ்ந்தது, குறிப்பறிந்து மெய்தீண்டியது. மாட்டாமை, நாணத்தால் ஆய தென்க. இனி, "சொல்லமாட்டேன்" என்றதற்கு, 'காதலும் நாண மும் ஒருநிலையே நின்றமையால், கடிந்தாயினும் நயந்தாயினும் ஒன்றும் சொல்ல இயலாதேனுயினேன்' என்றுரைத்தலுமாம்.

133. மறி - மான் கன்று. மழலை - இனிய மொழி. செறி - செறிதல்; நெருங்குதல்; கிளைத்தல். 'நீறு கொண்டு சென்று' என இயையும். திருமுண்டமா இட்ட திலக நெற்றி - மங்கல முகமாமாறு இட்ட திலகத்தை உடைய நெற்றியை உடைய (கூந்தலார் என்க). நெறி இலங்கு கூந்தலார்-நெறிப்பு விளங்கும் கூந்தலை உடையவர். அவர் பின் பின் சென்று என்றது, 'அன்னுர் பலிரிடத்துத் தாமே வலியச் சென்று' என்றவாறு. நெடுங்கண் பனிசோர - (நிறையழிந்து) நீண்ட கண்கள் நீர்த் துளிகளைச் சொரியுமாறு. நோக்கி - காதல் நோக்கு நோக்கி. பொறி - புள்ளி; இது படத்தின்கண் உள்ளது.

134. நில்லாது - ஓர் இடத்தில் நிலையாக இராமல், ஏகாரம் தேற்றம், "பலியுங்கொண்டு" என்பதனைத் தழுவி நிற்றலின்

Koviloor Digital Library

நல்லாளை நல்லூரே தவிரே னென்று
நறையூரிற் றாமுந் தவிர்வார் போலப்
பொல்லாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 8

135 விரையேறு நீறணிந்தோ ராமை பூண்டு
வெண்தோடு பெய்திடங்கை வீணை யேந்தித்
திரையேறு சென்னிமேல் திங்கள் தன்னைத்
திசைவிளங்க வைத்துகந்த செந்தீ வண்ணர்
அரையேறு மேகலையாள் பாக மாக
ஆரிடத்தி லாட லமர்ந்த ஐயன்
புரையேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 9

"நிறையுங்கொண்டு" என்னும் உம்மை இறந்தது தழீஇயது. "கொல்ஏறு" என்பதில் 'கொல்லுதல்' என்பது இன அடை. கொக்கரை - சங்கு. 'ஒழிய' என்பதனை. 'வந்து' என்பதொரு சொல் வருவித்து முடிக்க. 'குளிர் தண் பொய்கையையும்' நல்ல ஆட்களையும் (ஆடவர்களையும்) உடைய நல்லூர்' என்க. "ஆளை" என்னும் ஐகாரம், சாரியை. "நறையூரிற் றாமுந் தவிர்வார்போல" என்பதனை, "ஒழிய" என்பதன் பின்னர்க் கூட்டுக. 'தாமும்' என்னும் உம்மை அசைநிலை. எல்லா ஊரும் தம்முடையனவே யாக, சில ஊரைத் தவிர்வார்போல, "நல்லூரே தவிரேன்" என்று கூறினார் என்றாள். பொல்லாத வேடம் - மகளிரை நிறையழிக்கும் கோலம்.

135. விரை ஏறு - 'மிக்க நறுமணப் பொருளாகப் பொருந்திய "வெந்த சாம்பல் விரையெனப் பூசியே" (திருமுறை 3. 54. 3.) என்றருளிச்செய்ததும் உணர்க. வெண்தோடு - சங்குத் தோடு, 'இடக் கை' என்பது. 'இடங் கை' என மெலித்தலாயிற்று. ஆரிடம் - அணுகுதற்கரிய இடம்; சுடலை. 'எல்லாம் ஒடுங்கிய இடம்' என்னும் குறிப்பும் ஓர்க. "ஐயன்" என்றது, பன்மை யொருமை மயக்கம். புரை - உயர்வு; தூய்மை.

Koviloor Digital Library

136 கோவாய இந்திரனுள் ளிட்டா ராகக்
குமரனும் விக்கினவி நாய கன்னும்
பூவாய பீடத்து மேல யன்னும்
பூமி யளந்தானும் போற்றி சைப்பப்
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 10

திருச்சிற்றம்பலம்

136. இத்திருப்பாடல், இறைவன் வெளிநின் றருளுங் காட்சியை வகுத்தருளிச் செய்தது. 'இந்திரனை உள்ளிட்ட தேவர் பொருந்த (புறஞ் சூழ்ந்து நிற்க), குமரன் முதலாயினர் அருகிருந்து போற்ற' என்க. பாவாய - பாட்டாகி நின்ற. பாரிடம் - பூதம். 'தாமுமாய்' என ஆக்கம் வருவிக்க. பரந்து - பரவி வந்து. பற்றி - என்னைத் தம்வயமாக்கி. பூவார்ந்த - பூவாகி நிறைந்த; 'அழகு மிக்க' எனினுமாம். கொன்றை - கொன்றைக்கண்.

நாவுக் கரசரு மிருவர்க் கரியவர் நடமா டியதிரு வெல்லைப்பான்
மேவித் தலமுற மெய்யிற்றொழுதபின்மேன்மேலெழுதருவிழைவோ
காவிற் களிமயில்மகிழ்வுற்றெதிரெதிராடக்கடிகமழ்கமலஞ்சூழ்[டுங்
வாவித் தடமலர் வதனம்பொலிவுறுமருதத்தண்பணை வழிவந்தார்.

முருகிற் செறியிதழ் முளரிப் படுகரின்
முதுமே திகள்புது மலர்மேயும்
அருகிற் செறிவன மெனமிக் குயர்கழை
யளவிற் பெருகிட வளரிக்குப்
பெருகிப் புடைமுதிர் தரளஞ் சொரிவன
பெரியோ ரவர்திரு வடிவைக்கண்
டுருகிப் பரிவுறு புனல்கண் பொழிவன
வெனமுன் புளவள வயலெங்கும். 158

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

14. திருநல்லூர்

திருப்பதிக வரலாறு

வாகீசர் திருச்சத்திமுற்றத்திருந்த சிவக்கொழுந்தை இறைஞ்சி, " கூற்றம் வந்து குமைப்பதன்முன் பூவாரடிகள் என் தலைமேல் பொறித்து வைப்பாய் " என வேண்ட, சிவபெருமான் 'நல்லூரில் வா வா' என்றருளிய அருள்நெறியின்படியே, நாயனர் இத்தலத்தில் வந்தணைந்து வணங்கியெழும் பொழுதில், பெருமான் "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று சென்னி மிசைப் பாத மலர் சூட்ட, மகிழ்ந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 196.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

137 நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
சேழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானர் நல்ல வாறே. 1

137. நைய - மேலும் மனம் இளக; 'தற்போதங் கெடும்படி' என்பது கருத்து. இத்திருப்பதிகத்துள், " வைத்தார் " என்பது சொற்பொருட்பின்வருநிலையாய், கருத்து வகையால், செய்தார், அணிந்தார், உடையார், வைத்தார்' என. ஏற்ற பெற்றியால் பொருள் தந்துநிற்றல் அறிக. "நையவைத்தார்" என்பதன்பின், 'அவரிடத்து' என்பது வருவிக்க. திருகு - முறுகுகின்ற; வலுப்படுகின்ற. சிறந்து - மிகுந்து. துருவி - தேடி; என்றது, 'அரிதிற் கிட்டி' என்றவாறு. ஏற - முழுதுமாக. துற்ற - நெருங்கிய. போது, போதாயிருந்து. மதுவாய்-தேனேவடிவாய். பில்கி - ஒழுகியதனல். 'நனைந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'அனைய' என்பது சுட்டு; அது திருவடியின்

Koviloor Digital Library

138 பொன்நலத்த நறுங்கொன்றை சடைமேல் வைத்தார்
புலியுரியின் னதள்வைத்தார் புனலும் வைத்தார்
மன்நலத்த திரள்தோள்மேல் மழுவாள் வைத்தார்
வார்காதிற் குழைவைத்தார் மதியும் வைத்தார்
மின்நலத்த நுண்ணிடையாள் பாகம் வைத்தார்
வேழத்தி னுரிவைத்தார் வெண்ணூல் வைத்தார்
நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானர் நல்ல வாறே. 2

139 தோடேறு மலர்க்கொன்றை சடைமேல் வைத்தார்
துன்னெருக்கின் வடம்வைத்தார் துவலை சிந்தப்
பாடேறு படுதிரைக ளேறிய வைத்தார்
பணிமத்த மலர்வைத்தார் பாம்பும் வைத்தார்

சிறப்புணர நின்றது. "என் தலைமேல்" என்பது இசை யெச்சத்தால், 'ஒன்றற்கும் பற்ருத சிறியேனுகிய எனது புல்லிய தலையின்மேல்' எனப்பொருள் படுமாற்றினை, எடுத்தலோசையாற் கூறிக் காண்க. "நல்லூர் எம்பெருமானர்" என்பதனை முதற் கண் கொண்டு உரைக்க. 'ஆறு' என்றது, செய்கையை. 'நல்லூர் எம்பெருமானர், நைய வைத்தார்; நீங்க வைத்தார்; போர்வை வைத்தார்; தளிர்வைத்தார்; அவைபோலத் திருவடி என் தலைமேல் வைத்தார்; இது நல்ல செய்கையே' என்க. 'இது' என்பது, தமக்குத் திருவடி சூட்டினமையை. 'நல்லூர் எம் பெருமானர் என்பதற்கேற்ப, நல்ல செய்கையே செய்தார்' என்பது நயம். 'வைத்தனபல; அவைபோலத் திருவடியையும் வைத்தார்' என்றது, 'இஃது அவரது பேரருளின் றன்மை' என வியந்தருளியவாறு. வருகின்ற திருப்பாடல்களினும் இவ் வாறே உரைக்க.

138. பொன் நலத்த - பொன்னினது அழகை உடைய. புலி உரி - புலியை உரித்த. இன் அதள் - இனிய தோல்; இனிமை, மெத்தென்றிருத்தல். மன் நலத்த - நிலைபெற்ற அழகினை யுடைய. மின் நலத்த - மின்னலினது அழகினையுடைய. நன்னலம் - மிக்க நன்மை.

139. தோடு ஏறு - இதழ் நிறைந்த. "சடைமேல்" என்பதனை முதற்கண் வைக்க. துவலை - துளி. பாடு ஏறு - பக்கங்களில்

Koviloor Digital Library

சேடேறு திருநுதல்மேல் நாட்டம் வைத்தார்
சிலைவைத்தார் மலைபெற்ற மகளை வைத்தார்
நாடேறு திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 3

140 வில்லருளி வருபுருவத் தொருத்தி பாகம்
பொருத்தாகி விரிசடைமே லருவி வைத்தார்
கல்லருளி வரிசிலையா வைத்தார் ஊராக்
கயிலாய மலைவைத்தார் கடவூர் வைத்தார்
சொல்லருளி அறம்நால்வர்க் கறிய வைத்தார்
சுடுசுடலைப் பொடிவைத்தார் துறவி வைத்தார்
நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 4

ஏறுகின்ற. படு திரைகள் - ஒலிக்கின்ற அலைகள். எறிய - வீச. பனி மத்த மலர் - குளிர்ந்த ஊமத்தம் பூ. சேடு ஏறு - அழகு மிகுந்த. நாட்டம் - கண். சிலை - வில்; பினாகம். நாடு (நாடுதல்) ஏறு - யாவரும் விரும்புதல் பொருந்திய.

140. வில் அருளி வரு புருவம் - வில்லுக்கு அருள்புரிந்து (உவமையாகின்ற பேற்றினை வழங்கித்) தோன்றுகின்ற புருவம். பொருத்தாகி - பொருந்துதலாகி. அருவி - யாறு; கங்கை. கல் அருளி - (மேரு) மலைக்கு அருள்புரிந்து. "ஊராகக் கயிலாய மலையை வைத்தார்" என்க. சொல் அருளி - சொற்களை வழங்கி; "சொல்" என்றது ஆகுபெயராய், அதனால் ஆகிய நூலை (வேதத்தை)க் குறித்தது. "விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்" (திருமுறை 4.7.8.) என நாயனார் அருளிச்செய்தல் காண்க. 'சிவபிரான், ஆலமர நிழலில் எழுந்தருளியிருந்து நான்கு முனிவர்கட்கு வேதத்தைச் சொல்லியருளினார்' என்பது மிகப் பழையதொரு வரலாறாகும். சனகாதி நான்கு முனிவர் கட்கு மோனநிலையிலிருந்து வேதப்பொருளின் அனுபவத்தைக் காட்டிய வரலாறன்று இது. துறவி - துறவு; இச்சொல், 'பிறவி' என்னும் சொல்போன்றது. தகுதி யெய்திய உயிர்கட்கு 'துறவு' என்கின்ற ஒருவழியை வைத்தார் என்க.

Koviloor Digital Library

141 விண்ணிரியுந் திரிபுரங்க ளெரிய வைத்தார்
வினைதொழுவார்க்கறவைத்தார் துறவி வைத்தார்
கண்ணெரியாற் காமனையும் பொடியா வைத்தார்
கடிக்கமல மலர்வைத்தார் கயிலை வைத்தார்
திண்ணெரியுந் தண்புனலு முடனே வைத்தார்
திசைதொழுது மிசையமரர் திகழ்ந்து வாழ்த்தி
நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 5

142 உற்றுலவு பிணியுலகத் தெழுமை வைத்தார்
உயிர்வைத்தார்உயிர்செல்லுங்கதிகள் வைத்தார்
மற்றமரர் கணம்வைத்தார் அமரர் காணா
மறைவைத்தார் குறைமதியம் வளர வைத்தார்
செற்றமலி யார்வமொடு காம லோபஞ்
சிறவாத நெறிவைத்தார் துறவி வைத்தார்
நற்றவர்சேர் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே 6

141. விண் இரியும் - தேவர்கள் அஞ்சி நீங்குவதற்குக் காரணமாய் நின்ற. விண், ஆகுபெயர்; "திசை" என்றதும் அது. 'தொழுவார்க்கு வினை அற வைத்தார்' என்க. கமல மலர் வைத்தது ஆசனமாக என்க; "எரியாய தாமரைமேல் இயங்கினாரும்" (பதிகம். 16. 7.) என்றருளுதல்காண்க. திண் எரி - வலிய (அவித்தற்கரிய) நெருப்பு. "உடனே" என்றது, ஒரு திருமேனியிலே என்றவாறு. "தொழுது" என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது.

142. 'பிணி உலவு உலகம்' என்க. உற்று உலவுதல் - மிகுந்து பரவுதல். எழுமை - எழுவகைப்பட்ட பிறவி. 'உயிரை அப்பிறவிகளில் வைத்தார்' என்க. கதிகள் - துறக்க நிரயங்கள். மற்று, அசைநிலை. 'காணாது' என்பது ஈறுகெட்டு நின்றது. மறை - மறைவு. "குறை மதியம் வளர வைத்தார்" என்றது, 'தக்கனது சாபத்தால் தேய்ந்து சென்ற சந்திரனை அழிந்தொழியாதவாறு முடியில் அணிந்து, பின் வளரவைத்தார்' என்றவாறு. செற்றம்-சினம்; பகையுமாம். ஆர்வம்-மோகம். "மலி" என்றது, ஆர்வத்திற்கு அடை; 'காமம், குரோதம், உலோபம், மோகம்,

Koviloor Digital Library

143 மாறுமலைந் தாரரண மெரிய வைத்தார்
மணிமுடிமேல் அரவைத்தார் அணிகோள் மேனி
நீறுமலிந் தெரியாடல் நிலவ வைத்தார்
நெற்றிமேற் கண்வைத்தார் நிலையம் வைத்தார்
ஆறுமலைந் தறுதிரைக ளேறிய வைத்தார்
ஆர்வத்தா லடியமரர் பரவ வைத்தார்
நாறுமலர்த் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 7

144 குலங்கள்மிகு மலைகடல்கள் ஞாலம் வைத்தார்
குருமணிசே ரரவைத்தார் கோலம் வைத்தார்
உலங்கிளரும் அரவத்தின் உச்சி வைத்தார்
உண்டருளிவிடம்வைத்தார்எண்டோள்வைத்தார்
நிலங்கிளரும் புனல்கனலுள் அனிலம் வைத்தார்
நிமிர்விசும்பின்மிசைவைத்தார்நினைந்தாரிந்நாள்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 8

மதம், மாற்சரியம்' என அகப்பகை ஆறென்பர்; அவற்றைக் குறித்தவாறு. அவை சிறவாத (மிகாத) நெறி - நன்னெறி.

143. மாறு - பகை. மலைந்தார் - போர் செய்தவர். ''மாறாய் மலைந்தார்'' என்க. அரணம் - மதில். 'அரா' என்பதிற் குறிற்கீழ் அகரம். செய்யுளாதலின் குறுகிநின்றது. நிலவ - நிலைத்து நிற்க. நிலையம் - திருக்கோயில்கள். மலைந்து - முடியில் அணிந்து. அறு திரைகள் - கரையை மோதி உடைகின்ற அலைகள்.

144. குலங்கள் - கூட்டங்கள். 'குலங்கள் மிகு மலைகள்' எனவும், 'ஞாலத்தில் வைத்தார்' எனவும் கொள்க. குருமணி- நிறம் வாய்ந்த மாணிக்கம். கோலம் - வேடம். உலம் கிளரும் - திரண்ட கல்போல உயர்கின்ற; இது வடிவுவமை. ''உச்சி'' என்றது, படத்தை, 'விடம் உண்டருளிவைத்தார்' என மாற்றி, ''வைத்தார்'' என்பதற்கு, 'கண்டத்தில் வைத்தார்' என உரைக்க. ''உள்'' என்பதனை, ஒடுவாகத் திரிக்க. அனிலம் - காற்று. ''விசும்பின்'' என்பதில் உள்ள இன், வேண்டாவழிச் சாரியை. மிசை - மேல் இடம். 'விசும்பாகிய மேலிடம்' என்க. 'நினைந்தாராய்' என எச்சப்படுத்துக. நினைந்தது நாயனாரது

Koviloor Digital Library

145 சென்றுருளுங் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்
திசைபத்தும் இருநிலத்தில் திருந்த வைத்தார்
நின்றருளி யடியமரர் வணங்க வைத்தார்
நிறைதவமும் மறைபொருளும் நிலவ வைத்தார்
கொன்றருளிக் கொடுங்கூற்றம் நடுங்கி யோடக்
குரைகழற்சே வடிவைத்தார் விடையும் வைத்தார்
நன்றருளுந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 9

146 பாம்புரிஞ்சி மதிகிடந்து திரைக ளேங்கப்
பனிக்கொன்றைசடைவைத்தார்பணிசெய்வானோர்
ஆம்பரிசு தமக்கெல்லாம் அருளும் வைத்தார்
அடுசுடலைப் பொடிவைத்தார் அழகும் வைத்தார்
ஓம்பரிய வல்வினைநோய் தீர வைத்தார்
உமையையொரு பால்வைத்தார் உகந்து வானோர்
நாம்பரவும் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 10

வேண்டுகோளை. "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" (திருநாவுக். பு. 196.) எனக் கூறியதுகொண்டு இவ்வாறு அருளிச்செய்தார்.

145. ஞாயிறும், திங்களும் வட்ட வடிவினவாதல் பற்றி, அவற்றின் இயக்கத்தை உருள்வதாக அருளிச்செய்தார். "சென்று உருளும்" என்றருளினாராயினும் 'உருண்டு செல்லும்' என்றலே கருத்து. நின்று - வெளிநின்று. "அருளி" என்றது துணை வினை. "கொன்றருளி" என வருவதும் அது. மறைபொருள்-இரகசியப் பொருள்; நல்லாசிரியர்பாற் கேட்டன்றித் தாமே உணரலாகாத பொருள். 'சேவடியை, கூற்றம் நடுங்கியோட வைத்துக் கொன்றருளினார்' என்பது கருத்து. இங்கு, "வைத்தார்" என்பது, 'உதைத்தார்' என்னும் பொருளது. நன்று - நன்மை. திருவடிகளே, கூற்றைக் கொன்றதுபோலும் தீமையாகிய மறக்கருணையையும், மார்க்கண்டேயருக்கு உலவா வாழ்நாள் அளித்ததுபோலும் நன்மையாகிய அறக்கருணையையும் செய்யுமாகலின் ஈண்டு அறக்கருணையே செய்தன என்பார், "நன்றருளும் திருவடி" என்றருளிச்செய்தார்.

146. உரிஞ்சி - உராய்ந்து. 'உரிஞ்சி, கிடந்து, என்னும் எச்சங்கள் எண்ணுப்பொருளில் வந்தன. ஆம் பரிசு - ஏற்ற

Koviloor Digital Library

147 குலங்கிளரும் வருதிரைக ளேழும் வைத்தார்
குருமணிசேர் மலைவைத்தார் மலையைக் கையால்
உலங்கிளர எடுத்தவன்தோள் முடியும் நோவ
ஒருவிரலா லுறவைத்தார் இறைவா என்று
புலம்புதலும் அருளோடுபோர் வாளும் வைத்தார்
புகழ்வைத்தார் புரிந்தாளர்க் கோள்ள வைத்தார்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 11

திருச்சிற்றம்பலம்

வகையில். 'தமக்கு' என்புழித் 'தாம்' என்றது, உயிர்களை. ஓம்பரிய - நீக்குதற்கு அரிய. 'வானோரும் நாமும் பரவும்' என்க "நாம்" என்றது, மக்களை.

147. குலம்-கூட்டம். "வருதிரைகள்" என்னும் அன்மொழித் தொகை, 'கடல்' என்னும் ஒரு சொற்றன்மையாய். "கிளரும்" என்னும் எச்சத்திற்கு முடிபாயிற்று. குரு-நிறம். மலை. கயிலாயம். உலம் - திரண்டகல்; அஃது உவமையாகு பெயராய், தோள்களை யுணர்த்திற்று. 'உற', 'துன்பம் உற' என்க. புகழ், இராவணனை அடர்த்தும், அருளியும் இறைவர் அடைந்தவை. புரிந்து ஆளாக - மக்கள் இடைவிடாது சொல்லித் தமக்கு ஆளாகுமாற்றால். கொள்ள - (அவர்களை) ஏற்றுக் கொள்ளுதற்கு (அப் புகழை வைத்தார்). "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் - பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள் - 5.) என்றருளியது காண்க.

அறிவிற் பெரியவ ரயனெற் பணிவய
லவைபிற் படும்வகை யணைகின்றார்
பிறவிப் பகைநெறி விடுவீ ரிருவினை
பெருகித் தொடர்பிணி யுறுபாசம்
பறிவுற் றிடவணை யுமினென் றிருபுடை
பயில்சூழ் சினைமிசை குயில்கூவுந்
செறிவிற் பலதரு நிலையிற் பொலிவுறு
திருநந் தனவன மெதிர்கண்டார். 159

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

15. திருக்கருகாவூர்

திருப்பதிக வரலாறு

நாவரசர் திருநல்லூரில் இறைவன் திருவடி சூட்டப்பெற்ற பின் பலநாள் அங்குத் தங்கித் தொழுது தமிழ் மாலை பல பாடித் திருத்தொண்டு செய்து, பின்பு திருக்கருகாவூர் சென்று அங்குக் கண்ணுதலைத் தொழுது கசிந்து பாடியருளியது இத் திருப் பதிகம். (திருநாவுக். பு. 198.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

148 குருகாம் வயிரமாங் கூறு நாளாம்
கோள்ளுங் கிழமையாம் கோளே தானும்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணும்
ஒருகால் உமையாளோர் பாக னுமாம்
உள்நின்ற நாவிற் குரையாடியாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 1

இத்திருப்பதிகம் முழுவதும் இறைவனை, 'அடியவர்க்குக் 'கண்' என்று அருளிச்செய்கின்றார்.

148. குரு காம் - நிறத்தைத் தாங்குகின்ற; 'காவும்' என்னும் பெயரெச்சத்து ஈற்று உயிர்மெய்கெட்டது. எதுகை நோக்கிக் ககர ஒற்று மிகாதாயிற்று. அன்றி, குருகு, வெண்மை என்றலும் ஒன்று. இனி, 'குருகு ஆம் வயிரம்' எனக்கொண்டு 'கைவளையாதற்குரிய வயிரம்' என்றுரைத்தலும் ஆம். 'வயிரம் ஆம்' முதலியவற்றில் "ஆம்" 'ஆவான்' என்னும்பொருட்டு. நாள் - நட்சத்திரம். கோள் - கிரகம். 'கோளே' என்னும் ஏகாரம் தேற்றம். தான், அசைநிலை 'பருகா அமுதம்' விலக்குருவகம். பருகிய பின்னர் மிருத்யுவை (மரணத்தை)ப் போக்கும் அமுதம்போலாது, பருகாமலே (மலத்தைப்) போக்கும் அமுதமாய் உள்ளவன்' என்பதாம். இரதம் - சுவை. பாலின் நெய் முதலிய மூன்றும் சுட்டிக் கூறு உவமங்கள். ஆக்கங்கள்

Koviloor Digital Library

உவமை குறித்தன. "வயிரமாம்" என்புழியும் 'ஆம்' அன்னது. 'மற்றொருகால் தனியனுமாம்' என்பதைத் தழுவிநிற்றலின், 'பாகனுமாம்' என்னும் உம்மை, எதிரது தழுவிய எச்சம்; இறைவன், உலகத்தைத் தொழிற்படுத்துங்கால் 'தானும், தன் சத்தியும்' என இருதிறப்பட்டு நிற்றலும், அவை அனைத்தும் ஒடுங்கியபின்னர் வாளாவிருக்குங்கால், சத்தி தன்னிடத்தில் அடங்கியிருப்பத் தான் ஒருவனுயே நிற்றலும் உடையன் என்க. "பெண்ணுரு ஒருதிறனுகின்று; அவ்வுரு - தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்" (புறம். கடவுள் வாழ்த்து.) என்றதுங் காண்க. மீள வுலகத்தைத் தொழிற்படுத்த நினையுங்கால் இரு திறனய் நிற்பன் ஆதலின், "ஒருரு வாயினை; மானுங் காரத்து - ஈரியல்பாய்" என்றறருளிச்செய்தார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர். (திருமுறை 1. திருவெழுகூற்றிருக்கை.) உள் - வாயினுள். "உரையாடி" என்பது, 'நா உரையாடுதற்கு ஏதுவாய் உள்ள முதல்வன்' என்னும் பொருளதாய், கிழமைப் பொருளில் வந்த, "நாவிற்கு" என்னும் நான்காவதற்கு முடிபாயிற்று. கரு - முதல். "உலகுக்கு" என்பது, தாப்பிசை யாய், முன்னருஞ்சென்று இயைந்தது. 'கண்' என்றது, நடாத்துவோனுதல்பற்றி. 'முன்னே தோன்றிநின்று நடாத்து வான்' என்பது பொருளாகலின், "முன்னே தோன்றும்" என்றது, உடம்பொடு புணர்த்தல். இத் திருப்பாட்டுள், "வயிரம்" என்றதனுல், இறைவனது சிறப்பினையும், "நாள், கிழமை, கோள்" என்றவற்றுல், அவன் காலமாய் நின்று அதனை நடாத்தி, உலகினைத் தொழிற்படுத்துதலையும், "அமுதம்" என்றதனுல், அவனது இன்பம், அருள், ஆற்றல் என்பவற்றை யும், "பாலின் நெய்" முதலிய மூன்றுலும், அவன், உடலில் உயிர்போல உலகத்தோடு ஒன்றுய் நிற்றலையும், "உமை பாகனும்" என்றனுல், அவனது 'தடத்தநிலை, சொரூபநிலை' என்னும் இருநிலைகளையும், "நாவிற்கு உரையாடி" என்ற தனுல், எல்லாப் பொருள்களையும் இயக்குதலையும் அருளிச் செய்தவாறும்.

Koviloor Digital Library

149 வித்தாம் முளையாகும் வேரே தானும்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால்நிறமு மாம்பரஞ் சோதி தானும்
தோத்தாம் அமரர்கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றுதேன் உள்ளத்தி னுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்கும் காணு காட்டுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 2

149. 'வித்து, முளை, வேர் போல்வான்' என்றது, முறையே, உலகிற்கு "முதற்காரணப் பொருளாயும், உலக மாகிய காரியப் பொருளாயும், அக்காரியப் பொருள் நிலைத்து நிற்றற்கு ஏதுவாயும் நிற்பவன்' என்பதை விளக்கிநின்றன. இறைவன் உலகிற்கு முதற்காரணப் பொருளாய் நிற்றலாவது, வித்திற்கு நிலம்போல மாயைக்குச் சிறந்த நிலைக்களமாய் நிற்றல். "தாரகமாம் அத்தன் தாள்" (சிவஞானபோதம் - சூ. 1. அதி. 1.) என்றருளிச்செய்தார், மெய்கண்டதேவநாயனர். எனவே, நிலம் ஈரமாகிப் பதப்பட்ட பின்பே விதை அதனுள் அடங்கிப் பக்குவப்பட்டு முளையைத் தோற்றுவித்தல்போல, இறைவன் எண்ணங்கொண்ட பின்பே, மாயை பக்குவப்பட்டு உலகத்தைத் தோற்றுவிக்கும் என்க. உண்மையில் மாயையே முதற்காரணமாயினும், அதற்கு இன்றியமையாத நிலைக்களமாய் நிற்றல்பற்றி, பான்மை வழக்கால் இறைவனை முதற்காரண மாகக் கூறுவர். இறைவன் உலகமாகிய காரியப் பொருளாய் நிற்றலாவது, உடல் உயிர்போல உலகிற் கலந்துநிற்றல். உலகம் நிற்றற்கு இறைவன் ஏதுவாதலாவது, அத்தன்மைத் தாய ஊழினை அவன் இயக்கிநிற்றல். எனவே, அவ்வூழே இங்கு வேரோடு உவமிக்கப்பட்டதென்க. ஊழ் உலகத்தைப் பற்றி வேருகாது கிடத்தலின், அதற்கு முளையின் வேருகாத வேர் உவமையாயிற்று. "வேண்டும் உருவம்" என்பதில், "உருவம்" என்பது, 'உருவினன்' என அவற்றை உடைய வன்மேல் நின்றது. 'இறைவன் தனது இச்சையால், நினைத்த வடிவத்தினைக் கொள்வன்' என்பதாம். இதனை, "நிறுத்து வன் நினைந்த மேனி நின்மலன் அருளி னலே" எனச் சிவஞான சித்தி விளக்குதல் காண்க. (சூ. 1 - 45) பத்து - அடியார் இலக்கணம் பத்து. அவை, 'கண்டம் விம்மல், நாத்தழுதழுத்தல், நகை முகங்காட்டல், உடல் நடுங்கல்,

Koviloor Digital Library

150 பூத்தானும் பூவின் நிறத்தானுமாம்
பூக்குளால் வாசமாய் மன்னி நின்ற
கோத்தானுங் கோல்வளையாள் கூற ளுகுங்
கோண்ட சமயத்தார் தேவ ளுகி
ஏத்தாதார்க் கென்று மிடரே துன்பம்
ஈவாளு மென்னெஞ்சத் துள்ளே நின்று
காத்தானுங் காலன் அடையா வண்ணங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 3

மயிர்சிலிர்த்தல், வெயர்த்தல், சொல்லின்மை, வசமழிதல், கண்ணீர் அரும்பல், வாய்விட்டழைத்தல்' என்பன. இவ்வாறு உபதேச காண்டத்துட் கூறப்பட்டது. "பத்துக்கொலாம் அடியார் செய்கை தானே" (திருமுறை. 4-18-10) என நாயனாரும், "பத்துடையீர் ஈசன் பழவடியீர்" (திருவெம்பாவை 3.) என ஆளுடைய அடிகளும் அருளினமை காண்க. இனி, 'பற்று' என்பது, "பத்து" என மருவிற்றுகவும் உரைப்பர். "பாங்கனுமாம்" என்பது, காரண ஆக்கப் பெயராய், ''துணையாய் உடன்நிற்பவன்' எனப் பொருள்தந்தது. 'பாங்கனுமாம்' என்பதற்கு, 'தோழனும் ஆவான்' என்றும் உரைத்தலுமாம். "ஓத உலவா ஒருதோழன்" (திருவெம்பாவை 10.) என்றுர் ஆளுடையஅடிகளும். பால்நிறமும் ஆம் - (செம்மை நிறமேயன்றிப்) பால்போலும் வெண்மை நிறத்தனும் ஆவான். வெண்மை நிறமும் சிவபிரானுக்குச் சொல்லப்படும் என்க. அன்றி, ஐந்து முகங்களில் மேல்முகமாகிய ஈசானமுகம் வெண்மையதாதலைக் குறித்தது எனினுமாம். பரஞ்சோதி - மேலான ஒளி. "தான்" இரண்டும் அசைநிலைகள். தொத்து - கொத்து; குழு; 'பதினெண் வகைப்பட்ட குழுக்களாகிய அமரர் கணம்' என்க. கத்து - பொய்; கரவு, ' அமரர் போற்ற அவர்களுக்குத் தோன்ருது என் உள்ளத்துள் மறைந்து நின்ற கரவினையுடையன்' என்க. காளு காட்டும் - கண்டறியாதவற்றைக் காட்டும்.

150. "பூத்தானும், கோத்தானும்" என்பவற்றில் உள்ள 'தான்', அசைநிலை. நிறத்தான் - நிறமாய் நிற்பவன். "பூக்குளால்" என்பதில், 'ஆல்' அசைநிலை. வாசம் - மணம். கோ - தலைவன். "சமயத்தார் கொண்ட தேவளுகி" என மாற்றுக. ' யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி

Koviloor Digital Library

151 இரவனும் எல்லி நடமாடியாம்
எண்திசைக்குந் தேவனும் என்னு ளானும்
அரவனும் அல்ல லறுப்பானுமாம்
ஆகாச மூர்த்தியாம் ஆனே றேறும்
குரவனுங் கூற்றை யுதைத்தான் தானுங்
கூறாத வஞ்சக் குயலர்க் கென்றும்
கரவனுங் காட்சிக் கெளியா னுமாங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 4

யாங்கே - மாதொரு பாகனுர்தாம் வருவர்" என்ற சிவஞான சித்தி (சூ. 2 - 25) காண்க. "இடரே" என்னும் எண்ணே காரம், "துன்பம்" என்பதனேடும் இயையும். இடர் - இடையூறு. துன்பம் - மனக்கவலே. 'ஏத்தாதார்க்கு இடரையும் துன்பத்தையும் ஈவான்' என்றதனுல், ஏத்துவார்க்கு அவை இரண்டையும் நீக்கியருளுவானுதல் பெறப்படும். 'காலன் அடையாவண்ணம் காத்தான்' என்க. "கண்ணும்" என்பதற்கு, 'எனக்கு' எனவும், 'உலகுக்கு' எனவும் ஆங்காங்கு ஏற்கு மாற்றுற் கூறுக.

151. இரவன் - இராப்பொழுதாய் இருப்பவன். எல்லி - இரவு. என் உள்ளான் - எனது உள்ளத்திருப்பவன். அரவன் - பாம்பை அணிந்தவன். "எண்டிசைக்கும் தேவனும், ஆகாச மூர்த்தியாம்" என்பன, முறையே, 'மண்ணிற்கும் விண்ணிற்கும் முதல்வனுய் நிற்பவன்' என்றருளியவாறு. "ஆகாச மூர்த்தியாம்" என்பதற்கு, 'ஆகாயத்தையே வடிவாக உடையவன்' என்றுரைப்பினும் அமையும்; "ஆகாய வண்ண முடையாய் போற்றி" (பதிகம் 3-57) என்று அருளிச்செய்தல் அறிக. குரவன் - குரு. "ஆனேறு ஏறும் குரவன்" என்றது உடம்பொடு புணர்த்தலாகலின், 'ஆனேறு ஏறுவானும்; குரவனும்' எனக்கொள்க. குயலர் - வஞ்சகர். 'குய்யம்' என்பது ஈறு திரிந்து, இடைக்குறைந்து, 'குயல்' என நின்றது. அதனடியாய்ப் பிறந்த 'குயலர்' என்பது வாளா பெயராய் நின்றது. 'குயலர் - தேர்ந்தவர்' என்பது தமிழ்ப் பேரகராதி. காட்சிக்கு எளியனுதல், வஞ்சம் இல்லாத மெய்யன்பர்க்கு என்க.

Koviloor Digital Library

152 படைத்தானும் பாரை யிடந்தா னாகும்
பரிசோன் றறியாமை நின்றான் தானும்
உடைத்தானும் ஒன்னார் புரங்கள் மூன்றும்
ஒள்ளழலால் முட்டி யொருக்கி நின்று
அடைத்தானுஞ் சூலம் மழுவோர் நாக
மசைத்தானும் ஆனேற்றேன் றூர்ந்தா னாகும்
கடைத்தானுங் கள்ள மறிவார் நெஞ்சிற்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 5

153 மூலனும் மூர்த்தியாம் முன்னே தானும்
மூவாத மேனிமுக் கண்ணி னானும்
சீலனுஞ் சேர்ந்தா ரிடர்கள் தீர்க்குஞ்
செல்வனுஞ் செஞ்சுடர்க்கோர் சோதி தானும்
மாலனும் மங்கையோர் பங்க னாகும்
மன்றாடி யாம்வானோர் தங்கட் கெல்லாம்
காலனுங் காலனைக் காய்ந்தா னாகுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. 6

152. ''பாரை'' என்பது தாப்பிசை. இடத்தல் - பெயர்த்தல்; 'படைத்தவனாகிய பிரமனாகியும், இடந்தவனாகிய திருமாலாகியும் நிற்பான்' என்றதாம். பரிசு - (தனது) தன்மை. ''ஒன்று'' என்பதற்கு, 'ஒன்றாக' என உரைக்க. 'அளவற்ற தன்மைகளை உடையவன்' என்றபடி. ''அழலால்'' என்பதனை, 'அழலை' எனத் திரித்துக்கொள்க. ஒருக்கி - ஒருங்கு கூட்டி. ''ஒருக்கி நின்று உடைத்தானும்'' என்க. அடைத்தான் - (தன்னை) அடையச்செய்தான்; தாங்கி நின்றான். 'சூலம் மழு அடைத்தான்' என்க. அசைத்தல் - கச்சாகக் கட்டுதல்; ''கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி'' (பதிகம். 55-2) என்றருளிச்செய்தல் காண்க. 'ஆனேற்றூற் பயன்கொள்வோர், இரண்டு ஆனேறு உடையராதல்வேண்டும்; அவ்வாறன்றி, ஓர் ஆனேற்றினாலே பயன்கொள்கின்றான்' என்றபடி. 'கடைந்தானும்' என்பது, வலித்தலாயிற்று. கடைந்தான் - கலக்கினான்; 'கடைதான்' என்பது விரித்தலாயிற்று எனக்கொண்டு, 'விரும்பாத பொருளாய் இகழநிற்பவன்' என, உரைத்தலுமாம். கள்ளம் வல்லாரை, ''அறிவார்'' என்றது, புகழ்தல்போல இகழ்ந்தது.

153. மூலன் - முதற்பொருளாய் உள்ளவன். இது மூர்த்திமானாதலையும் குறித்தல் காண்க. மூர்த்தி - வடிவமாய் நிற்பவன்,

Koviloor Digital Library

154 அரைசே ரரவனும் ஆலத் தானும்
ஆதிரை நாளானும் அண்ட வானோர்
திரைசேர் திருமுடித் திங்க ளானுந்
தீவினை நாசனேன் சிந்தை யானும்
உரைசே ருலகத்தா ருள்ளானுமாம்
உமையாளோர் பாகனும் ஓத வேலிக்
கரைசேர் கடல்நஞ்சை யுண்டா னுகுங்
கண்ணுங் கருகாவூ ரேந்தை தானே. 7

155 துடியாங் துடியின் முழக்கந் தானுஞ்
சோல்லுவார் சோல்லேல்லாஞ் சோதிப் பானும்
படிதானும் பாவ மறுப்பா னுகும்
பால்நீற்ற னும்பரஞ் சோதி தானும்
கோடியானுங் கூற்றை யுதைத்தா னுகுங்
கூறுத வஞ்சக் குயலர்க் கேன்றும்
கடியானுங் காட்சிக் கரியா னுகுங்
கண்ணுங் கருகாவூ ரேந்தை தானே. 8

முன் - காலவயப்பட்ட எல்லாப் பொருள்கட்கும் முற்பட்டவன். சீலன் - ஒழுக்கமுடையவன் ; தவவேடம் உடையவன். செஞ் சுடர் - சூரியன் ; 'அவனுடைய ஒளிக்கும் காரணமாய் உள்ள வன்' என்றபடி. 'ஓர் பங்கு மாலனும்' என்பது கருத்தாகக் கொள்க. 'ஓர்பங்கு மாயோனை உடையவனுமாவான்; மங்கையை உடையவனுமாவான்' என்றபடி. "எல்லாம்" என்பதில், எச்சத்தோடு உயர்வு சிறப்பாய்நின்ற உம்மை விரிக்க. "காலனுங் காலன்" இறுதிக் காலமாய் நிற்கும் கூற்றுவன்.

154. ஆலத்தான் - ஆல் நிழலில் இருப்பவன். அண்டம் - விண்ணுலகம். "வானோர்" என்றது, வாளா, 'தேவர்' என்னும் பொருட்டாய் நின்றது. திங்களான் - சந்திரனை யணிந் தவன். "நாசன்" என்புழி 'ஆம்' என்பது தொகுத்தலா யிற்று. உரைசேர் உலகத்தார் - நாத்திகம் முதலான பலவற்றை யும் நாத்தழும் பேறப் பேசும் உலகத்தார். 'என் உள்ளத்தினும் உள்ளான் ; அவர் உள்ளத்தினும் உள்ளான்' என்றபடி.

155 துடி - 'உடுக்கை' என்னும் பறை. இதனை, படைத்தற் றொழிலுக்கு அடையாளமாக இறைவன் ஏந்தி நிற்றலின், சிறந் தெடுத்து அருளிச்செய்தார். "தோற்றம் துடியதனில்"

Koviloor Digital Library

156 விட்டுருவங் கிளர்கின்ற சோதி யானும்
விண்ணவர்க்கும் அறியாத சூழ லானும்
பட்டுருவ மால்யானைத் தோல்கீண் டானும்
பலபலவும் பாணி பயின்றான் தானும்
எட்டுருவ மூர்த்தியாம் எண்தோ ளானும்
என்னுச்சி மேலானும் எம்பி ரானும்
கட்டுருவங் கடியானைக் காய்ந்தா னாகுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 9

157 பொறுத்திருந்த புள்ளூர்வா னுள்ளா னாகி
உள்ளிருந்தங் குள்நோய் களைவான் தானாய்ச்
செறுத்திருந்த மும்மதில்கள் மூன்றும் வேவச்
சிலைகுனியத் தீமூட்டுந் திண்மை யானும்
அறுத்திருந்த கையானா மந்தா ரல்லி
யிருந்தானை யொருதலையைத் தெரிய நோக்கிக்
கறுத்திருந்த கண்ட முடையான் போலுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே. 10

(உண்மை விளக்கம் - 36.) என்றது காண்க. ஒலியினும் நுட்பமாய்க் கலந்து நிற்றலின், " துடியின் முழக்கந் தானும் " என்றருளினார். " ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே " (பதிகம். 38-1.) என அருளிச்செய்தல் காண்க. சொற்களைச் சோதித்தலாவது, அவை வாய்மையாதலையும், பொய்ம்மையாதலையும் உணர்தல். படி - நெறி. ' கொடியானும் கூற்று ' என்க. கடியான் - ஒறுப்பவன். காட்சிக்கு அரியனாதலும் குயலர்க்கே.

156. உருவம் - நிறம். சூழல் - நிலை. ' யானையினது பட்டுப் போன்ற மெல்லிய தோலை உரித்தவன் ' என்க ; ' நகம் பட்டு உருவுமாறு உரித்தவன் ' எனினுமாம். பாணி - தாளம் ; ' பல பல தாளத்தில் நடிப்பவன் ' என்பதாம் எட்டு உருவம் - அட்ட மூர்த்தம் ; அவை :- ஐம்பூதங்கள், சூரியசந்திரர், ஆன்மா என்பன. மூர்த்தி - தலைவன். கட்டு உருவம் - இளமையான (அழகிய) உருவம் ; இது கூறவே, ' கடியான் ' என்றது, மன்மதனை விளக்கி நின்றது. ' கடியானைக் கட்டுருவங் காய்ந்தானாகும் ' என்க.

157. பொறுத்திருந்த - இடபமாய்ச் சுமந்திருந்த. சிவபிரான் மாயோனது உள்ளத்தில் வீற்றிருந்து அவனது மனக்

Koviloor Digital Library

158 ஒறுத்தானும் ஒன்னார் புரங்கள் மூன்றும்
ஒள்ளழலை மாட்டி யுடனே வைத்து
இறுத்தானும் எண்ணான் முடிகள் பத்தும்
இசைந்தானும் இன்னிசைகள் கேட்டா னாகும்
அறுத்தானும் அஞ்சும் அடக்கி யங்கே
ஆகாய மந்திரமு மானா னாகும்
கறுத்தானுங் காலனைக் காலால் வீழக்
கண்ணானுங் கருகாவூர் ரெந்தை தானே. 11

திருச்சிற்றம்பலம்

கவலையை மாற்றியருளுதலை. "பையஞ் சுடர்விடு நாகப்பள்ளி கொள்வான் உள்ளத்தான்" என (திருமுறை. 4. 4. 10.) அருளிச் செய்தமையான் அறிக. திருவாரூர்த் தியாகேசரது வரலாறு இதனை இனிது விளக்கும். செறுத்திருந்த - சினந் திருந்த. "மதில்கள்" என்புழி உம்மை விரிக்க. 'மூன்று' என்றது. அம்மதில்களால் சூழப்பட்ட ஊர்களை, 'வேவ மூட்டும்' என இயையும். குனிய - வளைந்து நிற்க. 'ஒரு தலையை, தெரிய நோக்கி, அறுத்திருந்த கையான்' என இயைக்க. தெரிய நோக்கி - (அவன் செருக்குக் கொண்டமையை) விளங்க உணர்ந்து. "ஆம். ஆகும்" என்பவற்றிடையே, "போலும்" என்றருளினார். அவற்றிற்கு ஈடாக இஃது இயையினும் பொருந்தும் என்றற்கு.

158. 'மூன்றும், பத்தும், அஞ்சும்' என்பவற்றில் இரண்ட னுருபு இறுதிக்கண் தொக்கது. 'மாட்டி' அடக்கி' என்னும் எச்சங்களுக்கும் பயனிலைகள் முன்னே நின்றன. உடனே - கயிலையை எடுத்த உடனே- வைத்து - கால்விரலை வைத்து' எண்ணான் - மதியாதவன்; இராவணன். இசைந்தான் - அவ னுக்கு அருள்புரிய நேர்ந்தான்; 'அதனால் கேட்டான்' என்க, அஞ்சு - ஐம்புலன். ஆகாய மந்திரம் - ஆகாயமாகிய கோயில்; வீட்டுலகம், ஆனான் - பொருந்தினான், கறுத்தான் - வெகுண் டான்.

Koviloor Digital Library

16. திருஇடைமருதூர்

திருப்பதிக வரலாறு

நாவரசர் ஆவடுதண்டுறையீசரைப் பணிந்து பாமாலைகள் பல சாத்தித் திருஇடைமருதூர் அடைந்து வணங்கி, அங்குத் தங்கி அன்பினால் சாத்தியருளிய வண்டமிழ்ப் பாமாலைகள் பல வற்றுள் அமைந்தவை இத் திருப்பதிகமும், அடுத்து வரும் திருப்பதிகமும். (திருநாவுக். பு. 4-192.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

159 சூலப் படையுடையார் தாமே போலுஞ்
சுடர்த்திங்கட் கண்ணி யுடையார் போலும்
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்
மந்திரமுந் தந்திரமு மானர் போலும்
வேலைக் கடல்நஞ்ச முண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈசனரே. 1

இத்திருப்பதிகத்துள் வரும், 'போலும்' என்பன உரையசைகள். எனவே, இது, 'போலும்' என்னும் முடிபுடைய தொடர்க் கோவையால் இறைவனைப் பரவியதாம். வடமொழி மந்திரங்கள் "நம;" முதலிய ஏழுமுடிபுகளை யுடையனவாய் வருதல்போல, இத் தமிழ் மந்திரங்கள், 'போற்றி, காண், தாமே, கண்டாய் போலும், முதலிய முடிபுகளை யுடையனவாய் வந்துள்ளன என்க.

159. கண்ணி, முடியிலணியும் மாலை; இஃது ஆகுபெயராய், அதனை உடையவரைக்குறித்தது. மாலை-திருமாலை; விட்டுணுவை, 'தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை' என, இறைநூல் மூன்று பகுதியாய் நிகழும். அவை முறையே, 'கரும காண்டம், உபாசனகாண்டம், ஞானகாண்டம் எனப்படும். உபாசன காண்டத்தைக் கருமகாண்டத்துள் அடக்கி, இருபகுதியாக வழங்குதல் பெரும்பான்மை. உபாசன காண்டத்தை, 'பத்தி காண்டம் என்றும் கூறுவர். முப்பகுதிகளுள் மந்திரகலையையும்,

Koviloor Digital Library

தந்திர கலையையும் அருளவே, இனம் பற்றி உபதேசகலையும். கொள்ளப்படும். தந்திரகலை அல்லது கருமகாண்டமாவது, நாள்தொறும் செய்யப்படுவனவும். எவையேனும் சிறப்புப்பற்றி அவ்வந்நாட்களில் செய்யப்படுவனவும். எவையேனும்பயன்கருதி அவற்றின் பொருட்டுச் செய்யப்படுவனவுமாகிய கடமைகளை வகுப்பது ; இக்கடமைகள் முறையே, 'நித்தியகன்மம், நைமித்திக கன்மம், காமியகன்மம்' எனப்படும். மந்திரகலை அல்லது உபாசனு காண்டமாவது, கருமகாண்டத்துட் சொல்லப்பட்ட கடமைகளை மேற்கொண்டு செய்யும் செயல் முறைகளைக் கூறுவது. உபதேச கலை அல்லது ஞானகாண்டமாவது, தலைவனுகிய இறைவனது இயல்புகளையும், அவனது அடிமைகளாகிய உயிர்களது இயல்பு களையும், அவனது உடைமைகளாகிய உலகு, உடல், உள்ளம் முதலியவற்றின் இயல்புகளையும் தெரித்துணர்த்துவது. வேலைக் கடல், ஒரு பொருட் பன்மொழி, 'கடல் நஞ்சினுல் தேவர்கட்கு இறுதிவந்த ஞான்று அதனை உண்டு காத்துக் காலத்தால் உதவி னுர்' என்றுரைத்தலுமாம். 'தொல்வினை, ஊழ்வினை, மேல்வினை' என வினைகள் மூன்று வகைப்படும் ; அவை முறையே, 'சஞ்சித கன்மம், பிராரத்த கன்மம், ஆகாமிய கன்மம், எனப்படும். முன்னைய பிறப்புக்களில் எல்லாம் செய்யப்பட்டு நுகரப்படாது கிடப்பன தொல்வினை அல்லது சஞ்சிதகன்மம் ; அவ்வாறு கிடப்பனவற்றுள் பக்குவமாகி வந்து நுகர்ச்சியாவன ஊழ்வினை அல்லது பிராரத்தகன்மம் ; ஊழ்வினையை நுகரும்பொழுதே உடன் ஈட்டிக்கொள்ளப்படுவன மேல்வினை அல்லது ஆகாமிய கன்மம். அவற்றுள், மேல்வினைகளைத் தீர்த்தலை ஈண்டு அருளிச் செய்தார் என்க. விகிர்தர் - வேறுபட்டவர் ; உலகியலுக்கு அப்பாற்பட்டவர் என்பதாம். ஏலம் - கூந்தலிற் பூசும் சாந்து. கமழ் குழலாள் - இயற்கையாகவே மணங்கமழ்கின்ற கூந்தலை உடையவள். 'ஏலக்குழலாள், கமழ் குழலாள்' எனத் தனித்தனி முடிக்க.

Koviloor Digital Library

160 காரார் கமழ்கொன்றைக் கண்ணி போலுங்
　　காரானை யீருரிவை போர்த்தார் போலும்
பாரார் பரவப் படுவார் போலும்
　　பத்துப் பல்லூழி பரந்தார் போலும்
சீரால் வணங்கப் படுவார் போலும்
　　திசையனைத்து மாய்மற்று மானார் போலும்
ஏரார் கமழ்குழலாள் பாகர் போலும்
　　இடைமருது மேவிய ஈச னாரே. 2

161 வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்
　　விண்ணுலகும் மண்ணுலகு மானார் போலும்
பூதங்க ளாய புராணர் போலும்
　　புகழ வளரொளியாய் நின்றார் போலும்
பாதம் பரவப் படுவார் போலும்
　　பத்தர் களுக்கின்பம் பயந்தார் போலும்
ஏதங்க ளான கடிவார் போலும்
　　இடைமருது மேவிய ஈச னாரே. 3

160. கார் ஆர் கொன்றை - (திருப்பாடல் - 15 குறிப்புரை பார்க்க), ஈர் உரிவை - உரித்த தோல். "பத்து" என்பது, "பத்தடுத்த கோடி உறும்" (குறள் - 818.) என்புழிப்போல மிகுதி குறித்துநின்று, பல்லூழிக்கு அடையாயிற்று, பல்லூழி பரந்தார்; என்றது, 'பல பொருள்களின் தோற்ற ஒடுக்கங் கட்கும் பற்றுக்கோடாய் நின்று அவற்றை அடக்கிநிற்கும் கால மாகிய ஊழிகளின் தோற்ற ஒடுக்கங்கட்கும் தாம் பற்றுக்கோடாய் நின்று அவற்றை அடக்கிநிற்கும் காலமாய் நின்றார்' என்றதாம். 'சீரால்', 'சீரோடு' என்க. சீர் - புகழ். 'பலரும் தமது பொருள்சேர் புகழைச் சொல்லி வணங்க நிற்பவர்' என்பதாம். 'திசை' என்றது, நிலப்பகுதிகளை. ஏர் - எழுச்சி. ஈண்டும் 'ஏர் ஆர் குழல், கமழ்குழல்' எனத் தனித்தனி முடிக்க.

161. 'வேதங்கள்' என்புழி, ஆல் உருபு விரிக்க. 'வேதங் களோடு பொருந்திய வேள்வி; வைதிக கன்மங்கள்' என்றுரைத் தலுமாம். பயந்தார் - படைத்தார். பூதங்கள், ஐம்பூதங்கள். இவற்றை அருளவே, ஏனைய தத்துவங்களும் கொள்ளப்படும்.

Koviloor Digital Library

புராணர் - பழையவர்; யாவருக்கும் முன்னவர், புகழ வளர் ஒளியாய் நின்ருர் - தம்மை ஏத்த ஏத்த, ஏத்துவார் உள்ளத்தில் மிகுகின்ற ஞானமே வடிவாய். நின்றவர். 'பாதம் பரவப் படுவார்' என்றருளியது, 'தியானிக்கப்படுதற்கு உரியவர்' என்றவாறு. "பொதுநீக்கித் தனை நினைய வல்லோர்க் கென்றும் பெருந்துணையை" (திருப்பதிகம் 1-5) என அருளிச்செய்ததனை மேலே காண்க. "கல்லால் நீழல் - அல்லாத்தேவை - நல்லார் பேணார்" (திருமுறை - 3, 40 1,) என்று அருளிச்செய்தார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். 'மற்றெல்லோரையும் விலக்கிச் சிவன் ஒருவனே தியானிக்கப்படத்தக்கவன்' (சிவ ஏகோ த்யேயச் சிவங்கரஸ் ஸர்வம் அந்யத் பரித்யஜ்ய - शिव एको ध्येयश् शिवङ्करस्सर्वमन्यत् परित्यज्य) என்றது அதர்வசிகை உபநிடதம். இங்ஙனமே. 'இளம்பிறைத் - துண்டத் தானைக்கண் டீர்தொழற் பாலதே' (திருமுறை - 5, 94, 1) என்பது முதலாக, 'சிவன் ஒருவனே வணங்கப்படுதற்கு உரியவன்' என்பதனைப் பல்லாற்ருனும் நாயனார் அறிவுறுத்தருளிச்செய்தமை காண்க. 'ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்' (திருமுறை 1, 1-11) எனவும், 'ஏர்கொள் கச்சித் திருவேகம்பத்து - உறைவானை அல்லது உள்காது எனது உள்ளமே' (திருமுறை 2) 12, 1) எனவும், 'திருவான்மியூர் உறையும் - அரையா உன்னை யல்லால் அடையாதெனது ஆதரவே" (திருமுறை. 3. 55. 1, எனவும், "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்" (திருமுறை 4, 1, 2) எனவும், "சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம சிவபெருமான் திருவடியே சேரப்பெற்ருேம்" (திருமுறை 6, 98, 5) எனவும், "மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமேமனம் பாவித்தேன்" (திருமுறை 7, 48, 1) எனவும். 'கண்டார் காதலிக்கும் கணநாதன் எம் காளத்தியாய் - அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே' எனவும், (திருமுறை 7, 26, 1.) "கடியார் பூம்பொழில்சூழ் கடவூர்தனுள் வீரட்டத்தெம் - அடிகேள் என்னமுதே எனக் கார்துணை நீயலதே" (திருமுறை 7, 28, 1) எனவும், "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாதெங்கள் உத்தமனே" (திருவாசகம், திருச்சதகம். 2.) எனவும் அருளாசிரியர் அனைவரும் இதனை ஒருபடித்தாக அருளிச் செய்தமை காண்க. ஏதங்கள் - துன்பங்கள். துன்பங்களைக் கடிதலும் பத்தர்களுக்கே என்க.

Koviloor Digital Library

162 திண்குணத்தார் தேவர் கணங்க ளேத்தித்
திசைவணங்கச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
வியன்கோண்டல் மேற்சேல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடலோ டாட லோவாப்
பரங்குன்றம் மேய பரமர் போலும்
எண்குணத்தார் எண்ணு யிரவர் போலும்
இடைமருது மேவிய ஈச னூரே. 4

163 ஊக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
உயர்போழில்அண் ணுவி லுறைகின் ருரும்
பாகம் பணிமோழியாள் பாங்க ராகிப்
படுவேண் தலையிற் பலிகோள் வாரும்
மாகமடை மும்மதிலு மேய்தார் தாமு
மணிபோழில்சூழ் ஆரு ருறைகின் ருரும்
ஏகம்பம் மேயாரு மேல்லா மாவார்
இடைமருது மேவிய ஈச னூரே. 5

162. திண்குணம் - வலிமைக் குணம்; அஃதாவது, பிற பிறப்புக்களில் உள்ள உயிர்களை அடிப்படுத்து ஆளும் ஆற்றல். 'திண்குணத்தாராகிய தேவர்' என்க. திசை வணங்க - திசை நோக்கி வணங்குமாறு. 'வைத்தார்' என்பது, 'உடையராயினர்' என்னும் பொருட்டு. 'விண் குணத்தார் வேள்வி' என்றது, இந்திரன் செய்த வேள்வியை. விண்குணம், ஆகாயத்தின் பரப்பு. நூறி - அழித்து. கொண்டல் மேற்செல் - மேகத்தின் மேல் ஏறிச்சென்ற. 'ஒரு காலத்தில் திருமால் மேகமாய் நின்று சிவபிரானைச் சுமந்தார்' என்பதும், அதனுல், அக்காலம், 'மேக வாகன கற்பம்' எனப் பெயர்பெற்றது என்பதும் புராண வரலாறுகள். பண்குணத்தார் - யாழைப் பண்ணும் (சுருதி கூட்டும்) இயல்பினர்; ஆடல் மகளிருடையது. எண்குணம், 'தன்வயம், தூய உடம்பு, இயற்கை உணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசம் இன்மை, பேரருள், முடிவிலாற்றல், வரம்பில் இன்பம்' என்பன. எண் ஆயிரவர் - 'ஆயிரம்' என்னும் எண்ணினை உடையவர். 'ஆயிரம்' என்பது, ஈண்டு அள வின்மை குறித்தது; எண்ணில் அடங்காதவர் என்பதாம்.

163. ஊகம் - குரங்கு, 'ஊகச் சோலை, முகில் உரிஞ்சு சோலை' என்க. 'அண்ணு' என்பது அண்ணுமலையைக் குறித்த

Koviloor Digital Library

164 ஐயிரண்டும் ஆறொன்று மானார் போலும்
அறுமூன்றும் நான்மூன்று மானார் போலும்
செய்வினைகள் நல்வினைக ளானார் போலும்
திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
கோய்மலரங் கொன்றைச் சடையார் போலுங்
கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையுங் காய்ந்தார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 6

165 பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத குணமொருகால் நான்கே யென்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னாரும்
எரியாய தாமரைமே லியங்கி னாரும்
இடைமருது மேவிய ஈச னாரே. 7

முதற் குறிப்பு. "அண்ணவும் ஆரூரும் மேயார் போலும்", "காளத்தி கழுக்குன்றம் கண்ணார் அண்ணா", என்பன காண்க. (திருமுறை 6. 21. 8 ஷ 71. 9) பாகுஅம் - பாகுபோலும் இனிய அழகிய. பணிமொழி - பணிந்த சொல்.மாகம் அடை - விண்ணில் திரிகின்ற.

164. ஐயிரண்டு, பத்துத் திசைகள். ஆறொன்று, ஏழு இசைகள். அறுமூன்று, பதினெட்டு வித்தைகள். அவை: வேதம் நான்கு. அங்கம் ஆறு, 'புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி' என்னும் உபாங்கம் நான்கு, 'ஆயுள் வேதம். வில் வேதம், காந்தருவவேதம், அருத்தநூல்' என்னும் உபவேதம் நான்கு. நான்மூன்று, பன்னிரண்டு சூரியர்கள். இறைவனை வழிபடும் இடங்களில் சூரியன் பலருக்கும் பொதுவாய்ப் பெறும் பான்மையதாதல் அறிக. 'நல்வினை' எனப் பின்னர் விதந் தருளினமையின். முன்னர், 'வினை' என்றது தீவினை என்பது பெறப்படும். "திசை" என்றது. அவற்றில் உள்ள பொருள்களை.

165. 'உயிர்கட்குப் பிரியாத (நீங்காத) குணம் என்றது, அதன் இயற்கைத் தன்மையை. அத்தன்மை பத்தாவன இவை

Koviloor Digital Library

யென்பது அஞ்ஞான்று வழக்கின்கண் இருந்ததாகல் வேண்டும். ஆயினும் இக்காலத்து அறியப்படாமையால் பின்வருமாறு கூறலாம். இறைவனது எண்குணங்கட்கு மறுதலையான தன்வய மின்மை, சார்ந்ததன் வண்ணமாதல். அறிவிக்கவே அறிதல், ஒவ்வொன்றையே உணர்தல், படிமுறையான் உணர்தல், பெரிதும் சிறிதுமின்றி இடைநிகர்த்ததாதல், இன்னாதது வெறுத் தல், இனியது உவத்தல் என்னும் எட்டும், தனித்துநில்லாமை, தனித்துணரப்படாமை என்னும் இரண்டுமாம். உயிர்கட்குப் பிரிவுடைய (நீங்கத்தக்க) குணம் என்றது மலச்சார்பினுல் வரும் செயற்கைத் தன்மையை. அவை பதினென்ருவன, ‘பேதைமை, புல்லறிவாண்மை, அமைதி, வெகுளி, மடி, இன்பநுகர்ச்சி, துன்பநுகர்ச்சி, நுகர்ச்சியின்மை, நன்முயற்சி, தீமுயற்சி, ஊக்க மின்மை என்பன. பேதைமையை, ‘கேவலநிலை’ என்றும், புல்லறிவாண்மையை, ‘சகலநிலை’ என்றும், அமைதி முதலிய மூன்றை, ‘சத்துவம், இராசதம், தாமதம் என்றும் மெய்ந்நூல்கள் கூறும். சத்துவம் முதலிய முக்குணங்கள் காரணமாக, இன்ப நுகர்ச்சி முதலிய மூன்றும் உளவாகும், பின்னர் அவற்ருல், நன் முயற்சி முதலிய மூன்றும் உளவாகும். மலச்சார்பு நீங்கிய விடத்து இவை அனைத்தும் நீங்குமென்க. பிரியாத குணம். பிரிவுடைய குணம்’ என்பவற்றை, முன்னர், ‘உயிர்கட்கு’ என விதந்தருளிச் செய்தமையால், பின்னர், “விரியாத குணம்” என்றருளியது, இறைவர்க்கென்பது பெறப்படும். விரியாத குணம் - தொகுத்துக்கொள்ளப்படும் குணம். அவை நான்கா வன, ‘உண்மை, அறிவு, இன்பம் (சத்து, சித்து, ஆனந்தம்), ‘அருள்’ என்பன. பிற நெறிகள் அருள் ஒழிந்த மூன்றையே கூறுமாயினும், சிவநெறியுள் ‘அருள்’ என்பதும் இன்றியமை யாததென்க. “அருள்உண்டாம் ஈசற்கு அன்றே” என்னும் சிவஞானபோதத்தை (சூ. 5. அதி. 2.) நோக்குக. “ஒருகால்” என்றமையால்; ‘மற்ருெருகால்’ என்பது வருவிக் கப்படும். “விரிவிலா” என்றது, “விரியாத” என மேற் போந்ததனைச் சுட்டும் சுட்டளவாய் நின்றது. எனவே, அவரது குணங்களைத் தொகுத்துக் கூறுமிடத்து நான்காகக் கூறுதல் ஒருமுறை எனவும், அவைகளை ஆராயுமிடத்து ஆருகக் கூறுதல் மற்ருெருமுறை எனவும் அருளியவாரும். அறுகுணங்க ளாவன ‘முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன் வயம், முடிவிலாற்றல், பேரருள்’ என்பன. இவை முறையே, ‘சருவஞ்ஞதை, திருத்தி, அநாதிபோதம், சுவதந்திரதை, அனந்தசத்தி, அலுத்த சத்தி’ எனவும் கூறப்படும். இவற்ருேடு

Koviloor Digital Library

'தூய உடம்பு அல்லது விசுத்த தேகம், இயல்பாகவே பாச மின்மை அல்லது நிராமயம்' என்னும் இரண்டுங் கூட்டி 'எட்டுக்குணம்' என்றலே விரித்துக் கூறலாகலின், 'நான்கு' என்றும் 'ஆறு' என்றும் கூறுவன தொகுத்துக் கூறலாமாறு உணர்க. தெரிவாய குணம் - மெய்ந்நூல்கள் பற்றி ஆராய்ந் துணரப்படுவனவாய குணம். அவை அஞ்சாவன 'ஓசை, ஒளி, ஊறு, சுவை. நாற்றம்' (சத்தம், பரிசம். உருவம், இரதம், கந்தம்) என்பன. ஐம்பெரும் பூதங்களே உலகிற்கு முதலென் பது யாவர்க்கும் எளிதின் அறியப்படுவதாகலின், அவற்றின் குணங்களாகிய இவற்றைமட்டுமே அருளிச்செய்தார். சமிதை - ஓம விறகு; அதனை ஒன்பது என்றும் பிறவாறுங் கூறுப வாயினும், 'ஆல், அரசு, அத்தி, மா, வன்னி' என்பன சிறப்புடையனவாதல் நோக்கி, "அஞ்சு" என்றருளினர். எழுத்தை, "பதம்" என்றருளினர், "வகரக்கிளவி" (தொல். எழுத்து, 81.) என்றாற்போல. அஞ்செழுத்து, திருவைந் தெழுத்து மந்திரம். "அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி" (திருமுறை 7. 83-1.) என்றருளியதுங் காண்க. கதி ஐந்தாவன, 'மக்கள்கதி, விலங்கு கதி, நரக கதி, தேவ கதி' என்னும் நான்கனோடு, 'பரகதி' என்னும் வீட்டுநிலையுங்கூடியன. 'இவைகளை எல்லாம் வேதாகமங்களில் சொல்லியருளினர்' என்க. எரி - சுடர் வடிவம். "எரியாய" என்பதன் ஈற்றில் உள்ள அகரம் விரித்தல். "தாமரை" என்றது, அன்பர்களது நெஞ்சத் தாமரையை, உள்ளமாகிய தாமரை மலரின்மேல் இறை வனைச் சுடர் உருவில் தியானிக்கும் தியானமுறையை, 'தகர வித்தை' என, உபநிடதங்கள் சிறந்தெடுத்துக் கூறும், (அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं ... சாந்தோக்யம். பத்மகோச ப்ரதீகாசம் தஸ்யமத்யே வஹ்நிசிகா, தஸ்யாஸ் ஸிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்திதః पद्मकोश प्रतीकाशं तस्यमध्ये वह्निशिखा तस्याश्शिखाया मध्ये परमात्मा व्यवस्थितः । மகாநாராயணோபநிடதம்) திருவள்ளுவநாயனாரும் இறைவனை "மலர்மிசையேகினான்" (குறள். 3.) என்று அருளிச்செய்தமை காண்க. 'எரியையே தாமரை மலராகிய இருக்கையாக உருவகித்தருளினர்' என்றலுமாம்.

Koviloor Digital Library

166 தோலிற் பொலிந்த வுடையார் போலுஞ்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆலம் அமுதாக வுண்டார் போலும்
அடியார்கட் காரமுத மானார் போலும்
காலனையுங் காய்ந்த கழலார் போலுங்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 8

167 பைந்தளிர்க் கொன்றையந் தாரார் போலும்
படைக்கணாள் பாக முடையார் போலும்
அந்திவாய் வண்ணத் தழகர் போலும்
அணிநீல கண்ட முடையார் போலும்
வந்த வரவுஞ் செலவு மாகி
மாறாதென் னுள்ளத் திருந்தார் போலும்
எந்தம் இடர்தீர்க்க வல்லார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 9

166. சுடர் வாய் - ஒளி வாய்ந்த; மணியை உடைய. "ஆலம் அமுதாக உண்டார்" என்பதனை, 'அமுது ஆக ஆலம் உண்டார்' என மாற்றி, 'தேவர்கட்கு அமுதம் கிடைத்தற் பொருட்டுத் தாம் நஞ்சு உண்டார்' என உரைக்க. "ஆலம் தான் உகந்து அமுது செய்தானை" (திருமுறை. 7. 61. 1) எனவும், "விண்ணாள்வார் அமுதுண்ண மிக்கபெரு விடம் உண்ட - கண்ணாளா" (பெ. பு. ஏயர்கோன். 268.) எனவும் அருளினமை காண்க. இனி, 'விடத்தையே அமுதமாக உண்டார்' எனக் கிடந்தவாறே உரைத்தலுமாம். "ஆரமுதம்" என்றது, பேரின்பப் பொருளாதலைக் குறித்தருளியவாறு.

167. "அந்திவாய்" என்பதில் உள்ள "வாய்" என்பது, 'அந்திக்கண்' என ஏழாம் வேற்றுமை உருபு. வண்ணம் - நிறம். அந்திக்காலத்தில் தோன்றும் நிறம், செவ்வானத்தின் நிறம் என்க. வரவு - பிறப்பு. செலவு - இறப்பு. இடர் - மேற்குறித்த வரவு செலவுகள்.

Koviloor Digital Library

168 கொன்றையங் கூவிள மாலை தன்னைக்
குளிர்சடைமேல் வைத்துகந்த கொள்கை யாரும்
நின்ற அனங்கனை நீறு நோக்கி
நெருப்புருவ மாய்நின்ற நிமல னாரும்
அன்றவ் வரக்கன் அலறி வீழ
அருவரையைக் காலா லழுத்தி னாரும்
என்று மிடுபிச்சை யேற்றுண் பாரும்
இடைமருது மேவிய ஈச னாரே. 10

திருச்சிற்றம்பலம்

168. கூவிளை - வில்வம். 'அவ்வரக்கன்' என்னும் வகரம் தொகுத்தல்.

அவர்முன் பணிவொடு தொழுதங் கணைவுற
வணிகொம் பரின்மிசை யருகெங்குந்
தவமுன் புரிதலின் வருதொண் டெனுநிலை
தலைநின் றுயர்தமி ழிறையோராம்
இவர்தந் திருவடி வதுகண் டதிசய
மெனவந் தெதிரர கரவென்றே
சிவமுன் பயின்மொழி பகர்கின் றனவளர்
சிறைமென் கிளியொடு சிறுபூவை. 160

அஞ்சொற் றிருமறை யவர்முன் பகர்தலு
மவருந் தொழுதுமு னருள்கூரு
நெஞ்சிற் பெருகிய மகிழ்வுங் காதலு
நிறையன் பொடுமுறை தடுமாறச்
செஞ்சொற் றிருமறை மொழியந் தணர்பயி
றில்லைத் திருநக ரெல்லைப்பான்
மஞ்சிற் பொலிநெடு மதில்சூழ் குடதிசை
மணிவா யிற்புறம் வந்துற்றார். 161

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

17. திருஇடைமருதூர்

திருப்பதிக வரலாறு

இத்திருப்பதிக வரலாற்றினை முன் திருப்பதிகத்திற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

169 ஆறுசடைக் கணிவர் அங்கைத் தீயர்
அழகர் படையுடைய ரம்போற் றேள்மேல்
நீறு தடவந் திடப மேறி
நித்தம் பலிகோள்வர் மோய்த்த பூதம்
கூறுங் குணமுடையர் கோவ ணத்தர்
கோடால வேடத்தர் கோள்கை சோல்லின்
ஈறும் நடுவும் முதலு மாவார்
இடைமருது மேவி யிடங்கோண் டாரே. 1

169. படை - மழு, சூலம் முதலிய படைக்கலங்கள். தட வந்து - தடவி; பூசி. வகரமெய் உகரத்தொடுகூடி ஈருதல் பண்டைக்காலத்தின்மையின் 'தட' என்பதே முதனிலை; அத ேனாடு வரல் என்பதனைத் துணைவினையாகக் கூட்டி, 'தைவரல்' என்பதுபோல, 'தடவரல்' என்றல் பழைய வழக்குப்போலும். கூறும் - புகழ்கின்ற. கோவணத்தர் - கோவணம் ஒன்றே உடையவர். கோள் தால வேடத்தர் - கையிலே கொண்ட உண் கலத்தை உடைய கோலம் உடையவர்; 'கோடரவ வேடத்தர்' என்பதே பாடம் எனினுமாம்; கோடாலம் - கோடு ஆரம்; வளைந்த மாலை' என்பாரும் உளர். 'கொள்கை' என்றது, தன்மையை. ஈறு - அழிவு; நடுவு - நிலை; முதல் - தோற்றம்; இம்மூன்றும் உலகிற்கு என்க; இவற்றைச்செய்பவர் என்றவாறு.

Koviloor Digital Library

170 மங்குல் மதிவைப்பர் வான நாடர்
மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கின் மிகவைப்பர் பால்போல் நீற்றர்
பளிக்கு வடம்புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டாள்வர்
சரிதை பலவுடையர் தன்மை சோல்லின்
எங்கும் பலிதிரிவ ரேன்னுள் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கோண் டாரே. 2

171 ஆல நிழலிருப்பர் ஆகா யத்தர்
அருவரையி னுச்சியர் ஆணர் பேண்ணர்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
கருத்துக்குச் சேயார்தாங் காணு தார்க்குக்
கோலம் பலவுடையர் கோல்லே யேற்றர்
கோடுமழுவர் கோழம்பம் மேய ஈசர்
ஏல மணநாறும் ஈங்கோய் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கோண் டாரே. 3

170. மங்குல் - ஆகாயம்; மேகமுமாம். மடமான் - இளமையான மான்; 'மான் கன்று' என்றபடி. இடம், இடக்கை. பளிக்கு வடம் - படிகமணி மாலை. உகளும் - பிறழ்கின்ற. 'சாய்க்காடு' என்னும் தலம் நெய்தல் நிலத்தது; அதனுல். சங்குகள் திரையில் (அலையில்) உகளுதற்கு (பிறழ்தற்கு) உரியதாயிற்று. சரிதை - செயல்.

171. ஆணர்-ஆணுய் இருப்பவர். பெண்ணர்-பெண்ணுய் இருப்பவர். "காலம் பல கழித்தார்" என்றது, 'காலத்தால் தாக்குண்ணுது அதனைக் கண்டுகொண்டிருப்பவர் என்றருளியவாறு. அஃதாவது, காலவயத்தால், 'பிறப்பு, குழவி நிலை, இளமை, முதுமை, இறப்பு' என்னும் இவைகள் இன்றி, என்றும் ஒரு தன்மையராயே நின்று, பிறர்க்கு அவை உளவாதலைக் கண்டு கொண்டிருப்பவர் என்பதாம். 'காணுதார்க்கு அவர் கருத்துக்குத் தாம் சேயார்' என இயைத்துரைக்க. காணுதார் - அறியாதார். சேயார் - தொலைவில் உள்ளவர். 'கொல்லேறு' என்பது ஐகாரச் சாரியை பெற்று, "கொல்லை ஏறு" என நின்றது. கோழம்பம், ஈங்கோய் சோழநாட்டுத் தலங்கள். ஏலம் - ஏலக் காய்.

Koviloor Digital Library

172 தேசர் திறம்நினைவார் சிந்தை சேரும்
செல்வர் திருவாரூ ரென்று முள்ளார்
வாச மலரின்கண் மான்தோல் போர்ப்பர்
மருவுங் கரியுரியர் வஞ்சக் கள்வர்
நேச ரடைந்தார்க் கடையா தார்க்கு
நிட்டுரவர் கட்டங்கர் நினைவார்க் கென்றும்
ஈசர் புனற்பொன்னித் தீர்த்தர் வாய்த்த
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 4

173 கரப்பர் கரியமனக் கள்வர்க் குள்ளங்
கரவாதே தம்நினைய கிற்பார் பாவம்
துரப்பர் தொடுகடலின் நஞ்ச முண்பர்
தூய மறைமொழியர் தீயா லொட்டி
நிரப்பர் புரமூன்றும் நீறு செய்வர்
நீள்சடையர் பாய்விடைகொண் டெங்கும் ஐயம்
இரப்பர் எமையாள்வர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 5

172. தேசர் - ஒளியுடையவர். திறம் நினைவார் - தமது அருட்டிறங்களை நினைப்பவர். 'மலரின்கண் வாசம்' என மாறுக. 'வாசம்' என்பது, 'வாசமாயுள்ளவர்' என்னும் பொருளது. 'வஞ்சக் கள்வர்' என்றது, அகப்படாமை பற்றி. "ஒளிக்கும் சோரனைக்கண்டனம்" (திருவாசகம் - திருவண்டப்பகுதி 141.) என்றருளினமை காண்க. நிட்டுரவர் - கொடியவர். ஈசர் - தலைவர்; தாங்குபவர். பொன்னி - காவிரியாறு; 'பொன்னியாகிய தீர்த்தத்தை உடையவர்' என்க. வாய்த்த - பொருந்திய.

173. கரத்தல், தம்மையும் மறைத்து, தம்மால் அருளப்படும் நலங்களையும் அருளாதொழிதல். கரியமனம்-வஞ்சனை பொருந்திய மனம். "அகங்குன்றி - மூக்கிற் கரியா ருடைத்து" (குறள் 277.) "யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பலம் ஆதரியாக் - கூழின் மலிமனம்போல்இரு ளாநின்ற கோகிலமே" (திருக்கோவையார்-322.) என்றற் றொடக்கத்தனவற்றால், குற்றம் பொருந்திய மனத்தை, 'கரியமனம்' என்றல் வழக்கு என்பது அறியப்படும். துரப்பர் - வறியவர்; அறிவில்லாதவர்; என்றது அசுரரை. சிவ வழிபாடு சிறந்ததென் றுணர்ந்து மேற்கொண்டு, பின்னர், புத்தர்

Koviloor Digital Library

174 கொடியா ரிடபத்தர் கூத்து மாடிக்
குளிர்கொன்றை மேல்வைப்பர் கோல மார்ந்த
பொடியாரு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடியார் குடியாவர் அந்த ணாளர்
ஆகுதியின் மந்திரத்தார் அமரர் போற்ற
இடியார் களிற்றுரியர் எவரும் போற்ற
இடைமருது மேவியிடங் கொண்டாரே. 6

175 பச்சை நிறமுடையர் பாலர் சாலப்
பழையர் பிழையெலாம் நீக்கி யாள்வர்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனொன்று கையேந்தி யில்லந் தோறும்
பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சை மிகஅறிவர் என்று முள்ளார்
இடைமருது மேவி யிடங்கொண் டாரே. 7

கூற்றைக் கேட்டு அதனை விட்டமைபற்றி இவ்வாறருளிச் செய்தார். 'நிரப்பர் புரம் மூன்றும் ஒட்டித் தீயால் நீறுசெய்வர்' என இயையும்.

174. அடியார் குடி ஆவர் - அடியவரது குடியினராவர்; என்றது, 'மிக அணுகிய உறவினராவர்' என்றவாறு. அடியவர்க்கு வேண்டும் நலங்களை எளிவந்து செய்தல் பற்றி, இவ்வாறு அருளிச்செய்தார். 'மந்திரத்தாராகிய அமரர்' என்க. இடியார் குரல்-இடிபோலும் குரல். "அமரர் போற்ற" என்னும் எச்சம், "உரியர்" என்னும் வினைக் குறிப்புக் கொண்டது.

175. பச்சை நிறம், அம்மையுடையது. 'கச்சையாக' என்க. கதம் - கோபம். கலன் - பாத்திரம்; கபாலம். "கொள" என்றதனை, 'கொண்டு' எனத் திரிக்க. இச்சை - விருப்பம். மிக அறிவர் - நன்கு அறிவர்; அறிந்து முற்றுவித்தருளுவார். என்றும் உள்ளார் - தோற்றமும் ஈறும் இல்லாதவர். இத்தன்மையே, 'மெய்ம்மை' என்றும், 'சத்து' என்றும் சொல்லப் படுகின்றது. "பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்

Koviloor Digital Library

176 காவார் சடைமுடியர் காரோ ணத்தர்
கயிலாயம் மன்னினூர் பன்னு மின்சோல்
பாவார் போருளாளர் வாளார் கண்ணி
பயிலுந் திருவுருவம் பாகம் மேயார்
பூவார் புனலணவு புன்கூர் வாழ்வர்
புரமுன்றும் ஒள்ளழலாக் காயத் தோட்ட
ஏவார் சிலைமலைய ரேங்கும் தாமே
இடைமருது மேவி யிடங்கோண் டாரே. 8

177 புரிந்தார் நடத்தின்கட் பூத நாதர்
போழிலாரூர் புக்குறைவர் போந்து தம்மில்
பிரிந்தா ரகல்வாய பேயுந் தாமும்
பிரியா ரோருநாளும் பேணு காட்டில்
எரிந்தா ரனலுகப்பர் ஏழி லோசை
யேவ்விடத்துந் தாமேயேன் றேத்து வார்பால்
இருந்தார் இமையவர்கள் போற்ற என்றும்
இடைமருது மேவி யிடங்கோண் டாரே. 9

என்றே பல்லாண்டு கூறுதுமே" (திருப்பல்லாண்டு - 2.) என்றதுங் காண்க.

176. கா ஆர் - சோலைபோலப் பொருந்திய. இன்சொற் பாவார்-இனிய சொல்லால் ஆகிய பாக்களில்உள்ளவர். பொருளாளர் - அப்பாக்களின் பொருளை ஆளுதலுடையவர். அணவு - பொருந்திய. திருப்புன்கூர், சோழநாட்டுத்தலம். ஏ ஆர்- அம்பு பொருந்திய. சிலை - வில். 'மலைச்சிலையர்' என மாற்றியுரைக்க. 'எங்கும் பிறிது பொருள் இன்றித் தாமே உள்ளார்' என்க.

177. புரிந்தார் - விருப்பம்கொண்டார். 'நடத்தின்கண் புரிந்தார்' என மாற்றுக. தம்இல் - பரலோகம். 'தம்இல் பிரிந்தாராய்ப் போந்து ஆரூர் புக்கு உறைவர்' எனக் கூட்டுக. அகல் வாய - அகன்ற வாயினையுடைய. எரிந்துஆர் - எரியாநின்று நிறைந்த. 'பேயும் தாமும் பிரியாராய்க் காட்டில் அனல உகப்பர்' என இயையும். ஏழில் ஓசை - ஏழுவகையில் அமைந்த இசையால் (ஏத்துவார் என்க). "ஏழில் இயம்ப" (திருவாசகம், திருவெம்பாவை 8.) என்றருளியதில், "இயம்ப" என்றதனால், 'இயம்'

Koviloor Digital Library

178 விட்டிலங்கு மாமழுவர் வேலை நஞ்சர்
விடங்கர் விரிபுனல்சூழ் வெண்காட் டுள்ளார்
மட்டிலங்கு தார்மாலை மார்பில் நீற்றர்
மழபாடி யுள்ளுறைவர் மாகா ளத்தர்
சிட்டிலங்கு வல்லரக்கர் கோனை யன்று
சேழுமுடியுந் தோளைஞ்ஞான் கடரக் காலால்
இட்டிரங்கி மற்றவனுக் கீந்தார் வென்றி
இடைமருது மேவி யிடங்கோண் டாரே. 10

திருச்சிற்றம்பலம்

என்பது சொல்லெச்சமாய் வந்தியையும்; இயையவே, 'இயங்கள் ஏழு வகையான இசையில் இயம்ப' என்பது பொருளாதல் அறிக. என்று ஏத்துவார் - என்று உணர்ந்து போற்றுவார்.

178. விட்டு இலங்குதல் - மின்னுதல். விடங்கர் - அழகர். மட்டு - தேன். தார் - இன்பமாலை. மாலை, போர்க்கு உரியது; 'தாரும் மாலையும் அணிந்த மார்பு' என்க. "தார்மாலை மார்ப" (தண்டி) என்றமை காண்க. 'சிட்டி' என்பதன் ஈற்று இகரம் தொகுத்தலாயிற்று. "சிட்டி (சிருட்டி)" என்றது, ஆணையை. 'வென்றியீந்தார்' என மாற்றியுரைக்க.

அல்லற் பவமற வருளுந் தவமுத
லடியா ரெதிர்கொள வவரோடும்
மல்லற் புனல்கமழ் மாடே வாயிலின்
வழிபுக் கெதிர்தொழு தணைவுற்றார்
கல்வித் துறைபல வருமா மறைமுதல்
கரைகண் டுடையவர் கழல்பேணுஞ்
செல்வக் குடிநிறை நல்வைப் பிடைவளர்
சிவமே நிலவிய திருவீதி. 162

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

18. திருப்பூவணம்

திருப்பதிக வரலாறு

ஆளுடைய அரசுகள், திருவாலவாயினின்றும் போந்து திருப்பூவணத்தையடைந்து திருக்கோயிலினுட் சென்றபொழுது, நெடியவனுக்கும் அறிவரியவராகிய இறைவர் நேரே தோன்றக் கண்டு இறைஞ்சி, அத்தோற்றத்தை யெல்லாம் தோன்ற விரித்துப் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 407.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

179 வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல்இளமதியந்தோன்றுந்தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னுர்க்கே.1

இத்திருப்பதிகம் சிவபிரானை உள்ளத்துள் நன்கு உள்கி உய்தற்கு, அவனது திருவுருவத்தின் இயல்பினைப் பலபட வகுத்து வகுத்து அருளிச்செய்யப்பட்டது. "ஆருருவ உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்று இறுதித் திருப்பாடலில் அருளிச்செய்த திருக்குறிப்பு ஓர்ந்துணரத் தக்கது. இறைவன், தன்னை உள்குவார் உள்ளத்துள் விளங்கிநின்று பயன்தருதற்கு ஏற்ப, இதன்கண் உள்ள தொடர்கள் எல்லாம், "தோன்றும்" என்னும் முடிபுடையனவாகவே அருளிச்செய்யப்பட்டன. சிவவழிபாட்டில் இத் திருத்தாண்டகங்கள் கலாநியாசத்திற்கு உரியதாதல் உணர்க. இவ்வருமை நோக்கி, இத்திருப்பதிகம், அகத்தியர் தேவாரத் திரட்டுள், 'சிவனது திருவுருவம்' என்னும் பொருட்குச் சிறந்தெடுத்து வைக்கப்பட்டுள்ளது.

179. வடி ஏறு - கூர்மை பொருந்திய. "வடிவு ஏறு" எனவும் பாடம் ஓதுவர். திரிசூலம் - இலை மூன்றாகிய வேல்

Koviloor Digital Library

180 ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.2

கடி ஏறு - புதுமை பொருந்திய. 'குழையுந் தோடும் கலந்து தோன்றும்' என்பது, தானும் தன் தேவியுமாய் நிற்றல் குறித்தது. "குழையும் சுருள்தோடும்" (திருவாசகம், திருக்கோத்தும்பி 18.) என்று அருளிச்செய்ததுங் காண்க. இடி ஏறு - இடிபோலுங் குரல் பொருந்திய. முடி, சடைமுடி. பொடி - நீறு. "பொழில் திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கு" என்பதனை. முதற்கண் வைத்துரைக்க. "தோன்றும்" என்பன, இங்கு 'உளதாகும்' என்னும் பொருளவாய், 'மலை நிற்கும்' என்பதுபோல, முந் நிலைக் காலமும் தோன்றும் இயற்கையை (தொல். சொல். 240.) உணர்த்தும்.

180. 'அமுதமாகித் தோன்றும்', 'திரிவானாகித் தோன்றும்' என்பவற்றிற்கு 'அவ்வடிவு' என்னும் எழுவாய் வருவிக்க. "ஊணாகி" எனபதில் உள்ள "ஆகி" என்பதனை, 'ஆக' எனத் திரிக்க. ஊண் ஆக - உணவு உண்டாதற்பொருட்டு, "திரிவான்" என்புழி, 'ஆதல்' என்பது எஞ்சிநின்றது. பற்றார் - பகைவர்; திரிபுரத்து அசுரர். "மேல்" என்பது, ஆகுபெயராய், மேலிடத்துத் (வானில்) திரியும் மதில்களை யுணர்த்தும். சேண் நாகம் - நீண்ட பாம்பு, 'நாக வில்' என இயைத்து, 'நாகத்தை உடைய வில்' என உரைக்க. 'வாசுகி யென்னும் பாம்பாகிய நாணையுடைய மலையாகிய வில்' என்றதாம். 'பூண் நாண்' வினைத்தொகை. இதன்கண், "நாண்" என்றது, மாலையை. "செய்த" என்னும் அடை, 'பூண் நாண்' என்பதை மட்டுமே சிறப்பித்து நின்றது.

Koviloor Digital Library

181 கல்லாலின் நீழற் கலந்து தோன்றுங்
கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றும்
சூழரவும் மான்மறியுந் தோன்றுந் தோன்றும்
அல்லாத காலனைமுன் அடர்த்தல் தோன்றும்
ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணுய்த் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னூர்க்கே. 3

181. ஆல் நிழலில் எழுந்தருளியிருந்து நான்கு முனிவர் கட்கு நான்கு வேதங்களை அருளினர் என்பதில் நால்வராவார் பெயர் திருமுறைகளில் எங்கும் சொல்லப்படவில்லை. சனகர் முதலிய நால்வர்கட்குக் கல்லால் நிழலிலிருந்து அருள்புரிந்த தாகக் கந்தபுராணம் கூறும் வரலாற்றில், வேதத்தை ஓதிய பின்னர் உண்டாகிய ஐயத்தை நீக்கியருளியது சொல்லப்படு கின்றதேயன்றி, வேதத்தை அருளியது சொல்லப்படவில்லை. ஆகவே, அந்நால்வரை இவ்வரலாற்றிற்கொள்ளுதல் பொருந்து மாறில்லை. அன்றியும் சனகர் முதலிய நால்வர்க்கு இறைவன் மோன நிலையில் இருந்து அருளியதே சிறந்தெடுத்துக் கூறப் படுகின்றது; இங்கு அவ்வாறின்றி, "சொல்லாகச் சொல்லியவா தோன்றும் தோன்றும்" எனப்பட்டது. "விரித்தானை நால் வர்க்கு வெவ்வேறு வேதங்கள்" (திருமுறை 4. பதிகம் 7. 8.) "ஐம்புலனும் அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு - மொழிந்த வாயான்" (திருமுறை-1. 53. 6.) என்றாற்போலப் பிற இடங்களிலும் இவ்வாறே ஓதியருளினமை காண்க. நெறிகள் - அறம் முதலிய நான்கையும் அடையும் வழிகள். அல்லாத காலன் - அறத்தின் உண்மையை உணர்ந்த வன் அல்லாத இயமன். அறத்தின் உண்மையாவது, உலகர்க்கு விதிக்கப்பட்ட விதி, இறைவன் அடியார்க்குப் பொருந்தாது என்பது. ஐவகை - ஐந்து நிறம். அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை இயற்றும் ஆற்றல்களைக் குறிக்கும். இவ்வைவகை ஆற்றல்களே ஒருங்கு நிற்குமிடத்து, 'ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்' என்னும் ஐந்து திருமுகங்களாய் நிற்கும். தனித்தனி பிரிந்து நிற்குமிடத்து, 'மனோன்மனி, மகேசுவரி, உமை, இலக்குமி, வாணி' என்னும் தேவியராய் நிற்ப, இறைவ னும் அவர்களையுடைய, 'சதாசிவன், மகேசுவரன், உருத்திரன்,

Koviloor Digital Library

182 படைமலிந்த மழுவாளும் மானுந் தோன்றும்
பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையினேலிதோன்றும்நயனந்தோன்றும்
உடைமலிந்த கோவணமும் கீளுந் தோன்று
மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் போலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னூர்க்கே.4

183 மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல் மதியந் தோன்றும்
இயல்பாக இடுபிச்சை ஏற்றல் தோன்றும்
இருங்கடல்நஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றும்

மால், அயன்' என்னும் தேவர்களாய் நிற்பன். அமர்தல் - விரும்புதல்; மேற்கூறிய உண்மையை யெல்லாம் உணர்பவரே, மெய்யுணர்வுடையோராகலின், அவரிடம் இறைவன் அருளை மிகச் செய்வான் என்றருளியபடி. பொல்லாத எலும்பு - யாவருக்கும் அருவருப்பாய் உள்ள எலும்பு.

182. படை மலிந்த - படைக்கலமாம் தன்மை நிறைந்த. 'பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை' என்பதும் பாடம், "மலிந்த விடை" என்பது, "கொடி" என்பதனோடும் இயையும். "ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த - சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப' (புறம் - கடவுள் வாழ்த்து.) என்றதுங்காண்க. நயனம் - கண்; இதனை எடுத்தோதினமையால், ஏனையோரது கண்களின் வேறுபட்டதென்பது பெறப்படும். "ஊர்த்வ ரேதம் விருபாக்ஷம்" (ऊर्ध्व रेतं विरूपाक्षं) என்னும். உபநிடதம். வேறுபடுதலாவது, நெற்றியில் மேல்நோக்கி இருத்தல். உடை - உடுத்தல். 'உடையாய் மலிந்த" எனலுமாம். "கீள்" என்பது, கோவணத்தோடு இணைத்துத் தைத்து அரைநாணாகக் கட்டுவது. மூரல் - நகைப்பு; தசைமுதலிய நீங்கிக் கிடக்கின்ற தலை பற்களோடு தோன்றுதல், நகைப்பது போல்வதாயிற்று. புடை - பக்கம்.

183. மயல் - காதல்; பேரன்பு. 'ஏற்றல் இயல்பாகத் தோன்றும்' என இயைக்க. கலுழி - பெருக்கம். 'கலுழியை

Koviloor Digital Library

கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்திஞெடு வானில் தோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித ஞர்க்கே.5

184 பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்
ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்
உடல்துணித்த இடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்ஈந்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித ஞர்க்கே.6

உடைய கங்கை' என்க. "வானில் (வானிலிருந்து) தோன்றும்" என்பதில் உள்ள, "தோன்றும்" என்பது எச்சம். அது, "புயல்" என்னும் பெயரொடு முடிந்தது. "புயல்" என்றது, கருத்தா ஆகுபெயராய் மழையைக் குறித்தது. 'புயல்போலப் பாய' என உவம உருபு விரிக்க. பாய - பாய்ந்து ஒழுகுமாறு.

184. 'பாராகிய ஆழி வட்டத்தார்' என்க; 'பூமண்டலத்தில் உள்ளவர்' என்பது பொருள். ஆழி வட்டம் - கடலாற் சூழப்பட்ட வளையம். பரவி - துதித்து. சீர் ஆழித்தாமரை - அழகென்னுங் கடலாய் உள்ள தாமரை மலர். திருந்திய - செம்மையான. ஓர் - ஒப்பற்ற. 'இலங்கை வேந்தனை அழித்தவன் திருமால்' என்பது வெளிப்படையாதலின், அப்பாவத்தைக் கெடுப்பித்து. ஆழி (சக்கரம்) ஈந்தமை 'இன்னார்க்கு' என்பது சொல்ல வேண்டாதாயிற்று.

Koviloor Digital Library

185 தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.7

186 செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேல் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளும் மலிந்து தோன்றும்
பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.8

185. தகவு - தகுதி; அவை வரலாறுகளும், அவற்றிற்கேற்ற வடிவு நிலைகளுமாம். கால சங்காரர், சண்டேசானுக்கிரகர் முதலிய வடிவுநிலைகளை நோக்குக.

186. 'கழலும் அவற்றையணிந்த திருவடியும்' என்க. நால்வர்க்கு நெறி காட்டினமை மேலும் குறித்தருளப்பட்டது (181). நேர்மை - நுண்மை. மறுபிறவி அறுத்தருளல், ஆகாமியத்தைத் தடுத்தல். 'மலிந்தது' என்னும் தொழிற்பெயர் குறைந்து நின்றது.

Koviloor Digital Library

187 அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்
அணிகிளரு முருமென்ன அடர்க்குங் கேழல்
மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றுஞ்
சேக்கர்வா ளேளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித ஞர்க்கே. 9

188 ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி யன்று
தன்முடிமேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமும் மதமத்தமுங்
குழற்கணிந்தகோள்கையோடுகோலந்தோன்றும்
பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித ஞர்க்கே.

187. 'அரும்பு' என்பது, 'அருப்பு' என வலித்தலா யிற்று. ஓட்டும் - தோற்றோடச் செய்யும். 'அணிகிளரும் மணி' என இயைத்துரைக்க. உரும் - இடி. அடர்க்கும் கேழல் - கொல்லும் பன்றி. உருமு, அழித்தற் பண்பு பற்றிய உவமை. மருப்பு-கொம்பு. 'அதனை மறைக்கின்ற வயிரக்கோவை' என்க. 'மணம்' என்பது மணாட்டியை உணர்த்திற்று. மலிந்த-மகிழ்ந்த; 'அம்மை மகிழ ஆடும் நடனம்' என்றவாறு. 'வைகைத் திருக் கோட்டில் நின்றதோர் திறம்', மண் சுமந்த திருவிளையாடல். அது தோன்றுதல், உளத்திற்கு என்க. இவ்வாறுரைக்கற் பாலனவும் சில உளவாதலறிக. இதற்கு வேறுபொருள் கற்பிப் பார், பிறிதோர் எண்ணம் உடையர் என்க. திகழ்ந்த - திகழ்ந் தது போன்ற. 'சோதிப் புயம்' என இயையும். பொருப்பு ஓட்டி - மலையை வென்று.

188. சண்டேசுர நாயனுர்க்குத் தனது முடியிலிருந்த கொன்றைமாலையைச் சிவபிரான் அணிவித்தமையைப் பெரிய புராணத்துட் காண்க பல பிறவி அறுத்தருளல், சஞ்சிதத்தை

Koviloor Digital Library

189 ஆருருவ உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவந்தோன்றும்
நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை
நெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

திருச்சிற்றம்பலம்

அழித்தல், கோங்கமலரும் இறைவற்கு உரியதென்க. கூவிளை - வில்வம். மத்தம் - ஊமத்தை, இது மயக்கத்தை உண்டாக்கும் என்பதுபற்றி, 'மதமத்தம்' எனப்படும். "குழல்" என்றது சடையை; ஆடவர் தலைமயிர்க்கும் 'குழல்' என்பது பெயராகும். கொள்கை - விருப்பம்.

189. உருவ - ஊடுருவ; ஊன்ற. உள்குவார் - நினைப்பார். 'அவர் உள்ளத்துள்ளே' எனச் சுட்டுப்பெயர் வருவிக்க. 'ஆரொருவர்' என்பதும் பாடம். "அவ்வுரு" என்றது, அவர் உள்கிய உருவத்தை; இதனானே அன்பர் நினைத்த வடிவாதலன்றித் தனக்கென ஒரு வடிவம் இலனாதல் விளங்கும். "மனக்கோள் நினக்கென வடிவு வேறிலையே" என்றார் சான்றோரும். (பரிபாடல் 4.). வார் - கச்சு. 'கச்சினை ஊடுருவுகின்ற அத்தன்மையையுடைய பூண் அணிந்த முலை' என்க. இனி, 'உருவம், அழகு' எனக்கொண்டு, 'கச்சினையுடைய அழகிய, பூண் அணிந்த முலை' என்று உரைத்தலும் ஆம். "நன் மங்கை" என்று அருளிச்செய்தார், அவரது அருளே அவளாக் லின். நீர் உருவக்கடல் - நீர் மயமான கடல். போர் உருவக் கூற்று - போர்க் கோலத்துடன் வந்த இயமன். "போர்" என்றது மார்க்கண்டேயர்மேற் சினந்து எழுந்தமையை.

Koviloor Digital Library

19. திருஆலவாய்

திருப்பதிக வரலாறு

ஆண்டவரசு திருப்புத்தூர் பணிந்து திருஆலவாய் சேர்ந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்திருந்து தமிழாராய்ந்த முக்கட் பெருமானை வணங்கி எய்திய பேரானந்தத்தினிடை மூழ்கி அருளிச் செய்த திருப்பதிகம் இது. (திருநாவுக். பு. 404.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

190 முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலைமா வாசுகிமா நாணுக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரததால் துவள நீருத்
தூமுத்த வெண்முறுவ லுமையோ டாடித்
திளைத்தானைத் தேன்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 1

190. 'தோன்றி முளைத்தானை' என முன்னே கூட்டுக. "எல்லார்க்கும்" எனச் சிறப்புடைய உயர்திணைமேல் வைத்து அருளிச்செய்தாராயினும், 'எல்லாப் பொருட்கும்' என்பதே திருக்குறிப்பாகக் கொள்க. எல்லாப் பொருட்கும் முன்னே தோன்றி முளைத்தமையாவது, அவற்றின் தோற்றத்திற்கெல்லாம் தானே நிமித்த காரணனாய் முதற்கண் நின்றமை. இனி இதற்கு, 'ஏனைய தலங்களில் உள்ள இலிங்க மூர்த்திகட்கெல்லாம் முன்னே தோன்றி முளைத்த, தான்றோன்றியாகிய (சுயம்புவாகிய) இலிங்கமூர்த்தி' எனவும் உரைப்பர். வளைத்தான் - அணிந்தான். 'சுடுசரம் கோத்து அதனால் துளைத்தானை' என்றல் கருத்தென்க. துவள - உடல் மெலிய. 'துவளவும் நீறு ஆகவும் ஆடி' என்க. உமையது மேனி துவளுதலும், நீறுபடிதலும் கலவியால் ஆவன; நீறே சாந்தாகலின், அதனையே கூறினார்; உமையொடு கூடிய அழகர் (சோமசுந்தரர்) ஆதலின் இவ்வாறு அருளிச்செய்தார். 'கூடல்' என்பது மதுரை நகரத்திற்கும்,

Koviloor Digital Library

191 விண்ணுலகின் மேலார்கள் மேலான் தன்னை
மேலாடு புரமூன்றும் பொடிசெய் தானைப்
பண்ணிலவு பைம்பொழில்சூழ் பழனத் தானைப்
பசும்பொன்னின் நிறத்தானைப் பால்நீற் றானை
உண்ணிலவு சடைக்கற்றைக் கங்கை யாளைக்
கரந்துமையோ டுடனாகி யிருந்தான் தன்னைத்
தெண்ணிலவு தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 2

ஆலவாய் என்பது, அங்குள்ள திருக்கோயிலுக்கும் பெயர், திருக்கோயிலின் பெயராகிய ஆலவாய் என்பதே பின்னர் நகரத் திற்கு ஆகி வழங்கிற்று. "தென்கூடல்" என்பது, செய்யுள் நெறி யாகிய இனச்சுட்டில்லா அடை. மேலனவற்றோடியைய, 'சிவன்' என்பதில் தொகுத்தலாய் நின்ற இரண்டனுருபு விரித்து, "அடியே" என்னும் பிரிநிலை ஏகாரத்தை அதனுடன் கூட்டுக. அவ்வேகாரம் மேல்நின்ற ஐயுருபுகளோடும் இயையும், 'சிந்திக்க' என்னும் வினையெச்சம், 'சிந்தித்தல்' என்னும் தொழிற்பெயர்த் தன்மைத்தாய் நின்றது. இவ்வாறு நிற்றல். வழக்கினுட் பயின்றுவருவதேயாம். இது, "வினையெஞ்சு கிளவி யும் வேறுபல் குறிய" (தொல். சொல். 457.) என்னும் விதியானே அமையும். 'சிவனை அடிசிந்தித்தல்' என்பது, 'அரசனை அடி பணிதல்' என்பதுபோலக் கொள்க. "பெற்றேன்" என்றது, அப்பேற்றின் அருமை உணர நின்றது. எனவே, "மூளைத் தானை" என்பது முதலாக வகுத்துக் கூறிய பலவற்றிற்கும் அவனது அருமையை உணர்த்துதலே கருத்தாயிற்று.

191. விண்ணுலகின் மேலோர்கள் - தேவர்கள். பண் நிலவு - (வண்டுகளின்) இசை நிலைபெற்ற. பழனம், சோழ நாட்டுத் தலம். உள் நிலவு - உள் இடம் வாய்ந்த. தெள் நிலவு - தெளிவு (ஞானம்) நிலைபெற்ற; கூடல்மாநகர், சங்கம் முதலிய வற்றை யுடையதாய் இருந்தமையும், திருஞானசம்பந்தரால் திருப்பாசுரம் அருளி உண்மையை விளக்கியருளப் பெற்றமையும் ஓர்க.

Koviloor Digital Library

192 நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித் தானை
　　நிலமருவி நீரோடக் கண்டான் தன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் தன்னைப்
　　பகைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் [தன்னைக்
காற்றிரளாய் மேகத்தி னுள்ளே நின்று
　　கடுங்குரலா யிடிப்பானைக் கண்ணோர் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடல் திருவா லவாய்ச்
　　சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 3

193 வானமிது வெல்லா முடையான் தன்னை
　　வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் தன்னைக்
　　கடைக்கண்ணால் மங்கையையு நோக்கா வென் [மேல்
ஊனமது வெல்லா மொழித்தான் தன்னை
　　யுணர்வாகி யடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடல் திருவா லவாய்ச்
　　சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 4

192. 'அந்நீர்' என எடுத்துக்கொண்டு, 'நிலம் மருவி ஓடக் கண்டான்' என இயைக்க. கண்டான் - ஆக்கினன். பகீரதன் பொருட்டு, முதற்கண் கங்கையைச் சடையில் தாங்கி. பின்னர் நிலத்தின்கண் பெருகியோட விட்ட வரலாறுண்மை அறிக. பயின்று - மிகுதியாக. கால் திரள் - காற்றின் திரட்சி. ஆகாயத்தின் ஓசை காற்றினால் வெளிப்படுமாகலின், "கால் திரளாய் மேகத்தினுள்ளே நின்று கடுங்குரலாய் இடிப்பானை" என்றருளிச்செய்தார். 'நெற்றி ஓர் கண்' என மாற்றி. 'நெற்றியில் உள்ள ஒரு கண்ணாகிய தீத் திரளை' என உரைக்க. கண்ணையே தீத்திரள் என்றருளிச்செய்தமையால், "திரள்" என்பது. சினையிற் கூறும் முதலறி கிளவியாம் (தொல். சொல். 114.)

193. இது - இவ்வுலகம். "ஊனமது" எல்லாம். என்பதில் 'எல்லாம்' என்பது 'முழுதும்' என்னும் பொருளதாய் நின்றது. வரி - கீற்று; 'வரியும் (கட்டுகின்ற) கச்சு' எனக் கச்சிற்கு அடையாக்கலும் ஆம். "வல்லான்"

Koviloor Digital Library

194 ஊரானை யுலகேழாய் நின்றான் தன்னை
யொற்றைவெண்பிறையானையுமையோடென்றும்
பேரானைப் பிறர்க்கென்று மரியான் தன்னைப்
பிணக்காட்டில் நடமாடல் பேயோ டென்றும்
ஆரானை அமரர்களுக் கமுதீந் தானை
அருமறையால் நான்முகனும் மாலும் போற்றும்
சீரானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 5

195 மூவனை மூர்த்தியை மூவா மேனி
யுடையானை மூவுலகுந் தானே யெங்கும்
பாவனைப் பாவ மறுப்பான் தன்னைப்
படியெழுத லாகாத மங்கை யோடு
மேவனை விண்ணோர் நடுங்கக் கண்டு
விரிகடலின் நஞ்சுண் டமுத மீந்த
தேவனைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 6

என்றது, பிறர் அது மாட்டாமை யுணர்த்திநின்றது. "மங்கையையும் நோக்கி" என்றதனால், 'என்னையும் நோக்கி' என்பது பெறப்பட்டது. 'மங்கையை நோக்கி ஊனம் ஒழித்தான்' என்றதனால் பாசம் அறுதல் அவன் அருளாலே என்பது பெறப்பட்டது. 'மங்கையுமை' என்பதும் பாடம். தேனமுது - தேனாகிய அமுது. சுவையாலும் பயனாலும் சிறந்ததாகிய உணவை, 'அமுதம்' என்றல் வழக்கு. இறைவனைத் தேனமுதாக அருளிச்செய்தது உருவகம்.

194. 'உலகு' எனப் பின்வருகின்றமையின் "ஊர்" என்றது, கோநகரங்களை; அவை தேவர் உலகங்கட்குமாம். ஒற்றைப் பிறை - ஒரு கலையை உடைய பிறை; "உமையோடு" என்புழி, 'இருத்தல்' என ஒருசொல் வருவிக்க. அன்றி, ஓடுருபை இன்னுருபாகத் திரிப்பினும் ஆம். பேரான் - நீங்காதவன். 'பேயோடு ஆடல்' என இயைக்க. ஆரான் - நிரம்பான்; முடித்திடாதவன். சீர் - புகழ்.

195. மூவன் - மூத்தல் (யாவரினும் பெரியோனாதல்) உடையவன்; இது 'மூ' என்னும் முதனிலைத் தொழிற்பெயரடி

Koviloor Digital Library

196 துறந்தார்க்குத் தூநெறியாய் நின்ருன் தன்னைத்
துன்பந் துடைத்தாள வல்லான் தன்னை
இறந்தார்க ளென்பே யணிந்தான் தன்னை
யெல்லி நடமாட வல்லான் தன்னை
மறந்தார் மதில்மூன்றும் மாய்த்தான் தன்னை
மற்ருெருபற் றில்லா அடியேற் கென்றும்
சிறந்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 7

யாகப் பிறந்த பெயர். 'பாவன், மேவன்' என்பனவும் அவை; தமிழகத்துள் பண்டைக்காலத்தில், 'மூவன்' என்னும் பெயர் வழக்கில் இருந்தமை பழந்தமிழ்ச் செய்யுட்களால் அறியப்படு கின்றது. 'அம்மூவனூர்' (அகம்-10.) 'மூவன்' (புறம் - 209) முதலியன காண்க. மூவா - மூப்பு அடையாத; அழியாத. பாவன் - பரத்தலுடையவன். மேவன் - விரும்பியிருத்தலுடையவன்.

196. துறத்தல் பிறப்பிற்கு அஞ்சியாகலின், அதனை அறுப்பவன், பிறப்பில் பெருமானாகிய சிவபிரான் ஒருவனே யாதல் உணர்த்துவார், "துறந்தார்க்குத் தூநெறியாய் நின்ருன்" என்றும், அவ்வாறு தன் பற்றினையே தூநெறியாக அறிந்து பற்றுவார்க்கு அவர் விரும்பியவாறே பிறவித்துன்பத் தினை அடியோடு அவன் அகற்றியருளுதல் உணர்த்துவார், "துன்பந் துடைத்தருள வல்லான்" என்றும் அருளிச்செய்தார். எல்லி - இரவு. திரிபுரத்து அசுரர்கள், முன்பு சிவபிரானை வழிபட்டிருந்து, பின்னர் புத்தனது போதனையால் அதனை விட்டொழித்தாராதலின், அவர்களை, "மறந்தார்" எனக் குறித் தருளினுர். சிறந்தான் - தாங்கிநிற்கும் தலைவன். "மற்ருெரு பற்றில்லா அடியேற்கு" என எடுத்தோதியருளியது, ஏனை யோர்க்கும் அஃது இன்றியமையாதாதல் உணர்த்துதற்கு; இதனை, "மற்றுப் பற்றெனக்கின்றி நின்றிருப் பாதமேமனம் பாவித்தேன்" (திருமுறை 7-48-1) என வன்ருெண்டப்பெருமான் வலியுறுத்தருளியது காண்க. 'அடியார்க்கு' என்பதும் பாடம்.

Koviloor Digital Library

197 வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடாத்திங்கட்சடையானைத்தொடர்ந்து நின்றேன்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 8

197. வாயான், மனத்தான், என்பன இறைவன், சொல்லுதற்கும், நினைத்தற்கும் உரிய கருவிகளாகிய அவற்றிற் கலந்து நின்று தொழிற்படுத்துதலைக் குறித்தன. 'கருத்தான்' என்றது, மனத்தின் தொழிற்பாடாகிய எண்ணத்தில், அவன் கலந்து நிற்றலை உணர்த்திற்று. "கருத்து" என்றது, விருப்பத்தையே. அதனை அறிந்து முடித்தலாவது, வேண்டுவார் வேண்டுவன வற்றை அவர்தம் முயற்சியின்வழிக் கூட்டுவித்தல். கருதப் பட்டதே சொல்லப்படுதலின், 'வாயுள் நின்ற சொல்லானை' என்று அருளிச் செய்யாராயினர். தூயான் - இயல்பாகவே பாசம் இல்லாதவன்; அஃது அவன் ஊர்தியாலும் கொடியாலுமே அறியப்படும் என்பது அருளுவார், "தூவெள்ளை ஏற்றான் றன்னை" என்றருளிச்செய்தார். தொடர்ந்து நிற்றல் - உடனிருந்து புரத்தல். 'நின்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'நின்ற தாயானை' என்பதும் பாடம். தவத்தவர் செய்யும் தவமேயாய் நிற்பவன் இறைவன் என்க. எனவே, அவனை நோக்கிச் செய்யப்படுவதே தவம் எனப்படுவது என்பதாம். இனி, 'தவத்தின் பயனாய் உள்ளவன், என்பதும் அதன் பொருளாகும். தலையாய தேவராவார், திசைக்காவலர், அயன், மால் முதலியோர். இவர்கள் தேவர்கட்குத் தலைமை பூண்டு நிற்றலின், 'தேவாதி தேவர்' என வழங்கப்படுவர். அவ்வழக்கின் பொருளை நன்குணர்த்தத் திருவுளம்பற்றி, தலையாய தேவாதி தேவர்" என்றருளினர். 'தேவர்க்கும்' என்னும் சிறப்பும்மை தொக்கது. இறைவன். அவர்கட்குச் சேயன் (காணப்படாதவன்) ஆதல், அதிகாரச் செருக்கினால் அவனை. எண்ணுதொழிதலால் என்க. இறைவன், தன் அடியார்கட்குத் தொடர்ந்து நின்ற தாயாகி நிற்றலும், செருக்குடையார்கட்குச் சேயனாகி நிற்றலும் ஒருங்கு அருளிச்செய்யப்பட்டன.

Koviloor Digital Library

198 பகைச்சுடராய்ப் பாவ மறுப்பான் தன்னைப்
பழியிலியாய் நஞ்சுண் டமுதீந் தானை
வகைச்சுடராய் வல்லசுரர் புரமட் டானை
வளைவிலியா யெல்லார்க்கு மருள்செய் வானை
மிகைச்சுடரை விண்ணவர்கண் மேலப் பாலை
மேலாய தேவாதி தேவர்க் கென்றும்
திகைச்சுடரைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 9

198. பகையாவது இருளேயாம், ஒளிக்குப் பகையாவது அதுவேயாகலின். 'பகைக்குச் சுடராய்' என நான்காவது விரிக்க. சுடராவது ஞானம். புண்ணியமும் வினையேயாயினும் கொடுமை மிகுதிபற்றி பாவத்தைக் களைதலையே எடுத்தோதியருளினர். இருளாவது, மூலமலமாகிய அறியாமை. அதனாலேயே வினை வருதலின், அதனை நீக்கவே வினையொழியும் என்றதாயிற்று. "பழியிலி" என்றது. 'தான் அமுதத்தை உண்டு பிறர்க்கு நஞ்சைக் கொடுத்தான் என்ற பழி இல்லாதவன்' என்றருளிய படி; இது, தேவர்கள் இப் பழியுடைமையை உட்கொண்டு அருளிச்செய்தது. வகைச் சுடர் - கிளைத்தெழுகின்ற தீ. 'தீயாக' என்க. வளைவிலி - கோட்டம் (பட்சபாதம்) இல்லாதவன்; நடுவு நிலைமையுடையவன். "சலமிலன் சங்கரன்" (திருமுறை 4. 11, 6.) "சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்" (சிவஞானபோதம் சூ. 10 அதி. 2.) என்பன காண்க. "மிகைச் சுடர்" என்றதற்கு "மிகைமக்கள்" (நாலடி-163.) என்றாற்போல, 'மேலான ஒளி' என உரைக்க. 'விண்ணவர்கட்கு மேலும் அப்பக்தியாய் உள்ளவன்' என்க. "மேலாய" என்றதற்கு, மேல், (198) "தலையாய" என்றதற்கு உரைத்தது உரைக்க. திகை - திசை. திகைச் சுடர் - திசை காட்டும் ஒளி; கலங்கரை விளக்கு. தேவர் கட்கும் உண்மைநெறி உணர்த்துவோன் என்றபடி.

Koviloor Digital Library

199 மலையானை மாமேரு மன்னி னானை
வளர்புன் சடையானை வானோர் தங்கள்
தலையானை யென்தலையி னுச்சி யென்றுந்
தாபித் திருந்தானைத் தானே யெங்கும்
துலையாக வொருவரையு மில்லா தானைத்
தோன்றாதார் மதில்மூன்றுந் துவள எய்த
சிலையானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 10

200 தூர்த்தனைத் தோள்முடிபத் திறுத்தான் தன்னைத்
தோன்னரம்பின் இன்னிசைகேட் டருள்செய்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் தன்னைப் [தானைப்
பரிந்தவற்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை
ஆத்தனை யடியேனுக் கன்பன் தன்னை
யளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 11

திருச்சிற்றம்பலம்

199. மலையான் - மலைபோன்றவன்; பெருமையுடையவன். தாபித்து - நிறுவி; 'தன்னை நிறுவி' என்க; 'நிலையாய் இருந்தான்' என்றபடி. 'தானேயாய்' என ஆக்கம் வருவிக்க. 'எங்கும் ஒருவரையும் துலையாக இல்லாதான்' என இயையும். துலை - ஒப்பு. தோன்றாதார் - அருகில் வாராதவர்; பகைவர். துவள - மெலிய. 'தூளா' என்பதும் பாடம். 'துகளா' என்பதே பாடம் எனலுமாம்.

200. தூர்த்தன் - பிறன்மனை விழைந்தவன்; இராவணன். பார்த்தன் - அருச்சுனன். பணி - தொண்டு; தவம். பரிந்து - இரங்கி. ஆத்தன் - நம்பத்தக்கவன். தீர்த்தன் - பரிசுத்தன்.

Koviloor Digital Library

20. திருநள்ளாறு

திருப்பதிக வரலாறு

நாயனர் திருப்புகலூரில் முதற்கண் எழுந்தருளியிருந்த நாட்களில், இடையே திருச்செங்காட்டங்குடி சென்று பணிந்து திருநள்ளாற்றை அடைந்து வணங்கிப் பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 240.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

201 ஆதிக்கண் நான்முகத்தி லொன்று சென்று
அல்லாத சொல்லுரைக்கத் தன்கை வாளால்
சேதித்த திருவடியைச் செல்ல நல்ல
சிவலோக நெறிவகுத்துக் காட்டு வானை
மாதிமைய மாதொருகூ றுயி னானை
மாமலர்மே லயனோடு மாலுங் காணு
நாதியை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 1

201. ஆதி - பழங்காலம். நான்முகத்தில் ஒன்று சென்று - ஏனைய நான்கு முகங்களினும் ஒருமுகம் முற்பட்டு. அல்லாத சொல் - உண்மையல்லாத சொல்; அது, 'என் மகனே, வா' என்று அழைத்தது. 'வாள்' என்றது, நகத்தை. சேதித்த - அறுத்த. "திருவடி" என்றது, வயிரவரை. செல்ல - விலகிச் செல்லும்படி. நல்கி - அருள்புரிந்து. "சிவலோக நெறி" என்றது உண்மையை; அஃதாவது தானே முதல்வன் என உணர்த்தினமையை; அவ்வாறுணரும் நெறி தானே சிவபிரானை அடையும் நெறியாகலின், அதனை, "சிவலோக நெறி" என்றருளிச்செய்தார். காட்டியது, பிரமதேவனுக்கு. 'பிரமன் ஐந்துதலை உடையனாய் இருந்தபொழுது, தானே முதல்வன் எனச் செருக்குக் கொண்டு திருமாலுடன் கலாம் விளைத்தனன். அதுபோது சிவபிரான் வயிரவரை அனுப்ப, அவரைக்கண்டு, வா, என் மகனே எனப் பிரமன், அகங்காரத்துடன் அழைத்தலும் அவர் அவ்வாறு அழைத்த அவனது தலையைக் கிள்ளினார்;

Koviloor Digital Library

202 படையானைப் பாசுபத வேடத் தானைப்
பண்டனங்கற் பார்த்தானைப் பாவ மெல்லாம்
அடையாமைக் காப்பானை யடியார் தங்கள்
அருமருந்தை ஆவாவென் றருள்செய் வானைச்
சடையானைச் சந்திரனைத் தரித்தான் தன்னைச்
சங்கத்த முத்தனைய வெள்ளை யேற்றின்
நடையானை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 2

203 படஅரவ மொன்றுகொண் டரையி லார்த்த
பராபரனைப் பைஞ்ஞீலி மேவி னானை
அடலரவம் பற்றிக் கடைந்த நஞ்சை
யமுதாக வுண்டானை ஆதி யானை

பின்பு அவனது செருக்கு நீங்கியபொழுது, சிவபெருமான் அவனுக்கு நல்வரம் அருளினார்' என்னும் வரலாறு இங்குக் குறிக்கப்பட்டது. அவ்வரலாறு இஞ்ஞான்று வழங்குதற்கேற்ப, இதற்குப் பொருள் உரைக்கப்பட்டது. ஆயினும், நாயனார் காலத்தில் அது வேறுபட வழங்கிற்று எனக்கொள்ளின், பிறவாறு உரைத்தலுங் கூடும். இதனை மேற்காட்டியவகையில், காஞ்சிப் புராணம் வயிரவேசப்படலத்துட் காண்க. மாதிமைய - பெருமை யுடைய, 'அழகிய இமயமாது' என்றலுமாம். நாதி - நாதன், நான் அடியேன் - நானாகிய அடியேன்; சிறப்புப் பெயர் பின் வந்தது; 'அடியேனாய்' என எச்சப்படுத்தலுமாம். "நினைக்கப் பெற்று" என்பதற்கு, மேலைப் பதிகத்துள் உரைத்தவாறே உரைக்க. "உய்ந்தவாறு" என்பதன் இறுதியில், 'நன்று' என்னும் பயனிலை எஞ்சிநின்றது.

202. படையான் - பல படைகளை உடையவன். பாசுபத வேடம் - பாசுபத மதத்திற் கொள்ளப்படும் வேடம். அனங்கன் - மன்மதன். பார்த்தான் - விழித்து எரித்தான். 'ஆவா' என்பது, இரக்கக் குறிப்பிடைச் சொல். "என்று" என்பதனை, "என்ன" எனத் திரித்தலுமாம். சங்கத்த - சங்கின்கண் உள்ள. 'ஏற்றின் கண்' என உருபுவிரிக்க. நடை - நடத்தல்; செல்லுதல் (உடையவன்).

203. பராபரன் - மேலும் கீழுமாய் நிற்பவன். (பரம் - மேல், அபரம் - கீழ்.) 'மேல், கீழ்' என்பன, அத்தன்மை யுடைய பொருளை உணர்த்தின. பைஞ்ஞீலி, சோழநாட்டுத்தலம்.

Koviloor Digital Library

மடலரவம் மன்னுபூங் கொன்றை யானை
மாமணியை மாணிக்காய்க் காலன் தன்னை
நடலரவஞ் செய்தானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 3

204 கட்டங்க மொன்றுதங் கையி லேந்திக்
கங்கணமுங் காதில்விடு தோடு மிட்டுச்
சுட்டங்கங் கொண்டு துதையப் பேசிச்
சுந்தரனுய்ச் சூலங்கை யேந்தி னானைப்
பட்டங்க மாலை நிறையச் சூடிப்
பல்கணமுந் தாமும் பரந்த காட்டில்
நட்டங்க மாடியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 4

"கடைந்த நஞ்சு" என்பது, 'ஆறு சென்ற வெயர்' என்பது போல நின்றது. "அரவம் பற்றிக் கடைந்த" என்றது, கடைந்தாரது அறியாமையைத் தோற்றுவித்தற்கு. நஞ்சின் தோற்றத்திற்குரிய காரணத்தை விதந்தருளியவாறு. ஆதியான்-முதல்வன். மடல் அரவம் - இதழ்களின் பக்கலில் முரலும் வண்டுகளின் ஓசை. மாமணி - உயர்ந்த ரத்தினம். மாணி - பிரமசாரி; மார்க்கண்டேயர். ஆய் - துணையாகி 'நடலை' என்பதன் ஈற்று ஐகாரம் தொகுத்தலாயிற்று. நடலை அரவம் - ஒடுங்குதற்கு ஏதுவாகிய ஒலி; அது சிலம்பினுல் ஆயதென்க; 'சிலம்பை ஒலிப்பித்தான்' என்றது, காலால் உதைத்தமையைச் சிறப்பித்தருளியவாறு.

204. விடு - ஒளிவிடுகின்ற. 'அங்கம் சுட்டு' என மாறுக. "அங்கம்" என்றது உடம்புகளனைத்தையும். "சுட்டு" எனவே, 'சாம்பல்' என்பது தானே வந்தியையும். "சுந்தரன்" என்றது, 'சாம்பல் பூசி இருப்பினும், அழகனே' என்றவாறு. 'பட்ட' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. அங்கம் - எலும்பு. கணம் - பூதம். கம் - ஆகாயம்; வெளி. 'வெளியாகிய காட்டில்' என்பது கருத்து.

Koviloor Digital Library

205 உலந்தார்தம் அங்கங்கொண் டுலக மெல்லாம்
ஒருநொடியி லுழல்வானை உலப்பில் செல்வம்
சிலந்திதனக் கருள்செய்த தேவ தேவைத்
திருச்சிராப் பள்ளியெஞ் சிவலோகனைக்
கலந்தார்தம் மனத்தென்றுங் காத லானைக்
கச்சியே கம்பனைக் கமழ்பூங் கொன்றை
நலந்தாங்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 5

206 குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 6

205. உலந்தார்-இறந்தார். உலப்பு-குறைதல். சிலந்தியை அரசனாக்கிய வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் கோச் செங்கட் சோழநாயனார் புராணத்துட் காண்க. 'நலம்' என்றது, செயற்கை நலத்தை; மாலை என்றவாறு.

206. குலம் - குடிப்பிறப்பு. 'குலங்கெடுத்து' எனவும் பாடம் ஓதுவர். கோள் - துன்பம். குல வரை - உயர்ந்த மலை. மலம் - (உயிரைப் பற்றியுள்ள) அழுக்கு. அவை, 'ஆணவம், கன்மம், மாயை' என மூன்று. மா தீர்த்தம் - உயர்ந்த புனித நீர்; என்றது, தனது திருவருளை. ஆட்டுதல் - மூழ்குவித்தல். மறையவன் - வேதத்தை ஓதியவன். 'புனிதநீ ராட்டுவோன் மறையவனே' என்னும் நயங்காண்க. சலம் - பொய்; நடுக்கமுமாம். தயா மூல தன்மம் என்னும் தத்துவம் 'இரக்கமே அடிநிலை அறம்' என்னும் உண்மை. 'அஃது இறைவனை உணர்ந்தார்க்கே கைகூடும் என்றவாறு. 'இத் தொடரினைப் புத்தர் முதலியோர் வாளாவாய்ப்பறையாகச் சாற்றுதல் பயனுடைத்தாகாது என்றபடி. தாழ்ந்தோர் - வணங்கினோர். 'நின்று தாழ்ந்தோர்' என இயையும்.

Koviloor Digital Library

207 பூவிரியும் மலர்க்கொன்றைச் சடையி னானைப்
புறம்பயத்தெம் பெருமானைப் புகலூ ரானை
மாவிரியக் களிறுரித்த மைந்தன் தன்னை
மறைக்காடும் வலிவலமும் மன்னி னானைத்
தேவிரியத் திகழ்தக்கன் வேள்வி யெல்லாஞ்
சிதைத்தானை யுதைத்தவன்தன் சிரங்கொண் [டானை
நாவிரிய மறைநவின்ற நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 7

208 சொல்லானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தொல்லவுணர் புரமூன்று மெரியச் செற்ற
வில்லானை யெல்லார்க்கும் மேலா னானை
மெல்லியலாள் பாகனை வேதம் நான்கும்
கல்லாலின் நீழற்கீழ் அறங்கண் டானைக்
காளத்தி யானைக் கயிலை மேய
நல்லானை நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 8

207. 'பூவாய் விரிகின்ற' என ஆக்கம் விரிக்க. 'கொன்றை மலர்' என மாற்றுக. புறம்பயம், புகலூர், மறைக்காடு, வலிவலம் சோழநாட்டுத் தலங்கள். மாஇரி அக்களிறு - மற்றைய விலங்குகள் (யானைகள்) அஞ்சி நீங்குகின்ற அத்தன்மையுடைய யானை; கயாசுரன். தே இரிய - எல்லாத் தேவரும் அஞ்சி ஓடும் படி. 'உதைத்து' என்றது, 'தண்டித்து' என்னும் பொருளது. 'அவன்' என்றது, தக்கனை. நாவிரிய - நாவினின்றும் தோன்றுமாறு.

208. சொல்லான் - சொல்லின்கண் உள்ளவன். சுடர்ப் பவளச் சோதியான் - ஒளியையுடைய பவளம்போலும் ஒளியினை யுடையவன். 'தொல் புரம்' என இயையும். 'நான்கின் கண்ணும்' என உருபு விரிக்க. கண்டான் - வகுத்தான். 'காளத்தி மலையானை' என்பதே பாடமாதல் வேண்டும்.

Koviloor Digital Library

209 குன்றுத மாமுனிவன் சாபம் நீங்கக்
குரைகழலாற் கூற்றுவனைக் குமைத்த கோனை
அன்றாக அவுணர்புரம் மூன்றும் வேவ
ஆரழல்வா யோட்டி யடர்வித் தானைச்
சென்றுது வேண்டிற்றேன் றீவான் றன்னைச்
சிவனேயெம்பெருமானென்றிருப்பார்க்கென்றும்
நன்றாகும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 9

210 இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க
இராவணனை யிருபதுதோள் நெரிய வூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை

209. முனிவன், மார்க்கண்டேயர். அவருக்கிருந்த சாப மாவது, 'பதினாறு ஆண்டோடு வாழ்நாள் முடிக' என்பது; இஃது இறைவன் இட்டதே. அது, அவரது முன்னை வினை பற்றியே இடப்பட்டதென்க. 'ஆக வேவ' என இயையும். ஆக - மிக; ஆக்கச்சொல் மிகுதி குறித்தலும் உண்டு. இனி, 'அன்றுதல் (பகைத்தல்) ஆயினமையால்' என்று உரைப்பினும் அமையும். அழல்வாய் - தீயாகிய வாயையுடைய அம்பு; அன்மொழித்தொகை. திரிபுரம் எரித்த ஞான்று, தீக்கடவுளே அம்பின் முனையாக நின்றனன் என்க. இனி, 'அழலது வாயினைச் செலுத்தி' எனலுமாம். திரிபுரங்கள், தம்மியல்பால் தாம் அழிந்தன என்பார், 'அடர்ப்பித்தான்' என்னாது, 'அடர்வித்தான்' என் றருளிச்செய்தார். 'சென்றியாது' என்பது, "சென்றுது' என நின்றது. 'சென்றியாது என்பதே பாடம்' எனலுமாம். எம்பெருமான் சிவனே யென்றிருத்த லாவது, பிறர் ஒருவரையும் முதற்கடவுளாக மயங்காது அவன் ஒருவனையே தெளிந்து வழிபடுதல்; அவர்க்கு எல்லா நலங்களு மாய் இருப்பான் என்க. அமைதியாய் அடங்கியிருப்பாரை, 'சிவனே என்றிருப்பார்' என்னும் வழக்கு நயமும் தோற்றுவித்த வாறு. "நன்று" என்றது, தொகுத்தருளிச்செய்தது.

210. மிக்க-செருக்கிய. மிகுதி செருக்காதலை, "மிகுதியான் மிக்கவை செய்தாரை" (குறள். 158.) என்பதனால் உணர்க.

Koviloor Digital Library

மறவாதார் மனத்தென்றும் மன்னி ஞனை
மாமதியம் மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறவார்செஞ் சடையானை நள்ளாற் றனை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 10

திருச்சிற்றம்பலம்

"உறவாகி" எனப் பின்னர் அருளிச்செய்தமையால் "இராவணனை" என்புழி, 'பகையாகி' என்பது பெறப்படும். 'மீண்டு-மறித்து; இது வினைமாற்றுப் பொருள் குறித்துநின்றது. 'மீண்டு உறவாகி' என இயைக்க. நறவு - தேன்; இது மேற் சொல்லப்பட்ட மலர்களினின்றும் சொரியப்படுவது.

நவமின் சுடர்மணி நெடுமாலையுநறு
மலர்மாலையு நிறை திருவீதிப்
புவனங் களின்முத லிமையோர் தடமுடி
பொருதுந் தியமணி போகட்டிப்
பவனன் பணிசெய வருணன் புனல்கொடு
பணிமா றவுமவை பழுதாமென்
றெவருந் தொழுதெழு மடியார் திருவல
கிடுவார் குளிர்புனல் விடுவார்கள். 163

மேலம் பரதல நிறையுங் கொடிகளில்
விரிவெங் கதிர்நுழை வரிதாகும்
கோலம் பெருகிய திருவீ தியைமுறை
குலவும் பெருமையர் பணிவுற்றே
ஞாலந் திகழ்திரு மறையின் பெருகொலி
நலமார் முனிவர்க டுதியோடும்
ஓலம் பெருகிய நிலையேழ் கோபுர
முறமெய் கொடுதொழு துள்புக்கார். 164

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

21. திருஆக்கூர்

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தருடன் திருப்புகலூரி லிருந்து புறப்பட்டுத் திருக்கடவூர்வீரட்டம், திருக்கடவூர்மயானம் பணிந்து திருஆக்கூரில் தான்றோன்றியப்பரை ஆர்வமுறத் தொழுது பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 248 - 249.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

211 முடித்தா மரையணிந்த மூர்த்தி போலும்
மூவுலகுந் தாமாகி நின்றார் போலும்
கடித்தா மரையேய்ந்த கண்ணார் போலும்
கல்லலகு பாணி பயின்றார் போலும்
கொடித்தா மரைக்காடே நாடுந் தொண்டர்
குற்றேவல் தாம்மகிழ்ந்த குழகர் போலும்
அடித்தா மரைமலர்மேல் வைத்தார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. 1

211. முடி - முடியின்கண். கடி - நறுமணம். கல்அலகு - கற்கப்படும் மாத்திரை அளவு. (குறிப்பு 64 பார்க்க.) பாணி - தாளம். அதனைப் பயிலுதலாவது, நடனம் புரிதல். கொடித் தாமரை என்பது அடையடுத்த ஆகுபெயராய், அதன் மலரைக் குறித்தது. காடு - மிகுதி. நாடுதல், பறித்துச் சாத்தி வழி படுதற்பொருட்டு. தொண்டரது குற்றேவலை மகிழ்தலாவது, அவரது எளிய தொண்டினைப் பொருள் நோக்கி இகழாமல், அன்பு நோக்கி ஏற்றுக்கொள்ளுதல். அடித்தாமரை, உருவகம். "மலர்" என்றது, அன்பரது உள்ளக்கமலத்தை. 'தான் தோன்றி' என்பது சிவபிரானுக்குக் காரணப்பெயர்; 'ஒருவரால் தோற்றுவிக்கப்படாது, தானே தன் இச்சைவழி நினைத்த வடிவில் தோன்றுபவன்' என்பது பொருள். இப்பெயர்க்கு ஏற்ப, இத்தலத்தில் இறைவன் தானே தோன்றிய இலிங்க வடிவாய் (சுயம்புமூர்த்தியாய்) எழுந்தருளியிருத்தல் அறியத் தக்கது.

Koviloor Digital Library

212 ஓதிற் றேருநூலு மில்லை போலும்
உணரப் படாததோன் றில்லை போலும்
காதிற் குழையிலங்கப் பெய்தார் போலுங்
கவலைப் பிறப்பிடும்பை காப்பார் போலும்
வேதத்தோ டாறங்கஞ் சொன்னார் போலும்
விடஞ்சூழ்ந் திருண்ட மிடற்றார் போலும்
ஆதிக் களவாகி நின்றார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே. 2

213 மையார் மலர்க்கண்ணாள் பாகர் போலும்
மணிநீல கண்ட முடையார் போலும்
நெய்யார் திரிசூலங் கையார் போலும்
நீரேறு தோளேட் டுடையார் போலும்
வையார் மழுவாட் படையார் போலும்
வளர்ஞாயி றன்ன வொளியார் போலும்
ஐவாய் அரவமொன் றார்த்தார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே. 3

212. ஓதிற்று - படிக்கப்பட்டது. 'எம்பெருமான் ஒரு நூலும் ஓதியது இல்லை; அவனால் உணரப்படாத பொருளும் ஒன்றும் இல்லை' என, உலகில் வைத்து அறியப்படாததோர் அதிசய நிலையை உணர்த்தியருளியவாறு; 'இயல்பாகவே எல்லாவற்றையும் உணர்பவன்' என்பதாம். 'கவலை(க்கு இடமாகிய) இடும்பை' என இயையும். 'காத்தல்', ஈண்டு, வாராது தடுத்தல். வேதத்திற்குரிய ஆறு அங்கங்களாவன: சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி. சிட்சை, வேதத்தை ஓதும் ஒலிவகையை விளக்கும். வியாகரணம்' இலக்கணம், நிருத்தம், மொழிநூல், சோதிடம், பஞ்சாங்கம் பற்றிக் காலநிலை கூறுவது. கற்பம், சடங்கு முறைவகுப்பது. சந்தோவிசிதி, இசையமைப்பைக் கூறுவது. அளவு - எல்லை. ஆதிக்கு எல்லையாதலாவது, தானே எல்லாவற்றிற்கும் ஆதியாய்த் தனக்கு ஓர் ஆதியின்றி இருத்தல்.

213. "நெய் ஆர்" என்றது இனஅடை. வை - கூர்மை. வாள் - ஒளி. வளர் ஞாயிறு - வளர்தற்குரிய ஞாயிறு; காலையில் தோற்றஞ் செய்யும் கதிரவன்.

Koviloor Digital Library

214 வடிவிளங்கு வெண்மழுவாள் வல்லார் போலும்
வஞ்சக் கருங்கடல்நஞ் சுண்டார் போலும்
பொடிவிளங்கு முந்நூல்சேர் மார்பர் போலும்
பூங்கங்கை தோய்ந்த சடையார் போலும்
கடிவிளங்கு கொன்றையந் தாரார் போலும்
கட்டங்கம் ஏந்திய கையார் போலும்
அடிவிளங்கு செம்பொற் கழலார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே. 4

215 ஏகாச மாம்புலித்தோல் பாம்பு தாழ
இடுவெண் தலைகலனா ஏந்தி நாளும்
மேகாசங் கட்டழித்த வெள்ளி மாலை
புனலார் சடைமுடிமேற் புனைந்தார் போலும்
மாகாச மாயவெண் ணீருந் தீயும்
மதியும் மதிபிறந்த விண்ணும் மண்ணும்
ஆகாச மென்றிவையு மானார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே. 5

214. வடி - வடித்தல்; கூர்மையுமாம். வெண்மை, வாயிடத்துத் தோன்றுவது. 'வஞ்ச நஞ்சு' என இயையும். நஞ்சுக்கு உள்ள வஞ்சமாவது, குளிர்ச்சியுடையதாய் இருந்தே கொல்லுதல்; "சிங்கி குளிர்ந்துங் கொலும்" (நீதிநெறி விளக்கம். 59) என்றது காண்க. பூ - அழகு. கடி - நறுமணம்.

215. ஏகாசம் - மேலாடை; அஃது இங்கு உடையைக் குறித்தது. 'புலித்தோலின்கண் பாம்பு தாழ' என்க. கலன் - அணிகலம். ஏந்தி - தாங்கி; பூண்டு. மேக ஆசம் - மேகத்தினது நகைப்பு; மின்னல். ஆசம் - நகைப்பு; 'ஹாசம்' என்பதன் திரிபு; மின்னலை வென்ற சடை என்க. அதனை முடிமேல் (தலைமேல்) புனைந்தார் (அழகுபெறக் கொண்டார்) என்க. வெள்ளி மாலை - வெண்மையான மாலை; எருக்கு மத்தம் முதலிய மலர்களால் ஆகியன. மாக ஆசம் - ஆகாயத்தின் நகைப்பு (நகைப்பாகிய நீர் என்க). மாகம் - ஆகாயம். 'நீரினை 'ஆகாயத்தின் நகைப்பு' என்றது, மேலிருந்து மழையாய் ஒழுகுதல் குறித்து; 'மா காசம் - மிக்க ஒளி' எனினுமாம்.

Koviloor Digital Library

216 மாதூரும் வாள்நெடுங்கண் செவ்வாய் மென்தோள்
மலைமகளை மார்பத் தணைத்தார் போலும்
மூதூர் முதுதிரைக ளானார் போலும்
முதலும் இறுதியு மில்லார் போலும்
தீதூர நல்வினையாய் நின்றார் போலுந்
திசையெட்டுந் தாமேயாஞ் செல்வர் போலும்
ஆதிரை நாளா வமர்ந்தார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. 6

217 மால்யானை மத்தகத்தைக் கீண்டார் போலும்
மான்தோ லுடையா மகிழ்ந்தார் போலும்
கோலானைக் கோவழலாற் காய்ந்தார் போலும்
குழவிப் பிறைசடைமேல் வைத்தார் போலும்
காலனைக் காலாற் கடந்தார் போலுங்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஆலானைந் தாடல் உகப்பார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. 7

216. மாது ஊரும் - காதல் மிகுகின்ற, "ஊர்" என்றதும், "திரைகள்" என்றதும் முறையே அவற்றை உடைய நிலத்தையும் கடலையும் குறித்து நின்றன. தீது ஊர - தீவினையை வெல்ல; ஊர்தல் வெல்லுதலாதல். "அடுத்தூர்வது அஃதொப்பது இல்" (குறள் 621.) என்புழியுங் காண்க. அமர்ந்தார் - விரும்பினார்; 'திருவாதிரையைத் தமக்குரிய நாளாக விரும்பிக்கொண்டார்' என்பதாம். திருவாதிரை நாளைச் சிவபிரான் தனக்குரியதாகக் கொண்டமையானே அந்நாளில் மதிநிறையப்பெறும் மார்கழித் திங்கள் தேவர் எல்லார்க்கும் சிறப்புடைத்திங்க ளாயிற்று என்க.

217. கோலான் - (தம் மீது எய்யக்கொண்ட) அம்பினை உடையவன்; மன்மதன். கோ - கண். கடந்தார் - வென்றார். ஆல் - நிறைந்த. மால், 'மான்று' என வருதல்போல, ஆல், 'ஆன்று' என வருதலின், 'ஆன்றோர்' என்பதற்கு இதுவே முதனிலையாதலறிக. இதுதானே சகரமூர்ந்து, 'சால்' என நிற்கும் என்க. இனி, இதனை, 'அகல் என்பதன் மரூஉ' எனக் கூறுவாரும் உளர்.

Koviloor Digital Library

218 கண்ணார்ந்த நெற்றி யுடையார் போலுங்
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தார் போலும்
உண்ணா அருநஞ்ச முண்டார் போலும்
ஊழித்தீ யன்ன வொளியார் போலும்
எண்ணா யிரங்கோடி பேரார் போலும்
ஏறேறிச் செல்லும் இறைவர் போலும்
அண்ணாவும் ஆரூரும் மேயார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே. 8

219 கடியார் தளிர்கலந்த கொன்றை மாலை
கதிர்போது தாதணிந்த கண்ணி போலும்
நெடியான் சதுர்முகனு நேட நின்ற
நீலநற் கண்டத் திறையார் போலும்
படியேல் அழல்வண்ணஞ் செம்பொன் மேனி
மணிவண்ணந் தம்வண்ண மாவார் போலும்
அடியார் புகலிடம தானார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே. 9

218. "எண்ணாயிரங் கோடி" என்றது, அளவின்மை கூறியவாறு. 'அண்ணாமலை' என்பது, 'அண்ணா' எனக் குறைக்கப்பட்டது.

219. கடி ஆர் - புதுமை நிறைந்த. 'கொன்றைமலராகிய மாலையும், போதும். கண்ணியும்' என்க. கதிர் போது - கதிர்க்கின்ற (ஒளிவீசுகின்ற) விடு பூ. தாது அணிந்த - மகரந் தத்தைக் கொண்டுள்ள; இதனை இடைநிலை விளக்காகக் கொண்டு. 'மாலை. போது' என்பவற்றோடும் இயைக்க. 'மாலை போது கண்ணி' என்பது உம்மைத்தொகையாய் நின்று, ஆகுபெயராய், 'அவற்றையுடையார்' எனப் பொருள் தந்தது. "நெடியான்" என்புழி உம்மை தொகுத்தலாயிற்று. 'நெடியானும்' என்பதும் பாடம். படி- உருவம். "மேனி" என்றதும், வண்ணத்தையே; அழல் வண்ணமும், பொன் வண்ணமும் தமது கூற்றிலும், மணி (நீலமணி)யின் வண்ணத்தைத் தேவியின் கூற்றிலும் உடையவர் என்க. மோனை நயம் இன்மையின், 'பணி வண்ணம்' என்பதே பாடம் எனக்கொண்டு; 'பாம்பை அணிந்த வடிவம்' என்று உரைத்தலுமாம்.

Koviloor Digital Library

220 திரையானுஞ் சேந்தா மரைமே லானுந்
தேர்ந்தவர்கள் தாங்தேடிக் காணா நாணும்
புரையா னெனப்படுவார் தாமே போலும்
போரேறு தாமேறிச் செல்வார் போலும்
கரையா வரைவில்லே நாகம் நாணுக்
காலத் தீயன்ன கனலார் போலும்
வரையார் மதிலெய்த வண்ணர் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே. 10

திருச்சிற்றம்பலம்

220. திரையான் - நீரிடைக் கிடப்பான்; திருமால். 'காணாராய் நாணும்' என்க. புரையான் - உயர்ந்தோன். "நாணும்" என்னும் பெயரெச்சம். "புரையான்" என்னும் ஏதுப் பெயர் கொண்டது. "புரையான்" என்பது வேறு முடிபாகலின், பால்வழுவின்மை அறிக. 'புரையார்' என்பதே பாடமாகக் கோடலும் ஆம். கரையா - நெகிழாத; 'வளையாத மலையை வளைத்தார்' என்றபடி. 'வரையே வில்' என ஏகாரத்தை மாறிக் கூட்டுக. அவ்வேகாரம். 'நாகம்' என்பதனோடும் இயையும். "நாணுக" என்பதில் உள்ள 'ஆக' என்பது வில்லோடும் இயையும். 'ஆக' என்னும் எச்சங்கள், 'கனலார்' என்னும் இறந்தகால வினைக் குறிப்போடு முடியும். கனல் - கனல் போல்வது; சினம். வரையார் - கொள்ளார்; பகைவர்.

வளர்பொற் கனமணி திருமா ளிகையினை
வலம்வந் தலமரும் வரைநில்லா
அளவிற் பெருகிய வார்வத் திடையெழு
மன்பின் கடனிறை யுடலெங்கும்
புளகச் செறிநிரை விரவத் திருமலி
பொற்கோ புரமது புகுவார்முன்
களனிற் பொலிவிட முடையார் நடவில்
கனகப் பொதுவெதிர் கண்ணுற்றார். 165

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

22. திருநாகைக் காரோணம்

திருப்பதிக வரலாறு

திருமறைக்காட்டினின்றும் பாண்டிநாட்டிற்குச் சென்ற திருஞானசம்பந்தரிடம் விடைபெற்ற நாவரசர் பணிசெய்து அங்கே வீற்றிருந்தருளி, திருவீழிமிழலை தொழ நினைந்து அங்குநின்றும் செல்லுங்கால் திருநாகைக்காரோணத்தை அடைந்து பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 291.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

221 பாரார் பரவும் பழனத் தானைப்
பருப்பதத் தானைப் பைஞ்ஞீலி யானைச்
சீரார் செழும்பவளக் குன்றேப் பானைத்
திகழுந் திருமுடிமேல் திங்கள் சூடிப்
பேரா யிரமுடைய பெம்மான் தன்னைப்
பிறர்தன்னைக் காட்சிக் கரியான் தன்னைக்
காரார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தேஞ்ஞான்றுங் காண லாமே. 1

இத் திருப்பதிகம், இறைவன் பல திருத்தலங்களிலும் எழுந்தருளியிருக்கும் நிலையை நினைந்து. அந்நிலையையெல்லாம் இத் திருத்தலத்தில் என்றும் காணலாகும் என்று அருளிச்செய்தது.

221. பழனம், பைஞ்ஞீலி சோழநாட்டுத் தலங்கள். சீபருப்பதம் (சீசைலம்), வடநாட்டுத் தலம். "சூடி" என்னும் எச்சம், 'உடைய' என்னும் பெயரெச்சக் குறிப்போடும், "தன்னை" என்னும் இரண்டாவது, "காட்சி" என்னும் தொழிற்பெயரோடும் முடிந்தன. காட்சி, காணுதல் என்க. கார்ஆர் - கருமைநிறைந்த; கார், மேகமும் ஆம். 'நாகை' என்பது, 'நாகப்பட்டினம்' என்பதன் குறுக்கம். இது கடற்கரையில் உள்ளதென்பது வெளிப்படை. 'காரோணம்' என்பது, திருக்கோயிலின் பெயர்.

Koviloor Digital Library

222 விண்ணோர் பெருமானை வீரட்டனை
வெண்ணீறு மெய்க்கணிந்த மேனி யானைப்
பெண்ணானை ஆணானைப் பேடி யானைப்
பெரும்பற்றத் தண்புலியூர் பேணி னானை
அண்ணா மலையானை ஆனைந் தாடும்
அணியாரூர் வீற்றிருந்த அம்மான் தன்னைக்
கண்ணார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தென்ஞான்றுங் காண லாமே. 2

223 சிறையார் வரிவண்டு தேனே பாடுந்
திருமறைக் காட்டெந்தை சிவலோகனை
மறையான்ற வாய்மூருங் கீழ்வே ளூரும்
வலிவலமுந் தேவூரும் மன்னி யங்கே
உறைவானை உத்தமனை ஒற்றி யூரிற்
பற்றியாள் கின்ற பரமன் தன்னைக்
கறையார் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தென்ஞான்றுங் காண லாமே. 3

222. வீரட்டன் - வீரட்டானத்தான். 'வீரட்டானை' எனவும் பாடம் ஓதுவர். மெய் - உடம்பு. மேனி - நிறம். 'அணிந்த மேனி' என்பது 'அணிந்ததனால் ஆகிய மேனி' எனக் காரண காரியப் பொருளதாய் நின்றது. பெரும்பற்றப் புலியூர் - தில்லை. 'ஆன் ஐந்து ஆடும் அம்மான்' என இயையும். கண் ஆர் - இடம் மிகுந்த; 'கண்ணுக்கு நிறைந்த' என்றும் ஆம்.

223. தேனே பாடும் - தான் உண்ட தேனையே இசையாகப் பாடுகின்ற; 'மிக இனிமையாகப் பாடுகின்ற' என்றதாம். 'எந்தையாகிய சிவலோகனை' என்க. மறை ஆன்ற - வேதம் நிறைந்த. வாய்மூர், கீழ்வேளூர், வலிவலம், தேவூர் சோழ நாட்டுத் தலங்கள். ஒற்றியூர், தொண்டைநாட்டுத் தலம். 'ஒற்றி ஊரை இல்லாக (உறையுளாக)ப் பற்றி என்க. கறை ஆர் கடல் - கருமை நிறைந்த கடல்.

Koviloor Digital Library

224 அன்னமாம் பொய்கைசூழ் அம்ப ரானை
ஆச்சிரா மங்நகரும் ஆனைக் காவும்
முன்னமே கோயிலாக் கொண்டான் தன்னை
மூவுலகுந் தானாய மூர்த்தி தன்னைச்
சின்னமாம் பன்மலர்கள் அன்றே சூடிச்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி னானைக்
கன்னியம் புன்னைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. 4

225 நடையுடைய நல்லெருதொன் றூர்வான் தன்னை
ஞானப் பெருங்கடலை நல்லூர் மேய
படையுடைய மழுவாளோன் றேந்தி னானைப்
பன்மையே பேசும் படிறன் தன்னை
மடையிடையே வாளை யுகளும் பொய்கை
மருகல்வாய்ச் சோதி மணிகண் டனைக்
கடையுடைய நெடுமாட மோங்கு நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. 5

224. அன்னம் ஆம் - அன்னப்பறவை மிகுகின்ற. அம்பர்- திருவம்பர்; அம்பர்ப் பெருந்திருக்கோயில், அம்பர் மாகாளம் இரண்டுங் கொள்க. ஆச்சிராமம் - திருப்பாச்சிலாச்சிராமம்; இம்மூன்றும் சோழநாட்டுத் தலங்களே. சின்னம் - தனக்கென்று உள்ள அடையாளம்; அவை, 'கொன்றை, எருக்கு, ஊமத்தை' முதலியன. கன்னி - அழியாமை. அம், சாரியை.

225. படையுடைய - படைஞராவார் பிடிக்கின்ற. மழுவாள் - மழுவாகிய ஆயுதம். பன்மையே பேசுதல் - தனது நிலையை ஒன்றாகச் சொல்லாது, பலவாறாகச் சொல்லுதல். அஃதாவது, தன்னை, 'உருவுடையன்' என்றும், 'உருவிலன்' என்றும், 'ஓர் ஊரும் இல்லாதவன்' என்றும், 'பல ஊர்களை உடையவன்' என்றும், 'பெயர் ஒன்றும் இல்லாதவன்' என்றும், 'அளவற்ற பெயர்களை உடையவன்' என்றும், 'இல்லத்தான்' என்றும், 'துறவி' என்றும் மற்றும் இன்னோரன்ன பலவாகச் சொல்லுதல். இது பற்றி, "படிறன்" (பொய்யன்)" என்றருளிச்செய்தார். எல்லாவற்றுக்கும் அப்பாற் பட்டவன்' என்பது திருக்குறிப்பு. எனவே, "படிறன்" என்றது, உள்ளுறைச் சிறப்பு (பழிப்பதுபோலப் புகழ்தல்) ஆயிற்று. மருகல், சோழநாட்டுத் தலம். வாய், ஏழனுருபு. 'மருகல்வாய்

Koviloor Digital Library

226 புலங்கள்பூந் தேறல்வாய் புகலிக் கோனைப்
பூம்புகார்க் கற்பகத்தைப் புன்கூர் மேய
அலங்கலங் கழனிசூ ழணிநீர்க் கங்கை
யவிர்சடைமேல் ஆதரித்த அம்மான் தன்னை
இலங்கு தலைமாலை பாம்பு கொண்டே
ஏகாச மிட்டியங்கு மீசன் தன்னைக்
கலங்கற் கடல்புடைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. 6

227 பொன்மணியம் பூங்கொன்றை மாலை யானைப்
புண்ணியனை வெண்ணீறு பூசி னானைச்
சின்மணிய மூவிலைய சூலத் தானைத்
தென்சிராப் பள்ளிச் சிவலோகனை
மன்மணியை வான்சுடலை யூராப் பேணி
வல்லேருதோன் றேறும் மறைவல் லானைக்
கன்மணிகள் வெண்டிரைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. 7

உள்ள சோதியாகிய மணிகண்டன்' என்க. கடை - வாயில்: இதனை எடுத்தோதியது அழகு பற்றி.

226. புலம் - வயல். தேறல் - தேன். வாய் - வாய்ந்த; பொருந்திய. 'வயல்கள் பூக்களது தேனைப் பொருந்தியுள்ள புகலி' என்க. 'வாய்ப்புகலி என்பதும் பாடம். புகலி - சீகாழி, பூம்புகார் - காவிரிப்பூம்பட்டினம். புன்கூரும் சோழநாட்டுத் தலம். 'புன்கூர்மேய அம்மான்' என இயையும். அலங்கல் - அசைதல். அசைவன நெற்கதிர்கள் என்க. 'கழனிசூழ் புன்கூர்' என முன்னே கூட்டுக. இனி, 'கழனியைச் சூழ்தற்குரிய கங்கை' என, கிடந்தவாறே கங்கைக்கு அடையாக்கலும் ஆம். ஆதரித்தல் - விரும்புதல்; அது, விரும்பி அணிதலாகிய காரியத்தின்மேல் நின்றது. 'தலைமாலையையும், பாம்பையும் பற்றி ஏகாசமாக இட்டு' என்க. ஏகாசம் - மேலாடை. அது மேலாடை போலத் தோளில் இடப்படுவதைக் குறித்தது. "கொண்டு" என ஏகாரம் இன்றி ஓதுதல் பாடம் அன்று. கடலில் கலங்கல் கரையோரத்து உளதாகும் என்க. 'கலங்கள்' எனப் பாடம் ஓதுதலும் ஆம்.

227. பொன் மணி - பொன்போலும் அழகிய. அம், சாரியை. 'பூங்கொன்றை' என்பதனை, 'கொன்றைப் பூ' என

Koviloor Digital Library

228 வெண்டலையும் வெண்மழுவும் ஏந்தி ஞானை
விரிகோ வணமசைத்த வெண்ணீற் றானைப்
புண்தலைய மால்யானை யுரிபோர்த் தானைப்
புண்ணியனை வெண்ணீ றணிந்தான் தன்னை
எண்டிசையும் எரியாட வல்லான் தன்னை
யேகம்பம் மேயானை யெம்மான் தன்னைக்
கண்டலங் கழனிசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தென்றுங் காண லாமே. 8

229 சொல்லார்ந்த சோற்றுத் துறையான் தன்னைத்
தொல்நரகம் நன்னெறியால் தூர்ப்பான் தன்னை
வில்லானை மியச்சூர் மேவி ஞனை
வேதியர்கள் நால்வர்க்கும் வேதஞ் சொல்லிப்
பொல்லாதார் தம்அரணம் மூன்றும் பொன்றப்
பொறியரவம் மார்பாரப் பூண்டான் தன்னைக்
கல்லாலின் கீழானைக் கழிசூழ் நாகைக்
காரோணத் தென்றுங் காண லாமே. 9

மாற்றியுரைக்க. சில் மணிய - சில மணிகள் கட்டிய (சூலம்). மன்மணி - நிலைபெற்ற இரத்தினம்; 'தலையாய மணி, என்றலு மாம். வல்லெருது - தன்னைத் தாங்கவல்ல எருது. கல்மணி - கற்கள் என்னும் பெயரவாகிய மணிகள்.

228. வெண் மழு - கூரிய மழு. அசைத்த - கட்டிய. யானைக்குத் தலைபுண் ஆதல், அங்குசத்தால் குத்தப்படுதலால் என்க. இது, இனப் பொதுமைபற்றிக் கூறப்பட்டது. எட்டுத் திசையிலும் எரியாடுதல், அவற்றை அழித்தென்க. கண்டல் - தாழை. கழனிபோலுதல் பற்றி, தாழம்புதர் உள்ள இடங்களைக் "கழனி" என்றருளிச் செய்தார்; நெய்தலொடு மருதம் மயங் கியது என்றலுமாம்.

229. சொல் - புகழ். நரகத்தைத் தூர்த்தலாவது, பலரும் நன்னெறியில் ஒழுகச் செய்தலால் பாழ்படச் செய்தல்; இதுவே இறைவனது குறிக்கோள் என்க. "வில்லானை" எனப் பொதுப் பட அருளிச் செய்தாரேனும், 'மேருமலையாகிய வில்லானை'

Koviloor Digital Library

230 மனைதுறந்த வல்லமணர் தங்கள் பொய்யும்
மாண்புரைக்கும் மனக்குண்டர் தங்கள்
சினைபொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும் [பொய்யும்
மெய்யென்று கருதாதே போத நெஞ்சே
பனையுரியைத் தன்னுடலிற் போர்த்த எந்தை
அவன்பற்றே பற்ருகக் காணின் அல்லால்
கனைகடலின் தெண்கழிசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. 10

என்பது இசையெச்சத்தாற் கொள்ளப்படும். மீயச்சூர் - சோழ நாட்டுத் தலம். பொல்லாதார் - அசுரர். 'புல்லாதார்' என்பது பாடம் எனலுமாம். 'பூண்டான்' என்பது, 'பூண்டு சென்ருன்' எனத் தன் காரியந் தோன்ற நின்றமையின், "பொன்ற" என்னும் எச்சத்திற்கு முடிபாயிற்று. பொன்ற - அழிய. பொறி - புள்ளி. ஆர - நிரம்ப.

230. அமணர் - ஆருகத மதக் குருமார். 'அவர்களது மாண்பினை உரைக்கும் (உரைத்துப் போற்றும்) குண்டர்' என்க; இவர், இல்லறத்தவர். சினை - உடம்பு. சீவரத்தர் - துவர் தோய்த்த ஆடையர்; பௌத்தத் துறவிகள். 'போத' என்பதனை. போந்து, எனத் திரிக்க. பனை, உவம ஆகுபெயராய்த் துதிக்கையையும், சினையாகு பெயராய் யானையையும் உணர்த்திய இருமடியாகு பெயர். எந்தை அவன் - எம் தந்தையாகிய அவன். பற்று - துணை. 'அவன் பற்று' என்பது, 'அவனது துணை' எனத் துணைக்கிழமைப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகை. "காணலாமே" என்னும் ஏகாரம், இங்கு வினைப்பொருள் தந்தது. 'நெஞ்சே பொய்யர் பொய்களை எல்லாம் மெய்யென்று கருதாதே போந்து அவன் பற்றே பற்ருகக் காணில் அல்லால் காணலாமே' என முடிக்க. இனி, 'அல் ஆல் கடல்' எனப் பிரித்து இயைத்து, 'இருள் நிறைந்த கடல்' எனப் பொருள்கொண்டு, 'காணின் காண லாமே' என முன்னைத் திருப்பாடல்களிற் போலவே உரைத்தலும் ஆம். 'தென்கழி' என்பதும் பாடம்.

Koviloor Digital Library

231 நெடியானும் மலரவனும் நேடி யாங்கே
நேருருவங் காணுமே சென்று நின்ற
படியானைப் பாம்புரமே காத லானைப்
பாம்பரையோ டார்த்த படிறன் தன்னைச்
செடிநாறும் வெண்தலையிற் பிச்சைக் கென்று
சென்றானை நின்றியூர் மேயான் தன்னைக்
கடிநாறு பூஞ்சோலை யந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காண லாமே. 11

திருச்சிற்றம்பலம்

231. நெடியான் - திருமால். நேடி - தேடி. 'உருவம் நேர் காணுமே' என்க. காணுமே - காணுதபடி. சென்று - நீண்டு. படி - வடிவம். பாம்புரம், நின்றியூர், இவை சோழ நாட்டுத் தலங்கள். 'அரையோடு'. 'அரையின்கண்' என்க. 'அரையோடு சேர' என, ஒருசொல் வருவித்தலும் ஆம். செடி- முடைநாற்றம். சென்றது, தாருகாவன முனிவரது பத்தினியர் பால் என்க. கடி நாறு - மணம் வீசுகின்ற.

நீடுந் திருவுட னிகழும் பெருகொளி
நிறையம் பலநினை வுறநேரே
கூடும் படிவரு மன்பா லின்புறு
குணமும் பெறவரு நிலைகூடத்
தேடும் பிரமனு மாலுந் தேவரு
முதலாம் யோனிக டெளிவொன்று
வாடுங் கழல்புரி யமுதத் திருநட
மாரா வகைதொழு தார்கின்றார். 166

கையுந் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுட
னுருகும் பரிவின பேறெய்து
மெய்யுந் தலமிசை விழுமுன் பெழுதரு
மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநட மெதிர்கும் பிடுமவ
ரார்வம் பெருகுத லளவின்றால். 167

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

23. திருமறைக்காடு

திருப்பதிக வரலாறு

திருஞானசம்பந்தர் பாண்டிநாடு நோக்கிச் சென்ற பின்பு திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில் வதிந்து பணிசெய்திருந்த நாட்களில் போற்றிசைத்த திருப்பதிகங்களுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 290).

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

232 தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 1

இத்திருப்பதிகம், 'கண்டாய்' என்னும் முடிபுடைய தொடர் களால் இறைவனது அருட்டன்மைகளை வகுத்தருளிச்செய்தது. 'கண்டாய்' என்பனவெல்லாம் முன்னிலையசைச் சொற்களாகக் கொள்ளப்படும்.

232. தூண்டப்பட்ட விளக்கு மிக்க ஒளியுடையதாகுமாகை யால், இறைவனை, 'தூண்டு சுடர் அனையசோதி' என்றருளி னார். சூளாமணி - தலையில் அணியும் மணி; இது பெருவிலை யுடையதாய் ஓர் அரிய மணியாய் இருக்கும். "கருது வார்க்கு ஆற்ற எளியான்" எனப் பின்னர் அருளிச் செய்தமையால், முன்னர், 'கருதாதார்க்கு' ஆற்ற அரியான் என்பது கொள்ளப்படும். "காண்டற்கு" என்பது பின்னரும் சென்று இயையும். எனவே, அன்பரல்லா தார்க்குச் சால அரியனும், அன்பர்க்குச் சால எளியனும் நிற்பன் என்பது உணர்த்தியருளியவாறுதல் அறிக. 'வேண்டுவது' என்னும் ஒருமை, இனப்பொதுமை உணர்த்தி நின்றது. ஆகவே, அது, வேண்டப்படுவன பலவற்றையும்

Koviloor Digital Library

குறிக்கும். உலகவர்க்கு அவரவர் வினைவழியால் எழும் விருப்பத்தினை, அவர்க்குத் தோன்றாது, அவரும் பிறருமாகிய உயிர்கட்குப் பின்னும், அவரின் மேம்பட்ட தெய்வங்கட்குப் பின்னும், சடமாகிய பௌதிகங்கட்குப் பின்னும் கரந்து நின்றும், அடியவர் தன்மாட்டு வைத்த அன்பின்வழித் தோன்றும் விருப்பத்தினை, அவர்க்குக் கன்றை நினைந்துருகும் தாய்ப்பசுவின் முலையிற் பால்தானேவிம்மி யொழுகுவதுபோல வெளிப்பட்டு நின்றும் முடித்தருளுதலை, "வேண்டுவார் வேண்டுவதே ஈவான்" என்று அருளிச்செய்தார். "ஈவான்" என்றதனால், அங்ஙனம் முடித்தல் கைம்மாறற்ற கருணை காரணமாகவன்றிப் பிறிதொன்றான் அன்று என்பது விளங்கும். (உயர்ந்தோர், தாழ்ந்தோர்க்கு வழங்குதலே ஈகை எனப்படும் என்க.) வினைகளின் பயன், 'உயிர்கள், தெய்வங்கள் சடமாகிய பௌதிகங்கள்' என்னும் மூன்றன் வழியாகவே வரும் எனவும், அவை முறையே, 'ஆதியான்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம்' எனப்படும் எனவும் உணர்க. ஆதியான்மிகம் முதலிய மூன்றன் விளக்கத்தை "ஆதி தைவிகம் ஆதி பௌதிகம்" என்னும் ஞானமிர்த அகவலிற்காண்க (19). இம்மையில் வினைவழித் தோன்றும் விருப்பம் இம்மையிலே முடிதல், இறைவனை அது வேண்டிச் செய்யும் வழிபாட்டினால் ஆகும். அவர்க்கு இறைவன் அதனை, கடைந்தவழித் தோன்றும் நெருப்புப்போலத் தோன்றியும் தோன்றாதும் நின்று அருளுவனாகலின், அவர்க்கு, அவன், காண்டற்கு அரியனுமாகாது எளியனுமாகாது இடைநிகரனாய் நிற்பன் என்க. அவனருளாலே அவனை அணுக வேண்டுதலின், அவனையே மெய்ந்நெறி என்றருளிச் செய்தார். விரதமாவது, கடிவன கடிந்து, கொள்வன கொண்டொழுகுதல். அது மனத்திட்பத்தான் நிலைபெறுவதாகலின், (அவை) "மாண்ட மனத்தார்" என்றருளிச்செய்தார். மாண்ட - மாட்சிமைப்பட்ட. இவ்வெச்சம் இடப்பெயர்கொண்டதென்க. மணாளன் - அழகன். இத்திருத்தாண்டகங்கள் முன் இரண்டு சீர்களும் மூவசைச்சீராகவும், பின் இரண்டு சீர்களும் ஈரசைச் சீராகவும், அவற்றுள்ளும் நான்காஞ்சீர் தேமாவாகவும் வந்த நாற்சீர்த் தூக்கு இரண்டானய அடிகளால் வருதலேயன்றி, ஒரு தூக்கின் முதற்சீர் ஈரசையாய் வெண்டளை தட்டு நிற்கவும், இரண்டாஞ் சீர் ஈரசையாய்ப் பெரும்பாலும் வெண்டளையும், சிறுபான்மை ஆசிரியத்தளையும் தட்டு நிற்கவும் வருதலும் உண்டாகலின் இத்திருப்பாடலின் மூன்றாம் அடியின் இரண்டாந் தூக்கின் முதலிரண்டு சீர்கள், "மெய்ந்நெறி கண்டாய்" என நின்றன.

Koviloor Digital Library

233 கைகிளரும் வீணை வலவன் கண்டாய்
காபாலி கண்டாய் திகழுஞ் சோதி
மெய்கிளரும் ஞான விளக்குக் கண்டாய்
மெய்யடியார் உள்ளத்து வித்துக் கண்டாய்
பைகிளரும் நாக மசைத்தான் கண்டாய்
பராபரன் கண்டாய்பா சூரான் கண்டாய்
வைகிளரும் கூர்வாட் படையான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 2

234 சிலந்திக் கருள்முன்னஞ் செய்தான் கண்டாய்
திரிபுரங்கள் தீவாய்ப் படுத்தான் கண்டாய்
நிலந்துக்க நீர்வளிதீ யானான் கண்டாய்
நிருபியாய் ரூபியுமாய் நின்றான் கண்டாய்
சலந்துக்க சென்னிச் சடையான் கண்டாய்
தாமரையான் செங்கண்மால் தானே கண்டாய்
மலந்துக்க மால்விடையொன் றூர்ந்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 3

233. கைகிளரும் வீணை - கைகள் மிக்குத் தோன்றுதற்கு ஏதுவாகிய வீணை. 'வல்லவன்' என்பது இடைக்குறைந்து நின்றது. 'மெய்சோதி கிளரும்' என மாற்றி, 'திருமேனி ஒளி மிகுகின்ற' என உரைக்க. 'கிளரும்' என்றது. சினைவினையை முதலோடு சார்த்தியருளியது. முளைப்பதுபோன்று வெளிப் பட்டுத் தோன்றுதல்பற்றி, "வித்து" என்றருளினார். பை - படம். பாசூர், தொண்டைநாட்டுத்தலம். வை - கூர்மை. "வாள்" என்றது, மழுவை.

234. சிலந்திக்கு அருள்செய்தமையை மேலே (பக் - 156) காண்க. "துக்க" என்பன மூன்றும், 'தொக்க' என்பதன் மரூஉ. 'மறைந்த' என்பதே அவற்றின் பொருள். 'தொக்க' என்றே பாடம் ஓதுதலும் ஆம். 'சலம் துக்க சடை' என இயையும். " தானே " என்பதை, " தாமரையான் " என்பதற்கு முன்னே கூட்டுக. " மலம் தொக்க " என்றது, தூய விடை என்றவாறு.

Koviloor Digital Library

235 கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 4

236 மூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்
முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையெம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 5

235. கள்ளி - கள்ளிச்செடி. முதுகாடு - சுடுகாடு. கடந்தான் - வென்றான். உழை - மான்களில் ஒருவகை. வெள்ளி மிளிர் - வெள்ளிபோல ஒளிவிடுகின்ற. "வள்ளி மணாளன்" என்றது, 'முருகன்' என்னும் ஒரு சொற்றன்மைத்தாய், "நம்" என்றதனோடு தொகைநிலை வகையான் இயைந்து நின்றது. 'நம் முருகன்' என்றருளியது, சிவபெருமானுக்கு அடியராயினார்க் கெல்லாம் இளம்பெருமானடிகளாய் நிற்றல் கருதி. அவற்குத் தாதை யாயின்மையை எடுத்தோதியதனால், கணபதியை அருளி, தனதடி வழிபடும் அவர் இடர்களைக் கடிதல்போல, இப்பெருமானை அருளி அவரது பகைகளைக் கடிகின்றமை பெற்றாம், பகையாவது வினையேயாகலின், அப்பெருமானது கைவேலினை. "வினை ஓட விடும் கதிர்வேல்" (கந்தரனுபூதி 40.) என்றருளிச் செய்தார், அவரைத் தலைப்பட்டு நின்ற அருணகிரிநாத அடிகள் என்க.

236. மூரி முழங்கு ஒலிநீர் - மிகமுழங்குகின்ற முழக்கத்தினை யுடைய நீர்; என்றது கடல் நீரையும் மழை நீரையும். முழுத்தழல் - நிரம்ப எரிகின்ற நெருப்பு. "பொங்கழலுருவன்"

Koviloor Digital Library

237 ஆடல்மால் யானை யுரித்தான் கண்டாய்
அகத்தியான் பள்ளி யமர்ந்தான் கண்டாய்
கோடியான் கண்டாய் குழகன் கண்டாய்
குளிராரூர் கோயிலாக் கொண்டான் கண்டாய்
நாடிய நன்பொருள்க ளானான் கண்டாய்
நன்மையோ டிம்மைமற் றம்மை யெல்லாம்
வாடிய வாட்டந் தவிர்ப்பான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 6

(திருமுறை 3-120-1) என்றருளினர், ஆளுடைய பிள்ளையாரும். "ஏரி நிறைந்தனைய" என்னும் உவமை, மிகுதியேயன்றி, "ஊருணி நீர்நிறைந் தற்றே" (குறள் - 215.) என்றாற்போலப் பயனும் குறித்து நின்றது. "இன்னடியார்" என்றது, தனக்கு இனியராகும்சிறப்பின்உடையாரை அவர் அவன்அருளாலல்லது, தாமாக ஒன்றும் செய்யாரென்க; "நல்ல அடியார்" (திருமுறை 2-85.) என்றருளிச் செய்ததும் இவரையே என்க. ஆரியன் - ஆரியமொழியாய் இருப்பவன். தமிழன் - தமிழ் மொழியாய் இருப்பவன். சிறப்புடைய மொழிகள் இவை இரண்டல்லது பிறிதின்மையால், இவைகளையே ஓதியருளினர்; 'சத்தப் பிரபஞ்சம்' எனப்படும் மொழியாய் உள்ளவனும் இறைவனே என்றருளியவாறு. வாரி மதம் - வெள்ளம்போலும் மதம். 'மதம்' என்பது வடசொல்லாகலின் ககரம் மிகாது நிற்றலும் உடைத்தாயிற்று. இறைவனை மதயானையோடு உவமித்தது, வலிமையும் பெருமையும்பற்றி.

237. ஆடல் - வெற்றி. அகத்தியான் பள்ளி, கோடி (கோடிக்குழகர்) சோழநாட்டுத் தலங்கள். நாடிய - விரும்பிய. "நன்மையோடு" என்பதனை 'நன்மையால்' எனக் கொள்க. நன்மையாவது, அருள். 'அருளால், வாட்டம் தவிர்ப்பான்' என இயையும். இம்மை - இப்பிறப்பு. அம்மை - வருபிறப்பு. "வாடிய" என்பது, எதிர்வில் இறப்பாய் "அம்மை" என்பதனோடு இயைந்தது. அவ்வெச்சம், தொழிற்பெயர் கொண்டது.

Koviloor Digital Library

238 வேலைசேர் நஞ்சம் மிடற்றான் கண்டாய்
விண்தடவு பூங்கயிலை வெற்பன் கண்டாய்
ஆலைசேர் வேள்வி யழித்தான் கண்டாய்
அமரர்கள் தாமேத்தும் அண்ணல் கண்டாய்
பால்நெய்சேர் ஆனஞ்சும் ஆடி கண்டாய்
பருப்பதத்தான் கண்டாய் பரவை மேனி
மாலையோர் கூறுடைய மைந்தன் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 7

239 அம்மை பயக்கும் அமிர்து கண்டாய்
அந்தேன் தெளிகண்டாய் ஆக்கஞ் செய்திட்
டிம்மை பயக்கும் இறைவன் கண்டாய்
என்னெஞ்சே யுன்னில் இனியான் கண்டாய்
மெய்ம்மையே ஞான விளக்குக் கண்டாய்
வெண்காடன் கண்டாய் வினைகள் போக
மம்ம ரறுக்கும் மருந்து கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 8

240 மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்
ஆலின்கீழ் நால்வர்க் கறத்தான் கண்டாய்
ஆதியு மந்தமு மானான் கண்டாய்

238. ஆல் ஐசேர் வேள்வி - மிக்க அழகு பொருந்திய வேள்வி. பருப்பதம், 'சீசைலம்' என்னும் தலம். பரவை மேனி மால் - கடல்நிறம்போன்ற நிறத்தினையுடைய திருமால்.

239. "அம்மை பயக்கும் அமிர்து" என்றது வேற்றுமை உருவகம். "அம்மை" என்றது, வீட்டுலகத்தை. ஆக்கம்செய்து- செல்வத்தைக் கொடுத்து. உன்னில் - நினைத்தால். வெண்காடு, சோழநாட்டுத்தலம். போக - நீங்குமாறு. மம்மர் - மயக்கம்; அது, பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்வது. அதற்கு மாறுகின்றவன் இறைவனல்லது பிறிதின்மையின், "மம்மரறுக் கும் மருந்து" என்றருளினர்.

240. 'நோய் மூலம்' என்னும் ஆறும் வேற்றுமைத் தொகை, பின்முன்னாக, "மூலநோய்" என நின்றது. எல்லாத் துன்பங்கட்கும் மூலம், 'ஆணவம்' எனப்படும் அகஇருள்.

Koviloor Digital Library

பாலவிருத் தனுமானான் கண்டாய்
பவளத் தடவரையே போல்வான் கண்டாய்
மாலைசேர் கொன்றை மலிந்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 9

241 அயனவனும் மாலவனும் அறியா வண்ணம்
ஆரழலாய் நீண்டுகந்த அண்ணல் கண்டாய்
துயரிலங்கை வேந்தன் துளங்க அன்று
சோதிவிர லாலுற வைத்தான் கண்டாய்
பெயரவர்க்குப் பேரருள்கள் செய்தான் கண்டாய்
பேரும் பெரும்படையோ டீந்தான் கண்டாய்
மயருறு வல்வினைநோய் தீர்ப்பான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 10

திருச்சிற்றம்பலம்

அதனை நீக்குவோன் இறைவனே என்றதாம். "அறத்தான்" என்பது, 'அறத்தைச் சொல்லியவன்' எனப் பொருள்தரும். 'பால விருத்தம்' என்பது உம்மைத் தொகையாய் நிற்ப, அதனோடு இறுதிநிலை புணர்ந்து. "பால விருத்தன்" என, வந்தது. 'எல்லாக் கோலங்களையும் உடையவன்' என்பது பொருள். மதுரைத் திருவிளையாடல்களில், விருத்த குமார பாலரான திருவிளையாடல் இங்கு நினைக்கத்தக்கது. மாலை சேர் - மாலையின்கண் சேர்ந்த. கொன்றை - கொன்றைப் பூ. "மலிந்தான்" என, உடைமையை, உடைய பொருளோடு சார்த்தியருளினார்.

241. "அயனவன், மாலவன்" என்புழி நின்ற "அவன்' என்பன பகுதிப்பொருள் விகுதிகள். "துயரால் துளங்க" என உருபு விரித்துரைக்க. துளங்க - நடுங்குமாறு. "வைத்தான்" என்பது 'ஊன்றினான்' என்னும் பொருட்டாய் நின்றது. 'பெயர' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'மீட்சி எய்த' என்பது பொருள். பேர், 'இராவணன்' என்பது. இதற்கு 'அழுதவன்' என்பது பொருள். இஃது அவன் திருக்கையிலையின் கீழ்க்கிடந்து அழுதமையை என்றும் மறவா திருத்தற்பொருட்டுக் கொடுக்கப்பட்டது என்க. "பேரும்" என்னும் உம்மை, எச்சம். மயர் உறு - மயக்கத்தால் வருகின்ற. வினைநோய் - வினையாகிய நோய்; உருவகம்.

Koviloor Digital Library

24. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

நாயனார்திருவாஞ்சியம், பெருவேளூர், திருவிளமர் முதலான பதிகளை வணங்கி, புற்றிடங்கொண்டான்றன் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் பெறலாவதொன்றோ ? என்ற சிந்தையராய்த் திருவாரூர் அடைந்து ஆங்கு எதிர்கொள்ளும் திருத்தொண்டர் தம்முடன் திருவீதி வலம் வந்து தேவாசிரியன்முன் வந்திறைஞ்சி, கண்கள் துளிமாரிபொழியத் திருமூலட்டானரை வணங்கிப் பாமாலை பாடிப் பணி செய்து வீற்றிருந்து, திருவாதிரை நாளில் வீதிவிடங்கப்பெருமான் பவனியைச் சேவித்துப் போற்றி, திருப்புகலூரிறைவரைக் கும்பிட்டேத்தும் விருப்புடையராய்த் திருவுள்ளம் திருவாரூரிலே பிரியாது நிற்கத் திருமேனி மட்டில் அங்கு நின்றும் பிரிந்து வரத் திருவாரூர் தொழுது சென்றார். அங்ஙனம் செல்லும் பொழுது, திருவுள்ளம் அங்கே நின்றமையை ஒருவாறு விளக்கி, "திருவாரூரான்காண் என் சிந்தையானே" என்றருளிச்செய்ததுபோலும் இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 230.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

242 கைம்மான மதகளிற்றி னுரிவை யான்காண்
கறைக்கண்டன்காண்கண்ணார்நெற்றியான்காண்
அம்மான்காண் ஆடரவோன் ரூட்டி னன்காண்
அனலாடி காண்அயில்வாய்ச் சூலத் தான்காண்
எம்மான்காண் ஏழுலகு மாயி னன்காண்
எரிசுடரோன் காண்இலங்கு மழுவா ளன்காண்
செம்மானத் தோளியன்ன மேனி யான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. 1

இத் திருப்பதிகம், 'காண்' என்னும் முடிபுகளையுடைய தொடர்களால் இறைவனது தன்மைகளை உணர்த்துவது. 'காண்' என்பது அசைநிலையாகவே கொள்ளப்படும் என்க.

242. "கை, மானம், மதம்" என்ற மூன்றும் "களிறு" என்ற ஒன்றனோடு தனித்தனி முடிந்தன. அம்மான் - அனைவர்க்கும் தலைவன் ; இதில், அகரம், "அவனன்றி ஓர் அணுவும்

Koviloor Digital Library

243 ஊனேறு படுதலையி லுண்டி யான்காண்
ஓங்காரன் காணூழி முதலா னுன்காண்
ஆனேறேன் றூர்ந்துழலும் ஐயா றன்காண்
அண்டன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்
மானேறு கரதலத்தெம் மணிகண் டன்காண்
மாதவன்காண் மாதவத்தின் விளைவா னுன்காண்
தேனேறும் மலர்க்கொன்றைக் கண்ணி யான்காண்
திருவாரு ரான்காணென் சிந்தை யானே. 2

அசையாது" (தாயுமானவர்......) என்பதிற்போலப்பலரறி சுட்டு. "ஆடரவு ஒன்று" என்பதில், "ஒன்று" என்றது, இழிபு குறித்து நின்றது; அணுகலாகாத தீமை ஈண்டு இழிபு என்க. அயில் - கூர்மை. எம்மான் - எம் தலைவன். "எம்" என்றது, தம்மை உள்ளுறுத்த அடியவர்களை. எரி சுடரோன் - எரிகின்ற விளக்குப் போல்பவன். "நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த" (திருமுறை. 4-80-5.) எனத் திருவிருத்தத்துள்ளும் அருளிச்செய்தார். செம்மானம், 'செவ்வானம்' என்பதன் மரூஉ. என் சிந்தை யான் - என் உள்ளத்தில் புக்கவன்; இதனையே, எழுவாயாகக் கொண்டுரைக்க.

243. இதனுள் வந்த ஏறுதல், பொருந்துதல். படுதலை - அற்ற தலை. ஓங்காரம், மொழியின் நுண்ணிலை பருநிலைகளைக் குறிக்கும் குறி. இந்நிலைகள், 'வாக்குக்கள்' எனப்படும். நுண்ணிலை, 'சூக்குமை, பைசந்தி' என இரண்டாகவும், பருநிலை, 'மத்திமை, வைகரி' என இரண்டாகவும்சொல்லப்படும். இந்நால்வகை வாக்குக்களே பொருள்களின் துணிபுணர்வுக்குக் காரணமாகும். ஊழி - படைப்புத் தொடங்கி, அழிப்புக்காறும் உள்ள கால அளவு. முதல் - முதல்வன்; முதற்கண் உள்ளவன். 'ஊழிக்கண் முதல் ஆனான்' என்க. இனி, "ஊழிக்கு முதல்வன் ஆனான்' எனக் கொண்டு, 'எல்லாவற்றையும் நடத்தும் அக் காலத்தை நடத்தும் தலைவன் ஆயினான்' என்றுரைப்பினும் அமையும். 'ஐயாறன்' என்பது ஒரு பெயர்த்தன்மைத்தாய், "உழலும்" என்னும் எச்சத்திற்கு முடிபாயிற்று. 'தவமும், தவப்பயனும் ஆகின்றவன்' என்க.

Koviloor Digital Library

244 ஏவணத்த சிலையால்முப் புரமேய் தான்காண்
இறையவன்காண் மறையவன்காண் ஈசன் தான்
தூவணத்த சுடர்ச்சூலப் படையி னுன்காண் [காண்
சுடர்மூன்றுங்கண்மூன்ருக்கோண்டான்தான்காண்
ஆவணத்தால் என்றன்னை ஆட்கோண் டான்காண்
அனலாடிகாண் அடியார்க் கமிர்தா னுன்காண்
தீவணத்த திருவுருவிற் கரியுரு வன்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. 3

245 கோங்குவார் மலர்க்கண்ணிக் குற்ரு லன்காண்
கோடுமழுவன்காண்கோல்லைவேள்ளேற்ருன்காண்
எங்கள்பால் துயர்கெடுக்கு மெம்பி ரான்காண்
ஏழ்கடலு மேழ்மலையு மாயி னுன்காண்
போங்குமா கருங்கடல்நஞ் சுண்டான் தான்காண்
போற்றூண்காண் செம்பவளத் திரள்போல்வான் [காண்
சேங்கண்வா ளராமதியோ டுடன்வைத் தான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. 4

244. ஏ வண்ணத்த சிலை - அம்பை உடைத்தாகும் தன்மையை உடைய வில். மறையவன் - மறை ஓதுபவன். ஈசன் - ஆள்பவன். தூ வண்ணச் சுடர் - வெள்ளிய ஒளி; இது கூர்மை குறித்தவாறு. பாவத்தை அழித்தற்குத் தூயதாயிற்றென்பது உள்ளுறை. சுடர் மூன்ருவன; சூரியன், சந்திரன், நெருப்பு இவை இறைவனிடத்து முறையே, 'வலக்கண், இடக்கண், நெற்றிக்கண்' என நிற்கும். ஆவணம்-அடிமையோலை; என்றது, அஃது உடையார், தம் அடிமையை எங்கிருப்பினும் விடாது பற்றி ஈர்த்து ஆள்வதுபோல ஆண்டமையை. இனி, 'ஆ வண்ணத் தால் - ஏற்கும் வழியால்' என்றுரைப்பினும் அமையும். கரி உரு, மிடற்றில் உள்ளது; 'கரியுரியன்' என்பதே பாடம் எனக் கோடலுமாம்.

245. கொங்கு வார் - தேன் ஒழுகுகின்ற. 'கொல்லை. என்பதில் ஐ சாரியை. 'எங்கள்' என்றது அடியார்களை. "போல்வான்" என்பதை, "பொற்றூண்" என்பதனோடுங் கூட்டுக. 'அராவை' என இரண்டனுருபு விரிக்க.

Koviloor Digital Library

246 காரேறு நெடுங்குடுமிக் கயிலா யன்காண்
கறைக்கண்டன்காண்கண்ணார்நெற்றியான்காண்
போரேறு நெடுங்கொடிமேல் உயர்த்தி னான்காண்
புண்ணியன்காண் எண்ணரும்பல் குணத்தி
நீரேறு சுடர்ச்சூலப் படையி னான்காண் [னான்காண்
நின்மலன்காண் நிகரேது மில்லா தான்காண்
சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. 5

247 பிறையரவக் குறுங்கண்ணிச் சடையி னான்காண்
பிறப்பிலிகாண் பெண்ணோடா ணாயி னான்காண்
கறையுருவ மணிமிடற்று வெண்ணீற் றான்காண்
கழல்தொழுவார் பிறப்பறுக்குங் காபாலிகாண்
இறையுருவக் கனவளையாள் இடப்பா கன்காண்
இருநிலன்காண்இருநிலத்துக்கியல்பானான்காண்
சிறையுருவக் களிவண்டார் செம்மை யான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. 6

246. கார் - மேகம். நெடுங்குடுமி - உயர்ந்த சிகரம். 'போர் ஏற்றை நெடுங்கொடிமேல் உயர்த்தான்' என்க. "பல் குணம்" என்றது, எண்குணங்களும் புலப்பாட்டு வகையாற் பலவாதல் பற்றி; 'அனந்த கல்யாண குணன்' என்னும் வழக்குண்மையும் உணர்க. நீர் ஏறு சுடர் - நீர் சுவறுதற்கு இடனாகும் தீ. சீர் - புகழ்.

247. 'பிறையும் அரவுமாகிய கண்ணி' என்க. "பெண்ணோடு ஆண்" என்றது, பிறப்பெய்திய உயிர்களைக் குறித்த வாறு. 'மிடற்றான், வெண்ணீற்றான்' என்க. இறை - கை. 'இறையின்கண் வளையாள்' என்க. உருவம் - அழகு. நிலன் - நிலமாய் இருப்பவன். இயல்பென்றது, தாங்குதல், பயன் தரல் முதலியவற்றை. 'செம்மை' என்றது. செம்பாதியை; அம்மை கூற்றைக் குறித்தருளியவாறு. வண்டு ஆர்த்தல், கூந்தலில் என்க. இயற்கை மணத்தை விரும்பி வண்டுகள் சென்று ஆர்த்தலின், 'வண்டார் குழலி' என்பது, அம்மைக்கு ஒரு பெயராதல் அறிக.

Koviloor Digital Library

248 தலையுருவச் சிரமாலை சூடி னான்காண்
தமருலகந் தலைகலனாப் பலிகோள் வான்காண்
அலையுருவச் சுடராழி யாக்கி னான்காண்
அவ்வாழி நெடுமாலுக் கருளி னான்காண்
கொலையுருவக் கூற்றுதைத்த கொள்கை யான்காண்
கூரெரிநீர் மண்ணொடுகாற் றாயி னான்காண்
சிலையுருவச் சரந்துரந்த திறத்தி னான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 7

249 ஐயன்காண் குமரன்காண் ஆதி யான்காண்
அடல்மழுவாள் தானொன்று பியன்மே லேந்து
கையன்காண் கடற்பூதப் படையி னான்காண்
கண்ணெரியால் ஐங்கணையோன் உடல்காய்ந் தான்காண்
வெய்யன்காண் தண்புனல்சூழ் செஞ்சடை யான்காண்
வெண்ணீற்றான் காண்விசயற் கருள்செய் தான்காண்
செய்யன்காண் கரியன்காண் வெளியோன் தான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே. 8

248. தலை உருவ - தலையில் கயிறு ஊடுருவுமாறு; 'தலை உருவாகிய வச்சிர (வயிர) மாலை' என்றுரைத்தலும் ஆம். தமர் - கிளைஞர்; என்றது, தேவரையும் மக்களையும்; இவர் அனைவரும் அவனுக்கு அடியவராதல் பற்றி, "தமர்" என்றருளினார். 'அலை ஆழி' என இயையும். அலைத்தல் - அழித்தல். ஆழி - சக்கரம். ஆக்கியது, சலந்தராசுரனை அழித்தற் பொருட்டு. கொள்கை - செய்கை. கூர் - மிக்க. 'சிலையால்' என உருபு விரிக்க. சரம் - அம்பு. துரந்த - செலுத்திய.

249. ஐயன் - தமையன்; கணபதி. ஆதி - (அவர்க்குத்) தந்தை. பியல் - சுவல் (தோள்). வெய்யன் - வெப்பம் (தவறு செய்வாரைத் தெறல்) உடையவன். 'செய்யன்" முதலாக அருளியது 'எல்லா நிறங்களும் உடையவன்' என்றதாம். இத் திருத்தாண்டகத்தின் மூன்றும் அடி நான்காஞ்சீர் விளச்சீராய் வந்தது.

Koviloor Digital Library

250 மலைவளர்த்த மடமங்கை பாகத் தான்காண்
மயானத்தான் காண்மதியஞ் சூடி னான்காண்
இலைவளர்த்த மலர்க்கொன்றை மாலை யான்காண்
இறையவன்காண்எறிதிரைநீர்நஞ்சுண்டான்காண்
கொலைவளர்த்த மூவிலைய சூலத் தான்காண்
கொடுங்குன்றன்காண்கொல்லையேற்றினான்காண்
சிலைவளர்த்த சரந்துரந்த திறத்தி னான்காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. 9

251 பொற்றாது மலர்க்கொன்றை சூடி னான்காண்
புரிநூலன் காண்பொடியார் மேனி யான்காண்
மற்றாருந் தன்னொப்பா ரில்லா தான்காண்
மறையோதி காண்எறிநீர் நஞ்சுண் டான்காண்
எற்றாலுங் குறைவொன்று மில்லா தான்காண்
இறையவன்காண் மறையவன்காண் ஈசன் றான்
சேற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தான்காண்[காண்
திருவாரூ ரான்காண்என் சிந்தை யானே. 10

திருச்சிற்றம்பலம்

250. இலை வளர்த்த - இலையால் வளர்க்கப்பட்ட (மலர் என்க). கொலை வளர்த்த - கொல்லும் ஆற்றலை மிகக்கொண்ட. கொடுங்குன்றம் - பிரான்மலை ; பாண்டிநாட்டுத் தலம்.

251. பொன் தாது கொன்றை மலர் - பொன்போலும் மகரந்தத்தினை உடைய கொன்றை மலர். ஓதி - ஓதுபவன். எறிநீர் - கடல் ; அன்மொழித்தொகை. செற்றான் - அழித்தான்.

இத்தன் மையர்பல முறையுந் தொழுதெழ
என்றெய் தினையென மன்றாடும்
அத்தன் றிருவருள் பொழியுங் கருணையின்
அருள்பெற் றிடவரு மானந்தம்
மெய்த்தன் மையினில் விருத்தத் திருமொழி
பாடிப் பின்னையு மேன்மேலுஞ்
சித்தம் பெருகிய பரிவா லின்புறு
திருநே ரிசைமொழி பகர்கின்றார். 168

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

25. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

நாயனர், திருவாரூரில் புற்றிடங்கொள்நிருத்தரைக் காலங்களில் கும்பிட்டுத் திருவீதிப்பணி செய்திருந்து பரவிய திருப்பதிகங்கள் பலவற்றுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 226.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

252 உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேரு தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணுல் நோக்காதார் அல்லா தாரே. 1

252. உயிரா வணம் (வண்ணம்) - உயிர்ப்பு இயங்காதபடி; மூச்சை அடக்கி. உற்றுநோக்கி - ஒன்றுபட்டுக் கருதி (தியானித்து). கிழி - படம். உள்ளமாகிய படத்தில். உருவெழுதி' என்றது, உள்ளம் வேருகாது நீயே ஆக அழுந்தி; அஃதாவது சமாதி நிலையைப் பொருந்தி. 'உயிரை உன்கைத் தந்தால்' என்க. ஆவணம் செய்து தந்தால் - அடிமை ஓலை எழுதி, (அதனேடே)கொடுத்தால்; என்றது, 'சிறிதும் பற்றின்றிக் கொடுத்தால்' என்றபடி. கையாவது. அருள்; " நங்கையினுல் நாம் அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும் - நங்கையினுல் செய்தளிக்கும் நாயகனும்" (திருக்களிற்றுப்படியார் - 78)என்றது காண்க. உணரப்படுவார் - உன்னுல் சிறப்பு வகையில் உணரப் படுபவர். இஃது என் அருளிச்செய்தவாறெனின், 'ஒன்றியிருந்து நினையும் நினைவு நிலையில் யான் என்னும் முனைப்பு நீங்கி அருள் வழியில் நிற்கப் பழகி, பின்னர் உணர்வு நிலையில் அவ்வாறே நிற்கப்பெற்றுல், தன்னுல் சிறப்பு வகையில் உணரப்படுவாராகிய

Koviloor Digital Library

253 எழுது கோடியிடையார் ஏழை மென்றேள்
இளையார்கள் நம்மை யிகழா முன்னம்
பழுது படநினையேல் பாவி நெஞ்சே
பண்டுதான் என்னேடு பகைதா னுண்டோ
முழுதுலகில் வானவர்கள் முற்றுங் கூடி
முடியால் உறவணங்கி முற்றம் பற்றி
அழுது திருவடிக்கே பூசை செய்ய
இருக்கின்றன் ஊர்போலும் ஆரூர் தானே. 2

அவரோடு உடனுய் விளங்கி நிற்பன் இறைவன் என்றருளிச் செய்ததாம். உடம்பு நின்றநிலைபற்றிக் கூறலின், "உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி" என, அவர்வழி நிற்பான்போல அருளிச்செய்தார். ஆகவே, உடம்பு நீங்கியபின், 'தன்னேடு ஓட்டி வாழச் செய்வான்' என்பது உணர்ந்துகொள்ளப்படும். அயிராவணம் - சிவபிரானது யானை; இஃது இரண்டாயிரங் கோடுகளை உடையது. 'அயிராவணமே' என்றது, உவம ஆகுபெயர். இனி, இதற்கு, 'ஐயுருத தன்மையே (உண்மைப் பொருளே)' என்றுரைத்தலும் ஆம். "அயிராவணம் ஏருது" என்பது முதல் "அம்மானே" என்பது காறும் உள்ளவற்றை முதற்கண் வைத்துரைக்க. "வாழ்தி" என்பதன்பின், 'இங்ஙனம்' என்பது வருவித்து இயைக்க. அல்லாதாரே - உனது இன்பத்தைப் பெறுதற்கு உரியர் அல்லாதவரே.

253. எழுதுவோர், மடலேறும் ஆடவர். 'கொடி இடையார்' என்பது, 'மகளிர்' என்னும் பொருட்டாய் நின்றது. 'கொடியிடையாராகிய இளையார்கள்' என இயையும். ஏழை - எளிமை. அவர் இகழ்தல், முதுமை நோக்கியென்க. "பழுதுபட நினையேல்" என்பது, 'பயன்பட நினை' எனப் பொருள்தந்து நின்றது. பாவி நெஞ்சு - பாவத்தை உடைய மனம். "பகை தான் உண்டோ" என்றது பழுதுபட நினைத்தலை உட்கொண்டு. முழுதுலகில் - உலகம் முழுவதிலும். அழுதல் அன்பின் செயல். 'திருவடிக்குச் செய்ய' என இயையும். போலும், அசைநிலை. 'இருக்கின்றன் ஊராகிய ஆரூர் பழுதுபட (பயன்படா தொழியுமாறு வேறென்றை) நினையேல்' எனக் கூட்டுக.

Koviloor Digital Library

254 தேரூரார் மாவூரார் திங்க ளூரார்
திகழ்புன் சடைமுடிமேல் திங்கள் சூடிக்
காரூரா நின்ற கழனிச் சாயற்
கண்ணார்ந்த நெடுமாடங் கலந்து தோன்றும்
ஓரூரா வுலகேலா மொப்பக் கூடி
உமையாள் மணவாளா என்று வாழ்த்தி
ஆரூரா ஆரூரா என்கின் றார்கள்
அமரர்கள்தம் பெருமானே யெங்குற் றாயே. 3

255 கோவணமோ தோலோ உடையாவது
கொல்லேறோ வேழமோ ஊர்வதுதான்
பூவணமோ புறம்பயமோ அன்றா யிற்றான்
பொருந்தாதார் வாழ்க்கை திருந்தாமையோ
தீவணத்த செஞ்சடைமேல் திங்கள் சூடித்
திசைநான்கும் வைத்துகந்த செந்தீ வண்ணர்
ஆவணமோ ஒற்றியோ அம்மா னார்தாம்
அறியேன்மற் றூராமா ரூர் தானே. 4

254. 'தேரூர், மாவூர், திங்களூர்' மூன்றும் வைப்புத் தலங்கள். கார் - நீர். சாயல் - அழகு. கண் ஆர்ந்த - கண்ணுக்கு நிறைந்த. 'கழனி ஓரூர்' என இயையும். "ஓரூர்" என்புழி நின்ற ஊர், ஆகுபெயர். 'ஓரோர் ஊர்' எனற்பாலதாய அடுக்குத் தொகுத்தலாயிற்று. 'தேரூரார், மாவூரார், திங்களூரார் முதலாக ஓரோர் ஊராராக உலகில் உள்ளவரெல்லாம் ஒருங்குகூடி திங்கள் சூடி உமையாட்கு மணவாளனாய் இருப்பவனே என்று வாழ்த்தி, என்கின்றார்கள்; நீ எங்கே உள்ளாய்; (அவர்கள் கண்டிலரே)' எனக் கொண்டுகூட்டி உரைக்க. இங்ஙனம் அரிது பொருள்கொள்ள அமைதலும் அருட்டிருப் பாடல்களுக்கு இயல்பென உணர்க.

255. கோவணம் - கீழ் வாங்கிக்கட்டும் உடை. பொருந்தாதார் வாழ்க்கை - நன்மக்களோடு கூடாதவர் வாழ்க்கை; இரந்து உயிர் வாழ்தல். திருந்தாமை - அழகன்மை. இது பண்பியை உணர்த்திற்று. மேலனவற்றோடு இயைய, 'திருந்தியதோ' என்பது வருவிக்க. வைத்து - படைத்து. 'செந்தீ வண்ணர் அம்மானார்தாம் (தலைவர் தாம், ஆயினும்) அவருக்கு உடையாவது கோவணமோ, தோலோ - ஊர்வது கொல்லேறோ,

Koviloor Digital Library

256 ஏந்து மழுவாளர் இன்னம்பரார்
எரிபவள வண்ணர் குடமூக்கிலார்
வாய்ந்த வளைக்கையாள் பாக மாக
வார்சடையார் வந்து வலஞ்சுழியார்
போந்தா ரடிகள் புறம்ப யத்தே
புகலூர்க்கே போயினுர் போரே றேறி
ஆய்ந்தே யிருப்பார்போ யாரூர் புக்கார்
அண்ணலார் செய்கின்ற கண்மாயமே. 5

257 கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளேலும்புஞ் சேர்ந்தோன் ருகி
உருவாகிப் புறப்பட்டிங் கோருத்தி தன்ருல்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தோருகாற்பிறப்புண்டேல்மறவாவண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தேங் கூராய்
செம்போனே கம்பனே திகைத்திட் டேனே. 6

வேழமோ - பொருந்தாதார் வாழ்க்கையை மேற்கொண்டிருத்தல் அழகோ, அழகன்ரே - ஊர் பூவணமோ, புறம்பயமோ அன்ரு யின், ஆரூர் (அப்பெயர் சொல்லப்படுதலின்) உரிமையானதோ, ஒற்றியோ-ஆமாறு(உண்மை)அறியேன்' எனக்கொண்டு கூட்டுக.

256. 'மழுவாளராய்' எனவும், 'பவள வண்ணராய்' எனவும், 'வார்சடையாராய்' எனவும் எச்சமாக்குக. இன்னம் பரார் முதலிய மூன்று வினைகுறிப்புக்களிடத்தும், 'ஆயினுர்' என்பதுவிரிக்க. ஆய்ந்தே - நிலையாக வாழ்தற்குரிய ஊரைத் தேடிக்கொண்டே. 'பல ஊர்களில் தங்கித் தங்கி, ஆரூரில் குடி புகுந்துவிட்டார்' என்பதாம். இங்ஙனம் கூறியது பலவிடத்துப் பொதுநிலையில் இருக்கக் கண்ட அவரை, திருவாரூரில் சிறந்து வீற்றிருக்கக் கண்டமைபற்றி என்க. "திருவாரூர் கோயிலாக் கொண்டது" எனப் பின்னரும் அருளிச்செய்வார். இவ்வாறு புக்கதை, 'கண்மாயம்' என்றது, பிற தலங்களினின்றும் சென்றமை அறியப்படாமையால் என்க. கண் மாயம் - மறைந்த வாறு அறியாதபடி மறைதல்.

257. "கருவாகி" என்றது, கருப்பையில் துளியாய்ப் புக்க நிலையை. 'குழம்பியிருந்து' என்பது தொகுத்தலாயிற்று.

Koviloor Digital Library

குழம்பியிருத்தலாவது, 'கை, கால், தலை' முதலியன பிரிந்து தோன்றாது நெகிழ்ந்தபிண்டமாய் இருத்தல். கலித்து-தழைத்து; அவை பிரிந்து தோன்றி, "மூளை" என்புழியும் உம்மை விரிக்க. கருமை, இங்குப் பசுமையைக் குறித்தது. "ஒன்றாகி" என்பதனை, 'ஒன்றாக' எனத் திரிக்க. "உருவாகி" என்றது, 'மகனாகி' என்றவாறு. "உயிரார்" என்புழி, ஆர் விகுதி, இழித்தற்கண் வந்தது. கடைபோகாமை இழிபென்க. "உயிராரும்" என்னும் சிறப்பும்மையை. "வளர்க்கப்பட்டு" என்பதனோடு கூட்டுக. "கருவாகி" என்பது முதல், "வளர்க்கப்பட்டு" என்பதுகாறும், உயிர், மகனாய்த் தோன்றுதற்கண் உள்ள அருமையை எடுத்தோதியவாறு. அங்ஙனம் தோன்றியும், அந்நிலையிலே நிலைத்து நில்லாது நீங்குதல்பற்றி, "கடைபோகார்" என்றருளிச் செய்தார். கடைபோதல் - தான் உள்ள துணையும் அவ்வொரு நிலையிலே நிற்றல். எந்த நேரத்திலும் இறப்பு உளதாதலைக் குறித்து இரங்கியவாறு. இரக்கத்திற்குக் காரணம், பின்னர் அருளினார். மருவு ஆகி - பொருந்துதல் ஆகி, 'நின் அடியே மருவாகி' எனக் கூட்டுக. "மறவாவண்ணம்" என்புழி, 'நினைந்து' என்பது எஞ்சிநின்றது. எனவே, 'இறவாது இப்பிறப்பிலே இருப்பேனாயின் மறத்தல் நிகழாமைபற்றிச் செம்மாந்திருப்பேன்; அது கூடாதாகலின், ஒருகால் மீளப் பிறப்பு உண்டாகுமாயின், மறவாமை கூடுங்கொலோ என நினைந்து மனங் கலங்குகின்றேன்' என்றருளியவாறும்.

"துறக்கப் படாத உடலைத் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன், இறந்தால் இருவிசும் பேறுவன்; ஏறிவந்து
பிறப்பன்: பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலேஎன்றென் உள்ளம் கிடந்து மறுகிடுமே"

(திருமுறை 4-113-8.) எனத் திருவிருத்தத்துள்ளும் அருளிச்செய்தார். இதனுள்ளும், உடலைத் துறத்தல் முதலிய பலவற்றிற்கும் உடம்பட்டு, பிஞ்ஞகன்பேர் மறத்தல் ஒன்றிற்கும் உடம்படாது இரங்கியருளினமை காண்க. மணவாளன் - அழகன். திருத்தெங்கூர், சோழநாட்டுத்தலம். 'செம்பொன்போலும் சிறந்த ஏகம்பம்' என்க.

Koviloor Digital Library

258 முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கேட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. 7

258. இத்திருப்பாடல் திருவாரூர்ப் பெருமானது திருப்பெயரைக் கேட்டவுடனே வசமழிந்த தலையன்புடையளாய தலைவி ஒருத்தியின் தன்மையை அவள் தோழி விளங்க உரைத்து, செவிலிக்கு அறத்தொடு நின்றதாக வைத்துச் சத்திநிபாதத்து உத்தமர்களது நிலையை விளக்கியருளியது. செய்யுளாகலின் சுட்டுப்பெயர்கள் 'தலைவன்' என்பதற்கு முன்வந்தன. நாமம். 'சிவன்' என்பது. இச்சொற்றானே வசீகரித்தலையுணர்த்துவது என்றபடி. 'நிறைந்த மங்கலத்தினன்' என்பது பொருள். வண்ணம், பொன்வண்ணம். ஆரூர் - எல்லாம் நிறைந்த ஊர். "பெயர்த்தும்" என்பதை, 'பெயர்ப்பவும்' எனத்திரித்து, 'கேட்டவற்றை மீள நினையாது மறக்குமாறெல்லாம் செய்து அவள் மனத்தை யாம் மாற்றவும்' என உரைக்க. இவ்வாறன்றி, 'பின்னை வண்ணங் கேட்டாள்; பெயர்த்தும் ஆரூர் கேட்டாள்' என முன்னே கூட்டியுரைப்பாரும் உளர்; அவர்க்கு, "பிச்சி யானாள்" என்பதற்கு முன்னும் ஒரு சொல் வேண்டப்படுவதாம். 'அவனுக்கு' என்னும் நான்காவது ஏழாவதன்பொருளில்வந்தது. பிச்சி - பித்தி. நீத்தது மனத்தால் என்க. அகலிடத்தார் ஆசாரமாவது, கன்னியர் இல்வரை இகந்து செல்லாது நிற்றல். அதனை அகன்றமையாவது, தானே இல்லிறந்து சென்று ஆரூரை அடையத் துணிந்தமை. தன்னை மறந்தமையாவது, தலைவனையே நினையும் நினைவிலே தான் இது செய்கின்றமை அறியாதொழிந்தமை. தன் நாமமாவது, கன்னி (நிறை அழியாதிருப்பவள்) எனப்படுவது. "தாள்" என்புழி இரண்டாம் வேற்றுமை இறுதிக்கண் தொக்கது. "தாளே" என்னும் ஏகாரம், பிறவற்றினின்று பிரித்தலின் பிரிநிலை. தலைப்பட்டாள் - அணைந்தாள். தாளைத்தலைப்பட்டமையாவது, தனக்கென ஒன்றின்றி அவன் வழியளாயொழிந்தமை.

Koviloor Digital Library

259 ஆடுவாய் நீநட்டம் அளவிற் குன்ரு
அவியடுவார் அருமறையோ ரறிந்தே னுன்னைப்
பாடுவார் தும்புருவும் நார தாதி
பரவுவார் அமரர்களும் அமரர் கோனும்
தேடுவார் திருமாலும் நான்முகனுந்
தீண்டுவார் மலைமகளுங் கங்கை யாளும்
கூடுமே நாயடியேன் செய்குற் றேவல்
குறையுண்டே திருவாரூர் குடிகோண் டீர்க்கே.8

இனி, சத்திநிபாதத்தவரது நிலையை உரைக்குமிடத்து, நாமங் கேட்டல் முதலிய நான்கினையும் முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்குமாகவும், பின்னர் உள்ளவற்றை அணைந்தோர் தன்மையாகவும் கொள்க. நாமம் பொதுவில் உணரப்படுவது. வண்ணம் சிறப்பாக ஆய்ந்துணரப்படுவதும். பித்து அதனில் அழுந்துதலும் ஆதல் உணர்க. அன்னை திரோதான சத்தியும், அத்தன் தடத்த சிவனும் என்க. அகலிடத்தார் ஆசாரம், தன் முனைப்பில் நின்று வினைகளையிட்டியும் நுகர்ந்தும் பிறப்பிறப்புக்களில் உழலுதல். தன்னை மறத்தல், தாளுெரு பொருள் உண்மையையும், உண்டாகி அறிந்து நிற்றலையும் மறந்து முதல்வன் ஒருவனையே அறிந்து நிற்றல். தாள் - முதல்வனது உண்மை இயல்பு; அஃது இன்ப வடிவினதாதல் அறிக. ' நாமம் கேட்டல் ' முதலிய நான்கையும். ' சமயம், விசேடம், நிருவாணம் ' என்னும் தீக்கைவழி, ' சரியை கிரியை, யோகம், ஞானம் ' என்னும் நான்கு பாதங்களில் நிற்கும் நிலைகளையுணர்த்தியவாருக உரைப்பாரும் உளர்

259. அளவில் குன்ரு - விதிப்படி செய்யவேண்டும் அளவில் குறையாமல். ' குன்ருது ' என்பது ஈறு குறைந்து நின்றது. அறிந்தேன் - கண்டேன். ' நாரதாதி ' என்புழி, ' வல்லுநர் ' என்பது வருவிக்க. கூடுமே - உனக்கு ஏற்குமோ. குற்றேவல் - சிறு பணிகள். ' குடிகொண்டீர்க்கு ' என்பது, ஒருமைப் பன்மை மயக்கம். ' நீ நட்டம் ஆடுவாய் ; மறையோர் அவி அடுவார்; நாரதாதியர் உன்னைப் பாடுவார் ; அமரர்களும், அமரர்கோனும் உன்னைப் பரவுவார் ; திருமாலும் நான்முகனும் உன்னைத் தேடுவார் ; மலைமகளும், கங்கையாளும் உன்னைத் தீண்டுவார் ; இவைகளை எல்லாம் கண்டேன் ; ஆதலின், நாய் போலும் அடியவனுகிய யான் செய்யும் சிறு பணிகள் உனக்கு

Koviloor Digital Library

260 நீருருஞ் செஞ்சடையாய் நேற்றிக் கண்ணுய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நின்னைத் தேடி
ஓரூரும் ஒழியாமே யோற்றித் தெங்கும்
உலகமெலாந் திரிதந்து நின்னைக் காண்பான்
தேரூரும் நெடுவீதி பற்றி நின்று
திருமாலும் நான்முகனுந் தேர்ந்துங் காணு
தாரூரா ஆரூரா என்கின் ருர்கள்
அமரர்கள்தம் பெருமானே ஆரு ராயே. 9

261 நல்லூரே நன்ருக நட்ட மிட்டு
நரையேற்றைப் பழையாறே பாய ஏறிப்
பல்லூரும் பலிதிரிந்து சேற்றூர் மீதே
பலர்காணத் தலையாலங் காட்டி னூடே
இல்லார்ந்த பெருவேளூர்த் தளியே பேணி
யிராப்பட்டீச் சரங்கடந்து மணற்கால் புக்கு
எல்லாருந் தளிச்சாத்தங் குடியிற் காண
இறைப்பொழுதில் திருவாரூர் புக்கார் தாமே. 10

ஏற்குமோ' என முடிக்க இத்திருப்பாடலால், நாயனுர் இறைவனது பெருமையையும், உயிர்களது சிறுமையையும் உள்ளவாறுணர்ந்து நின்ற மெய்யுணர்வும், அவ்வுணர்வினுல் இறைவனுக்குச் செய்த உண்மைத் திருத்தொண்டின் ஆர்வமும் இனிது புலனுகும்.

260. நிலா - சந்திரனது ஒளி. திருமாலும் நான்முகனும், நின்னை ஓர் ஊரும் ஒழியாமே தேடி, எங்கும் ஒற்றித்து, உலகமெலாந் திரிதந்து தேர்ந்துங் காணுது, தேரூரும் நெடுவீதி பற்றி நின்று, 'ஆரூரா ஆரூரா' என்று ஓலமிட்டு நிற்கின்ருர்கள்; அவர்கள் அங்ஙனம் நிற்குமாறு நீ ஆரூரிடத்தினையாய் உள்ளாய்' என முடிவு செய்க. 'ஒற்றுவித்து' என்பது "ஒற்றித்து" எனக் குறைந்து நின்றது. ஒற்றுவித்தல் - ஒற்றரை விடுத்து உண்மையறியச்செய்தல்.

261. பழையாறு, சேற்றூர், மணற்கால், தளிச்சாத்தங்குடி இவை வைப்புத்தலங்கள்; 'தனிச்சாத்தங்குடி' என்பதும் பாடம். தாம் (திருவாரூர்ப் பெருமானுர்) நல்லூரில் நட்டம்

Koviloor Digital Library

262 கருந்துத்திக் கதநாகங் கையி லேந்திக்
கருவரைபோற் களியானைக் கதறக் கையால்
உரித்தெடுத்துச் சிவந்ததன்தோல் போருந்த மூடி
உமையவளை யச்சுறுத்தும் ஒளிகோள் மேனித்
திருத்துருத்தி திருப்பழனந் திருநேய்த் தானந்
திருவையா றிடங்கோண்ட சேல்வர் இந்நாள்
அரிப்பேருத்த வேள்ளேற்றை அடரவேறி
யப்பனூர் இப்பருவ மாரூ ராரே. 11

திருச்சிற்றம்பலம்

இட்டு, பழையாற்றில் ஏறேறி, பல்லூரில் பலிதிரிந்து, சேற்றூரில் பலர்காண நின்று, தலையாலங்காட்டில் ஊடே மறைந்துநின்று, பெருவேளூர்த் தளியிலே (கோயிலிலே) விரும்பித் தங்கி, பட்டீச்சுரத்தில் இராப் பொழுதைக் கழித்து, மணற்காலில் நுழைந்து, தளிச்சாத்தங்குடி வழியாக யாவருங்காண நடந்து, ஒரு நொடிப்பொழுதில் திருவாரூரை அடைந்தார்' என முடிவு கூறுக. இடையில் வேண்டும் சொற்கள். சொல்லெச்சமாக வந்து இயையும். நல்லூர், தலையாலங்காடு, பெருவேளூர், பட்டீச்சரம் இவை சோழநாட்டுத் தலங்கள்.

262. 'கருந்துத்தி' என்பது வலிந்து நின்றது. 'கரு நாகம்' என இயையும் துத்தி - படத்தில் உள்ள புள்ளிகள். கதம் - சினம். அரிப்பு எருத்தம் - (தசை மடிப்பால்) கீற்றுக்கள் அமைந்த பிடர். அடர - சுமக்க. பருவம் - காலம்; ஊழி. இது முதலாகப் பல திருப்பதிகங்களிலும், திருவாரூர் சிவபெருமானது முதலிடமாக இனிதெடுத்து விளக்கியருளும் குறிப்புக் காணப் படுதல், மிகவும் உற்று நோக்கத்தக்கது, 'திருவாரூர்த் திரு மூலட்டானம்' எனக் கூறப்படுதலும் கருதத்தக்கது. இவற்றால், தில்லையே, 'கோயில்' என வழங்கப்படினும், திருவாரூர் அதனினும்பழையகோயிலாதல் திருப்பதிகங்களாலும், நாயன்மார் களது வரலாறுகளாலும் இனிது கொள்ளக்கிடக்கின்றது. துருத்தி, பழனம், நெய்த்தானம், ஐயாறு இவை சோழநாட்டுத் தலங்கள்.

Koviloor Digital Library

26. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

இத்திருப்பதிக வரலாற்றினை முன் திருப்பதிகத்திற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

263 பாதித்தன் திருவுருவிற் பெண்கொண் டானைப்
பண்டொருகால் தசமுகனை அழுவித் தானை
வாதித்துத் தடமலரான் சிரங்கொண் டானை
வன்கருப்புச் சிலைக்காம னுடல் அட்டானைச்
சோதிச்சந் திரன்மேனி மறுச்செய் தானைச்
சுடரங்கி தேவனையோர் கைக்கொண் டானை
ஆதித்தன் பற்கொண்ட அம்மான் தன்னை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. 1

264 வெற்புறுத்த திருவடியாற் கூற்றட் டானை
விளக்கினொளி மின்னினொளி முத்தின் சோதி
ஒப்புறுத்த திருவுருவத் தோருவன் தன்னை
ஓதாதே வேத முணர்ந்தான் தன்னை

263. 'தன் பாதித் திருவுருவில்' எனக் கூட்டுக. தசமுகன் - இராவணன்; இப்பெயர்க்கு. அழுதவன் என்பதே பொருளாதலைக் கருதுக. வாதித்தமை, 'நீ தலைவனாதல் எவ்வாறு?' என்று வாதித்தல்; வருத்துதலுமாம், மறுச்செய்தமையாவது; காலால் தரையில் இட்டுத் தேய்த்தமை. அங்கி - அக்கினி. "கைக் கொண்டான்" என்பதில் ககரவொற்று, விரித்தல். சந்திரனைத் தேய்த்தமை முதலிய மூன்றும், தக்கன் வேள்வியிற் செய்தன. அயர்த்தல் - மறத்தல். மறந்தமை, அவனைத் தவிர ஏனைய எல்லாவற்றையும் என்க. 'அயர்த்தவாறு நன்று' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

264. வெற்புறுத்த - இராவணன் பொருட்டு மலையை அழுத்திய; 'திருவடி இவ்வாறு மறக்கருணையையும் செய்யும்'

Koviloor Digital Library

அப்புறுத்த கடல்நஞ்ச முண்டான் தன்னை
அமுதுண்டார் உலந்தாலும் உலவா தானை
அப்புறுத்த நீரகத்தே அழலா னானை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. 2

265 ஒருகாலத் தொருதேவர் கண்கொண் டானை
யூழிதோ றூழி யுயர்ந்தான் தன்னை
வருகாலஞ் செல்கால மாயி னானை
வன்கருப்புச் சிலைக்காம னுடலட் டானைப்

என்பதனை நினைந்தருளியவாறு. விளக்கொளியும் மின்னொளியும் செந்நிறமுடையனவாக, வெண்மை நிறமுடைய முத்தின் சோதியையும் உடன்கூட்டி யருளிச்செய்தது, சிவபிரான் செந்நிறமுடையனாதலே யன்றி, படிகம் போலும் வெண்ணிறமும் உடையனாதல்பற்றி யென்க. "வெண்பளிங்கி னுட்பதித்த சோதியானை" (266.) எனப் பின்னும் அருளிச்செய்வார். நெருப்பின் நிறத்தையும் வெண்மை என்றே கூறுவர் நையாயிகர். இனி, முத்தின்சோதி திருநீற்றுப் பூச்சிற்கு உவமையாயிற்று எனினுமாம். ஓதாதே வேதம் உணர்ந்தமை, இயல்பாகவே எல்லாவற்றையும் உணர்ந்திருத்தல். அப்பு உறுத்த கடல் - நீரைத் தன்னிடத்தே உறுவித்துக்கொண்ட கடல். அமுது உண்டவர், எல்லாத் தேவர்களும். உலந்தாலும் - அழிந்தாலும். 'சாவா மருந்துண்டவர் சாவ, சாகும் நஞ்சுண்டவன் என்றும் சாவாதிருக்கின்றான்; இதுபோல்வதொரு வியப்புண்டோ' என வியந்தருளிச் செய்தவாறு. "நீல மணிமிடற்றொருவன்போல - மன்னுக பெருமநீயே" (புறம் - 91.) என்ற ஔவையார் பாட்டின் பகுதியையும், அதன் உரையையும் ஈண்டு நினைவு கூர்க. அப்பு உறுத்த - நீரை மிகுதியாக நிறைத்த. 'நீரகம்' என்பது, 'நீரை உடைய இடம்' என்னும் காரணம் குறித்துக் 'கடல்' என்னும் பொருளதாய் நின்றது. "அழல்" என்றது; வடவைத் தீயை. இது, கடலின் நடுவில் நின்று, கடல் பொங்கி உலகை அழியாதவாறு காப்பது என்பது புராணவழக்கு.

265. ஒருகாலம், தக்கன் வேள்விசெய்தகாலம். ஒருதேவர், 'பகன்' என்பவர். "உண்ணப் புகுந்த பகனொளித்தோடாமே - கண்ணைப் பறித்தவா றுந்தீபற" (திருவா. திருவுந்தி. 12.) என்றருளினமை காண்க. ஊழிதோ றூழி உயர்தல், மேலே

Koviloor Digital Library

போருவேழக் களிற்றுரிவைப் போர்வை யானைப்
புள்ளரைய னுடல்தன்னைப் பொடிசெய் தானை
அருவேள்வி தகர்த்தெச்சன் தலைகொண் டானை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. 3

௨௬௬ மெய்ப்பால்வெண் ணீறணிந்த மேனி யானை
வெண்பளிங்கி னுட்பதித்த சோதி யானை
ஒப்பானை யொப்பிலா வொருவன் தன்னை
உத்தமனை நித்திலத்தை யுலக மெல்லாம்
வைப்பானைக் களைவானை வருவிப் பானை
வல்வினையேன் மனத்தகத்தே மன்னி னானை
அப்பாலைக் கப்பாலைக் கப்பா லானை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. 4

(பக். 47.) விளக்கப்பட்டது. வருகாலம் - எதிர்காலம். செல்காலம் - இறந்த காலம். இவை இரண்டையும் கூறவே, இடைநிற்கும் நிகழ்காலமாதல் தானே பெறப்படும். கால தத்துவமாய் நின்று அதுவாயிலாக எல்லாவற்றையும் நடத்துகின்றான் என்றருளியபடி. புள்ளரையன் - கருடன். அவன் செருக்குக் காரணமாகக் கயிலையில் இடபதேவரது மூச்சுக் காற்றில் அகப்பட்டுச் சிறகொடிந்து வருந்தி வணங்கிச்சென்ற வரலாற்றினைக் காஞ்சிப்புராணத்துட் காண்க. "கார்மலி யுருவக் கருடனைக் காய்ந்தும்" (கோபப்பிரசாதம் - 39.) என்றார் நக்கீர தேவரும். எச்சன் - வேள்வித் தேவன். "தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம் - தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடி" (திருவாச. திருச்சாழல்-5.) என்றருளியது காண்க.

266. பதித்த - (தான்) வைத்த. ஒப்பான் - எல்லாப் பொருளிலும் ஒரு நிகராகப் பொருந்தியிருப்பவன். உத்தமன் - மேலானவன். வைப்பான் - படைப்பான். "வருவிப்பான்" என்றருளியது, களைந்தபின் மீள வருவித்தலை. இனி. "வைப்பான்' என்றது, நிறுத்துதலை எனக்கொண்டு, "வருவிப்பானை" என்றதனை அதற்கு முன்னே கூட்டியுரைப்பினும் ஆம். அப்பாலைக்கு அப்பாலைக்கு அப்பாலான்-மாயைக்குஅப்பாற்பட்ட உயிருக்கு அப்பாற்பட்டவன்.

Koviloor Digital Library

267 பிண்டத்திற் பிறந்ததொரு பொருளை மற்றைப்
பிண்டத்தைப் படைத்ததனைப் பெரிய வேதத்
துண்டத்திற் றுணிபொருளைச் சுடுதீ யாகிச்
சுழல்காலாய் நீராகிப் பாரா யிற்றைக்
கண்டத்தில் தீதினஞ் சமுது செய்து
கண்மூன்று படைத்ததொரு கரும்பைப் பாலை
அண்டத்துக் கப்புறத்தார் தமக்கு வித்தை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. 5

268 நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்
நிறைகாலாய் இவையிற்றின் நியம மாகிப்
பாதியா யொன்றாகி யிரண்டாய் மூன்றாய்ப்
பரமாணு வாய்ப்பழுத்த பண்க ளாகிச்

267. பிண்டம் - உடல். 'அது கொண்டு உணரும் உணர்விற்கும் தோன்றுவான்' என்றதாம். 'மற்று' என்னும் அசை நிலை ஈறு திரிந்தது. ஏனையவற்றோடு இயைய, 'படைத்தது' என அஃறிணையாக அருளினார். "துண்டம்" என்றது, யாப்பிணை. 'இன்' ஏதுப்பொருளில் வந்த ஐந்தனுருபு. "இற்றை" என்றதனை, "சுடு தீ" முதலியவற்றோடு சேர முன்னே கூட்டுக. 'இன்று காணப்படும்' என்பது பொருள்; 'ஆயிற்றை' என வினைப்பெயராக்கி உரைத்தலுமாம். தீதின் நஞ்சு - தீமையை உடைய நஞ்சு. அமுது செய்தமையாவது, தீங்கு யாதும் செய்யாது, அழகு செய்துகொண்டு இருக்கவைத்தமை. "கண்" என்றது 'கணு' என்ற நயத்தையும் தோற்றியது. அண்டத்துக்கு அப்புறத்தார் - முத்தர்கள். அவர்கட்குத் தான் ஒருவனே பயன்தருதல்பற்றி, "வித்து" என்று அருளிச்செய்தார்.

268. கால் - காற்று. நியமம் - கட்டளை, ஒழுங்கு; என்றது, வன்மை முதலிய பண்புகளையும், பொறுத்தல் முதலிய தொழில்களையும். பாதி - எல்லாப் பொருள்கட்கும் பற்றுக்கோடு. ஒன்று - பரசிவம். இரண்டு - சிவமும், சத்தியும். மூன்று - 'அரன், மால், அயன்' என்னும் நிலை. பரமாணு - அணுவுக்கு அணுவாய் நிறைந்திருத்தல். பழுத்த - ஏழிசையும் செவ்வனம் நிரம்பிய. சோதி - அறிவு. இருள் - அறியாமை. அறியாமையைச் செய்யும் மலத்தின் ஆற்றலையும் அச்செயலைச் செய்யுமாறு தூண்டி அதன்வழி நிற்றலின், "இருளாய்" என்றும்

Koviloor Digital Library

சோதியா யிருளாகிச் சுவைக ளாகிச்
சுவைகலந்த அப்பாலாய் வீடாய் வீட்டின்
ஆதியாய் அந்தமாய் நின்றான் தன்னை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே. 6

திருச்சிற்றம்பலம்

அருளிச்செய்தார். இந்நிலையே 'திரோதானகரி' எனப்படுவது. "சோதியனே துன்னிருளே" (திருவாசகம். சிவபுராணம். 72.) என்றருளிச்செய்ததுங் காண்க. அப் பால் - அத்தன்மையுடைய பால். வீட்டின் ஆதி - வீட்டிற்கு வாயிலாகிய ஞானம். 'ஞானத்தின் அந்தம்' என்றது, பயனை; அஃதாவது, நிரம்புதல்.

இத் திருப்பதிகத்தின் ஏழாவது முதலிய திருப்பாடல்கள் கிடைத்தில.

பத்தனாய்ப் பாட மாட்டேன் என்றுமுன் னெடுத்துப் பண்ணால்
அத்தாவுன் னாடல் காண்பா னடியனேன் வந்த வாறென்று
இத்திறம் போற்றி நின்றே யின்றமிழ் மாலை பாடிக்
கைத்திருத் தொண்டு செய்யுங் காதலிற் பணிந்து போந்தார்.

நீடிய மணியின் சோதி நிறைதிரு முன்றின் மாடும்
ஆடுயர் கொடிசூழ் பொற்றே ரணிதிரு வீதி யுள்ளுங்
கூடிய பணிகள் செய்து கும்பிடுந் தொழில ராகிப்
பாடிய புனித வாக்கின் பணிகளும் பயிலச் செய்வார். 170

அருட்பெரு மகிழ்ச்சி பொங்க வன்னம்பா லிக்கு மென்னுந்
திருக்குறுந் தொகைகள் பாடித் திருவுழ வாரங் கொண்டு
பெருத்தெழு காத லோடும் பெருந்திருத் தொண்டு செய்து
விருப்புறு மேனி கண்ணீர் வெண்ணீற்று வண்ட லாட 171

மேவிய பணிகள் செய்து விளங்குநாள் வேட்க ளத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச் சென்றுமுன் வணங்கிப் பாடிக்
காவியங் கண்டர் மன்னுந் திருக்கழிப் பாலை தன்னில்
நாவினுக் கரசர் சென்று நண்ணினார் மண்ணோர் வாழ. 172

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

27. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

நாயனார் பாண்டிநாட்டிலுள்ள தலங்களை வணங்கிப் பொன்னிநாடடைபவராய் எதிர்ப்படுந் தலங்களை வரும் வழியே மீண்டும் வணங்கிப் பூம்புகலூர் வந்தணைந்து புனிதர் தாள் வணங்கி உழவாரத் திருத்தொண்டு செய்திருந்த அந்நிலைமையில் அவர் நன்னிலைமை உலகவர்க்குக் காட்டக்கருதிய பெருமான் உழவாரம் நுழைந்தவிடமெல்லாம் பொன்னொடு நவமணிகள் பொலிந்திலங்கச் செய்தருளினர். வாகீசரும் திருமுன்றிலிலுள்ள பருக்கைக் கற்களுடன் பொன்னினொடு நவமணிகளையும் பூங்கமல வாவியினிற் புகவெறிந்தார். ஓடும் பொன்னும் கல்லும் மணியும் வேறுகாணாதிருந்த நல்லோர் முன் நாயகனார் திருவருளால் தேவவரம்பையர்கள் எதிர்தோன்றி ஆடுவாரும் பாடுவாருமாகி நிற்க. அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலாது அன்புருகும் மெய்த்தன்மை யுணர்வுடைய விழுத்தவத்துமேலோராகிய நாயனார் தம் சித்த நிலை திரியாது செய்பணியின் தலைநின்று பிறவியின் தொடக்கில் விழுத்தும் இருவினைகளின் உருவமாய் வந்த அந்த அரமங்கையரைப் பார்த்து, "உம்மாலிங்கென்ன குறையுடையேன் யான்? திருவாரூர் அம்மானுக்கு ஆளானேன், நீவிர் வீணே அலைத்தல் வேண்டா" என்று அருளியது இத் திருப்பதிகம். திருப்புகலூரில் அருளிச்செய்கின்றவர் திருவாரூரையே எடுத்தோதியருளியது, அத் தலத்தின் முதன்மை கருதி. (திருநாவுக். பு. 423.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

269 போய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்

269. பொய் - நிலையின்மை. மாயம் - மாய்தலுடையது; என்றது, பல்வேறு வகையினவாய்க் காணப்படும் உலகப் பொருள்களை. 'நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்

Koviloor Digital Library

தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
　　தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச்செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
　　இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே.

போல நிலையின்றிமாயும் பொருள்களாகிய பெருங்கடல்' என்ற வாறு. புலம்புதல், ஈண்டு அலமருதல். நல்வினை தீவினை என்னும் இருவகை வினைகட்கும் பற்றுக்கோடு உலகமாகலின், அவற்றை உலகின்கட் கிடந்து அலமருவனவாக அருளிச் செய்தார். இனி, அவ்வுலகப் பொருள்களது இயக்கங்கள் யாவும் இருவினை வழிப்பட்டல்லது நிகழாமையின், தமக்குக் காட்சிப்பட்ட உலகப்பொருள்கள் அனைத்தையும் அவை காணப் பட்டவாறே கண்டு அவற்றின் வீழ்ந்தழியாது, அவற்றது முதனிலை ஒன்றையே நோக்கி நீங்குவார், அவைகளை அவ் வினைகளாகவே விளித்தருளினர். இதனுனே, திருப்புகலூரில் தம்மை மயக்குவான் வந்து தம் செயலெல்லாம் செய்த அரம்பை யரை நாயனுர் நோக்கிய நோக்கு வகையும் பெறப்பட்டுக் கிடந்தது; பின்னர்ப் பலவாருக விளிப்பதும் அவர்களையே என்க. இங்ஙனம் நோக்கினும், மயக்கின்கட்படாது நீங்குதல், "எம்மான்றன் அடித்தொடர்வான்" என்பதனுல் இனிதருளிச் செய்யப்பட்டது.

"இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயையுட னில்லாது மற்றவன்ருன் மெய்ப்பொருளே
ஆயவத னுலுணரும் அச்சு"
　　　　(சிவஞானபோதம். சூ. 10. அதி. 2.

என்றருளிச்செய்தது இவ்வனுபவத்தையே யென்க. எனவே, சிவஞானிகட்கு, 'இங்கு வாங்குங் கலம்போல' ஒரோவழி மல வாசனைவந்துதாக்குமிடத்து,மீளச்சிவஞானத்தின்கண் உறைத்து நிற்கும் நிலையைப் பெற்று அதனின் நீங்குதற் பொருட்டுத் தோன்றியருளியது இவ்வருமைத் திருப்பதிகம் என்பது விளங் கும். 'தண் நல் ஆரூர்' எனப் பிரிக்க. தடங்கடலோடுவ மித்தது, தன்னைத் தொடர்ந்தோரை(த் தனது திருவடிப் பேரின்பத்துள் ஆழ்த்தி) அடங்கச்செய்தல் (தாம் தோன்ருத வாறு செய்தல்) பற்றி என்பது, "தொடர்ந்தோரை அடங்கச் செய்யும்" என்பதனுல் விளக்கியருளப்பட்டது.

Koviloor Digital Library

270 ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற்
றொருவீர்வேண் டீர்ஈண்டிவ் வவனி யெல்லாம்
உம்பரமே உம்வசமே யாக்க வல்லீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்

"திருவே" என்னும் ஏகாரம் எதிர்மறுத்தலை உட்கொண்ட வினாப்பொருட்டு. 'நீங்கள் திருவே' என மாற்றியுரைக்க. 'நீங்கள் நலஞ்செய்வீரல்லீர்கள்' என்றபடி. 'இம்மாயப் பெருங் கடல்' என்றது, உடம்பை. "கிடந்தது இல்லையே" என மாறிக் கூட்டுக. கிடந்தது - தின்னக் கிடந்த பொருள். 'கிடந்து' என்பதும் பாடம். "இல்லையே" என்னும் ஏகாரம். தேற்றம். "தான்", அசை. "தம்மான், தலைமகன், தடங்கடல்" என்பன ஒருபொருள்மேற் பல பெயராய் வந்து, 'தான்' என்னும் பொருளவாய் நின்றன. எனவே, அப்பெயர்களிடத்து நின்ற இரண்டனுருபுகள், "தொடர்ந்தோர்" என்பதனோடு முடியும். "தொடர்வான்" என்பது, ஓடு உருபின் பொருளில் வந்த ஆன் உருபு ஏற்ற பெயர். அதனை வினையெச்சமாகக் கொள்ளின், வல்லெழுத்து மிகுதல் கூடாமை யறிக. இடை - இடையீடு. "கெடுவீர்காள்" என்பது வைதுரை (சாபமொழி). இடறுதல் - இடைநின்று தடுத்தல். "கெடுவீர்காள்" என விளித்தது, "இடறின் கெடுவீர்கள்" என்றறிவுறுத்தருளியவாறு.

270. "நிலந்தீ நீர்வளி விசும்போடைந்துங் - கலந்த மயக்கம் உலகம்" (தொல். பொருள். 635) ஆதலின், 'ஐம் பெருமா பூதங்காள்' எனவிளித்தருளினார். மயக்குவன சடமன்றிச் சித்தாகாமை யறிக. "ஒருவீர்" என்பன முன்னிலைப் பெயர்கள். இன்னதொரு பெயர் உண்டென்பதும், உயர்திணையுள் 'ஒருவன், ஒருத்தி,' என்னும் இருபாற்கும் பொது என்பதும். "ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி - இருபாற்கு முரித்தே தெரியுங்காலை" (தொல். சொல். 191.) என்னுங் கட்டளையுள் தன்னின முடித்தலாற்கொள்ளப்படும். இன்னோரன்ன முன்னிலைப் பெயர்களும் இருதிணைக்கும் பொது என்பது, "நீயிர் நீயென வரூஉங் கிளவி - பால்தெரிபிலவே உடன்மொழிப் பொருள" (ஷை 188.) என்னுங் கட்டளையுள் ஒன்றென முடித்தலாற் கொள்ளப்படும். 'ஒருவர்' என்பது, இன்னார் எனச் சுட்டிக் கூறாது, பொதுப்படக் கூறுதற்கண் வருவதாகலின், இவ்,

Koviloor Digital Library

உம்பருமா யூழியுமா யுலகே ழாகி
ஒள்ளாரூர் நள்ளமிர்தாம் வள்ளல் வானோர்
தம்பெருமா னுய்நின்ற அரனைக் காண்பேன்
தடைப்படுவே னுக்கருதித் தருக்கேன் மின்னே.

271 சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
சேழுங்கண்ணால் நோக்குமிது வூக்க மன்று
பல்லுருவில் தொழில்பூண்ட பஞ்ச பூதப்
பளகீரும் வசமன்றே பாரே லெல்லாம்
சொல்லுருவிற் சுடர்மூன்றாய் உருவம் மூன்றாய்த்
தூநயனம் மூன்றாகி ஆண்ட ஆரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவேன் நும்மால்
நமைப்புண்ணேன் கமைத்துநீர் நடமின்களே. 3

'ஒருவீர்' முதலியனவும் அன்ன என்க. வேண்டிற்று - அவாவியது; அது, பண்பானும், தொழிலானும் ஐவைந்தாகும். அவைகளை, 'உண்மை விளக்கம்' முதலிய நூல்களிற் காண்க. பரம் - சுமை; தாங்கப்படுவது. 'நுகர்போகம் இல்லையே' என்க. உம்பர் - மேலிடம்; விண்ணுலகம். நள்ளமிர்து - குளிர்ந்த அமுதம். காண்பேன் - எப்பொழுதும் காண்பேன்.

271. ''சில்லுரு'' என்றது. 'அழிகின்ற சில உருவங்கள்' என்ற இகழ்ச்சி தோன்ற. குறி - குறிக்கோள். பற்றி - பற்றுச் செய்து, விரும்பி. செழுங்கண் - புறத்தில் அழகாய் உள்ள கண்கள். இது - இச்செயல். ''ஊக்கம்' என்பது, இங்கு, 'ஒழுக்கம்' என்னும் பொருளதாய் நின்றது. தொழில், திரிந்து வேறுபடுதல். பளகீர் - பொய்ம்மையுடையீர்; விளி; உயர்திணையாக அருளிச்செய்தது. இகழ்ச்சிபற்றி. 'பாரேல் எல்லாம் உம் வசம் அன்றே' என்க. பார் - உலகம். சொல் உருவின் - ஐம்புலன்களில் ஒன்றாகச் சொல்லப்படுகின்ற உருவத்தினை உடைய. சுடர் மூன்று, 'ஞாயிறு, திங்கள், தீ' என்பன. உருவம் மூன்று, 'அயன், அரி, அரன்' எனப் பெயர்பெற்று நிற்பன. நயனம் - கண். நமைப்புண்ணுதல் - தேய்க்கப்படுதல்; கெடுக்கப்படுதல். கமைத்து - (நுமக்கு இணங்காமையைப்) பொறுத்து; என்றதும் இகழ்ச்சி பற்றியே யென்க.

Koviloor Digital Library

272 உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் [சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
தலைப்படுவேன் துலைப்படுப்பான் தருக்கேன்
மின்னே. 4

273 துப்பினைமுன் பற்றறு விறலே மிக்க
சோர்வுபடு சூட்சியமே சுகமே நீங்கள்
ஒப்பனையைப் பாவித்திவ் வுலக மெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யென்றன்

272. உன் உருவில் - (விரும்பி) நினைக்கப்படுகின்ற உடம்பில். "உறுப்பு" என்றது பொறியையும், "குறிப்பு" என்றது புலனையும் என்க. 'நாற்றத்து ஐவீர்' என இயையும். அத்து, வேண்டாவழிச் சாரியை. மன் உருவம் - (மயக்கம்) நிலைபெற்ற உருவம். வைப்பீர் - (எழாது) இருத்துவீர். 'அதற்கு' என்பது வருவிக்க. 'என் சிந்தை புகுந்து (அதன் கண்) தன் உருவைத் தந்தவனை' என இயைக்க. தலைப்படு வேன் - எப்பொழுதும் அணைந்திருப்பேன்; இங்கு, 'அதனால்' என்பது வருவிக்க. துலைப்படுப்பான் - உம் அளவிற்படுத்தற்கு.

273. துப்பு - துப்புரவு; நுகர்ச்சிப் பொருள். பற்று, 'பற்றுதல்' என முதனிலைத் தொழிற்பெயர். அருவிறல் - அருமைக்கு ஏதுவாய வெற்றி. சோர்வு படு சூட்சியம் - பிறர் அயர்த்தற்கு ஏதுவாகிய வஞ்சகம். சூழ்ச்சி என்பதன் மரூஉ வாகிய 'சூட்சி' என்பது, அம்முப்பெற்று நின்றது. ஒப்பனை - செயற்கை அழகு. 'ஒப்பினை' எனவும் பாடம் ஓதுவர். பாவித்து பரப்பி. பாவுவித்து என்பது குறைந்தது. உழறுதல் - உழலு தல். 'இது நுமக்கு அரிதோ' என்றவாறு. குறை - கருதிய செயல். "அரிதே", ஏகாரம் வினா. வைப்பு - சேம நிதி. வைகல் - 'வைகல்மாடக்கோயில்' என்னும் சோழநாட்டுத் தலம்.

Koviloor Digital Library

வைப்பினைப்பொன் மதிலாரூர் மணியை வைகல்
மணாளனையெம் பெருமானை வானோர் தங்கள்
அப்பனைச்சேப் பிடவடைவேன் நும்மால் நானும்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. 5

274 போங்குமத மானமே ஆர்வச் சேற்றக்
குரோதமே யுலோபமே போறையே நீங்கள்
உங்கள்பெரு மாநிலத்தி னெல்லை யெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யானேல்
அங்கமலத் தயனோடுமா லாகி மற்று
மதற்கப்பா லொன்றாகி யறிய வொண்ணாச்
செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை யாரூர்ச்
செல்வனைச்சேர் வேன்நும்மாற் சேலுத்து
ணேனே. 6

" நானும் " என்ற உம்மை எச்சத்தொடு சிறப்பு. ' நானும் பிறர்போல ஆட்டுணேன் ' என்க. ஓட்டந்து - ஓட்டம் தந்து ; அலந்து. ' ஈங்கு ஓட்டந்து (என்னை) அலையேன்மின் ' என்க. அலைத்தல் - வருத்துதல்.

274. ஆர்வச் செற்றங்களை உம்மைத்தொகைபடத் தொகுத்தருளிச்செய்தாராயினும், அவைகளையும் ஏகார உருபால் தனித்தனி நிற்க விளித்தலே திருவுள்ளம் என்க. மானம், மாண்பிறந்த மானம்; அது, உயர்ந்தோரைவணங்கமறுத்தல். ஆர்வம் - காமம். செற்றம் - பகை; மாற்சரியம். இவைகளைக் கூறவே மோகமும் தழுவிக்கொள்ளப்படும். பொறை - சுமை; துன்பம். " அயன், மால் " என்பவை அவரவர் நிலையைக் குறித்தன. ஒன்று - ஒன்றேயாய பரம்பொருள். " ஆகி " என்னும் எச்சங்கள், " ஒண்ணா " என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்தோடு முடிந்தன. குன்று - உவமையாகுபெயர்.

Koviloor Digital Library

275 இடர்பாவ மெனமிக்க துக்க வேட்கை
வெறுப்பேயென் றனைவீரும் உலகை யோடிக்
குடைகின்றீர்க் குலகங்கள் குலுங்கி நுங்கள்
குறிநின்ற தமையாதே யானேல் வானோர்
அடையார்தம் புரமூன்று மெரிசெய் தானை
அமரர்கள்தம் பெருமானை யரனை ஆரூர்
உடையானைக் கடுகச்சென் றடைவேன் நும்மா
லாட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. 7

276 விரைந்தாளும் நல்குரவே செல்வே பொல்லா
வெகுட்சியே மகிழ்ச்சியே வெறுப்பே நீங்கள்
நிரைந்தோடி மாநிலத்தை யரித்துத் தின்பீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
கரைந்தோட வருநஞ்சை யமுது செய்த
கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்
பரஞ்சோதி தனைக்காண்பேன் படேன்நும் பண்பிற்
பரிந்தோடி யோட்டந்து பகட்டன் மின்னே. 8

275. "வெறுப்பே" என்னும் எண்ணேகாரம், இடர் முதலிய எல்லாவற்றோடும் இயையும். அமையாதே - போதாதோ. அடையார் - பகைவர்; வானோர்க்குப் பகைவர் அசுரர்.

276. ஆளும் - ஏவல்கொள்ளும். செல்வத்தாற் பயன் கொள்ளுதலினும் வறுமையால் துயருழத்தல் விரைவுடைத்தாதல் பற்றி, "விரைந்தாளும் நல்குரவே" என்றருளினர். 'செல்வம்' என்பதில் அம்முத் தொகுத்தலாயிற்று. வெகுட்சி - சினம். நிரைந்து - கூடி. 'நிரந்து' என்பதும் பாடம். கரைந்து - ஓலமிட்டு. தற்பரம் - உயிருக்கு மேற்பட்ட பொருள். "கற்பகம்" முதலியன ஆகுபெயர்கள். பரிந்து - விரைந்து. பகட்டல் - வெருட்டல். 'பகட்டேன் மின்னே' என்பதும் பாடம்.

Koviloor Digital Library

277 முள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாண் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்ம ராணை
நடாத்துகின் றீர்க் கமையாதே யானேல் வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன் நும்மா
லாட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே. 9

278 சுருக்கமொடு பெருக்கநிலை நித்தல் பற்றித்
துப்பறையேன் றனைவீரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேல் மிக்க

277. முகரி - காக்கை. "ஈச்சிறகன்னதோர் தோலறினும் வேண்டுமே - காக்கை கடிவதோர் கோல்" (நாலடி - 41.) என்றவாறு, புண்ணுற்ற உடம்பினை, அதன்கண் உள்ள உயிரது துன்பம் நோக்காது மொய்த்துக் கொத்திப் பறிக்கும் இயல் புடைய காக்கைபோலப் பலவழிகளில் ஈர்த்துத் துன்புறுத்தலின், பஞ்சேந்திரியங்களை, 'காக்கைகாள்' என விளித்தார்; "எறும் பிடை நாங்கூ ழெனப்புல னால்அரிப் புண்டலந்த - வெறுந்தமி யேனை விடுதி கண்டாய் (திருவா. நீத்தல் விண்ணப்பம் - 25.) என்றருளியதுங் காண்க. நாள்வாயும் - நாள்தோறும். மம்மர் ஆணை - மயக்கமாகிய ஆட்சி. 'அவ்வுலகம் அமையாதே' என்க. "தாங்கிநின்ற" என்றருளினர், வீழாது நிற்பித்தல் பற்றி. அதற்கேற்ப "நெடுந்தூண்" என்றருளினர். "கரு" என்றது அடிநிலை என்றவாறு.

278. "நிலை" என்றது, காலநிலையை. துப்பு. துப்புரவு; அஃது அதற்கு ஏதுவாய செல்வத்தின்மேல் நின்றது. அறை - இன்மை; வறுமை. "என்று" எண்ணிடைச் சொல். 'அனை வீரும் நித்தல் 'நிலைபற்றிச் செருக்கி உலகை மிகைசெலுத்தி'

Koviloor Digital Library

தருக்கிமிக வரையெடுத்த அரக்கன் ஆகந்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியஎம் பெருமான் பாதத்
திடையிலேன் கேடுவீர்காள் இடறேன் மின்னே.

திருச்சிற்றம்பலம்

என இயைக்க; முற்றும்மை தொகுத்தலாயிற்று. மிகை - வரம்பு கடந்த ஆட்சி. மிகைசெலுத்தி என்பது, 'ஆண்டு' என்னும் பொருளதாய், "உலகை", என்னும் இரண்டாவதற்கு முடிபா யிற்று. வைகல் - நாள்தோறும். ஆகம் - உடம்பு. "எடுத்து" என்றது, ஊன்றுதலாகிய தன் காரியந் தோற்றிநின்றது. இடை - இடையீடு.

சினவிடையே றுகைத்தேறு மணவாள நம்பிகழல்
சென்று தாழ்ந்து
வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே
யென்கின் ருளென்று
அனையதிருப் பதிகமுட னன்புறுவண் டமிழ்பாடி
யங்கு வைகி
நினைவரியார் தமைப்போற்றி நீடுதிருப் புலியூரை
நினைந்து மீள்வார். 173

மனைப்படப்பிற்கடற்கொழுந்துவளைசொரியுங்கழிப்பாலை
மருங்கு நீங்கி,
நனைச்சினைமென்குளிர்ஞாழற்பொழிலூடுவழிக்கொண்டு
நண்ணும் போதில்
நினைப்பவர்தம் மனங்கோயில் கொண்டருளு மம்பலத்து
நிருத்த னுரைத்
தினைத்தனையாம்பொழுதுமறந் துய்வனோ வெனப்பாடித்
தில்லை சார்ந்தார். 174

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library



அமரர் நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட அம்மான்

Koviloor Digital Library

28. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

நாயனுர் பெருவேளூர் முதலிய தலங்களைப் பணிந்து திருவாரூர் வந்தடைந்து திருவீதி வலம் வந்து, தேவாசிரியன் வணங்கிப் புற்றிடங்கொள் நிருத்தர் தமைக் காலங்களில் கும்பிட்டுத் திருவீதிப் பணி செய்திருந்தபோது பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 226.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

279 நீற்றினையும் நெற்றிமே லிட்டார் போலும்
நீங்காமே வெள்ளெலும்பு பூண்டார் போலும்
காற்றினையுங் கடிதாக நடந்தார் போலுங்
கண்ணின்மேற் கண்ணொன் றுடையார் போலும்
கூற்றினையுங் குரைகழலால் உதைத்தார் போலுங்
கோல்புலித்தோ லாடைக் குழகர் போலும்
ஆற்றினையுஞ் செஞ்சடைமேல் வைத்தார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான ணுரே. 1

இத்திருப்பதிகம், "போலும்" என்னும் முடிபுடைய தொடர்க் கோவையால் இறைவனது இயல்பை விளக்கியருளியது.

279. " நடந்தார் " என்பதனை, ' நடத்தினுர் ' எனப் பிறவினைப் பொருட்டாக உரைக்க. " காற்றினையும் " என்பதை, " காற்றினிலும் " எனத் திரித்தலுமாம். குழகர் - அழகர். உம்மைகள், சிறப்பு. திருவாரூர்த் திருக்கோயிலில் ' அரநெறி ' என்பதொரு தலமும் இருத்தலால், புற்றிடங்கொண்ட இடமாகிய முதலிடம், ' மூலட்டானம் ' என வழங்கப்படும்.

Koviloor Digital Library

280 பரியதோர் பாம்பரைமே லார்த்தார் போலும்
பாசுபதம் பார்த்தற் களித்தார் போலும்
கரியதோர் களிற்றுரிவை போர்த்தார் போலும்
கபாலங்கட் டங்கக் கொடியார் போலும்
பெரியதோர் மலைவில்லா எய்தார் போலும்
பேர்நந்தி யென்னும் பெயரார் போலும்
அரியதோர் அரணங்கள் அட்டார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னூரே. 2

281 துணியுடையர் தோலுடைய ரென்பார் போலுந்
தூய திருமேனிச் செல்வர் போலும்
பிணியுடைய அடியாரைத் தீர்ப்பார் போலும்
பேசுவார்க் கெல்லாம் பெரியார் போலும்
மணியுடைய மாநாகம் ஆர்ப்பார் போலும்
வாசுகிமா நாணாக வைத்தார் போலும்
அணியுடைய நெடுவீதி நடப்பார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னூரே. 3

280. பசுபதியின் (சிவனது) ஆற்றல் பெற்ற அம்பு, 'பாசுபதம்' எனப்படும். பார்த்தன் - அருச்சுனன். 'கபாலத்தார்', 'கொடியார்' என்க, 'காபாலம்' என்பதும் பாடம்; 'கட்டங்கம்' என்னும் படைக்கலம் எழுதப்பட்ட கொடியும் சிவபிரானுக்கு உண்டென்க. "எய்தார்" என்பது, 'போர் செய்தார்' என்னும் பொருளாய் நின்றது. 'பேரினை நந்தியென்னும் பெயராக உடையார்' என உரைக்க. அரணங்கள் - மதில்கள்.

281. துணி உடை - குறைந்த உடை; அவை, கீளும் கோவணமும். என்பார் - எனப்படுவார்; 'என்பினை அணிந்தவர்' என்றுமாம். '(தாம்) உடைய அடியாரைப் பிணி தீர்ப்பார்' என இயைக்க. 'பிணி தீர்ப்பார்' என்பது, 'இனிது ஆட்கொள்வார்' என்றவாறு. பெரியார் - பேச்சுக்கு (அடங்காத) பெரும்புகழை உடையவர். நாண் - வில் நாண். "அணியுடைய விதிநடப்பார்" என்றது, ஆரூர்ப் பெருமானார், விதி விடங்கராய் இருத்தல்பற்றி. "விதி விடங்கராய் நடங்குலா வினரே" (திருவிசைப்பா - 18. 2.) என்றது காண்க.

Koviloor Digital Library

282 ஓட்டகத்தே ஊணாக வுகந்தார் போலும்
ஓருருவாய்த் தோன்றி உயர்ந்தார் போலும்
நாட்டகத்தே நடைபலவும் நவின்றார் போலும்
ஞானப் பெருங்கடற்கோர் நாதர் போலும்
காட்டகத்தே யாட லுடையார் போலும்
காமரங்கள் பாடித் திரிவார் போலும்
ஆட்டகத்தில் ஆனைந் துகந்தார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 4

283 ஏனத் திளமருப்புப் பூண்டார் போலும்
இமையவர்க ளேத்த இருந்தார் போலும்
கானக்கல் லாற்கீழ் நிழலார் போலுங்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
வானத் திளமதிசேர் சடையார் போலும்
வான்கயிலை வெற்பின் மகிழ்ந்தார் போலும்
ஆனத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 5

282. ஊண் ஆக-உணவு மிக. மிகுதல், பிச்சையால் என்க. ஓர் உரு, அழற்பிழம்பு. 'நாட்டகத்தே நிலவ' என, ஒரு சொல் வருவிக்க. நடை - நெறி. நாதர் - தலைவர். ஞானத்தின் பயனாய் நிற்றலின், ஞானமாகிய கடலுக்குக் கரையாயவர் என்றருளிய வாறு. "ஞானப் பெருங்கடற்கு ஓர் நாவாய் அன்ன பூரணன் காண்" என (78) அருளிச்செய்தமை காண்க. காமரம் - இசை' ஆட்டகம் - அடியவர் நீராட்டும் இடம்; 'ஆடு என்பது திரிந்துநின்றது' எனலுமாம்; திருமஞ்சன சாலை என்பதே பொருள்.

283. திருமால் வராகமாய்த் தோன்றிய சில நாட்களுக் குள்ளே அழித்தமையின், "இளமருப்பு" என்றார். "ஏன முளைக் கொம் பவைபூண்டு" (திருமுறை. 1. 1. 2.) என்றது காண்க. கானம்-காடு. கீழ் நிழல்-அடிக்கண் உள்ள நிழல். "மகிழ்ந்தார்" என்றது, 'மகிழ்ந்து வீற்றிருந்தார்' எனப் பொருள் தந்தது. ஆனத்து - எருதின் மேல் விளங்குகின்ற. முன் எழுத்து, அகரம்; "எழுத்தாய்" என்னும் ஆக்கச்சொல், உவமைகுறித்து நின்றது.

Koviloor Digital Library

284 காமனையும் கரியாகக் காய்ந்தார் போலுங்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
சோமனையுஞ் செஞ்சடைமேல் வைத்தார் போலுஞ்
சொல்லாகிச் சொற்பொருளாய் நின்றார் போலும்
நாமனையும் வேதத்தார் தாமே போலும்
நங்கையோர் பால்மகிழ்ந்த நம்பர் போலும்
ஆமனையுந் திருமுடியார் தாமே போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 6

285 முடியார் மதியரவம் வைத்தார் போலும்
மூவுலகுந் தாமேயாய் நின்றார் போலும்
செடியார் தலைப்பலிகொண் டுழல்வார் போலுஞ்
செல்கதிதான் கண்ட சிவனார் போலும்
கடியார்நஞ் சுண்டிருண்ட கண்டர் போலுங்
கங்காள வேடக் கருத்தர் போலும்
அடியா ரடிமை யுகப்பார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 7

இறைவற்கு அகரம் உவமையாகப் பொதுமறையுட் சொல்லப்பட்டமை வெளிப்படை. "முன்னெழுத்தாய் நின்றார்" என்பது, ஒரு பெயர்த் தன்மைத்தாய், "ஆனத்து" என்னும் ஏழாவதன் தொகைக்கு முடிபாயிற்று.

284. சோமன் - சந்திரன். 'நா மன்னும், ஆம் மன்னும்' என்பன, 'நாமனையும் ஆம் மனையும்' எனத் திரிபெய்தி நின்றன. ஆம் - நீர்.

285. ஆர் - ஆத்தி மாலை. செடி - முடைநாற்றம். கண்ட - படைத்த. தான், அசைநிலை. கடி ஆர் - நீக்குதலைப் பொருந்திய. கங்காளம் - எலும்புக் கூடு. கருத்தர் - தலைவர். அடிமை - தொண்டு.

Koviloor Digital Library

286 இந்திரத்தை யினிதாக ஈந்தார் போலும்
இமையவர்கள்வந்திறைஞ்சும் இறைவர் போலும்
சுந்தரத்த போடிதன்னைத் துதைத்தார் போலுந்
தூத்தாய திருமேனித் தோன்றல் போலும்
மந்திரத்தை மனத்துள்ளே வைத்தார் போலும்
மாநாகம் நாணாக வளைத்தார் போலும்
அந்திரத்தே யணியாநஞ் சுண்டார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 8

287 பிண்டத்தைக் காக்கும் பிரானார் போலும்
பிறவி யிறவி யிலாதார் போலும்
முண்டத்து முக்கண் ணுடையார் போலும்
முழுநீறு பூசும் முதல்வர் போலும்
கண்டத் திறையே கறுத்தார் போலுங்
காளத்தி காரோணம் மேயார் போலும்
அண்டத்துக் கப்புறமாய் நின்றார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 9

286. இந்திரம் - தலைமை. "இமையவர்கள்" என்பது பின்னர் வருதலால், 'ஈந்தது அவர்கட்கே' என்பது பெறப்படும். சுந்தரத்த - அழகினையுடைய. துதைத்தார் - நிறைவித்தார். 'துதைந்தார்' என்பதும் பாடம். "மனம்" என்றது, அடியார்களுடையதை. 'மலையை வளைத்தார்' என வருவித்து முடிக்க. அம் திரத்து அணியா நஞ்சு உண்டார் - அழகு நிலைபெற்ற பொருள்களில் அழகிய பொருளாக நஞ்சினை உண்டார்; உண்டு கண்டத்தில் வைத்தார்.

287. பிண்டம் - (உயிர்களது பலவகைப்பட்ட) உடம்புகள். 'அவைகளைக் காப்பவன் இறைவனேயாகலின். நாம் அதுபற்றிக் கவலுதல் வேண்டா' என்பது குறிப்பு. முண்டம் - நெற்றி. "முக்கண்" என்பது, 'மூன்றாவது கண்' என்னும் பொருளதாய் நின்றது. இறை - சிறிது.

Koviloor Digital Library

288 ஒருகாலத் தோன்றாகி நின்றார் போலும்
ஊழி பலகண் டிருந்தார் போலும்
பெருகாமே வெள்ளந் தவிர்த்தார் போலும்
பிறப்பிடும்பை சாக்காடொன் றில்லார் போலும்
உருகாதார் உள்ளத்து நில்லார் போலும்
உகப்பார் மனத்தென்றும் நீங்கார் போலும்
அருகாக வந்தென்னை யஞ்சே லென்பார்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 10

289 நன்றாக நடைபலவும் நவின்றார் போலும்
ஞானப் பெருங்கடற்கோர் நாதர் போலும்
கொன்றாகிக் கொன்றதொன் றுண்டார் போலுங்
கோளரக்கர் கோன்தலைகள் குறைத்தார் போலும்

288. "ஒருகாலம்" என்றது காலத்திற்கு அப்பாற்பட்ட நிலையை; அஃது, உலகம் தோன்றாதிருந்தநிலை. ஒன்று - தாம் ஒருபொருளே. ஊழி, உலகம் தோன்றி ஒடுங்கும் கால அளவு. "வெள்ளம்" என்றது, கங்கையை. "தவிர்த்தார்" என்றது, அதனைச் சடையில் அடக்கினமையை. இனி, 'ஊழி வெள்ளத்தை நீக்கி, உலகம் மீளத் தோன்றுமாறு செய்தார்' எனலுமாம். "இடும்பை" என்பது, "சாக்காடு" என்பதனோடும் இயையும்; 'பிறப்பு இறப்புக்களாகிய துன்பம்' என்பது பொருள். உகப்பார் - விரும்புவார். "அருகாக வந்தென்னை அஞ்சேல் என்பார்" என்ற அருந்தொடர், நாயனாருக்கு இறைவன் அனுபவப் பொருளாய் இருந்தமையை இனிது விளக்கும்.

289. நடை - ஒழுக்கம். நவின்றது, நூலால் என்க. "ஞானப் பெருங்கடற்கு ஓர் நாதர்போலும்" என்பது முன்பும் (4) வந்தது. 'தொல், நல்' என்பன, 'தொன்று நன்று' என நிற்றல்போல, 'கொல்' என்பது, 'கொன்று' என நின்றது. தொழிலும் பண்பாம் முறைமைபற்றி யென்க. 'கொலை' என்பது பொருள். கொன்றது - கொல்லப்பட்டது; இத்தொடர், வேள்வியுட் கொல்லப்பட்டதனைக் குறித்தது; 'அது தீதாயினும், நன்றென்று கருதிச் செய்வாரது கருத்து நோக்கி ஏற்றுக்கொள்கின்றான்' என்பது திருக்குறிப்பு. இனி,

Koviloor Digital Library

சென்றார் திரிபுரங்க ளெய்தார் போலுந்
திசையனைத்து மாயனைத்து மானார் போலும்
அன்றாகில் ஆயிரம் பேரார் போலும்
அணியாரூர்த் திருமூலட் டான னாரே. 11

திருச்சிற்றம்பலம்

"கொன்றது" என்றது, 'கொன்றதனால் ஆகிய பாவம்' எனக் கொண்டு, 'அதனை, கொலைத் தொழில் வடிவாய் நின்று நீக்கினார்' எனக் கோடலுமாம். "கொன்றது வினையைக் கொன்று நின்றஅக் குணம்என்று ஓரார்" என்பது சிவஞான சித்தி (சூத்திரம். 1. 71.) 'குறைத்தல்', ஈண்டு, சிறிது கெடச் சிதைத்தல். சென்று ஆர் - (வானத்தில்) திரிந்து ஆர்க்கின்ற. 'சென்று எய்தார்' என்றியைப்பினுமாம். திசை அனைத்தும் ஆனார் - திசைகளில் உள்ள அனைத்துப் பொருள்களும் ஆயினார். அன்று ஆகில்-ஒருபெயரும் அவருடைய பெயர் அன்று ஆயினும்; சிறப்பும்மை தொக்கது. 'ஆயிரம்' என்றல், அளவின்மை காட்டுவதொரு வழக்கு. ஒருபெயரும் அவருடைய பெயரல்லாமை, அஃது அவரது உண்மைநிலையை வரையறுத்துணர்த்தாமையானும், அளவற்ற பெயர் அவருடைய பெயர்களாதல் அவை அவரது அருள்நிலையை ஒவ்வோராற்றான் விளக்கலானும் என்க. "ஒருநாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் - திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ" (திருவாசகம். திருத்தெள்ளேணம். 1) என்றருளிச்செய்தமையுங் காண்க.

அரியானை யென்றெடுத்தே யடியவருக் கெளியானை
யவர்தஞ் சிந்தை
பிரியாத பெரியதிருத் தாண்டகச்செந் தமிழ்பாடிப்
பிறங்கு சோதி
விரியாநின் றெவ்வுலகும் விளங்கியபொன் னம்பலத்து
மேவி யாடல்
புரியாநின் றவர்தம்மைப் பணிந்துதமி ழாற்பின்னும்
பாடல்செய்வார். 175

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

29. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றினை முன் திருப்பதிகத்திற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

290 திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மோங்கை தாளம் வீணை
கோக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 1

291 பொன்னேபோல் திருமேனி யுடையான் தன்னைப்
பொங்குவெண் ணூலானைப் புனிதன் தன்னை
மின்னானை மின்னிடையாள் பாகன் தன்னை
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தான் தன்னைத்

290. திரு - அழகு. 'தேறலை பொன்னை' என்னும் ஐயுருபுகள் தொகுத்தலாயின. தேறல் - தேன். குரு - நிறம். குருமணி - சிறந்த ஆசிரியன் என்றுமாம். குழல் முதலியன வாச்சியவகைகள். பாணி - தாளம்; அவற்றை உடையவன் என்றவாறு. இனி, நடனமாடுதல்பற்றிக் கூறியதுமாம். பருமணி - பெரிய இரத்தினம். பருப்பதம் - சீபருப்பதம். அருங்கலம் - விலைமிக்க அணிகலம். அருமணி - கிடைத்தற்கரிய இரத்தினம். அயர்த்தல் - மறத்தல். 'மறந்திருந்தவாறு கொடிது' என்க.

291. மின்னான் - மின்போலும் ஒளியுடையவன். தன்னான் - தன்வயமுடையவன். தத்துவன் - உண்மைப் பொருளாயுள்ள

Koviloor Digital Library

தன்ஞனைத் தன்ஞெப்பா ரில்லா தானைத்
 தத்துவனை யுத்தமனைத் தழல்போல் மேனி
அன்ஞனை ஆரூரி லம்மான் தன்னை
 அறியா தடிநாயே னயர்த்த வாறே. 2

292 ஏற்றானை ஏழுலகு மானான் தன்னை
 யேழ்கடலு மேழ்மலையு மானான் தன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் தன்னைக்
 கொடுமழுவாள்கொண்டதோர்கையான்தன்னைக்
காற்றானைத் தீயானை நீரு மாகிக்
 கடிகமழும் புன்சடைமேற் கங்கை வெள்ள
ஆற்றானை ஆரூரி லம்மான் தன்னை
 அறியா தடிநாயே னயர்த்த வாறே. 3

293 முந்திய வல்வினைகள் தீர்ப்பான் தன்னை
 மூவாத மேனிமுக் கண்ணி னானைச்
சந்திரனும் வெங்கதிரு மாயி னானைச்
 சங்கரனைச் சங்கக் குழையான் தன்னை
மந்திரமும் மறைப்பொருளு மானான் தன்னை
 மறுமையும் இம்மையு மானான் தன்னை
அந்திரனை ஆரூரி லம்மான் தன்னை
 அறியா தடிநாயே னயர்த்த வாறே. 4

வன். அன்னன் - அவன். மேனியையுடைய அவன் என்க. 'அன்னைபோல்பவன்' என்றும் ஆம்.

292. ஏறு - விடை. ஏழ்மலை, ஏழ்தீவைச் சூழ்ந்திருப்பன. கூற்றான் - கூற்றுவனாய் இருப்பவன். 'வெள்ளமாகிய கங்கை ஆற்றான்' என மாறிக் கூட்டுக.

293. முந்திய - முற்பிறப்புக்களிற் செய்யப்பட்டு வந்த. சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். அம் திரன் - அழகு நிலை பெற்றவன்; என்றும் ஒருநிலையாய் இருப்பவன். 'அந்தரன்' என்பதும் பாடம்.

Koviloor Digital Library

294 பிறநெறியாய்ப் பீடாகிப் பிஞ்ஞ கனுமாய்ப்
பித்தனுய்ப் பத்தர் மனத்தி னுள்ளே
உறநெறியாய் ஓமமாய் ஈமக் காட்டில்
ஓரிபல விடநட்ட மாடி னானைத்
துறநெறியாய்த் தூபமாய்த் தோற்ற மாகி
நாற்றமாய் நன்மலர்மே லுறையா நின்ற
அறநெறியை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 5

295 பழகியவல் வினைகள் பாற்று வானைப்
பசுபதியைப் பாவகனைப் பாவந் தீர்க்கும்
குழகனைக் கோளரவோன் றுட்டு வானைக்
கோடுகோட் டி கொண்டதோர் கையான் தன்னை
விழவனை வீரட்டம் மேவி னானை
விண்ணவர்க ளேத்தி விரும்பு வானை
அழகனை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 6

294. பிறநெறி - பிறக்கும் நெறி ; பந்தம். பீடு - பெருமை. பிஞ்ஞகன் - தலைக்கோலத்தை உடையவன். உற - உறவு ; முதனிலைத் தொழிற்பெயர். ஓமம் - வேள்வி. ஓரி - நரி. விட - (அஞ்சி) நீங்க. துற - துறவு ; இதனையும், 'உற' என்பது போலக் கொள்க. இது பிறவி நெறிக்கு மாறுனது ; வீட்டுநெறி. தூபம் - நறும்புகைப் பொருள் ; என்றது வேள்விப் பொருளை. இது "ஓமமாய்" என்பதன் பின் வைக்கற்பாலது. தோற்றம் - உலகத் தோற்றம் ; இஃது ஆகுபெயராய், அதன் காரணத்தைக் குறித்தது. நாற்றமாய் - நாற்றம்போல. தாமரை மலராகிய இருக்கைமேல் வைத்து வழிபடப்படுதல்பற்றி "நாற்றமாய் நன் மலர்மேல் உறையா நின்ற" என்றருளிச் செய்தார். அறநெறி - அறநெறிக்கு முதல்.

295. "பழகிய வல்வினைகள்" என்றது பழக்கத்தினுல் செய்யப்படும் ஆகாமிய வினைகளை. பாற்றுவான் - நீக்குவான். பாவகன் - அங்கியங் கடவுள் (அக்கினி தேவன்). விழவன் - விழாக்களை உடையவன் ; மங்கலத்தையே உடையவன். விரும்பு வான் - விரும்பப்படுபவன்.

Koviloor Digital Library

296 சூளா மணிசேர் முடியான் தன்னைச்
சுண்ணவெண் ணீறணிந்த சோதி யானைக்
கோள்வா யரவ மசைத்தான் தன்னைக்
கோல்புலித்தோ லாடைக் குழகன் தன்னை
நாள்வாயும் பத்தர் மனத்து ளானை
நம்பனை நக்கனை முக்க ணானை
ஆள்வானை ஆரூரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயே னயர்த்த வாறே. 7

297 முத்தினை மணிதன்னை மாணிக் கத்தை
மூவாத கற்பகத்தின் கொழுந்து தன்னைக்
கொத்தினை வயிரத்தைக் கொல்லே றூர்ந்து
கோளரவொன் றாட்டுங் குழகன் தன்னைப்
பத்தனைப் பத்தர் மனத்து ளானைப்
பரிதிபோல் திருமேனி யுடையான் தன்னை
அத்தனை ஆரூரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்த்த வாறே. 8

296. சூளாமணி - உச்சிமணி; இது பாம்பின் தலையில் உள்ளதைக் குறித்தது. கோள்வாய் - கொல்லும்வாய். நாள் வாயும் - நாள்தோறும்வந்து வழிபடுகின்ற. ஆள்வான்-எல்லா உலகங்களையும் எல்லாப் பொருள்களையும் ஆளுகின்றவன்

297. மூவாத - கெடாத. கொத்து - எல்லா மணியும் கோக்கப்பட்ட மாலை. இதனை, "வயிரத்தை" என்பதன் பின்னர்க் கூட்டுக. "ஊர்ந்து" என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது. பத்தன் - அன்புடையன்; இரக்கம் உடையவன். பரிதி - சூரியன்.

Koviloor Digital Library

298 பையா டரவங்கை யேந்தி ஞனைப்
பரிதிபோல் திருமேனிப் பால்நீற் ருனை
நேய்யாடு திருமேனி நிமலன் தன்னை
நேற்றிமேல் மற்ருெருகண் நிறைவித் தானைச்
செய்யானைச் செழும்பவளத் திரளொப் பானைச்
சேஞ்சடைமேல் வெண்டிங்கள் சேர்த்தி ஞனை
ஐயாறு மேயானை ஆரு ரானை
அறியா தடிநாயேன் அயர்த்த வாறே. 9

299 சீரார் முடிபத் துடையான் தன்னைத்
தேசழியத் திருவிரலாற் சிதைய நூக்கிப்
பேரார் பெருமை கோடுத்தான் தன்னைப்
பெண்ணிரண்டும் ஆணுமாய் நின்ருன் தன்னைப்
போரார் புரங்கள் புரள நூறும்
புண்ணியனை வெண்ணீ றணிந்தான் தன்னை
ஆரானை ஆரூரி லம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்த்த வாறே. 10

திருச்சிற்றம்பலம்

298. பை ஆடு அரவம் - படத்தையுடைய ஆடுகின்ற பாம்பு. பால் நீறு - பால்போன்ற நீறு. மற்ருெருகண் - பிறர் ஒருவர்க்கும் இல்லாத வேறு ஒருகண். ஐயாறு - 'திருவையாறு' என்னும் சோழநாட்டுத் தலம்.

299. தேசு - ஒளி; அழகு; புகழுமாம். நூக்கி - வருத்தி. பேர் - புகழ். பெண் இரண்டு - உமையும், கங்கையும். "ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை" (தொல் - எழுத்து - 304.) என்பவாகலின், "பெண் இரண்டும்" என அஃறிணையாக அருளிச்செய்தார். "ஆணுமாய்" என்றது, 'தானுமாய்' என்னும் பொருட்டாய் நின்றது. நூறும் - அழித்த. ஆரான் - (அடியவர்கட்குத்) தெவிட்டாதவன்.

Koviloor Digital Library

30. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

28 ஆம் திருப்பதிக வரலாறு காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

300 எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டான்காண்
ஏழ்கடலும் ஏழுலகும் ஆயி னான்காண்
வம்புந்து கொன்றையந்தார் மாலை யான்காண்
வளர்மதிசேர்கண்ணியன்காண்வானோர் வேண்ட
அம்பொன்றால் மூவெயிலு மெரிசெய் தான்காண்
அனலாடி யானஞ்சு மாடி னான்காண்
செம்பொன்செய் மணிமாடத் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. 1

301 அக்குலாம் அரையினன்காண் அடியார்க் கென்றும்
ஆரமுதாய் அண்ணிக்கும் ஐயாற் றான்காண்
கொக்குலாம் பீலியொடு கொன்றை மாலை
குளிர்மதியுங் கூரரவும் நீருஞ் சென்னித்

இத்திருப்பதிகம், 'காண்' என்னும் முடிபுடைய தொடர்க் கோவையால் இறைவன் இயல்பினை விளக்குவது.

300. பந்தம் - தளை. வம்பு - வாசனை. உந்து - எழுவிக்கின்ற. "அனலாடி" என்னும் எச்சம் எண்ணுப் பொருளது. "காண்" என்பன அசைநிலைகள். "எம் செல்வன்" என்பதனை எழுவாயாக எடுத்துக்கொண்டுரைக்க. தான், ஏ அசைநிலைகள்.

301. அக்கு உலாம் - எலும்பு பொருந்திய. அண்ணிக்கும் - தித்திக்கின்ற. ஐயாறு, தலம். 'கொக்கு', என்றது, அதன் இறகை. பீலி - மயில் இறகு. கூர் - (கொடுமை) மிக்க. தொக்கு உலாம் - கூடித் தங்குகின்ற; 'தூநெறி' என்றது, அதன்கண்

Koviloor Digital Library

தோக்குலாஞ் சடையினன்காண் தொண்டர் செல்லுந்
தூநெறிகாண் வானவர்கள் துதிசெய் தேத்தும்
திக்கெலாம் நிறைந்தபுகழ்த் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. 2

302 நீரேறு சடைமுடியெம் நிமலன் தான்காண்
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித் தான்காண்
வாரேறு வனமுலையாள் பாகத் தான்காண்
வளர்மதிசேர் சடையான்காண் மாதே வன்காண்
காரேறு முகிலனைய கண்டத் தான்காண்
கல்லாலின் கீழறங்கள் சொல்லி னுன்காண்
சீரேறு மணிமாடத் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. 3

303 கானேறு களிற்றுரிவைப் போர்வை யான்காண்
கற்பகங்காண்காலனையன் றுதைசெய்தான்காண்
ஊனேறு முடைதலையிற் பலிகொள் வான்காண்
உத்தமன்காண் ஒற்றியூர் மேவி னுன்காண்
ஆனேறொன் றதுவேறும் அண்ணல் தான்காண்
ஆதித்தன் பல்லிறுத்த ஆதி தான்காண்
தேனேறு மலர்ச்சோலைத் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. 4

மேற்கொள்ளப்படும் ஒழுக்கங்களை. 'ஏத்தும் புகழ்' என இயையும். "சென்னி" என்பதை, "கொக்கு" என்பதற்கு முன் வைத்து, 'சென்னிச் சடையினன்' என இயைக்க.

302. வார் - கச்சு. வனம் - அழகு. மாதேவன் (மகா தேவன்) - பெருந்தேவன்; முழுமுதற் கடவுள். கார் - கருமை நிறம்.

303. கான் ஏறு - காட்டில் திரிகின்ற; இஃது இன அடை. கற்பகம், வேண்டுவார் வேண்டுவதை ஈவது. உடைதலை, வினைத் தொகை; 'உடலின் நின்றும் நீங்கிய தலை' என்றதாம். ஆதித்தன் - சூரியன்.

Koviloor Digital Library

304 பிறப்போ டிறப்பென்று மில்லா தான்காண்
பெண்ணுருவோ டாணுருவ மாயி ஞன்காண்
மறப்படுமென் சிந்தைமருள் நீக்கி ஞன்காண்
வானவரு மறியாத நெறிதந் தான்காண்
நறப்படுபூ மலர்தூபந் தீப நல்ல
நறுஞ்சாந்தங் கோண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்குந் திருவா ரூரில்
திருமூலட் டானத்தேஞ் செல்வன் தானே. 5

305 சங்கரன்காண் சக்கரம்மாற் கருள்செய் தான்காண்
தருணேந்து சேகரன்காண் தலைவன் தான்காண்
அங்கமலத் தயன்சிரங்கள் ஐந்தி லோன்றை
அறுத்தவன்காண் அணிபோழில்சூழ் ஐயாற்ருன் [காண்
எங்கள்பெரு மான்காண்என் னிடர்கள் போக
அருள்செய்யும் இறைவன்காண் இமையோ [ரேத்துஞ்
சேங்கமல வயல்புடைசூழ் திருவா ரூரில்
திருமூலட் டானத்தேஞ் செல்வன் தானே. 6

304. பெண் உருவோடு ஆண் உருவம் ஆயினமையை, அவனது திருமேனியிலும், உலகத்திலுங் கொள்க. மறப்படும் - பாவத்தின்கண் அகப்பட்ட; இது சமண் சமயக்கொள்கையில் மயங்கியதைக் குறித்தது. 'பின் எனக்கு, வானவரும் அறியாத நெறி தந்தான்' என்க. 'நரு' என்பது, செய்யுளாகலின், இறுதி ஆகாரம் குறுகிற்று; 'தேன்' என்பது பொருள். சிறப்பு - மேன்மை; விழாவுமாம்.

305. சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். தருண + இந்து = தருணேந்து; இளஞ் சந்திரன். வடமொழிக் குணசந்தி. சேகரம் - தலை. "தலைவன்தான்" என்றதில் தான், அசைநிலை. ஐயாறு, தலம். "எங்கள்" என்றது, அடியராய் இருப்பவரை உளப்படுத்து. இறைவன் - கடவுள்.

Koviloor Digital Library

306 நன்றருளித் தீதகற்றும் நம்பி ரான்காண்
நான்மறையோ டாறங்க மாயி னுன்காண்
மின்திகழுஞ் சோதியன்காண் ஆதி தான்காண்
வெள்ளேறு நின்றுலவு கொடியி னுன்காண்
துன்றுபொழிற் கச்சியே கம்பன் தான்காண்
சோற்றுத் துறையான்காண் சோலை சூழ்ந்த
தென்றலார் மணங்கமழுந் திருவா ரூரில்
திருமூலட் டானத்தேஞ் செல்வன் தானே. 7

307 பொன்னலத்த நறுங்கொன்றைச் சடையி னுன்காண்
புகலூரும் பூவணமும் பொருந்தி னுன்காண்
மின்னலத்த நுண்ணிடையாள் பாகத் தான்காண்
வேதியன்காண் வெண்புரிநூல் மார்பி னுன்காண்
கொன்னலத்த மூவிலைவேல் ஏந்தி னுன்காண்
கோலமா நீறணிந்த மேனி யான்காண்
செந்நலத்த வயல்புடைசூழ் திருவா ரூரில்
திருமூலட் டானத்தேஞ் செல்வன் தானே. 8

306. "நம்" என்றது, அனைவரையும் உளப்படுத்து. மின் திகழும் - மின்னல்போல விளங்குகின்ற. ஆதி - முதல்வன். துன்று - நெருங்கிய. ஆர் மணம் - நிறைந்த வாசனை. 'சூழ்ந்த ஆரூர்; கமழும் ஆரூர்' எனத் தனித்தனி முடிக்க.

307. பொன் நலத்த - பொன்னினது அழகை உடைய. வேதியன் - வேதம் ஓதுபவன். கொன் - அச்சத்தைத் தருகின்ற. நலத்த-நன்மையையுடைய. உயிர்களது பாவத்தை அழித்தலின், 'நன்மையுடைய மூவிலைவேல்' என்றருளினர்; "கொன்றது வினையைக் கொன்று நின்றஅக் குணம்என் றோரார்" (சிவஞான சித்தி. சூ. 1. 71.) என்றது காண்க. கோலம் - அழகு. மாநீறு - பெருமை உடைய நீறு. 'அழகாக அணிந்த' என்றலுமாம். 'செவ்வயல், நலத்தவயல்' என இயையும். செம்மண் விளைவை மிகத் தருவதாம். நலத்த - வளமுடைய.

Koviloor Digital Library

308 விண்டவர்தம் புரமூன்று மெரிசெய் தான்காண்
வேலைவிட முண்டிருண்ட கண்டத் தான்காண்
மண்டலத்தில் ஒளிவளர விளங்கி னான்காண்
வாய்மூரும் மறைக்காடும் மருவி னான்காண்
புண்டரிகக கண்ணானும் பூவின் மேலைப்
புத்தேளுங் காண்பரிய புராணன் தான்காண்
தெண்டிரைநீர் வயல்புடைசூழ் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. 9

309 செருவளருஞ் செங்கண்மா லேற்றி னான்காண்
தென்னானைக் காவன்காண் தீயில் வீழ
மருவலர்தம் புரமூன்று மெரிசெய் தான்காண்
வஞ்சகர்பா லணுகாத மைந்தன் தான்காண்
அருவரையை யெடுத்தவன்தன் சிரங்கள் பத்தும்
ஐந்நான்கு தோளுநெரிந் தலற அன்று
திருவிரலால் அடர்த்தவன்காண் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே. 10

திருச்சிற்றம்பலம்

308. விண்டவர் - நீங்கியவர்; பகைவர். வேலை - கடல். மண்டலம், சூரியனும் சந்திரனும்; அவைகளில் ஒளிவிளங்குதல், இறைவன் திருவுள்ளத்தினாலே என்றவாறு. இனி, ‘ மண்தலம் ’ எனப் பிரித்து, ‘ மண்ணுலகத்தில் ’ என்றுரைத்தலுமாம். “ மேலை ” என்பதில், ‘ ஐ ’ சாரியை. புராணன் - பழையோன்.

309. செரு - போர். “ செரு வளரும் ” என்றது, இன அடை. மால் - பெரிய ; ‘ மாயோன் ’ என உரைப்பினுமாம். மருவலர் - பகைவர். மைந்தன் - வலிமையுடையவன். வஞ்சகத்தில் அகப்படாமைக்கும் வன்மை வேண்டும் என்க. அருவரை - பெயர்த்தற்கரிய மலை, திருக்கயிலை.

Koviloor Digital Library

31. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றினை 28 ஆம் திருப்பதிக வரலாற்றிற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

310 இடர்கெடுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டோளிசேர் கங்கைச் சடையா யென்றும்
சுடரொளியா யுள்விளங்கு சோதீ யென்றுந்
தூநீறு சேர்ந்திலங்கு தோளா வென்றும்
கடல்விடம துண்டிருண்ட கண்டா வென்றுங்
கலைமான் மறியேந்து கையா வென்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 1

இத்திருப்பதிகம் நெஞ்சிற்கு அறிவுறுத்தலாக உயிர்க்கு உறுதியாவனவற்றை அருளிச்செய்தது.

310. இடர் கெடும் ஆறு - துன்பம் ஒழியும் வகையை. எண்ணுதியேல் - ஆராய்வையாயின்; 'நீ வா' என்பது, 'யான் சொல்வதைக் கேள்' என்னும் பொருள்பயப்பதொரு வழக்கு. 'ஈண்டு அலறு நில்' என இயையும். 'ஈண்டு ஒளி' என்று இயைத்து, 'மிக்க ஒளியினையுடைய' என் றுரைத்தலும் ஆம். 'சுடர் ஒளி', வினைத்தொகை; 'ஒருகாலைக் கொருகால் மிக்கெழுகின்ற ஒளி' என்பது பொருள். உள் - உயிருக்குள். 'சோதி' என்பது, அதனையுடைய பொருள்மேலாகி வாளா பெயராய் நின்றது. உயிரது அறியாமை நீங்குந்தோறும், இறைவன் அதனுள் அறிவு வடிவாய் நிறைந்து நிற்றல் வெளிப்பட்டு வருதலின், "சுடர் ஒளியாய் உள்விளங்கு சோதி" என்று அருளிச்செய்தார். கலை மான் - ஆண் மான். மறி - கன்று. "என்றென்று" என்பதன் பின், 'சொல்லி' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. அடுக்கு, பல்கால் அழைத்தலைக் குறித்தது. நில் - ஒழுகு. "அலறு நில்" என்னும் நிகழ்காலச் சொல்

Koviloor Digital Library

இடைவிடாமையை விதித்தற்பொருட்டாய் நின்றது. இறுதியில், 'இதுவே இடர்நீங்கும் வழியாகும்' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. இவை பின்வருகின்ற திருப்பாடலக்கட்கும் ஒக்கும். எண்ணத்தின் பின்னதே சொல்லாகலின், 'இவ்வா றெல்லாம் எண்ணி' என்பது முன்னரே முடிந்தது. 'உலகியலை நினையாது, இறைவனது அருள்நிலைகளையே நினைந்தும், சொல்லியும், பணிந்தும் ஒழுகுவார்க்கே துன்பம் அடியோடு ஒழிவதாகும்' என்பது கருத்து. "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்-மனக்கவலை மாற்றலரிது" (குறள். 7.) என எதிர்மறை முகத்தான் உணர்த்தியதுணர்க.

இடர்தான், 'பேரிடரும், சிற்றிடரும்' என இருவகைத்து. பேரிடர், கட்டுநீங்காதார்க்கு வினைகளான் இடையறாது வருவன; சிற்றிடர், கட்டு நீங்கினவர்க்கு முன்னைப் பழக்கத்தால் நிகழும் மறதியான் ஒரோவழி வருவன; இவ்விருவகை இடர்களுக்கும் காரணமான கட்டும், கட்டுள்நின்ற பழக்கமும் நீங்குதல் இறை பணியால் அல்லது இன்மையின், பொதுப்பட, "இடர்" என அருளிச்செய்தார். கட்டு நீங்காதார் செய்யும் பணி அறிவுப் பணியும், கட்டு நீங்கினார் செய்யும் பணி அன்புப் பணியும் ஆகும். என்னையெனின், அவர் முறையே, 'இடர் கெடுமாறு இதுவே' என்று அறிந்த அறிவு காரணமாகவும், "இடர் களையாரேனும் எமக்கு இரங்கா ரேனும் - படரும் நெறி பணியா ரேனும்" (அம்மை திருவந்தாதி. 2.) இப் பணிதானே எமக்கு இன்பமாவது என்னும் அன்பு காரணமாகவும் செய்தலான் என்க. இப்பணியினைச் சிவாகமங்கள், 'சரியை, கிரியை, யோகம் ஞானம்' என நான்காக வகுத்து, 'கீழ்உள்ளவர்கள் மேலனவற்றிற்கு உரியரல்லர்; மேலுள்ளவர்கள் கீழ்உள்ள வற்றிற்கும் உரியர்; ஆகவே, ஞானிகள் மேற்சொல்லிய நான்கிற்கும் உரியர்' எனக் கூறும். இதனை,

"ஞானயோ கக்கிரியா சரியை நாலும்
நாதன்றன் பணி; ஞானி நாலினுக்கும் உரியன்;
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி;கிரி யாவான்றான் ஓண்கிரியை யாதி
யானஇரண் டினுக்குரியன்; சரியையினில் நின்றோன்
அச்சரியைக் கேயுரியன்"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் நன்குணர்க. (சூ - 12. 5.) இந் நால்வருள் ஞானிகள்தம் பணி அன்புப் பணி

Koviloor Digital Library

311 செடியேறு தீவினைகள் தீரும் வண்ணஞ்
சிந்தித்தே னெஞ்சமே திண்ண மாகப்
பொடியேறு திருமேனி யுடையா யென்றும்
புரந்தரன்றன் தோள்துணித்த புனிதா வென்றும்
அடியேனை யாளாகக் கொண்டா யென்றும்
அம்மானே ஆரூரெம் மரசே யென்றும்
கடிநாறு பொழிற்கச்சிக் கம்பா வென்றுங்
கற்பகமே யென்றென்றே கதறு நில்லே. 2

என்றும், மற்றையோர் பணி அறிவுப் பணி என்றும் கொள்க. இதனால், கட்டுற்று நின்றார்க்கேயன்றி, கட்டு நீங்கி வீடு பெற்றார்க்கும் இறைபணி இன்றியமையாததாதல் தெற்றென உணர்ந்துகொள்ளப்படும். செல்வமுற்றாரும், தமக்கு ஒரோ வழி வரும் சிறு துன்பத்தையும் பெருந் துன்பமாக நினைத்து வருந்துதல்போல, வீடு பெற்றாரும் ஒரோவழித் தமக்கு மறப்பினால் தோன்றும் சிறிது இடரினையும் பேரிடராக நினைந்து வருந்துவர்; அதனை ஆங்காங்கு அறிந்துகொள்ளலாகும். இறைபணியின் பெருமை யுணர்த்துவனவே திருப்பதிகங்களுட் பெரும்பாலனவாயினும், அவற்றுள் இத்திருப்பதிகம், அஃதொன்றனையே கிளந்தெடுத்துத் தெள்ளத் தெளிய இனி துணர்த்தும் சிறப்புடையது என்க. எனவே, இத் திருப்பதிகம், சிவநெறிக்கு இன்றியமையாச் சிறப்புடைத்தாதல் இனிது விளங்கும்.

311. செடி - துன்பம். 'சிந்தித்தியேல்' என்பது தொகுத்த லாயிற்று. 'நான் சிந்தித்தேன்; சிந்தித்து இது கண்டேன்' என்றுரைத்தலுமாம். 'சிந்தித்தே நெஞ்சமே' என்னும் பாடத்திற்கு, 'சிந்தித்து என்றென்று கதறுநில்' என உரைக்க. திண்ணமாக - ஒருதலைப்பட்ட மனத்துடன். புரந்தரன் - இந்திரன். "இந்திரனைத் தோள் நெரித்திட்டு" (திருவாசகம். அம்மானை. 15) எனவும், "புரந்தரனார்ஒரு பூங்குயி லாகி - மரந்தனி லேறினார்" (டி. உந்தியார் 9.) எனவும் அருளிச்செய்ப வாகலான், தக்கன் வேள்வியில், 'இந்திரன் தோள் நெரிக்கப் பட்ட பின்னர்க் குயிலாகி ஓடி ஒளிந்து பிழைத்தான்' என்க. அடியேனை 'ஆளாகக் கொண்டாய்' என்றது, இயல்பாகவே அடிமையாய் உள்ள என்னை, அத்தன்மையேனாதலைத் தெளிவித்துப் பணி புரிவித்துக்கொண்டாய்' என்றவாறு. இதனால், இனிக் கூறுவன அன்புப் பணியாதல் அறிந்துகொள்ளப்படும். கற்பகம், வேண்டுவார் வேண்டுவதை ஈயும்.

Koviloor Digital Library

312 நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 3

313 புண்ணியமும் நன்னெறியும் ஆவ தெல்லாம்
நெஞ்சமே யிதுகண்டாய் பொருந்தக் கேள்நீ
நுண்ணியவெண் ணூல்கிடந்த மார்பா என்றும்
நுந்தாத வொண்சுடரே யென்றும் நாளும்
விண்ணியங்கு தேவர்களும் வேதம் நான்கும்
விரைமலர்மேல் நான்முகனும் மாலுங் கூடி
எண்ணரிய திருநாம முடையா யென்றும்
எழிலாரூ ராவென்றே ஏத்தா நில்லே. 4

312. நிலைபெறுதல் - அலமரல் ஒழிதல். 'மெழுகு' என்னும் வினைமுதனிலை, 'மெழுக்கு' எனத் திரிந்து பெயரா யிற்று, 'ஒழுகு' முதலியன 'ஒழுக்கு' முதலியனவாகத் திரிந்துநிற்றல்போல. தலைஆர - தலைநிரம்ப. தலை, வணங்குத லாலேயன்றி அதன்மேல் கையைக்குவித்தலாலும் இன்புறும் என்க. "தலையினாற் கும்பிட்டு" எனவும் பாடம் ஓதுவர். "மெழுக்கும், கூத்தும்" என்னும் உம்மைகள், இறந்தது தழுவின. சய - வெல்க. அலை புனல், வினைத்தொகை.

313. 'புண்ணியத்திற்கு வாயில் நன்னெறி' என்க. நுந்தாத - தூண்ட வேண்டாத; எஞ்ஞான்றும் ஒரு தன்மை யாய் ஒளிவிடும். 'நொந்தாத' என்பதே, 'அவியாத' எனப் பொருள் தரும். கூடி எண்ணரிய - ஒருங்குகூடி எண்ணி அளவிடுதற்கரிய.

Koviloor Digital Library

314 இழைத்தநா ளெல்லை கடப்ப தென்றால்
இரவினொடு நண்பகலு மேத்தி வாழ்த்திப் [றும்
பிழைத்ததெலாம் பொறுத்தருள்செய் பெரியோய் என்
பிஞ்ஞகனே மைஞ்ஞவிலுங் கண்டா என்றும்
அழைத்தலறி அடியேனுன் னரணங் கண்டாய்
அணியாரூர் இடங்கோண்ட அழகா என்றும்
குழற்சடையெங் கோனென்றுங் கூறு நெஞ்சே
குற்றமில்லை யென்மேல்நான் கூறி னேனே. 5

315 நீப்பரிய பல்பிறவி நீக்கும் வண்ணம்
நினைந்திருந்தேன் காண்நெஞ்சே நித்த மாகச்
சேப்பிரியா வேல்கோடியி னானே யென்றும்
சிவலோக நெறிதந்த சிவனே யென்றும்

314. இழைத்தநாள் எல்லை - இவ்வுடம்பொடு கூடி வாழ்வதற்கு வரையறுத்த நாட்களின் அளவு. ‘அவைகளைப் பிறவிக்கு வித்தாகாத வகையில் கடப்பதென்றால்’ என்க. “பிழைத்தது”, பன்மையொருமை மயக்கம். ‘பிழைத்தவெலாம்’ என்பதே பாடம்போலும். “ஞவிலும்”, உவம உருபு; ‘நவிலும்’ என்பதன் போலி; ‘என்ற’ என்பதோர் உவம உருபுண்மையறிக. அரணம் - பாதுகாப்பு; அது காக்கப்படும் பொருளைக் குறித்தது. ‘என்மேல் குற்றமில்லை’ என மாறி இறுதிக்கண் கூட்டுக. அறியாதார்க்கு, அறிந்தார் கூறுதொழியிற் குற்றமாமாகலான், ‘நான் கூறினேன்; (அதனால்) என்மேல் (இனிக்) குற்றம் இல்லை; (இனி நீ அது செய்யாதொழியின் குற்றம் உன்மேலதே) என்றவாறு. இதனை, அஃது ஒருதலையாகச்செயற்பாலதாதல் அறிக.

315. நீப்பு - நீத்தல்; விடுதல். இருந்தேன் - நெடிது நேரம் இருந்தேன்; ‘இருந்து இது கண்டேன்’ என்க. காண், அசைநிலை. நித்தம் ஆக - நாள்தோறும் நிகழ; சிந்தி என்க. சே - எருது. தந்த - உலகிற்குச் சொல்லிய. ‘சிவன்’ என்பதற்கு, ‘மங்கலம் உடையவன்’ என்பது பெரும்பான்மையாகப் பலவிடத்தும்கூறப்படும் பொருள். ‘பேரின்பத்துக்குக் காரணன், முற்றுணர்வினன், தூய தன்மையன், உலகெலாம் ஒடுங்கிக் கிடத்தற்கு இடமாய் இருப்பவன், நல்லோரது உள்ளங்கள் பதிந்துகிடக்க நிற்பவன், அறியாமையை மெலிவித்து அறிவை

Koviloor Digital Library

பூப்பிரிய நான்முகனும் புள்ளின் மேலைப்
புண்டரிகக் கண்ணனும் போற்றி யென்னத்
தீப்பிழம்பாய் நின்றவனே செல்வ மல்குந்
திருவாரூ ராவென்றே சிந்தி நெஞ்சே 6

316 பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்று நில்லே. 7

மிகுவிப்பவன், உயிர்களை வசீகரிப்பவன்' என்னும் பொருள்களும் கூறுவர். இனி 'சிவ' என்னும் முதனிலை யடியாகப் பிறந்த தமிழ்ச் சொல்லாகவும் கொண்டு பொருளுரைப்பர். இப்பொருள்களை இவ்விடத்தும் பிறவிடத்தும் ஏற்ற பெற்றியாற் கொள்க. புள் - கருடன். 'மேலை' என்பதில் 'ஐ' சாரியை.

316. "வேண்டில்" மூன்றும் வினைச் செவ்வெண். ஆகவே, அவற்றின்பின் உம்மை கொடுத்துப் பொருளுரைத்துக் கொள்க. பாற்றுதல் - அழித்தல். பரிசு - தன்மை; தகுதி. பாவம் நீங்கினால் உலகத்துன்பங்கள் மட்டுமே நீங்கும்; பிறவித் துன்பம் நீங்காது; அது நீங்கவேண்டில் இருவினையையும் வீழ்த்துதல் வேண்டும். அவ்வினைகள் உயிரைப் புறஞ்செல்ல ஒட்டாது வளைத்துக்கொண்டு நிற்றலின், "சுற்றிநின்ற சூழ் வினைகள்" என்றருளிச்செய்தார். சுற்றிநிற்றல் வளைத்து நிற்றலாகவும், சூழ்தல் பலவாக மொய்த்து நிற்றலாகவும் கொள்க. "வேண்டில்" என்பதனை. "துஞ்சாவண்ணம்" என்பதனோடுங் கூட்டி, மேலனவற்றோடு கூட்டுக. 'அவைகளுக்குரிய வழியைச் சொல்லுகேன்' என்க. துஞ்சுதல் - இறத்தல்; இறந்தால் பிறத்தல்வேண்டும் என்க. இவ்வுலகிலே வீட்டின்பத்தைப் பெற்று நின்று, உடம்பு நீங்கப்பெற்றார், கால வயப்பட்டு இறந்தாரல்லரென்க. 'கூற்றம் குதித்தார்' (குறள் - 269.) எனப்படுவோர் இவரே யாவர். உற்றவர் - உறவினர். உறுதுணை - சிறந்த நட்பினர். உள்கேன் - நினையேன். "புற்றரவம்" என்றது. இனம்பற்றி.

Koviloor Digital Library

317 மதிதருவன் நெஞ்சமே உஞ்சு போக
வழியாவ திதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
அதிபதியே ஆரமுதே ஆதீ யென்றும்
அம்மானே ஆரூரெம் ஐயா வென்றும்
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே கால காலா
கற்பகமே யென்றென்றே கதறா நில்லே. 8

318 பாசத்தைப் பற்றறுக்க லாகு நெஞ்சே
பரஞ்சோதி பண்டரங்கா பாவ நாசா
தேசத் தொளிவிளக்கே தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானா வென்றும்
நேசத்தை நீபெருக்கி நேர்நின் றுள்கி
நித்தலுஞ் சென்றடிமேல் வீழ்ந்து நின்று
ஏசற்று நின்றிமையோ ரேறே யென்றும்
எம்பெருமா னென்றென்றே யேத்தா நில்லே. 9

317. மதி தருவன் - (உனக்கு நான்) அறிவு தருவேன்; 'கேள்' என்க. இது, தன்மை வினைமுற்று. "உய்ந்து" என்பது 'உஞ்சு' என மருவிற்று. பதி - தலைவன். இது மிகுதி உணர்த்தும், 'அதி' என்னும் இடைச்சொல்லடுத்து. 'அதிபதி' என வந்தது. துன்று - நெருங்கிய. சூழும் - சுற்றிலும்; 'சூழ்வ தாகிய வலம்' என்றலுமாம். தொண்டு-(அடியவரது) தொண்டு; அது காரிய ஆகுபெயராய் அதற்கு அவன் செய்த அருளைக் குறித்துநின்றது. கதிர், வெள்ளொளி.

318. "பாசத்தைப் பற்றறுக்கலாகும்" என்பதை ஈற்றில் வைத்துரைக்க. பண்டரங்கன் - 'பாண்டரங்கம்' என்னும் கூத் துடையவன். "பாண்டரங்க மாடுங்கால்" (கலித்தொகை. கடவுள்வாழ்த்து) என்றது காண்க. தேசம் - உலகம்; அஃது உயிர்களைக் குறித்தது. உயிர்கட்கெல்லாம் ஒரு விளக்குப் போன்றவன் இறைவன் என்க. நேர்நின்று - அவன் அருள்வழி நின்று. 'பெருக்கி, உள்கி வீழ்ந்து நின்று, ஏசற்றுநின்று என்பவற்றை, "நெஞ்சே" என்பதன் பின்னர் வைத்துணர்க. ஏசற்று நின்று - கூசி நின்று. "என்றென்று" என்புழியும் உம்மை விரிக்க. "எம்பெருமான்" என்பது, அன்பு மீதூர்வாற்

Koviloor Digital Library

319 புலன்கள் ஐந்தால் ஆட்டுண்டு போது போக்கிப்
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே
சலங்கொள்சடை முடியுடைய தலைவா என்றும்
தக்கன்சேய் பெருவேள்வி தகர்த்தா யென்றும்
இலங்கையர்கோன் சிரம்நெரித்த இறைவா என்றும்
எழிலாரூ ரிடங்கொண்ட எந்தா யென்றும்
நலங்கொளடி யென்தலைமேல் வைத்தா யென்றும்
நாடோறும் நவின்றேத்தாய் நன்மை யாமே. 10

திருச்சிற்றம்பலம்

சொல்லப்படுவதாகலின், அஃது ஒன்றனையும் பல்காற் சொல்லுக என்றருளினர்.

319. போது போக்கி - பொழுதைக் கழித்து. புறம் புறம் - மிகச் சேயதான இடம். திரியாதே போது - அலையாமல் என் பக்கல் வா; என்றது, 'யான் சொல்வதைக் கேள்' என்றபடி நன்மை ஆம் - (துன்பம் நீங்கி) இன்பம் உண்டாகும். "என் றென்று" என மேலெல்லாம் அருளிச்செய்ததனை, இங்கு "நாடோறும் நவின்றேத்தாய்" என்றருளிச்செய்தார். தமது தலையை, நெஞ்சின் தலைபோல அருளிச்செய்தார்.

செஞ்சடைக்கற் றைமுற்றத் திளநிலா வெறிக்குமெனுஞ்
சிறந்த வாய்மை
யஞ்சொல்வளத் தமிழ்மாலை யதிசயமாம் படிபாடி
யன்பு சூழ்ந்த
நெஞ்சுருகப் பொழிபுனல்வார் கண்ணிணையும் பரவியசொன்
னிறைந்த வாயுந்
தஞ்செயலி னொழியாத திருப்பணியு மாருது
சாரும் நாளில். 176

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

32. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

நாயனார் பெருவேளூர், திருவிளமர் வணங்கித் திருவாரூரில் தொண்டர்கள் எதிர்கொள்ளத் திருவீதி வலம் வந்து தேவாசிரியன் வணங்கிப் புற்றிடங்கொண்டாரைக் கண்டு தொழுது பாடியருளிய திருப்பதிகம் இது. பாடலின் தொடர் தோறும் போற்றி போற்றி என்று வருவதால் இது போற்றித் திருத்தாண்டகம் என வழங்கப்படுகின்றது. (திருநாவுக். பு. 222.)

போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

320 கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி

320. கற்றவர்கள் - மெய்ப்பொருளை வரலாற்று முறையின் வந்த நல்லாசிரியர்கள்பால் உணர்ந்தவர்கள். கேள்வியுணர்வின் பின்னரே தலைப்பட்டுணரும் உணர்வு நிகழற்பாலதாகலின், இறைவனை, கற்றவர்கள் உண்ணும் கனியாக அருளிச் செய்தார். "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை" (திருவிசைப்பா. 5 - 2.) என்றருளினமையுங் காண்க. "விழுங்கும் கனி" என்றது, "காழில் கனி" (திருக்குறள். 1191.) என்றது போல, முழுவதூஉம் சுவையுடைய கனியென்றவாறு. இங்கு, "உண்ணும்" என்றதற்கும் அதுவே பொருளென்க. இறைவனைப் புகலிடமாக அடைந்தார்க்குப் பயனும் அவனேயாகலின், "கழலடைந்தார் செல்லுங் கதி" என்றருளினார். அற்றவர் - பிறிதொரு பற்றும் இல்லாதவர். மைந்தன் - வலிமையுடையவன். 'பிறர் ஒருவர்க்கும் இல்லாத வலிமை யுடையவன்' எனவே, அவனது, 'முடிவிலாற்றல்' என்னும் அருட் குணத்தினை வியந்தவாறாயிற்று. மருந்து - சாவா மருந்து; அமுதம். 'அமுதுண்ணுதலில் விருப்பமுடையவராய வானவர்களுள்

Koviloor Digital Library

மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 1

321 வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 2

322 மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி

மெய்யுணர்வுடையோர், இறைவனையே உண்மை அமுதமாக உணர்ந்து போற்றுவர்' என்றபடி. செற்றவர் - பகைத்தவர்.

321. வங்கம் மலி கடல் - மரக்கலங்கள் நிறைந்த கடல். ஈர் உரிவை - உரித்த தோல். கொங்கு - தேன்; தேனொடு அலரும் என்க. அம் கண்ணன் - அழகிய கண்களையுடையவன். கண்ணுக்கு அழகாவது, கருணை. "கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்" (குறள். 575.) என்றருளியவர், பெயக்கண்டு நஞ்சுண் டமைதலையே கண்ணோட்டத்துக்கு எல்லையாக அருளிச் செய்தார் (ஷை - 580.) ஆகலின், அது செய்த சிவபிரான் ஒருவனையே 'அங்கணன்' என்றல், ஆன்றோர் மரபாயிற்று. அமரர்கள்தம் இறைவன் - தேவர்க்குத் தேவன்.

322. மழ விடை - இளைதாகிய இடபம். இலை ஆர்ந்த - தகட்டுநிலை பொருந்திய. மூவிலை - மூன்று கவட்டினையுடைய, ஏழ்கடல், 'உவர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல்.

Koviloor Digital Library

இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மாஞய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 3

323 பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மாஞய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கோருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 4

324 நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி

கருப்பஞ்சாற்றுக் கடல், மதுக் கடல், நன்னீர்க் கடல்' என்பன. ஏழ் பொழில் - ஏழு தீவு; அவை, 'சம்புத் தீவு, சாகத் தீவு, குசத் தீவு, கிரௌஞ்சத் தீவு, சான்மலித் தீவு, கோமேதகத் தீவு, புட்கரத் தீவு' என்பன.

323. பொன் இயலும் - பொன்போல விளங்கும். மறி - மான் கன்று. உன்னுதல் - அன்பால் நினைத்தல். உண்மையன் - உள்பொருளாகின்றவன்; அஃதாவது, அவர் நினைத்த பயனைத் தருபவன். ஒருவன் - முழுமுதல்; பிறரெல்லாம் ஒவ்வொரு கூற்றில் முதன்மையுடைய பல ஏவல் தொழிலினராக, தான் எல்லா முதன்மையும் உடைய ஒரு பெருந்தலைவனுய் இருப்ப வன் என்றவாறு.

324. நற்றவன் - ஞானயோக வடிவினன்; அவ்வடிவு மோன முத்திரைக் கையினுன் மெய்ம்மையுணர்த்தும் தென்முகக் கடவுள் வடிவென்க. வெஞ்சுடரோன் - பகலவன். துஞ்சு இருள் - எல்லாம் ஒடுங்கிய இருள். இந்நிலையில் ஆடுதல், மீளப்

Koviloor Digital Library

துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 5

325 சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 6

326 வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி

படைத்தற்குரியவற்றைச் செய்தலாகும். இதுவே, 'சூக்கும நடனம்' எனவும், 'சூக்கும ஐந்தொழில்' எனவும் சொல்லப் படும். தூநீறு, ஒடுங்கிய பொருள்களின் ஆற்றல் வடிவினையும், அதனை மெய்யின்கண் பூசிக்கொள்ளுதல், அவற்றிற்குத் தானே பற்றுக்கோடாதலையும் குறிக்கும்.

325. சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். 'சதாசிவன்' என்பதும் சிவனுக்கு ஒரு பெயர். பொங்கு அரவன் - மிக்க பாம்புகளை அணிந்தவன். புண்ணியன் - அறவடிவினன். இத் திருப்பாடல் முழுவதும் உயிர்களது தலைமேல் தங்கும் இயல் புடைமைபற்றிச் சிறப்பு வகையில் திருவடிக்கே வணக்கங் கூறிய தாதல் அறிக. "திருமூலட்டானனே" என்றதனைத் தாப்பிசை யாக, "செங்கமலத் திருப்பாதம்" என்றதற்கு முன்னேயுங் கூட்டி, 'நின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

326. வம்பு - வாசனை. வான் - வானத்திற் செல்லுந் தன்மையுடைய. வாளரவு - கொடிய பாம்பு. "வைத்தாய்"

Koviloor Digital Library

நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானுய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 7

327 உள்ளமா யுள்ளத்தே நின்ருய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணுளா போற்றி
வானவர்கோன் தோள் துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 8

328 பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கோத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 9

என்றது, 'பகைதீர்ந்து வாழ வைத்தாய்' என்னுங் குறிப்புடையது. நம்புதல் - விரும்புதல். அரும்பொருளாதலாவது, பயனுல், 'கிடைத்தற்கரியது கிடைக்கப்பெற்றேம்' என உணரப் படுதல்.

327. உகப்பார் - விரும்புவார். மணுளன் - நாயகன். விகிர்தன் - உலகியலுக்கு வேறுபட்டவன். வானவர்கோன் தோள் துணித்த வரலாற்றை மேலே (பக். 228) காண்க. மேலோர் - தேவர். அவர்க்கு மேலோர், அயனும் மாலும்.

328. பூ, கொன்றை மத்தம் முதலியன. தேவார்ந்த - தெய்வத்தன்மை பொருந்திய. "தேவர்" என்றது வாளா பெயராய் நின்றது. சதுரன் - திறமையுடையவன். சே - எருது.

Koviloor Digital Library

329 பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
யன்றரக்கன் ஐஞ்நான்கு தோளுந் தாளுஞ்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 10

திருச்சிற்றம்பலம்

329. பெண்ணுருவோடு ஆண் உருவாய் நிற்றலை, அவனது திருமேனியிலும், உலகிலும் கொள்க. ஆற்ற - மிகவும். 'அருமருந்த' என்பது இடைக் குறைந்து நின்றது. 'அமுதத்தை உடைய' என்பது பொருள். "சிரம்" என்புழியும் உம்மை விரிக்க; 'சிரத்தொடு' என ஒடு உருபு விரிப்பினும் ஆம்.

கடையுகத்தி லாழியின்மேன் மிதந்ததிருக் கழுமலத்தி
னிருந்த செங்கண்
விடையுகைத்தார் திருவருளால் வெற்பரையன் பாவைதிரு
முலைப்பா லோடும்
அடையநிறை சிவம்பெருக வளர்ஞானங் குழைத்தூட்ட
வமுது செய்த
உடையமறைப் பிள்ளையார் திருவார்த்தை யடியார்க
ளுரைப்பக் கேட்டார். 177

ஆழிவிட முண்டவரை யம்மைதிருப் பாலமுத
முண்ட போதே
யேழிசைவண் டமிழ்மாலை யிவனெம்மா னெனக்காட்டி
யியம்ப வல்ல
காழிவரும் பெருந்தகைசீர் கேட்டலுமே யதிசயமாங்
காதல் கூர
வாழியவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு மனத்தெழுந்த
விருப்பு வாய்ப்ப. 178

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

33. திருவாரூர் அரநெறி

திருப்பதிக வரலாறு

வாகீசர் திருவாரூர்ப் புற்றிடங்கொள் நிருத்தரைக் காலங்களில் கும்பிட்டுப் பதிகம் பல பாடி, திருவாரூரரனெறியிற்றிகழும் பரமரைப் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 227.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

330 போருங்கைமத கரியுரிவைப் போர்வை யானைப்
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தி ஞானைக்
கரும்புதரு கட்டியையின் னமிர்தைத் தேனைக்
காண்பரிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை
இருங்கனக மதிலாரூ மூலட் டானத்
தெழுந்தருளி யிருந்தானை யிமையோ ரேத்தும்
அருந்தவனை அரநெறியி லப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினைநோய் அறுத்தவாறே.

'அரநெறி' என்பது, திருமூலட்டானத்திற்கு வேறாய், அத்திருக்கோயிலுள்ளே யிருக்கும் மற்றொரு தலம். 'அரநெறி' எனினும், 'சிவநெறி' எனினும் ஒக்கும். 'அரத்துறை' என்பதொரு தலம் உண்மையும் உணர்க. 'அரனது நெறியை யடைவிக்கும் தலம்' என்பது பொருள்.

சதாசிவச் செட்டியார் அவர்கள் பதிப்பில் இது 34-ம் திருப்பதிகமாகக் காணப்படுகின்றது.

330. 'பொருங் கரி, கைக்கரி, மதகரி' எனத் தனித்தனி முடிக்க. பொரும் - போர் செய்கின்ற. 'கைக் கரி' என்பதில், 'கரி' என்பது வாளா பெயராய் நின்றது; 'கரத்தை உடையது' என்னும் பொருளுடைய வடசொல் விலங்குகளுள் கையுடைத்தாதல்பற்றி, யானையைக் குறிப்பதாயிற்று. தமிழிலும், 'கைம் மா' என்பர். இன்னும் 'களிறு' எனக் கூறுமிடத்தும்,

Koviloor Digital Library

331 கற்பகமும் இருசுடரு மாயி னானைக்
காளத்தி கயிலாய மலையு ளானை
விற்பயிலும் மதனழிய விழித்தான் தன்னை
விசயனுக்கு வேடுவனாய் நின்றான் தன்னைப்
பொற்பமரும் பொழிலாரூர் மூலட் டானம்
பொருந்தியஎம் பெருமானைப் பொருந்தார் சிந்தை
அற்புதனை அரநெறியி லப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே.

332 பாதியொரு பெண்முடிமேற் கங்கை யானைப்
பாசூரும் பரங்குன்றும் மேயான் தன்னை
வேதியனைத் தன்னடியார்க் கெளியான் தன்னை
மெய்ஞ்ஞான விளக்கானை விரையே நாறும்
போதியலும் பொழிலாரூர் மூலட் டானம்
புற்றிடங்கொண் டிருந்தானைப் போற்றுவார்கள்
ஆதியனை அரநெறியில் அப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே.

'கைக் களிறு' என்பர். 'பூவணம், பாண்டி நாட்டுத் தலம். வலஞ்சுழி, சோழநாட்டுத் தலம். 'இரு மதில்' என இயைக்க. இரு - பெரிய. அருந் தவன் - அரிய தவ வடிவினன். அருவினை - நீக்குதற்கரிய வினை. 'வினையாகிய நோய்' என்க. 'அறுத்த வாறு நன்று' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

331. 'காளத்தி, கயிலாயம்' என்னும் சிறப்புப் பெயர்கள் உம்மைத் தொகையாய்ப் பின் பண்புத் தொகையாகி 'மலை' யென்னும் பொதுப்பெயரைச் சிறப்பித்து நின்றன. வில் - விற்றொழில். மதன் - மன்மதன். 'அற்புதம்' என்றது, சூனியம் என்னும் பொருட்டாய் நின்றது; இஃது இப்பொருளதாதலை, "அற்புதம்போல் ஆனா அறிவாய்" (சிவஞானபோதம் - சூ. 9. அதி. 2) என்புழியுங் காண்க.

332. 'பாதி' என்பது அவ்வளவையுடைய உடம்பைக் குறித்தது. 'பாதிக்கண்' எனவும், 'பெண்ணொடு' எனவும், உருபுகள் விரித்து, ஒடுவை, 'கங்கையான்' என்னும் வினைக் குறிப்புப்பெயரோடு முடிக்க. பாசூர், தொண்டைநாட்டுத் தலம்.

Koviloor Digital Library

333 நந்திபணி கொண்டருளும் நம்பன் தன்னை
நாகேச் சரமிடமா நண்ணி னானைச்
சந்திமல ரிட்டணிந்து வானோ ரேத்துந்
தத்துவனைச் சக்கரம்மாற் கீந்தான் தன்னை
இந்துநுழை பொழிலாரூர் மூலட் டானம்
இடங்கொண்டபெருமானையிமையோர்போற்றும்
அந்தணனை அரநெறியில் அப்பன் தன்னை
யடைந்தடியேன்அருவினைநோய்அறுத்த வாறே.

334 சுடர்ப்பவளத் திருமேனி வெண்ணீற் றானைச்
சோதிலிங்கத் தூங்கானை மாடத்தானை
விடக்கிடுகா டிடமாக வுடையான் தன்னை
மிக்கரண மெரியூட்ட வல்லான் தன்னை
மடற்குலவு பொழிலாரூர் மூலட் டானம்
மன்னியவெம் பெருமானை மதியார் வேள்வி
அடர்த்தவனை அரநெறியில் அப்பன் தன்னை
யடைந்தடியேன்அருவினைநோய்அறுத்த வாறே.

பரங்குன்று, பாண்டிநாட்டுத் தலம். வேதியன் - வேதம் ஓதுபவன். விளக்கான் - விளக்காய் உள்ளவன். விரை - வாசனை; பிரிநிலை ஏகாரம் பிறிதொன்றும் இன்மையைக் குறிக்கு முகத்தால், விரையது மிகுதியுணர்த்தி நின்றது. போது இயலும் - பேரரும்புகள் நிறைந்து தோன்றும். 'நாறும் பொழில், இயலும் பொழில்' எனத் தனித்தனிமுடிக்க. ஆதியன் - முதல்வன்; தலைவன்; 'இடர் நீக்கிக் காப்பவன்' என்றல் திருவுள்ளம்.

333. "நந்தி பணி" என்றது, நந்திதேவர் சிவபிரான் திருமுன்பிற் செய்யும் முதற்பெருங் காவலை. நாகேச்சரம் - சோழநாட்டுத்தலம். சந்தி - காலை, மாலை, நண்பகல். தத்துவன் - மெய்ப்பொருளாய் உள்ளவன். இந்து - சந்திரன். உயரத்தால் மீது செல்லாது உள் நுழையற்பாலதாயிற்று. அந்தணன் - அழகிய தட்பத்தினை (கருணையை) உடையவன்; அது, தான் நஞ்சினை உண்டு பிறரைக் காத்தமையானே நன்குணரப்படுவதாகும்.

334. 'பவளம்போலும் திருமேனியில்' என்க. 'சோதி லிங்கம்' எனச் சில உள. திருப்பெண்ணாகடக்கோயில் தூங்கானை

Koviloor Digital Library

335 தாயவனை யெவ்வுயிர்க்குந் தன்னொப் பில்லாத்
தகுதில்லை நடம்பயிலும் தலைவன் தன்னை
மாயவனும் மலரவனும் வானோ ரேத்த
மறிகடல்நஞ் சுண்டுகந்த மைந்தன் தன்னை
மேயவனைப் பொழிலாரூர் மூலட் டானம்
விரும்பியவெம் பெருமானை யெல்லாம் முன்னே
ஆயவனை அரநெறியில் அப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்த வாறே.

மாடமாய் உள்ளது. விடக்கு - இறைச்சிகளை உடைய. இடுகாடு - பிணங்களைப் புதைக்கும் காடு. 'மிக்க' என்பது, ஈறு தொகுத்தலாயிற்று. 'அரண்கள் எல்லாவற்றிலும் மிக்க' என்பது பொருள். மிகுதியாவது, வானில் இயங்குதல். மடல் - பூவிதழ். 'மடல் குலவும்' எனற்பாலது, எதுகை நோக்கித் திரிந்தது. குலவும் - விளங்குகின்ற. இறைவன் வலிமையினும் தக்கன் வலிமைக்கே அஞ்சி அவன் வேள்விக்குச் சென்றமையின், தக்கனேயன்றிப் பிற தேவர்களும் இறைவனை மதியாதவரே யாயினர். வேள்வி தக்கனுடையதேயாயினும், உடன்பட்டு முடிக்கச் சென்ற காரணத்தால், ஏனையோருடையதும் ஆயிற்று. அன்றி, "தக்கனார் அன்றே தலையிழந்தார்" (திருவாசகம். திருவுந்தியார் - 16.) என்றாற்போல, இழித்தற் குறிப்பால் தக்கனை, "மதியாதார்" எனப் பன்மையால் அருளிச்செய்தார் என்றலும் ஆம்.

335. 'எவ்வுயிர்க்கும் தாயவனை (தாய்போல்பவனை)' என்க. "தாயவனை" என்பதில் அகரம் சாரியை, 'தன்னொப் பில்லாத் தலைவன்' என இயையும். "வானோர்" என்புழியும் உம்மை விரிக்க. மறிவன, அலைகள் என்க. மைந்தன் - வல்லாளன். 'ஆரூர் மேயவனை' என மாறுக. மேயவன் - விரும்பியவன். ஆரூரது சிறப்பும், மூலட்டானத்தது சிறப்பும் வகுத்துணர்த்தல் வேண்டி, "மேயவன்", "விரும்பியவன்" எனத் தனித்தனி அருளினார். 'எல்லாம் ஆயவன் என இயையும். முன்னே - அவற்றது தோற்றத்திற்கு முன்பே; அநாதியே. எல்லாம் செயற்படுமாறு அவற்றது செயற்பாட்டிற்கு முன்பே அவற்றின்கண் இறைவன் தங்கினாலன்றி அவை செயற் படுதல் கூடாமையின், "முன்னே ஆயவனை" என்றருளிச் செய்தார்.

Koviloor Digital Library

336 பொருளியல்நற் சொற்பதங் ளாயி னானைப்
புகலூரும் புறம்பயமும் மேயான் தன்னை
மருளியலுஞ் சிந்தையர்க்கு மருந்து தன்னை
மறைக்காடுஞ் சாய்க்காடும் மன்னி னானை
இருளியல்நற் பொழிலாரூர் மூலட் டானத்
தினிதமரும் பெருமானை யிமையோ ரேத்த
அருளியனை அரநெறியி லப்பன் தன்னை
யடைந்தடியேன்அருவினைநோய்அறுத்தவாறே.

337 காலனைக்கா லாற்காய்ந்த கடவுள் தன்னைக்
காரோணங் கழிப்பாலை மேயான் தன்னைப்
பாலனுக்குப் பாற்கடலன் றீந்தான் தன்னைப்
பணியுகந்த அடியார்கட் கினியான் தன்னைச்
சேலுகளும் வயலாரூர் மூலட் டானஞ்
சேர்ந்திருந்த பெருமானைப் பவள மீன்ற
ஆலவனை அரநெறியி லப்பன் தன்னை
யடைந்தடியேன்அருவினைநோய் அறுத்தவாறே.

336. பொருள் இயல் - பொருள் விளங்குதற்கு ஏதுவாகிய. நற்சொல் - புறத்தே இனிதிசைக்கும் சொல்; இதனைச் சிவாகமம் 'வைகரி வாக்கு' என்று கூறும். பதம் - (அச்சொல்லது) நுண் நிலைகள்; அவற்றை, 'மத்திமை, பைசந்தி, சூக்குமை' என மூன்றாகப் பகுத்து, 'வாக்கு நான்கு' என்னும் சிவாகமம். இனி, 'பொருளியல் நற்சொற்பதங்கள், உயர்ந்த பொருள்கள் நிறைந்த நல்ல புகழுடைய உலகங்கள்' என்றலுமாம். புகலூர், புறம்பயம், மறைக்காடு, சாய்க்காடு சோழநாட்டுத் தலங்கள். மருள் இயலும் சிந்தை - தன்னைப் பொருளாக உணராது, பிற வற்றைப் பொருள் என்று உணரும் மயக்கம். அதனைப் பல்லாற் றானும் நீக்கிவருதலின், 'அதற்கு மருந்து' என்றார். இருள், தழைத்தமையான் ஆயது. "அருளியன்" இறந்தகால வினைப் பெயர்; "துன்னியார்" (குறள் - 188) என்பதுபோல. விரைவு தோன்ற இறந்த காலத்தால் அருளினார்.

337. காரோணம், (குடந்தை, நாகை) கழிப்பாலை சோழ நாட்டுத் தலங்கள். பாலன் - உபமன்னிய முனிவர். அவர்

Koviloor Digital Library

338 ஒப்பொருவ ரில்லாத ஒருவன் தன்னை
ஒத்தூரும் உறையூரும் மேவி னானை
வைப்பவனை மாணிக்கச் சோதி யானை
மாருதமுந் தீவெளிநீர் மண்ணு னானைப்
போ.. 9

339 பகலவன்தன் பல்லுகுத்த படிறன் தன்னைப்
பராய்த் துறைபைஞ் ஞீலியிடம் பாவித் தானை
இகலவனை இராவணனை யிடர்செய் தானை
யேத்தாதார் மனத்தகத்துள் இருளா னானைப்
புகழ்நிலவு பொழிலாரூர் மூலட் டானம்
பொருந்தியவெம் பெருமானைப் போற்றார் சிந்தை
அகலவனை அரநெறியி லப்பன் தன்னை
யடைந்தடியேன் அருவினைநோய் அறுத்தவாறே.

திருச்சிற்றம்பலம்

மகவாய் இருந்தபொழுது பால் இல்லாது அழ, அவர்க்குப் பாற் கடலை அழைத்து அளித்த வரலாற்றைக் கோயிற்புராணத்துட் காண்க. "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்" என்ற திருப்பல்லாண்டுங் காண்க (9). பணி உகந்த - தொண்டினை விரும்பிச் செய்யும்- பவளம் ஈன்ற - பவளத்தினது ஒளியைத் தருகின்ற. ஆல் - ஆலம் விழுது போலும் சடை.

338. ஒத்தூர், தொண்டை நாட்டுத்தலம். உறையூர் சோழ நாட்டுத்தலம். வைப்பு - சேமநிதி ; அது போல்பவன் என்க. 'வைப்பவன்' என்பதில் அகரம் சாரியை, மாருதம் - காற்று. வெளி - ஆகாயம். இத்திருப்பாடலின், இறுதி இரண்டடிகள் கிடைத்தில.

339. படிறன் - வஞ்சகன் ; 'வஞ்சகன்' போல நின்று செய்தான்' என்பது கருத்து. பராய்த்துறை, பைஞ்ஞீலி சோழநாட்டுத் தலங்கள். இடம் - இடமாக. பாவித்தான் - கருதினன். 'இகலவனை' என்றதும் இராவணனையே என்க. இகலவன் - மாறுபாடுடையவன். இருளாதல் - தோன்றாதிருத்தல். அகலவன் - நீங்குதலுடையவன். "அகலவன்" என்பதில் அகல், முதனிலைத் தொழிற்பெயர் ; அகரம், சாரியை.

Koviloor Digital Library

34. திருவாரூர்

திருப்பதிக வரலாறு

நாயனார் பெருவேளூர், திருவிளமர் வணங்கித் திருவாரூர் புற்றிடங்கொள் நிருத்தரைப் பணிந்து பாடியருளியவற்றுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 226.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

340 ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகந்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 1

இத் திருப்பதிகம் திருவாரூர்த் தலத்தின் தொன்மையை வியந்துஅருளிச் செய்தது. இதனுள், " நாள் " என்றன பலவும் பொதுப்படத் தொன்மை ஒன்றையே குறித்துநின்றன.

சதாசிவச்செட்டியார் அவர்கள் பதிப்பில் இது, 33-ம் திருப் பதிகமாகக் காணப்படுகின்றது.

340. ஒருவனாய் - ஒப்பற்ற தலைவனாய். மூவுருவம் 'அரன், மால்,அயன்' உருவம். 'கறுவனாய்' என்பது எதுகைநோக்கித் திரிந்து நின்றது. 'சினங்கொண்டவனாய்' என்பது பொருள். மருவனாய் - பொருந்துதலுடையவனாய். தெரித்த - படைத்த. மறி - கன்று. 'ஓர்மாது ஓர் பாகத்தைத் திருவினாளாய் (அழகி யாளாய்ச்) சேரப்படுவதற்கு' என்க. 'திருவாரூரைக் கோயிலாக் கொண்ட நாள் அந்நாட்களோ, முன்னோ பின்னோ' என முடிக்க. 'முன், பின்' என்பன காலப்பெயர்கள்.

Koviloor Digital Library

341 மலையார்பொற் பாவையொடு மகிழ்ந்த நாளோ
வானவரை வலியமுத மூட்டி யந்நாள்
நிலைபேறு பெறுவித்து நின்ற நாளோ
நினைப்பரிய தழற்பிழம்பாய் நிமிர்ந்த நாளோ
அலசாமே அலைகடல்நஞ் சுண்ட நாளோ
அமரர்கணம் புடைசூழ இருந்த நாளோ
சிலையான்முப் புரமெரித்த முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 2

342 பாடகஞ்சேர் மெல்லடிநற் பாவை யாளும்
நீயும்போய்ப் பார்த்தனது பலத்தைக் காண்பான்
வேடனாய் வில்வாங்கி யெய்த நாளோ
விண்ணவர்க்குங் கண்ணவனாய் நின்ற நாளோ
மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 3

343 ஓங்கி உயர்ந்தெழுந்து நின்ற நாளோ
ஒருகம்போல் ஏழுகமாய் நின்ற நாளோ
தாங்கியசீர்த் தலையான வானோர் செய்த
தக்கன்தன் பெருவேள்வி தகர்த்த நாளோ

341. மலை ஆர் - மலையில் வளர்ந்த. வலி - இறவாதிருக்கும் வலிமை. தழற்பிழம்பாய் நிமிர்ந்தது, அயன் மாலுக்கென்க. ‘அலசாமே’ என்பது, ‘அலைசாமே’ எனப் போலியாயிற்று; ‘தளராமல்’ என்பது பொருள். அலைகடல், வினைத்தொகை. ‘எரித்த’ என்பதன்பின். ‘பொழுதிற்கு’ என்பது வருவிக்க. இங்ஙனம் வருவியாது. ‘பின்னோ முன்னோ’ என மாற்றி யுரைப்பினுமாம்.

342. ‘போய் எய்தநாள்’ என இயையும். பார்த்தன் - அருச்சுனன். காண்பான் - வெளிப்படக் காணுதற்பொருட்டு. “கண்ணவன்” என்பதில் அகரம் சாரியை.

343. “ஓங்கி உயர்ந்து” ஒருபொருட் பன்மொழி. எழுந்துநின்றது, அழற் பிழம்பாய். “ஏழ்” என்பது பன்மை

Koviloor Digital Library

நீங்கியநீர்த் தாமரையான் நெடுமா லோடு
நில்லாயெம் பெருமானே யென்றங் கேத்தி
வாங்கிமதி வைப்பதற்கு முன்னே பின்னே
வளராரூர் கோயிலாக் கொண்ட நாளே. 4

344 பாலனாய் வளர்ந்திலாப் பான்மை யானே
பணிவார்கட் கங்கங்கே பற்றா னானே
நீலமா மணிகண்டத் தெண்டோ ளானே
நெருநலையாய் இன்றாகி நாளை யாகுஞ்
சீலமே சிவலோக நெறியே யாகுஞ்
சீர்மையே கூர்மையே குணமே நல்ல
கோலம்நீ கொள்வதற்கு முன்னே பின்னே
குளிராரூர் கோயிலாக் கொண்ட நாளே. 5

குறித்து நின்றது. "ஒருநாள் எழுநாள் போற்செல்லும்" (குறள் - 1269.) என்புழிப்போல. "உகம்" என்றது, கற்பத்தை. 'ஓர் உகத்திற்போல ஏழ் உகத்திலும் ஆகி' என விரித்து' 'ஒரு கற்பத்திற் செய்தல்போலவே, பலகற்பத்திலும் படைப்பு முதலியவற்றைச் செய்து' என உரைக்க. சீர் - புகழ். தலையான வானோர், 'சூரியன், சந்திரன், அயன், மால்' முதலியோர், அவர் தக்கன் செயலுக்கு உடம்பட்டமையின்' அவன் செய்த வேள்வியை அவர் செய்ததாகவே அருளினார். 'நீங்கிய நீர்த் தாமரை" என்றது. 'நீருட் பூவாத தாமரை, எனத் திருமாலது உந்தித் தாமரையை வெளிப்படுத்திற்று. அத் தாமரையான் பிரமன். 'நெடுமாலோடு ஏத்தி' என இயையும். ஓடு, ஒருவினை ஓடு. நில்லாய் - (எமது உள்ளத்தில்) நீங்காதிருப்பாயாக. 'மதி வாங்கி வைப்பதற்கு' என மாற்றி, 'தமது உள்ளத்தின்கட் கொண்டு செறிப்பதற்கு' என உரைக்க. அயனும் மாலும் இவ்வாறு இறைவனைத் தியானித்தமை, படைப்புக் காலத் தென்க.

344. "பாலனாய் வளர்ந்திலாப் பான்மையானே" என்றது, தோன்றி வளராது என்றும் ஒருபடியே நிற்றல்பற்றி. பற்று - துணை. நெருநல் - நேற்று. சீலம் - செயல். சீர்மை - புகழுக் குரிய தன்மை. கூர்மை - நுண்ணறிவு. குணம் - நற்பண்பு. நல்ல கோலம் - அருளுருவம். அவை, 'போகவடிவம், யோக வடிவம், வேகவடிவம்' என மூவகைப்படும். அவை அனைத்தும்

Koviloor Digital Library

345 திறம்பலவும் வழிகாட்டிச் செய்கை காட்டிச்
சிறியையாய்ப் பெரியையாய் நின்ற நாளோ
மறம்பலவு முடையாரை மயக்கந் தீர்த்து
மாமுனிவர்க் கருள்செய்தங் கிருந்த நாளோ
பிறங்கியசீர்ப் பிரமன்தன் தலைகை யேந்திப்
பிச்சையேற் றுண்டுழன்று நின்ற நாளோ
அறம்பலவும் உரைப்பதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 6

உயிர்களுக்கு நன்மை செய்தற்பொருட்டே ஓரோர் காலத்திற் கொண்டன ஆகலின், "நல்ல கோலம்" என்றருளிச் செய்தார். "நீ" என்றதனை, "குணமே" என்றதன் பின் வைத்துரைக்க. 'நீ கோலங்கொள்வதற்கு' என்பவர், இறைவனை அவனது அருட்டிறம் பலவற்றையும் சொல்லி விளித்தருளியது, 'அத் திறங்கட்கேற்ற கோலங்கள் பலவும்' என்பது உடம்பொடு புணர்த்தலால் தோன்றுதற் பொருட்டு.

345. "திறம்" என்றது, பயனை. "காட்டி" என்பதை "திறம் பலவும்" என்பதற்குங் கூட்டுக. வழி - பயனை அடையும் முறை. செய்கை - அம்முறையிலே செய்யும் முயற்சி; இவைகளை உயிர்களுக்கு. அறிவர் வாயிலாகக் காட்டியது, தொடக்கக் காலத்து என்க. "பலவும்" என்றதனால், 'இன்னபொழுது இன்னாருக்கு, இன்னவாற்றால்' என வரையறுத்துணர ஒண்ணாத வாறு, பற்பல காலத்துப் பற்பலருக்குப் பற்பல வகையால் ஏற்ற பெற்றி காட்டியருளியதெனக் கொள்க. மறம் - ஒவ்வாத செய்கைகள்; அவை, 'அவரவர் செய்த வினையே அவரவருக்குப் பயன் தரும்; அதனைக் கூட்டுவிக்க ஒரு முதல்வன் வேண்டா' என்னும் கொள்கையின் வழிச்செய்வன. 'மறம் பலவும் உடையாராகிய அவரை' என்க. செய்யுளாகலின் சுட்டுச்சொல் முன் நிற்றல் பொருந்திற்று. 'உடையாரை மயக்கந் தீர்த்து" என்பதை, 'நூலைக் குற்றங் களைந்தான்' என்பதுபோலக் கொள்க. மாமுனிவர் - தேவதாருவனத்து முனிவர். தன்னோடு மாறுபட்டு நின்ற அவரை இறைவன் தெளிவித்துப் பின்னர் அருள் புரிந்தான் என்றுணர்க. "பிச்சை ஏற்று" என்றது, பிரமன் தலையைக் கிள்ளியஞான்று, தேவர் பலரது இரத்தத்தைப் பிச்சையாக ஏற்றமையை. அறம்பல உரைத்தமை, ஆல்நிழற்கீழ் நால்வர் முனிவர்க்கென்க.

Koviloor Digital Library

346 நிலந்தரத்து நீண்டுருவ மான நாளோ
நிற்பனவும் நடப்பனவும் நீயே யாகிக்
கலந்துரைக்கக் கற்பகமாய் நின்ற நாளோ
காரணத்தால் நாரணனைக் கற்பித் தன்று
வலஞ்சுருக்கி வல்லசுரர் மாண்டு வீழ
வாசுகியை வாய்மடுத்து வானோ ருய்யச்
சலந்தரனைக் கோல்வதற்கு முன்னோ பின்னோ
தண்ணாரூர் கோயிலாக் கோண்ட நாளே. 7

347 பாதத்தால் முயலகனைப் பாது காத்துப்
பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற நாளோ
கீதத்தை மிகப்பாடும் அடியார்க் கேன்றுங்
கேடிலா வானுலகங் கோடுத்த நாளோ

346. 'நிலத்தந்தரத்து' என்பதும், 'நீண்ட உருவம்' என்பதும் தொகுத்தலாயின. அந்தரம் - ஆகாயம். 'மண்ணும் விண்ணும் ஒன்றுபட நீண்ட உருவம்' என்பது பொருள். அவ்வுருவம், மாலும் அயனும் அடிமுடி தேட நின்ற உருவம். நிற்பன - அசரம். நடப்பன - சரம்; இறைவன் கலப்பினால் இவையெல்லாமாய் நிற்பன் என்க. 'நீயேயாகிக் கலந்து' என இயையும். உரைக்க - (அந்நிலையை உணர்ந்து) போற்ற. கற்பகமாய் நிற்றல், அங்ஙனம் போற்றுவார்க்கு அவர் வேண்டுவன எல்லாம் அளித்தல். 'வானோர் உய்ய, வல்லசுரர் மாண்டு வீழ, காரணத்தால் அன்று நாரணனைக் கற்பித்து வலம் சுருக்கி, வாசுகியை வாய்மடுத்து. சலந்தரனைக் கொல்வதற்கு' எனக் கொண்டு கூட்டுக. காரணம் - வானோர்க்கு இடையூறு விளைத்தமை. அன்று - முன்னர். கற்பித்து - படைத்து. வலம் சுருக்கி - (அசுரரது) வலிமையை அடக்கி. 'வாசுகி' என்றது, அவனால் உமிழப்பட்ட நஞ்சினை: அதனை 'ஆலகாலம்' என்பர். 'சலந்தரன்' என்னும் அசுரனைச் சக்கரத்தால் அழித்த வரலாற்றைக் கந்தபுராணத்துட் காண்க.

347. 'முயலகன்' என்பவன் தாருகவனத்து முனிவர் விடுத்த அசுரன். 'பாதுகாத்து' என்றது. 'சிறைப்படுத்தி' எனற்பாலதனை நகையை உள்ளுறுத்து அருளிச்செய்தவாறு. "பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற" என்றது, கூத்தப்பெருமானாய் நிலஉலகத்தில் நின்றதனை. அஃது ஐந்தொழிலும்

Koviloor Digital Library

பூதத்தான் போருநீலி புனிதன் மேவிப்
போய்யுரையா மறைநால்வர் விண்ணோர்க் கேன்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ [றும்
விழவாரூர் கோயிலாக் கோண்ட நாளே. 8

348 புகையேட்டும் போக்கேட்டும் புலன்க ளேட்டும்
பூதலங்க ளவையேட்டும் போழில்க ளேட்டும்
கலையேட்டுங் காப்பேட்டுங் காட்சி யேட்டுங்
கழற்சே வடியடைந்தார் களைக ணேட்டும்

உடைய உருவத் திருமேனியாதல் பற்றி அங்ஙனம் அருளிச் செய்தார். "அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளு மாறே" என, இசையால் ஏத்துவார்க்கு உளதாம் பயன் அளவிடப்படாமையைத் திருநேரிசையுள்ளும் அருளிச்செய்தார். (திருமுறை 4. 77-3)

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்"

என்றருளிச்செய்த திருஞானசம்பந்தர் திருமொழியையும் நோக்குக. (திருமுறை 2. 43. 5.) பூதத்தான் - பூதகணங் களையுடையவன்; நந்திதேவர். பொருநீலி - (உம்மை) ஒத்த நீலநிறம் உடையவள்; உமை. புனிதன் - உயிர்கட்குச் செல்லும் நெறிவகுத்துச் செலுத்தும் ஆசிரியன்; பிரமன். பொய் உரையா - மெய்யே கூறும் (நால்வர் என்க.) மறைநால்வர் - அந்தணர் நால்வர். விண்ணோர் - தேவர். இவர்கட்கெல்லாம் சிவபிரான் வேதங்களையும் ஆகமங்களையும் அறிவுறுத்தினமை ஆங்காங்குக் கூறப்படுதலறிக.

"காது பொத்தரைக் கின்னரர் உழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயம்
கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல்நிழற் கீழ்அறம் பகர"

என ஆளுடைய நம்பிகள் அருளிச்செய்ததுங் காண்க. (திருமுறை 7. 65-6.)

348. புகுதப்படுதல் பற்றிக் கதியை, "புகை" என்றருளிச் செய்தார்; 'மிகு, நகு' என்பவை ஐகாரம்பெற்று 'மிகை, நகை' என வருதல்போல, 'புகு' என்பது ஐகாரம்பெற்று,

Koviloor Digital Library

நகையேட்டும் நாளேட்டும் நன்மை யேட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளேட்டும்
திகையேட்டுந் தெரிப்பதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 9

"புகை" என வந்தது. நெருப்பிற்புகைக்கும் அப்பெயர், எவ்விடத்தும் புகுதலுடைமை பற்றியே வந்ததென்க. எழுவகைப் பிறப்புக்களோடு, 'நரகர்' என்னும் பிறப்புங் கூட்ட, பிறப்பு எட்டாம் அவையே ஈண்டுக் கதியெனப்பட்டன. நரகரைத் தேவருள் அடக்கி, 'பிறப்பு ஏழ்' எனப்படுமாயினும், "நரகரைத் தேவுசெய்வானும்" (திருமுறை 4. 4. 2.) என்பது முதலிய பலவற்றானும், யாதனுசரீரமும் பூதசார சரீரமும் வேறு வேறேயாகலானும். நரகர் தேவரின் வேருதலே யாண்டும் துணிபு. இனி, விலங்கிற் கீழ்ப்பட்ட பிறப்புக்களை எல்லாம், சிறப்பின்மை பற்றி, விலங்கினுள் அடக்கி, 'தேவகதி, நரககதி, மக்கள்கதி, விலங்குகதி' என எல்லாப் பிறப்புக்களையும் நாற்கதி யினுள்ளும் அடக்கிக் கூறுவர். எனினும், விரித்துக்கூறும் வழி எட்டென்பதே கருத்தென்க.

போக்கு - குற்றம். குற்றம் எட்டாவன, அறியாமை, மயக்கம், யான் என்றல் (அகங்காரம்), எனதென்றல் (மமகாரம்), விருப்பு, வெறுப்பு, நல்வினை, தீவினை என்பன. பிறவாறு கூறுங் குற்றங்களெல்லாம் இவற்றுள் அடங்குமாறறிந்துகொள்க. இவை மேற்கூறிய கதிகட்கு ஏதுவாதலுணர்க.

புலன்கள் - புலன் முதலிய கருவிகள். அவை உணரப் படுங்கால், புலன் முதலாகவே உணரப்படுதலின், எல்லாவற்றை யும் 'புலன்கள்' என்றே அருளிச்செய்தார். "சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்என் றைந்தின் - வகை தெரிவான் கட்டே உலகு" எனத் திருவள்ளுவ நாயனரும் புலன்களையே எடுத்தோதினர் (குறள் - 26). அவை எட்டாவன, 'தன் மாத்திரை பூதம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணம், குணம், மூலப்பகுதி, புருடதத்துவம்' என்பன. இவற்றை 'எட்டுக் கொத்து' என்பர். இவற்றுள், தன்மாத்திரை முதலிய நான்கும் தனித்தனி ஐந்து; அந்தக்கரணம் நான்கு; குணம் மூன்றனை உள்ளடக்கிய ஒன்று; மூலப்பகுதி ஒன்று; புருடதத்துவம், 'காலம், நியதி, கலை, வித்தை, அராகம்' என ஐந்து; ஆக

Koviloor Digital Library

முப்பத்தொன்றுகும். இவற்றின் இயல்பெல்லாம் சிவாகமங்களுள்ளும், அட்டப்பிரகரணம், ஞானமிர்தம். சித்தாந்த சாத்திரம் முதலியவற்றுள்ளும் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும். இவை மேற்கூறிய குற்றங்கட்குச் சார்பாய் நிற்ற லுணர்க.

"பூதலங்கள்" என்றதை, 'பூவோடு (பூமியோடு) கூடிய தலங்கள்' எனவிரிக்க "தலங்கள்" எனப் பொதுப்பட அருளிச்செய்தது, கீழுலகங்களையும் மேலுலகங்களையும் இரு முறையான் உணர்த்தற்பொருட்டென்க. எனவே, நடுநிற்பதாய பூவுலகம் கீழ்ஏழுலகங்களோடும், மேல்ஏழ் உலகங்களோடும் இயைதற்குரித்தாக, "எட்டு" என அனைத்துலகங்களையும் அருளிச்செய்தவாறுயிற்று. இவ்வுலகங்கள் மேற்கூறியவற்றை எய்திய உயிர்கள் போக்கு வரவு புரிதற்கு இடமாய் நிற்றலறிக.

பொழில்கள் - தீவுகள்: அவை எட்டாவன, 'நாவல், சாகம், குசை, கிரௌஞ்சம், சான்மலி, கோமேதகம், புட்கரம்' என்னும் மக்களிடமாகிய ஏழும், அவற்றிற்குப் புறத்தேயுள்ள பொன்னில மாகிய தேவர் இடம் ஒன்றுமாம். ஈண்டுள்ளார்க்குப் புலனுகாமைபற்றி நரகரையும் தேவருள் அடக்கி பிறப்பு ஏழென்றல்போல, தேவர்க்குரிய பொன்னிலத்துக்கு அப்பால் பேய்கட் குரித்தாய் உள்ள இருள் நிலத்தையும் பொன்னிலத்து ள்டக்கி, "பொழில்கள் எட்டு" என்று அருளிச்செய்தார்.

கலை - அத்தீவுகட்கு உடையாய் அமைந்த கடல்கள். இப் பெற்றி தோன்றவே கடல் என்னுது, 'கலை' என்றருளினுர்; பிறவும் அன்ன. கடல் எட்டாவன, 'உவர்க்கடல், பாற்கடல் தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன் கடல், நன்னீர்க் கடல் என்னும் ஏழும், அவற்றிற்கு அப்பால் சக்கரவாள கிரியைச் சூழ்ந்துள்ள பெரும்புறக் கடல் ஒன்றுமாம்.

காப்பு - அரண்; அஃதாவது அக்கடல்களைச் சூழ்ந்து அரண் போல நிற்கும் மலைகள். அவை எட்டாவன, ஏழுகடலையும் சூழ்ந் துள்ள மலைகள் ஏழும், பொன்னிலத்தைச் சூழ்ந்துள்ள சக்கர வாளகிரி ஒன்றுமாம்.

காட்சி எட்டாவன, பொழில்கள் எட்டினும் காணப்படும் எண்வேறு வகைப்பட்ட இயல்புகள். அவைகளை யெல்லாம் சிவாகமங்களுள்ளும், கந்தபுராணத்து அண்டகோசப் படலத் துள்ளும், சிவஞான மாபாடியத்துள்ளும் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

Koviloor Digital Library

பொழில்கள் முதலிய நான்கும் இவ்வுலகத்தனவாகலின், அவைகளை வகுத்தருளிச் செய்தார்.

பயனை "களைகண்" என்றருளிச் செய்தார், 'அவை காரணமாகவே கழற்சேவடியடைந்தார் என்பது அறிவித்தற்கு. எனவே, பயன்கருதி வழிபட்டார் அடையும் பயன்கள் எட்டென்றவாறாயிற்று; அவை, 'புவலோகம், சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், பிரமலோகம், விட்டுணுலோகம், உருத்திரலோகம்' என்பன. இவையெல்லாம் பதங்கள் (பதவிகள்) எனப்படும் புண்ணிய லோகங்கள்; சிவலோகமாகிய வீட்டுலகம் இவையனைத்தினும் மேலாய் உளது. அதனிற் சென்றார்க்கு மாறிப்பிறத்தல் இல்லை. பயன் கருதாது வழிபடுதல் உலகியலிற் பற்று நீங்காதவர்க்குக் கூடாமையின், வீட்டுலகத்தை அடைதல் அவர்க்கு இயலாதாயிற்று. உலகியலின் நீங்காதவருள்ளும் பயன் கருதாது வழிபடுவாருளராயினும், "வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்மண்ணும் விண்ணும்" (திருவாசகம். உயிருண்ணிப்பத்து. 7.) என உவர்த்து, "வார்கட லுலகின் வாழ்கிலேன் கண்டாய் வருகவென் றருள்புரியாயே" (ஷ. வாழாப்பத்து. 1.) என வேண்டுவாரல்லராகலின், அவர் ஒருவாற்றாற் பயன் கருதி வழிபடுவோரே என்க; எனினும் இவர் உருத்திரலோகத்தை அடைவர் என்க.

நகை - ஒளி; அஃது அதனை உடைய பொருள்களைக் குறித்தது. அவை எட்டாவன, இராகு கேதுக்கள் ஒழிந்த கோள்கள் ஏழும், விண்மீன்களுமாம். சிறப்புப்பற்றி ஞாயிற்றையுந் திங்களையும் வேறுவே றெண்ணுவார், ஏனைய கோள்களையும் அவ்வாறு எண்ணி, சிறப்பில்லாத விண்மீன்களை ஒன்றாக வைத்து அருளிச்செய்தார்: வானத்திற் காணப்படுவனவற்றையே ஈண்டுக் கூறுதலின், "நகை" என்றது தீயின்மேற் செல்லாதாயிற்று. இவை இரண்டு தொடர்களாலும் மேலுலகங்களும், அவற்றுள் முன்னிற்பதாய புவலோக மண்டலங்களும் அருளிச்செய்தவாறு.

"நாள்" என்றது, அஃது ஒன்றும் பலவுமாய பகுதிகளை. அவை எட்டாவன, 'நாள், வாரம், பட்சம், மாதம், இருது, அயனம், ஆண்டு, உகம்' என்பன. 'புலன்கள்' என்புழிக் கூறப்பட்ட காலம், பொருள்தொறும் நிற்கும் சிறப்புக் காலம்

Koviloor Digital Library

எனவும், இஃது எல்லாப் பொருட்கும் பொதுவாகிய பொதுக் காலம் எனவும் உணர்க. "பூதலங்கள்" முதலாகச் சொல்லப் பட்டன யாவும் அன்ன.

நன்மை எட்டாவன, 'அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கும், அவற்றிற்கு மறுதலையாய, 'மறம், இன்மை, துன்பம், பிறப்பு' என்னும் நான்குமாம். உறுதிப் பொருட்கு மறுதலையாயவற்றையும், "நன்மை" என்றருளிச் செய்தார். மலத்தைத் தேய்த்தலிற் பிழையாமை நோக்கி. அங்ஙனம் அல்லாக்கால் அவை, கருணையுடையவனாற் படைக்கப்படுதல் என்னையோ வென்க.

"நலம்" என்றது, ஞானத்தை. அதுமிக்காருடைய உள்ளத் தில் இருந்து ஞானபூசைக்கு உரியவாகும் மலர்கள் எட்டாவன 'கொல்லாமை, பொறியடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, 'மெய், தவம், அன்பு' என்பன.

திகை - திசை. அவை எட்டு, கிழக்கு முதலிய பெருந் திசை நான்கும், தென்கிழக்கு முதலிய கோணத்திசை நான்கு மாம். "காட்சி எட்டும்" என்பதனை அடுத்து நிற்றற்பாலதாய, "திகை எட்டும்" என்பது, செய்யுள் நோக்கி இறுதிக்கண் நின்றது.

தெரித்தல் - தோன்றச் செய்தல்; படைத்தல். "மண்ணும் விண்ணும் தெரித்தநாளோ" எனமேலும் (340) அருளிச் செய்தார்.

"எட்டு" என்பது பல்கால் வந்தது, சொற்பொருட்பின் வருநிலையோடு, இதுவும் ஓர் எண்ணலங்காரம் என்க. இவ் வாற்றுலெல்லாம் உலகத்தோற்றத்தை வகுத்தெடுத்தருளிச் செய்தவாறு. வேதாகம வழக்கும் ஆன்றோர் வழக்கும் பற்றி வரும் இன்னோரன்ன பொருள்கள் எல்லாவற்றையும் ஓரோர் இடத்து ஓரோர்வாயிலால் தன்னுட்கொண்டு நிற்றல் பெரு மொழிகட்கு இயல்பென உணர்க.

இத்திருத்தாண்டகமும் வரலாற்று முறையான் உணரும் பொருளை உடைத்து, இதற்கு இவ்வாறன்றிச் சில வேறுபடக் கூறுவாரும் உளர்; வரலாற்று முறையின் உணர்ந்தார்

Koviloor Digital Library

349 ஈசனு யுலகேழும் மலையு மாகி
இராவணனை ஈடழித்திட் டிருந்த நாளோ
வாசமலர் மகிழ்தென்ற லான நாளோ
மதயானை யுரிபோர்த்து மகிழ்ந்த நாளோ
தாதுமலர் சண்டிக்குக் கொடுத்த நாளோ
சகரர்களை மறித்திட்டாட் கொண்ட நாளோ
தேசமுமை யறிவதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 10

திருச்சிற்றம்பலம்

உளராய், அவர் வேறு பொருந்த உரைப்பன உளவேற் கொள்க. இங்ஙனம், பொருள்களை அரிதின் உணர மறைவாகக் கொண்டு நிற்றலும் மறைமொழிகட்கு இயல்பேயாம்.

349. "உலகேழும் மலையும்" எனப் பின்னர் வருகின்றமையின், "ஈசனாய்" என்றதற்கு, 'அவைகளை ஆள்பவனாய்' என்றுரைக்க. மலை, திருக்கயிலை. அதனை இராவணன் பெயர்த்த காலத்து, உலகேழும் நடுங்கினவாகலின், அங்ஙனம் நடுங்கச்செய்த அவனை ஈடழித்தற்குரிய இயைபுணர்த்துவார், "உலகேழும் மலையுமாகி, ஈசனாய்" என்றருளிச்செய்தார். ஈடு - வலிமை. வடதிசைக் கயிலையேயன்றி, தென்றிசைப்பொதியிற்கண் ஆனமையும் குறிப்பினாலுணர்த்துவார், "தென்றலான நாளோ" என்றருளினார். "தாதுமலர்" என்றது தம் முடிக்கண் இருந்த கொன்றை மாலையை. சண்டேசுரநாயனாருக்கு அருளியது மிகப் பழைய வரலாறு என்க. மறித்திட்டு - (நரகத்தினின்றும்) மீட்டு. "சகரர்கள்" என்பார் அறுபதினாயிரவர் என்பதும், அவர் கபில முனிவரது வெகுளித்தீயால் சாம்பலாகி நரகடைந்தனர் என்பதும், அவர் வழியிற் றோன்றிய பகீரதன் தவம்செய்து தேவ கங்கையை மண்ணிற் கொணர்ந்து, அதனைச் சடையில் ஏற்றுப் பின்னர்த் தன் முன்னோர்கள் நல்லுலகடையுமாறு அவர் தம் சாம்பலிற் சென்று பாய விடுக்கும்படி சிவபிரானை வேண்டி அங்ஙனம் செய்யப்பெற்றான் என்பதும் பழைய வரலாறுகளாதலுணர்க. தேசம் - உலகம். 'உம்மை' என்னும் உருபேற்ற முன்னிலைப் பெயர் இடைக்குறைந்து, "உமை" என நின்றது. சிவபிரானை உலகம் அறிந்தது மிகப்பழைய காலத்தென்க. 'நீயிர் திருவாரூர் கோயிலாக் கொண்டநாள்' என்க.

Koviloor Digital Library

35. திருவெண்காடு

திருப்பதிக வரலாறு

ஆண்டவரசு, ஆளுடையபிள்ளையாரிடம் விடைபெற்றுச் சென்றபின் நனிபள்ளி முதலாகவுள்ள தலங்களைத் தொழுது செல்லுங்காலைத் திருவெண்காட்டுப் பெருமானைப் பணிந்து பாடியருளியதுபோலும் இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 189.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

350 தூண்டு சுடர்மேனித் தூநீ றாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங் காதிற் பெய்து
பொற்சடைக ளவைதாழப் புரிவெண் ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 1

இத் திருப்பதிகத்துள் முதல் திருப்பாடலும், மூன்று முதல் ஏழுமுடிய உள்ள திருப்பாடல்களும் பெருந்திணைப் பெண்பாற் கூற்றாக அருளிச் செய்யப்பட்டன.

350. தூண்டு சுடர் மேனி - தூண்டப்பட்ட விளக்கினது ஒளிபோலும் திருமேனியில், "வாய்" என்றது நாவினை; ஆகு பெயர்; நாவினைப் பலவழியாலும் அடிக்கடி நீட்டுதல் நாகத்திற்கு இயல்பு. பொறி - படத்திற் புள்ளி. "பொறியரவம்" என்றது, 'அதனை' என்னும் சுட்டளவாய் நின்றது. பொற்சடைகள் - பொன்போலும் சடைகள். 'வெண்ணூலராய்' என்க. "நீண்டு" என்றது, 'நீட' என்பதன் திரிபாய், 'பலகாலமாக' எனப் பொருள்தந்து நின்றது. வேண்டும் நடை - அவர் விரும்பிய வாறே நடக்கும் நடை; அது விரைந்தும், மெல்லென்றும், தாவியும் நடத்தல். 'தாம் செலுத்தியவாறே செல்லும் அறம்,' என்பது உண்மைப் பொருள். விகிர்தன் - உலகியலுக்கு வேறு பட்டவன்.

Koviloor Digital Library

351 பாதந் தரிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏக பாதர்
ஓதத் தோலிமடங்கி யூருண் டேறி
யோத்துலக மெல்லா மொடுங்கியபின்
வேதத் தோலிகோண்டு வீணை கேட்பார்
வேண்காடு மேவிய விகிர்த ணுரே. 2

351. "பாதம் தனிப்பார்" என்னும் பாடத்திற்கு, 'பாதத்துத் தனித்து நிற்பார்' என்றுயினும், 'பாதத்தைத் தனிப்பக் கொண்டு நிற்பார்' என்றுயினும் பொருள் கொள்க. ஏழாவதன் தொகையில் மகரங்கெடாதுநிற்றல், இரண்டாம் வேற்றுமைக்குத் திரிபோதிய விடத்துத் (தொல். எழுத்து - 158.) தன்னின முடித்தலாற் கொள்ளப்படுவது. "பாதாளம் ஏழுருவப் பாய்ந்த பாதர்" என்பதனேடு, "பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்" (திருவாசகம், திருவெம்பாவை - 10) என்றருளிச்செய்ததனை நோக்குக. ஏதம் - துன்பம்; அடியார்க ளிடத்துத் துன்பம் உண்டாகாதவாறு துணையாய் நின்ற பாதத்தை உடையவர் என்க. இறைவனது ஒரு திருவருளே மறைப்பதாயும், அருளலாயும் நிற்கும். அவற்றுள் மறைப்ப தாகிய மறக்கருணை 'திரோதான சத்தி' என்றும், அருளலாகிய அறக்கருணை 'அருட்சத்தி' என்றும் சொல்லப்படும். அவ் விரண்டனுள் உலகத்தை அதனெடு கலந்து நின்று தோற்றி நிறுத்தி ஒடுக்குதலாகிய தொழிலைச் செய்வது திரோதான சத்தி ஒன்றேயாதல்பற்றி "ஏழுலகுமாய் நின்ற ஏக பாதர்" என்றரு ளிச்செய்தார்; மாகேசுர மூர்த்தங்கள் இருபத்தைந்தனுள், 'ஏக பாதர்' என்ற மூர்த்தம் இந் நிலையையே குறித்துநிற்றல் அறிக. ஓதம் - (கடலின்) அலைகள். ஊர் உண்டு - ஊர்களை விழுங்கி; நிலத்தை அழித்து. ஏறி - மீதூர்ந்து. ஒத்து - ஒன்றுய்க் கலந்து; கோத்து, "மடங்கி" என்பதனை, 'மடங்க' எனத் திரித்து, "ஒத்து" என்பதன்பின் கூட்டுக. வேதத்தை வீணையி லிட்டு வாசித்துக் கேட்டு அமைதியோடிருப்பார் என்க. உலக மெல்லாம் ஒடுங்கியபின்னர் ஒடுங்காது இன்புற்றிருப்பவர் இவர் ஒருவரே என்றபடி. எனவே, மீள உலகம் தோன்றுங்கால் இவரிடத்திருந்தே தோன்றும் என்பதும், அதனல் உலகிற்கு முதல்வர் இவரே என்பதும் தாமே பெறப்பட்டுக் கிடந்தன;

Koviloor Digital Library

352 நென்னலையோர் ஓடேந்திப் பிச்சைக் கென்று
வந்தார்க்கு வந்தேனென் றில்லே புக்கேன்
அந்நிலையே நிற்கின்றார் ஐயங் கொள்ளார்
அருகே வருவார்போல் நோக்கு கின்றார்
நுந்நிலைமை யேதோநும் மூர்தா னேதோ
என்றேனுக் கொன்றாகச் சொல்ல மாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி யாடும்
வேண்காடு மேவிய விகிர்த னாரே. 3

353 ஆகத் துமையடக்கி யாறு சூடி
ஐவா யரவசைத்தங் கானே றேறிப்
போகம் பலவுடைத்தாய்ப் பூதஞ் சூழப்
புலித்தோ லுடையாப் புகுந்து நின்றார்

இதனையே, "ஒடுங்கிமலத் துளதாம்; அந்தம் ஆதி என்மனார் புலவர்" என்று வரையறையாக அருளிப்போந்தார், மெய்கண்ட தேவ நாயனார் என்க. (சிவஞானபோதம் - சூத்திரம் - 1.) இத் திருப்பாடல் பெரும்பான்மையும் திருவடிப் பெருமையையே அருளிச்செய்தவாறுதல் உணர்க.

352. நென்னல் - நேற்று. ஐ சாரியை. "வந்தேன்" என்றது, விரைவுபற்றி எதிர்காலத்தை இறந்த காலமாகக் கூறிய வழுவமைதி. நென்னற் கதையாகலின், 'நிற்கின்றாரும், கொள்ளாரும் நோக்குகின்றாரும், சொல்லமாட்டாருமாயினார்' என உரைக்க. இவ்வாறெல்லாம் செய்தது, அவளை மெய் தீண்டும் குறிப்புத்தோன்ற. அக்குறிப்புணர்ந்தே அவள், அவரது நிலைமை முதலியவற்றை வினவினாள். அவற்றை அவர் அன்று ஒன்றாகச் சொல்லாது பலவாறு சொல்லினமையால் பிற்றைநாள், 'அவரை எவ்வாறு உணர்ந்து அடைவேன்' என அவள் கவன்றாள். இதன் உண்மைப்பொருள், சத்திநிபாத வகையினால் கேள்வியுணர்வை எய்தி, சிந்தனை உணர்வில் தலைப்பட்ட அடியவரது நிலையென்க. 'விரும்பி ஆடும் விகிர்தனார்' என்க. ஆடுதல், காதல் மிகப்பெற்றதனால் அவரது புகழைப் பாடி ஆடுதல்; அதற்கு ஏதுவான விகிர்தர் என்றதாம். இனி. 'ஆடும் வெண்காடு' என முடித்தலுமாம்.

353. "உமை" என்ற உயர்திணைப் பெயரிடத்து இரண்ட னுருபு தொகுத்தலாயிற்று. போகம் - சிவபோகம். "உடைத் தாய்" என்பது, "பூதம்" என்னும் அஃறிணை இயற்பெயரொடு

Koviloor Digital Library

பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்
பரிசழித்தேன் வளைகவர்ந்தார் பாவி யேனை
மேக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
வேண்காடு மேவிய விகிர்த னாரே. 4

354 கொள்ளைக் குழைக்காதிற் குண்டைப் பூதங்
கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட
உள்ளங் கவர்ந்திட்டுப் போவார் போல
உழிதருவர் நான்தெரிய மாட்டேன் மீண்டேன்
கள்ள விழிவிழிப்பர் காணுக் கண்ணுற்
கண்ணுள்ளார் போலே கரந்து நிற்பர்
வெள்ளச் சடைமுடியர் வேத நாவர்
வேண்காடு மேவிய விகிர்த னாரே. 5

பன்மை யொருமைமயக்கமாய் இயைந்தது. "சூழ" என்ற குறிப்பால், "பூதம்" என்பது பன்மைப் பெயராயிற்று. பாகு - பாகம்; அடிசில். "பற்றி" என்றது, உள்ளத்தால் பற்றியதனை. பரிசு - அவள் தன்மை; நிறை; பசுபோதம் என்பது, உண்மைப் பொருள். 'பாவியேனைப் பரிசழித்து' எனக் கூட்டுக. பாவியேனை - அவரை உள்ளத்துட்கொள்ளாத என்னை; இனி, 'அவரை அணையும் விதி இல்லாத தீவினையேனை' என்றுரைப்பினுமாம். மேக முகில் - நீரைப் பொழிகின்ற முகில்.

354. கொள்ளை - மிகுதி; அது மிக்க ஒளியைக் குறித்தது. "குண்டை" என்பதில் ஐ சாரியை. 'பெருவயிறு' என்பது பொருள். 'கவர்ந்திட்டு உழிதருவர்' என இயையும். உழிதருவர் - (போகாது) சுழல்வர். தெரியமாட்டாமை, அவரது கருத்துணரமாட்டாமை. 'மாட்டேனாய்' என்க. கள்ள விழி - மறைத்து நோக்கும் கண். காணுக் கண் - பாராததுபோலப் பார்க்கும் பார்வை; இது, "கள்ளவிழி" என முன் வந்ததனைச் சுட்டும் சுட்டளவாய் நின்றது. கண்ணால் - கண்ணோடு. கண் உள்ளார் போல் - கண்ணுக்கு அகப்படுவார்போல; ஏகாரம் தேற்றம்.

Koviloor Digital Library

355 தோட்டிலங்கு சூலத்தர் மழுவா ளேந்திச்
சுடர்க்கொன்றைத் தாரணிந்து சுவைகள் பேசிப்
பட்டிவெள் ளேறேறிப் பலியுங் கொள்ளார்
பார்ப்பாரைப் பரிசழிப்பா ரொக்கின் றாரால்
கட்டிலங்கு வெண்ணீற்றர் கனலப் பேசிக்
கருத்தழித்து வளைகவர்ந்தார் காலை மாலை
விட்டிலங்கு சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 6

356 பெண்பா லொருபாகம் பேணா வாழ்க்கைக்
கோணாகம் பூண்பனவும் நாணுஞ் சொல்லார்
உண்பார் உறங்குவார் ஒவ்வா நங்காய்
உண்பதுவும் நஞ்சன்றே லோவியுண்ணார்

355. தொட்டு - ஏவி ; 'படைதொட்டார்' என்றல் முறை. 'சுவை' என்பது ஆகுபெயராய், அதனைத் தரும் சொல்லை உணர்த்திப் பின் பன்மை விகுதியேற்றது. ஈண்டுச் 'சுவை', சொற்சுவை; அது பொருள் கவர்த்துநிற்றல். பட்டி - தொழுவம்; இஃது இன அடை. பரிசு - இயல்பு. "ஒக்கின்றார்" என்றது, துணியாமைக்கண் சொல்லியது. கட்டு - பிணிப்பு; நீங்காது நிற்றல். கனல் - காமத் தீ ; அது மூண்டெழ என்க. கருத்து - உள்ளத்து நிறை ; தன்முனைப்பு என்பது உண்மைப் பொருள். காலை மாலை விட்டு - பொழுது வேறுபாடுகள் இன்றி; எப் பொழுதும் ; இரவிலும் சடை ஒளிவிடுவதென்றவாறு. "விட்டு" என்பது, 'விட' என்பதன் திரிபு. இனி, 'காலையும் மாலையும் எப்பொழுதும் விட்டு விளங்குகின்ற (மின்னுகின்ற) சடை, என்று உரைப்பினும் அமையும்.

356. 'ஒருபாகம் பெண்பால்; வாழ்வது பேணா வாழ்க்கை; பூண்பனவும்கோணாகம்' என்க. 'வாழ்வது' என்பதுசொல்லெச்சம். பேணாவாழ்க்கை - ஒருவரும் விரும்பாத வாழ்க்கை ; பிச்சை யூண் வாழ்க்கை. கோணாகம் - 'கோண் (வளைந்த) + நாகம்' எனவும், 'கோள் (கொடுமையுடைய) + நாகம்' எனவும் ஆம். நாண் ஆம் சொல் - நாணம் மிகுதற்கு ஏதுவாய சொல் ; அவை நலம் பாராட்டல் முதலியன. உண்மைப் பொருளில், ஆன்மாவின் தன்னியல்பு பொதுவியல்புகளை இனிதுணர்த்தித் தன்முனைப்பை அகற்றுதலாகக் கொள்க. 'உலகில் உண்பார் உறங்குவார்

Koviloor Digital Library

பண்பால் விரிசடையர் பற்றி நோக்கிப்
பாலைப் பரிசழியப் பேசு கின்றூர்
விண்பால் மதிசூடி வேதம் ஓதி
வேண்காடு மேவிய விகிர்த ஞரே. 7

357 மருதங்க ளாமொழிவர் மங்கை யோடு
வானவரும் மாலயனுங் கூடித் தங்கள்
சுருதங்க ளாற்றுதித்துத் தூநீ ராட்டித்
தோத்திரங்கள் பலசொல்லித் தூபங் காட்டிக்
கருதுங்கொல் எம்பெருமான் செய்குற் றேவல்
என்பார்க்கு வேண்டும் வரங் கொடுத்து
விகிர்தங்க ளாநடப்பர் வெள்ளே றேறி
வேண்காடு மேவிய விகிர்த ஞரே. 8

செயல்களோடு அவர் செயல்கள் ஒவ்வா; என்னை யெனின், உண்பதுவும் நஞ்சு; அன்றேல் யாதொன்றையும் உண்ணுதலை யொழித்து உண்ணுதே யிருப்பார்' என்க. தலைவி தோழியை, "நங்காய்" என விளித்தாள். "அன்றேல்" என்பது விகற்பித்தற்கண் வந்தது. ஓவி - ஒழித்து. "ஓபி" என்பது பிழைபட்டபாடம். 'நஞ்சென்ருல்' என்பதும், 'ஒப்பி' என்பதும் பாடம். பண்பு, ஈண்டு அழகு. 'அவிர்சடையர்' என்பதும்பாடம். பாலைப் பரிசு அழிய - பகுப்பு (வேற்றுமை)த் தன்மை நீங்க; ஒற்றுமை கொண்டாடி. ஐ சாரியை.

357. மருதங்களா(க) - மருதத் திணைச்சொற்களாக; மனைவி உயர்வும் கிழவோன் பணிவுமாக (தொல். பொருள் 227) 'மங்கையோடு' 'மருதங்களா மொழிவர்' என மாறிக்கூட்டுக. இது புலவிக்காலத்தென்க. சுருதம் - கேள்வி; மந்திரம். அதுவும், இறைவனது பெருமையுணர்த்துவதே யாதல்பற்றி, "துதித்து" என்று அருளிச்செய்தார். கருதுதல் - பொருளாகக் கொள்ளல். 'யாம்' என்னும் தோன்ரு எழுவாய் வருவித்து, 'யாம்செய் குற்றேவலை எம்பெருமான் கருதுங்கொல்' என்று இயைக்க. விகிர்தங்கள் ஆ - வேறுபட்ட செயல்கள் உளவாக. நடப்பர் - ஒழுகுவர். எதுகை இன்மையின், 'விருதங்களா நடப்பர்' என்பதே பாடம் எனலுமாம்.

Koviloor Digital Library

358 புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்துங்
காணூர் போறியழலாய் நின்றான் தன்னை
உள்ளானை யோன்றலா உருவி னானை
உலகுக் கோருவிளக்காய் நின்றான் தன்னைக்
கள்ளேந்து கோன்றைதூய்க் காலை மூன்றும்
ஓவாமே நின்று தவங்கள் செய்த
வேள்ளானை வேண்டும் வரங்கோ டுப்பார்
வேண்.காடு மேவிய விகிர்த னாரே. 9

359 மாக்குன் றேடுத்தோன்தன் மைந்த னாகி
மாவேழம் வில்லா மதித்தான் தன்னை
நோக்குந் துணைத்தேவ ரேல்லாம் நிற்க
நோடிவரையில் நோவ விழித்தான் தன்னைக்

358. புள்ளான் - கருடக்கொடியை உடையவன்; திருமால். 'மண், விண்' என்பன வருவித்து, 'மண்புக்கும், விண் போந்தும்' என உரைக்க. உள்ளான் - எல்லாப் பொருள்களின் உள்ளிடத்துமிருப்பவன்; அந்தரியாமி. ஒன்றல்லா உரு, இரண்டாகிய (அம்மையும் அப்பனுமாகிய) வடிவம். விளக்குப் போல விளக்கி நிற்றலின், "விளக்கு" என்றருளினார். சிறப்புப் பற்றிக்கொன்றை மலரையே எடுத்தோதினார். காலை - காலம். வெள்ளானை - ஐராவதம்; இது கீழ்த்திசைக்கு உரியதாய் இந்திரனுக்கு ஊர்தியாகும். இத்தலத்தில் ஐராவதம் இறைவனை வழிபட்டுத் துன்பம் நீங்கப்பெற்றமையை, கந்த புராணம் அமரர் சிறைபுகு படலத்துட் காண்க.

359. குன்றெடுத்தோன், கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்தியவன்; திருமால். வேழம் - கரும்பு. நோக்கும் - அவன் வெற்றியை எதிர்நோக்கும். துணைத் தேவர் - துணையாகப் பின்வந்த பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள். 'அவர்கள் யாதும் செய்யமாட்டாதவராய் ஒழியக் காமனை நெற்றிக்கண்ணால் நொடியில் எரித்தொழித்தான்' என இறைவனது பேராற்றலை வியந்தருளிச்செய்தவாறு. 'விழித்து ஆன் தன்னை எனப்பிரிக்க. ஆன் - அவ்விடத்து. தன்னை - அவனை (காமனை). 'விழித்தான் - விழிக்கப்பட்டான்' என்றுரைத்தலுமாம். "காக்கும்" என்னும்

Koviloor Digital Library

காக்குங் கடலிலங்கைக் கோமான் தன்னைக்
கதிர்முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி
வீக்கந் தவிர்த்த விரலார் போலும்
வேண்காடு மேவிய விகிர்த ஞரே. 10

திருச்சிற்றம்பலம்

பெயரெச்சம், ''விரலார்'' என்பதனோடு முடிந்தது. இறைவன் காமனை எரித்துப் பின்னர் அவன் மனைவியாகிய இரதி வேண்ட உயிர்ப்பித்தருளினமை யறிக. வீக்கம் - (செருக்கின்) மிகுதி. போலும், அசைநிலை.

அப்பொழுதே யம்பலத்து ளாடுகின்ற கழல்வணங்கி
யருள்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி புரண்டுவலங்
கொண்டு போந்தே
யெப்புவனங் களுநிறைந்த திருப்பதியி னெல்லையினை
யிறைஞ்சி யேத்திச்
செப்பரிய பெருமையினுர் திருநாரை யூர்பணிந்து
பாடிச் செல்வார். 179

தொண்டர்குழாம் புடைசூழத் தொழுதகரத் தொடுநீறு
துதைந்த கோலங்
கண்டவர்தம் மனங்கசிந்து கரைந்துருகுங் கருணைபுறம்
பொழிந்து காட்டத்
தெண்டிரைவாய்க் கன்மிதப்பி லுகைத்தேறுந் திருநாவுக்
கரசர் தாமும்
வண்டமிழா லெழுதுமறை மொழிந்தபிரான் திருப்புகலி
மருங்கு சார்ந்தார். 180

நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை மடுத்தருளி
நேரே முன்னாள்
ஆண்டவர செழுந்தருளக் கேட்டருளி யாளுடைய
பிள்ளை யாருங்
காண்டகைய பெருவிருப்புக் கைமிக்க திருவுள்ளக்
கருத்தி னேடு
மூண்டவருள் மனத்தன்பர் புடைசூழ வெழுந்தருளி
முன்னே வந்தார். 181

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

36. திருப்பழனம்

திருப்பதிக வரலாறு

நாவுக்கரசர், நல்லூரிறைவரை வணங்கித் திருத்தொண்டு செய்து உறையும் நாட்களில் கருகாவூர், திருஆவூர், திருப் பாலைத்துறை முதலிய பதிகளை வணங்கி மீண்டும் நல்லூரிறை வரைத் தொழுது பிற தலங்களை வணங்கச் சென்ற பொழுது திருப்பழனம் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 199.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

360 அலையார் கடல்நஞ்ச முண்டார் தாமே
அமரர்களுக் கருள்செய்யும் ஆதி தாமே
கோலையாய கூற்ற முதைத்தார் தாமே
கோல்வேங்கைத் தோலோன் றசைத்தார் தாமே
சிலையால் புரமூன் றெரித்தார் தாமே
தீநோய் களைந்தென்னை யாண்டார் தாமே
பலிதேர்ந் தழகாய பண்பர் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 1

இத்திருப்பதிகத்துத் திருப்பாடல்கள் யாவும், 'தாமே' என்னும் முடிபுடைய பல்பெயர்க் கோவையை உடையன.

360. "ஆதி" என்றது, பன்மை ஒருமை மயக்கம். அசைத் தார் - கட்டினார். 'அழகாய்ப் பலிதேர்ந்த' என, மாற்றி யுரைக்க. பலி - பிச்சை. தேர்ந்து - ஆராய்ந்து; தேடி. 'பழன நகர் எம்பிரானார்தாமே' என்பதனை எழுவாயாகக் கொள்க. இதன்கண் உள்ள ஏகாரம் ஈற்றசை; ஏனைய ஏகாரங்கள் தேற்றம்; "தாம்" அனைத்தும் அசைநிலை.

Koviloor Digital Library

361 வெள்ள மொருசடைமே லேற்ருர் தாமே
மேலார்கண் மேலார்கண் மேலார் தாமே
கள்ளங் கடிந்தென்னை யாண்டார் தாமே
கருத்துடைய பூதப் படையார் தாமே
உள்ளத் துவகை தருவார் தாமே
யுறுநோய் சிறுபிணிகள் தீர்ப்பார் தாமே
பள்ளப் பரவைநஞ் சுண்டார் தாமே
பழன நகரேம் பிரானுர் தாமே. 2

362 இரவும் பகலுமாய் நின்ருர் தாமே
எப்போதும் என்நெஞ்சத் துள்ளார் தாமே
அரவ மரையில் அசைத்தார் தாமே
அனலாடி யங்கை மறித்தார் தாமே
குரவங் கமழுங்குற் ருலர் தாமே
கோலங்கள் மேன்மே லுகப்பார் தாமே
பரவும் அடியார்க்குப் பாங்கர் தாமே
பழன நகரேம் பிரானுர் தாமே. 3

361. மேலார்கள் - தேவர்கள்; அவர்க்கு மேலார்கள், அயனும் மாலும். இனி, அயன் மால் என்பாரையும் தேவர் களுள்ளே வைத்து, அவர்க்கு மேலார்கள் அபரமுத்தர் என்றுரைத்தலுமாம். "கள்ளம்" என்றது சமணரது சார்பினுல், தம் செயலுக்குத் தாமே தலைவராக நினைந்திருந்த முனைப்பினை. "கருத்துடைய பூதம்" என்றருளிச்செய்தது, 'ஞானம்பெற்ற பூதங்கள்; சிவபூதங்கள்' என்றபடி. உவகை தருவார் - (வாட்டம் நீக்கி) மகிழ்ச்சி தருவார். உறுநோய் - பெருநோய்கள்; தீரா நோய்கள். 'உறுநோயும் சிறுபிணிகளும் தீர்ப்பார்' என்க.

362. "ஆடி" என்னும் எச்சம், எண்ணின்கண் வந்தது. மறித்தார் - தடுத்தார்; 'அஞ்சேல்' என்று அமைத்து ஆட்கொண்டார். குரவம் - குரவம்பூ; அம், அல்வழிக்கண் வந்த சாரியை. 'குரா' என்பது, குரவு என்ருயிற்று. கோலங்கள் - வேடங்கள். "மேன்மேல்" என்றது, 'எல்லையின்றி' என்றபடி. பாங்கர் - உடன்நின்று உதவுபவர்; 'தோழராகின்றவர்' என்பது நயம்.

Koviloor Digital Library

363 மாறில் மதில்மூன்று மெய்தார் தாமே
வரியரவங் கச்சாக வர்த்தார் தாமே
நீறுசேர் திருமேனி நிமலர் தாமே
நேற்றி நேருப்புக்கண் வைத்தார் தாமே
ஏறுகோடுஞ் சூலக் கையர் தாமே
யேன்பா பரண மணிந்தார் தாமே
பாறுண் தலையிற் பலியார் தாமே
பழன நகரேம் பிரானுர் தாமே. 4

364 சீரால் வணங்கப் படுவார் தாமே
திசைக்கேல்லாங் தேவாகி நின்ருர் தாமே
ஆரா அமுதமு மானுர் தாமே
யளவில் பேருமை யுடையார் தாமே
நீரார் நியமம் உடையார் தாமே
நீள்வரைவில் லாக வளைத்தார் தாமே
பாரார் பரவப் படுவார் தாமே
பழன நகரேம் பிரானுர் தாமே. 5

363. மாறுஇல் - அழிதல் இல்லாத. வரி - (படத்திற்) புள்ளி. 'நெற்றியின்கண்' என உருபு விரிக்க. ஏறு - பொருந்திய. பாறு உண் - பருந்துகள் விழ்ந்து புலாலை உண்கின்ற. பலி - பிச்சை.

364. சீரால் - புகழோடு; என்றது, 'யாவராலும் ஏத்தி (வணங்கப்படுவார்)' என்றருளியவாறு. "வணங்கப்படுவார்" என்றது, 'வணங்கப்படுதற்கு உரியார் அவர் ஒருவரே' என் றருளிச் செய்தவாறு; 161-ஆம் திருத்தாண்டகக் குறிப்புப் பார்க்க. "திசைக்கெல்லாம் தேவாகி நின்ருர்" என்றது, 'அவரே முழுமுதற்கடவுள்' என்றருளியவாறு; இது, பன்மை யொருமை மயக்கம். ஆரா - தெவிட்டாத. "அமுதமும்" என்னும் உம்மை, சிறப்பு. நீரார் - நீர் போலும் தெளிந்த ஒழுக்கமுடையவர்; அவரது நியமங்களை உடையவர் (தமக்கு உரிய பொருளாக ஏற்றுக்கொள்பவர்) என்க.

Koviloor Digital Library

365 காலனுயிர் வேளவ வல்லார் தாமே
கடிதோடும் வெள்ளை விடையார் தாமே
கோலம் பலவு முகப்பார் தாமே
கோணாகம் நாணாகப் பூண்டார் தாமே
நீலம் போலிந்த மிடற்றார் தாமே
நீள்வரையி னுச்சி யிருப்பார் தாமே
பால விருத்தரு மானார் தாமே 6
பழன நகரெம் பிரானார் தாமே.

366 ஏய்ந்த வுமைநங்கை பங்கர் தாமே
யேழுழிக் கப்புறமாய் நின்றார் தாமே
ஆய்ந்து மலர்தூவ நின்றார் தாமே
அளவில் பெருமை யுடையார் தாமே
தேய்ந்த பிறைசடைமேல் வைத்தார் தாமே
தீவாய் அரவதனை யார்த்தார் தாமே
பாய்ந்த படர்கங்கை யேற்றார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. 7

365. நாண் - அரை நாண். நீள்வரை - ஊழிதோறும் உயர்கின்ற மலை; கயிலை. "பால விருத்தர்" உயர்திணை உம்மைத்தொகை. உம்மை, 'குமரர்' என்பதனைத் தழுவிய எச்ச உம்மை; 'எல்லாப்பருவத்தினருமாகி, யாதொரு பருவமும் இலர்' என்றவாறு.

366. ஏய்ந்த - (தமக்குப்) பொருந்திய; எத்திறம் தான் வேண்டினும் அத்திறமாய் நிற்கின்ற. 'ஏழ்' என்பது பன்மை குறித்தவாறு. 'மலரை ஆய்ந்து தூவ' என்க. நின்றார் - அத்தூவலை (வழிபாட்டினை) ஏற்று நிற்பவர். இறைவரது பெருமைமுழுதும் உணர்ந்தார் ஒருவரும் இலர் என்பதுணர்த்துவார் "அளவில் பெருமை உடையார்" என்றருளிச் செய்தார். "நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்" (திருமுருகாற் - 278.) என்று நக்கீரதேவர் அருளியது காண்க. "வைத்தார்" "ஆர்த்தார்" என்னும் சொற்குறிப்பினால், 'பிறையை நலம்பெற வைத்து, பாம்பை அடக்கிக் கட்டினார்' என்பது பெறப்படும். "தேய்ந்த, தீவாய்" என அடைபுணர்த்ததும் அவை நோக்கி "பாய்ந்த கங்கை" என விதந்தருளிச்செய்தது, அது பிறரால் ஏற்றற்காகாமையை விளக்குதற்கு.

Koviloor Digital Library

367 ஓராதா ருள்ளத்தில் நில்லார் தாமே
யுள்ளூறும் அன்பர் மனத்தார் தாமே
பேராதென் சிந்தை யிருந்தார் தாமே
பிறர்க்கென்றுங் காட்சிக் கரியார் தாமே
ஊராரு மூவுலகத் துள்ளார் தாமே
யுலகை நடுங்காமற் காப்பார் தாமே
பாரார் முழவத் திடையார் தாமே
பழன நகரெம் பிரானூர் தாமே. 8

368 நீண்டவர்க்கோர் நெருப்புருவ மானார் தாமே
நேரிழையை யொருபாகம் வைத்தார் தாமே
பூண்டரவைப் புலித்தோல்மே லார்த்தார் தாமே
பொன்னிறத்த வெள்ளச் சடையார் தாமே

367. ஓராதார் - நினையாதவர். "ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே" என்றருளிச் செய்த திருவாசகத்தினை (சிவபுராணம் 68.) ஈண்டு நோக்குக. உள் ஊறும் அன்பர் - உள்ளத்தில் சுரந்து பெருகுகின்ற அன்பினை உடையவர். இறைவனது அருட்குணங்களை ஒருகாலைக்கு ஒருகால் மிகுதியாக அறிதலால் அன்பு அவ்வாறு பெருகுவதாயிற்று என்க. பிறரது காட்சிக்கு ஒருஞான்றும் அகப்படாதவராகிய இறைவர் நாயனாரது உள்ளத்தில் ஒருஞான்றும் நீங்காதிருந்தமை அவரது மறவாமையாலேயாம். ஆகவே, இத் திருப்பாட்டின் முதல் இரண்டடிகளும் ஒரு பொருளையே பொதுவாகவும், சிறப்பாக வும் அனுபவமாக இனிதுணர்த்தியவாறுதல் அறிக. ஊர் ஆரும்- ஊர்கள் நிறைந்த;மேல்கீழ் உலகங்களிலும் ஊர்கள் உளவென்க. ஆர் முழவம் - ஒலிக்கின்ற மத்தளம்போலும் ஓசையையுடைய கடல்; உவமையாகுபெயர்; நிலமும் கடலுமாய் இருப்பவர் என்றபடி.

368. நீண்டவர், திருமால்; நீண்டு மூவுலகையும் அளந்த அவர்க்கே அளப்பரிதாக நீண்டார் என்றவாறு. "பூண்டு" என்ற செய்தெனெச்சம், எண்ணுப் பொருளதாய் நின்றது. 'உண்டு உறங்கினான்' என்பதிற்போல; எனவே, 'அரவைப் பூண்டார்; புலித்தோலை மேல் ஆர்த்தார்' என்பது பொருளா யிற்று. 'பொன்னிறத்த சடை' என இயையும். "ஆண்டு

Koviloor Digital Library

ஆண்டுலகே ழனைத்தினையும் வைத்தார் தாமே
அங்கங்கே சிவமாகி நின்றார் தாமே
பாண்டவரிற் பார்த்தனுக்குப் பரிந்தார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. 9

369 விடையேறி வேண்டுலகத் திருப்பார் தாமே
விரிகதிரோன் சோற்றுத் துறையார் தாமே
புடைசூழத் தேவர் குழாத்தார் தாமே
பூந்துருத்தி நெய்த்தானம் மேயார் தாமே
அடைவே புனல்சூழ்ஐ யாற்றார் தாமே
அரக்கனையும் ஆற்ற லழித்தார் தாமே
படையாப் பல்பூத முடையார் தாமே
பழன நகரெம் பிரானார் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

வைத்தார்" என்பதனை, 'வைத்து ஆண்டார்' என மாற்றியுரைக்க. வைத்து - படைத்து. அங்கங்கே சிவமாகி நிற்றலாவது, உயிர்கள் வழிபட்டு உய்வான் வேண்டிப் பல இடங்களில் குரு லிங்க சங்கமத் திருமேனிகள் கொண்டு எழுந்தருளியிருத்தல்;

"தாபர சங்க மங்கள் என்றிரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்"

என்பது சிவஞான சித்தி. (சூ. 2-28). இதனால் அவரது பெருங் கருணைத் திறம் அருளிச்செய்யப்பட்டது. பரிந்தார் - இரங்கினார். இறைவரை நோக்கித் தவம்செய்துகொண்டிருந்த பார்த்தனை (அருச்சுனனை)க் கொல்லவேண்டி 'மூகன்' என்னும் அசுரன் பன்றிவடிவங் கொண்டு வர அதனைப் பார்த்தன் அறியாதிருந்தமை பற்றி, இறைவர் தாமே வேட்டுவ வடிவங்கொண்டு சென்று, அப் பன்றியை விரைந்து அம்பெய்து கொன்ற வரலாற்றினைப் பாரதத்துட் காண்க.

369. 'இருப்பர்' என்றது, 'சென்று காட்சியளிப்பர்' என்றவாறு. சோற்றுத்துறை சூரியன் வழிபட்ட தலமாகலின், "விரிகதிரோன் சோற்றுத்துறை" என்றருளினார். 'சூழ் அத் தேவர்' எனப் பிரிக்க. சோற்றுத்துறையும் பூந்துருத்தியும் நெய்த்தானமும், ஐயாறும் சோழநாட்டுத் தலங்கள். 'பல்பூதம் படையா உடையார்' எனக் கூட்டுக.

Koviloor Digital Library

Koviloor Digital Library



திருவையாற்றுத் தென்கயிலாயம்

Koviloor Digital Library

37. திருவையாறு

திருப்பதிக வரலாறு

நாயனர் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்து, அக்காட்சி மறைந்தபின்பு வருந்தித் தெளிந்து, தாம் கண்ட காட்சியை 'மாதர்ப்பிறைக் கண்ணியானை' என்னுந் திருப்பதிகத்தினுல் அருளிச்செய்து, பின் பலநாள் அங்கு அமர்ந் திருந்தபொழுது பாடியருளிய திருப்பதிகங்களுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. - 385.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

370 ஆரார் திரிபுரங்கள் நீரு நோக்கும்
அனலாடி ஆரமுதே யென்றேன் நானே
கூரார் மழுவாட் படையோன் றேந்திக்
குறட்பூதப் பல்படையா யென்றேன் நானே

இத் திருப்பதிகம், இறைவனை இடைவிடாது துதிக்கும் பேறு பெற்றமையை நினைந்த மகிழ்ச்சி மீதூர்வின்கண் அருளிச் செய்தது. தொடர்தோறும் 'நானே' எனப் பலவிடத்தும் பிரிநிலை ஏகாரம் தந்து விதந்தோதியதும் அதனுலேயாம்.

"யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானேஅக்
கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன்."

"பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை யேத்தத் - துணிந்தும்
எந்தையார்க் காட்செய்யப் பெற்ற இதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு".

—(அற்புதத் திருவந்தாதி, 7 - 79.)

என்ற அம்மை திருமொழிகளைக் காண்க.

370. ஆரார் - பொருந்தார்; பகைவர். "நீருக" என்னும் ஈறுகெட்ட செயவெனெச்சம் செயப்படுபொருளாய் நின்றது,

Koviloor Digital Library

பேரா யிரமுடையா யென்றேன் நானே
பிறைசூடும் பிஞ்ஞகனே யென்றேன் நானே
ஆரா அமுதேயென் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 1

371 தீவாயின் முப்புரங்கள் நீறு நோக்குந்
தீர்த்தா புராணனே யென்றேன் நானே
மூவா மதிசூடி யென்றேன் நானே
முதல்வா முக் கண்ணனே யென்றேன் நானே
ஏவார் சிலையானே யென்றேன் நானே
இடும்பைக் கடல்நின்றும் ஏற வாங்கி
ஆவாவென் றருள்புரியும் ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 2

'உண்ணக் கண்டேன்' என்பதிற்போல. "நோக்கும்" என்றது, இயைந்து செய்யுங் குறிப்பை உணர்த்திற்று. இனி, 'நீரும்படி கருதிய' என்றும் ஆம். "அனலாட" எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். குறள் - குறுகிய வடிவம். "ஆயிரம்" என்றது அளவின்மையைக் குறித்தது. "ஐயாறன்னே" என்பதில் னகரம், விரித்தல். அரற்றி - வாய்விட்டு அழைத்து. நைகின்றேன் - மனம் உருகி நிற்கின்றேன். 'இன்னதொரு தவப்பயன் இருந்தவாறு நன்று' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. "நைகின்றேனே" என்னும் ஏகாரம், தேற்றம்.

371. 'தீ வாயின் நீறு' என இயையும். தீர்த்தன் - தூயோன். மூவா - முதிராத; என்றும் இளதாய் இருக்கும், ஈண்டும், "சூட" எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். ஏ ஆர் சிலை - அம்பு பொருந்தும் வில்; இது, 'பிநாகம்' என்னும் பெயருடையது 'ஆவா (ஆஆ)' என்பது, அவலப் பொருளும். வியப்புப் பொருளும் தருவதோர் இடைச்சொல்; ஈண்டுப் பிறர் பொருட்டுத் தோன்றும் அவலப் பொருள் தந்தது. இனி, 'ஆ வா என்று அருள் புரியும்' எனக்கொள்ளினும் ஆம்.

Koviloor Digital Library

372 அஞ்சுண்ண வண்ணனே யென்றேன் நானே
அடியார்கட் காரமுதே யென்றேன் நானே
நஞ்சணி கண்டனே யென்றேன் நானே
நாவலர்கள் நான்மறையே என்றேன் நானே
நெஞ்சுணர வுள்புக் கிருந்த போது
நிறையும் அமுதமே யென்றேன் நானே
அஞ்சாதே யாள்வானே ஐயா றன்னே
யென்றேன்றே நானரற்றி நைகின்றேனே 3

373 தொல்லைத் தொடுகடலே யென்றேன் நானே
துலங்கும் இளம்பிறையா யென்றேன் நானே
எல்லை நிறைந்தானே யென்றேன் நானே
ஏழ்நரம்பின் இன்னிசையா யென்றேன் நானே
அல்லற் கடல்புக் கழுந்து வேனை
வாங்கியருள் செய்தா யென்றேன் நானே
எல்லையாம் ஐயாறு என்றேன் நானே
யென்றேன்றே நானரற்றி நைகின் றேனே. 4

372. அம் சுண்ணம் - அழகிய நறுமணப் பொடி; இது பொன்நிறம் உடையது; 'திருப்பொற் சுண்ணம்' என்றது காண்க (திருவாசகம்.) நாவலர்கள் - பொருள் விரிக்க வல்லவர்கள்; அவர்கட்கே நான்மறையை உரிமையாக்கினர் என்க. "அடியார்கட்கு ஆரமுது" என முன்னர் அருளிச்செய்தமையால், இங்கு, 'என் நெஞ்சுணர' என ஒருசொல் வருவித்துரைக்க. உணர - உணருமாறு. உணராதவாறு புக்கிருக்குங்கால் இன்பம் செய்யாமையின், "உணரப் புக்கு இருந்தபோது நிறையும் அமுதமே" என் றருளிச்செய்தார். அஞ்சாதே - அஞ்சாதபடி. ஆளுதல் - காத்துப் பணிகொள்ளுதல். "காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்" என முதற்றிருப்பதிகத்தே அருளிச்செய்தார். (திருமுறை 4, 1 - 5.)

373. தொல்லை - பழைமை. தொடு கடல் - வளைந்த கடல். இனி, 'சகரர்களால் தோண்டப்பட்ட புதிய கடல்' எனக் கொண்டு, 'இது கிழ்க்கடல்' எனவும், பழைய கடல் மேற்கடல் எனவும், "குணஅது கரைபொரு தொடுகடல்" எனவும் "குடாஅது தொன்றுமுதிர் பௌவம்" எனவும், (புறம் - 6.) கூறியாங்கு உரைத்தலும் ஒன்று; இப் பொருட்கு, 'தொல்லைக் கடல்

Koviloor Digital Library

374 இண்டைச் சடைமுடியா யென்றேன் நானே
இருசுடர் வானத்தா யென்றேன் நானே
தொண்டர் தொழப்படுவா யென்றேன் நானே
துருத்திநெய்த் தானத்தா யென்றேன் நானே
கண்டங் கறுத்தானே யென்றேன் நானே
கனலாகுங் கண்ணனே யென்றேன் நானே
அண்டத்துக் கப்பாலாம் ஐயா றன்னே
யென்றேன்றே நானரற்றி நைகின் றேனே. 5

375 பற்றார் புரமேரித்தா யென்றேன் நானே
பசுபதீ பண்டரங்கா வென்றேன் நானே
கற்றார்கள் நாவினு யென்றேன் நானே
கடுவிடை யோன்றூர்தியா யென்றேன் நானே
பற்றுனார் நெஞ்சுளா யென்றேன் நானே
பார்த்தர்க் கருள்செய்தா யென்றேன் நானே
அற்றார்க் கருள்செய்யும் ஐயா றன்னே
யென்றேன்றே நானரற்றி நைகின் றேனே. 6

தொடுகடல்' எனத் தனித்தனி முடித்து. அவைகளை வேறு வேறு கடலாக உரைக்க. "எல்லை" இரண்டனுள் முன்னது உலகத்தையும், பின்னது உறைவிடத்தையும் குறித்தன.

374. இண்டை - முடிமாலை. 'இருசுடரை உடைய' என்க. "தொண்டர் தொழப்படுவாய்" என்றது, பிறர் தொழ வாராமையைக் குறித்தருளியவாறு. துருத்தி, நெய்த்தானம் சோழநாட்டுத் தலங்கள்.

375. பற்றார் - பொருந்தாதவர்; பகைவர். பண்டரங்கன் - பாண்டரங்கம் என்னும் கூத்தை உடையவன். கற்றவர்கள் இறைவனையே துதித்தல் பற்றி, "கற்றார்கள் நாவினுய்" என்றார். கடுவிடை - விரைந்து செல்லும் எருது. 'ஒன்றை ஊர்தியா உடையாய்' என்க. பற்று ஆனார் - அன்பர் ஆயினார்; இதனுள், "பற்று" என்பது, பண்பின் பெயர் பண்பியின்மேல் நின்ற ஆகுபெயர், "இல்லதென் இல்லவள் மாண்பானல்" (குறள் - 63.) என்பதிற்போல. அற்றார் - களைகண் இல்லாதவர்; 'திக்கற்றவர்க்குத் தெய்வம் துணை' என்னும் பழமொழியையும் நினைக்க.

Koviloor Digital Library

376 விண்ணோர் தலைவனே யென்றேன் நானே
விளங்கும் இளம்பிறையா யென்றேன் நானே
எண்ணா ரெயிலெரித்தா யென்றேன் நானே
ஏகம்பம் மேயானே யென்றேன் நானே
பண்ணார் மறைபாடி யென்றேன் நானே
பசுபதீ பால்நீற்றா யென்றேன் நானே
அண்ணாஐ யாறனே யென்றேன் நானே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 7

377 அவனென்று நானுன்னை யஞ்சா தேனை
அல்லல் அறுப்பானே யென்றேன் நானே
சிவனென்று நானுன்னை யெல்லாஞ் சொல்லச்
செல்வந் தருவானே யென்றேன் நானே
பவனாகி யென்னுள்ளத் துள்ளே நின்று
பண்டை வினையறுப்பா யென்றேன் நானே
அவனென்றே யாதியே ஐயா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 8

376. எண்ணார் - மதியாதவர்; பகைவர். எயில் - மதில்; அரண். ஈண்டும், "பாடி" எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். "அண்ணா" என்பது, 'அண்ணல்' என்னும் பொருளுடைய 'அண்ணன்' என்பதன் விளிப் பெயர்; 'பெருமையுடையவனே' என்பது பொருள். 'என்று என்று இவ்வாறு சொல்லி அரற்றி' என உரைக்க.

377. "உன்னை அஞ்சாதேனை, 'நான் அவன்' என்று அல்லல் அறுப்பானே" எனக் கூட்டுக. அவன் - அவம் உடையவன்; வீணன்; பயனற்றவன். "நின் பணி பிழைக்கில் புளியம் வளாரால் மோதுவிப்பாய் என்று அஞ்சிப் பிழையா தொழும் அறிவில்லேனாகிய என்னை, 'இவன், அறிவது அறிந்து பயன் எய்தும் அறிவு இல்லாதவன்' என்று கருதித் திருவுளம் இரங்கிக் கொடிதாகிய சூலைநோயைக் கொடுத்து நல்லறிவு பெறுவித்துப் பின்னர் அந்நோயையும் தீர்ப்பவனே" என இத் தொடரின் பொருளை விரித்துரைத்துக் கொள்க. "தீர்ப்பவன்" என எதிர்காலத்தாற் கூறியது, அன்னதோர் அருள் அவனுக்கு என்றும் உள்ள இயல்பாதலை நினைந்து, இதனுள், இறைவன்

Koviloor Digital Library

378 கச்சியே கம்பனே யென்றேன் நானே
கயிலாயா காரோணா என்றேன் நானே
நிச்சன் மணாளனே யென்றேன் நானே
நினைப்பார் மனத்துளா யென்றேன் நானே
உச்சம்போ தேறேறீ யென்றேன் நானே
உள்குவா ருள்ளத்தா யென்றேன் நானே
அச்சம் பிணிதீர்க்கும் ஐயா றன்னே
யென்றேன்றே நானரற்றி நைகின்றேனே. 9

கூற்றில், 'இவன்' எனப் படர்க்கையாக அருளற்பாலதனைத் தம் கூற்றாக "நான்" எனத் தன்மையில் அருளிச் செய்தார் என்க. "சிவன்" என்றது ஈண்டு, 'இன்பத்திற்குக் காரணன்' எனப் பொருள்தரும். என்று - என்று உணர்ந்து. எல்லாம் - (உனது புகழ்கள்) பலவும். சொல்ல - சொல்லி ஏத்த. செல்வம் - திருவருட்செல்வம். பவன் - விளங்கித் தோன்றுவோன். இறுதியில் உள்ள "அவன்" என்பது, 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' (தாயுமானவர்-13.) என்பதிற்போல. பலர் அறிசுட்டுப்பெயர். "என்று" என்பதனை, "ஆதியே" என்பதனோடுங் கூட்டுக.

378. நிச்சல் மணாளன் - என்றும் அழகன்; என்றும் ஒரு படியனாய் இருப்பவன்; அழிவில்லாதவன். "நித்தமணாளர் நிரம்ப அழகியர்" என்னும் திருவாசகத்தை நோக்குக (அன்னைப் பத்து 3.). உச்சம் போது ஏறு - (கடகரியும் பரிமாவும் தேரும் போன்ற) ஊர்திகள் எல்லாவற்றினும் மேலாக விரைந்து வருகின்ற இடபம்; இனி, 'உச்சிப் போதின்கண் வெயில்போலும் வெள்ளிதாகிய இடபம், எனலுமாம். 'நினைத்தல், உள்குதல்' என்பவற்றை முறையே, 'ஞாபகம் கொள்ளல், தியானம் செய்தல்' என்னும் பொருளுடையனவாகக் கொள்க. "பிணி" என்பதன் பின், 'இரண்டும்' என்னும் செவ்வெண்தொகை விரிக்க.

Koviloor Digital Library

379 வில்லாடி வேடனே யென்றேன் நானே
வெண்ணீறு மெய்க்கணிந்தா யென்றேன் நானே
சொல்லாய சூழலா யென்றேன் நானே
சுலாவாய தொல்நெறியே யென்றேன் நானே
எல்லாமா யென்னுயிரே யென்றேன் நானே
இலங்கையர்கோன்தோளிறுத்தாயென்றேன் [நானே
அல்லா வினைதீர்க்கும் ஐயா றன்னே
யென்றேன்றே நானரற்றி நைகின் றேனே. 10

திருச்சிற்றம்பலம்

379. 'சொல்லாடுதல்' என்பதுபோல. 'வில்லாடுதல்' என்பது ஒருசொல்; வில்லை ஆளுதல் என்பது பொருள். வேடனாகியது அருச்சுனனின் பொருட்டு. சொல்லாய சூழலாய் - சொல்லாகிய இடத்தில் உள்ளவனே; 'யான் இவ்வாறெல்லாம் சொல்லும் சொற்களாகியும் இருப்பவனே' என்றபடி. சுலாவு ஆய - பரத்தல் பொருந்திய. தொல் நெறி - தொன்று தொட்டு நல்லோர் பலரும் அடிப்பட்டுச் சென்றநெறி; 'இப்படியால் இது வன்றித் தம் இசைவு கொண்டியலும் துப்புரவில்லாரது புது நெறிகள் அல்லை' (பெ. புராணம். திருஞா. 71.) என்றபடி. 'எல்லாம் ஆய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல். "உயிர்" என்பது 'உயிர்போன்றவன்' என உவமை யாகுபெயர். அல்லாவினை - சார்தற்கு உரியதல்லாத வினை; இஃது இனச் சுட்டில்லா அடை. எனவே, "வினை" என்றது நல்வினை, தீவினை ஆகிய இருவினையையும் குறித்தருளிய தாம். நல்வினையும் பிறப்பிற்கு வித்தாகலின் சார்தற்கு உரியதாகாதாயிற்று; "இருள்சேர் இருவினையும் சேரா" (குறள் - 5.) என்றருளினார், திருவள்ளுவநாயனாரும்.

தொழுதணைவுற் றண்டவர சன்புருகத் தொண்டர்குழாத்
திடையே சென்று
பழுதில்பெருங் காதலுட னடிபணியப் பணிந்தவர்தங்
கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையா லெடுத்திறைஞ்சி விடையின்மேல்
வருவார் தம்மை
யழுதழைத்துக் கொண்டவர்தா மப்பரே யெனவவரு
மடியே னென்றார். 182

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

38. திருவையாறு

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றினை முன் திருப்பதிகத்திற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

380 ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 1

இத்திருப்பதிகம், இறைவனது அருட்குணம், அருட்செயல் என்பவற்றை வகுத்தெடுத்துப் பல தொடர்க் கோவையாக முன்னிலை வகையால் விதந்து அருளிச்செய்தது.

380. "ஓசை, ஒலி" என்பன, 'சத்தம், நாதம்' என்னும் பொருளுடையன. 'வெற்றோசையும் பொருளோசையும்' என ஓசை இருவகைப்படும். அவற்றுள், வெற்றோசையை "ஓசை" என்றும், பொருளோசையை "ஒலி" என்றும் அருளிச்செய்தார். பொருளோசை, எழுத்தும் சொல்லுமாக அறியப்படும். 'எழுத்து' என்பதும், 'சொல்' என்பதும் உண்மையில் முறையே பொருள் உணர்வாகிய ஆற்றலும், அவ்வாற்றலின், கூட்டமுமேயாகும். ஆயினும், அவ்வாற்றலை எழுப்புகின்ற அளவுபட்ட ஓசையும், அவற்றது கூட்டமும் ஆகுபெயரால், 'எழுத்து' என்றும், சொல் என்றும் சொல்லப்படுகின்றன. இதுவே, 'எழுத்துக் களின் தன்மை' எனப்படுவது. 'இதனை ஆசிரியர் (தொல் காப்பியனார்) நமக்கு உணர்த்தலாகாமையின் உணர்த்திற்றிலர்' என்பர் உரையாளர். "எழுத்துக்கள் புணர்ச்சிக்கண் ஒன்று வேறொன்றாதலை, "மெய்பிறிதாதல்" எனக் குறியிட்டு,

Koviloor Digital Library

(எழுத்து - 110.) அவ்வாறே பலவிடத்தும் ஆண்டமையின், பொருளுணர்த்தும் ஆற்றலே உண்மை எழுத்தென்பதும், ஓசை அதற்கு நிமித்தம் என்பதும் அவ்வாசிரியரது கருத்தாதல் தெளிவு. இனி, அவ்வாற்றலைப் புலப்படுக்கும் ஓசையை, "மெய்தெரி வளியிசை" (பொருளைத் தெரிவிக்கும் காற்றொலி) என விளக்கினர் (எழுத்து-103.). அதனால் அவற்றை 'எழுத்து' என்றும், அவற்றது கூட்டத்தைச் 'சொல்' என்றும் கூறுதல் பான்மை வழக்கே என்பதும், ஆயினும், எழுத்துக்களது உண்மைத் தன்மை உலகத்தார்க்கு இனிது விளங்காது அவை தாமே எழுத்தும் சொல்லுமாய் நிற்றல் பற்றி செவ்வன் வழக்காகவே ஆளப்படுவது என்பதும் விளங்கும்.

யாழின் நரம்புகள் ஓரோர் அளவிற்பட்டு நின்று, கேட்டற்கு இனியவாய் இசையுமாறு எழுப்ப எழுந்து 'இசை' என்னும் காரணக் குறிபெறும் ஓசைபோல, அளவிற்பட்டுப் பொருளுணர்வு தோன்றுமாறு இசைந்து நிற்கும் ஓசையும் 'இசை' எனப்படுதலின், "ஓரள பிசைக்கும் குற்றெழுத்தென்ப" "ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப" (எழுத்து - 3. 4.) என்றாற் போல எழுத்தையும், "மெய்தெரி வளியிசை", (எழுத்து - 103.) "ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே" "உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைக்கும்" (சொல் - 1, 4.) என்றாற்போலச் சொல்லையும், 'இசை'யென வழங்குவர் ஆசிரியர்.

மெய்தெரி வளியிசை, உயிர்வளியின் (பிராணவாயுவின்) இயக்கத்தால் புறந்துப்போந்து உரத்து இசைத்தலும், அஃது இன்றி, எழுவளி (உதான வாயு) அளவில் அகத்து மிடற்றின் கண்ணே நின்று மெல்ல இசைத்தலும் ஆகிய இருநிலையை உடைத்து என்பதும், அவற்றுள புறத்திசைக்கும் நிலையே இயற்றமிழ் நூலுள் எழுத்தெனவும், சொல்லெனவும் எடுத்து வரையறை கூறப்பட்ட தென்பதும், ஏனை அகத்திசைக்கும் நிலை மெய்ந்நூலுள்ளே (தத்துவசாத்திரத்துள்) வரையறுத் துணர்த்தப்படும் என்பதும் தொல்லாசிரியர் துணிபென்பது,

"எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே"

எனவும், (தொல். எழுத்து - 102.)

Koviloor Digital Library

"அஃதிவண் நுவலாது எழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே"

(ஷி - 103.) எனவும் ஓதியவாற்றான் அறியப்படும்.

'சொல்லை வாக்கு' என்றலின், அகத்தெழு வளியிசையை, 'மத்திமை வாக்கு' எனவும், புறத்திசைக்கும் வளியிசையை. 'வைகரி வாக்கு' எனவும் மெய்ந்நூல் கூறும்.

இனி; சொல், அகத்தெழு வளியொடும்படாது நினைவின் கண்ணே நிற்கும் நிலையும் உண்டு; அது, 'பைசந்தி வாக்கு' எனவும், சொல் இவ்வாறெல்லாம் வெளிப்படாது தன்னியல்பில் நிற்கும் நிலை 'சூக்கும வாக்கு' எனவும் சொல்லப்படும். இவற்றுள் சூக்கும வாக்கே 'நாதம்' எனப்படுவது. இதனையே சிலர், 'நாதப் பிரமம்' எனக் கடவுளாகக் கூறுவர்; அது, சொல்லும் சடமே என்பது உணராதாரது கூற்றேயாமென்க. உணர்வுடையோர், கூற்றாயின், உண்மை என்னாது, "அன்னம் பிரமம்" (தைத்ரீயம்) என்பதுபோல உபசாரம் என்க.

இங்ஙனங் கூறியவாற்றால், "ஓசை" எனப்பட்டதும், "ஒலி" எனப்பட்டதும் வேறு வேறு என்பது விளங்கிற்று.

ஒருவன் - ஒப்பற்ற தலைவன். பொன், மணி முதலியன போல, நறுமணங் கமழும் மலர்களும் உலகப் பொருகளுட் சிறப்புடையன வாகலான் அவைகளை எடுத்தோதியருளினார். மலையான் - மலையரசன். நாயனாருக்கு இறைவன் திருநல்லூரில் திருவடி சூட்டினமையை அவரது புராணத்துட் காண்க. தேச விளக்கு - உலகில் உள்ள ஒளிப்பொருள்கள்; அவை ஞாயிறு, திங்கள், தீ முதலியன. செம்பொற்சோதி - செம்பொன்னினது ஒளிபோன்றுள்ளவனே; சோதி, உவமையாகுபெயர். 'ஆனாய்' முதலிய பலவும் வினைப்பெயர்கள். அவை எழுவாயாய் நின்று நீயே என்னும் பெயர்கொண்டு முடிந்தன; ஏகாரங்கள், 'பிறரல்லர்; நீ ஒருவனே' எனப் பிரித்து நின்ற பிரிநிலை.

Koviloor Digital Library

381 நோக்கரிய திருமேனி யுடையாய் நீயே
　　நோவாமே நோக்கருள வல்லாய் நீயே
காப்பரிய ஐம்புலனுங் காத்தாய் நீயே
　　காமனையுங் கண்ணழலாற் காய்ந்தாய் நீயே
ஆர்ப்பரிய மாநாக மார்த்தாய் நீயே
　　அடியானேன் றடியேன்மேல் வைத்தாய் நீயே
தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே
　　திருவையா றகலாத செம்பொற் சோதீ　　2

382 கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே
　　கடல்வரைவான் ஆகாய மானாய் நீயே
தனத்தகத்துத் தலைகலனாக் கொண்டாய் நீயே
　　சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய் நீயே
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
　　மலர்ச்சே வடியேன்மேல் வைத்தாய் நீயே
சினத்திருந்த திருநீல கண்டன் நீயே
　　திருவையா றகலாத செம்பொற் சோதீ.　　3

381. நோக்கரிய திருமேனி - ஊனக் கண்ணாற் காணுதல் இயலாத திருமேனி; "திருமேனி" என்பது, வடிவத்தையே யன்றி, இயல்பையுங் குறிக்கும். நோவாமே - வருந்தாதபடி; வருத்தம், பசி பிணி முதலியவற்றாலும், பிறப்பினாலும் வருவன. நோக்கு - அருட்பார்வை. இனி, "நோக்கு" என்பதனை, 'அழகு' எனக்கொண்டு, 'நோயுறாத அழகிய உடம்பு, என்று ரைத்தலுமாம். காப்பரிய - அடக்குதற்கரிய. காத்தாய் - அடக்கினாய். இறைவனைப் புலன்களை அடக்கியிருப்பவனாகக் கூறுதல், எல்லாவற்றையும் அறிந்தும், அவற்றுள் ஒன்றிலும் அழுந்தாது பற்றற்று நிற்றல் பற்றி என்க. ஆர்த்தல் - கட்டுதல்.

382. கனம் - மேகம். கடுஞ்சுடர் மிக்க ஒளி; மின்னல். தனம் - செல்வம்; 'தலை ஓடாகிய பாத்திரத்தில் பிச்சை யெடுத்தல்தான் உனது செல்வநிலை' என நகைச்சுவை தோன்ற அருளியவாறு. தகைந்து - தடுத்து; பிறரிடத்துச் செல்லாத வாறு நிறுத்தி. நஞ்சை உட்கொண்டிருத்தலை, "சினத்திருந்த" என்றருளிச் செய்தார்.

Koviloor Digital Library

383 வானுற்ற மாமலைக ளானுய் நீயே
வடகயிலை மன்னி யிருந்தாய் நீயே
ஊனுற்ற வொளிமழுவாட் படையாய் நீயே
ஒளிமதியோ டரவுபுனல் வைத்தாய் நீயே
ஆனுற்ற ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அடியானேன் றடியேன்மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொல்மட வாள் பங்கன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 4

384 பெண்ணுண் பிறப்பிலியாய் நின்ருய் நீயே
பெரியார்கட் கெல்லாம் பெரியாய் நீயே
உண்ணு வருநஞ்ச முண்டாய் நீயே
ஊழி முதல்வனுய் நின்ருய் நீயே
கண்ணு யுலகெலாங் காத்தாய் நீயே
கழற்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்ணுர் மழுவாட் படையாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 5

383. வான் உற்ற - ஆகாயத்தை அளாவிய. 'வடகயிலை' என்றதை "செஞ்ஞாயிறு" (புறம்30) என்பதுபோலக்கொள்க. "தேன் உற்ற" என்பதில், "உற்ற" உவம உருபு; இதனை, 'இயைய, ஏய்ப்ப' முதலியனபோலக் கொள்க.

384. 'பெண்ணும் ஆணும் ஆகிய பிறப்புக்களை இல்லாதவன்' என்க. ஊழி முதல்வன் - காலத்தை நடத்தும் தலைவன். பெரியார்கள் - ஞானியர்; அவர்கட்கெல்லாம் பெரியவன் என்றது, இயற்கையுணர்வும், சுதந்திர உணர்வும் உடைமை பற்றி. "உலகு" என்றது, உயிர்களை; அவைகளுக்குக் "கண்" என்றது, அறிவுக்கறிவாகி நிற்றலை; "சொன்ன சிவன் கண்ணு" (சிவஞானபோதம் - சூ - 5. அதி - 2.)

Koviloor Digital Library

385 உற்றிருந்த உணர்வேலா மாகுய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்ருய் நீயே
கற்றிருந்த கலைஞான மாகுய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்ருய் நீயே
பேற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே
பிராகு யடியேன்மேல் வைத்தாய் நீயே
சேற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 6

386 எல்லா உலகமு மாகுய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்ருய் நீயே
போல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியேன்மேல் வைத்தாய் நீயே
சேவ்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 7

385. உற்றிருந்த - பொருள்களை உணர்ந்துள்ள. உற்றவர் - அடைந்தவர். ஓர் சுற்றம் - தனித்ததொரு களைகண். "கற்றவர்" என்றது, கற்றவழியே தனது நற்ருள் தொழுகின்றவரை. கற்பகம் - விரும்பியவற்றை யெல்லாங் கொடுப்பவன். செற்று - நஞ்சினைச் செறுத்து ; அடக்கி.

386. "எல்லா உலகமும் ஆகுய்" என்றது, இறைவனது பெருநிலை (சருவ வியாபகநிலை)யையும், "ஏகம்பம மேவி இருந்தாய்" என்றது. அவன் தனது பேரருள் காரணமாக எளிவந்து நிற்கும் வரையறை (ஏகதேசமாம்) நிலையையும் விளக்கியருளியவாறு. எனவே, ஓரிடத்து நிற்றலை விளக்குதற்கு ஏகம்பத்தைக் குறித்தருளியவாரும். இதனுல் நாயனுர்க்கு, திருவேகம்பத்தில் ஒரு தனிப்பேரன்பிருந்தமை தெளியப்படும். 'நல்லாரை நன்மை அறிவான்' என்றது. 'பசுவைப்பால்கறந்தான்' என்பதுபோல நின்றது, இங்ஙனம் அருளியது, 'நல்லாரது நன்மையை அறிந்து அவர்க்கு அருள் செய்வாய்' என்றருளியவாறு. இதனுனே, 'தீயாரது தீமையை அறிந்து அவரைத் தெறுவாய்' என்பதும் பெறப்படும். அதனையன்றி இதனையே எடுத்தோதியருளினமையால், 'தெறுதல் ஓரோவழி அளவிற்

Koviloor Digital Library

387 ஆவினில் ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அளவில் பெருமை யுடையாய் நீயே
பூவினில் நாற்றமாய் நின்ருய் நீயே
போர்க்கோலங் கொண்டெயி லெய்தாய் நீயே
நாவில் நடுவுரையாய் நின்ருய் நீயே
நண்ணி யடியேன்மேல் வைத்தாய் நீயே
தேவரறியாத தேவன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 8

குறைதலும், கைவிடப்படுதலும் உளவாமாயினும், அருளல் அவை இரண்டுமின்றி அளவின் மிகுதலுமுடைத்து' என்றல் திருவுள்ளமாதல் பெறப்படுகின்றது. "கடிதோச்சி மெல்ல எறிக" (குறள் - 562.) எனத் தெறுதற்கே மென்மை கூறினமையின், தலைவராயினூர்க்கு இயல்பு இதுவே என்பது திருவள்ளுவனாயனூர்க்குங் கருத்தாதல் அறியப்படும். சுடர் - ஒளி; 'ஞானமாகிய ஒளியையுடைய விளக்கு' என்க. 'செல்வமாய' என்பது கடைக்குறைந்து, "செல்வாய" என நின்றது; 'உண்மைச் செல்வம் (அழியாச் செல்வம் - வீடுபேறு) ஆகிய செல்வத்தைத் தருபவன் நீ ஒருவனே, பிறரில்லை' என்றபடி. இதனுல் 'அழிதன் மாலையவாகிய செல்வங்களையும் சிவபிரானே தருவானுயினும், அவைகளைத் தம்தம் புண்ணிய விசேடத்தால் தரும் ஆற்றலுடையார் பிறரும் உளர்; ஆயினும். அழியாச் செல்வமாகிய வீடு பேற்றைத் தரும் ஆற்றலைப் பிறர் ஒருவரும் உடையராதல் இல்லை, அவர்தாமே அதனைப் பெருது கட்டுண்டு கிடத்தலின்' என்பதுணர்க. இனி, 'அழியாது என்றும் செல்லும் நிலைமையையுடைய செல்வம்' என, இயல்பாகவே வினைத்தொகையாகக் கொண்டு, மேலைப் பொருளே பொருளாக உரைப்பினும் அமையும்; இவ்வுரைக்கு, 'வாய் - நிலைமை' என்க.

387. நடுவுரை - நடுவுநிலையான சொல்; நீதியான தீர்ப்பு; அறங்கூ றவையத்தில் (நீதிமன்றத்தில்) இருப்பவர்கட்கு இறைவன் நடுவுநிலை (நீதி) வடிவில் நின்று, அதனிற் பிறழாதோர்க்கு அருளும், பிறழ்ந்தோர்க்குத் தெறலும் செய்தருளுவன் என்பது இதனுல் அருளிச்செய்யப்பட்டது. திருமுறைகளுட் பலவிடங்களில், இறைவனை, 'நீதிவடிவினன்' என்று ஓதுவதன் உண்மை இதனுல் விளங்கும். இறைவனுண்மை கொள்ளாது வினையையே

Koviloor Digital Library

388 எண்டிசைக்கும் ஒண்சுடராய் நின்றாய் நீயே
ஏகம்ப மேய இறைவன் நீயே
வண்டிசைக்கும் நறுங்கொன்றைத் தாராய் நீயே
வாரா வுலகருள வல்லாய் நீயே
தொண்டிசைத்துன் அடிபரவ நின்றாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 9

முதலாகக் கொள்வார், "அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்" (சிலப்பதிகாரம் - பதிகம் - 55.) என்றாற்போல, அந் நீதிதானே அளியும் தெறலும் செய்யும் என்பர்; அதனை 'அளி, தெறல்' என்பன அறிவுடைப்பொருளின் பண்பாவ தல்லது, அறிவில் பொருளின் பண்பல்லவாகலின் அவற்றிற் கேற்ற செயல்களை அறமே செய்தல் எங்ஙனம் என ஆய்ந் தொழிக. இனி, "என்பிலதனை வெயில்போலக் காயுமே - அன்பிலதனை அறம் (குறள் - 77.) "அல்லாத மாந்தர்க் கறங் கூற்றம்" (மூதுரை) என்றாற்போல அருளுவார்க்கு, இறைவன் ஆணைவழியானே அறம் அத்தன்மைத்தாம் என்பது கருத்தாதல் அவர் நூல்களுள் வெளிப்படையாகலின், அவைபற்றி ஐய மின்றுதலறிக.

388. "சுடர்" என்றது, பொருள்களைத் தோற்றுவித்தலும், அறிவை விளக்குதலும் பற்றி. ஏகம்பம் மேவி நிற்றல், இறைவி என்றும் ஏத்தி வழிபட நிற்பதாகலான், அஃது அடியவர் என்றும் ஏத்தி வழிபட நிற்றலைக் குறித்தருளுங் குறிப்பாயிற்று. தொண்டு இசைத்து - கைப்பணியை ஏற்பித்து. பரவ - வாயால் வாழ்த்த. "திண்சிலை" மேருவாகிய வில்லையும், "ஓர்சரம்" திருமாலாகிய அம்பையும் கொள்ள நின்றன.

Koviloor Digital Library

389 விண்டார் புரமூன்று மெய்தாய் நீயே
விண்ணவர்க்கு மேலாகி நின்றாய் நீயே
கண்டாரைக் கொல்லுநஞ் சுண்டாய் நீயே
காலங்கள் ஊழியாய் நின்றாய் நீயே
தொண்டா அடியேனை ஆண்டாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்டோள்விட் டெரியாட லுகந்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 10

390 ஆரு மறியா இடத்தாய் நீயே
ஆகாயந் தேரூர வல்லாய் நீயே
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
பெரிய முடிபத் திறுத்தாய் நீயே
ஊரும் புரமூன்றும் அட்டாய் நீயே
ஒண்டா மரையானும் மாலுங் கூடித்
தேரும் அடியென்மேல் வைத்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 11

திருச்சிற்றம்பலம்

389. விண்டார் - நீங்கினார்; பகைத்தார். "கண்டாரைக் கொல்லும் நஞ்சு" என்றது, பாற்கடலைக் கடைந்தபொழுது தோன்றிய ஆலகாலத்தின் கொடுமை மிகுதியை விளக்கிற்று. தொண்டா - தொண்டனாகும்படி; தொண்டு, ஆகுபெயர். "திண்தோள்விட்டு" என்புழி, விட்டு - வீசி.

390. ஆரும் அறியா இடம் - எத்திறத்தவரும் அறிய இயலாத நிலை. அவர், 'சகலர், பிரளயாகலர், விஞ்ஞானாகலர்' என்பாரும், 'மக்கள், தேவர், காரணக் கடவுளர்' என்பாரும் முதலாகப் பலவாற்றாற் கூறப்படுபவர். "ஆகாயம் தேர் ஊர வல்லாய்" என்றது, "கல்நார் உரித்தல்", "கல்லைப் பிசைந்து கனியாக்குதல்" (திருவாசகம் - போற்றித் திருவகவல் - 97. திருவம்மானை-5) என்றாற்போலச் செய்தற்கரியனவற்றைச் செய்தல் குறித்தது. இனி, திரிபுரம் எரித்தஞான்று ஊர்ந்த தேரினது நிலையையே குறித்தது எனினும் ஆம். "பேரும் பெரிய" என்றது, 'தசக்கிரீவன்' எனப் பெருமையாகச் சொல்லப்பட்டமையை. ஊரும் புரம் - வானத்தில் இயங்கும் அரண். 'பிரமனும் மாலும் இருவருங் கூடித் தேடியும் காணுதற்கரிய திருவடியை எளியேன் தலைமேல் வைத்தருளினாய்' என்று உருகி அருளிச்செய்தவாறு.

Koviloor Digital Library

39. திருமழபாடி

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கயிலைக்காட்சியைக் கண்டு தொழுது பணிசெய்து திருப்பதிகங்கள் பல அருளிச்செய்து, திருநெய்த்தானம் பணிந்தபின் திருமழபாடி ஈசரைத் தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு. 386.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

391 நீறேறு திருமேனி யுடையான் கண்டாய்
நெற்றிமே லொற்றைக்கண் நிறைந்தான் கண்
கூறுக உமைபாகங் கொண்டான் கண்டாய் [டாய்
கொடியவிட முண்டிருண்ட கண்டன் கண்டாய்
ஏறேறி யெங்குந் திரிவான் கண்டாய்
ஏழுலகும் ஏழ்மலையு மானான் கண்டாய்
மாறானார் தம்அரணம் அட்டான் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 1

இத் திருப்பதிகம், 'கண்டாய்' என்னும் முடிபுடைய தொடர்க்கோவையால், இறைவனது பெருமைகளை எடுத்தோதி யருளியது.

391. "கண் நிறைந்தான்" எனச் சினைவினை முதன்மேல் நின்றது. 'நிறைத்தான்' என்பதே பாடம் எனலுமாம். "திரிவான்" என்றது, பழித்ததுபோலப் புகழ்ந்தது; 'அடியார்க்கு அருள் செய்தற்பொருட்டு எவ்விடத்தும் தோன்றி நிற்பான்' என்றபடி. ஏழ்மலை, ஏழு தீவுகளைச் சூழ்ந்தவை; மாறு - பகை. அட்டான் - அழித்தான். மணாளன் - அழகன் தலைவனுமாம். 'தான், ஏ' அசைநிலைகள்.

Koviloor Digital Library

392 கொக்கிறகு சென்னி யுடையான் கண்டாய்
கொல்லை விடையேறுங் கூத்தன் கண்டாய்
அக்கரைமே லாட லுடையான் கண்டாய்
அனலங்கை யேந்திய ஆதி கண்டாய்
அக்கோ டரவ மணிந்தான் கண்டாய்
அடியார்கட் காரமுத மானான் கண்டாய்
மற்றிருந்த கங்கைச் சடையான் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 2

393 நெற்றித் தனிக்கண் ணுடையான் கண்டாய்
நேரிழையோர் பாகமாய் நின்றான் கண்டாய்
பற்றிப்பாம் பாட்டும் படிறன் கண்டாய்
பல்லூர் பலிதேர் பரமன் கண்டாய்
செற்றார் புரமூன்றுஞ் செற்றான் கண்டாய்
செழுமா மதிசென்னி வைத்தான் கண்டாய்
மற்றொரு குற்ற மிலாதான் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 3

392. கொக்குவடிவாய் இருந்தமையின், 'குரண்டன்' எனப் பெயர்பெற்ற அசுரனை அழித்து, அவன் இறகைச் சிவபிரான் தலையில் அணிந்தனன் என்பது புராணவரலாறு. கொல்லை, முல்லைநிலம். 'அரைமேல் அக்கு ஆடல் உடையான்' என மாறுக. 'அக்கு' இரண்டனுள் முன்னதனை எலும்பாகவும், பின்னதனைச் சங்குமணியாகவுங் கொள்க. மற்று, வினைமாற்று; அதனால், 'அடங்கியிருந்த' என்னும் பொருள் தோற்றியது. "மற்று" என்றது இனவெதுகை.

393. படிறன் - வஞ்சன்; என்றது, பாம்பையும் அஞ்சுவித்து ஆட்டுதல்பற்றி. பல் ஊர் - பல ஊர்களில். பலி தேர் - பிச்சையை நாடிச் செல்கின்ற. பரமன் - மேலானவன்; 'பலி தேர்தலும் மேன்மையுடையனாதலும் ஆகிய மாறுபட்ட இயல்புகளை ஒருங்குடையவன்' என்றபடி. "ஒன்றொடொன் றொவ்வா வேடம் ஒருவனே தரித்துக்கொண்டு - நின்றலால் உலகம் நீங்கி நின்றனன்" (சிவஞானசித்தி. சுபக்கம் சூ - 1 - 51) என்றது காண்க. செற்றார் - பகைத்தார். செற்றான் - அழித்தான். "மற்று" என்றது, அசைநிலை.

Koviloor Digital Library

394 அலையார்ந்த புனற்கங்கைச் சடையான் கண்டாய்
அண்டத்துக் கப்பாலாய் நின்றான் கண்டாய்
கோலையான கூற்றங் குமைத்தான் கண்டாய்
கோல்வேங்கைத் தோலோன் றுடுத்தான் கண்டாய்
சிலையால் திரிபுரங்கள் செற்றான் கண்டாய்
சேழுமா மதிசென்னி வைத்தான் கண்டாய்
மலையார் மடந்தை மணாளன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 4

395 உலந்தார்தம் அங்கம் அணிந்தான் கண்டாய்
உவகையோ டின்னருள்கள் செய்தான் கண்டாய்
நலந்திகழுங் கொன்றைச் சடையான் கண்டாய்
நால்வேதம் ஆறங்க மானான் கண்டாய்
உலந்தார் தலைகலனாக் கொண்டான் கண்டாய்
உம்பரார் தங்கள் பெருமான் கண்டாய்
மலர்ந்தார் திருவடியென் தலைமேல் வைத்த
மழபாடி மன்னு மணாளன் றானே. 5

394. கொலை ஆன - கொல்லுதல் பொருந்திய. குமைத்தான் - அழித்தான். "திரிபுரங்கள்" எனப் பன்மை தோன்றக் கூறியது, 'ஒரு வில்லினால் மூன்று அரண்களை அழித்தான்' என்னும் நயந்தோன்றுதற் பொருட்டு. 'மலையார்' உயர்த்தற் பன்மை.

395. உலந்தார் - இறந்தார். அங்கம் - எலும்பு. நலம் திகழும் - அழகு விளங்குகின்ற. உம்பரார் - மேலிடத்து இருப்பவர். மலர்ந்து ஆர் - விரிந்து பொருந்தின; என்றது எங்கும் நிறைந்த என்றபடி. "எங்கும் ஆம் அண்ணல் தாள்" என்பது சிவஞானபோதம் (சூ. 2. அதி 1.)

Koviloor Digital Library

396 தாமரையான் தன்தலையைச் சாய்த்தான் கண்டாய்
தகவுடையார் நெஞ்சிருக்கை கொண்டான் [கண்டாய்
பூமலரான் ஏத்தும் புனிதன் கண்டாய்
புணர்ச்சிப் பொருளாகி நின்றான் கண்டாய்
ஏமருவ வெஞ்சிலையோன் றேந்தி கண்டாய்
இருளார்ந்த கண்டத் திறைவன் கண்டாய்
மாமருவுங் கலைகையி லேந்தி கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 6

396. தாமரையான் - பிரமன். 'சாய்த்தான் - கிள்ளினான். தகவு - தகுதி; மெய்யுணர்வு. இருக்கை - இருப்பிடம்; 'இருக்கையாக' என ஆக்கம், வருவிக்க; இத்தொடரால், 'பிரமன் தலையைக் கிள்ளியது மெய்யுணர்வு பெறுவித்தற் பொருட்டு' என்பது குறித்தவாறு. "பூ மலர்" வினைத் தொகை; 'பூத்த மலர்' என்பது பொருள்; 'திருமாலின் உந்தியிற் பூத்த மலர்' என்க. 'அதன்கண் தோன்றிய பிரமனால் ஏத்தப்படுபவன்' என்றதனால், அக்காரணக் கடவுளர் இருவர்கட்கும் காரணமாய் நிற்பவன் என்பது போந்தது; "முழுவதும் - படைப்போற் படைக்கும் பழையோன்; படைத்தவை - காப்போற் காக்குங் கடவுள்" (திருவா. திருவண். 12-14.) என்றருளினமைகாண்க. 'மெய்யுணர்வு பெற்றபின்பு அவன் ஏத்துவானாயினன்' என்பது கருத்து ஆகையால், 'அப் பூமலரான்' என எடுத்துக்கொண்டு உரைக்க. இனி, "மலரான்" என்பதில் உள்ள "ஆன்" என்பதனை மூன்றும் வேற்றுமை உருபாகக்கொண்டு உரைத்தலுமாம். இப்பொருட்கு, பூ - பொலிவு; ஏத்துதலுக்கு, 'யாவராலும்' என்னும் வினைமுதல் வருவிக்கப்படும். புணர்ச்சிப் பொருள் - சார்தற்குரிய பொருள்; என்றது, 'நற்பொருள்' என்றபடி; நன்மை - இன்பம். ஏ - அம்பு. மருவ - பொருந்த. சிலை - வில். இத் தொடரால், 'வேகியாயும் (உக்கிரவடிவம் உடையவனாயும்) நிற்பவன்' என்பது உணர்த்தியருளியவாறு. "மா மருவும் கலை" என்றது, 'விலங்குத் தன்மை பொருந்திய கலை' என, மானை வெளிப்படுத்தி நின்றது.

Koviloor Digital Library

397 நீராகி நெடுவரைக ளானான் கண்டாய்
நிழலாகி நீள்விசும்பு மானான் கண்டாய்
பாராகிப் பௌவமே ழானான் கண்டாய்
பகலாகி வானாகி நின்றான் கண்டாய்
ஆரேனுந் தன்னடியார்க் கன்பன் கண்டாய்
அணுவாகி ஆதியாய் நின்றான் கண்டாய்
வாரார்ந்த வனமுலையாள் பங்கன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 7

398 பொன்னியலுந் திருமேனி உடையான் கண்டாய்
பூங்கொன்றைத் தாரோன் றணிந்தான் கண்டாய்
மின்னியலும் வார்சடையெம் பெருமான் கண்டாய்
வேழத்தின் உரிவிரும்பிப் போர்த்தான் கண்டாய்
தன்னியல்பார் மற்றொருவ ரில்லான் கண்டாய்
தாங்கரிய சிவந்தானாய் நின்றான் கண்டாய்
மன்னிய மங்கையோர் கூறன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 8

397. நிழல் - ஒளி. உம்மை, சிறப்பு. பார் - பூமி. பௌவம்- கடல். பகல் - பகலவன்; சூரியன். வான் - மேகம். இவை யெல்லாம், இறைவன் பெரும்பொருள்கள் பலவுமாகி நிற்கும் பெருநிலையை விளக்குதற்குச் சிலவற்றை எடுத்தோதியருளிய வாறு. "ஆரேனும்" என்றது, 'உலகியலில் எத்துணைத் தாழ்வுடையராயினும்' என்றருளியதாம். இது பற்றியே, "ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண் - ஆரே னுங் காணா அரன்" என்றது, திருக்களிற்றுப்படி (15). "அணு" என்றது, 'நுட்பம்' என்னும் பொருட்டாய், சத்தியைக்குறித்தது. ஆதி - உலகிற்கெல்லாம் முதல்; இதனானே ஐந்தொழில் குறித்து எழும் சத்தி, 'ஆதி சத்தி' எனப்படுதல் உணர்க. "வாரார்ந்த வனமுலையாள் பங்கன்" என்றதும், அச்சத்திக்குச்சத்திமானாய் நிற்கும் நிலையைக் குறிப்பித்தருளியதேயாம்.

398. பொன் இயலும் - பொன்னால் இயல்வது போலும். மின் இயலும் - மின்போல அசைகின்ற. தாங்கரிய சிவம் - பிறர் ஒருவராலும் பொருந்துதற்கரிய மங்கலப் பொருள்; என்றதனால். ஞாயிற்றின் ஒளி நேரே கண்களால் ஏற்க வியலாததுபோல

Koviloor Digital Library

399 ஆலாலம் உண்டுகந்த ஆதி கண்டாய்
அடையலர்தம் புரமூன்றும் எய்தான் கண்டாய்
காலாலக் காலனையும் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க் கருள்செய்த காளை கண்டாய்
பாலாரும் மொழிமடவாள் பாகன் கண்டாய்
பசுவேறிப் பலிதிரியும் பண்பன் கண்டாய்
மாலாலும் அறிவரிய மைந்தன் கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 9

அவனது பேரருளும், பேராற்றலும் உயிர்களால் நேரே ஏற்றுக் கோடற்கு இயலாதன. ஆகவே, சத்தியென்னும் நிலை வாயிலாகவே ஒருவாறு ஏற்கப்படும் என்பதாம், "மங்கை ஓர் கூறன்" என்றதும், இக்கருத்துணர்த்தும் குறிப்பினது என்க. "பாலுண் குழவி பசுங்குடர், பொறுதென-நோயுண் மருந்து தாயுண்டாங்கு........திருந்திழை காணச்-சிற்சபை பொலியத் திருநடம் புரியும்-அற்புதக்கூத்து" (சிதம்பரமும்மணிக்கோவை-1. 14. 21.) என இப்பொருள் விளக்கப்பட்டமை காண்க.

399. அடையலர் - பகைவர். "அக்காலன்" என்பதில், அகரம் பண்டறிசுட்டு. "காளை" என்றருளியது, கண்ணைப் பெயர்த்து அப்பும் வீர அன்பினை விரும்பினமைபற்றி. 'பிட்சா டன வடிவிற் சென்றபொழுது, விடையேறிச் சென்றனன்' என்பதும் புராண வரலாறு. இனி, "ஏறி" என்னும் எச்சம், "திரியும்" என்றதனைச் சிறப்பித்து அடையாய் நின்றதெனக் கொள்ளாது, 'வேறு பொருள்மொழியாய் எண்ணின்கண் நின்றது' எனக்கொண்டு உரைத்தலுமாம்; வினையெச்சங்கள் இவ்வாறு நிற்றலும், "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" (தொல்-சொல். 457.) என்பதனுற் கொள்ளப்படும். பலி திரியும்-பலிக்கு (பிச்சைக்கு)த் திரியும்; வருமொழி வினையாயவழி வேற்றுமைக்கண் ஒற்றுமிகாமையும் உண்டென்க.

Koviloor Digital Library

400 ஒருசுடராய் உலகேழு மானான் கண்டாய்
ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்
விரிசுடராய் விளங்கொளியாய் நின்றான் கண்டாய்
விழவொலியும் வேள்வொலியு மானான் கண்டாய்
இருசுடர்மீ தோடா இலங்கைக் கோனை
யீடழிய இருபதுதோ ளிறுத்தான் கண்டாய்
மருசுடரின் மாணிக்கக் குன்று கண்டாய்
மழபாடி மன்னு மணாளன் றானே. 10

திருச்சிற்றம்பலம்

400. ஒருசுடர் - ஒப்பற்ற பேரொளி. ஓங்காரத்தின் (பிரணவ மந்திரத்தின்) உட்பொருள், பொருள்களும் பொருள்களைப் பற்றிய நினைவும் தோன்றி நின்று அழிதலைக் குறிப்பது. அத் தோற்றம் முதலிய மூன்றனையும் நிகழ்விக்கும் தலைவன் இறைவனே யாதலின், அவனே அவ் வுட்பொருளாவன் என்க. "விரி சுடர்" என்றது, ஞாயிறு முதலியவற்றின் ஒளியையும், "விளங்கு" என்றது அவ்வொளிகளையுடைய பொருள்களாகிய ஞாயிறு முதலியவற்றையும் என்க. 'வேள்வு' என, விவ்விகுதி நீக்கி, வுவ்விகுதி கொடுக்கப்பட்டது. 'ஓடா இலங்கை' என இயையும். "கோன்" என்பதனோடு இயைப்பினும் அமைவதே யாம். ஈடு - வலிமை. மருசுடர், 'மருவு சுடர்' என வினைத் தொகை. 'சுடர் மருவு மாணிக்கம்' என்பது கருத்து. "மாணிக்கக் குன்று" என்றது, உவமையாகு பெயர்.

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதஞா னங்கொடுப்ப
வழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக் கரசரெனச்
சிறந்த சீர்த்தி
யெம்பெருமக் களுமியைந்த கூட்டத்தி லரனடியா
ரின்ப மெய்தி
யும்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருகு மொலிநிறைத்தா
ருலக மெல்லாம். 183

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

40. திருமழபாடி

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றினை முன் திருப்பதிகத்திற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

401 அலையடுத்த பெருங்கடல்நஞ் சமுதா வுண்டு
அமரர்கள்தந் தலைகாத்த ஐயர் செம்பொன்
சிலையெடுத்து மாநாக நெருப்புக் கோத்துத்
திரிபுரங்கள் தீயிட்ட செல்வர் போலும்
நிலையடுத்த பசும்பொன்னால் முத்தால் நீண்ட
நிரைவயிரப் பலகையாற் குவையார்த் துற்ற
மலையடுத்த மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 1

இத் திருப்பதிகத்துள், "என்றென்றே நான் அரற்றி நைகின்றேன்" என வருவனவற்றிற்கு, மேல், முப்பத்தேழாம் திருப்பதிகத்துள் உரைத்தவாறு உரைத்துக்கொள்க. ஐந்தாம் சீரில் வரற்பாலதாய மோனை, இதன்கண் எல்லாப் பாடலிலும் ஈற்றடிக்குள் நீக்கப்பட்டது

401. தலைநீங்கியவிடத்து உயிர்நில்லாமைபற்றி, உயிரைக் காத்தலை, 'தலை காத்தல்' என்றல் வழக்கு. 'நாகத்தை நாணாகவும், நெருப்பை அம்பாகவும் கோத்து' என்றதாம். போலும், அசைநிலை. ஆர்த்து, 'ஆர்க்க' என்பதன் திரிபு. 'பொன்னாலும், முத்தாலும், வயிரப் பலகையாலும் குவையாக (குவியலாக) ஆர்க்க (இயற்ற) உற்ற (விளங்கித் தோன்றிய) வயிரத் தூணே' என்க. "தூண்" என்றது உருவகம். இங்கு இறைவரது திருமேனியின், அழகில் ஈடுபட்டு, இவ்வாறு அருளிச்செய்தார். மலை அடுத்த - மலைபோலப் பொருந்திய. 'ஐயர், செல்வர் எனப் படர்க்கையாகவும், வயிரத்தூணே என முன்னிலையாகவும் சொல்லி அரற்றி நைகின்றேன்' என முடிக்க.

Koviloor Digital Library

402 அறைகலந்த குழல்மொந்தை வீணை யாழும்
அந்தரத்திற் கந்தருவர் அமரர் ஏத்த
மறைகலந்த மந்திரமும் நீரும் கொண்டு
வழிபட்டார் வானாளக் கொடுத்தி யன்றே
கறைகலந்த பொழிற்கச்சிக் கம்பம் மேய
கனவயிரத் திரள்தூணே கலிசூழ் மாட
மறைகலந்த மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 2

403 உரங்கொடுக்கு மிருண்மெய்யர் மூர்க்கர் பொல்லா
ஊத்தைவாய்ச் சமணர்தமை யுறவாக் கொண்ட
பரங்கெடுத்திங் கடியேனை யாண்டு கொண்ட
பவளத்தின் திரள்தூணே பசும்பொன் முத்தே
புரங்கெடுத்துப் பொல்லாத காமன் ஆகம்
பொடியாக விழித்தருளிப் புவியோர்க் கென்றும்
வரங்கொடுக்கும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 3

402. அறை - ஓசை. மொந்தை, ஒருவகை வாச்சியம். "யாழும்" என்னும் உம்மை அசைநிலை. அந்தரம் - ஆகாயம். மறைகலந்த மந்திரம் - வேதத்திற் பொருந்திய மந்திரங்கள். "கொண்டு" என்றது, மேல், "யாழும்" என்றதனோடும் இயையும். 'வழிபட்டார் அமரர் ஏத்த வானாளக் கொடுத்தி' என இயையும்; மந்திரஞ் சொல்லி நீரை வார்த்தவர்க்கு, இன்னிசையை நுகர்வித்து வானுலகத்தை உரிமையாகக் கொடுப்பாய்' எனப் போற்றியவாறு. கறை - கறுப்பு; மேகம்; ஆகு பெயர். 'வயிரத்தூண், திரள் தூண்' என்க. கலி - ஆரவாரம். மறைகலந்த மழபாடி - வேதங்கள் பொருந்திய மழபாடி.

403. உரங்கொடுக்கும் - வலிமையைத் தருகின்ற (இருள் மெய்யர்); என்றது, 'உண்பதன்றி வேறொன்றை அறியாதவர்' என்றபடி. பரம் - சுமை; அது, பொறுக்க வொண்ணாத பாவத்தைக் குறித்தது. 'பவளத்தின் திரளாகிய தூணே' என்க. பொன் முத்து - பொன்னிற் பதித்த முத்து. முத்து உருவகம். புரம்-திரிபுரம். 'புரம் கெடுத்துக் காமன் ஆகம் பொடியாக்கிப் புவியோர்க்கு என்றும் வரம் கொடுக்கும்' என்றது, மண்ணுலகத்தின் பெருமை குறித்தருளியவாறு.

Koviloor Digital Library

404 ஊனிகந்தூ ணுறிக்கையர் குண்டர் பொல்லா
ஊத்தைவாய்ச் சமணருற வாகக் கொண்டு
ஞானகஞ்சேர்ந் துள்ளவயி ரத்தை நண்ணு
நாயேனைப் பொருளாக ஆண்டு கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர் விதியாற் சூடும்
வேந்தனே விண்ணவர்தம் பெருமான் மேக
வானகஞ்சேர் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 4

405 சிரமேற்ற நான்முகன்றன் றலையும் மற்றைத்
திருமால்தன் செழுந்தலையும் பொன்றச் சிந்தி
உரமேற்ற இரவிபல் தகர்த்துச் சோமன்
ஒளிர்கலைகள் படவுழக்கி உயிரை நல்கி
நரையேற்ற விடையேறி நாகம் பூண்ட
நம்பியையே மறைநான்கும் ஓல மிட்டு
வரமேற்கும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 5

404. 'இகந்த, என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று' குண்டர் - மூர்க்கர். 'ஊன் இகந்த ஊண் உடையவர்' என்றது, புத்தர் ஊன் உணவை விரும்புவோரென்பது குறித்து, அவரிற் பிரித்தற்பொருட்டு. "சமணர்" என்புழி இரண்டனுருபு தொகுக்கப்பட்டது. 'ஞான' என்பதன் அகரமும் தொகுத்தல். அகம்-உள்ளத்து. "வயிரம்" என்பது உருவகம்; அது, 'நின்னை. என்னும் பொருட்டாய் நின்றது. "விதி" என்றது, உலகை அழியாமற் காக்கக்கொண்ட அருளை. "பெருமான்" என்றது விளி. வானகம் சேர்தலாகிய மாளிகைகளின் தொழில், ஊர்மேல் ஏற்றப்பட்டது. " தூண் என்றதனை, இங்கு உவமையாகுபெயர் என்க.

405. "சிரம்" என்றது, 'மிக்க தலைகள்' என்பதனை உட்கொண்டு கூறியது. பொன்றச் சிந்தினமை முதலியன தக்கன் வேள்வியிற் செய்தன; திருமால் தலையையும் சிந்திய வரலாறுண்மை ஈண்டு அறியப்படுகின்றது. சோமன் - சந்திரன். உழக்கி - தேய்த்து. நரை ஏற்ற - வெண்மையைக் கொண்ட. 'நம்பியையே நான் அரற்றி' என இயைக்க.

Koviloor Digital Library

406 சினந்திருத்துஞ் சிறுப்பேரியார் குண்டர் தங்கள்
சேதுமதியார் தீவினைக்கே விழுந்தேன் தேடிப்
புனந்திருத்தும் பொல்லாத பிண்டி பேணும்
பொறியிலியேன் தனைப்பொருளா ஆண்டு கொண்டு
தனந்திருந்து மவர்திறத்தை யொழியப் பாற்றித்
தயாமூல தன்மவழி யெனக்கு நல்கி
மனந்திருத்தும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 6

407 சுழித்துணையாம் பிறவிவழித் துக்கம் நீக்குஞ்
சுருள்சடையெம் பெருமானே தூய தெண்ணீர்
இழிப்பரிய பசுபாசப் பிறப்பை நீக்கும்
என்துணையே யென்னுடைய பெம்மான் தம்மான்
பழிப்பரிய திருமாலும் அயனும் காணாப்
பரிதியே சுருதிமுடிக் கணியாய் வாய்த்த
வழித்துணையாம் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. 7

திருச்சிற்றம்பலம்

406. சினம் திருத்தும் - வெகுளியை நீக்குகின்ற; என்றது வஞ்சப் புகழ்ச்சி. "சிறுப் பெரியார்" என்றதனை 'சிறுமையை உடைய பெரியார்' என வேற்றுமைத்தொகையாகக்கொள்க. செதுமதி-பொல்லாத அறிவு. தீவினைக்கே, உருபு மயக்கம். புனம்-காடு; அதனைத் திருத்தி வளர்க்கின்ற பிண்டி (அசோகமரம்) என்க. பொல்லாங்கு, உலகிற்கு முதல்வனை இல்லை என மயக்குதல்; அரசமரமும் இத்தகையதென்க. பேணும் - வழிபட்ட. பொறி - நல்லூழ். 'விழுந்தேனுய்ப்பேணும் பொறியிலியேன்றனை' என இயைக்க. தனம் திருத்தும் அவர், மகளிர். பாற்றி - நீக்கி. தயாமூல தன்மம் என்னும் வழி, உண்மையில், இறைவனுண்மை உணர்ந்து அவன்வழி நிற்றலே என்க. 'என் மனத்தைத் திருத்திய' என்க.

407. சுழி - சுழல். 'சுழியாகிய துணை' என்க. இங்குத் "துணை" என்றது, துணையன்மையைக் குறித்தது, "உடம்பொடுயிரிடை நட்பு" (குறள் - 338.) என்பதில், 'நட்பு' என்பது

Koviloor Digital Library

போல. 'தூய தெண்ணீர்ச் சடை' என மேலே கூட்டுக. இழிப்பரிய - இறக்குதல் அரிய ; என்றதனுல், பிறப்பைச் சுமையாகக் கொள்க. பசு பாசப் பிறப்பு - பசுத்தன்மையால் உள்ள பாசத்தால் வரும் பிறப்பு. தம்மான் - உயிர்கட்குத் தலைவன். பழிப்பரிய-பொதுப்பட 'தேவர்' என்றது, 'காரணக் கடவுளர்' எனப் போற்றப்படுகின்ற. பரிதி - சூரியன் ; என்றது உருவகம். சுருதி முடிக்கு அணியாய் - வேதத்தின் தலைக்கு அணிகலமாய், வாய்த்த தூணே' என இயையும். வழித்துணையாதல், உயிர்கட்கென்க.

இத்திருப்பதிகத்தின் எட்டாவது முதலிய திருப்பாடல்கள் கிடைத்தில.

பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேனென் றரசுவப்பப்
பெருகு ஞான
வள்ளலார் வாகீசர் தமைவணங்கப் பெற்றதற்கு
மகிழ்ச்சி பொங்க
வுள்ள நிறை காதலிஞ லொருவரொரு வரிற்கலந்த
வுண்மை யோடும்
வெள்ள நீர்த் திருத்தோணி வீற்றிருந்தார் கழல்வணங்கும்
விருப்பின் மிக்கார். 184

அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா
மன்புசெறி கடலுமா மெனவு மோங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவன முய்ய
விருட்கடுவுண் டவரருளு மகில மெல்லாம்
ஈன்றுடன் றிருவருளு மெனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்று மரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே. 185

பண்பயில்வண் டறைசோலை சூழுங் காழிப்
பரமர்திருக் கோபுரத்தைப் பணிந்துள் புக்கு
விண்பணிய வோங்குபெரு விமானந் தன்னை
வலங்கொண்டு தொழுதுவிழுந் தெழுந்த வெல்லைச்
சண்பைவரு பிள்ளையா ரப்ப ருங்கள்
தம்பிரா னுரைநீர் பாடி ரென்னக்
கண்பயிலும் புனல்பொழிய வரசும் வாய்மைக்
கலைபயிலு மொழிபொழியக் கசிந்து பாடி. 186

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

41. திருநெய்த்தானம்

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கயிலைக் காட்சி கண்டு தொழுது பணிசெய்து திருப்பதிகங்கள் பல அருளிச்செய்து திருநெய்த்தானம் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு - 386.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

408 வகையெலா முடையாயும் நீயே யென்றும்
வான்கயிலை மேவினாய் நீயே யென்றும்
மிகையெலாம் மிக்காயும் நீயே யென்றும்
வெண்காடு மேவினாய் நீயே யென்றும்
பகையெலாந் தீர்த்தாண்டாய் நீயே யென்றும்
பாசூ ரமர்ந்தாயும் நீயே யென்றும்
திகையெலாந் தொழச் செல்வாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் நெஞ்சு ளாயே. 1

இத்திருப்பதிகத்துள், "வகையெலாம் உடையானும் யானே, வான்கயிலை மேவினான் யானே" என்றாற்போல இறைவன் கூற்றாகப் படர்க்கையில் வைத்து ஓதற்பாலனவாய பொருள்களை, நாயனார், தம் கூற்றாக முன்னிலையில் வைத்து ஓதியருளினார் என்க. எனவே, இத்திருப்பதிகம் இறைவனது திருவருட்டிறத்தினை இனிது தெரிவிக்கும் உறுதித் திருமொழியாதல் பெறப்படும். இதனுள், "என்றும்" என்னும் உம்மைகள் எண்ணுப் பொருள. அவை அனைத்தும், "நின்ற" என்னும் ஒரு சொற் கொண்டு முடியும். இறுதியில், 'நீ என் நெஞ்சுளாய்' என எழுவாய் வருவித்து முடித்து, 'இஃதொரு வியப்பாகா நின்றது' என்னும் குறிப்பெச்சம் வருவித்துரைக்க.

இவ்வாறன்றி, 'என்றும் நின்ற நெய்த்தானா, வகையெலாம் உடையாயும் நீயே ; நீ என் நெஞ்சினும் உள்ளாயே' என, எல்லாவற்றையும் தனித்தனி முடிப்பினும் அமையும். இப்பொருட்கு, "என்றும் நின்ற" என்பது. 'எக்காலத்தும் நிலைபெற்றிருக்கும்' எனப் பொருள் தரும்.

Koviloor Digital Library

இனி. "என்றும்" என்பதனைத் தன்மைப் பன்மை முற்று வினையாகவும், "நெஞ்சுளாய்" என்பதனைப் பெயராகவும் கொண்டு. 'நிலைபெற்ற நெய்த்தானு! (நெய்த்தானத்து நிலை பெற்றவனே!) என் நெஞ்சின்கண் உள்ளானே! உன்னை யாம், வகையெலாம் உடையாயும் நீயே என்போம்; வான்கயிலை மேவினுய் நீயே என்போம்' என்ருற்போல உரைத்தலும் ஆம். "என் நெஞ்சுளாய்" என்பதும், "என்றும்" என்பதும் வேறு வேறு தொடராகலின், இடவழுவும் பால்வழுவும் ஆகா. 'யாம்' என்றல், தம்போல்வாரையும் உளப்படுத்து. இத் திருப்பதிகத் திருப்பாடல் ஈற்றடிகளிலும் ஐந்தாஞ்சீரில் வரும் மோனை நீக்கப் பட்டது. இத் திருப்பதிகத்து ஒவ்வொரு திருப்பாடலிலும் முதல் அடியில் திருக்கயிலையை நினைந்து அருளிச்செய்தமை சிறப்பாக அறியத்தக்கது.

408. வகையெலாம் - உடையவர்க்கு (செல்வர்க்கு) உரிய வகைகள் பலவும். உம்மைகள் எச்சப்பொருளன; சிறப்புமாம். வான் - உயர்ச்சி. மிகையெலாம் மிக்காய் - மிகுந்து நிற்கும் வகைகள் எல்லாவற்ருலும் மிகுந்து நின்ருய். "வகையெலாம் உடையாய், மிகையெலாம் மிக்காய்" என்பவற்ருல், இறைவனைப் புகழும் புகழ்கள் யாவும் பொருள்சேர் புகழாதல் தெளிவித்தவாறு. "முற்றுநீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே" (திருமுறை 3. 52. 3.) என்றருளிய ஆளுடைய பிள்ளையார் திருமொழியுங் காண்க. "முன்னே யுரைத்தால் முகமனே யொக்கும்" (திருமுறை-4. 112. 3.) என்ருர் நாயனுரும். பகை, அகப்பகை; அவை நோய் முதலிய உடற்பகைகளும், அவா வெகுளி முதலிய உளப்பகைகளுமாம். பாசூர், தொண்டைநாட்டுத் தலம். திகை - திசை. திசையெலாம் தொழ ஆங்கெல்லாம் செல்வாய், என உரைக்க; 'எவ்வுலகமும் உன்னுடையனவே' என்றவாறு. 'செய்வாய்' எனவும் பாடம் ஓதுப. ஐந்தாஞ் சீரில் வரற்பால தாய மோனை. மேலைத் திருப்பதிகத்திற்போல இத் திருப்பதிகத் தும் எல்லாத் திருப்பாடலிலும் ஈற்றடிக்கண் நீக்கப்பட்டது.

Koviloor Digital Library

409 ஆர்த்த எனக்கன்பன் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே யென்றும்
கூர்த்த நடமாடி நீயே யென்றுங்
கோடிகா மேய குழகா என்றும்
பார்த்தற் கருள்செய்தாய் நீயே யென்றும்
பழையனூர் மேவிய பண்பா என்றும்
தீர்த்தன் சிவலோகன் நீயே யென்றும்
நின்றநேய்த் தானுவேன் நேஞ்சு ளாயே. 2

410 அல்லாய்ப் பகலானுய் நீயே யென்றும்
ஆதிக் கயிலாயன் நீயே யென்றும்
கல்லா லமர்ந்தாயும் நீயே யென்றுங்
காளத்திக் கற்பகமும் நீயே யென்றும்
சோல்லாய்ப் போருளானுய் நீயே யென்றுஞ்
சோற்றுத் துறையுறைவாய் நீயே யென்றும்
சேல்வாய்த் திருவானுய் நீயே யென்றும்
நின்றநேய்த் தானுவேன் நேஞ்சு ளாயே. 3

409. ஆர்த்த - ஆர்க்கப்பட்ட (ஆளாக அணைத்துக் கொள்ளப்பட்ட.) "எனக்கன்பன் நீயே" என்றது, என்னிடத்து அன்புடையவன் நீயன்றிப் பிறரில்லை யென்றபடி. ஆதிக் கயிலாயம்-எல்லாவற்றிற்கும் முதலாய கயிலைமலை. கூர்த்த நடம் - நடனக்கலையின் நுட்பங்கள் அமைந்த நடனம். கோடிகா, சோழ நாட்டுத் தலம். பழையனூர், தொண்டைநாட்டில் திருவாலங் காட்டினை அடுத்துள்ளது. 'தீர்த்தன், சிவலோகன்', செவ்வெண்.

410. அல் - இரவு. சோற்றுத்துறை, சோழநாட்டுத் தலம். செல் வாய்த் திரு - யாவும் நடத்தற்கு வழியாகிய செல்வம். வறுமை வாழ்க்கையை, "செல்லாத் தீவாழ்க்கை" (குறள் - 330) என்றது காண்க.

Koviloor Digital Library

411 மின்னே ரிடைபங்கன் நீயே யென்றும்
வெண்கயிலை மேவினாய் நீயே யென்றும்
பொன்னேர் சடைமுடியாய் நீயே யென்றும்
பூத கணநாதன் நீயே யென்றும்
என்னா விரதத்தாய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீசன் நீயே யென்றும்
தென்னூர்ப் பதியுளாய் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் னெஞ்சு ளாயே. 4

412 முந்தி யிருந்தாயும் நீயே யென்றும்
முன்கயிலை மேவினாய் நீயே யென்றும்
நந்திக் கருள்செய்தாய் நீயே யென்றும்
நடமாடி நள்ளாறன் நீயே யென்றும்
பந்திப் பரியாயும் நீயே யென்றும்
பைஞ்ஞீலி மேவினாய் நீயே யென்றும்
சிந்திப் பரியாயும் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் னெஞ்சு ளாயே. 5

411. "வெண்கயிலை மேவினாய்" என்பதன்றி, 'வெண்காடு மேவினாய்' என்றும் பாடம் ஓதுவர்; இத் திருப்பதிகத் திருப் பாடல்கள் தோறும் முதலடிக்கண் கயிலையை ஓதியருளுதலின், அது பாடம் அன்றென்க. என் நா இரதத்தாய் - எனது நாவில் இனிக்கின்ற சுவையாயினாய். "ஏகம்பத்து என் ஈசன்" என எடுத்தோதியருளிய இதனாலும், திருவேகம்பப் பெருமானே நாயனார்க்கு வழிபாட்டுப் பெருமானாய் இருந்தமை பெறுதும். தென்னூர், வைப்புத்தலம் 'தென்னூராகிய பதி' என்க.

412. முந்தி - (எல்லாவற்றுக்கும்) முற்பட்டு. "முன் கயிலை" என்றதும், "ஆதிக் கயிலை" என்றதனோடொத்தது னகரம் திரியாமை செய்யுள் விகாரம் என்க. 'நினைக்கப்படுகின்ற கயிலை' என வினைத்தொகையாக உரைத்தலுமாம் நந்தி, - அதிகார நந்தி; இவர்க்கு அருள் செய்தமை திருவையாற்றுப் புராணம் முதலியவற்றுட் காண்க. "நடம் ஆடி" என்பது பெயர். பந்திப்பு அரியாய் - பாசத்தாற் பிணிக்க ஒண்ணாதவனே நள்ளாறு, பைஞ்ஞீலி இவை சோழநாட்டுத் தலங்கள். சிந்தையால் அணுகலாகாமையால், "சிந்திப்பரியாய்" என்றருளிச் செய்தார்.

Koviloor Digital Library

413 தக்கா ரடியார்க்கு நீயே யென்றுந்
தலையார் கயிலாயன் நீயே யென்றும்
அக்காரம் பூண்டாயும் நீயே யென்றும்
ஆக்கூரில் தான்தோன்றி நீயே யென்றும்
புக்காய ஏழுலகும் நீயே யென்றும்
புள்ளிருக்கு வேளூராய் நீயே யென்றும்
தேக்காரு மாகோணத் தானே யென்றும்
நின்றநேய்த் தானனேன் நெஞ்சு ளாயே. 6

414 புகழும் பெருமையாய் நீயே யென்றும்
பூங்கயிலை மேவினாய் நீயே யென்றும்
இகழுந் தலையேந்தி நீயே யென்றும்
இராமேச் சரத்தின்பன் நீயே யென்றும்
அகழும மதிலுடையாய் நீயே யென்றும்
ஆலவாய் மேவினாய் நீயே யென்றும்
திகழும் மதிசூடி நீயே யென்றும்
நின்றநேய்த் தானனேன் நெஞ்சு ளாயே. 7

413. 'தக்காராய அடியார்கட்குத் துணை நீயே' என்க. 'துணை' என்பது சொல்லெச்சம். தலை - தலைமை. ஆர் - பொருந்திய. அக்கு ஆரம் - எலும்பு மாலை. 'புக்கு' என்னும் முதனிலை திரிந்த தொழிற் பெயர் ஆகுபெயராய், உயிர்கள் புகுந்து வாழும் இடத்தை உணர்த்திற்று. புள்ளிருக்குவேளூர், வைத்தீசுரன்கோயில். இதனைச் சார்ந்த பகுதியில் உள்ள தலமே ஆக்கூர். தெற்கு, 'தெக்கு' என நின்றது. ஆரும் - பொருந்திய. 'தெக்காரமாகோணம்' என்பதும் பாடம். மாகோணம், வைப்புத் தலம்.

414. புகழும் பெருமையாய் - புகழ்ந்து சொல்லப்படும் பெருமையையெல்லாம் முற்ற உடையாய்; என்றது, மெய்யான புகழை உடையாய்' என்றவாறு. "மதில்" என்பதில், எண்ணும்மை தொக்கது; இனி, 'அகலும் என்பது. எதுகை நோக்கித் திரிந்தது' என்றலுமாம். அகழ், மதில் இவை ஆலவாயைச் சூழ்ந்துள்ளவை என்க. இவற்றைச் சிறந்தெடுத்தோதியது, அவையே 'ஆலவாய்' எனப் பெயர் பெற்று விளங்கும் சிறப்புப் பற்றி. அவை அப்பெயர்பெற்ற காரணம் திருவிளையாடற் புராணத்தாலும் ஒருவாறறியப்படும்.

Koviloor Digital Library

415 வானவர்க்கு மூத்திளையாய் நீயே யென்றும்
வானக் கயிலாயன் நீயே யென்றும்
கான நடமாடி நீயே யென்றுங்
கடவூரில் வீரட்டன் நீயே யென்றும்
ஊனார் முடியறுத்தாய் நீயே யென்றும்
ஒற்றியூ ராரூராய் நீயே யென்றும்
தேனாய் அமுதானாய் நீயே யென்றும்
நின்றநேய்த் தானாவேன் நெஞ்சு ளாயே. 8

416 தந்தைதா யில்லாதாய் நீயே யென்றுந்
தலையார் கயிலாயன் நீயே யென்றும்
எந்தாயெம் பிரானானாய் நீயே யென்றும்
ஏகம்பத் தென்னீசன் நீயே யென்றும்
முந்திய முக்கணாய் நீயே யென்றும்
மூவலூர் மேவினாய் நீயே யென்றும்
சிந்தையாய்த் தேனூராய் நீயே யென்றும்
நின்றநேய்த் தானாவேன் நெஞ்சு ளாயே. 9

415. மூத்து என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது; மூத்தாய் இளையாய்' என்பது பொருள்; இளையையாவாய் என்க; வானவரது தோற்றத்திற்கு முன் உள்ளமையின், "மூத்தாய்" என்றும், ஒடுக்கத்திற்குப் பின் உள்ளமையின் "இளையாய்" என்றும் அருளிச்செய்தார். 'வான் கயிலாயம்' என்பது அகரம் பெற்று நின்றது. ஊனார் - மேலிடத்துள்ளார்; தேவர். அவர்தம் தலையைத் தடிந்தது தக்கன் வேள்வியில். இனி, 'முடிய (அழிய) அறுத்தாய் (அழித்தாய்)' என்றலுமாம். "ஒற்றியூர் ஆரூர்", உம்மைத்தொகையாய் நின்று முதனிலையாயிற்று. இனிமை பயத்தலின், "தேனாய்" என்றும். இனிமையோடு இறவாது வைத்தலின், "அமுதானாய்" என்றும் அருளிச்செய்தார். "தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்" (திருவாசகம், திருவேசறவு - 10.) என்றது ஈண்டு நோக்கத் தக்கது.

416. 'தந்தை தாய் இல்லாதான்' என்பது எஞ்ஞான்றும் பிறத்தல் இல்லாமை குறிப்பது. "தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ" (திருவா. திருச்சாழல் 2.) "தந்தையாரொடு தாயிலர்" (திருமுறை - 3. 54. 3.) "தமக்குத் தந்தையர் தாயிலர் என்பது.........எமக்கு நாதர் பிறப்பிலர் என்றதாம்"

Koviloor Digital Library

417 மறித்தான் வலிசெற்றாய் நீயே யென்றும்
வான்கயிலை மேவினாய் நீயே என்றும்
வெறுத்தார் பிறப்பறுப்பாய் நீயே யென்றும்
வீழி மிழலையாய் நீயே யென்றும்
அறத்தாய் அமுதீந்தாய் நீயே யென்றும்
யாவர்க்குந் தாங்கொணா நஞ்ச முண்டு
பொறுத்தாய் புலனைந்தும் நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் னெஞ்சு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

(பெ. பு. திருஞான - 829.) 'எம் தாய்' எனப் பிரிக்க. 'எந்தை' எனப் பாடம் ஓதுதலுமாம். முந்திய - (எல்லாவற்றுக்கும்) முற்பட்ட. "முக்கணாய்" என்பது. 'சிவபிரானே' என்னும் பொருளதாய் நின்றது. மூவலூர், தேனூர் இவை வைப்புத்தலங்கள்.

417. மறித்தான் - தனது ஊர்தியை நிறுத்திப் பெயர்த்தவன்; இராவணன். "கயிலை" எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, 'மறித்தான' என்றருளினார். 'மறுத்தான்' என்பதும் பாடம். வெறுத்தார் - துறந்தவர். விழிமிழலை, சோழநாட்டுத் தலம். அறத்தாய் - அறவடிவினாய். 'நஞ்சம் உண்டு அமுது ஈந்தாய்' என்றும், 'புலன் ஐந்தும் பொறுத்தாய்' என்றும் கூட்டுக. பொறுத்தாய் - விரும்பாது கொண்டாய்; என்றது, 'நுகராது பற்றிநின்றாய்' என்றதாம். இத்திருப்பாடலின் ஈற்றடியின் முதலெழுத்து ஏனைய திருப்பாடல்களிற்போல, 'இ, ஈ, எ. ஏ' என்னும் உயிரொடு கூடிய தகர சகர மெய்களாகாது, வேறாயிற்று.

பெரியபெரு மாட்டியுடன் றோணி மீது
பேணிவீற் றிருந்தருளும் பிரான்முன் னின்று
பரிவுறுசெந் தமிழ்மாலை பத்தி யோடும்
பார்கொண்டு மூடியெனும் பதிகம் போற்றி
யரியவகை புறம்போந்து பிள்ளை யார்தந்
திருமடத்தி லெழுந்தருளி யமுது செய்து
மருவியநண் புறுகேண்மை யற்றை நாள்போல்
வளர்ந்தோங்க வுடன்பலநாள் வைகு நாளில். 187

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

42. திருநெய்த்தானம்

திருப்பதிக வரலாறு

இத்திருப்பதிகவரலாற்றினை முன் திருப்பதிகவரலாற்றிற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

418 மெய்த்தானத் தகம்படியுள் ஐவர் நின்று
வேண்டிற்றுக் குறைமுடித்து வினைக்குக்கூடாம்
இத்தானத் திருந்திங்ங னுய்வா னெண்ணும்
இதனையொழி இயம்பக்கேள் ஏழை நெஞ்சே
மைத்தான நீள்நயனி பங்கன் வங்கம்!
வருதிரைநீர் நஞ்சுண்ட கண்டன் மேய
நெய்த்தான நன்னகரேன் றேத்தி நின்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 1

இத்திருப்பதிகம் நெஞ்சிற்கு அருளும் அறிவுரையாக அருளிச் செய்யப்பட்டது.

418. மெய்த் தானம் - உடம்பாகிய இடம். அகம் படியுள் - உட்புறத்தில். ஐவர் - ஐம்பொறி; இவை பருவுடம்பாய் (தூல தேகமாய்) நின்று புறத்துள்ள புலன்களைக் கவர்தல் பற்றிப் 'புறக்கருவி' எனப்படுமாயினும், அங்ஙனங் கவரும் ஆற்றல்கள் அவ்வுடம்பினுள் அருவாயே நிற்றலின், 'மெய்த்தானத்து அகம் படியுள் நின்று'' என்று அருளிச்செய்தார். வேண்டிற்றுக் குறை- விரும்பியதாகிய இன்றியமையாப் பொருளை. முடித்து - தந்து நிரப்பி. கூடு - தங்கும் இடம். "இத் தானம்" என்றது மேற்குறித்த மெய்த்தானத்தை. ஏழைமை - அறியாமை. மைத்து ஆன நீள் நயனி - மையணிந்ததாகிய நீண்ட கண்ணை யுடையவள்; உமை. வங்கம் - மரக்கலம். "என்று" என்பது, "நினையுமா' என்பதனோடு இயையும். நினையுமா நினைந்தக் கால் - நினையுமாற்றை நினைந்தால். நினைதல் உளதாகுமாயின் செயல் நிகழ்தல் ஒருதலையாகலின், "நினைந்தக்கால் உய்யலாம்'' என்றருளினார். 'சிவதலத்தைப் பெயரளவில் நினைப்பினும்

Koviloor Digital Library

419 ஈண்டா விரும்பிறவித் துறவா ஆக்கை
இதுநீங்க லாம்விதியுண் டேன்று சொல்ல
வேண்டாவே நெஞ்சமே விளம்பக் கேள்நீ
விண்ணவர்தம் பெருமானூர் மண்ணி லேன்னே
ஆண்டானன் றருவரையாற் புரமுன் றெய்த
அம்மானை அரிஅயனுங் காணா வண்ணம்
நீண்டா னுறைதுறைநேய்த் தான மேன்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 2

உய்திகூடும்' என்பதுணர்த்துவார், "நகர் என்று நினையுமா நினைந்தக்கால்" என்று அருளிச்செய்தார்.

'ஐவர் இவ்வுடம்பகத்தில் நின்று வேண்டி நிற்குங் குறையை அவர்க்கு முடித்துத் தந்துகொண்டு இவ்வுடம்பிற்றானே நீங்கா திருந்து பிழைக்க எண்ணுகின்ற அறியாமையுடைய நெஞ்சே, இவ்வெண்ணம் முடியாதாகலின் இதனைவிட்டொழி; யான் சொல்லுவதைக்கேள்; 'அருளின் வடிவாகிய அம்மையை நீக்காது உடன்கொண்டு விளங்குபவனும், தேவர் பொருட்டு நஞ்சினை உண்டு அவரைக் காத்த அருளாளனும் ஆகிய இறைவன் எழுந் தருளியிருக்கும் திருநெய்த்தானம் என்னும் நல்ல தலம் என்று நினையும் நெறியை நினைவையாயின், உய்தல் கூடும்' என உரைத்துக்கொள்க.

'நினையுமாற்றால் நினைந்தக்கால்' என்றுரைத்தலுமாம். இப்பொருட்கு, "என்று" என்பது, "நினைந்தக்கால்" என்ப தனோடு இயையும். "நினையுமாறு" என்பது, கடைக்குறையா யிற்று.

419. 'விரைய' எனப் பொருள்தரும் 'ஈண்ட' என்பது, எதுகை நோக்கி நீண்டது; 'ஈண்ட நீங்கலாம்' என இயையும். பிறவித் துறவா ஆக்கை இது - பிறப்புக்கள் பலவற்றிற்கும் ஏது வாகிய நீக்கலாத உடம்பாகிய இதனினின்றும்; நுண்ணுடம்பின் (சூக்குமதேகத்தின்) நின்றும். இதனான் நுண்ணுடம்பின் இயல்பும் உணர்ந்துகொள்ளப்படும். கட்டு நீங்கி வீடெய்தும்பொழுதே நுண்ணுடம்பு நீங்குவதாகும். விதி - வினை. 'ஆர் மண்ணில்' எனவும், 'ஐ அரி' எனவும் பிரித்து, 'நிறைந்த மண்ணுலியன்ற உலகத்தில்' எனவும், 'அழகிய திருமால்' எனவும் உரைக்

Koviloor Digital Library

420 பரவிப் பலபலவுந் தேடி யோடிப்
பாழாங் குரம்பையிடைக் கிடந்து வாளா
குரவிக் குடிவாழ்க்கை வாழ வெண்ணிக்
குலைகை தவிர்நெஞ்சே கூறக் கேள்நீ
இரவிக் குலமுதலா வானோர் கூடி
யெண்ணிறந்த கோடி யமர ராயம்
நிரவிக் கரியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 3

421 அலையார் வினைத்திறஞ்சே ராக்கை யுள்ளே
யகப்பட்டு ளாசையெனும் பாசந் தன்னுள்
தலையாய்க் கடையாகும் வாழ்வி லாழ்ந்து
தளர்ந்துமிக நெஞ்சமே அஞ்ச வேண்டா
இலையார் புனக்கொன்றை யெறிநீர்த் திங்கள்
இருஞ்சடைமேல் வைத்துகந்தான் இமையோ [ரேத்தும்
நிலையா னுறைநிறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 4

"அம்மானை" என்னும் ஐகாரத்தைச் சாரியை என்றலுமாம். உம்மை, சிறப்பு. "துறை" என்பது, 'இடம்' என்னும் பொருளது.

420. 'தேடிப் பரவி ஓடி' எனக் கூட்டுக. பரவி - எங்குமாய். வாளா - பின்விளைவை நோக்காது; 'குரவை' என்பது "குரவி" என வந்தது; அது கைகோத்து ஆடுங் கூத்தாகலின், ஒக்கலோடும் மக்களொடும் பிணைந்து வாழும் குடி வாழ்க்கையை "குரவிக் குடிவாழ்க்கை" என்றருளினார். குலைகை - உடைதல். இரவிக் குலம் - சூரியர் கூட்டம்; சூரியர் பன்னிருவர் எனப் படுதலின், இவ்வாறருளிச் செய்தார். "கூடி" என்பதன்கண் தொகுக்கப்பட்ட பெயரெச்ச அகரம் விரித்து, "ஆயம்" என்பதனோடு முடிக்க. "அமரர்" என்றது வாளா பெயராய் நின்றது. ஆயம் - கூட்டம். 'நிரவிக்க' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. இப் பிறவினைச் சொல், 'அளவு படுதல்' எனத் தன்வினைப் பொருளே தந்து நின்றது. இனி, 'நிறைவிக்க, என்பதன் திரிபாகக் கொண்டு, 'அளவறிய' என்றுரைத்தலுமாம்.

421. அலை ஆர் வினைத் திறம் சேர் ஆக்கை - அலைபோல (இடையறுது வந்து) பொருந்தும் வினைக் கூறுகட்குச் சார்பாகிய

Koviloor Digital Library

422 தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க் காக
முனைத்துவரு மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 5

423 மிறைபடுமிவ் வுடல்வாழ்வை மெய்யென்றெண்ணி
வினையிலே கிடந்தழுந்தி வியவேல் நெஞ்சே
குறைவுடையார் மனத்துளான் குமரன் தாதை
கூத்தாடுங் குணமுடையான் கொலைவேற்
அறைகழலுந் திருவடிமேற் சிலம்பும் ஆர்ப்ப[கையான்
அவனிதலம் பெயரவரு நட்டம் நின்ற
நிறைவுடையா னிடமாம்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 6

உடம்பு. உள் ஆசை - மனத்தின்கண் எழும் ஆசை. "ஆசையெனும் பாசம்'' என்றது உருவகம். "பாசந்தன்னுள்" என்பது, 'பாசத்து அகப்படுந்தன்மையில்' என்னும் பொருளது. 'இலையார் கொன்றை, புனக்கொன்றை' எனத் தனித்தனி முடிக்க. 'புனற் கொன்றை' என்பது பாடமன்று.

422. 'தினைத்தனையும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. ஓர் (ஒன்று) - சிறிது. பொறை - பொறுத்தல்; தாமதித்தல்; நிலைபெறுதல், 'மதியால் பேசும்' என இயையும். 'உனக்கு உள்ள மதியைப் பெரிதாக நினைந்து பேசுகின்ற' என்பது பொருளாம். 'அமரர்க்காக நினைத்த' என இயையும். முனைத்து - முற்பட்டு. முடுகிய - விரைந்த; விரைய எடுத்த.

423. மிறைபடும் - துன்பமே விளைகின்ற. வினை - வினைப் பயன். வியவேல் - மகிழாதே. குறைவு - தாழ்வு; பணிவு. வேல் - சூலம். கழலும், சிலம்பும் மாதொரு கூறன் ஆதலை உணர்த்தும். நட்டம் நின்ற - நடனத்தொடு நின்ற. நிறைவு, எல்லா நலங்களும் நிரம்பியிருத்தல். பெயர - பெயருமாறு;

Koviloor Digital Library

424 பேசப் பொருளலாப் பிறவி தன்னைப்
பெரிதென்றுன் சிறுமனத்தால் வேண்டி யீண்டு
வாசக் குழல்மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக் கரியுரித்தான் தூநீ ருடித்
துதைந்திலங்கு நூல்மார்பன் தொடர கில்லா
நீசர்க் கரியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 7

425 அஞ்சப் புலனிவற்று லாட்ட வாட்டுண்
டருநோய்க் கிடமாய வுடலின் தன்மை
தஞ்ச மெனக்கருதித் தாழேல் நெஞ்சே
தாழக் கருதுதியே தன்னைச் சேரா
வஞ்ச மனத்தவர்கள் காண வொண்ணு
மணிகண்டன் வானவர்தம் பிரானென் றேத்தும்
நெஞ்சர்க் கினியவன்நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 8

• பெயர, ஆர்ப்ப என மேலே கூட்டி, 'உலகம் முற்றும் பெயர்ந்த பின் (ஒடுங்கியபின்) நடனத்தொடு நின்ற நிறைவுடையான்' என்றுரைத்தலுமாம். இப்பொருட்கு, நிறைவு, தன்னைப் பெயர்ப்பார் இன்றித் தானே எல்லாவற்றையும் பெயர்ப்போனாய் நிற்கும் முழுமுதற் றன்மை.

424. "பிறவி" என்றது, உடலை. வேண்டி - விரும்பி. "மனம்" என்றது அதன் குணத்தை. வருக - என்வழி வருக. தூசு - ஆடை; போர்வை. அகரம், சாரியை. துதைந்து - நிறைந்து.

425. "அஞ்ச" என்பதில் அகரம் சாரியை. 'புலன் ஆட்ட இவற்றால் ஆட்டுண்டு' எனக் கூட்டுக. தஞ்சம் - புகலிடம். தாழேல் - அழுந்தாதே. 'தாழக் கருதுதியே; (அவ்வாறு) தாழேல்' எனக் கூட்டுக.

Koviloor Digital Library

426 பொருந்தாத உடலகத்திற் புக்க ஆவி
போமா றறிந்தறிந்தே புலைவாழ் வுன்னி
இருந்தாங் கிடர்ப்படநீ வேண்டா நெஞ்சே
யிமையவர்தம் பெருமானன் றுமையா ளஞ்சக்
கருந்தாள் மதகரியை வெருவச் சீறுங்
கண்ணுதல்கண் டமராடிக் கருதார் வேள்வி
நிரந்தரமா இனிதுறைநெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 9

427 உரித்தன் றுனக்கிவ் வுடலின் தன்மை
உண்மை யுரைத்தேன் விரத மெல்லாந்
தரித்துந் தவமுயன்றும் வாழா நெஞ்சே
தம்மிடையி லில்லார்க்கோன் றல்லார்க் கன்னன்
எரித்தான் அனலுடையான் எண்டோ ளானே
யெம்பெருமா னென்றேத்தா இலங்கைக் கோனை
நெரித்தானை நெய்த்தானம் மேவி னானை
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே. 10

திருச்சிற்றம்பலம்

426. பொருந்தாத உடல் - தகுதியற்ற (இழிவுடைய) உடம்பு. 'அறிந்தும் அறிந்தும்' என்னும் உம்மைகள் தொகுத்தலாயின. அடுக்குப் பன்மை பற்றி வந்தது. அறிதல். ஏனைய பலரிடத்து வைத்தெண்க. புலை - கீழ்மை. 'ஆங்கு இருந்து நீ இடர்ப்படவேண்டா' என மாறிக் கூட்டுக. தாள் - முயற்சி; வலிமை. கருதார் - பகைவர்; பன்மை கூறியது, பலரும் ஒருவன் செயலுக்கு உடம்பட்டமை கருதி. 'கருதார் வேள்வி கண்டு அமராடி உறை நெய்த்தானம்' எனக் கொண்டு கூட்டியுரைக்க. "அமராடி" என்றது பெயர்; எச்சமாக ஓதுதல் பாடம் அன்று. நிரந்தரமா - நிலையாக.

427. உடலின் தன்மையை உயிர் தன் தன்மையாகக் கோடல் மயக்க உணர்வாகலின், 'இவ்வுடலின் தன்மை உனக்கு உரித்தன்று' எனத் தெளிவித்தருளினார்; இதனான் ஆன்ம தரிசனம் செய்வித்தவாறாயிற்று. "உண்மை யுரைத்தேன்" என்றது, 'நீ உணர்வுபெறக் கூறினேன்; கேளாதொழியின், வருவது காண்டி' என்றருளியவாறு. வருவது, பிறவித் துன்பம்.

Koviloor Digital Library

"விரதம் தரித்தும், தவம் முயன்றும் வாழா நெஞ்சே" என்பதனை முதற்கண் கொண்டுரைக்க. தரித்தல் - மேற்கொள்ளுதல். இதனால், 'நீதானே உணராதும், உணர்த்தியும் உணராதும் நிற்கின்றாய்' என்றபடி. எனவே, ஆன்மாக்களுக்கு முற்செய் தவத்தானே ஞானம் நிகழும்' (சிவஞானபோதம் சூத்திரம் 8. அதிகரணம் 1.) என்பது பெறப்பட்டது. தம்மிடையில் இல்லார்க்கு ஒன்று அல்லார்க்கு அன்னன் - தம்மிடத்துப் பொருள் இலராகிய வறியவர்க்கு ஒன்றும் ஈயாதவர்க்கு அத் தன்மையனாய் ஒன்றும் ஈயாதவனே 'எரித்தான்' என்பதன் ஈற்று அகரம் தொகுக்கப்பட்டது; 'எரிதலுடைத்தான' என்பது பொருள். 'அன்னன், உடையான், பெருமான்' என்பன விளிகள்

அத்தன்மை யினிலரசும் பிள்ளை யாரு
மளவளா வியமகிழ்ச்சி யளவி லாத
சித்தநெகிழ்ச் சியினோடு செல்லு நாளிற்
றிருநாவுக் கரசுதிரு வுள்ள நன்னில்
மைத்தழையு மணிமிடற்றார் பொன்னி நாட்டு
மன்னியதா னங்களெல்லாம் வணங்கிப் போற்ற
மெய்த்தெழுந்த பெருங்காதல் பிள்ளை யார்க்கு
விளம்புதலு மவருமது மேவி நேர்வார். 188

ஆண்டவர செழுந்தருளக் கோலக் காவை
யவரோடுஞ் சென்றிறைஞ்சி யன்பு கொண்டு
மீண்டருளி யூரவரும் விடைகொண் டிப்பால்
வேதநா யகர்விரும்பும் பதிக ளான
நீண்டகருப் பறியலூர் புன்கூர் நீடூர்
நீடுதிருக் குறுக்கைதிரு நின்ற யூருங்
காண்டகைய நனிபள்ளி முதலா நண்ணிக்
கண்ணுதலார் கழறொழுது கலந்து செல்வார். 189

மேவுபுனற் பொன்னியிரு கரையுஞ் சார்ந்து
விடையுயர்த்தார் திருச்செம்பொன் பள்ளி பாடிக்
காவுயரு மயிலாடு துறைநீள் பொன்னிக்
கரைத்துருத்தி வேள்விகுடி யெதிர்கொள் பாடி
பாவுறுசெந் தமிழ்மாலை பாடிப் போற்றிப்
பரமர்திருப் பதிபலவும் பணிந்து போந்தே
யாவுறுமஞ் சாடுவார் கோடி காவி
லணைந்துபணிந் தாவடுதண் டுறையைச் சார்ந்தார். 190

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

43. திருப்பூந்துருத்தி

திருப்பதிக வரலாறு

நாயனர், திருநெய்த்தானம் திருமழபாடி வணங்கித் திருப் பூந்துருத்தி சேர்ந்து பெருமானை வணங்கி, “ திருப்பூந்துருத்தி யமர்ந்த செஞ்சடையானை யானேற்றுப் பொருப்பூர்ந்தருளும் பிரானைப் பொய்யிலியைக் கண்டேன் ” என்று பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 388.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

428 நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாங் கற்பித் தானைக்
காணா தனவெல்லாங் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாஞ் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

இஃது, இறைவனைத் திருப்பூந்துருத்தியிற் கண்ட காட்சி மகிழ்வின்கண் அருளிச்செய்தது.

428. நில்லாத நீர் - உறைந்து நில்லாது ஒழுகும் தன்மைத்தாய நீர் ; ‘ அதனைத் தலையிலே நிறுத்திய வல்லாளனாகிய அவனுக்கே நின்று நினைக்குந் தன்மையில்லாது அலமந்து திரியும் தன்மைத்தாகிய என் நெஞ்சினை நினைவித்தல் கூடுவதாயிற்று ’ என்பது, உடம்பொடு புணர்த்தலாற் கொள்க. கல்லாதன - திருவருள் வாயாதவர்க்குச்செய்ய வாராதன; அவை, அவன் கோயில்புக்குப் புலர்வதன்முன் அலகிடல், மெழுக்கிடல் முதற் பலவாய தொண்டுகள்; அவற்றை, நாயனரது அருட்டிருமொழிகளாலும், அருள் வரலாற்றாலும் அறிந்துகொள்க. காணாதன - எங்கும் யாரும் கண்டறியாதன ; அவை, வெய்ய நீற்றறையது தான் ஐயர் திருவடிநிழல் அருளாகிக் குளிர்ந்ததும், வஞ்சனைப் பாற்சோறுக்கி வழக்கிலா அமணர் தந்த நஞ்சு அமுதாயது-ம்

Koviloor Digital Library

429 குற்றாலங் கோகரணம் மேவி னானைக்
கொடுங்கைக் கடுங்கூற்றைப் பாய்ந்தான்
உற்றால நஞ்சுண் டொடுக்கி னானை [தன்னை
யுணராவென் னெஞ்சை யுணர்வித் தானைப்
பற்றாலின் கீழங் கிருந்தான் தன்னைப்
பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னைப்
புற்றா டரவார்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

430 எனக்கென்றும் இனியானை யெம்மான் தன்னை
யெழிலாரும் ஏகம்பம் மேயான் தன்னை
மனக்கென்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான் தன்னைத்
தனக்கென்றும் அடியேனை யாளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழையான் தன்னைப்
புனக்கொன்றைத் தாரணிந்த புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

பொங்கு கடற் கல்மிதந்ததும் போல்வன. சொல்லாதன - மறைபொருள்கள்; அவை, 'நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்' என்றற்றொடக்கத்து அரும்பெருண்மைகள். "என்னை" என்பதனை, 'எனக்கு' எனத்திரித்து, 'எனக்குச் சொல்லி' என மாறிக் கூட்டுக. சொல்லி - தமக்கையார் வாயிலாகத் தெரிவித்து. தொடர்ந்து - இடையறாது அருள்பண்ணி. 'என் பொல்லா நோய்" என இயையும்; அது, 'கொல்லாது குடர் முடக்கி நின்ற சூலைநோய்' என்பது வெளிப்படை. 'பூந்துருத்தி கண்டேன்' என்பதும் பாடம்.

429. குற்றாலம், பாண்டிநாட்டுத் தலம். கோகரணம், துளுவநாட்டுத் தலம். "கொடுங் கை" என்பதில், கை - செய்கை. உற்று - (மனம்) பொருந்தி. 'நஞ்சினை உற்று உண்டு ஒடுக்கினானை' எனக் கூட்டுக. "பற்று" என்புழி, 'ஆக' என்பது வருவிக்க. அங்கு, அசைநிலை.

430. 'மனத்துக்கண்' என்னும் பொருட்டாகிய 'மனத்துக்கு' என்பதில், அத்துத் தொகுத்தலாயிற்று. நின்றியூர், சோழநாட்டுத் தலம். புனம் - முல்லை நிலம். 'பொய்' என்றது, பாசத்தை.

Koviloor Digital Library

431 வெறியார் மலர்க்கொன்றை சூடி னானை
வெள்ளானை வந்திறைஞ்சும் வெண்காட் டானை
அறியா தடியே னகப்பட் டேனை
அல்லற்கடல் நின்று மேற வாங்கி
நெறிதா னிதுவென்று காட்டி னானை
நிச்சல் நலிபிணிகள் தீர்ப்பான் தன்னைப்
பொறியா டரவார்த்த புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

432 மிக்கானை வெண்ணீறு சண்ணித் தானை
விண்டார் புரமூன்றும் வேவ நோக்கி
நக்கானை நான்மறைகள் பாடி னானை
நல்லார்கள் பேணிப் பரவ நின்ற
தக்கானைத் தண்டா மரைமே லண்ணல்
தலைகொண்டு மாத்திரைக்கண் உலக மெல்லாம்
புக்கானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

431. வெறி - வாசனை. வெள்ளானை, இந்திரனுக்கு உரிய 'ஐராவதம்' என்னும் யானை. இது திருவெண்காட்டிற் பூசித்தமை மேலே காட்டப்பட்டது, (பக். 263.) "அல்லற் கடல்" எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, 'அகப்பட் டேனை' என்றருளினர். "அடியேன் அகப்பட்டேனை" என்பதனை, 'அகப்பட்ட அடியேனை' என மாற்றியுரைக்க. நிச்சல் - நித்தல். பொறி - புள்ளி.

432. மிக்கான் - உயர்ந்தோன். சண்ணித்தான் - பூசினான். மாத்திரைக்கண் - நொடி நேரத்தில்; 'மாத்திரைக்குள்' என்பதும் பாடம். உலகமெல்லாம் புக்கது, இரத்த பிச்சை யேற்றற் பொருட்டு.

Koviloor Digital Library

433 ஆர்த்தானை வாசுகியை அரைக்கோர் கச்சா
அசைத்தானை அழகாய பொன்னூர் மேனிப்
பூத்தானத் தான்முடியைப் பொருந்தா வண்ணம்
புணர்ந்தானைப் பூங்கணையா னுடலம் வேவப்
பார்த்தானைப் பரிந்தானைப் பனிநீர்க் கங்கை
படர்சடைமேற் பயின்றானைப் பதைப்ப யானை
போர்த்தானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

434 எரித்தானை எண்ணார் புரங்கள் மூன்றும்
இமைப்பளவிற் பொடியாக எழிலார் கையால்
உரித்தானை மதகரியை யுற்றுப் பற்றி
யுமையதனைக் கண்டஞ்சி நடுங்கக் கண்டு
சிரித்தானைச் சீரார்ந்த பூதஞ் சூழத்
திருச்சடைமேல் திங்களும் பாம்பும் நீரும்
புரித்தானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

433. ஆர்த்தான் - கட்டினன். 'கச்சா ஆர்த்தான்' எனக் கூட்டுக. அசைத்தான் - ஆட்டினன். ஆட்டியதும் வாசுகியையே என்க. பூத்தானத்தான் - பூவை உறைவிடமாகக் கொண்டவன்; பிரமன். புணர்ந்தான் - நெருங்கிச் சென்றான்; 'சென்று கிள்ளினன்' என்றபடி. 'புணர்த்தான்' என்னும் பாடத்திற்கு, 'பொருந்தி நில்லாமைக்கு ஏதுவாகிய செயலைச் செய்தான்' என உரைக்க. பரிந்தான் - (பின்னர்) அருள்கூர்ந்தான்; உயிர்ப்பித்தான். 'யானை பதைப்ப அதனை உரித்துப் போர்த்தான்' என்க.

434. 'பொடியாக எரித்தானை எனவும், 'கையாற் பற்றி உரித்தானை' எனவும் இயையும். சிரிப்பு, அவள் பேதைமை பற்றி வந்தது. "நீரும்" என்புழி, 'வைத்து' என்பது வருவிக்க. புரித்தான் - புரியாகத் திரித்தான்.

Koviloor Digital Library

435 வைத்தானை வானோ ருலக மெல்லாம்
வந்திறைஞ்சி மலர்கொண்டு நின்று போற்றும்
வித்தானை வேண்டிற்றேன் றீவான் தன்னை
விண்ணவர்தம் பெருமானை வினைகள் போக
உய்த்தானை யொலிகங்கை சடைமேற் றுங்கி
யொளித்தானை யொருபாகத் துமையோ டாங்கே
பொய்த்தானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

436 ஆண்டானை வானோ ருலக மெல்லாம்
அந்நா ளறியாத தக்கன் வேள்வி
மீண்டானை விண்ணவர்க ளோடுங் கூடி
விரைமலர்மேல் நான்முகனும் மாலுந் தேட
நீண்டானை நெருப்புருவ மானான் தன்னை
நிலையிலார் மும்மதிலும் வேவ வில்லைப்
பூண்டானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே

435. 'வானோர் உலகமெல்லாம்' என்பது தாப்பிசையாய், முன்னரும்சென் றியையும். வித்தான் - காரணன்; முதல்வன். உய்த்தான் - ஓட்டினான். ஒலிகங்கை, வினைத்தொகை. ஆங்கே - அவ் வொருகூற்றிடத்தே. உமையோடு பொய்த்தது, 'நின்னை யன்றிப் பிறள் ஒருத்தியையும் யான் கண்டிலேன்' என்று கங்கையைக் கரந்தமையை மறைத்தது; இஃது, "அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின் வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப" என்றவாறு வரும் (தொல். பொருள் - 218.) அகப் பாட்டு வழக்குப்பற்றி அருளிச்செய்தது.

436 'வானோர் உலகமெல்லாம் ஆண்டானை' எனவும், 'கூடி மீண்டானை' எனவும் இயைக்க. அறியாத - அறிய வேண்டுவதனை அறியாத. "வேள்வி" என்புழி, நீக்கப் பொருளில் வந்த இன்னுருபு விரிக்க. தக்கன் வேள்வியினின்றும் விண்ணவர்களோடுங்கூடி மீண்டது, அவர்களை உயிர்ப்பித்த பின்னர் என்க. "நீண்டானை" என்பதன்பின், 'ஆங்கு' என்பது வருவிக்க. 'மாலும் தேர' என்பதும் பாடம். நிலை இலார் - உள்ளம் ஒரு நெறியில் நிலைபெறுதல் இல்லாதவர்; 'புத்தன் போதனையால், சிவநெறியைக் கைவிட்டவர்' என்றவாறு.

Koviloor Digital Library

437 மறுத்தானை மலைகோத்தங் கெடுத்தான் தன்னை
மணிமுடியோ டிருபதுதோள் நெரியக் காலால்
இறுத்தானை யேழுநரம்பி னிசைகேட் டானை
யெண்டிசைக்குங்கண்ணுனன்சிரமேலொன்றை
அறுத்தானை யமரர்களுக் கமுதீந் தானை
யாவர்க்குந் தாங்கொணு நஞ்ச முண்டு
பொறுத்தானைப் புண்ணியனைப் புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

திருச்சிற்றம்பலம்

437. மறுத்தது, நந்திபெருமான் அறிவுரையை. 'மறுத்து மலையைக் கையாற்கோத்து எடுத்தான்' என உரைக்க. இறுத்தான் - சிதைத்தான். 'பின்பு அவன் இசை கேட்டானை' என உரைக்க. "திசைக்கும்" என்பதனை, 'திசைக்கணும்' எனத் திரிக்க. எட்டுக்கண் உடையவன் பிரமன். 'கண்ணனை' என்பதும் பாடம். சிரமேல் ஒன்றை - சிரங்களில் மேல் இருந்த ஒன்றை. பொறுத்தான் - (மிடற்றில்) தாங்கினன்.

ஆவடுதண் டுறையாரை யடைந்துய்ந் தேனென்று
அளவில்திருத் தாண்டகமுன் னருளிச் செய்து
மேவுதிருக் குறுந்தொகைநே ரிசையுஞ் சந்த
விருத்தங்க ளானவையும் வேறு வேறு
பாவலர்செந் தமிழ்த்தொடையாற் பள்ளித் தாமம்
பலசாத்தி மிக்கெழுந்த பரிவி னோடும்
பூவலயத் தவர்பரவப் பலநாட் டங்கிப்
புரிவுறுகைத் திருத்தொண்டு போற்றிச் செய்வார். 191

எறிபுனல்பொன் மணிசிதறுந் திரைநீர்ப் பொன்னி
யிடைமருதைச் சென்றெய்தி யன்பி னோடு
மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி
வண்டமிழ்ப்பா மாலைபல மகிழச் சாத்திப்
பொறியரவம் புனைந்தாரைத் திருநாகேச் சுரத்துப்
போற்றியருந் தமிழ்மாலை புனைந்து போந்து
செறிவிரைநன் மலர்ச்சோலைப் பழையா றெய்தித்
திருச்சத்தி முற்றத்தைச் சென்று சேர்ந்தார். 192

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

44. திருச்சோற்றுத்துறை

திருப்பதிக வரலாறு

நாயனர், திருப்பழனத்தில் அப்பூதியடிகளைச் சிறப்பித்து, 'சொன்மாலே' எனும் திருப்பதிகம் பாடிச் சாலநாள் அங்கு அமர்ந்திருந்த பொழுது திருச்சோற்றுத்துறை நண்ணித் தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு-212.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

438 மூத்தவனாய் உலகுக்கு முந்தி னானே
முறைமையால் எல்லாம் படைக்கின் றானே
ஏத்தவனாய் ஏழுலகு மாயி னானே
இன்பனாய்த் துன்பங் களைகின் றானே
காத்தவனாய் எல்லாந்தான் காண்கின் றானே
கடுவினையேன் தீவினையைக் கண்டு போகத்
தீர்த்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. 1

இத்திருப்பதிகம், முறையீட்டு வகையில் இறைவனைப் பல் பெயர்த் தொடர்களால் அழைத்து அபயம் வேண்டி அருளிச் செய்தது.

438. மூத்தவன் - காலத்தால் எல்லார்க்கும் முன்னர் உள்ளவன். முறைமையால் - ஊழின்படி. 'ஏந்து' என்பது வலிந்து நின்றது. ஏந்து அவன் - எல்லாவற்றையும் தாங்குகின்ற அத்தன்மையன். இயல்பாகவேகொண்டு, 'யாவரும் ஏத்துதற்குரிய அத்தன்மையனாய்' என்றுரைத்தலுமாம். காத்தவனாய் - முன்னே காத்தவனும் தானாய். காண்கின்றான் - (பின்னும்) காக்கின்றான். கண்டு - திருவுள்ளத்திற் குறித்து. 'நான் உன் அபயம்' என்க. அபயம் - பயம் இன்மை; என்றது, 'பயம் இன்மை உளதாமாறு காத்தற்குரிய பொருள்; அடைக்கலப் பொருள்' என்றவாறு.

Koviloor Digital Library

439 தலையவனாய் உலகுக்கோர் தன்மை யானே
தத்துவனாய்ச் சார்ந்தார்க்கின் னமுதா னானே
நிலையவனாய் நின்றொப்பா ரில்லா தானே
நின்றுணராக் கூற்றத்தைச் சீறிப் பாய்ந்த
கொலையவனே கொல்யானைத் தோல்மே லிட்ட
கூற்றுவனே கொடிமதில்கள் மூன்று மெய்த
சிலையவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. 2

440 முற்றாத பான்மதியஞ் சூடி னானே
முளைத்தெழுந்த கற்பகத்தின் கொழுந்தொப் [பானே
உற்றாரென் றொருவரையு மில்லா தானே
உலகோம்பும் ஒண்சுடரே யோதும் வேதங்
கற்றானே யெல்லாக் கலைஞா னமுங்
கல்லாதேன் தீவினைநோய் கண்டு போகச்
செற்றானே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. 3

439. "தலையவன்" என்பதில் தலை, 'தலைமை' என்னும் பண்பு குறித்தது. அகரம் சாரியை. தத்துவன் - முதற்பொருளானவன். நிலையவன் - அழிவில்லாதவன். நின்று உணரா - மனம் ஒருங்கி ஆராயாத தோலை மேல்இட்ட (போர்த்த) என்க. கூற்றுவன் என்றது, யானைக்குக் கூற்றுவனாயினமையை.

440. உற்றார் - பிறப்பால் வரும் உறவு முறையினர்; அன்னார் ஒருவரையும் இல்லாதான் என்றது, 'பிறவியை ஒரு ஞான்றும் அடைந்தறியாதவன்' என்றவாறு. "கற்றான்" என்பதுபற்றி மேலே (பக். 3.) குறித்தாம். "எல்லாக் கலை ஞானமும்" என்னும் உம்மையை எச்சப்படுத்தாது முற்றாகவே கொண்டு, 'எந்தக் கலைஞானமும் கல்லாதேன்' என்பது பொருளாக உரைக்க. தீவினைநோய் - தீவினையால் வந்த நோய்; சூலைநோய்.

Koviloor Digital Library

441 கண்ணவனாய் உலகெல்லாங் காக்கின் றானே
　　காலங்க ளூழிகண் டிருக்கின் றானே
விண்ணவனாய் விண்ணவர்க்கும் அருள்செய் வானே
　　வேதனாய் வேதம் விரித்திட் டானே
எண்ணவனாய் யெண்ணார் புரங்கள் மூன்றும்
　　இமையாமுன் எரிகொளுவ நோக்கி நக்க
திண்ணவனே திருச்சோற்றுத் துறையு ளானே
　　திகழொளியே சிவனேயுன் னபயம் நானே.　4

442 நம்பனே நான்மறைக ளாயி னானே
　　நடமாட வல்லானே ஞானக் கூத்தா
கம்பனே கச்சிமா நகரு ளானே
　　கடிமதில்கள் மூன்றினையும் பொடியா எய்த
அம்பனே அளவிலாப் பெருமை யானே
　　அடியார்கட் காரமுதே ஆனே றேறுஞ்
செம்பொனே திருச்சோற்றுத் துறையு ளானே
　　திகழொளியே சிவனேயுன் னபயம் நானே.　5

441. கண் அவன் - (உலகிற்கெல்லாம்) கண்போலும் அத் தன்மையன். 'காலங்களாய ஊழி' என விரிக்க. "விண்ணவர்க்கும்" என்னும் உம்மை, சிறப்பு; அதனால், 'சிவபிரான் விண்ணவனாதல், ஏனைய விண்ணவர்போல் வினைவயத்தா லன்றித் தன் இச்சையால்' என்பதுணர்த்தியருளியவாறும். "விரித்திட்டான்" என்றது. 'செய்திட்டான்' என்றதாம். அதனால், "வேதன்" (வேதத்தை ஓதுபவன்) என்றது, பிரமன் முதலிய ஏனையோர்போலன்றி, அவரை ஓதுவித்தற் பொருட் டென்பது உணர்த்தியருளியவாறும். எண் அவன் - எல்லா வற்றையும் நினைவு மாத்திரையாற் செய்யும் அத் தன்மை யன்; "காரணமும் காரணங்களைப் படைத்தோரும் கருதி னோரும் ஆகியவர்" (कारणं कारणानां धाता ध्याता) என்னும் அதர்வசிகை வாக்கியத்துள், கருதினோர் (ध्याता) என்றதும் இப்பொருட்டு. எண்ணார் - மதியாதவர். திண்ணவன் - வலிய வன். 'எண்ணவனே' என்றும் பாடம் உளது.

442. ஞானக் கூத்து - மெய்யுணர்வைத் தரும் கூத்து. அது, கட்டு நெகிழப்பெறாதோர்க்கு. 'ஐந்தொழிற்கும் முதல்வன்

Koviloor Digital Library

443 ஆர்ந்தவனே யுலகெலாம் நீயே யாகி
யமைந்தவனே யளவிலாப் பெருமை யானே
கூர்ந்தவனே குற்றாலம் மேய கூத்தா
கொடுமழு விலையதோர் சூல மேந்திப்
பேர்ந்தவனே பிரளயங்க ளெல்லா மாய
பெம்மானென் றெப்போது பேசும் நெஞ்சிற்
சேர்ந்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. 6

தானே' எனப் பொதுவகையானும், கட்டு நெகிழப்பெற்றோர்க்கு, 'தனது திருவடி இன்பமே இன்பமாவது' எனச் சிறப்புவகையானும் உணர்த்தும். அதனை, முறையே,

" தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

எனவும்,

" மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து - நேயமுடன்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதந் தான்"

எனவும் விளக்கும் உண்மை விளக்க வெண்பாக்களான் (35, 36) உணர்க. கம்பன் - (உமையம்மைக்கு) நடுக்கத்தை உண்டாக்கியவன். "ஏபெற் றாகும்" (தொல். சொல். 304) என்றாங்கு, "ஏகல் லடுக்கம்" (நற்றிணை - 116.) என்றாற்போல, 'ஏ' என்பது, பெருக்கம் உணர்த்தி உரிச்சொல்லாய் நிற்குமாதலின், அவ்வாறு 'கம்பன்' என்பதனோடு தொடர்ந்து நின்ற பெயரே 'ஏகம்பன்' என்பது. இனி, அதனை, 'ஒற்றை மாமரத்தின்கீழ் உள்ளவன்' எனப் பொருள் தரும், 'ஏகாம்பரன்' என்பதன் சிதைவாகவும் உரைப்பர்.

443. ஆர்ந்தவன் பொருந்தினவன். இதனை, 'நீயே யாகி' என்பதன்பின் கூட்டுக. அமைந்தவன் - குறை யாதுமின்றி நிரம்பியிருப்பவன். கூர்ந்தவன் - (உயிர்களிடத்து அருள்) மிகுந்தவன். பேர்ந்தவன் (பெயர்ந்தவன்) - உலாவியவன்.

Koviloor Digital Library

444 வானவனாய் வண்மை மனத்தி னானே
மாமணிசேர் வானோர் பெருமான் நீயே
கானவனாய் ஏனத்தின் பின்சென் றானே
கடிய அரணங்கள் மூன்றட் டானே
தானவனாய்த் தண்கயிலை மேவி னானே
தன்னொப்பா ரில்லாத மங்கைக் கென்றுந்
தேனவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. 7

445 தன்னவனாய் உலகெலாந் தானே யாகித்
தத்துவனாய்ச் சார்ந்தார்க்கின் னமுதா னானே
என்னவனா யென்னிதயம் மேவி னானே
யீசனே பாச வினைகள் தீர்க்கும்
மன்னவனே மலைமங்கை பாக மாக
வைத்தவனே வானோர் வணங்கும் பொன்னித்
தென்னவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. 8

பிரளயம் - ஒடுக்கம். நெஞ்சினை உடையாரது செயல், நெஞ்சின் மேல் ஏற்றப்பட்டது.

444. வானவன் - தேவன் "வானவனாய்" என்னும் எச்சம், "மனத்தினான்" என்னும் வினைக்குறிப்போடு முடியும். வண்மை மனம் - வரங்கொடுக்கும் உள்ளம். மாமணி - சிந்தாமணி; 'வானோர் அதனை உடையராயினும், உன்னையே அடைவர்' என்றபடி. 'வானோர் பெருமானாகிய நீயே உண்மை வானவனாய் நின்றாய்' என்பதுபட. 'நீயே வானவனாய்' என மேலே கூட்டுக. கானவனாய் ஏனத்தின் பின் சென்றது அருச்சுனனுக்காக. 'வானவர் பெருமான் இது செய்தான்' என்றது, அவனது எளிவரும் பொருளைத் தெற்றென விளக்கும். ஏனம் - பன்றி. தானவன் - எவற்றையும் கொடுப்பவன்; சந்திரன், எனலுமாம். 'சந்திரன்' எனல் தட்பமாய அருளுடைமை பற்றி. இனி, 'அவன்' என்பதைப் பகுதிப்பொருள் விகுதியாக்கி, 'தன்னிகரின்றித் தானேயாய்' என்றுரைத்தலுமாம். தேனவன் - தேன்போல இனிப்பவன்.

445. தன்னவன் - தன்வயமுடையவன்; சுதந்திரன். என்னவன் - எனக்கு உரியவன். பொன்னித் தென்னவன் - காவிரியின்

Koviloor Digital Library

446 எறிந்தானே எண்டிசைக்குங் கண்ணு னே
யேழுலக மெல்லாமுன் னுய்நின் ருனே
அறிந்தார்தாம் ஓரிருவ ரறியா வண்ணம்
ஆதியும் அந்தமு மாகி யங்கே
பிறிந்தானே பிறரோருவ ரறியா வண்ணம்
பெம்மானென் றெப்போதும் ஏத்து நெஞ்சிற்
செறிந்தானே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. 9

447 மையனைய கண்டத்தாய் மாலும் மற்றை
வானவரும் அறியாத வண்ணச் சூலக்
கையவனே கடியிலங்கைக் கோனை யன்று
கால்விரலாற் கதிர்முடியுந் தோளுஞ் செற்ற
மெய்யவனே யடியார்கள் வேண்டிற் றீயும்
விண்ணவனே விண்ணப்பங் கேட்டு நல்குஞ்
செய்யவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபயம் நானே. 10

திருச்சிற்றம்பலம்

தென்கரையில் உள்ளவன். திருச்சோற்றுத்துறை, காவிரியின் தென்கரையில் இருத்தல் காண்க.

446. எறிந்தான் - அழித்தான். "எல்லாம்" என்புழி, சாரியையும் நான்கனுருபும் தொகுத்தலாயின. "எறிந்தானே" முதலிய மூன்றும், அழித்தல் காத்தல் படைத்தல்களைக் குறித்தன வென்க. அறிந்தார் - (ஏனைய எல்லாவற்றையும்) அறிந்தவர் 'அறிந்தாராகிய இருவர்; என்க. இருவர் மாலும் அயனும். ஆதியும் அந்தமும் ஆயது, ஈண்டு, மேற்குறித்த இருவர்க்கும் என்க. பிறிந்தான் - வேருயினுன்; அவர்கட்கு மேலோனுயினுன். "ஏத்து நெஞ்சு" என்பதற்கு, மேல் (6) "பேசு நெஞ்சு" என்றதற்கு உரைத்தாங்கு உரைக்க.

447. மை - அஞ்சனம்; மேகமுமாம். 'கடிய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல். மெய்யவன் - மெய்ப்பொருளான வன். செய்யவன் - நடுவுநிலையன்.

Koviloor Digital Library

45. திருவொற்றியூர்

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசர், தொண்டை நாட்டில் திருமயிலாப்பூர் தொழுது தொண்டர்கள் எதிர்கொள்ளத் திருவொற்றியூர் அணைந்து எழுத்தறியும் பெருமானைத் தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு - 336.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

448 வண்டோங்கு செங்கமலங் கழுநீர் மல்கும்
மதமத்தஞ் சேர்சடைமேல் மதியஞ் சூடித்
திண்டோள்கள் ஆயிரமும் வீசி நின்று
திசைசேர நடமாடிச் சிவலோகனூர்
உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதி வேண்டி
ஒற்றியூர் மேய வொளிவண்ணனூர்
கண்டேன்நான் கனவகத்திற் கண்டேற் கென்றன்
கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே. 1

இத்திருப்பதிகம் திருவொற்றியூர்ப் பெருமான்மேல் காதல் கொண்டாள் கூற்றாக அருளிச்செய்யப்பட்டது.

448. ஓங்கு - உயரப்பறக்கும். மல்கும் - நிறைந்த. "திண்டோள்கள் ஆயிரமும்" என ஈண்டு அருளிச்செய்தாற் போலவே, "ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடையானும்" என முன்பும் (திருமுறை 4, 4-8). அருளிச்செய்தார். 'உலகுக்கு ஓர் உறுதிவேண்டி நஞ்சு உண்டார்' என்க. கனவு அகம் - கனவாகிய இடம். 'ஒளிவண்ணனூர் சூடி, நடமாடி, உண்டார். அவரைக் கனவகத்திற் கண்டேன் நான்' என முடிவு செய்க. கடும்பிணி - அவரை முன்னை ஞான்று கண்டதனால் உண்டாகிய காதல்நோய். "சுடுந்தொழில்", அப்பிணியினது என்க. கைவிட்ட - கையகன்றன; நீங்கின. இத் திருத்தாண்டகத்துள்ளும் அடியின் இறுதிச்சீர்கள் பல கனிச்சீராய் வந்தன.

Koviloor Digital Library

449 ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளே றேறி
அணிகங்கை செஞ்சடைமே லார்க்கச் சூடிப்
பாகத்தோர் பெண்ணுடையார் ஆணு மாவர்
பசுவேறி யுழிதருமெம் பரம யோகி
காமத்தால் ஐங்கணையான் தன்னை வீழக்
கனலா எரிவிழித்த கண்மூன் றினார்
ஓமத்தால் நான்மறைகள் ஓதல் ஓவா
ஒளிதிகழும் ஒற்றியூ ருறைகின் றாரே. 2

450 வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர்
வெண்மதியும் பாம்பு முடனே வைத்தீர்
கள்ளத்தை மனத்தகத்தே கரந்து வைத்தீர்
கண்டார்க்குப் போல்லாது கண்டீர் எல்லே
கோள்ளத்தான் இசைபாடிப் பலியுங் கோள்ளீர்
கோளரவுங் குளிர்மதியுங் கோடியுங் காட்டி
உள்ளத்தை நீர்கோண்டீர் ஓதல் ஓவா
ஒளிதிகழும் ஒற்றியூ ருடைய கோவே. 3

449. ஆகம் - மார்பு. ஆர்க்க - ஒலிக்க. காமத்து ஆல் ஐங்கணை - காமவேட்கையில் பழகுகின்ற ஐந்து மலரம்புகள்; "ஆல்" என்பதனை அசைநிலை என்றலுமாம். "எரி விழித்த" என்பதில், "எரி" என்னும் முதனிலை வினையெச்சப் பொருள் தந்தது; "செய்தக்க வல்ல செயக்கெடும்" (குறள். 466.) ஓமத்தால் - ஓமத்தொடு 'ஒற்றியூர் உறைகின்றார்: ஏறி, சூடி, ஆவர்; யோகிகண் மூன்றினார்; அவரை யான் அணையுமா றெங்ஙனம்' என்க. இத் திருத்தாண்டகத்துள், எதுகை இருவிகற்பமாய் வந்தது.

450. 'தலையை ஆழ்த்தும் வெள்ளத்தைத் தலையில் வைத்ததும், மதியும் பாம்பும் ஆகிய பகைப்பொருள்களை உடன் சேர வைத்ததும்போல, கரப்பினும் கரவாது வெளிப்படுவதாகிய கள்ளத்தை (காதலுணர்வை) வெளிப்படாதவாறு மனத்தி னுள்ளே கரந்துவைத்தீராகலின், இது, காண்பவர்கட்குப் பெரிய தொரு தீங்காய்த்தோன்றும்' என்றாள். எல்லே - பகற்கண்ணே. "பலி" எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, "கொள்ளத் தான்" என்றாள். 'பகலிற்றானே பலிகொள்வீர்போல் வந்து

Koviloor Digital Library

451 நரையார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
எம்மடிக ளும்மூர்தான் ஏதோ என்ன
விரையாதே கேட்டியேல் வேற்கண் நல்லாய்
விடுங்கலங்கள் நெடுங்கடலுள்நின்றுதோன்றுந்
திரைமோதக் கரையேறிச் சங்க மூருந்
திருவோற்றி யூரேன்றார் தீய வாறே. 4

452 மத்தமா களியானை யுரிவை போர்த்து
வானகத்தார் தானகத்தா ராகி நின்று
பித்தர்தாம் போலங்கோர் பெருமை பேசிப்
பேதையரை யச்சுறுத்திப் பெயரக் கண்டு
பத்தர்கள்தாம் பலருடனே கூடிப் பாடிப்
பயின்றிருக்கு மூரேதோ பணீயி ரேன்ன
ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்த மாக
ஒளிதிகழும் ஒற்றியூ ரேன்கின் றாரே. 5

அதனைக் கொள்ளாது வேறு செய்கின்றீர்' என்பாள், "எல்லே" என்றாள். கொடி, விடைக்கொடி. ஓதல் - கடல் ஓசை. வேதம் ஓதுதலுமாம். 'ஓதம்' என்பதே பாடம் என்றலும் ஒன்று. "வைத்திர்" முதலியன, ஒருமைப் பன்மை மயக்கம்.

451. நரை - வெண்மை. உரையா - சொல்லாமல். விரையாது - பதையாமல். கலங்கள் - மரக்கலங்கள். நின்று - உயர்ந்து. 'சங்கம் கரை ஏறி ஊரும்' என்க. 'தோன்றும் ஊர், ஊரும் ஊர்' எனத் தனித்தனி முடிக்க. 'பிறருடையதை ஒற்றியாகக் கொண்டுள்ள ஊர்' என்றமையால், அவருக்கென்று ஓர் ஊர் இல்லாமை பெறப்பட்டமையின், 'அவரை ஒருதலையாகச் சென்று அணைவது எங்கு?' என நினைந்து அவலமுற்றாளாகலின், "தீயவாறு" என்றாள். 'என் தீவினையின் பயனிருந்தவாறு இது' என்றபடி.

452. "தான்" என்றது, பன்மை யொருமை மயக்கம். அகத்தார் - இல்லிடத்தார். 'வானத்திருக்கற்பாலராகிய அவர் என் இல்லத்தாராய் வந்துநின்றார்' என்றவாறு. கேட்பார் இன்றியும், தமது பெருமையைத் தாமே எடுத்துக் கூறினமையின்.

Koviloor Digital Library

453 கடிய விடையேறிக்காள கண்டர்
கலையோடு மழுவாளோர் கையி லேந்தி
இடிய பலிகோள்ளார் போவா ரல்லர்
எல்லாந்தா னிவ்வடிகள் யாரேன் பாரே
வடிவுடைய மங்கையுந் தாமு மெல்லாம்
வருவாரை யெதிர்கண்டோம் மயிலாப் புள்ளே
சேடிபடு வேண்டலையோன் றேந்தி வந்து
திருவோற்றி யூர்புக்கார் தீய வாறே. 6

"பித்தர்போல்" என்ருள்; இங்ஙனங் கூறுதல் பிச்சையெடுப் போர்க்கு இயல்பென்க. பேதையர் - பெண்டிர். '(நீர்) கூடிப் பாடிப் பயின்றிருக்கும் ஊர் ஏதோ' என்க. "உத்திரநாள் தீர்த்தமாக ஒளிதிகழும் ஒற்றியூர்" என்றமையால், இஞ்ஞான்று இங்கு மாசிமகத்தில் நடைபெறும் தீர்த்தவிழா அஞ்ஞான்று பங்குனி உத்திரத்தில் நடந்துவந்ததுபோலும். ஒத்தமைந்த - இத்தலத்திற்கு ஏற்புடைத்தாய் அமைந்த. ஏற்புடைமைக்குக் காரணம், நிலத்தியல்பு முதலியன கொள்க. 'என்கின்ருர் - இஃதென்னே' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிவுசெய்க' 'இஃதென்னே' என மருண்டது, ' இத்துணைப் பெருமையராகிய இவருக்குத் தமக்கென அமைந்ததோர் ஊர் இல்லையோ ' என்று.

453. கடிய - விரைவுடைய. 'காள கண்டராய்' என எச்சப்படுத்துக. கலை - மான். இடிய பலி - மாவால் அமைந்த பிச்சை; அப்பவகை; சில்பலி, ஏற்பவராகலின், இடிய பலியும் ஒருத்தி இடவந்தாள் என்க. 'இட்டிய' (சுருங்கிய) என்பது இடைக் குறைந்தது என்றலுமாம். 'வடிவுடைய மங்கையுந் தாமுமாய் மயிலாப்புள்ளே வருகின்ற இவரை எல்லாம் எதிர் கண்டோம்; (அதனல், இக்கோலத்துடன் வந்த இவரை,) எல்லாரும் இவ்வடிகள் யார் என மருள்வாராயினர் ; (அங்ஙனம் மருளுமாறு) வெண்டலை ஒன்று எந்தி வந்து, மீள மயிலாப்பிற் புகாது திருவொற்றியூர் புக்கார், இஃது என் தீவினைப்பயன் இருந்தவாறு' என்பது படக்கொண்டு கூட்டியுரைக்க. 'எல்லாம்' இரண்டனுள் முன்னது, படர்க்கையிடத்தினும். பின்னது தன்மையிடத்தினும் உயர்திணைக்கண் வந்தது 'தான்' என்னும் அசைநிலை பன்மை ஒருமை மயக்கம். செடிபடு - முடைநாற்றம் தோன்றுகின்ற. வடிவுடைய மங்கை - அழகு மிக்க பெண்டு; 'வடிவுடை அம்மை' என்பதே இத்தலத்து அம்மையது பெயராதல் நினைக்கத்தக்கது.

Koviloor Digital Library

454 வல்லாராய் வானவர்க ளெல்லாங் கூடி
வணங்குவார் வாழ்த்துவார் வந்து நிற்பார்
எல்லேயெம் பெருமானைக் காணே மென்ன
எவ்வாற்றால் எவ்வகையாற் காண மாட்டார்
நல்லார்கள் நான்மறையோர் கூடி நேடி
நாமிருக்கு மூர்பணியீ ரடிகே ளென்ன
ஒல்லைதான் திரையேறி யோதம் மீளும்
ஒளிதிகழும் ஒற்றியூ ரென்கின் றாரே. 7

455 நிலைப்பாடே நான்கண்ட தேடீ கேளாய்
நேருநிலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து
கலைப்பாடுங் கண்மலருங் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவே னெங்குங் காணேன்
சலப்பாடே யினியோருநாட் காண்பே னாகில்
தன்னாகத் தென்னாகம் ஒடுங்கும் வண்ண
முலைப்பாடே படத்தழுவிப் போக லொட்டேன்
ஒற்றியூ ருறைந்திங்கே திரிவானையே. 8

454. எல்லே - பகற்காலத்திற்றானே. எவ்வாற்றால் - எந்த வழியினாலும். எவ்வகையால் - எந்த வடிவிலும். உம்மைகள் தொகுக்கப்பட்டன. "காணமாட்டார்" என்பதன்பின், 'ஆகலின்' என்பது வருவிக்க. நாம் இருக்கும் ஊர் - நாமத்தொடு (அச்சத்தொடு) காத்திருக்கும் ஊர். ஓதம் - கடல்; ஆகுபெயர். 'திரை கரையேறிப் பின் கடலில் மீளும்' என்க. 'கரையேறி' என்பதே பாடம் எனலுமாம். "ஒளிதிகழும் ஒற்றியூர்" எனப் பலவிடத்தும் அருளியது. பிரமதேவனது யோகாக்கினியே இங்குக் கோயிலாக அமைந்தது என்னும் இத்தலத்துப் புராண வரலாற்றை நினைப்பிக்கின்றது.

455. இத்திருப்பாடல், தலைவி தோழிக்குக் கூறியவாறாக அருளிச்செய்யப்பட்டது. ஏடீ, தோழி முன்னிலைப் பெயர். 'நிலைப்பாடாக நான்கண்ட ஊர் கேளாய்' என்க. கலைப்பாடு - உடையினது பெருமை. கலக்க - நிலைகுலையச் செய்ய. வந்து கலக்க' என இயையும். கலந்து - பல பொருள்களைக் கூட்டி. இடுவேன் - இடுவேனாகிய யான். சலப்பாடு - (இது) வஞ்சத் தன்மையாகும். 'அதனால், அத் திரிவானை இனியொருநாள் காண்பேனாகில் தழுவிப் போகலொட்டேன்' என முடிவு செய்க.

Koviloor Digital Library

456 மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை
மலையல்லை கடலல்லை வாயு வல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை
யிரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லை
பிறிதல்லை யாஞயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
உணர்வரிய ஒற்றியூ ருடைய கோவே. 9

457 மருவுற்ற மலர்க்குழலி மடவா ளஞ்ச
மலைதுளங்கத் திசைநடுங்கச் செறுத்து நோக்கிச்
செருவுற்ற வாளரக்கன் வலிதான் மாளத்
திருவடியின் விரலொன்ருல் அலற வூன்றி
உருவோற்றி யங்கிருவ ரோடிக் காண
ஓங்கினவவ் வோள்ளழலா ரிங்கே வந்து
திருவோற்றி யூர்நம்மு ரேன்று போஞர்
செறிவளைகள் ஒன்ருேன்ருச் சென்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்

ஆகம் - மார்பு. உலைப்பாடு பட - உலைக்களத்து இரும்புத் தன்மை உண்டாக; 'உடல் சிவக்க' என்றபடி. இனி, மோனை நயம் கருதாது. 'முலைப்பாடு பட' எனப் பிரித்து. 'என் கொங்கையது பெருமை 'பயன்பட' என்றுரைத்தலுமாம். 'அடிகள்' என முன்னர் உயர்த்துக் கூறியவள், பின்னர் 'திரிவான்' என்றது செற்றம் பற்றி.

456. வலயம் - ஞாயிறு முதலிய மண்டிலங்கள். பேடு - அலி. 'பெரியாயாகிய நீயே' என்க. உம்மை, எதிரது தழுவியது. இத்துணைப் பெரியாய்; நல்லார்க்கு உள் நல்லை; தீயை அல்லை; ஆதலின், அருள் பண்ணுவாயாக' என முடிக்க. நல்லார் - பெண்டிர். உண்மைப் பொருளில் இது அருள் கைவரப் பெற்ருரைக் குறிக்கும். உள் நல்லை - மனம் நன்ருக உடையாய்.

457. மரு - வாசனை. "செரு" என்றது, கயிலையைப் பெயர்த்தமையை. உரு ஒற்றி - வடிவைக் கூர்ந்து நோக்கி, வளைகள் ஒன்ருென்ருச் சென்றது, மீள மீள நினைத்து மெலிந்தமையால் என்க. 'சென்றவாறு கொடிது' என, சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

Koviloor Digital Library

46. திருஆவடுதுறை

திருப்பதிக வரலாறு

நாயனர், புனற்பொன்னி யிருகரையுஞ் சார்ந்து திருச்செம்பொன்பள்ளி முதலான தலங்களை வணங்கித் திருக்கோடிகாவிலிருந்து முதன் முறையாக ஆவடுதண்டுறையைச் சார்ந்து தொழுது, "ஆவடுதண்டுறையாரை யடைந்துய்ந்தேன்" எனப் பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு - 191.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

458 நம்பனை நால்வேதங் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லா லிருந்தான் தன்னைக்
கற்பகமா யடியார்கட் கருள்செய் வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை யாவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.1

இத்திருப்பதிகம் திருவாவடுதுறை இறைவனைக் கண்டு வணங்கப்பெற்ற மகிழ்ச்சிமீதூர்வில் அருளிச்செய்தது.

458. 'ஞானப் பெருங்கடல்' என்னும் உருவகம், இங்கு உவமையாகு பெயராயிற்று. நன்மை - இன்பம். 'கம்பன்' என்பது, காஞ்சியில் உள்ள இறைவன் பெயர். 'அடியார் கட்குக் கற்பகமாய் அருள்செய்வான்' என்க. 'கற்பகமாய்' என்பது, 'கற்பகத் தருப்போல' எனப் பொருள்தரும். 'செம்பொன்' என்பது, பொதுவாகப் பொன்னையும், 'அம்பொன்' என்பது, சிறப்பாகத் தூய்மை செய்து ஓடவிடப்பட்ட மாற்று உயர்ந்த பொன்னையும் குறிக்கும் இனி, 'அம்பொன்' என்பதில் உள்ள 'பொன்' என்பது, திருமகளைக் குறித்து, ஆகுபெயராய், அவளால் தரப்படும் செல்வத்தை உணர்த்திற்று என்றலுமாம். 'ஆ அடு துறை' என்பது, 'ஆவினுல் (பசுவினுல்) அடுக்கப் பட்ட (அடையப்பட்ட) துறை' என்னுங் காரணத்தாற் பெற்ற பெயர். உமையம்மை இங்கு இறைவனைப் பசுவடிவில் வந்து

Koviloor Digital Library

459 மின்னனை மின்னிடைச்சே ருருமி னனை
வெண்முகிலாய் எழுந்துமழை பொழிவான்
தன்னனைத் தன்னொப்பா ரில்லா தானைத் [தன்னைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தை யாகி
என்னனை யெந்தை பெருமான் தன்னை
இருநிலமும் அண்டமுமாய்ச் சேக்கர் வானை
அன்னனை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 2

வழிபட்டாள் என்பது இத் தலத்தின் புராணத்தால் அறியப் படுவது. இனி, 'ஆ அடு' என்பது, 'பசுத்தன்மையை நீக்கிய' என்றும் ஆம். இது, வடமொழியில், 'கோமுத்திபுரம்' எனப் படுகின்றது. எனவே, 'ஆவடுதுறை' என்பது மும்மொழித் தொடராய் நிற்றலின், அவற்றுள், 'துறை' என்பதனை' 'தண்மை' என்னும் அடை புணர்த்து அருளிச்செய்தார் என்க. "அரனடியே" என்னும் ஏகாரம், 'பிறிதொரு பொருளை யும் அடையாது' எனப் பிறபொருள்களினின்றும் பிரித்தலிற் பிரிநிலை. அடி நாய் - அடிக்கீழகப்பட்ட நாய். இறைவற்குத் தம்மை அதுபோன்றவராகக் கொண்டு ஒழுகினமையின், "அடி நாயேன்" என்றருளிச்செய்தார். "அடைந்து" என்னும் வினையெச்சம், எண்ணின்கண் வந்தது. "அரன்" என்புழியும் இரண்டனுருபு விரித்து, 'அரனையே நாயேன் அடிஅடைந்து உய்ந்தேன்' எனக் கூட்டுக. பிரிநிலை ஏகாரம் ஏனைப் பெயர் களோடும் இயையும்.

459. மின் - மின்னல். மின்னிடைச்சேர் உருமு - மின்ன லின்கண் பொருந்திய இடி. 'மழை' என்றது, கருணைமழையை. கருணையை மழையாக உருவகிப்பார், இறைவனை முகிலாக (மேகமாக) உருவகஞ்செய்தார். சிவபிரான் வெண்ணீறு சண்ணித்த மேனியனும் இயைபுபற்றி வியப்புத்தோன்ற 'வெண்முகிலாய் மழை பொழிவான்' என்றருளினர். இனி மழையையே குறித்தருளியதாகக் கொண்டு, 'வெண்முகிலாய் எழுந்து, பின் மழை பொழிவான்' என உரைத்து, 'கருமுகிலாய், என்பது, ஆற்றலாற்கொள்ளப்படும்' என்றலுமாம். தன்னன் . தன் வயமுடையவன். "பல்லுயிர்க்கு" என்பதில், முற்றும்மை விரித்து, அதனையும், "ஓர்" என்பதனையும், "தாய்" என்ற தற்கு முன்னுங்கூட்டுக. என்னன் - எனக்கு உரியவன். 'எந்தை

Koviloor Digital Library

460 பத்தர்கள் சித்தத்தே பாவித் தானைப்
பவளக் கொழுந்தினை மாணிக் கத்தின்
தொத்தினைத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சொல்லுவார் சொற்பொருளின் தோற்ற மாகி
வித்தினை முளைக்கிளையை வேரைச் சீரை
வினைவயத்தின் தன்சார்பை வெய்ய தீர்க்கும்
அத்தனை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 3

461 பேணியநற் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை யிடர்க்கடலுட் சுழிக்கப் பட்டிங்
கிளைக்கின்றேற் கக்கரைக்கே யேற வாங்குந்
தோணியைத் தொண்டனேன் தூய சோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற் காசின்
ஆணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 4

யர்கிய பெருமான்' என்க. செக்கர்வான்-செவ்வானம். "வானே" என்னும் ஏகாரம் தேற்றம். அன்னான் - போன்றவன்; இது நிறம்பற்றி அருளப்பட்டது.

460. பாவித்தான் - பாவிக்கப்பட்டான். தொத்து - கொத்து. "தோற்றம்" என்றது, உணர்வை. முளைக்கிளை - முளையின்கட் கிளை; 'முளையை' என்பதும் உடம்பொடு புணர்த்தலாற் கொள்ளப்படும். "சீர்" என்றது பயனை. "வினைவயத்தின்றன்" என்புழி, சாரியைகள் இரண்டு வந்தன. வயம் - வழி. சார்பு - நிமித்தம். இதனால், "ஆன்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும்" (சிவஞானபோதம் சூ. 2. அதி. 2.) என்றதற்கு உரையளவை பெறப்பட்டது. வெய்ய - கொடியன; துன்பங்கள்.

461. பேணிய - பேணப்பட்ட. பித்தர் - பேரன்புடையார். "ஏணி" என்றது ஏகதேச உருவகமாகலின், 'முத்தியாகிய உயர்ந்த இடத்தை' என உரைக்க. 'அதனால் சுழிக்கப்பட்டு' என்க. இங்கு - இவ்வுலகில். "இளைக்கின்றேற்கு" என்பது,

Koviloor Digital Library

462 ஒருமணியை உலகுக்கோ ருறுதி தன்னை
உதயத்தி னுச்சியை உருமா னுனைப்
பருமணியைப் பாலோடஞ் சாடி னுனைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேன தாகித்
தீங்கரும்பி னின்சுவையைத் திகழுஞ் சோதி
அருமணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.5

'இளைக்கின்றேனை' என்னும் பொருட்டாகிய உருபு மயக்கம். அக்கரை - அவ்வுலகு; இறைவனுலகம். சுலாவுதல் - அசைதல். வெண்குழை - சங்கக்குழை. 'ஆணி' என்பது, பொன்னது மாற்றின் அளவை அறிவது; இதனை, 'உரையாணி' என்பர். "சுடர் பொற்காசின் ஆணி" என்றது, 'பொற்காசினது சுடரை அளக்கும் ஆணி' என்னும் குறிப்பினது; இங்கு அதனைக் கூறியது, உயர்ந்த பொன்' எனல் வேண்டி. "பொற்காசு" என்பது ஒரு சொல்லாய், "சுடர்" என்றதனோடு வினைத்தொகைநிலை படத் தொக்கது.

462. ஒரு மணி - ஒப்பற்ற மாணிக்கம்; என்றது, 'மாணிக்கம் என்பனதாம் பலவுளபோலாது, தான் ஒருவனேயாய் உள்ளவன்' என்றதாம். "உதயம்" என்றது, ஆகுபெயராய், பகலவனை உணர்த்திற்று. "உச்சி" என்றதும், அவ்வாறு, உச்சிப்பொழுதில் விளங்கும் ஒளியைக் குறித்தது. உரும் - இடி. பருமணி - பெரிய மாணிக்கம்; சிறியது சிறப்புடைத்தன்மையின், இவ்வாறருளிச் செய்தார். பவித்திரன் - தூயோன். பசுபதி - உயிர்கட்குத் தலைவன். திருமணி - (கழுவ வேண்டாது இயல் பாகவே) அழகிய மணி. "தேனது" என்பதில், 'அது' பகுதிப்பொருள் விகுதி. இதனை முன்னே கூட்டி, 'தேனாகித் தித்திப் பாகியவனை' என உரைக்க. 'சோதியை உடைய அருமணி' என்க, அருமணி - யாண்டும் கிடைத்தற்கரிய ஒருவகை மாணிக்கம். "ஒருமணி" முதலியன உவமையாகு பெயர்கள்.

Koviloor Digital Library

463 ஏற்றானை யெண்டோ ளுடையான் தன்னை
யெல்லி நடமாட வல்லான் தன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் தன்னைக்
குரைகடல்வாய் நஞ்சுண்ட கண்டன் தன்னை
நீற்றானை நீளரவோன் றார்த்தான் தன்னை
நீண்ட சடை முடிமேல் நீரார் கங்கை
ஆற்றானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன அடைந்துய்ந் தேனே.6

464 கைம்மான மதகளிற்றை உரித்தான் தன்னைக்
கடல்வரைவா னாகாச மானான் தன்னைச்
செம்மானப் பவளத்தைத் திகழும் முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயா னானை
எம்மானை என்மனமே கோயி லாக
இருந்தானை என்புருகும் அடியார் தங்கள்
அம்மானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.7

463. ஏற்றான் - இடபவாகனன். எல்லி - இரவு. கூற்றான் - கூற்றமாய் உள்ளவன்; அழித்தல் தொழிலைச் செய்பவன். சிவபிரான் கூற்றுவனை உதைத்தது, அழித்தல் தொழிலைத் தன் ஆணையின் வழிச்செய்யாது, அவன் இச்சைவழிச் செய்யத் தொடங்கினமையால்; எனவே, அதனை இங்கு எடுத்தோதியது, 'அத்தொழிலைத் தனதாக உடையவன் அப்பெருமானே' என்பது உணர்த்துதற் பொருட்டாயிற்று. குரைகடல் - ஒலிக கின்ற கடல்.

464. மானக்களிறு - தோலாத களிறு. மானப் பவளம் - பெருமையுடைய பவளம். எம்மான் - எம் தலைவன். அம்மான் - அனைவர்க்கும் தலைவன்.

Koviloor Digital Library

465 மெய்யானைப் பொய்யரோடு விரவா தானை
வெள்ளிடையைத் தண்ணிழலை வெந்தீ யேந்துங்
கையானைக் காமனுடல் வேவக் காய்ந்த
கண்ணானைக் கண்மூன் றுடையான் தன்னைப்
பையா டரவமதி யுடனே வைத்த
சடையானைப் பாய்புலித்தோ லுடையான் தன்னை
ஐயானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 8

466 வேண்டாமை வேண்டுவது மில்லான் தன்னை
விசயனைமுன் னசைவித்த வேடன் தன்னைத்
தூண்டாமைச் சுடர்விடுநற் சோதி தன்னைச்
சூலப் படையானைக் காலன் வாழ்நாள்
மாண்டோட வுதைசெய்த மைந்தன் தன்னை
மண்ணவரும் விண்ணவரும் வணங்கி யேத்தும்
ஆண்டானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 9

465. மெய்யான் - வாய்மை வடிவாய் உள்ளவன். பொய்யர் - வஞ்சர். வெள்ளிடை - வெற்றிடம். 'வெள்ளடை' என்னும் திருக்கோயிலை அருளுதற்கு ஈண்டு இயைபின்மையின், அது பாடம் அன்று. 'பை அரவம், ஆடரவம்' எனத் தனித் தனி முடிக்க. இவை இனச்சுட்டுடைய அடை. பை - படம். ஐயான் - அழகியான்; தலைவனுமாம்.

466. வேண்டாமை - வெறுத்தல். வேண்டுவது - விரும்புதல். "வேண்டுதல்வேண் டாமை யிலான்" (குறள். 4.) என்றது காண்க. விசயன் - அருச்சுனன். அசைவித்த - தளர்வித்த. வேடன், சாதிப்பெயராகவும் 'வேடத்தன்' என்னும் பொருளதாகவும் கொள்க. மைந்தன் - வலிமையுடையவன். ஆண்டான் - தலைவன்.

Koviloor Digital Library

467 பந்தணவு மெல்விரலாள் பாகன் தன்னைப்
பாடலோ டாடல் பயின்றான் தன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் தன்னைச்
செந்தமிழோ டாரியனைச் சீரி யானைத்
திருமார்பிற் புரிவெண்ணூல் திகழப் பூண்ட
அந்தணனை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

468 தரித்தானைத் தண்கடல்நஞ் சுண்டான் தன்னைத்
தக்கன்றன் பெருவேள்வி தகர்த்தான் தன்னைப்
பிரித்தானைப் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பெருவலியால் மலையெடுத்த அரக்கன் தன்னை
நெரித்தானை நேரிழையாள் பாகத் தானை
நீசனேன் உடலுறு நோயான தீர
அரித்தானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

திருச்சிற்றம்பலம்

467. பந்து அணவும் - பந்தினைப் பொருந்திய. பந்து, அகங்கை புறங்கை இரண்டுங்கூடிய திரட்சியுமாம்; அது, பந்து போலத் திரண்டு தோன்றுதலே ஈண்டுச் சிறப்பென்க. 'பந்து' என்பது இப்பொருளதாதலை "கைகளும்மணி பந்தசைந்து" (திருநாவுக். 358.) என்றதனால் அறிக. கொந்து அணவு - கொத்திற் பொருந்திய. கோலமாம் - அழகான; இங்கு, "செந் தமிழோடு ஆரியன்" என்றாற்போல. முன்னும், 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்றருளிச்செய்ததனை மேலே (பக். 176.) காண்க. சீரியான் - சிறந்தவன்.

468. "தரித்தானை" என்பதனை, "உண்டான்றன்னை" என்பதன் பின்னர்க் கூட்டுக. தரித்ததும், நஞ்சினையென்க. பிரித்தது, தக்கன் செருக்கினை; அதனை ஆற்றலாற்கொள்க. அரித்தான் - அழித்தான்; நீக்கினான்.

Koviloor Digital Library

47. திரு ஆவடுதுறை

திருப்பதிக வரலாறு

நாயனர், திருக்கோடிகாவிலிருந்து ஆவடுதண்டுறையை அடைந்து தொழுது பாடியருளியபல திருப்பதிகங்களுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 191.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

469 திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 1

இத்திருப்பதிகம், இறைவனை அடைக்கலமாக அடைந்து அபயம் வேண்டி அருளியது.

469. "திரு" என்பது இங்கு, திருமகளது வரவிற்குக் காரணமாகிய நல்லூழ்; புண்ணியம். "என்' என்பது, "திரு" என்றதனோடும் இயையும். உலகின்பங்கள் எல்லாவற்றையும் தருதலின், "செல்வம்" என்றும், சித்தத்துள் தித்தித்தலின், "தேன்" என்றும், வானோர்க்குப் புகழ் உண்டாக ஓரோர் ஆற்றலை வழங்கலின், அவர்க்குச் சுடர் (விளக்கு) என்றும், முன்னைத் தவம் உடையார்க்குத் தனது உண்மை வடிவிற் றோன்றி யருளுதலின், "செழுஞ்சுடர் நற்சோதி மிக்க உருவே" என்றும், தமக்கு ஆவன பலவும் அவனே அறிந்து செய்தலின். "உறவே" என்றும், உடலும் உள்ளமும் அருளே ஆகப் பெற்றமையின் "என் ஊனே ஊனின் உள்ளமே" என்றும், உள் நின்று உணர்வைத் தோற்றுவித்து உணர்விற்கு வித்தாய் நிற்றலின், "உள்ளத்தினுள்ளே நின்ற கருவே" என்றும், வேண்டியவற்றை வேண்டியவாறே பெறத் தருதலின் "என் கற்பகமே" என்றும், உணருந்தோறும் உணருந்தோறும்

Koviloor Digital Library

470 மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்
மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணு நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
மேற்றான்நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 2

மேன்மேற் சிறந்து தோன்றலின், "கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்" என்றும், உருவாய உடல் நோயின் நீக்குதற்கு, "அருவாய வல்வினை நோய்" என்றும் அருளிச்செய்தார். 'அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம் காவாய்" எனக் கூட்டி, அதனை இறுதிக்கண்தந்து முடிக்க. "கரு" என்றது, வித்தென்னும் பொருளது. 'உரு, 'அரு' என்பன, இங்கு, பொறிகட்குப் புலனாதலையும் 'ஆகா மையையும் குறிக்கும். அமரர் ஏறு - அமரராகிய விலங்குகட்கு அரியேறு (ஆண் சிங்கம்) போன்றவன் - 'தலைவன்' என்றவாறு. "செழுஞ்சுடர் நற் சோதீ" என்பதும் பாடம்.

470. 'எண்ணின் எம்பெருமான் திருவடியே யல்லால் பிறதெய்வம் எண்ணுநாயேன்' என மாறிக் கூட்டி, அதனை முதற்கண் வைத்துரைக்க. திருவருள் செயல்வகையாற் பலவா மாகலின், பன்மையாற் கூறினார். "நாவின் மாற்றேன்; நெஞ்சின் மறவேன்; (அதன்கண்) வஞ்சம் ஏற்றேன் (ஏற்றமாட்டேன்)" செய்வன, "ஒறுப்புக்கள்" என இயையும். "செய்வனகள்", 'கள்', ஒரு பொருட் பன்மொழியாய் வந்த விகுதிமேல் விகுதி. "வேதனைக்கே இடங்கொடுத்து" என்றது, 'வேதனைகளைப் பொறுத்து', என்றவாறு. 'நாளும் நாளும் இடங்கொடுத்து' எனக் கூட்டுக. 'இனி ஆற்றேன் ஆயினேன்; அதனால் அஞ்சேல் என்னாய்' என்க

Koviloor Digital Library

471 வரையார் மடமங்கை பங்கா கங்கை
மணவாளா வார்சடையாய் நின்றன் நாமம்
உரையா உயிர்போகப் பெறுவே ஞகில்
உறுநோய்வந் தெத்தனையு முற்ரு லேன்னே
கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக்
காதலித்து நின்கழலே யேத்து மன்பர்க்
கரையா அடியேனை அஞ்சே லேன்ஞய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 3

472 சிலைத்தார் திரிபுரங்கள் தீயில் வேவச்
சிலைவளைவித் துமையவளை யஞ்ச நோக்கிக்
கலித்தாங் கிரும்பிடிமேற் கைவைத் தோடுங்
களிறுரித்த கங்காளா எங்கள் கோவே
நிலத்தார் அவர்தமக்கே பொறையாய் நாளும்
நில்லா வுயிரோம்பு நீத னேநான்
அலுத்தேன் அடியேனை அஞ்சே லேன்ஞய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 4

471. "அடியேனை அஞ்சேல் என்ஞய்" என்பதனை, "உற்ருல் என்னே" என்பதன் பின்னர்க் கூட்டி, "நின்றன் நாமம்" என்பது தொடங்கி அஃது இறுதியாக அனைத்தையும் ஈற்றில் வைத்து உரைக்க. உரையா - சொல்லிக்கொண்டு. இறக்குங் காலத்து இறைவனை நினைத்துத் துதிப்பவர்க்குப் பிறவி நீங்குதல் திண்ணமாதலின் இவ்வாறு அருளினர். எனவே, "அஞ்சேல் என்ஞய்" என்றது, 'அவ்வாறு போகப் பெறுவதனை அருளுக' என்றவாரும். "நின் - நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும் - சாம்அன் றுரைக்கத் தருதிகண்டாய் எங்கள் சங்கரனே" (திருமுறை 4 - 103 - 3) என்ருற்போலப் பிறவிடத்தும் அருளிச்செய்தல் காண்க.

472. சிலைத்தார் - (சினத்தால்) ஆரவாரித்தவர்கள். உமையவளை அஞ்சநோக்கியது, யானையின்மேல் எழுந்த வெகுளிக் காலத்து. கலித்து - பிளிறி. "பிடிமேற் கைவைத்து ஓடும்" என்றது, 'மதங்கொண்டு பெயரும்' என்றவாறு. "நிலத்தார்" என அஃறிணையை உயர்திணைப் பன்மையாகிய உயர்சொல்லால் அருளியது, இழித்தற் குறிப்பினுல்; இழித்தல், வினைத்தொடக்

Koviloor Digital Library

473 நறுமா மலர்கொய்து நீரின் மூழ்கி
நாடோறும் நின்கழலே யேத்தி வாழ்த்தித்
துறவாத துன்பந் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந் துற்ரு லேன்னே
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
ஒலிதிரைநீர்க் கடல்நஞ்சுண் டுய்யக் கொண்ட
அறவா அடியேனை அஞ்சே லேன்ருய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 5

குடையாரையே சுமப்பதாதல் பற்றி. "அவர்" பகுதிப்பொருள் விகுதி. "தம்" சாரியை. பொறை - சுமை. ஓம்புதல், நிலை நிறுத்த முயலுதல். அலுத்தது, நிலத்துக்குப் பொறையாய்த் தோன்றி நில்லா உயிரை ஓம்பி.

473. 'நீரின் மூழ்கி நறுமா மலர்கொய்து' என மாறிக் கூட்டுக. ஏத்தி - புகழ்ந்து. துறவாத - நீக்கலாகாத. 'துன்பம்' என்றது, துன்பங்கள் எல்லாவற்றிற்கும் அடியாய பேதைமையை. இதனை, "பிறப்பென்னும் பேதைமை" (குறள் - 358.) என்றருளினுர், திருவள்ளுவ நாயனுர். சிவாகமங்களுள்; 'ஆணவம்' எனப்படுவது இதுவே. இதுவே துன்பத்திற் கெல்லாம் முதலாய் எல்லா உயிர்களையும் எஞ்சாது, பற்றியது தெரியாமற் பற்றி, நீக்குதற்கரிதாய் நின்று வருத்து தலின், "பொல்லாத ஆணவம்" (சிவஞான சித்தி. சூ. 2 - 78.) என்றருளினுர், அருணந்திதேவ நாயனுர். இதனை நீக்கிக் கொண்டோர்க்கு. பிராரத்த கன்மமும் உயிரைத் தாக்காது உடலோடே பற்றி யொழிந்திடுமாகலின், "சூழுலகில் ஊழ்வினை வந்து உற்ருல் என்னே" என்றருளிச் செய்தார். "வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்" (திருமுறை. 4 - 112 - 8). என்றற் றொடக்கத்தனவாக நாயனுரும், "எங்கெழிலென் ஞாயி றெமக்கு" (திருவாசகம், திருவெம்பாவை - 19.) என ஆளுடைய அடிகளும் அருளிச்செய்தன, இந்நிலைபற்றியே என்க. இங்ஙனம் அருளிச் செய்தவர், "அஞ்சேல் என்னுய்" என வேண்டியது' 'இந்நிலை சலிக்குங்கொலோ' என்றெழுந்த அச்சம்பற்றி யென்க. இதனை, "பெருஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சும் - அருஅ இடும்பைத்தென் நெஞ்சு" (குறள் - 1295.) என்றருளிய அப்பொருளின் வைத்து அறிந்துகொள்க. "நறுமா மலர் கொய்து" முதலியன, துறவாத துன்பம் துறத்தற்கு வாயிலை

Koviloor Digital Library

474 கோன்நா ரணன் அங்கந் தோள்மேற் கொண்டு
கொழுமலரான் தன்சிரத்தைக் கையி லேந்திக்
கானுர் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கங்காள வேடராய் எங்குஞ் செல்வீர்
நானுர் உமக்கோர் வினைக்கே டனேன்
நல்வினையுந் தீவினையு மெல்லாம் முன்னே
ஆனுய் அடியேனை அஞ்சே லென்னுய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 6

உடம்பொடு புணர்த்தலாக அருளியவாறு. அறவன் - அறம் உடையவன்; "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின் - அருளாதான் செய்யும் அறம்" (குறள் - 244.) என்பதனுல், அருளுடையவனே அறமுடையவனுவனுகலானும், பிறர் உய்தற் பொருட்டுத் தான் நஞ்சுண்டவன்போலப் பேரருளுடையார் பிறர் ஒருவரும் ஓரிடத்தும் இன்மையானும், சிவபிரானை, "அறவா" என, வாயார அழைத்தருளினுர். 'அன்ன அறமுடையை ஆதலின், அடியேனை அஞ்சேல் என்னுய்' என்பது குறிப்பு.

474. 'கோனுகிய நாரணன்' என்க. அங்கம் - எலும்புக் கூடு. 'அங்கம் தோள்மேற்கோடல்' முதலியவற்றை எடுத்தோதியது, எல்லாவற்றையும் இறுதி செய்ய வல்லீராகலின், என் வினையையும் இறுதிசெய்வீர் என்றற்கு. "நான் ஆர்" என்பதில் உள்ள "ஆர்" என்பது, 'என்ன உரிமையுடையேன்' என்னும் பொருளதாகிய 'யார்' என்னும் வினு வினைக் குறிப்பின் மரூஉ. வினைக்கேடன் - வினையாகிய கேட்டினை உடையவன். "கேடு" என்பது, அதன் காரணத்தை உணர்த்திய காரியவாகு பெயர். 'ஓர்வினைக் கேடனுகிய நான் உமக்கு ஆர்' எனக் கூட்டி, 'ஆயினும், முன்னே, நல்வினையும் தீவினையும் ஆகிய எல்லா நெறிகளும் நீயே ஆனுய் ஆகலின், அடியேனை அஞ்சேல் என்னுய்' என முடிக்க. வினைகாரணமாக உமக்கு நான் அயலவனுயினும், வினையை அதனேடு ஒற்றித்து நின்று நடத்துவோன் நீயேயாகலின், வினையை நீக்கி என்னை அஞ்சேல் என்னலாமன்றே?' என்றபடி. வினையை நடத்துவோனும் இறைவனே என்பது உணரவல்லார்க்கு, வினை, பந்தமாகாமையான் இவ்வாறு அருளிச்செய்தார். "வேடராய்" முதலியன, ஒருமைப் பன்மை மயக்கம்.

Koviloor Digital Library

475 உழையுரித்த மானுரிதோ லாடை யானே
உமையவள்தம் பெருமானே இமையோர் ஏறே
கழையிறுத்த கருங்கடல்நஞ் சுண்ட கண்டா
கயிலாய மலையானே உன்பா லன்பர்
பிழைபொறுத்தி என்பதுவும் பெரியோய் நின்றன்
கடனன்றே பேரருளுன் பால தன்றே
அழையுறுத்து மாமயில்க ளாலுஞ் சோலை
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 7

476 உலந்தார் தலைகலனொன் றேந்தி வானோ
ருலகம் பலிதிரிவாய் உன்பா லன்பு
கலந்தார் மனங்கவருங் காத லானே
கனலாடுங் கையவனே ஐயா மெய்யே
மலந்தாங் குயிர்ப்பிறவி மாயக் காய
மயக்குளே விழுந்தழுந்தி நாளும் நாளும்
அலந்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 8

475. 'உழை உரித்து அம் மானுரி தோலை ஆடையாக உடையவனே' என்க. கழை இறுத்த - மூங்கில்களை ஒடித்த; என்றது, மலையினின்றும் வருகின்ற யாறுகள் கலத்தல்பற்றி. "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல, தம்மை இகழ்வாரைப் பொறுத்தல்" (குறள் - 151.) தலையாயினார்க்கு இயல்பாகலின், 'உன்னை, பிழைபொறுப்பாய் என்று அறிந்தோர் சொல்வது, நினக்குப்புகழாகாது, பெரியோயாகிய நினக்கு அது கடனாகலின்' என்றருளினார். "அடியேனை அஞ்சேலென்னாய்" என்பது இத் திருப்பாடற்கண்ணும் வந்து இயையுமாகலின், "உன்பாலது அத்தகைய பேரருளன்றே; அதனால் அடியேனை அஞ்சேலென் னாய்" என முடிக்க. "பிழைத்தவை பொறுக்கையெல்லாம் பெரியவர் கடமை" (திருவாசகம். திருச்சதகம் - 66.) என்றருளியது காண்க அழை - அகவுதலை. உறுத்து - (பலர் செவியினும்) உறுவித்து. ஆலும் - ஆடுகின்ற. "இமையோர் ஏறே" என முன்னர் வந்தமையின், இங்கு இறுதிக்கண் உள்ள "அமரர் ஏறே" என்பது, வாளா பெயராய்நின்றது.

476. உலந்தார் - இறந்தார். காதலான் - அருளாளன். "மேவினார் பிரிய மாட்டா விமலனார்" (கண்ணப்பர் பு. 174.)

Koviloor Digital Library

477 பல்லார்ந்த வெண்டலை கையி லேந்திப்
பசுவேறி யூரூரன் பலிகொள் வானே
கல்லார்ந்த மலைமகளும் நீயு மெல்லாங்
கரிகாட்டி லாட்டுகந்தீர் கருதீ ராகில்
எல்லாரு மென்தன்னை யிகழ்வர் போலும்
ஏழையமண் குண்டர்சாக் கியர்களொன் றுக்
கல்லாதார் திறத்தொழிந்தேன் அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 9

என்றதுங் காண்க. மலம் தாங்கு உயிர்ப் பிறவி மாயக் காயம் - இயல்பாகவே மலத்தினை உடைய உயிரினது பிறவியாகிய நிலையாமையுடைய உடம்பு ; இதனால்,

"நெல்விற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்விற் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்மம் அன்றுளவாம்"

(சிவஞானபோதம் 3 - 2 - அதி. 2.)

என்றதற்கு உரையளவை பெறப்பட்டது. அலந்தேன் - துன்ப முற்றேன்.

477. 'ஊரூரனாய்' என எச்சமாக்குக. "எல்லாம்" என்பது, உம்மையெண்ணின் தொகைப் பொருட்டாய் நின்றது. இதன் பின் வருவனவற்றிற்கு, 'நீவிர் இருவிரும் என்னை ஆளக் கருதிராகில், ஒன்றுக்கும் அல்லாதாரது கூற்றிலேபட்டு நல்லாரை இகழ்ந்தமை பற்றி எல்லாரும் என்னை இகழ்வர் ; ஆதலின், அஞ்சே லென்னாய்' என உரைக்க. "கருதீர்" என்பது வேறு முடிபாகலின், பால்வழுவின்று ; 'நீரும் எல்லாம்' என்பது பாடம் அன்று. இதனால், அப்பனையேயன்றி, அம்மையையும் சார்த்துவகையால் வேண்டுதல் பெறப்பட்டது. "போலும்" என்பது அசைநிலை. சமண் சமயமும் புத்த சமயத் தோடு ஒத்ததாகலின், தம்மைச் சாக்கியர் திறத்து ஒழிந்ததாகவும் அருளிச்செய்தார்.

Koviloor Digital Library

478 துறந்தார்தந் தூநெறிக்கண் சென்றே னல்லேன்
துணைமாலை சூட்டநான் தூயே னல்லேன்
பிறந்தேன்நின் திருவருளே பேசி னல்லாற்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே
செறிந்தார் மதிலிலங்கைக் கோமான் தன்னைச்
செறுவரைக்கீ ழடர்த்தருளிச் செய்கை யெல்லாம்
அறிந்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 10

திருச்சிற்றம்பலம்

478. துறந்தார் - உண்மைத் துறவிகள்; அவர், தம் செயலற்றுத் தலைவன்வழி நின்றவர். அவரது தூநெறியாவது, 'யான், எனது' என்னும் மயக்க உணர்வாகிய குற்றம் நீங்கிய நெறி. சமணத் துறவிகள் அத்தன்மையரும் அவரது நெறி அத்தகையதும் ஆகாமையின், "துறந்தார்தம் தூநெறிக்கண் சென்றேனல்லேன்" என்றருளிச்செய்தார். துணைமாலை - பூக்களைப் பிணைத்துச் செய்யும் மாலை. "தூயே னல்லேன்" என்றது மேற்கூறிய குறையை நினைந்த நினைவினால் என்க. "பிறந்தேன் " என்றதனை, 'பேசின்" என்றதன் பின்னர்க் கூட்டுக 'இலங்கைக் கோமானை முன்னர் அடர்த்து, பின்னர் அருள்செய்கை யெல்லாம்' என்க. 'அவற்றை அறிந்தேன்' என்றது, 'என்னையும் அடர்த்தே யொழியாது அருளவும் வேண்டும்' என வேண்டியவாறு. இதனால், இராவணனுக்கு அருள்புரிந்த வரலாற்றினை நாயனார் ஒவ்வொரு திருப்பதிகத்தின் இறுதிப்பாடலிலும் அருளிச்செய்து முடித்தலின் கருத்து நன்குணரப்படுதலின், "அறியா - அத்தன்மைய னாய இராவணனுக் கருளுங்கரு ணைத்திற மான வதன் - மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே மேல்கொண்டு வணங்கினர்" என நாயனாரது வரலாற்றினும்,

"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்செய்தார்"

என ஆளுடைய பிள்ளையார் வரலாற்றினும் இனிது விளக்கி யருளினர், சேக்கிழார் நாயனர்.

Koviloor Digital Library

48. திருவலிவலம்

திருப்பதிக வரலாறு

வாகீசர், திருவாரூர்ப் புற்றிடங்கொள் நிருத்தரைக் காலங்களில் கும்பிட்டுப் பதிகம் பல பாடி, திருவாரூர் அரநெறியில் திகழும் பரமரைப் பணிந்து பாடி அங்கு அமர்ந்திருக்கும் நாட்களில், திருவலிவலம் சென்று தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு - 228.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

479 நல்லான்காண் நான்மறைக ளாயி னான்காண்
நம்பன்காண் நணுகாதார் புரமூன் றெய்த
வில்லான்காண் விண்ணவர்க்கும் மேலா னான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேத வேள்விச்
சொல்லான்காண் சுடர்மூன்று மாயி னான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான் ஈய
வல்லான்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.1

இத்திருப்பதிகம் ; இறைவன் இயல்புகளை, 'காண்' என்னும் முடிபினை உடைய பல் தொடர்க்கோவைகளாற் புகழ்ந்து, அவ்விறைவன் என் மனத்தின்கண் உள்ளான் (விளங்குகின்றான்) என் றருளுகின்றது.

479. 'மேலவர்க்கு மேலான்' என்பதும் பாடம். வேத வேள்விச் சொல் - மந்திரம் ; 'அம் மந்திர வடிவாய் இருக்கின்றான்' என்க. சுடர் மூன்று, 'சூரியன், சந்திரன், நெருப்பு, என்பன. தொல் வான் - பழைய வானுலகம் ; என்றது, தனது உலகத்தை (சிவலோகத்தை).

Koviloor Digital Library

480 ஊனவன்காண் உடல்தனக்கோர் உயிரா ஞன்காண்
உள்ளவன்காண் இல்லவன்காண் உமையாட்
கேன்றுந்
தேனவன்காண் திருவவன்காண் திசையா ஞன்காண்
தீர்த்தன்காண் பார்த்தன்றன் பணியைக் கண்ட
கானவன்காண் கடலவன்காண் மலேயா ஞன்காண்
களியானை யீருரிவை கதறப் போர்த்த
வானவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.2

481 ஏயவன்காண் எல்லார்க்கு மியல்பா ஞன்காண்
இன்பன்காண் துன்பங்க ளில்லா தான்காண்
தாயவன்காண் உலகுக்கோர் தன்னுேப் பில்லாத்
தத்துவன்காண்உத்தமன்காண்தானேயெங்கும்
ஆயவன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்
அகங்குழைந்து மெய்யரும்பி அழுவார் தங்கள்
வாயவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.3

480. 'ஊனவன், தேனவன், என்பவற்றில் அகரம் சாரியை. ஊன் - உடம்பு. உள்ளவன் - அருளாளர்க்கு அனுபவப் பொருளாய் இருப்பவன். இல்லவன் - உலகத் தார்க்கு அனுபவமாகாதவன். தேனவன் - தேன்போல இனியவன், திரு - செல்வம். தீர்த்தன் - ஆசிரியன். பணி - செயல்; போர்.

481. ஏயவன் (ஏவியவன்) - எப்பொருளேயும் நடத்திய வன். இயல்பு - நடை; இயக்கம். "ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பாஞன் சாழலோ" (திருவாசகம். திருச்சாழல் - 1.) என்றருளிச் செய்தமை காண்க. இன்பன் - நிறைந்த இன்ப முடையவன். துன்பங்கள் - துன்பங்கள் யாவும். தாயவன் - தாய்போன்ற கருணையை உடையவன். 'உலகுக்கு ஓர் தாயவன்' எனக் கூட்டுக. தத்துவன் - மெய்ப் பொருளாய் இருப்பவன்- ஆயவன் - பொருந்தியவன். அரும்பி - மயிர் சிலிர்த்து 'மெய் வருந்தி' என்பதும் பாடம். அன்பர் வாயவனுக அருளியது, அவரது வாய் பிறிதொன்றை அறியாமை குறித்து.

Koviloor Digital Library

482 உய்த்தவன்காண்உடல்தனக்கோர்உயிரானுன்காண்
ஓங்காரத் தோருவன்காண் உலகுக் கேல்லாம்
வித்தவன்காண் விண்போழியும் மழையா னுன்காண்
விளைவவன்காண்விரும்பாதார்நேஞ்சத்தேன்றும்
போய்த்தவன்காண் போழிலேழுந் தாங்கி னுன்காண்
புனலோடு வளர்மதியும் பாம்புஞ் சேன்னி
வைத்தவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனேன் மனத்து ளானே.4

483 கூற்றவன்காண் குணமவன்காண் குறியா னுன்
குற்றங்க ளனைத்துங்காண் கோல மாய [காண்
நீற்றவன்காண் நிழலவன்காண் நேருப்பா னுன்காண்
நிமிர்புன் சடைமுடிமேல் நீரார் கங்கை
ஏற்றவன்காண் ஏழுலகு மாயி னுன்காண்
இமைப்பளவிற் காமனைமுன் போடியாய் வீழ
மாற்றவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனேன் மனத்து ளானே.5

482. உய்த்தவன் - எல்லாவற்றையும் செலுத்தியவன். ஓங்காரத்து ஒருவன் என்றது, அதன் சமட்டி (முழு)ப் பொருளை நோக்கி; அப்பொருளாவது 'எப்பொருட்கும் தலைவன்' என்பது. விளைவு - வித்தினின்றும் முளைமுதலியன தோன்றி வளர்ந்து முடிவில் தரும் பயன். பொய்த்தவன் - தோன்ருதொழிந்தவன். தாங்குதல் - காத்தல்.

483. கூற்று - சொல். சொல்லின் பொருளை, 'குணமும், குறியும்' என இரண்டாக்கியருளினுர்; அதனுல் அவற்றை உடைய பொருள்களும் கொள்ளப்படும். ''குணம்'' என்றது பொதுத்தன்மையையும், 'குறி' என்றது சிறப்புத்தன்மையையும் என்க. ''நிழல்'' என்றது - தட்பத்தை உணர்த்தி, நீர்மேல் நின்றது. ''கங்கை'' இயற்பெயர். ''மாற்று'', முதனிலைத் தொழிற்பெயர்; மாற்றவன் - மாற்றுதலை உடையவன்; 'மாற்றிய அவன்' என வினைத்தொகையுமாம்.

Koviloor Digital Library

484 நிலையவன்காண்தோற்றவன்காணிறையானுன்காண்
நீரவன்காண் பாரவன்காண் ஊர்முன் றெய்த
சிலையவன்காண் செய்யவாய்க் கரிய கூந்தல்
தேன்மொழியை ஒருபாகஞ் சேர்த்தி ஞன்காண்
கலையவன்காண் காற்றவன்காண் காலன் வீழக்
கறுத்தவன்காண் கயிலாய மென்னுந் தெய்வ
மலையவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 6

485 பேண்ணவன்காண் ஆணவன்காண் பேரியோர்க்
கென்றும்
பேரியவன்காண் அரியவன்காண் அயனு
ஞன்காண்
எண்ணவன்காண் எழுத்தவன்காண் இன்பக் கேள்வி
இசையவன்காண் இயலவன்காண் எல்லாங்
காணுங்
கண்ணவன்காண் கருத்தவன்காண் கழிந்தோர்
செல்லுங்
கதியவன்காண் மதியவன்காண் கடலேழ் சூழ்ந்த
மண்ணவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 7

484. "நிலையவன்" முதலிய பலவற்றுள்ளும் அகரம் சாரியை. தோற்று - 'தோன்று' என்பது திரிந்த தொழிற் பெயர்; 'தோன்றுதல்' என்பது பொருள். நிறை - நிறைவு; இறுதி; எனவே, தோற்றம் முதலிய மூன்றனையும் அருளியவாரு யிற்று. கலை - நூல். கறுத்தவன் - வெகுண்டவன்,

485. பெரியோர்க்குப் பெரியவன் - பெரியராயினுர்க்குத் தனது பெருமை தோன்ற நிற்பவன்; எனவே. ஏனைச் சிறியராயி ஞர்க்கு அவ்வாறு நில்லாதவன் என்பது பெறப்பட்டது. கேள்வி - ஓசை; 'கேட்கப்படுவது' என ஆகுபெயர். 'இன்பந் தரும் ஓசையாகிய இசை' என்க. "இயல்" என்றது, இயன்று (அடிபெயர்த்துச்) செய்யப்படுவதாகிய ஆடலை; எனவே, "எழுத்தவன்காண்" முதலிய மூன்றுலும் 'இயல், இசை, நாடகம்' என்ற மூன்றும் அருளியவாருயிற்று. கழிந்தோர் - பாசம் நீங்கப்பெற்ருேர். மதி - ஞானம்.

Koviloor Digital Library

486 முன்னவன்காண் பின்னவன்காண் மூவா மேனி
முதலவன்காண் முடியவன்காண் மூன்று சோதி
அன்னவன்காண் அடியார்க்கும் அண்டத் தார்க்கும்
அணியவன்காண்சேயவன்காண்அளவில்சோதி
மின்னவன்காண் உருமவன்காண் திருமால் பாகம்
வேண்டினன்காணீண்டுபுனற்கங்கைக்கேன்றும்
மன்னவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனேன் மனத்து ளானே. 8

487 நேதியவன்காண் யாவர்க்கும் நினைய வோண்ணு
நீதியன்காண் வேதியன்காண் நினைவார்க்
கேன்றுங்
கதியவன்காண் காரவன்காண் கனலா னுன்காண்
காலங்க ளூழியாய்க் கலந்து நின்ற
பதியவன்காண் பழமவன்காண் இரதந் தான்காண்
பாம்போடு திங்கள் பயில வைத்த
மதியவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனேன் மனத்து ளானே. 9

486. முன்னவன் பின்னவன் - உலகத்தோற்ற ஒடுக்கங்கட்கு முன்னும் உள்ளவன்; பின்னும் உள்ளவன். "மூவா மேனி" என்றது உடம்பொடு புணர்த்தலாகலின் 'மூவா மேனியன்காண்' எனவுங் கொள்ளப்படும். மூவா மேனி - என்றும் ஒரு நிலையாயே இருக்கும் தன்மை. "சோதி" என்றது, 'சுடர்' என்றவாறு. 'மூன்று சுடராகிய அத்தன்மையன்' என்க. 'அடியார்க்கு அணியவன் (அண்மையில் உள்ளவன்); அண்டத்தார்க்குச் சேயவன் (தொலைவில் உள்ளவன்) என நிரனிறையாகக் கொள்க. படைப்புக் காலத்துச் சிலகற்பங்களில், பிரமனை வலப்பக்கத்திலும், திருமாலை இடப்பக்கத்திலும் சிவபிரான் தோற்றுவிப்பனுகலின், "திருமால் பாகம் வேண்டினன்" என்றருளிச் செய்தார். ஈண்டு புனல் - மிக்க நீர். கங்கை - 'கங்கை' என்னும் தேவி. மன்னவன் - தலைவன்.

487. 'நெதி' யெனினும், 'நிதி' எனினும் ஒக்கும். நினைய ஒண்ணு - மனத்தால் அணுக இயலாத; உண்மை நீதி மக்களால் உணர்தற்கு அரிதாகலின், "யாவர்க்கும் நினைய ஒண்ணு நீதி"

Koviloor Digital Library

488 பங்கயத்தின் மேலானும் பால னாகி
உலகளந்த படியானும் பரவிக் காணா
தங்கைவைத்த சென்னியரா யளக்க மாட்டா
அனலவன்காண் அலைகடல்சூழிலங்கைவேந்தன்
கோங்கலர்த்த முடிநெரிய விரலா லூன்றுங்
குழகன்காண் அழகன்காண் கோல மாய
மங்கையர்க்கோர் கூறன்காண் வானோ ரேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.

திருச்சிற்றம்பலம்

என்றருளினர் ; இது பற்றிச் சேரமான்பெருமாள் நாயனார் அரசுபூணுதற்கு அஞ்சி, இறைவனை வேண்டிக் கழறிற்றறிவாராந் தன்மை பெற்றமை யறிக ; இதனால், அரசன், அநீதி என்றுணராமையால் ஒருதொழிலினும், அது செய்தாரை இறைவன் அருள் ஒறுக்கும் என்பது பெற்றும். இன்னும் இதனானே, நீதியாயினவற்றை அரசன் உணர்ந்து அளிசெய்யா தொழிலினும், அவனருள் அது செய்யும் என்பதும் போதரும். வேதியன் - வேதம் ஓதுபவன். கார் - மேகம். பதி - தலைவன். இரதம் - சுவை. மதியவன் - ஞானமுடையவன் ; 'தன்னை அடைந்தாரையும் தன்வண்ணமாக்கும் ஆற்றல் வாய்ந்த ஞான ஒளியை உடையவன்' என்பார், "பாம்போடு திங்கள் பயில (அச்சமின்றிப் பழகும்படி) வைத்த மதியவன்" என்றருளிச் செய்தார்.

488. பாலன் - சிறியவன் ; வாமனன். 'பாலகனாய்' என்பதும் பாடம். படியான் - நிலைமையன். "அங்கை வைத்த சென்னியராய்" என்பதனை, 'சென்னி வைத்த அங்கையராய்' என மாற்றிப் பொருள்கொள்க. இவ்வாறருளினராயினும், பரவிக் காணாது 'அளக்கமாட்டாது சென் அங்கை வைத்த' என்றலே கருத்தென்க. "பரவிக் காணாது" என்றது, 'முன்பே பரவிக் காண நினையாது' என்றபடி. பின்பு அங்கை சென்னி வைத்து, பரவி. 'அலர' என்பது, துச் சாரியை பெற்று, "அலர்த்த" என நின்றது ; 'மலர்களை உடைய' என்பது பொருள். குழகன் - இளையன் ; என்றது, "அழகன்" எனப் பின் வருவதற்கு ஏதுக் கூறுங் குறிப்பினதாய் நின்றது. "மங்கையர்" என்றது, உயர்த்தற் பன்மை.

Koviloor Digital Library

49. திருக்கோகரணம்

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசர், தொண்டை நாட்டில் திருக்காளத்தி தொழுது கயிலை யாத்திரையை மேற்கொண்டு செல்லும்பொழுது தெலுங்க நாட்டில் சீசைலத்தை வணங்கிக் கன்னட நாட்டைக் கடந்து வனங்கள் திருநதித்துறைகள் நெடியமலைகள் முதலிய யாவும் பிற்படச் செல்லுங்கால், துளுவநாட்டில் மேலைக்கடலாகிய மாகடல்சூழ் கோகரணம் மன்னினானை வணங்கிப் பாடி யருளியதேயாகும் இத்திருப்பதிகம். (திருநாவுக். பு - 351.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

489 சந்திரனுந் தண்புனலுஞ் சந்தித் தான்காண்
தாழ்சடையான்காண் சார்ந்தார்க் கமுதா னான்
அந்தரத்தி லசுரர்புரம் மூன்றட் டான்காண் [காண்
அவ்வுருவி லவ்வுருவ மாயி னான்காண்
பந்தரத்து நான்மறைகள் பாடி னான்காண்
பலபலவும் பாணி பயில்கின் றான்காண்
மந்திரத்து மறைப்பொருளு மாயி னான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. 1

இதுவும், மேலைத் திருப்பதிகம்போல 'காண்' என்னும் முடிபுடைய தொடர்களால், இறைவனது இயல்புகளை வகுத் துணர்த்தியருளியது. இதனுள், 'கோகர்ணம்' என்னும் வட சொல், 'கோகரணம்' எனத் திரிந்து நின்றது.

489. சந்தித்தான்-பொருந்தினான்; அணிந்தான், அவ்வுரு-அவரவர் விரும்பி வணங்கும் வடிவம். இனி, 'அழகிய உருவம்' எனக்கொண்டு, 'அழகிய உருவங்கள் பலவற்றுள்ளும் அழகிய திருமேனியை உடையவன்' என்றுரைத்தலுமாம். 'பண்தரத்து' என்பது, "பந்தரத்து" எனத் திரிந்து நின்றது. 'இசை வகைகளை உடைய' என்பது பொருள். பாணி - தாளம்; என்றது, அதற்கியைய ஆடும் கூத்தினை. மந்திரத்து மறை - மந்திரத்தை உடைய வேதம். மாகடல் - பெரிய கடல்; என்றது, மேற்குக் கடலை.

Koviloor Digital Library



கோலக் கோபுரக் கோகரணம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

490 தந்தவத்தன் தன்தலையைத் தாங்கி னான்காண்
சாரணன்காண் சார்ந்தார்க்கின் னமுதா னான்
கேந்தத்தன் காண்கேடில வீரட் டன்காண் [காண்
கேடிலிகாண் கெடுப்பார்மற் றில்லா தான்காண்
வேந்தோத்த நீறுமெய் பூசி னான்காண்
வீரன்காண் வியன்கயிலை மேவி னான்காண்
வந்தோத்த நெடுமாற்கும் அறிவோ ணான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. 2

490. தந்த அத்தன் - (உலகத்தைப்) பெற்ற தந்தை; பிரமன். இனி, ஒரொரு கற்பத்தில், குணருத்திரர் பிரமனிடத்துத் தோன்றுதல் பற்றியும், விண்ணவர் பகுதியினராகிய பதினோர் உருத்திரர் பிரமனது நெற்றியினின்றும் தோன்றினர் என்று புராணம் (கந்தபுராணம் உருத்திரர் கேள்விப் படலம்) கூறுதல் பற்றியும், அவ்வுருத்திரரைத் தந்தமையை மகாருத்திரனாகிய இறைவனைத் தந்ததாக உபசரித்து அருளிச்செய்ததாக உரைத்தலுமாம். இனி, 'சிருட்டியைக் கற்பித்தற்பொருட்டுச் சிவபிரான் பிரமன்பால் தோன்றினான்' எனவரும் வரலாறுகள் பற்றி அருளிச்செய்ததூஉமாம். இவ்வரலாறுகள்பற்றிச் சிவபிரானுக்குத் தாழ்வு ஏற்றுதல் கூடாதென்றற்கு "தந்த, அத்தன் தன்தலையைத் தாங்கினான் (ஏந்தியுள்ளான்) காண்" எனப் பழிப்பதுபோலப் புகழ்புலப்பட ஓதியருளினார். 'தந்தையாதல் உண்மையாயின், அவனது தலை தடிந்து தாங்கப்படுதல் எவ்வாறு கூடும். உலக மக்களுள் தந்தையும் மகனும் போலக் கொள்ளுதல் ஈண்டுப்பொருந்தாமையின்' என்பது திருக்குறிப்பு. சாரணன் - எங்கும் சரிப்பவன் "கந்தம்" என்பது, "கெந்தம்". என வந்தது. கெந்தத்தன் - (மலரில்) மணம்போல்பவன். வந்து ஒத்த நெடுமால் - தன்னிடத்துத் தோன்றி, தன்னோடு ஒத்து நின்ற (முத்தொழில்களுள் ஒன்றைச் செய்கின்ற) திருமால்.

Koviloor Digital Library

491 தன்னுருவம் யாவருக்குந் தாக்கா தான்காண்
தாழ்சடையெம் பெருமான்காண் தக்கார்க் குள்ள
பொன்னுருவச் சோதிபுன லாடி னன்காண்
புராணன்காண் பூதங்க ளாயி னன்காண்
மின்னுருவ நுண்ணிடையாள் பாகத் தான்காண்
வேழத்தி னுரிவெருவப் போர்த்தான் தான்காண்
மன்னுருவாய் மாமறைக ளோதி னன்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னனே. 3

492 ஆறேறு செஞ்சடையெம் ஆரு ரன்காண்
அன்பன்காண் அணிபழனம் மேயான் றன்காண்
நீறேறி நிழல்திகழும் மேனி யான்காண்
நிருபன்காண் நிகரொன்று மில்லா தான்காண்
கூறேறு கொடுமழுவாட் படையி னன்காண்
கொக்கரையன் காண்குழுநற் பூதத் தான்காண்
மாறுய மதில்மூன்றும் மாய்வித் தான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னனே 4

491. தாக்குதல் - எதிர்ப்படுதல்; "யானை - வெரூஉம் புலிதாக் குறின்" (குறள் - 599) என்பதன் உரை காண்க. உள்ள - உள் பொருளாகிய (அனுபவமாகின்ற). "சோதி" என்பதில், 'காண்' என்பது தொகுத்தலாயிற்று. புனலாடினன் - நீரைத் தலையில் அணிந்தவன். 'பூதலங்களாயினன்' என்பதும் பாடம். 'அவள் வெருவ' என்க. மன் உரு - நிலைபெற்ற. பொருள் ஓதினன் - செய்தான்.

492. பழனம், சோழநாட்டுத் தலம். நிழல் - ஒளி. நிருபன் - அரசன்; தலைவன். கூறு ஏறு - பிளவு தோன்றுதற்குக் கருவியாகிய. கொக்கரை, ஒருவாச்சியம்; சங்குமாம். மாறு - பகை; மதிலை உடையாரது செயல், மதில்மேல் ஏற்றப்பட்டது.

Koviloor Digital Library

493 சென்றச் சிலைவாங்கிச் சேர்வித் தான்காண்
தீயம்பன் காண்திரி புரங்கள் மூன்றும்
பொன்றப் பொடியாக நோக்கி னான்காண்
பூதன்காண் பூதப் படையாளிகாண்
அன்றப் பொழுதே அருள்செய் தான்காண்
அனலாடி காண்அடியார்க் கமுதா னான்காண்
மன்றல் மணங்கமழும் வார்சடை யான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. 5

494 பிறையோடு பெண்ணொருபால் வைத்தான் றான்காண்
பேரவன்காண் பிறப்பொன்று மில்லா தான்காண்
கறையோடு மணிமிடற்றுக் காபாலி காண்
கட்டங்கன் காண்கையிற் கபால மேந்திப்
பறையோடு பல்கீதம் பாடி னான்காண்
ஆடினான் காண்பாணி யாக நின்று
மறையோடு மாகீதங் கேட்டான் றான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. 6

493. "அச் சிலை" என்பதில், அகரம் பலரறிசுட்டு. 'மேருமலையாகிய அவ் வில்' என்பது பொருள். தீ அம்பு - அக்கினி தேவனாகிய அம்பு. திரி புரங்கள் - (வானத்தில்) திரியும் மதில்கள். பொடி - சாம்பல். பூதன் - உயிர்களை ஆளாக உடையவன். "அன்று அப்பொழுதே" என்பதற்கு முன், 'வேண்டினார்க்கு' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. மன்றல் மணம் - நறுமணம்.

494. "பெண்" என்றது, கங்கையை. ஒருபால் - ஓர் இடம்; சடைமுடி. பேர் (பெயர்) - புகழ். கறை ஓடு - நஞ்சு பொருந்திய. பாணி ஆக - தாளம் உண்டாக; 'ஆடினான்' என முன்னே கூட்டுக. மறையைக் கேட்டல் பொருள்பற்றியும், கீதம் கேட்டல் இனிமைபற்றியும் என்க. கேட்டல், ஓதுவாரிடத்து.

Koviloor Digital Library

495 மின்னளந்த மேல்முகட்டின் மேலுற் ருன்காண்
விண்ணவர்தம் பெருமான்காண் மேவி லெங்கும்
முன்னளந்த மூவர்க்கும் முதலா னுன்காண்
மூவிலைவேற் சூலத்தேங் கோலத் தான்காண்
எண்ணளந்தேன் சிந்தையே மேவி னுன்காண்
ஏவலன்காண் இமையோர்க ளேத்த நின்று
மண்ணளந்த மாலறியா மாயத் தான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னுனே. 7

496 பின்னு சடைமேற்பிறை சூடி னுன்காண்
பேரருளன் காண்பிறப்போன் றில்லா தான்காண்
முன்னி யுலகுக்கு முன்னு னுன்காண்
மூவெயிலுஞ் சேற்றுகந்த முதல்வன் ருன்காண்
இன்னவுரு வென்றறிவொண் ணுதான் ருன்காண்
ஏழ்கடலு மேழுலகு மாயி னுன்காண்
மன்னும் மடந்தையோர் பாகத் தான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னுனே. 8

495. 'மேல்' என்றது, அண்டச்சுவரை உணர்த்திநின்ற ஆகுபெயர். முகடு - உச்சி. எங்கும் அளந்த மூவர் - எவ்விடத்தையும் தம் தொழிலுக்கு உட்படுத்திய மும்மூர்த்திகள். "மூவர்க்கும் முதலானுன்" என்றதனுல், பரமசிவன். 'நான்காவது பொருள்' என்றும், 'துரிய மூர்த்தி' என்றும் சொல்லப்படுதல் பெறப்பட்டது. மூவரும் குணமூர்த்திகள் ஆதலின், நிர்க்குணனுகிய பரமசிவன், அவர்க்கு அப்பாற்பட்டவனுயினுன் என்க. எண் - எண்ணம்; அதனை அளந்து என்றது, உடன்நின்று உணர்தலை. ஏவலன் - அம்பு எய்யும் தொழிலில் வல்லவன்; இது, திரிபுரத்திடத்தும், அருச்சுனனிடத்தும் சென்றமை முதலியவற்ருல் நன்கறியப்படும். 'இமையவர்கள் ஏத்த நின்று அவர்களை அவர்தம் தொழிலில் ஏவுதல் வல்லவன்' எனலுமாம்.

496. 'உலகுக்கு முன்னுய் (அது தோன்ற) முன்னினுன் (நினைத்தருளினுன்)' என்க. "முன்னினுன்" என்றதனுல், 'ஏனையோர்போலக் கரணத்தால் (கருவிகளால்) அன்றிச் சங்கற்ப (நினைவு) மாத்திரையானே, எல்லாம் செய்பவன்' என்பதாயிற்று. இதனை, "நோக்காதே நோக்கி" என்பது

Koviloor Digital Library

497 வெட்ட வெடித்தார்க்கோர் வெவ்வழ லன்காண்
வீரன்காண் வீரட்டம் மேவி னுன்காண்
பொட்ட அனங்கனையும் நோக்கி னுன்காண்
பூதன்காண் பூதப் படையி னுன்காண்
கட்டக் கடுவினைகள் காத்தாள் வான்காண்
கண்டன்காண் வண்டுண்ட கொன்றை
வட்ட மதிப்பாகஞ் சூடி னுன்காண் [யான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னுனே. 9

முதலாகச் சிவஞானபோத வெண்பா இனிதுணர்த்திற்று. இங்ஙனம் சங்கற்ப மாத்திரையாற் செய்தலான், அத்தொழில்கள் பற்றி அவன் தன் நிலை வேறுபடுதல் இல்லை என்க. 'அச்செயலை உகந்த' என்க. எனவே, 'அவ்வாறு செய்தலை விரும்பியே செய் தனன்' என்பது கருத்தாயிற்று. "உரு" என்றது தன்மையை; எத்திறத்தாராலும் அறியஒண்ணுத தன்மையுடையவன் என அவனது பெருமை விளக்கியருளியவாறு. "இப்படியன் இந் நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணுதே" என இனி வருவதும், (திருமுறை. 6 - 97. 10.) "இன்னஉரு இன்ன நிறம் என்றறிவதேல் அரிது" (திருமுறை. 3 - 71. 4.) என்றருளிச்செய்ததுங் காண்க.

497. வெடித்தல் - ஒலித்தல்; நெருப்பை, "குரையழல்" (வெண்பா மாலை - 8.) என்றல் செய்யுள் வழக்காதல் உணர்க. "வெட்ட வெடித்தல்" என்பது, மிக ஒலித்தல் என்னும் பொருளதாகிய ஓர் இரட்டைக் கிளவி. 'ஆர்க்கும்' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. ஆர்த்தல் - ஆரவாரித்தல் இனி, 'வெடித்தல், நீங்குதல்' எனக் கொண்டு, 'மிக நீங்கி ஞர்க்கு (இகழ்ந்தார்க்கு) அழல்போன்றவன்' என்றுரைத்தலு மாம். பொட்ட - கடிதில்; "பொட்ட வல்லுயிர் போவதன் முன்னம்" (திருமுறை. 5 - 42. 6.) என்றருளியதுங் காண்க. கட்டவினை - துன்பம்தரும் வினை. கண்டன் - கண்டு (சருக்கரை) போன்றவன்; 'கண்டம் (சருக்கரை) போன்றவன்' எனலுமாம்.

Koviloor Digital Library

498 கையாற் கயிலை யெடுத்தான் தன்னைக்
கால்விரலால் தோள்நெரிய வூன்றி னான்காண்
மெய்யின் நரம்பிசையாற் கேட்பித் தாற்கு
மீண்டே யவற்கருள்கள் நல்கி னான்காண்
பொய்யர் மனத்துப் புறம்பா வான்காண்
போர்ப்படையான் காண்பொருவா ரில்லா தான்
மைகொள் மணிமிடற்று வார்சடை யான்காண்[காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. 10

திருச்சிற்றம்பலம்

498. 'கையால் எடுத்தற்கரிதாகிய மலையை எடுத்தவனைக் காலால் எளிதில் ஊன்றினன்' என்பது நயம். மெய்யின் நரம்பு - உடம்பிலுள்ள நரம்பு. இசையால் - ஒலியால்; இசை கேட்பித் தாற்கு' என்க. 'மனத்துக்கு' என்னும் நான்காவது தொகுத்த லாயிற்று. 'போர் செய்தற்குரிய படைக் கலங்களை யுடையவன்; ஆயினும், அவற்றால் போர் செய்யப்படுவார் ஒருவரும் இல்லா தவன்; யாவரும் நெற்றிக்கண், புன்முறுவல், கைந்நகம், கால், கால் விரல், என்பவற்றுக்கே ஆற்றாராயினர்' என்றவாறு; இதனால் அவனது பேராற்றல் உணர்த்தப்பட்டது.

சென்று சேர்ந்து திருச்சத்தி முற்றத் திருந்த சிவக்கொழுந்தைக்
குன்ற மகடன் மனக்காதல் குலவும் பூசை கொண்டருளும்
என்று மினிய பெருமானை யிறைஞ்சி யியல்பிற் றிருப்பணிகள்
முன்றி லணைந்து செய்துதமிழ் மொழிமா லைகளுஞ் சாத்துவார்.

கோவாய் முடுகியென் றெடுத்துக் கூற்றம் வந்து குமைப்பதன்முன்
பூவாரடிக ளென்றலைமேற் பொறித்து வைப்பா யெனப்புகன்று
நாவார் பதிகம் பாடுதலு நாதன் றானு நல்லூரில்
வாவா வென்றே யருள்செய்ய வணங்கி மகிழ்ந்து வாகீசர். 194

நன்மைபெரு கருணெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோ மென்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான். 195

— அப்பர் புராணம்

Koviloor Digital Library

50. திருவீழிமிழலை

திருப்பதிக வரலாறு

ஆண்டஅரசும், ஆளுடையபிள்ளையாரும் திருவாக்கூர்த் தான்தோன்றியப்பரைத் தொழுது, பல பதிகளையும் வணங்கிக் கொண்டு, அடியவர்களும், மறையவர்களும் எதிர்கொள்ளத் திருவீழிமிழலையையடைந்து பணிந்தபோது, நாவரசரால் பாடப் பெற்றது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 253.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

499 போரானை ஈருரிவைப் போர்வை யானைப்
புலியதளே யுடையாடை போற்றி னானைப்
பாரானை மதியானைப் பகலா னானைப்
பல்லுயிராய் நெடுவெளியாய்ப் பரந்து நின்ற
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நினையாதார் புரமெரிய நினைந்த தெய்வத்
தேரானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 1

இது, 'சிவபிரானைச் சேராதவர் தீநெறி சென்று கெடுவர்' என உணர்வித்தருளிச்செய்தது

499. போர் ஆனை - போர் செய்ய வந்த யானை ; கயாசுரன். ஈர் உரிவை - உரித்த தோல். 'உடை' என்பது இடையில் உடுக்கப்படுவதற்கும், 'ஆடை' என்பது மேலே இடப்படுவதற்கும் (உத்தரீயம்) பெயர். 'உடுக்கப்படுவது, ஆடுதலை (அலைதலை) உடையது' என அவற்றின் காரணம் உணர்க. 'யானைத் தோலைப் போர்வையாகவும், புலித்தோலை உடுப்பதும் மேலே இடுவதும் ஆகிய கூறைகளாகவும் இறைவன் கொண்டுள்ளான்' என்பது இங்கு இனிது விளக்கியருளப்பட்டுள்ளது. 'புலி அதளாகிய ஏய் (பொருந்திய) உடை ஆடை' என்க. பார் - பூமி. மதி - சந்திரன். பகல் - சூரியன். வெளி - வானம். முப்புரம் எரிக்கச்சென்றபோது ஊர்ந்து சென்றது, நிலம் முதலியவற்றின் உரிமைத்தெய்வங்களால் இயன்ற தேர் ஆதலின், "தெய்வத் தேர்" என்றருளினர். "நெறிக்கு" என்பது, கண்ணுருபின் பொருளில் வந்த உருபு மயக்கம். ஏகாரம்,

Koviloor Digital Library

500 சவந்தாங்கு மயானத்துச் சாம்ப லேன்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்
பவந்தாங்கு பாசுபத வேடத் தானைப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாங்
கவர்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னைக்
கழலடைந்தான் மேற்கறுத்த காலன் வீழச்
சிவந்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 2

501 அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன் னானை
அகத்தியனை யுகப்பானை அயன்மால் தேட
நின்றானைக் கிடந்தகடல் நஞ்சுண் டானை
நேரிழையைக் கலந்திருந்தே புலன்க ளைந்தும்
வென்றானை மீயச்சூர் மேவி னானை
மெல்லியலாள் தவத்தினிறை யளக்க லுற்றுச்
சென்றானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 3

நன்னெறியினின்று பிரித்தலிற் பிரிநிலை. "சேர்கின்றார்" என்பது வினைப்பெயர்; அதன்கண் ஏகாரம் தேற்றம். இங்ஙன மாதலின், 'தம்மை யறியாது தாம் தீநெறிக்கண் சென்று கெடுகின்றவரேயாவர்' என உணர்வித்தவா றுணர்க.

500. மயிர்க் கயிறு - மயிரினாலாகிய பூணூல்; இது 'பஞ்ச வடி' எனப்படும். பவம் தாங்கு - பிறப்பைத் தடுக்கின்ற. இறைவன் ஒரோவொரு காரணம்பற்றிக்கொண்ட வேடங்கள் பலவற்றுள் ஒரோவொன்றை ஒவ்வொருவர் விரும்பிக்கொள்ளும் நிலையில், 'பாசுபத மதத்தினர் விரும்பிக்கொண்ட வேடம்' என்பார், "பாசுபத வேடத்தானை" என்றருளினார். 'வேள்வி, தக்கன் செய்தது; அதனைத் தேவர் பலரும் உடன்பட்டமையின், "பண்டமரர் கொண்டுகந்த வேள்வி" என்றார். எல்லாம் - முழுதும். கவர்ந்தான் - அழித்தான். கழல் அடைந்தான், மார்க்கண்டேயன். கறுத்த - வெகுண்ட. சிவந்தான் - வெகுண்டான். "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" (தொல். சொல். 372.) என்பது உணர்க.

501. அகத்தியரை உகத்தல், முனிவருட் சிறந்தோராதல் பற்றி; இது நிலம் வடதிசை தாழ்ந்து தென்றிசை உயர்ந்த

Koviloor Digital Library

502 தூயானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தோன்றிய எவ்வுயிர்க்குந் துணையாய் நின்ற
தாயானைச் சக்கரமாற் கீந்தான் தன்னைச்
சங்கரனைச் சந்தோக சாமம் ஓதும்
வாயானை மந்திரிப்பார் மனத்து ளானை
வஞ்சனையால் அஞ்சுசெழுத்தும் வழுத்து வார்க்குச்
சேயானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 4

ஞான்று, சிவபிரான் இம்முனிவரைத் தனக்கு நிகராகத் தென் றிசை சென்றிருக்க விடுத்தமை முதலியவற்றால் அறியப்படும். "நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை" என்றது, 'உயிர்கட்குப் போகம் அமைதல் வேண்டிப் போக வடிவம் கொண்டு போகிபோல நிற்கும் அவ்வளவே யன்றி, உண்மையில் போகியல்லன்' என்றவாறு. மீயச்சூர், சோழ நாட்டுத் தலம். நிறை - திண்மை. சிவபிரான், இமயமலையில் உமையம்மை செய்த தவத்தை அளக்கச்சென்ற வரலாற்றினைக் கந்தபுராணத்துட் காண்க.

502. தாயான் - தாய் போன்றவன். வேதத்துள் இசை யின்றி இயற்றமிழ்போலச் சொல்லப்படுவன 'இருக்கு' எனவும், இசைத் தமிழ்போல இசையோடு சொல்லப்படுவன 'சாமம்' எனவும் சொல்லப்படும். அவற்றுள் சாமங்கள், 'இரதந்திரம், பிருகத்து, வைருபம், வைராசம்' முதலாகச் சொல்லப்படுகின்றன. அவற்றுள் 'சந்தோக சாமம்' என்பது ஒன்றுபோலும். மந்திரிப்பார் - மந்திரங்களை எண்ணுபவர். "வஞ்சனையால்" என்றது, 'பயனுடைத்தாதலைத் தெளியமாட்டாது ஐயுற்று' என்றவாறு. சேயான் - சேய்மையில் (தொலைவில்) உள்ளவன்.

Koviloor Digital Library

503 நற்றவத்தின் நல்லானைத் தீதாய் வந்த
நஞ்சமுது செய்தானை அமுத முண்ட
மற்றமரர் உலந்தாலும் உலவா தானை
வருகாலஞ் செல்காலம் வந்த காலம்
உற்றவத்தை யுணர்ந்தாரும் உணர லாகா
ஒருசுடரை இருவிசும்பி னூர்முன் றோன்றச்
செற்றவனைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 5

504 மைவான மிடற்றானை அவ்வான் மின்போல்
வளர்சடைமேல் மதியானை மழையா யெங்கும்
பெய்வானைப் பிச்சாட லாடு வானைப்
பிலவாய பேய்க்கணங்க ளார்க்கச் சூலம்
போய்வானைப் பொய்யிலா மெய்யன் தன்னைப்
பூதலமும் மண்டலமும் பொருந்து வாழ்க்கை
செய்வானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 6

503. நற்றவம், ஞானத்தின் பொருட்டுச் செய்யப்படும் தவம்; ஞான சாதனம். 'இது நிட்காமிய அறமே' என்பர். ஆயினும், சிவபிரானை நோக்கிச் செய்யும் அறமே உண்மையில் ஞான சாதனமாதல்பற்றி', "நற்றவத்தின் நல்லான்" என்றருளிச் செய்தார். 'நற்றவத்தினுள் நற்றவமாய் நிற்பவன்' என்பது பொருள். "மற்று" என்பது வினைமாற்றாய், 'உலவாது நிலைபெறுத்தும் அமுதத்தை உண்டஅமரர் நிலைபெறாது உலந்தாலும்' என்னும் பொருள் தோற்றுவித்தது. உலந்தாலும் - அழிந்தாலும். "வருகாலம், செல்காலம்" என்பன முறையே எதிர்கால நிகழ்கால வினைத் தொகைகள். "அத்தை", "அதனை" என்பதன் மரூஉ; 'வத்து' என்பதில் உகரம் தொகுத்தலாய் நின்றது எனலுமாம். 'உற்றவற்றை' என்பதே பாடம் என்றலும் ஒன்று. எவ்வாறாயினும், 'முக்காலத்தும் உற்ற பொருளை' என்பதே பொருள். உம்மை; சிறப்பு. முக்காலமும் உணர்தல் யோகத்தாற் கூடும். இறைவனை உணர்தல் அவன் அருளே கண்ணாகக் காணும் ஞானத்தாலன்றிக் கூடாமையின், முக்காலமும் உணர்ந்தார்க்கும் இறைவன் உணரலாகாதவனாயினான் என்க.

504. மை வான மிடறு - கரிய மேகம்போலுங் கண்டம். 'அம் மேகத்தில் தோன்றுகின்ற மின்னல்போல வளர்ந்த

Koviloor Digital Library

505 மிக்கானைக் குறைந்தடைந்தார் மேவ லானை
வெவ்வேருய் இருமூன்று சமய மாகிப்
புக்கானை எப்பொருட்கும் பொதுவா னானைப்
பொன்னுலகத் தவர்போற்றும் பொருளுக் [கெல்லாந்
தக்கானைத் தானன்றி வேறுென் றில்லாத்
தத்துவனைத் தடவரையை நடுவு செய்த
திக்கானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் ருரே. 7

சடை' என்க. மழையாய் - மழை பெய்யும் மேகமாய் நின்று. பிச்சாடல் - பித்தாடல்; துன்பமின்றி இன்பத்தோடே நின்று ஆடுதல். 'பிச்சை ஏற்றலை எங்கும் செய்வானை' என்றலுமாம். பில வாய் - பிலம் (பள்ளம்) போன்ற வாய். பொய்வான் - குத்திப் பறிப்பான். பொய்த்தல் - பறித்தல்; இது, 'புய்த்தல்' என்பதன் மரூஉ; இஃது இக்காலத்தில், 'பிய்த்தல்' என்ருயிற்று. 'பொய்ப்பான்' எனற்பாலது எதுகைநோக்கி, 'பொய் வான்' எனப்பட்டது. மண்டலம் - மேலுலகங்கள். "பூதலமும் மண்டலமும் பொருந்து வாழ்க்கை செய்வான்" என்றது. 'உயிர்களை அன்ன பிறப்புக்களிற் செலுத்துவான்' என்றதாம்.

505. மிக்கான் - மேலோன். குறைந்து - குறையுற்று; குறையிரந்து. 'அடைந்தாரை' என இரண்டாவது விரிக்க. மேவலான் - விரும்புதல் உடையவன்; இது, 'மேவல்' என்பது அடியாக வந்த பெயர். இருமூன்று சமயம், ஆறுசமயங்கள். சமயங்களை ஆருகக்கூறுதல் தொன்றுதொட்ட வழக்கு. ஆயினும், அவை இவை என்பதனை வேறுவேருகக் கூறுவர்.

'சைவம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சாத்தேயம், சௌரம்' என்றல் ஒருவகை; இவை வேதத்திற் சொல்லப் பட்டு அவரவரால் வழிபடப்படும் கடவுளரைப் பற்றிக் கூறப் படுவன.

'வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம்' இவை உட்சமயங்கள் என்றும், 'உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பட்டாசாரியம்' இவை புறச் சமயங்கள் என்றும் கூறுதல் ஒருவகை (பிங்கல நிகண்டு). இவை பழைமை புதுமை பற்றிக் கூறப்படுவன.

Koviloor Digital Library

506 வானவர்கோன் தோளிறுத்த மைந்தன் தன்னை
வளைகுளமும் மறைக்காடும் மன்னி னானை
ஊனவனை உயிரவனை யொருநாட் பார்த்தன்
உயர்தவத்தின் நிலையறிய லுற்றுச் சென்ற
கானவனைக் கயிலாயம் மேவி னானைக்
கங்கைசேர் சடையானைக் கலந்தார்க் கென்றுந்
தேனவனைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 8

507 பரத்தானை யிப்பக்கம் பலவா னானைப்
பசுபதியைப் பத்தர்க்கு முத்தி காட்டும்
வரத்தானை வணங்குவார் மனத்து ளானை
மாருதமால் எரிமூன்றும் வாய்அம் பீர்க்காஞ்
சரத்தானைச் சரத்தையுந்தன் தாட்கீழ் வைத்த
தபோதனனைச் சடாமகுடத் தணிந்த பைங்கட்
சிரத்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 9

இவையெல்லாம் இன்றி, 'புறப்புறம். புறம், அகப்புறம், அகம்' என நால்வகைப்படுத்து ஒவ்வொன்றனுள்ளும் அவ்வாறு சமயங்கள் சிவஞானமாபாடியத்துட் கூறப்பட்டன. எவ்வாறு யினும், சமயங்கள் ஆறு எனவே யாண்டும் கூறப்படுதல் அறிக.

'பொருளுக்கு' 'பொருள்களுள்' என வேற்றுமை மயக்கம். தக்கான் - மேலானவன். தத்துவன் - உண்மை இயல்புடையவன். "தடவரை" என்றது, மேரு மலையை; அதனை நடுவாக வைத்தே நிலத்துத் திசைகள் பகுக்கப்படுதலின். "தடவரையை நடுவுசெய்த திக்கான்" என்றருளினர்.

506. வானவர்கோன் தோள் இறுத்தது மேலே (பக். 228) காட்டப்பட்டது. வளைகுளம், வைப்புத்தலம். இஃது ஐயடிகள் காடவர்கோன் நாயனர் திருவெண்பாப் பெற்றது. கானவன் - வேடன். தேனவன் - தேன்போல இனியவன்.

507. பரத்தான் - மேல் நிலையில் உள்ளவன்; இது மாயைக்கு அப்பாற்பட்டுநிற்கும் நிலை. "இப்பக்கம்" என்றது, மாயைக்கு உள்ளாய் நிற்கும் நிலையை. பலவாவன, அளவற்ற

Koviloor Digital Library

508 அறுத்தானை அயன்தலைகள் அஞ்சி லொன்றை
அஞ்சாதே வரையடுத்த அரக்கன் தோள்கள்
இறுத்தானை யெழுநரம்பி னிசைகேட் டானை
இந்துவினைத் தேய்த்தானை இரவி தன்பல்
பறித்தானைப் பகீரதற்கா வானோர் வேண்டப்
பரந்திழியும் புனற்கங்கை பனிபோ லாங்குச்
செறித்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 10

திருச்சிற்றம்பலம்

நிலைகளும் வடிவங்களும். வரத்தான்-மேலானவன். பசுபதி-உயிர் கட்குத் தலைவன். மாருதம் - வாயுதேவன். மால் - திருமால். எரி - அக்கினிதேவன்; 'இவர் மூவரும் முறையே அம்பின் சிறகும், அம்பும், அதன் கூர்மையுமாக நின்றனர் என்பதை, "வாய் அம்பு ஈர்க்கு" என்பதில் எதிர் நிரனிரையாற் கொள்க. திணை விராய் எண்ணியவற்றைப் பன்மைபற்றி, "மூன்றும்" என அஃறிணையான் முடித்தருளினார். சரம் - அம்பு. சரத்தையும் தாட் கீழ் (காலின்கீழ்) இட்டது, அதற்குச் செயல் இல்லாது, சிரித் தெரித்தமையால். தபோதனன் - தவமாகிய செல்வத்தை யுடைய வன்; என்றது, தவத்தை ஏற்றுப் பயன் தருதல்பற்ற். "வைத்த" என்னும் எச்சம், "தனன்" என்பதன் இறுதிநிலையோடு முடியும். தாருகவனத்து முனிவர்கள் விடுத்த வெண்டலையைச் சிவபிரான் தன் சடையில் அணிந்துகொண்ட வரலாற்றினைக் கந்தபுராணத் துள் ததீசி உத்தரப் படலத்திற் காண்க.

508. 'ஒன்றை அறுத்தானை' எனக் கூட்டுக. இறுத்தான்- முறித்தான். இசை, அவன் (இராவணன்) பாடியது. இந்து - சந்திரன். இரவி - சூரியன். சந்திர சூரியரை ஒறுத்தது தக்கன் வேள்வியில். 'கங்கைப் புனல்' என மாற்றிக்கொள்க. "பனி போல்" என்றது, 'புல் நுனிமேற் பனித்துளிபோல' என்றபடி. ஆங்கு - அப்பொழுதே. 'பனிபோ லாக' என்பதும் பாடம். செறித்தான் - அடக்கினான்.

'பகீரதற்காகவும், வானோர் வேண்டவும்' என எண்ணுப் பொருளாகக் கொள்க. சிவபிரான் கங்கையைச் சடையில் அடக்கியதற்கு, இவ்விரு காரணங்களும் புராணங்களுட் பெறப் படுகின்றன. அவற்றுட் பகீரதற்காக நிகழ்ந்தது மேலே

Koviloor Digital Library

(பக். 256.) குறித்தாம். வானோர் வேண்ட அடக்கியது, ' உமையம்மை விளையாட்டால் சிவபிரானது கண்களைப் பொத்திய ஞான்று உலகில் மூடிய இருளை நீக்குதற்கு அப்பெருமான் நெற்றிக்கண்ணைத் திறந்தபொழுது அம்மை அஞ்சி வெயர்த்துக் கைகளை வாங்கி விதிர்க்க, அக் கைகளின் விரல்கள் பத்தினும் பத்துக் கங்கைகள் தோன்றிப் பெருகி உலகை அழிக்கத் தொடங்குதலும், அதனையறிந்து அஞ்சிய வானோர் வந்து வேண்டிக்கொண்டமையின், சிவபிரான் அவைகள் அனைத்தையும் ஒன்றாக்கி வருவித்துச் சடையில் ஏற்றனன் என்பது.

இத்திருத்தாண்டகம், சிவபிரானது எல்லாம்வல்லதன்மையை எடுத்தோதி, ' அவனை அடையாதார்க்கு உய்யும் நெறி வேறு உண்டாவதில்லை ' என அறிவுறுத்தருளியதாதல் அறிக.

நனைந்தனைய திருவடியென் றலைமேல்வைத் தாரென்று
புனைந்ததிருத் தாண்டகத்தாற் போற்றிசைத்துப் புனிதரருள்
நினைந்துருகி விழுந்தெழுந்து நிறைந்துமலர்ந் தொழியாத
தனம்பெரிதும் பெற்றுவந்த வறியோன்போல் மனந்தழைத்தார்.

நாவுக்கு மன்னர்திரு நல்லூரி னம்பர்பான்
மேவுற்ற திருப்பணிகண் மேவுறநா ளுஞ்செய்து
பாவுற்ற தமிழ்மாலை பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்ற திருத்தொண்டு செய்தொழுகிச் செல்லுநாள். 197

கருகாவூர் முதலாகக் கண்ணுதலோ னமர்ந்தருளுந்
திருவாவூர் திருப்பாலைத் துறை பிறவுஞ் சென்றிறைஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு செய்துபெருந் திருநல்லூர்
ஒருகாலும் பிரியாதே யுள்ளுருகிப் பணிகின்றார். 198

ஆளுடைய நாயகன்ற னருள்பெற்றங் ககன்றுபோய்
வாளைபாய் புனற்பழனத் திருப்பழன மருங்கணைந்து
காளவிட முண்டிருண்ட கண்டர்பணிக் கலன்பூண்டு
நீளிரவி லாடுவார் கழல்வணங்க நேர்பெற்றார். 199

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

51 திருவீழிமிழலை

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசரும், காழி ஞானப்பிள்ளையாரும் முன் பதிக வரலாற்றில் கூறியவாறு திருவீழிமிழலையை அடைந்து அங்கிருக்கும் நாட்களில் வற்கடம் வந்து வையம் முழுதும் வருத்தமுறச் செய்தது. அதுபோது மிழலைநாதர் ''உம்மை வழிபடுவார்க் களிக்க அளிக்கின்றோம்'' என்று அவர்கள் கனவிலருளி ஞால மறியப்படிக்காசு வைத்தார். இருவரும் படிக்காசு பெற்று இரு பொழுதும் பறைசாற்றிச் சோறிட்டுத் துயர்கூர் வறுமை தொலைத்து மொழிமாலைகளும் பல சாத்திப் பல நாட்கள் அங்கே எழுந்தருளியிருந்தார்கள். (திருநாவுக்.பு. 262.) பின்பு இருவரும் திருமறைக்காடு சென்று இருக்குங்கால், ஞானசம்பந்தர் பாண்டி நாடு செல்ல, நாவுக்கரசர் மீண்டும் திருவீழிமிழலையை அடைந்து விண்ணிழி விமானத்து இறைவரைப் போற்றிசைத்து வணங்கி யிருந்தார் (திருநாவுக் - பு. 292.) அக்காலங்களில் பல திருப்பதிகங்கள் முதல் முறையிலும், சில திருப்பதிகங்கள் இரண்டாம் முறையிலும் அருளிச்செய்தன வாதல் வேண்டும்; அவைகளை ஏற்றபடி கொள்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

509 கயிலாய மலையுள்ளார் காரோ ணத்தார்
கந்தமா தனத்துளார் காளத்தியார்
மயிலாடு துறையுளார் மாகா ளத்தார்
வக்கரையார் சக்கரம்மாற் கீந்தார் வாய்ந்த
அயில்வாய சூலமுங் காபாலமும்
அமருந் திருக்கரத்தார் ஆனே றேறி
வெயிலாய சோதி விளங்கு நீற்றார்
வீழி மிழலையே மேவி னாரே 1

இத்திருப்பதிகம், இறைவன் எண்ணிறந்த தலங்களில் எழுந்தருளியிருந்து அருள்புரியும் நிலையை இத்தலத்தில் நினைந்து அருளிச்செய்தது.

509. கந்தமாதனமலை, மாகாளம் வைப்புத் தலங்கள். மயிலாடுதுறை, 'மாயூரம்' என வழங்கப்படுகின்றது; சோழ

Koviloor Digital Library

510 பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
போங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர்
கேதிசரம் மேவினார் கேதா ரத்தார்
கெடில வடஅதிகை வீரட் டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவா ளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவி னாரே. 2

511 அண்ணா மலையமர்ந்தார் ஆரூ ருள்ளார்
அளப்பூரார் அந்தணர்கள் மாடக் கோயில்
உண்ணா ழிகையார் உமையோ ளோடும்
இமையோர் பெருமானார் ஒற்றி யூரார்
பெண்ணா கடத்துப் பெருந்தூங் கானை
மாடத்தார் கூட கத்தார் பேரா வூரார்
விண்ணோர்க ளெல்லாம் விரும்பி யேத்த
வீழி மிழலையே மேவி னாரே. 3

நாட்டில் உள்ளது. வக்கரை, தொண்டைநாட்டுத் தலம். அயில் வாய - கூர்மையான வாயினை உடைய. கபாலம், 'காபாலம்; என முதல் நீண்டது. வெயிலாய - வெயில் போன்ற; நண்பகல் வெயில் வெண்ணிறமாதல் காண்க. 'திருக்கயிலை முதலிய இடங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவர், திருவீழிமிழலையைச் சிறந்த இடமாகக்கொண்டு விளங்குகின்றார்' என முடிவு செய்க' இவ்வாறு அருளிச்செய்தது, அங்குத் தமக்கும், ஆளுடைய பிள்ளையார்க்கும், இருவரோடும் வந்த இருபெருந் திருக்கூட்டத் தார்க்கும் எளிவந்து இனிது அருள்புரிந்த பெருங் கருணைத் திறம் நோக்கியென்க.

510. 'பூண்' என்பது, அகரம் பெற்று, 'பூணநூலர்' என நின்றது. 'கேதீச்சரம்' என்பது குறுகிநின்றது; இத் தலம் ஈழநாட்டில் (இலங்கையில்) உள்ளது. திருக்கெடில வட வீரட்டானம் நாயனாரை ஆட்கொண்ட தலமாதலை நினைக. மழபாடி, வேதிகுடி சோழநாட்டுத் தலங்கள்; 'மழபாடி மேய மணவாளனார்' என்பதும் பாடம்.

511. 'ஆலூருள்ளார்' என்பதும் பாடம். அளப்பூர், கூடம் (ஏமகூட மலை), பேராவூர் இவை வைப்புத் தலங்கள்.

Koviloor Digital Library

512 வெண்காட்டார் செங்காட்டங் குடியார் வெண்ணி
நன்னகரார் வேட்களத்தார் வேத நாவார்
பண்காட்டும் வண்டார் பழனத் துள்ளார்
பராய்த்துறையார்சிராப்பள்ளியுள்ளார் பண்டோர்
வெண்கோட்டுக் கருங்களிற்றைப் பிளிறப் பற்றி
யுரித்துரிவை போர்த்த விடலை வேடம்
விண்காட்டும் பிறைநுதலி அஞ்சக் காட்டி
வீழி மிழலையே மேவி னாரே. 4

513 புடைசூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச்சிற் றம்பலத்தே நடமாடுவார்
உடைசூழ்ந்த புலித்தோலர் கலிக்கச்சிமேற்
றளியுளார் குளிர்சோலை யேகம் பத்தார்
கடைசூழ்ந்து பலிதேருங் கங்காளனார்
கழுமலத்தார் செழுமலர்த்தார்க் குழலி யோடும்
விடைசூழ்ந்த வேல்கொடியார் மல்கு செல்வ
வீழி மிழலையே மேவி னாரே. 5

மாடக்கோயில் சோழநாட்டில், 'வைகல்' என்னும் தலத்துடன் சேர்த்து, 'வைகல் மாடக்கோயில்'என, ஆளுடையபிள்ளையாரால் பாடப்பெற்றது. உண்ணாழிகை - மூலத்தானம். 'மாடக்கோயி லின் உண்ணாழிகையார்' என்க.

512. வண்டு ஆர் - வண்டுகள் ஒலிக்கின்ற. விடலை - காளை. விடலை வேடம் - வீரக்கோலம். "விண் காட்டும் பிறை" என இயையும். 'இறைவன், யானையை உரித்து அதன் தோலைப் போர்த்துநின்ற உக்கிரக் கோலத்தைக் கண்டு இறைவி அஞ்சி னாள்' எனப் புராணம் கூறும்.

513. உடை சூழ்ந்த - உடையாகச் சூழ்ந்த. கலி - ஒலி. கடை சூழ்ந்து - வாயில்கள்தோறும் சென்று. கழுமலம் - சீகாழி. செழு மலர்த் தார்க் குழலி - செழித்த மலர் மாலைகளை அணிந்த கூந்தலை உடையவள். "குழலியோடு" என்னும் மூன்றனுருபு, "கொடியார்" என்னும் வினைக்குறிப்போடு முடிந்தது. உம்மை, சிறப்பு.

Koviloor Digital Library

514 பெரும்புலியூர் விரும்பினுர் பெரும்பா ழிய்யார்
பெரும்பற்றப் புலியூர்மூ லட்டா னத்தார்
இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார்
இன்னம்ப ரார் ஈங்கோய் மலையார் இன்சோற்
கரும்பனையாள் உமையோடுங் கருகா வூரார்
கருப்பறிய லூரார் கரவீ ரத்தார்
விரும்பமரர் இரவுபகல் பரவி யேத்த
வீழி மிழலையே மேவி னுரே. 6

515 மறைக்காட்டார் வலிவலத்தார் வாய்மூர் மேயார்
வாழ்கொளி புத்தூரார் மாகா ளத்தார்
கறைக்காட்டுங் கண்டனுர் காபா லிய்யார்
கற்குடியார் விற்குடியார் கானப் பேரார்
பறைக்காட்டுங் குழிவிழிகண் பல்பேய் சூழப்
பழையனூர் ஆலங்காட் டடிகள் பண்டோர்
மிறைக்காட்டுங் கொடுங்காலன் வீடப் பாய்ந்தார்
வீழி மிழலையே மேவி னுரே. 7

514. பெரும்புலியூர், இருப்பூளை, இன்னம்பர், ஈங்கோய் மலை, கருகாவூர், கருப்பறியலூர், கரவீரம் இவை சோழநாட்டுத் தலங்கள். பெரும்பற்றப்புலியூர் - தில்லை. பெரும்பாழி, திரு அரதைப் பெரும்பாழி : இதுவும் சோழநாட்டுத் தலமே. இரும் புதல் ஆர் - பெரிய புதர்கள் நிறைந்த. "கரும்பனையாள்" என்பதே திருக்கருகாவூர் அம்மையின் பெயராய் வழங்கும்.

515. மறைக்காடு (வேதாரணியம்), வலிவலம், வாய்மூர், வாழ்கொளிபுத்தூர், கற்குடி, விற்குடி இவை சோழநாட்டுத் தலங்கள். 'வாள்கொளிபுத்தூர்' எனவும் பாடம் ஓதுப. கானப் பேர், பாண்டிநாட்டுத்தலம். பழையனூர் ஆலங்காடு, தொண்டை நாட்டுத் தலம். மாகாளம், வைப்புத் தலம். பறைக்காட்டும் - பறைபோலத் தோன்றும். மிறை - துன்பம். "கறைக்காட்டும்" முதலியவற்றில் ககரம், விரித்தல். விழி கண் வினைத்தொகை.

Koviloor Digital Library

516 அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார்
ஆரூரார் பேரூரார் அழுந்தூ ருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்க ளூரார்
சாந்தை அயவந்தி தங்கி ஞூர்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர்
நாகேச் சரத்துள்ளார் நாரை யூரார்
வெஞ்சோற் சமண்சிறையி லென்னை மீட்டார்
வீழி மிழலையே மேவி ஞரே. 8

517 கொண்டலுள்ளார் கொண்டீச் சரத்தி னுள்ளார்
கோவலூர் வீரட்டங் கோயில் கொண்டார்
தண்டலையார் தலையாலங் காட்டி லுள்ளார்
தலைச்சங்கைப் பெருங்கோயில் தங்கி ஞூர்தாம்
வண்டலோடு மணற்கொணரும் பொன்னி நன்னீர்
வலஞ்சுழியார் வைகலின்மேல் மாடத் துள்ளார்
வேண்டலைக் கொண்ட விகிர்த வேடர்
வீழி மிழலையே மேவி ஞரே. 9

516. அஞ்சைக்களம், மலைநாட்டுத் தலம். ஐயாறு, ஆரூர், அழுந்தூர், நாகேச்சரம், நாரையூர் இவை சோழநாட்டுத் தலங்கள். சாந்தை, சாத்தமங்கை என்பதன் மரூஉ; இதுவும் சோழநாட்டுத் தலம்; இங்குள்ள திருக்கோயிலின் பெயரே 'அயவந்தி' என்பது. பேரூர், தஞ்சைத் தளிக்குளம், தக்களூர் இவை வைப்புத் தலங்கள். வெஞ்சொல் - பயனுல் கொடிய வாகின்ற சொற்கள்.

517. கொண்டீச்சரம், தண்டலை (தண்டலை நீணெறி), தலையாலங்காடு, வலஞ்சுழி இவை சோழநாட்டுத் தலங்கள். தலைச்சங்கை - தலைச்சங்காடு; வைகல் மேல்மாடம் - வைகல் மாடக்கோயில், இவைகளும் சோழநாட்டுத் தலங்கள். கோவலூர் வீரட்டம், நடுநாட்டுத் தலம். கொண்டல், வைப்புத் தலம், 'வெண்டலைமான் கைக்கொண்ட' என்பதும் பாடம். விகிர்த வேடர் - உலகத்தார் கொள்ளும் வேடங்களின் வேறுபட்ட வேடத்தை உடையவர்.

Koviloor Digital Library

518 அரிச்சந் திரத்துள்ளார் அம்ப ருள்ளார்
அரிபிரமர் இந்திரர்க்கும் அரிய ரானார்
புரிச்சந் திரத்துள்ளார் போகத் துள்ளார்
பொருப்பரையன் மகளோடு விருப்ப ராகி
எரிச்சந்தி வேட்கு மிடத்தார் ஏம
கூடத்தார் பாடத்தே னிசையார் கீதர்
விரிச்சங்கை யெரிக்கொண்டங் காடும் வேடர்
வீழி மிழலையே மேவி னாரே. 10

519 புன்கூரார் புறம்பயத்தார் புத்தூ ருள்ளார்
பூவணத்தார் புலிவலத்தார் வலியின் மிக்க
தன்கூர்மை கருதிவரை யெடுக்க லுற்றான்
தலைகளோடு மலைகளன்ன தாளுந் தோளும்
பொன்கூருங் கழலடியோர் விரலா லூன்றிப்
பொருப்பதன்கீழ் நெரித்தருள்செய் புவன நாதர்
மின்கூருஞ் சடைமுடியார் விடையின் பாகர்
வீழி மிழலையே மேவினாரே. 11

திருச்சிற்றம்பலம்

518. அம்பர் - அம்பர்ப் பெருங்கோயில், அம்பர் மாகாளம் இரண்டுங் கொள்க. இவை சோழநாட்டுத் தலங்கள். புரிச் சந்திரம் - சந்திரபுரம்; பிறையனூர்; இதுவும், அரிச்சந்திரமும், ஏமகூடமும் வைப்புத் தலங்கள். போகத்து உள்ளார் - உலக இன்பத்திலும் உள்ளவர். 'சந்தி எரிவேட்கும் இடம்' என மாறுக; 'வேள்விச் சாலைகள்' என்பது பொருள்; "எரிச்சந்தி" என்பதில் சகரம் விரித்தல். 'எரிச்சந்திரவேட்கும்' என்பது பிழைபட்ட பாடம். 'தேன் பாட' என மாற்றி, 'கொன்றை முதலிய மாலைகளில் வண்டுகள் பாட' என்றுரைக்க. இசை ஆர் கீதர்-ஏழிசையும் பொருந்திய பண்களையுடையவராய் இருப்பவர்; "இசை" என்றதனை, வண்டின் இசை என்றாயினும், வீணையின் இசை என்றாயினும் கொள்க. 'விரித்து அங்கை' என்பது "விரிச்சு அங்கை" என மரூஉவாய் நின்றது; போலி எனலு மாம். 'இசையார் தீதா - விரிச்சங்கை எரிக்கொண்டு' எனவும் பாடம் ஓதுவர். "எரிக்கொண்டு" என்பதில் ககரம் விரித்தல்.

519. புன்கூர், புறம்பயம் சோழநாட்டுத் தலங்கள். புத்தூர், பூவணம் பாண்டிநாட்டுத் தலங்கள். புலிவலம், வைப்புத்

Koviloor Digital Library

தலம். கூர்மை - மிகுதி ; இது வலிமை மிகுதியைக் குறித்தது. 'தோளும் தாளும்' என மாற்றிப் பொருள் கொள்க ; 'அவ்வாறு ஓதப்படுவதே பாடம்' என்றலுமாம். 'அடிக்கண் உள்ள ஓர் விரலால்' என்க. புவன நாதர் - உலக முழுவதற்கும் தலைவர். பாகர் - செலுத்துவோர் ; முதல்வர்.

அப்பதியைச் சூழ்ந்ததிருப் பதியிலர னார்மகிழும்
ஒப்பரிய தானங்க ளுள்ளுருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருடேர் நாவினுக்கு வேந்தர்தா மேவினர்
செப்பருஞ்சீ ரப்பூதி யடிகளூர் திங்களூர். 200

அந்தணரின் மேம்பட்ட வப்பூதி யடிகளார்
தந்தனய ருடன்சாலை கூவல்குளந் தருதண்ணீர்ப்
பந்தர்பல் வாண்டவர செனும்பெயராற் பண்ணினமை
வந்தணைந்த வாகீசர் கேட்டவர்தம் மனைநண்ண. 201

மற்றவரு மனமகிழ்ந்து மனைவியார் மைந்தர்பெருஞ்
சுற்றமுடன் களிகூரத் தொழுதெழுந்து சூழ்ந்துமொழிக்
கொற்றவரை யமுதுசெயக் குறைகொள்வா ரிறைகொள்ளப்
பெற்றபெருந் தவத்தொண்டர் திருவுள்ளம் பெறப்பெற்றார். 202

காண்டகைமை யின்றியுமுன் கலந்தபெருங் கேண்மையினர்
பூண்டபெருங் காதலுடன் போனகமுங் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டவர சமுதுசெயத் திருவமுதாம் படியமைத்து. 203

திருநாவுக் கரசமுது செய்தருள மற்றவர்தம்
பெருநாமஞ் சாத்தியவப் பிள்ளைதனை யழைத்தன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின் வண்கதலிக்
குருநாளக் குருத்தரிந்து கொண்டுவரத் தனிவிட்டார். 204

ஆங்கவனும் விரைந்தெய்தி யம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப் புகுமளவி லொருநாகந்
தீங்கிழைக்க வதுபேணான் திருவமுது செய்தருள
வோங்குகத லிக்குருத்துக் கொண்டொல்லை வந்தணைந்தான். 205

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

52. திருவீழிமிழலை

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றினை முன் திருப்பதிகத்திற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

520 கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சி யான்காண்
கந்திருவம் பாட்டிசையிற் காட்டுகின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலா ளுன்காண்
பழமாகிச் சுவையாகிப் பயக்கின் றான்காண்
மண்ணவன்காண் தீயவன்காண் நீரா னுன்காண்
வந்தலைக்கும் மாருதன்காண் மழைமே கஞ்சேர்
விண்ணவன்காண் விண்ணவர்க்கு மேலா னுன்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே 1

இத்திருப்பதிகம், "காண்" என்னும் முடிபுடைய தொடர்க் கோவைகளால் இறைவனது இயல்புகளை எடுத்தோதியருளியது.

520. "கண்ணவன்" முதலியவற்றில் அகரம், சாரியை. இறைவன் உயிர்களோடும் உலகத்தோடும் பொருந்தி நிற்கும் நிலையில், கலப்பினால் அப்பொருள்களேயாகியும், தன் தன்மையால் தானேயாகியும், அவைகளை உடன்நின்று இயக்கும் முறையால் அவைகளும் தானுமாகியும் நிற்பன். இந்நிலைகள் முறையே, 'ஒன்றாய் (அபேதமாய்), வேறாய் (பேதமாய்), உடனாய் (பேதா பேதமாய்) நிற்றல்' எனக் கூறப்படும். இங்ஙனம், 'பேதம், அபேதம், பேதாபேதம்' என்னும் மூன்று நிலையும் தோன்ற, அம்மூன்றற்கும் பொதுவாய்ப் பொருந்தி நிற்கும் நிலையே, 'அத்வைத சம்பந்தம்' எனப்படுகின்றது. "பிரமப் பொருள் ஒன்றே; அஃது அத்விதீயம் (एकमेवाद्वितीयं ब्रह्म)" என்னும் உபநிடத வாக்கியத்திற்கும் இதுவே பொருளாகும். இதுபற்றி வேறுவேறு கூறுவார் கூறுவனவெல்லாம் பொருந்தா மையை ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனார், தமது அரிய சிவஞானபோத நூலாலும், அருணந்திதேவ நாயனார் முதலிய அருள்மாணாக்கர்களுக்குச் செய்த உபதேசத்தாலும் இனிது

Koviloor Digital Library

521 ஆலைப் படுகரும்பின் சாறு போல
அண்ணிக்கும்அஞ்சேழுத்தின் நாமத் தான்காண்
சீல முடையடியார் சிந்தை யான்காண்
திரிபுரமுன் றெரிபடுத்த சிலையி னுன்காண்
பாலினேடு தயிர்நறுநேய் யாடி னுன்காண்
பண்டரங்க வேடன்காண் பலிதேர் வான்காண்
வேலை விடமுண்ட மிடற்றி னுன்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 2

விளங்கச்செய்தார். அதனுல், அம்முதல்நூலின் பாடியத்தாலும், வழிநூல் சார்புநூல்களாலும் மேற்குறித்த பொருள் யாவரும் அறிய இனிது விளங்கித் திகழ்கின்றது. அவ்விளக்கங்களை உணரவேண்டுவார், அந்நூல்களிலும், பாடியத்திலும் பரக்கக் கண்டுகொள்க.

இவ்வத்துவித நிலையில், இறைவன் கலப்பினுல் உலகமேயாய் நிற்கும் அபேதநிலையே, முதற்கண் உலகத்தை நிலைபெறுவித்தற்கு இன்றியமையாததாதல்பற்றி அதனையே அருளாசிரியர்கள் பெரும்பான்மையாகப் பலவிடங்களில் அருளிச் செய்வர்; அவ்வாறு வருவது இத்திருப்பதிகம் ஆதலின், "கண்ணவன் காண்" என்பது முதலியவற்றிற்கு, 'கண்ணுகி உள்ளவன்' என்பது முதலியனபோலப் பொருள்கொள்க. இதற்கு முன்னும் பின்னும் இவ்வாறு பல திருப்பதிகங்கள் இருத்தலையும் அறிந்து கொள்க.

கண் ஒளிசேர் காட்சி - கண்ணினது ஒளி சேர்தலால் உண்டாகும் காணுதற் றெழில். கந்திருவம் - இசையிலக்கண நூல். பாட்டு இசையில் காட்டுகின்ற - (அந்நூல்) பாட்டின்கண் உள்ள இசையாகிய இலக்கியத்தில் வைத்துத் தெரிவிக்கின்ற. திறல் - திறம்; இசை, 'பண், திறம், திறத்திறம்' என மூவகைப் படுதலின், திறத்தையும் திறத்திறத்தையும், "திறல்" என் றருளினுர். 'திறமாஞன் என்பதே பாடம்' எனினும் அமையும். பயக்கின்ருன் - பயன் தருகின்ருன். மாருதன் - காற்ருய் உள்ள வன். திருவீழிமிழலைக் கோயிலின் விமானம், திருமாலால் விண் ணுலகத்திலிருந்து கொணர்ந்து நிறுவப்பட்டதாகலின், "விண் இழி தண் வீழிமிழலை" என்றருளிச்செய்தார்.

521. ஆலைப்படு-ஆலையினின்றும் ஒழுகுகின்ற. அண்ணிக் கும் - தித்திக்கும். எரி படுத்த - தீயின்கண் படுவித்த; ஏழாம்

Koviloor Digital Library

522 தண்மையோடு வெம்மைதா னாயி னான்காண்
சக்கரம்புட் பாகற் கருள்செய் தான்காண்
கண்ணுமோரு மூன்றுடைய காபாலிகாண்
காமனுடல் வேவித்த கண்ணி னான்காண்
எண்ணில்சமண் தீர்த்தென்னை யாட்கோண் டான்காண்
இருவர்க் கேரியா யருளி னான்காண்
விண்ணவர்கள் போற்ற இருக்கின் றான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 3

523 காதிசைந்த சங்கக் குழையி னான்காண்
கனக மலையனைய காட்சி யான்காண்
மாதிசைந்த மாதவமுஞ் சோதித் தான்காண்
வல்லேன வெள்ளெயிற்று பரணத் தான்காண்
ஆதியன்காண் அண்டத்துக் கப்பா லான்காண்
ஐந்தலைமா நாகம்நாண் ஆக்கி னான்காண்
வேதியன்காண் வேதவிதி காட்டி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 4

வேற்றுமைத் தொகைக்கண் சிறுபான்மை வல்லெழுத்து மிகாமை யறிக. இனி, 'எரிப்படுத்த' என்பதே பாடம் எனலுமாம். நெய் பலவாகலின், 'நறுநெய்' என அடைகொடுத்து உணர்த்துப. அடையில் வழிச் சொல்லுவார் குறிப்பால், குறித்த பொருள் விளங்கும். பண்டரங்க வேடம் - பாண்டரங்கம் என்னும் கூத்திற்குரிய வேடம். வேலை - கடல்.

522. 'தண்மையும் வெம்மையும் தானே ஆயினான் என்றது, 'மாறுபட்ட பலவகை ஆற்றல்களும் தனது ஓர் ஆற்றலுள் அடங்க நிற்பவன்' என்றருளியவாறு. புள் பாகன் - கருடனை ஊர்பவன்; திருமால். இது, திருமால் சிவபிரானை நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூக்கள் கொண்டு வழிபட்டு, இறுதியில் ஒரு நாள் தனது கண்ணையே ஒரு தாமரை மலராகச் சாத்திச் சக்கரம் பெற்ற தலமாதல் அறிக. இதனை, "நீற்றினை நிறையப் பூசி" (திருமுறை. 4.64.8.) என்னும் இத்தலத் திருநேரிசையுள் விளங்க அருளிச்செய்தார். எண் இல்-பொருளுணர்வு இல்லாத.

523. கனகமலை - பொன்மலை. மாது - உமை; அவள் தவத்தைச் சோதித்தமை முன்னுங் கூறப்பட்டது (501).

Koviloor Digital Library

524 நெய்யினொடு பாலிளநீ ராடி னான்காண்
நித்தமண வாளனென நிற்கின் றான்காண்
கையின்மழு வாளொடுமா னேந்தி னான்காண்
காலனுயிர் காலாற் கழிவித் தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றி னான்காண்
செஞ்சடைமேல்வெண்மதியஞ்சேர்த்தினான்காண்
வெய்ய கனல்விளையாட் டாடி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 5

525 கண்துஞ்சுங் கருநெடுமால் ஆழி வேண்டிக்
கண்ணிடந்து சூட்டக்கண் டருளு வான்காண்
வண்டுண்ணும் மதுக்கொன்றை வன்னி மத்தம்
வான்கங்கை சடைக்கரந்த மாதே வன்காண்
பண்தங்கு மொழிமடவாள் பாகத் தான்காண்
பரமன்காண் பரமேட்டி யாயி னான்காண்
வேண்டிங்கள் அரவோடுசெஞ் சடைவைத் தான்காண்
விண்ணிழிதன் வீழி மிழலை யானே. 6

ஏனம் - பன்றி; திருமால்கொண்ட வராக அவதாரம். எயிறு - பல்; கொம்பு. நாண், அரைநாண். வேதியன் - வேதத்தை ஓதுபவன்.

524. நித்த மணவாளன் - அழியாத மணக்கோலம் உடையவன்; "நித்த மணாளர் நிரம்ப அழகியர்" (திருவாசகம். அன்னைப் பத்து - 3.) என்றருளியதுங் காண்க. இளநீராடுதலும் இங்கு அருளிச்செய்யப்பட்டது. 'நெருப்போடு விளையாடினான்' என்பது நயம்.

525. கண் துஞ்சும் மால் - எப்பொழுதும் அறிதுயில் கொள்ளும் மாயோன். மத்தம் - ஊமத்தை. பரமேட்டி (பரம இஷ்டி) - மேலான வணக்கத்துக்கு உரியவன்.

Koviloor Digital Library

526 கற்போலிதோள் சலந்தரனைப் பிளந்த ஆழி
கருமாலுக் கருள்செய்த கருணை யான்காண்
விற்போலிதோள் விசயன்வலி தேய்வித் தான்காண்
வேடுவனாய்ப் போர்பொருது காட்டி னான்காண்
தற்பரமாந் தற்பரமாய் நிற்கின் றான்காண்
சதாசிவன்காண் தன்னொப்பா ரில்லா தான்காண்
வெற்பரையன் பாவை விருப்பு ளான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 7

527 மெய்த்தவன்காண் மெய்த்தவத்தில்நிற்பார்க்கெல்லாம்
விருப்பிலா இருப்புமன வினையர்க் கென்றும்
பொய்த்தவன் காண்புத்தன் மறவா தோடி
யெறிசல்லி புதுமலர்க ளாக்கி னான்காண்
உய்த்தவன்காண் உயர்கதிக்கே உள்கி னாரை
உலகனைத்தும் ஒளித்தளித்திட் டுய்யச் செய்யும்
வித்தகன்காண் வித்தகர்தாம் விரும்பி யேத்தும்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 8

526. கல் பொலி தோள் - மலைபோல விளங்கிய தோள். பொருததும் விசயனோடேயாம். காட்டியது, தனது போர்த் திறனை. தற்பரம் (தத்பரம்) - அதனின் மேம்பட்டது. ' தற்பர மாந் தற்பரம் '' என்பதற்கு, ' மாயையின் மேம்பட்டதாகிய உயிரினும் மேம்பட்ட பொருள் ' என்க. ' தற்பரமாய் நற்பர மாய் ' என்பதும் பாடம். '' பாவை விருப்புளான் '' என்பதனை, ' பாவையினது விருப்பத்தை உடையவன், பாவையை விரும்பும் விருப்பத்தை உடையவன் ' என இரட்டுற மொழிந்துகொள்க.

527. மெய்த்தவன் - பயனால், உள்பொருளாய் விளங்கிய வன். ' நிற்பார்க்கெல்லாம் மெய்த்தவன் ' என முன்னே கூட்டுக. ' தன்னிடத்து விருப்பம் இல்லாத இரும்புபோலும் மனத்தை யுடைய கன்மிகளுக்கு எஞ்ஞான்றும் எவ்வாற்றானும் தனது இருப்பினைப் புலப்படுத்தாது மறைந்தே நின்றவன் ' என்க. புத்தன், சாக்கிய நாயனார். சல்லி - கல். மலர்கள் ஆக்கினான் - மலர்கள்போல நினைத்து ஏற்றுக்கொண்டவன். ' உள்கினாரை உயர்கதிக்கே உய்த்தவன் ' எனக் கூட்டுக. உய்த்தல் - செலுத் துதல். அளித்தல் - காத்தல். வித்தகன் - திறனுடையவன்;

Koviloor Digital Library

528 சந்திரனைத் திருவடியால் தளர்வித் தான்காண்
தக்கனையும்முனிந்தெச்சன்தலைகொண்டான்காண்
இந்திரனைத் தோள்முரிவித் தருள்செய் தான்காண்
ஈசன்காண் நேசன்காண் நினைவோர்க் கெல்லாம்
மந்திரமும் மறைப்பொருளு மாயி னான்காண்
மாலோடயன் மேலொடுகீழ் அறியா வண்ணம்
வெந்தழலின் விரிசுடராய் ஓங்கி னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 9

529 ஈங்கைப்பே ரீமவனத் திருக்கின் றான்காண்
எம்மான்காண் கைம்மாவி னுரிபோர்த் தான்காண்
ஓங்குமலைக் கரையன்றன் பாவை யோடும்
ஒருருவாய் நின்றான்காண் ஓங்கா ரன்காண்
கொங்குமலர்க்கொன்றையந்தார்க்கண்ணியான்காண்
கொல்லேறு வெல்கொடி மேற் கூட்டினான்காண்
வேங்கைவரிப் புலித்தோல்மே லாடை யான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே. 10

திருச்சிற்றம்பலம்

ஒளித்து நின்றே செய்தலின், "வித்தகன்" என்றருளிச்செய்தார். "முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை" (தொல். சொல். 240.) கிளவாது, தாம் அனுபவத்தால் அறிந்தது கிளத்தல் திருவுள்ளமாகலின், இறந்த காலத்தால் அருளினர்; இது பிறவிடத்தும் ஒக்கும்.

528. சந்திரனைத் தளர்வித்தது முதலியன, தக்கன் வேள்வியில். நினைபவர், மந்திரத்தினாலும் மறைப்பொருளாலுமே நினைதலின், அவைகளாய் இருந்து அருள்செய்கின்றான் என்க.

529. ஈங்கை - இண்டங் கொடி. ஈமவனம் (சுடுகாடு), இருபெயரொட்டு. கைம்மா - யானை. 'கொல்லேற்றைக் கொடி மேற் கூட்டினான்' என்க.

Koviloor Digital Library

53 திருவீழிமிழலை

திருப்பதிக வரலாறு

இத்திருப்பதிக வரலாற்றினை 51ஆம் திருப்பதிகத்திற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

530 மானேறு கரமுடைய வரதர் போலும்
மால்வரைகால் வளைவில்லா வளைத்தார் போலும்
கானேறு கரிகதற வுரித்தார் போலுங்
கட்டங்கங் கோடிதுடிகைக் கொண்டார் போலும்
தேனேறு திருவிதழித் தாரார் போலுந்
திருவீழி மிழலையமர் செல்வர் போலும்
ஆனேற தேறும் அழகர் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 1

இத்திருப்பதிகம், 'போலும்' என்னும் முடிபுடைய தொடர்களால் இறைவனது இயல்பினை வகுத்தோதியருளியது.

530. வரதர் - வரத்தைக் கொடுப்பவர். 'மால்வரை வளைத்தார்' என இயையும். கால் வளை வில் - இருமுனையும் வளையும் வில். கான் ஏறு - காட்டிற் பொருந்தும். கரி - யானை. கொடி, விடைக் கொடி. துடி - இடை சுருங்கு பறை (உடுக்கை). இதழி - கொன்றை. '' ஏறது '' அது, பகுதிப் பொருள் விகுதி.

அடிகள் - முதல்வர். இஃது, 'அடி' என்பது அடியாகப் பிறந்த பெயர்; 'அடி' எனினும், முதல் எனினும் ஒக்கும்; அது பண்பாகுபெயராய், முதலாவாரை யுணர்த்தி, ஆண்பால் பெண்பால் இருபாலார்க்கும் பொதுவாய் நிற்கும். பின்னர், அஃது உயர்வுபற்றிவந்த திணைவழுவமைதியும் பால்வழுவமைதியுமாக, 'கோக்கள், குருக்கள்' என்பனபோல அஃறிணைப் பன்மைவிகுதியாகிய 'கள்' என்பதனோடு புணர்ந்து, மேற்கூறிய வாறே இருபாலார்க்கும் பொதுவாய் நிற்கும்; எனவே, இது, 'சுவாமி' என்னும் வடசொற்கு நேராய தமிழ்ச்சொல் என்பது பெறப்படும். இதனானே, 'சுவாமி' என்பதும், தமிழ்மொழியுள்

Koviloor Digital Library

531 சமரம்மிகு சலந்தரன்போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையோரு கால்குறைத்த நாதர் போலும்
நாரணனை யிடப்பாகத் தடைத்தார் போலும்
குமரனையும் மகனாக வுடையார் போலுங்
குளிர்வீழி மிழலையமர் குழகர் போலும்
அமரர்கள்பின் அமுதுணநஞ் சுண்டார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 2

'சுவாமிகள்' என, கள்ளொடு புணர்த்து வழங்கப்படுகின்றது. 'அடிகள்' எனற்பாலதனைச் சேக்கிழார் நாயனார், "வாகீசத் திருவடி" (திருநாவுக்கரசர் புராணம்-109.) என முதற்கண் 'திரு' என்பதனைப், புணர்த்து அருளிச்செய்தார். இப்பெயர் உயர்ந்தோர்க்கு உரியதாதல்பற்றி, "மாமடிகள்" (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-அம்புலி-6.) என்றாற்போலச் சிலர்க்கு முகமனுரையாய் வழங்கும். எனினும், 'தலைவர்' என்பதே இதன் பொருளாகலின், ஆடவருள்ளும் பெண்டிருள்ளும் தலைவராயினார்க்கே இஃது உண்மையில் உரியதாகும். துறவறத்தில் நிற்பவர் பிறர் யாவர்க்கும் தலைவராதல்பற்றி, அவர்களையே சிறப்பாக 'அடிகள்' என வழங்குவர். இங்கு, "அடியேனை ஆளுடைய அடிகள்" என்றருளியதனால், 'அடிகள்' என்பது தலைவர் என்றவாறாதல் இனிது விளங்குதல் காண்க, பொருட்பன்மையன்றி உயர்வுப் பன்மையாகலின், பன்மையொருமை மயக்கமாக ஒருமைச் சொல்லொடு இயைதலும் உண்டு. தாம், ஏ அசைகள். 'அடிகள் தாம்' என்பதே எழுவாய்.

531. சமரம் - போர்; சமரத்துக்கண் மிகுகின்ற (மேம்படுகின்ற) என உரைக்க. 'சதுரர் - திறலுடையவர். 'காலால் குறைத்த' என்க. குறைத்தல் - இல்லையாக்குதல்; அழித்தல். நாரணனை இடப்பாகத்துக் கொண்டது, ஒரு சத்தியாதல் பற்றி, குமரன் - முருகக்கடவுள். 'பிறர் பின்பு அமுதுண்ணுதற்குத் தாம் முன்பு நஞ்சுண்டவர்' என அவரது பெருங்கருணைத் திறத்தினை நினைந்துருகி அருளிச்செய்தவாறு.

Koviloor Digital Library

532 நீறணிந்த திருமேனி நிமலர் போலும்
நேமிநெடு மாற்கருளிச் செய்தார் போலும்
ஏறணிந்த கொடியுடையெம் மிறைவர் போலும்
எயில்மூன்றும் எரிசரத்தா லெய்தார் போலும்
வேறணிந்த கோலமுடை வேடர் போலும்
வியன்வீழி மிழலையுறை விகிர்தர் போலும்
ஆறணிந்த சடாமகுடத் தழகர் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 3

533 கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலுங்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன்சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி ஆறங்க மானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே 4

532. நேமி - சக்கரம். தீக்கடவுள் தன் ஆற்றலைக் காட்டி நின்றமையின், "எரிசரம்" என்றருளினார். சரம் - அம்பு. வேறு அணிந்த கோலம் - உலகியலுக்கு வேறாகக்கொண்ட கோலம்; 'விகிர்தர்' என்பதும் அப்பொருளது.

533. கை வேழம் - கையை உடையதாகிய யானை; இது கை யுடைமையை விதந்தருளியவாறு. வேழ முகத்தவன், விநாயகக் கடவுள். "கயாசுரன்" என்றது, கயமுகாசுரனை. அவனை விநாயகக் கடவுளைத் தோற்றுவித்து அழிப்பித்த வரலாற்றைக் கந்தபுராணத்துட் காண்க. வேள்வி மூர்த்தி - யாக தேவன். ஐ வேள்வி, 'பிரமவேள்வி, தேவவேள்வி, மனித வேள்வி, உயிர் வேள்வி, பிதிர் வேள்வி' என்பன. இவை முறையே வேதம் ஓதுதலும், வழிபாடு செய்தலும், விருந்தோம்பலும், உயிர்களிடத்து இரக்கங் கொண்டு உணவிடுதல் முதலியன செய்தலும், தென்புலத்தார் கடன் தீர்த்தலும் ஆகும். "விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன்" எனவும், விருந்தோம்பி வேள்வி தலைப்படாதார்" எனவும் விருந்தோம்பலை, திருவள்ளுவ நாயனாரும் 'வேள்வி' என்றருளினார். (குறள் - 87, 88.) இவை முறையே 'பிரமயாகம், தேவ யாகம், மானுட யாகம், பூத யாகம், பிதிர் யாகம்' எனப்

Koviloor Digital Library

534 துன்னத்தின் கோவணமொன் றுடையார் போலுஞ்
சுடர்மூன்றுஞ் சோதியுமாய்த் தூயார் போலும்
பொன்னொத்த திருமேனிப் புனிதர் போலும்
பூதகணம் புடைசூழ வருவார் போலும்
மின்னொத்த செஞ்சடைவெண் பிறையார் போலும்
வியன்வீழி மிழலைசேர் விமலர் போலும்
அன்னத்தேர் அயன்முடிசேர் அடிகள் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே 5

படும். இவையெல்லாம் வைதிக முறை. இனிச் சைவ முறையிற் சொல்லப்படும் ஐவகை வேள்விகள், 'கன்மவேள்வி, தவ வேள்வி, செபவேள்வி, தியானவேள்வி, ஞானவேள்வி' என்பன. வைதிகமுறையிற் சொல்லப்பட்ட ஐவகை வேள்வி களும் சைவமுறையில், 'கன்மவேள்வி' என ஒன்றாய் அடங்கும். 'சமயம். விசேடம்' என்னும் இருவகைத் தீக்கைகளின் வழி, 'சரியை கிரியை யோகம்' என்னும் மூன்று நெறிகளினும் நிற்றல் தவவேள்வி ; அத்தீக்கைகளிற் பெற்றவாறே திருவைந் தெழுத்தைக் கணித்தல் செபவேள்வி ; அச் செபத்தின்வழிச் சரியை முதலிய மூன்று நெறியிலும் முறையே சிவபிரானது 'உருவம், அருவுருவம், அருவம்' என்னும் மூவகைத் திருமேனி களைத் தியானித்தல் தியான வேள்வி ; பதியாகிய சிவபிரானது இயல்புகளையும் அவனுக்கு அடிமையும் உடைமையும் ஆகிய பசு பாசங்களின் இயல்புகளையும் உள்ளவா றுணர்த்தும் ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல், நல்லாசிரியரிடத்தே அந்நூற்பொருளை இனிது கேட்டல், பின்னர்ச் சிந்தித்தல் என்பன ஞானவேள்வி. இவ்வைவகை வேள்விகளுட் சிறந்த தாகிய ஞானவேள்வியை,

" ஞானநூல் தனைஓதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றாய்
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை "

என எடுத்தோதியது, சிவஞானசித்தி. ஆறங்கம் முன்னே கூறப் பட்டன (பக் - 161.)

534. துன்னம் - (கீளோடு) இணைத்தல். 'அவற்றது சோதி' என்க. தூயார், அவைகளினும் தூயவர். அன்னத் தேர் - அன்னப் பறவையாகிய ஊர்தி. 'முடி' என்றது, தலை யோட்டினை.

Koviloor Digital Library

535 மாலாலும் அறி'வரிய வரதர் போலும்
மறவாதார் பிறப்பறுக்க வல்லார் போலும்
நாலாய மறைக்கிறைவ ராஞர் போலும்
நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும்
வேலார்கை வீரியைமுன் படைத்தார் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
ஆலாலம் மிடற்றடக்கி அளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 6

536 பஞ்சடுத்த மெல்விரலாள் பங்கர் போலும்
பைங்நாகம் அரைக்கசைத்த பரமர் போலும்
மஞ்சடுத்த மணிநீல கண்டர் போலும்
வடகயிலை மலையுடைய மணாளர் போலுஞ்
செஞ்சடைக்கண் வெண்பிறை கொண் டணிந்தார் [போலுந்
திருவீழி மிழலையமர் சிவனார் போலும்
அஞ்சடக்கும் அடியவர்கட் கணியார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 7

537 குண்டரோடு பிரித்தெனையாட் கொண்டார் போலும்
குடமூக்கி லிடமாக்கிக் கொண்டார் போலும்
புண்டரிகப் புதுமலரா தனத்தார் போலும்
புள்ளரசைக்கொன் றுயிர்பின்கொடுத்தார்போலும்

535. 'அஞ்செழுத்தாய நாமத்தை யுடைய நம்பர்' என்க. வேல், சூலம். வீரி - காளி; இவளைத் தாருகன் என்னும் அசுரனை அழித்தற்பொருட்டுப் படைத்தருளினமை யறிக. அளித்தார் - தேவர்களைக் காத்தார்.

536. "விரல்" என்றது நகத்தினை; அடையடுத்த ஆகு பெயர். பை - பாம்பின் படம். மஞ்சு அடுத்த - மேகம் அடுத்தது போன்ற. மணாளர் - தலைவர். கொண்டு - பற்றி. அஞ்சு, பொறிகள். அணியார் - அண்மையில் உள்ளவர்.

537. குடமூக்கில் - குடந்தை (கும்பகோணம்). புள்ளரசு - கருடன்; இவனை முன்னர் ஒறுத்துப் பின்னர் அருள்செய்தமை

Koviloor Digital Library

வேண்டலையிற் பலிகொண்ட விகிர்தர் போலும்
வியன்வீழி மிழலைநக ருடையார் போலும்
அண்டத்துப் புறத்தப்பா லானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 8

538 முத்தனைய முகிழ்முறுவ லுடையார் போலும்
மோய்பவளக் கொடியனைய சடையார் போலும்
எத்தனையும் பத்திசெய்வார்க் கினியார் போலும்
இருநான்கு மூர்த்திகளு மானார் போலும்
மித்திரவச் சிரவணற்கு விருப்பர் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
அத்தனொடும் அம்மையெனக் கானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 9

539 கரியுரிசெய் துமைவெருவக் கண்டார் போலுங்
கங்கையையுஞ்சேஞ்சடைமேற் கரந்தார் போலும்
எரியதோரு கைத்தரித்த இறைவர் போலும்
ஏனத்தின் கூனெயிறு பூண்டார் போலும்
விரிகதிரோ ரிருவரைமுன் வேகுண்டார் போலும்
வியன்வீழி மிழலையமர் விமலர் போலும்
அரிபிரமர் துதிசெயநின் றளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 10

முன்னே குறிக்கப்பட்டது. (பக். 197.) புறத்து, ‘அத்து’ வேண்டாவழிச் சாரியை; ‘புறமாகிய அப்பால்’ என்க. ஆனார் - உள்ளவர்.

538. முகிழ் முறுவல் - சிறிதே அரும்புகின்ற நகைப்பு. எத்தனையும் - சிறிதாயினும். இருநான்கு மூர்த்திகள் - அட்ட மூர்த்தம்; அவை முன்னே கூறப்பட்டன. (பக். 119.) மித்திரன் - தோழன். வச்சிரவண்ணன் - குபேரன். அத்தன் - தந்தை. அம்மை - தாய்.

539. கரி - யானை. வெருவ - அஞ்ச. கண்டார் - செய்தார். “எரியது” அது, பகுதிப்பொருள் விகுதி. ஏனம் - பன்றி. கூன் எயிறு - வளைந்த பல் (கொம்பு). கதிரோர் இருவர்,

Koviloor Digital Library

540 கயிலாய மலையெடுத்தான் கதறி வீழக்
காலவிரலால் அடர்த்தருளிச் செய்தார் போலும்
குயிலாரும் மென்மொழியாள் குளிர்ந்து நோக்கக்
கூத்தாட வல்ல குழகர் போலும்
வெயிலாய சோதிவிளக் காளுர் போலும்
வியன்வீழி மிழலையமர் விகிர்தர் போலும்
அயிலாரும் மூவிலைவேற் படையார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

செங்கதிரோனும் (சூரியனும்) வெண்கதிரோனும் (சந்திரனும்). அளித்தார் - வரங்கொடுத்தார்.

540. வெயிலாய - பகலவன் ஒளிபோன்ற; இது பிற வொளிகளைத் தன்னுள் அடக்கிநிற்கும் தொழில்பற்றி வந்த உவமை; பல்வேறு சிறப்பியல்புகளை உடைய உயிர்களின் அறிவுகள் எல்லாவற்றையும் தம் அறிவினுள் அடக்கிநிற்றல் பொருள் என்க. அயில் - கூர்மை.

தீயவிடந் தலைக்கொள்ளத் தெருமந்து செழுங்குருத்தைத்
தாயர்கரத் தினினீட்டித் தளர்ந்துதனைத் தழலுக
மேயபடி யுரைசெய்யான் விழக்கண்டு கெட்டொழிந்தேந்
தூயவரிங் கமுதுசெயத் தொடங்காரென் றதுவொளித்தார். 206


தம்புதல்வன் சவமறைத்துத் தடுமாற்ற மிலராகி
யெம்பெருமா னமுதுசெய வேண்டுமென வந்திறைஞ்ச
வும்பர்பிரான் திருத்தொண்ட ருள்ளத்திற் றடுமாற்ற
நம்பர்திரு வருளாலே யறிந்தருளி நவைதீர்ப்பார். 207

அன்றவர்கண் மறைத்ததனுக் களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறுஞ் சடையார்தங் கோயிலின்முன் கொணர்வித்தே
யொன்றுகொலா மெனப்பதிக மெடுத்துடையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப் பிள்ளையுணர்ந் தெழுந்திருந்தான்.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library



புள்ளிருக்கு வேளூர் அரன் பொற்கோயில்

Koviloor Digital Library

54. திருப்புள்ளிருக்குவேளூர்

திருப்பதிக வரலாறு

ஆண்டஅரசு காழி ஞானப்பிள்ளையாருடன் திருக்கோலக் காவை வணங்கிப் பிள்ளையாரிடம் விடைபெற்று, கருப்பறியலூர் முதலானதலங்களை வணங்கப் போம்வழியில் திருப்புள்ளிருக்கு வேளூரைப் பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக் - பு. 189.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

541 ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு
அடியோடு முடியயன்மா லறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் தன்னை
நேமிவான் படையால்நீ ளுரவோன் ஆகங்
கீண்டானைக் கேதாரம் மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவா ளரவோ டேன்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 1

இத்திருப்பதிகம், சிவபிரானைப் பொதுநீக்கி உணர்ந்த உணர்ச்சி மேலீட்டின்கண், அவனைச் சிறிதும் உணராது கழிந்த நாட்கள் மிகப் பலவாயினமையை நினைந்து இரங்கி யருளியது.

541. 'ஆளாக்கொண்டு ஆண்டான்' எனக் கூட்டுக. அடியேனை - இயல்பாகவே அடியவனாய் உள்ள என்னை. ஆளாக் கொண்டு - அதனை அறியாதிருந்த அறியாமையை நீக்கி அறிவித்து. ஆண்டான் - அருள் செய்தவன் ; 'இத்துணைப் பெருங்கருணையாளனை முன்பே அறிந்து போற்றாது ஆற்றநாள் போக்கினேனே' என இரங்கி யருளியவாறு. நெடுங்களம், சோழநாட்டுத் தலம். நேமிவான் படையால் - சக்கரமாகிய பெரிய படைக்கலத்தால். நீள் உரவோன் - மிக்க வலிமையை உடையவன் ; சலந்தராசுரன். கேதாரம், வடநாட்டுத் தலம். கேடிலி - அழிவில்லாதவன். பொறி - புள்ளி. வாளரவு - கொடிய

Koviloor Digital Library

542 சீர்த்தானைச் சிறந்தடியேன் சிந்தை யுள்ளே
திகழ்ந்தானைச் சிவன்தன்னைத் தேவதேவைக்
கூர்த்தானைக் கோடுநேடுவேற் கூற்றந் தன்னைக்
குரைகழலாற் குமைத்துமுனி கோண்ட அச்சம்
பேர்த்தானைப் பிறப்பிலியை இறப்போன் றில்லாப்
பெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணிப்
போர்த்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றுதே ஆற்றநாள் போக்கி னேனே. 2

543 பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை
அண்ணிக்குந் தீங்கரும்பை அரனை ஆதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றதே ஆற்றநாள் போக்கி னேனே. 3

பாம்பு. "போற்றுதே" என்னும் தேற்றேகாரம் இன்றியமையாது செயற்பாலதனைச் செய்யாதொழிந்த இழிபினைக் குறித்தது. ஆற்ற - மிகுந்த. "போக்கினேனே" என்னும் தேற்றேகாரம் அதுபற்றி இரங்கும் இரங்கற்பொருட்கண் வந்தது.

542. 'சிறந்து சீர்த்தான்' என்க; சீர்த்தல் - வாய்த்தல் (கிடைத்தல்); "சீரிடங் காணின்" எனவும், "மற்றதன் குத்தொக்க சீர்த்த விடத்து" (குறள் - 821, 490.) எனவும் வந்தன காண்க. சிவன் - மங்கலமாய் உள்ளவன். கூர்த்தான் - நுணுகியவன். குமைத்து - அழித்து. முனி, மார்க்கண்டேயர். கைம்மா - யானை. உரிவை - தோல். பேணி - விரும்பி.

543. "அடியேன் றன்னைப் பன்னாள்" என்றதனை முதற்கண் கூட்டுக. 'தன்னைப் பணிந்து பாட' என இயையும், 'அடியேன் றன்னைப் பயில்வித்தானை' என இயைப்பினுமாம். 'பன்னாளும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. எத்தேவும் - எந்தக் கடவுளும்; 'கடவுளர்க்கெல்லாம் கடவுள்' என்றபடி. ஊறும் - சுரக்கின்ற. "அத்தேன்" என்பது பலரறி சுட்டாய், உயர்வுப் பொருள் குறித்தது. அண்ணரித்தல் - தித்தித்தல். ஆதிப் புத்தேள் - முதற் கடவுள்.

Koviloor Digital Library

544 இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை ஆதிமா தவத்து ளானை
ஆறங்க நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே. 4

545 மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ் புனலின் நான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 5

544. "ஏழையேனை" என்பதை முதற்கண் வைத்துரைக்க. ஏழைமை - அறிவின்மை. இருளாய - அறியாமை வடிவாகிய. இடர் பாவம் - இடரையும், அதற்கு முதலாய் உள்ள பாவத்தையும். "உய்ய" என்னும் வினைஎச்சம் தொழிற்பெயர்ப் பொருள் தந்தது. "தன்போல்" என்பதன் பின், 'ஆக' என்பது விரிக்க. ஆதி மாதவம் - முதற்கண் நின்ற பெரிய தவநிலை; 'அதன்கண் உள்ளான்' என்றது, 'அவனே முதற்கண் ஆசிரியனாய் யோகநிலையில்இருந்து அதனைச் செய்துகாட்டினான்' என்றபடி. இதனானே. 'சுவேதாசுவதரம்' என்னும் உபநிடதம்' சிவபெருமானை, 'பெரிய இருடி' (विश्वाधिको रुद्रो महर्षिः) என்கின்றது.

545. மின் உரு - மின்னலின் ஒளியாய் உள்ளவன்' 'வானம், காற்று, தீ, நீர், நிலம்' என்னும் ஐம்பெரும் பூதங்களிலும், முறையே ஒன்று முதலாக ஐந்து ஈறாக ஒன்றின் ஒன்று ஒவ்வொரு குணம் ஏற்றமாக, 'ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்' என்னும் ஐந்து குணங்களும் அமைந்துள்ளன என்பதனை, "விண்ணகத்தில் ஒன்றாய்" என்பது முதல், தரணிதலத்து அஞ்சாகி" என்பதுகாறும் உள்ள தொடர்களால்

Koviloor Digital Library

546 அறையார்பொற் கழலார்ப்ப அணியார் தில்லை
அம்பலத்துள் நடமாடும் அழகன் தன்னைக்
கறையார்மூ விலைநெடுவேற் கடவுள் தன்னைக்
கடல்நாகைக் காரோணங் கருதி னானை
இறையானை என்னுள்ளத் துள்ளே விள்ளா
திருந்தானை ஏழ்பொழிலுந் தாங்கி நின்ற
பொறையானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 6

547 நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை
நீங்காதென் னுள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்துருத்தி நகரும் மேவி
இருப்பவனை யிடைமருதோ டீங்கோய் நீங்கா
இறையவனை யெனையாளுங் கயிலை யென்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 7

அருளிச்செய்தார். "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி" (திருவாசகம். போற்றித் திருவகவல் - 136 - 40.) என்பது முதலியனவாக அருளிச்செய்தவற்றையும் அறிக. கால் - காற்று. "உரு" என்றது பருநிலையை. தாழ் புனல் - வீழும் இயல்புடைய நீர். தரணி - பூமி. எஞ்சா - குறையாத; அழியாத. தஞ்சம் - புகலிடம். 'தஞ்சமாய' என, ஆக்கச்சொல் விரித்துரைக்க. மன் உரு - நிலைபெற்ற பொருள். பொன் உருவை - பொன் போலும் நிறம் உடையவனை.

546. அறை ஆர் - ஒலித்தல் பொருந்திய. கறை - நஞ்சு. படைக்கலங்களின் வாயில் நஞ்சு பூசப்பட்டிருத்தல் இயல்பு; நாகை - நாகப்பட்டினம். விள்ளாது - நீங்காது. பொழில் - உலகம். பொறை - சுமை.

547. 'திருமேனியில் வெண்ணீற்றான்' என்க. 'விருப் பவன், பொருப்பவன்' என்பவற்றில் அகரம், சாரியை. வேத வித்து - வேதத்தை நன்குணர்ந்தவன்; 'வேதத்திற்கு வித்தாய் உள்ளவன்' என்றும் ஆம். வெண்காடு, துருத்தி, இடைமருது, ஈங்கோய் மலை, இவை சோழநாட்டுத் தலங்கள்.

Koviloor Digital Library

548 பேரா யிரம்பரவி வானே ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கேன்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றுதே ஆற்றநாள் போக்கி னேனே. 8

548. பேர், 'பெயர்' என்பதன் மரூஉ. 'பேர் ஆயிரமும்' என்னும் உம்மைதொக்கது. 'ஆயிரம்' என்பது மிகுதிகுறித்தது; "ஆயிரந் திருநாமம் பாடி நாம்" (திருவாசகம். தெள்ளேணம் 1.) என்புழி ஆயிரம் இப்பொருளதாதல், முன்னர், "ஒருநாமம்...... இல்லாற்கு" என்றதனுல் இனிது பெறப்படும்; எனவே, 'எத்துணைப் பெயர்கள் உள்ளனவோ அத்துணைப் பெயர் களையும் சொல்லி' என்றவாறு; இங்கு, 'உள்ளன' என்றது, 'ஏத்துவோரால் அறியப்பட்டுள்ளன' என்றதேயாம். பிரி வின்மை - மறதி இன்மை. வாராத செல்வம் என்பது, பொச் சாவாக் கருவி" (குறள் - 537.) என்பதுபோல, 'வாராமை யாகிய செல்வம்' எனப் பொருள் தரும்; வாராமை - பிறந்து வாராமை; "மற்றீண்டு வாரா நெறி" (குறள் - 356.) "மீண்டு வாரா வழிஅருள் புரிபவன்" (திருவாசகம். கீர்த்தி - 116.) என வந்தனவுங் காண்க. இனி, 'வருதற்கரிய (கிடைத்தற் கரிய) செல்வம்' என்றுரைத்து, 'அதனற் போந்த பொருள் வீடுபேறு' என்றலுமாம். துன்பத்தோடு இயைபின்றி எல்லை யற்று விளையும் வீட்டின்பத்தின் மிக்க செல்வம் வேறின்மையின் அதனை இவ்வாறருளிச்செய்தார்; இதனுனே, பூரியார் கண்ணும் உளவாகும் (குறள் - 241.) பொருட் செல்வங்களை வருவிப்பா ஞதல் கூறவேண்டாதாயிற்று. இனி, 'வாராத செல்வம் - இயல் பாகவே உள்ள செல்வம்; திருவருட் செல்வம்' என்றுரைப் பினும் அமையும். மந்திரம், திருவைந்தெழுத்து; தந்திரம், அதனை மேற்கொள்ளும் முறையைக் கூறும் ஆகமங்கள்; மருந்து, அவ்வாகமங்களின் வழிநின்று செய்யும் செபம், பூசை, தியானம் முதலியன; தீராநோய், மலம்; நோய் தீர்தற்கு உரியன யாவை அவையெல்லாம் 'மருந்து' எனற்கு உரியனவாகலின், செபம் முதலிய செயல்களை மருந்தென்றருளினர். மந்திரம் முதலிய மூன்றும், உடல்நோயைத் தீர்ப்பவற்றின் மேலும் நோக்குடையன.

Koviloor Digital Library

இவற்றால் இருநோயையும் தீர்த்தல்பற்றி இத்தலப் பெருமானை 'வைத்தியநாதன்' எனவும், இத்தலத்தினை, 'வைத்தியேசுரன் கோயில்' எனவும் கூறிப் போற்றுவர். அருள - இன்பந்தர. "வல்லான்" என்றது, பிறர் அதுவல்லர் ஆகாமையை உணர்த்தி நின்றது. பிறவிநோய் நீங்குதல், அந்நோய் எவ்வாற்றானும் எஞ்ஞான்றும் சிறிதும் இல்லாதவனாகிய சிவபிரானாலன்றிக் கூடாமையால், அவனை அடையாது அந்நோய் நீங்குமாறில்லை என்பதாம். இதனை, 'எப்பொழுது ஆகாயத்தைத் தோல்போற் சுருட்டுதல் கூடுமோ அப்பொழுது சிவனை யறியாமல் துன்பத்தினின்று நீங்குதல் கூடும்' என்று விளக்குகின்றது, (यदा चर्मैव दाकाशम् वेष्टयिष्यन्ति मानवाः । तदा शिव मविज्ञाय दुःखस्यान्तो भविष्यति॥) 'சுவேதாசுவதரம்' என்னும் உபநிடதம். இவ்வுபநிடத வாக்கியத்தை.

"பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைது மென்றல்
உருவமில் விசும்பைத் தோலின் உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறைஇயம்பிற்றென்னிற்பின்னுமோர்சான்றுமுண்டோ."

என்று கந்தபுராணமும், (தட்சகா. உபதேசப். 25.)

"மானுடன் விசும்பைத் தோல்போற் சுருட்டுதல் வல்லோ னுயின்
ஈனமில் சிவனைக் காணு திடும்பைதீர் வீடு மெய்தும்
மானமார் சுருதி கூறும் வழக்கிவை ஆத லாலே
ஆனமர் இறையைக் காணும் உபாயமே அறிதல் வேண்டும்"

என்று காஞ்சிப் புராணமும் (சனற்குமாரப். 43.) விளக்கின, 'உடற்றுன்பம் பிறராலும் நீக்கப்படும்; உயிர்த்துன்பம் சிவபிரானை யன்றிப் பிறரால் நீக்கப்படுமாறில்லை' என்பதுபற்றியே, சிவபிரான், 'வீடுபேறளிப்பவன்' எனப்படுகின்றானாதலின், உடற்றுன்பத்தை அவன் நீக்கமாட்டுவானல்லன் என்பது அதற்குப் பொருளன்று என்பதும் இங்குப் பெறப்பட்டது. ஆகவே, 'உலகப்பயனைப் பிற தேவரிடத்தே பெறல்வேண்டும்' என்பாரது கூற்று, 'நாடு வழங்கும் பேரரசனொருவன், நிலஞ் சிறிது வழங்கமாட்டுவானல்லன்' என்பாரது கூற்றோடொப்பதாமென்றொழிக. இவற்றையெல்லாம் இனிது தெரிவித்தற் பொருட்டன்றோ, "இம்மை யேதரும் சோறுங் கூறையும் ஏத்த லாம்இடர் கெடலுமாம் - அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுற வில்லையே" "பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப் போகமுந்திரு வும்புணர்ப் பானை" (திருமுறை. 7-34.1.) என்றற்

Koviloor Digital Library

549 பண்ணியனைப் பைங்கொடியாள் பாகன் தன்னைப்
படர்சடைமேற் புனல்கரந்த படிறன் தன்னை
நண்ணியனை யென்னாக்கித் தன்னா னானை
நான்மறையின் நற்பொருளை நளிர்வெண் டிங்கட்
கண்ணியனைக் கடியநடை விடையோன் றேறுங்
காரணனை நாரணனைக் கமலத் தோங்கும்
புண்ணியனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 9

550 இறுத்தானை இலங்கையர்கோன் சிரங்கள் பத்தும்
எழுநரம்பின் இன்னிசைகேட் டின்புற் றானை
அறுத்தானை அடியார்தம் அருநோய் பாவம்
அலைகடலில் ஆலால முண்டு கண்டங்
கறுத்தானைக் கண்ணழலாற் காமன் ஆகங்
காய்ந்தானைக் கனன்மழுவுங் கலையு மங்கை
பொறுத்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. 10

திருச்சிற்றம்பலம்

ருடக்கத்துத் திருமொழிகள் எழுந்தன என்க. திரிபுரங்கள் தீயெழத் திண்சிலை கைக்கொண்ட போரான்" என்பதும், 'அசுரரை அழித்துத் தேவர்க்கு விண்ணுலக இன்பத்தைத் தந்தவன்' என. உலக இன்பத்தையும் அவன் மிக வழங்குவோனாதலைக் குறிப்பித்ததேயா மென்க.

549. பண்ணியன் - (எல்லாவற்றையும்) ஆக்கியவன். "படிறன்" என்றது, கரந்தமைபற்றி. நண்ணியன் - (எனக்குத் துணையாய்) உடன் நின்றவன். என் ஆக்கி - என்னைத் திருத்தி. தன் ஆனானை - தன்னினின்றும் நீக்காது அணைத்துக்கொண்டவனை. (ஆனாமை, நீக்காமை.) நளிர் - குளிர்மை. கண்ணி - முடியிலணியும் மாலை. காரணன் - முதல்வன். கமலத்து ஓங்கும் புண்ணியன், பிரமன்; "நாரணன்காண் நான்முகன்காண்" என்னும் திருத்தாண்டகக் குறிப்புக் காண்க. (79.)

550. 'பத்தும் இறுத்தானை' எனவும், அருநோய் பாவம் அறுத்தானை' எனவும் கூட்டுக. இறுத்தல் - நெரித்தல். இதனுள்ளும், அருநோயும் பாவமும் அறுத்தல் அருளப்பட்டது; "வெந்துறும் வினையும் நோயும்" எனத் திருநேரிசையிலும் அருளிச்செய்தார். (திருமுறை.4-77. 4.) கலை-மான். பொறுத்தான்-தாங்கினான்.

Koviloor Digital Library

55. திருக்கயிலாயம்

திருப்பதிக வரலாறு

நாயனுர் கயிலைசெல்லும் காதல் கொண்டு திருக்காளத்தியினின்றும் புறப்பட்டுத் திருப்பருப்பதம் வணங்கி, தெலுங்கு, கன்னடம், மாளவம், இலாடம், மத்தியம் ஆகிய நாடுகளைக்கடந்து வாரணசிசென்று தொழுது கற்சுரத்தை அடைந்து செல்லுகையில் கால்கள் தேய்ந்தமையால் கைகளை ஊன்றிச்செல்ல, அவைகளும் தேய்ந்தன. பின்பு மார்பால் உந்தியும் புரண்டும் சென்றார். அதனுல் அவ்வுறுப்புக்களும் அழிந்தன. ஆகவே, கயிலைமால்வரையின் தாழ்வரையில் செயலின்றிக்கிடந்தார். நாயனரது நிலைக்கு இரங்கிய கயிலைப்பரமர் அவர் கயிலையை அணைவதற்கு அருளாராய் ஓர் முனிவராகி எதிர்தோன்றி, 'உம் உறுப்புக்களழிய இப்பாலையில் வந்தது என் கருதி' என வினவினர். "மலைமகளுடன் வடகயிலை அண்டர் நாயகர் இருக்கும் அப்பரிசு அடியேன் கண்டு கும்பிடக் காதலின் அடைந்தேன்; ஆளும் நாயகன் கயிலையிலிருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்ருர் நாயனர். இறைவர் நாயனரது மன உறுதியைக் கண்டு அருகிலுள்ள பொய்கையைக் காட்டி, 'இப்பொய்கையில் மூழ்கி நம்மை நீ கயிலையிலிருந்த அம்முறையைத் திருவையாற்றிற்காண்' எனப்பணித்துமறைந்தருளினர். நாயனர் தீங்குநீங்கிய திருமேனியுடன் இறையருளாணையின் வண்ணம் திருக்கயிலையில் உள்ள பொய்கையில் ஐந்தெழுத்தோதி மூழ்கி ஐயாற்றில் ஓர்வாவியில் உலகெலாம் வியப்ப எழுந்து, வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன்விளங்கும் வள்ளலார் கயிலையிலிருந்த கோலம் கண்டு தொழுது பாடியருளியன இது முதல் மூன்று திருப்பதிகங்கள். கயிலைமலையானையே போற்றியருளியதால் இவைமூன்றும் கயிலைத் திருப்பதிகங்களே ஆயின (திருநாவுக் - பு. 381). நாயனர் பொய்கையில் மூழ்கியதைக் குறிக்குமிடத்தில் (370) சேக்கிழார், "வேற்று மாகிவிண் ணாகிநின் ருர்மொழி விரும்பி" என்றது, விண்ணிலே மறைந்து அருள் புரிந்த நிலையை நினைந்து மூழ்கி, அந்நினைவோடே ஐயாற்றில் எழுந்து தாண்டகம் தொடங்கியருளினர் என்றற்கு என்க.

Koviloor Digital Library

போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

551 வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

இத்திருப்பதிகம் போற்றி (வணக்கம்) கூறி அருளியது. இதுபோலும் திருப்பதிகங்கள் வேறும் சில உளவாயினும் அகத்தியர் திரட்டினுள், அருச்சனைக்கு இத்திருப்பதிகமே சிறந்தெடுத்து வைக்கப்பட்டது. அடுத்துவருகின்ற இரு திருப்பதிகங்களும் போற்றித் திருப்பதிகங்களேயாகும்.

551. 'போற்றி' என்பதுபற்றி ஐந்தாம் திருப்பதிகக் குறிப்பின் தொடக்கத்தில் சில கூறப்பட்டன. 'வேறு' என்னும் உரிச்சொல் 'வேற்று' எனத் திரிந்து பெயராய் நின்று, வேறாய பொருள்களை யுணர்த்திற்று. "விண்" எனப் பின்னர் வருகின்றமையின், "வேற்றாகி" என்றருளிச்செய்தார்; 'விண்ணாகியும் பிற நான்கு பூதங்களாகியும் நின்றவனே' என்பது பொருள். "நின்றாய்" முதலியன, 'நின்றான்' முதலிய பெயர்கள் விளியேற்று நின்றனவாம். அவற்றின் பின்னெல்லாம், 'நினக்கு' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'என்னை மீளாமே ஆளாக் கொண்டாய்" என்க. ஊற்று, இன்ப ஊற்று. உள்ளே ஒளித்தாய்-புறக்கண்ணிற்குப் புலனாகாது உயிரறிவினுள் நின்றவனே; "प्रत्यङ् जनास्तिष्ठति" என, சுவேதாசுவதரமும் கூறிற்று. ஓவாத சத்தம் - இடையறாத ஓசை. ஒலி - எழுத்து. எழுத்துக்களைப் புலப்படுத்தும் ஓசை இடையறாது நிகழ்ந்தவழியே பொருள்புலப்படுமாகலின், "ஓவாத சத்தத்து ஒலியே" என்றருளிச்செய்தார் இனி, "சத்தத்து" என்னும் அத்து வேண்டாவழிச் சாரியை எனக்கொண்டு, 'அழியாத சத்தமாகிய ஒலியே (எழுத்தே)' என்றுரைத்தலுமாம். ஓவாமை - அழியாமை. வடமொழியாளர்,

Koviloor Digital Library

552 பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதேன் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

எழுத்தினை, 'அட்சரம்' (அழிவில்லாதது) என்பர். எழுத்தின் இயல்பு, "ஓசை யொலியெலாம்" என்னும் திருத்தாண்டகக் குறிப்பிற் கூறப்பட்டது. (பக் - 278.) ஆற்று - ஆற்றல் (சத்தி); முதனிலைத்தொழிற்பெயர்; அங்கே - விண் முதலிய பூதங்களிலும், உள்ளத்திலும், ஒளியிலும், ஆறங்க நால்வேதங்களிலும் என்க. இது, "நின்றவாறு" முதலியவற்றை விளக்கியருளியது. "காற்றாகி" என்பதில், "ஆகி" என்பது, 'போன்று' எனப் பொருள் தந்தது. இஃது அங்கே அமர்ந்தமையை உவமையின் வைத்து விளக்கியவாறு.

552. பிச்சாடல் - பித்தாடல்; வேண்டியவாறே நடித்தல் (பலவகை நடனங்களையும் செய்தல்). உகந்தாய் - விரும்பினவனே. 'பேயோடு பிச்சாடல் உகந்தாய்' என்க. பிச்சாடல் பேயோடு உகந்தமைபோல, பிறவியறுத்தலும் சிவபிரானுக்கே உரிய சிறப்பியல்பாதல் அறிக. வைச்சு (வைத்து) - உயிர்களைப் பலவகையான பிறப்புக்களில் நிறுத்தி. ஆடல் - அவை செயற்படுதலை. நன்று மகிழ்ந்தாய் - மிகவும் மகிழ்ச்சியோடு காண்கின்றவனே; 'மகிழ்ச்சி' என்றது, அறியாமை நோக்கி நகைத்தலை. மருவி-அணுகி. பொய்ச்சார் (பொய்த்தார்) - நின்னிடத்துக் கொண்ட அன்பினை விட்டவர். சிந்தையில் மருவினமைக்கும், மருவி நீங்காது நின்றமைக்கும் வேறு வேறாக வணக்கங் கூறியருளினர் என்க.

Koviloor Digital Library

553 மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

554 வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

553. மருவார் - பொருந்தாதார்; பகைவர். உருவாகி - உருவமுடையவனாய் நின்று; இனி, 'ஆக' என்பது, 'ஆகி' எனத் திரிந்து நின்றது எனலுமாம். உள் ஆவி - உடம்பினுள்ளே யிருக்கும் உயிர்; உள்ளிருத்தல், நுண்ணிதாய் நிறைந்து நிற்றல். வாங்கி ஒளித்தாய் - பிரித்தெடுத்து மறைத்தாய்; என்றது, உயிரை உடம்பின்வழிபட்டுச் செல்லாது நீக்கி, நின்வழிப்படுத்தினாய் என்றபடி. திரு - இன்பம். தேசம் - உலகம். ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு (திருமுறை. 5 - 91. 3.) ஞாலத்தாரும் தொழுதலின், "தேசம், பரவப் படுவாய்" என்றருளிச்செய்தார். கருவாகி - கருவாய்க்கப் பெற்று; நீரை உண்டு.

554. மருந்து - அமுதம். ஊனம் - குறை. உடலே - திருமேனியை உடையவனே; இறைவனது திருமேனி உயிர்களின் குறையைநீக்கும் அருளுருவமாதல், "வேகியா னாற்போல் செய்தவினையினை வீட்டல் ஓரார்", "மூன்றும் நம்தம் - கருமேனி கழிக்கவந்த கருணையின்வடிவு காணே" என்பவற்றால் (சிவஞான சித்தி. சூ. 1 - 50, 55.) விளங்கும். அழலாய் நிமிர்ந்தது, அயன் மால்கட்கு. "ஓங்கி நிமிர்ந்தாய்" என்பது ஒருபொருட்

Koviloor Digital Library

555 ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதேன் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

556 சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதேன் சிந்தை புகுந்தாய் போற்றி

பன்மொழி. தேனதனை என்பது தேனத்தை என மருவிநின்றது. அது, பகுதிப்பொருள் விகுதி. வார்த்த - வடித்த. தெளிவே. தெளிவு போன்றவனே. "வார்த்த" என்னும் பெயரெச்சம், "தெளிவு" என்னும் செயப்படுபொருட் பெயர் கொண்டது. "தேவர்க்கும்" என்னும் உம்மை சிறப்பு. கானம் - காடு. ஈமக் காடு.

555. ஊராகி - பல ஊர்கள் வடிவமாகி. பேர் (பெயர்) - புகழ். 'புகழ் வடிவில் எங்கும் பரவினுய்' என்றருளியதாம்; நீராவி - நீரினின்றும் வெப்பத்தால் எழுகின்ற ஆவி. 'நீரின் கண் ஆவியாயும் நிழலாயும் உள்ளவனே' என்க. நீரினுள் நிழலாவது, நீர்வாழ் உயிர் முதலியவற்றின் நிழல்; இது பிரிந்து தோன்ருது நீரினுள் கலந்தே நிற்பது. "நீர் நிழல் போல் - இல்லா - அருவாகி நின்ருனை" என்னும் சிவஞான போத (சூ. 8. அதி. 2.) வெண்பாவையும், அதன் உரையையும் நோக்குக. நேர்வார் - நிகராவார். காராகி நின்ற - கருமை நிறம் பெற்று நின்ற.

556. சில் உருவாய்ச் சென்று - முதற்கண் சிலவேறு தேவர்களாய் வேறு வேறு நின்று அருளைவழங்கி நடந்து. திரண்டாய்' பின்னர் அத்துணைத் தேவர்களும் நீ ஒருவனேயாய் ஒன்றி நின்றவனே. 'அத்தேவர்களாலும் அறியப்படாத தேவனே -

Koviloor Digital Library

பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

557 பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி

என்க. சிவபிரான் இவ்வாறு நிற்கும் நிலையை, "அறிவினால் மிக்க அறுவகைச் சமயம் அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து" (திருமுறை. 7. 55. 9.) எனச் சுந்தரமூர்த்திநாயனாரும், "மாற்ற மாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம் - தேற்றனே தேற்றத் தெளிவே" (திருவா. சிவபு. 81, 82.) என ஆளுடைய அடிகளும் அருளிச்செய்தமை காண்க.

புல் உயிர் - புல்லாகிய உயிர்; இதுவே உயிர்களுட் கடைப்பட்டதாதலை, "புல்லும் மரனும் ஓரறி வினவே" (தொல். பொருள் - 583.) எனவும், "புல்லாகிப் பூடாய்" (திருவா. சிவபு - 26) எனவும் வந்தனவற்றால் அறிக. பூட்சி - பூண (மேற்கொள்ள)ப்படுவது; வாழ்க்கை; அது, தனு கரண புவன போகங்களையும், இன்பத் துன்பங்களையும், யான் எனது என்பன வற்றையும் கொண்டு நிற்றல். "பார்" என்றது, 'உலகம்' என்னும் பொருளது. அதனைப்பற்றுதலும், விடாமையும் அருள் காரணமாக என்க. கல் உயிர் - கல்லின்கண் உள்ள உயிர்; கல்லின் கண்ணும் உயிர்கள் உள்ளன என்பது, தேரை காணப் படுதல்பற்றி அறியப்படும்; எனவே, "கல்லாய் மனிதராய்" (திருவா. சிவபு - 28.) என்பதிலும், 'கல்' என்னும் பெயர் அதன்கண் உள்ள உயிர்மேல்நின்றமை பெறப்படும். "கனலே" என்றது, 'ஒளிப் பொருளே' என்றவாறு. இவ்வாறு அருளிச் செய்தது, கல்லினுள்ளும் கதிரவன் ஒளி, ஊடு சென்று ஆங்கு நுண்ணுயிர்களைக் காத்தல்பற்றி யென்க.

557. பண், ஏழிசைகளது கூட்டத்தானே பிறத்தலின், பண் பருப்பொருளும், இசை நுண்பொருளுமாம்; அதனால், "பண்ணின் இசையாகி நின்றாய்" என்றருளிச்செய்தார்.

Koviloor Digital Library

விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

558 இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

பாவிப்பார் - நினைப்பார் - எண், அளவை ; 'எழுத்துச் சொல்லும்' என உம்மையை மாறிக் கூட்டுக. எழுத்தும் சொல்லும் மொழியின் பகுதிகள். விண் முதலிய மூன்றனைக் கூறவே, ஏனைய இரண்டுங் கொள்ளப்படும். மேலவர் - தேவர். கண்ணினிடத்து உயிராய் நின்று காட்சியை விளைப்பது கருமணியே யாதலின், "கண்ணின் மணியாகி நின்றாய்" என்றருளினார்.

558. இமைத்தல், உயிர்த்தல் முதலியன உடம்பொடு கூடியே விளங்குவதாகிய உயிரின் செயல்களாதலின், 'இமையாது உயிராது இருந்தாய்' என்றது, 'தானே விளங்கும் இயல்புடைய கடவுளே' என்றவாறும். "ஏழ்" என்றது, 'பல' என்றவாறு. அமையா - உடம்பொடு பொருந்தாது அதற்குப் பகையாய் நிற்கும். ஆர்ந்தாய் - உண்டவனே. ஆதி புராணன் - முதற் பழையோன் ; தன்னிற் பழையோர் இல்லாதவன் என்றவாறு ; 'முதல்வனும் பழையவனுமாய் நின்றவனே' என்றுரைத்தலும் ஆம். கமை - பொறுமை ; அருள் ; கனல் போலும் திருமேனியுடைமைபற்றி, 'கனலே' என்பார், 'அருளுடையதொரு கனலே' என வியந்தருளிச் செய்தார்.

Koviloor Digital Library

559 மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9

560 நெடிய விசும்போடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
யங்கோன் றறியாமை நின்றாய் போற்றி

559. மூவாய் - மூப்படையாதவனே ; என்றது, 'காலத்தால் தாக்குண்ணாதவன்' என்றதாம். பின்தோன்றுதலிற் பிரித்தலின், "முன்னமே" என்னும் ஏகாரம் பிரிநிலை. 'எல்லாப் பொருட்கும் முன்னமே' என்க. 'முளைத்துத் தோன்றினாய்' என மாற்றி, 'உளனாய் விளங்கினாய்' என்றுரைக்க. இயற்கையாகவே விளங்குபவனை, செயற்கையாக முளைத்தவன்போல அருளியது பான்மை வழக்கு. "தே" என்பது 'தெய்வங்கள்' எனவும், "ஆதி தேவர்" என்பது காரணக்கடவுளர் எனவும் பொருள் தரும். "தே ஆதிதேவர்" என்றது செவ்வெண். 'எங்கும் சென்று ஏறிப் பரந்தாய்' என்க. "சென்று" என்றதும், செல்லாததனைச் சென்றதுபோலக் கூறியதாம். ஆவா, வியப்பிடைச் சொல். 'அடியேனுக்கு எல்லாப் பொருளுமாய் இருப்பவனே ; 'ஆவாய்' என்பது சொல்லெச்சம். 'ஆவாய் அடியேனுக்கு எல்லாம்' என்பதே பாடம் எனலுமாம். நாயனார்க்கு இறைவன் எல்லாம் ஆயினமையை, பின்வரும் 'அப்பன் நீ அம்மை நீ" என்னும் திருத்தாண்டகத்தால் அறிக. நினக்கு அலந்தேனாகிய எனது வணக்கம்' என்க. நலிய - வருத்த. அலந்தேன் - வருந்தினேன் ; "காவாய்" என்றதனை இறுதிக்கண் வைத்துரைக்க.

560. 'விசும்பொடு கூடிய கண்' என்க. கண் - இடம் ; எப்பொருட்கும் இடந்தந்து நிற்றலே விசும்பின் செயலாகும். நீள அகலம் உடையாய் - எப்பொருளின் நீள அகலங்களையும் நின்னுள் அடக்கியுள்ளவனே. இகலி - (தம்முள்) மாறுபட்டு ;

Koviloor Digital Library

கோடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என் சிந்தை கோண்டாய் போற்றி
கடிய உருமோடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

561 உண்ணு துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணு இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணு ரிசையின்சோற் கேட்டாய் போற்றி
பண்டேயேன் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணு யுலகுக்கு நின்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்

தேடியவர் அரியும் அயனும் என்பது நன்கறியப்பட்டதாகலின் அவரைக் கூருராயினர். "இகலிப் போற்றி" என்பதன் பின்னுள்ள, "போற்றி" என்பதனை, "நின்ருய்" என்பதன்பின் வைத்துரைக்க. 'இகலி போற்றி' என்பதும் பாடம். ஒன்று - சிறிது; ஒன்றும் என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. அறியாமை - அறியாதபடி. வன் கூற்றம் - வலிய இயமன். உரும் - இடி.

561. "உண்ணுது உறங்காது இருந்தாய்" என்பதற்கு, மேல், "இமையா துயிரா திருந்தாய்" (558.) என்றதற்கு உரைத்தவாறு உரைக்க. "ஓதாது உணர்ந்தாய்" என்றது, 'இயற்கை உணர்வுடையவனே' என்றவாறு. எண்ணு - மதியாத. "இலங்கைகோன் தன்னை" என்பதன் பின்னுள்ள போற்றி என்பதனை, "ஈசா" என்பதன்பின் வைத்துரைக்க. இறை வைத்து - சிறிது ஊன்றி. 'பின் உகந்தாய்' என்க. பண் ஆர் இசை இன் சொல் - பண்ணுய் நிறைந்த இசையொடு கூடிய இனிய சொல். 'உகந்தமைக்குக் காரணம் இது' என்பார், இதனை அருளிச்செய்தார். உலகிற்குக் கண்ணுய் நிற்றலாவது, அது நடத்தற்கு நிமித்தமாய் நிற்றல்.

Koviloor Digital Library

56. திருக்கயிலாயம்

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றை முன் திருப்பதிகத்திற் காண்க.

போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

562 பொறையுடைய பூமிநீ ராணாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்கா தென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

563 முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 2

562. பொறை - பொறுத்தல் ; தாங்குதல். நிறை - (நல் வழியில்) நிறுத்தப்படுதல் ; " நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை " (கலி - 133.) எனலுமாம். இங்கு மறையாவது, இறைவனது அருளனுபவம் ; பிறராவார், அதனை உணர்ந்து போற்றமாட்டாதார். மறை - மறைத்துச் சொல்லப்படும் பொருள்கள் ; மறைத்தல். உணரமாட்டாதார்க்கு என்க ; இனி, 'மந்திரம்' என்றும் ஆம். கறை - நஞ்சு.

563. முன்பு - எல்லாவற்றிற்கு முன்னுள்ள பொருள். முதல் - எல்லாப் பொருட்கும் அடிநிலை. மூவாத - மூப்படையாத; என்றும் ஒரு பெற்றியாய் உள்ள. அன்பாகி - அன்பர்களாய்.

Koviloor Digital Library

564 மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 3

அணியாய் - அணிமையில் உள்ளவனே ; என்றது, 'அவர்கள் வேண்டுமிடத்து வெளிநிற்பவனே' என்றவாறு. 'எங்கும் (உடம்பெங்கும்) என்பாக' என்க. கண் பாவி நின்ற - கண்ணிற் பரவியுள்ள. கண், தீயின் கூறே ஆகலின், "கண் பாவி நின்ற கனலே" என்றருளிச்செய்தார். எனவே, 'கண் என்னும் பொறியாய் நிற்பவனே' என்றதாம் ; இது, கனல் உருவமாய் நிற்பதனை நயந்தோன்ற அருளிச் செய்தவாறு.

564. "மாலை எழுந்த மதி, காலை முளைத்த கதிர்" என அவற்றது இயல்புகளை விதந்தோதியருளியது, உயிர்கட்கு அவை பயன்பட வைத்த அருட்டிறத்தினை நினைந்து. "அறுப் பாய்" என எதிர்காலத்தால் அருளிச் செய்தமையின், "மேலை வினைகள்" எனப்பட்டன, இனித் தோன்றும் வினைகளேயாயின ; இவற்றை 'ஆகாமியம்' என்ப. மேல் ஆடு - (கங்கைபோலக் கரந்து நில்லாது) மேல் நின்று விளங்கும். ஆலைக் கரும்பு - ஆலையில் இடப்பட்ட கரும்பு. அன்பினால் ஆரப்படும் இன்பம் (பெரிய. பு. தடுத். 196.) ஆதலை, "அடியார்கட்கு ஆரமுதம் ஆனாய்" என்றருளிச்செய்தார். "ஆரமுதம்" என்பது, 'அரிய அமுதம்' என்றலேயன்றி, 'ஆரப்படும் (நிறைய உண்ணப் படும்) அமுதம்' என்றும் ஆம்.

Koviloor Digital Library

565 உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரின் திகழ்கின்ற சோதீ போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

565. "உடலின் வினைகள்" என்பது, 'முருகனது குறிஞ்சி' என்பது போன்றது. 'உடம்பிற்கு உரிய வினைகள்' என்பது பொருள். இதனை, 'பிராரத்தம்' என்ப; அவற்றை அறுத்தலாவது, அவை உயிரைத் தாக்கி விருப்பு வெறுப்புக்களைத் தோற்றுவியாது, உடலூழாய்க் கழியும்படி, தான் முன்னின்றருளுதலும், அவை தம்மையும் மெலியவாய் வந்து பொருந்தச் செய்தலும், வேண்டுமிடத்து, அவற்றை அடியோடு ஆற்றல் கெடச் செய்தலுமாம். அவற்றது ஆற்றலைக் கெடுத்தருளினமையை, நாயனார்க்கு அமணர் தந்த நஞ்சு யாதும் செய்யாதொழிந்தமை முதலியவற்றின் அறிக. எரி வீசும் - எரியைப் போல ஒளிவிடுகின்ற. "வீசும்", வீசுதற்கு இடமாய் உள்ள ; 'ஏந்தியுள்ள' என்றுமாம். படரும் - விரிந்த. பல்கணம், பூதகணங்களேயன்றி, பதினெண்கணங்களும் என்க. கணக் கூத்து, கணங்களின் இடையிற் செய்யப்படும் கூத்து. கூத்தப்பிரான் - நடராசன். சுடரின் - விளக்குப்போல. 'அவ்வாறு (விளக்குப் போலத்) தோன்றி' என எடுத்துக்கொண்டுரைக்க. இறைவன் உள்ளமாகிய வெளியில் சுடர் போலத் தோன்றுதலை உணர்ந்து வழிபடும் முறையை, 'தகரவித்தை' என, உபநிடதம் கூறுதலைமேலே (பக். 128.) குறித்தாம். கடலில் ஒளி ஆய - கடலினுள் ஒளிதலை (மறைந்திருத்தலை) உடைய ; என்றது, 'ஆழ்ந்தும் அகன்றும் நுணுகியுணரும் பேரறிவாளர்க்கே கிடைப்பவன்' என்றபடி.

Koviloor Digital Library

566 மைசேர்ந்த கண்ட மிடற்ருய் போற்றி
மாலுக்கும் ஓராழி யீந்தாய் போற்றி
போய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதேன் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ ருடீ போற்றி
மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசே ரனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

567 ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட் காரமுதாய் நின்ருய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி
நீங்காதேன் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கோள்ளுங் கிழமையே ழானுய் போற்றி
காறேறு கண்ட மிடற்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

566. மை - கருநிறம். பொய், ஐய விபரீதங்கள். பால் வெண்ணீறு - பால்போலும் வெள்ளிய திருநீறு. மிக்கார் - உயர்ந்தோர். "விளக்கு" என்றது, பொருள் சேர்ந்த புகழுடைமை பற்றி. கைசேர் அனல் ஏந்தி ஆடீ - கையின்கண் பொருந்தியுள்ள நெருப்பினை விடாது ஏந்தி நின்றே ஆடுகின்றவனே.

567. முடி, சடைமுடி. 'கூரேறு, காரேறு' என்பன, எதுகை நோக்கித் திரிந்தன. "கூறேறு" என்பதற்கு, 'கூறு செய்தல் பொருந்திய' என்றுரைத்தலுமாம். "கூரேறு": "காரேறு" என்றே பாடம் ஓதுவாரும் உளர். கொள்ளும் கிழமை - கணிநூல் வழியாற் கொள்ளப்படும் கிழமைகள். 'ஏழும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. "கிழமை ஏழானாய்" என்றதனால், கோளும் நாளும் அடியாரை வந்து நலியாமை பெறப்பட்டது. காறேறு கண்ட - கருமை பொருந்துதல் காணப்பட்ட. "கண்ட மிடறு" ஒருபொருட் பன்மொழி என்றலுமாம்.

Koviloor Digital Library

568 அண்டமே ழன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனுய் நின்ருய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பாரோர்விண் ணேத்தப் படுவாய் போற்றி
தோண்டர் பரவு மிடத்தாய் போற்றி
தொழில்நோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

568. 'அன்றே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொக்கது; அன்றே - அநாதியே. "ஆதிபுராணன்" என்பதற்கு முன்னைத் திருப்பதிகத்துள் உரைக்கப்பட்டது. பண்டை வினைகள் - பல பிறவிகளிற் செய்த வினைகள்; இவற்றை, 'சஞ்சிதம்' என்ப. "பாரோர்" என்றவாறே, 'விண்ணோர்' என்க. பரவும் இடம், திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி; அவைகளை, 'கும்ப விம்ப தம்பம் முதலாயின' என்பர். கும்பம் - குடம் (கலசம்). விம்பம் - விக்கிரகம். தம்பம் - இலிங்கம். முதலாயின, வேள்வித் தீ திருமுறை முதலியன. 'இவ்வாதாரங்களில் வைத்து வழிபடும் அடியவர்கட்கு, அவரது அன்பு நோக்கி அவ்விடங்களில் தோன்றி நிற்பவன், என்றவாறு. 'தொண்டர் பரவும் மிடற்ருய்' என்பது பாடம் அன்று என்பதனை, பின்வருகின்ற, "தொழில் நோக்கி ஆளும் சுடர்" என்றதனுலும் அறிந்துகொள்க. "தொழில்" என்றது, வழிபாட்டினை; சைவாகமங்களும் இதனை, 'கிரியை' எனக் கூறும். இனி, "தொழில்" என்றது அதன் அளவினையே. 'அதன் அளவு, பொருளும் காலமும் முதலிய புறமாயவை பற்றி' ஆகாது, அன்பாகிய அகமாயது பற்றியே ஆம்' என்பது, "பொக்கம் மிக்கவர் பூவும்நீருங் கண்டு - நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே" (திருமுறை. 5. 90. 9.) என்றற் ருெடக்கத்துத் திருமொழிகளான் இனிது விளங்கிக் கிடந்தது. "கண்டம் கறுக்கவும் வல்லாய்" என்றது, 'நஞ்சினை உண்ணவும், அதனைக் கண்டத்திற்ருனே நிறுத்தவும் வல்லவனே' என்றபடி.

Koviloor Digital Library

569 பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகிநினை வார்தம் முள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

570 செய்யமலர் மேலான் கண்ணன் போற்றி
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

569. ஆறே - ஆறுபோன்றவனே; இஃது இறைவனது வரம்பிலின்பத்தினை வியந்தருளிச் செய்தவாறு. "ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்" என. திருமறைக்காட்டுத் திருப்பதிகத்திலும் (236) அருளிச்செய்தார். "பேராநோய் பேர விடுப்பாய்" என்பதற்கு, "தீராநோய் தீர்த்தருள வல்லான்" (548.) என்பதற்கு உரைத்தது உரைக்க. ஊனம் - குறை; அது, பாசங்களின் வழிப்பட்டு, அவை அலைத்தவாறே அலைப்புண்டல். இதனை, "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து" என்றருளிச்செய்தார். மெய்கண்டதேவநாயனார் (சிவஞானபோ-சூ. 8.) அருகி - அரிதிற் கிடைக்கப்பட்டு. "யாரும் இகழப் படாதாய்" என்றது, 'உண்மை உணர்ந்தோர் யாரும்' என்னும் கருத்துப்பற்றி யாதலின், 'புத்தர் சமணர் முதலாயினோரால் இகழப்படுபவனன்றோ' என்னும் தடை நிகழாமை யுணர்க. இங்ஙனமாகவே, 'உண்மையாவது நின்னையன்றி இல்லை' என்றவாறும். கருகுதற்கு, 'மேகம்' என்னும் வினைமுதல் வருவிக்க. பொழிந்து - பொழியப்பட்டு; 'பொழிய' எனத் திரிப்பினுமாம்.

570. செய்ய - செந்நிறத்ததாகிய. கண்ணன் - கரியவன்; திருமால். முதற்கண் நின்ற, "போற்றி" என்பதனை, இரண்டாவதுடன் கூட்டி அடுக்காக்கி யுரைக்க. அயனும் மாலும் தேடியது

Koviloor Digital Library

571 மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றி
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

திருச்சிற்றம்பலம்

அகங்கரித்தன்றிப் போற்றியன்று ஆதலின், "போற்றித் தேடி" என்பது பாடமன்மை அறிக. 'பொய்யாப் பொறை' என இயையும். பொறை - அருள். "பொருளாக" என்புழி, 'நினைந்து' என்பது வருவிக்க. 'என்னையும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'என்னையும் ஒரு பொருளாக நினைந்து ஆட்கொண்டாய்' என வுரைக்க. "மெய்யாக உகந்தாய்" என்றது, 'பிறிது காரணம் இன்றி அவற்றது தூய்மை கருதியே விரும்பினாய்' என்றதாம். குணம் - அருட் குணம்; அவை தன்வயத்தனாதல் முதலிய எட்டுமாம். கை - தும்பிக்கை.

571. மேல் வைத்த - மேலிடத்து வைக்கப்பட்ட. மேல் ஆடு - வானத்தில் திரிகின்ற. சீலத்தான் - நின்னை வழிபடுபவன்; இக் குறிப்புவினைப்பெயர் எதிர்காலம்பற்றியது. "மன்னன்" என்பதன் பின்னுள்ள "போற்றி" என்பதனை அடுத்த தொடரிற் கூட்டுக. ஈண்டும், 'போற்றிச் சிலையெடுக்க' என்பது பாடம் அன்று. சிலை - மலை. கோலம் - அழகு. அதிற் குறை வில்லாதவன், (நிரம்ப உடையவன்) மன்மதன். கொடிது ஆக - வன்கண்மை தோன்ற; என்றது, அறியாதார் 'வன்கண்மை யாகக் கருத' என்றவாறு. 'காலதனால்' என்பது, 'காலத் தால்' என மருவிற்று. 'அது' பகுதிப்பொருள் விகுதி. "காலனையும்" என்னும் உம்மை ஒருவராலும் காயப்படாமை உணர்த்திநின்ற சிறப்பும்மை. "கூற்றங் குதித்தலுங் கைகூடும்" என்றார், திருவள்ளுவநாயனாரும் (குறள் - 299,)

Koviloor Digital Library

57. திருக்கயிலாயம்

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றை 55ஆம் திருப்பதிக வரலாற்றிற் காண்க.

போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

572 பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை யறியாமை நின்ருய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

572. "பாட்டான தொடை" என்றது உருவகம். "நல்ல தொடை" என்றதனுல், மலர் முதலியவற்ருல் செய்யும் வழிபாட்டினும், பாட்டாற் பரவுதலே இறைவற்குப் பேருவகை செய்யும் என்பது பெறப்பட்டது; "பெருகிய சிறப்பின் மிக்க - அர்ச்சனை பாட்டே யாகும்" (பெரிய புரா. தடுத்தாட். 70.) என, இறைவன் தானே அருளிச்செய்தமை கூறப்பட்டது காண்க. இது பற்றியே, 'பன்மாலைத் திரளிருக்கப்பாமாலைக் கேபட்சம் பரமற்கு" என்றருளினர், தாயுமான அடிகள் (பன்மாலை.1.) பரிசு- உண்மைநிலை சூட்டு-கண்ணி. "தூமாலை" யாவது கொன்றை மாலை என்பது ஆற்றலாற் கொள்ளக்கிடந்தது; 'அதனேடு மத்தம் அணிந்தாய்' என்க. மத்தம் - ஊமத்தை. ஆட்டு - ஆட்டப்படும் பொருள். 'ஆட்டாக' என, ஆக்கம் வருவித்துரைக்க. ஆனது - பசுவினது. 'ஆட்டான அஞ்சும்" எனவும், பாடம் ஓதுவர். அடங்கார் - பகைவர்; "அடங்காதார் என்றும் அடங்கார்" (நாலடி - 116.) என்பதிற்போல, 'அடங்கார், அறிவிலார்' என்றலுமாம். "காட்டானை" என்றது, இனம் பற்றி என்க.

Koviloor Digital Library

573 அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர்மெய் பூசுந் தலைவா போற்றி
எதிரா வுலகம் அமைப்பாய் போற்றி
யென்றும்மீ ளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

574 செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வ முடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாய வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

573. 'அதிராமை, மீளாமை' என்னும் வினையெச்ச மறைகளின் ஈறுகள் கெட்டன. "மீளா அருள்" என்பதற்கு, மீளாமைக்கு ஏதுவான அருள் என்று உரைப்பினும் அமையும், அதிர்த்தல் - நடுங்கச்செய்தல். சதுரா - திறனுடையவனே. சதுரக்குழை - சிறந்து விளங்குங்குழை. எதிரா - இணையில்லாத. இணையில்லாத உலகமாவது, பரமுத்திநிலை; அஃது உணர்த்த வாராமையின், உலகமாக அருளிச்செய்தார்; "எதிரா உலகம்" என்றது, அப்பொருளதாதலை, "என்றும் மீளா அருள் செய்வாய்" எனப் பின்னர் அருளிச்செய்த குறிப்பானும் உணர்க; "அமைப்பாய்" என்றது, 'வழங்குவாய்" என்றவாறு. "கதிரார் கதிர்" என்பதில் பின்னுள்ள கதிர், 'ஞாயிறு' என்னும் பொருட்டாய், வாளா பெயராய் நின்றது. "கண்" என்றது, 'கண்போலச் சிறந்தவன்' என்னும் பொருளதாய், இன்றியமையாமை உணர்த்தி, ஞாயிற்றின் ஒளிக்கும் முதல் ஒளியாய் நிற்றலை விளக்கிற்று.

574. 'செம்மை, கருமை, வெண்மை' என்னும் மூன்றுமே முதல் நிறங்களாதல் பற்றியும் அவை முறையே இராசததாமத சாத்துவிக குணங்களைக் குறிக்கும் குறிப்புக்களாதல் பற்றியும்,

Koviloor Digital Library

'எல்லாப் பொருளுமாயினவன்' என்பார், அவற்றை வகுத்தோதியருளினர். செல்லாத - நீங்காத. நீங்காத செல்வமாவன தன்வயத்தனுதல் முதலிய குணங்கள். ஐ - வியப்பு; தலைமையுமாம். வண்ணம் - தன்மை. ஆகாயத்தின் தன்மையாவது, அருவாதலும், எல்லாப் பொருளையும் தன்னுள் அடக்கி நிற்றலுமாம். இவ்வாருதல் பற்றியே இறைவனது குணத்தினை, 'சிதாகாசம், அருள்வெளி' என்பன போன்ற சொற்களாற் குறிப்பர். இப்பெற்றி நோக்கியே, 'விசும்புமெய்யாக' (நற்றிணை - கடவுள் வாழ்த்து.) என, இறைவற்கு ஆகாயத்தை உடம்பாகக் கூறினர், சான்றோர். आकाश शरीरम्ब्रह्म எனத் தைத்திரீய உபநிடதமும் கூறும். வெய்யாய்-வெம்மை உடையவனே. தணியாய் - தண்மை யுடையவனே. அண்மை, 'அணிமை' எனப்படுதல்போல, தண்மை, 'தணிமை' எனப்பட்டது; "வெய்யாய் தணியாய் இயமான னும்விமலா" என, ஆளுடைய அடிகளும் அருளினர். (திருவா. சிவபு - 36.) அணியாய் - அண்மையில் உள்ளவனே. இங்ஙனம் அருளியவாற்ருல் அணிமையின் மறுதலைபற்றி 'சேயாய்' என்பதுங்கொள்ளப்படும். "செய்யாய் கரியாய்" என்றது முதலிய பலவற்ருல், ஒன்றொடொன்று ஒவ்வாப் பொருள்கள் பலவும் தான் ஒருவனேயாய் நிற்கும் அதிசயநிலை அருளிச்செய்யப்பட்டது; "செல்லாத செல்வம், வேளாதவேள்வி" என்றருளியனவும் அன்ன. வேளாத வேள்வி - ஓம்பாதே நிலைபெற்றிருக்கும் வேள்வி; என்றது, அருட்சத்தியை. அது, சிவபிரானைப் பயன்கருதியும் கருதாதும் வழிபடுவோர்க்குத் தூய்தான உலகப் பயனையும், வீடுபேற்றையும் தரும் என்பதனை, தூய்தல்லாத உலகப் பயனைத்தரும் வேள்விகளிலே மனஞ்செல்வார்க்கு அறிவுறுத்தற்பொருட்டு, வேள்வியாக அருளிச்செய்தார். தூய்தன்மை மயக்கஞ் செய்தலும், தூய்மை அது செய்யாமையுமாம். இன்னும் தேவர்க்குக் கொடுக்கும் அவியுணவுகளை வேள்வித் தீ வழியாகக் கொடுத்தல்போல, சிவபிரானுக்கு நிவேதிக்கும் நிவேதனங்கள் அனைத்தும் அவனது அருட்சத்தி வழியாகவே நிவேதிக்கப்படுதலின், அதனை அவ்வாறருளிச்செய்தற்கு இயைபுண்மை யறிக. இது பற்றியே, சிவபிரானுக்கு வேள்வித் தீ வழியாகக் கொடுக்குமிடத்தும் சிவாக்கினி வழியாகவே கொடுத்தல் சிவநெறி முறைமையாயிற்று. இதனுனே, சைவவேள்வி, பூதாக்கினியையே வளர்க்கும் வைதிகவேள்விபோலாது, சிவாக்கினியை வளர்க்கும் வேள்வியாத லறிக. சிவாக்கினியைப் பிறப்பிக்கும் முறை,

Koviloor Digital Library

575 ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிது முடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

அதனை வளர்க்கும் முறை முதலியவெல்லாம், பிரமாணங்கள் முதலியவற்றினன்றிச் சைவாகமங்களிலே அறியப்படுவனவாம். 'கையின்கண்' என உருபு விரிக்க. "ஆர்" இரண்டனுள், முன்னது மிகுதியையும், பின்னது பொருந்துதலையும் குறித்தன. 'ஆரழல்' என்பதே பாடம் என்றலுமாம். விடங்கன் - வீரம் உடையவன்.

575. "அமுதெலாம்" எனப் பன்மை கூறியவதனால், "அமுது" என்றதற்கு, 'இன்பம்' எனப் பொருளுரைத்துக் கொள்க. சூட்சி - வஞ்சனை. 'சூழ்ச்சி' என்பது, மருவி நின்றது. மாட்சி - பெருமை. காட்சி - அறிதல். சிவபிரானது புகழ்ப்பாடல்களாவன யாவற்றுள்ளும் அவனது எண்குணங்கள் ஏற்றபெற்றியாற் பெறப்படுமாயினும், இத்திருத்தாண்டகத்துள், அவனது எண்குணங்களும் பெறப்படும். அஃதாமாறு காட்டுதும் : ஆட்சியால் தன்வயமும், அமுதினால் வரம்பிலின்பமும், சூட்சி சிறிதுமின்மையால் இயல்பாகவே பாசங்களின் நீங்குதலும், நஞ்சமுண்டமையால் பேரருளும், பெரிதாய மாட்சியால் முடிவிலாற்றலும், அடியவரது சிந்தையினின்று அறிவித்தலால் இயற்கையுணர்வும், காட்சிக் கருமையால் தூய உடம்பும், கயிலைமலையிருக்கையால் முற்றுணர்வும் பெறப்படுதலை நுண்ணுணர்வாற் கண்டுகொள்க. மலைமேல் நின்றார்க்கு எல்லாப் பொருளும் தோன்றுதலால், கயிலைமலை யிருக்கையால் முற்றுணர்வுடைமை பெறப்படும் என்க. எனவே, இஃதோர் அரும்பெறற் திருப்பாடலாத லுணர்க.

Koviloor Digital Library

576 முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
யேழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

576. 'முனியாய்' என்பது, "முன்னியாய்" என விரித்தல் பெற்றது; பனியாய் வெங்கதிர் பாய்படர் புன்சடை - முனியாய்" (திருமுறை. 5 - 96. 3,) எனத் திருக்குறுந்தொகையில் அருளிச் செய்தமை காண்க; 'தவக்கோலம் உடையவனே' என்பது பொருள். இனி, இயல்பாகவே கொண்டு, 'எல்லாவற்றையும் நினைப்பினாற் செய்பவனே' என்று உரைத்தலுமாம். 'என்' எனவும் 'யாய்' எனவும் வந்த சொற்கள் 'என்னியாய்' என இகரம் பெற்றுப் புணர்ந்தன. யாய் - தாய். "என்" என்பது, "எந்தை, பிரான்" என்பனவற்றோடும் இயையும். 'யாய், எந்தை' என்பனவும் விளிப்பெயர்கள் என்க. "இசையே" என, பிறவற்றை உகவாதான்போலப் பிரிநிலையேகாரம் புணர்த்தோதினார்,அதன்கண் உள்ள விருப்பமிகுதி புலப்படுத்தற் பொருட்டு; "பூம்புகலி-வரந் தோன்று கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே" (திருமுறை2-54-8.) என்றதுபோல. இசையில் இறைவற்கு உள்ள விருப்ப மிகுதியை, "அளப்பில கீதஞ்சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே" என்றும் நாயனார் உணர்த்தியருளினார். (திருமுறை 4-77-3.) தந்திரம் - ஆகமம். "கன்னி" என்றது, தென்றிசைக் குமரித் தீர்த்தத்தை; ஆர் கங்கை - நிறைந்த கங்கைநதி. 'இவ்விரண்டிற்கும் ஒருவனே தலைவன்' என்றருளியவாறு. "கங்கை" என்பதற்கு, 'கங்கா தேவி' எனப் பொருளுரைப்பின், "கன்னியார்" என்னும் பன்மையோடியையாமையும், தகரம் மிகுதல் பொருந்தாமையும் அறிக.

Koviloor Digital Library

577 உரியா யுலகினுக் கேல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய தேய்வச் சுடரே போற்றி
யேசுமா முண்டி யுடையாய் போற்றி
அரியா யமரர்கட் கேல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

578 எண்மேலும் எண்ண முடையாய் போற்றி
யேறறிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணேடியாழ் வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணேன் றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

577. "உரியாய்" என்றது, 'உடையவனே' என்றவாறு; "உலகினுக்கு" என, உயர்திணைக் கிழமைக்கண் அது உருபு வாராது, குவ்வுருபு வந்தது. விடையூர்தியாவது உயிரே யாதலின், 'உணர்வென்னும் ஊர்வதுடையாய்' என்றருளினர். அறமே யன்றி உயிரும் ஊர்தியாமென்பதுணர்க. எரியாய - எரிபோன்ற. தெய்வச்சுடர் - அருள் விளக்கு. ஏசும் - இகழப் படுகின்ற. முண்டி - தசைநீங்கிய தலை. 'அதனைக் கையில் உடையவன்' என்க. "போற்றி" என்பதனை, "அறிவே" என்பதனோடுங் கூட்டுக. அறிவு - அறிவே வடிவமானவன். அடக்கம் - நுணுகியிருத்தல்; "நறுமல ரெழுதரு நாற்றம்போல் - பற்றலாவ தோர் நிலையிலாப் பரம்பொருள்" (திருவா. அதிசயப் - 9.) என்றருளினமை காண்க. கரியான் - திருமால். ஆழி - சக்கரம்.

578. "எண்" என்றது, உயிர்களது எண்ணத்தினை. "மேல்" என்பது ஏழனுருபு; 'உம்மை' நுணுக்கத்தினது மிகுதியுணர்த்தலின், சிறப்பு. எண்ணம் - எண்ணுதல். அறிய - பலரும் பார்க்க. 'அரிய' என்பது பிழைபட்ட பாடம். குணம் - இயல்பு. பாவித்து - நினைத்து; விருப்பங்கொண்டு. இதனை

Koviloor Digital Library

579 முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தீ போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

580 போற்றிசைத்துன் னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணு யிரநூறு பெயராய் போற்றி

வலியுறுத்தற்கு, யாழும் வீணையும் பயிறலை அருளிச்செய்தார். ,விண்ணின் மேலும், அதற்கு மேலும்' என்க. "விண்" என்றது, பிருதிவி அண்டத்தை "மேலார் கண் மேலார்கண் மேலாய்" என்றதனை மேலே (பக் 266.) காண்க. "கண்மேலுங் கண்ணொன் றுடையாய்" என்பதனை, "கண்மேற் கண்ணும் சடைமேற் பிறையும் உடையார்" (திருமுறை. 1 - 67 - 2) என்பத னோடு வைத்துக் காண்க.

579. 'முடியாக ஆர்ந்த சடை' என்க. முழுநீறு - நீற்றின் இலக்கணம் சிதையாது நிரம்பிய நீறு; மேனியின் முழுமை நீற்றின்மேல் ஏற்றப்பட்டது எனினுமாம். சண்ணித்தல் - பூசுதல். சோதித்தார், அயனும் மாலும். "அறிவாய்" என்றது. 'பிறரறியாதொழியினும் அறிந்து அருள் செய்பவனே' என்ற தாம்; இதனை நாயன்மாரது வரலாறுகளிற் காண்க, 'அடியார்' என முன்னே அருளினமையின், வாளா, "அமரர் பதியாள வைத்தாய்" என்றார். கடியார் - கொடியவர்.

580. 'போற்றி இசைத்து' என்பது, "போற்றிசைத்து" என நின்றது; இதனுள், "போற்றி" என்னுஞ்சொல் தன்னை உணர நின்றது. இசைத்து - சொல்லி; இதனானே, 'அவ்வாறு பரவுதல் செய்தற்பாற்று' என்பது பெறப்பட்டது. 'ஏறு' என்பது, "ஏற்று" என விரித்தலாயிற்று; 'இடி' என்பது பொருள். "ஏற்றிசைக்கும் வான்" என்றது, 'மேகம்' என்ற வாறு. அதன்மேல் இருத்தலாவது, அதற்குத் தலைவனாய்நின்று

Koviloor Digital Library

நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9, 10

திருச்சிற்றம்பலம்

அதனைத் நடத்துதல். இனி, இது, நாயனருக்குக் கயிலை மலை வழியில் இறைவன் விண்ணிலே மறைந்தருள் புரிந்தமையைக் குறித்தருளியதூஉ மாம். (பெ. பு. திருநாவுக். 368.) எண் - எண்ணப்படுகின்ற " ஆயிரமும் நூறுமாகிய பெயர்களையுடைய வனே " என்க. இவ்வாறருளியது 'அளவற்ற பெயர்களை யுடையவன்' என்றருளியவாறு. 'ஆயிரத்தெட்டும் நூற்றெட்டு மாகச் சொல்லப்படும் பெயர்களை உடையவன்' எனவும் பொருள் உரைப்பர்; அஃது அத்துணைப் பெயர்களால் அருச் சிக்கும் மரபு பற்றியதாம். போற்றித் திருப்பாடல்கள் பல வற்றின் இறுதிக்கண் இவ்வாறருளிச் செய்தமை, அவைகளை முடித்தற் குறிப்புணர்த்தும். விளக்குப்போல எல்லாவற்றையும் புலப்படுத்துதலின், " விளக்காய நாதா " என்றருளினர். காற்று இசைக்கும் - காற்று ஒலிக்கின்ற, என்றது, காற்றில்லாத இடம் வாயு மண்டலங்காறும் இன்மையின், " காற்றிசைக்கும் திசைக் கெல்லாம் " என்றருளிச்செய்தார். " வித்து " என்றது 'காரணன்' (தலைவன்) என்னும் பொருளது.

இத்திருப்பதிகத்திற் கிடைத்த திருப்பாடல்கள் இவ்வளவே.

இக்கயிலாயப் போற்றித் திருப்பதிகங்களுள் பலவிடத்தும், இறைவன் தமது சிந்தையின்கண் நின்றமையை வலியுறுத் தருளிச் செய்தது, கயிலைபோல, உடம்பிற் கயிலை உள்ளம் என்பது உணர்த்துதற் பொருட்டென்க.

அருந்தனய னுயிர்பெற்ற வதுகண்டு மமுதுசெயா
திருந்ததற்குத் தளர்வெய்தி யிடருழந்தார் துயர்நீங்க
வருந்துமவர் மனைப்புகுந்து வாகீசத் திருமுனிவர்
விருந்தமுது செய்தருளி விருப்பினுடன் மேவுநாள். 209

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

58. திருவலம்புரம்

திருப்பதிக வரலாறு

ஆண்டவரசு, சீகாழியிலிருந்து திருக்கோலக்காவை வணங்கி ஆளுடையபிள்ளையாரிடம் விடைகொண்டு திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனி பள்ளி, முதலான தலங்களைப் பணிந்து திருச்செம்பொன்பள்ளி செல்லுங்கால் தொழுது பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 189.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

581 மண்ணளந்த மணிவண்ணர் தாமும் மற்றை
மறையவனும் வானவருஞ் சூழ நின்று
கண்மலிந்த திருநெற்றி யுடையா ரொற்றைக்
கதநாகங் கையுடையார் காணீ ரன்றே
பண்மலிந்த மொழியவரும் யானு மெல்லாம்
பணிந்திறைஞ்சித் தம்முடைய பின்பின் செல்ல
மண்மலிந்த வயல்புடைசூழ் மாடவீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 1

இத் திருப்பதிகம், திருவலம்புரப் பெருமான் திருவீதியில் வந்தபொழுது அவரைக்கண்டு காதல்கொண்டு பின்தொடர்ந்து சென்று அவரை அணுக இயலாது வருந்தும் ஒருத்தியின் கூற்றாக அருளிச் செய்யப்பட்டது.

581. மண் அளந்த மணி வண்ணர், திருமால்; ' மணி வண்ணர் ' என்ற பன்மை, நகையை உள்ளுறுத்தது. மறைய வன் - பிரமன். " மற்றை " என்பதனை, " வானவரும் " என்பதனோடு கூட்டுக. அணிந்தவை பல பாம்புகளாயினும், கையிற் பிடித்து ஆட்டி மகிழ்வது ஒரு பாம்பு என்க. கதம் - சினம். " காணீர் " என்பது முன்னிலை அசை ; இதனை இறுதிக் கண் கூட்டுக. " அன்றே " என்றது, தான் கண்ட அந் நாளினை. ' அன்றே வலம்புரம் புக்கு ' என்க. பண் மலிந்த மொழியவர், தன்னைப்போலும் பெண்டிர். பணிதல் - அடிக்கண்

Koviloor Digital Library

582 சிலைநவின்ற தொருகணையாற் புரமூன் றெய்த
தீவண்ணர் சிறந்திமையோர் இறைஞ்சி யேத்தக்
கோலைநவின்ற களியானை யுரிவை போர்த்துக்
கூத்தாடித் திரிதருமக் கூத்தர் நல்ல
கலைநவின்ற மறையவர்கள் காணக் காணக்
கடுவிடைமேற் பாரிடங்கள் சூழக் காதல்
மலைமகளுங் கங்கையுந் தாமு மெல்லாம்
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 2

583 தீக்கூருந் திருமேனி யொருபால் மற்றை
யொருபாலும் அரியுருவந் திகழ்ந்த செல்வர்
ஆக்கூரில் தான்தோன் றிப் புகுவார் போல
வருவினையேன் செல்வதுமே யப்பா லெங்கும்
நோக்கா ரொருவிடத்து நூலுந் தோலுந்
துதைந்திலங்குந் திருமேனி வெண்ணீ றாடி
வாக்கால் மறைவிரித்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 3

வீழ்தலும். இறைஞ்சுதல் - தலை வணங்குதலுமாம். "பின்பின்" என்னும் அடுக்கு இடைவிடாமை குறித்தது. "அங்கே" என்னும் ஏகாரம், 'மீள இவண் போந்திலர்' என்பது குறித்த பிரிநிலை. 'நெற்றி யுடையவரும் கையுடையவருமாகிய ஒருவர், நின்று, செல்ல, புக்கு மன்னினார்' என வினைமுடிவு செய்க.

582. சிலை நவின்ற - வில்லிற் பொருந்திய. சிறந்து - சிறந்து தோன்றி. கொலை நவின்ற - கொலை பயின்ற. களி - மதமயக்கம். கலை நவின்ற - கலைகளைப் பயின்ற. அடுக்கு, பன்மை குறித்தது. பாரிடம் - பூதகணம். 'மலைமகளையும் கங்கையையும் அணைத்துச் சென்றவர், எம்மை நோக்காதே போயினார்' என வருந்தினாள். 'தீவண்ணரும் கூத்தரும் ஆகிய அவர், காண, சூழ, புக்கு மன்னினார்' என்க.

583. தீக் கூரும் - நெருப்பு மிக்கெரிவதுபோலும். "திரு மேனி ஒருபால்" என்புழியும் உம்மை விரிக்க. 'அரிஉருவம் ஒருபாலும்' என மாற்றுக. ஒருபால் தம்முருவமும், ஒருபால் அரி (திருமால்) உருவமுமாக நிற்பவரை, 'சங்கர நாராயணர்'

Koviloor Digital Library

584 மூவாத மூக்கப்பாம் பரையிற் சாத்தி
மூவர் உருவாய முதல்வ ரிந்நாள்
கோவாத எரிகணையைச் சிலைமேற் கோத்த
குழகனுர் குளிர்கொன்றை சூடி யிங்கே
போவாரைக் கண்டடியேன் பின்பின் செல்லப்
புறக்கணித்துத் தம்முடைய பூதஞ் சூழ
வாவா வேனவுரைத்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி ஞரே. 4

என்பர். இந்நிலை, படைப்புக்காலத்தில் திருமாலை இடப்பாகத்தில் தோற்றுவித்து, அவர்வாயிலாகப் பிரமனைத் தோற்றுவித்து, அவன் வாயிலாக உலகங்களைத் தோற்றுவித்தலைக் குறிப்பதாம். ஆக்கூர், சோழநாட்டுத்தலம்; இதன்கண் இறைவர் சுயம்பு மூர்த்தியாய் இருத்தலின், 'தான்றேன்றி' எனப்படுவர்; அப்பெயர், அவரது திருக்கோயிலுக்கும் ஆயிற்று. அது மாடக் கோயிலாதலால், 'தான்றேன்றிமாடம்' எனவும், வழங்கப்படும். 'அங்குப்போவார்போலக்காட்டி எம்மை அலைவித்தார்' என்றுள். அப்பால் - அதன்பின். எத்திசையிலும் 'ஓரிடத்தும்' என்பது, "ஒருவிடத்தும்" என வந்தது செய்யுள் விகாரம். வருகின்ற திருப்பாடல்களுள் இவ்வாறு வருவனவும் அவை. 'ஒருவிடத்தும் நோக்காராய்' என்க. நூலும் தோலும் பிரமசாரியாதலை விளக்குவன. துதைந்து - நிறைந்து; இதனை, 'துதைய' எனத் திரிக்க. மாயம் - பொய்; 'மறைவிரிக்கின்ற வாயால் மாயம் பேசினுர்' எனப் புலந்து கூறினுள். 'வாயம்பேசி' எனவும் பாடம் ஓதுவர், 'செல்வர் ஒருவர்' என எழுவாய் கொள்க.

584. இறைவனை அடைந்த பொருள்களும் என்றும் ஒரு பெற்றியவாய் நீடு வாழ்தலின், பாம்பும் மூவாதாயிற்று; "இளநாகம்" (திருமுறை 1. பதிகம் 1. 2.) என்றருளிச்செய்தார் ஆளுடைய பிள்ளையாரும். பிறையும் அன்னதாதலுணர்க. மூர்க்கப் பாம்பு' என்பது, 'மூக்கப் பாம்பு' என மருவிற்று. 'மூர்க்கப் பாம்பு' என்றேயும் பாடம் ஓதுப. இஃது இன அடை. மூவர், 'அயன், அரி, அரன்' என்பவர். முதல்வர் - தலைவர். கோவாத கணை - வில்லில் தொடுக்கப்படாத (அம்பின் தன்மை யில்லாத) அம்பு; என்றது, 'திருமால், வாயுதேவன், அக்கினிதேவன்' என்ற இவர்களே அம்பாய் அமைந்தமை பற்றி. எரிகணை - எரிக்கின்ற கணை. 'குழகனுராய்ப்

Koviloor Digital Library

585 அனலொருகை யதுவேந்தி யதளி னோடே
ஐந்தலைய மாநாகம் அரையிற் சாத்திப்
புனல் பொதிந்த சடைக்கற்றைப் பொன்போல்மேனிப்
புனிதனார் புரிந்தமரர் இறைஞ்சி யேத்தச்
சினவிடையை மேல்கொண்டு திருவா ரூருஞ்
சிரபுரமும் இடைமருதுஞ் சேர்வார் போல
மனமுருக வளைகழல மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 5

586 கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்
காலினாற் காய்ந்துகந்த காபாலியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறுந்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் தம்வாய்ச்
சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வெளவ
மறித்தொருகால் நோக்காதே மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 6

போவாரை' என்க. உடன் கொண்டு செல்லாது ஒளிந்தமையின். "வா வா" என உரைத்ததனை "மாயம்" (பொய்) என்றாள். "உரைத்து, பேசி" என்றவற்றை, "செல்ல" என்றதன் பின்னர்கூட்டி, 'அவர்' என எடுத்துக்கொண்டுரைக்க.

585. "கையது" அது, பகுதிப்பொருள் விகுதி. 'கையதன்கண்' என உருபு விரிக்க. அதள் - தோல். புனல் பொதிந்த - நீர் உள்நிறைந்த. புரிந்து - விரும்பி. சிரபுரம் - சீகாழி.

586. முறித்தது - உரித்தது. முண்டம் - தலைமாலை. "முற்றம்" என்றது, முன்றில். 'சிறுமுறுவல் செய்தவர்' மறித்து ஒருகால் நோக்காதே போயினார் என வருந்தினாள்.

Koviloor Digital Library

587 பட்டுடுத்துப் பவளம்போல் மேனி யெல்லாம்
பசுஞ்சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க்
கெவ்வூரீர் எம்பெருமா னென்றே னாவி
விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி
வேறோர் பதிபுகப் போவார் போல
வட்டணைகள் படநடந்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 7

588 பல்லார் பயில்பழனம் பாசூ ரென்று
பழனம் பதிபழைமை சொல்லி நின்றார்
நல்லார் நனிபள்ளி யின்று வைகி
நாளைப்போய் நள்ளாறு சேர்து மென்றார்
சொல்லா ரொருவிடமாத் தோள்கை வீசிச்
சுந்தரராய் வெந்தநீ றாடி யெங்கு
மல்லார் வயல்புடை சூழ் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 8

587. பசுஞ் சாந்து - குளிர்ந்த சந்தனம். "பாதம் இட்டு (ஊன்றி) எடுத்து (தூக்கி)" என்றது, நடனம் ஆடிய வகையை விரித்தவாறு. "எம்பெருமான்" என்றது, பன்மை யொருமை மயக்கம். 'ஆவி (உயிர்) விடுமாற்றினைச் செய்து' என்க. அது, பகுதிப்பொருள் விகுதி, 'ஆவி விடுமாறுவது, காமம் மீதூர்வு. விரைவு, போகவேண்டுங் குறைபற்றித் தோற்றுவித்தது. வட்டணைகள்பட - சுழற்சி தோன்ற.

588. பழனம், சோழநாட்டுத் தலம். பாசூர், தொண்டை நாட்டுத் தலம். பழனத்தை முன்னர்க் கூறினமையால் அதன் பழைமை கூறியதாயிற்று. 'பழனம் (தமக்குப்) பதியாதல் பழைமை யாதலைச் சொல்லி நின்றார்' என்க. நனிபள்ளி, நள்ளாறு சோழ நாட்டுத் தலங்கள். முன்னே இரண்டு ஊர்களைச் சொல்லி, பின்பு, இன்று ஓர் ஊரிலும், நாளை ஓர் ஊரிலும் இருப்பதாகக் கூறினமையின், 'ஓரிடமாகச் சொல்லிற்றிலர்' என்றாள். 'தோளும் கையும் வீசி,' என்க. 'எங்கும் அல்லாராய்' என. மோனை நயம் கருதாதே பிரித்து, 'முன்சொல்லிய எவ்விடத்தும் செல் லாராய்' என்றே உரைக்க. 'மல்ஆர் வயல்' எனப் பிரித்தலு மாம். மல் - வளம்.

Koviloor Digital Library

589 பொங்கா டரவொன்று கையிற் கொண்டு
போர்வெண் மழுவேந்திப் போகா நிற்பர்
தங்கா ரொருவிடத்துந் தம்மே லார்வந்
தவிர்த்தருளார் தத்துவத்தே நின்றே னென்பர்
எங்கே யிவர்செய்கை யொன்றொன் றொவ்வா
என்கண்ணின் நின்றகலா வேடங் காட்டி
மங்குல் மதிதவழும் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 9

590 செங்கண்மால் சிலைபிடித்துச் சேனை யோடுஞ்
சேதுபந் தனஞ்செய்து சென்று புக்கும்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கொருதன் திருவிரலால் இறையே யூன்றி
யடர்த்தவற்கே அருள்புரிந்த அடிக ளிந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 10

திருச்சிற்றம்பலம்

589. பொங்கு - சினம் மிக்க. வெண்மை, கூர்மையைக் குறிக்கும். தத்துவம் - உண்மை. ஒன்றொன்று ஒவ்வா - ஒன்றோடொன்று ஒவ்வாது. முரணி நிற்கின்றன. "எங்கே" என்பதனை, "ஒவ்வா" என்பதன் பின்னர்க்கூட்டி, 'அவை எத் தன்மையன' என்றுரைக்க. 'எத்தன்மையன' என்னும் வினு, 'ஒன்றினும் படாப் பித்தர் செய்கையாம்' என்பது தோற்றி நின்றது, 'இச் செய்கைதாமே காதலை வளரச்செய்யா நின்றது' என்பது, "என்கண்ணின் நின்றகலா வேடங்காட்டி" என்றதனுல் இனிது பெறப்படும்.

590. செங்கண் மால் அரிதின் வென்றமையை நினைவாள், சிலை பிடித்தமை முதலியவற்றை எடுத்துக் கூறினுள். புகல் - அடைக்கலம்; என்றது, அடைக்கலமாக வந்தடைந்த, 'சுக்கிரீவன், வீடணன்' என்பவர்களைக் குறித்தது. முடிகள், தலையில் அணியப்பட்டவை. 'பொடி வாய் வீழ' என்பது பாடமாயின்,

Koviloor Digital Library

மண்ணில் விழ' என உரைக்க. 'திருமால் அரிதில் வெல்லும் ஆற்றலுடையவனைக் கால் விரலால் சிறிதே ஊன்றி அடர்த்தார்' எனவும், 'திருமால்போல அடர்த்தே ஒழியாது, பின்பு அவனுக்கு அருள்புரிந்தார்' எனவும் வியந்தவாறு. இவ்வாறு அவரது ஆண்மை மிகுதியையும், அருள் மிகுதியையும், நினைந்து நினைந்து ஒருகாலைக்கொருகால் காதல் மீதூரப் பெற்றாள் என்க. ஆண்மையும் அருளும் உடைய ஆடவரிடத்திற்றானே மகளிர்க்குக் காதல் பிறக்கும் என்பதனை, "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் - புல்லாளே ஆயர் மகள்" (கலி - 103) எனவும், "பொருளே காதலர் காதல் - அருளே காதலரென்றி நீயே" (அகம் - 53) எனவும் வருவனபோல்பவற்றாற் குறிப்பர், சான்றோர்.

திங்களூர் தனினின்றுந் திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதிபுகுந்து
தங்குபெருங் காதலொடுந் தம்பெருமான் கழல்சார்ந்து
பொங்கியவன் புறவணங்கி முன்னின்று போற்றிசைப்பார். 210

புடைமாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொற்கழற்கீழ்
அடைமாலைச் சீலமுடை யப்பூதி யடிகடமை
நடைமாணச் சிறப்பித்து நன்மைபுரி தீந்தமிழின்
தொடைமாலைத் திருப்பதிகச் சொன்மாலை பாடினார். 211

எழும்பணியு மிளம்பிறையு மணிந்தவரை யெம்மருங்குந்
தொழும்பணிமேற்கொண்டருளித்திருச்சோற்றுத்துறைமுதலாத்
தழும்புறுகேண் மையினண்ணித் தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயிற் றிருத்தொண்டு செய்திருந்தார். 212

சாலநா ளங்கமர்ந்து தந்தலைமேற் றாள்வைத்த
ஆலமார் மணிமிடற்று ரணிமலர்ச்சே வடிநினைந்து
சேலுலாம் புனற்பொன்னித் தென்கரையே றிச்சென்று
கோலநீள் மணிமாடத் திருநல்லூர் குறுகினார். 213

அங்கணைந்து தம்பெருமா னடிவணங்கி யாராது
பொங்கியவன்பொடுதிளைத்துப்போற்றிசைத்துப்பணிசெயுநாள்
தங்குபெருங் காதலினாற் றாமரைமேல் விரிஞ்சனொடு
செங்கண்மா லறிவரியார் திருவாரூர் தொழநினைந்தார். 214

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

59. திருவெண்ணியூர்

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசர், திருப்பெருவேளூர் பணிந்து அங்கிருந்து திருவிளமர் செல்லுங்காலைப் பிற பதிகளை வணங்கிப் பாடியருளியவற்றுள் ஒன்றுபோலும் இத்திருப்பதிகம். (பிற பதிகளாவன, திருவெண்ணியூர், திருப்பூவனூர், திருக்கரவீரம் முதலியன. (திருநாவுக். பு - 217.)

திருச்சிற்றம்பலம்

591 தொண்டிலங்கும் அடியவர்க்கோர் நெறியி னாருந்
தூநீறு துதைந்திலங்கு மார்பி னாரும்
புண்டரிகத் தயனெடுமால் காணா வண்ணம்
பொங்குதழற் பிழம்பாய புராண னாரும்
வண்டமரும் மலர்க்கொன்றை மாலை யாரும்
வானவர்கா நஞ்சுண்ட மைந்த னாரும்
விண்டவர்தம் புரமூன்றும் எரி செய்தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. 1

592 நெருப்பனைய மேனிமேல் வெண்ணீற் றாரும்
நெற்றிமே லொற்றைக்கண் நிறைவித் தாரும்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பா லாரும்
பூந்துருத்தி நகர்மேய புராண னாரும்

இத்திருப்பதிகம், சிவபிரானது பெருமையைப் பல்லாற்றானும் எடுத்தோதி யருளியது.

591. தொண்டு இலங்கும் அடியவர் - தொண்டுகள் விளங்கும் இடமாய் நிற்கின்ற அடியார்கள். அவர்கள் தம் பெருமானையே பற்றுக்கோடாகக்கொண்டு ஒழுகுதலின், "அடியவர்க்கு ஓர் நெறியினார்". என்றருளினார். 'நெறியானாரும்' என்பதும் பாடம். புராணனார் - பழையவர். மைந்தனார் - வலியவர். விண்டவர் - பிரிந்தவர்; பகைவர்.

Koviloor Digital Library

மருப்பனைய வெண்மதியக் கண்ணி யாரும்
வளைகுளமும் மறைக்காடும் மன்னி னாரும்
விருப்புடைய அடியவர்தம் முள்ளத் தாரும்
வேண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. 2

593 கையுலாம் மூவிலைவே லேந்தி னாருங்
கரிகாட்டில் எரியாடுங் கடவு ளாரும்
பையுலாம் நாகங்கோண் டாட்டு வாரும
பரவுவார் பாவங்கள் பாற்று வாரும்
செய்யுலாங் கயல்பாய வயல்கள் சூழ்ந்த
திருப்புன்கூர் மேவிய செல்வ னாரும்
மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித் தாரும்
வேண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. 3

594 சடையேறு புனல்வைத்த சதுர னாருந்
தக்கன்றன் பெருவேள்வி தடைசெய் தாரும்
உடையேறு புரியதள்மேல் நாகங் கட்டி
யுண்பலிக்கேன் றூரூரி னுழிதர் வாரும்
மடையேறிக் கயல்பாய வயல்கள் சூழ்ந்த
மயிலாடு துறையுறையும் மணாள னாரும்
விடையேறு வேல்கொடியெம் விமல னாரும்
வேண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. 4

592. பூந்துருத்தி, மறைக்காடு (வேதாரணியம்) இவை சோழநாட்டுத் தலங்கள். மருப்பு - யானைக் கொம்பு. வளைகுளம், வைப்புத்தலம்.

593. கரிகாடு - கரிகின்ற காடு; சுடலை. பை உலாம் - படம் பொருந்திய. பாற்றுவார் - அழிப்பார். செய் - வயல்; 'செய்க்கண் பாய' என்க. "வயல்கள்" என்பது, 'அவைகள்' என்னும் சுட்டளவாய் நின்றது. திருப்புன்கூர், சோழநாட்டுத் தலம். சண்ணித்தல் - பூசுதல்.

594. ஏறு புனல் - பெருகும் நீர். சதுரனர் - திறலுடையவர். உடை ஏறு - உடையாகப் பொருந்திய. உழிதரல் - திரிதல். மயிலாடுதுறை - மாயூரம். மணாளனர் - தலைவர்.

Koviloor Digital Library

595 மண்ணிலங்கு நீரனல்கால் வானு மாகி
மற்றவற்றின் குணமேலா மாய்நின் றாரும்
பண்ணிலங்கு பாடலோ டாட லாரும்
பருப்பதமும் பாசூரும் மன்னி னாரும்
கண்ணிலங்கு நுதலாருங் கபால மேந்திக்
கடைதோறும் பலிகொள்ளுங் காட்சி யாரும்
விண்ணிலங்கு வெண்மதியக் கண்ணி யாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. 5

596 வீடுதனை மெய்யடியார்க் கருள்செய் வாரும்
வேலைவிட முண்டிருண்ட கண்டத் தாரும்
கூடலர்தம் மூவெயிலும் எரிசெய் தாரும்
குரைகழ லாற் கூற்றுவனைக் குமைசெய் தாரும்
ஆடுமர வரைக்கசைத்தங் காடு வாரும்
ஆலமர நீழலிருந் தறஞ்சொன் னாரும்
வேடுவராய் மேல்விசயற் கருள்செய் தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. 6

595. “இலங்கு” என்பதனை எல்லாவற்றிற்கும் இயைய, ‘மண்” என்றதற்கு முன்னே கூட்டுக; மற்று, அசை. குணம், ‘சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்’ என்பன. பருப்பதம் - சீ பருப்பதம் (சீசைலம்); இது வடநாட்டுத்தலம். பாசூர்; தொண்டைநாட்டுத்தலம். கடை - வாயில்.

596. வீடு - முத்திப்பேறு. மெய்யடியார், பயன் கருதாது அன்பு காரணமாகவே வழிபடுபவர். வேலை - கடல். கூடலர் - பகைவர். குமை - குமைத்தல்; அழித்தல்; முதனிலைத் தொழிற் பெயர். “அங்கு” என்பது அசைநிலை. மேல் - பின்; ‘முன்பு போர்செய்து பின்பு அருள்செய்தார்’ என்றதாம்.

Koviloor Digital Library

597 மட்டிலங்கு கொன்றையந்தார் மாலை சூடி
மடவா ளவளோடு மானொன் றேந்திச்
சிட்டிலங்கு வேடத்த ராகி நாளுஞ்
சில்பலிக்கென் றூரூர் திரிதர் வாருங்
கட்டிலங்கு பாசத்தால் வீச வந்த
காலன்றன் கால மறுப்பார் தாமும்
விட்டிலங்கு வெண்குழைசேர் காதி னாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. 7

598 செஞ்சடைக்கோர் வெண்டிங்கள் சூடி னாருந்
திருவால வாயுறையுஞ் செல்வ னாரும்
அஞ்சனக்கண் அரிவையொரு பாகத் தாரும்
ஆறங்கம் நால்வேத மாயி னாரும்
மஞ்சடுத்த நீள்சோலை மாட வீதி
மதிலாரூர் புக்கங்கே மன்னி னாரும்
வெஞ்சினத்த வேழமது உரிசெய் தாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே. 8

597. மட்டு இலங்கு - தேனோடு விளங்குகின்ற. 'சிட்டம்' என்பது 'சிட்டு' என நின்றது; 'ஞானம்' பொருள். இறைவனது வேடங்கள் ஞானத்தைத் தருதல் அறிக. கட்டு-கட்டுதல்; முதனிலைத் தொழிற்பெயர். காலன்றன் காலம் - கூற்றுவனது வாழ்நாள். விட்டு இலங்குதல் - விட்டு விட்டு ஒளிர்தல்; மின்னுதல்.

598. "சடைக்கு", 'சடைக்கண்' என உருபு மயக்கம். திருவாலவாய் - மதுரைத் திருக்கோயில். அஞ்சனம் - மை. மஞ்சு - மேகம் 'சோலையையும் வீதியையும், மதிலையும் உடைய ஆரூர்' என்க.

Koviloor Digital Library

599 வளங்கிளர்மா மதிசூடும் வேணி யாரும்
வானவர்க்கா நஞ்சுண்ட மைந்த ஞருங்
களங்கோளவேன் சிந்தை யுள்ளே மன்னிஞருங்
கச்சியே கம்பத்தேங் கடவு ளாரும்
உளங்குளிர அமுதூறி யண்ணிப் பாரும்
உத்தமரா யேத்திசையும் மன்னி ஞரும்
விளங்கிளரும் வேண்மழுவோன் றேந்தி ஞரும்
வேண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த ஞரே. 9

600 போன்னிலங்கு கோன்றையந்தார் மாலே சூடிப்
புகலூரும் பூவணமும் போருந்தி ஞருங்
கோன்னிலங்கு மூவிலேவே லேந்தி ஞருங்
குளிரார்ந்த சேஞ்சடையேங் குழக ஞருந்
தேன்னிலங்கை மன்னவர்கோன் சிரங்கள் பத்துந்
திருவிரலா லடர்த்தவனுக் கருள்சேய் தாரும்
மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகத் தாரும்
வேண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த ஞரே. 10

திருச்சிற்றம்பலம்

599. களம் கொள - தாம் தமக்கென்று ஓர் இடம்பெற்று நிற்றற் பொருட்டு. "களங்கொளக் கருத அருளாய் போற்றி" (திருவா. போற்றித் - 171.) என்பதும் இப்பொருள் படுதல் உணர்க. அமுது ஊறி - அமுதம் சுரப்பது போன்று. அண்ணிப்பார் - இனிப்பார். உத்தமர் - மேலானவர். 'விளங்கு கிளரும்' என்பது குறைந்து நின்றது; விளங்கு - விளங்குதல்; முதனிலேத் தொழிற் பெயர்.

600. பொன் இலங்கு - பொன்போல விளங்குகின்ற. தார் இன்பநிலேயிலும், மாலே வெற்றியிலும் அணியப்படுவன. புகலூர், சோழநாட்டுத் தலம்; இதுவே, நாயஞர் இறைவன் திருவடி கூடிய இடம். பூவணம், பாண்டிநாட்டுத் தலம். கொன் - அச்சம். கங்கை வைக்கப்பட்டிருத்தலின் சடை, குளிர்ச்சி பொருந்தியதாயிற்று.

Koviloor Digital Library

60. திருக்கற்குடி

திருப்பதிக வரலாறு

நாயனர் திருவானைக்கா, திருவெறும்பியூர்மலை, திருச்சிராப்பள்ளி இவற்றை வணங்கித் திருக்கற்குடி தொழுது பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 302.)

திருத்தாண்டகம்


திருச்சிற்றம்பலம்

601 மூத்தவனை வானவர்க்கு மூவா மேனி
முதலவனைத் திருவரையின் மூக்கப் பாம்போ
டார்த்தவனை அக்கரவ மார மாக
அணிந்தவனைப் பணிந்தடியா ரடைந்த அன்போ
டேத்தவனை யிறுவரையில் தேனை ஏனோர்க்
கின்னமுத மளித்தவனை யிடரை யெல்லாங்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 1

இத்திருப்பதிகம், திருக்கற்குடியில் இறைவனைக் கண்ட காட்சியின்பத்தின் மிகுதியில் அவனது பெருமைகளைப் பலவாறு எடுத்துப் பாராட்டி, ‘இக் கற்பகத்தை நான் கண்ணாரக் கண்டேன்’ என்றருளிச் செய்தது.

601. மூத்தவன் - முற்பட்டவன். ‘வானவர்க்கும் மூத்தவனை’ எனக் கூட்டுக. மூவா - மூப்படையாத. ‘முதல்வன்’ என்பது, அகரம் பெற்று, “முதலவன்” என நின்றது. அக்கு - எலும்பு. அடைந்த அன்பு - அடைந்ததற்குக் காரணமாயிருந்த அன்பு. ‘அடியார் அன்போடு பணிந்து ஏத்தவனை’ எனக் கூட்டுக. ஏத்தவன் - ஏத்தப்படுதலுடையவன்; இதன்கண், ‘ஏத்து’ என்னும் முதனிலைத் தொழிற்பெயர் செயப்பாட்டு வினையாய் நின்றது. இறு வரை - பெரிய மலை. “ஏனோர்க்கு” என்றது, ‘தனக்கின்றிப் பிறர்க்கு’ என்றவாறு; பிறர், தேவர். காத்தவன் - வாராமல் தடுத்தவன். விழுமியான் - மேலானவன்.

Koviloor Digital Library



கற்குடியில் விழுமியான் கவின் கோயில்

Koviloor Digital Library

Koviloor Digital Library

602 செய்யானை வெளியானைக் கரியான் தன்னைத்
திசைமுகனைத்திசையெட்டுஞ்செறிந்தான்தன்னை
ஐயானை நொய்யானைச் சீரி யானை
அணியானைச் சேயானை ஆனஞ் சாடும்
மெய்யானைப் பொய்யாது மில்லான் தன்னை
விடையானைச் சடையானை வெறித்த மான்கோள்
கையானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 2

603 மண்ணதனில் ஐந்தைமா நீரில் நான்கை
வயங்கெரியில் மூன்றைமா ருதத்தி ரண்டை
விண்ண தனிலொன்றை விரிகதிரைத்
தண்மதியைத் தாரகைகள் தம்மின் மிக்க
எண்ணதனில் எழுத்தைஏ ழிசையைக் காமன்
எழிலழிய எரியுமிழ்ந்த இமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 3

602. "செய்யானை" முதலிய மூன்றனையும் மேலே (பக்.411.) காண்க. திசைமுகன்-பிரமனாய் இருப்பவன். ஐயான்-அழகியவன்; ஐயன் என்றலுமாம். நொய்யான் - நுணுகியவன். சீரியான் - புகழுடையவன். மெய்யான் - திருமேனியை உடையவன். வெறித்த - மருண்ட.

603. "மண்ணதனில் ஐந்து" முதலியவற்றை மேலே (பக் 389.) காண்க. தாரகைகள்-விண்மீன்கள். 'தாரகைகளை' என்பதும், 'எண்ணதனை' என்பதும் உடம்பொடு புணர்த்த லாற் கொள்ளப்படும். 'தாரகைகளினும் மிக்க எண்' என்க. எண்ணதனில் எழுத்தாவது, எண்ணப்படும் பொருள்மேல் நிகழும் சொல்.

Koviloor Digital Library

604 நற்றவனைப் புற்றரவ நாணி னானை
நாணாது நகுதலையூண் நயந்தான் தன்னை
முற்றவனை மூவாத மேனி யானை
முந்நீரின் நஞ்சமுகந் துண்டான் தன்னைப்
பற்றவனைப் பற்றார்தம் பதிகள் செற்ற
படையானை அடைவார்தம் பாவம் போக்கக்
கற்றவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 4

605 சங்கைதனைத் தவிர்த்தாண்ட தலைவன் தன்னைச்
சங்கரனைத் தழலுறுதாள் மழுவாள் தாங்கும்
அங்கையனை அங்கமணி ஆகத் தானை
ஆகத்தோர் பாகத்தே அமர வைத்த
மங்கையனை மதியோடுமா சுணமுந் தம்மின்
மருவவிரி சடைமுடிமேல் வைத்த வான்நீர்க்
கங்கையனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 5

604. நற்றவன் - நல்ல தவக்கோலம் உடையவன். நகுதலை ஊண் - வெற்றெலும்பாய்ச் சிரிப்பதுபோலக் காணப்படும் தலையோட்டில் உண்ணுதல். நயந்தான் - விரும்பினான். முற்றவன் - நிறைவுடையன்; முந்நீர் - கடல். பற்றவன் - எப்பொருட்கும் பற்றாய் (பற்றுக்கோடாய்) உள்ளவன். பற்றார் - பகைவர். பதிகள், திரிபுரங்கள். செற்ற - அழித்த. படை - படைக்கலம்; அம்பு. இயல்பாகச் செய்பவனை, கற்றுச் செய்பவனாக அருளியது, புகழ்தல் கருதி; இஃது இலக்கணை.

605. சங்கை - ஐயம்; அது, 'முதற்பொருள் ஒன்று உண்டோ இல்லையோ' என்பது; இவ்வையத்தினை உண்டாக்கியவர், சமணர்கள். அதனைத் தவிர்த்தமையாவது, 'முதற்பொருள் உண்டே' என்பதனை, தீராத சூலைநோய் சில நொடிகளில் தீர்ந்த அனுபவத்தால் உணரக் காட்டினமை. சங்கரன் - இன்பம் செய்பவன். தழல் உறு - நெருப்பாய்ப் பொருந்திய. தாள் - கைப்பிடி; 'முயற்சிக்குரிய' என்றலுமாம். 'தழல் உறு மழுவாள்' என இயையும். அங்கம் - எலும்பு. "ஆகம்" இரண்டில், முன்னது மார்பு; பின்னது உடம்பு. "தம்மின்

Koviloor Digital Library

௬0௬ பெண்ணவனை ஆணவனைப் பேடா னானைப்
பிறப்பிலியை இறப்பிலியைப் பேரா வாணி
விண்ணவனை விண்ணவர்க்கு மேலா னானை
வேதியனை வேதத்தின் கீதம் பாடும்
பண்ணவனைப் பண்ணில்வரு பயனா னானைப்
பாரவனைப் பாரில்வாழ் உயிர்கட் கேல்லாங்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. ௬

௬0௭ பண்டானைப் பரந்தானைக் குவிந்தான் தன்னைப்
பாரானை விண்ணாயிவ் வுலக மெல்லாம்
உண்டானை உமிழ்ந்தானை உடையான் தன்னை
யோருவருந்தன்பெருமைதனைஅறியவோண்ணா
விண்டானை விண்டார்தம் புரங்கள் மூன்றும்
வெவ்வழலில் வேந்துபோடி யாகி வீழக்
கண்டானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. ௭

மருவ" என்றது, 'அவை அங்ஙனம் மருவாத பகைப் பொருள்கள்' என்பது தோற்றுவித்தது. வான் நீர்க் கங்கை - விண் யாருகிய கங்கை; பிரமன் உலகத்திலிருந்த கங்கையை அவனை நோக்கித் தவம் செய்து பகீரதன் பூமியிற் கொணர, அவன் பொருட்டு அதனைச் சிவபிரான் சடையில் தாங்கினன் என்பது புராணம்.

606. "பெண்ணவன்" முதலியவற்றில் அகரம் சாரியை. பேரா - நீங்காத. வாணி - சொல்; ஓசை ஆகாயத்தின் குணமாதலின், 'சொல்லுக்குக் காரணமாய் உள்ள ஆகாயம்' என்பார், "பேராவாணி விண்" என்றருளினர். 'ஆணி' எனப் பிரித்து, 'நீங்காத ஆணிபோல எல்லாவற்றையும் நிலைபெறுவிக்கின்ற விண்' என்றுரைத்தலுமாம். பண்ணவன் - இசையை உடையவன். பண்ணில் வருபயன், இன்பம். 'உயிர்கட்குக் கண்' என்றது, காட்சியை (அறிவை) உண்டாக்குதல் பற்றி.

607. 'பண்டையான்' என்பதில் சாரியை ஐகாரம்தொகுத்தலாயிற்று. பரந்து நிற்றல் உலகத்தின் தோற்ற நிலைகளிலும்,

Koviloor Digital Library

608 வானவனை வானவர்க்கு மேலா னானை
வணங்குமடி யார்மனத்துள் மருவிப் புக்க
தேனவனைத் தேவர்தொழு கழலான் தன்னைச்
செய்குணங்கள் பலவாகி நின்ற வென்றிக்
கோனவனைக் கொல்லை விடை யேற்றி னானைக்
குழல்முழவம் இயம்பக்கூத் தாட வல்ல
கானவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 8

609 கொலையானை யுரிபோர்த்த கொள்கை யானைக்
கோளரியைக் கூரம்பா வரைமேற் கோத்த
சிலையானைச் செம்மைதரு பொருளான் தன்னைத்
திரிபுரத்தோர் மூவர்க்குச் செம்மை செய்த
தலையானைத் தத்துவங்க ளானான் தன்னைத்
தையலோர் பங்கினனைத் தன்கை யேந்து
கலையானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 9

குவிந்து நிற்றல் அதன் ஒடுக்கத்திலும் என்க இதனை, "விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை" என்னும் திருஞான சம்பந்தர் திருமொழியோடு (திருமுறை. 2.30.3.) வைத்து நோக்குக. உண்டான் - ஒடுக்கினான். உமிழ்ந்தான் - படைத்தான். 'ஒண்ணாது' என்பதன் ஈறுகெட்டது. விண்டான் - நீங்கினான்; சேயனாயினான். கண்டான் - செய்தான்.

608. தேவ வடிவில் தோன்றுதலின், "வானவனை" என்றருளினார். "குணங்கள்" என்றது செயலை; அச்செயல்கள் அனைத்தும் தான் நினைத்தவாறே முடித்தலின், "நின்ற வென்றிக்கோன்" என்றருளிச்செய்தார். "அவன்", பகுதிப் பொருள் விகுதி. "கொல்லை" என்னும் ஐகாரம் சாரியை. "விடை ஏறு" என்பது, இருபெயரொட்டு. "கானவன்" என்றது, காட்டில் ஆடுதல்பற்றி; இதனால். குழலும் முழவமும் இயம்புவன பூதகணங்கள் என்பது பெற்றாம்.

609. கோள் அரி - எல்லாரையும் வெற்றிகொள்ளும் திருமால்; இனி, நரசிங்கமாய்த் தோன்றினமைபற்றி, "கோளரி" என்றார் எனினுமாம். அரி, 'நெருப்பு (தீக்கடவுள்)' என்றலும்

Koviloor Digital Library

பொருந்தும். 'அரியைக்கோத்த' என இயையும். வரை, மேரு மலை. செம்மை - நன்மை. அதனைத் தருபவன் அதனைத் தனக்கு இயல்பாக உடைய சிவபிரானேயாதல் அறிக. திரிபுரத்து ஓர் மூவர், 'சுதன்மன், சுசீலன், சுமாலி' என்பவர். திரிபுரத்து அசுரர்கள், புத்தனும் நாரதனும் மயக்கிச் சொல்லிய உரை களால் மயங்கிச் சிவபத்தியைக் கைவிட்டபொழுதும், அதிற் பிறழாது நின்றவர் இம்மூவரும். அதனால், திரிபுரம் முழுதும் வெந்து நீறுகச் செய்தபொழுது, சிவபிரான், இம்மூவரையும் உய்யக்கொண்டான். இப்பேரருட்டிறத்தினை,

" உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே யுந்தீபற "

என ஆளுடைய அடிகளும், (திருவா. திருவுந்தி. 4) " மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க் கருள் செய்தார் " என ஆளு டைய பிள்ளையாரும், (திருமுறை 1-69-1)

" மூவெ யில்செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவலாளரென் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
மணிமு ழாமுழக் கவ்வருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே "

என ஆளுடைய நம்பிகளும் (திருமுறை - 7. 55. 8.) சிறந்தெடுத் தருளிச்செய்தமை காண்க. இம்மூவர்க்குச் செம்மை செய்தமை தானே, தன்னையடைந்தார்க்கு என்ஞான்றும் இடையூறு வாராது காத்துச் செம்மை தருவன் என்பதற்கு அமையும் சான்று என்பது குறித்தருளியவாறு. தலையான் - முதல்வன். தத்து வங்கள் - காரணப் பொருள்கள். கலை - மான்.

Koviloor Digital Library

610 பொழிலானைப் பொழிலாரும் புன்கூ ரானைப்
புறம்பயனை அறம்புரிந்த புகலூ ரானை
எழிலானை இடைமருதி னிடங்கொண் டானை
ஈங்கோய்நீங் காதுறையும் இறைவன் தன்னை
அழலாடு மேனியனை அன்று சென்றக்
குன்றெடுத்த அரக்கன்தோள் நெரிய ஊன்றுங்
கழலானைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 10

திருச்சிற்றம்பலம்

610. பொழிலான் - உலகமாய் உள்ளவன். புறம்பயம், புகலூர், இடைமருது, ஈங்கோய் இவை சோழநாட்டுத் தலங்கள். அறம்புரிந்த - அறத்தை எப்பொழுதும் விரும்பிச் செய்கின்ற. "புறம்பய மதனில் அறம்பல அருளியும்" (திருவா. கீர்த்தி. 90.) என்றருளினமையால், 'அறம் புரிந்த புறம் பயனை' எனக்கூட்டி யுரைத்தலுமாம். அழல் ஆடு மேனி. நெருப்பு எரிவது போலும் திருமேனி. "அக் குன்று" என்றது, பலரறி சுட்டாய்க் கயிலை மலையைக் குறித்தது.

நல்லூரி னம்பரருள் பெற்றுப்போய்ப் பழையாறை
பல்லூர்வெண் டலைக்கரத்தார் பயிலுமிடம் பலபணிந்து
சொல்லூர்வண் டமிழ்பாடி வலஞ்சுழியைத் தொழுதேத்தி
யல்லூர்வெண் பிறையணிந்தார் திருக்குடமூக் கணைந்திறைஞ்சி.

நாலூர்தென் திருச்சேறை குடவாயி னறையூர்சேர்
பாலூரு மின்மொழியாள் பாகனார் கழல்பரவி
மேலூர்தி விடைக்கொடியார் மேவுமிடம் பலபாடிச்
சேலூர்தண் பணைசூழ்ந்த தென்திருவாஞ் சியமணைந்தார். 216

பெருவாச மலர்ச்சோலைப் பெருவேளூர் பணிந்தேத்தி
முருகாரு மலர்க்கொன்றை முதல்வனார் பதிபிறவுந்
திருவாரும் விளமருடன் சென்றிறைஞ்சி வாகீசர்
மருவாரூ ரெரித்தவர்தந் திருவாரூர் வந்தடைந்தார். 217

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

61. திருக்கன்ருப்பூர்

திருப்பதிக வரலாறு

நாயனுர், திருவாரூரில் தங்கியிருந்தபொழுது வலிவலம், கீழ்வேளூர் பணிந்து கன்ருப்பூர் வணங்கிப் பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 228.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

611 மாதினையோர் கூறுகந்தாய் மறைகோள் நாவா
மதிசூடீ வானவர்கள் தங்கட் கேல்லாம்
நாதனே யேன்றேன்று பரவி நாளும்
நைஞ்சுருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்போழுதும் பூநீர் கோண்டு
வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையால் தோழுமடியார் நேஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. 1

இத்திருப்பதிகம், இறைவன், அன்போடு வழிபடும் அடியவர் உள்ளத்தையே இடமாகக் கொண்டு இனிது விளங்குதலை அருளிச் செய்தது. அதனுல், அவ்வன்பின் செயல்களும், வழிபாட்டு ஒழுக்கநெறிகளும் இதன்கண் இனிதெடுத்து விளக்கியருளப்பட்டன. எனவே, சிவநெறி ஒழுகுவார்க்கு இத்திருப்பதிகம் சிறந்ததொரு செந்நெறியை அருள்வதாய் உளது.

611. பரவி - துதித்து. 'வாசனை' என்னும் வடமொழிப் பதம் 'வாதனை' எனவும் திரிந்து வருவதாம். வாதனையால் - வாசனையோடு; இங்கு, 'விளங்க' என ஒரு சொல் வருவிக்க. இது பூவிற்கு உரியதாக அருளப்பட்டது. 'வைகலும் (நாள் தோறும்)' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. மறவாமை ஒன்றே வேண்டப்படுவதாகலின், வாழ்த்தல் முதலியன வைகலும் செய்ய வேண்டுவவாயின. காதன்மை - அன்பு; காதல் பண்பாதலாலும் பண்பிற்குப் பண்பின்று ஆதலாலும், இதுபோலும் இடங்களில் வரும் பண்புணர்த்தும் மை விகுதி பகுதிப்பொருள் விகுதியேயாம். "காதன்மை கந்தா" எனத் திருக்குறளிலும்

Koviloor Digital Library

612 விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வேளுத்தமைந்த கீளோடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே யென்றுந்
துடியனைய இடைமடவாள் பங்கா வென்றுஞ்
சுடலைதனில் நடமாடுஞ் சோதீ யென்றுங்
கடிமலர்தூய்த் தொழுமடியார்நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 2

இங்ஙனம் கூறப்பட்டது. (507) 'தொழுமிடத்து, அன்பு ஒன்றே இன்றியமையாதது' என்பதனை வலியுறுத்துதற்கு, இறுதிக்கண் மறித்தும் காதன்மையால் தொழும் அடியார்'' என்றும், புறத்துப் பிற இடங்களில் விளங்குதல் பொதுவாக, அகத்து அன்பில் விளங்குதலே உண்மையாகலின், "நெஞ்சினுள்ளே காணலாம்" என்றும் அருளிச்செய்தார். "நெஞ்சினுள்ளே" என்னும் ஏகாரம் உண்மை வகையை நோக்குங்கால் பிரிநிலையாம்; பொதுவகையை நோக்குங்கால் தேற்றமாம். நெஞ்சினுள் விளங்குதல் உண்மையாதல் உணர்த்துவார், "காணலாம்" என்றருளினாராகலின், நெஞ்சினைக் காண்டல் கூடுமாயின் அதனுள் காணலாம் என்பதே கருத்தாம். இத் தலத்துள் கன்று கட்டுதற்கு நடப்பட்டதறிதானே சிவனுருவாயினமையின், இங்குச் சிவபிரானை "நடுதறி" என்றே அருளிச்செய்தார். இதனுள், நாள்தொறும் தொழுதல் சிறப்பாகப் பணித்தருளப் பட்டது.

612. விடிவது, 'விடிதல்' எனத் தொழிற் பெயர்; 'தொழிற்பெயர் உம்மை ஏற்று வினையெச்சமாம்' என்பது, 'வருதலும் போயினான்' என்றாற் போல்வனவற்றுட் காண்க. விடிதல் - பொழுது புலர்தல். "மெய்யில் (உடம்பில்)" என விதந்தோதினமையால், நீர்மூழ்கல் முதலியன முன்னரே அமைந்து கிடந்தனவாம். தற்று - இறுக உடுத்து. "தெய்வம் - மடிதற்றுத் தான்முந் துறும்" (குறள். 1023.) என்றது காண்க. 'கீளொடு கோவணம் தற்று' என்றார், துறந்தார்க்கு இவ் வொழுக்கம் சிறப்பாக உரியதாகலின். செடி - கீழ்மை. கடி - வாசனை. இதனுள், விடியலில் வழிபடுதல் சிறப்பாகப் பணித் தருளப்பட்டது.

Koviloor Digital Library

613 எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே. 3

613. "தாம்" என்பது அசைநிலையாதலின், 'எவரேனு மாக' என்க. "எவரேனும்" என்றது. 'எவ்வகைக் குற்றமுடை யராயினும்' என்றபடி. இலாடம் - நெற்றி. சாதனம் - துணைப் பொருள்; என்றது, உருத்திராக்கம் முதலிய பிற வேடங்களை. 'திருநீறு' ஒன்றேயும், திருவேடமாதற்கு அமையும் என்றற்கு அதனைப்பிரித்தோதியருளினார். இனி, உருத்திராக்கத்தையே சாத னம் என்றல் மரபு' என்பாரும் உளர். உள்கி - (திருவேடத்தின் பெருமையை) நினைந்து. உவராதே - வெறுத்தல் இல்லாமலே; அஃதாவது, 'எவரேனும் என்பதனாற் குறிக்கப்பட்ட குற்றங்களை நினைந்து வெறுத்தல் சிறிதும் இன்றி' என்றபடி. திருவேடங்கள் பலவகையினவாதல் தோன்ற அவற்றை உடையவரை. 'அவரவர்' என்றருளினார். "கண்ட போதே என்னும் பிரிநிலை ஏகாரம் விரைவு குறித்தது. குற்றியலுகரங் கெடாது நிற்றல் சிறப்பின்மையின், 'கண்டபோது' என்னும் பாடம் சிறவாமை யறிக. உகந்து - திருவேடத்தில் உள்ள விருப்பம் எழப்பெற்று. அடிமைத் திறம் நினைந்து - அடியராவார், தலைவனது அடையாளப் பொறியை (முத்திரையை)க் கண்டவுடன், அதனைப் பணிந்தேற்றல் அல்லது, அதனைக் கொணர்ந்தாரது குணங் குற்றம் நோக்கலாமையை உணர்ந்து. உவந்து நோக்கி - திரு வேடம் கிடைக்கப் பெற்றமைக்கு மகிழ்ச்சி மிக உடையராய் முகமலர்ந்து நோக்கி. "இவர்" என்றது திருவேடம் உடையா ரையும், "அவர்" என்றது இறைவரையும். "தேவர்" என வந்த இரண்டிடத்தும் தெரிநிலை ஓகாரங்கள் தொகுத்தலாயின. இரண்டு ஆட்டாது - உள்ளத்தை இருதலையாகச் செலுத்தாது; என்றது, ஆராயாது என்றபடி 'இரண்டாக ஆட்டாது' என ஆக்கம் வருவித்துரைக்க. "ஒழிந்து" என்றது, துணிவுப் பொருட்டு. ஈசன் திறமே பேணி - இறைவனிடத்துச் செய்யும்

Koviloor Digital Library

614 இலங்காலஞ் செல்லாநா ளென்று நெஞ்சத்
திடையாதே யாவர்க்கும் பிச்சை யிட்டு
விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு
மெய்யன்பு புகப்பெய்து பொய்யை நீக்கித்
துலங்காமெய் வானவரைக் காத்து நஞ்சம்
உண்டபிரா னடியிணைக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 4

செயல்களையே பேணிச்செய்து. கவராதே - அங்ஙனம் செய்யுமிடத்து ஒருஞான்றும் மனம் இரண்டுபடாமலே; கண்டதுமுதல், எதிர்கொண்டு வழிபாடுகள் பலவும் செய்து விடுக்குங்காறும், விடுத்த பின்பும் எப்பொழுதும், திருவேடமுடையாரைச் சிவனெனவே கோடலிற் பிறழாமை வேண்டும் என்பார், 'உவராதே' என்பது முதலாக, "கவராது" என்பதுகாறும் அவ்வவ்விடத்தும் அதனை எடுத்தோதி வலியுறுத்தருளினர். இதனால், திருவேடந் தொழுதல் சிறந்தெடுத்துப் பணித்தருளப்பட்டது, 'திருவேடமுடையாரைத் தொழும் அடியார் நெஞ்சினுள் சிவபிரானைக் காணலாம்' என்றதனால். அப்பெருமான் அத்திருவேடமே தானாய் நின்று அருளுவன் என்பது இனிது விளங்கும்.

614. இலம் - (யாம்) பொருள் இலம். காலம் செல்லா நாள் - இக்காலம் எம்மால் ஒன்றும் இயலாத காலம்; 'என்றெல்லாம் எண்ணி நெஞ்சத்தில் இடையாதே (சிறிதும் தளர்ச்சியுறுமல்)' என்க.

"இலங்காலம்" என்றற்கு இவ்வாறன்றி, "இலம்படுபுலவர்" (மலைபடுகடாம்-576.) என்புழிப்போல, 'இன்மையுட்பட்ட காலம் என உரைக்க' எனின், 'இன்மை' என்னுங் குறிப்புணர்த்தும் 'இலம்' என்னும் சொல்லின் ஈற்று மகரங்கெடாது நிற்றல் வருமொழிவினையாய விடத்தே என்பது, "இலமென் கிளவிக்குப் படுவரு காலை" (தொல். எழுத்து - 316) என, வருமொழியை எடுத்தோதியதனாற் பெறப்படுதலின், அங்ஙனம் உரைக்கலாகாமை யறிக. "இலம்படு" என்றாற்போல்வனவற்றை, 'இலம்பட்ட (இன்மை உண்டாகிய)' என அவ்வழியாக விரிப்பின், பின்னர் வருகின்ற, "புலவர்" என்றாற்போலும் பெயர்களோடு இனிது இயையாமையின், 'இலத்துக்கட்பட்ட, (இன்மைக்கட்பட்ட) என்றாற்போல, வேற்றுமையாக விரிக்க' என்பார்.

Koviloor Digital Library

அதன்கண் ஐயம் நிகழாதவாறு, பொது விதியால், மரக்கோடு என்ருற்போல மகரங்கெட்டே முடிதலையும், "மெய்பிறிதாகிடத்து" (ஷை - 157) என்னும் நூற்பாவினுள் தன்னின முடித்தலால், "கன்னின்ரு னெந்தை கணவன் களப்பட்டான்" (பு. வெ. மா. 176.) "புலம்புக் கனனே புல்லணற் காளை" (புறம். 258.) என்ருற் போல மகரங்கெட்டுங் கெடாதும் உறழ்ந்து முடிதலையும் விலக்கி, ஈண்டு மகரங் கெடாதே நிற்றல் வேண்டும்' என யாப்புறுத்தற் பொருட்டு, மேற்காட்டிய நூற்பாவினை ஓதினுர் ஆசிரியர்; அஃது உணராமையால், உரையாளர், ஆண்டுப்பெரிதும் இடர்ப்பட்டு உரை உரைத்தனர்; அவையெல்லாம் ஈண்டுத் தோன்றக்கூறிற் பெருகும். "இலம்பாடு (இன்மை உண்டாதல்) (தொல். சொல். 260.) என்ருற்போல அவ்வழியாய், அமைவன, "அல்வழி யெல்லாம் மெல்லெழுத் தாகும்" (தொல். எழுத்து - 314.) என்ற தனுனே முடியும் என்க.

பசி தீர்க்கப்படுதற்கு, பசித்துவந்து இரந்தார் அனைவரும் உரியராகலின், "யாவர்க்கும்" என்றருளினுர். "நல்விருந் தோம்புவான்" (குறள் - 84) என விருந்தினைச் சிறப்பித்துக் கூறினுற் போலாது, "அற்ரு ரழிபசி தீர்த்தல்" (குறள் - 226) என வாளாதே கூறியதுணர்க. "நெறி" எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, "விலங்காதே" என்ருர். அறிவு-இறைவன் எல்லாநலங்களையும் தானே தரும் பெருங்கருணையாள னுதலை அறியும் அறிவு. மெய்யன்பு - பயன் கருதாது செலுத்தும் அன்பு; 'அதனை வருந்தியேனும் பெறுக' என்பார், "புகப் பெய்து" என்றருளினுர். பொய் - பயன் கருதி அன்பு செய்தல். அவ்வாறு செய்தல் வழிமுறையிற் பயன் தருவதா யினும், இறைவன் நெஞ்சினுள்ளே விளங்கித் தோன்றுதலாகிய ஈண்டுக் குறிக்கும் பயனை நேரே தாராமை, பற்றி "நீக்கி" என்றருளினுர். துலங்காமெய் - மெய்துலங்கா; மெய்யுணர்வு விளங்கப்பெருத (வானவர் என்க) 'துலங்காமே' என்பது பாடம் அன்று. கலங்காதே - மனம் சிறிதும் தடுமாற்றம் இன்றி; நன்னெறியைத் தெளிந்து, இதனுல், உயிர்களிடத்து இரக்க முடைமை சிறந்தெடுத்துப் பணித்தருளப்பட்டது.

Koviloor Digital Library

615 விருத்தனே வேலைவிட முண்ட கண்டா
விரிசடைமேல் வெண்டிங்கள் விளங்கச் சூடும்
ஒருத்தனே உமைகணவா உலக மூர்த்தீ
நுந்தாத வொண்சுடரே அடியார் தங்கள்
பொருத்தனே யென்றென்று புலம்பி நாளும்
புலனைந்தும் அகத்தடக்கிப் புலம்பி நோக்கிக்
கருத்தினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 5

616 பொசியினால் மிடைந்துபுழுப் பொதிந்த போர்வைப்
பொல்லாத புலாலுடம்பை நிலாசு மென்று
பசியினால் மீதூரப் பட்டே யீட்டிப்
பலர்க்குதவ லதுவொழிந்து பவள வாயார்
வசியினா லகப்பட்டு வீழா முன்னம்
வானவர்கோன் திருநாமம் அஞ்சுஞ் சொல்லிக்
கசிவினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 6

615. விருத்தன் - யாவரினும் முதிர்ந்தவன். உலக மூர்த்தி - உலகம் முழுவதற்கும் ஒருவனாகிய கடவுள். பொருத்தன் - உறவினன். ‘பொருந்து’ என்னும் முதனிலை திரிந்த ‘பொருத்து’ என்பது, ‘உறவு’ என்னும் பொருள் தந்தது. ‘‘புலம்பி’’ இரண்டனுள் முன்னது, ‘முறையிட்டு’ என்னும் பொருளது, பின்னது, ‘பிறிது பற்றின்றி’ என்னும் பொருளது. ‘‘கருத்து’’ என்றது விருப்பத்தினை. இதனால், முறையீடும் பற்றுநீங்குதலும் சிறந்தெடுத்துப் பணித்தருளப்பட்டன.

616. பொசி-கசிவு; என்றது, செந்நீர் வெண்ணீர் நிணம் முதலியவற்றை. பொதிந்த - மூடிய. பொல்லாத - இழிந்த. நிலாசும் - நிலைபெற்றிருக்கும்; ‘நிலாவும்’ என்பதே பாடம் போலும்! ‘‘ஈட்டி’’ என்பதற்குப் பொருளை என்பது வருவிக்க. வசி - வசப்படுத்தல். வீழ்தல் - மெலிதல். அஞ்சு - அஞ்செழுத்து. கசிவு - நெகிழ்ச்சி: அன்பு. வானவர்கோன் - சிவபிரான். இதனால், இளமை நிலையாமை கருதி விரைந்து இறைவனை வழிபடுதலும், திருவைந்தெழுத்தை ஓதுதலும் சிறந்தெடுத்துப் பணித்தருளப் பட்டன.

Koviloor Digital Library

617 ஐயினுல் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினுற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனுர்க் காளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினுல் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. 7

618 திருதிமையால் ஐவரையுங் காவ லேவித்
திகையாதே சிவாயநம வென்னுஞ் சிந்தைச்
சுருதிதனைத் துயக்கறுத்துத் துன்ப வெள்ளக்
கடல்நீந்திக் கரையேறுங் கருத்தே மிக்குப்
பரிதிதனைப் பற்பறித்த பாவ நாசா
பரஞ்சுடரே யென்றென்று பரவி நாளுங்
கருதிமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. 8, 9

617. ஐ - கோழை. மிடறு - குரல். " ஆவியார் " என்றது, நிலையாமை பற்றிய இழித்தற் குறிப்பு. கண்ணை மையினுல் எழுதி என்க. இதனுல், யாக்கை நிலையாமையை அறிந்து, சிவபிரானை விரைந்து தொழுதல் பணித்தருளப்பட்டது.

618. திருதி - மன உறுதி; 'மன உறுதியாகிய பண்பினுல்' என்றபடி. ஐவர் - ஐம்பொறிகள். காவல் ஏவி - காவலில்வைத்து. திகையாதே - மனங் கலங்காமலே. சுருதி - மறை; மந்திரம். 'மானதமாகக் கணிக்கப்படுவது' என்பார், " சிந்தைச் சுருதி " என்ருருளினுர்; " சுருதிதனை " என்பதைச் 'சுருதிதன்னுல்' எனத் திரிக்க. துயக்கு - மயக்கம். 'சுருதி தன்னுல் துயக்கறுத்து' என்க. 'மிகக் கருதி' என மாறிக் கூட்டுக. கருதி - தியானித்து, இதனுல், திருவைந்தெழுத்தை ஓதுமுறைமை அருளப்பட்டது.

Koviloor Digital Library

619 குனிந்தசிலை யாற்புரமூன் றெரித்தாய் என்றுங்
கூற்றுதைத்த குரைகழற்சே வடியாய் என்றுந்
தனஞ்சயற்குப் பாசுபத மீந்தாய் என்றுந்
தசக்கிரிவன் மலையெடுக்க விரலால் ஊன்றி
முனிந்தவன்தன் சிரம்பத்துந் தாளுந் தோளும்
முரணழித்திட் டருள்கொடுத்த மூர்த்தீ யென்றுங்
கனிந்துமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. 10

திருச்சிற்றம்பலம்

இத் திருப்பதிகத்தின் ஒன்பதாம் திருத்தாண்டகம் கிடைத்திலது.

619. தனஞ்சயன் - அருச்சுனன். தசக்கிரிவன் - இராவணன். முரண் - வலிமை. 'தாளையும் தோளையும் முரண் அழித்து' என்றதனை, 'பசுவைப் பால் கறந்தான்' என்பது போலக் கொள்க. கனிந்து - அன்பு கொண்டு. இதனால், இறைவன் புகழைப் பேசுதல், சிறந்தெடுத்துப் பணித்தருளப்பட்டது.

ஆண்டவர செழுந்தருள வாரூரி லன்பர்கடாம்
நீண்டசடை முடியார்பா னிறைந்தவருள் பெற்றுடையார்
காண்டகுமா ளிகைமாடங் கவின்சிறந்தோங் கிடவெங்குஞ்
சேண்டிகழ்வீ திகள்பொலியத் திருமலிமங் கலஞ்செய்தார். 218

வல்லமண் குண்டர்தம் மாயை கடந்து மறிகடலிற்
கல்லே மிதப்பாகப் போந்தவர் வந்தா ரெனுங்களிப்பால்
எல்லையி ெருண்ட ரெயிற்புறஞ் சென்றெதிர் கொண்டபோது
சொல்லி னரசர் வணங்கித் தொழுதுரை செய்தணைவார். 219

பற்ருென் றிலாவரும் பாதக ராகு மமணர்தம்பால்
உற்ற பிணியொழிந் துய்யப் போந்தேன் பெறலாவ தொன்றே
புற்றிடங் கொண்டான்றன் ருெண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமென்
றற்ற வுணர்வொடு மாரூர்த் திருவீதி யுள்ளணைந்தார். 220

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

62. திருவானைக்கா

திருப்பதிக வரலாறு

நாயனுர், திருப்பழையாறைவடதளியில் சமணர் மறைத்த சிவலிங்கத்தை, அமுது செய்யாதிருந்து வெளிப்படுத்தி அமணர் தூரறுத்து வழிபட்டுப் பொன்னியின் இரு கரையிலுமுள்ள தலங்களை வணங்கித் திருவானைக்காவில் சிலந்திக்கு அருளிய பெருமான் கழல் தொழுது பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு - 301, 302.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

620 எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
சேத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன்என்செய்கேனே.

இத் திருப்பதிகம், திருவானைக்காப் பெருமானது திருவடியை அடையப் பெற்ற மகிழ்ச்சியால், ‘ இனி, வேறோர் உறவும் வேண்டுவது இல்லை ; துன்பத்திற்கும் அஞ்சேன் ’ என்று அருளிச் செய்தது.

620. “எத்தாயர்” என்பது முதலியவற்றில் எகரவினு, ‘எத்துணைச் சிறந்த’ என உயர்வு குறித்து நின்றது. ‘ நற்றாய், செவிலித்தாய், முதலாகத் தாயர் பலராகலின், “ தாயர் ” எனப் பன்மையாக அருளினுர். மாடு - செல்வம். “சும்மாடு” என்றது, ‘ தாங்குவது ’ என்னும் பொருட்டாய்நின்றது. “ ஏவர் ” என்றதனை, “ சுற்றத்தார் ” என்றதன் பின்னர்க் கூட்டி, ‘ மற்றும் யாவர் தாம்’ என உரைக்க. “ சும்மாடாம்” என்றாற்போல, ‘நல்லராவார்’ என ஆக்கம்வருவிக்க. “ சும்மாடாம்”, “ நல்லாராவர் ” என்னும்

Koviloor Digital Library

பயனிலைகளை எதிர்நிரல் நிறையாகக் கொடுக்க. "நல்லார்" என்பது உயர்திணையாகலின், அது "தாயர்" முதலிய நான்கெழுவாய்கட்கும் பயனிலையாம். 'ஒருவரும்' என்னும் முற்றும்மை தொக்கது, 'இல்லையாய்' என எச்சமாக்குக. தீ மூள்வதற்கு இடப்படுவன அனைத்தும், 'விறகு' எனப்படுமாதலின், எளிதிற் பற்றுதற்கு இடுவனவற்றை. "சிறுவிறகு" என எடுத்தோதியருளினார். 'வெந்து தணியுந் துணைதானும் நில்லாது, மூட்டி விட்டு விரைந்து போவர்' என்பது உணர்த்துதற்கு; தீ மூண்டெரிதல் நிகழாநிற்கத் தாம் சென்று கொண்டிருப்பர் என்னும் பொருள்பட, "சொல்லாநிற்பர்" என, எதிர்காலத்துள் நிகழ்காலம் பற்றி ஓதியருளினார். "உதவுவார் ஒருவர் இல்லை, செல்லாநிற்பர்" என்றது, "ஏவர் நல்லார்" என்புழி, 'அஃது என்னை' என்றெழும் அவாய் நிலையை நிரப்பியவாறு. சித்து - அறிவு; அது, சத்தியைக் குறித்தது; இறைவனது வேடங்களெல்லாம் சத்திவடிவமே யாதலின் அவ்வாறு அருளிச்செய்தார்; காயமோ மாயை யன்று காண்பது சத்திதன்னால்" எனவும்,

"உருவருள் குணங்க ளோடும் உணர்வரு ளுருவில் தோன்றும்
கருமமும் அருள்அ ரன்றன் கரசர ணாதி சாங்கம்
தரும்அருள் உபாங்க மெல்லாந் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த னன்றே"

எனவும் (சிவஞானசித்தி சூ. 1 - 41, 47) அருளியன காண்க.

பொன்னி - காவிரியாறு; அஃது என்றும் வற்றாது ஓடுதலின் "நீடு பொன்னி" என்றருளிச்செய்தார். "பெற்றால்" என்று பெறுதார்போல எதிர்காலத்தாற் கூறியது, பெற்றதன் அருமை நோக்கி யென்க. அல்லகண்டம் - துன்பம். "கொண்டு" என்பது, மூன்றும் வேற்றுமை ஆன் உருபின் பொருள்படுவதோர் இடைச்சொல்.

என் செய்கேன் - வருந்துதல் என் செய்யக்கடவேன்; யாதுமில்லை என்றவாறு; 'அவை என்னை ஒன்றும் செய்யா' என்பது கருத்து; ஆகவே, 'தாயர் முதலியவரை நல்லாராகவும், மாட்டினைச் சும்மாடாகவும் கருதிக் கிடப்பின், யான் துன்பக்கடலுள் அழுந்தி யொழிவேன்' என்றபடி. 'துன்பம்' என்றது, பிறப்பினையும், அதன்கண் வரும் 'ஆதியான்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தெய்விகம்' என்னும் மூன்றனையுமாம்,

Koviloor Digital Library

621 ஊனாகி உயிராகி யதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன்என்செய்கேனே.

622 ஒப்பாயிவ் வுலகத்தோ டொட்டி வாழ்வான்
ஒன்றலாத் தவத்தாரோ டுடனே நின்று
துப்பாருங் குறையடிசில் துற்றி நற்றுன்
திறம்மறந்து திரிவேனைக் காத்து நீவந்
தெப்பாலும் நுண்ணுணர்வே யாக்கி யென்னை
ஆண்டவனே யெழிலானைக் காவா வானோர்
அப்பாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன்என்செய்கேனே.

ஆதியான்மிகம் முதலிய மூன்றும் மேலே (பக். 174.) குறிக்கப் பட்டன.

621. "ஊன்" என்றது, உடம்பை. ஏதும் - சிறிதும். 'நானே சிறிதும் அறியாதபடி என்னுள்ளே வந்து' என்றது, 'என்றுமே என்னுள் இருந்து' என்றவாறு. நின்றியூர், சோழ நாட்டுத் தலம். 'அனைத்தும் நீயே ஆயினமை உணரப்படுதலின் சிலர் உறவும் சிலர் பகையுமாதல் நீங்குதலும், நீயே என் உணர்விற்கு முதலாதல் உணரப்படுதலின், 'யான்' என்பது நீங்குதலும், ஞானமே (அறிவே) வடிவாய் நிற்றலின் இன்பம் இடையறாது ஈண்டுதலும் உளவாமாகலின், உன் பொற்பாதம் அடையப்பெற்றால் எனக்கு வரும் துன்பம் யாதுளது' என்றருளிச் செய்தவாறு.

622. "ஒப்பாய் இவ்வுலகத்தோடு ஒட்டி வாழ்வான்" என்றதனை, "திரிவேனை" என்றதன்பின் கூட்டி உரைக்க. "வாழ்வான்" என்னும் எச்சம், "காத்து" என்பதனோடு முடியும். இவ்வுலகத்தோடு ஒப்பாய் ஒட்டி வாழ்தல் -

Koviloor Digital Library

கண்டார் அருவருக்குமாறு நக்கரையாகாது உடையுடுத்தும், தலைமயிரைப் பறித்தல், நின்றுண்ணல், வெயில் நின்றுழறல் முதலியன இன்றியும் பிறர்போல நின்று ஒத்து வாழ்தல். நாயனர் சமணரோடு இருந்தபொழுது இவ்வாறின்றி உலகத்தோடு ஒட்ட ஒழுகாதொழிந்தமையை நினைந்து, 'உலகத்தொடு ஒட்ட ஒழுகுவிக்கவும் திருவுளங்கொண்டருளினய்' என்றருளினர். ஒன்றலா - ஒன்ருத; பொருந்தாத. தவத்தார், சமணர். துப்புஆரும் - உண்ணல் பொருந்திய. "குறையடிசில்" என்றது. 'கஞ்சி' என்றவாறு. துற்றி - நிறைத்து. 'துறு' என்பதேயன்றி, 'துற்று' என்பதும் முதனிலையாமாதலின், "துற்றி" என வந்தது. 'நன்று' என்பது 'நற்று' என வலித்தலாயிற்று. 'நீ வந்து காத்து' என மாற்றியுரைக்க. முற்பட்டமையை, "வந்து" என்றருளினர். காத்தமை, சூலை வாயிலாக மீட்டமை. எப்பாலும் - எப்பொருட்கண்ணும்; இஃது, "ஆக்கி" என்பதனேடு இயையும். திருவருள் பெற்ற பின்னர், நாயனர் எங்கும் சிவனையன்றி வேறுபொருளைக் காணுமையின் "எப்பாலும் நுன்னுணர்வேயாக்கி" என்றருளினர். "நுன் உணர்வு" என்பதனை, 'நுன்னை உணரும் உணர்வு' என விரிக்க. 'நும்' என்னும் பன்மைப் பெயர்க்கு உரிய ஒருமைப்பெயராய், 'நுன்' என்பது திருமுறைக்கண் வழங்கும்; இதுவே, பிற்காலத்தில் நகரங்கெட்டு, 'உன்' எனமருவி உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் பயின்று வருவது. எப்பாலும் இறைவன் உணர்வே யாதலையே, 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் - மெய்ப்பொருள் காண்ப தறிவு' (குறள்-355) என மெய்யுணர்வாக அருளிச்செய்தார் திருவள்ளுவ நாயனர். அஃதுணராது, அவ்வருமைத் திருக்குறட்கு மாயாவாத உரை உரைத்தார், பரிமேலழகர். அவ்வுரை போலி என்பது, அவர் காட்டிய எடுத்துக்காட்டுள் அவர் கற்பனை எனக் காட்டிய அனைத்தும் உண்மையேயாதலையும், கற்பனையாவது கானலை நீரென்றுணர்த்தல்போலும் மயக்க உணர்வேயாகலின், அவர் காட்டினுற்போல்வனவற்றை உண்மை என்னுது கற்பனை என்பார்க்கு, யாண்டும் கற்பனையின் வேருய் உண்மை இல்லா தொழிதலையும், அவர் காட்டினுற் போல்வனவற்றை, நீரில் எழுத்தும் நிகழ் கனவும்போல நிலையா தொழிதல் பற்றி, 'நிலையில் பொருள்' என்றல் அன்றி, 'கற்பனைப் பொருள்' என்றல் ஆசிரியர் கருத்தன்று என்பதற்கு, "நில்லாத வற்றை நிலையின வென்றுணரும் - புல்லறி வாண்மை கடை" (331) என்னும் திருக்குறளே

Koviloor Digital Library

623 நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சக் கள்வா
நிறைமதியஞ் சடைவைத்தாய்அடையாதுன்பால்
முனைத்தவர்கள் புரமூன்று மெரியச் செற்றாய்
முன்னானைத் தோல்போர்த்த முதல்வா வென்றுங்
கனைத்துவரும் எருதேறுங் காள கண்டா
கயிலாய மலையாநின் கழலே சேர்ந்தேன்
அனைத்துலகும் ஆள்வானே ஆனைக் காவா
அல்லகண்டங் கொண்டடியேன்என்செய்கேனே.

போதிய சான்றுதலையும் நுனித்துணர வல்லார்க்குத் தெற்றென விளங்குவதாம். ஆகவே, அவர் காட்டினாற் போல்வனவற்றை, 'பொய்' என ஓரோவழி உயர்ந்தோர் கூறுதல் நிலையாமை யுடையதென்னுங் கருத்தானன்றி, கற்பனை யென்னுங் கருத்தான் அன்று என்பது விளங்கும். விளங்கவே, 'பொய்ப்பொருள்' எனப்படுவன ஒருநிலையின் நில்லாது திரிந்து பலநிலைப்பட்டுச் செல்வன என்பதும், 'மெய்ப்பொருள்' என்பது, அவ்வாறன்றி யாண்டும் ஒருபெற்றித்தாய்த் திரிபின்றி நிற்பது என்பதும் போதரல் காண்க.

இறைவனை அவனது திருவருள் கண்ணாகக் காணப் பெற்றோர், பின்னர் எவ்விடத்திலும் அவனை யன்றி வேறொரு பொருளையும் காணுதல் இல்லை என்பதனையும், அங்ஙனம் அவர் காணாதொழிதற்குக் காரணம், அவையெல்லாம் மயக்க உணர் வாகிய அஞ்ஞானமே யாதலின், அவ்வஞ்ஞானம் அவர்மாட்டு இல்லாதொழிந்தமையேயாம் என்பதனையும் சிவஞான சித்தி கீழ்வருமாறு விளக்குகின்றது;

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் ; பதார்த்தங்கள் பாரார் ; பார்க்க
வருஞானம் பலஞானம் : அஞ்ஞான விகற்பம் ;
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கம்
தருஞானம்; போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும் ;
திருஞானம் இவையெல்லாங் கடந்தசிவ ஞானம் ;
ஆதலால் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்"

(சூ. 11. 2.)

623. நினையாதவர் நெஞ்சில் ஒளிந்திருத்தல் நோக்கி, வஞ்சக் கள்வா" என் றருளிச்செய்தார். 'உன்பால் அடை யாது' என மாற்றுக. 'முனைந்தவர்' என்பது வலிந்து

Koviloor Digital Library

624 இம்மாயப் பிறப்பென்னுங் கடலாந் துன்பத்
திடைச்சுழிப்பட் டிளைப்பேனை இளையா வண்ணங்
கைம்மான மனத்துதவிக் கருணை செய்து
காதலரு ளவைவைத்தாய் காண நில்லாய்
வெம்மான மதகரியி னுரிவை போர்த்த
வேதியனே தென்னானைக்காவுள்மேய
அம்மான்நின் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன்என் செய்கேனே.

நின்றது; 'போர்செய்யமுற்பட்டவர்' என்பது பொருள். 'முனித்தவர்' என்னும் பாடத்திற்கும் வலித்தல் கொள்க. கனைத்தல் - ஒலித்தல். காளகண்டன் - நஞ்சு பொருந்திய கழுத்தினை உடையவன். "உன் கழலே சேர்ந்தேன்" என்பதனை, "ஆனைக் காவா" என்பதன் பின் கூட்டி, 'ஆதலின்' என்னும் சொல் லெச்சம் வருவித்து உரைக்க.

624. மாயம் - நிலையின்மை. கை மான மனத்து உதவி - கை (கொடுத்தல்) போல மனத்தின்கண் உதவிசெய்து ; என்றது, 'குழியில் வீழ்ந்து கிடப்பாரைக் கையால் எடுத்து வழியிற் செலுத்துதல்போல, சமணசமயக் கொள்கையிலே அழுந்திக் கிடந்த மனத்தைத் திருப்பி உனது திருவருள் நெறியிற் செலுத்தி' என்றவாறு. இவ்வாறு உதவியதாகிய கருணையைச் செய்ததனோடு அமையாது, பின்னரும் நீற்றறை முதலிய பல வற்றால் துடிதுடித்து இறவாதவாறு காத்தருளினை என்பார், "உதவிக் கருணைசெய்து" எனவும், "காதலரு ளவை வைத்தாய்" எனவும் இருகாற் கூறியருளினார். 'இவ்வா றெல்லாம் உடன் நின்று தாயினும் சாலப் பரிந்தருளினாய் எனினும், ஊனக் கண்ணாற் காணுமாறு வெளிநின்றாயல்லை' என்றற்கு, "காண நில்லாய்" எனக் கூறியருளினார். 'இவ்வா றெல்லாம் செய்த உன் அருளாலே உன் பாதத்தை நான் அடையப் பெற்றேன்' என்பது திருவுள்ளம். வெம்மான மதகரி - வெவ்விய பெரிய மதமுடைய யானை. "அம்மான்" என்றதும் விளிப்பெயர்.

Koviloor Digital Library

625 உரையாரும் புகழானே யோற்றி யூராய்
கச்சியே கம்பனே காரோ ணத்தாய்
விரையாரும் மலர்தூவி வணங்கு வார்பால்
மிக்கானே அக்கரவம் ஆரம் பூண்டாய்
திரையாரும் புனற்பொன்னித் தீர்த்தம் மல்கு
திருவானைக் காவிலுறை தேனே வானோர்
அரையாவுன் போற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கோண்டடியேன்என்செய்கேனே.

626 மையாரும் மணிமிடற்றாய் மாதோர் கூறாய்
மான்மறியும் மாமழுவும் அனலு மேந்துங்
கையானே காலனுடல் மாளச் சேற்ற
கங்காளா முன்கோளும் விளைவு மானாய்
செய்யானே திருமேனி யரியாய் தேவர்
குலக்கோழுந்தே தேன்னானைக் காவுள் மேய
ஐயாவுன் போற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கோண்டடியேன்என்செய்கேனே.

625. உரை ஆரும்-புகழுவார் புகழும் சொற்களில் எல்லாம் நிறைந்த. விரை ஆரும் - வாசனை நிறைந்த. மிக்கான் - மிகுந்து விளங்குபவன். ‘அக்கினையும் அரவத்தையும் ஆரமாகப் பூண்டவனே’ என்க. தீர்த்தம் - தெய்வயாறு; ‘பொன்னி யாகிய தீர்த்தம்’ என்க. மல்கு - நீர்நிரம்பி ஓடும் இடமாகிய. ‘சோலையில் உள்ள தேனே’ என்பது நயம். அரையன் - அரசன் ; தலைவன்.

626. மை ஆரும் - கருமை பொருந்திய. மணி - அழகு; ‘நீலமணி போலும்’ என்றுமாம். “முன் கோள்” என்றது, முற்பிறப்புக்களில் செய்துகொள்ளப்பட்ட வினையை. விளைவு - அவ்வினையின் பயன். ‘திருமேனி செய்யானே’ என மாற்றுக. செய்யான் - செந்நிறம் உடையவன்; “திருமேனி செய்யான்” எனச் சினை முதலொடு சார்த்தி முடிக்கப்பட்டது. ‘யாவர்க்கும் அரியாய்’ என்க. குலம் - கூட்டம். “கொழுந்து” என்றது ‘தலையாயவன்’ என்றவாறு.

Koviloor Digital Library

627 இலையாருஞ் சூலத்தாய் எண்டோ ளானே
எவ்விடத்தும் நீயல்லா தில்லை யென்று
தலையாரக் கும்பிடுவார் தன்மை யானே
தழல்மடுத்த மாமேருக் கையில் வைத்த
சிலையானே திருவானைக் காவுள் மேய
தீயாடீ சிறுநோயால் நலிவுண் டுள்ளம்
அலையாதே நின்னடியே அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

627. இலை ஆரும் - தகட்டு வடிவம் பொருந்திய. இல்லை என்று - கடவுளர் பிறர் இல்லை என்று உணர்ந்து; இவ்வா றுணர்தலே, 'சிவஞானம்' எனப்படுவது என்க. இச் சிவ ஞானத்தாற் சிவனை வணங்குவோர் மிகச்சிலரேயாதல் பற்றியே "ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்" (திருமுறை 5-91-3) எனத் திருக்குறுந்தொகையுள் அருளிச்செய்தார். தன்மையான் - தன்மைக்கண் விளங்குபவன்; என்றது, 'அவர் தன்மை தன் தன்மையே யாம்படி ஆண்டு விளங்கி நிற்பவன்' என்றவாறு; எனவே, 'சிவனது தன்மை இத்தகையது' என்பதைச் சிவ ஞானிகள்பாலே நம்மனோர் காண்டல் கூடும் என்பது போந்தது. இதனையே,

"ஒன்றுங் குறியே குறியாத லால்அதனுக்
கொன்றுங் குறியொன் றிலாமையினால் - ஒன்றோ
டுவமிக்க லாவதுவுந் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று"

என விளக்கிற்று, 'திருக்களிற்றுப்படியார்' என்னும் திரு நூல் (10).

தலையாரக் கும்பிடுதல், தலைமேற் கைகுவித்துக் கும்பிடுதல்; தலைக்குமேல் உயரக் குவிப்பினும் அவ்வாறு உயர்வதற்கு எல்லையாய் நின்று தலை இன்புறும் என்க. தழல் மடுத்தது, திரிபுரங்களை. 'கையில் வைத்த மாமேருச் சிலையாய்' எனக் கூட்டி, 'மடுத்த சிலையாய், வைத்த சிலையாய், மேருச் சிலையாய்' எனத் தனித்தனி முடிக்க. "கையில் வைத்த" என்ற விதப்பு, 'மலை கையில் எடுக்க ஒண்ணாததாக, எல்லா மலைகளினும் மிகப் பெரிதாகிய மகாமேருமலையை எளிதிற் கையிலே வைத்தவன்' என்பது விளக்கிநின்றது. அலையாதே - வருந்தாதபடியே; 'அலையாதே அடையப் பெற்றால்' என்க.

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM KOVILUR-630 307 MANAGIRI VIA

628 விண்ணாரும் புனல்பொதிசெஞ் சடையாய் வேத
நெறியானே யெறிகடலின் நஞ்சமுண்டாய்
எண்ணாரும் புகழானே உன்னை யெம்மான்
என்றென்றே நாவினில்எப் பொழுதும் உன்னிக்
கண்ணாரக் கண்டிருக்கக் களித்தெப் போதுங்
கடிபொழில்சூழ் தென்னானைக் காவுள் மேய
அண்ணாநின் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன்என்செய்கேனே.

629 கொடியேயும் வெள்ளேற்றாய் கூளி பாடக்
குறட்பூதங் கூத்தாட நீயும் ஆடி
வடிவேயும் மங்கைதனை வைத்த மைந்தா
மதிலானைக் காவுளாய் மாகா ளத்தாய்

628. விண் ஆரும் புனல் - விண்ணுலகத்திற் பொருந்திய கங்கை. பொதி - கரந்த. சிவபிரானை இன்றிப் பிறரெல்லாத் தேவரும் கூடிச் செய்த தக்கன் வேள்வி முற்றாது கெட்டு, அவனும் தலை இழந்தமையின், 'வேதநெறியின் முதற்கடவுள் சிவபிரானே என்பதுதெற்றென விளங்கிக் கிடத்தலின், "வேதநெறியானே" என்றருளிச்செய்தார். எண் ஆரும் - எண் என்பன எல்லாம் நிரம்பிய: என்றது, 'எண்ணுட்படாத' என்றவாறு. 'உன்னை எப்பொழுதும் எம்தலைவன் என்று உரிமையோடு மனத்தினால் நினைந்தும் நாவினால் சொல்லியும், கண்ணாற்கண்டும் எப்போதும் களித்திருக்குமாறு உன் பொற்பாதம் அடையப்பெற்றால்' எனக்கொண்டு கூட்டிப் பொருள் உரைக்க. "நாவினால்" என்றதனால், 'சொல்லி' என்பதும், "உன்னி" என்றதனால் மனத்தினால் என்பதும் தாமேவந்து இயையும். அவை இரண்டிற்குமாகவே, "என்று என்று" என இருமுறை அருளிச்செய்தார். இவற்றால், நாயனாருக்கு ஆனைக்கா அண்ணலிடத்து உண்டாகிய அளவிலா ஆர்வம் புலனாவதாம். அண்ணா - அண்ணால்; தலைவனே.

629. கொடி ஏயும் - கொடியிற் பொருந்திய; 'கொடியாகப் பொருந்திய' என்றுமாம். கூளி - பேய். 'பூதம் இணையொத் தாடும்' என்க. "நீயும்" என்றது, 'நின்னவார் பிறரில்லாத சிறப்புடையையாகிய நீ, அக்குறட்பூதத்தோடு நின்று ஆடுகின்றாய்' என அவனது எளிமைத் தன்மையை நினைந்து

Koviloor Digital Library

படியேயுங் கடலிலங்கைக் கோமான் தன்னைப்
பருமுடியுந் திரள்தோளும் அடர்த்து கந்த
அடியேவந் தடைந்தடிமை யாகப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

திருச்சிற்றம்பலம்

அருளியவாறு. ''ஆடி'' என்னும் எச்சம் எண்ணுப்பொருட்டு. வடிவு ஏயும் - அழகு பொருந்திய. மாகாளம், வைப்புத்தலம். "படி ஏயும்" என்றது. "படியுடையார் பற்றமைந்தக் கண்ணும்" (குறள் - 606) :என்புழிப்போல, 'நிலம் முழுதும் உடைய' எனப்பொருள் தந்தது. மேலெல்லாம் "உன் பொற்பாதம் அடையப்பெற்றால்" என அருளிப் போந்ததனை இறுதியில் இனிது விளக்கத் திருவுளம்பற்றி, "இலங்கைக் கோமான்தன்னை அடர்த்து உகந்த அடியே வந்து அடைந்து அடிமை ஆகப்பெற்றால்" என்று அருளிச்செய்தார். அதனால், திருவடி, முன்னர் மறக்கருணையும் பின்னர் அறக்கருணையும் செய்து வாழ்விப்பன என்பதும், அவைகளை அடைதலாவது 'பாரம் ஈசன் பணியலது ஒன்றிலாது' (பெ. பு. திருக்கூட்டச் சிறப்பு - 9.) அதனையே மேற்கொண்டு செய்தல் என்பதும் பெறப்பட்டன. "மதில் ஆனைக்கா' என்றருளிய இத்தலத்தின் திருமதிலை, 'சிவபெருமானே எழுந்தருளிவந்து திருநீற்றைக் கூலியாகக் கொடுத்துக் கட்டியது' எனவும், 'இது பாதலம் வரையில் ஊடுருவி யுள்ளது' எனவும் கூறுவர்.

சூழுந் திருத்தொண்டர் தம்முடன் றோரண வாயினண்ணி
வாழி திருநெடுந் தேவா சிரியன்முன் வந்திறைஞ்சி
யாழி வரைத்திரு மாளிகை வாயி லவைபுகுந்து
நீள்சுடர் மாமணிப் புற்றுகந் தாரைநேர் கண்டுகொண்டார்.221

கண்டு தொழுது விழுந்து கரசர ணாதியங்கங்
கொண்ட புளகங்க ளாக வெழுந்தன்பு கூரக்கண்கள்
தண்துளி மாரி பொழியத் திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித் திருத்தாண் டகம்புனைந்து. 222

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

63. திருவானைக்கா

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றை முன் திருப்பதிகத்திற் காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

630 முன்ஞனைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்ஞனை யாப்பண்ணி யேறி ஞனைச்
சார்தற் கரியானை தாதை தன்னை
என்ஞனைக் கன்றினையேன் ஈசன் தன்னை
யெறிநீர்த் திரையுகளும் காவிரிசூழ்
தென்ஞனைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் ருடி னேனே. 1

இத் திருப்பதிகம், திருவானைக்காப் பெருமானைத் தலைப்பட்டு நுகர்ந்த பேரின்ப மேலீட்டில் அருளிச்செய்தது. இதன்கண் அப்பெருமான் மிக்க நீர்த்திரளாய் (அப்பு லிங்கமாய்) நிற்கும் நிலை வியந்துரைக்கப்பட்டது.

630. முன் - முற்காலத்தில். "ஆனைத் தோல் போர்த்த" என்றது, 'யானை ஒன்றை உரித்து அதன் தோலைப் போர்வை யாகப் போர்த்துக்கொண்ட' என. இசையெச்சத்தால், வேண்டுஞ் சொற்கள் வந்து இயைய நின்றது. மூவாத - முதிராத; ஞானம் மிகப் பெருத, "சிந்தையே" முதலிய ஏகாரங்கள் மூன்றும் எண்ணிடைச் சொல்; இவ்விடத்தில், "காயமே" என்பது இனம் பற்றிக்கொள்ளப்படும்; ஏகார எண்ணிற்குத் தொகை கொடாது போயதும் அதுபற்றி. ஏனைய அந்தக் கரணங்களினும் சிந்தை ஆன்ம அறிவிற்கு மிக அணுக்கமாய் நிற்றல் பற்றி ஆன்ம அறிவினை, பெரும்பாலும் 'சிந்தை' எனத் தொல் லாசிரியர் அனைவரும் வழங்குவராகலின், அம்முறை பற்றியே இங்கு அதனை, "சிந்தை" என்று அருளினர். இதனையே, "சிந்தையைச சிவ னென்றும் சிவனைச் சிந்தையென்றும்.........

Koviloor Digital Library

வந்திடும்" என விளக்கியது, சிவஞான சித்தி (சூ. 4. 28.). மருள்வழிப்பட்டுச் சென்ற முக்கரணங்களையும் தன் அருள் வழிப் படுத்து ஆண்டான்' என்றற்கு அவைகளை அவனுக்குரிய மதயானைகளாக உருவகித்து, "தன் ஆனையாப் பண்ணி ஏறினானை" என்று அருளுகின்றவர், அவையெல்லாவற்றிற்கும் அடியாகிய ஆன்ம அறிவினை அதற்கு முன்னே அருள்வழிப் படுத்தினமையை முதற்கண்ணே அருளிச்செய்தார். ஆன்ம அறிவு மருள் வழிப்பட்டு நிற்குங்கால் கரணங்களும் அவ்வாறே நிற்கும்; அஃது அருள்வழிப்பட்டு நிற்குங்கால் அவையும் அவ்வாறே நிற்கும் என்பதனை, சிவப்பிரகாசத்து, 'ஞான வாய்மை' என்னும் பகுதிக்கண் உணர்ந்து கொள்க. அகன் ஞாலத்தகத்துள் தோன்றி வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு, வான்புலன்கள் அகத்தடக்கி, மடவாரோடும் பொருந்து அணைமேல் வரும் பயனைப்போக மாற்றி, பொதுநீக்கித் தனை நினையவல்லார்க்கு அல்லது (திருத்தாண்டகம் - 5.) ஏனை யோர்க்குச் சார்தல் கூடாமையின், "சார்தற்கு அரியானை எனவும், உலகிற்கெல்லாம் ஒரு தந்தை யாகலின், "தாதை தன்னை" எனவும் அருளிச்செய்தார். "என் ஆனைக் கன்று" என்றது காதற்சொல் (தொல் - சொல். 56.). 'எறிகின்ற நீரை யுடைய திரை (வீசுகின்ற திவலைகளை உடைய அலை)' என்க. உகளுதல் - புரளுதல். தென் - தென்னிலத்துக்கண் உள்ள; இஃது இயைபின்மை நீக்கிய விசேடணம்; தென் - அழகுமாம். செழுநீர் - மிக்க நீர். பிறவியாகிய கோடை தணிந்து மெய் குளிரப் பெற்றமையின், 'செழுநீர்த்திரளைச் சென்று ஆடினேன்' என மகிழ்ந்து அருளிச்செய்தார். அந் நீர்த்திரளில் ஆடப் பெற்றதனால் உளதாகிய இன்பம், ஏனை நீரின் இன்பம்போல உடலின்கண்ணதேயாய் ஒழியாது, உள்ளத்தையும் உயிரையும் விழுங்கிக்கொண்டு, இங்ஙன் இருந்தது என்று இயம்பவாராது இருந்தமையின், "தேன்" எனவும், "பால்" எனவும் பல வாற்றான் அருளிச்செய்தார். "செழுநீர்த் திரள்" என அருளியது, இத்தலத்துள் இறைவன் நீர் ஊற்றாய் விளங்குதல் பற்றி; அதற்கேற்ப, "ஆடினேன்" என்றாராயினும், 'தலைப் பட்டேன்' என்பதே பொருளாகலின், அச்சொல் இரண்ட னுருபுகட்கு முடிபாதலும், "மூர்த்தி" முதலியவற்றோடு இயை தலும் பொருந்திற்று. நீர்த்திரளைத் திருமேனியாகக் கொள்ளு தலின், "நீர்த்திரள்" என்றதனை அடையடுத்த இடவாகு பெயராகக் கொண்டு, மூர்த்தி முதலிய பெயர்களோடு இயைக்க.

Koviloor Digital Library

631 மருந்தானை மந்திரிப்பார் மனத்து ளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தேன் உள்ளத்
திருந்தானை இறப்பிலியைப் பிறப்பி லானை
இமையவர்தம் பெருமானை யுமையா ளஞ்சக்
கருந்தான மதகளிற்றி னுரிபோர்த் தானைக்
கனமழுவாட் படையானைப் பலிகொண் டூரூர்
திரிந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 2

632 முற்றாத வெண்டிங்கட் கண்ணி யானை
முந்நீர்நஞ் சுண்டிமையோர்க் கமுதம் நல்கும்
உற்றானைப் பல்லுயிர்க்குந் துணையா னானை
ஓங்காரத் துட்பொருளை உலக மெல்லாம்
பெற்றானைப் பின்னிறக்கஞ் செய்வான் தன்னைப்
பிரானென்று போற்றாதார் புரங்கள் மூன்றுஞ்
செற்றானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடினேனே. 3

631. மருந்தான் - அமுதமாய் உள்ளவன்: 'பிறவிப் 'பிணிக்கு மருந்தாய் உள்ளவன்' எனலுமாம். "வளர்மதி" என்றது, 'இளம்பிறை' என்றவாறு. 'மதி' என்பது, அம் ஏற்று, மகர ஈறாய் நின்றது; அதன்கண் தொக்கு நின்ற இரண்டனுருபு, 'சடையான்" என்னும் வினைக்குறிப்புக் கொண்டது. "மகிழ்ந்து" என்றது, 'அருளி' என்னும் பொருளது. கருந்தானம் - கரிய மதநீர் ; இது கூறினமையால், "மதகளிறு" என்பதில் "மதம்" என்றதற்கு, 'களிப்பு' எனப் பொருள் உரைக்க. இவ்வாறன்றி. 'கருந்தாள மதகரி' எனப் பாடம் ஓதுவாரும் உளர். கனம் - பெருமை. 'கனல் மழுவாள்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.

632. முந்நீர் - கடல். உற்றான் - உறவினன் ; களைகண் ஆனவன். ஓங்காரத்து உட்பொருளை மேலே (பக் 293.) காண்க. "பெற்றான்" என்பது. 'தோற்றுவித்தான்' என்னும் பொருட்டாய் நின்றது. இறக்கம் செய்தல் - ஒடுக்குதலைச் செய்தல். "இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான்;

Koviloor Digital Library

633 காராருங் கறைமிடற்றெம் பெருமான் தன்னைக்
காதில்வெண்குழையானைக்கமழ்பூங்கொன்றைத்
தாரானைப் புலியதளி னுடை யானைத்
தானன்றி வேறொன்று மில்லா ஞானப்
பேரானை மணியார மார்பி னானைப்
பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட
தேரானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 4

634 பொய்யேது மில்லாத மெய்யன் தன்னைப்
புண்ணியனை நண்ணாதார் புரம்நீ றாக
எய்தானைச் செய்தவத்தின் மிக்கான் தன்னை
ஏறமரும் பெருமானை யிடமான் ஏந்தும்

தோற்றி - இறைவனே யீண்டிறக்கம் செய்வான்" (அற்புதத் திருவந்தாதி - 5.) என்னும் அம்மை திருமொழியைக் காண்க. 'இரக்கம் செய்வான்' என்னும் பாடம் சிறப்பின்று.

633. கார் ஆரும் கறை - கருமை பொருந்திய நஞ்சு; 'மணி மிடறு' என்பதும் பாடம். 'கொன்றைப் பூந்தாரானை' என மாற்றுக. தான் அன்றி - தான் இருப்பின் அல்லது. ஒன்றும் - ஒருபொருளும். இல்லா - இல்லையாகின்ற சிறப்பினை உடைய; என்றது, எல்லாப் பொருள்கட்கும் பற்றுக்கோடாய் உள்ள என்றபடி. 'பேர்' என மருவிநின்ற 'பெயர்' என்பது, ஈண்டு 'பொருள்' என்னும் பொருளதாய் நின்றது; 'ஞானமே வடிவாகிய பொருளாய் உள்ளவன்' என்க. காரியப் பொருட்டாகிய, "இல்லா" என்னும் எதிர்மறைப் பெயரெச்சக் குறிப்பு, காரணப் பெயர் கொண்டது. எலும்புமாலை தலைமாலைகளே யன்றி, ஏனையோரொடொப்ப மணிமாலை அணிதலும் சிவபிரானுக்கு உண்டென்பது உணர்த்தற்பொருட்டு, "மணி ஆரமார்பினானை" என்றருளினார்; "நடுக்கத்துள்ளும் நகையுளும் நம்பர்க்குக் - கடுக்கக் கல்ல வடமிடு வார்கட்கு" (திருமுறை - 5, 92, 2.) என்று அருளினார், திருக்குறுந்தொகையினும். திரிபுரம் எரிக்கச் சென்ற காலத்து, வேதங்களே சிவபிரானுக்குத் தேர்க் குதிரைகளாயின எனப் புராணங் கூறுதல் அறிக.

634. ஏதும் - சிறிதும். நண்ணாதார் - நெருங்காதவர்; பகைவர். "புண்ணியம்" ஈண்டுத் தவம்; உயிர்கட்குத் தவமாகின்றவன் தானே' என்றவாறு. கடைதலின்கண் தோன்றும்

Koviloor Digital Library

கையானைக் கங்காள வேடத் தானைக்
கட்டங்கக் கொடியானைக் கனல்போல் மேனிச்
செய்யானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 5

635 கலையானைப் பரசுதர பாணி யானைக்
கனவயிரத் திரளானை மணிமா ணிக்க
மலையானை யென்தலையி னுச்சி யானை
வார்தருபுன் சடையானை மயானம் மன்னும்
நிலையானை வரியரவு நாணுக் கோத்து
நினையாதார் புரமெரிய வளைத்த மேருச்
சிலையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 6

636 ஆதியனை யெறிமணியி னோசை யானை
அண்டத்தார்க் கறிவொண்ணா தப்பால் மிக்க
சோதியனைத் தூமறையின் பொருளான் றன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றை தொன்னூல் [பூண்ட
வேதியனை அறமுரைத்த பட்டன் றன்னை
விளங்குமல ரயன்சிரங்கள் ஐந்தி லொன்றைச்
சேதியனைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 7

விறகில் தீப்போல, உயிர்கள் செய்கின்ற தவத்தின்கண் மிக்கு விளங்குபவன் என்க; தவமாவது, அவனை நோக்கிச் செய்வதே என்பது முன்னே குறிக்கப்பட்டது. ஏறு அமரும் - எருதை ஊர்தியாக விரும்புகின்ற. இடம் - இடப்பக்கத்தில். செய்யான் - செம்மை நிறம் உடையவன்.

635. கலை - மான், பரசு தர பாணி - மழுத் தரித்த கை; மான் மழு ஏந்தினமை குறித்தவாறு. 'பாசுபத பாணியானை' எனவும் பாடம் ஓதுப. கனம் - பெருமை. மணி - அழகு. 'வயிரத் திரளான், மாணிக்க மலையான்' என்பன ஒப்பின் ஆகிய பெயர். வார்தரு - நீண்ட. நினையாதார் - பகைவர்.

636. ஆதியன் - முதல்வன். அணி மணியிற் பிரித்தற்கு, "எறி மணி" என்றருளினர். 'மணியின்கண் ஓசையாய்க் கலந்து நிற்பவன்' என்க. அண்டத்தார் - வானவர் 'அண்டத்துக்கு அப்பால் மிக்கு விளங்கும் ஒளியாய் உள்ளவன்' என்க.

Koviloor Digital Library

637 மகிழ்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னை
மறவாது கழல்நினைந்து வாழ்த்தி ஏத்திப்
புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப் பானைப்
பூதகணப் படையானைப் புறங்காட் டாடல்
உகந்தானைப் பிச்சையே யிச்சிப் பானை
ஒண்பவளத் திரளையென் னுள்ளத் துள்ளே
திகழ்ந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 8

638 நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவு தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை யெண்ணிறந்த குணத்தான் தன்னை
இடைமருதும் ஈங்கோயும் நீங்கா தேற்றின்

"அண்டம் ஆரிரு ளூடுக டந்தும்பர் - உண்டு போலுமோ ரொண்சுடர்" (திருமுறை - 5, 97 - 2.) என்றருளியது காண்க. தொன்னூல் - நூல் பூண்பார் எவரும் பூண்பதற்கு முன்னர்ப் பூண்ட நூல்; எனவே, "வேதியன்" என்றது, 'முதல் வேதியன்' என்றவாறும். இதனால், 'வேத ஒழுக்கத்திற்கு முதல்வன் அவனே' என்பது குறிப்பிக்கப்பட்டது. பட்டன் - ஆசிரியன். 'சேதி' என்னும் முதனிலைத் தொழிற் பெயரொடு அன் ஈறு புணர்ந்து, 'சேதியன்' என்று ஆயிற்று; 'அறுத்தலை உடையவன்' என்பது பொருள்.

637. 'கச்சி ஏகம்பம் மகிழ்ந்தானை' என்பது கருத்தாகக் கொள்க; மகிழ்ந்தான் - விரும்பினன். ஏத்துதலை, வணக்கங் கூறுதலாக உரைக்க. பொன்னுலகம் - சிவலோகம்; அன்ன தாதலை, மண்ணுல கிற்பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார் - பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந் தேன்" (திருமுறை 7, 100 - 5) என்பதனானும் அறிக. ஆள் வித்தல் - அதன்கண் பெறும் இன்பம் எல்லாவற்றையும் நுகர் வித்தல். "பவளத் திரள்" என்பது உவமை யாகுபெயர் "உள்ளம்" என்றது, அறிவை.

638. நசையான் - விருப்பத்திற்கு உரியவன்; 'விரும்பு தற்கு உரியவன்' என்றதாம். நல்குரவு - வறுமை. நோய் - துன்பம், 'நல்குரவு தீப்பிணி நோய்' என்னும் செவ்வெண்ணின்

Koviloor Digital Library

மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகுதீயும் புனலெறிகாற் றாகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 9

639 பார்த்தானைக் காமனுடல் பொடியாய் வீழப்
பண்டயன்மால் இருவர்க்கும் அறியா வண்ணஞ்
சீர்த்தானைச் செந்தழல்போ லுருவி னானைத்
தேவர்கள்தம் பெருமானைத் திறமுன் னாதே
ஆர்த்தோடி மலையெடுத்த இலங்கை வேந்தன்
ஆண்மையெலாங் கெடுத்தவன்தன் இடரப் [போதே
தீர்த்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 10

திருச்சிற்றம்பலம்

தொகை தொகுத்தலாயிற்று. 'நல்குரவும்' என்பது பாடம் அன்று. இசையான் - பண்ணின்கண் உள்ளவன். இறைவனது குணத்தை 'எட்டு' என்றல், வகையால் அன்றி, விரியால் அன்மையின், அவை விரியால் எண்ணிறந்தனவாதல் உணர்க. இடைமருது, ஈங்கோய் சோழநாட்டுத் தலங்கள். 'நீங்காத' என்னும் எதிர்மறைப் பெயரெச்ச ஈற்று அகரம் தொகுக்கப் பட்டது. அவ்வெச்சம், "ஏற்றின்மிசையான்" என்னும் பெய ரொடு முடிந்தது, செய்யுட்கேற்ப உம்மை தொகுத்தும், பிறவாறும் ஓதப்பட்டதாயினும், புனலும் காற்றும் திசையும் ஆகியானை' என்றே கொள்க: 'மிகுதல்' என்னும் அடை, "மண்" முதலிய எல்லாவற்றிற்கும் ஆகும்; 'பெரும் பொருள் களாகிய அவை எல்லாம்' என்பது கருத்து. எறிகாற்று - வீசும் காற்று.

639. 'வீழப் பார்த்தானை' எனக் கூட்டுக. சீர்த்தான் - உயர்ந்து தோன்றியவன். திறம் - வலிமை; என்றது, வினை வலியையும் தன் வலியையும். உன்னாதே - ஆராயாமலே. ஆர்த்து - ஆரவாரித்து.

Koviloor Digital Library

64. திருக்கச்சி ஏகம்பம்

திருப்பதிக வரலாறு

ஆண்டவரசு, தொண்டை நாட்டில் திருவோத்தூரை அடைந்து வணங்கித் தொண்டர் எதிர்கொள்ளக் காஞ்சி நகரடைந்து வலங்கொண்டு திருவேகம்பர்தமை வணங்கித் திருமாற்பேறு முதலாகிய பதிகளைத் தொழுது மீண்டணைந்து வணங்கி, "ஏகம்பன் காண் அவன் என் எண்ணத்தான்" என்றுபாடியருளியது இத்திருப்பதிகம் (திருநாவுக் - பு. 328)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

640 கூற்றுவன்காண் கூற்றுவனைக் குமைத்த கோன்காண்
குவலயன்காண் குவலயத்தின் நீரா னான்காண்
காற்றவன்காண் கனலவன்காண் கலிக்கும்மின்காண்
கனபவளச் செம்மேனி கலந்த வெள்ளை
நீற்றவன்காண் நிலாவூருஞ் சென்னி யான்காண்
நிறையார்ந்த புனற்கங்கை நிமிர்ச டைமேல்
ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 1

இத்திருப்பதிகம், 'காண்' என்னும் முடிபுடைய தொடர்க் கோவையால் கச்சி ஏகம்பப் பெருமானது இயல்பினை வகுத்தோதி, 'அத் தன்மையன் என் எண்ணத்தின் கண்ணுளனாயினான்' என உருகியருளிச் செய்தது.

640. சிவபிரானை, 'கூற்றுவன்' என்றல், அழித்தல் தொழிலை உடைமை பற்றி. குமைத்த - அழித்த. குவலயம் - பூமி. கலிக்கும் - ஒலிக்கின்ற; இடிக்கின்ற: இதற்கு, 'மேகம்' என்னும் வினைமுதல் வருவிக்க. 'கலிக்கும்' என்னும் பெயரெச்சம், 'மின்' என்னும் கருவிப்பெயர் கொண்டது; மின்னலும் இடியும் புலப்பாட்டு வகையால் முறையே காரண காரியங்களாகக் கூறப்படும். கனம் - பெருமை. 'மேனியில் கலந்த' என்க. ஊர்தல் - தவழ்தல். 'நிறைய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. ஆர்ந்த - பொருந்திய;

Koviloor Digital Library

641 பரந்தவன்காண் பல்லுயிர்க ளாகி யெங்கும்
பணிந்தெழுவார் பாவமும் வினையும் போகத்
துரந்தவன்காண் தூமலராங் கண்ணி யான்காண்
தோற்ற நிலையிறுதிப் பொருளாய் வந்த
மருந்தவன்காண் வையகங்கள் பொறைதீர்ப் பான்
மலர்தூவி நினைந்தெழுவா ருள்ளம் நீங்கா [காண்
திருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 2

'நிலவுலகில் வந்த' என்றபடி நிமிர்சடை - நீண்டசடை, "எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி" என்றது, கோ நகராய சிறப்புப்பற்றி; இனி, 'எழிலாரும் பொழிலார் ஏகம்பம்' என ஏகம்பத்திற்கு அடையாக்கலுமாம்; 'அம்மை இங்கு வழிபடுதற் பொருட்டு திருநந்தனவனம் ஒன்றை ஆக்கினர்' எனவும்' "அஃது, 'அம்பிகாவனம்' என்னும் பெயருடையது எனவும் இத் தலபுராணங் கூறுதலும், இதனை அடுத்துள்ள 'அம்பி. என்பதோர் ஊரே அத்திருநந்தனவனமாக இஞ்ஞான்று சொல் லப்பட்டு வருதலும், "ஏரி யிரண்டும் சிறகா" (தண்டி) என்னும் வெண்பாவினுள், "காருடைய பீலி கடிகாவா" எனக் காணப் படுதலும் இங்கு நினைத்தற்கு உரியன; "கடிகாவா" என்பத தற்கு வேறு பொருள் கூறுவாரும் உளர். கச்சியில் உள்ள எண்ணிறந்த தலங்களுள், ஏகம்பம் முதல் தலம் என்க. "அவன் என் எண்ணத்தான்" என்றருளியது, நாயனருக்கு அப்பெருமானிடத்துள்ள அழுந்திய ஆர்வத்தைப் புலப்படுத்தும். இவ்வாறே, அவனை, "என் மனத்தே வைத்தேனே" என ஒரு திருப்பதிகத்தை முன் அருளிச்செய்தார் (திருமுறை. 4. 7.) சேக்கிழாரும், "திருவே கம்பர்தமை - நேர்ந்த மனத்தில் உற வைத்து நீடு பதிகம் பாடுவார்" (323) என நாயனர் புராணத் துட் கூறினர்.

641. 'எங்கும் பரந்தவன்' என இயைக்க. எங்கும்- எல்லாப் புவனங்களிலும். பரந்தவன் - பரவியவன். பணிந் தெழுதல் வணங்கும் உணர்வோடே துயிலுணர்தல்; "தம்மையே சிந்தியா எழுவார்வினை தீர்ப்பர்" (திருமுறை - 3. 54. 3.) எனவும், எந்தையார் திருநாம நமச்சிவாய - என்றெழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே" (திருமுறை - 6. 93. 10) எனவும் "தொழுதெழுவார் - வினைவளம் நீறெழ நீறணி யம்பலவன்"

Koviloor Digital Library

642 நீற்றவன்காண் நீராகித் தீயா னுன்காண்
நிறைமழுவுந் தமருகமும் எரியுங் கையில்
தோற்றவன்காண் தோற்றக் கேடில்லா தான்காண்
துணையிலிகாண் துணையே என்றுதொழுவாருள்ளம்
போற்றவன்காண் புகழ்கள்தமைப் படைத்தான் றுன்காண்
பொறியரவும் விரிசடைமேற் புனலுங் கங்கை
ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 3

(திருக்கோவை - 118.) எனவும் அருளியன காண்க. பாவத்தை மட்டிலே நீக்க வேண்டுவார்க்கு அதனையும், இருவினைகளையும் நீக்கவேண்டுவார்க்கு அவைகளையும் நீக்கியருளுவான் என்பார், "பாவமும் வினையும் போகத் துரந்தவன்" என்றருளினர். துரத்தல் - ஓட்டுதல். "மலர்" என்பது சொல்லுவாரது குறிப்பால், கொன்றை மலராம். "தோற்றம் நிலைஇறுதி" என்றது, உலகம்படும் முத்தொழிலை. அத்தொடர் உம்மைத் தொகையாய் நின்று, 'அவற்றைச் செய்யும் பொருள்' என, இரண்டாம் வேற்றுமைப் பொருள்மேல், "பொருள்" என்னும் சொல்லோடு தொக்கது. 'நிற்றல்' என்பது உண்மையை யுணர்த்தல்போல, 'வருதல்' என்பதும் ஒரோவழி உண்மையை உணர்த்தும்; அதனல் "வந்த" என்றது, 'நின்ற' என்றவாறும். மூலமலமாய நோய்க்குத் தோற்றம் முதலிய மூன்றும் மருந்தாகலானும், "உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான்என் - றப்பால்நாற் கூற்றே மருந்து" (குறள் - 950.) என, நோயைத் தீர்ப்பவனும், "மருந்து" எனப்படுதலானும், "தோற்றம் நிலையிறுதிப் பொருளாய் வந்த - மருந்தவன்காண்" என்றருளினர். "மருந்தவன்" என்பதில் அகரம் சாரியை. 'நிலவுலகம்' என்னும் பொருளதாகிய 'வையகம்' என்பது, இங்கு, 'உலகம்' எனப் பொதுப்பொருள் குறித்து நின்றது. பொறை - சுமை. 'அதனைத் தீர்ப்பான்' என்றது, 'உயிர்களது பிறவியை நீக்கியருளுவான்' என்றவாறு; "வையகங்கள்" என்புழியும் இரண்டனுருபு விரிக்க. "நினைந்தெழுவார்" என்பதற்கும், மேல், "பணிந்தெழுவார்" என்பதற்கு உரைத்தவாறு உரைக்க.

642. நிறை மழு - வெம்மை நிறைந்த மழு. தமருகம் - துடி (உடுக்கை). தோற்றவன் - தோன்றுதலுடையவன்; தோற்று, முதனிலை திரிந்த தொழிற்பெயர்; அகரம் சாரியை.

Koviloor Digital Library

643 தாயவன்காண் உலகிற்குத் தன்ஒப் பில்லாத்
தத்துவன்காண் மலைமங்கை பங்கா என்பார்
வாயவன்காண் வரும்பிறவி நோய்தீர்ப் பான்காண்
வானவர்க்குந்தானவர்க்கும் மண்ணு ளோர்க்கும்
சேயவன்காண் நினைவார்க்குச் சித்த மாரத்
திருவடியே உள்கிநினைந் தேழுவா ருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 4

அடுத்தானை யுரித்தான்காண்........................... 5

"தோற்றக் கேடு" உம்மைத்தொகை; 'தோன்றுதலும் அழிதலும்" என்பது பொருள். துணை இலி - ஒப்பு இல்லாதவன்; "தனக்குவமை இல்லாதான்" (குறள் - 7.) என்றார் திருவள்ளுவ நாயனாரும். 'அவனே துணை என்று' என்க. "உள்ளம்" என்புழி, இரண்டனுருபு விரிக்க. போற்றவன் - காத்தல் உடையவன்; என்றது, நீங்காதிருப்பவன்' என்றவாறு. "புகழ்கள்" என்றது, 'எல்லாப் புகழ்களையும்' என்றபடி. "படைத்தான்" என்பதில், 'படைத்தல்' என்பது. "படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும் - உடைப்பெருஞ் செல்வர்" (புறம்-188.) என்புழிப்போல 'உடையனாதல்' என்னும் பொருளது. 'கங்கைப் புனலும்" என மாற்றியுரைக்க. 'பொறியரவம் விரிசடைமேற் புனலங் கங்கை' எனப்பாடம் ஓதுதல் சிறக்கும்.

643. தாயவன் - தாயாய் இருப்பவன். வாயவன் - வாயின் கண் இருப்பவன்; என்றது, 'அவர்சொல்லின்கண் விளங்கி நின்று பயன் தருபவன்' என்றதாம்; இதனால், 'இறைவன் அடியார் நிறைமொழி மாந்தராய் விளங்குதல் இவ்வாற்றான்' என்பது விளக்கியருளப்பட்டது. "வரும்" என்றது, 'வினையால் பிறப்பும், பிறப்பால் வினையும் எனக் காரண காரியத் தொடர்ச்சியாய் முடிவின்றி வருகின்ற' என்றவாறு. 'பிறவியாகிய நோய்' என்க. வானவர் - தேவர்; தானவர் - அசுரர். மண்ணுளோர் - மக்கள்; 'உயர்திணையாகிய இவர் அனைவர்க்கும் எட்டாதவன்' என்றதாம். சித்தம் ஆர - மனம் இன்பத்தினால் நிரம்ப. "உள்கி நினைந்து" என்பது ஒரு பொருட் பன்மொழி. ஏயவன் - பொருந்துதல் உடையவன்.

இத் திருப்பதிகத்தின் ஐந்தாம் திருத்தாண்டகத்துள், "அடுத்தானை உரித்தான்காண்" என்னும் ஒரு தொடரையன்றி,

Koviloor Digital Library

644 அழித்தவன்காண் எயில்மூன்றும் அயில்வா யம்பால்
ஐயாறும் இடைமருதும் ஆள்வான் தான்காண்
பழித்தவன்காண் அடையாரை அடைவார் தங்கள்
பற்றவன்காண் புற்றரவ நாணி னுன்காண்
சுழித்தவன்காண் முடிக்கங்கை அடியே போற்றுந்
தூயமா முனிவர்க்காப் பார்மேல் நிற்க
இழித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 6

645 அசைந்தவன்காண் நடமாடிப் பாடல் பேணி
அழல்வண்ணத் தில்அடியும் முடியுந் தேடப்
பசைந்தவன்காண் பேய்க்கணங்கள் பரவி யேத்தும்
பான்மையன்காண்பரவிநினைந்தெழுவார்தம்பால்

ஏனைய பகுதிகள் கிடைத்தில ; அத்தொடர் இத்தலத்து அருளிய மற்றொரு திருப்பதிகத்தின் தொடக்கமாகிய "அடுத்தானை யுரித்தானை" (திருமுறை 4-7-10) என்னும் தொடரோடு ஒருங்கு ஒத்து நிற்கின்றது.

644. 'அம்பால் அழித்தவன்' எனவும், 'அடையாரைப் பழித்தவன்' எனவும், 'முடிக்கண் கங்கை சுழித்தவன்' எனவும் கூட்டுக. அயில் வாய் - கூர்மையான வாயினை யுடைய ; 'கூர்மை வாய்ந்த' எனலுமாம். ஐயாறும், இடைமருதும் சோழநாட்டுத் தலங்கள். அடையார் - தன்னை அணுகாதவர். பழித்தலாவது, விரும்பாமை ; முன்னின்று அருளாமை. பற்றவன்-துணையாய் இருப்பவன் ; அகரம், சாரியை. "புற்று அரவம்" என்றது இன அடை. நாண் - அரை நாண். சுழித்தவன்-அடக்கியவன். "முனிவர்க்கா" என்றது, 'அவர்கள் முழுகித் தவஞ்செய்தற் பொருட்டு' என்றவாறு. இழித்தவன் - இறக்கியவன் ; இழித்ததும், கங்கையை என்க ; 'சடையில் அடக்கிய கங்கையைப் பகீரதன் முன்னிலையாகப் பலர்க்கும் பயன்படுமாறு பூமியில் சிறிது விடுத்தவன்' என்றவாறு ; சிவபிரானை, கங்கையைச் சடையில் தரித்த நிலைபற்றி, 'கங்காதர மூர்த்தி' எனவும், அக் கங்கையைச் சிறிது நிலத்தில் விடுத்தநிலைபற்றி, 'கங்கா விசர்ச்சன மூர்த்தி' எனவும் கூறுவர்.

645. 'பாடல் பேணி நடம் ஆடி அசைந்தான்' எனக் கூட்டி, 'அசைந்து நடம் ஆடினன்' என மாற்றியுரைக்க. 'அசைந்து" என்றது, 'அசைவு இல்லாதவன்' என்பது

Koviloor Digital Library

கசிந்தவன்காண் கரியினுரி போர்த்தான் தான்காண்
கடலில்விடம் உண்டமரர்க் கமுத மீய
இசைந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 7

646 முடித்தவன்காண் வன்கூற்றைச் சீற்றத் தீயால்
வலியார்தம் புரமூன்றும் வேவச் சாபம்
பிடித்தவன்காண் பிஞ்ஞகனும் வேடத் தான்காண்
பிணையல்வெறி கமழ்கொன்றை அரவு சென்னி
முடித்தவன்காண் மூவிலைநல் வேலி னுன்காண்
முழங்கிஉருமெனத்தோன்றும்மழையாய்மின்னி
இடித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 8

உணர்த்தி நின்றது. "அடியும் முடியும் தேட" என்றதற்கு, 'மாலும் அயனும்' என்னும் வினைமுதல் வருவித்துக்கொள்க. பசைந்தவன் - இரங்கியவன்; இரங்கியது அவர்கள் துன்பத் திற்கு. பரவி - பரந்து; சூழ்ந்து. பான்மையான் - தன்மை யுடையவன். 'கசிந்தவன்' என்பதும், 'இரங்கியவன்' என்றே பொருள் தரும். கடலில் விடம் - கடலின்கண் எழுந்த நஞ்சு. "இசைந்தவன்" என்றது, அச்செயலுக்கு ஒருவரும் இசைய (உடன்பட) மாட்டாமை குறித்து நின்றது.

646. 'வன் கூற்றை முடித்தவன்' எனக் கூட்டுக. கூற்று - இயமன். முடித்தவன் - அழித்தவன். சீற்றத் தீ - சினம் என்னும் நெருப்பினுலே. சாபம் - வில். "பிடித்தவன்" என்றது, அவ்வில் பயன்படாதே நின்றதைக் குறித்தது. மூவிலை வேல் - சூலம். உரும் என - இடியாகி. மழை - மேகம். 'இடித்தற்கு உரிய மேகமாய்' என்பார், 'உருமெனத் தோன்றும் மழையாய்' என்றருளினுர். 'மழையாய் மின்னி இடித்தவன்' என்றது, உலகைக் காத்து நிற்கும் கருணையை விளக்கியருளியவாறு.

Koviloor Digital Library

647 வருந்தவன்காண் மனமுருகி நினையா தார்க்கு
வஞ்சன்காண் அஞ்செழுத்துநினைவார்க்கென்றும்
மருந்தவன்காண் வான்பிணிகள் தீரும் வண்ணம்
வானகமும் மண்ணகமும் மற்று மாகிப்
பரந்தவன்காண்படர்சடையெட்டுடையான்தான்காண்
பங்கயத்தோன் தன்சிரத்தை யேந்தி யூரூர்
இரந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 9

648 வெம்மான உழுவையத ளுரிபோர்த் தான்காண்
வேதத்தின் பொருளான்காண் என்றி யம்பி
விம்மாநின் றழுவார்கட் களிப்பான் தான்காண்
விடையேறித் திரிவான்காண் நடஞ்செய் பூதத்
தம்மான்காண் அகலிடங்கள் தாங்கி னான்காண்
அற்புதன்காண் சொற்பதமுங் கடந்து நின்ற
எம்மான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 10

647. 'நினையாதார்க்கு வருந்தவன்; 'வஞ்சன்' என்க. வருந்து - வருந்துதற்கு ஏது; துன்பம்; முதனிலைத் தொழிற் பெயர், ஆகுபெயராய் நின்று, விகுதியேற்றது. அகரம், சாரியை. 'வருந்தான்காண்' என்றும் ஓதுப. 'பிணிகள் தீரும் வண்ணம் மருந்தவன்' என்க; இதன்கண், 'தீரும் வண்ணம்' என்ப தற்கு முடிபாக, 'ஆவான்' என்பது வருவிக்க. பரந்தவன் - பரவி இருப்பவன்; வியாபி. நடுச்சடையை விடுத்து, திசைக்கு ஒன்றாய் ஆடும் சடைகளை எண்ணி, "சடை எட்டு உடையான்" என்றாராகலின், அஃது, "ஒன்பது போலவர் கோலக் குழற் சடை" (திருமுறை. 4. 18. 9.) என அருளிச்செய்ததனோடு மாறுகொள்ளாது என்க.

648. உழுவை - புலி; அதனை, 'மானம்' உடையதாக அருளியது, இடம் வீழ்ந்ததனை உண்ணாமை முதலியன நோக்கி; 'புலி தனது வேட்டத்தின்கண் இடப் பக்கத்து வீழ்ந்த விலங் கினை உண்ணாதிருந்து வலப் பக்கத்து வீழ்ந்ததனையே உண்ணும்' என்பதனை, "கடமா தொலைச்சிய கானுறை வேங்கை - இடம்

Koviloor Digital Library

649 அறுத்தான்காண் அயன்சிரத்தை அமரர் வேண்ட
ஆழ்கடலின் நஞ்சுண்டங் கணிநீர்க் கங்கை
செறுத்தான்காண் தேவர்க்குந் தேவன் தான்காண்
திசையனைத்துந்தொழுதேத்தக்கலைமான்கையில்
பொறுத்தான்காண் புகலிடத்தை நலிய வந்து
பொருகயிலை எடுத்தவன்தன் முடிதோள் நாலஞ்
சிறுத்தான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 11

திருச்சிற்றம்பலம்

வீழ்ந்த துண்ணு திறக்கும்" (நாலடி. 300.), "கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென - அன்றவண் உண்ணு தாகி வழிநாள் - பெருமலை விடரகம் புலம்பவேட் டெழுந்து - இருங்களிற் ெறருத்தல் நல்வலம் படுக்கும் - புலி" (புறம் - 190.) என்றாற் போல்வனவற்றால் அறிக. அதள் - தோல்; 'உரி' என்றது 'உரிக்கப்பட்டது' எனப் பொதுமையில் நிற்ப, அதனை "அதள்" என்றது பொதுமை நீக்கிச் சிறப்பித்தது என்க; எனவே, 'அதளாகிய உரி' என விரிதல் பெறப்பட்டது; போர்த்தல், ஈண்டு மேலாடையாக இடுதல்; புலித்தோலைச் சிவபிரான் தன் அரையிற் கட்டுதலேயன்றி, மேலாடையாக அணிதலும் சில விடத்துக் கூறப்படுதல் அறிக. "என்று இயம்பி" என்றருளினு ராயினும், 'இன்னேரன்ன புகழை இயம்பி' என்பதே கருத் தாகக் கொள்க. அழுதல் - கண்கலுழ்தல். அளிப்பான் - அவர்க்கு வேண்டுவன ஈவான்; அன்றி, 'அழுவாரை' என உருபு மயக்கமாகக் கொண்டு, 'காப்பான்' என்றுரைத்தலுமாம். "நடம்" என்றது, துணங்கைபோல்பவற்றை. 'பூதத்தை உடைய அம்மான்' என்க. அற்புதன் - அதிசய நிலையினன். சொற்பதம் - சொல்லினது நிலை; உம்மை, சிறப்பு.

649. செறுத்தான் - அடக்கினுன். 'ஏனைய உயிர்கட்கே யன்றித் தேவர்க்கும்' எனப் பொருள் தருதலின், 'தேவர்க்கும்' என்னும் உம்மை இறந்து தழுவிய எச்சம். கலைமான் - ஆண் மான். கயிலை அசைந்தமையால் உலகம் நடுங்கியது ஆகலின், 'புகலிடத்தை நலிய வந்து கயிலை எடுத்தவன்' என்றருளினுர். இனி, 'உலகை வருத்துதற்கு என்றே பிறந்து, கயிலையை எடுத்தவன்' என்றுரைத்தலுமாம். 'புகல் இடம்' என்பது,

Koviloor Digital Library

'வீட்டு நெறியை அடைய வேண்டுவார் புகுதல் உடைய இடம்' என, நிலவுலகத்தைக் குறித்து நின்றது. "இந்தப் பூமி - சிவன் உய்யக் கொள்கின்றவாறு" (திருவா. திருப்பள்ளி. 10.) எனவும், "வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்" (சிவஞான சித்தி. சூ. 2. 92.) எனவும் அருளியன காண்க. "பொருகயிலை" என்றது, 'அவனுக்குத் தடையாய் நின்ற கயிலை' என்றவாறு. இறுத்தான் - நெரித்தான்.

காண்ட லேகருத் தாய்நினைந் தென்னுங் கலைப்பதிகந்
தூண்டா விளக்கன்ன சோதிமுன் னின்று துதித்துருகி
யீண்டு மணிக்கோயில் சூழ வலஞ்செய் திறைஞ்சியன்பு
பூண்ட மனத்தொடு நீடிரு வாயிற் புறத்தணைந்தார். 223

செய்யமாமணியொளிசூழ்திருமுன்றின்முன்றேவாசிரியன்சார்ந்து
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூ ரரைக்
கையினற் றொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனே னென்
றெய்தரிய கையறவாற் றிருப்பதிக மருள்செய்தங் கிருந்தாரன்றே.

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும்மதுரவாக்கிற்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற் றாளே
சார்வான திருமனமு முழவாரத் தனிப்படையுந் தாமு மாகிப்
பார்வாழத்திருவீதிப்பணிசெய்துபணிந்தேத்திப்பரவிச்செல்வார்

நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொ ணிருத்தர் தம்மைக்
கூடியவன் பொடுகாலங் களிலணைந்து கும்பிட்டுக் கோதில் வாய்மைப்
பாடிளம்பூ தத்தினா னெனும்பதிக முதலான பலவும் பாடி
நாடியவார்வம்பெருகநைந்துமனங்கரைந்துருகிநயந்துசெல்வார்

நான்மறைநூற் பெருவாய்மை நமிநந்தி யடிகடிருத் தொண்டி னன்மைப்
பான்மைநிலையாலவரைப்பரமர்திருவிருத்தத்துள்வைத்துப்பாடித்
தேன்மருவுங்கொன்றையார்திருவாரூரரனெறியிற்றிகழுந்தன்மை
யானதிற மும்போற்றி யணிவீதிப் பணிசெய்தங் கமரு நாளில்.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

65. திருக்கச்சி ஏகம்பம்

திருப்பதிக வரலாறு

இத்திருப்பதிக வரலாற்றினை முன்திருப்பதிக வரலாற்றிற்காண்க.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

650 உரித்தவன்காண் உரக்களிற்றை உமையாள் ஒல்க
ஓங்காரத்தோருவன்காண் உணர்மெய்ஞ்ஞானம்
விரித்தவன்காண் விரித்தநால் வேதத் தான்காண்
வியனுலகிற் பல்லுயிரை விதியி னாலே
தெரித்தவன்காண் சில்லுருவாய்த் தோன்றி யெங்குந்
திரண்டவன்காண் திரிபுரத்தை வேவ வில்லால்
எரித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவன்என் எண்ணத் தானே. 1

இத்திருப்பதிகமும், மேலைத்திருப்பதிகத்தோடு ஒருதன்மைப் பட்டது; இவ்வாறு இரண்டு திருப்பதிகங்கள் ஒருதன்மையன வாகக் காணப்படுதல் அரிதேயாம்; "ஐயாறன் அடித்தலமே" என முடியும் திருவிருத்தங்கள் இருபது உடைய திருப்பதிகம். (திருமுறை. 4. 92.) இரண்டாகக்கொள்ளப்படாது, ஒன்றாகவே கொள்ளப்படுதல் கருதத்தக்கது. இதனாலும் நாயனார்க்குத் திருவேகம்பத்துள் உள்ள பேரார்வம் புலனாகும்.

650. உரம் - வலிமை. ஒல்க - தளர; அஞ்ச. 'உமையாள் ஒல்கக் களிற்றை உரித்தவன்' என்க. ஓங்காரத்து - ஓங்காரத் தினால் உணர்த்தப்படுகின்ற. ஒருவன் - தன்போல்வார் ஒருவரும் இன்றித் தான் ஒருவனேயாய் நிற்பவன். இதுபற்றியே, சிவபிரானை, "ஏகன்" என வழங்கும் உபநிடதம் एको हि रुद्रो न द्वितीया यतस्थुः - சுவேதாசுவதரம்). "ஞானம்" என்றது, அறியற்பாலனவாய பொருள்களை; அவை பொருள் இயல்புகள். விரித்தான் - பெரியோர்க்கு விளக்கினான். 'அவ்வாறு விரித்த' என இயைவித்து உரைக்க. வேதத்தான் - வேதத்தை உடைய வன்; என்றது, 'அவற்றிற்குத் தலைவன்' என்றவாறு;

Koviloor Digital Library

654 பெருந்தவத்தெம் பிஞ்ஞகன்காண் பிறைசூடிகாண்
பேதையேன் வாதையுறு பிணியைத் தீர்க்கும்
மருந்தவன்காண் மந்திரங்க ளாயி னான்காண்
வானவர்கள் தாம்வணங்கும் மாதே வன்காண்
அருந்தவத்தான் ஆயிழையாள் உமையாள் பாகம்
அமர்ந்தவன்காண் அமரர்கள்தாம்அற்சித்தேத்த
இருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 5

655 ஆய்ந்தவன்காண் அருமறையோ டங்கம் ஆறும்
அணிந்தவன்காண் ஆடரவோ டென்பு மாமை
காய்ந்தவன்காண் கண்ணழலாற் காமன் ஆகங்
கனன்றெழுந்த காலனுடல் பொடியாய் வீழப்
பாய்ந்தவன்காண் பண்டுபல சருகால் பந்தர்
பயின்றநூற் சிலந்திக்குப் பாராள் செல்வம்
ஈந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 6

654. தவத்துப் பிஞ்ஞகன் - தவக்கோலத்தையும் தலைக் கோலத்தையும் உடையவன். வாதை - துன்பம். மாதேவன் - தேவர்கட்குத் தேவனாகிய பெருந்தேவன். 'தவத்தாளும் ஆயிழை யாளும் ஆகிய உமையாள்' என்க. 'அவளது கூற்றினை விரும் பியவன்' என்பதாம். அமர்தல் - விரும்புதல். கச்சியில் அம்மை காமக்கோட்டத்து எப்பொழுதும் தவம் புரிபவளாதல் அறிக.

655. 'ஆறு, என்பு, ஆமை, ஆகம்' என்பவற்றில், இரண்டாம் வேற்றுமை இறுதிக்கண் தொக்கது. ஆய்ந்தவன் - ஆய்ந்தான் போலும் உணர்வுடையவன். "ஆமை" என்பதில், உம்மை தொகுத்தலாயிற்று. ஆகம் - உடம்பு. "பொடியாய் வீழ" என்றதற்கு, 'பொடியாய் வீழ்வதுபோல வீழ' என உரைக்க. சருகுகளால் பந்தர் இட்ட சிலந்தியைச் சிவபிரான் அரசனாக்கிய வரலாற்றை, பெரியபுராணத்துக் கோச்செங்கட் சோழ நாயனார் புராணத்துட் காண்க.

Koviloor Digital Library

656 உமையவளை யொருபாகஞ் சேர்த்தி னான்காண்
உகந்தோலிநீர்க் கங்கைசடை யொழுக்கி னான்
இமய வடகயிலைச் செல்வன் தான்காண் [காண்
இற்பலிக்குச் சென்றுழலும் நல்கூர்ந் தான்காண்
சமயமவை யாறினுக்குந் தலைவன் தான்காண்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே யாய
இமையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 7

657 தொண்டுபடு தொண்டர்துயர் தீர்ப்பான் தான்காண்
தூமலர்ச்சே வடியிணையெம் சோதி யான்காண்
உண்டுபடு விடங்கண்டத் தொடுக்கி னான்காண்
ஒலிகடலில் அமுதமரர்க் குதவி னான்காண்

656. உகந்து ஒலி நீர்க் கங்கை - உயர்ந்து (மிகுந்து) ஒலிக்கின்ற நீர்வடிவாகிய கங்கை. ‘ கங்கையைச் சடையினின்றும் (பகீரதன் பொருட்டு) ஒழுகவிட்டான் ’ என்க. ‘ வட இமயக் கயிலை ’ என மாற்றுக. இமயக் கயிலை - இமயத்தின்கண் உள்ள கயிலை. ‘ இற் சென்று ’ என இயையும். ‘ இல்லங்கள் தோறும் பிச்சைக்குச் சென்று உழலும் ’ என்க. ஆறு சமயங்கள் மேலே காட்டப்பட்டன ; எல்லாச் சமயங்களையும் உயிர்களின் அறிவு நிலைக்கேற்ப, இறைவன், உலகில் தோன்றி நிலவச் செய்தலின், அவன் ஒருவனே எல்லாச் சமயங்கட்கும் உண்மைத் தலைவன் என்க ; ‘ எல்லாக் கலைகளுக்கும் சிவபிரானே முதல்வன் ’ என மேற் (பக். 472.) காட்டிய உபநிடத வாக்கியத்திற்கும் இதுவே கருத்து. இனி, ‘ உயிர்களின் அறிவு நிலைக்கேற்ப வேண்டும் நூல்களைத் தோற்றுவித்தலேயன்றி வேண்டாதன வற்றை இறைவன் அழித்தலும் செய்வன் ’ என்று அருளு கின்றது, திருவாசகம் ; அதனை, “ மண்ணும் விண்ணும் வானோ ருலகும் - துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும் ” (கீர்த்தி. 4, 5.) என்புழிக் காண்க ; உத்தமன் - மேலானவன். தானே ஆய இமையவன் - ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருந்தேவன்.

657. தொண்டு படு - தொண்டு பொருந்திய. “ தொண்டர் ” என்றது, வாளா பெயராய் நின்றது. ‘ படுவிடம் உண்டு ’ என மாற்றுக. படு விடம் - இறத்தற்கு ஏதுவாகிய

Koviloor Digital Library

வண்டுபடு மலர்க்கொன்றை மாலை யான்காண்
வாண்மதியாய் நாண்மீனு மாயி னுன்காண்
எண்டிசையும் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 8

658 முந்தைகாண் மூவரினும் முதலா னுன்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னுற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் சேங்கண்மால் விடையோன் [றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே. 9

நஞ்சு. வாள் - ஒளி. எண்டிசையும் எழில் ஆரும் - எட்டுத் திசைகளும் அழகு பொருந்துதற்கு ஏதுவாய.

658. முந்தை - யாவரினும் முற்பட்டவன். மூவரினும் - ' அயன் அரி அரன் ' என்னும் மூவருள்ளும். முதல் ஆனுன் - தலைவன் ஆகியவன்; உம்மை, "முரசு முழங்கு தானை மூவ ருள்ளும்" (புறம் - 35) என்புழிப்போல, முற்று. தண்கட மா - குளிர்ந்த மதநீரை யுடைய விலங்கு; யானை. "அடியே" என்னும் ஏகாரம், ' தன் திருவடியையே ' எனப் பிரிநிலை. சிந்தைக்கு அகப்படுபவனை, ' சிந்தை ' என்றருளினுர்; ' சிந்தி தன் ' என்றபடி; எனவே, ' ஏனையோர்க்கு அசிந்திதன் ' என்றதாம். சிந்தாத - சிதருத; புறத்துச் செல்லாத. சிவன் - இன்ப வடிவினன்; "அவன்", பகுதிப்பொருள் விகுதி. மால்ஃ பெருமை எனக்கொண்டு "செங்கண்" என்றதனை விடைக்கு அடையாக்கினும், அன்றி, ' திருமால் ' எனக்கொண்டு அவ னுக்கே அடையாக்கினும் பொருந்தும். விடைக்குக் கொள்ளின், இன அடையாம்.

Koviloor Digital Library

659 பொன்னிசையும் புரிசடையெம் புனிதன் தான்காண்
பூதகண நாதன்காண் புலித்தோ லாடை
தன்னிசைய வைத்தஎழி லரவி னுன்காண்
சங்கவெண் குழைக்காதிற் சதுரன் தான்காண்
மின்னிசையும்வெள்ளெயிற்றேன்வெகுண்டுவெற்பை
யெடுக்கஅடி யடர்ப்பமீண் டவன்றன் வாயில்
இன்னிசைகேட் டிலங்கொளிவா ளீந்தோன் கச்சி
ஏகம்பன் காண்அவன்என் எண்ணத் தானே.10

திருச்சிற்றம்பலம்

659. "பொன் இசையும், மின் இசையும்" என்பவற்றில், "இசையும் என்பன உவம உருபுகள். 'பூத கணத்தை யுடைய நாதன்' என்க. 'ஆடையொடு' என உருபு விரிக்க. தன் இசைய - தனக்குப் பொருந்த; இனி, "தன்" என்றதனைச் சாரியை யாக்கி, 'ஆடைதன்னுெடு வைத்த' என உருபுவிரித்து உரைத்தலுமாம். "காதின்" என்பதில், சாரியை நிற்க ஐ உருபு தொக்கது. 'காதினை உடைய சதுரன்' என்க; சதுரன் - திறலுடையவன். மின் இசையும் வெள் எயிற்றேன், அரக்கன், இராவணன். 'அடியினுல் அடர்ப்ப' என்க. அடர்த்தல் - வருத்துதல். 'மீண்டு' என்பது மற்றென்பதன் வினைமாற்றுப் பொருள் தந்தது. "ஈந்தோன்" என்புழியும் 'காண்' என்பது விரிக்க.

நீராருஞ் சடைமுடியார் நிலவுதிரு வலிவலமு நினைந்து சென்று
வாராரு முலைமங்கை யுமைபங்கர் கழல்பணிந்து மகிழ்ந்து பாடிக்
காராருங் கறைக்கண்டர் கீழ்வேளூர் கன்றாப்பூர் கலந்து பாடி
யாராத காதலினுற் றிருவாரூர் தனின்மீண்டு மணைந்தா ரன்றே.

மேவுதிரு வாதிரைநாள் வீதிவிடங் கப்பெருமான் பவனி தன்னில்
தேவருடன் முனிவர்கண்முன் சேவிக்கு மடியார்க ளுடன்சேவித்து
மூவுலகுங்களிகூரவரும்பெருமைமுறைமையெலாங்கண்டுபோற்றி
நாவினுக்குத் தனியரசர் நயக்குநா ணம்பர்திரு வருளி னுலே.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

66. திருநாகேச்சரம்

திருப்பதிக வரலாறு

நாயனுர், ஆவடுதண்டுறையாரைப் பணிந்து திருஇடைமருதையடைந்து தொழுது திருநாகேச்சரத்தை வழிபட்டுப் பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 192.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

660 தாயவனை வானோர்க்கும் ஏனோ ருக்குந்
தலையவனை மலையவனை உலக மெல்லாம்
ஆயவனைச் சேயவனை அணியான் தன்னை
அழலவனை நிழலவனை அறிய வொண்ணு
மாயவனை மறையவனை மறையோர் தங்கள்
மந்திரனைத் தந்திரனை வளரா நின்ற
தீயவனைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. 1

இத்திருப்பதிகம், 'சிவபிரானை அடையாதவர் நன்னெறியை அடையாதவரே' என அறிவுறுத்தருளியது. அடைதல், நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கல் முதலியன செய்தலுமாம். நன்மை, இம்மை மறுமை இன்பங்களும் வீட்டின்பமுமாம். 'சிவபிரானை அறியாதவர் இம்மை மறுமை இன்பங்களை எண்ணியாங்கு இடையூறின்றி எளிதின் இனிது எய்துதலும், வீட்டின்பத்தினை எவ்வாற்றானும் எய்துதலும் இலர்' என்பதே உண்மை நூல்களின் துணிபு. மேற்காட்டிய (பக். 392.) சுவேதாசுவதர வாக்கியமும் இதனை அறிவுறுத்துவதேயாம்.

660. தாயவன் - தாயாய் இருப்பவன். தலையவன் - தலைவன். மலையவன் - மலையின்கண் உள்ளவன்; சேயவன் - (அடியரல்லாதார்க்குச்) சேய்மையில் உள்ளவன். அணியான் - (அடியார்க்கு) அண்மையில் உள்ளவன். மலை, கயிலை. அழல் - வெம்மை; நிழல் - தண்மை; 'வெம்மையாயும் தண்மையாயும் உள்ளவன்' என்றதாம். மாயவன் - வஞ்சன். மறையவன் - வேதத்தில் உள்ளவன். மந்திரன் - மந்திர வடிவாய் உள்ளவன்.

Koviloor Digital Library

661 உரித்தானை மதவேழந் தன்னை மின்னு
ரோளிமுடியெம் பெருமானை உமையோர் பாகந்
தரித்தானைத் தரியலர்தம் புரமெய் தானைத்
தன்னடைந்தார் தம்வினைநோய் பாவ மெல்லாம்
அரித்தானை ஆலதன்கீழ் இருந்து நால்வர்க்
கறம்பொருள்வீ டின்பமா றங்கம் வேதந்
தெரித்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதா ரன்னெறிக்கண் சேரா தாரே. 2

662 காரானை உரிபோர்த்த கடவுள் தன்னைக்
காதலித்து நினையாத கயவர் நெஞ்சில்
வாரானை மதிப்பவர்தம் மனத்து ளானை
மற்றொருவர் தன்னொப்பா ரொப்பி லாத

தந்திரன் - ஆகமமாய் இருப்பவன். வளராநின்ற தீ - வேள்வித் தீ; 'அத்தீயாய் இருப்பவன்' என்க.

661. மின் ஆர் ஒளி முடி - மின்னல்போலும் ஒளியை உடைய முடி: சடைமுடி. இனி, 'மின்னார் (கங்கையாரை) ஒளித்த முடி' என்றலுமாம்; இப்பொருட்கு, இரண்டனுருபு தொகுத்தலாயிற்றாக உரைக்க. தரியலர் - பகைவர். வினை நோய் - வினையால் வரும் நோய்; பெரு நோய்கள். அரித்தான்- அறுத்தான். "அறம் பொருள் இன்பம் வீடு" என்றது-

"ஈதலறம்; தீவினைவிட் டீட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித் - தாதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு" (ஔவையார் பாடல்)

என்றாற்போலக் கூறும் அவற்றின் இலக்கணங்களை. தெரித்தான். விளக்கினான்.

662. காரானை உரி - கரிதாகிய யானையினது தோல். 'காதலித்தலும் நினைத்தலும் இல்லாத கயவர்' என்க. கயவர்; கீழ்மக்கள். 'செல்லானை' என்று ஓதற்பாலதனை, "வாரானை" என்று ஓதியது, இடவழுவமைதி. "இலாத" என்றதனை, "ஒப்பார்" என்றதற்கும் கூட்டுக; இது, பின் வருகின்ற,

Koviloor Digital Library

ஏரானை இமையவர்தம் பெருமான் தன்னை
இயல்பாகி உலகெலாம் நிறைந்து மிக்க
சீரானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே 3

663 தலையானை எவ்வுலகுந் தானா னானைத்
தன்னுருவம் யாவர்க்கும் அறிய வொண்ணா
நிலையானை நேசர்க்கு நேசன் தன்னை
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
மலையானை வரியரவு நாணுக் கோத்து
வல்லசுரர் புரமூன்றும் மடிய எய்த
சிலையானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. 4

"ஒப்பிலாத ஏரானை" என்பதனை இனிது விளக்கியருளியவாறு. ஏர் - எழுச்சி; ஈண்டு, 'உயர்வு' என்னும் பொருட்டு. "மிக்க" என்பது, "சீரான்" என்பதன் முதனிலையோடு முடிந்தது. 'இறைவன் புகழே உலகெலாம் நிறைந்து மிக்கு விளங்குவது,' என்க.

663. தலையான் - தலைவன்; முதல்வன்; பதி. இறைவனை யாவரும் உருவறியார் என்பதனை,

"அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது"

(அற்புதத்திருவந்தாதி - 61.)

என்று அருளிய அம்மை திருமொழியாலுங் காண்க. உருவம் என்றது, திருமேனியையே யன்றி அவனது உண்மை இயல்பை யும் குறிப்பதேயாம். வீடு பெற்றார்க்கும் அவனது இன்பத்தை நுகர்ந்து வாழ்தலன்றி, அவனது இயல்பினை முற்றும் அளவிட் டுணர்தல் இயலாது என்பதனை,

"கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடல்அளக்க வாராதாற் போலப் - படியில்

Koviloor Digital Library

664 மெய்யானைத் தன்பக்கல் விரும்பு வார்க்கு
விரும்பாத வரும்பாவி யவர்கட் கென்றும்
பொய்யானைப் புறங்காட்டி லாட லானைப்
பொன்பொலிந்தசடையானைப்பொடிகொள்பூதிப்
பையானைப் பையரவ மசைத்தான் தன்னைப்
பரந்தானைப் பவளமால் வரைபோல் மேனிச்
செய்யானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. 5

665 துறந்தானை அறம்புரியாத் துரிசர் தம்மைத்
தோத்திரங்கள் பலசொல்லி வானோ ரேத்த
நிறைந்தானை நீர்நிலந்தீ வெளிகாற் றாகி
நிற்பனவும் நடப்பனவு மாயி னானை

அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
கருத்திற்குச் சேயனாய்க் காண் ''

என, 'திருக்களிற்றுப்படியார்' என்னும் மெய்ந்நூல் விளக்கிற்று (90.). 'மலை, மேருமலை' என்பது, பின் வருவனவற்றால் விளங்கும். 'அதன்கண் கோத்து' என இயைவித்து உரைக்க.

664. "விரும்புவார்க்கு" என்றது, 'விருப்பத்தைச் செலுத்துவார்க்கு' என்றவாறாய் நின்றது. 'அவர்க்கு மெய்யன்" என்க. அரும்பாவியவர்கள் - நீக்குதற்கரிய மிக்க பாவத்தை யுடையவர்கள்; 'அவர்களே இறைவன்மாட்டு விருப்பம் செலுத்துதலை ஒழிவார்' என்றபடி. பொய்யான் - சிறிதும் விளங்காது, இல்பொருள்போலவே இருப்பவன். பொன் பொலிந்த - பொன்போல விளங்குகின்ற; அல்வழியாகலின், னகரம் திரியாதாயிற்று. 'பொன் பொதிந்த' எனவும் பாடம் ஓதுவர். பொடி - திருவெண்ணீறு. "பூதிப் பை" என்பது, வாளா ஓர் பெயராக அருளப்பட்டது. பை அரவம் - படத்தை உடைய பாம்பு. பரந்தான் - எங்கும் நிறைந்தவன். "மேனிச் செய்யான்" எனச் சினைவினை முதல்மேல் நின்றது.

665. துரிசர் - குற்றம் உடையவர். 'துரிசர்தம்மைத் துறந்தானை' எனவும், 'வஞ்சர்தம்மை மறந்தானை' எனவும் இயைக்க. ஏத்த - புகழும்படி. நிறைந்தான் - எல்லா முதன்மை

Koviloor Digital Library

மறந்தானைத் தன்னினையா வஞ்சர் தம்மை
அஞ்சேழுத்தும்வாய்நவிலவல்லோர்க்கேன்றுஞ்
சிறந்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. 6

666 மறையானை மால்விடையோன் றூர்தி யானை
மால்கடல்நஞ் சுண்டானை வானோர் தங்கள்
இறையானை யென்பிறவித் துயர்தீர்ப் பானை
இன்னமுதை மன்னியசீர் ஏகம் பத்தில்
உறைவானை ஒருவருமீங் கறியா வண்ணம்
என்னுள்ளத் துள்ளே யொளித்து வைத்த
சிறையானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. 7

களாலும் நிரம்பினுன். "வல்லோர்" என்றது, "நான் மறக்கினும் - சொல்லும்நா நமச்சிவாயவே" (திருமுறை. 7. 48.). என்றருளியவாறு சொல்லவல்லவர் என்றபடி.

666. மறையான் - வேதத்தின்கண் உள்ளவன்; வேதப் பொருளாய் உள்ளவன். மால்கடல் - பெரிய கடல். இறையான் - கடவுள்; 'தேவர்க்குத் தேவன்' என்றவாறு. 'யான் ஒளித்து வைத்த' என்க. சிறையான் - சிறையில் உள்ளவன். இறைவனைத் தாம் அனுபவமாக இடையருது உணர்ந்து இன்புற்றிருக்கவும், பிறர் ஒருஞான்றும் அதுமாட்டாது துன்பிற்கிடந்து சுழல்கின்ருர் என்பதனை, பான்மைவகையால் இவ்வாறு அருளிச் செய்தார்.

"நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்
தாடி பாதம்என் நெஞ்சு ளிருக்கவே"

எனத் திருக்குறுந்தொகையினும் அருளிச்செய்தார் (திருமுறை. 5. 1. 10).

"ஆர்வல்லார் காண அரனவனை அன்பெனும்
போர்வை யதனலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல

Koviloor Digital Library

௬௬௭ எய்தானைப் புரமூன்றும் இமைக்கும் போதில்
　　இருவிசும்பில் வரும்புனலைத் திருவார் சென்னிப்
பெய்தானைப் பிறப்பிலியை அறத்தில் நில்லாப்
　　பிரமன்தன் சிரமோன்றைக் கரமோன்றினால்
கொய்தானைக் கூத்தாட வல்லான் தன்னைக்
　　குறியிலாக் கொடியேனை அடியே னாகச்
செய்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
　　சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே.　　8

௬௬௮ அளியானை அண்ணிக்கும் ஆன்பால் தன்னை
　　வான்பயிரை அப்பயிரின் வாட்டந் தீர்க்குந்
துளியானை அயன்மாலுங் தேடிக் காணாச்
　　சுடரானைத் துரிசறத் தொண்டு பட்டார்க்
கெளியானை யாவர்க்கும் அரியான் தன்னை
　　இன்கரும்பின் தன்னுள்ளா லிருந்த தேறல்
தெளியானைத் திருநாகேச் சரத்து ளானைச்
　　சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே.　　9

தாயத்தால் நாமுந் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து"

(அற்புதத் திருவந்தாதி - 96.)

என அம்மையும் இவ்வாறே அருளுதல் காண்க.

667. "இமைக்கும் போதில்" என்றது, எய்தமை, பெய்தமை இரண்டிற்குமாம். திரு - அழகு. "அறம்" என்றது, வேதத்தின் பொருளை; அஃதாவது, 'சிவபிரானே முதற் பொருள்' என்பது. வேதத்தினை ஒழியாது ஓதியும், உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காப் பெரும் பேதையாயினனாகலின், அவனை உணர்த்தும் வாயிலின்றித் தலைகளில் ஒன்றைக் கொய்தான்' என்றபடி. குறி - குறிக்கோள்; "குறிக் கோள் இலாது கெட்டேன்" (திருமுறை. 4.67.9.). என்றருளினமை காண்க.

668. அளியான் - கருணையுடையவன். அண்ணிக்கும் - தித்திக்கின்ற. ஆன்பால் - பசுவின்பால்; 'மாண்பன் தன்னை' எனவும், 'அன்பன்தன்னை' எனவும் பாடங்கள் ஓதுப. 'ஆன் பால், தேறல் தெளி' என்பன அடையடுத்த உவமையாகு

Koviloor Digital Library

669 சீர்த்தானை யுலகேழுஞ் சிறந்து போற்றச்
சிறந்தானை நிறைந்தோங்கு செல்வன் தன்னைப்
பார்த்தானை மதனவேள் பொடியாய் வீழப்
பனிமதியஞ் சடையானைப் புனிதன் தன்னை
ஆர்த்தோடி மலையெடுத்த அரக்கன் அஞ்ச
அருவிரலால் அடர்த்தானை அடைந்தோர் பாவந்
தீர்த்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே. 10

திருச்சிற்றம்பலம்

பெயர்கள். துளி - மழை; இதனை, "துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன் - அளியின்மை வாழும் உயிர்க்கு" (குறள் - 557.) என்பதனாலும் அறிக. துரிசு - குற்றம். கரும்பின் பயன் அதன் சாறேயாகலின், அதனையே, "தேறல்" என்றருளினர். "உள்ளால்" என்றதில் ஆல், அசைநிலை; உருபாக உரைப்பாரும் உளர்.

669. சீர்த்தான் - சீரை(புகழை)உடையபொருளானவினன். சிறந்து-ஞானத்திற்சிறந்துநின்று; இங்ஙனம் அருளவே அவ்வாறில்லாதார்க்குச் சிவபிரானைப் போற்றுதல் கூடாதாகும் என்பது பெறப்பட்டது. "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்" (குறள் - 241.) என்பவாகலின், திருவருளை, "செல்வம்" என்றருளினர். மதனவேள் - மன்மதன். பொடி - சாம்பல். 'வீழப் (விழுமாறு) பார்த்தானை' என்க. பனி - குளிர்ச்சி. "மதியம்" என்புழித் தொக்குநின்ற இரண்டனுருபு, 'சடையான' என்னும் வினைக்குறிப்பொடு முடியும்; 'மதி அம் சடையான்' எனலுமாம். புனிதன் - தூயோன்; ஒன்றிலும் தோய்வில்லாதவன். ஆர்த்து - ஆரவாரித்து.

திருப்புகலூ ரமர்ந்தருளுஞ் சிவபெருமான் சேவடிகள் கும்பிட் டேத்தும்
விருப்புடைய வுள்ளத்து மேவியெழுங் காதல்புரி வேட்கை கூர
வொருப்படுவார் திருவாரூ ரொருவாறு தொழுதகன்றங் குள்ளம் வைத்துப்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பாகர் பதிபிறவும் பணிந்து போந்தார். 230

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

67. திருக்கீழ்வேளூர்

திருப்பதிக வரலாறு

நாயனர், திருவாரூரிலிருக்குங்கால் வலிவலம் பணிந்து பாடியபின்பு கீழ்வேளூர் தொழுது பாடியருளியது இத் திருப் பதிகம். (திருநாவுக். பு. 228.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

670 ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
தாளானைத் தன்னெப்பா ரில்லா தானைச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தோப் பானைத்
தூவேளுத்த கோவணத்தை அரையி லார்த்த
கீளானைக் கீழ்வேளு ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 1

இத்திருப்பதிகம், 'பிறப்பு இறப்பு இன்றி எஞ்ஞான்றும் ஒருதன்மையனுய் இருப்பவன் சிவபிரான் ஒருவனேயாகலின், அவனை அடைந்தோரே அத்தன்மையராய் வாழ்வார்' என அறிவுறுத்து அருளிச்செய்தது.

670. யாவரும் இறைவனுக்கு அடியவரேயாகலின், அவனை அறிந்து அடைந்தோரை, "ஆளான அடியவர்கள்" என்று அருளினர். அவர்கட்கு அன்பன் ஆதலாவது, அவர்க்கு வேண்டுவன யாவும் தானே முன்வந்து அருளுதல்; இதனை, திருஞானசம்பந்தர்க்கு முத்துச்சிவிகை முத்துப்பந்தர்முதலியவை களும், நாயனர்க்குப் பொதிசோறும், அவர் இருவர்க்கும் திருவீழிமிழலையில் படிக்காசுகளும், வன்றெண்டர்க்கு ஊரில் இரந்து கொணர்ந்த சோறும் தானே முன்வந்து அளித்தமை யாலும், பிறவாற்ருலும் இனிது தெளியப்படும். "புக்க" என்னும் பெயரெச்சம், "தாள்" என்றதனேடு முடிந்தது. இத் தொடரினை, "ஆளா னவர்கட் கன்பா போற்றி" என்னும் திருவாசகத் தொடருடன் வைத்து நோக்குக (போற்றித் - 198.)

Koviloor Digital Library

671 சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை
நற்பான்மை அறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கி ஞானப்
பற்பாவும் வாயாரப் பாடி யாடிப்
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார்பாவம்போக்கு
கிற்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 2

தாள் - திருவடி ; திருவடியே அடியவரைத் தாங்குவன என்பது, "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" (திருமுருகு - 4.) என்றதனானும் விளங்கும். "சாந்து" என்றது, கத்தூரி முதலிய வற்றை. சந்தனம் முதலியன, அடியவர் செய்யும் வழிபாட்டிற் பெறுவன. தோளாத - துளை இடாத. துளையிடப்பட்ட முத்துச் செயற்கையாய் சிதைவுபட்டுப் பெருமை குறைதலின், இறைவனை இயற்கையாய் நின்று பெரிதும் போற்றப்படும் துளையிடாத முத்தாக அருளுவர் ஆசிரியர் ; இதனை, "தோளா முத்தச் சுடரே போற்றி" (திருவா. போற்றித் - 197.) என்றதனாலும் உணர்க' 'தூயதாக வெளுத்த' என ஆக்கம் வருவித்து உரைக்க. "கோவணத்தை" என்னும் இரண்டாவது, "கீளானை" என்னும் வினைக்குறிப்போடும், "ஆர்த்த" என்பது, 'கீளான்' என்பதன் முதனிலையோடும் முடியும்; எனவே, 'கோவணத்தை - அரையில் ஆர்த்த கீளின்கண் உடையான்' என்பது பொருளாம். கீள் - கோவணத்தை இணைத்துவைத்திருக்குமது. கேடு - அழிவு; பிறந்து இறத்தல். நாடுதல் - விரும்புதல்; விரும்பி அடைதல்.

671. சொற்பாவும் பொருள் - சொல்லின்கண் பரவிய (நிறைந்துள்ள) பொருள். தூய்மை நோக்கி - தூய்மை பெறுதல் (மலங்களெல்லாம் பற்றற நீங்குதல்) குறித்து. தூங்குதல் - பசுபோதம் நீங்கி அருளில் அடங்கிநிற்றல். "சொல்" என்றது, சிவபிரானது இயல்பு உணர்த்தும் பாட்டுக்களை. அவற்றின் பொருளைத் தெரிந்தாலன்றித் தூய்மை நோக்குதலும், தூங்குதலும் இயலாவாகலான், "சொற்பாவும் பொருள் தெரிந்து" என்றருளினர்; இவ்வாறே, "திருவடிக் கீழ்ச் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் - செல்வர் சிவபுரத்தின்" என ஆளுடைய அடிகளும் (சிவ புராணம் - 92. 93.) அருளியது காண்க. "மனம்" என்றது,

Koviloor Digital Library

672 அளைவாயில் அரவசைத்த அழகன் தன்னை
ஆதரிக்கும் அடியவர்கட் கன்பே யென்றும்
விளைவானை மெய்ஞ்ஞானப் பொருளா னானை
வித்தகனை எத்தனையும் பத்தர் பத்திக்
குளைவானை அல்லாதார்க் குளையா தானை
உலப்பிலியை உள்புக்கென் மனத்து மாசு
கிளைவானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 3

உயிரினது அறிவை; அதன் இருளாவது, அறியாமை; ஆணவ மலம். பான்மை - பகுதி; நெறி. நாயினேனை - நாய்போன்றவனாகிய என்னை; இழிவுடைமைக்கு நாயினை உவமையாகக் கூறுதல், தொன்றுதொட்டதொரு வழக்கு. " நற்பான்மை " என முன்னர் அருளினமையின், " நன்னெறிக்கே " என்றது, 'அதற்கே' என்னும் சுட்டளவாய் நின்றது. 'பற்பாவும் பாடி' என இயையும்; 'பல் பா' என்பது, எதுகைநோக்கித் திரிந்தது. பா - திருப்பாடல். இனி, 'பற்பாவும் (பற்கள் நிறைந்த) வாய்' என்றே இயைத்து, 'எழுத்துக்கள் இனிது பிறத்தற்கு ஏதுவாய பற்களும் அவற்றையுடைய வாயும் பயன் பெறுமாறு பாடி' என உரைத்தலுமாம்; இப்பொருட்கு, " பாடி " என்றதற்குச் செயப்படுபொருளாகிய 'பாடல்கள்' என்பது சொல்லெச்சமாகக் கொள்ளப்படும். குறைந்து - குறை இரந்து. போக்ககிற்பான் - நீக்க வல்லவன்.

672. அளை வாயில்-புற்றாகிய இடத்தில் உள்ள. ஆதரிக்கும்-விரும்புகின்ற. " அன்பு விளைவான் " என, பண்பின் தொழில் பண்பிமேல் ஏற்றப் பட்டது. வித்தகன் - திறல் உடையவன். உளைதல் - வருந்துதல்; ஈண்டு, மனம் இரங்குதல். உலப்பு - அழிவு. " மனத்து " எனப் பின்னர் வருகின்றமையின் வாளா " உள்புக்கு " என்றருளினர். 'கிளைப்பான்' என்பது, எதுகை நோக்கி, 'கிளைவான்' என நின்றது; கிளைத்தல் - கல்லுதல். " மனத்து மாசு " என்பதன்றி, 'மனப் பசாசு " எனப் பாடம் ஓதுவாரும் உளர்.

Koviloor Digital Library

673 தாட்பாவு கமலமலர்த் தயங்கு வானைத்
தலையறுத்து மாவிரதந் தரித்தான் தன்னைக்
கோட்பாவு நாளெல்லா மானான் தன்னைக்
கொடுவினையேன் கொடுநரகக் குழியில் நின்றால்
மீட்பானை வித்துருவின் கொத்தொப் பானை
வேதியனை வேதத்தின் பொருள்கொள் வீணை
கேட்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 4

674 நல்லானை நரைவிடையொன் றூர்தி யானை
நால்வேதத் தாறங்கம் நணுக மாட்டாச்
சொல்லானைச் சுடர்மூன்று மானான் தன்னைத்
தொண்டாகிப் பணிவார்கட் கணியான் தன்னை
வில்லானை மெல்லியலோர் பங்கன் தன்னை
மெய்யராய் நினையாதார் வினைகள் தீர்க்க
கில்லானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 5

673. தாள் பாவு - தண்டின்கண் விரிந்த. தயங்குவான் - விளங்குவான்; கமல மலரில் தயங்குபவன், பிரமன்; 'தங்கு வானை' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். "மாவிரதம்" என்றது, மாவிரத சமயத்தவர்க்கு உரிய வேடங்கள்; அவை, எலும்பு மாலை முதலியன. கோள் பாவும் நாள் - கோள்களின் உரிமை பொருந்திய நாள்; கிழமைகள். "நின்றால்" என்றதனால், நில்லாமை பெறப்பட்டது; அவ்வாறன்றி, 'யாதானுமோராற்றால் நின்றாலும் மீட்பான்' என்றதாம். வித்து உரு - வித்தாகிய உருக்கள்; 'அவற்றின் கொத்து ஒப்பான்' என்றது, 'எல்லாப் பொருள்களின் முதலும் தானேயானவன்' என்றவாறு; இனி, 'வித்துருமத்தின் கொத்து' என்பது குறைந்து நின்றது எனினுமாம். வித்துருமம் - பவளம். "வீணை" என்றது, கருவியாகுபெயராய், அதன் இசையைக் குறித்தது.

674. நரை விடை - வெள்விடை; 'முதிய விடை' என்பது நயம். நால்வேதமும் ஆறங்கமும் நணுக மாட்டாத சொல், அருள் ஞானம்; 'அதனானே உணரப்படும் பொருளாய் உள்ள வன்' என்பது கருத்து. 'பணிவார்கட் கினியான் தன்னை'

Koviloor Digital Library

675 சுழித்தானைக் கங்கைமலர் வன்னி கொன்றை
தூமத்தம் வாளரவஞ் சூடி னானை
அழித்தானை அரணங்கள் மூன்றும் வேவ
ஆலால நஞ்சதனை உண்டான் தன்னை
விழித்தானைக் காமனுடல் பொடியாய் வீழ
மெல்லியலோர் பங்கனைமுன் வேன லானை
கிழித்தானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 6

என்பதும் பாடம். " வில்லான் " என்றது, இசையெச்சத்தால், 'மேரு வில்லானை' எனப் பொருள்தரும். மெய் - துணிபு ; 'அஃது உடையாராய் நினையாதார்' என்றது, ஐயத்தொடு நினைவாரை. தீர்க்ககில்லான் - தீர்க்கமாட்டாதவன் ; 'தீர்த்தல் செய்யாதவன்' என்றபடி.

675. 'கங்கை சுழித்தானை' என்க. சுழித்தல் - வளைத்தல்; அடக்குதல். இவ்வாறன்றி. 'சுழிகளாகிய தானைகளை (படைகளை) யுடைய கங்கை' என்றலுமாம். 'மலராகிய வன்னி கொன்றை மத்தம்' என்க. வன்னி, இலையாயினும், மலர்களோடு ஒப்பக்கொள்ளப்படுதல் பற்றி மலர்களுள் வைத்து எண்ணினர். 'வேவ அழித்தானை, வீழ விழித்தானை' என்க. 'ஆலாலம்' என்பது பாற்கடலில் தோன்றிய விடத்தின் பெயர். வேல் நல் ஆனை கிழித்தான் - வேல்போலும் நகத்தால் வன்மை மிக்க யானையைப் பிளந்தான். கயாசுரனாகிய யானையைச் சிவபிரான் தனது நகத்தால் பிளந்தமையை.

" ஒருப தத்தினைக் கவானுறுத் திருகரத் துகிரால்
வெரிநி டைப்பிளந் தீரிரு தாள்புடை மேவ
குருதி கக்கியே வோலிட வவுணர்தங் குலத்துக்
கரியு ரித்தனன் கண்டுநின் றம்மையுங் கலங்க "

என்ற கந்தபுராணச் செய்யுளான் அறிக (ததீசியுத்தரப்-146.). இனி, " வேல் " என்றது, வேலேந்திய படை ஆட்களைக் குறித்தது எனக் கொண்டு, " வேலாண் முகத்த களிறு " (குறள் - 500.) என்றாற்போல. 'அவர்களைக் கோட்டில் ஏந்திய யானை' என, அதனது வலிமை தோன்ற அருளியதாக உரைத்தலுமாம். இன்னும், " வேல் " என்றதற்கு, 'வேல் போலும்

Koviloor Digital Library

676 உளரோளியை உள்ளத்தி னுள்ளே நின்ற
ஓங்காரத்துட் பொருள்தான் ஆயி னானை
விளரோளியை விடுசுடர்கள் இரண்டும் ஒன்றும்
விண்ணோடுமண் ஆகாச மாயி னானை
வளரோளியை மரகதத்தி னுருவி னானை
வானவர்க ளெப்பொழுதும் வாழ்த்தி யேத்துங்
கிளரோளியைக் கீழ்வேளு ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 7

தந்தத்தினை யுடைய' எனினும் பொருந்தும். "நன்மை" ஈண்டு, வலிமை மிகுதி குறித்தது. 'வேனலானை' எனவும். 'வேனிலானை' எனவும் இரண்டனுருபு விரிந்து நின்றதாகவே ஓதுவன பாடம் ஆகாமைக்கு, "கிழித்தான்" என்பதுதானே சான்றாகும். மேல், "விழித்தானைக் காமனுடல் பொடியாய் வீழ" என அருளிச் செய்தவர், மறித்தும் ஈண்டே அதனை அருளிச் செய்தார்' என்றல் பொருந்துமாறு எங்ஙனம் என்க.

676. உளர் ஒளி - அசைகின்ற ஒளி; விளக்கு. காற்றுக் காரணமாக எஞ்ஞான்றும் அசைந்து விளங்குதலே அதற் கியல்பாதல் பற்றி, அவ்வாறருளினர். ஓங்காரத்து உட்பொருள், மேலே காட்டப்பட்டது. (பக். 293.). விளர் ஒளி - வெளுத்த ஒளி ; 'அதனை விடுகின்ற சுடர்கள் இரண்டும் ஒன்றும்' என்க. இரண்டு, சூரியனும் சந்திரனும் ; ஒன்று, நெருப்பு. இவை மூன்றனது ஒளியும் வெள்ளியவாதல் அறிந்து கொள்க. முச்சுடர்களில், ஞாயிறும் திங்களும் ஒருதிறத்தின வாகவும், நெருப்பு மற்றொரு திறத்தினதாகவும் காணப்படுதல் பற்றி இவ்வாறு, "இரண்டும் ஒன்றும்" எனப் பிரித்தோதி யருளினர். "வளர் ஒளி" என்றது, மாணிக்கத்தினது ஒளியை; அது, கழுவுந்தொறும் வெளிப்படுதல்பற்றி, அவ்வாறருளிச் செய்தார், கிளர் ஒளி - மிக்க ஒளி ; என்றது அவனது அருட் டிருமேனிகளை ; அவை, அவற்றின் மிக்க ஒளியில்லாத பேரொளியினவாதல்பற்றி, அவ்வாறருளிச்செய்தார். உளரொளி யாயும், வளரொளியாயும் இருப்பவனை அவைகளாகவே அருளியது, ஒற்றுமைபற்றி அருளிய பான்மைவழக்கு. "கிள ரொளி" என்றது முன்னர்ப் பண்பாகுபெயராய்த் திருமேனியை யும், பின்னர்ச் சினையாகுபெயராய் அதனை உடையவனையுங் குறித்த இருமடி ஆகுபெயர் ; 'உடம்பும் உறுப்பெனப்படும்'

Koviloor Digital Library

677 தடுத்தானைக் காலனைக் காலாற் பொன்றத்
தன்னடைந்த மாணிக்கன் றருள்செய் தானை
உடுத்தானைப் புலியதளோ டக்கும் பாம்பும்
உள்குவா ருள்ளத்தி னுள்ளான் தன்னை
மடுத்தானை அருநஞ்சம் மிடற்றுள் தங்க
வானவர்கள் கூடியஅத் தக்கன் வேள்வி
கெடுத்தானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 8

678 மாண்டா ரேலும்பணிந்த வாழ்க்கை யானை
மயானத்திற் கூத்தனைவா ளரவோ டேன்பு
பூண்டானைப் புறங்காட்டி லாட லானைப்
போகாதேன் னுள்புகுந் திடங்கொண் டேன்னை
ஆண்டானை அறிவரிய சிந்தை யானை
அசங்கையனை அமரர்கள்தஞ் சங்கை யெல்லாங்
கீண்டானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 9

என்பது, "உறுப்பொத்தல் மக்களொப் பன்றால்" (குறள்-993.) என்பதனால் அறிக.

677. 'காலால் தடுத்தான்' என்பது, 'உதைத்தான்' என்னும் பொருளது. 'காலனைப் பொன்றக் காலால் தடுத் தானை" எனக் கூட்டுக. 'தடுத்து அருள்செய்தான்' என எடுத்து இயைவிக்க. மாணி - பிரமசாரி; மார்க்கண்டேயர். அதள் - தோல். "அதளோடு" என்றதில் ஒடுவுருபு, "தொடி யொடு தொல்கவின் வாடிய தோள்" (குறள் - 1235.) என்பதிற் போல, வேறுவினைக்கண் வந்தது. அக்கு - எலும்பு. மடுத்தான் - வாய் மடுத்தான்; உண்டான். 'மிடற்றுள் தங்க மடுத்தான்' என்க.

678. எலும்பு அணிந்த வாழ்க்கை - எலும்பை அணிதற்கு ஏதுவாய் நின்ற வாழ்க்கை; என்றது, 'வறுமை வாழ்க்கை' என்னும்பொருட்டாய்,அவனது நிலைபேற்றினைக்குறிக்கும் குறிப்பு மொழியாய் நின்று, பழித்ததுபோலப் புகழ்புலப்படுத்துநின்றது; "மாண்டார் எலும்பு" என்றதும் அதுபற்றி. பின்னர், "அர வோடு என்பு பூண்டான்" என்றது, அவனது பற்றின்மையைக்

Koviloor Digital Library

679 முறிப்பான பேசிமலை யெடுத்தான் தானும்
முதுகிறமுன் கைந்நரம்பை யெடுத்துப் பாடப்
பறிப்பான்கைச் சிற்றரிவாள் நீட்டி னானைப்
பாவியேன் நெஞ்சகத்தே பாதப் போது
பொறித்தானைப் புரமூன்றும் எரிசெய் தானைப்
பொய்யர்களைப் பொய்செய்து போது போக்கிக்
கிறிப்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. 10

திருச்சிற்றம்பலம்

குறிக்கும். " மயானம், புறங்காடு " என்னும் இரண்டனுள் முன்னது, 'உலக முழுதும் ஒடுங்கிய நிலையையும், பின்னது உலகப் புறங்காட்டையும் குறித்து, முன்னின்ற தொடர்களின் பொருளை வலியுறுத்தின. உள் - உள்ளம். 'அதனை இடங் கொண்டு' என்க. சிந்தை, அவனது திருவுள்ளக் குறிப்பு; அதனை அறிவார் ஒருவரும் இல்லை என்க. அசங்கை - அச்சம் இன்மை; 'அச்சம் இல்லாதவன்' என்றது, 'தான் யார்க்கும் குடியல்லாத் தன்மையன்; தன்வயம் உடையவன்' என்றபடி. சங்கை - அச்சம்; அமரர்கள்தம் அச்சம் எல்லாம் தீர்த்தது, அசுரர்களை அழித்து என்க. கீண்டான்-பிளந்தான்; அழித்தான்.

679. முறிப்பு ஆன-தொடர்பை அறுப்பனவாகிய சொற்கள்; 'கடுஞ்சொற்கள்' என்றபடி. தான், அசைநிலை; உம்மை, சிறப்பு. முதுகு இற - முதுகு நெரியப்பெற்றமையால். எடுத்து - உரத்து. பறிப்பான் - அவன், பகைவரது உயிரை வாங்குதற் பொருட்டு. அரி வாள் - பகைவரது உறுப்புக்களை அறுக்கின்ற வாள்; " சிற்றரிவாள் " என்றது, 'அஃது ஒன்றுதானே பல பெருவீரரை வெல்லும் ஆற்றலுடைத்து' என்பது தோற்று வித்தற்பொருட்டு. " நீட்டினான் " என்றது, பான்மைவழக்கால், 'ஈந்தான்' என்னும் பொருளைத் தந்தது. பொய்யர்கள், அன்பின்றி வழிபடுவோர்; பொய்செய்து - அருள்புரிவான் போன்று அதனைக் கடைபோகச் செய்யாது. கிறிப்பான் - வஞ்சிப்பான்; கிறி, வஞ்சனையாதல், " கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன் " (திருவா. திருவம். 6.) என்பதனான் அறிக.

Koviloor Digital Library

68. திருமுதுகுன்றம்

திருப்பதிக வரலாறு

நாயனார், நடுநாட்டில் திருத்தூங்கானைமாடத்திலிருந்து திருவரத்துறை சென்று பணிந்து திருமுதுகுன்றம் தொழுது பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 154-155.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

680 கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க் காற்ற எளியான் தன்னைக்
குருமணியைக் கோளரவோன் றாட்டு வானைக்
கோல்வேங்கை யதளானைக் கோவணனை
அருமணியை அடைந்தவர்கட் கமுதொப் பானை
ஆனஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. 1

இத்திருப்பதிகம், சிவபிரானது அளவற்ற பெருமையைப் பலவாற்றால் நினைந்து, அவனைத் தாம் நெடுங்காலம் தெளியாது மயங்கியிருந்தமைபற்றி இரங்கியருளிச்செய்தது.

680. கருமணி, கண்ணில் உள்ளது. கனகம் - பொன். "கனகத்தின்" என்பதில் 'இன்' அல்வழிக்கண்வந்த சாரியை. "கருதுவார்க்கு ஆற்ற எளியான்" என்பது மேலேயும் (பக் - 173.) வந்தது. குருமணி - நிறம் வாய்ந்த மணி. "கோவணவன் தன்னை" என்பது பாடம் அன்று. அருமணி - கிடைத்தற்கு அரிய மணி. திருமணி - அழகிய மணி. "கருமணி" முதலியன உவமையாகு பெயர்கள். 'அறியாதிருந்தமைக்குக் காரணம் தீவினை' என்பது உடம்பொடு புணர்த்தலாற் கொள்க. அறிதலினின்றும் பிரித்தலின், "அறியாதே" என்னும் ஏகாரம் பிரிநிலை. திகைத்தல் - மயங்குதல். 'திகைத்தவாறு இரங்கத் தக்கது' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

Koviloor Digital Library

681 காரொளிய கண்டத்தெங் கடவுள் தன்னைக்
காபாலி கட்டங்க மேந்தி னானைப்
பாரொளியை விண்ணொளியைப் பாதாளனைப்
பால்மதியஞ் சூடியோர் பண்பன் தன்னைப்
பேரொளியைப் பெண்பாகம் வைத்தான் தன்னைப்
பேணுவார் தம்வினையைப் பேணி வாங்குஞ்
சீரொளியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. 2

682 எத்திசையும் வானவர்கள் தொழநின் றானை
ஏறூர்ந்த பெம்மானை யெம்மா னென்று
பத்தனாய்ப் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை
முத்தினை யென்மணியை மாணிக் கத்தை
முளைத்தெழுந்த செழும்பவளக் கொழுந்தொப் பானைச்
சித்தனையென் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. 3

681. கார் ஒளிய - கரிதாகிய ஒளியினை உடைய. "காபாலி" என்புழியும் இரண்டனுருபு விரிக்க. பாரின்கண் உள்ள ஒளி, நெருப்பு; விண்ணின்கண் உள்ள ஒளி, ஞாயிறு திங்கள் விண் மீன்கள். பாதலத்தில் உள்ளது இருளாகலின், "பாதாளனை" என்பதற்கு, 'அதன்கண் உள்ள இருளானவனை' என உரைக்க; 'ஒளியும் இருளும் அவனே' என்றதற்கு இவ்வாறு ஓதியருளினார். "பாதாளத் தானை' என்பது பாடம் அன்று. 'சூடிய' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. "ஓர் பண்பு" என்றது, சார்ந்தாரைக் காத்தலை. பேரொளி - எல்லா ஒளிகட்கும் முதலாய் உள்ள ஒளி. பேணுவார் - விரும்பிப் போற்றுவார். பேணி - குறிக்கொண்டு. சீர் ஒளி - (வினை தீர்க்கப் பெற்றார் புகழும்) புகழ்களை உடைய ஒளி; வினை, இருளோடொப்பது ஆகலின், அதனை நீக்குபவனை, "ஒளி" என்று அருளினார்.

682. 'வானவர்கள் எத்திசைக்கண்ணும் தொழ ஆங்கு நின்றானை' என்க; தேவர்கள் ஆங்காங்குத் தத்தமக்குரிய இடங்களில் நின்று தம் தம் தொழிலைச் செய்துவருதலின், அவர்கள் ஆங்காங்கு அத்தொழிலை இனிது நடாத்தி வாழ்தற்பொருட்டுத்

Koviloor Digital Library

683 ஊன்கருவின் உள்நின்ற சோதி யானை
உத்தமனைப் பத்தர்மனம் குடிகொண் டானைக்
கான்திரிந்து காண்டீப மேந்தி னானைக்
கார்மேக மிடற்றானைக் கனலைக் காற்றைத்
தான்தெரிந்தங் கடியேனை யாளாக் கொண்டு
தன்னுடைய திருவடியென் தலைமேல் வைத்த
தீங்கரும்பைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. 4

தொழுவாராகலின், அவர்கட்கு ஆங்காங்கு நின்று அருளல் வேண்டுவதாயிற்று; "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால் - தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை எல்லாம் தொழவேண்டி" (திருவா. திருச்சதகம் - 16.) என்று அருளியது காண்க. 'பணிந்த' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று, "புகழ்புரிந் தில்" (குறள் - 59.) என்பதிற்போல. 'பணிந்து பாட' என்று இயைத்துரைப்பினுமாம். பன்னாள் பாமாலை பாட அருளினமையை நினைந்து உருகி அருளிச்செய்தார். பவளம், 'கொடி' எனப் படுதலின், "முளைத்தெழுந்த" என்று அருளினார். சித்தன் - எல்லாம் செய்ய வல்லவன்.

683. ஊன் - உடம்பு. அதனுள் நின்ற கரு, உயிர்; அதனுள் நின்ற சோதி இறைவன் என்க. கான் - காடு. காண்டீபம் - வில். 'காண்டீபம் ஏந்திக் கான் திரிந்தான்' என்க; இது செய்தது அருச்சுனன் பொருட்டு, தெரிந்து - உரிய பொழுதைத் தெரிந்து. அங்கு - அப்பொழுது; 'அங்கே' என்னும் தேற்றேகாரம் தொகுத்தலாயிற்று. அருள்பெறும் நிலையை உயிர்கள் அடையுமாயின். இறைவன் சிறிதும் தாழ்த்தல் இன்றி அப்பொழுதே அருளுவனாகலின், "அங்கு ஆளாக் கொண்டு, தன்னுடைய திருவடி என் தலைமேல் வைத்த" என்று அருளினார். 'தீங்கரும்பு' இன எதுகை. 'தீன்கரும்பை' எனப் பாடம் ஓதுவாரும் உளர்.

Koviloor Digital Library

684 தக்கனது பெருவேள்வி தகர்த்தா ளுகித்
தாமரையான் நான்முகனுந் தானே யாகி
மிக்கதோரு தீவளிநீர் ஆகா சமாய்
மேலுலகுக் கப்பாலா யிப்பா லானை
அக்கினேடு முத்தினையு மணிந்து தோண்டர்க்
கங்கங்கே அறுசமய மாகி நின்ற
திக்கினையேன் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. 5

685 புகழொளியைப் புரமெரித்த புனிதன் தன்னைப்
போன்போதிந்த மேனியனைப் புராணன் தன்னை
விழவோலியும் விண்ணேலியு மானுன் தன்னை
வெண்காடு மேவிய விகிர்தன் தன்னைக்

684. 'தாமரையானுகிய நான்முகன்' என்க. உம்மை, ஏனை இருவரையுங்கொள்ள நிற்றலின் எச்சம். மேலுலகுக்கு அப்பாலாய் இப்பாலுமாம் நிலையை அருளுவதே திருவுள்ளமாகலின், தக்கன் வேள்விதகர்த்தது முதலியவற்றை எச்சமாக்கி அருளினுர். அக்கு - எலும்பு. 'அக்கினையும் முத்தினையும் ஒப்ப அணிந்து' என்றது, வேண்டுதல் வேண்டாமை இன்மையைப் புலப்படுத்தி, அறுசமயத்தார்க்கு அருளும் அருள்வேறுபாட்டினுல், அவன் கோட்டம் இலனுதலைத் தெரிவித்தற் பொருட்டு. "அறுசமயங்கள்" என்றது உட்சமயங்கள்; அவை (பக். 363.) குறிக்கப்பட்டன. சமயங்கள் அவரவரது அறிவு நிலைக்கு ஏற்ப அமைந்தனவாகலின், அவற்ருல் அடையும் பயனும் வேறுபடுவ வாயின; எனினும், 'இறைவன் உண்மை கொள்வார் அனைவரும் தொண்டரே' என்பது, "தொண்டர்க்கு" என்றதனுல் பெறப்பட்டது. சேக்கிழார் நாயனுரும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரது திருமணத்தில், "ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும்" (1252.) வீடுபெற்றமை தெளிவித்தருளினுர். திக்கு - கதி; அறுசமயத்தவர்க்கும் அவனே கதியாகலின், "அறுசமயம் ஆகிநின்ற திக்கு" என்று அருளிச்செய்தார்.

685. புகழ் ஒளி - யாவரும் புகழும் ஒளி. பொன் பொதிந்த - பொன்னை நிறைத்து வைத்தது போலும். புராணன் - பழையோன். விண் ஒலி - விண்ணரினது பண்பாகிய ஒலி; அஃது,

Koviloor Digital Library

கழலோலியுங் கைவளையும் ஆர்ப்ப ஆர்ப்பக்
　　கடைதோறு மிடுபிச்சைக் கேன்று சேல்லுந்
திகழொளியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
　　தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.　　６

６８６ போர்த்தானை யின்னுரிதோல் போங்கப் போங்கப்
　　புலியதளே உடையாகத் திரிவான் தன்னை
காத்தானை ஐம்புலனும் புரங்கள் மூன்றும்
　　காலனையுங் குரைகழலாற் காய்ந்தான் தன்னை
மாத்தாடிப் பத்தராய் வணங்குந் தோண்டர்
　　வல்வினைவே ரறும்வண்ணம் மருந்து மாகித்
தீர்த்தானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
　　தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.　　７

எடுத்தோதிய விழவொலி ஒழித்து ஒழிந்த எல்லாவகை ஒலி களையும் குறித்துநின்றது. " கைவளை " என்றது, கங்கணத்தை. பிட்சாடன வடிவத்தில் அழகிய அணிகளும் கொள்ளப்பட்டன என்க. கடைதோறும் - வாயில்கள்தோறும். திகழ் ஒளி - தானே விளங்கும் ஒளி.

686. 'ஆனையின் உரிதோல் பொங்கப் பொங்கப் போர்த்துத் திரிவான்' எனக் கூட்டுக. " ஆனையின்னுரிதோல் " என்பதில் னகரம், விரித்தல். பொங்குவது, திருமேனியின் ஒளி : 'ஆனையை உரித்த ஞான்று கொண்ட திருமேனியின் பேரொளி யைக் காணமாட்டாது தேவர்கள் கண்ணொளி இழக்க, அத் துன்பம் நீங்குதற் பொருட்டுச் சிவபிரான் அவ்யானையின் தோலைத் திருமேனிமறையப் போர்த்துக்கொண்டான்' என்பதே புராணம் ஆதல் உணர்க. காத்தான் - அடக்கினான். மாத்து ஆடி - மகத்தாக (பெரிதாக) ஆடல் புரிந்து. " ஆடி " என் பதனை, " ஆகி " என்பதனோடாயினும், " வணங்கும் " என்ப தனோடாயினும் முடிக்க. மணி மந்திரங்களையும் கொள்ள நிற்ற லின், " மருந்தும் " என்னும் உம்மை, எச்சம் ; சிறப்புமாம் ; ஏகதேச உருவகமாகலின், 'வல்வினையாகிய நோய்' என உரைக்க. " வினை வேரறும் வண்ணம் " எனச் சினைவினை முதலொடு சார்த்தி அருளப்பட்டது ; 'வினையது வேர்' என்றும், 'வேரோடறும் வண்ணம்' என்றும் உரைப்பினும் அமையும்.

Koviloor Digital Library

687 துறவாதே யாக்கை துறந்தான் தன்னைச்
சோதி முழுமுதலாய் நின்றான் தன்னைப்
பிறவாதே எவ்வுயிர்க்குந் தானே யாகிப்
பேண்ணிேனோ டாணு நவாய் நின்றான் தன்னை
மறவாதே தன்திறமே வாழ்த்துந் தோண்டர்
மனத்தகத்தே அனவரதம் மன்னி நின்ற
திறவானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. 8

688 போற்றூணைப் புலால்நாறு கபால மேந்திப்
புவலோக மெல்லா முழிதந் தானை
முற்றாத வெண்டிங்கட் கண்ணி யானை
முழுமுதலாய் மூவுலகும் முடிவோன் றில்லாக்
கற்றானைக் காளத்தி மலையான் தன்னைக்
கருதாதார் புரமூன்றும் எரிய அம்பால்
செற்றானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. 9

687. யாக்கையைத் துறவாதே துறந்தமை யாவது, இயல்பாகவே உடம்பின்றி இருத்தல். " தானே ஆகி " என்னுமிடத்து, ' துணை ' என்பது வருவிக்க. பிறவாதே எவ்வுயிர்க்கும் தானே துணையாதலாவது, தோன்றாது நின்றும். " இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான் " (திருமுறை - 7. 29. 1.) என வியக்குமாறு, அருளாலே வேண்டும் வடிவங்கொண்டு, இம்மெனத் தோன்றி இம்மென மறைந்தும் உயிர்கட்கு வேண்டும் நலங்களைப் புரிந்தருளுதல் ; இதனால், கருவாய்ப்பட்டுப் பிறந்து, உணவினால் வளர்ந்து வாழ்ந்து மாயும் உடம்புகளைத் தம்வயத்தாலன்றி வினைவயத்தாற் பெற்றுப் பிறந்தே நிற்பார் உயிர்கட்கு மெய்த்துணைவர் ஆகாமை பெறப்பட்டது. அனவரதம் - எப்பொழுதும். " திறல் " என்றது, அறிந்தாங்கறிதலை.

688. " பொற்றூண் " என்றது, உயர்வுபற்றி அருளிய உவமை ; " மாசொன்றில்லாப் பொற்றூண்காண் '' என மற்றோரிடத்தினும் (தாண். 76.) அருளிச்செய்தார். " புவலோகம் " என்றது, அதனை முதலாக உடைய மேலுலகங்களைக்குறித்த ஆகுபெயர். உழிதந்தது, இரத்த பிச்சை ஏற்றற் பொருட்டு, ' மூவுலகின் கண்ணும் ' என உருபு விரிக்க. " கற்றூண் " என்றது,

Koviloor Digital Library

689 இகழ்ந்தானை இருபதுதோள் நெரிய வூன்றி
　　யேழுநரம்பி னிசைபாட இனிது கேட்டுப்
புகழ்ந்தானைப் பூந்துருத்தி மேயான் தன்னைப்
　　புண்ணியனை விண்ணவர்கள் நிதியந் தன்னை
மகிழ்ந்தானை மலைமகளோர் பாகம் வைத்து
　　வளர்மதியஞ் சடைவைத்து மாலோர் பாகந்
திகழ்ந்தானைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
　　தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.　10

திருச்சிற்றம்பலம்

உருவகம் ; 'எல்லா உலகங்களிலும் விரவி நின்று அவற்றை நிலைபெறுவிக்கின்றவன்' என்பது கருத்து.

689. இகழ்ந்தான் - அவமதித்தவன் ; மதியாது கயிலையைப் பெயர்த்தவன் ; இராவணன். 'அவன் பாட' என எடுத்துக்கொண்டு உரைக்க. புகழ்ந்தான் - மகிழ்ந்தான். பூந்துருத்தி, சோழநாட்டுத் தலம். நிதி - நிதிபோன்றவன் ; அம் தன் சாரியைகள். மகிழ்ந்தான் - இன்புற்றான் ; 'பாகம் வைத்து மகிழ்ந்தான்' என்க. திருமாலை ஒரு பாகத்தில் திகழக் கொண்டமை, மேலே (பக். 381. 420.) காட்டப்பட்டது.

அந்நாளி லாளுடைய பிள்ளையார் திருப்புகலி யதன்க ணின்றும்
பன்னாகப் பூணணிவார் பயின்றதிருப் பதிபலவும் பணிந்து
　　　　　　　　　　　　　　　　　　　　　　　　செல்வார்
புன்னாகமணங்கமழும்பூம்புகலூர்வந்திறைஞ்சிப்பொருவில்சீர்த்தி
மின்னாரும் புரிமுந்நூல் முருகனார் திருமடத்தின் மேவுங் காலை.231

ஆண்டவரசெழுந்தருளியணியாரூர்மணிப்புற்றிலமர்ந்துவாழும்
நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு நீடுதிருப் புகலூர் நோக்கி
மீண்டருளினாரென்றுகேட்டருளியெதிர்கொள்ளும்விருப்பினோடும்
ஈண்டுபெருந் தொண்டர்குழாம் புடைசூழ வெழுந்தருளி யெதிரே
　　　　　　　　　　　　　　　　　　　　　　　சென்றார். 232

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

69. திருப்பள்ளியின்முக்கூடல்

திருப்பதிக வரலாறு

வாகீசர், திருப்புகலூர் தொழும் விருப்புடையராய்த் திருவாரூரிலிருந்து பல பதிகளையும் வணங்கிச் செல்லுங்கால் திருப்பள்ளியின்முக்கூடல் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 230.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

690 ஆராத இன்னமுதை அம்மான் தன்னை
அயனோடுமா லறியாத ஆதி யானைத்
தாராரும் மலர்க்கோன்றைச் சடையான் தன்னைச்
சங்கரனைத் தன்னொப்பா ரில்லா தானை
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நீள்விசும்பாய் ஆழ்கடல்க ளேழுஞ் சூழ்ந்த
பாரானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 1

இத் திருப்பதிகமும் மேலைத் திருப்பதிகம் போலவே அருளிச் செய்யப்பெற்றது.

690. ஆராத - நிறையாத ; தெவிட்டாத. " நீரான் " முதலியவற்றிற்கு, ' நீராய் உள்ளவன் ' என்றாற்போல உரைக்க. பயிலுதல், ஈண்டு, ' நூலைப் பயிலுதல் ' என்பது போலப் பல காலும் சிந்தித்தல் முதலியன செய்து வழிபடுதல். " பாழ் " என்றது, ஆகுபெயராய் பயனில்லாத நெறியை (சமண் சமயத்தை)க் குறித்தது ; எப்பொருட்கும் முதல்வனாகிய இறைவனை உளன் என்று ஒருதலையாகத் துணியாது, ' உளனோ, இலனோ ' என ஐயுற்று நிற்றலின் சமண் சமயம் பாழ் நெறி (பயனில்லாத நெறி) ஆயிற்று. ' அஃது ஐயத்தை உடைய நெறியே ' என்பதனை, ' அத்தி நாத்தி ' (अस्ति नास्ति - உண்டு இல்லை) என்னும் அதன் தத்துவக் கொள்கையே இனிது விளக்கும். அது பற்றியே, " ஐயுறும் அமணரும் " (திருமுறை. 1. திருவெழுகூற்றிருக்கை - 36.) என்று அருளிச் செய்தார், ஆளுடைய

Koviloor Digital Library

691 விடையானை விண்ணவர்கள் எண்ணத் தானை
வேதியனை வெண்டிங்கள் சூடுஞ் சென்னிச்
சடையானைச் சாமம்போல் கண்டத் தானைத்
தத்துவனைத் தன்னொப்பா ரில்லா தானை
அடையாதார் மும்மதிலுந் தீயில் மூழ்க
அடுகணைகோத் தெய்தானை அயில்கொள் சூலப்
படையானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 2

692 பூதியனைப் பொன்வரையே போல்வான் தன்னைப்
புரிசடைமேல் புனல்கரந்த புனிதன் தன்னை
வேதியனை வெண்காடு மேயான் தன்னை
வெள்ளேற்றின்மேலானைவிண்ணோர்க்கெல்லாம்
ஆதியனை ஆதிரைநன் னாளான் தன்னை
அம்மானை மைம்மேவு கண்ணி யாளோர்
பாதியனைப் பள்ளியின் முக்கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 3

பிள்ளையார். ஐயத்தை யுடையார் வீடுபேறு எய்தாமை, "ஐயத் தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் - வானம் நணிய துடைத்து" (குறள். 353.) என்னும் பொதுமறையான் இனிது விளங்கிக் கிடந்தது; ஆகவே, சமண் சமயத்தை நாயனார், 'பாழ் நெறி' என்று கூறி அதன் உண்மை யுணர்த்தி யருளினார் என்க. 'பாழின்கண்ணே' என உருபு விரிக்க. ஏகாரம் பயனுடைய நன்னெறியினின்று பிரித்தலின், பிரிநிலை. "பாழே" என்பதற்கு (இவ்வாறன்றி, 'பாழாகவே பயனின்மை உண்டா கும்படியே)' என ஆக்கம் வருவித்து உரைப்பினும் ஆம். 'உழன்றவாறு இரங்கத்தக்கது' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

691. எண்ணத்தான் - தியானத்தின்கண் உள்ளவன். சாமம் - கருமை. போல், அசைநிலை. அயில் - கூர்மை.

692. பூதியன் - விபூதியை (திருவெண்ணீற்றை) அணிந் தவன்; 'ஐசுவரியம் உடையவன்' என்றலுமாம். விண்ணோர்க்கு எல்லாம் ஆதியன் - எல்லாத் தேவர்கட்கும் முதலில் உள்ளவன், 'முதற் கடவுள்' என்றபடி.

Koviloor Digital Library

693 போர்த்தானை ஆனையின்தோல் புரங்கள் மூன்றும்
போடியாக எய்தானைப் புனிதன் தன்னை
வார்த்தாங்கு வனமுலையாள் பாகன் தன்னை
மறிகடலுள் நஞ்சுண்டு வானோ ரச்சந்
தீர்த்தானைத் தென்றிசைக்கே காமன் செல்லச்
சிறிதளவில் அவனுடலம் பொடியா வாங்கே
பார்த்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 4

694 அடைந்தார்தம் பாவங்கள் அல்லல் நோய்கள்
அருவினைகள் நல்குரவு சேல்லா வண்ணங்
கடிந்தானைக் கார்முகில்போற் கண்டத் தானைக்
கடுஞ்சினத்தோன் தன்னுடலை நேமி யாலே
தடிந்தானைத் தன்னொப் பாரில்லா தானைத்
தத்துவனை உத்தமனை நினைவார் நெஞ்சில்
படிந்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 5

693. "வார்த் தாங்கு" என்பதில் தகரம் விரித்தல். வார் - கச்சு. வனம் (வன்னம்) - அழகு. "தென்றிசை" என்பது, காலன் ஊரைக் குறிக்கும் குறிப்புமொழி. "திசைக்கே", 'திசைக்கண்ணே' என வேற்றுமை மயக்கம். பொடியா - சாம்பலாகும்படி. ஆங்கே - அப்பொழுதே ; கண்ணுதற் கடவுளிடத்துக் காமன், மலரம்புகளை ஏவித் தன் செயலைச் செய்தமை உலகம் அறிந்ததாகலின், வாளா, "ஆங்கே" என்று அருளினார் ; எனவே, 'அவன் அம்பெய்த அந் நொடியிலே' என்பது பொருளாயிற்று. பார்த்தான் - (நெற்றிக் கண்ணால்) நோக்கினான்.

694 அடைந்தார் - தன்னை அடைக்கலமாக அடைந்தவர். அல்லல் நோய்கள் - துன்பத்தைத் தரும் பிணிகள். "பாவங்கள்" என்றது பிராரத்தத்தையும், "அருவினைகள்" என்றது சஞ்சிதத்தையும் நோக்கி என்க. நல்குரவு - வறுமை. 'அவர்பாற் செல்லாவண்ணம்' என உரைக்க. நேமி சக்கரம். 'நேமியால் தடிந்தான்' என்றதனால், "கடுஞ்சினத்தோன்" என்றது, 'சலந்தரனை' என்பது தெளிவு.

Koviloor Digital Library

௬௯௫ கரந்தானைச் செஞ்சடைமேல் கங்கை வெள்ளங்
கனலாடு திருமேனிக் கமலத் தோன்தன்
சிரந்தாங்கு கையானைத் தேவ தேவைத்
திகழொளியைத் தன்னடியே சிந்தை செய்வார்
வருந்தாமைக் காப்பானை மண்ணாய் விண்ணாய்
மறிகடலாய் மால்விசும்பாய் மற்று மாகிப்
பரந்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 6

௬௯௬ நதியாருஞ் சடையானை நல்லூ ரானை
நள்ளாற்றின் மேயானை நல்லத் தானை
மதுவாரும் பொழில்புடைசூழ் வாய்மூ ரானை
மறைக்காடு மேயானை ஆக்கூ ரானை
நிதியாளன் தோழனை நீடு ரானை
நெய்த்தான மேயானை ஆரு ரென்னும்
பதியானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 7

" சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடி "

என்றருளியதும் (திருவா. திருச்சாழல். 18.), கந்தபுராணம் ததீசி யுத்தரப் படலத்துள் சலந்தராசுரனைச் சிவபிரான் அழித்த வரலாற்றை விரித்துரைத்ததும் காண்க. படிந்தான் - ஊன்றி யிருந்தான்.

695. 'கங்கை வெள்ளம் செஞ்சடைமேல் கரந்தான்' என்க. " கனலாடு " என்றதில் ஆடு உவம உருபு. 'திருமேனிக்கண் கையானை' என இயையும்; 'உயர்ந்த திருவுருவில் இழிந்த தலையையும் தாங்கியுள்ளான்' என அவனது அருள்விளையாட்டை வியந்து அருளிச் செய்தவாறு. இவ்வாறன்றி, " கனலாடு திருமேனி " என்றதனை, கமலத்தோனுக்கு அடையாக்குதல் பொருந்தாமை அறிக. வருந்தாமை - துன்புறாதபடி.

696. நதி ஆரும் - கங்கை பொருந்திய. ஆரூர்போல, 'நல்லூர், நள்ளாறு, நல்லம், வாய்மூர், மறைக்காடு (வேதாரணியம்), ஆக்கூர், நீடூர், நெய்த்தானம்' என்பனவும்

Koviloor Digital Library

697 நற்றவனை நான்மறைக ளாயி னானை
நல்லானை நணுகாதார் புரங்கள் மூன்றுஞ்
செற்றவனைச் செஞ்சடைமேல் திங்கள் சூடுந்
திருவாரூர்த் திருமூலட் டானம் மேய
கொற்றவனைக் கூரரவம் பூண்டான் தன்னைக்
குறைந்தடைந்து தன்திறமே கொண்டார்க் [கென்றும்
பற்றவனைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 8

698 ஊனவனை உடலவனை உயிரா னானை
உலகேழு மானானை உம்பர் கோவை
வானவனை மதிசூடும் வளவி யானை
மலைமகள்முன் வராகத்தின் பின்பே சென்ற
கானவனைக் கயிலாய மலையு ளானைக்
கலந்துருகி நைவார்தம் நெஞ்சி னுள்ளே
பானவனைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 9

சோழநாட்டுத் தலங்கள். மது வாரும் - தேன் ஒழுகுகின்ற. நிதியாளன் - குபேரன்.

697. நற்றவன் - நல்ல தவக்கோலம் உடையவன். கொற்றவன் - தலைவன் ; 'கொற்றம் (வெற்றி) உடையவன்' என்றே உரைத்தலுமாம். கூர் அரவம் - மிக்க பாம்புகள். தன் திறமே கொண்டார் - தனது தன்மையையே கடவுள் தன்மையாகத் துணிந்தவர்கள். பற்றவன் - துணையாய் இருப்பவன்.

698. ஊனவன் - தசை முதலியனவாய் உள்ளவன். உடலவன் - அத் தசை முதலியவற்றால் இயன்ற உடம்பாய் உள்ளவன். உயிர் ஆனான் - அவ்வுடலின்கண் உள்ள உயிராய் இருப்பவன். உலகு ஏழும் ஆனான் - அவ் வுயிர்கள் மாறிச் செல்லும் பல உலகங்களாய் இருப்பவன். "வானவன்" என்றது, பிறவிப் பெயர் ; 'தேவராய் இருப்பவன்' என்பது பொருள் ; இதனை, "உம்பர் கோ" என்றதற்கு முன்னர் வைத்து உரைக்க. உம்பர் கோ - தேவர்கட்குத் தலைவனாய் இருப்பவன். வளவியான் - 'வளவி' என்னும் தலத்தில் இருப்பவன் ; இது வைப்புத் தலம். "மலைமகள் முன்" என்றது,

Koviloor Digital Library

699 தடுத்தானைத் தான்முனிந்து தன்தோள் கோட்டித்
தடவரையை இருபதுதோள் தலையி னாலும்
எடுத்தானைத் தாள்விரலால் மாள வூன்றி
எழுநரம்பின் இசைபாடல் இனிது கேட்டுக்
கொடுத்தானைப் பேரோடுங் கூர்வாள் தன்னைக்
குரைகழலாற் கூற்றுவனை மாள அன்று
படுத்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்

'அவள் காண' என்றவாறு ; 'காண்டலால் அவன் வருத்தத்திற்கு அவள் வருந்துமாறு' என்பது திருக்குறிப்பு. வராகம் - பன்றி ; இஃது அருச்சுனனை அழிக்க வந்தது. கானவன் - வேட்டுவன். கலந்து - ஒன்றுபட்டு. உருகி நைதல், ஒருபொருட் பன்மொழி ; 'உருகி நினைவார்' என்பதும் பாடம். பானவன் - பருகப்படுபவனாய் உள்ளவன் ; இது, 'பானம்' என்பது அடியாகப் பிறந்த பெயர். 'பால் நவன்' எனப் பிரித்து, 'நவமாய (புதிய - கறந்த -) பால்போல்பவன்' என்றுரைத்தலுமாம்.

699. இராவணனது செயலைத் தடுத்து அவனுக்கு அறிவுரை கூறினவன் அவன் அமைச்சன் ; அவனை இராவணன் முனிந்தான் என்க. "தோள்" என்புழியும் உருபும் உம்மையும் விரிக்க. "மாள ஊன்றி" என்றது, ஊன்றியவாறே இருப்பின் அவன் மாளுதல் ஒருதலையாதல் பற்றி. "பேரோடும்" என்னும் உம்மை, எச்சம். 'வாள்தன்னைக் கொடுத்தானை' என்க. படுத்தான் - கொன்றான்.

கரண்டமலி தடம்பொய்கைக் காழியர்கோ னெதிரணையுங் காதல் கேட்டு
வரன்றுமணிப் புனற்புகலூர் நோக்கிவரும் வாகீசர் மகிழ்ந்து வந்தார்
திரண்டபெருந் திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்த போதில்
இரண்டுநில வின்கடல்க ளொன்றாகி யணைந்தனபோ லிசைந்த வன்றே. 233

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

70. க்ஷேத்திரக்கோவை

திருப்பதிக வரலாறு

நாயனர், பாண்டிநாட்டு யாத்திரை செய்து மீண்டு திருப்புகலூர் அடைந்து பல வகையாலும் பணி செய்து தங்கியிருக்கும் நாட்களில் பாடியருளிய பல திருப்பதிகங்களுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 414.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

700 தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப்பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ்சீரார் காளத்தியுங்
கயிலாய நாதனையே காண லாமே. 1

சிவதலங்களை நினைத்தலும், அவைகளின் திருப்பெயரைச் சொல்லுதலுமே பெரும்பயன் தருவதாதல் பற்றி, இத் திருப்பதிகத்துள் அவைகளை எடுத்துத் தொகுத்தோதியருளினர்; நான்காந் திருமுறையுள் (15) பாவநாசத் திருப்பதிகத்துள் தலங்களையே எடுத்தோதி யருளினமை காண்க. அத்தலங்களைச் சென்று வழிபடும் மதுகையும், காதலும் இல்லாதார்க்கு இதுபோலும் திருப்பதிகங்கள் பெரிதும் பயன் தருவனவாமென்க.

'க்ஷேத்திரம்' என்னும் ஆரியச்சொல் திருப்பதிகங்களிலோ பிற திருமுறைகளிலோ ஓரிடத்தும் வாராமையின், அதனைத் திரிபும் இல்லாமல் நாயன்மார் இங்கு அருளிச் செய்திரார்; ஆதலின், 'சேத்திரக்கோவை' எனக் கொள்ளல் நலம். 'திருத்தலக்கோவை. திருப்பதிக்கோவை' என்றாற் போல்வனவே இதுபோலும் திருப்பதிகங்கட்குப் பெயராய் இருந்திருத்தல் வேண்டும். "மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்துதிருத்தாண்டகமும்" என்பதே சேக்கிழார் வாக்கும்.

700. சிற்றம்பலம். தில்லைக் கோயிலில் கூத்தப் பெருமான் நடனம் புரியும் இடம்; இது மிகச் சிறப்புடைத்தாதல் பற்றி

Koviloor Digital Library

இப்பெயர் அத் திருக்கோயில் முழுவதையும் குறித்தல் உண்டு. சிறுமை + அம்பலம் = சிற்றம்பலம். சிறுமை - நுண்மை; அஃதாவது இறைவனது அருளாற்றல். அம்பலம் - வெளி. எனவே, 'சிற்றம்பலம்' என்பது, 'அருள்வெளி' என்பதாம். திருமுறைகளைத் தொடங்கும் பொழுதும், 'திருச்சிற்றம்பலம்' எனத் தொடங்கி, முடிக்கும் பொழுதும், 'திருச்சிற்றம்பலம்' என முடித்தற்கும் இதுவே காரணம்; அஃதாவது, அவை அருள் வெளியினின்றும் தோன்றிய அருள் நாத ஒலிகளாய் இருத்தலே காரணம் என்க. தேவாரத் திருப்பதிகங்கள் தில்லையில் சேமிக்கப்பட்டதும் இதுபற்றியே என உணர்க. இறைவனது அருளாற்றல் அறிவே வடிவாய் இருத்தல்பற்றி, 'சிற்றம்பலம்' என்பது, வடமொழியில், 'சிதம்பரம்' எனப்படும். சித் - அறிவு; அம்பரம் - ஆகாசம்; வெளி. இதனை, "சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலம்" (பெரிய. பு. தில்லைவாழ். பு. 2.) என விளக்கியருளினார், சேக்கிழார் நாயனார். பர வியோமம் - மேலான வெளி. இனி, உபநிடதங்களில் தகர வித்தை கூறும் இடங்களில் வரும், 'தகராகாசம்' என்பதில், 'தகரம்' என்பதற்கும், 'சிறுமை' என்பதே பொருள். இறைவனுக்கு உண்மையில் இடமாவது அவனது அருள்வெளியே. அதனால், உயிர்கள் பொருட்டு அவன் பற்பல திரு உருவங்களைத் தனது திருமேனியாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களும், அவனது அருட்டிருமேனிகளை நினைக்கும் நெஞ்சகமும், 'சிற்றம்பலம்' எனக் கூறுதற்கு உரியனவாம். ஆயினும் அவற்றுள்ளும், இறைவன் உலகில் உருவத் திருமேனி கொண்டு உலகம் முழுவதையும் இயக்குவதாகிய ஐந்தொழில் (பஞ்சகிருத்திய) நடனத்தை இயற்றி நிற்கும் இடமும், அறிவுடைப் பொருளாகிய உயிரோடு ஒற்றுமைப்பட்டு அதன் அறிவை விளக்கி நின்று உதவும் நெஞ்சகமுமே சிறப்பாக, 'சிற்றம்பலம்' எனப்படுகின்றன. எனினும், இறைவன் உலகில் நடனக் கோலங் கொண்டு விளங்கும் இடங்களில் தில்லையே முதன்மையுடைத்து என்பது வரலாற்று முறையான் வருதல் பற்றி, அஃது ஒன்றே, 'சிற்றம்பலம்' என்னும் பெயருடைத்தாயிற்று; இது, காரண இடுகுறிப் பெயர் என்க. புறத்துத் தில்லைச் சிற்றம்பலமும், அகத்து நெஞ்சகமும் இறைவற்குச் சிறந்த இடமாம் என்பதனை, "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும்என் சிந்தையுள்ளும் - உறைவான்" என்னும் திருக்கோவையால் உணர்க (20). இவ்வாற்றால், தில்லைச் சிற்றம்பலம் முதற்றிருக் கோயிலாதல் பெறப்படுதலின், அதுவே சிறப்பாக, 'கோயில்' எனப்படுகின்றது. இவ்வாற்றால்

Koviloor Digital Library

அதனையே முதற்கண் வைத்து அருளிச்செய்தார். திருவாரூர் பழைமை பற்றித் தில்லை போலும் பெருமையுடைத்தாதல் பற்றி, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், தமது திருத்தலக்கோவையில் அதனை முதற்கண் வைத்து, தில்லையை அதன் பின்வைத்து, அவற்றிற்குப்பின் ஏனைய தலங்களை அருளிச்செய்தார். திருவாரூரின் பழைமை, "ஒருவனாய் உலகேத்த" என்னும் திருப்பதிகத்தால் (34) நன்கு உணர்க. 'காழி' என்பது தவிர்த்து, ஏனைய தலங்கட்கெல்லாம், 'திரு' என்பதனை முதலிற் கொள்க. காழியை, 'சீகாழி' என்றல் மரபு.

தில்லைச் சிற்றம்பலம், செம்பொன்பள்ளி, தேவன்குடி, சிராப்பள்ளி, தெங்கூர், கோடிகா, சத்திமுற்றம் இவை, சோழ நாட்டுத் தலங்கள். தேவன்குடி - திருந்துதேவன்குடி.

கோவல் - கோவலூர்; கோவலூர்வீரட்டம். நடுநாட்டுத் தலம்.

கோகரணம், துளுவநாட்டுத் தலம்.

முல்லைப் புறவம் - முல்லைக் கொடியை உடைய காடு; இது, முருகன் பூண்டிக்கு அடை. முருகன்பூண்டி, கொங்குநாட்டுத் தலம்.

கல்லின் திகழ் - மலையினால் விளங்குகின்ற. காளத்தி, தொண்டைநாட்டுத் தலம்.

கொல்லியறைப்பள்ளி, முழையூர், பழையாறை இவைவைப்புத் தலங்கள். 'முளையூர்' என்பதும் பாடம். "குளிர்" என்பது அடைமொழி.

நிலவுலகின் பொருட்டு இறைவன் திருக்கைலையில் புவன பதியாய், அறக்கருணையும் மறக்கருணையும் புரிந்து வீற்றிருத்தலின், மக்கள் யாவரும் அவனையே நினைத்தும், வாழ்த்தியும், வணங்கியும் உய்தல் வேண்டும். அனைவர்க்கும் அது கூடாமை அறிந்து, அப்பெருமான் நிலமுழுதும் ஆங்காங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து அருள்புரிகின்றானாதலின், இத் தலங்களில் எல்லாம், "கயிலாய நாதனையே காணலாமே" என்று அருளிச்செய்தார். ஏகாரங்கள் இரண்டனுள் முன்னையது பிரிநிலை; பின்னையது தேற்றம். இதனால், 'சிவபிரானை, நிலவுலகத்தில் எவ்விடத்து எவ்வுருவில் எவ்வாறு கண்டு வழிபடினும்,

Koviloor Digital Library

701　ஆரூர்மூ லட்டானம் ஆனைக் காவும்
　　ஆக்கூரில் தான்தோன் றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
　　பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கைவீ ரட்டானமுங்
　　கோட்டூர் குடமூக்குக் கோழம் பமுங்
காரார் கழுக்குன்றுங் கானப் பேருங்
　　கயிலாய நாதனையே காண லாமே.　　2

அவ்விடத்தைத் திருக்கைலையாகவும், ஆங்கு விளங்கும் இறைவனைக் கைலைத் தலைவனாகவும் கருதி வழிபடுதல் வேண்டும்' என்பது பெறப்பட்டது. இது, சமய தீக்கைக்கண்ணே வலியுறுத்தப்படுகின்றது ; ஆயினும், அதற்கு மேற்பட்ட தீக்கை முதலியவற்றை அடைந்தோர்க்கும் யாவர்க்கும் இதுவே நெறி என்பதே திருமுறைகளின் முடிபு. 'திருக்கைலையை நேர்படக் கண்டு வழிபடும் வழிபாடே நிலவுலகில் சிவபிரானை நேர்படக் கண்டு வழிபடும் வழிபாடு' என்பதனானே, நாயனார், இவ்வுடல் மாளுதற்குமுன் எவ்வாறேனும் திருக்கைலையைக் கண்டு வழிபடுதல் வேண்டும் என்னும் உறைப்புடன் எத்துணை இடையூறுகளாலும் மனம் பின்னிடையாது கைலைநோக்கிச் செவ்வனஞ் சென்றுகொண்டே இருந்தார். ஆயினும், அவர் வாயிலாக அருளிச்செய்யவேண்டிய இன்றியமையாத அரும் பெருந் திருப்பதிகங்கள் அதுகாறும் அருளிச் செய்யப்படாதிருந்தமையின், அவைகளை அருளுவித்தற் பொருட்டு அவரை இறைவன் இடைவழியினின்றும் மீள எளிதில் தமிழ்நாடு போதரச் செய்தான் என்க.

701. ஆரூர் மூலட்டானம், ஆனைக்கா, ஆக்கூர்த் தான்றோன்றிமாடம், ஆவூர், பிரமபுரம், குறுக்கை வீரட்டானம், கோட்டூர், குடமூக்கு, கோழம்பம் இவை சோழநாட்டுத் தலங்கள். பிரமபுரம் - சீகாழி. குடமூக்கு - கும்பகோணம். பேணும் கூரார் - வழிபடும் அன்பு மிக்கவர்களை யுடைய.

Koviloor Digital Library

702 இடைமரு தீங்கோ யிராமேச் சரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக்களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கோடுமுடி குற்றாலங் கோள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந் துறை
கயிலாய நாதனையே காண லாமே. 3

703 எச்சி லிளமர் ஏம நல்லூர்
இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி
அச்சிறு பாக்க மளப்பூர் அம்பர்
ஆவடு தண்டுறை யழுந்தூர் ஆறை
கைச்சினங் கற்குடி கச்சூர் ஆலக்
கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியும் ஏகம் பத்துங்
கயிலாய நாதனையே காண லாமே. 4

கழுக்குன்று, தொண்டைநாட்டுத் தலம். கார் ஆர் - மேகம் படியும்.

கானப்பேர், பாண்டிநாட்டுத் தலம்.

பேரூர், பேராவூர், பெருந்துறை, காம்பீலி, பிடவூர் இவை வைப்புத் தலங்கள்.

702. இடைமருது, ஈங்கோய், இன்னம்பர், தலையாலங்காடு, தலைச்சங்காடு, கொள்ளம்பூதூர், கோட்டாறு, கடைமுடி, கானூர், கடம்பந்துறை இவை சோழநாட்டுத் தலங்கள்.

இராமேச்சரம், குற்றாலம் இவை பாண்டிநாட்டுத் தலங்கள்.

கொடுமுடி - பாண்டிக்கொடுமுடி ; இது கொங்குநாட்டுத் தலம்.

ஏர் - அழகு. இடவை, ஏமப்பேறூர், சடைமுடி, சாலைக்குடி, தக்களூர், கோத்திட்டை, கோட்டுக்காடு இவை வைப்புத்தலங்கள்.

703. அம்பர், ஆவடுதுறை, அழுந்தூர், கைச்சினம், கற்குடி, கரவீரம், காட்டுப்பள்ளி இவை சோழநாட்டுத் தலங்கள்.

Koviloor Digital Library

704 கொடுங்கோளூர் அஞ்சைக் களஞ்செங் குன்றூர்
கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக் காவு
நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடும்பா வனமெழுமூர் ஏமூர் தோமூர்
எறும்பியூர் ஏராரு மேம கூடங்
கடம்பை யிளங்கோயில் தன்னி னுள்ளுங்
கயிலாய நாதனையே காண லாமே. 5

" அம்பர் " என்றதனால், ' அம்பர்ப் பெருந்திருக்கோயில், அம்பர் மாகாளம் ' என்னும் இரண்டனையும், " காட்டுப்பள்ளி " என்றதனால், ' மேலைக் காட்டுப்பள்ளி, கீழைக் காட்டுப்பள்ளி ' என்னும் இரண்டனையுங் கொள்க.

இலம்பையங்கோட்டூர், அச்சிறுபாக்கம், கச்சூர் ஆலக் கோயில், ஏகம்பம் இவை தொண்டைநாட்டுத் தலங்கள். " கச்சி " என்றதனை, ஏகம்பத்திற்குங் கூட்டுக. ' கச்சி ' என்பது தலத்தின் பெயரும், ' ஏகம்பம் ' என்பது, கோயிலின் பெயருமாம். ' ஏகம்பம் ' என்னும் பெயர்பற்றி மேலே (பக், 322.) குறிப்பிடப்பட்டது.

எச்சி லிளமர், ஏம நல்லூர், இறையான்சேரி, அளப்பூர், ஆறை, கச்சிப் பலதளி இவை வைப்புத் தலங்கள். தளி-கோயில். கச்சித் தலத்தில் ஏகம்பமே யன்றி எண்ணிறந்த கோயில்கள் உளவாதலின், அவை எல்லாவற்றையும், " கச்சிப் பலதளி " என்று அருளிச்செய்தார். " எச்சி லிளமர் " என்பதேயன்றி, ' எச்சிலிளவர் ' எனவும் பாடம் ஓதுப.

704. அஞ்சைக்களம், மலைநாட்டுத் தலம்.

குரக்குக்கா, நெடுங்களம், நன்னிலம், நெல்லிக்கா, நின்றியூர் நீடூர், இடும்பாவனம், எறும்பியூர், கடம்பை, இளங்கோயில் இவை சோழநாட்டுத் தலங்கள். கடம்பை - கடம்பூர். இளங் கோயில் - மீயச்சூர் இளங்கோயில்.

கொடுங்கோளூர், செங்குன்றூர், கொங்கணம், குன்றியூர், நியமநல்லூர், எழுமூர், ஏமூர், தோமூர், ஏமகூட மலை இவை

Koviloor Digital Library

705 மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணுசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக் குடி
விளமர் விராடபுரம் வேட்க ளத்தும்
பெண்ணை யருட்டுறைதண் பெண்ணு கடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவே ளூருங்
கண்ணைகளர் காறை கழிப்பாலையுங்
கயிலாய நாதனையே காண லாமே. 6

706 வீழி மிழலைவெண் காடு வேங்கூர்
வேதிகுடி விசய மங்கை வியலூர்
ஆழி யகத்தியான் பள்ளி யண்ணு
மலையாலங் காடும் அரதைப்பெரும்

வைப்புத் தலங்கள். எழுமூர் - தஞ்சை எழுமூர். ஏர் ஆரும் - அழகு நிறைந்த. 'ஏராறும்' என்பது பாடம் அன்று.

705. மண்ணிப்படிக்கரை, வாழ்கொளிபுத்தூர், வெண்ணி, வேள்விக்குடி, விளமர், வேட்களம், பெரும்புலியூர், பெருவேளூர், களர், கழிப்பாலை இவை சோழநாட்டுத் தலங்கள். 'வாள்கொளி புத்தூர்' என்பதும் பாடமாகக் கொள்வர். வெண்ணி - வெண்ணியூர்.

வக்கரை, தொண்டைநாட்டுத் தலம்.

அருட்டுறை, பெண்ணுகடம் இவை நடுநாட்டுத் தலங்கள். 'அருட்டுறை' என்பது திருவெண்ணெய்நல்லூர்க் கோயிலின் பெயர். 'பெண்ணை' என்பது அத்தலத்தை அடுத்து ஓடும் ஆற்றின் பெயர்.

மந்தரமலை, வாரணுசி, விளத்தொட்டி, விராடபுரம், பிரம்பில், கண்ணை, காறை, இவை வைப்புத்தலங்கள். 'மந்தரம்' என்பது 'மந்தாரம்' என நீட்டலாயிற்று; அன்றி, அவ்வாறே பெயர் பெற்றதொரு வைப்புத் தலம் உண்டெனின், கொள்க.

706. வீழிமிழலை, வெண்காடு, வேதிகுடி, விசயமங்கை, வியலூர், அகத்தியான்பள்ளி, அரதைப்பெரும்பாழி, பழனம், பனந்தாள், பாதாளம், பராய்த்துறை, பைஞ்ஞீலி, நாகைக் காரோணம் இவை சோழநாட்டுத் தலங்கள். ஆழி - கடல்;

Koviloor Digital Library

பாழி பழனம்பனந் தாள்பா தாளம்
　　பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடல்நாகைக் காரோ ணத்துங்
　　கயிலாய நாதனையே காண லாமே. 7

707 உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்
　　உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
　　வீரட்டம் மாதானங் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடல்மீ யச்சூர் வைகா
　　வேதீச்சுரம் விவீச்சுரம் வெற்றி யூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையுங்
　　கயிலாய நாதனையே காண லாமே. 8

'ஆழியை அடுத்த அகத்தியான் பள்ளி' என்க. பாதாளம் - பாதாளேச்சுரம். காழி - சீகாழி; இது மேலும் அருளிச்செய்யப் பட்டது. நாகை - நாகப்பட்டினம்; அதன்கண் உள்ள திருக் கோயிலின் பெயர், காரோணம்.

அண்ணாமலை, நடுநாட்டுத் தலம்.

ஆலங்காடு, தொண்டைநாட்டுத் தலம்.

வேங்கூர், பனங்காட்டூர் இவை வைப்புத்தலங்கள். 'வெங்கூர்' என்பதும் பாடம். தொண்டைநாட்டுத் தலங்களுள் ஒன்றாய் விளங்கும், 'வன்பார்த்தான் பனங்காட்டூர்' என்பது வேறு.

707. ஊறல், ஓத்தூர் இவை தொண்டைநாட்டுத்தலங்கள்.

மறைக்காடு, மீயச்சூர், வைகா, கஞ்சனூர் இவை சோழ நாட்டுத் தலங்கள். மேற்சொல்லப்பட்ட இளங்கோயில் (704) மீயச்சூரிலுள்ள மற்றொரு திருக்கோயில்; அது மூலத்தான மூர்த்தி பாலாலயத்துள் இருந்தபொழுது பாடப்பட்ட இடம் என்பர். வைகா - வைகாவூர்.

கேதாரம், வடநாட்டுத்தலம்.

வெஞ்சமாக்கூடல், கொங்குநாட்டுத் தலம்.

Koviloor Digital Library

708 திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரஞ்சிற் றேமம் சேறை
கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர் கூடல்
குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு
அண்டர் தொழும் அதிகை வீரட்டானம்
ஐயா றசோகந்தி ஆமாத் தூருங்
கண்டியூர் வீரட்டங் கருகா வூருங்
கயிலாய நாதனையே காண லாமே. 9

உஞ்சேனை மகாளம், உருத்திரகோடி பொதியில்மலை, தஞ்சை, வழுவூர் வீரட்டம், மாதானம். வேதீச்சுரம். விவீச்சுரம், வெற்றியூர், கஞ்சாறு, பஞ்சாக்கை இவை வைப்புத் தலங்கள். மஞ்சு ஆர் - மேகம் படியும். 'மறைக்காட்டுள்ளும், வெற்றியூரினும், பஞ்சாக்கையினும் காணலாம்' என முடிக்க. உம்மைத் தொகை ஒருசொல் நடைத்தாகலின், ஏற்ற பெற்றியால் ஓரோ ரிடத்து உருபொடு கூடிய எண்ணும்மை கொடுக்கப்பட்டது.

708. சேய்ஞலூர், தேவூர், சிற்றேமம், சேறை, கொண்டீச்சரம், குருகாவூர் வெள்ளடை, ஐயாறு, கண்டியூர் வீரட்டம், கருகாவூர் இவை சோழநாட்டுத் தலங்கள். சிரபுரம் - சீகாழி; இதுவும் செம்பொன்பள்ளியும் மேலும் அருளிச்செய்யப் பட்டன. சில தலங்களை மீளவும் வலியுறுத்து அருளிச்செய்தல், அவற்றிற்கு உள்ள சிறப்புப்பற்றி எனக்கொள்க; அச்சிறப்பு முழுதும் இஞ்ஞான்று நாம் அறிதல் அரிது. 'ஒரு தலத்தை வேறு பெயரால் மீள அருளுதல், அப்பெயர்பற்றி அறியப்படும் பெருமை தோன்றுதற்பொருட்டு' என்பது மேலும் கூறப்பட்டது. 'வெள்ளடை' என்பது குருகாவூர்க் கோயிலின் பெயர்.

அதிகை வீரட்டானம், ஆமாத்தூர் இவை நடுநாட்டுத் தலங்கள். அதிகைவீரட்டானம், நாயனர் திருவருள் பெற்ற தலம் என்பது வெளிப்படை.

கூடல் - மதுரை; பாண்டிநாட்டுத் தலம்.

திண்டீச்சரம், கூந்தலூர், கூழையூர், குமரி, கொங்கு, அசோகந்தி இவை வைப்புத் தலங்கள். அண்டர் - தேவர்.

Koviloor Digital Library

709 நறையூரிற் சித்தீச் சரம்நள் ளாறு
நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை
தோணிபுரந் துருத்தி சோமேச்சரம்
உறையூர் கடலொற்றி யூரூற் றத்தூர்
ஓமாம் புலியூர்ஓர் ஏட கத்துங்
கறையூர் கருப்பறியல் கன்றுப் பூருங்
கயிலாய நாதனையே காண லாமே. 10

710 புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி

709. நறையூர்ச் சித்தீச்சரம். நள்ளாறு. நாரையூர். நாகேச்சரம், நல்லூர், சோற்றுத்துறை, துருத்தி, உறையூர், ஓமாம்புலியூர், கருப்பறியலூர், கன்றுப்பூர் இவை சோழநாட்டுத் தலங்கள். 'சித்தீச்சரம்' என்பது நறையூர்த் திருக்கோயிலின் பெயர். நல்லூர், நாயனார்க்குத் திருவடிசூட்டிய தலமாதல் அறிக. தோணிபுரம் - சீகாழி; இது மேலும் அருளிச்செய்யப் பட்டது. உறையூர் - மூக்கீச்சரம்.

துறையூர், நடுநாட்டுத் தலம்.

ஒற்றியூர். தொண்டைநாட்டுத் தலம். 'கடலைச் சார்ந்த ஒற்றியூர்' என்க.

ஏடகம், பாண்டிநாட்டுத் தலம்.

சூலமங்கை, சோமேச்சரம், ஊற்றத்தூர், கறையூர் இவை வைப்புத் தலங்கள்.

710. புத்தூர், பூவணம் இவை பாண்டிநாட்டுத் தலங்கள்,

புகலூர், புன்கூர், புறம்பயம், வலிவலம், வாய்மூர், வைகல். வலஞ்சுழி, வாஞ்சியம், மருகல், வன்னி, நெய்த்தானம் இவை சோழநாட்டுத் தலங்கள். வைகல் - வைகல் மாடக்கோயில். வன்னி - வன்னியூர். நிலம் மலி - நிலத்தின்மேற் புகழ் நிறைந்த.

Koviloor Digital Library

நிலமலிநெய்த் தானத்தோ டெத்தானத்தும்
நிலவுபெருங் கோயில்பல கண்டால் தொண்டீர்
கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே. 11

திருச்சிற்றம்பலம்

மாற்பேறு, தொண்டைநாட்டுத் தலம்.

புலிவலம், பொய்கைநல்லூர் இவை வைப்புத் தலங்கள்.

எத்தானத்தும் - எடுத்தோதியனவேயன்றிப் (பெரியோரால் வணங்கப்படும்) எத்தலத்திலும். நிலவு பெருங் கோயில் பல கண்டால் - விளங்குகின்ற பெருமைபொருந்திய திருக்கோயில்கள் பலவற்றையும் சென்று காண்பீராயின். தொண்டீர் - தொண்டர்களே. இங்கு, "கண்டால் கயிலாய நாதனையே காணலாம்" என்றது, 'அவ்விடங்களிற் காணலாம்' என்றதேயன்றி, 'கயிலைப் பெருமானை அடைதல் கூடும்' என்றருளிச்செய்ததூஉமாம். ஆகவே, 'அத்தலங்களை இயன்ற அளவிற் கரவாது சென்று காணுமின்' என்பது அருளாணையாயிற்று; நாயனார் அங்ஙனஞ் சென்று கண்டமை சொல்லவேண்டா. 'கலியும் வலியும் மிக்கோன்' என்க. கலி - எழுச்சி; செருக்கு.

திருநாவுக் கரசரெதிர் சென்றிறைஞ்சச் சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையா ரெதிர்வணங்கி யப்ப ரேநீர்
வருநாளிற் றிருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீர் என்று கூற
வருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை யவருமெதி ரருளிச் செய்வார். 234

சித்த நிலாவுந் தென்றிரு வாரூர் நகராளும்
மைத்தழை கண்ட ராதிரை நாளின் மகிழ்செல்வம்
இத்தகை மைத்தென் றென்மொழிகேன் என் றருள்செய்தார்
முத்து விதான மணிப்பொற் கவரி மொழிமாலை. 235

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

71. அடைவுத் திருத்தாண்டகம்

திருப்பதிக வரலாறு

திருவையாற்றில் கயிலைக் காட்சி கண்ட நாயனர் திருநெய்த் தானம், திருமழபாடி முதலிய தலங்களைப் பணிந்து, திருப்பூந் துருத்தி சேர்ந்து, பெருமானைப் பரிவோடு வணங்கி இருப்போந் திருவடிக்கீழ் நாம் என்னுந் திருக்குறுந்தொகை முதலிய பல பதிகங்கள் அருளிச்செய்து திங்களும் ஞாயிறுந் தோயுந் திருமடம் அமைத்துத் திருத்தொண்டு செய்திருக்கும் நாட்களில் பாடியருளியவற்றுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 390.)

திருச்சிற்றம்பலம்

711 பொருப்பள்ளி வரைவில்லாப் புரமூன் றெய்து
புலந்தழியச் சலந்தரனைப் பிளந்தான் பொற்சக்
கரப்பள்ளி திருக்காட்டுப் பள்ளி கள்ளார்
கமழ்கொல்லி யறைப்பள்ளி கலவஞ் சாரற்
சிரப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன் பள்ளி
செழுநனி பள்ளிதவப் பள்ளி சீரார்
பரப்பள்ளி யென்றென்று பகர்வோ ரெல்லாம்
பரலோகத் தினிதாகப் பாலிப் பாரே. 1

இத்திருப்பதிகம், மேலைத்திருப்பதிகத்துள் ஓதியருளியனவும், பிறவுமாகிய தலங்களைப் பெயர் ஒற்றுமையால் வகைப்படுத்து அருளிச்செய்தது, அப்பெயர்கள்தாம் சத்தகோடி மகாமந்திரங் கள் போல ஒருபெற்றியனவான பல்வேறு முடிபுடையனவாய் இயைந்து, ஓதுவார் உள்ளத்தில் எளிதிற் பொருந்தி நின்று பயன்தருமாகலின். நாயனரும் இதனுள் பெரும்பாலும் அத்தலப் பெயர்களைச் சொல்லுதலையே வலியுறுத்தி யருளினர். 'அடைவு, முறைமை' என்பன ஒருபொருட் சொற்கள். முறைமையாவது ஒருதன்மைப்பட்ட பொருள்கள் தொடர்ந்து வருதல்.

711. இத்திருத்தாண்டகம், 'பள்ளி' எனவருவனவற்றை வகுத்தருளிச்செய்தது.

Koviloor Digital Library

712 காவிரியின் கரைக்கண்டி வீரட் டானங்
கடவூர்வீ ரட்டானங் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டங் குறுக்கைவீ ரட்டங்
கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமருஞ் சிவன்தமரேன் றகல்வர் நன்கே. 2

சக்கரப்பள்ளி, நனிபள்ளி சோழநாட்டுத் தலங்கள். காட்டுப் பள்ளி, சிராப் பள்ளி, செம்பொன் பள்ளி, கொல்லியறைப் பள்ளி மேலைத் திருப்பதிகத்துட் கூறப்பட்டன. 'சிராப் பள்ளி' என்பது எதுகை நோக்கிக் குறுகிற்று.

பொருப் பள்ளி, சிவப் பள்ளி, தவப் பள்ளி, பரப் பள்ளி இவை வைப்புத் தலங்கள்.

வரை - மலை. புலந்து அழிய - பகைத்து அழிய. பொன் - அழகு. கள் ஆர் - தேன் நிறைந்த. 'கலவச் சாரல்' என்பது மெலித்தலாயிற்று. கலவம் - மயில். "பரலோகத்து" என்புழி, இரண்டனுருபு தொகுத்தலாயிற்று. பாலிப்பார் - காப்பார்; ஆளுவார்.

712. இத்திருத்தாண்டகம், அட்ட வீரட்டங்களை வகுத்து அருளிச்செய்தது. அவை,

கண்டியூர் வீரட்டம், கடவூர் வீரட்டம், அதிகை வீரட்டம், வழுவை வீரட்டம், பறியலூர் வீரட்டம், கோவலூர் வீரட்டம், குறுக்கை வீரட்டம், விற்குடி வீரட்டம் என்பனவாதல் அறிக.

இவ்வீரட்டங்கள் முறையே, 'பிரமன் சிரத்தை அரிந்தது காலனை உதைத்தது, திரிபுரத்தை எரித்தது, யானையை உரித்தது, தக்கன் வேள்வியைத் தகர்த்தது, அந்தகாசுரனை அழித்தது, காமனை எரித்தது, சலந்தராசுரனை அழித்தது' ஆகிய வீரச் செயல்களைச் சிவபிரான் செய்தருளிய இடங்களாகும். இதனை,

" பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம்அதிகை
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாவழுவூர்,

Koviloor Digital Library

713 நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பங்
குடிநல்லக் குடிநளிநாட் டியத்தான்குடி
கற்குடிதேன் களக்குடிசெங் காட்டங்குடி
கருந்திட்டைக் குடிகடையக் குடிகா ணுங்கால்
விற்குடிவேள் விக்குடிநல் வேட் டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடிமா குடிதேவன் குடிநீலக்குடி
புதுக்குடியும் போற்றஇடர் போகு மன்றே. 3

காமன் குறுக்கை, யமன்கட ஊர்இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடியதன் சேவகமே''

என்னும் பழஞ்செய்யுளான் அறிக. இவற்றுள், அதிகையும் கோவலும் நடுநாட்டில் உள்ளவை; ஏனையவை சோழநாட்டில் உள்ளன. வழுவை, வைப்புத் தலம். வழுவை, 'வழுவூர்' எனவும்படும்.

விற்குடியை, ''குடி'' என்றருளினர், அவ்வாறருளினும் ஈண்டு, இனிது பொருள் விளங்குமாகலின். ''கோத்திட்டை'' என்றதற்கு, விற்குடிக்கு அடையாகுமாற்றூற் பொருள்கொள்க; என்னையெனின், ஈண்டு வீரட்டமாயினவற்றையன்றிப் பிற தலங்களை அருளிச்செய்தல் திருவுள்ளமன்றாகலின்.

காமரு சீர் - விரும்பத்தக்க புகழினையுடைய. நவின்றுரைத்தல் - பல்காலும் சொல்லுதல். 'முன்னர் ஒருகால் அறிந்து சொல்லி, பின்னர்ப் பலகாலும் சொல்லிப் போற்றுவார்க்கு' என உரைக்க. 'உரைப்பார்க்கு அகல்வர்' என இயையும். ''அகல்வர்'' என்றது, 'அகலுதலாகிய பயன் உளதாகும்' என்னும் பொருளதாய், ''உரைப்பார்க்கு'' என்னும் நான்காவதற்கு முடிபாயிற்று. இனி, 'உரைப்பாரை' என உருபுமயக்கமாக்கி உரைத்தலுமாம்.

713. இத்திருத்தாண்டகம், 'குடி' என வருவனவற்றை வகுத்தருளிச்செய்தது.

நாட்டியத்தான்குடி, செங்காட்டங்குடி, வேட்டக்குடி, நீலக்குடி இவை சோழநாட்டுத் தலங்கள். வேள்விக்குடி, கற்குடி,

Koviloor Digital Library

714 பிறையூருஞ் சடைமுடியெம் பெருமா னாரூர்
பெரும்பற்றப் புலியூரும் பேரா வூரும்
நறையூரும் நல்லூரும் நல்லாற் றூரும்
நாலூருஞ் சேற்றூரும் நாரை யூரும்
உறையூரும் ஓத்தூரும் ஊற்றத் தூரும்
அளப்பூரோ மாம்புலியூ ரோற்றி யூரும்
துறையூருந் துவையூருந் தோழூர் தானுந்
துடையூருந் தொழஇடர்கள் தொடரா வன்றே. 4

வேதிகுடி, தேவன்குடி இவை மேலைத் திருப்பதிகத்திற் சொல்லப் பட்டன. விற்குடியை, 'வீரட்டம்' என்பது நோக்கி மேலைத் திருத்தாண்டகத்துள்ளும், 'குடி' என்பது நோக்கி இத்திருத் தாண்டகத்துள்ளும் அருளிச்செய்தார்.

செம்பங்குடி, நல்லக்குடி, தென்களக்குடி, கருந்திட்டைக்குடி, கடையக்குடி, மாணிகுடி, விடைவாய்க்குடி, புற்குடி, மாகுடி, புதுக்குடி இவை வைப்புத் தலங்கள். 'விடைவாய் திருப்பதிகம்' என ஒரு திருப்பதிகம், கல்வெட்டிலிருந்து மிக அண்மையில் கிடைத்து, சென்னை சைவசித்தாந்த சமாசத்தினரால் பதிப்பிக்கப் பெற்றது. அத்தலம், விடைவாய்க்குடியேபோலும்.

714. இத்திருத்தாண்டகம், 'ஊர்' என வருவனவற்றை வகுத்தருளிச்செய்தது.

நல்லாற்றூர், நாலூர், சேற்றூர், துவையூர், துடையூர் இவை வைப்புத் தலங்கள்.

ஆரூர், பெரும்பற்றப்புலியூர், பேராவூர், நறையூர், நல்லூர், நாரையூர், உறையூர், ஓத்தூர், ஊற்றத்தூர், அளப்பூர், ஓமாம் புலியூர், ஒற்றியூர், துறையூர், தோழூர் இவை மேலைத் திருப்பதி கத்துட் சொல்லப்பட்டன. பெரும்பற்றப்புலியூர் - தில்லை. பிறை ஊரும் சடைமுடி - பிறை தவழ்கின்ற சடைமுடி.

Koviloor Digital Library

715 பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே. 5

715. இத் திருத்தாண்டகம், 'கோயில்' என வருவன வற்றை வகுத்தருளிச்செய்தது.

பிற்காலத்தில், 'தஞ்சைப் பெருங்கோயில்' என்பதுபோல, அக்காலத்தில், 'பெருங்கோயில்' என எழுபத்தெட்டுக் கோயில்கள் இருந்திருத்தல்வேண்டும். 'அம்பர்ப் பெருங்கோயில்' என்பது ஒன்று திருப்பதிகற்றுனே காணப்படுகின்றது. இனி, 'பெருங்கோயில் எழுபதினோடு எட்டு' என்று அருளப்பட்டவை கோச்செங்கட்சோழ நாயனாரால் எடுக்கப்பட்ட கோயில்கள்' என்றலும் பொருந்தும்.

'கரக்கோயில்' என்பது, கடம்பூர்க்கோயில்; 'கொகுடிக் கோயில்' என்பது கருப்பறியலூர்க்கோயில்; இவை சோழ நாட்டில் உள்ளவை. 'கரக்கோயில்' என்பது, 'இந்திரன் கரத்தால் அகழ்ந்த கோயில்' எனவும், 'கொகுடி' என்பது, 'முல்லைக் கொடியின் வகை' எனவும் கூறுவர்.

இளங்கோயிலும், ஆலக்கோயிலும் மேலைத் திருப்பதிகத்துட் சொல்லப்பட்டன.

ஞாழற் கோயில், மணிக் கோயில் இவை வைப்புத் தலங்கள்.

இருக்கு - வேதம்; மந்திரமுமாம். 'திருக்கோயிலாகிய, சிவன் உறையும் கோயில்' என்க. இதனால், இத்திருப்பெயர் சிவன் கோயிலுக்கே உரித்தாதல் அறிக. இவ்வாறாகவே, "திருக் கோயில் இல்லாத திருவில் ஊரும்" (திருமுறை - 6. 95. 5.) "திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னை" (சிவஞான சித்தி. சூ. 12 - 7.) என்றவற்றின் பொருள் இனிது உணர்ந்து கொள்ளப்படும். சூழ்தல் - வலம் வருதல்.

Koviloor Digital Library

716 மலையார்தம் மகளோடுமா தேவன் சேரும்
மறைக்காடு வண்பொழில்சூழ் தலைச்சங் காடு
தலையாலங் காடுதடங் கடல்சூ ழந்தண்
சாய்க்காடு தள்ளுபுனற் கொள்ளிக் காடு
பலர்பாடும் பழையனூ ராலங் காடு
பனங்காடு பாவையர்கள் பாவம் நீங்க
விலையாடும் வளைதிளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடையவினை வேறு மன்றே. 6

717 கடுவாயர் தமைநீக்கி யென்னை யாட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல்வாயில்
நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல் வாயில்
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல் வாயில்
மடுவார்தேன் மதுரைநக ரால வாயில்
மறிகடல்சூழ் புனவாயில் மாட நீடு
குடவாயில் குணவாயி லான வெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடா வன்றே. 7

716. இத் திருத்தாண்டகம், 'காடு' என வருவனவற்றை வகுத்தருளிச்செய்தது.

சாய்க்காடு, கொள்ளிக்காடு இவை சோழநாட்டுத் தலங்கள்.

பனங்காடு, வைப்புத் தலம்.

மறைக்காடு, தலைச்சங்காடு, தலையாலங்காடு, ஆலங்காடு, வெண்காடு இவை மேலைத் திருப்பதிகத்துட் சொல்லப்பட்டன. பழையனூர், ஆலங்காட்டிற்குச் சார்பாய் உள்ளது. விலை ஆடும் வளை - விலை ஏறப்பெற்ற வளையல்கள்.

717. இத் திருத்தாண்டகம், 'வாயில்' என வருவனவற்றை வகுத்து அருளிச் செய்தது.

'முல்லை வாயில்' என்னும் பெயருடைய தலங்கள் தொண்டைநாட்டில் ஒன்றும், சோழநாட்டில் ஒன்றும் உள்ளன; அவை முறையே, 'வட திருமுல்லைவாயில், தென் திருமுல்லை வாயில்' என வழங்கப்படும். 'ஆலவாய்' என்பதே மதுரைத்

Koviloor Digital Library

718 நாடகமா டிடநந்தி கேச்சுரமா காளேச்
சுரநாகேச் சுரநாக ளேச்சுரநன் கான
கோடீச்சுரங் கோண்டீச் சுரந்திண் டீச்சுரங்
குக்குடேச் சுரமக்கீச் சுரங்கூ றுங்கால்
ஆடகேச் சுரமகத்தீச் சுரமய னீச்சுர
மத்தீச்சுரஞ் சித்தீச்சுர மந்தண் கானல்
ஈடுதிரை யிராமேச்சுர மென்றேன் றேத்தி
யிறைவனுறை சுரம்பலவு மியம்பு வோமே. 8

திருக்கோயிற் பெயராயினும் 'ஆலவாயில்' என்றலும் வழக்காதல் பற்றி, "மதுரை நகர் ஆலவாயில்" என்று அருளிச்செய்தார்: "நீள்கடிம்மதில் கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே" (திருமுறை - 3. 52. 1.) என்று அருளிச்செய்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருப்பாடலிலும், 'ஆலவாயில்' என வந்தது என்றலே சிறப்புடைத்தாதல் அறிக.

புனவாயில், பாண்டிநாட்டுத் தலம்.

குடவாயில், சோழநாட்டுத் தலம்.

அண்ணல்வாயில், நெடுவாயில், நெய்தல்வாயில், ஞாழல் வாயில், குணவாயில் இவை வைப்புத் தலங்கள்.

கடு வாயர் - கடுக்காயைத் தின்னும் வாயினை யுடையவர்; சமணர். கடுக்காயை அவ்வப்பொழுது வாயிலிட்டுத் தின்னுதல் சுவைப் புலனை விரும்பச் செய்யும் நாவினது ஆற்றலைக் கெடுத்தற்பொருட்டு. "மடு" என்றது வையை ஆற்றினை. 'மடு வார்' என்றாயினும். 'மடு ஆர்' என்றாயினும் கொள்க. "ஆன" என்புழி, 'வாயில்' என்பது எஞ்சிநின்றது.

718. இத் திருத்தாண்டகம். 'ஈச்சுரம்' என வருவன வற்றை வகுத்து அருளிச் செய்தது.

'ஈச்சுரம்' என்றும், 'ஈச்சரம்' என்றும் இருவகையாகவும் ஆங்காங்கு ஏற்றபெற்றியாற் பாடம் ஓதுவர். 'இறைவன்' எனப் பொருள்தரும், 'ஈஸ்வரன்' என்னும் ஆரியச்சொல், தமிழில் வடசொல்லாய் வந்து வழங்குமிடத்து. 'ஈச்சுவரன்'

Koviloor Digital Library

719 கந்தமா தனங்கயிலை மலைகே தாரங்
காளத்தி கழுக்குன்றங் கண்ணா ரண்ணா
மந்தமாம் பொழிற்சாரல் வடபற்பதம்
மகேந்திரமா மலைநீலம் ஏம கூடம்
விந்தமா மலைவேதஞ் சையம் மிக்க
வியன்பொதியின் மலைமேரு உதயம் அத்தம்
இந்துசே கரனுறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெடநின் றேத்து வோமே. 9

எனத் திரிந்து, பின், 'அவன் இருக்கும் இடம்' எனப் பொருள் தருதற் பொருட்டு, அம்முப் பெறுங்கால், இங்ஙனம் இருவகையாகச் சிதைந்து வழங்குகின்றது.

கோடீச்சுரம் - கொட்டையூர் ; இது சோழநாட்டுத் தலம்.

நாகேச்சுரம், கொண்டீச்சுரம், திண்டீச்சுரம், சித்தீச்சுரம், இராமேச்சுரம் இவை மேலைத் திருப்பதிகத்திற் சொல்லப்பட்டன.

நந்திகேச்சுரம், மாகாளேச்சுரம், நாகளேச்சுரம், கோடீச்சுரம், குக்குடேச்சுரம், அக்கீச்சுரம், ஆடகேச்சுரம், அகத்தீச்சுரம், அயனீச்சுரம், அத்தீச்சுரம் இவை வைப்புத் தலங்கள்.

'நாடகம் ஆடி' என்னும் பெயரினது ஈற்று இகரம் தொகுத்தலாயிற்று. நன்கு ஆன - நன்மை பொருந்திய. கானல் - கடற்கரை. 'இடுதிரை' என்பது நீட்டலாயிற்று. சுரம், 'ஈச்சுரம்' என்பதன் முதற்குறை.

719. இத் திருத்தாண்டகம், மலையாய் உள்ள தலங்களை வகுத்து அருளிச்செய்தது ; 'மலை' என்பதனை எடுத்தோதியும், ஓதாதும் அருளிச்செய்தார், அஃதின்றி நிற்கும் சொற்கள்தாமே பெரும்பான்மையும், அவற்றின் சிறப்புப் பெயராய் நிற்றலின்.

பற்பதம், கயிலை இவை வடநாட்டுத் தலங்கள். "வடபற்பதம்" என்றதனால், திருப்பருப்பதம் இந்திரநீலப்பருப்பதம் இரண்டுங் கொள்க.

கேதாரம், காளத்தி, கழுக்குன்றம், அண்ணாமலை, ஏமகூடம், பொதியில் இவை மேலைத் திருப்பதிகத்திற் சொல்லப்பட்டன.

Koviloor Digital Library

720 நள்ளாறும் பழையாறுங் கோட்டாற் றேடு
நலந்திகழும் நாலாறுந் திருவை யாறுந்
தெள்ளாறும் வளைகுளமுந் தளிக்கு ளமுநல்
லிடைக்குளமுந் திருக்குளத்தோ டஞ்சைக் களம்
விள்ளாத நெடுங்களம்வேட் களம்நெல் லிக்கா
கோலக்கா ஆனைக்கா வியன்கோடிகா
கள்ளார்ந்த கொன்றையான் நின்ற ஆறுங்
குளம்களங்கா எனஅனைத்துங் கூறுவோமே.10

கந்தமாதனம், மகேந்திரம், நீலமலை, விந்தம், சையம், மேரு, உதயமலை, அத்தமலை இவை வைப்புத் தலங்கள். வைப்புத் தலங்களுள், 'வேத மலை' எனவும் ஒன்று உளது போலும்!

மந்தம் - மந்தானிலம்; தென்றற் காற்று. "ஏத்துவோம் ஏத்துவோம்" என அடுக்காக இயைக்க.

720. இத் திருத்தாண்டகம், 'ஆறு, குளம், களம், கா' என வருவனவற்றை வகுத்து அருளிச் செய்தது.

நள்ளாறு, கோட்டாறு, ஐயாறு இவை மேலைத் திருப்பதிகத்திற் சொல்லப்பட்டன.

பழையாறு, நாலாறு, தெள்ளாறு இவை வைப்புத் தலங்கள்.

வளைகுளம், தளிக்குளம், இடைக்குளம், திருக்குளம் ஆகிய அனைத்தும் வைப்புத் தலங்கள். தளிக்குளம் - தஞ்சைத் தளிக்குளம்.

அஞ்சைக்களம், நெடுங்களம், வேட்களம் மூன்றும் மேலைத் திருப்பதிகத்திற் சொல்லப்பட்டன.

நெல்லிக்கா, ஆனைக்கா, கோடிகா இவை மேலைத் திருப்பதிகத்திற் சொல்லப்பட்டன.

கோலக்கா, சோழநாட்டுத் தலம்.

Koviloor Digital Library

721 கயிலாய மலையெடுத்தான் கரங்க ளோடு
சிரங்களுரம் நெரியக்கால் விரலாற் செற்றேன்
பயில்வாய பராய்த்துறைதென் பாலைத் துறை
பண்டெழுவர் தவத்துறைவெண் டுறைபைம்
குயிலாலந் துறைசோற்றுத் துறைபூந் துறை[பொழிற்
பெருந்துறையுங் குரங்காடு துறையி னோடு
மயிலாடு துறைகடம்பந் துறைஆவடு
துறைமற்றுந்துறையனைத்தும்வணங்குவோமே.

திருச்சிற்றம்பலம்

721. இத்திருத்தாண்டகம், ‘ துறை ’ என வருவனவற்றை வகுத்து அருளிச்செய்தது.

பராய்த்துறை, சோற்றுத்துறை, பெருந்துறை, கடம்பந் துறை, ஆவடுதுறை, இவை மேலைத் திருப்பதிகத்திற் சொல்லப் பட்டன.

பாலைத்துறை, வெண்டுறை, ஆலந்துறை, குரங்காடுதுறை, மயிலாடுதுறை இவை சோழநாட்டுத் தலங்கள். “ குரங்காடு துறை ” என்ற பொதுமையால், வடகுரங்காடுதுறை, தென் குரங்காடுதுறை இரண்டும் கொள்க. ஆலந்துறை - அன்பிலா லந்துறை. குயில் - குயில்களை உடைய.

தவத்துறை, பூந்துறை இவை வைப்புத் தலங்கள். ‘ தவத் துறை, ஏழு முனிவர் தவம் செய்த இடம் ’ என்பது “ பண் டெழுவர் தவத்துறை ” என்பதனுல் விளங்கும்.

அம்மொழி மாலைச் செந்தமிழ் கேளா வணிசண்பை
மைம்மலர் கண்டத் தண்டர் பிரானுர் மகனுருங்
கொய்ம்மலர் வாவித் தென்றிரு வாரூர் கும்பிட்டே
யும்முடன் வந்திங் குடனமர் வேனென் றுரைசெய்தார். 236

மாமதி லாரூர் மன்னரை யங்கு வணங்கச்செந்
தாமரை யோடைச் சண்பையர் நாதன் ருனேக
நாமரு சொல்லி ஞுதரு மார்வத் தொடுபுக்கார்
பூமலர் வாசத் தண்பணை சூழும் புகலூரில். 237

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

72. திருவலஞ்சுழி

திருப்பதிக வரலாறு

நாயனுர், திருவாரூர்தொழ நினைந்து நல்லூரில் நம்பரருள் பெற்றுப் பழையாறை முதலாகப் பல தலங்களைப் பணிந்து திருவலஞ்சுழி யடைந்து தொழுது பாடியருளியது இத் திருப் பதிகம். (திருநாவுக். பு. 215.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

722 அலையார் புனற்கங்கை நங்கை காண
அம்பலத்தில் அருநட்ட மாடி வேடந்
தோலையாத வென்றியார் நின்றி யூரும்
நெடுங்களமும் மேவி விடையை மேல்கொண்
டிலையார் படைகையி லேந்தி யெங்கும்
இமையவரும் உமையவளும் இறைஞ்சி யேத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமா மருவி ஞரே. 1

திருச்சிற்றம்பலம்

இத்திருப்பதிகத்துள் ஒரு திருப்பாடலே கிடைத்துள்ளது; ஏனைய திருப்பாடல்கள் கிடைத்தில.

722. 'கங்கையை நங்கை காண' என உருபு விரித் துரைக்க. 'அரு நட்டம் ஆடுங்கால் கட்டிய சடை நெகிழ்தலின் அதனுள் மறைத்து வைக்கப்பட்ட கங்கையை உமையம்மை காண்கின்ருள்' என நகைச்சுவை தோன்ற அருளியவாறு. அவ்வேடம் எனச் சுட்டு வருவிக்க. வென்றியார் - வெற்றியை உடையவர். நின்றியூர், நெடுங்களம் சோழநாட்டுத் தலங்கள். மலை ஆர் - மலையின்கண் நிறைந்த. 'மலை ஆர் அருவி, திரள் அருவி' என்க. 'அருவியால் ஆகிய பொன்னி' என்றவாறு. இமையவரே அன்றி, உமையவள் இறைஞ்சி ஏத்துதலும் இத் திருத்தாண்டகத்துள் அருளப்பட்டது. 'மன்னிஞரே' என்பதும் பாடம்.

Koviloor Digital Library

73. திருவலஞ்சுழியும் - திருக்கொட்டையூர்க் கோடீச்சரமும்

திருப்பதிக வரலாறு

நாயனுர், திருவாரூர்த் தொழநினைந்து நல்லூரில் நம்பரருள் பெற்றுப் பழையாறை முதலாகப் பல தலங்களைப் பணிந்து திருவலஞ்சுழி தொழுது கொட்டையூர்க் கோடீச்சரத்தையும் இணைத்துப் பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 215.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

723 கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீ ழிருந்தான் கண்டாய்
பருமணி மாநாகம் பூண்டான் கண்டாய்
பவளக்குன் றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோல் அழகமருங் கோட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 1

இத்திருப்பதிகமும், மேல் வந்த சில திருப்பதிகங்கள்போல, 'கண்டாய்' என்னும் முடிபுடைய தொடர்களால் இறைவன் இயல்பினை வகுத்தருளிச்செய்தது.

இது, 'திருவலஞ்சுழி, திருக்கொட்டையூர்க் கோடீச்சரம்' என்னும் இரு தலங்கட்கு உரியதாகவும், திருக்கொட்டையூர்க் கோடீச்சரம் ஒன்றற்கே உரியதாகவும் பதிப்புக்களிற் காணப் படுகின்றது. எல்லாத் திருத்தாண்டகங்களிலும் திருவலஞ்சுழித் தலம் ஒன்றே தவறுது உடன்குறிக்கப்படுதலின், அவ்விரு தலங்கட்கும் உரியதாகக்கொள்ளுதலே பொருந்துவதாகும். இவ் விருதலங்களும் தொடர்புடையன என்பது புராணத்தார்க்கும் கொள்கை; அஃதாவது, 'பிலத்துட் சென்று மறைந்த காவிரி யாறு, கொட்டையூரில் தவம் செய்திருந்த, 'ஏரண்டர்' என்னும் முனிவராலே வலஞ்சுழியில் மேலெழுந்து பெருகிற்று' என்பது.

723. கருமணி - நீலமணி. பருமணி - பருத்த (பெரிய) மாணிக்கம். மணி நீர் - அழகிய நீர். மா தேவன் - (தேவர்கட்

Koviloor Digital Library

724 கலைக்கன்று தங்கு கரத்தான் கண்டாய்
கலைபயில்வோர் ஞானக்கண் ஆனான் கண்டாய்
அலைக்கங்கை செஞ்சடைமேல் ஏற்றான் கண்டாய்
அண்ட கபாலத்தப் பாலான் கண்டாய்
மலைப்பண்டங் கொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
குலைத்தெங்கஞ் சோலைசூழ் கோட்டையூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 2

725 செந்தா மரைப்போ தணிந்தான் கண்டாய்
சிவன்கண்டாய் தேவர் பெருமான் கண்டாய்
பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்
பாலோடு நெய்தயிர்தே னாடி கண்டாய்
மந்தாரம் உந்தி வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியின் மன்னு மணாளன் கண்டாய்
கொந்தார் பொழில்புடைசூழ் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 3

கெல்லாம்) பெரிய தேவன். வரதன் - வரத்தைக் கொடுப்பவன். குருமணி - நிறம் வாய்ந்த மணி. 'அழகமருங் கோமான், கோடீச்சரத்துறையுங் கோமான்' எனத் தனித்தனி முடிக்க. 'கோடீச்சரம்' என்பது, திருக்கோயிலின் பெயர்.

724. கலை - மான். ஞானக் கண் - அறிவாகிய கண்; உருவகம்; 'கற்பார்க்கு அக்கல்வியறிவாய் நின்று பயன் தருவோன்' என்றபடி. கபாலம் - தலை ஓடு; "அண்ட கபாலம்" என்றது, அண்டச் சுவரின் உச்சியை. மலைப் பண்டம் - மலையில் விளையும் பொருள்கள்; அவை, 'அகில், சந்தனம், யானைத் தந்தம்' முதலியன. தெங்கு - தென்னை.

725. மலர்களுட் சிறந்தது தாமரை மலரும், தாமரை மலர்களுள்ளும் சிறந்தது செந்தாமரையும் ஆதல்பற்றி, "செந்தா மரைப்போ தணிந்தான் கண்டாய்" என்று அருளினார். "பூவிற்குத் தாமரையே" (திருவள்ளுவமாலை - 36.), "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" (நால்வர் நான்மணிமாலை - 40.)

Koviloor Digital Library

726 பொடியாடு மேனிப் புனிதன் கண்டாய்
புட்பாகற் காழி கொடுத்தான் கண்டாய்
இடியார் கடுமுழக்கே றூர்ந்தான் கண்டாய்
எண்டிசைக்கும் விளக்காகி நின்றான் கண்டாய்
மடலார் திரைபுரளுங் காவிரிவாய்
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
கொடியாடு நெடுமாடக் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 4

727 அக்கரவம் அரைக்கசைத்த அம்மான் கண்டாய்
அருமறைக ளாறங்க மானான் கண்டாய்
தக்கனது பெருவேள்வி தகர்த்தான் கண்டாய்
சதாசிவன்காண் சலந்தரனைப் பிளந்தான்
கண்டாய்
மைக்கொண்மயிற் றழைகொண்டு வருநீர்ப் பொன்னி
வலஞ்சுழியான் கண்டாய் மழுவன் கண்டாய்
கொக்கமரும் வயல்புடைசூழ் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 5

என வந்தனவுங் காண்க. சிவன் - மங்கலம் உடையவன். மந்தாரம், ஒருவகை மரம். உந்தி - புரட்டி. கொந்து - (மலர்க்) கொத்து.

726. பொடி - திருநீறு. புள் பாகன் - பறவை (கருட) வாகனத்தை உடையவன்; திருமால். ஆழி - சக்கரம். இடி ஆர் - இடிபோலும்; ஆர், உவம உருபு. ஏறு - இடபம். எண்டிசைக்கும் விளக்கு - உலக முழுதிற்கும் ஒளியைத்தரும் விளக்கு. மடல் - பூ; சினையாகுபெயர். கொடி ஆடு - துகிற் கொடிகள் அசைகின்ற.

727. மைக் கொள் மயில் - கருமை (நீல) நிறத்தைக் கொண்ட மயில்; இனி, 'மேகத்தை விரும்புகின்ற' என்றும் ஆம். ககர ஒற்று, விரித்தல். "தழை" என்றது, தோகையை. "கொக்கு அமரும் வயல்" என்றது, 'நீர் நீங்காத வயல்' என்பதைக் குறித்த குறிப்புமொழி.

Koviloor Digital Library

728 சண்டனைநல் லண்டர்தொழச் செய்தான் கண்டாய்
சதாசிவன் கண்டாய்சங் கரன்றான் கண்டாய்
தொண்டர்பலர் தொழுதேத்துங் கழலான் கண்டாய்
சுடரொளியாய்த் தொடர்வரிதாய் நின்றான் கண்டாய்
மண்டுபுனல் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாமுனிவர் தம்முடைய மருந்து கண்டாய்
கொண்டல்தவழ் கொடிமாடக் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 6

729 அணவரியான் கண்டாய் அமலன் கண்டாய்
அவிநாசி கண்டாயண் டத்தான் கண்டாய்
பணமணிமா நாக முடையான் கண்டாய்
பண்டரங்கன் கண்டாய் பகவன் கண்டாய்
மணல்வருநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாதவற்கும் நான்முகற்கும் வரதன் கண்டாய்
குணமுடைநல் லடியார்வாழ் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 7

728. "சண்டன்" என்றது, சண்டேசுவர நாயனாரை. அண்டர்-தேவர். "அரிதாய்" என்பதற்கு, 'அரியபொருளாய்' என உரைக்க. "மாமுனிவர் தம்முடைய மருந்து" என்றது' 'தேவர்கள் அமுதத்தை இறப்பை நீக்கும் மருந்தாக விரும்பி உண்பர்; பெருமை பொருந்திய தவத்தோர் அவ்வாறன்றிச் சிவபிரானையே அம் மருந்தாக அறிந்து அடைவர்' என்றதாம். கொண்டல் - மேகம்.

729. அணவுதல் - எட்டுதல். 'அணேவரியான்' என்பதும் பாடம். அவிநாசி - அழிவில்லாதவன். அண்டத்தான் - மேல் உலகத்தில் இருப்பவன். பணம் - பாம்பின் படம். மாதவன் - திருமால். வரதன் - வரத்தை (அவர்கள் விரும்பிய அதிகாரத்தை)க் கொடுப்பவன்.

Koviloor Digital Library

730 விரைகமழும் மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய்
வேதங்கள் தொழநின்ற நாதன் கண்டாய்
அரையதனிற் புள்ளியத ளுடையான் கண்டாய்
அழலாடி கண்டாய் அழகன் கண்டாய்
வருதிரைநீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
வஞ்சமனத் தவர்க்கரிய மைந்தன் கண்டாய்
குரவமரும் பொழில்புடைசூழ் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 8

731 தளங்கிளருந் தாமரையா தனத்தான் கண்டாய்
தசரதன் றன்மகன் அசைவுதவிர்த்தான் கண்டாய்
இளம்பிறையும் முதிர்சடைமேல் வைத்தான் கண்டாய்
எட்டேட் டிருங்கலையு மானுன் கண்டாய்
வளங்கிளர்நீர்ப் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
மாமுனிகள்தொழுதெழுபொற்கழலான் கண்டாய்
குளங்குளிர்செங் குவளைகிளர் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 9

730. விரை - வாசனை. வேதங்கள் தொழநின்ற நாதன் - வேதங்களால் போற்றப்படும் முதல்வன். 'குரா' என்பது. 'குரவு' என நின்றது. குரா, ஒருவகை மரம். அமரும் - பொருந்தியுள்ள.

731. தளம் - இதழ். தசரதன் மகன் - இராமன். அசைவு - தளர்ச்சி; அது, சீதையை இழந்த பின்னர் அடைந்த துன்பத்தையும் சீதையை மீட்டபின்னர் இராவணனைக்கொன்ற பழியினுல் எய்திய துன்பத்தையும் குறிக்கும். இவ்விரு துன்பங்களையும் இராமன், சிவபிரானைப் பூசித்து நீங்கப்பெற்றனன் என்பதே உண்மை இராமாயணம். "अत्रपूर्वं महादेवः प्रसादमकरोत् प्रभुः" என்பது இன்றைய இராமாயணத்திலும் காணப்படுவது. பிற வாக்கியங்கள் இஞ்ஞான்று அதன்கண் காணப்படாதொழியினும் அவற்றை அறிவிக்கும் தலங்கள் அவற்றிற்கு என்றும் சான்ருய் நின்று நிலவும். எட்டு எட்டு இருங்கலைகள் - 'அறுபத்து நான்கு' என வரையறை கூறப்படும் பெரியகலைகள். "மா முனிகள்" என்றது, தல வரலாற்றின்படி, ஏரண்டரையும்,

Koviloor Digital Library

732 விண்டார் புரமூன் றெரித்தான் கண்டாய்
விலங்கலில்வல்லரக்கனுடலடர்த்தான்கண்டாய்
தண்டா மரையானும் மாலுந் தேடத்
தழற்பிழம்பாய் நீண்ட கழலான் கண்டாய்
வண்டார்பூஞ் சோலைவலஞ் சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் மறையோ டங்கங்
கொண்டாடு வேதியர்வாழ் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 10

திருச்சிற்றம்பலம்

மார்க்கண்டேயரையும் சிறப்பாகக் குறிக்கும். 'குளம் கிளர்' என இயையும். ஏழாவதன் தொகையில் மகரம், கெடாது நின்று திரிந்தது. கிளர் - மிக்கு விளங்குகின்ற.

732. விண்டார் - பகைவர். விலங்கலில் - (கயிலாய) மலையின்கீழ். அடர்த்தான் - சிதைத்தான். இறைவனது ஆற்றலை (சத்தியை)த் திருவடியாகக் கூறும் மரபு பற்றி, "கழலான்" என்று அருளிச்செய்தாராகலின், அதற்கு 'சத்தியை உடைய வன்' எனப் பொருள்கூறுக.

அத்திரு மூதூர் மேவிய நாவுக் கரசுந்தஞ்
சித்த நிறைந்தே யன்பு தெவிட்டுந் தெளிவெள்ளம்
மொய்த்திழி தாரைக் கண்பொழி நீர்மெய்ம் முழுதாரப்
பைத்தலை நாகப் பூணணி வாரைப் பணிவுற்றார். 238

தேவர் பிரானைத் தென்புக லூர்மன் னியதேனைப்
பாவியன் மாலைச் செந்தமிழ் பாடிப் பரிவோடும்
மேவிய காலந் தோறும் விருப்பிற் கும்பிட்டே
யோவுத லோவு திருப்பணி செய்தங் குறைகின்றார். 239

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

74. திருநாரையூர்

திருப்பதிக வரலாறு

வாகீசர், தில்லையம்பலத்துள் ஆடுகின்ற பெருமான் கழல் வணங்கியிருக்கும் நாட்களில், சிவன் எம்மான் எனக் காட்டியியம்பிய காழிப் பெருந்தகை சீர் கேட்டு அதிசயித்து அவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு விருப்பு வாய்ப்ப, அம்பலத்துக் கூத்தப்பிரான் அருள் பெற்றுத் திருப்புகலி செல்பொழுதில் திருநாரையூர் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 179.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

733 சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள் செய்தானை
அல்லானைப் பகலானை அரியான் தன்னை
அடியார்கட் கெளியானை அரணமூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 1

இத்திருப்பதிகம், இறைவனைத் திருநாரையூரிற் கண்ட மகிழ்ச்சி மீதூர்வின்கண். அவனது பெருமைகள் பலவற்றையும் வகுத்துரைத்து, 'அப்பெருமானை நான் திருநாரையூரில் நேரே கண்டு வணங்கப்பெற்றேன்' என்று அருளிச்செய்தது.

733. சொல்லான் - சொல்லுவார் சொல்லும் சொற்கள் எல்லாமாய் இருப்பவன். பொருளான் - அச்சொற்களின் பொருளாய் இருப்பவன். சுருதியான் - வேதங்களாய் இருப்பவன். சுடர் ஆழி - ஒளிவீசும் சக்கரம். அல் - இரவு. "அடியார்கட்கு எளியான்" என்றருளியதனால், "அரியான்" என்றது பிறர்க்கு என்பது பெறப்பட்டது. சரம் - 'பாசுபதம்' என்னும் அம்பு. சூரியனும் பெரு முனிவர்களும் இத்தலத்து வழிபட்டு நலம் பெற்றனர் போலும்! "நன்னகர்" என்றது, 'சிவதலம்' என்பதனைத் தமிழாற் கூறியவாறு.

Koviloor Digital Library

734 பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் தன்னைப்
பாரோடுநீர் சுடர்படர்காற் ருயி ஞனே
மஞ்சுண்ட வானுகி வானந் தன்னில்
மதியாகி மதிசடைமேல் வைத்தான் தன்னை
நெஞ்சுண்டேன் நினைவாகி நின்றான் தன்னை
நெடுங்கடலைக்கடைந்தவர்போய்நீங்கவோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந் தானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 2

735 மூவாதியாவர்க்கும் மூத்தான் தன்னை
முடியாதே முதல்நடுவு முடிவா ஞனேத்
தேவாதி தேவர்கட்குந் தேவன் தன்னைத்
திசைமுகன்றன்சிரமோன்றுசிதைத்தான் தன்னை
ஆவாத அடலேருேன் றுடையான் தன்னை
அடியேற்கு நினைதோறும் அண்ணிக்கின்ற
நாவானை நாவினில்நல் லுரையா ஞனை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 3

734. 'என்நெஞ்சு உண்டு அதன் நினைவாகி நின்றான்' என்க. நெஞ்சத்தை உண்டமையாவது, அவன்வழி நிறுத்திக் கொண்டமை; அதனல், அது நினைப்பனயாவும் அவன் நினைப்பித்தவாறே நினைக்கும் நினைவுகளாயினமையின், இவ்வாறு அருளிச்செய்தார். இதனுல், நாயனரது கரணங்கள் சிவகரணங்களே ஆயினமை தெற்றெனவிளங்கும். "கடைந்தவர்" என்பது, 'கடைந்தவராகிய அவர்' எனச் சுட்டும் சுட்டுப்பொருள் உடையது; செய்யுளாகலின் சுட்டுச்சொல் முன்னிற்றல் பொருந்திற்று.

735. மூவாது மூத்தல் - 'தோன்றுவனவற்றிற்கெல்லாம் முன்னே தோன்றினுன்' என்னுமாறு காலம்பற்றி வரும் பிற பொருள்களினது தோற்றம் போல்வதொரு தோற்றத்தால் மூத்தவனுகாது, இயல்பாக என்றும் உளனுதல். இவ்வாறு ஈண்டு அருளிச்செய்த இதனுல், "முனைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" (190) என்றாற்போல அருளிச்செய்தவற்றின் உண்மைப்பொருள் இதுவென்பது இனிது விளங்கும்.

Koviloor Digital Library

736 செம்பொன்னை நன்பவளந் திகழும் முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தஞ் சித்தத் தானை
வம்பவிழும் மலர்க்கணைவேள் உலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னு கின்ற
கம்பனையெங் கயிலாய மலையான் தன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதி யேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 4

முடியாது - அழியாமல்; ஏகாரம் தேற்றம். மூவாது மூத்தமையின், முடிதல் இல்லையாயிற்று. 'தான் இங்ஙனம் மூவாது மூத்து முடியாது நின்று, பிற பொருள்கட்கெல்லாம் முதலும் நடுவும் முடிவும் ஆயினன் என்க. தே ஆதி தேவர் - தேவர்களுக்குள் ஆதிதேவர் ; காரணக் கடவுளர் ; அயனும், மாலும்; 'தே' என்பது, சொல்லால் அஃறிணையாதலின், ஒருமை பன்மை இரண்டிற்கும் பொதுவாய், ஈண்டுப் பன்மைப்பொருள் தந்தது. உம்மை, சிறப்பு. "ஆ" என்றதனை, "ஏறு" என்றதனோடு இயைத்து, "ஆனேறு" என்று பொருள்கொள்க. வாதம் - காற்று; 'காற்றுப்போலும் கடுநடையை உடைய ஏறு' என்க. அண்ணித்தல் - தித்தித்தல். "நா" என்றது, அதன் புலமாகிய சுவையை ; அது தித்திப்பை உணர்த்திற்று.

736. வம்பு அவிழும் - வாசனையோடு மலர்கின்ற. மலர்க்கணை வேள் - மன்மதன். உலக்க - அழியும்படி. மகிழ்ந்தது. அவனது குற்றம் (சிவாபராதம்) நீங்கினமை குறித்து. மலையான் - மலையின்கண் உள்ளவன். "எம்" என்பது 'மலையான்' என்பதனோடு இயைந்தது. கழுகு, என்றது 'சம்பாதி, சடாயு' என்னும் இரண்டினையும், இவை பூசித்த தலம் புள்ளிருக்கு வேளூர் என்பது,

" தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே "

(திருமுறை 2-43-1) எனத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் இனிதெடுத்து அருளிச்செய்யப்பெற்றது. காகுத்தன் - இராமன். 'நாரை வழிபாடு செய்த தலம் நாரையூர்' என்பது தெளிவாதலின், கழுகுகள் வழிபாடு செய்தமையையும், அக்கழுகுகள்

Koviloor Digital Library

737 புரையுடைய கரியுரிவைப் போர்வை யானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் தன்னை
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணி யானை
வெண்ணீறு செம்மேனி விரவி னானை
வரையுடைய மகள்தவஞ்செய் மணாளன் தன்னை
வருபிணிநோய் பிரிவிக்கும் மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 5

738 பிறவாதும் இறவாதும் பெருகி னானைப்
பேய்பாட நடமாடும் பித்தன் தன்னை
மறவாத மனத்தகத்து மன்னி னானை
மலையானைக் கடலானை வனத்து ளானை
உறவானைப் பகையானை உயிரா னானை
உள்ளானைப் புறத்தானை ஓசை யானை
நறவாரும் பூங்கொன்றை சூடி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 6

இவை என்பதும், அவற்றது பெருமையும் இனிதுணர்த்தியருளு-வார் காகுத்தன் வழிபட்டமையையும் உடன் நினைப்பித்தருளி, -அஃறிணை உயிர்களும் வானிடத்தவர்களும் மண்மேல் அரன்றனை அருச்சித்துப் பயன்பெற, ஊனெடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணராது, வாணாள் வீணாள் கழித்தல் இரங்கத்தக்கதன்றோ என அறிவுறுத்தருளினார் என்க. திருக்கழுக்குன்றமும் கழுகுகள் வழிபடும் தலமாதல் அறியத்தக்கது.

737. புரை - கவிப்பு; யானையது உடலிற் புரையாய் (கவிப்பாய்) அமைந்த உரிவை (தோல்) என்க. 'புரை உடைய கரி' என யானைக்கு அடையாக்கி, 'புரை - உயர்ச்சி அல்லது குற்றம்' எனலுமாம். அடைத்த - உட்செறித்த. விரை - வாசனை' 'மலைமகள் தவஞ்செய்து அடைந்த மணாளன்' என்க. 'செய் மணாளன்' என்னும் வினைத்தொகை. 'இது பயனாக' என்னும் பொருள்மேல் தொக்கது. பிணி நோய், உம்மைத் தொகை. நோய் - துன்பம். நரை - வெண்மை.

738. "பெருகினான்" என்றதற்குமுன், 'புகழ்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'பிறவாது, இறவாது' என்னும்

Koviloor Digital Library

வினையெச்ச மறைகள் காரணப் பொருளவாகலின், 'பிறவாமையாலும், இறவாமையாலும் புகழ் பெருகினன்' என உரைக்க. பிறத்தல் இறத்தல்களினின்றும் நீங்கி வீடு பெற்றாரது பெருமை தானே ஏனையோரது பெருமைகள் எல்லாவற்றினும் மேம்பட்டு விளங்கிநிற்குமாயின், இயல்பாகவே அவைகளை இல்லாதவனுக்கு உளதாகும் பெருமை மிகுதி சொல்ல வேண்டுவதோ என்பது திருக்குறிப்பு. வீடு பெற்றாரது பெருமையே. ஏனையெல்லார் பெருமையினும் மேம்பட்டு விளங்கும் என்பதனை,

" இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு " (குறள் - 23.)

என்பதனுல் அறிக. இனி, 'கிணற்றுள் வீழ்ந்தாரை எடுக்கலுறுவார், அதன் பொருட்டுத் தாமும் கிணற்றுள் வீழுமாறு போல, பிறவியுட்பட்டாரை எடுத்தற்பொருட்டுப் பிறவியில்லாத இறைவன் தானும் பிறவியுள் வீழ்வனுகலின், அஃது அவற்குப் புகழாவதல்லது இகழாமாறு இல்லை' என்பாரது கூற்று, உவமப் போலியுடைத்து. எங்ஙனம் எனின், கிணற்றுட் கிடப்பார் இருவருள், மேல் எழமாட்டாது நீர்வயப்பட்டு அமிழ்ந்துவார் அதன் கண் அழுந்துவோரும், அவ்வாறன்றி மேலே மிதப்பார் அவரை எடுப்போருமாவர் என்பது தெளிவு; அங்ஙனமே உடம்புடைய இருவருள், 'அவிச்சை. வினை, மாயை' என்ற இவற்றின் வயப்பட்டு, 'முட்டை, வெயர்வை, விதை, கருப்பை' என்னும் நால்வகைத் தோற்றுவாய்களின் வழித் தோன்றும் உடம்பிற் கட்டுண்டு, குறித்த தொன்றுகமாட்டாக் குறையுற்று, எடுத்த உடம்பின் ஆற்றலளவிற்கேற்ற அறிவு இச்சை செயல்களையே உடையராய், உண்டு, உறங்கி, 'பசி, பிணி, மூப்பு' முதலியன காலவயத்தான் ஒருதலையாக வந்து பற்ற, அவற்றைத் தவிர்க்க மாட்டாது தாங்கி, இடையே இன்பத் துன்ப நுகர்ச்சியால் விருப்பு வெறுப்புக்கள் மீதூர, உறவும் பகையும் கொண்டு நல்லன தீயனவற்றைச் செய்து இறப்பவர் பிறப்பின்கண் அழுந்துவோரும், அவ்வாறின்றி வேண்டிய உருவத்தை வேண்டியவாறே தமது இச்சையால் தோற்றுவாய் யாதுமின்றிக் கொண்டு இம்மெனக் கடிதில் தோன்றி, அத் தோற்றத்திற்குப் பயனும் செயல் கடிதின் முடிய, இம்மெனக் கடிதின் மறைபவரே பிறவியின்கண் அழுந்துவாரை அதனினின்றும் எடுப்போரும் ஆவர் எனல் வேண்டும். அவ்வாறின்றி, வினைவயப்பட்டுநிற்கும்

Koviloor Digital Library

மேற்கூறிய பிறவியுடையார்க்கு அவர் அவ்வுவமை கூறுதல் பொருந்தாமையின் என்க. எனவே, உயிர்களின் பொருட்டு வேண்டிய உருவத்தை வேண்டியாங்குத் தோற்றுவாய் இன்றித் தனது இச்சையின்வழி அருளால் திருமேனி கொள்ளுதலுக்கு அஃது உவமையாம் அன்றி, உயிர்கள் வினையிற் கட்டுண்டு அதனால், நால்வகைத் தோற்றத்துட்பட்டு மாயா சரீரமாகிய பிறவி எடுத்தற்கு அஃது உவமை ஆமா றில்லை என்க. இதனானே, 'பிறவியாவது இது' வெனவும், 'அருள் தோற்ற மாவது இது' வெனவும் வேற்றுமை தெரிந்து, 'பிறவி, மலமுடைய உயிர்கட்கு அன்றி நின்மலனாகிய இறைவற்கு ஒருவாற்றானும் ஒரு ஞான்றும் எய்துதல் இல்லை' எனவும், அஃது எய்தாமை பற்றி அவன் உயிர்களின் பொருட்டு அருட் டிருமேனி கொள்ளுதற்குத் தடை ஒன்றும் இல்லை எனவும், அதனால் நின்மலனாகிய இறைவனை எவ்வாற்றானும் மலமுடைய உயிர்கட்கு உரிய பிறவியுடையனாகக் கருதுதலும், சொல்லுதலும் அவனுக்குப் பெரியதோர் இழுக்குச் செய்தலாம் எனவும் கடைப் பிடித்து உணர்ந்துகொள்க.

'பித்தன்' என்றது, ஓர் வரையறையின்றித் தான் வேண்டியது செய்வன் என்னும் கருத்தினதாய், அவனது தன்வய முடைமையைப் பழித்ததுபோலப் புகழ்ந்ததாம்.

இந்நிலை, 'செய்தல் (கர்த்திருத்துவம்), செய்யாமை (அகர்த் திருத்துவம்), வேறொன்று செய்தல் (அந்யதாகர்த்திருத்துவம்)' என மூன்றாய் விளங்கும்; இவற்றை,

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

என (நல்வழி) விளக்கினார், ஔவையார்.

வனம் - காடு. "உள்ளான்" என்றது, 'கலந்து நிற்பவன்' என்றபடி "உறவானைப் பகையானை" என்றது, 'உயிர்கள் தமக்கு உறவாக நினைக்கப்படுபவராயும், பகையாக நினைக்கப்படுபவரா யும் நிற்பவன் அவனே' என்றவாறு. உள்ளான் புறத்தான் - எல்லாப் பொருள்களின் உள்ளும் புறமும் நிறைந்துள்ள வியா பகன். ஓசை, பூதங்களுட் சிறந்த விசும்பின் பண்பாகலின், அதனை எடுத்தோதியருளினார். நறவு - தேன்.

Koviloor Digital Library

739 தக்கனது வேள்விகெடச் சாடி ஞானைத்
தலைகலனுப் பலியேற்ற தலைவன் தன்னைக்
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக்
கோணுகம் பூணுகக் கொண்டான் தன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் தன்னை
அறுமுகனோ டானைமுகற் கப்பன் தன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 7

740 அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன் தன்னை
அந்தகனுக் கந்தகனை அளக்க லாகா
எரிபுரியும் இலிங்கபுரா ணத்து ளானை
எண்ணாகிப் பண்ணா ரெழுத்தா னானைத்
திரிபுரஞ்செற் றோருமூவர்க் கருள்செய் தானைச்
சிலந்திக்கும் அரசளித்த செல்வன் தன்னை
நரிவிரவு காட்ட கத்தி லாட லானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 8

739. சாடினான் - அழித்தான். சச்சரி, ஒருவகை வாச்சியம். அக்கு - சங்குமணி. நக்கன் - உடையில்லாதவன்; இது பிட்சாடன கோலத்தை நோக்கி அருளியது. இனி 'பற்றற்றவன்' என்ற உண்மைப் பொருளும் உடையது என்க. வக்கரை, தொண்டைநாட்டுத் தலம். நள்ளாறு, சோழநாட்டுத் தலம்.

740. அந்தகன் - அந்தத்தை (இறுதியை)ச் செய்பவன்; இயமன்; 'அவனுக்கு அந்தத்தைச் செய்பவன்' என்றதனால், 'மகாசங்காரக் கடவுள்' என்றவாறு. இனி, 'அந்தகாசுரனுக்கு அந்தத்தைச் செய்தவன்' என்றலுமாம். 'அளக்கலாகா இலிங்கம், எரிபுரியும் இலிங்கம், எனத் தனித்தனி இயையும். "அளக்கலாகாமை, மாலும் அயனும் அடிமுடி தேடி அறியலாகாமையான் விளங்கும்- இவ்வரலாற்றைக் கூறும் புராணமே இலிங்க புராணம். இது, சிவபிரானே முதற்பொருள் என நிறுவுதலையே பொருளாக உடைமையின், அதன்கண் இனிது விளங்கி நிற்பவன் என்பார், சிவபிரானை, "இலிங்க புராணத் துளான்" என்று அருளிச்செய்தார். இச்சிறப்பு நோக்கியே,

Koviloor Digital Library

741 ஆலாலம் மிடற்றணியா அடக்கி னானை
ஆலதன்கீழ் அறம்நால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனாகிப் பழமு மாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையா னானை
மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியினின் பயனாய விமலன் தன்னை
நாலாய மறைக்கிறைவ னாயி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 9

நாயனார், இலிங்கபுராணத் திருக்குறுந் தொகையை (திருமுறை 5-95.) உலகிற்கு அருளிச்செய்து உதவினார் என்க. இப் புராணப் பொருளே,

"பிரமன் அரிஎன் றிருவருந்தம் பேதைமையால்
பரம மியாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனா ரழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ"

எனத் திருவாசகத்துள் (திருத்தோணோக்கம் - 12.) தொகுத்து அருளிச் செய்யப்பட்டது. இவ்வரலாற்றின் விரிவை, கந்த புராணம், அடிமுடிதேடு படலத்துள் விரித்துக் கூறிற்று. இது பற்றியே, சிவனடியாரை இகழவந்தவரும், அவர்கட்கு "இலிங்கத் திட்ட புராணத்தீர்" (திருவாய்மொழி 4. 10. 5.) என இப்புராணத் தாற் பெயர் கொடுத்தார் என்க. எரிபுரியும்-நெருப்பின் ஒளியை வீசும். இலிங்கம் - குறி; அது, கை கால் முதலிய உறுப்பின் பகுப்பு யாதும் அற்ற பொதுப் பிழம்பினைக் குறித்தது; 'தாணு' எனவும், 'கந்து' எனவும் வருவதும் இது, 'எண்ணும் எழுத்தும் ஆனானை' என்றாற்போலவே, 'பண் ஆனானை' என்பார், "பண் ஆரெழுத்தானானை" என்று அருளிச்செய்தார். "ஆரெழுத்து" என்புழி நின்ற 'அருமை' என்பதனை, 'எண், பண்' என்பவற்றிற்குங் கூட்டுக. திரிபுரம்எரித்த ஞான்று மூவர்க்கு அருள்செய்தமையை மேலே (பக். 435.) காண்க.

741. நஞ்சை வைத்ததனால் ஆகிய நீலநிறம், செம்மேனிய னாகிய சிவபிரானுக்குக் கண்டத்தை நீலமணிபோல அழகு செய்து நிற்றலின், "ஆலாலம் மிடற்று அணியா அடக்கினான்" என்று அருளிச்செய்தார். 'பால் முதலியவுமாகி, அவற்றின்

Koviloor Digital Library

சுவைகளும் ஆயினுன்' என்க. உம்மை, எச்சம். வேதியருள் மேலாவார். "எரியலால் உருவம் இல்லை........ஐயன் ஐயாற ஞர்க்கே" (திருமுறை - 4. 40. 5.) என்று அருளியவாறு, எரி, சிவபிரான் உருவேயாதலை யறிந்து வேட்பவரேயாகலின், 'மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி' என்று அருளினர்; "விருப்புறும் அங்கி யாவார் விடைஉயர்த் தவரே" (பெ. புரா. திருஞா. 1241.) என்று திருஞானசம்பந்தர் சிந்தையில் தெளிந்தமை அறிக. இக்கருத்தினையும், மற்றும் பகலவனையும் சிவபிரானது உருவாகவே அறிந்து காலை, மாலை, நண்பகற் பொழுதுகளில் வழிபடுதலே உண்மைப் பொழுது வழிபாடு (சந்தியாவந்தனம்) என்பதனையும் நாயனர்,

"எரிபெ ருக்குவர் அவ்வெரி ஈசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்"

எனவும்,

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்க ஞவான் அரன்உரு அல்லனே"

எனவும் அருளிச்செய்தார் (திருமுறை. 4.100.7.8.). இதனானே காயத்திரி மந்திரத்தின் பொருளும் சிவபிரானே என்பதும் தெளியப்படும்; இதனை, "உயர்காயத்திரிக்கு உரிப்பொரு ளாகலின் என்னும் பொருளதாக வடமொழியில் ("गायत्री वल्लभत्वात्" - पञ्चरत्न मालिका) ஓதினர், அரதத்தாசாரியர். ஆகவே, திருவைந்தெழுத்தின் பொருளே காயத்திரியின் பொரு ளாக அறிதலும், அதனல் திருவைந்தெழுத்தினையே முதற் திருமந்திரமாக உணர்ந்து ஓதுதலும் மேலாய வேதியர்க்கு உரியனவாதல் விளங்கிற்று. இதனை,

"செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே"

(திருமுறை - 3. 22. 2.) என இனிது விளங்க அருளிச்செய்தார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர். இவ்வருளிச் செயலைச் சேக்கிழார் நாயனர்,

"மந்திரங்க ளானஎலாம் அருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறும்ஐயம் தெளிய எல்லாம்
செழுமறையோர்க் கருளிஅவர் தெளியு மாற்ருல்

Koviloor Digital Library

முந்தைமுதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதலாகும் முதல்வனார் எழுத்தஞ் சென்பார்
அந்தியினுள் மந்திரம் அஞ் செழுத்து மேயென்று
அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார் ''

(பெ. பு, திருஞா. 266.) என விரித்தோதியருளினார்.

இவ்விரிவினுள். ''வைதிகநூற்சடங்கு'' என்றது, ''எரி பெருக்குவர்'' எனவும், ''அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்'' எனவும் மேற்காட்டிய நாயனார் திருமொழியுட் குறிக்கப்பட்டவற்றை எனவும், ''அச்சடங்கினால் வந்த சிந்தை மயக்குறும் ஐயம்'' என்றது, எரியையும் அருக்கனையும் அன்ன பிறவற்றையும் சிவபிரான் உருவாக அறியாது பிறவாறு மயங்கிக்கொள்ளுதலை எனவும். ''அவ்வையமெல்லாம் தெளிய அருளி' என்றது, எரி ஈசனது உருவருக்கமே என்றும், அருக்கனுவான் அரனுருவே என்றும், பிறவும் அன்ன என்றும் இவ்வாறு தெளிவித்தருளினமையை என்றும் நாயனார் திருமொழியோடு கூட்டி உணர்ந்துகொள்க.

இதனானே, திருஞானசம்பந்தரது தொகைத் திருமொழிகட்கு நாயனார் திருமொழி விரியாக நின்று விளக்கந்தந்தருளுதலையும், அவ்விளக்கத்தின்வழி நின்றே சேக்கிழார் விளக்கம் தந்து செல்லுதலையும் அறியலாகும்.

இவ்வாற்றால் எரியைச் சிவபிரான் உருவருக்கமாக உணராது, எல்லாத் தேவர்கட்கும் அவரவர்க்கும் உரிய அவியைச் சுமந்து சென்று கொடுக்கும் ஒரு தேவனது உருவாகவும், பிறவாறும் கொண்டு வேட்டல் வேட்பித்தல்களைச்செய்வோரும், அவ்வாறே பகலவன் வழிபாடு முதலியவற்றைப் பிறவாற்றாற் செய்வோரும் மேலாய வேதியர் ஆகாமை பெறப்பட்டது. இம்மேலாய வேதியர் ஆகாதாரைத் திருமூல நாயனார், ''பேர்கொண்ட பார்ப்பான்'' (திருமந்திரம் - 519.) என்று அருளிச்செய்தார். இன்னோரன்ன அருமைத் திருமொழிகள் பலவற்றான், ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' (திருமுறை - 3-54 1) என்புழி, ''அந்தணர்'' என அருளிச்செய்யப்பட்டவரும், திருமுறையும் பிறவுமாகிய சைவநூல்களுள் 'அந்தணர்' எனப் போற்றப் படுவோரும் இன்னர் என்பது ஐயமற விளங்கும்.

ஈண்டு, ''மேலாய வேதியர்'' என்றதில், மேலாய என்னும் அடையை, பிறிதின் இயைபு நீக்கிய விசேடணமாகக் கொண்டு

Koviloor Digital Library

742 மீளாத ஆளென்னை உடையான் தன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி னானை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றி னுயிர்மாள உதைத்தான் தன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
தோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. 10

திருச்சிற்றம்பலம்

'வேதியருள் மேலாய வேதியர்' எனவும், இயைபின்மை நீக்கிய விசேடணமாகக் கொண்டு, 'மக்களுள் மேலாய வேதியர்' எனவும் எவ்வாறுரைப்பினும் மேற்கூறிய எல்லாம் பொருந்துமாறு அறிந்துகொள்க.

இனி, மேலாய வேதியரால் வேட்கவும் வேட்பிக்கவும்படும் வேள்விகள் அப்பொழுதேயாயினும், வழிமுறைக்கண் ஆயினும் சிவபிரானை அடைவிக்கும் ஆகலின், அவனை அவ்வேள்விகளின் பயன் என்று அருளிச்செய்தார். இச் சைவநெறி, வைதிக நெறிக்குச் சிறிதும் மாறானது அன்றென்பது உணர்த்துதற் பொருட்டு, "நாலாய மறைக்கிறைவன் ஆயினான்" என்று அருளினார்.

742. "ஆள்" என்பதில், 'ஆக' என்பது விரித்து. 'என்னை மீளாத ஆளாக உடையான்' என உரைக்க. வெளி - ஒளி; அறிவு; அது சிவபிரானையே முதல்வனாக அறிவது. 'வெளியோடு செய்த வழிபாடு' என்க. மேவினான் - விரும்பினான். "வெளி" என்றது ஆகுபெயராய், 'வெளிதாகிய நாரை செய்த வழிபாட்டை விரும்பினவன்' என்னும் பொருளையும் தோற்றுவித்தல் காண்க. மறையவன், மார்க்கண்டேயர். 'மாளற்பாலதாய மறையவன் உயிரை மாளாமை வைத்து, மாளாததாய வன்கூற்றின் உயிரை மாள வைத்தான் என்றது, அவனது எல்லா முதன்மையும் உடைமையை வியந்தருளிச்செய்தவாறு. இராவணனை, 'தூர்த்தன்' என்றல், பிறன்மனை நயந்தமைபற்றி. நாள் - வாழ்நாள்; "நீண்ட வாழ்நாள்" என்பது, எடுத்தோதியதனாற் பெறப்படும்.

Koviloor Digital Library

75. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்

திருப்பதிக வரலாறு

நாயனர் நல்லூரிறைவர் அருள்பெற்றுத் திருப்பழையாறை திருவலஞ்சுழி இவற்றை வணங்கித் திருக்குடமூக்கணைந்து தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம். திருக்குடமூக்கு, கும்ப கோணம் என்ற பெயரில் வழங்குகிறது. திருக்குடந்தைக்கீழ்க் கோட்டம் கும்பகோணத்திலுள்ள ஒரு கோயில். நாகேசுவர சுவாமி கோயில் என்ப. (திருநா. பு. 215.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

743 சோன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சோற்போருளுங் கடந்த சுடர்ச் சோதி போலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலுங்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டர் போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலும்
கோன்மலிந்த மூவிலைவேற் குழகர் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 1

இத்திருப்பதிகம், 'போலும்' என்னும் முடிபுடைய தொடர் களால் இறைவன் பெருமையை வகுத்துரைத்து அருளிச் செய்தது. 'போலும்' என்பன அசைநிலையாகக்கொள்ளப்படும்.

743. சொல் மலிந்த - சொற்கள் நிறைந்த; என்றது, 'சொல்வடிவாய் நிற்கும்' என்றபடி. "சொற்பொருள்" என்றது, சொற்பொருள் உணர்வை; அதுவே நாதமாதலின், 'அதனைக் கடந்த" என்றது, 'நாதத்தைக் கடந்த" என்றவா ருயிற்று. "சுடர்" என்றது கதிர்களையும், "சோதி" என்றது அக்கதிர்களின் திரட்சியையும். நாதந்தானே உயிர் களின் அறிவை விளக்கி அவ்வறிவாய் நிற்றலின், 'அதனைக் கடந்த சுடர்ச் சோதி' யாதலாவது, அதுபோல விளக்குவதொரு பொருளை வேண்டாது, தானே இயல்பாய் விளங்கி நிற்கும்

Koviloor Digital Library

அறிவாதலாம். ஆகவே, "சொன்மலிந்த நான்மறை ஆறங்கம் ஆகிச் சொற்பொருளும் கடந்த சுடர்ச் சோதி" என்றது, 'தான் இயல்பாகவே விளங்கும் இயற்கை யுணர்வினனாய் நின்று. நாதத்தைச் செலுத்தி, அது வாயிலாக உயிர்களின் அறிவை விளக்கிநிற்பவன்' என்றருளியவாறுதல் அறிக. "உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் - நின்ற மெய்யா" (திருவா. சிவ பு, 33 34.) என்றாற்போலுந் திருமொழிகள் இதனையே குறிக்கும் என்க. சமட்டியாய் (தொகுதியாய்) நிற்கும் ஓங்காரம் வியட்டியில் (பகுதியில்) 'அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம்' என ஐந்தாய் உயிர்களின் அறிவை விளக்கும்; அவை அங்ஙனம் விளக்கும்படி அவற்றை இறைவன் ஐவகை நிலையில் நின்று செலுத்துமாற்றினை,

" அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகாரமனம் சித்தம் விந்துப் - பகாதிவற்றை
நாதம் உளவடிவா நாடிற் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று "

எனவும்,

" எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக் - கண்ணிற்
பகரயன்மா லோடு பரமனதி தெய்வம்
அகரஉக ரம்மகரத் தாம் "

எனவும் விளக்கியது சிவஞானபோதம் (சூ. 4. அதி. 1.)

ஓங்காரம் பருப்பொருளாக மேற்கூறிய ஐந்து பகுதிகளாக (பஞ்சகலைகளாக)ப் பகுக்கப்படுதலே பெரும்பான்மை; மற்றும் அதனை மிக நுட்பமாகப் பன்னிரண்டு பகுதிகளாகவும், பதினாறு பகுதிகளாகவும் பகுத்து, யோகநெறியில் அவைகளை உன்னி உணர்ந்து அவற்றின் நீங்கும் முறையும் உண்டு; அவ்விடத்து, அப்பகுதிகள் முறையே, 'பன்னிருகலைப் பிராசாத மந்திரம்' எனவும், 'பதினாறுகலைப் பிராசாத மந்திரம்' எனவும், அவற்றை உன்னி உணரும் யோகம், 'பிராசாத யோகம்' எனவும் கூறப்படும். அவை எல்லாவற்றிற்கும் முதலாய் யாண்டும் யாவர்க்கும் உடனாய் நின்று உதவுவது இறைவனது திருவருளேயாகும். அத்திருவருள் ஒன்றுதானே எண்ணிறந்த வகையில் அவ்வரவர்க்கு ஏற்குமாற்றால் நின்று உதவும் வியட்டி நிலைகளையே

Koviloor Digital Library

744 கானல்இளங் கலிமறவ னாகிப் பார்த்தன்
கருத்தளவு செருத்தொகுதி கண்டார் போலும்
ஆனல்இளங் கடுவிடையோன் றேறி யண்டத்
தப்பாலும் பலிதிரியும் அழகர் போலும்
தேனலிளந் துவலைமலி தென்றல் முன்றிற்
செழும்பொழிற்பூம் பாளைவிரி தேறல் நாறுங்
கூனல்இளம் பிறைதடவு கொடிகொள் மாடக்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 2

இங்கு, "சுடர்" எனவும், அந்நிலைகள் அனைத்தையும் உடைய முதல்வன் தான் ஒருவனேயாய் நின்று நிலவுதலையே, இங்கு, "சோதி" எனவும் அருளிச்செய்தார் என உணர்க. இதனானே மெய்ந்நூல்களின் (தத்துவ சாத்திரங்களின்) பரப்புக்கள் அனைத்திற்கும் முதலாய் நிற்பன திருமுறைகள் என்பதும் தெற்றெனத் தெளிந்துகொள்க.

'ஆகிக் கடந்த' என இயையும். மேற்கூறியனவெல்லாம் இனிது விளங்குதற் பொருட்டே, 'ஆகிக் கடந்த சுடர்ச்சோதி' என எச்சமாக்கி, ஒரு தொடர்ப்பட அருளிச் செய்தார். "சொற்பொருளும்" என்ற உம்மை. நுட்பத்தின் மிகுதியுணர நின்ற சிறப்பும்மை. வாணர், 'வாழ்நர்' என்பதன் மரூஉ; 'வாழ்பவர்' என்பது பொருள். 'சொற்பொருளுங் கடந்த நுண்ணியராயினும், உயிர்கள்பொருட்டுப் பரியராயும் விளங்கினார்' என்பார் "கல் மலிந்த கயிலைமலை வாணர்" என அருளிச்செய்தார்; "கல்" என்றது, பக்க மலைகளை. 'மல் மலிந்த (வலிமை நிறைந்த) 'அழகிய மலைபோலும் திண்ணிய தோள்களை உடையவர்' என்க. கொல் மலிந்த - கொல்லுதல் நிறைந்த. மூவிலை வேல் - சூலம். குழகர் - அழகர். இத்திருப் பதிகம் முழுவதும் இறைவனை நாயனார், 'கூத்தன்' என்றே குறித்தருளுகின்றார்.

744. கான் - காட்டில். 'நல் இளங்கலி மறவன் ஆகி' என்க. கலி - எழுச்சி. மறவன் - வேட்டுவன். "கருத்து" என்றது, ஊக்கத்தை. செரு - போர். விற்றொழிலில் அவன் பயின்ற அனைத்தையும் காட்டச்செய்தார் ஆகலின், "செருத் தொகுதி" என்று அருளினார். 'கருத்தளவையும், செருத் தொகுதியையும் கண்டார்' என்க. 'ஆன் விடை' என இயையும்.

Koviloor Digital Library

745 நீறலேத்த திருவுருவும் நெற்றிக் கண்ணும்
நிலாஅலேத்த பாம்பினேடு நிறைநீர்க் கங்கை
ஆறலேத்த சடைமுடியும் அம்போன் தோளும்
அடியவர்க்குக் காட்டியருள் புரிவார் போலும்
ஏறலேத்த நிமிர்கோடியோன் றுடையர் போலும்
ஏழுலகுந் தொழுகழலெம் மீசர் போலும்
கூறலேத்த மலேமடந்தை கோழுநர் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னுரே. 3

"அண்டம்" என்றது, நில அண்டத்தை. 'அதற்கு அப்பாலும் திரிவர்' என்றது, 'ஏனைய நீர் அண்டம் முதலியவற்றுள் உள்ளார்க்கும் இவ்வாறே அருள்செய்வார்' என்றருளியதாம்.

'தேன் துவலே' என இயையும்; இளமை, இங்குச் சிறுமை மேல் நின்றது. துவலே - துளி. 'துவலே மலிதல்', தென்றலுக்கு அடை. "தேறல்" என்றது மாடங்களில் உள்ளார் பருகும் தேனினே. "கூன் நல் இளம் பிறை தடவு" என்றது, கொடிக்கு அடை. 'தென்றல் இயங்கும் முன்றிலின்கண் உள்ள பொழிலிடத்துப் பானேகள் விரியப்பெறுவனவும், உண்ணப்படும் தேனினிது மணம் வீசப்பெறுவனவும், பிறையைத் தடவும் கொடிகளேக் கொண்டனவும் ஆகிய மாடங்களேயுடைய குடந்தை' என்க.

745. 'வருத்திய' எனப் பொருள் தரும் 'அலேத்த' என்னும் சொல், ஈண்டுப் பலவிடத்தும் 'பொருந்திய' என்னும் அளவாய் நின்றது. நீறலேத்த திருவுரு என்பது முதலாக, "அம்பொன் தோள்" என்பது ஈருக உள்ளவற்றை எடுத்தோதி, 'அவைகளே அடியவர்க்குக் காட்டி அருள்புரிவார்' என்று அருளிச்செய்தது, மெய்யுணர்வு தோன்றப் பெறும் செவ்வி பெற்று அதனே அவாவி நிற்கும் நன்மாணுக்கர்க்கு அதனே ஒருவார்த்தையால் உணர்த்தியருளும் உறுதிச் சொல்லாய் நின்று பயன் தருவதாதல் காண்க. நிமிர் - உயர்ந்த.

Koviloor Digital Library

746 தக்கனது பெருவேள்வி தகர்த்தார் போலுஞ்
சந்திரனைக் கலைகவர்ந்து தரித்தார் போலுஞ்
செக்கரோளி பவளவோளி மின்னின் சோதி
செழுஞ்சுடர்த்தீ ஞாயிறெனச் செய்யர் போலும்
மிக்கதிறல் மறையவரால் விளங்கு வேள்வி
மிகுபுகைபோய் விண்பொழியக் கழனி யெல்லாங்
கோக்கினிய கனிசிதறித் தேறல் பாயுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 4

747 காலன்வலி தொலைத்தகழற் காலர் போலுங்
காமனெழில் அழல்விழுங்கக் கண்டார் போலும்
ஆலதனில் அறம்நால்வர்க் களித்தார் போலும்
ஆணொடுபெண் ணலியல்ல ரானார் போலும்

746. "கவர்ந்து" என்றது ஈண்டு, 'கைக்கொண்டுகாத்து' என்னும் பொருட்டாய் நின்றது. 'தக்கனது சாபத்தால் தேய்ந்தொழிந்த ஏனைக்கலைகள்போல இவ்வொருகலையும் ஒழியாதவாறு கைப்பற்றிக் காத்துப் பின் சடையில்தரித்தார்' என்க. சந்திரனைக் கலைகவர்ந்து என்றதனை 'குடும்பத்தைக் குற்றம் மறைப்பான்' (குறள்-1029.) என்பதுபோலக் கொள்க. சந்திரனைக் காத்ததும் தக்கனுக்கு மாறாய செயலேயாதல் அறிக. செக்கர் - செவ்வானம், செக்கர் ஒளிமுதலாக ஞாயிற்றின் ஒளிஈறாக உள்ள அனைத்தொளியும் ஒருங்குகலந்தாற்போலும் செம்மை நிறம் உடையவர்' என, அவரது திருமேனிப் பொலிவினை வியந்தருளிச்செய்தார். 'தீ, ஞாயிறு' என்றனவும், அவற்றின் ஒளியையே என்க. திறலாவது, வேதம் முதலிய கலைகளை ஓதுதலினும் ஒழுகுதலினும் உள்ள வன்மை, வேள்வி வேட்டலால் பருவமழை பொய்யாது பெய்தல் பற்றியும், வேள்விப்புகை உருவத்தால் மேகத்தோடு ஒத்திருத்தல் பற்றியும் 'அவ்வேள்விப் புகைதானே விண்ணிற் போய் மேகமாய் நின்று மழை பொழியும்' என, தற்குறிப்பேற்றமாக அருளிச்செய்தார். 'விண் போய்' என இயைக்க. 'விண்ணைப் பொழிய' என ஆக்கம் வருவித்து, 'விண் - மேகம்' என்றலுமாம். கொக்கு - மாமரம். "சிதறி" என்றதனை, 'சிதற' எனத் திரிக்க. 'தேறல்' என்றது, மாம்பழத்தின் சாற்றினை.

747. 'எழிலை அழல் விழுங்க' என்க. கண்டார் - நோக்கினார்; நோக்கியது நெற்றிக்கண்ணால் என்க. "ஆல்" என்றது,

Koviloor Digital Library

நீலவுரு வயிரநிரை பச்சை செம்பொன்
நெடும்பளிங்கென் றறிவரிய நிறத்தார் போலுங்
கோலமணி கொழித்திழியும் பொன்னி நன்னீர்க்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 5

748 முடிகொண்ட வளர்மதியும் மூன்றாய்த் தோன்றும்
முளைஞாயி றன்னமலர்க் கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளார் சோதி
அணிமுறுவற் செவ்வாயும் அழகாய்த் தோன்றத்
துடிகொண்ட இடைமடவாள் பாகங் கொண்டு
சுடர்ச்சோதிக்கடிச்செம்பொன்மலைபோலிந்நாள்
குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 6

அதன் நிழலைக் குறித்தது. அல்லர் ஆனார் - அல்லராம் தன்மையை உடையவராயினார். "உரு" என்றது, மணியை. நிரை - வரிசைப்படப் பதித்தற்கு உரிய. 'நிறை பச்சை' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். 'நவமணிகளும், பொன்னும், பளிங்கும் ஆகிய இவற்றுள் இன்னதன் நிறம்போலும் நிறத்தினர் என உவமையானும் உணர ஒண்ணாததொரு நிறமுடையவர்' என்றபடி. கோலம் - அழகு.

748. 'மூன்றாய்த் தோன்றுங் கண்கள்' என இயையும். "முளைஞாயிறு அன்ன" என்றது தொழில் பற்றி வந்த உவமை; "மூன்று கண்கள் யாதொன்று திறப்பினும் சிறிது திறத்தலே யன்றி முழுவதூஉம் திறப்பின் உலகம் ஆற்றுமா றில்லை' என அவற்றது ஆற்றல் மிகுதியை உணர்த்தி யருளியவாறு. 'அன்ன ஆற்றலை உடையவாயினும், மென்மையிற் பிறழா' என்பார், "மலர்க்கண்கள்" என்று அருளினார். "அருள் ஆர், சோதி, அணி" என்னும் மூன்றும் "முறுவல்" என்றதனோடு தனித்தனி முடியும். 'நிறைந்த அருளைப் புலப்படுத்துவதாயும், தண்ணிய ஒளியினையுடைய தாயும் நின்று, இயல்பானே அழகிதாகிய முகத்திற்குப் பின்னும் பேரழகினைச் செய்வதாகிய முறுவல்' என்றருளியவாறு. 'இத் தகைய முறுவலோடு கூடிய சிவந்தவாயினது அழகு சொல்ல ஒண்ணாததாய் நிற்கும்' என்பார், "அணிமுறுவற் செவ்வாய்" என்று அருளினார். சுடர்ச்சோதி - கதிர்களின் திரட்சியாகிய

Koviloor Digital Library

749 காரிலங்கு திருவுருவத் தவற்கும் மற்றைக்
கமலத்திற் காரணற்குங் காட்சி யோண்ணுச்
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலுஞ்
சிலைவளைவித் தவுணர்புரஞ் சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனல்அனல்கால் பரமா காசம்
பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலும்
கூரிலங்கு வேற்குமரன் தாதை போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னூரே. 7

ஒளிப்பிழம்பு. கடி - விளக்கம். "சோதி" முதலிய மூன்றும் மலைக்கு அடை. இங்ஙனம் முடிகொண்ட வளர்மதி முதலிய வற்றை வகுத்துப் புகழ்ந்து, "குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார்" என்று அருளிய இதனுல், நாயனூர்க்குச் சிவபிரானது திருமேனிக் காட்சியால் விளைந்த பேரின்ப மேலீடு தெள்ளிதிற் புலனுகும். இவ்வருமைத் திருத்தாண்டகத்தை,

"முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும்
முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்தவெண் ணீறும்
சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலும்என்
பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக் கூத்தன்
குரைகழலே"

என்னும் திருவிருத்தத்தோடு உடன்வைத்து உணர்க. (திருமுறை 4. 81. 7.)

749. கார் இலங்கு திருஉருவத்தவன் - மேகம்போல விளங்கும் அழகிய உருவத்தை யுடையவன்; திருமால். கமலத்தில் காரணன் - தாமரை மலரில் இருக்கும் தலைவன்; பிரமன். காட்சி ஒண்ணு - காணுதல் கூடாத. சீர் - புகழ்; 'சீர்ப் பிழம்பு' என இயையும். பிழம்பின் - பிழம்புருவத்தில். சிவந்தார் - சிவப்பு நிறமாயினர். "பார்" என்றது, "புனல்" என்றதனேடு எண்ணுநிலை வகையான் இயைந்தது. "பரமாகாசம்" என்றது, 'ஏனைய பூதங்களின் மேம்பட்டதாகிய ஆகாசம்" என்றபடி. "சுருதி" என்றது இசையை. பரந்தார் - பரவி நின்ருர்.

Koviloor Digital Library

750 பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூ ருள்ளார்
புறம்பயத்தார் அறம்புரிபூந் துருத்தி புக்கு
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தா னத்தார்
மாதவத்து வளர்சோற்றுத் துறையார் நல்ல
தீச்சூழ்ந்த திகிரிதிரு மாலுக் கீந்து
திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாள்
கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 8

751 பொங்கரவர் புலித்தோலர் புராணர் மார்பிற்
பொறிகிளர்வெண் பூணூல் புனிதர் போலும்
சங்கரவக் கடன்முகடு தட்ட விட்டுச்
சதுரநடம் ஆட்டுகந்த சைவர் போலும்
அங்கரவத் திருவடிக்காட் பிழைப்பத் தந்தை
அந்தணனை அறஎறிந்தார்க் கருளப் போதே
கோங்கரவச் சடைக்கொன்றை கொடுத்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 9

750. இத்திருத்தாண்டகம், இறைவன் ஏனைய பல தலங்களிலும் எழுந்தருளியிருக்கும் நிலையை நினைந்து அருளிச் செய்தது.

புகலூர், புறம்பயம், பூந்துருத்தி, பழனம், நெய்த்தானம், திருவானைக்கா அனைத்தும் சோழநாட்டுத் தலங்கள்.

மாச் சூழ்ந்த - (மலர்களின் மிகுதியால்) வண்டுகள் சூழ்ந்த. 'மா தவத்துச் சோற்றுத்துறை' என்க. 'சிறந்த தவத்திற்கு உரிய' என்பது பொருள். தீச் சூழ்ந்த - தீப்போன்ற ஒளியையுடைய. திகிரி - சக்கரம். "ஈந்து" என்னும் வினையெச்சம், எண்ணின்கண் வந்தது. திருவானைக்காவில் வாய்நூலாற் பந்தர் அமைத்த சிலந்தியைச் சோழமன்னனாக்கிய வரலாற்றை, சேக்கிழார்நாயனார், கோச்செங்கட் சோழநாயனார் புராணத்துள் விரித்துரைத்தருளினார்.

751. பொங்கு அரவர் - மிக்க பாம்பை அணிந்தவர். பொறி - ஒளி. 'புரி கிளர்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். 'சங்குக் கடல், அரவக் கடல்' எனத் தனித்தனி இயைக்க.

Koviloor Digital Library

752 ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
யிப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கோண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபோற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியோடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 10

அரவம் - ஓசை. முகடு - அண்ட முகடு. சதுர நடம் - திறல் வாய்ந்த நடனம்; இதனை, 'காளியோடு ஆடி வென்ற நடனம்' என்க. ஆட்டு - ஆடுதல்; முதனிலை திரிந்த தொழிற்பெயர். கடலின் நீரை அண்ட முகட்டைப் பொருந்துமாறு எழுப்பிவிடும் வகையில் நிலம் அதிர நடம் ஆட்டுகந்தவர்' என்க. சைவர் - சிவ (மங்கல) சம்பந்தம் உடையவர்; சிவபிரானை, 'அனாதி சைவர்' என்னும் மரபும் உண்டு. அரவத் திருவடி - கழல், சிலம்பு இவைகளின் ஒலி பொருந்திய திருவடி. ஆள் பிழைப்ப - ஆளாதலில் தவறியதனால்; என்றது, 'குற்றம் செய்தமையால்' என்றபடி. குற்றம், ஆட்டுதற்கு வைத்திருந்த ஆன்பாற் குடத்தைக் காலால் இடறியது; பிறிது குற்றமும் உண்டு. 'தந்தையாகிய அந்தணனை' என்க. அற - தாள் இரண்டும் வெட்டுண்டு விழும்படி. எறிந்தார் - மழுவினால் எறிந்தவர்; சண்டேசுர நாயனார். 'அப்போதே அருளும் கொன்றையும் கொடுத்தார்' என்க. 'கொங்குக் கொன்றை, சடைக்கொன்றை' என இயைக்க. கொங்கு - வாசனை. அரவச்சடை - பாம்பணிந்த சடை. இவ்வரலாற்றின் விரிவைத் திருத்தொண்டர் புராணத்துள், சண்டேசுர நாயனார் புராணத்திற் காண்க. திருமுறைகளுள் இவ்வரலாறு வந்துள்ள பிற இடங்களை நோக்கின், 'எறிந்தாற்கு' என்பதே பாடமாதல் வேண்டும் எனக் கருதலாகும்.

752. ஏவி - தம்மால் (இறைவரால்வினைக்கீடாகச்) செலுத்தப் பட்டு. 'இளைக்கின்றேனைக் கூவி ஏறவாங்கி இப்பிறவி அறுத்து அமர் உலகு அனைத்தும் உருவி ஆங்கே போக ஆண்டுகொண்டார்' எனக்கொண்டு கூட்டியுரைக்க. கூவி - அழைத்து. ஏற வாங்கி - கரை ஏறும்படி எடுத்து. இப்பிறவி அறுத்து - பிராரத்தத்தை நுகர்ந்து இப்பிறவியைத் தொலைத்த பின்பு. அமர்

Koviloor Digital Library

753 செறிகொண்ட சிந்தைதனுள் தெளிந்து தேறித்
தித்திக்குஞ் சிவபுவனத் தமுதம் போலும்
நெறிகொண்ட குழலியுமை பாக மாக
நிறைந்தமரர் கணம்வணங்க நின்றார் போலும்

உலகு அனைத்தும் உருவி - விண்ணவர் உலகம் எல்லாவற்றையும் தாண்டி. ஆங்கே போக-தனது உலகிலே (சிவலோகத்திலே) யான் சென்று சேரும்படி. குறி இல் - மாயையின் தன்மை ஒன்றும் இல்லாத. அறு குணத்து ஆண்டு கொண்டார் - தமது அருட்குணம் ஆறனுள்ளும் படுத்து ஆண்டு கொண்டார். இறைவனது எண்குணங்களை ஆறாகக் கூறுமிடத்து, தூய உடம்பினனாதல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதற்கண்ணும். இயற்கையுணர்வு முற்று முணர்தற்கண்ணும் அடங்கும்; அவ்வாறு அடக்கி, அக் குணங்களை 'ஆறு' என்றலும் மரபாகலின், "அறுகுணத்து ஆண்டு கொண்டார்' என்றருளினார். இதனால், 'பாசம் நீங்கி இறைவனை அடையப்பெற்ற உயிர் அவனது குணங்களெல்லாம் தன்மாட்டு விளங்கக் கொண்டு நிற்கும்' என்பது பெறப்பட்டது. "எண்குணத்துளோம்" (99-ல்-10.) எனப் பின்னர் வருதலுங் காண்க. இக்குணங்கள் மேலே (பக். 127. 125.) காட்டப்பட்டன. தாவி-விரைந்து. 'தாவி வரு தீர்த்தம்' என்க. முதற் காவிரி - முதற்கண்வைத்து எண்ணப்படும் காவிரி; இஃது இத்தலத்தின் அணிமைக்கண் உண்மையின் முதற்கண் எண்ணப்படுவதாயிற்று. பொற்றாமரைத் தீர்த்தம், மதுரைத் திருக்கோயிற்கண் உள்ளது. புட்கரணி - தாமரைக் குளம்; தாமரைக் குளமாய் உள்ள பிற தீர்த்தங்கள். கோவி - கிருட்டின நதி. குமரி - குமரி யாறு; இது தென்றிசைக்கண் கடலாற் கொள்ளப்பட்டது. அதனால், அத் தென்கடலே இஞ்ஞான்று அத்தீர்த்தமாகக் கொள்ளப்படுகின்றது. "தீர்த்தம்" என்றது, மகாமகத் திருக்குளத்தை. 'குடந்தைக் கீழ்க்கோட்டத்திற்கு அண்மையில் உள்ள இத் திருக்குளத்தில் தீர்த்தங்கள் பலவும் தெய்வ வடிவில் வந்து கலந்து நிற்கும் என்பது புராணமாகலின். 'இத்தீர்த்தமெல்லாம் தாவிவரு தீர்த்தஞ் சூழ்ந்த குடந்தைக் கீழ்க்கோட்டம்' என்று அருளினார்.

753. செறிகொண்ட சிந்தை - ஒன்றுதல் கொண்ட மனம். தெளிந்து - விளங்கி. தேறி - முடிந்த பயனாய் நின்று. 'தித்திக்கும் அமுதம்' என இயையும். வாயளவில் தித்திக்கும் தேவர்

Koviloor Digital Library

மறிகோண்ட கரதலத்தெம் மைந்தர் போலும்
மதிலிலங்கைக் கோன்மலங்க வரைக்கீ ழிட்டுக்
குறிகோண்ட இன்னிசைகேட் டுகந்தார் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 11

திருச்சிற்றம்பலம்

உலகத்து அமுதத்தின் நீக்குதற்கு, "சிவபுவனத்து அமுதம்" என்று அருளினர். புவனம் - உலகம். 'சிவபவனத்து' என்பது பாடம். நெறிகொண்ட குழல் - நெறிப்பைக் (வளைவைக்) கொண்ட கூந்தல். பாகம் ஆக - ஒரு பாகத்தளாய் இருக்க. நிறைந்து - எல்லா நலனும் நிரம்பப்பெற்று. 'நிறைந்து நின்றார்' என இயையும். 'பாகமாகி' எனப் பாடம் ஓதி, 'நிறைந்து வணங்க' என்று இயைத்துரைத்தல் சிறக்கும். மறி - மான் கன்று. குறி - இசையின் இலக்கணம்.

சீர்தரு செங்காட் டங்குடி நீடுந் திருநள்ளா
றூர்தரு சோலை சூழ்தரு சாந்தை யயவந்தி
வார்திகழ் மென்முலை யாளொரு பாகன் றிருமருகல்
ஏர்தரு மன்பாற் சென்று வணங்கி யின்புற்றார். 240

அப்படி சின்னாள் சென்றபி னாரூர் நகராளுந்
துப்புறழ் வேணிக் கண்ணுத லாரைத் தொழுதிப்பான்
மெய்ப்பொருண் ஞானம் பெற்றவர் வேணு புரத்தெங்கள்
பொற்புரி முந்நூன் மார்பரும் வந்தார் புகலூரில். 241

பிள்ளையா ரெழுந்தருளப் பெருவிருப்பால் வாகீசர்
உள்ளமகிழ்ந் தெதிர்கொண்டங் குடனுறையு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர் மற்றவர்பா லெழுந்தருள
எள்ளருஞ்சீர் நீலநக்கர் தாமுமெழுந் தருளினார். 242

ஆங்கணையு மவர்களுட னப்பதியி லந்தணராம்
ஓங்குபுகழ் முருகனார் திருமடத்தி லுடனாகப்
பாங்கில்வருஞ் சீரடியார் பலருமுடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத்தொண்டி னிலையுணர்ந்து நிகழ்கின்றார். 243

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

76. திருப்புத்தூர்

திருப்பதிக வரலாறு

வாகீசர், திருப்பூந்துருத்தியில் வீற்றிருக்கும் நாட்களில் பாண்டி நாட்டில் சைவந் தழைக்கச் செய்து மீண்டுவந்த திருஞானசம்பந்தரால் பாண்டிநாட்டின் பெருமையறிந்து ஆங்குச் செல்லவிரும்பி விடைபெற்றுத் தென்திசையே போகும் பொழுது புத்தூர் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநா. பு. 402.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

754 புரிந்தமரர் தொழுதேத்தும் புகழ்தக் கோன்காண்
போர்விடையின் பாகன்காண் புவன மேழும்
விரிந்துபல வுயிராகி விளங்கி ஞன்காண்
விரைக்கொன்றைக் கண்ணியன்காண் வேதம் நான்கும்
தெரிந்துமுதற் படைத்தோனைச் சிரங்கொண்டோன் காண்
தீர்த்தன்காண் திருமாலோர் பாகத்தான் காண்
திருந்துவயல் புடைதழுவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

இத்திருப்பதிகம், 'காண்' என்னும் முடிபுடைய தொடர்களால் இறைவனது பெருமைகளை வகுத்துணர்த்தி, 'அத்தகையோன் என் சிந்தையின்கண் உள்ளவனே ஆயினன்' என அருளிச்செய்தது.

754. புரிந்து - விரும்பி. 'அமரர் புரிந்து தொழுதேத்தும்' என மாற்றியுரைக்க. "புகழ்தக்கோன்" 'புகழப்படுதற்கு உரியவன் அவன் ஒருவனே' என்றவாறு; "பூமிமேல் புகழ்தக்க பொருளே" (95 - 7.) எனப் பின்னர் வருவதுங் காண்க. ஏனையோரது புகழ் எல்லாம் பொருள் சேராதனவாய் ஒழிய, இறைவனது புகழே பொருள்சேர் புகழாதல் பற்றி, அவன்

Koviloor Digital Library

755 வாராரும் முலைமங்கை பாகத் தான்காண்
மாமறைக ளாயவன்காண் மண்ணும் விண்ணுங்
கூரார்வேந் தழலவனுங் காற்றும் நீருங்
குலவரையும் ஆயவன்காண் கொடுநஞ் சுண்ட
காராருங் கண்டன்காண் எண்டோ ளன்காண்
கயிலைமலைப் பொருப்பன்காண் விருப்போ
தேராரும் நெடுவீதித் திருப்புத் தூரில் [டேன்றுந்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

ஒருவனே புகழப்படுதற்கு உரியனுயினுன் என உணர்க. விடையின் பாகன் - இடப ஊர்திக்குத் தலைவன். "உயிராகி" என்பதில் உள்ள, "ஆகி" என்பதனை "புவனம் ஏழும்" என்பதனேடுங் கூட்டுக. விரை - வாசனை. முதல் - காத்தல் அழித்தல்களுக்கு முன்னர். படைத்தோன் - உலகத்தைப் படைத்தவன்; பிரமன்; 'வேதம் நான்கும் தெரிந்தும், முதற்கண் உலகைப் படைத்தமைபற்றி உலகத் தோற்றத்திற்குத் தன்னையே முதல்வனுக மயங்கி. அதனுல் தலை ஒன்றை இழந்தான்' என்பார், "வேதம் நான்கும் தெரிந்து முதற் படைத்தானைச் சிரங்கொண்டோன்" என்று அருளிச்செய்தார். தீர்த்தன் - முனிவன். 'சிரங்கொண்டானுயினும்' 'கொல்லாமையுடைய முனிவனே' என்றவாறு. திருமால் ஓர் பாகத்தில் உடையனுதல் மேலே (பக். 419.) காட்டப்பட்டது; அவ்வாறின்றி "அரியலால் தேவி யில்லை ஐயன்ஐயாற ஞர்க்கே" (திருமுறை 4. 40. 5.) என அருளிச்செய்தவாறு, 'திருமாலையும் தனது சத்திகளுள் ஒரு சத்தியாகக் கொண்டு ஒரு பாகத்தில் உடையவன்' என்று உரைத்தலுமாம். 'சிவபிரானது சத்தி ஒன்றே செயலாற்றுதற்கண் நான்காய்ப் பிரிந்து நிற்கும்; அங்ஙனம் நிற்குமாறு, இன்பத்தில் பவானியும், ஆடவரிடத்துத் திருமாலும், வெகுளியில் காளியும், போரில் துற்கையும், என்பது சிவாகமங்களின் துணிபு' एकैव शक्तिः परमेश्वरस्य भिन्ना चतुर्धा विनियोग काले। भोगे भवानी पुरुषेषु विष्णुः कोपे तु काली समरे तु दुर्गा॥ 'திருத்தளி' என்பது இத்தலத்துத் திருக்கோயிலின் பெயர்.

755. கூர் ஆர் - மறைந்து நின்று தோன்றி வளர்தல் பொருந்திய. மண் முதலியவற்றை அஃறிணையாக எண்ணிச்

Koviloor Digital Library

756 மின்காட்டுங் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை
நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி [யோன்காண்
நற்கனகக் கிழிதருமிக் கருளினேன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவின் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

செல்லுதற்கு இடையே, 'அழலவன்' என உயர்திணையாக எண்ணினர், 'அனைத்தையும் சடப்பொருள்களாய் எண்ணினும், அவற்றிற்குத் தலைமை பூண்ட கடவுளராய் எண்ணினும், இறை நிறைவு பொருந்தும்' என்றற்கு, தலைமைக் கடவுளரை, 'அதி தெய்வங்கள்' என்பர். கார் ஆரும் - கருமை நிறைந்த; 'மேகம் போலப் பொருந்திய' என்றுமாம். "விருப்போடு" என்றது, "திருத்தளியான்" என்ற வினைக்குறிப்போடு முடிந்தது.

756. 'மின் காட்டும் மருங்குல், கொடி மருங்குல்' எனத் தனித்தனி இயைக்க. 'மின்னலைத் தன்னிடத்தே காட்டும்' என்பது சொற்பொருளாயினும், 'காட்டும்' என்பது உவம உருபேயாம். மருங்குல் - இடை. 'விருப்பவன்' என்பது 'கேள்வன்' என்னும் பொருளுடைத்து; அகரம், சாரியை 'பொருப் பாகிய வலியை உடைய சிலை' என்க. பொருப்பு - மலை. சிலை - வில். 'தருமி' என்னும் அந்தணச் சிறுவனுக்கு, "கொங்கு தேர் வாழ்க்கை" (குறுந்தொகை - 2.) என்னும் அகப்பாட்டைப் பாடி ஈந்து. அதனை அறியாது குற்றங்கூறிய நக்கீரர் முன் புலவனாய்ச் சங்கத்திற் சென்று வாதிட்டு, பாட்டுக் குற்றம் அற்றதாதலையும், அதனைக்குற்றங்கூறியதே குற்றமாதலையும்தெளி வித்து பாண்டியன் வைத்திருந்த பொற்கிழியை அவ்வந்தணச் சிறுவன்பெறச்செய்து மறைந்தமையின், "நன்பாட்டுப்புலவனாய்ச் சங்கம் ஏறி, நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன்காண்" என்று அருளிச்செய்தார். கனகம் - பொன். கிழி - முடிப்பு. இவ்வரலாற்றின் விரிவை, திருவிளையாடற் புராணத்துட் காண்க. இவ்வருட் செயலை ஈண்டு அருளிச்செய்தமையால், 'தருமி' என்பவன்' இத்தலப் பெருமானை வழிபட்டோனாகவும் கருத இடம் உண்டு. 'கொன்றை பொன்காட்ட' என்க. கடி - வாசனை. கொன்றையும் காந்தளும் பொன்னையும், கையையும்

Koviloor Digital Library

757 ஏடேறு மலர்க்கமலத் தயனும் மாலும்
இந்திர னும் பணிங்தேத்த இருக்கின் ருன்காண்
தோடேறு மலர்க்கடுக்கை வன்னி மத்தந்
துன்னியசெஞ் சடையான்காண் துகள்தீர் [சங்கம்
மாடேறி முத்தீனுங் கானல் வேலி
மறைக்காட்டு மாமணிகாண் வளங்கோள் மேதி
சேடேறி மடுப்படியுந் திருப்புத் தூரில்
திருத்தளியான் காணவனென் சித்தை யானே.

758 கருமருவு வல்வினைநோய் காற்றி ஞன்காண்
காமருபூங் கச்சியே கம்பத் தான்காண்
பெருமருவு பேருலகில் பிணிகள் தீர்க்கும்
பெரும்பற்றத் தண்புலியூர் மன்ருடிகாண்

காட்டுதல் தம்தம் பூக்களின் வண்ணத்தானும், வண்ணத்தொடு வடிவத்தானும் என்க. 'கொன்றை சொரிகின்ற பொன்னை, காந்தள் கையேந்தி வாங்கும்' என அணிந்துரைத்தல் கருத்து. புனம் - காடு. கொன்றையையும் காந்தளையும் இயைத்து அருளிச்செய்தமையின், ''செழும்புறவு'' என்றது, முல்லையும் குறிஞ்சியும் மயங்கிய நிலத்தை என்க. தென் - இசை. 'இசை பாடுவது வண்டாக, அதற்குச் சொரியப்படும் பொன்னைக் காந்தள் பெறுகின்ற திருப்புத்தூர்' என்றது, 'பாட்டை ஆக்கினேன் சிவபிரானாக, அதற்குப் பாண்டியனால் வைக்கப்பட்ட பொற்கிழியைத் தருமி பெற்ருன்' என்பதனைத் தோற்றுவிக்கும் குறிப்புமொழியாய் நின்று சிவபிரானது அமைதி (திருத்தி) யையும், அருள்நிலையையும் விளக்குவதாம் என்க.

757, ஏடு ஏறு, தோடு ஏறு - இதழ்கள் பொருந்திய. 'ஏடு. தோடு' என வந்தது, பொருட்பின் வருநிலை. கடுக்கை - கொன்றை. துகள்தீர் - குற்றம் அற்ற; நல்ல. சங்கம் - சங்கு. மாடு - கரை. கானல் - கடற்கரை. மேதி - எருமை. சேடு - மேடு; என்றது, கரையை. ஏறி - கடந்து சென்று. படியும் - மூழ்குகின்ற, ''மேதி சேடு ஏறி மடுப் படியும்'' என்றது, 'மருதநிலஞ் சூழ்ந்த' என்றபடி.

758. கரு மருவு - பிறப்பில் பொருந்துதற்கு ஏதுவாகிய, காற்றினன் - உமிழ்வித்தான்; நீக்கினன். 'அகற்றினன்'

Koviloor Digital Library

தருமருவு கோடைத்தடக்கை யளகைக் கோன்றன்
சங்காதி ஆரூரில் தனியானைகாண்
திருமருவு பொழில் புடைசூழ் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

759 காம்பாடு தோளுமையாள் காண நட்டங்
கலந்தாடல் புரிந்தவன்காண் கையில் வெய்ய
பாம்பாடப் படுதலையிற் பலிகோள் வோன்காண்
பவளத்தின் பருவரைபோல் படிவத் தான்காண்
தாம்பாடு சினவிடையே பகடாக் கொண்ட
சங்கரன்காண் பொங்கரவக் கச்சை யோன்காண்
சேம்பாடு வயல்புடைசூழ் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே. 6

என்பதும் பாடம். 'பெருமை' என்னும் பண்புப் பெயரின் ஈறு தொகுத்தலாயிற்று. "பெருமை மருவு" என்றது, "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும் - பெருமை யுடைத்திவ் வுலகு" (குறள். 336.) என்றதனை உட்கொண்டு அருளிய இகழ்ச்சிக் குறிப்பு. 'பிணிகள் தீர்க்கும் மன்ருடி' என இயையும். பெரும்பற்றப் புலியூர் - தில்லை. மன்று - சபை. தரு மருவு - கற்பகத் தருவைப்போலும். அளகைக் கோன் - குபேரன். சங்காதி - மிக்க நண்பன்; (சங்காதம் - மிக்க நட்பு.) 'சங்காதி' என்பதன்றிப் பிறவாறு ஓதுவன பாடம் அல்ல. ஆரூரில் - திருவாரூரில்; உள்ள ஒப்பற்ற யானை போன்றவன். 'யானை' என்றது, காதற் சொல். திரு - அழகு.

759. காம்பு - மூங்கில். ஆடு உவம உருபு. படிவத்தான் - வடிவத்தை உடையவன்; 'படிமத்தான்' என்பது பாடம் அன்று. தாம்பு ஆடு - கயிற்றிற் பொருந்தும்; என்றது, 'பசுவாந் தன்மை உடைய' என்றபடி. "தாம்பாடு, சினம்" என்றவை இன அடைகள். பகடு - யானை; சிறந்த ஊர்தி யானையே யாகலின், அதனையே அருளினர். பொங்கு - சினம் மிக்க; இதுவும் இன அடை. சேம்பு ஆடு - நீர்ச் சேம்புகள் பொருந்திய.

Koviloor Digital Library

760 வெறிவிரவு மலர்க்கொன்றை விளங்கு திங்கள்
வன்னியொடு விரிசடைமேல் மிலைச்சி னான்காண்
பொறிவிரவு கதநாகம் அக்கி னோடு
பூண்டவன்காண் பொருபுலித்தோ லாடை யான்
அறிவரிய நுண்பொருள்க ளாயி னான்காண் [காண்
ஆயிரம்பே ருடையவன்காண் அந்தண் கானல்
செறிபொழில்சூழ் மணிமாடத் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

761 புக்கடைந்த வேதியற்காக் காலற் காய்ந்த
புண்ணியன்காண் வெண்ணகைவெள் வளையா
மிக்கெதிர்ந்த கரிவெருவ உரித்த கோன்காண் [ளஞ்ச
வெண்மதியைத் தலைசேர்த்த தண்மை யோன்
அக்கரும்பு பெரும்புன்னை நெருங்கு சோலை [காண்
ஆரூருக் கதிபதிகாண் அந்தண் தென்றல்
திக்கணைந்து வருமருங்கின் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

762 பற்றவன்காண் ஏனோர்க்கும் வானோ ருக்கும்
பராபரன்காண் தக்கன்றன் வேள்வி செற்ற
கொற்றவன்காண் கொடுஞ்சினத்தை யடங்கச் செற்று
ஞானத்தை மேன்மிகுத்தல் கொளாக் கொண்ட

760. வெறி - வாசனை. மிலைச்சினான் - சூடினான். பொறி - புள்ளி. கதம் - சினம். அக்கு - எலும்பு. 'கானல் செறிபொழிலைச் சூழும்' என்றதனை, நெய்தல் மருதத்தொடு மயங்கியதாக உரைக்க.

761. வேதியன் மார்க்கண்டேயர். வெள்வளை - சங்க வளை. தண்மை - அருள். 'அக் கரும்பு' என்பதில் அகரம் பண்டறி சுட்டாய், பெருமை குறித்து நின்றது. 'கரும்பும் புன்னையும் நெருங்கு சோலை' என்றதனால், நெய்தலும் மருதமும் மயங்கிய தாக உரைக்க. அதிபதி - தலைவன். மருங்கு - இடம்.

762. பற்றவன் - துணையாய் இருப்பவன். 'வானோருக்கும் ஏனோர்க்கும் பற்றவன்' என்க. பராபரன் - மேலான பொருளாயும், கீழான பொருளாயும் இருப்பவன்; 'மேல்' என்றது

Koviloor Digital Library

பேற்றியன்காண் பிறங்கருவிக் கழுக்குன் றத்தேம்
பிஞ்ஞகன்காண் பேரெழிலார் காம வேளைச்
சேற்றவன்காண் சீர்மருவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே.

தன்னையும், 'கீழ்' என்றது பிறவற்றையும். பொருட்டன்மையால் தானே ஆகியும், கலப்பினால் பிற பொருள்களாகியும் இருப்பவன் என்றதாம். கொற்றவன் - வெற்றியை உடையவன். "சினம்" என்றது, வெறுப்பினை ; அதனானே, அதன் மறுதலையாகிய விருப்புங் கொள்ளப்படும் ; படவே, 'உயிர்களது விருப்பு வெறுப்புக்களுக்கு முதலாகிய அறியாமையை நீக்கி அறிவை மேன்மேல் மிகுவித்தலையே குறிக்கோளாகக் கொண்ட தன்மையை (பெருங்கருணையை) உடையவன்' என்று அருளியவாரும். இவ்வாறு இறைவன் உயிர்களிடத்து அவற்றிற்கு உயிராய் உள் நின்று செய்துவருதலை,

"மன்னும் இருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னும் அரனே மலந்துரந்து -"

எனச் சிவஞானபோதமும் (சூ. 11. அதி. 2.),

"அந்த அருள்உனக்கிங் காதார மாய்நின்று
இந்து வௌளறித்திட் டேகமாய்—முந்தி
உனை உனக்குத் தான்விளக்கி ஓவா துணர்த்தும்
தனைஉனக்குக் காட்டுமே தான்"

எனத் துகளறுபோதமும் (36) விளக்கின. அவ்விடத்து, 'மதி' எனவும், 'இந்து' எனவும் போந்தவை வளர்பிறைச் சந்திரனைக் குறித்தன என்பது அச் சிவஞானபோத வெண்பாவுரையான் அறிக. பிறங்கு - விளங்குகின்ற. கழுக்குன்றம், தொண்டைநாட்டுத் தலம். பேரெழில் ஆர் - மிக்க அழகு பொருந்திய. சீர் - புகழ்.

Koviloor Digital Library

763 உரம்மதித்த சலந்தரன்தன் ஆகங் கீண்ட
வோராழி படைத்தவன்காண் உலகு சூழும்
வரம்மதித்த கதிரவனைப் பற்கோண் டான்காண்
வானவர்கோன் புயம்நெரித்த வல்லா ளன்காண்
அரம்மதித்துச் செம்பொன்னி னாரம் பூண
அணிந்தவன்காண் அலைகடல்சூழ் இலங்கை [வேந்தன்
சிரம்நெரித்த சேவடிகாண் திருப்புத் தூரில்
திருத்தளியான்காண் அவனென் சிந்தை யானே.

திருச்சிற்றம்பலம்

763. உரம் மதித்த - தனது வலியையே பெரிதாக மதித்த. 'பின்பு கீண்ட ஆழியைப் படைத்தவன் (உண்டாக்கியவன்), என்றதாம்; ஆகவே, 'ஆகம் கீளுதற்கு ஓர் ஆழியைப் படைத்தவன்' என்பது கருத்தாயிற்று. வரம் மதித்த - யாவராலும் மேலாக மதிக்கப்பட்ட; "பலர்புகழ் ஞாயிறு" (திருமுருகாற்றுப் படை - 2.) என்றது காண்க. 'அரவினைப் பொன்னாரமாகவும், பூணாகவும் மதித்து அணிந்தவன்' என்க. 'அரா' என்பதன் ஈற்று ஆகாரம் குறுகி நின்றது. "சேவடி" என்பது, சினையாகு பெயராய் அதனை உடையவன்மேல் நின்றது.

திருப்பதிகச் செழுந்தமிழின் றிறம்போற்றி மகிழ்வுற்றுப்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பாகர் பொற்றாளில்
விருப்புடைய திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தங்
கொருப்படுசிந் தையினார்க ளுடனுறைவின் பயன்பெற்றார். 244

அந்நாளிற் றமக்கேற்ற திருத்தொண்டி னெறியாற்ற
மின்னார்செஞ் சடையண்ணல் மேவுபதி யெனைப்பலவு
முன்னாகச் சென்றேத்தி முதல்வன்றா டொழுவதற்குப்
பொன்னாரு மணிமாடப் பூம்புகலூர் தொழுதகன்றார். 245

திருநீல நக்கடிகள் சிறுத்தொண்டர் முருகனார்
பெருநீர்மை யடியார்கள் பிறரும்விடை கொண்டேக
ஒருநீர்மை மனத்துடைய பிள்ளையா ருடனரசும்
வருநீர்செஞ் சடைக்கரந்தார் திருவம்பர் வணங்கினார். 246

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

77. திருவாய்மூர்

திருப்பதிக வரலாறு

ஆளுடைய அரசர் ஆளுடையபிள்ளையாருடன் திருமறைக் காடு சென்று மறைக்கதவம திறக்கவும் அடைக்கவும் பாடித் தொழுது திருமடம் சென்று தாம் பாட அரிதின் கதவும் திறந்த மையும், சம்பந்தர்பாட எளிதில் கதவம் அடைத்தமையும் கருதி நம்பர் திருவுள்ளம் அறியாது அயர்த்தேன் எனக்கவன்று பேழ்கணித்துத்துயின்ருர். "திருவாய்மூரில் இருப்போந் தொடர வா" எனப் பெருமான் கனவில் அருளினுன். வாகீசர் கனவிற் கேட்டவாறே தொடர்ந்து செல்பொழுதில் அண்மையில் காட்சி கொடுப்பான் போல எதிரே கோயிலொன்று காட்டிப் பெருமான் மறைந்தருளினுன். புகலி வள்ளலாரும் வாசிகர் போந்தபடி கேட்டு வந்தணைந்தார். கதவம் அடைக்கப் பாடிய ஆளுடைய பிள்ளையார் உப்பாலார், தாம் இங்கு எப்பால் மறைவது என்று அரசர் பாடியருள இறைவன் காட்சி வழங்குவதை ஆளுடைய பிள்ளையார் காட்டக் கண்டு பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 281.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

764 பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங் கண்டேன் மோய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கைஅனல் கண்டேன் கங்கை யாளைக்
கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 1

இத்திருப்பதிகம் நாயஞர் சிவபிரானது இயற்கைக் கோலத் தைக் கண்டு, அங்ஙனங் கண்ட காட்சியையே எடுத்தோதி அருளியதாகலின், சிவபிரானது கோலங்களைப்பற்றி வரும் உரையளவைகட்கெல்லாம் இது பேரனுபவத் திருமொழியாகும்.

Koviloor Digital Library



வாய்மூரடிகள் வழங்கிய காட்சி

Koviloor Digital Library

Koviloor Digital Library

765 பாலின் மொழியாளோர் பாகங் கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன்
நெற்றி நுதல்கண்டேன் பெற்றங் கண்டேன்
காலைக் கதிர்செய் மதியங் கண்டேன்
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன்
மாலைச் சடையும் முடியுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 2

764. "பாட, பரவ" முதலிய செயவெனெச்சங்கள் தொழிற் பெயர்த் தன்மையனவாய் நின்று, "கண்டேன்" என்பதற்குச் செயப்படுபொருளாயின.

'அடியார்' பாடவும் பரவவும் கண்டேன்' என்க. 'பத்தர் கணங் கண்டேன்' என்பதனை முதற்கண் வைத்து. "அடியார்" என்றதனைச் சுட்டளவாகக் கொள்க. கணம் - கூட்டம். மொய்த்த - நெருங்கிய. 'பூதமும் அதிர்தலும் கண்டேன். என்க. ஆடல் முழவம் - நடனத்தில் முழக்கப்படும் மத்தளம். முழவம் அதிர்தலை, "கண்டேன்" என்றது, 'நேர்பட அறிந் தேன்' என்றபடி. இவ்வாறு மேலும் உரைக்க வேண்டுமிடம் அறிந்துகொள்க. கோடல் - காந்தட் பூ; 'கோடலும் அரவும் பொருந்திய சடை' என்க. "இதழ்" என்றது, சிறகினை. வாடல்தலை - உலர்ந்த தலை ஓடு; "வற்றல் ஓடுகல னுப்பலி தேர்ந்தென துள்ளம் கவர்கள்வன்" (திருமுறை 1. 1. 2) என்றருளிச்செய்தார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், 'வாய்மூர் அடிகளை நான் கண்டவாறு இது' எனச் சொல் லெச்சம் வருவித்து முடிக்க.

765. பதினெண் கணம்-பதினெட்டுக் கூட்டம்; இக்கூட்டத் தினர் அனைவரும் தேவ இனத்தவர்; அவர் இன்னர் என்பதனை, "பதினெண்கணங்களாவார், [1] தேவரும், [2] அசுரரும், [3] முனிவரும் [4] கின்னரரும், [5] கிம்புருடரும், [6] கருடரும், [7] இயக்கரும். [8] இராக்க தரும், [9] கந்தருவரும், [10] சித்தரும், [11] சாரணரும். [12] வித்தியா தரரும், [13] நாகரும், [14] பூதரும், [15] வேதாளமும், [16] தாராகணமும், [17] ஆகாசவாசிகளும், [18] போகபூமியோரும் என இவர்" என்னும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தின் உரையாலும்.

Koviloor Digital Library

766 மண்ணைத் திகழ நடம தாடும்
வரைசிலம் பார்க்கின்ற பாதங் கண்டேன்
விண்ணிற் றிகழும் முடியுங் கண்டேன்
வேடம் பலவாஞ் சரிதை கண்டேன்
நண்ணிப் பிரியா மழுவுங் கண்டேன்
நாலு மறையங்கம் ஓதக் கண்டேன்
வண்ணம் பொலிந்திலங்கு கோலங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 3

" விரவுசா ரணரே சித்தர் விஞ்சையர் பசாசர் பூதர்
கருடர்கின் னரர்இயக்கர் காந்தர்வர் சுரர்த யித்தியர்
உரகர்ஆ காச வாசர் உத்தர குருவோர் யோகர்
நிருதர்கிம் புருடர் விண்மீன் நிறைகணம் மூவா றுமே"

என்னும் சூடாமணி நிகண்டினாலும், பிறவாற்றாலும் அறிக.

(விஞ்சையர் - வித்தியாதரர், பாசாசர் - வேதாளர். சுரர் - தேவர். தயித்தியர் - அசுரர். உரகர் - நாகர். உத்தரகுருவோர் - போகபூமியர். யோகர் - முனிவர். நிருதர் - இராக்கதர்.)

பயிலுதல்-சூழ்ந்து பணிசெய்தல். உண்ட-ஏற்றுக்கொண்ட. 'நெற்றிவிழி' என்பதும், 'சடையின் முடியும்' என்பதுமே பாடமாதல் வேண்டும். பெற்றம் - பசு; இடபம். காலை - இளமை. 'காலை மதியம்' என்க. கரந்தை ஒருவகைப் பூ. மாலை - கொன்றை மாலை.

766. "மண்ணை" என்னும் ஐகாரம் சாரியை. வரை - ஏற்றுக்கொண்ட; அணிந்த. விண்ணின் - செவ்வானத்தைப் போல; 'வானை அளாவி விளங்கும்' என்றுமாம். சரிதை - செயல்கள். 'பலவாய வேடங்கட்கும் ஏற்ற செயல்கள்' என்க. வண்ணம் - (பலவகை) நிறம்; 'வண்ணப் பொலிந்திலங்கு கோலம்' என்பது பாடமாயின், 'வண்ணக் கோலம்' என இயைத்து உரைக்க.

Koviloor Digital Library

767 விளைத்த பெரும்பத்தி கூர நின்று
மெய்யடியார் தம்மை விரும்பக் கண்டேன்
இளைக்குங் கதநாக மேனி கண்டேன்
என்பின் கலந்திகழ்ந்து தோன்றக் கண்டேன்
திளைக்குந் திருமார்பில் நீறு கண்டேன்
சேணார் மதில்மூன்றும் பொன்ற அன்று
வளைத்த வரிசிலையுங் கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 4

768 கான்மறையும் போதகத்தி னுரிவை கண்டேன்
காலிற் கழல்கண்டேன் கரியின் தோல்கொண்
டூன்மறையப் போர்த்த வடிவுங் கண்டேன்
உள்க மனம்வைத்த உணர்வுங் கண்டேன்
நான்மறை யானோடு நெடிய மாலும்
நண்ணி வரக்கண்டேன் திண்ண மாக
மான்மறிதங் கையின் மருவக் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 5

767. விளைத்த - முன்னைத் தவத்தினால் விளைவிக்கப்பட்ட. கூர் - மேன்மேல் மிக. "மெய்யடியார் தம்மை விரும்ப" என்றதில் நின்ற, 'தாம்' என்பது, இறைவன்மேற்றாகிய பெயர். இளைக்கும் - கருடனுக்கு அஞ்சும்; 'கருடனுக்கு அஞ்சி அடைக்கலம் புகுந்த பாம்புகளைச் சிவபிரான், அணிகலங்களாக அணிந்து கொண்டான்' என்பது புராணம். கதம் - சினம். கலம் - அணிகலம். 'என்பின் அகலம் திகழ்ந்து' எனவும் பாடம் கொள்வர். திளைத்தல் - நீற்றில் மூழ்குதல். சேண் ஆர் - வானத்தில் பொருந்திய. பொன்ற - அழிய. 'வரிசிலை' என்பது இனஅடை.

768, கான் மறையும் போதகத்தின் உரிவை - காட்டில் மறைந்து வாழும் யானையின் தோல்; யானைக்குக் கொடுக்கப்பட்ட இவ்வடை இனஅடை. 'அக் கரியின் தோல்கொண்டு' என எடுத்துக்கொண்டு உரைக்க, ஊன் மறைய - யானைத் தோலினது புலால் தன்மை நீங்கித் தனக்கு உரியதாந் தன்மை அடைய; இங்கு, 'செய்து' - என ஒரு சொல் வருவிக்க. உள்க. தன்னை நினைத்தற்கு; மனத்தை வைத்தது (தந்தது) உயிர்கட்கு

Koviloor Digital Library

769 அடியார் சிலம்பொலிக ளார்ப்பக் கண்டேன்
அவ்வவர்க்கே யீந்த கருணை கண்டேன்
முடியார் சடைமேல் அரவ மூழ்க
மூரிப் பிறைபோய் மறையக் கண்டேன்
கொடியா ரதன்மேல் இடபங் கண்டேன்
கோவணமுங் கீளுங் குலாவக் கண்டேன்
வடியாரும் மூவிலைவேல் கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 6

770 குழையார் திருத்தோடு காதிற் கண்டேன்
கோக்கரையுஞ் சச்சரியுங் கோள்கை கண்டேன்
இழையார் புரிநூல் வலத்தே கண்டேன்
ஏழிசையாழ் வீணை முரலக் கண்டேன்
தழையார் சடைகண்டேன் தன்மை கண்டேன்
தக்கையொடு தாளங் கறங்கக் கண்டேன்
மழையார் திருமிடறும் மற்றுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 7

என்க. உணர்வு என்றது, அருளை. மறையோனும் மாலும் நண்ணி வருதல், வலப்பக்கத்தும் இடப்பக்கத்தும் என்க. திண்ணமாக மருவுதல் - நிலையாகப் பொருந்துதல்.

769. அடி ஆர் சிலம்பு ஒலிகள் - அடியின்கண் பொருந்திய சிலம்பினது ஒலிகள்; பன்முறையாக ஒலித்தலின், "ஒலிகள்" எனப் பன்மை கூறப்பட்டது. "அவ்வவர்க்கு ஈந்த" என்றது, 'அவரவர்கட்கு ஏற்குமாற்றான் ஈந்த' என்றபடி. முடி ஆர்சடை-மகுடமாகப் பொருந்திய சடை. 'அரவம் ஊர' என்பதே பாடமாதல் வேண்டும். மூரி - பெருமை. 'ஆர் கொடியதன் மேல்' என மாற்றி யுரைக்க; அது. பகுதிப் பொருள் விகுதி; 'கொடியாக ஆர்ந்த அதன்மேல்' எனச் சுட்டுப் பெயராக் கொண்டு உரைத்தலுமாம். குலாவுதல் - விளங்குதல். வடி - கூர்மை.

770. 'குழை தோடு இரண்டும் கண்டேன்' எனச் செவ்வெண்ணாக்கி யுரைக்க. ஆர் திருத்தோடு - நிறைந்த அழகினையுடையதோடு; இனி, குழையொடு ஆர்ந்த திருத்தோடு'

Koviloor Digital Library

771 பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராய்ப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனுந் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 8

எனினுமாம். குழை ஆடவர் அணிவதாகலின் அது தன் கூருகிய வலக்காதினும், தோடு பெண்டிர் அணிவதாகலின் அஃது அம்மை தன் கூருகிய இடக்காதினும் உள்ளன என்க; "தோலும் குழையும் துகிலும் சுருள்தோடும்" (திருவாசகம். கோத்தும்பி-18) என்று அருளியதுங் காண்க. கொக்கரை, சச்சரி, தக்கை, தாளம் இவை வாச்சிய வகைகள். இழை ஆர் புரி நூல் - இழைகள் பொருந்திய புரியினையுடைய பூணூல்; பூணூலை வலம்வர அணிதல் மங்கலம் உள்ள காலத்தாகலின், என்றும் நீங்காத மங்கலத்தை உடையவனாகிய சிவபிரானது பூணூல் வலமாகியே தோன்றுவதாயிற்று. தழை ஆர் சடை - தழைத்தல் பொருந்திய சடை. இனி, தழை தளிரைக் குறித்தது எனக் கொண்டு, 'தளிர்போலப் பொருந்திய சடை' என்றுரைத்தலு மாம். தன்மை-பிறிதொன்றன் வழிப்படாது தானேயாய் நிற்கும் இயல்பு; இது 'தன்வயம் அல்லது சுதந்திரதை' எனப்படும். கறங்க - ஒலிக்க. மழை ஆர் - மேகம்போலப் பொருந்திய.

771. பொருந்தாத செய்கை - உலகத்தார்க்கு ஏலாத செய்கை; அவை, சாம்பல் பூசுதல், எலும்பும் தலைமாலையும் அணிதல், தலைஓட்டில் இரத்தல், நஞ்சை உண்ணுதல் முதலியன வாகக் கொள்க. இன்னோரன்னவை, அவன் பற்றற்றானாதலை உணர்த்தும். இனி, பொருந்தாத செய்கை, ஒன்றோடொன்று ஒவ்வாத செயல்களுமாம்; அவை, சடை தரித்துக் கல்லாடை உடுத்தும் பெண்ணொரு பாக னாதல், ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப் பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்தும் (புறம் - 55.) பல விடத்தும் இரந்து திரிதல் முதலியனவாம்; இப்பெற்றியன, அவன் உலகத்துள் யாதொரு கூற்றினும் படாமையை உணர்த்தும். 'போற்றி' என்பதன் இகரம் தொகுத்தலாயிற்று,

Koviloor Digital Library

772 மெய்யன்ப ரானூர்க் கருளுங் கண்டேன்
வேடுவனாய் நின்ற நிலையுங் கண்டேன்
கையம் பரணோரித்த காட்சி கண்டேன்
கங்கணமும் அங்கைக் கனலுங் கண்டேன்
ஐயம் பலவூர் திரியக் கண்டேன்
அன்றவன்றன் வேள்வி யழித்து கந்து
வையம் பரவ இருத்தல் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 9

'போற்றி இசைத்து' என்றது, 'போற்றி எனச் சொல்லி. என்றவாறு; இனி, 'போற்று இசைத்து' எனவே கொண்டு, 'போற்றுதலாகிய சொற்களைச் சொல்லி' என உரைத்தலுமாம். பரிந்தார் - அன்பு செய்தவர். பரிசு - தன்மை; உம்மை, சிறப்பு' "பாராய்ப் புனலாகி" என்றதனால், ஏனைய பூதங்களும் கொள் ளப்படும்; அவையாகி நிற்றல், அப் பூதங்கட்குத் தலைவராக எண்ணப்படும் தேவர்கள் அவனது குறிப்பின்வழி நிற்குமாற்றால் காணப்பட்டது. விருந்து - புதுமை; 'புதியனவாய்ப் பரந்த தொகுதி' என்றது, வேறிடங்களிற் காணப்படாது நிறைந்து நின்று மருட்கையை விளைத்த கூட்டம்; அவை பூதவேதாளங்கள் முதலிய பதினெண் கணங்களுமாம். மெல்லியல் - உமை. "விநாயகனும்" என எண்ணின்கண் நின்ற எச்ச உம்மை யானே 'முருகனும்' என்பது தழுவப்பட்டது. பிணி, உடல் நோயும், உயிர் நோயும் என்க. எனவே, 'மருந்து' என்றதும் அவையிரண்டற்கும் ஏற்றவாற்றாற் கொள்ளப்படும்.

772. "மெய்யன்பரானூர்க்கு" என்புழி, 'செய்யும்' என ஒரு சொல் வருவிக்க; அன்றி, 'அருள் - அருளுதல்' என்றலு மாம். 'கங்கணம், பாம்பினால் ஆயது' என்க. அன்று அவன் - பகைத்த அவன்; தக்கன். 'பரவ உகந்து இருத்தல்' எனக் கூட்டுக. வேடுவனாய் நின்ற நிலை முதலியன, வீரக் குறிப்பு, கபாலம் ஏந்தி நிற்றல் முதலியவற்றால் காணப்பட்டன; அன்றி, அவற்றை எல்லாம் நாயனூர் காணுமாறு இறைவன் அங்கே காட்டியருளினன் எனினும் இழுக்காது.

Koviloor Digital Library

773 கலங்க இருவர்க் கழலாய் நீண்ட
காரணமுங் கண்டேன் கருவாய் நின்று
பலங்கள் தரித்துகந்த பண்புங் கண்டேன்
பாடல் ஒலியெலாங் கூடக் கண்டேன்
இலங்கைத் தலைவன் சிரங்கள் பத்தும்
இறுத்தவனுக் கீந்த பெருமை கண்டேன்
வலங்கைத் தலத்துள் அனலுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 10

திருச்சிற்றம்பலம்

773. கலங்க - திகைக்க. இருவர், மாலும் அயனும் ; அவர் திகைத்தது, அளவறியப்படாது நீண்டு நின்றமை கண்டு. காரணமாவது, அவர் தமது மயக்கம் நீங்கித் தனது முதன்மையை உணருமாறு செய்ய நினைந்தமை ; அஃது அதன் பயனாய் விளைந்த விளைவைக் குறித்தது ; அவ்விளைவாவது, அவ்விருவரும் அவன் அடியாராய் ஏவல் கேட்டு நின்றமையை. கரு - முதல். பலங்கள் - பயன்கள். தரித்து உகத்தல் - தாங்கியருளுதல். ‘ எல்லா விளைவுகட்கும் முதற்பொருளாய், அவ்விளைவுகள் அனைத்தும் முன்னே தன்னிடத்து அடங்கி நின்று பின் தோன்றுமாறு செய்யுந் தன்மை’ என்றபடி. கூட - ஒத்து இயைய. இலங்கைத் தலைவனுக்கு ஈந்த பெருமையைக் கண்டது, அதுபோலும் பல நிகழ்ச்சிகளால் என்க. ‘வலக்கை’ என்பது மெலிந்து நின்றது ; ‘வலத்தின்கண் கையின்’ என அடுக்காக்கி உரைத்தலுமாம். “ அனல் ” என்றது, மழுவை.

செங்குமுத மலர்வாவித் திருக்கடவூ ரணைந்தருளிப்
பொங்கியவெங் கூற்றடர்த்த பொன்னடிக டொழுதேத்திக்
குங்குலியக் கலயனார் திருமடத்திற் குறைவறுப்ப
அங்கவர்பாற் சிவனடியா ருடனமுது செய்தார்கள். 247

சீர்மன்னுந் திருக்கடவூர்த் திருமயா னமும் வணங்கி
யேர்மன்னு மின்னிசைப்பாப் பலபாடி யினிதமர்ந்து
கார்மன்னுங் கறைக்கண்டர் கழலிணைக டொழுதகன்று
தேர்மன்னு மணிவீதித் திருவாக்கூர் சென்றணைந்தார். 248

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

78. திருவாலங்காடு

திருப்பதிக வரலாறு

வாகீசர், திருவொற்றியூர் திருப்பாசூர் முதலான பதிகளை வணங்கித் திருவாலங்காடு சென்று பணிந்து பாடியருளிய வற்றுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 342.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

774 ஒன்ரு வுலகனைத்து மானுர் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்ருகி யெங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானுர் தாமே
கோன்ருடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்ருடு தீர்த்தங்க ளானுர் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 1

இத் திருப்பதிகம், 'தாமே' என்னும் முடிபுடைய தொடர்களால் இறைவன் பெருமைகளை வகுத்தருளிச் செய்தது.

774. "உலகு அனைத்தும்" என்பதனை, இடைநிலைத் தீவகமாக வைத்து, 'உலகம் முழுதும் தனது ஒரு வியாபகத்துள் அடங்கி நிற்கும் பொருளாகும்படி அவையனைத்துமாய் நிறைந்து நின்ருர்' என உரைக்க. இனி, 'ஒன்ருய் உலகனைத்தும் ஆனுர்' எனப் பாடம் ஓதி, 'முன்னர்த் தாமாகிய ஒரு பொருளாய் நின்று, பின்னர் உலகப் பொருள் பலவும் ஆயினுர்' என்றுரைத்தலே சிறப்பென்க. "இருள் உளதாய், பகலும் இரவும் இலவாய், சத்தும் அசத்தும் இலவாய் இருந்தபோது தனியே சிவபிரான் ஒருவனே இருந்தான் - यदातमस्तन्न दिवा न रात्रिर्नसत् न चाऽसत् शिव एव केवलः (சுவேதாசுவதரம்), "அவன், நான் பலவாகுவேனுக என விரும்பினுன் - सोऽकामयत बहु स्यास् எது எது (முன்பு) இருந்ததோ அதை அதை எல்லாம்

775 மலைமகளைப் பாக மமர்ந்தார் தாமே
 வானோர் வணங்கப் படுவார் தாமே
சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார் தாமே
 சரணென் றிருப்பார்கட் கன்பர் தாமே
பலபலவும் வேடங்க ளானார் தாமே
 பழனை பதியா வுடையார் தாமே
சிலைமலையா மூவெயிலும் அட்டார் தாமே
 திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 2

அவன் படைத்தான் - इदं सर्वं असृजत यदिदं किंच அதனைப் படைத்த பின்பு அதனுள் நுழைந்து, சத்தும் தியத்தும் ஆயினன் - तत्सृष्ट्वा तदेवाऽनुप्राविशत् सत् च त्यच्चाऽभवत्। (தைத்ரீயம்) என இவ்வாறு வரும் உபநிடதப் பகுதிகள் பலவும் ஈண்டுக் காணத்தக்கன. 'தொறு' என்பதன் திரிபாகிய, "தோறு" என்பதனை, பின்னுள்ள "ஊழி" என்புழியும் விரிக்க. ஊழி தோறும் உயர்தல், பல உயிர்களை வீடு பெறுவித்து என்க. நின்று - ஒருநிலையே நின்று. 'எங்கும் ஆகி நிமிர்ந்தார்' என்க. நிமிர்தல், இங்குப் பரத்தல் மேலது. கொன்று ஆடும் - உயிர்களைக் கொன்று திரிகின்ற. கோலம் - அழகு. பழனை, 'பழையனூர்' என்பதன் மரூஉ. 'பழையனூர் என்பது ஊர்' எனவும், 'ஆலங்காடு என்பது அதனை அடுத்த காடு' எனவும் கருதப்படுதலின், ஆலங்காட்டுப் பெருமானை அவ்வூரை உடைய வனாகவும் அருளிச்செய்தார். சென்று ஆடும் - தேடிச் சென்று மூழ்குகின்ற. 'மூர்த்தி, தலம், தீர்த்தம்' என்னும் மூன்றுவடிவிலும் இறைவன் இருந்து, 'வழிபடுதல், தங்குதல், மூழ்குதல்' என்னும் இச்செயல்களின்வழி உயிர்கட்கு அருள்புரிதல் நோக்கி, "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே" என்று அருளிச் செய்தார். திருவருளே உண்மைச் செல்வம் ஆதலின், அதனை உடைய சிவபிரானே, 'செல்வன்' என்றும், 'திருவாளன்' என்றும் சொல்லப்படுவான். "செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே" (திருமுறை. 1. 80. 5.) அதர்வசிகை உபநிடதமும், சர்வைஸ்வரிய சம்பந்நர், "சர்வேஸ்வரர், சம்பு" எனக் கூறிற்று.

775. சரண் என்று இருத்தலாவது, தமது அறிவு இச்சை செயல்கள் யாவும் அவரது அறிவு இச்சை செயல்களின் வழிப் படுவனவல்லது தனிந்து நிற்கமாட்டமையை உணர்ந்து, தம்

Koviloor Digital Library

776 ஆவுற்ற ஐந்தும் உகந்தார் தாமே
அளவில் பெருமை யுடையார் தாமே
பூவுற்ற நாற்றமாய் நின்ருர் தாமே
புனிதப் பொருளாகி நின்ருர் தாமே
பாவுற்ற பாட லுகப்பார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தேவுற் றடிபரவ நின்ருர் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 3

777 நாறுபூங் கொன்றை முடியார் தாமே
நான்மறையோ டாறங்கஞ் சொன்ஞர் தாமே
மாறிலா மேனி யுடையார் தாமே
மாமதியஞ் செஞ்சடைமேல் வைத்தார் தாமே

செயலின்றி, எல்லாம் அவர் செயலாக நிற்றல். ‘பலபல வேடங்களும் ஆனுர்’ என, உம்மையைப் பிரித்துக் கூட்டி, “ஆனுர்” என்பதற்கு, ‘உடையவர் ஆனுர்’ என உரைக்க. அட்டார் - அழித்தார்.

776. ஆ உற்ற ஐந்து - பசுவின்கண் பொருந்திய ஐந்து; பால், தயிர், நெய், நீர், சாணம் என்பன. உகந்தார் - ஆடுதற்கு விரும்பினுர். பூவுற்ற நாற்றமாய் நின்ருர் - மலரின்கண் மணம் போல எல்லாப் பொருள்களிலும் நுண்ணியராய் நிறைந்து நின்ருர். புனிதப் பொருள் - இயல்பாகவே மாசின்றித் தூய்தாய பொருள். இத் தன்மையை, ‘விசுத்த தேகம்’ என்னும், சிவாகமம். பா உற்ற பாடல் - ‘பா’ என்னும் உறுப்புப் பொருந்திய பாட்டு; ‘பா’ என்னும் உறுப்புடைமையை எடுத்தோதியது, இசையிடத்து விருப்பம் உடையர் என்பது உணர்த்துதற்கு. ‘தெய்வம்’ என்னும் பொருளதாகிய, ‘தே’ என்னும் பெயர், சொல்லால் அஃறிணையாதலின், அத்திணை இருபாற்கும் பொதுவாய், ஈண்டுப் பன்மைக்கண் வந்தது; ‘தேவர் பலரும் அடைந்து அடிபரவ நின்ருர்’ என்பது பொருள்.

777. மாறு இலா மேனி - அழிதல் இல்லாத உடம்பு; எனவே, ‘தோற்றம் இல்லாதது’ என்பதும் முடிந்தது; ‘மாயையின் கலக்கமாய்த் தோன்றி நின்றழியும் உடம்பின்றித் தம் இச்சையாற் கொள்ளும் அருளுடம்பு உடையவர்’ என்றதாம். மா -

Koviloor Digital Library

பாறினர் வெண்டலையி லுண்டார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தேறினர் சித்தத் திருந்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 4

778 அல்லும் பகலுமாய் நின்றார் தாமே
அந்தியுஞ் சந்தியு மானார் தாமே
சொல்லும் பொருளெலா மானார் தாமே
தோத்திரமுஞ் சாத்திரமு மானார் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 5

பெருமை. பெருமையாவன, மாசின்மையும், என்றும் ஒருபடித்தாய் நிற்றலும் முதலியன என்க. பாறினர் - அழிந்தவர். தேறினர் - தமது உண்மையையும் பெருமையையும் ஐயுறாது தெளிந்து நின்றவர்.

778. அல் - இரவு. அந்தி - மாலை. சந்தி - 'காலை, நண்பகல்' என்னும் ஏனைய இருபொழுதுகள்; இம் முப்பொழுதுகளும் இறைவனை நினைந்து வழிபடுதற்கு உரிய பொழுதுகளாகலின், அவ்வாறு வழிபடுவார்க்கு, அப் பொழுதுகளின் தலைமைத் தெய்வங்களாய் நின்று அவரவர் விரும்பும் உலகின்பத்தையும் வீட்டின்பத்தையும் (புத்தி முத்திகளைத்) தருபவன் சிவபெருமான் ஒருவனே யாகலின், "அந்தியும் சந்தியும் ஆனார் தாமே" என்று அருளிச்செய்தார். "பொருள்" என்புழித் தொகுக்கப்பட்ட எண்ணும்மையை விரிக்க. உலகனைத்தும் சொல்லும் பொருளும் என்னும் இருகூற்றினுள்ளே அடங்கலின், 'சொல்லும் பொருளும் ஆகிய எல்லாப் பொருள்களும்' என்று அருளினர். இனி, "பொருள்" என்றது, பொருளுணர்வை எனக் கொள்ளுதலுமாம்.

தோத்திரம், இறைவனது புகழ்ப் பாடல்கள். சாத்திரம், இறைவனது இயல்பையும், அவனுக்கு அடிமையும் உடைமையும் ஆகிய உயிர் உலகங்களது இயல்பையும், ஐயமும் மருட்கையும்

Koviloor Digital Library

இன்றித் தெளிவிப்பன, அதனால், அவை இரண்டும் இறைவனையே பொருளாக உடைமையின். "தோத்திரமும் சாத்திரமும் ஆனார்" என்று அருளிச்செய்தார். அவையிரண்டனாலும் அஞ்ஞானந்தேய, ஞானம் மிகும் என்க. திருவள்ளுவ நாயனாரும்,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்பதனால் தோத்திரத்தினது இன்றியமையாமையையும்,

"ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு"

என்பதனால் சாத்திரத்தினது இன்றியமையாமையையும் உணர்த்தியருளினார். (குறள் - 5, 357.) "பல் உரைக்கும்" என்புழி, 'உரை' என்றது பொருளை. "உரைக்கும்" என்பதன்பின். 'உரிய' என ஒரு சொல் வருவிக்க. பா - பாட்டு. வீடுபற்றிய மெய்ந்நெறிச் செய்யுளும் நூலும் ஆகிய தோத்திர சாத்திரங்களேயன்றி 'அறம், பொருள், இன்பம்' என்பவை பற்றிய உலகியற் செய்யுளும் நூல்களுமாகிய அவைகளாய் நிற்பவரும் அவர்தாமே என்பார், 'பல் உரைக்கும் பாவெலாம் ஆனார் தாமே' என்று அருளிச்செய்தார். சிறப்புப் பற்றிப் பாட்டினை எடுத்தோதியருளினாராயினும், 'உரை எலாம் ஆனார்' என்பதும் கொள்ளப்படும். இவற்றுள், தோத்திர சாத்திரங்களாய் நிற்றல் இடையீடின்றி நேரே எனவும், பல்லுரைக்கும் உரிய பாவெலாம் ஆகி நிற்றல் 'அறம், பொருள், இன்பம்' என்னும் உறுதிப் பொருள்கள் வாயிலாக எனவும் கொள்க. ஆல் நிழல் இருந்து அறம் முதலிய நான்கனையும் நால்வர் முனிவர்கட்கு முதற்கண் உணர்த்தி, உலகியலும் மெய்ந்நெறியும் ஆகிய இரண்டனையும் தெரிவித்தருளிய முதல் ஆசிரியன் சிவபிரானே யாகலின், "செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே" என அருளிச்செய்தார்;

"அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ"

என்று அருளிச்செய்ததுங்காண்க. (திருவா. திருச்சாழல், 20).

Koviloor Digital Library

779 தொண்டாய்ப் பணிவார்க் கணியார் தாமே
தூநீ றணியுஞ் சுவண்டர் தாமே
தண்டா மரையானும் மாலுந் தேடத்
தழலுருவா யோங்கி நிமிர்ந்தார் தாமே
பண்டான இசைபாட நின்றார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
திண்டோள்க ளெட்டு முடையார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 6

780 மையாருங் கண்ட மிடற்றார் தாமே
மயானத்தி லாடல் மகிழ்ந்தார் தாமே
ஐயாறும் ஆரூரும் ஆனைக் காவும்
அம்பலமுங் கோயிலாக் கொண்டார் தாமே
பையா டரவ மசைத்தார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செய்யாள் வழிபட நின்றார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 7

779. தொண்டாய் - தொண்டராய். சுவண்டர் - சுவண்ணர் (நல்ல நிறம் உடையவர்) என்பதன் மரூஉ. 'பண்டான' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று; 'பண்டு ஆன (பழைமையான)' என்றாயினும், 'பண் தான (பண்களுக்குரிய தானங்களிலே - இடங்களிலே - பொருந்திய)' என்றாயினும் பிரித்துப் பொருள் கொள்க. இங்குக் கூத்தப்பெருமான் எட்டுத் தோள்களை உடையவராய் இருத்தல் நினைவு கூரத்தக்கது.

780. மை ஆரும் - கருமை நிறம் பொருந்திய. "மையாருங் கண்ட மிடறு" என்றதனை, "இடைச்சொற் கிளவி, உரிச்சொற் கிளவி" (தொல். சொல். 159.) என்பனபோலக் கொள்க. அம்பலம் - தில்லையம்பலம். ஐயாறு முதலிய நான்கும் சோழ நாட்டுத் தலங்கள். அம்பலத்தை நினைந்தருளியது, இத்தலத்திலும் பெருமான் ஆடும் பெருமானாய் நின்றருளுதலைக் கண்டு என்க. இங்குள்ள அம்பலம் அரதன அம்பலமாகும். செய்யாள் - திருமகள்; இவள், இந்திரனால் தலையற்று வீழ்ந்த தன் கணவன் திருமாலை உயிர்ப்பித்துத் தரவேண்டிச் சிவபிரானை வழிபட்டு, அவ்வேண்டுதல் நிறைவுறப் பெற்றாள் என்பது திருவாரூர்த் தல வரலாறு.

Koviloor Digital Library

781 விண்முழுதும் மண்முழுது மானுர் தாமே
மிக்கோர்க ளேத்துங் குணத்தார் தாமே
கண்விழியாற் காமனையுங் காய்ந்தார் தாமே
காலங்க ளூழி கடந்தார் தாமே
பண்ணியலும் பாட லுகப்பார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
திண்மழுவாள் ஏந்து கரத்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 8

782 காரார் கடல்நஞ்சை யுண்டார் தாமே
கயிலை மலையை உடையார் தாமே
ஊராஏ கம்ப முகந்தார் தாமே
ஒற்றியூர் பற்றி யிருந்தார் தாமே
பாரார் புகழப் படுவார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தீராத வல்வினைநோய் தீர்ப்பார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 9

781. மிக்கோர்கள் - உயர்ந்தவர்கள்; அவர்கள் அவரது குணத்தை ஏத்துதல் அவை பிறரிடத்து இல்லாத பேரருட் குணங்களாதல் பற்றி. விழியால் - விழித்தற் செயலால். 'காலங்களாகிய ஊழிகள் பலவற்றைக் கடந்தார்' என்க. பண் இயலும் பாடல் - பண்கள் உலாவும் பாடல்கள்.

782. கார் ஆர் - கருமை பொருந்திய; 'மேகங்கள் உண்கின்ற' என்றுமாம். 'ஒற்றியூர் பற்றி இருந்தார்' என்றது, 'தமக்கு உரித்தல்லாது ஒற்றியாகப் பெற்ற ஊரை நிலையாகப் பற்றியிருக்கின்றார்' என்னும் நயந்தோற்றி நின்றது. வினை, எளிதில் பிறிதொன்றால் நீங்குவதன்றாகலின், "தீராத வல்வினை நோய்" என்று அருளினார்.

Koviloor Digital Library

783 மாலைப் பிறைசென்னி வைத்தார் தாமே
வண்கயிலை மாமலையை வந்தி யாத
நீலக் கடல்சூ ழிலங்கைக் கோனை
நெரிய விரலா லடர்த்தார் தாமே
பாலோத்த மேனி நிறத்தார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
சீலத்தா ரேத்துந் திறத்தார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

783. மாலைப் பிறை - மாலைக் காலத்தில் தோன்றும் பிறை. வந்தியாத - வணங்காத. அடர்த்தார் - வருத்தினர். 'பாலொத்த நிறத்தார்' என இயையும். மேனி நிறம் - மேனியது நிறம். 'மேனி பாலொத்த நிறத்தார்' என மாற்றி உரைப்பினும் ஆம். இந்நிறம் ; திருநீற்றினால் ஆயது என்க. சீலத்தார் - ஒழுக்க முடையவர் ; அவர்கட்கே சிவபிரானது அறக் கருணை உரியது ஆகலின், அவன் அவர்கள் ஏத்தும் திறம் உடையனாயினன் என்க.

சார்ந்தார்தம் புகலிடத்தைத் தான்றோன்றி மாடத்துக்
கூர்ந்தார்வ முறப்பணிந்து கோதிறமிழ்த் தொடைபுனைந்து
வார்ந்தாடுஞ் சடையார்தம் பதிபலவும் வணங்கியுடன்
சேர்ந்தார்க டம்பெருமான் றிருவீழி மிழலையினை. 249

வீழி மிழலை வந்தணையு மேவு நாவுக் கரசினையுங்
காழி ஞானப் பிள்ளையையுங் கலந்த வுள்ளக் காதலினால்
ஆழி வலவ னறியாத வடியா ரடியா ரவர்களுடன்
வாழி மறையோ ரெதிர்கொண்டு வணங்க வணங்கி யுள்புக்கார்.

மாடவீதி யலங்கரித்து மறையோர் வாயின் மணிவிளக்கு
நீடுகதலி தழைப்பூகம் நிரைத்து நிறைபொற் குடமெடுத்துப்
பீடுபெருக வாகீசர் பிள்ளை யாருந் தொண்டர்களுங்
கூட மகிழ்ந்து விண்ணிழிந்த கோயில் வாயில் சென்றணைந்தார்

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

79. திருத்தலையாலங்காடு

திருப்பதிக வரலாறு

நாயனார், திருவீழிமிழலை, திருவாஞ்சியம் தொழுது திருமறைக்காடு செல்பொழுதில் புனிதர்வாழ் பதிகள் பல வணங்கி அருளியவற்றுள் ஒன்று இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 263.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

784 தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சூழ்நரகில் வீழாமே காப்பான் தன்னை
அண்டத்துக் கப்பாலைக் கப்பா லானை
ஆதிரைநா ளாதரித்த அம்மான் தன்னை
முண்டத்தின் முளைத்தெழுந்த தீயா னானை
மூவுருவத் தோருருவாய் முதலாய் நின்ற
தண்டத்திற் றலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 1

இத் திருப்பதிகம், சிவபெருமானது பெருமைகளைத் தனித் தனி நினைந்து. அப் பெருமானை அடையாது பலநாட்களை வீணே போக்கினமைக்கு இரங்கி அருளிச்செய்தது.

784. தூநெறியாய் நிற்றல் - தன்வழி நிற்றலே நன்னெறியாகச் செய்து நிற்றல். சூழ்நரகில் வீழாமே காத்தலும் தொண்டரையேயாம். 'அண்டத்துக்கு அப்பாற்பட்ட பொருள் உயிர்; அதற்கும் அப்பாற்பட்டபொருள் சிவபிரான்' என்க. ஆதரித்த-விரும்பிய. முண்டம் - நெற்றி. நெருப்பு சிவபிரானது நெற்றிக் கண்ணில் தோன்றிற்று ஆகலான், "முண்டத்தின் முளைத் தெழுந்த தீயானான்" என்று அருளிச்செய்தார். மூவுருவம் - அயன் அரி அரன் உருவம்; அவற்றுள் ஓர் உருவமாய் என்றது, அரனாகி நிற்றலை. முதலாய் - அம் மூவுருவிற்கும் முதலாய்: என்றது, பரம சிவனாகி நிற்றலை. 'மூவுருவத்து ஓர் உருவாயும் முதலாயும் நின்ற தலையாலங்காடன்' என்க. தண்டத்தின் - இலிங்க உருவத்தினை உடைய.

Koviloor Digital Library

785 அக்கிருந்த அரையானை அம்மான் தன்னை
அவுணர்புர மொருநொடியில் எரிசெய் தானைக்
கொக்கிருந்த மகுடத்தெங் கூத்தன் தன்னைக்
குண்டலஞ்சேர் காதானைக் குழைவார் சிந்தை
புக்கிருந்து போகாத புனிதன் தன்னைப்
புண்ணியனை யெண்ண ருஞ்சீர்ப் போகமெல்லாந்
தக்கிருந்த தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 2

786 மெய்த்தவத்தை வேதத்தை வேத வித்தை
விளங்கிளமா மதிசூடும் விகிர்தன் தன்னை
எய்த்தவமே உழிதந்த ஏழை யேனை
யிடர்க்கடலில் வீழாமே யேற வாங்கிப்
பொய்த்தவத்தா ரறியாத நெறிநின் றானைப்
புனல்கரந்திட் டுமையோடொரு பாகம் நின்ற
தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 3

785. அக்கு - சங்குமணி. "கொக்கு" என்றது, அதன் இறகை. மகுடம் - (சடை) முடி. குண்டலம் - குழை. குழைவார் - உள்ளம் உருகுபவர். சீர்ப் போகம் - செல்வத்தால் ஆகும் இன்பம். தக்கிருந்த - வாய்ந்து இருந்த; என்றது, 'எல்லா இன்பங்களும் இறைவனையே பற்றிநிற்பன' என்றவாறும்; இனி, இதனைத் தலையாலங்காட்டிற்கு அடையாக்கலும் ஆம்.

786. சிவபிரானது பணிகளே உண்மைத் தவமாதலின், அப் பணிகளைப் புரியுமாறு நிற்கும் அவனை, "மெய்த்தவம்" என்று அருளினர். வேத வித்து - வேதத்திற்குக் காரணன்; முதல்வன். "எய்த்து அவமே உழிதந்த" என்றாரேனும், 'அவமே உழிதந்து எய்த்த' என்பதே திருவுள்ளமாகக்கொள்க. எய்த்தது, உடலை வருத்தியதன்றிப் பிறிது பயன் காணாதொழிந்தது. பொய்த்தவத்தார் - இறைவனுண்மை கொள்ளாது பிற சில செயல்களை மேற்கொள்பவர்; அவர் சமணரும் சாக்கியரும் என்க. 'நிற்பித்தானை' எனற்பாலது, "நின்றானை" எனப் பட்டது. "புனல்" என்பது, 'கங்கையாள்' என்னும் பொருளது.

Koviloor Digital Library

787 சிவனாகித் திசைமுகனாய்த் திருமா லாகிச்
சேழுஞ்சுடராய்த் தீயாகி நீரு மாகிப்
புவனாகிப் புவனங்க ளனைத்து மாகிப்
பொன்னாகி மணியாகி முத்து மாகிப்
பவனாகிப் பவனங்க ளனைத்து மாகிப்
பசுவேறித் திரிவானோர் பவனாய் நின்ற
தவனாய தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 4

788 கங்கையெனுங் கடும்புனலைக் கரந்தான் தன்னைக்
காமருபூம் பொழிற்கச்சிக் கம்பன் தன்னை
அங்கையினில் மான்மறியோன் றேந்தி னானை
ஐயாறு மேயானை ஆரூ ரானைப்
பங்கமிலா அடியார்க்குப் பரிந்தான் தன்னைப்
பரிதிநிய மத்தானைப் பாசூ ரானைச்
சங்கரனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 5

787. 'சிவனாகி' என்றது, 'உருத்திரனாகி' என்றபடி. "சுடர்" என்றது ஞாயிற்றையும் திங்களையும். புவன் - புவலோக மாய் உள்ளவன்; இது பூலோகத்தை அடுத்து நிற்றலின் வேறு ஓதியருளினார். "பொன்னாகி" முதலிய மூன்றனாலும், 'செல்வ மாய் உள்ளவன்' என்றவாறு. பவன் - வேண்டும் இடங்களில் வேண்டியவாறே தோன்றுபவன். திரிவான் ஓர் பவன் - திரிபவனாகிய ஒரு கோலத்தை யுடையவன். 'நின்ற தலையாலங்காடன்' என இயையும். தவன் - தவக்கோலம் உடையவன்.

788. "கடும்புனலைக் கரந்தான்" என்றது, அது கரக்க லாகா ஆற்றலது என்பது உணர்த்துதற்கு. காமரு - அழகிய. 'விரும்பத் தக்க' என்றுமாம். ஐயாறு, ஆரூர், பரிதிநியமம் இவை சோழநாட்டுத் தலங்கள். பாசூர். தொண்டைநாட்டுத் தலம். பங்கம் - குறைபாடு; குற்றம். பரிந்தான் - இரங்கினான்;

Koviloor Digital Library

789 விடம்திகழும் அரவரைமேல் வீக்கி னானை
விண்ணவர்க்கு மெண்ணரிய அளவி னானை
அடைந்தவரை அமருலகம் ஆள்விப் பானை
அம்பொன்னைக் கம்பமா களிறட் டானை
மடந்தையொரு பாகனை மகுடந் தன்மேல்
வார்புனலும் வாளரவும் மதியும் வைத்த
தடங்கடலைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 6

790 விடையேறிக் கடைதோறும் பலிகோள் வானை
வீரட்டம் மேயானை வெண்ணீற் றானை
முடைநாறு முதுகாட்டி லாட லானை
முன்னானைப் பின்னானை யந்நா ளானை
உடையாடை யுரிதோலே உகந்தான் தன்னை
உமையிருந்த பாகத்து ளொருவன் தன்னைச்
சடையானைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 7

789. வீக்கினான் - கட்டினான். எண்ணரிய அளவினான் - அளத்தற்கரிய அளவினையுடையவன் ; என்றது, 'அளவின்மை யுடையனாகலின், யாவராலும் அளத்தற்கரியவன்' என்றபடி. 'அளவிலான்' என்பதும் பாடம். 'அமரர் உலகம்' என்பது குறைந்து நின்றது. கம்பம் - அசைதல். அட்டான் - அழித்தான். மகுடம் - சடைமுடி. வார் புனல் - ஒழுகும் நீர். வாளரவு - கொடிய பாம்பு. தடங்கடல், அடையடுத்த உவமையாகுபெயர்.

790. கடைதோறும் - வாயில்கள்தோறும். பலி - பிச்சை. "வீரட்டம்" என்ற பொதுமையால், எட்டனையும் கொள்க. முதுகாடு - சுடுகாடு. முன் - இறந்தகாலம். பின் - எதிர்காலம். அந்நாள் - நிகழ்காலம். உடை - அரையில் உடுக்கப்படுவது. ஆடை - மேலே இடப்படுவது. 'இவை இரண்டனையும், புலியையும் யானையையும் உரித்த தோலேயாக விரும்பினான்' என்க. "உள் ஒருவன்" என்றதனை, 'உள் பொருள்' என்பது போலப் பண்புத்தொகையாகக்கொள்க. பாகத்து உள் ஒருவன் - பாகத்தோடு உள்ள ஒருவன்.

Koviloor Digital Library

791 கரும்பிருந்த கட்டிதனைக் கனியைத் தேனைக்
கன்றுப்பின் நடுதறியைக் காறை யானை
இரும்பமர்ந்த மூவிலைவேல் ஏந்தி னானை
யென்னானைத் தென்னானைக் காவான் தன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றை சூடி னானைத்
தூயானைத் தாயாகி உலகுக் கெல்லாந்
தரும்பொருளைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 8

792 பண்டளவு நாம்போசைப் பயனைப் பாலைப்
படுபயனைக் கடுவெளியைக் கனலைக் காற்றைக்
கண்டளவிற் களிகூர்வார்க் கெளியான் தன்னைக்
காரணனை நாரணனைக் கமலத் தோனை
எண்டளவி லென்னெஞ்சத் துள்ளே நின்ற
எம்மானைக் கைம்மாவி னுரிவை பேணுந்
தண்டரனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 9

791. கரும்பு இருந்த - கரும்பின்கண் இருந்த; என்றது, 'சாற்று வடிவாய் இருந்த' என்றவாறு. "கன்றுப்பின் நடுதறி, காறை" என்பவற்றை மேலே (பக். 438. 30.) காண்க. இரும்பு அமர்ந்த - இரும்பு பொருந்திய; இஃது உருவ நிலையை விளக்கியது. என்னான் - எனக்கு முதல்வன். ஆனைக்கா, சோழநாட்டுத் தலம். சுரும்பு-வண்டு. 'உலகுக்கெல்லாம் நலம் தரும் பொருள்' என்க.

792. பண்டு அளவு - தொன்று தொட்டு வரும் அளவு; என்றது, இசை இலக்கணத்தை. படு பயன் - பாலின்கண் பொருந்திய பயன்; சுவை. கடு வெளி - பெரிய வானம். 'கண்ட அளவில்' என்பதில் அகரம் தொகுத்தலாயிற்று. மெய்யன்புடையார் பிறிது பயன் வேண்டாது காட்சியையே விரும்பி நிற்பராகலின், அவரே கண்ட அளவிற் களிகூர்வார் என்க. காரணன் - முதல்வன். அதிகார சத்தியால் நாரணனாகியும் கமலத்தோனாகியும் நிற்பவன் என்றதாம். எண்டளம் - எட்டுத் தளம்; தளம் - இதழ், 'எட்டிதழ்த் தாமரை வடிவில் உள்ள இல்லமாகிய என் நெஞ்சம்' என்க. 'இருதய கமலம்

Koviloor Digital Library

793 கைத்தலங்க ளிருபதுடை அரக்கர் கோமான்
கயிலைமலை அதுதன்னைக் கருதா தோடி
முத்திலங்கு முடிதுளங்க வளைக ளேற்றி
முடுகுதலுந் திருவிரலோன் றவன்மேல் வைப்பப்
பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிந்தவனுக் கிராணவனென் றீந்த நாமத்
தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 10

திருச்சிற்றம்பலம்

எட்டிதழ்த் தாமரை வடிவிற்று' என்பது, மெய்ந்நூல்களின் துணிபு. தண்டு அரன் - இலிங்க வடிவாய் உள்ள சிவபிரான்; 'துன்பத்தை நீக்குகின்ற உருத்திரன்' என்றுமாம். இனி, 'பண்ணளவு, எண்ணளவு, தண்ணரன்' என்பன. எதுகை நோக்கித் திரிந்தன என்றலுமாம்.

793. அது, பகுதிப் பொருள் விகுதி. தன், சாரியை. கருதாது - ஆராயாது. முடி - மகுடம். "துளங்க" என்புழி, 'அசைத்து' என ஒரு சொல் வருவிக்க. வளைகள் - தோள் வளைகள். அவைகளை 'எற்றி' என்றது, 'தோள்களைப் புடைத்துக்கொண்டு' என்றவாறு. முடுகுதல் - விரைதல்; அது, விரைந்து எடுத்த செயல்மேல் நின்றது. 'அவன் மேல் ஆக' என ஆக்கம் வருவித்து, 'வைப்பு அவன் மேலதாகும்படி' என உரைக்க. வைப்ப - ஊன்ற. பாடல் - இசை பாடுதல். பரிந்து - இரங்கி. "ஈந்த நாமத் தத்துவன்" என்று அருளினாராயினும், 'நாமம் ஈந்த தத்துவன்' என்றலே திருவுள்ளம் என்க. நாமம் - பெயர். 'இராவணன்' என்னும் பெயர், 'அழுதவன்' என்னும் பொருளுடையதாய், அவன் அஞ்ஞான்று அடைந்த துன்பத்தினை என்றும் நினைப்பித்து நின்றமை யறிக.

சென்றுள் புகுந்து திருவீழி மிழலை யமர்ந்த செங்கனகம்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் வலமா வந்துதிரு
முன்றில் வணங்கி முன்னெய்தி முக்கட் செக்கர்ச் சடைமவுலி
வென்றி விடையார் சேவடிக்கீழ் விழுந்தா ரெழுந்தார் விம்மினர்.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

80. திருமாற்பேறு

திருப்பதிக வரலாறு

நாயனர், காஞ்சியில் கச்சித்திருமேற்றளி வணங்கித் திருமாற்பேறு சென்று தொழுது பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 327.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

794 பாரானை பாரினது பயனு ஞனைப்
படைப்பாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தங்கட்
கனைத்துலகு மாஞனை அமரர் கோனைக்
காராருங் கண்டனைக் கயிலை வேந்தைக்
கருதுவார் மனத்தானைக் காலற் செற்ற
சீரானைச் செல்வனைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன் றினைச்சென் றடைந்தேன்நானே.

இத் திருப்பதிகம் மேலைத் திருப்பதிகம்போல இறைவனது பெருமைகளைத் தனித்தனி நினைந்து, அவனையடையப் பெற்ற பேற்றின் அருமையை வியந்தருளிச்செய்தது.

794. பார் - பூமி. பயன் வித்துக்களின் விளைவைத் தருதல். படைப்பு ஆகி - படைத்தல் தொழிலே தானுய் அதன்கண் நின்று. 'படைப்பானை' என்பதும் பாடம். பரிவோன் - இரங்குவோன். ஆராத - தெவிட்டாத. 'அடியார்கட்கு அமுதை' என்க. சீர் - புகழ்; அது, மார்க்கண்டேயரைக் காத்து, என்றும் பதினுறு வயதினராய் இருக்க அருளியதனுல் ஆகியது. "நானே" என்னும் பிரிநிலை ஏகாரம், தாம் அடைதற்கு அரிதாதல் விளக்கி நின்றது. "செம்பவளக் குன்று" என்றது; உவமையாகு பெயர்.

Koviloor Digital Library

795 விளைக்கின்ற நீராகி வித்து மாகி
விண்ணோடுமண் ணாகி விளங்கு செம்பொன்
துளைக்கின்ற துளையாகிச் சோதி யாகித்
தூண்டரிய சுடராகித் துளக்கில் வான்மேல்
முளைக்கின்ற கதிர்மதியும் அரவு மொன்றி
முழங்கொலிநீர்க் கங்கையோடு மூவா தென்றுந்
திளைக்கின்ற சடையானைத் திருமாற் பெற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென் றடைந்தேன்நானே.

796 மலைமகள்தங் கோனவனை மாநீர் முத்தை
மரகதத்தை மாமணியை மல்கு செல்வக்
கலைநிலவு கையானைக் கம்பன் தன்னைக்
காண்பினிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை

795. விளைக்கின்ற நீர் - வித்துக்களைப் பதப்படுத்தியும், பின்னர் அவற்றினின்றும் தோன்றும் முளைகளை வளர்த்தும் பயன்தரச்செய்கின்ற நீர்; இதனை எடுத்தோதியது, அவன் உலகிற்குச் செய்துவரும் நலத்தினது சிறப்பு, அதனை மறவாது ஊன்றி உணர்வார்க்கே புலனாவதாதலை நினைந்து என்க. "விளைக்கின்ற நீராகி" என்றதனால், 'விளைகின்ற வித்துமாகி' என்பதும் போதரும். 'செம்பொற்றுளை' என இயையும்; ஈண்டு. 'துளை' என்றது பொன்னின் பொருட்டு அகழப்படும் நிலச் சுருங்கத்தை; இதனை, 'ஆகரம்' என்ப. 'இது, தன்னை அடைந் தார்க்கு நிரம்பிய செல்வத்தைக் கொடுப்பதுபோல, இறைவன் தன்னை அடைந்தார்க்குப் பெருநலத்தைத்தருபவன்' என்பதாம், "துளைக்கின்ற" என்றதும். 'அகழ்கின்ற' என்றவாறேயாம், "தூண்டரிய" என்பதில் அருமை, இன்மை குறித்து நின்றது. 'தூண்டுதல் வேண்டாத சுடர்' (விளக்கு) என்றபடி. துளக்கு இல் வான் - அசைதல் இல்லாத வானம்; எல்லாப் பொருளும் தன்னிடத்தே போக்கு வரவு புரிய, தான் போக்கு வரவு இன்றி நிற்றலின், "துளக்கில் வான்" என் றருளினார். கதிர் - ஒளி. மூவாது - மூப்படையாது. திளைக்கின்ற - விளையாடி மகிழ்கின்ற. 'மதியும் அரவும் ஒன்றி என்றும் மூவாது நின்று கங்கையொடு திளைக்கின்ற' என்க. இனி, ஒடு உருபைக் கண்ணுருபாகத் திரித்தலுமாம். அன்றி, ஒடுவை, 'எண் ஒடு' என்றலுமாம்.

796, மா நீர்-மிக்க நீர்; இஃது, அன்மொழித்தொகையாய், கடலைக் குறித்தது. மா மணி - பெருமை பொருந்திய மணி;

Koviloor Digital Library

விலைபெரிய வெண்ணீற்று மேனி யானை
மெய்யடியார் வேண்டுவதே வேண்டு வானைச்
சிலைநிலவு கரத்தானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன் றினைச்சென் றடைந்தேன்நானே.

797 உற்றானை யுடல்தனக்கோர் உயிரா னானை
ஓங்காரத் தொருவனையங் குமையோர் பாகம்
பெற்றானைப் பிஞ்ஞகனைப் பிறவா தானைப்
பெரியனவும் அரியனவும் எல்லாம் முன்னே
கற்றானைக் கற்பனவுந் தானே யாய
கச்சியே கம்பனைக் காலன் வீழச்
செற்றானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன் றினைச்சென் றடைந்தேன்நானே.

மாணிக்கம். கலை - மான். மல்கு - மிக்க; 'மிக்க செல்வமாகிய கலை நிலவு கையான்' என்றது, மான் கன்றையே மிக்க கைப்பொருளாக உடையவன்' என்றபடி. கம்பன் - கச்சி ஏகம்பன். காண்பு இனிய - காட்சிக்கு இனிய. கனகம் - பொன். "விலை பெரிய" என்றது 'சிறிதும் விலைபெறாத' என்பதனை எதிர்மறைவகையால் நகைதோன்ற அருளிச்செய்தவாறு. ஒன்றும் அறியாது உரைத்தவரை, 'நீயிர் பெரிதும் அறிதிர்' என்றல்போல. இவை இரண்டானும், சிவபிரானது பற்றற்ற தன்மையை வியந்தருளியவாறு. "மெய்யடியார் வேண்டுவதே வேண்டுவான்" என்றது, 'பிறராயின், அவர் ஒன்று நினைக்கத்தான் வேறொன்று நினைத்தல் போலாது, மெய்யடியார் கருதியதையே தானும் கருதி முடித்தருளுவன்' என்றதாம்; இஃது. "என்னை ஆண்டருளினீராகில் அடியேன் பின் வந்தவனை ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாளவேண்டும்" எனத் திருவதிகையில் திலகவதியாரும், "வண்ணங்கண்டு நானும்மை வணங்கியன்றிப் போகேன்" எனப் பழையாறை வடதளியில் நாயனாரும், "அடியேற்கு இன்று ஞாலம் நின் புகழேயாகவேண்டும்" என ஆலவாயில் ஆளுடைய பிள்ளையாரும் வேண்டியவற்றையே தானும் வேண்டி முடித்தமை முதலியவற்றால் இனிது விளங்கிக் கிடந்தமை காண்க. சிலை - மேருமலையாகிய வில்.

797. உற்றான் - உறவானவன். உடல் தனக்கு - உடம்பு நிலைபெறுதற் பொருட்டு: உயிராகி அதன்கண் நிற்பவன்

Koviloor Digital Library

798 நீறாகி நீறுமிழும் நெருப்பு மாகி
நினைவாகி நினைவினிய மலையான் மங்கை
கூறாகிக் கூற்றாகிக் கோளு மாகிக்
குணமாகிக் குறையாத உவகைக் கண்ணீர்
ஆறாத ஆனந்தத் தடியார் செய்த
அனாசாரம் பொறுத்தருளி அவர்மே லென்றுஞ்
சீறாத பெருமானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென் றடைந்தேன்நானே.

என்க. ஓங்காரத்து ஒருவன் - ஓங்காரத்தின் முழுப்பொருள் தான் ஒருவனே யாகியவன். 'உமையது ஒரு பாகத்தைப் பெற்றான்' என்க. எல்லாம் - எல்லாப் பொருள்களையும். "முன்னே கற்றான்" என்றது. 'யாவர்க்கும் முன்னே தான் உணர்ந்தான்' என்றவாறு. 'கற்பனவும் தானே ஆயினான்' என்றது, 'கற்றவனாகிய தானே கற்கப்படும் பொருளுமாய் உள்ளான்' என்றதாம். திகழ் ஒளி - தானே விளங்கும் ஒளி.

798. நீறு - சாம்பல்; இஃது உலகம் ஒடுங்கிய நிலையையும், "நீற்றை உமிழும் நெருப்பு" என்றது, உலகத்தை ஒடுக்குவதாகிய அவனது சத்தியையும், "நினைவு" என்றது உலகத்தை மீளப் படைக்கும் அவனது சங்கற்பத்தையும், "கூறாகி" என்றது, அச்சங்கற்பத்தின் வழியே படைக்கும் நிலையையும், "கூற்றாகி (கூற்றுவனாகி)" என்றது, வினைகளை ஊட்டுவித்தலையும், "கோளுமாகிக் குணமாகி" என்றது, தீயனவும் நல்லனவுமாய் நிற்கும் அவ்வினைகளுந் தானேயாய் நிற்றலையும், குறிக்கும் என்க. "உவகை" என்றது, அன்பினை. ஆறாத - நீங்காத, ஆனந்தத்து (அவ்வன்பினால் வரும்) இன்ப மேலீட்டினால், 'ஆசாரம்' என்னும் வடசொல், தமிழில் பெரும்பான்மையும் புறத்தூய்மையையே குறித்து வழங்கும் என்பது, "அச்சமே கீழ்கள தாசாரம்" (குறள் - 1075.) என்பதனால் அறியப்படும்; அதனால், இங்கு "அனாசாரம்" என்றது. அறியாமையாலும் மாட்டாமையாலும். செயல் இழப்பினாலும் மனத்தொடு படாது செய்யும் சிறு குற்றங்களையே யாம் என்பது விளங்கும்.

Koviloor Digital Library

799 மருவினிய மறைப்பொருளை மறைக்காட் டானை
மறப்பிலியை மதியேந்து சடையான் தன்னை
உருநிலவு மொண்சுடரை உம்ப ரானை
உரைப்பினிய தவத்தானை உலகின் வித்தைக்
கருநிலவு கண்டனைக் காளத்தியைக்
கருதுவார் மனத்தானைக் கல்வி தன்னைச்
செருநிலவு படையானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென் றடைந்தேன்நானே.

800 பிறப்பானைப் பிறவாத பெருமை யானைப்
பெரியானை அரியானைப் பெண்ஆண் ஆய
நிறத்தானை நின்மலனை நினையா தாரை
நினையானை நினைவோரை நினைவோன் தன்னை
அறத்தானை அறவோனை ஐயன் தன்னை
அண்ணல்தனை நண்ணரிய அமர ரேத்துந்
திறத்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென் றடைந்தேன்நானே.

799. மருவு இனிய - பொருந்துதற்கு இனிய. 'இனிய பொருள்; மறைப்பொருள்' என்க. மறப்பு - மலத்தால் உளதாவதாதலின், மலம் இலனாகிய இறைவனுக்கு மறப்பு இலதாயிற்று; அதனால் - அவன் எல்லாவற்றையும் அறிந்தாங்கு அறிந்து நிற்பன் என்க. உரு - நிறம். உம்பரான் - மேலிடத்து உள்ளவன். உரைப்பு இனிய தவத்தான் - 'பேசுதற்கு இனிய வன்; தவக்கோலத்தை உடையவன்' என்க. "வித்து" என்றது. 'காரணம்' என்னும் பொருளது. 'உலகில் வித்தை' என்பது பாடம் அன்று. 'கருமை' என்பது கரு எனக் குறைந்து நின்றது. மறைக்காடு, சோழநாட்டுத் தலம். காளத்தி. தொண்டைநாட்டுத் தலம். காளத்தியில் உள்ளவனை, "காளத்தி" என ஆகுபெய ரால் குறித்தருளினார் என்க. கல்வி - உறுதிப் பொருளைக் கூறும் நூல்கள்; அவற்றின் பொருளாய் நிற்றல் பற்றி. "கல்வி" என்றருளினார். படை - படைக்கலம்; மழு, சூலம் முதலியன.

800. "பிறப்பான்" என்பது, "பிறப்பு" என்னும் பெய ரடியாகப் பிறந்த பெயர். 'பலவகைப் பிறப்புக்களாயும் உள்ள வன்' என்பது பொருள். "நிறம்" என்றது, வடிவத்தை. பெண் ஆண் ஆய வடிவம் - மாதிருக்கும் பாதியனாய வடிவம்.

Koviloor Digital Library

801 வானகத்தில் வளர்முகிலை மதியந் தன்னை
வணங்குவார் மனத்தானை வடிவார் பொன்னை
ஊனகத்தில் உறுதுணையை உலவா தானை
ஒற்றியூர் உத்தமனை ஊழிக் கன்றைக்
கானகத்துக் கருங்களிற்றைக் காளத் தியைக்
கருதுவார் கருத்தானைக் கருவை மூலத்
தேனகத்தி லின்சுவையைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன் றினைச்சென்றடைந்தேன்நானே.

"நினைவான், நினையான்" என்பன 'தன் தமராக நினைவான், நினையான்' என்பதாம். அறத்தான் - அறமேயாய் நின்று அதனை நிலைபெறுவிப்பவன். அறவோன் - அறத்தினை உடைய வனாய் நல்லதற்கு நலனும், தீயதற்கும் தீமையும் அளிப்பவன். ஐயன் - வியக்கத் தக்கவன். அண்ணல் - தலைவன்.

801. வளர் - மிகுகின்ற; இதனை மதிக்குங் கூட்டுக. "முகில், மதி, சுவை" என்பன உவமையாகு பெயர்கள். "முகில்" என்றது, கைம்மாறு கருதாது உதவுங் கடப்பாடு உடைமை பற்றியும், "மதி" என்றது, அகவிருளைச் சிறிது சிறிதாக நீக்கி இறுதியில் முற்றும் நீக்குதல் பற்றியும் "தேனகத்தில் இன்சுவை" என்றது, பேரின்பஞ் செய்தல் பற்றியும் என்க. வடிவு - அழகு. ஊன் - உடம்பு, உயிர் உடம்பொடு கூடித் தொழிற்படுங்கால், அத்தொழிற்பாட்டிற்கு இறைவன் உடனாய் நின்று உதவி வருதல் பற்றி, "ஊனகத்தில் உறுதுணை" என்று அருளினார். உலவா தான் - அழியாதவன். ஒற்றியூர், காளத்தி தொண்டை நாட்டுத் தலங்கள். "காளத்தி" என்றதற்கு மேல் (799) உரைத்தவாறே உரைக்க. ஊழிக்கு அன்று - ஊழிக்கு ஊழி; 'அன்று' என்னும் இடைச்சொல் பெயர்த்தன்மைத்தாய் நின்று இரண்டனுருபு ஏற்றது. கருங்களிறு - யானை; என்றது காதல் பற்றி. "வான கத்து வளர் முகில்" என்றாற்போல. "கானகத்துக் கருங்களிறு" என்றதும், அதன் தன்மையை விதந்தருளிச் செய்தவாறு. 'மூலக் கருவை' என மாற்றி, 'முதல் முதலினை' என உரைக்க. தோற்றம் எய்தியவற்றுள்ளும், தம்மால் தோன்றுவன வற்றை நோக்கத் தாம் முதல் எனப்பட்டு வழிநிலை முதலாய் நிற்பனவும் சில உளவாதல்பற்றி, ஒன்றாலும் தோன்றாது, எல்லாவற்றின் தோற்றத்திற்கும் தானே முதலாய் நிற்கும் இறைவனை, 'முதல் முதல்' என்று அருளிச்செய்தார்.

Koviloor Digital Library

802 முற்ருத முழுமுதலை முளையை மோட்டை
முழுமலரின் மூர்த்தியை முனியா தென்றும்
பற்ருகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னைப்
பராபரனைப் பரஞ்சுடரைப் பரிவோர் நெஞ்சில்
உற்ருனை உயர்கருப்புச் சிலையோன் நீருய்
ஒள்ளழல்வாய் வேவவுறு நோக்கத் தானைச்
செற்ருனைத் திரிபுரங்கள் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன் றினைச்சென் றடைந்தேன்நானே.

803 விரித்தானை நான்மறையோ டங்க மாறும்
வேற்பெடுத்த இராவணனை விரலா லூன்றி
நெரித்தானை நின்மலனை யம்மான் தன்னை
நிலாநிலவு செஞ்சடைமேல் நிறைநீர்க் கங்கை
தரித்தானைச் சங்கரனைச் சம்பு தன்னைத்
தரியலர்கள் புரமூன்றுந் தழல்வாய் வேவச்
சிரித்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக்குன் றினைச்சென் றடைந்தேன்நானே.

திருச்சிற்றம்பலம்

802. முற்ருத முதல் - இளையவேர். முழுமுதல் - அனைத்து வேர். மொட்டு - அரும்பு. முழு மலர், மலர்ந்த மலர். "மலரின்" என்னும் இன், வேண்டாவழிச் சாரியை; 'மலராம் மூர்த்தி' என்பதே பொருள். 'பல்லுயிர்க்கும் பற்ருகிப் பரிவோன்' என்க. பற்று - துணை. பரிவோன் - இரங்குவோன். "பற்ருகிப் பரிவோன்" என்றதனை, 'ஓடி வருபவன்' என்பது போலக் கொள்க. பரஞ்சுடர் - மேலான ஒளி. பரிவோர் - அன்பு செய் வோர். உற்ருன் - பொருந்தியிருப்பான். உறு நோக்கம் - உற்ற நோக்கம்; பார்த்த பார்வை. இங்குப் பிறவாறு ஓதுவன பாடம் அல்ல என்க.

803. அம்மான் - தலைவன். சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். சம்பு - இன்பத்தை உண்டாக்குபவன். தரியலர்கள் - பகைவர்கள்.

Koviloor Digital Library

81. திருக்கோடிகா

திருப்பதிக வரலாறு

நாயனர், துருத்தி, வேள்விகுடி, எதிர்கொள்பாடி முதலான பல பதிகளை வணங்கி ஆவடுதண்டுறை செல்பொழுதில் திருக்கோடிகா வணங்கிப் பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக். பு. 190.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

804 கண்டலஞ்சேர் நெற்றியிளங் காளை கண்டாய்
கல்மதில்சூழ் கந்தமா தனத்தான் கண்டாய்
மண்டலஞ்சேர் மயக்கறுக்கும் மருந்து கண்டாய்
மதிற்கச்சி யேகம்பம் மேயான் கண்டாய்
விண்டலஞ்சேர் விளக்கொளியாய் நின்றான் கண்டாய்
மீயச்சூர் பிரியாத விகிர்தன் கண்டாய்
கொண்டலஞ்சேர் கண்டத்தெங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 1

இத் திருப்பதிகம், 'கண்டாய்' என்னும் முடிபுடைய தொடர்களால் இறைவன் பெருமைகளை வகுத்தருளிச்செய்தது.

804. 'கைத் தலம்' என்பது போல, 'கண்டலம்' என்பது இரு பெயரொட்டு: தலம் வடசொல்லாதலின் ணகரம் திரியாது நிற்றலும் பொருந்துவதாயிற்று; விண்டலம் என்பதும் அன்னது. 'நெற்றித் தலம்' என மாறிக் கூட்டுதலும் ஆம். கட்டிளமை வடிவமும் சிவபிரானுக்கு உண்மையின், "இளங் காளை" என்று அருளினர். "கல்" என்றது, பக்க மலைகளை; எனவே, "கல் மதில்' என்றது, உருவகமாயிற்று. கந்த மாதனம், கயிலை போல்வதொரு மலை; இது, வைப்புத் தலங்களுள் ஒன்று. மண்டலம் சேர் மயக்கு - பலவகைப் புவனங் களிலும் சென்று சேர்தற்கு (பிறத்தற்கு)க் காரணமாகிய மயக்கம், விண்தலம் - தேவர் உலகம். 'அதிற் சேரும் விளக்கொளி' என்றது, தேவர்கட்குப் பெருமையைத் தருதல் கருதி. மீயச்சூர், சோழநாட்டுத் தலம். கொண்டல் அம் - மேகத்தினது அழகு. அமர்ந்து - விரும்பி. குழகன் - அழகுடையவன்.

Koviloor Digital Library

805 வண்டாடு பூங்குழலாள் பாகன் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் கண்டாய்
பண்டாடு பழவினைநோய் தீர்ப்பான் கண்டாய்
பரலோக நெறிகாட்டும் பரமன் கண்டாய்
சேண்டாடி அவுணர்புரஞ் செற்றான் கண்டாய்
திருவாரூர்த் திருமூலட் டானன் கண்டாய்
கொண்டாடும் அடியவர்தம் மனத்தான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 2

805. மணாளன் - அழகன். பண்டு ஆடு - முற்பிறப்பில் செய்த. 'பழவினை' என்றது, பெயரளவாய் நின்றது; பண்டு செய்த பழவினை யின்பயன்" (திருமுறை - 5. 47, 1.) என்று திருக்குறுந்தொகையினும் அருளிச் செய்தார். பரலோகம் - எல்லா உலகங்களினும் மேலாய உலகம்: வீட்டுலகம்; அஃது இறைவனது திருவருள்; "வானோர்க்கு உயர்ந்த உலகம்" (குறள் - 346.) என்றதும் அது. உலகமும் வெளியும் அல்லாத அதனை ஓர் உலகமும் வெளியும் போல அடை கொடுத்து வழங்குதல், மன மொழிகளுக்கு உட்படாத அதனை, ஒருவாறு அவற்றுக்கு உட்பட்ட பொருள்களோடு சார்த்தி உவமை வகையான் உணர்தற் பொருட்டு என்க. இந்நுட்பம் உணரமாட்டாதார், 'வீட்டு நிலையும் ஓர் உலகமே' என மயங்கிக் கொள்வர். அது பொருந்தாமை, "மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க - லுற்றார்க் குடம்பு மிகை" (குறள் - 345.) என முன்னே அருளிச் செய்தமையால் தெற்றென விளங்கும்; எவ்வாறு எனின், வீடாவது பிறப்பற்ற நிலையும், பிறப்பாவது உடம்புமே என்பன எல்லார்க்கும் உடம் பாடாகலின், வீடு பெற்றார்க்கு உடம்பு உளதாகாது என்பது தானே விளங்கிக் கிடப்பவும், வீட்டு நிலையை 'உலகம்' என வழங்கும் வழக்கினது கருத்தறியாது, எல்லா உலகங்களினும் மேலாய் உள்ள ஓர் உலகமே 'வீட்டுலகம் போலும்' எனவும், 'அவ்வுலகம்போல அதன்கண் உள்ள இன்பத்தை நுகர்தற்கு ஏற்ப, 'வீட்டுடம்பு' என்னும் ஒரு வகை உடம்புகளும் உள்ளன போலும்' எனவும் மலையாமைப் பொருட்டு அதனை எடுத்தோதி யருளினாராதலின் என்க. இதனானே வீட்டு நிலையும் ஒரு புவன மாயும், அதன்கண் இன்பத்தை நுகர்த்தற்குக் கருவியும் தனு வாயும் ஒழியின், உலக இன்பம்போல, வீட்டின்பமும் வரை யறைப்பட்ட பொருளினால் உளதாவதாய், உடம்பளவில் வரை

Koviloor Digital Library

806 அலையார்ந்த புனற்கங்கைச் சடையான் கண்டாய்
அடியார்கட் காரமுத மானுன் கண்டாய்
மலையார்ந்த மடமங்கை பங்கன் கண்டாய்
வானோர்கள் முடிக்கணியாய் நின்றான் கண்டாய்
இலையார்ந்த திரிசூலப் படையான் கண்டாய்
ஏழுலகு மாய்நின்ற எந்தை கண்டாய்
கோலையார்ந்த குஞ்சரத்தோல் போர்த்தான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 3

807 மற்றாருந் தன்னொப்பா ரில்லான் கண்டாய்
மயிலாடு துறையிடமா மகிழ்ந்தான் கண்டாய்
புற்று டரவணிந்த புனிதன் கண்டாய்
பூந்துருத்திப் போய்யிலியாய் நின்றான் கண்டாய்

யறைப்பட்டு நின்று, காலம். இடங்களாலும் வரையறைப்படு மாகலின், வீட்டின்பத்தை, 'நிரதிசய இன்பம்,' எனவும். 'வரம்பிலின்பம்' எனவும், கூறும் சொற்கள் பலவும் பொருள் படா தொழியும் என்பதும் பொருந்துமாறு பற்றி உணர்ந்து கொள்ளப்படும். சிவநெறி நூல்கள் சிவலோகம் முதலிய வற்றைப் பதமுத்தி இடமாகக் கூறுதலன்றிப் பரமுத்தி இடமாகக் கூறாமை யறிக. இத்தகைய பரலோகத்தை அடையும் வாயில், எவ்வகைத்தான உடம்பும் இல்லாது அருளே வடிவாகிய சிவ பிரானை உணரும் உணர்வே யாகலானும், அவ்வுணர்வும் அவன் தரவே பெறற் பாலதாகலானும், "பரலோக நெறி காட்டும் பரமன்" என்றருளினார். பரமன் - யாவர்க்கும் மேலா னவன். செண்டாடி - செண்டாடுதல்போல உழற்றி. கொண் டாடும் - பாராட்டுகின்ற.

806. அலை ஆர்ந்த - அலைகள் நிறைந்த. "கங்கை" பெயர். மலை ஆர்ந்த - மலையிற் பொருந்திய: தோன்றி வளர்ந்த. அணி - அணிகலம். இலை ஆர்ந்த - இலைபோலப் பொருந்திய. கொலை ஆர்ந்த குஞ்சரம் - கொல்லுதல் பொருந்திய யானை.

807. "மற்றாரும் தன்னொப்பார் இல்லாத [illegible] என்பது முதற்றிருப் பதிகத்தே கூறப்பட்டது. மயிலாடு துறை (மாயூரம்). பூந்துருத்தி, ஐயாறு - இவை சோழநாட்டுத் தலங்க[illegible] குற்றாலம்.

Koviloor Digital Library

அற்றார்கட் கற்றாய் நின்றான் கண்டாய்
ஐயா றகலாத ஐயன் கண்டாய்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 4

808 வாரார்ந்த வனமுலையாள் பங்கன் கண்டாய்
மாற்பேறு காப்பா மகிழ்ந்தான் கண்டாய்
போரார்ந்த மால்விடையோன் றூர்வான் கண்டாய்
புகலூரை அகலாத புனிதன் கண்டாய்
நீரார்ந்த நிமிர்சடையோன் றுடையான் கண்டாய்
நினைப்பார்தம் வினைப்பாரம் இழிப்பான் கண்டாய்
கூரார்ந்த மூவிலைவேற் படையான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 5

809 கடிமலிந்த மலர்க்கொன்றைச் சடையான் கண்டாய்
கண்ணப்ப விண்ணப்புக் கொடுத்தான் கண்டாய்
படிமலிந்த பல்பிறவி யறுப்பான் கண்டாய்
பற்றற்றார் பற்றவனாய் நின்றான் கண்டாய்
அடிமலிந்த சிலம்பலம்பத் திரிவான் கண்டாய்
அமரர்கணந் தொழுதேத்தும் அம்மான் கண்டாய்
கொடிமலிந்த மதில்தில்லைக் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 6

பாண்டி நாட்டுத் தலம். பூந்துருத்திப் பெருமானை, நாயனார் யாண்டும், "பொய்யிலி" என்றே அருளுதல் காணப்படும். அற்றார்கட்கு அற்றான் - மற்றுப் பற்றுச் சிறிதும் இலராய் நீங்கியவர்கட்கு, மறைந்து நிற்கும் தன்மை சிறிதும் இன்றி நிற்பவன்; இடையீடில்லாத அனுபவப் பொருளாய் நிற்பவன் என்றபடி. "அற்றவர்க் கற்ற சிவன்" (திருமுறை - 3. 120. 2.) என ஆளுடைய பிள்ளையாரும் அருளினார்.

808. வார் ஆர்ந்த - கச்சுப் பொருந்திய. மாற்பேறு, தொண்டை நாட்டுத் தலம். காப்பு - இடம். புகலூர், சோழ நாட்டுத் தலம். "சடை" என்றதனை, 'சடைமுடி' எனக் கொள்க. இழிப்பான் - இறக்குவான்.

809. கடி மலிந்த - மணம் நிறைந்த. கண் அப்பினார் கண்ணப்ப நாயனார் என்பது வெளிப்படையாகலின், அஃது

Koviloor Digital Library

810 உழையாடு கரதலமோன் றுடையான் கண்டாய்
ஒற்றியூ ரோற்றியா வுடையான் கண்டாய்
கழையாடு கழுக்குன்றம் அமர்ந்தான் கண்டாய்
காளத்திக் கற்பகமாய் நின்ருன் கண்டாய்
இழையாடும் எண்புயத்த இறைவன் கண்டாய்
என்நெஞ்சத் துள்நீங்கா எம்மான் கண்டாய்
குழையாட நடமாடுங் கூத்தன் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 7

811 படமாடு பன்னகக்கச் சசைத்தான் கண்டாய்
பராய்த்துறையும் பாசூரும் மேயான் கண்டாய்
நடமாடி யேழுலகுந் திரிவான் கண்டாய்
நான்மறையின் பொருள்கண்டாய் நாதன் [கண்டாய்
கடமாடு களிறுரித்த கண்டன் கண்டாய்
கயிலாயம் மேவி யிருந்தான் கண்டாய்
குடமாடி யிடமாகக் கொண்டான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே. 8-10

திருச்சிற்றம்பலம்

அருளாராயினுர், விண் அப்பு - வானத்திற் பொருத்துதல். படி மலிந்த - உலகில் நிறைந்த. பற்று - துணே. ''பற்றவன்'' என்பதில் அகரம், சாரியை, அலம்ப - ஒலிக்க 'திரிதல், பலிக்கு' என்க.

810. உழை ஆடு கரதலம் - மான் பொருந்தியகை. ஒற்றியூர், கழுக்குன்றம், காளத்தி இவை தொண்டைநாட்டுத் தலங்கள். ஒற்றியா உடையான் - ஒற்றித்து (பொருந்தி) நிற்கும் இடமாக உடையவன். கழை - மூங்கில். இழை - பூணநூல். குழை ஆட - காதில் உள்ள குண்டலம் அசைய.

811. பன்னகம் - பாம்பு. 'படமாடு பன்னகம்' எனச் சினைவினை முதல்மேல் ஏற்றப்பட்டது. அசைத்தான் - கட்டினுன். பராய்த்துறை, சோழநாட்டுத் தலம். பாசூர், தொண்டைநாட்டுத் தலம். ஏழுலகிலும் சென்று நடனமாடுதல், அதனை ஆங்கு

Koviloor Digital Library

உள்ளவர்கள் கண்டு உய்தற் பொருட்டு என்க. நாதன் - தலைவன்; 'நாத தத்துவத்தில் உள்ளவன்' என்றுமாம். கடம் ஆடு - மதநீர் ஒழுகுகின்ற. குடம் - திருமால் ஆடிய ஒருவகைக் கூத்து. அதனால், "குடம் ஆடி" என்றது திருமாலின் பெயராயிற்று. சிவபிரான் திருமாலை இடப்பாகத்திற் கொண்டவாற்றை மேலே (பக். 557.) காண்க.

இத்திருப்பதிகத்தின் ஏனைய திருப்பாடல்கள் கிடைத்தில.

கைகள் குவித்துக் கழல்போற்றிக் கலந்த வன்பு கரைந்துருக
மெய்யில் வழியுங் கண்ணருவி விரவப் பரவுஞ் சொன்மாலை
செய்ய சடையார் தமைச்சேரார் தீங்கு நெறிசேர் கின்றாரென்
றுய்யுநெறித்தாண்டகமொழிந்தங்கொழியாக்காதல் சிறந்தோங்க

முன்னா ளயனுந் திருமாலு முடிவு முதலுங் காணாத
பொன்னார் மேனி மணிவெற்பைப் பூநீர் மிழலை யினிற்போற்றிப்
பன்னாள் பிரியா நிலைமையினாற் பயிலக் கும்பிட் டிருப்பாராய்
அந்நாண் மறையோர் திருப்பதியி லிருந்தார் மெய்மை
யருந்தவர்கள் 254

சீரின் விளங்குந் திருத்தொண்ட ரிருந்து சிலநாட் சென்றதற்பின்
மாரி சுருங்கி வளம்பொன்னி நதியும் பருவ மாறுதலும்
நீரி னியன்ற வுணவருகி நிலவும் பலமன் னுயிர்களெலாம்
பாரின் மலிந்த விலம்பாட்டிற் படர்கூர் வறுமை பரந்தால் 255

வைய மெங்கும் வற்கடமாய்ச் செல்ல வுலகோர் வருத்தமுற
நையு நாளிற் பிள்ளையார் தமக்கு நாவுக் கரசருக்குங்
கையின் மானு மழுவுமுடன் காணக் கனவி லெழுந்தருளிச்
செய்ய சடையார் திருவீழி மிழலை யுடையா ரருள்செய்வார். 256

கால நிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீரெனினும்
ஏல வும்மை வழிபடுவார்க் களிக்க வளிக்கின் றோமென்று
கோலங் காண வெழுந்தருளிக் குலவும் பெருமை யிருவருக்கும்
ஞால மறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார். 257

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

82. திருச்சாய்க்காடு

திருப்பதிக வரலாறு

ஆண்டவரசு, ஆளுடையபிள்ளையாருடன் திருக்கோலக்கா வணங்கி ஆளுடையபிள்ளையாரிடம் விடைபெற்று, திருநனிபள்ளி முதலான பதிகளை வணங்கிப் பாடியருளியவற்றுள் ஒன்று இத் திருப்பதிகம் (திருநாவுக். பு. 189.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

812 வானத் திளமதியும் பாம்புந் தம்மில்
வளர்சடைமேல் ஆதரிப்ப வைத்தார் போலும்
தேனைத் திளைத்துண்டு வண்டு பாடுந்
தில்லை நடமாடுந் தேவர் போலும்
ஞானத்தின் ஒண்சுடராய் நின்றார் போலும்
நன்மையுந் தீமையு மானார் போலும்
தேனைத் தடியார்க் கினியார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

இத்திருப்பதிகம், 'போலும்' என்னும் முடிபுடைய தொடர்களால், இறைவன் பெருமைகளை வகுத்தருளிச் செய்தது.

812. தம்மில் - தமக்குள். ஆதரிப்ப - விருப்பங்கொள்ள ; 'பகை நீங்கி வாழ' என்றவாறு. 'தம்மில் ஆதரிப்ப வளர்சடைமேல் வைத்தார்' எனக் கூட்டுக ; 'தன்னில்' என்பது பாடம் அன்று. 'தேனை உண்டு திளைத்து' என மாறுக. திளைத்து - இன்புற்று. "ஞானத்தின்" என்பதில் இன், அல்வழிக்கண் வந்த சாரியை ; 'ஞானமாகிய ஒண்சுடர்' என்பது பொருள் ; இஃது உருவகம். "நன்மையும் தீமையும் ஆனார்" என்றது, 'எல்லாம் அவரே ; அவர்க்கு வேறாய் ஒன்று இல்லை' என்றபடி. 'அடியார்க்குத் தேன் ஒத்து இனியார்' என்க.

Koviloor Digital Library

813 விண்ணோர் பரவநஞ் சுண்டார் போலும்
வியன்துருத்தி வேள்விக் குடியார் போலும்
அண்ணா மலையுறையும் அண்ணல் போலும்
அதியரைய மங்கை யமர்ந்தார் போலும்
பண்ணார் களிவண்டு பாடி யாடும்
பராய்த்துறையுள் மேய பரமர் போலும்
திண்ணார் புகார்முத் தலைக்குந் தெண்ணீர்த்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

814 கானிரிய வேழ முரித்தார் போலும்
காவிரிப்பூம் பட்டினத் துள்ளார் போலும்
வானிரிய வருபுரமூன் றெரித்தார் போலும்
வடகயிலை மலையதுதம் மிருக்கை போலும்
ஊனிரியத் தலைகலனா வுடையார் போலும்
உயர்தோணி புரத்துறையும் ஒருவர் போலும்
தேனிரிய மீன்பாயுந் தெண்ணீர்ப் பொய்கைத்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

813. பரவ - 'எம்பெருமானே' என ஏத்தி, 'எம்மைக் காவாய்' என வேண்டி நிற்க. துருத்தி, வேள்விக்குடி, பராய்த் துறை இவை சோழநாட்டுத் தலங்கள். அண்ணாமலை, நடு நாட்டுத் தலம். அதியரைய மங்கை, வைப்புத்தலம். பண் ஆர் - பண்ணை இசைக்கின்ற. களி வண்டு - மதுக்களிப்பை யுடைய வண்டுகள். ஆடுதல் - பறந்து உலாவுதல். 'அப்பண்ணினைப் பாடி ஆடும்' என்க. புகார் - காவிரி யாற்றின் சங்க முகம்; இதனை, ''திண் ஆர் புகார்'' என்றது, மணற் செறிவு நோக்கி. அலைக்கும் - எறிகின்ற 'புகாரின்கண் முத்துக்களை அலைக்கின்ற தெள்ளிய நீரையுடைய திருச்சாய்க்காடு' என்க.

814. கான் இரிய - காட்டினின்றும் நீங்கிப் போம்படி. வேழம் - யானை. ''காவிரிப்பூம்பட்டினம்'' என்றது, பல்லவனீச் சாரத்தை; இது திருச்சாய்க்காட்டிற்கு அண்மையில் உள்ளதே. வான் - தேவர்: இடவாகு பெயர்; 'அவர்கள் அஞ்சி நீங்கு மாறு வானத்திற் செல்லுகின்ற புரம்' என்றவாறு. ''வருபுரம்'' என்றது, இடவழுவமைதி. ஊன் இரி அத் தலை கலன் உடையார்- தசை நீங்கிய அத்தலையை உண்கலமாக உடையவர். தோணி புரம் - சீகாழி. தேன் இனிய - தேன் ஒழுகும்படி. பாயும் - மலர் களில் தாக்குகின்ற.

Koviloor Digital Library

815 ஊனுற்ற வேண்டலைசேர் கையர் போலும்
ஊழி பலகண் டிருந்தார் போலும்
மானுற்ற கரதலமோன் றுடையார் போலும்
மறைக்காட்டுக் கோடி மகிழ்ந்தார் போலும்
கானுற்ற ஆட லமர்ந்தார் போலும்
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தார் போலும்
தேனுற்ற சோலை திகழ்ந்து தோன்றுந்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

816 கார்மல்கு கொன்றையந் தாரர் போலும்
காலனையும் ஒருதையாற் கண்டார் போலும்
பார்மல்கி யேத்தப் படுவார் போலும்
பருப்பதத்தே பல்லூழி நின்றார் போலும்
ஊர்மல்கு பிச்சைக் குழன்றார் போலும்
ஒத்தூ ரோருநாளும் நீங்கார் போலும்
சீர்மல்கு பாட லுகந்தார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

815. மறைக்காட்டுக் கோடி - திருமறைக் காட்டை அணுகி யுள்ள, 'கோடிக் குழகர்' என்னும் தலம். கான் உற்ற ஆடல் காட்டில் பொருந்திய நடனம். அமர்ந்தார் - விரும்பினார்.

816. கார் மல்கு - கார் காலத்தில் நிரம்பப் பூக்கின்ற, 'வீழக் கண்டார்' என ஒரு சொல் வருவித்துக்கொள்க. பார் - பூமியில் உள்ளார்; இடவாகுபெயர். மல்கி - நிறைந்து நின்று. பருப்பதம் - திருப்பருப்பதம்; சீசைலம்; இது தெலுங்கு நாட்டில் உள்ளது. "பல்லூழி" என்றது, 'எக்காலத்தும்' என்றவாறு. 'ஊரின்கண்' என உருபு விரித்து, 'உழன்றார்' என்பதனோடு முடிக்க. ஒத்தூர், தொண்டை நாட்டுத் தலம். சீர் - தாள அறுதி.

Koviloor Digital Library

817 மாவாய் பிளந்துகந்த மாலுஞ் செய்ய
மலரவனுந் தாமேயாய் நின்றூர் போலும்
மூவாத மேனி முதல்வர் போலும்
முதுகுன்ற மூதூ ருடையார் போலும்
கோவாய முனிதன்மேல் வந்த கூற்றைக்
குரைகழலா லன்று குமைத்தார் போலும்
தேவாதி தேவர்க் கரியார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

818 கடுவெளியோ டோரைந்து மானூர் போலுங்
காரோணத் தென்று மிருப்பார் போலும்
இடிகுரல்வாய்ப் பூதப் படையார் போலும்
ஏகம்பம் மேவி யிருந்தார் போலும்
படியொருவ ரில்லாப் படியார் போலும்
பாண்டிக் கொடுமுடியுந் தம்மூர் போலும்
சேடிபடுநோ யடியாரைத் தீர்ப்பார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

817. மாவாய் பிளந்து - 'கேசி' என்னும் அசுரன் கொண்ட வஞ்சனை உருவமாகிய குதிரையின் வாயைக் கிழித்து; இது திருமால் செய்தது, கிருட்டினனாய் இருந்தபொழுது. உகந்த - மகிழ்ந்த. மூவாத மேனி - என்றும் ஒரு படித்தாய் இருக்கும் வடிவம். முதுகுன்றம், நடுநாட்டுத்தலம்; இஃது இக்காலத்து, 'விருத்தாசலம்' என வழங்கும். 'முதுகுன்றமாகிய மூதூர்' என்க. கோவாய முனி - முனிவருள் தலைவராயவர்; மார்க்கண்டேயர். தன், சாரியை.

818. கடுவெளி - பெரிய ஆகாயம். "கடுவெளியோடு ஓர் ஐந்தும் ஆனூர்" என்றது, 'கடுவெளி ஆனமையே யன்றி ஓர் ஐந்தும் ஆனூர்' என்றபடி. ஐந்து, பூதங்கள். காரோணம்பற்றி மேலே (பக் 14.) கூறப்பட்டது. இடிகுரல் - இடிக்குங்குரல். படி - ஒப்பும், இயல்பும். 'ஒருவரும் ஒப்பில்லாத இயல்பினை உடையவர், என்க. 'ஒருவரும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. பாண்டிக் கொடுமுடி, கொங்குநாட்டுத் தலம். "கொடுமுடியும் தம் ஊர்" என்றருளினூராயினும், கொடுமுடியையும் தம் ஊராக் கொண்டார்' என்றலே திருவுள்ளமாகக் கொள்க.

Koviloor Digital Library

819 விலையிலா ஆரஞ்சேர் மார்பர் போலும்
வெண்ணீறு மெய்க்கணிந்த விகிர்தர் போலும்
மலையினார் மங்கை மணாளர் போலும்
மாற்பேறு காப்பாய் மகிழ்ந்தார் போலும்
தோலைவிலார் புரமூன்றுந் தொலைத்தார் போலும்
சோற்றுத் துறைதுருத்தி யுள்ளார் போலும்
சிலையினார் செங்க ணரவர் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

820 அல்லல் அடியார்க் கறுப்பார் போலும்
அமலருகந் தம்மடைந்தார்க் காட்சி போலும்
நல்லமும் நல்லூரும் மேயார் போலும்
நள்ளாறு நாளும் பிரியார் போலும்
முல்லை முகைநகையாள் பாகர் போலும்
முன்னமே தோன்றி முளைத்தார் போலும்
தில்லை நடமாடுந் தேவர் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர் தாமே.

செடி - துன்பம். படு - உண்டாதற்குக் காரணமான. நோய் - பிணி; வினையைக் குறித்தருளியதுமாம். 'அடியாரை நோய் தீர்ப்பார்' என்றதனை, 'நூலைக் குற்றங்களைந்தார்' என்பது போலக் கொள்க.

819. "விலை இலா ஆரம்" என்றது, எலும்பு மாலையை; இது, 'விலை ஒன்றும் பெறாத மாலை' என்னும் பொருளதாய், 'விலை வரம்பிலா மாலை' எனப் பிறிதொரு பொருளையும் உடன் உள்ளுறுத்து அருளிச் செய்யப்பட்டமையின், உடனிலை உள்ளுறை; இதனை, அணி இலக்கணங் கூறுவார், சிலேடை அணி என்ப. மலையின் ஆர் - மலையில் தோன்றி வளர்ந்த. மாற்பேறு, தொண்டைநாட்டுத்தலம். காப்பு - இடம். தொலைவு - தோற்றல். தொலைத்தார் - அழித்தார். சோற்றுத் துறையும், துருத்தியும் சோழநாட்டுத்தலங்கள். சிலையின் ஆர் அரவர் - வில்லில் நாணாகப் பூட்டிய பாம்பினை யுடையவர்.

820. 'அடியார்க்கு அல்லல் அறுப்பார்' என்க. 'அமருலகம் ஆட்சி' என்றருளினாராயினும், 'ஆட்சியாக அளிப்பார்,

Koviloor Digital Library

821 உறைப்புடையஇராவணன்போன்மலையைக்கையால்
ஊக்கஞ்சேய் தேடுத்தலுமே உமையா ளஞ்ச
நிறைப்பெருந்தோள் இருபதும்போன் முடிகள் பத்தும்
நிலஞ்சேர விரல்வைத்த நிமலர் போலும்
பிறைப்பிளவு சடைக்கணிந்த பெம்மான் போலும்
பேண்ணு ணுருவாகி நின்ருர் போலும்
சிறப்புடைய அடியார்கட் கினியார் போலும்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் சேல்வர் தாமே.

திருச்சிற்றம்பலம்

என்றலே கருத்தாகக் கொள்க. நல்லமும், நல்லூரும், நள்ளாறும் சோழநாட்டுத் தலங்கள் ; 'அவற்றுள் நல்லூர், நாயனுர்க்கு இறைவன் திருவடி சூட்டிய தலம்' என்பது மேலும் கூறப்பட்டது.

821. உறைப்பு - கொண்டது விடாமை. பொன் - அழகு. ஊக்கம் செய்து - ஊக்கங்கொண்டு எழுந்து. அஞ்ச - அஞ்சியதனுல். 'அவனது தோள் இருபதும் முடிகள் பத்தும் நிலந்திற் புதைய' என்க. விரல், 'கால் விரல்' என்பது. சொல்லுவாரது குறிப்பாற் கொள்ளக் கிடந்தது. பிறைப் பிளவு - பிறையாகிய பிளவு என்றது, சந்திரனது பிளவு என்றவாறு. சிறப்பு - வீட்டு நெறி ; திருவடி ஞானம்.

விண்ணின் றிழிந்த விமானத்தின் கிழக்கு மேற்கும் பீடத்தில்
அண்ணல் புகலி யாண்டகையார் தமக்கு மாண்ட வரசினுக்கும்
நண்ணு நாள்க டொறுங்காசு படிவைத் தருள நானிலத்தில்
எண்ணி லடியா ருடனமுது செய்தங் கிருந்தா ரிருவர்களும் 258

அல்லார் கண்டத் தண்டர்பிரா னருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரம னடியா ராஞர்கள்
எல்லா மெய்தி யுண்கவென விரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்
திட்டார். 259

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

83. திருப்பாசூர்

திருப்பதிக வரலாறு

நாயனர், திருவொற்றியூர் எழுத்தறியும் பெருமானைத் தொழுது அருகுள்ள சிவாலயங்களை வணங்கி மீண்டும் திருவொற்றியூர் தொழுது பாசூரிறைவரைப்பணிந்து பாடியருளியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (திருநாவுக். பு. 340.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

822 விண்ணுகி நிலனுகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்பு கின்ற
எண்ணுகி எழுத்தாகி இயல்பு மாகி
ஏழுலகுந் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணுகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணுகி இன்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 1

இத் திருப்பதிகம், இறைவனைத் திருப்பாசூரிற் கண்டு வணங்கிப் பெற்ற பேரின்ப மேலீட்டில். அவனது பெருமைகளைப் பலவாருக எடுத்துப் புகழ்ந்து அருளிச் செய்தது.

822. விசும்பு - மேகம். வேலை - கடல். "விரும்புகின்ற" என்றது, எண் எழுத்து இரண்டனையும் என்க. "இயல்பு" என்றது, பண்பாகு பெயராய்ப் பல இயல்புகளையுடைய பல பொருள்களையும் உணர்த்தி நின்றது; உம்மை, எச்சம். மணி - கண்ணின் மணி. காட்சி-காணுதற்ருெழில். "கண்ணுகி" என்பது மூன்றிலும் உள்ள, "ஆகி" என்பன உவமை குறித்து நின்றன; உவமைகள், சிறப்பு நிலைக்களனுகத் தோன்றின என்க. "பண்" என்றது, முன்னர்ப் பாடலையும், பின்னர் அதன் பொருளையும் குறித்து நின்ற இருமடியாகு பெயர். "இன்னமுதாம்" என்றதும் உவமையே யாம்; இவ்வுவமை பண்பும் பயனும் பற்றி வந்தது என்க, 'அடியேன் உய்ந்தவாறு நன்று' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

Koviloor Digital Library

823 வேதமோர் நான்காய்ஆ றங்க மாகி
விரிகின்ற பொருட்கெல்லாம் வித்து மாகிக்
கூதலாய்ப் பொழிகின்ற மாரி யாகிக்
குவலயங்கள் முழுதுமாய்க் கொண்ட லாகிக்
காதலால் வானவர்கள் போற்றி யென்று
கடிமலர்கள் அவைதூவி ஏத்த நின்ற
பாதியோர் மாதினனைப் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 2

824 தடவரைகள் ஏழுமாய்க் காற்றுய்த் தீயாய்த்
தண்விசும்பாய்த் தண்விசும்பி னுச்சி யாகிக்
கடல்வலயஞ் சூழ்ந்ததொரு ஞால மாகிக்
காண்கின்ற கதிரவனும் கதியு மாகிக்
குடமுழவச் சரிவழியே அனல்கை யேந்திக்
கூத்தாட வல்ல குழக னாகிப்
படவரவோன் றதுவாட்டிப் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 3

823, விரிகின்ற-தோன்றுகின்ற. "விரிக்கின்ற" என்பதும் பாடம். கூதல் - விடாது தூற்றம் சிறுதுவலை ; இதனை, 'சோனை' என்ப. கொண்டல் - கீழ்க் காற்று ; இதுவே, மழையைக் கொணர்வது என்பர். கடி - நறுமணம்.

824. தடவரை - பெரிய மலை, "தட வரை ஏழ்", ஏழு தீவிலும் உள்ளன என்க. கடல் வலயம் - கடலாகிய வட்டம். காண்கின்ற - (பொருள்களைக்) காண்பதற்குத் துணையாய் நிற்கின்ற. சரி - 'சச்சரி' என்னும் வாச்சியம். 'குடமுழவும் சச்சரியுமாகிய வாச்சியங்களின் வழியே கூத்தாட வல்ல' என்க. குட முழவச் சதிவழியே' என்பதும் பாடம்.

Koviloor Digital Library

825 நீராருஞ் செஞ்சடைமேல் அரவங் கொன்றை
நிறைமதிய முடன்சூடி நீதி யாலே
சீராரும் மறையோதி யுலக முய்யச்
செழுங்கடலைக் கடந்தகடல் நஞ்ச முண்ட
காராருங் கண்டனைக் கச்சி மேய
கண்ணுதலைக் கடலொற்றி கருதி னைப்
பாரோரும் விண்ணோரும் பரசும் பாசூர்ப்
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 4

826 வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
விற்பிடித்துக் கொம்புடைய ஏனத் தின்பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ளக்
கோலைப்பகழி உடன் கோத்துக் கோரப்பூசல்
ஆடினார் பெருங்கூத்துக் காளி காண
அருமறையோ டாறங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 5

825. நிறை மதியம் - நிறைதற்கு உரிய சந்திரன்; 'பிறை' என்றவாறு. இனி, 'அழகு நிறைந்த மதியம்' என்றலுமாம். உடன் சூடி - ஒருங்கு அணிந்து. நீதியால் - அறத்தின் வழி. ஓதி - செய்து; 'உலகம் உய்ய ஓதி' என்க. 'அறத்தைத் தான் இயல்பாகவே உணர்ந்தமையின், அதனை உலகம் உணர்ந்து உய்தற்பொருட்டு வேதத்தைச் செய்தருளினான்' என்க. நஞ்சைத் தான் உண்டதனைத் தன் கண்டம் உண்டதாகப் பான்மை வழக்கினால் அருளினார். ஒற்றி - ஒற்றியூர். பரசும் - துதிக்கின்ற.

826. விசயன் - அருச்சுனன், வியப்பு - தமது திருவிளையாடலின் நிலையை உணர்ந்து வியக்கும் வியப்பு; இதனைக் காண விரும்பியது, :அவனுக்கு (அருச்சுனனுக்கு) வரும் தீங்கினை யறிந்து அவனைக் காக்க விரைந்த தமது முற்றறிவு பேரருளோடு பேராற்றலையும், அத்தீங்கினை அறியாத தனது சிற்றறிவோடு சிறிதாய ஆற்றலையும் அவன் உணர்ந்து, மேலும் மெய்யன்பு செய்து உய்தற் பொருட்டு. ஏனம் - பன்றி; அதனது கொடுமையை உணர்த்துவார் "கொம்புடைய ஏனம்" என்றருளினார்; 'நிராயுதத்தது அன்று' என்பது நயம். கோலம்-

Koviloor Digital Library

வேட்டுவக் கோலமே. 'உமையும் வேட்டுவக் கோலங்கொண்டு உடன் சென்றாள்' என்பது வியாச பாரதத்தினுங் கூறப் பட்டது; மற்றும் பெண்டிர் பலரும் சென்றனர் என்பதும் அதனுட் கூறப்படுவது.

இதனைத் தமிழில் வில்லிபுத்தூரார் தெரிவித்தது ஓர் நயம் மிக்க பாட்டு; அஃது,

"ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்
தொருவன் அந்தப்
போர்ஏனந் தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்
புனங்க ளெல்லாம்
சீர்ஏனல் விளைகிரிக்குத் தேவதையாங் குழவியையும்
செங்கை ஏந்திப்
பார்ஏனை உலகனைத்தும் பணிவுடனே புகழ்ந்திடத்தன்
பதிபின் வந்தாள்."

என்பது. வந்தவள் "வரையரசன் திருமடந்தை" என, அவள் வேட்டுவிச்சிக் கோலங் கொண்டமையையும் மற்றும் எண்ணி றந்த மாதர் அவளைச் சூழ்ந்து நின்றமையையும் அணிந்துரைக் கும் முன்னைப் பாட்டினுள் இனிது விளங்கக் கூறினார். அம்மை யோடு எண்ணிறந்த பெண்டிரும் சென்றனர் என்பது வியாச பாரதத்துட் கூறப்படுவது. இவ்வாறு முதனூலை வழிநூல் இலக்கணம் பிழையாது மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்த செய்யுட்களில், நயம் கருதித் தொன்மை வரலாறு ஒன்றனை ஆண்டுத் தந்துரைப்பாராய், "ஓர் ஏனந் தனைத்தேட ஒளித் தருளும் இருபாதத் தொருவன்" எனக் கூறிய அவ்வொன்றனை யும் கேட்கப் பொருத சிலர், மேற்காட்டிய செய்யுளையே தம் பதிப்பில் மறைத்துப் பதிப்பித்தனர்; முன்னைப் பெருநூல்களில் இவ்வாறு சிலவற்றை மறைத்தலும், புகுத்தலும், திரித்தலும் செய்தல் அவர்க்கு இயல்பு என்க.

'விசயன்றன் வியப்பைக் காண்பான். உமையவளுங் கோலங் கொள்ள, வேடனாய். விற்பிடித்து, கொலைப்பகழி உடன் கோத்து, ஏனத் தின்பின் கோரப் பூசல் கூடினார்' எனக் கொண்டு கூட்டுக. 'காளி காணப் பெருங்கூத்து ஆடினார்' என்க. அருமறை - அரிய மறைவாகிய பொருள்; "அங்கம்" என்றதும் அவை கருதிய பொருளை என்க. "கொண்டு" என்றது. 'பின்னர்' என்பதனை உணர்த்துங் குறிப்பினதாய் நின்றது,

Koviloor Digital Library

827 புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயின் நூலால்
புதுப்பந்தர் அதுஇழைத்துச் சருகால் மேய்ந்த
சித்தியினால் அரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலால் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை விள்ளா அன்பு
விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 6

828 இணையொருவர் தாமல்லால் யாரு மில்லார்
இடைமருதோ டேகம்பத் தென்றும் நீங்கார்
அணைவரியர் யாவர்க்கும் ஆதி தேவர்
அருமந்த நன்மையெலாம் அடியார்க் கீவர்

'கூடினாரும் ஆடினாரும் பாடினாருமாகிய பரஞ்சுடரை' என்க. "பரஞ்சுடர்" என்றது, பன்மை யொருமை மயக்கம்.

827. புத்தி - ஞானம்; சிலந்தி ஞான முடைத்தாயினமை, முன்னைப் பிறவித் தொடர்பினால் என்க. புதுப் பந்தர் - மக்களாற் செய்யலாகாத பந்தல்; வாய்நூலாற் செய்த பந்தல். 'பொதுப் பந்தர்' என்பது பாடம் அன்று. மேய்ந்த - மூடிய. சித்தி - பேறு; இவ்வாறு சிவபிரானுக்குத் திருத்தொண்டு செய்யப் பெற்றமை சிறந்த பேறுதல் அறிக. சிறப்பு - முன்னையினும் சிறந்த தொண்டு; அது சிவபிரானுக்குப் பல இடங்களில் மாடக்கோயில் எடுத்தமை, 'சித்தியினால் அரசாளப் பெற்று, பின்னும் சிறந்த தொண்டு செய்ய சிவகணங்களுள் ஒன்றாகி இன்புறுமாறு சேர்த்தருளினார்' என்க. இது, கோச்செங்கட் சோழநாயனாரது வரலாறு; இதன் விரிவைத் திருத்தொண்டர் புராணத்துட் காண்க. திறல் - வலிமை. வித்தகம் - திறமை. வெள்ளானை, திறலும் வித்தகமும் உடையதாய்ச் செய்த அன்பாவது, சிலந்தி செய்த வாய் நூற் பந்தர் எச்சில் முதலிய இழிவுகளை உடையது எனக்கருதி அதனை அழித்தொழித்துத் தூய நீரினால் ஆட்டி வழிபட்டமை. 'விரவிய வாறு' என்பது கடைக் குறைந்து நின்றது. விரவுதல் - பொருந்துதல். 'சிலந்திக்கும் வெள்ளானைக்கும் அருளிய இவற்றானே, அவர் பத்தர்களுக்கு இன்னமுதாதல் நன்கறியப்படும் என்றபடி.

828. 'தமக்குத் தாம் அல்லால் இணை யார் ஒருவரும் இல்லார்' என்க. இடை மருது - திருவிடைமருதூர். ஏகம்பம் -

Koviloor Digital Library

தணல் முழுகு பொடியாடுஞ் செக்கர் மேனித்
தத்துவனைச் சாந்தகிலின் அளறு தோய்ந்த
பணைமுலையாள் பாகனையெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 7

829 அண்டவர்கள் கடல்கடைய அதனுள் தோன்றி
அதிர்த்தெழுந்த ஆலாலம் வேலை ஞாலம்
எண்டிசையுஞ் சுடுகின்ற வாற்றைக் கண்டு
இமைப்பளவி லுண்டிருண்ட கண்டர் தொண்டர்
வண்டுபடு மதுமலர்கள் தூவி நின்று
வானவர்கள் தானவர்கள் வணங்கி யேத்தும்
பண்டரங்க வேடனையெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 8

கச்சி ஏகம்பம். 'யாவர்க்கும் அணைவரியர்' என்க. அணைதல் - சார்தல். ஆதிதேவர் - முதற்கடவுள். 'அருமருந்தன்ன' என்பது "அருமந்த" என மருவிற்று; 'அரிய அமுதம் போன்ற' என்பது பொருள். தணல் முழுகு பொடி - நெருப்பில் மூழ்கின மையால் ஆகிய சாம்பல். நெருப்பில் மூழ்கியவை உலகனைத்தும் என்க. செக்கர் - சிவப்பு. சாந்து - சந்தனக் கட்டை; சந்தனக் கட்டையும், அகிற்கட்டையும் தேய்த்த அளறு என்றதாம். அளறு - சேறு; குழம்பு. 'நீங்காரும், தேவரும், ஈபவருமாகிய பாகனை, பரஞ்சுடரை' என்க. 'பாகன், பரஞ்சுடர்' என்பன, பன்மை யொருமை மயக்கம்.

829. 'அண்டர்கள்' என்பது, அகரம் விரித்தலாய், "அண்டவர்கள்" என வந்தது. அதிர்த்து - (அனைவரையும்) நடுங்கச் செய்து. 'அதிர்ந்து' என்பதும் பாடம். வேலைஞாலம் - கடலை உடைய உலகம். ஞாலத்தை எண்டிசையை சுடுகின்ற வாற்றைக் கண்டு' என்க. 'ஞாலத்தை எண்டிசையைச் சுடு கின்ற' என்றதனை, 'யானையைக் கோட்டைக் குறைத்தான்' என்பது போலக் கொள்க. 'அதனை உண்டு' எனச் சுட்டு வருவித்து உரைக்க. "வண்டுபடு மதுமலர்கள் தூவி நின்று" என்றதனை, 'தானவர்கள்' என்றதன் பின்னர்க் கூட்டுக. தானவர்கள் - அசுரர்கள்.

Koviloor Digital Library

830 ஞாலத்தை யுண்டதிரு மாலும் மற்றை
நான்முகனும் அறியாத நெறியார் கையிற்
சூலத்தால் அந்தகனைச் சுருளக் கோத்துத்
தொல்லுலகிற் பல்லுயிரைக் கொல்லுங் [கூற்றைக்
காலத்தா லுதைசெய்து காதல் செய்த
அந்தணனைக்கைக்கொண்டசெவ்வான்வண்ணர்
பாலோத்த வெண்ணீற்றர் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 9

831 வேந்தன்நெடு முடியுடைய அரக்கர் கோமான்
மெல்லியலாள்உமைவெருவவிரைந்திட்டோடிச்
சாந்தமென நீறணிந்தான் கயிலை வெற்பைத்
தடக்கைகளா லெடுத்திடலுந் தாளா லூன்றி
ஏந்துதிரள் திண்டோளுந் தலைகள் பத்தும்
இறுத்தவன்தன் இசைகேட்டு இரக்கங் கொண்ட
பாந்தளணி சடைமுடியெம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே. 10

திருச்சிற்றம்பலம்

830. நெறியார் - நிலையினையுடையவர். அந்தகன் - அந்தகாசுரன். சுருள - மடிய. 'காலதனால்' என்பது, "காலத்தால்" என மருவி நின்றது. காதல்செய்த அந்தணன், மார்க்கண்டேயர், கைக்கொண்ட - அடியாராக ஏற்றுக்கொண்ட. செவ்வான் - செவ்வானம். செவ்வானம் போலச் சிவந்த திருமேனியில், பால் போல வெளுத்துள்ள நீற்றினை அணிந்துள்ள அழகினை வியந்தருளியவாறு.

831. 'அரக்கர் கோமானாகிய வேந்தன்' என்றபடி. "மெல்லியலாள்" என்றது, வெருவுதற்கு உரிய இயைபு உணர்த்தியவாறு. சாந்தம் - சந்தனம். "நீறணிந்தான்" என்றது, 'நீறணிந்த தலை' எனப் பொருள் தந்து நின்றது. தாள் - கால் விரல்; ஆகுபெயர். ஏந்து - உயர்ந்த, பாந்தள் - பாம்பு.

Koviloor Digital Library

84. திருச்செங்காட்டங்குடி

திருப்பதிக வரலாறு

வாகீசர், திருப்புகலூரிறைவரைத்தொழுது பலநாள் தங்கிப் பணிசெய்துவரும் நாட்களில் திருச்செங்காட்டங்குடி பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு. 240.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

832 பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக் கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தே மன்னி
இருந்தமணி விளக்கதனை நின்ற பூமேல்
எழுந்தருளி யிருந்தானை எண்டோள் வீசி
அருந்திறல்மா நடமாடும் அம்மான் தன்னை
அங்கனகச் சுடர்க்குன்றை அன்று லின்கீழ்த்
திருந்துமறைப் பொருள்நால்வர்க் கருள்செய் தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 1

இத்திருப்பதிகம் சிவபெருமானைத் திருச்செங்காட்டங்குடியிற் கண்டு வணங்கிய இன்ப மீதூர்வின்கண், அப்பெருமானது பெருமைகள் பலவற்றையும் நினைந்து 'அவனை நான் இத் தலத்திற் காணப்பெற்றேன்' என மகிழ்ந்தருளிச்செய்தது.

832. பெருந்தகை - பெருமையாகிய தன்மை ; அஃது பண்பாகு பெயராய் அதனை உடையானைக் குறித்தது. பேணி - விரும்பி, எழுதல் - துயில்நீங்குதல். மணி விளக்கு - மணியாகிய விளக்கு. "நின்ற" என்றது, 'புறத்துக் காணப்பட்டு நின்ற' என்றவாறு ; முன்னே கூறப்பட்ட மனம் தாமரை வடிவிற்றாக அதனுள் எழுந்தருளியிருத்தல்போலப் புறத்தும் எழுந்தருளி யிருப்பான் என்பார். இவ்வாறு அருளினர். உலகத்தைத் தொழிற் படுத்தும் பெருநடனமாதலின், "அருந்திறல் மாநடம்" ஆயிற்று. 'கனகக் குன்று, சுடர்க் குன்று' என்க. மாணிக்கம் முதலியன, உவமையாகு பெயர்கள்.

Koviloor Digital Library

833 துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை ஆகங் கீண்ட
அங்கனகத் திருமாலும் அயனுந் தேடும்
ஆரழலை அனங்கனுடல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தான்வல்ல மருந்து தன்னை
வண்கயிலை மாமலைமேல் மன்னி நின்ற
செங்கனகத் திரள்தோளெஞ் செல்வன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 2

834 உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
உம்பர்மணி முடிக்கணியை உண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னைப்
பேணியஅந்தணர்க்குமறைப்பொருளைப்பின்னும்

833. துங்கம் - உயர்வு. 'நகத்தால் அன்றிப் பிற கருவிகளால் அழியாதவனாகிய இரணியன்' என்க. "வென்றித் தொகுதிறல் இரணியன்" என்பதனை, 'திறலால் தொக்க வென்றிகளை உடைய இரணியன்' என மாற்றி யுரைக்க. 'பலரையும் வென்று கூடிய வெற்றிகளை உடையவன்' என்றபடி; 'வென்றி தொகு' எனப் பாடம் ஓதுதலும் ஆம். ஆகம் - மார்பு. கீண்ட - பிளந்த 'அம் கல் நகு அத் திருமால்' எனப் பிரித்து; 'அழகிய கற்றூணில் தோன்றிச் சிரித்த அந்தத் திருமால்' என உரைக்க. இனி, 'நரசிங்கம் பொன்னிறமாய் இருந்தது' என்றலுமாம். அழல் வடிவினனை, 'அழல்' என்றது, பான்மை வழக்கால். மங்க - கெடும்படி. நக - (கண்) மலர; இனி' 'மங்கினமையால் மகிழ' என்றலுமாம்; இப்பொருள், பிறர் அனங்கனால் வருந்துதல் அல்லது மகிழமாட்டாமையை விளக்கும். தான், அசைநிலை. மருந்து - அமுதம்; இஃது அனங்கனையும்' பின்னர் உயிர்ப்பித்தமை நினைக. 'கயிலை மாமலைமேல் சென்று காணற்பாலனாகிய அவனை இங்குத் திருச்செங்காட்டங் குடியில் கண்டேன்' என்பது நயம்.

834. ஊறும் - (உருகுகின்ற அம்மனத்தின்கண்) சுரக்கின்ற. மணி முடி - மணிகள் இழைத்த மகுடங்கள். 'உண்மைக் கண்ணே நின்ற குறி' என இயைக்க, உண்மைக் கண்ணே நிற்றல், மெய்ப்பொருளை உணர்தல் ஒன்றிலே நிலைபெறுதல்.

Koviloor Digital Library

முருகுவிரி நறுமலர்மேல் அயற்கும் மாற்கும்
முழுமுதலைமெய்த்தவத்தோர்துணையைவாய்த்த
திருகுகுழல் உமைநங்கை பங்கன் தன்னைச்
சேங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 3

835 கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னைக்
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவை யொரு பாகத்தானைச்
சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்

குறி - குறிக்கோள். இக் குறிக்கோளை உடையவர், தாம் தம் சிற்றறிவுகொண்டு கண்டவாறே கண்டு சிறுகி நில்லாது உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொல்லை ஏற்றுப் பெருகிச் செல்வர் ஆகலான், அவரை, 'பெருகுநிலைக் குறியாளர்' என்று அருளிச் செய்தார். அவர்க்குச் சிவபிரான் அவ்வந் நிலையிலும் அவ்வவ்வறிவாய் நின்று முன்னை அறியாமையை அகற்றி யருளுதல் பற்றி, அவனை அவரது அறிவாக அருளிச் செய்தார். தன்னையே விரும்பித் தொழுகின்ற மேலாய அந்தணர்கட்கு வேதப் பொருளை ஐயமறத் தெளிவித்தருளுதலின், "பேணிய அந்தணர்க்கு மறைப்பொருளை" என்றருளினர். இதனைச் சனகர் முதலிய நால்வர்க்கு அருளியவாற்றால் அறியலாகும். முழுமுதல் - மேலான காரணம். சில கற்பங்களில் அயனைத் திருமால் தோற்றுவித்தலும், மற்றும் சில கற்பங்களில் திருமாலை அயன் தோற்றுவித்தலும் எக்கற்பத்திலும் அவர் இருவருள் ஒருவரை முன்னே சிவபிரான் தோற்றுவித்தலும் கூறப்படுதலால், இருவர்க்கும் பரம காரணன் சிவபெருமானேயாதல்அறிக. 'அடியவர்கட்கு இன்பப் பொருளாகியும், அமரர்கட்குத் தலைவனாகியும், உண்மைகாணும் உள்ளம் உடையவர்க்கு ஞானமாகியும், சிரிய அந்தணர்க்கு ஞானாசிரியனாகியும், அயன் மால்கட்குப் பரம காரணனாகியும், உண்மைத் தவத்தோர்க்கு உற்ற துணைவனாகியும், உமையம்மைக்குக் கணவனாகியும் நிற்பவன்' என்றருளிச் செய்தவாறறிக.

835. கந்தம் - நறுமணம். "மணி" என்றது, மரகதத்தை. 'மரகதமணியின் ஒளியோடு விளங்குகின்ற பொன்னொளிபோல, தெரிவையை ஒரு பாகத்தில் உடையவன்' என்க; "மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்-மின்னொளி கொண்ட பொன்னொளி திகழ" என்று அருளியது திருவாசகமும் (திருவண். 124, 152)

Koviloor Digital Library

பந்தமறுத் தாளாக்கப் பணிகோண் டாங்கே
பன்னியநூல் தமிழ்மாலை பாடு வித்தேன்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளி னானைச்
சேங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 4

836 நஞ்சடைந்த கண்டத்து நாதன் தன்னை
நளிர்மலர்ப்பூங் கணைவேளை நாச மாக
வேஞ்சினத்தீ விழித்ததோரு நயனத் தானை
வியன்கேடில வீரட்டம் மேவி னானை
மஞ்சடுத்த நீள்சோலை மாட வீதி
மதிலாரூர் இடங்கோண்ட மைந்தன் தன்னைச்
சேஞ்சினத்த திரிசூலப் படையான் தன்னைச்
சேங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 5

837 கன்னியையங் கோருசடையிற் கரந்தான் தன்னைக்
கடவூரில் வீரட்டங் கருதி னானைப்
போன்னிசூழ் ஐயாற்றேம் புனிதன் தன்னைப்
பூந்துருத்தி நேய்த்தானம் போருந்தி னானைப்

சந்தம் - அழகு. 'சர அசரங்கட்கு நற்றாய் போன்றவன்' என்க. 'நாயேனது முன்னைப் பந்தம்' என விரியும். ''பந்தம்'' என்றது, வினையை. ஆள் ஆக்கி - அடிமையாகச் செய்து. பணி - தொண்டு. நூல் தமிழ் - இலக்கண நெறியின் அமைந்த தமிழ்.

836. நளிர் - குளிர்ச்சி. 'சினத் தீ எழ' என ஒரு சொல் வருவிக்க. கெடில வீரட்டம் - திருவதிகை வீரட்டம். மஞ்சு - மேகம். அடுத்த - பொருந்திய. சிவப்பை உண்டாக்குவதாய சினத்தை, 'செஞ்சினம்' என்றும், படையை உடையவனது சினத்தைப் படைமேல் ஏற்றியும், ''செஞ்சினத்த திரிசூலப் படையான்'' என்று அருளிச் செய்தார். இனிச் சிவபிரானது சினம் செம்மையிற் (திருவருளிற்) பிறழாமையின், ''செஞ் சினத்தை'' என்று அருளினார் என்றலுமாம்.

837. ''கன்னி'' என்றது கங்கையை. ஒரு சடை - ஒப்பற்ற சடை; அன்றி, மிகப்பெருகிவந்த கங்கை புல்நுனிமேல் நீர்போல்

Koviloor Digital Library

பன்னியநான் மறைவிரிக்கும் பண்பன் தன்னைப்
பரிந்திமையோர் தொழுதேத்திப் பரனே யென்று
சென்னிமிசைக் கொண்டணிசே வடியி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 6

838 எத்திக்கு மாய்நின்ற இறைவன் தன்னை
ஏகம்பம் மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்குஞ் சமணர் பொய்யிற்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான எல்லாம் போக்கித்
தித்தித்தேன் மனத்துள்ளே ஊறுந் தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 7

ஆயினமையின், 'ஒரு சடை' என்றே உரைத்தலுமாம். கடவூர் வீரட்டம், ஐயாறு, பூந்துருத்தி, நெய்த்தானம் சோழநாட்டுத் தலங்கள், பொன்னி - காவிரி நதி. பரிந்து - அன்பு கொண்டு.

838. எத் திக்குமாய் - எவ்விடத்திலும் நிறைந்து. "இல்லாத் தெய்வம்" என்றதில் உள்ள இன்மை, ஒன்றின் ஒன்று இன்மை. 'அவ்வின்மையை உடைய தெய்வம்' என்றது. 'தெய்வத் தன்மை இல்லாத ஒரு பொருள்' என்றபடி. தெய்வத் தன்மையாவது வினையைத் தொழிற் படுத்துதலாகலானும், 'சமணர் கூறும் தெய்வம், அது செய்யமாட்டாது' என்பதனை அவரே உடம்பட்டுக்கொள்ளுதலானும் அவரது தெய்வத்தை, தெய்வத்தன்மை இல்லாத ஒரு பொருள் என்று அருளிச் செய்தார். பொத்தி - மூடி; பொதிந்து: 'உள்ளத்துள் இருத்தி' என்றவாறு. இனி 'தமக்குத் தெய்வம் (தெய்வக் கொள்கை) இல்லாமையை மறைத்து' என்று உரைப்பினும் ஆம். இனி அவர், அதுபற்றிக் கூறுவனவெல்லாம் உண்மை யல்ல ஆதலின், 'அவர் பொய்யிற் புக்கழுந்தி வீழாமே' என்றருளினர். வீழ்தல் - ஆழ்ந்துபோதல்; "வீழ்தல்" என்றதனால், 'பொய்யாகிய படுகுழி; என்பது பெறப்பட்டமையின் "போத வாங்கி" என்பதற்கு, 'தன் திருவடியாகிய கரையிற் புகுதும்படி எடுத்து' என உரைக்க. "போத வாங்கி" என்றது,

Koviloor Digital Library

839 கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்கள் உற்றோரும் காத லானைப்
பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும்
பொன்றிவிழ அன்றுபொரு சரந்தொட் டானை
நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க
நிறைதவத்தை அடியேற்கு நிறைவித் தென்றுஞ்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 8

"தூண்டில் வேட்டுவன் வாங்க வராது" என்றாற்போல இட வழுவமைதி; பத்தி - இறையன்பு; அதற்கு உரிய வழி இறை யுணர்வு (சிவஞானம்), அதனைச் சூலைநோய் தீர்க்கும் வகையால் அருளினமையால், "பத்திக்கே வழிகாட்டி" என்று அருளினார். வினைப் பயம் - வினையை அஞ்சும் அச்சம். இனி, 'பயம் - பயன்' எனினுமாம். மனத்துள்ளே 'தித்தித்து ஊறும் தேன்' என்க.

839. உண்மை நூல்களைக் கல்லாதவர்க்கு இறையுணர்வு உண்டாதற்கு வாயில் இன்மையின், 'கல்லாதார் மனத்து அணுகாதவன்' என்றருளினார். இது பற்றியே தந்தை தாயர் தம் புதல்வர்க்கு உரிய பருவத்தே தீக்கை செய்வித்து இறைவன் நூல்களை ஓதுவித்தல் அவர்கட்கு இன்றியமையாக் கடனாயிற்று. "கல்லா நெஞ்சின் - நில்லான் ஈசன்" (திருமுறை, 3. 40. 3) என்று அருளினார், 'திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். கண்ணப்பநாயனார் முதலியோர்க்குக் கல்வியின்றியும் இறை யுணர்வு உண்டாயிற்றன்றோ' எனின், அவரெல்லாரும் முற்பிறப்பிற் கற்ற பெருங் கல்வியும், அக் கல்வியறிவின் பயனாக வாலறிவன் நற்றாளைத் தொழுத பெருந் தவமும் உடையார்' என்பதற்கு: அவர்க்கு உண்டாகிய உணர்வு தவத்தவர் உணர் வினும் மிக மேம்பட்ட உணர்வாய்க் கடிதின் வீடுபயந்தமை தானே போதிய சான்றும் என்க. இவ்வையம் நிகழாமைப் பொருட்டே கண்ணப்ப நாயனார் புராணத்தில், சேக்கிழார் நாயனார், "முன்பு செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான - அன்பினை எடுத்துக்காட்ட" (102) என்றருளினார். கண்ணப்பர்க்கு அன்னதொரு பெருந் தவம் இல்லையாயின், "சேணுயர் திருக் காளத்தி மலைமிசை எழுந்து செவ்வே - கோணமில் குடுமித் தேவர் இருப்பர் கும்பிடலாம்' என்று ஒருவன் கூறிய அளவில், மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற அவர்

Koviloor Digital Library

840 அரியபெரும் பொருளாகி நின்ருன் தன்னை
அலைகடலில் ஆலாலம் அமுது செய்த
கரியதோரு கண்டத்துச் சேங்கண் ஏற்றுக்
கதிர்விடுமா மணிபிறங்கு காட்சி யானை

விரைந்து செல்லுதலும், சென்று காளத்தி மலையை அடைந்த பொழுது தமக்கு முன்னே தம் அன்பு அம்மலைமேற் செல்லுதலும், சென்று தாம் இறைவரைக் காணுத முன்பே இறைவர் தம்மை நோக்கிய கருணை கூர்ந்த அருட்டிருநோக்கம் வந்து எய்தப் பெறுதலும், அது பெற்ற ஞான்றே தாம் பிறந்த குலச்சார்பு தம்மை அறவே விட்டு அகன்று போகத் தாம் பொருவில் அன்பே உருவாதலும், பிறவும் எவ்வாறு இயலும் என்க.

இனி. இறைவன் நூலைக் கற்றவர்கள் அவற்றின் பொருளைப் பலகாலும் சிந்தித்துப் பிறரொடு வினுதல், விடுத்தல்கள் செய்து பயின்றும் இறைவனை உணர்வராகலான், '' கற்ருர்கள் உற்று ஒரும் காதலான் '' என்று அருளினுர். உற்று ஓர்தல் - மனம் பற்றி ஆராய்தல். காதலான் - அவர்களிடத்துக் கொள்ளும் அன்பினை உடையவன். '' கற்றல் கேட்ட லுடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்த '' (திருமுறை. 1. 1. 2.) என்றருளினுர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரும். பொல்லாத நெறி, புத்த மதம். உகந்தார் - (சிவநெறியை விடுத்து அதனை) விரும்பியவர். பொன்றிவிழ - கெட்டொழிய. நில்லாத - நிலையாத. நிணக் குரம்பை - புலாற் குடில் ; உடம்பு. பிணக்கம் - மாறுபாடு ; அவை பிணி முதலிய துன்பங்கள். நிறை தவம் - நிறைய வேண்டுவதாய தவம். 'தவம் நிரம்பாதிருந்தமையானே சமண் சமயம் புகுதல் உண்டாயிற்று' என்பதும், பின்னர் அக் குறையினைச் சூலைநோய்த் துன்பத்தெழுந்த உணர்வினுல் நீக்கி 'நிறைவித்தான்' என்பதும் நினைந்து, '' நிறைதவத்தை நிறைவித்து '' என்றருளினுர். இதனையே சேக்கிழார், '' முன்னமே முனியாகி எமை அடையத் தவம் முயன்ருன் - அன்னவனை இனிச் சூலை மடுத்தாள்வம் '' (திருநாவுக். பு. 48.) என்பதனுல் விளக்கினுர். செல்லாத செந்நெறி - புடைபெயர்ந்து போகாத செவ்விய நெறி ; 'அறிவினுல் அறியும் முறை' என்றதாம்.

840. அரிய பெரும் பொருள் - கிடைத்தற்கு அரிய பெரும் பொருள். 'செங்கண் ஏற்றின்மேல், கரியதொரு கண்டத்தின் கண் கதிர்விடுகின்ற பெரிய நீலமணி விளங்குவது போலும்

Koviloor Digital Library

உரியபல தொழில் செய்யும் அடியார்தங்கட்
குலகமெலாம் முழுதளிக்கும் உலப்பி லானைத்
தெரிவையொரு பாகத்துச் சேர்த்தி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. 9

841 போரரவ மால்விடையோன் றூர்தி யானைப்
புறம்பயமும் புகலூரும் மன்னி னானை
நீரரவச் செஞ்சடைமேல் நிலாவெண் டிங்கள்
நீங்காமை வைத்தானை நிமலன் தன்னைப்
பேரரவப் புட்பகத்தே ருடைய வென்றிப்
பிறங்கொளிவாள் அரக்கன்முடி யிடியச் செற்ற
சீரரவக் கழலானைச் செல்வன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.10

திருச்சிற்றம்பலம்

காட்சி தோன்ற நிற்பவன்' என்க. உரிய - தம் நிலைக்கு ஏற்ற. "தொழில்" என்றது தொண்டினை. "முழுது" என்றது, 'கற்பம் முழுதும்' எனக் காலத்தின்மேல் நின்றது. உலப்பு - அழிவு. "தெரிவை" என்புழி இரண்டனுருபு தொகுத்தலாயிற்று.

841. போர் அரவம் - போருக்காக எழுப்பும் ஒலி. 'ஒன்றாகிய ஊர்தியை உடையவன்' என்க; 'ஒரு விடை ஊர்தி' எனற்பாலது, "விடை ஒன்று ஊர்தி" எனப்பட்டது. புறம்பயம், புகலூர் சோழநாட்டுத் தலங்கள். நீர் அரவச் செஞ்சடை - நீரையும் பாம்பையும் உடைய செம்மையாகிய சடை. நிலா வெண்டிங்கள் - நிலவை வீசுகின்ற வெள்ளிய பிறை. பேர் அரவம் - மிக்க ஒலி. புட்பகத் தேர் - புட்பகமாகிய ஊர்தி. 'வென்றி வாளரக்கன் பிறங்கொளி முடி' எனக் கொண்டு கூட்டுக. இடிய - பொடியாகும்படி. சீர் - அழகு. அரவம் - ஒலி.

ஈசர் மிழலை யிறையவர்பா லிமையப் பாவை திருமுலைப்பால்
தேச முய்ய வுண்டவர்தாந் திருமா மகனு ராதலினாற்
காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகு மடிமையினால்
வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர். 260

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

85. திருமுண்டீச்சரம்

திருப்பதிக வரலாறு

நாயனார், திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் வணங்கியபின் பிற பதிகளை வணங்கிப் பாடியருளிய வற்றுள் ஒன்றுபோலும் இத்திருப்பதிகம் (திருநா. பு. 148.).

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

842 ஆர்த்தான்காண் அழல்நாகம் அரைக்கு நாணா
அடியவர்கட் கன்பன்காண் ஆனைத் தோலைப்
போர்த்தான்காண் புரிசடைமேல் புனலேற் றான்காண்
புறங்காட்டி லாடல் புரிந்தான் தான்காண்
காத்தான்காண் உலகேழுங் கலங்கா வண்ணங்
கனைகடல்வாய் நஞ்சதனைக் கண்டத் துள்ளே
சேர்த்தான்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. 1

இத் திருப்பதிகம், திருமுண்டீச்சரப் பெருமானது பெருமைகளை, 'காண்' என்னும் முடிபுடைய தொடர்களால் வகுத்துரைத்து, 'அவன் என் சிந்தையிடத்தவனாயினான்' என மகிழ்ந்தருளிச் செய்தது.

842. ஆர்த்தான் - கட்டினான். "அழல்" என்றது, சினத்தை. 'நாணா ஆர்த்தான்' எனவும், 'கலங்கா வண்ணங் காத்தான்' எனவும் இயையும். "கடல்வாய் நஞ்சதனைக் கண்டத்துள்ளே சேர்த்தான்" என்றது, 'பெரிய கடலில் தோன்றிய நஞ்சினைச் சிறிய கண்டத்துள்ளே அடக்கினான்' என்னும் நயத்தை உடையது. சிவலோகன் - சிவலோகத்தைத் தன் உலகமாக உடையவன். 'சிவலோகத்தில் இருப்பவன் என் சிந்தையன் ஆயினான்' என வியந்தருளிச் செய்தவாறு.

Koviloor Digital Library

843 கருத்தன்காண் கமலத்தோன் தலையி லொன்றைக்
காய்ந்தான்காண் பாய்ந்தநீர் பரந்த சென்னி
ஒருத்தன்காண் உமையவளோர் பாகத் தான்காண்
ஒருருவின் மூவுருவாய் ஒன்றாய் நின்ற
விருத்தன்காண் விண்ணவர்க்கும் மேலா னான்காண்
மெய்யடியா ருள்ளத்தே விரும்பி நின்ற
திருத்தன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. 2

844 நம்பன்காண் நரைவிடையொன் றேறி னான்காண்
நாதன்காண் கீதத்தை நவிற்றி னான்காண்
இன்பன்காண் இமையாமுக் கண்ணி னான்காண்
ஏசற்று மனமுருகும் அடியார் தங்கட்
கன்பன்காண் ஆரழல தாடி னான்காண்
அவனிவனென் றியாவர்க்கும்அறியவொண்ணாச்
செம்பொன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. 3

843. கருத்தன் - தலைவன். "காய்ந்தான்" என்றது, 'அறுத்தான்' என்னும் தன் காரியம் தோற்றி நின்றது. பாய்ந்த - வீழ்ந்த. பரந்த - நிறைந்த. மூவுரு - 'அயன், அரி, அரன்' என்னும் முக்கடவுளர் வடிவம். "மூவுருவாயும்" என்னும் உம்மை தொக்கது. "விருத்தன்" என்றது, 'பழையோன்' என்றவாறு. மூவுருவாய் நிற்றல் பொது வியல்பாக, ஒன்றாய் நிற்றலே உண்மை இயல்பாகலின், 'ஒன்றாய் நின்ற விருத்தன்' என்றருளினர். "மூவுருவாய்" என்புழித் தொகுக்கப்பட்ட உம்மை, 'இப் பொதுவியல்பு உடையனாயினும் தன் உண்மையியல்பு திரியாதவனே' என்பது தோற்றுவித்தது. 'தீர்த்தன்' என்னும் வடசொல், "திருத்தன்" எனத் திரிந்து நின்றது.

844. நம்பன் - நம்புதற்கு (விரும்புதற்கு) உரியவன். நரை - வெண்மை. நவிற்றினான் - பாடினான். இன்பன் - இன்பம் தருபவன். 'சிவபிரானது முக்கண்களும் இமையாக் கண்கள்' என்பதனை, "இமையா முக்கண் - மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்" (திருமுருகாற். 153. 54.) என நக்கீரதேவரும் கூறினார். ஏசற்று - விரும்பி. "அழலது" அது, பகுதிப்

Koviloor Digital Library

845 மூவன்காண் மூவர்க்கும் முதலா னான்காண்
முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவா னான்காண்
காவன்காண் உலகுக்கோர் கண்ணா னான்காண்
கங்காளன் காண்கயிலை மலையி னான்காண்
ஆவன்காண் ஆவகத்தஞ் சாடி னான்காண்
ஆரழலாய் அயற்கரிக்கு மறிய வொண்ணாத்
தேவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. 4

846 கானவன்காண் கானவனாய்ப் பொருதான் றான்காண்
கனலாட வல்லான்காண் கையி லேந்தும்
மானவன்காண் மறைநான்கு மாயி னான்காண்
வல்லேறொன் றதுவேற வல்லான் றான்காண்
ஊனவன்காண் உலகத்துக் குயிரா னான்காண்
உரையவன்காண் உணர்வவன்காண்
உணர்ந்தார்க் கென்றுந்
தேனவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. 5

பொருள் விகுதி. "அவன் என்று அறிய ஒண்ணாதவன்" என்றது, 'கருதியும் கேட்டும் உணர ஒண்ணாதவன்' என்பதனையும், "இவன் என்று அறிய ஒண்ணாதவன்" என்றது. 'கண்டு உணர ஒண்ணாதவன்' என்பதனையும் குறித்து நின்றன.

845. மூவன் - மூப்பினன்; முன்னோன்; 'மூவுருவாயவன்' எனலுமாம். "முன்பின்" என்பன, உலகத் தோற்ற ஒடுக்கங்களை எல்லையாக உடையன. முடிவு - வீடு பேறு. 'காவல்' என்பது அடியாக, 'காவலன்' என்பது வருதல் போல, அதன் முதனிலையாகிய 'கா' என்பது அடியாக, "காவன்" என்பது வந்தது. 'காப்பவன்' என்பது பொருள். ஆவன் - ஆக்கம் தருபவன். ஆ அகத்து - பசுவினிடத்து உள்ள. 'அயற்கு' என்புழியும் எண்ணும்மை விரிக்க.

846. கானவன் - காட்டில் உறைபவன். கானவனாய் - வேடனாகி: பொருதது (போர் செய்தது) அருச்சுனனோடு. வல் ஏறு - தன்னைத் தாங்க வல்லதாகிய விடை; அற விடை; அறம்

Koviloor Digital Library

847 உற்றவன்காண் உறவெல்லா மாவான் ருன்காண்
ஒழிவறநின் றெங்கு முலப்பி லான்காண்
புற்றரவே யாடையுமாய்ப் பூணு மாகிப்
புறங்காட்டி லெரியாடல் புரிந்தான் ருன்காண்
நற்றவன்காண் அடியடைந்த மாணிக் காக
நணுகியதோர் பெருங்கூற்றைச் சேவ டியினுல்
சேற்றவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. 6

848 உதைத்தவன்காண் உணராத தக்கன் வேள்வி
உருண்டோடத் தொடர்ந்தருக்கன் பல்லையெல்
தகர்த்தவன்காண்தக்கன்றன்தலையைச்சேற்ற [லாங்
தலைவன்காண் மலைமகளாம் உமையைச் சால

அன்றி, 'மறம் தாங்கலாற்ருது' என்பதாம். பிறர் அறத்தின் வழிப்படுவோராய் அதனைச் செலுத்தமாட்டாமை தோன்ற, "ஏறவல்லான்" என்று அருளினுர். ஊன்-உடம்பு; ஊனவன் - பலவகை உடம்புகளாயும் நிற்பவன். உரை - சொல். உணர்வு - சொற்பொருள் உணர்வு.

847. உற்றவன் - (உயிர்களோடு) உடங்கியைந்து நின்றவன். உறவு எல்லாம் - அப்பன், அம்மை, உடன் பிறந்தார் முதலிய பலரும். 'ஒழிவு அற எங்கும் நின்று' என்க; ஓரிடமும் எஞ்சுதல் இல்லாது எவ்விடத்தும் நிறைந்து நின்று' என்பது பொருள். "ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி" (திருவா. போற்றித் - 215.) எனவும், "உம்பர்கட்கரசே ஒழிவற நிறைந்த யோகமே" (ஷை. பிடித்த - 1.) எனவும் அருளியவற்றை நோக்குக. உலப்பு - அழிவு. "ஆடை" என்றது, ஆடையின்மேற் கட்டப்படும் கச்சினை. 'புறங்காட்டில் எரியின்கண் ஆடல் புரிந்தான்' என்க. நற்றவன் - நல்ல தவக் கோலம் உடையவன். 'நற்றவனுய் அடியடைந்த மாணிக்கு' என்பதும் பாடம். மாணி - பிரமசாரி; மார்க்கண்டேயர்.

848. "வேள்வி" என்றது, வேள்வியின்பொருட்டுநிறைத்து வைக்கப்பட்ட பொருள்களை. உருண்டோட உதைத்தவன் என

Koviloor Digital Library

மதிப்பொழிந்த வல்லமரர் மாண்டார் வேள்வி
வந்தவியுண் டவரோடு மதனை யெல்லாஞ்
சிதைத்தவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. 7

849 உரிந்தவுடை யார்துவரால் உடம்பை மூடி
உழிதருமவ் வூமரவர் உணரா வண்ணம்
பரிந்தவன்காண் பனிவரைமீப் பண்ட மெல்லாம்
பறித்துடனே நிரந்துவரு பாய்நீர்ப் பெண்ணை
நிரைந்துவரும் இருகரையுந் தடவா வோடி
நின்மலனை வலங்கொண்டு நீள நோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன்காண்அவனென்சிந்தையானே.8, 9

இயையும். தொடர்ந்து - துரந்து சென்று. அருக்கன் - சூரியன்- 'சால ஒழிந்த' என இயையும். 'மாண்டாராய்' என எச்சமாக்கி, 'மாட்சிமைப்பட்டவராய் வேள்விக்கண் வந்து அவியை உண்டவர்' என உரைக்க. "வந்து" என்றது, இடவழுவமைதி, "வல்லமரர் உண்டவரோடு" என்றது, 'உண்டவராகிய வல்லமரரோடு' எனப் பொருள் தந்தது. ஓடு எண்ணிடைச்சொல். மதன் - அறியாமை. 'அவரது மதனை எல்லாம்' என்க. சிதைத்தவன் - அழித்தவன்.

849. உரிந்த உடையார் - நீங்கிய உடையினை யுடையவர்; உடை இல்லாதவர்; சமணர். துவர் - துவர் தோய்த்த ஆடை: அதனால் உடம்பை மூடுபவர், புத்தர். உழிதரும் - திரிகின்ற. ஊமர் - உணர்வில்லாதவர். பரிந்தவன் - (தன் அடியார்க்கு) அருள் புரிந்தவன். 'சமணரும் புத்தரும் இறைவனை இல்லை என்றே சொல்லிக் காலம் போக்கினும்; அவன், தன் அடியார்க்கு அருள் செய்தே நிற்கின்றான்' என்றதாம்; "புத்தரும் சமணரும் புறனுரைக்கப் - பத்தர்கட் கருள் செய்து பயின்றவனே" (திருமுறை 3. 4. 10.) என்றருளினார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். பனி வரை மீப்பண்டம் - குளிர்ந்த மலைகளின் மேல் உள்ள பொருள்கள்; அவை, 'சந்தனம், அகில், மூங்கில் முதலியன. பறித்து - வாரிக்கொண்டு; 'பரித்து' என்பதும் பாடம்

Koviloor Digital Library

850 அறுத்தவன்காண் அடியவர்கள் அல்ல லெல்லாம்
　　அரும்பொருளாய் நின்றவன்காண் அனங்க
மறுத்தவன்காண் மலைதன்னை மதியா தோடி　[ஞகம்
　　மலைமகள்தன் மனம்நடுங்க வானோ ரஞ்சக்
கறுத்தவனாய்க் கயிலாய மெடுத்தோன் கையுங்
　　கதிர்முடியுங் கண்ணும் பிதுங்கி யோடச்
செறுத்தவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
　　சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே 10

திருச்சிற்றம்பலம்

உடன் - அவற்றோடு கூட. நிரந்து - முறைப்பட்டு. ‘பெண்ணைப் பாய்நீர்’ என மாற்றுக. நிரைந்து - இணையொத்து. தடவா - தடவிக்கொண்டு. “நின்மலனை” என்றது, ‘நின்மலனாகிய தன்னை’ எனப் பொருள் தந்து. ‘நீள நோக்கி’ இடம் நெடிதாக நோக்கி; ‘நோக்குவதும் நின்மலனையே’ என்க. அணித்தாய் ஓடும் பெண்ணையாற்றுநீரினை, இறைவனை வலம் செய்துகண்டு கொண்டே ஓடுவதாக அருளிச்செய்தார்’ என்க.

இதனை அடுத்து நின்ற திருத்தாண்டகம் கிடைக்கவில்லை. இதன் பின் இறுதித் திருத்தாண்டகமே கிடைத்துளது.

850. ‘அல்லல் எல்லாம் அறுத்தவன்’ என்க. “அரும் பொருளாய் நின்றவன்” என்றது, அடைந்த பின்னரும், அடைந்தார்க்கு இன்பம் மேன்மேல் விளைத்தலால், அன்னதொரு பொருள் பிறிதில்லாமை உணர நிற்றல் பற்றி. மறுத்தவன் - ஒழித்தவன். ‘நடுங்கவும் அஞ்சவும் எடுத்தோன்’ என்க. கறுத்தல் - வெகுளல். கதிர் முடி - மகுடத்தால் ஒளிபெற்ற தலை. பிதுங்கி - பிதுங்கினமையால். ஓட - (செருக்குக்) கெட.

ஆறு சடைமே லணிந்தருளு மண்ணல் வைத்த படிக்காசால்
ஈறி லாத பொருளுடைய விருவ ருடைய திருமடங்கள்
சோறுநாளுந்தொண்டர்மகிழ்ந்துண்ணவுண்ணத்தொலையாதே
ஏறு பெருமை புவிபோற்ற வின்புற் றிருக்கு மந்நாளில்.　　261

—அப்பர் புராணம்.

Koviloor Digital Library

86. திருவாலம்பொழில்

திருப்பதிக வரலாறு

நாயனர், ஆவடுதண்டுறையிலிருந்து திருப்பழையாறை வடதளி சென்று தொழுது பொன்னியின் இருகரைகளிலும் உள்ள தலங்களை வணங்கிக்கொண்டு திருவானைக்கா செல் பொழுதில் திருவாலம்பொழில் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம் (திருநாவுக். பு. 301.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

851 கருவாகிக் கண்ணுதலாய் நின்ருன் தன்னைக்
கமலத்தோன் தலையரிந்த காபாலியை
உருவார்ந்த மலைமகளோர் பாகத் தானை
உணர்வெலா மானனை ஓசை யாகி
வருவானை வலஞ்சுழியெம் பெருமான் தன்னை
மறைக்காடும் ஆவடுதண் டுறையும் மேய
திருவானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 1

இத்திருப்பதிகம், சிவபெருமான்மீது அன்பு உண்டாகுமாறு அவனது பெருமைகள் பலவற்றையும் எடுத்தோதி, 'அவனை நினைக்க' என நெஞ்சிற்கு அறிவுறுத்து அருளிச்செய்தது.

851. கரு - எல்லாவற்றிற்கும் முதல். கண் நுதல் - கண்ணை உடைய நெற்றியை உடையவன். கமலத்தோன் - பிரமன். உரு ஆர்ந்த - அழகு நிறைந்த. உயிர்களும், அவைகள் உணரும் பொருள்களும் எண்ணிறத்தனவாதல்பற்றி, "உணர்வெலாம்" என்று அருளிச்செய்தார். "ஓசை" என்றது, எழுத்தைப் புலப்படுத்தும் ஓசையை. 'அவ்வோசையாகி வருவான்' என்றது. உணர்வாய் நின்று அதனை வளர்க்குமாற்றினை விளக்கியபடி. வலஞ்சுழி, மறைக்காடு, ஆவடுதுறை இவை சோழநாட்டுத் தலங்கள். மேய (மேவிய) - விரும்பி எழுந்தருளிய. திருவான் - மேன்மையை உடையவன். 'பரம்பைக்குடி' என்பது திருவாலம் பொழிற்குச் சார்பாய் உள்ள ஊர்; 'பொழில்' சோலையாதலின், அஃது அவ்வூரைச் சார்ந்துள்ளது என்க.

Koviloor Digital Library

852 உரித்தானைக் களிறதன்தோல் போர்வை யாக
வுடையானை யுடைபுலியி னதளே யாகத்
தரித்தானைச் சடையதன்மேற் கங்கை யங்கைத்
தழலுருவை விடமமுதா வுண்டி தெல்லாம்
பரித்தானைப் பவளமால் வரையன் னானைப்
பாம்பணையான் தனக்கன்றங் காழி நல்கிச்
சிரித்தானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 2

853 உருமூன்றாய் உணர்வின்கண் ஒன்றா னானை
ஓங்கார மெய்ப்பொருளை உடம்பி னுள்ளால்
கருவீன்ற வெங்களவை யறிவான் தன்னைக்
காலனைத்தன் கழலடியாற் காய்ந்து மாணிக்
கருளீன்ற ஆரமுதை அமரர் கோனை
யள்ளூறி யெம்பெருமான் என்பார்க் கென்றுந்
திருவீன்ற தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 3

852. 'களிறதன் தோல் உரித்தானை, (அதனைப்) போர்வையாகவும் புலியின் அதளே உடையாகவும் உடையானை, சடையதன்மேல் கங்கையையும் அங்கையில் தழல் உருவையும் தரித்தானை' என்க. "இதெல்லாம்" என்றதற்கு, 'இக் கோலத்தை எல்லாம்' என உரைக்க. பரித்தான் - மேற்கொண்டு நிற்பவன். 'உண்டதெல்லாம்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். பாம்பணையான் - திருமால். ஆழி-சக்கரம். சிரித்தான் - மகிழ்ச்சி யுற்றான்; என்றது, 'அருள்பண்ணினான்' என்றபடி.

853. உருமூன்று - 'அயன், அரி, அரன்' என்னும் நிலைகள். உணர்வின்கண் - உண்மையை உணருமிடத்து. ஓங்காரத்து மெய்ப்பொருள், எப்பொருளின் தோற்றம் நிலை இறுதிகட்குக் காரணன் என்பது. "உடம்பு" என்றது' பருவுடம்பையாகலின், "கரு" என்றது, அதற்கு முதலாய் உள்ள நுண்ணுடம்பாகிய மனத்தை என்க. 'அஃது ஈன்ற வெங்களவு' என்றது, வஞ்சனையாகிய எண்ணத்தை. அதனை உடம்பினுள்ளால் ஈன்ற' என்றது, பருவுடம்புபோலப் புலனாகாது நிற்றல் பற்றி. "அருள் ஈன்ற" என்றது, 'அருளை அவன்பொருட்டு ஆக்கிய, என்றபடி. அள் ஊறி - அன்புமிகப் பெருகி. திரு - நன்மை.

Koviloor Digital Library

854 பார்முழுதாய் விசும்பாகிப் பாதாளமாம்
பரம்பரனைச் சுரும்பமருங் குழலாள் பாகத்
தாரமுதாம் அணிதில்லைக் கூத்தன் தன்னை
வாட்போக்கி யம்மானை யெம்மா னென்று
வாரமதாம் அடியார்க்கு வார மாகி
வஞ்சனைசெய் வார்க்கென்றும் வஞ்ச னாகுஞ்
சீரரசைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 4

855 வரையார்ந்த மடமங்கை பங்கன் தன்னை
வானவர்க்கும் வானவனை மணியை முத்தை
அரையார்ந்த புலித்தோல்மேல் அரவ மார்த்த
அம்மானைத் தம்மானை அடியார்க் கென்றும்
புரையார்ந்த கோவணத்தெம் புனிதன் தன்னைப்
பூந்துருத்தி மேயானைப் புகலூ ரானைத்
திரையார்ந்த தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 5

854. "பார் முழுதாய் விசும்பாகிப் பாதளமாம்" என்றது, 'மூவுலகமாய் நின்றவன்' என்றபடி. பரம்பரன்-மிகமேலானவன். 'வாட்போக்கி' என்னுந்தலத்திற்குப் பிற்காலத்தில் இப்பெயரே சொல்லப்படினும், நாயனார் காலத்தில், 'ஆட் போக்கி' என்ற பெயரே சொல்லப்பட்டது எனக் கருத இடம் உண்டு; இத்தலம் சோழநாட்டில் உள்ளது. வாரம் - அன்பு, சீர் அரசு - சிறந்த அரசன்.

855. வரை ஆர்ந்த - மலையில் தங்கி வளர்ந்த. அம்மான் - எப்பொருட்கும் தலைவன். 'அடியார்க்கு என்றும் தம்மானை' என்க. அடியார்க்குத் தலைவனாய் நின்று அருளுதல் சிறப்பு வகையான் ஆதலின், அதனை வேறெடுத்தோதியருளினார். புரை - உயர்வு; வெண்மை. பூந்துருத்தி, புகலூர் சோழநாட்டுத் தலங்கள். திரை - அலை; அஃது ஆகுபெயராய் நீரைக்குறித்தது.

Koviloor Digital Library

856 விரிந்தானைக் குவிந்தானை வேத வித்தை
வியன்பிறப்போ டிறப்பாகி நின்றான் தன்னை
அரிந்தானைச் சலந்தரன்றன் உடலம் வேறா
ஆழ்கடல்நஞ் சுண்டிமையோ ரெல்லா முய்யப்
பரிந்தானைப் பல்லசுரர் புரங்கள் மூன்றும்
பாழ்படுப்பான் சிலைமலைநாண் ஏற்றி யம்பு
தெரிந்தானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 6

857 பொல்லாத என்னழுக்கிற் புகுவா னென்னைப்
புறம்புறமே சோதித்த புனிதன் தன்னை
எல்லாருந் தன்னை யிகழ அந்நாள்
இடுபலியேன் றகந்திரியும் எம்பி ரானைச்
சொல்லாதா ரவர்தம்மைச் சொல்லா தானைத்
தொடர்ந்துதன் பொன்னடியே பேணு வாரைச்
செல்லாத நெறிசெலுத்த வல்லான் தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 7

856. விரிந்து - படைப்புக் காலத்திலும், குவிந்தது அழிப்புக் காலத்திலும் என்க. "விரிந்தனை குவிந்தனை விழுங்கு யிருமிழ்ந்தனை" (திருமுறை. 2. 30. 3.) என்றது மேலும் காட்டப்பட்டது. "பிறப்பு இறப்பு" என்றதும், தோற்ற ஒடுக்கங்களை; அவற்றிற்கு நிமித்தமாய் நிற்பவனை அவையே யாக அருளிச்செய்தார். 'வேறு (க) அரிந்தானை' என்க. பரிந்தான் - அருள் கூர்ந்தான். 'சிலையாக மலையில் நாண் ஏற்றி' என்க. சிலை - வில்.

857. "அழுக்கு" என்றது, உடம்பை; மலம் நீங்கிய முத்தரது தனுவையும் கரணங்களையும் இறைவன் தன்னுடையனவாகக் கொண்டு அவற்றின்கண் தனது அருளாற்றல் வெளிப்பட நிற்பனாகலின், "என் அழுக்கிற் புகுவான்" என்று அருளினர். "நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற கற்பகமே" எனவும் பின்னர் வரும் (திருப்பதிகம் - 95. 4.). "புறம் புறம்", என்னும் அடுக்கு, 'கையைக் கையை நீட்டுகின்றான்' என்றல் போல, இடைவிடாமைப் பொருட்டு. 'புறத்தைப் புறத்தை' என உருபுவிரிக்க; ஏகாரம் தேற்றம். சோதித்தல் - ஆராய்தல்;

Koviloor Digital Library

858 ஐந்தலைய நாகவணைக் கிடந்த மாலோ
டயன்தேடி நாடரிய அம்மான் தன்னைப்
பந்தணவு மெல்விரலாள் பாகத் தானைப்
பராய்த்துறையும்வெண்காடும்பயின்றான்தன்னைப்
பொங்துடைய வெண்டலையிற் பலிகொள் வானைப்
பூவணமும் புறம்பயமும் பொருந்தி னானைச்
சிந்தியவெந் தீவினைகள் தீர்ப்பான் தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 8

859 கையிலுண் டுழல்வாருஞ் சாக்கியருங்
கல்லாத வன்மூடர்க் கல்லா தானைப்
பொய்யிலா தவர்க்கென்றும் பொய்யி லானைப்
பூண்நாகம் நாணாகப் பொருப்பு வில்லாக்
கையினார் அம்பெரிகால் ஈர்க்குக் கோலாக்
கடுந்தவத்தோர் நெடும்புரங்கள் கனல்வாய்
செய்தினார் தென்பரம்பைக் குடியின் மேய [வீழ்த்த
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 9, 10

திருச்சிற்றம்பலம்

குற்றங்களைந்து தூய்மை செய்தல். "அந்நாள்" என்றது, தாருகாவனத்து முனிவர் பத்தினியர்பாற்சென்ற காலத்தை. "என்று" என்றது, 'என்பதை முன்னிட்டுக் கொண்டு' என்றவாறு. 'அகங்களில் (இல்லங்களில்) திரியும்' என்க. "திரியும்" என்றது, இறப்பில் நிகழ்வு. சொல்லாதார் - வாழ்த்தாதவர். "சொல்லாதான்" என்றது, 'நினையாதவன்' எனத் தன் காரணந் தோற்றி நின்றது. செல்லாத நெறி - செல்லுதற்கு அரிய நெறி; ஞான நெறி; 'அழியாத நெறி' என்றும் ஆம்

858. பராய்த்துறை, வெண்காடு, புறம்பயம் இவை சோழ நாட்டுத் தலங்கள். பூவணம், பாண்டி நாட்டுத் தலம். பொந்து - புழை. சிந்திய - சிதறிக் கிடந்த; என்றது, 'பல பிறப்புக்களில் பல இடங்களில் செய்யப்பட்டுக் கிடந்த' என்றவாறு; இனி. 'சிந்திய - துன்புறுத்திய' என்றுமாம். 'சிந்தியவெந்தீவினைகள் தீரநின்ற' என்பதும் பாடம்.

859. கையில் உண்டு உழல்வார், சமணர். சாக்கியர் - புத்தர், 'உழல்வாரும் சாக்கியரும் ஆகிய கல்லாதார்' என்க; மெய்ந்

Koviloor Digital Library

நூல்களைக் கல்லாமையின், அவர் கல்லாதவராயினர். அல்லாதான் - நல்லனல்லாதான், பொய் - கரவு. 'கரவு இல்லாதவர்க்குக் கரவாது வெளிநின்று அருளுபவன்' என்றபடி. 'பூணுகின்ற நாகமே நாணுகவும்'' பொருப்பே (மலையே) வில்லாகவும் எரியும் (அக்கினி தேவனும்) காலுமே (வாயு தேவனுமே) கையிற் பொருந்திய அம்பினது ஈர்க்கும் கோலுமாகவும் கொண்டு புரங்களை வீழ்த்திய திருவாலம் பொழிலான், என்க. "பூண் நாகமே நாணுக" என்றது, இனம் நோக்கி. "ஈர்க்குக்கோல்" என்றதனை. "எரிகால்" என்பவற்றோடு எதிர் நிரனிறையாக இயைக்க. "கோல்" என்றது, கூர்மையை. ஈர்க்கு - சிறகு. கடுந்தவம் - மிக்க தவம். திரிபுரத்தவர் மிக்க தவம் செய்தே அவைகளைப் பெற்றமை யறிக. நெடும் புரம் - பெரிய ஊர்; அரண். செய்யின் ஆர் - வயல்களால் நிரம்பிய.

இத் திருப்பதிகத்திற் கிடைத்த திருத்தாண்டகங்கள் இவ்வளவே.

காலந் தவறு தீர்ந்தெங்குங் கலிவான் பொழிந்து புனல்கலந்து
ஞால மெல்லாங் குளிர்தூங்கி யுணவு பெருகி நலஞ்சிறப்ப
மூல வன்ப ரிருவர்களு மொழிமா லைகளும் பலசாத்தி
நீல கண்ட ருறைபதிகள் பிறவும் வணங்க நினைவுற்றார். 262

வாய்ந்த மிழலை மாமணியை வணங்கிப் பிரியா விடைகொண்டு
பூந்தண் புனல்சூழ் வாஞ்சியத்தைப்போற்றிப்புனிதர்வாழ்பதிகள்
ஏய்ந்த வன்பி னுலிறைஞ்சி யிசைவண் டமிழ்கள் புனைந்துபோய்ச்
சேர்ந்தார் செல்வத் திருமறைக்கா டெல்லை யில்லாச் சீர்த்தியினார்.

மன்றல் விரவு மலர்ப்புன்னை மணஞ்சூழ் சோலை யுப்பளத்தின்
முன்றி லோறுஞ் சிறுமடவார் முத்தங் கொழிக்கு மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக் கோவு மரசுந் திருமுன்பு, 264

பரவை யோதக் கழிக்கானற் பாங்கு நெருங்கு மப்பதியில்
அரவச் சடையந் தணனுரை யகில மறைக ளருச்சனைசெய்
துரறக் கதவந் திருக்காப்புச் செய்த வந்நாள் முதலிந்நாள்
வரையு மடைத்தே நிற்கின்ற மணிநீள் வாயில் வணங்குவார்.

—அப்பர் புராணம்.

Koviloor Digital Library

87. திருச்சிவபுரம்

திருப்பதிக வரலாறு

தாண்டகவேந்தர் திருக்குடமூக்கு அணைந்து இறைஞ்சி யருளினர். அதன் பின் நாலூர், திருச்சேறை, குடவாயில், நறையூர் முதலிய தலங்களில் உள்ள உமையொருபாகர் திருவடி போற்றினர். அக்காலை, விடைக்கொடியார் மேவுமிடங்கள் பல வற்றைப் பாடியருளியவற்றுள், ஒன்ருகலாம் இப்பதிகம். (திருநாவுக். புரா 216).

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

860 வானவன்காண் வானவர்க்கு மேலா ஞன்காண்
வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி ஞன்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் ருன்காண்
சிவனவன்காண்சிவபுரத்தேஞ்செல்வன்தானே. 1

இத்திருப்பதிகம், 'காண்' என்னும் முடிபுடைய தொடர் களால், சிவபிரானது பெருமைகளை வகுத்தருளிச் செய்தது.

860. வானவன் - தேவன்; என்றது, 'தேவருள் ஒருவன் போல நின்று, வேண்டுவார் வேண்டுவனவற்றை அருளுபவன்' என்றவாறு; சிவபிரான் தேவருள் ஒருவனுய் நின்று, அவர் கட்கும் மக்கள் முதலிய பிற உயிர்கட்கும் அருளுதல் பற்றி அவனைத் தேவருள் ஒருவனுகவே உணர்தல் மயக்க உணர்வே யாம் என்பதனை,

" தேவரி னொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார்; முதலுருப் பாதி மாத
ராவது முணரார்; ஆதி அரியயற் கரிய வொண்ணு
மேவரு நிலையு மோரார்; அவனுரு வினைவு மோரார்"

என விளக்கும் சிவஞான சித்தி (சூ 1, 49.)- இதனை அறி வுறுத்தற் பொருட்டே. பின்னர், "வானவர்க்கு மேலானுன்

Koviloor Digital Library

காண்'' என் றருளிச் செய்தார் என்க. ''வடமொழியும் தென் றமிழும் ஆனவன்'' என்றதன் கருத்தை, மேல் (பக். 177.) ''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்'' என்றதன் குறிப்பிற் காண்க. 'எல்லாப் பொருளும் வேதத்தின்கண் உள்ளன' என்றலின், ''மறைகள் நான்கும் ஆனவன் காண்'' என்றத னல், 'ஏனை எல்லா நூல்களும் ஆனவன்' என்பது தானே பெறப்பட்டது. ஐயன் - தலைவன். கானவன் - காட்டில் இருப் பவன். கானவனுக்கு - வேடனுக்கு; கண்ணப்ப நாயனுருக்கு; அவருக்கு அருள் செய்தமையை எடுத்தோதியது. இறைவற்கு அன்பு ஒன்றே உவப்பாவது; அதனுல், அவ்வன்பின் வழிப்பட்டவழி இழிந்தனவும் உயர்ந்தனவாய், உவகை யைப் பயப்பிக்கும்' எனவும், அதன் வழிப்படாதவழி உயர்ந்தனவும் இழிந்தனவாய், வெறுப்பைத் தோற்று விக்கும்' எனவும் உணர்த்துதற் பொருட்டு 'இதயத்து' என்புழி அத்து, அல்வழிக்கண் வந்த சாரியை; எனவே, 'இதய கமலம்' என்பது பொருளாயிற்று. இனி, 'இதயத் திடத்து, கமலத்துக்கண் ஊறும்தேன் போன்றவன்' என, ''கமலத்து ஊறும்'' என்றதனை இடைநிலையாக்கி உரைத்த லுமாம். ஊறும் - சுரக்கின்ற. 'ஊறும் தேன் போன்ற வன்' என்றது, உள்நின்று விளங்கி, இன்பம் தருதல் பற்றி. சென்று அடையாத செல்வம் - முன்பு இல்லாது, பின்பு காரணத் தாற் சென்று அடைதல் என்பது இன்றி, இயல்பாகவே உள்ள செல்வம்; அஃது அவனது வரம்பிலின்பம். ''சென்று அடை யாத'' என்றதனுல், நீங்காது என்றும் உளதாதலும் பெறப் பட்டது. ''சென்றடை யாத திருவுடையானை'' (திருமுறை 1-98-1) என்றருளினுர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரும், இப்பொருட்கு, ''அடையா'' என்னும் எச்சம் ''செல்வன்''. என்றதன் முதனிலையோடு முடியும்; இனி, 'பெயர்ந்து சென்று அடையாது, உணர்வு வேறுபாட்டானே அடையப்படும் இன்பப்பொருளாய்உள்ளவன்' என்றுஉரைத்தலுமாம். ''சிவன்'' என்பதன் பொருளை மேலே (பக். 230.) காண்க. ''சிவனவன்'' என்பதில் அவன், பகுதிப்பொருள் விகுதி. எம்செல்வன் எமக்குச் செல்வமாய் (எல்லா நன்மைகளுமாய்) உள்ளவன்

Koviloor Digital Library

861 நக்கன்காண் நக்கரவம் அரையி லார்த்த
நாதன்காண் பூதகண மாட ஆடும்
சோக்கன்காண் கோக்கிறகு சூடி ஞன்காண்
துடியிடையாள் துணைமுலைக்குச் சேர்வ தாகும்
போக்கன்காண்போக்கணத்தவெண்ணீற்றன்காண்
புவனங்கள் மூன்றினுக்கும் போருளாய் நின்ற
திக்கன்காண் சேக்கரது திகழு மேனிச்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்சேல்வன்தானே.

862 வம்பின்மலர்க் குழலுமையாள் மணவா ளன்காண்
மலரவன்மால் காண்பரிய மைந்தன் தான்காண்
கம்பமதக் கரிபிளிற வுரிசேய் தோன்காண்
கடல்நஞ்ச முண்டிருண்ட கண்டத் தான்காண்
அம்பர்நகர்ப் பேருங்கோயில் அமர்கின் றன்காண்
அயவந்தி யுள்ளான்காண் ஐயா றன்காண்
சேம்போனேனத் திகழ்கின்ற வுருவத் தான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்சேல்வன்தானே.

861. நக்கன் - உடையில்லாதவன்; இது பிட்சாடன கோலத்தைக் குறித்தது. 'நக்க அரவம்' என்பதில் அகரம் தொகுத்தலாயிற்று. நக்க - ஒளியை உடைய; 'ஒளி. மாணிக் கத்தது' என்க. சொக்கன் - அழகன். சேர்வு - சேரப்படும் இடம். பொக்கன் - பொலிவை உடையவன். பொக்கணம் - சம்புடம். "சுத்திய பொக்கணத்து" என்னும் திருக்கோவை யாரையும் காண்க (242.) பொருள் - முதற்பொருள்; 'உயிர்' என்றவாறு. திக்கு - புகலிடம். செக்கர் - செவ்வானம்; 'செக்கர் போலத் திகழும்' என்க. இனி. செக்கர் - சிவப்பு நிறமுமாம். அது, பகுதிப்பொருள் விகுதி.

862. வம்பு - வாசனை; இயற்கை மணம். கம்பம் - அசைவு. அம்பர் நகர்ப் பெருங்கோயில் - அம்பர்ப் பெருந்திருக்கோயில்; இது சோழநாட்டுத் தலம், "அயவந்தி" என்பது, திருச்சாத்த மங்கைத் தலத்தின் திருக்கோயிற் பெயர்; இத்தலம், சோழ நாட்டில் உள்ளது; திருநீலநக்க நாயனார் தோன்றியருளி அயவந்தி நாதரை வழிபட்டது. ஐயாறு - திருவையாறு.

Koviloor Digital Library

863 பித்தன்காண் தக்கன்தன் வேள்வி யெல்லாம்
பீடழியச் சாடி யருள்கள் செய்த
முத்தன்காண் முத்தீயு மாயினுன் காண்
முனிவர்க்கும் வானவர்க்கும் முதலாய் மிக்க
அத்தன்காண் புத்தூரில் அமர்ந்தான் தான்காண்
அரிசிற் பெருந்துறையே ஆட்சி கொண்ட
சித்தன்காண் சித்தீச் சரத்தான் தான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்தானே.

864 தூயவன்காண் நீறு துதைந்த மேனி
துளங்கும் பளிங்கனைய சோதி யான்காண்
தீயவன்காண் தீயவுணர் புரஞ்சேற் றுன்காண்
சிறுமான்கோள் செங்கையெம் பெருமான்தான்
ஆயவன்காண் ஆரூரி லம்மான் தான்காண் [காண்
அடியார்கட் காரமுத மாயி னுன்காண்
சேயவன்காண் சேமநெறி யாயி னுன்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்தானே.

863. பீடு - பெருமை. தேவர்கட்கே யன்றித் தக்கனுக்கும் பின்னர் அருள் செய்தமை யறிக. முத்தன் - பாசம் இல்லாதவன். முத் தீ, 'ஆகவனீயம், காருகபத்தியம். தக்கிணுக்கினி' என்பன. அத்தன் - தந்தை; 'முனிவர்க்கும் தேவர்க்குமே அத்தன், எனச் சிறந்தெடுத் தருளிச் செய்தது, அவர்கள் அந்நிலையை இயல்பில் அனுபவமாக ஐயமின்றி உணரும் பிறப்பினராதல் பற்றி. அரிசிற்பெருந்துறையை எடுத்தோதினமையால், புத்தூர், சோழநாட்டில் உள்ள அரிசிற்கரைப்புத்தூர் என்க. இது. புகழ்த்துணை நாயனுர் தோன்றியருளி, திருக்கோயிலில் சிவ பெருமானை வழிபட்டது. பாண்டிநாட்டுத் தலமாகிய புத்தூர், இதனின் வேறு. அரிசில் - அரிசில் ஆறு. சித்தன் - எல்லாம் செய்ய வல்லவன். சித்தீச்சரம். நறையூர்ச் சித்தீச்சரம்; சோழ நாட்டுத் தலம்.

864. 'மேனி சோதியான்' என இயையும். "சோதியான்" என, சினையை முதலொடு சார்த்தி முடித்தருளினுர். துளங்கும் - ஒளி விளங்குகின்ற. தீயவன் - தீயாய் இருப்பவன். "சிறுமான் பெருமான்" என்றது, முரண் தொடை நயம். ஆய் - தாய்; 'யாய்' என்பதன் மரூஉ; 'தாய்போன்றவன்' என்பது பொருள்.

Koviloor Digital Library

865 பாரவன்காண் பாரதனிற் பயிரா னுன்காண்
பயிர்வளர்க்குந் துளியவன்காண் துளியில் நின்ற
நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித் தான்காண்
நிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப் பன்றிப்
பிரியாது பலநாளும் வழிபட் டேத்தும்
சீரவன்காண் சீருடைய தேவர்க் கெல்லாஞ்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்தானே.

அகரம், சாரியை. 'ஆரூரில் ஆயவன்' என மாற்றி உரைப்பினும் ஆம். 'அடியார்கட்கு'' என்றமையால், ''சேயவன்'' என்றது, மற்றையோர்க்கு என்பது பெறப்படும். சேயவன் - சேய்மையில் உள்ளவன். சேமநெறி - பாது காவலான நெறி.

865. ''பார்'' என்றது, விளை நிலத்தை. துளி - மழை. பேர் - பெயர்; புகழ். ''இறைகடியன்'' என்று குடிகள் உரைக்கும் இன்னாச்சொல் (குறள் - 5, 64.) இன்றி, 'செங்கோலன்' எனக் கூறும் சொல்லையே நிலவேந்தர் தம் ஆட்சியாற் பெறும் பரிசாகத் தம் மனத்தில் எஞ்ஞான்றும் நினைதலின், அதனை, ''நிலவேந்தர் பரிசாக நினைவுற்று ஓங்கும் பேர்'' என்று அருளிச்செய்தார். 'அவர் நினைவின்கண் உற்று ஓங்கும் பேர்' என்க. பெயலும் விளையுளும் தொக்கு இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவர் நாட்டவாகச் செய்து, (குறள், 545,) அவர்க்கு மேற் கூறிய பரிசைப் பெறுவிப்பவன் இறைவனாதல் பற்றி, அவனை இவ்வாறு அருளிச்செய்தார். ''மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை'' என்பது திருவாசகம் (திருவம். 10.) இதனானே, சிவபிரான் திருக்கோயில் வழிபாடுகள் விழாக்கள் முதலியவற்றை நன்கு காத்தல் நிலவேந்தர்க்கு முதற் கடமையாதலும் பெறப்பட்டது. ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் - வீழ்க தண்புனல்'' என, அந்தணரையும் தேவரையும் ஆனினத்தையும் மழையையும் வாழ்த்தியருளிய ஆளுடைய பிள்ளையார், ''வேந்தனும் ஓங்குக'' (திருமுறை. 3. 54. 1,) என அரசனை வாழ்த்தியருளியதூஉம் இது பற்றி என்பதனை, ''ஆளும் மன்னனை வாழ்த்திய தற்சனை - மூளும் மற்றிவை காக்கும் முறைமையால்'' எனச் சேக்கிழார் நாயனார் விளக்கியருளினார். 'இது செய்யாத அரசன் தானும் கேடுற்றுத் தன் நாட்டினையும் கேடுறச் செய்வான்' என்பதனைத் திருமூல நாயனார் தமது திருமந்திரத்துள்,

Koviloor Digital Library

866 வெய்யவன்காண் வெய்யகன லேந்தி ஞன்காண்
வியன்கெடில வீரட்டம் மேவி ஞன்காண்
மெய்யவன்காண் பொய்யர்மனம் விரவா தான்காண்
வீணையோ டிசைந்துமிகு பாடல் மிக்க
கையவன்காண் கையில்மழு வேந்தி ஞன்காண்
காமனங்கம் பொடிவிழித்த கண்ணி ஞன்காண்
செய்யவன்காண் செய்யவளை மாலுக் கீந்த
சிவனவன்காண் சிவபுரத்தெஞ்செல்வன்தானே.

" ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற் ருனே"

எனவும்,

" முன்னவ ஞர்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங் குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே"

எனவும் அருளிச்செய்தார்.

பிறை எயிறு - பிறைபோன்ற கோரப் பல். வெள்ளைப்பன்றி - சுவேத வராகம்; இது திருமால் கொண்ட வடிவம். திருமால் இவ்வடிவத்துடன் நிலத்தை ஊழி வெள்ளத்திலிருந்து எடுத்து நிறுத்திய பின் இத் தலத்தில் சிவபெருமானை வழிபட்டனன் என்பது புராணம்.

" மதமிகு நெடுமுக னமர்வளை மதிதிக
ழெயிறத னுதிமிசை
இதமமர் புவியது நிறுவிய எழில்அரி
வழிபட அருள்செய்த
பதமுடை யவன்அமர் சிவபுரம் "

(திருமுறை: 1. 21. 7.) என்றருளினர் ஞானசம்பந்தரும். சீர் - புகழ், சீர் உடைய தேவர் - வேதங்களிலும், புராணங்களிலும் சொல்லப்படும் புகழை உடைய தேவர்கள். "சிவன்" என்றது, இங்கு, 'இன்பத்திற்குக் காரணன்' என்னும் பொருட்டு.

866. "வெய்யவன்" என்றது, வெய்யவர்க்கு. மெய்யவன் - மெய்ப்பொருளாய் உள்ளவன். மிக்க கை - மிகுதற்கு ஏதுவாய

Koviloor Digital Library

* * * *

* • * *

867 கலையாரு நூலங்க மாயி னுன்காண்
கலைபயிலுங் கருத்தன்காண் திருத்தமாகி
மலையாகி மறிகடலேழ் சூழ்ந்து நின்ற
மண்ணுகி விண்ணுகி நின்ருன் தான்காண்
தலையாய மலையெடுத்த தகவி லோனைத்
தகர்ந்துவிழ வோருவிரலாற் சாதித் தாண்ட
சிலையாரும் மடமகளோர் கூறன் தான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ்செல்வன் தானே.

திருச்சிற்றம்பலம்

கை; "கை" என்றது, ஈண்டு விரலே. 'பொடியாக விழித்த' என ஆக்கம் வருவிக்க. செய்யவன் - செம்மை (நன்மை) யுடையவன். செய்யவள் - திருமகள்: இவள், பாற்கடலில் தோன்றிய விடத்தைச் சிவபெருமான் உண்டபின்னர், தேவர் அமுதம் வரக் கடைந்தபொழுது தோன்றினமை நோக்கி அப்பெருமானுல் ஈயப்பட்டவளாக அருளினுர்; இது வானவர்க்கு அமுதம் ஈந்தமை போல்வது என்க. இனி, 'வளே - சங்கு; செய்ய வளே - செம்மையாய (நன்ருய) சங்கு' என உரைத்து, திருமாலுக்குச் சக்கரமே யன்றிச் சங்கினை அளித்த வரலாறு உளதேனும் கொள்க.

இத்திருப்பதிகத்துள், இதனை அடுத்த திருத்தாண்டகங்கள் கிடைத்தில; இறுதித் திருத்தாண்டகமே கிடைத்துளது.

867. கலை ஆரும் நூல் - கற்கப்படும் பொருள்கள் நிறைந்த நூல்; எனவே, 'உறுதிப் பொருள்களை உணர்த்தும் நூல்கள்' என்றவாருயிற்று. அங்கம் - கருவி நூல். கலை பயிலும் - கலைகளிற் பொருந்திய. கருத்தன் - கருத்துக்களாய் உள்ளவன்; இனி, 'கலைகளில் சொல்லப்படும் தலைவன்' என்றலுமாம், திருத்தம் - தீர்த்தம். தலையாய மலை, கயிலாயம். தகவு - பண்பு. தகர்ந்து - வலியழிந்து. சாதித்து - முடித்து. 'பின்பு ஆண்டருளிய' என்க. சிலை - மலை. 'மலைமகள்' என்னும் பாடத்திற்கு 'சிலை - கல். என்க.

Koviloor Digital Library

88. திருஓமாம்புலியூர்

திருப்பதிக வரலாறு

நாயனார், திருமுதுகுன்றம் பணிந்து தில்லை வரும்வழியில் வணங்கிப் பாடியதாகலாம் இத்திருப்பதிகம்.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

868 ஆராரும் மூவிலைவேல் அங்கை யானை
அலைகடல்நஞ் சயின்றானை அமர ரேத்தும்
ஏராரும் மதிபொதியுஞ் சடையி னானை
எழுபிறப்பும் எனையாளா வுடையான் தன்னை
ஊராரும் படநாகம் ஆட்டு வானை
உயர்புகழ்சேர் தரும்ஓமாம் புலியூர் மன்னுஞ்
சீராரும் வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 1

869 ஆதியான் அரிஅயனென் றறிய வொண்ணா
அமரர்தொழுங் கழலானை யமலன் தன்னைச்
சோதிமதி கலைதொலையத் தக்கன் எச்சன்
சுடர்இரவி அயிலெயிறு தொலைவித் தானை

இத் திருப்பதிகம், சிவபிரானது பெருமையைப் பலவாற்றானும் நினைந்து, அவனைச்சேராது மயங்கிய மயக்க உணர்விலே பல நாட்கள் போயினமை கருதி இரங்கியருளிச் செய்தது.

868. ஆர் ஆரும் - கூர்மை பொருந்திய. மூவிலை வேல் - சூலம், ஏர் ஆரும் - அழகு நிறைந்த. ஊர் ஆரும் - ஊர்தல் பொருந்திய, ஓமாம்புலியூர்த் திருக்கோயில், 'வடதளி' என்னும் பெயர் உடையது. திகைத்து - மயங்கி, செலுத்தினேன் - போக்கினேன். ஏகாரங்கட்கு மேலெல்லாம் (திருப்பதிகம்-54.) உரைத்தவாறே உரைக்க.

869. சிவபிரானுக்கு உரிய 'ஆதியான்' என்னும் பெயர் உருத்திரனுக்கும் உரியதாமாகலின், ஈண்டு உருத்திரனை,

Koviloor Digital Library

ஓதிமிக அந்தணர்கள் எரிமூன் றோம்பும்
உயர்புகழார் தரும்ஓமாம் புலியூர் மன்னும்
தீதில்திரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 2

870 வருமிக்க மதயானை யுரித்தான் தன்னை
வானவர்கோன் தோளனைத்தும் மடிவித் தானைத்
தருமிக்க குழலுமையாள் பாகன் தன்னைச்
சங்கரன்எம் பெருமானைத் தரணி தன்மேல்
உருமிக்க மணிமாடம் நிலாவு வீதி
உத்தமர்வாழ் தரும்ஓமாம் புலியூர் மன்னும்
திருமிக்க வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 3

"ஆதியான்" என்று அருளினர் என்க, "என்று" என்பது எண்ணிடைச் சொல்; அஃது ஓரிடத்து நின்றே பலவிடத்தும் இயையுமாகலின், "ஆதியான்" என்றது முதலாக, "அமரர்" என்பது ஈறாக உள்ள எல்லாவற்றோடும் இயைக்க. இவ் வெண்ணிடைச் சொல்லின் தொகைப் பொருளைத் தரும், 'இவர்' என்னும் சொல், இறுதிக்கண் தொகுத்தலாயிற்று. "அறிய ஒண்ணு அமரர்" என்றது, 'அளவறியப்படாத எண்ணிறந்த - தேவர்' என்றருளியவாறு. அமலன் - இயல்பாகவே பாசம் இல்லாதவன். எச்சன் - வேள்வித் தெய்வம். 'இரவியது எயிறு' என்க. அயில் - கூர்மை. "எயிறு" என்றதனை, "எச்சன்", என்றதன்பின், செவ்வெண் வகையான் இயைத்து, 'இவர்களை' என்னும் தொகைச் சொல்விரித்து, திணைவிராய் எண்ணின், பன்மை பற்றி உயர்திணை முடிவு கொண்டதாக உரைக்க. "தொலைவித்தான்" என்றதனை, "கலை தொலைய" என்றதற்கும் கூட்டுக. 'அந்தணர்கள் (வேதத்தை) மிக ஓதி' என்க. எரி மூன்று, மேல் குறிக்கப்பட்டன. இத்தலம் அந்தணர்கள் மிக்கு வாழ்வது என்பது திருப்பதிகங்களுள் இனிது விளங்குவதாம்.

870. வரும் - ஒழுகுகின்ற. 'வரும் மதம், மிக்க மதம்' எனத் தனித் தனி இயையும். வானவர்கோன் - இந்திரன்;

Koviloor Digital Library

871 அன்றினவர் புரமூன்றும் பொடியாய் வேவ
அழல்விழித்த கண்ணனை அமரர் கோனை
வென்றிமிகு காலனுயிர் போன்றி வீழ
விளங்குதிரு வடியெடுத்த விகிர்தன் தன்னை
ஒன்றியசீர் இருபிறப்பர் முத்தீ யோம்பும்
உயர்புகழ்நான் மறைஓமாம் புலியூர் நாளும்
தென்றல்மலி வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 4

872 பாங்குடைய எழில்அங்கி யருச்சனைமுன் விரும்பப்
பரிந்தவனுக் கருள்செய்த பரமன் தன்னைப்
பாங்கிலா நரகதனைத் தொண்ட ரானார்
பாராத வகைபண்ண வல்லான் தன்னை
ஓங்குமதில் புடைதழுவும் எழில்ஓமாம் புலியூர்
உயர்புகழந் தணரேத்த வுலகர்க் கென்றும்
தீங்கில்திரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 5

அவனது தோளைச் சிவபிரான் துணித் தமையை மேலே (பக். 228.) காண்க. தோள்கள் நான்காதலின், "அனைத்தும்" என்றருளினர். 'தருதல்' என்பது, இங்கு 'தன்னை விளக்குதல்' என்னும் பொருட்டாய், வளர்தலைக் குறித்து, 'வளர்தல் மிக்க' எனக் குழலுக்கு (கூந்தலுக்கு) அடையாயிற்று. "சங்கரன்" என்புழியும் இரண்டனுருபு விரிக்க. உரு - ஒளி; இதனை மணிக்கு அடையாக்குக. திரு - அழகு.

871. அன்றினவர் - பகைத்தவர். 'அழல் உண்டாக விழித்த' என்க. வென்றி, எவ்வுயிர்மேற் செல்லினும் அதனைக் கைக்கொண்டே மீளுதல்; 'அச்செயல் இங்குச் செல்லாதாயிற்று' என்றதாம். "எடுத்த" என்றது, 'எடுத்து உதைத்த' எனத் தன் காரியம் தோற்றி நின்றது. ஒன்றிய சீர் - பொருந்திய புகழ். இருபிறப்பர் - அந்தணர். 'நான்மறையை உடைய ஓமாம்புலியூர்' என்க. "தென்றல்மலி வடதளி" என்றது, அதனது பரப்பும், சோலை வளமும் குறித்தவாறு.

872. இத்தலத்தில் அக்கினிதேவன் வழிபட்டு அருள் பெற்றமை இத் திருத்தாண்டகத்தால் அறியப்படுகின்றது.

Koviloor Digital Library

873 அருந்தவத்தோர் தொழுதேத்தும் அம்மான் தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தம்மேல்
வருந்துயரந் தவிர்ப்பானை உமையாள் நங்கை
மணவாள நம்பியையென் மருந்து தன்னைப்
பொருந்துபுனல் தழுவுவயல் நிலவு நுங்கப்
பொழில்கெழுவு தரும்ஓமாம் புலியூர் நாளும்
திருந்துதிரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 6

874 மலையானை வருமலையோன் றுரிசெய் தானை
மறையானை மறையாலும் அறிய வொண்ணுக்
கலையானைக் கலையாருங் கையி ஞனைக்
கடிவானை அடியார்கள் துயர மெல்லாம்
உலையாத அந்தணர்கள் வாழும் ஓமாம்
புலியூர்எம் உத்தமனைப் புரம்மூன் றெய்த
சிலையானை வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 7

பாங்கு - நன்மை. 'நரகதனில்' என்பது பாடம் அன்று. இத் திருத்தாண்டகத்தின் மூன்றும் அடியின் முதற்றூக்கு நாற்சீரா கியும், மூன்றுஞ்சீர் மூவசைச் சீராய் நின்றது. 'உலகர்க்கு என்றும் தீங்கில்லாமைக்கு ஏதுவாகிய வடதளி' என்க; அஃது அன்னதாதல் அங்குப் பூசையும் விழவும் செவ்வனே நடை பெறுதலாம்.

873. ஆராத - தெவிட்டாத. 'உமையாளாகிய நங்கைக்கு ஏற்ற மணவாளனுகிய நம்பி' என்க. 'நங்கை' என்பது பெண்டிருட் சிறந்தாட்கும், 'நம்பி' என்பது ஆடவருட் சிறந் தாற்கும் பெயராதல் அறிக. மருந்து - அமுதம்; 'என் மருந்து' என்றது, தமக்கு அனுபவமாகிய உவகைபற்றி. துங்கம் - உயர்ச்சி. திருந்து - எல்லாம் இனிது அமைந்த.

874. மலையான் - மலையின்கண் (கயிலையில்) இருப்பவன். வருமலை-யானை. மறையான் - வேதத்தில் உள்ளவன்; 'எனினும் அதனல் அறியப்படாத தன்மையுடையவன்' என்றபடி. கலை -

Koviloor Digital Library

875 சேர்ந்தோடு மணிக்கங்கை சூடி னானைச்
செழுமதியும் படஅரவும் உடன்வைத் தானைச்
சார்ந்தோர்கட் கினியானைத் தன்னொப் பில்லாத்
தழலுருவைத் தலைமகனைத் தகைநால் வேதம்
ஓர்ந்தோதிப் பயில்வார்வாழ் தருமோமாம் புலியூர்
உள்ளானைக் கள்ளாத அடியார் நெஞ்சிற்
சேர்ந்தானை வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 8, 9

கூறு; தன்மைகள்; என்றது, அவனது அருளின் கூறுகளையே யாம். இது பற்றியே, வேதத்துட் சொல்லப்பட்ட ஈசானாதி ஐந்து பெருமந்திரங்களை முப்பத்தெட்டுக் கலைகளாக (கூறுகளாக) வைத்து நியசித்துச் சிவபெருமானை வழிபடும் முறையைச் சைவாகமங்கள் விதிக்கின்றன. கலை ஆரும் கையினன் - மான் பொருந்திய கையை உடையவன். 'அடியார்கள் துயரம் எல்லாம் கடிவான்' என்க. உலையாத - (ஒழுக்கத்தில்) தளராத.

875. 'மணியோடு சேர்ந்து ஓடும் கங்கை' என்க. 'மணிகளைக் கொழித்து ஓடும்' என்பது பொருள். உடன் - ஒருங்கு. 'மதியும் அரவும் தம்முள் இயையாத பகைப்பொருள் களாய் இருப்ப அவைகளை அவ்வாறின்றி இயைய வைத்தவன்' என்றபடி. "உரு" என்றது ஆகுபெயராதலின், 'தழல் போலும் உருவினனை' என்க. தலைமகன் - தலைவன். இறைவனை, "மகன்" என்றது, பான்மை வழக்கால் என்க. தகை - பெருமை. ஓர்ந்து - ஆராய்ந்து. கள்ளாத - களவு செய்யாத; என்றது. 'அறிவையும் பிறரை வஞ்சித்துப்பெருத' என்றவாறு. இதனையே, "எனைத்தொன்றும் - கள்ளாமை காக்க" என்றருளினார் திருவள்ளுவ நாயனார் (குறள் - 281.)

இத்திருத்தாண்டகத்தை அடுத்து, இறுதித் திருத்தாண்டகமே உள்ளது.

Koviloor Digital Library

876 வார்கெழுவு முலையுமையாள் வெருவ அன்று
மலையெடுத்த வாளரக்கன் தோளுந் தாளும்
ஏர்கெழுவு சிரம்பத்தும் இறுத்து மீண்டே
இன்னிசைகேட்டிருந்தானைஇமையோர்கோனைப்
பார்கெழுவு புகழ்மறையோர் பயிலும் மாடப்
பைம்பொழில்சேர் தரும்ஓமாம் புலியூர் மன்னும்
சீர்கெழுவு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. 10

திருச்சிற்றம்பலம்

876. வார் - கச்சு. கெழுவு - பொருந்திய. ஏர் - அழகு. இறுத்து - நெரித்து. "கேட்டிருந்தான்" 'உவந்தான்' என்னும் குறிப்பினது. பயிலும் - மிக்கு வாழ்கின்ற. 'பயிலும் புலியூர், மாடப்புலியூர், பொழில் சேர்தரும் புலியூர்' என்க. சீர் - புகழ்.

தொல்லை வேதந் திருக்காப்புச் செய்த வாயிற் றொடர்வகற்ற
வல்ல வன்ப ரணையாமை மருங்கோர் வாயில் வழியெய்தி
யல்ல நீர்ப்பார் தமையருச்சிப் பார்க டொழுவா ராம்படிகண்
டெல்லை யில்லாப் பெரும்புகழா ரிதனை யங்குக் கேட்டறிந்தார்.

ஆங்கப் பரிசை யறிந்தருளி யாழித் தோணி புரத்தரசர்
ஓங்கு வேத மருச்சனைசெ யும்பர் பிரானை யுள்புக்குத்
தேங்கா திருவோ நேரிறைஞ்சத் திருமுன் கதவந் திருக்காப்பு
நீங்கப் பாடு மப்பர்என நீடுந் திருநா வுக்கரசர். 267

உண்ணீர் மையினுற் பிள்ளையா ருரைசெய் தருள வதனுலே
பண்ணினேருமொழியாளென்றெடுத்துப்பாடப்பயன்றுய்ப்பான்
றெண்ணீரணிந்தார்திருக்காப்புநீக்கத்தாழ்க்கத்திருக்கடைக்காப்
பெண்ணீ ரிரக்க மொன்றில்லீர் என்று பாடி யிறைஞ்சுதலும். 268

வேதவனத்தின்மெய்ப்பொருளினருளால்விளங்குமணிக்கதவங்
காத லன்பர் முன்புதிருக் காப்பு நீங்கக், கலைமொழிக்கு
நாதர் ஞான முனிவருடன் றொழுது விழுந்தார்; ஞாலத்துள்
ஓத வொலியின் மிக்கெழுந்த தும்ப ரார்ப்பு மறையொலியும். 269

—அப்பர் புராணம்.

Koviloor Digital Library

89. திருஇன்னம்பர்

திருப்பதிக வரலாறு

நாயனர் திருச்சத்திமுற்றத்திருக்கும் சிவக்கொழுந்தை வேண்டி, நல்லூரில் அவ் வேண்டுகோளாகிய திருவடி தீட்சை செய்தருளப் பெற்றுர். திருநல்லூரில் இறைவர்க்குத் திருப்பணிகள் நாளும் செய்து பாவுற்ற தமிழ்மாலை பல பாடி வீற்றிருக்கும் நாட்களில் இத்தலம் அணைந்து பாடியருளியதாக லாம் இத்திருப்பதிகம். (திருநாவுக். பு. 197)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

877 அல்லிமலர் நாற்றத் துள்ளார் போலும்
அன்புடையார் சிந்தை அகலார் போலுஞ்
சோல்லின் அருமறைகள் தாமே போலுந்
தூநேறிக்கு வழிகாட்டுந் தோழிலார்போலும்
வில்லிற் புரமுன் றேரித்தார் போலும்
வீங்கிருளும் நல்வேளியு மானுர் போலும்
எல்லி நடமாட வல்லார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச ஞுரே. 1

இத்திருப்பதிகம், 'போலும்' என்னும் முடிபுடைய தொடர் களால் இறைவன் பெருமைகளை வகுத்து அருளிச்செய்தது.

877. அல்லி - அகஇதழ். 'அக இதழ்களையுடைய மலர் களது நறுமணங்களிலே இருந்து இன்பம் தருவார்' என்க. சொல்லின் அருமறைகள் - சொற்களையுடைய அரிய வேதங்கள். தூநெறியாவது, மெய்யுணர்வு; தத்துவஞானம்; அதனை இறைவர், தம்மை நோக்கிச் செய்யும் தவம் காரணமாக வந்து அருளுதலாலும், அஃது, அவரது ஐந்தொழில்களில் முடிந்த பயனுய் உள்ள தொழிலாதலாலும், "தூநெறிக்கு வழிகாட்டும் தொழிலார்" என்று அருளினுர். வீங்கு இருள் - மிக்க இருள். "நல் வெளி" என்றதும், 'மிக்க ஒளி' என்னும் பொருளதே.

Koviloor Digital Library

878 கோழிக் கோடியோன்தன் தாதை போலும்
கோம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வரும் தாமே போலும்
உள்குவா ருள்ளத்தி னுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகருந் தாமே போலும்
அடைந்தவர்கட் கன்பராய் நின்றார் போலும்
ஏழு பிறவிக்குந் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. உ

இறைவரை இருளாகவும் அருளியது, மலத்தினது ஆற்றல் கெடுதற் பொருட்டு, அதன்வழிநின்று அதனைத்தொழிற்படுத்தல் பற்றி என்க. இதனையே,

"ஏயும்மும் மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் றனதோர் சத்தி திரோதான கரியது"

எனச் சிவஞானசித்தியும், (சூ. 2. 87.)

"பாகமாம் வகைநின்று திரோதாயி சத்தி
பண்ணுதலான் மலம்எனவும் பகர்வர்"

எனச் சிவப்பிரகாசமும் விளக்கின. எல்லி - இரவு. இத்தலத்தில் சிவபிரானை நாயனார், "தான்தோன்றி (சுயம்புமூர்த்தி)' என்றே அருளுகின்றார்.

878. கோழிக் கொடியோன் - முருகக் கடவுள். தாதை - தந்தை. கொம்பு அன்னாள் - பூங்கொம்புபோன்றவள்; உமாதேவி. குளிர்ந்தார் - மகிழ்ந்தார். ஊழி முதல்வர் - ஊழியின் நிகழ்ச்சிகளுக்குத் தலைவர். உம்மை, சிறப்பு. "தாமே" என்னும் ஏகாரம், பிரிநிலை; அது, பிறர் இன்றித் தாம் ஒருவரேயாய முழு முதற்றன்மையை விளக்கிற்று. ஆழி என்றது இரட்டுறமொழிதலாய், சூரிய சந்திரராகிய மண்டிலங்களையும், தேர்ச் சக்கரங்களையும் உணர்த்தின; எனவே, 'சூரிய சந்திரர்களாகிய சக்கரங்களையுடைய தேரினை ஊரவல்லவர் என்றதாயிற்று. வித்தகர் - திறலுடையவர். 'ஏழு பிறவிக்கும் தாமே' என்புழி, 'தாமே காரணர்' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

Koviloor Digital Library

879 தொண்டர்கள் தம்தகவி னுள்ளார் போலும்
தூநெறிக்குந் தூநெறியாய் நின்றார் போலும்
பண்டிருவர் காணாப் படியார் போலும்
பத்தர்கள்தம் சித்தத் திருந்தார் போலும்
கண்டம் இறையே கறுத்தார் போலும்
காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்
இண்டைச் சடைசேர் முடியார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. 3

880 வானத் திளந்திங்கட் கண்ணி தன்னை
வளர்சடைமேல் வைத்துகந்த மைந்தர் போலும்
ஊனொத்த வேலோன் றுடையார் போலும்
ஒளிநீறு பூசு மொருவர் போலும்
தானத்தின் முப்பொழுதுந் தாமே போலும்
தம்மிற் பிறர்பெரியா ரில்லார் போலும்
ஏனத் தெயிறிலங்கப் பூண்டார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. 4

879. தகவு - தகுதி; அது, மெய்யன்பு. தூநெறி - ஞான நெறி, 'அதற்குப் பற்றுக்கோடாய் இருப்பவர்' என்பதாம். இருவர், மாலும் அயனும். படி - நிலைமை. இறையே - சிறிதே. இண்டை - முடிமாலை.

880. 'வானத்துத் திங்கள்' என இயையும்; 'வானத்துக் கண் உலாவுவதாகிய திங்கள்' என்பது பொருள். 'திங்களாகிய கண்ணி' என்க. கண்ணி - முடியில் அணியும் மாலை. ஒத்த - பொருந்திய. "வேல்" என்றது, சூலத்தை, தானம் - கொடை; அது, சந்தியா காலங்களில் அருக்கியம் முதலியன கொடுத்தலைக்குறித்தது. முப்பொழுது என்றது, சந்தியா காலங்களை. 'அக்காலங்களின் முதல்வராய் இருந்து, வழிபடுவோர் செய்யும் வழிபாடுகளை ஏற்றருளுபவர்' என்றபடி. 'எல்லாவற்றையும் சிவபிரானே ஏற்றருளுவன் என்பது என்னை?' என்னும் ஐயத்தினை நீக்குதற்கு, "பிறர்பெரியார் இல்லார்" என்று அருளினார். இதனையே சிவஞான சித்தி,

Koviloor Digital Library

881 சூழுந் துயரம் அறுப்பார் போலும்
தோற்றம் இறுதியாய் நின்ருர் போலும்
ஆழுங் கடல்நஞ்சை யுண்டார் போலும்
ஆடலுகந்த அழகர் போலும்
தாழ்வின் மனத்தேனை யாளாக் கொண்டு
தன்மை யளித்த தலைவர் போலும்
ஏழு பிறப்பு மறுப்பார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச ஞரே. 5

882 பாதத் தணியுஞ் சிலம்பர் போலும்
பாரூர் விடையோன் றுடையார் போலும்
பூதப் படையாள் புனிதர் போலும்
பூம்புகலூர் மேய புராணர் போலும்
வேதப் பொருளாய் விளைவார் போலும்
வேடம் பரவித் திரியுந் தொண்டர்
ஏதப் படாவண்ணம் நின்ருர் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச ஞரே. 6

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாக ஞர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும்இ றக்கும் பிறக்கும்மேல் வினையும் செய்யும்
ஆதலால் இவையி லாதான் அறிந்தருள் செய்வ னன்றே"

என விளக்கிற்று. (சூ. 2. 25.)

881. சூழும் - வந்து வளைத்துக்கொள்கின்ற. தோற்றம் இறுதி - படைப்பு அழிப்புக்கள்; உம்மைத் தொகை. அவைகளைச் செய்பவரை அவரேயாகச் சார்த்தியருளிச் செய்தார். தாழ்வின் மனம் - தாழ்வினை (இழிவினை) உடையமனம். 'மனத்தேனையும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. தன்மை - பெருந்தன்மை; ஞானம்.

882. பார் ஊர் விடை - பூமியின்மேல் நடத்துதற்குரிய இடபம்; 'அன்னம், கருடன் முதலியனபோல ஆகாயத்தில் நடத்துதற்குரிய ஊர்தி அன்று' என்றபடி. பூம்புகலூர், அழகிய புகலூர்; இது சோழநாட்டுத்தலம்; நாயனுர் இறைவன் திருவடி

Koviloor Digital Library

883 பல்லார் தலையோட்டில் ஊணுர் போலும்
பத்தர்கள்தம் சித்தத் திருந்தார் போலும்
கல்லாதார் காட்சிக் கரியார் போலும்
கற்றவர்கள் ஏதங் களைவார் போலும்
பொல்லாத பூதப் படையார் போலும்
பொருகடலும் ஏழ்மலையுந் தாமே போலும்
எல்லாரு மேத்தத் தகுவார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச ஞரே, 7

884 மட்டு மலியுஞ் சடையார் போலும்
மாதையோர் பாக முடையார் போலும்
கட்டம் பிணிகள் தவிர்ப்பார் போலும்
காலன்தன் வாழ்நாள் கழிப்பார் போலும்
நட்டம் பயின்ருடும் நம்பர் போலும்
ஞாலமேரி நீர்வேளிகா லாஞர் போலும்
எட்டுத் திசைகளுந் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச ஞரே: 8

யடைந்த இடம். வேடம் பரவித்திரிவார் - திருநீறு கண்டிகை, சடை, கல்லாடை முதலியவைகள் எங்கே காணப்படினும் அங்கெல்லாம் சிவபிரானை ஏத்தி இறைஞ்சி நிற்பவர். ஏதப்படா வண்ணம் - துன்பத்திற் பொருந்தாதபடி.

883. பல் ஆர் - பற்கள் நிறைந்த. ‘பல் ஆர் ஓடு’ என இயையும். இனி, பிரமர்தாம் பலராதல் பற்றி. “பல்லார் தலை” என்ருர் எனினுமாம். “கல்லாதார், கற்ருர்” என்பன, அருள் நூல்களைக் கல்லாதார் கற்ருர்களைக் குறித்தன. ஏதம் - துன்பம். ‘பொல்லாத பூதப்படை’ என்றது, அவை பிறரைத் திண்டி வருத்துவனவாதல் பற்றி; இஃது இனம்பற்றி நயம்பட அருளிச் செய்ததன்றிச் சிவபூதங்கள் அன்ன அல்ல; நல்லனவே செய்வன என்க. பொருகடல் - அலைமோதுகின்ற கடல். “ஏழ்” என்றதனைக் கடலுக்கும் கூட்டுக. “தகுவார்” என்றது, பெருமை நோக்கியே யன்றி, அருள் நோக்கியுமாம்; அதனுல், ‘சிலர் ஏத்தாதொழிதல் என்’ என இரங்கியருளியவாருயிற்று.

884. மட்டு - தேன்; இது, கொன்றை மலரில் மிகுந்துளது. மலியும் - நிறைந்த. கட்டம் - துன்பம்; மனக்கவலை.

Koviloor Digital Library

885 கருவுற்ற காலத்தே யென்னை ஆண்டு
கழற்போது தந்தளித்த கள்வர் போலும்
செருவிற் புரமூன்றும் அட்டார் போலும்
தேவர்க்குந் தேவராஞ் செல்வர் போலும்
மருவிப் பிரியாத மைந்தர் போலும்
மலரடிகள் நாடி வணங்க லுற்ற
இருவர்க் கொருவராய் நின்றார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னாரே. ௯

'கட்டமும் பிணியும் தவிர்ப்பார்' என்க. பயின்று ஆடுதல் - எப்பொழுதும் ஆடுதல். ஞாலம் - நிலம். வெளி - வான். கால் - காற்று.

885. "ஆண்டு" என்றது, மெய்யுணர்வைப் பெறும் அவாவை உண்டாக்கினமையை; இது, "கருவுற்ற நாள் முதலாக வுன்பாதமே காண்பதற்கு, உருகிற்றென் உள் ளமும்; நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்" எனத் திருவிருத்தத்துள் அருளிச்செய்தமையான் அறியப்படும் (திரு முறை 4. 99. 6.) 'பின்பு கழற்போது தந்தளித்த' என்க. அளித்த - காத்த. "கள்வர்" என்று அருளினார், முதலில் வெளிப்படாதிருந்து பின்பு வெளிப்பட்டமையின். செருவில் - போரின்கண்; 'செருச் செய்கின்ற வில்லால்' என்று உரைத்த லும் ஆம். அட்டார் - அழித்தார். மருவிப் பிரியாத - கூடியபின் பிரியாத; இறைவன் உயிர்களைக் கூடுதல் அவை மெய்யுணர்வு பெற்ற பின்னரே யாகலின், பின்னர்ப் பிரிதல் இலனாயினான். "துறக்கு மாசொ லப்படாய் துருத்தியாய்" என்றார் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், (திருமுறை 2. 98. 5.) இருவர் - மாலும் அயனும்; இவர்கள் முதலில் செருக்குக்கொண்டு இறைவனைத் தேடி எய்த்துப் பின்பு வழிபட்டு உய்ந்தார்களாக லின் "மலரடிகள் நாடி வணங்கலுற்ற இருவர்க்கு ஒருவராய் நின்றார்" என்று அருளினார். ஒருவர் - ஒப்பற்ற தலைவர்.

Koviloor Digital Library

886 அலங்கற் சடைதாழ ஐய மேற்று
அரவம் அரையார்க்க வல்லார் போலும்
வலங்கை மழுவோன் றுடையார் போலும்
வான்தக்கன் வேள்வி சிதைத்தார் போலும்
விலங்கல் எடுத்துகந்த வெற்றி யானை
விறலழித்து மெய்ந்நரம்பால் கீதங் கேட்டன்
றிலங்கு சுடர்வாள் கொடுத்தார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீச னூரே. 10

திருச்சிற்றம்பலம்

886. அலங்கல்-(கொன்றை) மாலை. 'வலத்தின்கண் உடையார்; கைக்கண் உடையார்' என்க. இனி, 'வலக்கை' என்பது மெலிந்து நின்றது எனலுமாம். விலங்கல் - மலை. உகந்த - மகிழ்ந்த; கயிலையைப் பெயர்த்த அளவில் இராவணனுக்குத் தனது வெற்றிபற்றி ஓர் மகிழ்ச்சி உளதாயிற்று என்க. விறல் - வெற்றி. 'அவ்விறல்' எனச் சுட்டு வருவித்து உரைக்க மெய்ந் நரம்பு - உடம்பில் உள்ள நரம்பு.

அன்ப ரீட்டங் களிசிறப்ப வாண்ட வரசுஞ் சிவக்கன்றும்
இன்ப வெள்ளத் திடைமூழ்கி யெழுந்துள் புகுந்து தம்பெருமான்
முன்பு பணிந்து போற்றிசைத்துப் பரவி மொழிமா லைகள்பாடி
யென்பு கரைய வுள்ளுருகி யிறைஞ்சி யரிதிற் புறத்தணைந்தார்.

புறம்பு நின்று வாகீசர் புனித ரருளா லிக்கதவந்
திறந்து மடைத்துஞ் செல்லுநெறி திருந்த மலையா டிருமுலையிற்
கறந்த ஞானங் குழைத்தமுது செய்த புகலிக் கவுணியரை
நிறைந்த கதவ மடைக்கும்வகை நீரும் பாடி யருளுமென. 271

சண்பை யாளுந் தமிழ்விரகர் தாமுந் திருநா வுக்கரசர்
பண்பின் மொழிந்த வுரைகொண்டு, பதிகம் பாடு மவ்வளவிற்
கண்பொற் பமைந்த நுதற்காள கண்ட ரருளாற் கடிதுடனே
திண்பொற் கதவந் திருக்காப்புச் செய்த தெடுத்த திருப்பாட்டில்.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

90. திருக்கஞ்சனூர்

திருப்பதிக வரலாறு

நாயனூர், மயிலாடுதுறையினின்றும் துருத்தி. வேள்விக்குடி, எதிர்கொள்பாடி முதலான பதி பலவும் வணங்கிக்கொண்டு திருக்கோடிகா செல்பொழுதில் திருக்கஞ்சனூர் தொழுது பாடி யருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு. 190.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

887 மூவிலைநற் சூலம்வலன் ஏந்தி னானை
மூன்றுசுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடையோன் றேறு வானை
நால்வேதம் ஆறங்க மாயி னானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோவை
அயன்திருமா லானானை அனலோன் போற்றுங்
காவலனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 1

இத்திருப்பதிகம், சிவபிரானைக் கஞ்சனூரிற் கண்டு வணங்கிய உவகை மேலிட்டின்கண், அப்பெருமானது பெருமைகள் பலவற்றையும் எடுத்தோதி, அவனை, 'கற்பகம்' என வாழ்த்தி, 'அத்தன்மையானை நான் கண்ணாரக்கண்டு உய்ந்தேன்' என்று அருளிச்செய்தது.

887. மூன்று சுடர்க் கண்ணான் - 'சூரியன், சந்திரன், அக்கினி' என்னும் முச்சுடர்களாகிய கண்களை உடையவன். நாவலன் - புலவன்; என்றது, வேதமும் தமிழும் உரைத்தவ னாதல் பற்றி. தருமிக்குப் பொற்கிழி யளித்த வரலாறும் நினைக்கத்தக்கது. நரை - வெண்மை. அயன் திருமால் ஆதல், சுத்தமாயையில் நேரேயும், பிரகிருதி மாயையில் பிறரை அதிட்டித்தும் அவ்வாறு நிற்றலாம். இத்தலம் அக்கினி தேவன் வழிபட்ட தலமாதல் பற்றி, "அனலோன் போற்றும் காவலன்" என்றருளினர்; இங்கு இறைவர், 'அக்கினீச்சுரர்' எனவும்,

Koviloor Digital Library

888 தலையேந்து கையானை யென்பார்த் தானைச்
சவந்தாங்கு தோளானைச் சாம்ப லானைக்
குலையேறு நறுங்கொன்றை முடிமேல் வைத்துக்
கோணாக மசைத்தானைக் குலமாங் கைலை
மலையானை மற்றொப்பா ரில்லா தானை
மதிகதிரும் வானவரும் மாலும் போற்றுங்
கலையானைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 2

889 தொண்டர்குழாம் தொழுதேத்த அருள்செய் வானைச்
சுடர்மழுவாட் படையானைச் சுழிவான் கங்கைத்
தெண்டிரைகள் பொருதிழிசெஞ் சடையி னானைச்
செக்கர்வா னொளியானைச் சேரா தெண்ணிப்

தீர்த்தம், அக்கினி தீர்த்தம்' என்றும் சொல்லப்படுதல் அறியத் தக்கது. "ஆண்ட" என்றது, 'ஆட்சியாகக்கொண்ட' என்னும் பொருளது.

888. தலை - பிரமகபாலம். என்பு ஆர்த்தான் - எலும்பை மாலையாகக் கோத்து அணிந்தான். 'சவம்' என்றது, பிரம விட்டுணுக்களது எலும்புக் கூட்டினை; 'கங்காளம்' எனப்படுவன இவையே. இவை, அவ்விருவரும் சேர இறக்க வரும் நாளில் ஏற்கப்படுவன.

" நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காள ந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலா ந் தரத்திருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ "

(திருவா. திருச்சா. 11.) என்றருளிச் செய்ததும் இவைகளையே என்க. குலையேறு - கொத்தாய்ப் பொருந்திய. குலம் - மேன்மை. கலையான் - உருவத் திருமேனியை உடையவன்.

889. "சுழி" என்பது, "கங்கை" என்பதனோடு இயையும், அதனை, வேற்றுமைத் தொகையாக வேனும், வினைத்தொகையாக வேனும் இயைத்து, 'சுழியையுடைய கங்கை' என்றுதல், 'சுழிக்கின்ற கங்கை' என்றுதல் உரைக்க. பொருது - மோதி.

Koviloor Digital Library

பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாம்
பாழ்படுத்துத் தலையறுத்துப் பற்கண் கொண்ட
கண்டகனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 3

890 விண்ணவனை மேருவில்லா வுடையான் தன்னை
மெய்யாகிப் பொய்யாகி விதியா னானைப்
பெண்ணவனை ஆணவனைப் பித்தன்தன்னைப்
பிணமிடுகா டுடையானைப் பெருந்தக் கோனை
எண்ணவனை எண்டிசையுங் கீழும் மேலும்
இருவிசும்பும் இருநிலமு மாகித் தோன்றுங்
கண்ணவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 4

"இழிசடை" என்பது, 'புக்க அகம்' என்றல்போல இடப் பெயர்கொண்ட பெயரெச்சமுடிபின் பொருள்மேல் தொக்க இறந்த காலவினைத்தொகை. இனி, 'பழம் உதிர்ந்த கோடு' என்றல்போல, நீங்கற் பொருட்பெயர்கொண்ட பொருண்மைத்தாய வினைத்தொகையாகக்கொண்டு, 'பகீரதன் பொருட்டுப் பின்னர்க் கங்கை நிலத்தில் இழிந்த சடை' என்றுரைப்பினும் ஆம். செக்கர்வான் - செவ்வானம். சேராது - தன்னை (சிவபிரானை) அடையாமல். எண்ணி - (அமரர் கூடி) ஆராய்ந்து. கொண்டு உகந்த - மேற்கொண்டு விரும்பிச்செய்த. இது தக்கன் வேள்வியே ஆயினும், அமரர் பலரும் உடம்பட்டுச் செய்தமையின் இவ்வாறு அருளினார். தலையறுக்கப்பட்ட தலைவர், தக்கனும் எச்சனும்; பல் தகர்க்கப்பட்டவன் சூரியன்; கண் பறிக்கப்பட்டவன் பகன். கண்டகன் - கொடியவன்; என்றது, இவ்வாறு அவர்களைக் கண்ணோட்டம் இன்றி ஒறுத்தமைபற்றி இகழ்வார்போல இவ்வாறு அருளிச்செய்தாராயினும், இவ்வொறுப்புக்கள் அவர்கள் பிற்றைஞான்று நெடுங்காலம் கரையேறாது புக்கழுந்தும் துன்பக் குழியினைத் தீர்த்த பெருங் கருணைச் செயலாதலின், 'அதனைச் சிறிதும் நெகிழவிடாது செய்தவர் ' எனப் புகழ்ந்ததேயாம் என்க.

890. "விண்ணவன்" என்பதில் உள்ள விண், சிவலோகத்தைக் குறிக்கும். 'மேருவை வில்லாக உடையான்'

Koviloor Digital Library

891 உருத்திரனை உமாபதியை உலகா ளானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பி னானைப்
பகலிரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பதனை நித்திலத்தின் தொத்தொப் பானை
நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 5

என்க. மெய்யாதல் - உணர்வுடையோர்க்கு அனுபவப் பொருளாதல். பொய்யாதல், உணர்விலார்க்கு இல்பொருள்போல உணரவாராதிருத்தல். விதி-நெறி; அஃது 'அறநெறியும், அருள் நெறியும்' என இருவகைத்து என்க. பிணம் இடு காடு - பிணத்தைப் புதைக்கும் காடு. பெருந்தக்கோன் - மேலான தகுதியை உடையவன். எண் - கருத்து. கண்ணவன் - கண் போலச் சிறந்து நிற்பவன்.

891. உருத்திரன் - 'உருத்திரன்' என்னும் காரணக் குறியை உடையவன் இதன் காரணமாவது, 'துன்பத்தை ஓட்டுபவன்' என்பது. (रुद्रं द्रावयति इति रुद्रः) இதனை,

" இன்னலங் கடலுட் பட்டோர் யாரையும் எடுக்கும் நீரால்
உன்னரும் பரம மூர்த்தி உருத்திர னெனும்பேர் பெற்றான் "

எனக் கந்தபுராணமும் (ததீசிப் - 46.),

" இடும்பைநோய், என்ப தோட்டும் இயல்பின் உருத்திரன் " எனக் காஞ்சிப் புராணமும் (பரசிராமேச்சரம் 44.) இனிது விளக்கின.

இனி, 'உருத்திரன்' என்னும் பெயர், 'ரோதனம் (அழுதல்) செய்தவன்' (रोदयति) என்னும் காரணத்தான் வந்தது என்பாரும் உளர்; அஃது அப்பெயர் அக்கினி தேவனைக் குறிக்குமிடத்திலாம் என்றே உணர்வுடையோர் பகுத்துணர்ந்து கொள்வர் என்பதனையும் கந்தபுராணம் மேற்காட்டிய இடத்திலே,

" செந்தழ லென்ன நின்ற தேவனுக் குருத்தி ரப்பேர்
வந்தது புகல்வன் கேட்டி வானவர் யாரும் ஈண்டி
முந்தையில் அவுணர் தம்மை முனிந்திட முயன்று செல்ல
அந்தமில் நிதியந் தன்னை அவ்வழி ஒருங்கு பெற்றார் "

Koviloor Digital Library

892 ஏடேறு மலர்க்கோன்றை யரவு தும்பை
இளமதியம் எருக்குவா னிழிந்த கங்கை
சேடேறிந்த சடையானைத் தேவர் கோவைச்
செம்பொன்மால் வரையானைச் சேர்ந்தார்சிந்தைக்-

" பெற்றிடு நிதியம் எல்லாம் பீடிலாக் கனல்பால் வைத்துச்
செற்றவர் தம்மேற் சென்று செருச்செய்து மீண்டு தேவர்
உற்றுழி அதுகொ டாமல் ஓடலுந் தொடர்ந்து சூழ
மற்றவன் கலுழ்த லாலே வந்தது மறையுங் கூறும் "

" ஓதுமா மறைகள் தம்மில் உருத்திர னெனும்பேர் நாட்டி
ஏதிலார் தம்மைச் சொற்ற ஈசன்மேற் சாரா அந்த
ஆதிநா யகனைச் சுட்டி அறைந்தவும் பிறர்மாட் டேரு
மேதைசாலுணர்வின்ஆன்ருேர்விகற்பம்ஈதுணர்வரன்றே "

எனத் தெரித்துக் காட்டியது. இங்ஙனமாகவும், அக்கினிக்குச் சொன்ன காரணத்தையே சிவபிரான்மாட்டுக் கற்பித்துக் கூறுவார், அதனுல் அடைவது உய்தியில் குற்றம் அன்றி வேறு இன்று; அன்றியும், வேறு வேறு காரணத்தால் வேறு வேறு பொருளே உணர்த்தும் பல பொருள் ஒரு சொற்கள் அவ்வப் பொருளே உணர்த்துமிடத்து அவ்வக் காரணங்களையே கூருது, ஒரு காரணத்தினையே யாண்டும் கூறுதல் புலமை நெறியும் ஆகாமை அறிக. எனவே, துன்பந் துடைக்கவல்லனுய காரணம் பற்றிச் சிவபிரான், 'உருத்திரன்' எனச் சிறந்தெடுத்துப் போற்றப்படுவன் என்பதனை உணர்த்தி யருளுவார், "உருத் திரனை" என்று அருளிச்செய்த அருமை அறியற்பாலதாதலறிக.

உமாபதி - உமைக்குத் தலைவன். உத்தமன் - யாவரினும் மேலானவன். ஒருவன் - ஒப்பற்றவன். சிவபிரான் ஒருவனையே 'ஒருவன் (ஏகன்)' என உபநிடதங்கள் கூறும் என்பது, பல விடத்துங் காட்டப்பட்டது. "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்பது திருவாசகம் (திருவண். 43). பருப்பதம் - மலையாய் இருப்பவன். பஞ்சவடி - மயிர்க் கயிருகிய பூணூல். வெளி - ஆகாயம். நெருப்பு - நெருப்பாய் இருப்பவன். நித்திலம் - முத்து. தொத்து - கொத்து; இவ்வுவமை, சிவ பிரானது திருநீற்றுக் கோலத்தை விளக்க வந்தது. சிந்தைக் கருத்தவன் - மனத்தின்கண் கருதப்படும் பொருளாய் உள்ளவன்.

892. ஏடு - இதழ். வான் இழிந்த - ஆகாயத்தினின்றும் இறங்கிய. சேடு எறிந்த - அழகு விளங்கிய. செம்பொன்மால்

Koviloor Digital Library

கேடிலியைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கிறிபேசி மடவார்பெய் வளைகள் கொள்ளுங்
காடவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. ௬

893 நாரணனும் நான்முகனும் அறியா தானை
நால்வேதத் துருவானை நம்பி தன்னைப்
பாரிடங்கள் பணிசெய்யப் பலிகொண் டுண்ணும்
பால்வணனைத் தீவணனைப் பகலா னானை
வார்போதியும் முலையாளோர் கூறன் தன்னை
மானிடங்கை யுடையானை மலிவார் கண்டங்
கார்போதியுங் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. ௭

வரையான் - செம்பொன்மலைபோன்றவன். சேர்ந்தார் - தன்னை அடைந்தவர்; 'அவரது சிந்தையில் கேடின்றி (நீங்குதல் இன்றி) இருப்பவன்' என்க. கிறி - பொய். 'மடவார் வளைகள்' என இயையும். பெய்வளை - அவர் தம் கைகளில் அணிந்துள்ள வளைகள். இனி, பிச்சையோடு உடன் வீழ மடவார்கள் பெய்த வளைகளை மீள ஈயாமல் "எம் கையில் வந்தது எமது ஆகலே வழக்கு" (பிச்சாடன நவமணிமாலை) எனக் கொண்டு செல்லும் என்று உரைத்தலுமாம். காடவன் - அதிசயிக்கத் தக்க திறலுடையவன்; இது காடம் என்னும் ஆரியச் சொல்லி னின்றும் பிறந்தபெயர்.

893. "வேதம்" என்றது, அதன்கண் உள்ள மந்திரங் களை. பாரிடங்கள் - பூதங்கள். பலி - பிச்சை. 'பால் வண்ணம் திருநீற்றாலும், தீவண்ணம் இயல்பினாலும் உடையவன்' என்க. 'மான் இடங்கை உடையன்' என்க; இதனுள், 'இடக்கை' என்பது இடங்கை என மெலிந்து நின்றது; 'இடத்திற் கையில்' என அடுக்காக்கி யுரைத்தலுமாம். மலிவு ஆர்கண்டம் - (தேவர் கள்) மகிழ்ச்சி நிரம்புதற்கு ஏதுவாய மிடறு. கார் பொதியும் - கருமை நிறத்தால் மூடப்பட்ட.

Koviloor Digital Library

894 வானவனை வலிவலமும் மறைக்காட் டானை
மதிசூடும் பெருமானை மறையோன் தன்னை
ஏனவனை இமவான்றன் பேதை யோடும்
இனிதிருந்த பெருமானை ஏத்து வார்க்குத்
தேனவனைத் தித்திக்கும் பெருமான் தன்னைத்
தீதிலா மறையோனைத் தேவர் போற்றுங்
கானவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 8

895 நெருப்புருவத் திருமேனி வெண்ணீற் றானை
நினைப்பார்தம் நெஞ்சானை நிறைவா னனைத்
தருக்கழிய முயலகன்மேல் தாள்வைத் தானைச்
சலந்தரனைத் தடிந்தோனைத் தக்கோர் சிந்தை

894. "வலிவலமும்" என்பதன்பின், 'உடைய' என்பது எஞ்சி நின்றது. "மறையோன்" என்றது, 'முதல் அந்தணன்' என்றவாறு. ஏனவன் - அந்தணனேயன்றிப் பிறவருணத் தவனுமாய் இருப்பவன்: என்றது, யாவரது ஒழுக்கத்தையும் தாங்கி நிற்பவன் என்றதாம். பேதையோடும் இனி திருத்தல் - யாவர்க்கும் அம்மை யப்பனாய் வீற்றிருந்து அருள்செய்தல். தேனவன் - தேனாய் இருப்பவன். "தித்திக்கும் பெருமான்" என்றது, தேனவன் என்றதன் கருத்தை இனிது விளங்க அருளிச்செய்தது. மறையவன் - மறைதலை உடையவன்; தோன்றாது கரந்து நிற்பவன்; இக் கரவு, ஏனையோர் கரவு போலப் பிறரை அற்றம் பார்த்துக் கெடுத்தற்குக்கொள்ளும் கரவன்றி, பருவம் நோக்கி அருள் செய்தற்குக் கொள்ளும் கரவு, என்பார் "தீதிலாமறையவனை" என்று அருளிச் செய்தார். கானவன் - வேட்டுவன்; இஃது, அருச்சுனன் பொருட்டுக் கொண்ட கோலம் நோக்கி அருளிச்செய்தது. இப் பேரருள் தேவராலும் போற்றப் படுவது ஆகலின், "தேவர் போற்றும் கானவன்" என்று அருளினர்; வேடனாகி விசயன்முன் சென்ற பொழுது பதினெண் கணங்களும் சூழ்ந்து சென்றன என்னும் வரலாறு ஈண்டு நினைக்கத் தக்கது.

895. 'நெருப்புருவம்போலும் திருமேனியில் வெண் ணீற்றை அணிந்தவன்' என்க. 'நெருப்புருவு திருமேனி' என்பது பாடம் அன்று. நெஞ்சான் - நெஞ்சின்கண் உள்ளவன்.

Koviloor Digital Library

விருப்பவனை விதியானை வெண்ணீற் றானை
விளங்கொளியாய் மெய்யாகி மிக்கோர் போற்றுங்
கருத்தவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 9

நிறைவு - எங்கும் நிறைந்திருத்தல். முயலகன்மேல் கால்ஊன்றி ஆடியதும், சலந்தராசுரனை அழித்ததும் ஆகிய வரலாறுகளை, கந்தபுராணத்துத் ததீசியுத்தரப் படலத்துட் காண்க. தக்கோர்- தகுதி பெற்றவர்; தகுதி, ஞானம். 'அதனை அடைந்தவரது விருப்பமாய் இருப்பவன்' என்றது, 'அவர் இறைவனை அன்றிப் பிறிதொரு பொருளையும் விரும்பார்' என்றபடி.

" வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்
மண்ணும் விண்ணும் "

எனவும் (திருவா. உயிருண்ணிப் - 7.)'

" உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே "

எனவும் (திருவா. திருப்புலம்பல்-3),

" வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே "

எனவும் (திருவா - குழைத்த - 6.),

" கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன் - துண்டஞ்சேர்
விண்ணாளுந் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈதென் கருத்து "

எனவும் (அற்புதத் திருவந்தாதி - 72.) எழுந்த திருமொழிகள் இங்கு ஒருகலையாக உணரற்பாலன. " விதி " என்றது, வேத விதியை எனவும், இங்கு, " வெண்ணீறு என்றது சிவாகம விதியை எனவும் கொள்க. " வெண்ணீறு " என்றது, உபலக்

Koviloor Digital Library

896 மடலாழித் தாமரைஆ யிரத்தி லொன்று
மலர்க்கணிடந் திடுதலுமே மலிவான் கோலச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானைத்
தும்பியுரி போர்த்தானைத் தோழன் விட்ட
அடலாழித் தேருடைய இலங்கைக் கோனை
அருவரைக்கீழ் அடர்த்தானை அருளார் கருணைக்
கடலானைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே. 10

திருச்சிற்றம்பலம்

கணத்தால் ஏனைய சிவநெறிச் சாதனங்களையும் கொள்ள நின்றது என்க. விளங்கொளி-இயல்பாகவே விளங்குகின்ற ஒளி, மெய்-மெய்ப்பொருள்; தோற்ற ஒடுக்கங்கள் இல்லாத பொருள்; இவையிரண்டும் ஆயினமையால் மிக்கோர்கள் போற்று வராயினர் என்க. "கருத்து" என்றது, கொள்கையை; எனவே, மிக்கோர்களால் போற்றிக் கொள்ளப்படும் பொருள் என்ற தாயிற்று.

896. மடல் - இதழ். ஆழித் தாமரை - வட்டமாக மலர்ந்த தாமரை மலர். 'ஒன்றாக' என, ஆக்கம் வருவித்துரைக்க. மலர்க் கண் - மலர்போலும் கண். இடந்து - பெயர்த்து. இடுதலும் - சாத்திய உடன். 'மலி கோலம்' என இயையும்; 'நிறைந்த அழகு' என்பது பொருள். வான் - பெரிய. சுடர் ஆழி - ஒளியை உடைய சக்கரம். திருமால் சிவபெருமானை நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர்களால் ஆயிரம் திருப்பெயரைச் சொல்லி அருச் சித்து வருகையில், ஒருநாள் ஒருமலரை அப்பெருமான் மறைப்ப, அதற்கு ஈடாகத் தன் கண்களைப் பறித்துச் சாத்தியது கண்டு மகிழ்ந்து சக்கரத்தை ஈந்தருளினன் என்பது பழைய வரலாறு என்க.

"நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ"

என்ற திருவாசகமும் (திருச்சாழல் - 18.) காண்க.

Koviloor Digital Library

தும்பி-யானை. தோழன் - தன் (சிவபெருமானுக்கு) நண்பன்; குபேரன். " விட்ட " என்றது, 'தோல்வியால் கைவிட்ட' என்றவாறு. தேர், புட்பக விமானம்; அது வானத்திற் செல்வ தாயினும், தரையினும் செல்லுமாகலின் அதன்பொருட்டு ஆழியை, (சக்கரத்தை) உடைய தாயிற்று. என்க. அருள் ஆர் கருணைக் கடலான் - (அவனுக்கு) அருளுதலைப் பொருந்திய கருணைக் கடலாய் உள்ளவன்;

" பொருள்மன்ன னைப்பற்றிப் புட்பகங் கொண்ட
மருள்மன்ன னைஎற்றி வாளுடன் ஈந்து "

என அருளிச் செய்ததும் (திருமுறை - 4. 17. 11.) காண்க.

அதுகண் டுடைய பிள்ளையார் தாமு மாண்ட வரசுமகிழ்ந்
திதுநம் பெருமா னருள்செய்யப் பெற்றே மென்றங் கிறைஞ்சிய
பதிக நிரம்பப் பிள்ளையார் பாடித் தொழுது பணிவுற்றார் [பின்
எதிர்பொற் றிருவா யிலின்வழக்க மென்று நிகழ்ச்சி
யெய்தியதால். 273

அங்கு நிகழ்ந்த வச்செயல்கண் டடியா ரெல்லா மதிசயித்துப்
பொங்கு புளக மெய்திடமெய் பொழியுங் கண்ணீர் பரந்திழிய
வெங்கு நிகரொன் றில்லாத விருவர் பாத மிறைஞ்சினர்
நங்கள் புகலிப் பெருந்தகையு மரசு மடத்தி னண்ணியபின். 274

அரிதிற் றிறக்கத் தாம்பாட வடைக்க வவர்பா டியவெளிமை
கருதி நம்பர் திருவுள்ள மறியா தயர்ந்தே னெனக்கவன்று
பெரிது மஞ்சித் திருமடத்தி லொருபா லணைந்து பேழ்கணித்து
மருவு முணர்விற் றுயில்கொண்டார் வாய்மை திறம்பா வாகீசர்.

மன்னுஞ் செல்வ மறைக்காட்டு மணியின் பாத மனத்தின்கண்
உன்னித் துயிலும் பொழுதின்க ணுமையோர் பாகமுடையவர்தாம்
பொன்னின் மேனி வெண்ணீறு புனைந்த கோலப் பொலிவினொடுந்
துன்னியவர்க்கு வாய்மூரி லிருப்போந் தொடர வாவென்றார்.276

போத நிகழவா வென்று போனா ரதென்கொ லெனப்பாடி
யீதெம் பெருமா னருளாகி லியானும் போவே னென்றெழுந்து
வேத வனத்தைப் புறப்பட்டு விரைந்து போக வவர்முன்னே
யாதி மூர்த்தி முன்காட்டு மவ்வே டத்தா லெழுந்தருள. 277

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

91. திருஎறும்பியூர்

திருப்பதிக வரலாறு

நாயனர், திருவானைக்காவில் சிலந்திக்கருளிய பெருமான் திருவடி தொழுது திருவெறும்பியூர் சென்று பணிந்து பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு. 302.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

897 பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந் தேனைத் தொடர்ந்தென்னை யாளாக் கொ
தென்எறும்பியூர்மலைமேல்மாணிக்கத்தைச் [ண்ட
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேன்நானே.

இத்திருப்பதிகம், இறைவனைத் திருவெறும்பியூர் மலையின் மேற் சென்று வணங்கிப் பெற்ற இன்ப மேலீட்டில், அவனது பெருமைகளைப் பலபடப் பாராட்டி, 'அத்தகைய பெரியோனை நான் சென்று அடையப்பெற்றேன்' என மகிழ்ந்து அருளிச் செய்தது.

897. பன்னிய - (தொல்லாசிரியர்) ஆராய்ந்து சொல்லிய. "செந்தமிழ்" என்றது, செவ்விதாகிய (திருத்தமான) தமிழினது இலக்கணத்தை. "கவி" என்றதும் கவியைப் (பாடலைப்) பாடுதல் குறித்தது. மாட்டேன் - ஆற்றலுடையேன் அல்லேன். நாயனர் இவ்வாறு அருளிச்செய்தது, தமிழின் இயல்பை 'இயல், இசை, நாடகம்' என்னும் மூன்று திறனும் பற்றி அறிய வேண்டிய அளவு அறியாதவராகவும், கவிகளை அத்திறம் எல்லாம் அமையுமாறு சிறக்கப்பாடமாட்டாதவராகவும் தம்மைக் கருதியிருந்தமையாம். தாம் அறிந்தவைகளினும் அறியாதவை மிகுதியாகத் தோன்றுதல் அறிவுடையாரது அறிவிற்கேயாம்.

Koviloor Digital Library

898 பளிங்கின்நிழ லுட்பதித்த சோதி யானைப்
பசுபதியைப் பாசுபத வேடத் தானை
விளித்தெழுந்த சலந்தரனை வீட்டி னானை
வேதியனை விண்ணவனை மேவி வையம்
அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும்
அருமருந்தை ஆமா றறிந்தேன் உள்ளந்
தெளிந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச்சென் றடையப்பெற்றேன்நானே.

அறிவிலாரது அறிவிற்கு அவை மாறித்தோன்றும். அத்தோற்றங்களின் வழி உளவாகும் இயல்புகளையே திருவள்ளுவ நாயனுர்,

" பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து "

(குறள். 978) என அருளிச்செய்தார்.

இறைவன், எண்ணும் எழுத்துமாய் நிற்றல்பற்றி, " எண்ணோடு பண் நிறைந்த கலைகள் ஆய தான் " என்று அருளினர். பண் - பண்ணப்படுதல்; திருத்தம். 'பொறியிலேனைத் தன்னையும் தன் திறமும் அறிவித்து' எனவும், 'அடைந்தேனை அன்பால் தொடர்ந்து' எனவும் கூட்டுக. 'திறத்தையும்' என்னும் இரண்டனுருபு தொகுத்தலாயிற்று. நெறி - தன்னைப்பெறும் வழி. " தொடர்ந்து " என்றது, ஆள நினைந்து அதற்கு ஏற்ற செவ்விபார்த்து நின்றமையை. 'நினைத்ததை நினைத்தவாறே முடித்தான்' என்பார், " என்னை " எனமறித்தும் விதந்து அருளிச் செய்தார். தென் - அழகு. " மாணிக்கம், சுடர் " என்பன உருவகங்கள்,

898. பளிங்கின் நிழலுள்பதித்த சோதியான்-படிகமணியின் ஒளியுள் பதிந்து தோன்றும் படி விளங்கிய ஒளியினையுடைய மாணிக்கம் போன்றவன்; என்றது; ஆன்மா, சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்புடைய படிகத்தின் ஒளிபோன்றது; அதனுல், பெத்த நிலையில் நீல மணியினைச் சார்ந்து நீல மணியாய் நிற்கும் படிகம்போல, மலத்தினைச் சார்ந்து மலமேயாய்க் கிடந்த அவ்வான்மாவை, சிவன் முத்திநிலையில் அம்மலத்தினின்றும்நீக்கி, மாணிக்கத்தைச் சார்ந்து மாணிக்கமாயே நிற்கும்

Koviloor Digital Library

899 கருவையென்றன் மனத்திருந்த கருத்தை ஞானக்
கடுஞ்சுடரைப் படிந்துகிடந் தமரர் ஏத்தும்
உருவையண்டத் தோருமுதலை யோத வேலி
யுலகினிறை தொழிலிறுதி நடுவாய் நின்ற
மருவைவென்ற குழல்மடவாள் பாகம் வைத்த
மயானத்து மாசிலா மணியை வாசத்
திருவேறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேன் நானே

படிகம்போல, தன்னைச் சார்ந்து தானாய் நிற்குமாறு தனது எண் குணங்களையும் அதனிடத்துப் பதிவித்து நிற்பனாகலின், தமக்கு அவ்வாறு செய்தருளினான் என்பதனை உவமை வகையான் அருளிச் செய்தது என்க. "சோதி" என்றது, விடாத ஆகு பெயராய், அதனை உடைய மணியைக் குறித்தது; "மாணிக்கம்" எனப் பின்னர் வருதலின் வாளா மணி என்பது உணர்த்திச் சென்றார். ஈண்டுக்காட்டிய ஆன்மாவின் இயல்பு முதலியவற்றை, சருவஞ்ஞானோத்தரம் முதலிய ஆகமங்களிலும், சித்தாந்த நூல் களிலும் கண்டு கொள்க.

'விளித்தெழுந்த' என்பது மெலித்தலாயிற்று. விளித்தல், ஈண்டு அறைகூவல். வையம் அளந்தவன் - திருமால்; சிவ பிரானை மாயோனாகவும், பிரமனாகவும் கூறும் கருத்து மேலே பல இடங்களிலும் விளக்கப்பட்டன. ஆமாறு அறிதல் - தக்கதை உணர்தல்; 'ஆமாறு அறிந்தமையால் உள்ளம் தெளிந்து' என்க; இத் தொடரினை, எல்லாவற்றிற்கும் முன்னே வைத்து உரைக்க.

899. கரு - கருத்திற்கு (- அறிவிற்கு) முதல்; 'பின்னர் அதன் விளைவாகிய கருத்தாயும் உள்ளவன்' என்று அருளினார், 'ஞானச் சுடர்' என இயையும். கடுஞ்சுடர் - பேரொளியை உடைய விளக்கு. படிந்து - நிலத்தில் வீழ்ந்து. அண்டம் - உலகம். ஓத வேலி - அலையை உடைய கடலாகிய எல்லை. நிறை - மிகுதியாய்க் காணப்படுகின்ற. 'நடு இறுதித்தொழிலாய் நின்ற' எனக் கூட்டுக. 'நடுவும் இறுதியும் கூறவே முதலும் கொள்ளப்படும். "தொழில்" என்றது, தொழில் செய்பவன் மேல் நின்றது. 'நின்ற மணி' என இயையும். மரு - வாசனை; என்றது அதனையுடைய மலர்களை; 'அவற்றைவென்ற' என்றது

Koviloor Digital Library

900 பகழிபொழிந் தடலரக்கர் புரங்கள் மூன்றும்
பாழ்படுத்த பரஞ்சுடரைப் பரிந்து தன்னைப்
புகழுமன்பர்க் கின்பமரும் அமுதைத் தேனைப்
புண்ணியனைப் புவனியது முழுதும் போத
உமிழும் அம்போற் குன்றத்தை முத்தின் தூணை
உமையவள்தம் பெருமானை இமையோ ரேத்தும்
திகழெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேன் நானே.

901 பாரிடங்க ளுடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை அயில்வாய சூல மேந்தி
நேரிடும்போர் மிகவல்ல நிமலன் தன்னை
நின்மலனை அம்மலர்கோண் டயனும் மாலும்
பாரிடந்தும் மேலுயர்ந்துங் காணு வண்ணம்
பரந்தானை நிமிர்ந்துமுனி கணங்க ளேத்துஞ்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேன் நானே.

'தனது இயற்கை மணம் அம்மலர்களது மணத்தின் மிக்கது' என்றவாறு. வாசம் - வதிதல். 'மலைமேல் வாச மாணிக்கத்தை' என மாற்றியுரைக்க.

900. பகழி - அம்பு. அம்புகளைப் பொழிந்தது, முப்புரத் தலைவர் எதிர்வருமுன் காட்டிய வீரத் திருவிளையாட்டின்கண் என்க. 'இன்பமாய் அமரும்' என ஆக்கம் வருவிக்க. அது, பகுதிப்பொருள் விகுதி. ஒருமையாற் கூறியது இனம்பற்றி. போத - வெளிப்பட. உமிழும் - வெளிப்படுத்தும், முழைஞ்சு முதலியவற்றிலிருந்து பொன் முதலியவைகளையும், சுனைகளி லிருந்து அருவிகளையும் வெளிப்படுத்தும் மலைபோல உலகத்தைத் தோற்றுவித்தல் பற்றி மலையாகவும், தோற்றுவித்தவற்றைத் தாங்குதல் பற்றித் தூணாகவும் உருவகிப்பார், சிறப்புத் தோன்ற. "அம்பொற் குன்றத்தை முத்தின் தூணை" என்று அருளிச் செய்தார். "பெருமான்" என்றது, 'தலைவன்' என்றவாறு.

901. பாரிடம் - பூதம். உடன் பாட - பலவும் சேர்ந்து பாட. 'பயின்று பாட' எனக் கூட்டுக. பயிலுதல் - பலமுறை யும் செய்தல். அயில் வாய் - கூர்மையான வாயினையுடைய.

Koviloor Digital Library

902 கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்த முன்னீர்
கரப்பானைக் கடியநடை விடையோன் றேறி
ஊர்பலவுந் திரிவானை ஊர தாக
ஒற்றியூ ருடையனய் முற்றும் ஆண்டு
பேரேழுத்தோன் றுடையானைப் பிரம னோடு
மாலவனும் இந்திரன்மந் திரத்தா லேத்துஞ்
சீரேறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச்சென் றடையப்பெற்றேன் நானே.

"நேரிடும்" என்றதில் இடு, துணைவினை. நேர்தல் - எதிர்ப்படுதல். வடமொழியில் உள்ள 'நிர்' என்னும் இடைச்சொல் இன்மைப் பொருளையும், 'நி' என்னும் இடைச்சொல் பல பொருளையும் தருமாகலின், 'நிமலன்' என்றதற்கு 'மலத்தை நீங்கச் செய்பவன்' எனப்பொருள் கொள்க. "போர் மிக வல்ல நிமலன்" என்றது, 'போர் செய்வான்போல, முரணி நின்றாரது குற்றத்தைத் தீர்க்க வல்லவன்' என்றபடி. அம் மலர் - அழகிய மலர்; 'அம்மலர் கொண்டு' என்பதனை, முனிகணங்கள் என்பதன்பின் கொண்டு கூட்டுக. 'அம்மலங் கொண்டு' எனப் பாடம் ஓதி, அதனை, "காணுவண்ணம்" என்றதனோடு இயைத்துரைத்தலே பொருந்துவதாம் என்க. 'நிமிர்ந்து பரந்தான்' என இயைக்க. பரத்தல் - எங்கும் ஒளியாக விளங்குதல்.

902. கார்முகில்-கருமையான மேகம். 'முன்பு முகிலாய்ப் பொழிந்த நீரைப் பின்பு கதிரவனாய் நின்று சுவற்றுவோன்' என்க. 'முந்நீர்' என்பது பாடம் ஆகாமை யறிக. 'தனக்கு உரிய ஊரை ஒற்றியாகவே வைத்துக்கொண்டு, உலகம் முழுதும் ஆள்கின்றான்' என நகைதோன்ற அருளியவாறு. எழுத்து ஒன்று (ஓர் எழுத்து) என்றது, ஓங்காரத்தை; அதன் பொருள் சிவபிரானேயாகலின், அவ்வாறு அருளிச்செய்தார். எழுத்து ஒன்றை (ஓர் எழுத்தை)யே பெயராக உடையவன் என்க. இதனானே, திருவைந்தெழுத்தும், பிரணவமும் பொருளால் ஒன்றேயாதல் அறிக. இனி, 'அசபை' எனப்படும் அம்ச மந்திரமும் பிரணவத்தின் வேறுபாடே யாகலின், அதுவும் திருவைந்தெழுத்தின் வேறாகாமை யுணர்க. 'இந்திரன்' என்புழியும் தொகுக்கப்பட்ட எண்ணும்மையை விரிக்க. 'இந்திரனும்' என்றே பாடம் ஓதுவாரும் உளர். திருமால்

Koviloor Digital Library

903 நீணிலவும் அந்தியும் நீரும் மற்றை
நேறியிலங்கு மிருகாலும் ஆகா சம்மும்
வாணிலவு தாரகையும் மண்ணும் விண்ணும்
மன்னுயிரும் என்னுயிருந் தானாய் சேம்போன்
ஆணியேன்று மஞ்சனமா மலையே யேன்றும்
அம்பவளத் திரளேன்றும் அறிந்தோ ரேத்துஞ்
சேணெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
சேழுஞ்சுடரைச்சேன் றடையப்பேற்றேன் நானே.

904 அறந்தேரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை
யாரம்பக் குண்டரோ டயர்த்து நாளும்
மறந்துமரன் திருவடிகள் நினைய மாட்டா
மதியிலியேன் வாழ்வேலாம் வாளா மண்மேற்
பிறந்தநாள் நாளல்ல வாளா ஈசன்
பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்து ளன்பு
சேறிந்தேறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
சேழுஞ்சுடரைச்சேன் றடையப்பேற்றேன் நானே.

முதலியோர் மந்திரத்தால் ஏத்துதலைக் குறிப்பார், அம் மந்திரங்கள் இவை என்பதை அருளிச் செய்தார்.

903. நீள் நிலவு - ஒளிமிக்க சந்திரன்; 'நிறைமதி என்றபடி. அம் தீ - அழகிய நெருப்பு. இரு கால் - வன்கால், மென்கால்; 'கடுமையாகவும், மென்மையாகவும் வீசுகின்ற காற்று' என்றதாம்; 'இருங்கால்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். வாள் நிலவு - ஒளி விளங்குகின்ற. தாரகை - விண் மீன். மன்உயிர் - பலவாகிய உயிர்கள். அன்புமீதூர்வினால், 'என் உயிர்' என, தம்மை வேறு எடுத்தோதினார். 'என் உயிர்' என்பது. 'இராகுவினது தலை' என்பதுபோல, ஒற்றுமைக் கிழமையில் வந்த ஆறும் வேற்றுமைத் தொகை. 'தானும் மாணிக்கம், ஏத்தும் மாணிக்கம்' எனத் தனித்தனி இயையும். ஆணி - உரையாணி. அஞ்சனம் - நீலம்; 'நீலமலை' என்றல், அம்மையைக் குறித்து. சேண் - உயரம்; இது, மலையைச் சிறப்பித்தது.

904. 'அறந் தெரியாக் குண்டர்' என இயையும். 'அறந் தெரியா' என்று அதன் உண்மையைச் சிறிதும் உணராது,

Koviloor Digital Library

905 அறிவிலங்கு மனத்தானை அறிவார்க் கன்றி
அறியாதார் தந்திறத்தோன் றறியா தானைப்
பொறியிலங்கு வாளரவம் புனைந்து பூண்ட
புண்ணியனைப் பொருதிரைவாய் நஞ்ச முண்ட
குறியிலங்கு மிடற்றானை மடற்றேன் கொன்றைச்
சடையானை மடைதோறுங் கமல மேன்பூச்
செறியேறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேன் நானே.

முற்றும் உணர்ந்தவர் தாங்களே பிறர் இல்லை' எனப் பிதற்றித் திரிந்தமை பற்றி. அதனானே வாயை எடுத்தோதினார். ஊத்தைவாய், பல் துலக்காமையால் அமைந்தது, அறத்தினது உண்மை, 'அறமாவது முதல்வன் வகுத்த விதி விலக்குக்களே' என்பதும், அதனால், 'அதன் பயனை ஊட்டுவிப்பவன் அம் முதல்வனே' என்பதுமாம். அவற்றைச் சமணர் சிறிதும் உணராமையால் "அறந்தெரியா" என்று அருளிச்செய்தார். "அறிவு" என்றது ஆராய்ச்சி அறிவினை. ஆரம்பம் - ஆரம்ப வாதம். அஃதாவது, 'சிதலது வாய்நீர்ச் சிறுதுகளால் பெரும் புற்றுரு அமைந்த பெற்றியது என்ன, ஐம்புலப் பேருரு அனைத்தும் ஐவகை அணுக்கள், ஆடையின்கண் நூல் போல, ஒன்று தொடங்கி, இரண்டு, மூன்று, நான்கு என வேண்டுமளவும் முறையாகச் சேர்வதனால் அமையும்' எனக் கூறும் வாதம். 'அதனை உடைய குண்டர்' என்க. 'குண்டரோடு கூடி' என ஒருசொல் வருவிக்க. அயர்த்தல் - மறத்தல்; மறந்தது 'அரன் திருவடிகளை' என்பதனைப் பின்னர் அருளியவாற்றான் அறிக. மறந்து நினைத்தலாவது, பழக்கத்தால் தம்மை அறியாது நினைத்தல்; 'அதுவும் செய்திலேன்' என்றார். 'வாழ்வெல்லாம் வாளா (பயனில்லாத வாழ்வாய்) ஒழிய, மண் மேல் பிறந்த நாளெல்லாம் நாளல்லவாய் வாளா ஒழிய இறுதி யிற் சிலநாள் ஈசன் பேர் பிதற்றி அன்பு செறிந்து அடையப் பெற்றேன்' என, வேண்டும் சொற்கள் இசையெச்சத்தால் வரு வித்துரைக்க.

905. அறிவு இலங்கு மனம் - அறிவால் விளங்குகின்ற மனம்; "இலகுபே ரிச்சா ஞானக் கிரியை உட்கரண மாக" (சிவஞான சித்தி. சூ. 5. 7.) என்றபடி, இச்சை முதலிய மூன்று சத்திகளே இறைவனுக்கு அந்தக் கரணங்களாதலின் "மனம்"

Koviloor Digital Library

906 அருந்தவத்தின் பெருவலியா லறிவ தின்றி
அடலரக்கன் தடவரையை யெடுத்தான் [திண்டோள்
முரிந்துநெரிந் தழிந்துபா தாள முற்று
முன்கைநரம் பினையெடுத்துக் கீதம் பாட
இருந்தவனை யேழுலகு மாக்கி னானை
யெம்மானைக் கைம்மாவி னுரிவை போர்த்த
திருந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேன் நானே.

திருச்சிற்றம்பலம்

என்றது இச்சா சத்தியையே என்க. "அறியாதான்" என்றது, 'அறியப்படாதவன்' என்றபடி. ஒன்று-சிறிது. 'ஒன்றும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. அறியாதார் தம் திறத்து - அறி வில்லாதாரது ஆற்றலால், இனி, 'தன்னை அறியாதவரைப் பற்றித் தான் ஒன்றும் அறியாதிருப்பவன்' என்றலுமாம்; அஃதாவது, அவர்கட்கு நன்மை ஏதும் செய்யாதிருப்பவன் என்பதாம். இப்பொருட்கு, "ஒன்று" என்றது, ஒன்று எனவே பொருள்தரும். 'அறியாதார் தந்திரத்து' என்பதும் பாடம். பொறி - புள்ளி. "புனைந்து பூண்ட" என்றதனை, 'பூண்டு புனைந்த' என மாற்றியுரைக்க. புனைதல் - ஒப்பனை செய்து கொள்ளுதல். குறி - அடையாளம்; அது, கருமை நிறம். 'மடல் தேன்' எனப் பிரிக்க. மடல் - இதழ்.

906. 'அரிய தவத்தால் பெற்ற பெருவலியையே நினைத்துச் செருக்குக் கொண்டமையால் அறிவை இழந்து எடுத்தான்' என்க. 'அறிவதன்றி' என்பது பாடமாயினும் பொருள் இவ்வாறே கொள்க. "அடல் அரக்கன்" என்றதனை முதற்கண் கொண்டு, 'அரக்கனாகிய எடுத்தவனது' என்க. முரிந்து தோள் முதலியன ஒடிந்து. நெரிந்து - நெருக்கம் எய்தி. பாதாளம் உற்று - பாதளம்போன்ற பள்ளத்தில் கிடந்து. "பாட இருந்தவன்" என்றது, அதனைக்கேட்டு இருந்தவன்" என்றபடி. கைம்மா - யானை. திருந்து - திருந்திய; 'அழகு பெற்ற; மலை' என்க.

Koviloor Digital Library

92. திருக்கழுக்குன்றம்

திருப்பதிக வரலாறு

நாயனார், திருக்கச்சியேகம்பம் தொழுது திருக்கழுக்குன்றத் திறைவரை வணங்கிப் பாடியருளியது இத்திருப்பதிகம். (திருநாவுக். பு. 330.)

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

907 மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக்கா டுடையானை முதலா னானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோனை
ஆலால முண்டுகந்த ஐயன் தன்னைப்
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 1

இத்திருப்பதிகம், திருக்கற்குடித் திருப்பதிகம் போல (60), சிவபிரானைத் திருக்கழுக்குன்றத்தில் கண்டு வணங்கி இன்புற்ற பெருமகிழ்ச்சியால், "கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்று அருளிச்செய்தது.

907. மூவிலைவேல் - சூலம். மூர்த்தி - கடவுள். 'முதுகாடு' என இயையும். எந்த இடம் அழியினும் என்றும் அழியா திருப்பது மயானம் ஆதலின், அதனை, 'முதுகாடு' என்பர் தொல்லாசிரியர். முதல் - எல்லாவற்றிற்கும் அடிநிலை, 'போற்று தற்கு (வணங்குதற்கு)ப் புணர்வரிய (நெருங்குதற்கு அரிய)' என்க; இது, சிவபிரானது பெருமையும், தேவர்களது சிறுமை யும் குறித்தருளியவாறு. காவலன் - எல்லாவற்றையும் காப் பவன்; பதி. அமர்ந்தான் - விரும்பியிருந்தான்.

Koviloor Digital Library

908 பல்லாடு தலைசடைமே லுடையான் தன்னைப்
பாய்புலித்தோ லுடையானைப் பகவன் தன்னைச்
சொல்லோடு பொருளனைத்து மானான் தன்னைச்
சுடருருவில் என்பருக் கோலத் தானை
அல்லாத காலனைமுன் னடர்த்தான் தன்னை
ஆலின்கீழ் இருந்தானை அமுதா னானைக்
கல்லாடை புனைந்தருளுங் காபாலியைக்
கற்பகத்தைக்கண் ணாரக்கண்டேன்நானே. 2-10

திருச்சிற்றம்பலம்

908. பல் ஆடு தலை - பல் பொருந்திய (பல் வெளித் தோன்றுகின்ற) தலை; இது, 'வெண்டலை' எனவும் சொல்லப் படும்; தாருகாவனத்து முனிவர்கள் சிவபிரான்மேல் ஏவியது; அதனை அப்பெருமான் சடையில் அணிந்துகொண்டான். பாய்தல், புலிக்கு அடை. 'பகவன்' என்பதன் பொருள் மேலே (பக். 17.) விளக்கப்பட்டது. என்பு அரு - எலும்பு நீங்காதிருக் கின்ற; "சுடர் உருவில் - என்பருக் கோலத்து எரியாடும் எம் மானார்க்கு - அன்பருது என் நெஞ்சு அவர்க்கு" என்ற அம்மை திருமொழியைக் காண்க (அற்புதத் திருவந்தாதி - 2) இனி, 'என்பராக் கோலத்தான்' எனப்பாடம் ஓதுவாரும் உளர். அல்லாத காலன்-முறையல்லாத செயலை மேற்கொண்ட இயமன்.

இத்திருப்பதிகத்தில் இவ்விரண்டு திருப்பாடல்களே கிடைத் துள்ளன.

சீரார் பதியி னின்றெழுந்து செல்லுந் திருநா வுக்கரசர்
ஆரா வன்பி லாரமுத முண்ண வெய்தா வாறேபோல்
நீரார் சடையா ரெழுந்தருள நெடிது பின்பு செல்லுமவர்
பேரா ளரைமுன் றொடர்ந்தணையப் பெறுவா ரெய்தப்
பெற்றிலரால். 278

—அப்பர் புராணம்.

Koviloor Digital Library

93. பலவகைத் திருத்தாண்டகம்

திருப்பதிக வரலாறு

நாயனர், திருவையாற்றில் கயிலைக்காட்சி கண்டு தொழுது திருநெய்த்தானம், திருமழபாடி முதலான பதிகளை வணங்கித் திருப்பூந்துருத்தி சென்று பணிந்து பலநாள் தங்கித் திருத்தொண்டு செய்யுங் கருத்தினராய் திருமடமமைத்துத் தங்கியிருந்த நாட்களில் பாடியருளியவற்றுள் ஒன்று இத்திருப்பதிகம். (திருநாவுக். பு. 340.)

திருச்சிற்றம்பலம்

909 நேர்ந்தொருத்தி யொருபாகத் தடங்கக் கண்டு
நிலைதளர ஆயிரமா முகத்தி னேடு
பாய்ந்தொருத்தி படர்சடைமேற் பயிலக் கண்டு
படஅரவும் பனிமதியும் வைத்த செல்வர்
தாந்திருத்தித் தம்மனத்தை யொருக்காத் தொண்டர்
தனித் தொருதண் டூன்றிமெய் தளரா முன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீ ராகில்
போல்லாப் புலால் துருத்தி போக்க லாமே. 1

"பலவகை" என்ற பன்மை, தலங்கள் பற்றி வந்தது. 'பல தலங்களையும் பற்றி அருளிச்செய்த வகை' என்றவாறு. இத் திருப்பதிகம், தலங்களை நினைத்தலை வலியுறுத்தும் முகத்தால் திருக்கோயில் வழிபாட்டினை விதித்தருளிச் செய்தது. இதனால், எத்துணைப் பெரியோர்க்கும், உறங்கினேன் கை வெறும்பாக்கு என்னத் தானே தவிராத வழித் திருக்கோயில் வழிபாடு தாமாகத் தவிர்க்கற்பாற்று அன்றென்பது நாயனரது திருவுள்ளமாதல் பெறப்படும். ஏனைய அருளாசிரியரது திருவுள்ளமும் அதுவே என்க. இதனானே மெய்கண்டதேவ நாயனர், நூலுள்ளும் சிவப்பேறு பெற்ற பெரியோர்க்கும், "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" (சிவஞான போதம் - சூ. 12) எனத் திருக் திருக்கோயில் வழிபாடு தவிர்க்கற்பாற்று அன்று என்பதனைத் தேற்றேகாரத்தால் முடிவின்கண் வலியுறுத்தியும், அருணந்தி தேவ நாயனர், "திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னை" என்னும் திருவிருத்தத்தில், சாரியையாளர் முதலிய நால்வரும் திருக்கோயில் வழிபாடு செய்யும் முறையையும்,

Koviloor Digital Library

அவற்றின் பயன்களும் வேறுபடுதலையும் இனிது விளக்கும் முகத்தான் அதனை வலியுறுத்தியும் போந்தனர்; இங்ஙனமாகவும், 'திருக்கோயில் வழிபாடு பத்திமார்க்கத்தில் நிற்பார்க்கேயாம்; 'யாம் ஞானமார்க்கத்தோம்' என்று இறுமாந்து கிடப்பார்க்கு, யாம் என்கடவோம்! இனி, இத் திருப்பதிகந்தானே ஐயடிகள் காடவர்கோன் நாயனார் திருத்தல வெண்பாக்களுக்கு நெறியாய் அமைந்தது என்னலாம்.

909. இத்திருத்தாண்டகம் திருப்பூந்துருத்தியை எடுத்தோதியருளியது; இது நாயனார் திருமடம் அமைந்த தலமாதல் அறிக. இத்திருப்பதிகத்துள் எடுத்தோதியன யாவும் சோழ நாட்டுத் தலங்களே.

நேர்ந்து - உடம்பட்டு; 'உடம்பட்டமையால்' என்க; உடம்பட்டமை, துணைவியாக மணம் புரிந்து கொண்டமை. "கண்டு" என்றன இரண்டும், 'செய்து' என்றதேயாம். 'நிலைதளர்வது மண்ணுலகம்' என்க; 'கங்கை விண்ணிலிருந்து ஆயிரமுகமாகப் பாய்வளாயின் மண்ணுலகம் அழிந்தொழியும்' என்க.

" மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயும்அது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ "

(திருவாசகம். திருச்சாழல் 7.) என்றருளியது காண்க. வைத்த - பகையின்றி வாழ வைத்த. 'தம் மனத்தைத் தாம் திருத்தி ஒருக்காத் தொண்டர்' என்க. ஒருக்குதல் - ஒருங்கச் செய்தல்; இது செய்யாதவரை. "தொண்டர்" என்றது, இகழ்தற் குறிப்பு. 'பொதுமக்கள்' என்பதே பொருள். "ஒருக்கால்" என்பது பாடம் அன்று. 'தொண்டர்போல' என்னும் உவம உருபு தொகுத்தலாயிற்று. அடுக்கு, இடைவிடாமை குறித்தது. என்னல் - என்று நினைத்தலும், வாழ்த்தலும். "என்பீராகில்" என்றது, நன்மக்களை நோக்கி, 'உறுதி நாடுவீர்' என விளித்தருளிச் செய்தபடி. துருத்தி - கொல்லன் உலைத் துருத்தி; இது காற்றை வாங்கியும் விட்டும் நிற்கும்; அஃது உருவகத்தால் அதுபோல மூச்சினை வாங்கியும் விட்டும் நிற்கும் உடம்பைக் குறித்தது; நெட்டுயிர்ப்பு

Koviloor Digital Library

910 ஐத்தானத் தகமிடறு சுற்றி யாங்கே
யகத்தடைந்தால் யாதோன்று மிடுவா ரில்லை
மைத்தானக் கண்மடவார் தங்க ளோடு
மாயமனை வாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்
பைத்தானத் தோண்மதியும் பாம்பும் நீரும்
படர்சடைமேல் வைத்துகந்த பண்பன் மேய
நெய்த்தானம் நெய்த்தான மென்பீ ராகில்
நிலாவாப் புலால்தானம் நீக்க லாமே. 2

எறிதற்குக் கொல்லன் ஊதுலைத் துருத்தியை உவமை கூறுதல் செய்யுள் மரபு. உடம்பை, 'பொல்லா உடம்பு' என்றது. பசி, பிணி முதலிய பலவற்றானும் உயிர்க்குத் துன்பத்தையே பெரிதும் உறுவித்தல் பற்றி. அதனைப் போக்கலாவது, ஒன்று நீங்க மற்றொன்று வாராதவாறு பிறப்பை அறுத்துக்கொள்ளுதல் "போக்கலாமே" என்னும் தேற்றேகாரம், பிறவாற்றாற் போக்க லாகாமை மேலும்நோக்குடையது என்க.

910. இத் திருத்தாண்டகம், திருநெய்த்தானத்தை எடுத் தோதியது.

ஐ-கோழை; 'அதற்குத் தானமாகிய மிடறு' என்க. அத்து, அல்வழிச் சாரியை. 'மிடற்றின் புறம் அன்றி அகம்' என் பார், "அகமிடறு" என்றருளினார். சுற்றி - உழந்து; அஃதாவது பன்னாளும் பலவற்றையும் பேசி. அகத்து அடைதல் - செயலற்று ஒடுங்குதல்; அவ்வாறுதற்குக் காரணம், 'ஐத் தானம்' என்ற தனாற் கொள்ளக் கிடந்தது. "ஒன்று" என்றது, மருந்தைக் குறித்தது; 'இறுதிநாளில் ஐயினால் மிடறு அடைக்கப்படுவதை நீக்குதற்கு யாதொரு மருந்தும் பயன்படுமாறில்லை' என்றபடி. "இல்லை" என்பதன்பின், 'ஆகலான்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. மைத்தானம் - மைதீட்டும் இடம். பைத்தானத்து- படமாகிய இடத்தினை உடைய. இதனைக் கொண்டு கூட்டு வகை யால், "பாம்பு" என்றதனோடே இயைக்க. நிலாவா - நிலை யில்லாத. புலால்தானம் - ஊனாலாகிய இடம்; உடம்பு.

Koviloor Digital Library

911 பொய்யாறு வாறே புனைந்து பேசிப்
புலர்ந்தெழுந்த காலைப் பொருளே தேடிக்
கையாறுக் கரண முடையோ மென்று
களித்த மனத்தராய்க் கருதி வாழ்வீர்
நெய்யாறு ஆடிய நீல கண்டர்
நிமிர்புன் சடைநெற்றிக் கண்ணர் மேய
ஐயாறே ஐயாறே யென்பீ ராகில்
அல்லல்தீர்ந் தமருலகம் ஆள லாமே. 3

911. இத்திருத்தாண்டகம், திருவையாற்றை எடுத்தோதி யருளியது.

பொய் ஆறு ஆறே - நிலையாமை நீங்காத முறைமையை யுடைய பொருள்களையே. புனைந்து பேசி - சிறப்பித்துப் பேசி. "புலர்ந்து" என்பதனை, 'புலர' எனத் திரிக்க; 'பொழுது புலர எழுந்தது முதல்' என்பது பொருள். கையாறுக் கரணம் உடையோம் - ஒழுக்கமாக எங்கள் குலத்தொழிலைக் கொண்டுள் ளோம். "பொய்யாறு" என்றது முதல், "வாழ்வீர்" என்றது காறும், மக்கள் உலகியலில் இறுமாந்திருக்கும் நிலையை வகுத் தருளிச் செய்தவாறு. "நீலகண்டர்" என்றது, 'சிவனர்' என்னும் பெயரளவாய் நின்றது. நெய்யை ஆறுபோல ஆடிய சிவனர் என்க. அல்லல் - பிறவித்துன்பம். 'அமரர் உலகம்' என்பது குறைந்து நின்றது. 'மரித்தல் (இறத்தல்) இல்லாத வன் என்னும் பொருளுடைய, 'அமரன்' என்னும் பெயர், மாயோன், நான்முகன், இந்திரன் முதலிய பலர்க்கும் உபசார மாக, சிவபிரானுக்கே அஃது உண்மைப் பெயராம் ஆகலின், அவனை அடைந்தவரும் அமரர்' எனப்படுவர் என்பதும், அதனல், சிவனுலகமே 'அமரலோகம்' எனப்படும் சிறப் புடையது என்பதும் திருமுறைகளின் துணிபாகலின், "அல்லல் தீர்ந்து அமருலகம் ஆளலாமே" என்று அருளிச்செய்தார். சிவனுலகிற் சென்றவரும் பிறத்தல் உண்டாயினும், அஃது ஒரு தலையன்மையானும், ஒரோவழிப் பிறப்பினும், அஃது அல்லற் பிறவி யாகாது, "பற்றறுப்பாராக" (சிவஞான போதம் - சூ. 8. அதி. 1)ப் பிறக்கும் பிறப்பே யாகலானும் சிவனுலகம் ஆளுத லாகிய பயன் பெற்றோர், அல்லல் தீர்ந்தவரேயாதலறிக.

Koviloor Digital Library

912 இழவொன்று தாமொருவர்க் கிட்டோன் றீயார்
ஈன்றெடுத்த தாய்தந்தை பெண்டீர் மக்கள்
கழனங்கோ வையாதல் கண்டுந் தேறார்
களித்த மனத்தராய்க் கருதி வாழ்வீர்
அழனம்மை நீக்குவிக்கும் அரைய னாக்கும்
அமருலகம் ஆள்விக்கும் அம்மான் மேய
பழனம் பழனமே யென்பீ ராகில்
பயின்றெழுந்த பழவினைநோய் பாற்ற லாமே. 4

912. இத்திருத்தாண்டகம், திருப்பழனத்தை எடுத்தோதி யருளியது.

"இழவு ஒன்று" என்புழி ஆக்கம் வருவித்து, 'ஒன்று இழவு ஆக (ஒருபொருள் தமக்கு நட்டமாகும்படி)' என மாற்றி யுரைக்க. 'தாவும்' என்னும் செய்யும் என் எச்சம், ஈற்று உயிர் மெய் கெட்டு, "தாம்" என நின்றது. தாவுதல் - பரத்தல்; அது, "பரந்து - கெடுக உலகியற்றியான்" (குறள் - 1062.) என்புழிப்போல, பலவிடத்தும் அலமருதலைக் குறித்தது. இடுதல். உயர்ந்தோர்க்குக் கொடுத்தல். ஈதல் - வறியோர்க்கு ஈதல்; 'இடார்; தாவும் ஒருவர்க்கு ஈயார்' என்றவாறாக, "இட்டு" என்றதனை முன்னே கூட்டியுரைக்க. "தாவும் ஒருவர்க்கு" என விதந்தோதியது, 'அவர்களது அலமரல் கண்டும் மனம் இரங் கலர்' என்பதுணர்த்துதற்கு. பெண்டிர்' என்பது,நீட்டலாயிற்று; இதுவும், "தாய்" முதலியனபோல, 'மனைவியர்' என்னும் பொருட்டாகிய முறைப்பெயர். 'நம் கழல் கோவை' என மாற்றி, 'நம் காலிற் பூணும் தளை' என உரைக்க. 'தாய் முதலிய சுற்றத்தார் அனைவரும் தளை' என்றபடி; "ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே" என்றார், புறத்தினும் (193). "நம் கழல்" எனத் தம்மோடு உளப்படுத்து அருளிச்செய்தார், பிறர் நோயைத் தம் நோயாக நினையும் அருட்டிருவுளத்தால். "களித்த மனத்தாராய்" என்புழி நின்ற "ஆய்" என்னும் எச்சச்சொல், "ஈயார், தேறார்" என்பவற்றோடும் இயையும். அழல் - அழுதல்; வருந்துதல்; 'நம்மை அழல் நீக்குவிக்கும்' என்க. அரையன் ஆக்கும் - அரசனாகச் செய்யும். "நம்மை அரையன் ஆக்கும்" என்பது பன்மையொருமை மயக்கம். "நீக்குவிக்கும" என்பது முதலிய செய்யும், என் எச்சங்கள் மூன்றும், 'அம்மான்' என்னும் ஒருபெயர் கொண்டு முடிந்தன.

Koviloor Digital Library

913 ஊற்றுத் துறையோன்ப துள்நின் றோரீர்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டீர்
மாற்றுத் துறைவழி கொண்டோடா முன்னம்
மாய மனைவாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்
வேற்றுத் தொழில்பூண்டார் புரங்கள் மூன்றும்
வெவ்வழல்வாய் வீழ்விக்கும் வேந்தன் மேய
சோற்றுத்துறை சோற்றுத்துறை யென்பீ ராகில்
துயர்நீங்கித் தூநெறிக்கட் சேர லாமே. 5

பயின்று எழுந்த பழவினை - பன்னாள் செய்து போந்த பழைய வினை; சஞ்சிதம். பாற்றலாம் - கெடுக்கலாம்.

913. இத்திருத்தாண்டகம், திருச்சோற்றுத் துறையை எடுத்தோதியருளியது.

ஊற்றுத் துறை ஒன்பது, உடம்பில் உள்ள ஒன்பது பெரு வாயில்கள்; அவை அனைத்தும் மாசு வெளிப்படும் புழைகளாய் உள்ளமை பற்றி, அவற்றை, "ஊற்றுத் துறை" என்று அருளினார்; 'அழுக்கு ஊறுகின்ற ஊற்று' என்றபடி; "மலஞ் சோரும் ஒன்பது வாயில்" (திருவா. சிவபு. 54) என்றருளினார் மாணிக்கவாசகரும். 'அவ்வாயில்களுக்கு உள்ளே அகப்பட்டு நின்றமையால், அங்கே மயங்கி இறைவனை நினைந்திலீர்' என்க. ஓரீர் - நினைந்திலீர். ஒன்பது வாயில்களும் ஒரு சேர அடைக்கப் படும் காலம் இறுதிக்காலமாதலாலும், அது வந்தபோது உள் ளத்தை ஆளும் திறன் அழியுமாகலான், அஞ்ஞான்று இறைவனை நினைக்க விரும்பினும் அஃது இயலாது ஆதலானும், "ஒக்க அடைக்கும்போது உணர மாட்டீர்" என்று அறிவுறுத்தருளினார்; இறுதித் திருப்பதிகத்துள், இந்நிலையை நாயனார் தமக்கே வைத்து அருளிச்செய்தல் காண்க; மாட்டீர் - இயலாதவராய் இருப்பீர். மாற்றுத் துறை - இதற்கு வேறான மற்றொரு துறை; அது பூதனா சரீரமாகிய இது போல்வதாகிய யாதனா சரீரம். 'மாற்றுத் துறை யாகிய வழி' என்க; 'அதனைப் பற்றிக்கொண்டு கால தூதுவரொடு ஓடாமுன்னம்' என்றபடி. கொண்டு - கைக் கொண்டு. 'ஓடாமுன்னம் என்பீராகில்' என இயையும். மாயம் - நிலையாமை. மகிழ்ந்து - இறுமாந்து. 'மனைவாழ்க்கைக் கண்ணே மகிழ்ந்து' என்க. "வாழ்வீர்" என்றது விளி; இத் தொடரை முதற்கண்ணே வைத்து உரைக்க. வேற்றுத்தொழில் - வேற்றுமைச் செயல்; பகைமை.

Koviloor Digital Library

914 கலஞ்சுழிக்குங் கருங்கடல்சூழ் வையந் தன்னிற்
கள்ளக் கடலி லழுந்தி வாளா
நலஞ்சுழியா எழுநேஞ்சே இன்பம் வேண்டில்
நம்பன்றன் அடியிணைக்கே நவில்வா யாகில்
அலஞ்சுழிக்கு மன்னாகந் தன்னான் மேய
அருமறையோ டாறங்க மானூர் கோயில்
வலஞ்சுழியே வலஞ்சுழியே என்பீ ராகில்
வல்வினைகள் தீர்ந்துவா னாள லாமே. 6

914. இத்திருத்தாண்டகம் திருவலஞ்சுழியை எடுத்தோதி யருளியது.

கலம் - மரக்கலங்கள். சுழிக்கும் - சுழலுகின்ற; இயங்குகின்ற. வையம் - பூமி. கள்ளம் - வஞ்சனை; கரவு; உலகியல் வாழ்க்கை கரவை இயல்பாக உடையதென்றபடி. வாளா - முயலாமலே. நலம் சுழியா எழு - நன்மையைத் தேடி அலைகின்ற. "இன்பம் வேண்டில்" என்றது, 'நீ உண்மையில் இன்பத்தைப் பெற விரும்பினால்' என்றவாறு. நவிலுதலுக்கு, 'வாழ்த்து' என்னும் செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. நவில்வாயாகில்- சொல்ல விரும்புவையாயின். 'இன்பம் வேண்டில் நவில்' எனவும், 'நவில விரும்பின் வலஞ்சுழி என்', 'என்பையாகில் வானாளலாம்' என வேறு வேறு தொடராக ஓதற்பாலதனை சொற்பல்காவாறு ஒரு தொடராக ஓதியருளினார் என்க. "நெஞ்சே நவில்வாயாகில்" என முன்னர் ஓதி, பின்னர், "என்பீராகில்" என்றது, உயர்வு பற்றியருளிய ஒருமைப் பன்மை மயக்கம். "அலம்" என்புழி, 'அலமாக' என ஆக்கம் வருவிக்க. அலம் சுழிக்கும் - எல்லாப் பொருளும் அடங்கச் சுருட்டுகின்ற. மன் நாகம் - பாம்பரசன்; ஆதிசேடன்; திருவலஞ் சுழி ஆதிசேடன் வழிபட்ட தலம் என்பது புராணம். தன், சாரியை. 'நாகந்தன்னால் மேய கோயில்' என இயையும். மேய- விரும்பப்பட்ட.

Koviloor Digital Library

915 தண்டிகுண் டோதரன்பிங் கிருடி
சார்ந்த புகழ்நந்தி சங்கு கன்னன்
பண்டை யுலகம் படைத்தான் தானும்
பாரை யளந்தான்பல் லாண்டி சைப்பத்
திண்டி வயிற்றுச் சிறுகட் பூதஞ்
சிலபாடச் சேங்கண் விடையோன் றூர்வான்
கண்டியூர் கண்டியூர் என்பீ ராகிற்
கடுகநும் வல்வினையைக் கழற்ற லாமே. 7

915. இத்திருத்தாண்டகம், திருக்கண்டியூரை எடுத்தோதி யருளியது.

'பிருங்கி இருடி' என்பது, 'பிங்கிருடி' எனக் குறைந்து நின்றது. 'பிருங்கி என்னும் பெயருடைய இருடி' என்பது பொருள். இவர் அம்மையையும் வழிபடாது சிவபிரானையே வழிபட்ட பெருஞ் சிவபத்தியுடையவர். இவரைத் தவிர, தண்டி, குண்டோதரன், நந்தி, சங்குகன்னன் என்பவரெல்லாம் சிவ கணத்தவர். அவருள் நந்திபெருமான், சிவகணங்கட்கெல்லாம் தலைவராய், சிவபிரானுக்கு அகம்படிமைத் தொழின்மை பூண்டு பிரம்பு ஏந்தி அருகிலிருந்து பணியாற்றுவதுடன், கயிலை மலைக்குக் காவல் பூண்டவர்; இதனால், இவரை, 'பெரிய தேவர்' எனவும், 'அபர சம்பு' எனவும் கூறுவர். 'பண்டு' என்பது, ஐகாரம் பெற்று, "பண்டை" என நின்றது. 'பண்டு படைத்தான்' என இயையும், உலகம் படைத்தான் - பிரமன். பார் - பூமி. பாரை அளந்தான் - திருமால். 'இவர் அனைவரும் பல்லாண்டு கூறி வாழ்த்தவும், சில பூதங்கள் புகழ்களைப் பாட வும் விடைமேல் ஏறி வருபவன் என்க. 'வெள்' அடியாக, 'வெள்ளி' என்பது வருதல்போல, 'திண்' என்பது அடியாக வரும் திண்ணி என்பது, எதுகை நோக்கி, 'திண்டி' எனத் திரிந்து நின்றது. 'திண்மையுடையதாகிய' என்பது பொருள். 'திண்ணிய வயிறு' என்றது, பருத்த வயிறு' என்றே பொருள் தந்து நின்றது.

Koviloor Digital Library

916 விடமுக்கப் பாம்பேபோற் சிந்தி நெஞ்சே
வெள்ளேற்றான் தன்தமரைக் கண்ட போது
வடமுக்க மாமுனிவர் போலச் சென்று
மாதவத்தார் மனத்துள்ளார் மழுவாட் செல்வர்
படமுக்கப் பாம்பணையிற் பள்ளி யானும்
பங்கயத்து மேலயனும் பரவிக் காணக்
குடமூக்கே குடமூக்கே யென்பீ ராகிற்
கொடுவினைகள் தீர்ந்தரனைக் குறுக லாமே. 8

917 தண்காட்டச் சந்தனமுந் தவள நீறும்
தழையணுகுங் குறுங்கொன்றை மாலை சூடிக்
கண்காட்டாக் கருவரைபோ லனைய காஞ்சிக்
கார்மயிலஞ் சாயலார் கலந்து காண

916. இத்திருத்தாண்டகம், திருக்குடமூக்கை எடுத்தோதியருளியது.

'உக்க' என்பது, 'ஊக்க' என நீட்டலாயிற்று. விடம் உக்க பாம்பு - விடத்தை உமிழ்ந்துவிட்ட (விடம் நீங்கிய) பாம்பு; இது, மந்திரத்தால் அடங்கிய பாம்பைக் குறித்தபடியாம். நெஞ்சம் தனது கரவையெல்லாம் விடுதற்கு இது உவமையாகச் சொல்லப்பட்டது. நெஞ்சிற்கேற்ப, 'சிந்தி' என்றாராயினும், 'வணங்கி' என்றலே கருத்து. "தமர்" என்றது, அடியவரை. வடம் - ஆலமரம். ஊக்குதல் - மனத்தைச் செலுத்துதல். 'வடத்தின்கண் ஊக்கிய அம் மாமுனிவர்' என்க. இவர் ஆலமர் கடவுளை அடைந்த நான்கு முனிவராவர். 'நெஞ்சே, வெள்ளேற்றான்தன் தமரைக் கண்டபோது ஆலமர் கடவுளை அடைந்த முனிவர்போலச் சென்று அடைந்து, விடம் உக்க பாம்புபோல அடங்கி வணங்கு' என்றவாறு. ஆலமர் கடவுளை அடைத்த முனிவர்கள் அவனையே கடவுளாகவும், ஆசிரியனாகவும் கொண்டமையறிக. படமூக்கப்பாம்பு - படத்தையுடைய கொடிய பாம்பு. "காண" என, இறைவன் நிலையை அவன் திருக்கோயிலுக்குத் தந்துரைத்தருளினர்.

917. இத்திருத்தாண்டகம், திருவெண்காட்டினை எடுத்தோதியருளியது.

தண் - தண்மை. தவளம் - வெண்மை. 'கொன்றைக் குறுமாலை' என மாற்றியுரைக்க. கண்ணியை, "குறுமாலை" என்றார். 'சந்தனமும் நீறும் தண்மையைக்காட்ட

Koviloor Digital Library

எண்காட்டாக் காடங் கிடமா நின்று
எரிவீசி யிரவாடும் இறைவர் மேய
வேண்காடே வேண்காடே என்பீ ராகில்
வீடாத வல்வினைநோய் வீட்ட லாமே. 9

918 தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே. 10

திருச்சிற்றம்பலம்

கொன்றை மாலை சூடி இரவு ஆடும் இறைவர்' என்க. கண் காட்டா - கண்ணைக் காட்டி; கடைக்கண்ணைச் செலுத்தி. கருவரை - நீலமலை. "போல்" என்பது அசை. காஞ்சி - மேகலாபரணம். கார்மயில் அம் சாயலார் - கார் காலத்து மயில் போலும் சாயலை உடையவராகிய உமாதேவியார்; மயில் பொலிவுபெறுவது கார்காலத்தே யாதலின், அதனையே உவமித் தார். இனி, 'கரிய மயில்போலும்' எனலுமாம். "கார்மயிலஞ் சாயலார்" என்பது ஒரு சொல் தன்மைப்பட்டு, "கருவரை யனைய" என்றதற்கு முடிபாயிற்று. 'சாயலார் கலந்து கண் காட்டாக் காண நின்று இரவு ஆடும் இறைவர்' என்க. எண் காட்டாக் காடு - அளவில்லாத காடு (ஈமங்)கள். "அளவில்லாத காடுகள்" என்பது, 'ஈமந்தோறும்' எனப் பொருள் தந்ததாயி னும், உலகம் ஒடுங்கிய வெறுவெளி' என்பதை உள்ளீடாக உடையது. வீடாத - கெடாத. வீட்டலாம் - கெடுக்கலாம்.

918. இத்திருப்பதிகத்துள் இதுகாறும் தலங்களுள் சில வற்றை எடுத்தோதிய குறிப்பினால் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றிலும் சென்று வழிபடுதலை விதித்தருளி, இறுதியில் இத்திருத்தாண்டகத்தினால், "சுற்றத் தொடர்பால் மயங்காது, இறைவனது திருவைந்தெழுத்தை மனம்பற்றி ஓது மாறு, அதனை அறிவுறுத்தருளுகின்றார்.

Koviloor Digital Library

'தந்தை ஆர், தாய் ஆர்' எனப் பிரிக்க. "ஆர்" என்றதனை. "உடன் பிறந்தார்" என்றதற்கும் கூட்டுக. தாரம் - மனைவி. 'யார்' என்னும் வினாவினைக் குறிப்பு, 'என்ன தொடர்பு உடையர்' என்னும் பொருளுடையதாய், 'யாதொரு தொடர்பும் உடையரல்லர்' எனப்பொருள் தந்து நின்றது. இவை அனைத்திற்கும், 'ஒருவர்க்கு' என்னும் முறைதொடர் பெயரை முதற்கண் வருவித்து உரைக்க. இங்ஙனம் உரைக்கவே, உலகர் கூறும், 'தந்தை' முதலிய முறைகள் எல்லாம் போலியே' என்று அருளியவாறாயிற்று. அங்ஙனம் அருளினமைக்குக் காரணம், "உற்றார் ஆர்உளரோ - உயிர்கொண்டு போம் பொழுது" (திருமுறை 4—9—10.), "செத்தால் வந்துதவுவார் ஒருவர் இல்லை சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்" (திருமுறை - 6 - 62 - 1) என்றாற்போல்வனவற்றால் இனிது விளக்கப்பட்டன. "தாம் தாம் ஆர்" என்றது, இனி, 'தாம் தாம் தமக்கு என்ன தொடர்புடையர்' என்றருளியதாம். அஃதாவது, 'தாமே தம்மைக் காத்துக்கொள்வதாக நினைத்தலும் மயக்க உணர்வேயாம்' என்றபடி. 'அது தமக்கு இறுதி முதலியன வந்தவிடத்துத் தம்மால் ஒன்றும் ஆகாமையான் இனிது உணரப்படும்' என்பது திருக்குறிப்பு. "வந்தவாறு எங்ஙன் போமாறு ஏது" என்றது, 'நிலவுலகிற் பிறந்தது, இங்குப் பிணிப்புற்று நிற்கின்ற தந்தை முதலியவரோடு முன்னேயும் கூடி நின்றோ? இறப்பது அவர்களோடு பின்னும் பிரியாது கூடி நிற்கவோ? அவ்வாறின்றி அவரவர் முன்னும் தொடர்பில்லாதவராய் இருந்து, பின்னும் தொடர்பில்லாதவராய்ப்போகவோ? என்னும் பொருட்டாய், 'அனைவரும் முன்னும் பின்னும் ஏதும் தொடர்பில்லாத தமியரேயன்றோ' எனப் பொருள்தந்தது. ஓர்ந்துணராதபோது, தந்தை தாய் முதலியவர்களும். தாமும் தமக்கு உறுதி செய்பவர் போலத் தோன்றினும், ஓர்ந்துணருங்கால் அவை அனைத்தும் போலியே ஆம் என்பார், "மாயமாம் இதற்கு ஏதும் மகிழவேண்டா" என்றருளிச்செய்தார். இதற்கு ஏதும் மகிழ வேண்டா - இதனால் சிறிதும் மயங்கற்க. 'ஆதலின், சிந்தையீர், இதற்கு ஏதும் மகிழவேண்டா என உரைக்க. ஆரே, எங்ஙனே, ஏதோ' என்னும் ஏகார ஓகாரங்கள் அசைநிலை. "திகழ்மதி" என்றதனால் பிறையினது தட்பத்தையும், "வாளரவு" என்றதனால் பாம்பினது கொடுமையையும் குறிப்பித்தருளினார். திளைத்தல் - நட்புக்கொண்டு விளையாடி மகிழ்தல். 'மதியும் அரவும் திளைக்கும் சென்னியை (தலையை) உடையவன்'

Koviloor Digital Library

எனவும், "எந்தை" எனவும் அருளியவாற்ருல், 'அவனே எல்லாப் பொருளையும் தாங்குபவனும், துன்பம் நீங்கி இன்பம் பெறச் செய்பவனும், யாவர்க்கும் உறவினனும்' என்பதனை அறிவுறுத்தருளினுர். 'அன்ன பெரியோனது திருப்பெயரே திருவைந்தெழுத்து' என்பார், "எந்தையார் திருநாமம் நமச்சிவாய" எனவும், 'அதனை எஞ்ஞான்றும் காதலாகி ஓதி உணரும் தன்மையால், துயில்நீங்கி உணர்வு உண்டாகும்பொழுது அதனையே உணரும் உணர்வுடையவரே வினைத்தொடக்கு அகன்று வீடுபெறுவர்' என்பார், "நமச்சிவாய என்று எழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாம்" எனவும் அருளிச்செய்தார். இருக்கல் ஆம் - இருத்தல் கூடும். இவ்வாறு பொய் அனைத்தையும் அகற்றி உண்மையை அறுதியிட்டு அறிவுறுத்தருளியதனுல், இத் திருத்தாண்டகம் அரியதோர் உறுதித் திருத்தாண்டகமாதல் காண்க.

அன்னவண்ணமெழுந்தருளியணித்தேகாட்சிகொடுப்பார்போற்
பொன்னியின்கோயி லொன்றெதிரே காட்டி யதனுட் புக்கருளத்
துன்னுந் தொண்ட ரம்மருங்கு விரைந்து தொடரப் போந்தபடி
மன்னும் புகலி வள்ளலார் தாமுங் கேட்டு வந்தணைந்தார். 279

அழைத்துக் கொடுபோந் தணியார்போற் காட்டி மறைத்தா
ரெனவயர்ந்து
பிழைத்துச் செவ்வி யறியாதே திறப்பித் தேனுக் கேயல்லால்
உழைத்தா மொளித்தாற் கதவந்தொண் டுறைக்கப் பாடியடைப்
பித்த
தழைத்த மொழியா ருப்பாலார் தாமிங் கெப்பான் மறைவதென.

மாட நீடு திருப்புகலி மன்ன ரவர்க்கு மாலயனும்
நேடி யின்னங் காணுதார் நேரே காட்சி கொடுத்தருள
ஆடல் கண்டு பணிந்தேத்தி யரசுங் காணக் காட்டுதலும்
பாட வடியா ரென்றெடுத்துப் பரமர் தம்மைப் பாடினுர். 281

பாடுந் தமிழ்மா லைகள்கொண்டு பரமர் தாமு மெழுந்தருள
நீடுந் திருவாய் மூரடைந்து நிலவுங் கோயில் வலஞ்செய்து
சூடும் பிறையார் பெருந்தொண்டர் தொழுது போற்றித்
துதிசெய்து
நாடுங் காதல் வளர்ந்தோங்க நயந்தந் நகரி லுடனுறைந்தார்.

— அப்பர் புராணம்.

Koviloor Digital Library

94. நின்ற திருத்தாண்டகம்

திருப்பதிக வரலாறு

இத்திருப்பதிகம் முதல் 97 ஆம் திருப்பதிகம் வரை உள்ள வரலாற்றினை, 70 ஆம் திருப்பதிக வரலாற்றிற் காண்க.

திருச்சிற்றம்பலம்

919 இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே. 1

இத்திருப்பதிகத்தில் உள்ள திருத்தாண்டகங்கள் அனைத்தும், இறைவன் உலகமாய் நின்ற நிலையினை வகுத்துக் கூறுதலின், இத்திருத்தாண்டகத் திருப்பதிகம், 'நின்ற திருத்தாண்டகம்' எனப் பெயர்பெற்றது. 'நின்ற திருத்தாண்டகம்' என்பதன் சொல்லியல்பு. மேலே, 'புக்க திருத்தாண்டகம்' என்னுமிடத்திற் குறித்தாம் (பக். 9.).

தன்னியல்பில் ஒருவனாய் நிற்கின்ற இறைவன், உலகை நோக்கி நிற்கும் பொதுவியல்பில், 'தானும் தனது சத்தியும்' என இருதிறப்பட்டு உலகெலாமாகி நிற்குங்கால், அவ்வுலகத்தொடு கலப்பினால் அவையேயாய், பொருட்டன்மையால் அவையாகாது தானேயாய், யாண்டும் அவைகளோடு உடனாய் இயங்கிவருதலால் அவையும் தானுமாய் நிற்பன். இவை முறையே. 'ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்றல்' எனப்படும். அஃதாவது இறைவன் பொருளால் உலகத்தின் வேறேயாயினும் உடலில் உயிர்போல அவற்றொடு சிறிதும் வேற்றுமையின்றிக் கலந்து நிற்கும் கலப்பினால் உலகமேயாகியும், அங்ஙனம் சிறிதும் வேற்றுமையின்றி ஒன்றாய்க் கலந்து நிற்பினும் பொருளால் தான் அவ்வுலகத்தின் வேறேயாகியும், இயங்குந்தன்மையுடைய அவ்வுலகத்தை இயக்கு

Koviloor Digital Library

தலோடு அமையாது இயங்கியும் வருதலின் உடனாகியும் நிற்ற லாம். இங்ஙனம் ஒன்றும் வேறும் உடனும் என்னும் மூன்றற்கும் பொதுவாய் நிற்கும் நிலையே, 'அத்துவித நிலை' எனப்படு கின்றது. அத்துவிதநிலை மூன்றனுள் ஒன்றாதல் உலகத்தின் இயக்கத்திற்கு முதலாவதாகலின், அதனையே ஆசிரியன்மார் பலவாற்றாற் பலவிடத்தும் சிறந்தெடுத்தோதுவர். அவற்றுள் ஒன்றாய் நிற்கும் நிலையை விளக்குதலையே நுதலி எழுந்தது இத்திருப்பதிகம். வேதத்துள் திருவுருத்திரம் இவ்வாறு அமைந் துள்ளது.

919. இத்திருப்பதிகத்துள் முதல் திருத்தாண்டகமாகிய இதனுள் முதற்கண்ணே இறைவனது எட்டுரு (அட்டமூர்த்த) நிலை அருளிச்செய்யப்பட்டது. அஃது ஏனைய எல்லாவற்றினும் சிறப்புடையது ஆகலின். அட்ட மூர்த்தத்தை, 'நிலம் நீர், தீ, காற்று, ஆகாசம், ஞாயிறு, திங்கள், இயமானன்' எனக் கூறுதலே முறையாயினும், அவற்றைச் செய்யுளுக்கேற்ப வைத்து அருளினார் என்க.

இருநிலம் - பெரிய பூமி. 'இயமானன்' என்பது, 'யஜமா னன்' என்னும் வடசொல் திரிபு; இஃது உயிரைக் குறிப்பது; திருக்கோவையார் உரைத் தொடக்கத்தில், வேட்போன்' என மொழிபெயர்த்துக் கூறினார் பேராசிரியர். எறியும் காற்று - வீசு கின்ற காற்று. அருநிலைய - அழிவில்லாத நிலையை உடைய; திங்கள் - சந்திரன். சந்திரனை இவ்வாறு சிறப்பித்தது, தக்கனது சாபத்தால் அழிவெய்தாது நின்ற நிலையைக் கருதி. ஞாயிறு - சூரியன். அட்டமூர்த்தி - எட்டுரு உடையவன். 'நிலம் முதலி யனவாகியதனால் எட்டுருவாகி' என்க. பெருநலம் - பெருமையை உடையதாகிய நன்மை. நலத்தை 'பெருமையை உடையது' என்றதனால், 'குற்றம் சிறுமையை உடையது' என்பது பெறப் படும். 'இப்பெருமை சிறுமை' என்பன இயைபின்மை நீக்கிய விசேடணங்கள் என்க. பிறர் உரு-ஏனையதேவரது வடிவங்கள். "தம் உரு" என்றது. சிவபிரானது 'அருவம், உருவம், அரு வுருவம்' என்னும் மூவகைத் திருமேனிகளையும். 'சிவதன்மம், சிவயோகம், சிவஞானம்' என்பவற்றால் எய்திநின்றோரது உரு வங்களை. நெருநல் - நேற்று; ஐகாரம் சாரியை. நிமிர்-நீண்ட. சடையை, 'புன்சடை' என்றல், உலகியலுக்கு ஒவ்வாமைபற்றி. "நின்றவாறு" என்பதனை எழுவாயாகவும், "ஆகி"

Koviloor Digital Library

920 மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிர முமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப்
பிரளயத்துக் கப்பாலோ ரண்ட மாகி
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்து மாகி
யெழுஞ்சுடரா யெம்மடிகள் நின்ற வாறே. 2

என்பனவற்றை அதன் பயனிலைகளாகவும் கொண்டு 'நின்ற வாறு ஆகி' எனத் தனித்தனி எண்ணி முடிக்க. "நின்ற வாறு" என்பதில், நிற்றலையே, 'ஆறு' என்றாராகலின், அத் தொடர், 'நின்றமை, என்னும்' தொழிற்பெயர்ப் பொருட்டாய் ஒரு சொற்றன்மை எய்திநின்றது. தொழிற்பெயர் எழுவாயாய் நிற்குமிடத்து, வினையெச்சமும், இரண்டாவது முதல் ஏழாவது ஈறாக உள்ள வேற்றுமைகளும் பயனிலையாய் நிற்கும் என்பது, 'அவன் வந்தது நடந்து; சென்றது விரைந்து; உண்டது சோற்றை; போழ்ந்தது வாளால்' என்றாற்போல்வனவற்றால் அறியப்படும். இத்தொடர்களில் பயனிலைகளாய் நிற்கும் வினை யெச்சத்திற்குப் பின்னும், வேற்றுமைகட்குப் பின்னும் எழுவாய்க் கண் உள்ள தொழிற்பெயர்களே மீளச் சொல்லத்தக்க சொல்லெச்சங்களாய் எஞ்சிநிற்கும்; அத்தொழிற் பெயர் கள், 'இம்மகன் நேற்று யான்கண்ட மகன்' என்றல்போல எழுவாய்க்கண்பொதுவாயும், பயனிலைக்கண் சிறப்பாயும்நிற்கும்; ஆயினும், அவ்வெச்சத்தை வெளிப்படக் கூறின் அத்தொடர்கள் இனியவாய்த் தோன்றா என்னுங் கருத்தான் அவை எஞ்சி நிற்கவைத்தே வழங்குவர் என அறிக. இவற்றுள், வினையெச்சம் பயனிலையாய் நிற்றலை, தொல்காப்பியப் பொருளதிகாரத்து. "அவற்றுள் - நடுவண் ஐந்திணை நடுவணதொழியப் - படுதிரை வையம் பாத்திய பண்பே" என்னும் சூத்திரத்துரையுள், இளம் பூரணரும் சிறிது உரைத்தார். இனி 'எம் அடிகள் நின்றவாறு வியக்கத்தக்கது' என ஒருசொல் எஞ்சி நின்றதென, அதனை வருவித்து முடித்தலும் ஆம்.

920. "கண்ணுக்கு, பெண்ணுக்கு, எண்ணுக்கு" என்னும் நான்கனுருபுகள், 'அவட்குக் கொள்ளும் இவ்வணிகலம்' என்பதுபோல ஏற்புடைப் பொருட்கண் வந்தன. கலை - நூல், கலைஞானம் - நூலறிவு. 'ஒடுக்கம்' எனப் பொருள்தரும்,

Koviloor Digital Library

921 கல்லாகிக் களருகிக் கானு மாகிக்
காவிரியாய்க் கால்ஆருய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றுங் கெடுத்தா ஞகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனுகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே. 3

'லயம்' என்னும் வடசொல், 'பிர' என்னும் இடைச்சொல்லோடு கூடி, 'பிரளயம்' எனவரும். தோற்ற ஒடுக்கங்கள் கால தத்துவத்திற்கு உட்பட்டு நிகழ்வன. சுத்தமாயா புவனங்கள் கால தத்துவத்திற்கு அப்பாற்பட்டவை; ஆகவே, 'பிரளயத்துக்கு அப்பால் உள்ள அண்டம்' என்றது, சுத்தமாயா புவனத்தை என்பது பெறப்பட்டது. அவை பலவாயினும், சுத்த மாயையின் விளைவாக நோக்குமிடத்து ஒன்ருதல்பற்றி, 'ஓர் அண்டம்' என்ருர். சுத்தமாயா தத்துவங்களும், புவனங்களும் கால தத்துவத்திற்கு அப்பாற்பட்டமை பற்றி, 'நித்தம்' எனப் படும் என்பது, "சுத்ததத் துவம்சி வன்றன் சுதந்திர வடிவ மாகும் - நித்தம்என் றுரைப்பர் காலம் நீங்கிய நிலைமை யாலே" என்னும், சிவஞானசித்தியால் (சூ. 1 - 66.) உணரப்படும். எண் - எண்ணுதல்; ஆராய்தல்; அஃது ஆராய்ச்சிக்குப் புலனும் பொருள்மேல் நின்றது; அதனை உயிர் அறிவின்கண் பதிவிப்பது எழுத்தோசை (நாதம்) ஆதலின், எண்ணுக்கு ஓர் எழுத்து" என்று அருளினர். எழும் சுடர் - தோன்றி விளங்கும் ஒளி; என்றது. சிவபிரானது தடத்த நிலையை. அந்நிலை படைப்புக் காலத்து விரிந்தும், ஒடுக்கக் காலத்துக் குவிந்தும் வருதல் பற்றி, "எழுஞ்சுடர்" எனப்பட்டது; "விரிந்தனை குவிந்தனை" (திருமுறை - 2. 30. 3.) எனத் திருஞானசம்பந்தரும், "விரிந்தானைக் குவிந்தானை (திருமுறை - 6. 86. 6.) என நாயனரும் அருளிச்செய்ததும் இது நோக்கி என்க. வருகின்ற திருத்தாண்டகங்களில், "பரஞ்சுடராய்" என்பது தவிர்த்துப் பிறவாறு வரும் சுடர்கள் யாவும் இந்நிலையையே குறிக்கும் என்க.

921. கல் - மலை. 'அளறு' என்பதுபோல, களர் நிலத்தை, 'களறு' எனவும் வழங்குவர். கான் - காடு. "காவிரி"

Koviloor Digital Library

922 காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கோல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமானுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பி னுச்சி யாகி
ஏற்றானா யேறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 4

என்றது பொதுப்படப் பிற யாறுகளையும் கொள்ள நின்றது. கால் - யாறுகளினின்றும் பிரிந்துசெல்லும் வாய்க்கால். ஆறு - வழி; 'வாய்க்காலாகிய வழி' என்க. கழி - கடற்கரைக் கழி. புரம் - பல நகரங்கள். "புரம் மூன்றும் கெடுத்தான் ஆகி" என்றது, 'அந்நகரங்கட்கு அழிவுமாய்' என்றவாறு. "சொல் லுக்கு" என்னும் நான்கனுருபையும், மேலைத் திருத்தாண்டகத் திற் கூறியவாறே கொள்க. சுலாவு - போக்கு வரவு. சூழல் - (அப் போக்கு வரவிற்கு வேண்டப்படும்) இடம். "நெல்லாகி" என்ற தனை, "நீருமாகி" என்றதன் பினனர்க் கூட்டி உரைக்க; என்னை? நிலமும் நீரும் இயைவதனால் உண்டாகும் பயனே நெல் ஆதலின்; "நீரு நிலனும் புணரியோரீண் - டுடம்பு முயிரும் படைத்திசினோரே" (புறம் - 18.) என்றதும், இது நோக்கி.

922. எட்டுருவில் ஒன்றாதல் பற்றி, மேல், "எறியும் காற்று மாகி" என்று அருளி, ஈண்டு, கார்முகிலோடு (கரிய மேகத் தோடு) இயைபுடைமை நோக்கி, "காற்றாகி" என்று அருளிச் செய்தார். மேல் அருளிச்செய்த, "நெருநல்" முதலிய மூன்றும் நாட்களையே குறித்தன. ஈண்டு, "காலம் மூன்றாய்" என்றது, நொடியும், நாழிகையும் முதலாகப் பலபடவரும் காலப்பகுதிகள் அனைத்தையும் குறித்தது. கங்குல் - இரவு. கூற்று - இயமன், 'கொல்களிறு' உவமையாகுபெயர். 'கூற்று உதைகொல் களிறு மாகி' என்பதே பாடம் போலும்! இது, கூற்றுவனது தோற்ற ஒடுக்கங்களைக் கொள்ள வைத்த குறிப்புமொழி என்க. குரை கடல் - ஒலிக்கின்ற கடல். கடற்குக் கோமான். வருணன். "நீற்றான்" என்றது, நீறணிந்த கோலத்தை மேற்கொண்ட நிலையையும், "நீறேற்ற மேனி" என்றது, அந் நிலைக்கு உரிய வடிவத்தையும் குறித்தன. "விசும்பு" என்றது

Koviloor Digital Library

923 தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக் கோர்தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறுந்தண் மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே. 5

924 அங்கமா யாதியாய் வேத மாகி
அருமறையோ டைம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசோல்லுந் தானே யாகிப்
பால்மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்

அனைத்துலகங்களின் முடிவையும், "விசும்பின் உச்சி" என்றது, அவைகளைத் தோற்றியும் ஒடுக்கியும் நிற்கும் நிலையையும் குறித்தன. ஏற்றான் - உலகத்தின் தொழிற்பாடுகள் அனைத்தையும் ஏற்றுகொண்டவன். ஏறு - இடபம். அதனை ஊர்ந்த செல்வன்' என்றது, அங்ஙனம் ஏன்றுகொண்டு நிற்கும் தலைவன் (பதி) என்றபடி.

923. திண்மை, நிலத்தின் குணம்; இது கூறினமையால், "தீ, நீர்" என்றவற்றினும், அவற்றது தட்ப வெப்பங்களாகிய குணங்களையே கொள்க. திசைத் தெய்வம் - திசைக் காவலர். திசைகளைத் தனித்தனி நோக்கி அருளிச்செய்தலின், "ஓர் தெய்வமாகி" என்று அருளினார். சார்வு - சார்பு; துணை; பற்றுக்கோடு. தாரகை - விண்மீன்; இது முதலிய மூன்றும் வானத்திலுள்ள ஒளி மண்டிலங்களை நோக்கி அருளிச்செய்தவாறு. 'இரதமாகி' என்பதும் உடம்பொடு புணர்த்தலாற் கொள்ளப்படும். இரதம் - சுவை. நுகர்வான் - துய்ப்பவன்; இனம் பற்றி ஒருமையாக அருளிச்செய்தார். "நீ, நான் என்பன. 'முன்னிலை, படர்க்கை' என்னுந் துணையாய் நின்றன; இவற்றானே, 'அவன்' என்னும் படர்க்கையும் கொள்ள நின்றது. நேர்மை-நுண்மை.

924. 'ஆதியாய வேதம்' என்பதில் அகரம் தொகுத்தலாயிற்று. மறை - மந்திரம். "ஐம்பூதம்" என்றது அவற்றுக்குத் தலைவராய தேவரை. 'மதி, கங்கை, காவிரி, கன்னி' என்றனவும் அவற்றது தெய்வங்களையே என்க. "சொல்" என்றது,

Koviloor Digital Library

கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியு மாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 6

925 மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மெனநினைந்தார்க் கெளிதே யாகி
அழல் வண்ண வண்ணர்தாம் நின்ற வாறே. 7

புகழையாதலின், பங்கம் என்றது அவற்றுக்கு மறுதலையாய இகழ்ச்சியை. எனவே, வேதத்துள், கொடியாரை வைதும். தேவரை வாழ்த்தியும் கூறும் பலவகைச் சொற்களாயும் நின்றமை அருளியவாறும். ஆதி - உலகிற்கு முதற்காரணம்; மாயை. பான்மை - வினை. கன்னி - குமரித்துறை. கடல் முதலிய மூன்றும் ஆகுபெயரால் அவற்றை அடுத்துள்ள இடங்களை உணர்த்தின. அது, "எங்குமாய்" என்ற குறிப்பாற் பெறப்படும். தொகுக்கப்பட்ட அகரத்தை விரித்து, 'செல்வனாகி எழுஞ்சுடராய எம் அடிகள்' என அடையாக்கி உரைக்க.

925. "மக்கள்" என்றது முறைப்பெயர். "கடல்" என்றது அதன்கண் உள்ள நீரை; அது, "மறிகடல்" என்பதனாற் பெறப்பட்டது. "விசும்பு" என்றது, அதன் குணமாகிய ஓசையைக் குறித்தது. "கோதாவரி, குமரி" என்றனவும் அவற்றது நீரையே, 'குழகனாகி, புனிதனாகி, எளிதேயாகி' என்னும் எச்சங்கள், 'வண்ணர்' என்பதில் தொக்குநின்ற, 'ஆயவர்' என்பதனோடு முடியும். 'குழகன், புனிதன்' என்பன, பன்மை ஒருமை மயக்கம். "எளிது" என்றது, 'எளிய பொருள்' என்னும் பொருளது. "யாதானும்" என்புழி, 'ஆக' என்பது வருவிக்க. 'யாது நிகழினும் நிகழ்க' எனக் கவலையற்றுத் தன்னையே நினைவார்' என்றபடி. நாயனார், தம்மைச் சமணர்கள் கல்லில்கட்டிக் கடலில் வீழ்த்தியபொழுது, 'எப்பரிசாயினும் ஆக ஏத்துவன் எந்தையை' என நினைந்து பாடினமையைப் பெரிய புராணத்துட் காண்க. அழல் வண்ண வண்ணர் - நெருப்பினது நிறம்போலும் நிறம் உடையவர்.

Koviloor Digital Library

926 ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
அறிவாகி அழலாகி அவியு மாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளால் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே. 8

927 நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பி னுச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கள் மூன்றினையு மெய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லவெம் மீச னார்தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே. 9

926. அழல் - நெருப்பு; என்றது வேள்வித்தீயை. அவி - வேள்வித்தீயில் இடப்படும் உணவு. "நாவுக்கு" என்பது முதலிய நான்கனுருபுகட்கு, மேல் உரைத்தவாறே உரைக்க. "நாதமாகி, வேதத்தின் உள்ளாகி" என்பவற்றையே, "நாதனாகி, வேதத்தின் உள்ளோனாகி" என ஓதியருளினார். "நாதம்" என்றது சூக்கும வாக்கையும், "வேதத்தின் உள்" என்றது, வேதத்தின் பொருளையும் என்க. 'வாசமாய் உள்ளால்புக்கு நின்றானாகி' என்றது, 'நாற்றம் பூவிற்குள் ஒன்றாய் நிற்கும் ஒற்றுமை நிலையாகி' என்றபடி. "தே" என்னும் அஃறிணைச் சொல், பன்மையாய் நின்றது. "முதல்" என்றதும் அவ்வாறு நின்று தலையாய தேவரைக் குறித்தது. சென்று - பரவி.

927. "நீர்" என்றது, அதன் குணமாய சுவையை. 'நீள அகலம்' என்னும் அகரம் தொகுத்தலாயிற்று. "நீளம், அகலம்" என்பன அப்பண்புகளையே குறித்து நின்றன. "தான்" என்பது, "அகலம்" என்பதனைச் சார்ந்துநின்ற அசைநிலை. ஏகாரம், எண்ணிடைச்சொல்; அதனை, "நீளம்" என்பதனோடும் கூட்டுக. நிழல் - ஒளி. "உச்சி" என்றது, எல்லையை,

Koviloor Digital Library

928 மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கும் எல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலா தனவெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்

பேர் - புகழ். "பாராகிப் பண்ணாகிப் பாடலாகி" என்றதனை, "பெருமையாகி" என்பதன் பின்னர்க் கூட்டுக. பார் - பூமி; என்றது, தாங்குதலாகிய அதன்செயலை. பரஞ்சுடர் - மேலான ஒளி. 'அடிகள்தாம், எய்தானாகி, ஈசனாரும் பரஞ்சுடரும் ஆயி னும், சென்று நின்றவாறு' எனக்கொண்டு கூட்டி, எடுத்துக் கொண்டு உரைக்க. "எய்தான்" என்றது, பன்மை ஒருமை மயக்கம்.

928. 'மாபூதம்' என்றது அவற்றோடு இயைந்து நிற்கும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களையும், மற்றும் அப்பூதங்களின் கூறாய தாத்துவிதங்களையும் என்க. மருக்கம் - பெருக்கம்; 'இது, மருங்குசெல்வது' என்னும் பொருள்பற்றி வந்தது. அருக்கம் - சுருக்கம்; இது, 'அருகுதல்' என்பதுபற்றி வந்தது. "பால்" என்றது, 'திசைப்பிரிவு' என்னும் பொருளது. "எண்டிசை" என்பதில் உள்ள, 'எட்டு' என்பதனை, "பால்" என்றத னோடும் கூட்டுக. பரப்பு - அகலமும் நீளமும் கூடியது. பர லோகம் - எல்லாவற்றினும் மேலாய சிவலோகம். "பூதங்கள்" என்றது, அவற்றின் உட்பட்ட அண்டங்களை. "புராணன் தானேயாகி" என்றதும், 'புராணம்' எனப்படும் பழமையாகி என்றதேயாம். 'இயலாதன'. 'இயல்விப்பான்' என்பன, "ஏலாதன" எனவும், "ஏல்விப்பான்" எனவும் மருவி நின்றன; அது, 'ஏற்பிப்பான்' என்னாது, "ஏல்விப்பான்" என்றதனானே அறியப்படும். இயலாதன - தானின்றித் தாமாக நடைபெறாதன; அவை சட உலகங்கள். 'இயல்விப்பான் ஆய்' என்றது, 'அவைகளை நடைபெறுவித்தற்கு அமைந்து என்றவாறு. "ஏல்விப்பானாய்" என்னும் எச்சம், "எழுஞ்சுடராய்" என்பதில் உள்ள, "ஆய்" என்பதனோடு முடியும்.

Koviloor Digital Library

95. தனித் திருத்தாண்டகம்

திருப்பதிக வரலாறு

இத்திருப்பதிக வரலாற்றினை 70-ஆம் திருப்பதிக வரலாற்றிற் காண்க.

திருச்சிற்றம்பலம்

929 அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. 1

தனித் திருத்தாண்டகம் - தனித்தனிப் பொருள்களை உணர்த்தும் திருத்தாண்டகங்களால் இயன்ற திருப்பதிகம்.

929. இத் திருத்தாண்டகம், தமக்கு எல்லாப் பொருளும் இறைவனேயாகக் கொண்டு நின்ற தம் அன்பின் மேலீட்டினை அருளிச்செய்தது.

அப்பன் - தந்தை. அம்மை - தாய். ஐயன் - தமையன். "அன்புடைய" என்றது, இடைநிலை விளக்காய் நின்று, "அப்பன்" முதலிய எல்லாவற்றொடும் இயையும். ஒப்புடைய மாதர் - "பிறப்பே குடிமை" (தொல் - பொருள். 273.) முதலிய எல்லாவற்றாலும் ஒத்த மனைவியார். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" (குறள். 54.) என்றவாறு, ஒப்புடைய மனைவியை எய்துதல் மிக்க புண்ணியத்தானன்றிக் கூடாமையின், அவ்வாறு எய்திய மனைவி என்பார், "மாதர்" எனப் பன்மையால் அருளிச் செய்தார். பொருள் - பணம். 'அறநெறியான் வந்த பொருள்' என்பார், "ஒண்பொருள்" என்று அருளிச்செய்தார்; "ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு" (குறள். 760.) என்றார், திருவள்ளுவநாயனாரும். குலம் - கிளை; இதனை, 'சாதி' என்ப. அஃது ஆகுபெயராய், 'குலத்தவர்' எனப் பொருள் தந்தது.

Koviloor Digital Library

930 வேம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி
அனலாடி ஆன்அஞ்சும் ஆட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
சேவ்வான வண்ணரேன் சிந்தை யாரே. 2

சுற்றம் - மேற்கூறிய அப்பன் முதலியவரோடு நேராகவும், வழிவழியாகவும் தொடர்புபட்டு வருவோர். "ஓர் ஊர்" என்றது, 'நிலையாக நின்று வாழும் ஊர்' என்றவாறு. துய்ப்பன - நுகர்ச்சிப் பொருள். உய்ப்பன - ஊர்தி வகைகள்; அவற்றை வேறு ஓதினர், பொருளுடையார்க்கு அவை மிக்க பயனையும், பெருமையையும் தருதலின். செல்வம் உடையார் என்பதை விளக்க, "யானை எருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச்............சென்றார்" என ஊர்தியையே பிறரும் சிறந் தெடுத்துக் கூறினர் (நாலடி. 3.) 'துய்ப்பனவும் உய்ப்பனவு மாய்' என ஆக்கம் வருவிக்க. துணையாய் - உலகியலாய குழியில் வீழாது காக்கும் துணைவனாய் உடன்நின்று. துறப்பித் தல், உலகத்து அப்பன் அம்மை முதலாயினாரினின்று என்க. பொன் முதலிய மூன்றினும் நின்ற இகரச் சுட்டுக்கள், 'இவ் வுலகத்தாரைப் பிணிக்கின்ற' என்னும் பொருளுடையன. இம் மூன்று தொடர்களையும், 'தோற்றுவாய் நீ' என்பதன் பின்னர்க் கூட்டுக. இறைவன் - கடவுள். "ஏறு ஊர்ந்த செல்வன்" என்றது, 'என்னை மேற்கதிக்கண் உய்ப்பவன்' என்றபடி. "அப்பன் நீ" என்பது முதலிய எல்லாவற்றிற்கும் இயைய, 'எனக்கு' என்பதனை முதற்கண் வருவிக்க.

930. இத் திருத்தாண்டகம் தாம் பெற்று நின்ற சிவப் பேற்றின் பெருமையைத் தோன்றக்கூறியருளியது.

வெம்ப - நாம் வருந்தும்படி. வருகிற்பது அன்று - வர வல்லது அன்று; 'கூற்றம்' என்பது சொல்லால் அஃறிணை யாதலின், 'வருகிற்பது அன்று' என அஃறிணையாக முடித் தருளினர். 'கூற்றம் நம்மேல் வெம்ப வருகிற்பது அன்று, என இயையும். பைய நையும் - மெல்ல வருந்துகின்ற; மென்மை

Koviloor Digital Library

931 ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஒட்டுவித்தால் ஆரொருவர் ஒடா தாரே
உருகு வித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே. 3

முறை முறையாக வருதல் குறித்தது. பரிவு - துன்பம். 'வினைப் பகையும் பரிவும் தீர்ந்தோம்' என இயையும்; 'பரிவு தீர்ந் தோம்' என உம்மையின்றி ஓதுதல் பாடம் அன்று. இடுக்கண் - இடையூறு. 'எங்கெழில் என் ஞாயிறு' என்பது, 'உலகம் எவ்வகையாக நிலைமாறினும் எமக்கு அதனுல் வரக்கடவது என்னை?' என்பதை உணர்த்துதற்குக் கூறுவதோர் வழக்கு. இதனை, திருவாசகம் (திருவெம். 19.) சிவஞானசித்தி (சூ. 8.31.), சீவகசிந்தாமணி (கனகமா. 237.) இவற்றுள்ளும் காணலாம். 'யாவர்க்கும் எளியோம் அல்லோம்' என்க. "செங்குன்ற வண்ணர்" என்புழி நின்றவண்ணம், வடிவைக் குறித்தது. 'என் சிந்தையார் ஆயினர்; அதனுல்' என எடுத்துக்கொண் டுரைக்க. "நம்மேல்" என்பது முதலியன, உயர்வுபற்றி வந்த ஒருமைப் பன்மை மயக்கம்.

931. இத் திருத்தாண்டகம் இறைவனது தன்வயமுடை மையை உணர்த்து முகத்தால், உயிர்களிடத்து நிகழும் அவனது கைம்மாறற்ற உதவியை அருளிச்செய்தது.

ஆட்டுவித்தலாவது, உயிர்களை அவற்றது, 'யான் எனது' என்னும் செருக்குக் காரணமாகப் பல்வேறு உடம்பாகிய பாவையுட் படுத்து, வினையாகிய கயிற்றினுல் கீழ் மேல் நடு என் னும் உலகமாகிய அரங்கினிடத்து, வினையை ஈட்டியும் நுகர்ந்தும் சுழலச் செய்தலாகிய கூத்தினை இயற்றுவித்தல். "கோனுகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டுவானுகி நின்ருயை என் சொல்லி வாழ்த்துவனே" (திருவா.திருச்சதகம். 15.) என்றருளிச் செய்தார், மாணிக்கவாசகரும். இவ்வாறு ஆட்டுவித்தல், உலகத் தைப் படைத்தலும் காத்தலும் ஆகிய தொழில்களால் ஆவதாகும்.

Koviloor Digital Library

அடக்குவித்தல், மேற்கூறியவாறு ஆட்டுவித்தலால் ஆடி வரும் உயிர்கட்கு எய்ப்புத் தோன்றுதவாறு, ஆடலை இடையே சிறிது காலம் நிறுத்தி, யாதும் செய்யாதவாறு அமைந்திருக்கச் செய்தல்; இஃது, உலகம் முழுவதையும் அழிக்கும் முற்றழிப் பினுல் நிகழும்.

ஓட்டுவித்தலாவது, பின் நின்று ஆட்டுவிக்கின்ற தன்னை உள்நோக்கி உணராவண்ணம் உயிர்களைப் பிற பொருள்களை நோக்கி புறத்தே ஓடுமாறு ஓட்டுதல்; இது, 'மறைத்தல்' என்னும் தொழிலினுல் ஆவதாகும்.

உருகுவித்தலாவது, புறமே ஓடிப் பயன் காணுது உவர்ப் பெய்திய உயிர்களைப் பின்னர் உள்நோக்கித் தன்னை உணரு மாறு செய்து, தன்னையும் தனது உதவியினையும் நினைந்து நினைந்து அன்பு கூர்ந்து மனம் உருகுமாறு செய்தல்.

பாட்டுவித்தலாவது, அவ்வுருக்கத்தின்வழித் தோன்றும் வாழ்த்துக்களையும் புகழ்ச்சிகளையும் வாயார எடுத்துப் பாடுமாறு செய்தல். இப்பாட்டுக்கள் தாமே பாடுவனவும், முன்னுள்ளனவு மாய் அமையும்.

பணிவித்தலாவது, அன்புமிக்கெழுந்து பெருக தன்முனைப்பு அடியோடு நீங்குதலால், தன்முன்னே நிற்றல் இன்றி, நிலஞ்சேர வீழ்ந்து பணியச்செய்தல். உருகுவித்தல் முதலிய மூன்றும் முறையே மன மொழி மெய்கள் என்னும் மூன்றும் தன்வழி (இறைவழி)ப் படச் செய்விப்பனவாதல் காண்க. இம் மூன்றும், 'அருளல்' என்னும் தொழிலால் அமைவன. மறைத்தலும் அருளலும் ஆகிய இத் தொழில்களைக் குறித்தே,

"போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்"

(திருவா. சிவபு. 43.)

எனவும்,

"பந்தமும் வீடும் படைப்போன் காண்க"

(திருவா. திருவண். 52.)

எனவும் அருளிச்செய்தார், ஆளுடைய அடிகள்.

"காட்டுவித்தால் ஆரொருவர் காணுதாரே" என்றது, 'உயிர்கள் உன்னைக் காணுமை, நீ காட்டுவியாமையாயேயாம்,' எனவும், "காண்பாரார் காட்டாக்கால்" என்றது. 'நீ காட்டு வியாத பொழுது. உயிர்கள் தாமே உன்னைக் காண வல்லன

Koviloor Digital Library

932 நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே. 4

அல்ல' எனவும், 'உயிர்கள் இறைவனைக் காண்டல் அவன் அருளால் அன்றி ஆகாது ஆதலின், முத்திக் காலத்திலும் உயிர்கட்கு முதல்வனது உதவி இன்றியமையாதது' என்பதனை உடம்பாட்டினும் எதிர்மறையினும் வைத்து இனிது விளங்க அருளிச் செய்தவாறு.

நெற்றிக்கண், இறைவனது இயற்கைப்பேரறிவினை உணர்த்துமாதலின், "கண்ணுதலாய்" என விளித்தருளியது, காட்டுதல் முதலிய பலவற்றிற்கும் உரிய இயைபு உணர்த்தப்பட்டது என்க.

"கண்ணுதலாய்" என்பதனை முதற்கண் வைத்து, 'நீ' என்னும் சொல்லெச்சத்தினை, ஆட்டுவித்தல் முதலிய எல்லாவற்றிற்கும் வருவிக்க. இறைவன், உயிர்களைத் தொழிற்படுத்துதல் பெத்த காலத்தில் திரோதான சத்தியும், அதன் வழித்தாய வினையும், அதன் வழியராகிய காரணக் கடவுளரும் முதலிய வாயில்களாலும், முத்திக் காலத்தில் அருட்சத்தி வாயிலாலும் ஆகலின், 'ஆட்டினால், ஓட்டினால்' என்பனபோல அருளாது, 'ஆட்டுவித்தால் பாட்டுவித்தால்' முதலியனவாக அருளினார். அதனால், இறுதிக்கண், "காட்டாக்கால்" என்றதற்கும், 'காட்டுவியாக்கால்' என்றலே திருவுள்ளம் என்க.

'பாடுவிப்பித்தால்' என்றே ஓதற்பாலதாயினும், செய்யுளின்பம் நோக்கி, 'பாட்டுவித்தால்' என்று அருளிச்செய்தார். இன்றியமையாமை நோக்கி இவ்வாறு சொற்களை ஆக்கி அளித்தல், தலைவராயினார்க்கு உரியது; அதனால், அச்சொல், ஆசிரியரது ஆணையாற் கொள்ளப்படுவதொன்றாம் என்க. இனி, 'பாடுவிப்பித்தால்' என்பதே, எதுகை நோக்கி, வேண்டும் விகாரங்கள் எய்தி, 'பாட்டுவித்தால்' என நின்றது என்றலும் ஒன்று.

932. இத் திருத்தாண்டகம், இறைவன் தமக்கு அனுபவப் பொருளாயின அருமையை அருளிச்செய்தது.

Koviloor Digital Library

நற்பதத்தார் - நன்னிலையை (வீடுபேற்றினை) அடைய உரியவர்; இதன்கண் தொக்கு நின்ற ஆறும் வேற்றுமை, 'முருகனது குறிஞ்சி' என்றாற்போலக் கிழமைக் கிழமைக்கண் வந்தது. உண்மை வீடுபேறு இறைவனேயாகலின், "நற்பதத் தார் நற்பதமே" என்று அருளினார். ஞான மூர்த்தீ - அறிவு வடிவாயவனே. 'நலச் சுடர்' என்பது, மெலிந்து நின்றது. 'நன்மையை விளக்கும் சுடர்' என்பது பொருள். தீமையாகிய உலகைக்காட்டும் சுடர் (மாயை) போலாது, தன்னையே காட்டும் சுடர் என்றபடி. நால் வேதங்கள் வைகரி வாக்குக்களாதலின், அவற்றிற்கு அப்பால் நின்ற சொற்பதம் என்றது, நாதத்தை யாம், அப் பதத்தை அடைந்தவர் அபரமுத்தர் எனப்படுவர். அவரது சொற்பதம் என்றது, சூக்குமை வாக்கையே யாம். சூக்குமை வாக்கையும் கடந்தவன் இறைவனாகலின், "சொலற் கரிய சூழலாய்" என்றருளினார். "இது" என்றது, "நற்பதம்" முதலாக மேற்கூறிய தன்மைகள் அனைத்தையும் தொகுத்துச் சுட்டியது. "இது உன் தன்மை" என்பதன் பின், 'ஆயினும்' என்பது வருவிக்க. நிற்பது ஒத்து - நிற்பதுபோலக் காட்டி. நிலைஇலா - நில்லாது அலைகின்ற. 'நெஞ்சந் தன்னுள் வந்து' என ஒருசொல் வருவித்து முடிக்க. 'நெஞ்சு வழியாக உடம்பில் நின்றான்' என்பார், 'நெஞ்சந்தன்னுள் வந்து உடம்பே புகுந்து நின்ற' என்றார். நிலாவாத - நிலையில்லாத. நெஞ்சின் தன்மையையும், உடம்பின் தன்மையையும் எடுத்தோதியது, அவை அவன் புகுதற்கு உரியனவாகாமையை விளக்குதற்கு. தேற்றேகாரமும் அதுபற்றியே வந்தது. நெஞ்சினுள் நின்று எல்லாப் பயனையும் தருதலின், 'கற்பகமே" என்றும், இதனை இனிதுணரப்பெற்றமையின், "விடுவேனல்லேன்" என்றும் அருளினார். கனகம் - பொன். மாமணி - மாணிக்கம். 'கனக நிறத்து, மாமணி நிறத்து' எனத் தனித்தனி இயைக்க. 'கடவுள்' என்னும் தொழிற்பெயர் ஆன் விகுதி ஏற்று 'கடவு ளான்" என நின்றது; 'கடத்தலை உடையவன்' என்பது பொருள். இஃது இவ்விகுதி இன்றியே ஆகுபெயரால் அப் பொருள் குறித்தல் பெரும்பான்மை.

Koviloor Digital Library

933 திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணு வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே 5

933. இத் திருத்தாண்டகம் மக்கள் வாழும் ஊர்க்கு உரிய இயல்பு கூறும் முகத்தால், நன்மக்கட்கு உரிய ஒழுக்க நெறியை வகுத்தருளிச் செய்தது.

"திருக்கோயில்" என்பது, சிவபிரான் கோயிலைக் குறிக்கும் மரபு சொல்; திரு இல் ஊர் - நன்மை இல்லாத ஊர். "அணியாத ஊர், பாடா ஊர், ஊதா ஊர், உண்ணு ஊர்" என்பன, இடத்து நிகழ்பொருளின் தொழிலை இடத்தின் மேல் ஏற்றிக் கூறிய பான்மை வழக்கு. பரு - பருமை; அஃது ஆகுபெயரால், உடம்பைக் குறித்தது. கோடி - வளைந்து; வணங்கி. "கோடிப் பாடா" என, சினைவினை முதல்வினையோடு முடிந்தது. பாங்கு - அழகு. "தளிகள்" என்றதும் திருக்கோயிலையே. பேரூராயின், நாள்தோறும் பலரும் ஓரிடத்துச் சென்று வழிபடுதல் அரிதாகலின், அதன்கண் பலதளிகள் வேண்டும் என்க. இதனால், "பலதளிகள் இல்லா ஊர்" என்றது, பேரூரினையாயிற்று; அடுக்கஅருளும் இரண்டு ஊர்களும் அவையே என்க. "சங்கம்" என்றது, வலம்புரிச் சங்கினை ; என்னையெனின், அதுவே மங்கல வாச்சியம் ஆகலின். விதானம் - மேற்கட்டி ; பந்தர் ; வெண் கொடியும் மங்கலத்திற்குஉரியது. விதானமும், வெண்கொடிகளும் விழா நாட்களில் எடுக்கப்படுவனவாம். 'அரும்பு' என்பது, 'அருப்பு' என வலிந்து நின்றது ; "அரும்பு" என்றது, போதினை (பேரரும்பினை). 'போது' என்றதும், போதாய் உள்ள நிலையினையே. 'மலரைப் போதாய் உள்ளநிலைக் கண்ணே பறித்து' என்க. இட்டு - சிவபிரானுக்குச் சாத்தி. சிவபிரானுக்கு என்பது ஆற்றலாற் கொள்ளக்கிடந்தது. 'உண்ணு' என்னும் எதிர்மறை, 'இட்டு' என்னும் எச்சத் திற்கும் உரித்து. 'ஆகிய அவை எல்லாம்' என்க. 'அடவி' என்னும் வடசொல், பெருங்காட்டினைக் குறிக்குமாதலின், அது,

Koviloor Digital Library

934 திருநாமம் அஞ்சேழுத்தும் சேப்பா ராகில்
தீவண்ணர் திறமோருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில்
அருநோய்கள் கேடவேண்ணீ றணியா ராகில்
அளியற்ருர் பிறந்தவா றேதோ வேன்னில்
பெருநோய்கள் மிகநலியப் பேயர்த்துஞ் சேத்துப்
பிறப்பதற்கே தோழிலாகி இறக்கின் ருரே. 6

'காடு' என்னும் பொதுச்சொல்லின் பொதுமை நீக்கி நின்றது. "காடே" என்னும் ஏகாரம், 'இவ்வூரின்கண் வாழ்வார் விலங்குகளே' என்பார், ஊரை "அடவி காடே" என அருளினர். நிலத்தின்கண் வாழ்வோராலே நிலம், 'நன்று' என்றும், 'தீது' என்றும் சொல்லப்படும் என்பதனை,

"நாடா கொன்ருே காடா கொன்ருே
அவலா கொன்ருே மிசையா கொன்ருே
எவ்வழி நல்லவ ரா டவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம் - 187.)

என்னும் ஔவையார் பாட்டானும் அறிக.

934. இத் திருத்தாண்டகம், மேல் எதிர்மறை முகத்தால் ஓதிப் பெறவைத்த ஒழுக்கநெறியில் நில்லாதவர்கட்குப் பிறவித் துன்பம் நீங்காது என உணர்த்தியருளியது.

'திருநாமம்' என்றதும், சிவபிரான் பெயரைக் குறிக்கும் மரபு சொல். 'திருநாமமாகிய அஞ்செழுத்து' என்க. "அஞ்செழுத்தும்" என்னும் உம்மை, சொல்லுதல் யார்க்கும் எளிதாதலைக் குறித்து நின்றது. திறம் - இயல்பு. 'ஒருகாலும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. சூழ்தல் - வலம்வருதல். வெண்ணீறணிதலால் உடல்நோய் நீங்குதல் கண்கூடாய்க் காணப்படுவதாகலின், அது நோக்கியேனும் அணிகிலர் என்பார், "அருநோய்கள் கெட வெண்ணீறு அணியாராகில்" என்று அருளிச்செய்தார்.

'அளி அற்ருர்' என்பது, 'தலைவராயினர்பால் பெறும் அருளை இழந்தவர்' எனப் பொருள் தரும். அதனல், ஈண்டு

Koviloor Digital Library

935 நின்னுவார் பிறரின்றி நீயே யானய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானய்
மன்னனய் மன்னவர்க்கோ ரமுத மானய்
மறைநான்கு மானய்ஆ றங்க மானய்
பொன்னனய் மணியானய் போக மானய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னனய் என்னனய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி யேத்து கேனே. 7

அஃது, 'இறைவனது திருவருளை இழந்தவர்' என்னும் பொருள் தந்து நின்றது. பிறந்தவாறு ஏதோ என்னில் - பிறந்த முறைமை தான் யாதோ என ஆராயின். பெருநோய்கள் - தீராத கொடு நோய்கள். 'மிக நலியச் செத்து' என இயையும். பெயர்த்தும் செத்து - வரும் பிறப்பிலும் பயனின்றி வாளா இறந்து. பிறப் பதற்கே தொழிலாகி இறக்கின்ருரே - மீளவும் பிறப்பதற்கு அதுவே தொழிலாகி இறக்கின்றவரே யாவர்.

"ஒருகாலும்" என்பதனை, அது கூருத இடங்களிலும் கூட்டுக. அஞ்செழுத்துச் செப்புதல் முதலியவற்றை முற்பிறப்பிற் பயிற்சியால் பல்கால் செய்து பயன் பெருதவர், ஒன்றையேனும் ஓரோஒருகாற் செய்யினும் அடுத்த பிறப்பில் அதனைப் பல்காற் செய்து பயன் பெறுவர்; அவ்வாறு செய்யாதவர் ஒரு பிறப் பிலும் பயன் பெருர் என்பார், வருகின்ற பிறப்புக்களில் நிகழ் வனவற்றை அருளிச்செய்தார். எனவே, 'பிறந்தவாறு ஏதோ' என வினவினர்க்கு, 'முன்னும் பின்னும் இவ்வாறு வினைச் சூழலால் பிறந்து இறந்து செல்லும் முறையாற் பிறந்ததன்றி விசேடம் ஒன்றும் இன்று' என விடுத்தவாருயிற்று.

இவ்விரு திருத்தாண்டகங்களிலும், திருக்கோயில், திருவைந் தெழுத்து முதலியவற்றை விதந்தோதினமையால், பிற கோயில் கள், பிற நாமங்கள் முதலியவற்ருலும் பிறவி நீங்கப் பெருர் என்பது பெறப்பட்டது.

935. இத் திருத்தாண்டகம், இறைவனது பெருமை உயிர் களால் அளவிட்டு உணரலாகாமையை அருளிச்செய்தது.

"நின் ஆவார்" என்பதில், 'போல' என்னும் உவம உருபு விரித்துரைக்க. இதனல், இறை (கடவுள்) ஒன்றேயாய், எல்லா வற்றினும் மேலானதாய் நிற்றல் அருளப்பட்டது; "தனக்

Koviloor Digital Library

௯௩௬ அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே. 8

குவமை இல்லாதான்'' (குறள் - 7,) என்றதும் இவைநோக்கி என்க. ''மனத்துக்கு'' என்பதனை, 'மனமாகிய நிலத்துக்கு' என்க. அன்பால் நினைப்பவரது உள்ளத்தில் முளைத்து விளங்கலின், ''வித்து'' என்று அருளினார். மன் - தலைவன். ''மன்னவர்'' என்றது, முறையை (நீதியை) முட்டாமற் செலுத்தும் அரசரை. வையகத்தை யெல்லாம் காத்து அதற்கு இன்பஞ் செய்கின்ற அவரைக் காத்து அவர்க்கு இன்பம் செய்தலின், ''மன்னவர்க்கு ஓர் அமுதமானாய்'' என்று அருளினார். ஓர் - ஒப்பற்ற. இப்பொருள் பற்றி மேலும் (87 - ல். 6.) கூறப்பட்டமை காண்க. போகம் - நுகர்ச்சிப் பொருள். இறைவன் ஒருவனே பொருள்சேர் புகழுடையவனாகியும், புகழ்வார்க்கு அவர் விரும்பிய பொருளை விரும்பியவாறே கரவாது வழங்குபவனாகியும் நிற்றலால், அவன் ஒருவனே புகழத் தக்கவன் என்பார், ''பூமி மேல் புகழ்தக்க பொருளே'' என்று அருளினார்;

''தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்''

என்றருளிய ஆளுடைய நம்பிகளது திருமொழியையும் காண்க (திருமுறை. 7. 34. 1.). என் ஆனாய் என் ஆனாய் என்னின் அல்லால் - எவ்வாறெல்லாம் ஆனாய், எவ்வாறெல்லாம் ஆனாய் என்று வியப்பதையன்றி. ஏழையேன் - சிற்றறிவினை உடைய யான். என் சொல்லி ஏத்துகேன் - எவற்றை எஞ்சாது சொல்லிப் புகழ்வேன்; 'எத்துணையவாகச் சொல்லினும் அவை முடியா' என்றபடி.

936. இத் திருத்தாண்டகம் இறைவன் தம்மை எளிவந்து ஆண்டருளிய பெருங்கருணைத் திறத்தை நினைந்து மகிழ்ந்தருளிச்செய்தது.

Koviloor Digital Library

அத்தா - தந்தையே. அன்பு, நாயனருடையது. எனவே, "ஆர்த்தாய்" என்றது, 'பிணிப்புண்ணச் செய்தாய்' என்றவாறு. 'உனக்குத் தொண்டுபடுதல் அன்பினலாயினும் அச்சத்தினலாயினுமாகும். அவற்றுள், அடியேனை அன்பினலே தொண்டனகச் செய்தாய்' என்றதாம். தீர்த்த நீர் - தூய நீர்; அதனல் ஆட்டுதல், குற்றத்தைக் கழுவுதற்பொருட்டு. 'அடியேனை மந்திர நீரால் ஆட்டித் தூய்மை செய்யாது, உனது திருவருள் நோக்கத்தாலே தூய்மை செய்தருளினய்' என்பார், "அருள் நோக்கில் தீர்த்த நீராட்டிக்கொண்டாய்" என்றருளினர். 'தீர்த்த நீராட்டுதலை அருள்நோக்கினலே செய்தாய்' என்றதாம். "கொண்டாய்" என்றது, 'தூயனக்கினய்' என்னும் குறிப்பினது. இங்ஙனம் கழுவவேண்டியது, சமண் சமயத்திற் படிந்திருந்த மாசு தீர்தற்பொருட்டு என்க. "எத்தனையும்" என்றதனை, "எளியை ஆனய்" என்பதற்கும் கூட்டுக. நாயனருக்கு மிக எளியனகியது, அவர் யாதும் செய்யாதே அவர்தம் தமக்கையார் வேண்டிக்கொண்ட துணையானே இரங்கியருளியதாகும். ஏனையோர்க்கு அவ்வாறின்றி, அவர் தாமே பல்காலும் பணிந்து இரந்து, பல்வகைத் தொண்டுகளையும் செய்து நிற்பவும் அவர்க்குத் தன் திருவருளை வழங்கிலன் என்க. 'இரங்கி ஆண்டுகொண்டு' என மாற்றி உரைக்க. ஏன்று கொண்டாய் - என் செயல்களை எல்லாம் உன் செயல்களாக முன்நின்று ஏற்றுக்கொண்டாய். பித்தன் - ஒருநெறிப் படாதவன். பேதை - யாதும் உணராதவன். பேயன் - வீணில் உழல்பவன். நாயான் - நாய் போன்றவன்; இழிந்தவன். இத்துணையவரும் தாமாக அருளிச்செய்தது, வஞ்சகராகிய சமணரது சொல்லின் வஞ்சத்தினை உணரமாட்டாது, அதனை மெய்யென்றே தெளிந்து நன்னெறியாகிய சிவநெறியைக் கைவிட்டுச் சென்றமை கருதி. இத்துணை இகழ்வுடையேனகிய என்னை ஆண்டுகொண்டது, யான் செய்த குற்றங்கள் அத்தனையையும் திருவுள்ளத்திற் கொள்ளாது ஒழிந்தமையன்றி, அவையனைத்திற்கும் தீர்வுசெய்து அன்று என்பார், "பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தாய் அன்றே" என்று அருளினர். "கள்விகுதி", 'பிழைத்தவை' என்பதன் பின் வருதல்போல, "பிழைத்தனகள்" என விகுதிமேல் விகுதியாய்ச் சிறுபான்மை வந்தது. "இத்தனையும்" என்றது, "அன்பால் ஆர்த்தாய்" என்பது முதலாக மேல் அருளியவற்றை. எம்பரமோ - எம்போலியரது அளவிற்கு உரியனவோ? அல்ல; இன்னதொரு பேரருள் எம்மாட்டு இருந்த தன்மையேயாம் என்க. 'ஐயோ'

Koviloor Digital Library

937 குலம்போல்லேன் குணம்போல்லேன் குறியும் போல்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய [லேன்
நலம்போல்லேன் நான்போல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்போல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே. 9

என்பது, இரக்கக் குறிப்பிடைச்சொல். ஐய - தலைவனே; இதனை, "அத்தா" என்றதன் பின்னர்க் கூட்டுக.

937. இத்திருத்தாண்டகம், நாயனார் சமண் சமயம் சார்ந்திருந்த காலத்தில் இருந்த தம் நிலையை நினைந்து இரங்கி யருளியது.

குலம் - கூட்டம்; இனம். நாயனார், முன்பு சேர்ந்திருந்தது சமணர் கூட்டத்தில் ஆகலின், அதனை, 'பொல்லேன்' என்றார். பொல்லேன் - தீயேன்; 'இல்லாதது, இல்லாது, இல்லாத இல்லார்' என்னும் சொற்கள், 'இல்' என்பது அடியாக வருதலின், 'பொல்லாதது, பொல்லாது, பொல்லாத பொல்லார்' என்னும் சொற்கட்கு அடிநிலை, 'பொல்' என்றே கொள்க. இஃது, 'இல், இன்மை, இல்லாமை' என்றாற்போல வாராதாயினும், 'பொல்லாங்கு, பொல்லாப்பு' எனவரும் என்க.

காத்து ஆள் பவரது (தமக்கையாரது) காவலை இகழ்ந்து சென்று குண்டரோடு கூடினமையின், 'குணம் பொல்லேன்' என்றார். குறி - குறிக்கோள்; அது, தலைமயிரைப் பறித்தல் முதலியவற்றால் உடம்பை வருத்தி யொழிதலாகவே இருந்தமையின், 'பொல்லேன்' என்றார். மக்களில் பலர் செய்கையால் தீயாராயினும் குறிக்கோள் அளவில் நல்லராதல் உண்டு; அவ்வாறும் இல்லை என்பார், "குறியும் பொல்லேன்" எனச் சிறப்பும்மை கொடுத்தோதினார். "குற்றம்" என்றது, குற்றமாகிய செயலை; அவை, 'கடவுள் இல்லை' என்றல் முதலியன, கோலம் - வேடம். துறந்தார்க்கு அவரது வேடம் அவர்க்கும் பிறர்க்கும் நலம் பயப்பதொன்றாகலின், "கோலமாய நலம்" என்றும், அதுதான், உலகத்தார் கண்டோடிக் கதவடைக்கும்

Koviloor Digital Library

கோலமாய் இருந்தமையின், "பொல்லேன்" என்றும் ஓதினர் ; நலம் பயப்பதனை, 'நலம்' என்று அருளினர். 'நான் பொல்லேன்' என்றது, "குணம்நாடிக் குற்றமும்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" (குறள். 504.) என்றவாறு. 'சில வற்றாற் பொல்லேனாகாது, எல்லாவற்றாலும் பொல்லேனாயினமை யின், யாவராலும் பொல்லேனாக ஒதுக்கப்பட்டேன்' என்றதாம். "ஞானி அல்லேன்" எனவும், "நல்லாரோடு இசைந்திலேன்" எனவும் அருளியது, 'என்னை ஞானி எனவும், என்னால் இசைய (கூட)ப் பட்டாரை நல்லார் எனவும் மயங்கினேன்' என்றவாறு.

நடுவே நின்ற விலங்கு - மனவுணர்வுடைய மக்கட்கும், அஃது இல்லாத பிற உயிர்கட்கும் இடையே நிற்கின்ற ஒருசார் விலங்குகள் ; அவை யானை, குரங்கு முதலாயின. மக்கட்கேற்ற சிறப்பு மன உணர்வுடைமையால், "நடுவே நின்ற விலங்கல்லேன்" என்றும், அச்சிறப்புணர்வினாற் பயன் கொள்ளாது ஒழிந்தமையால், "விலங்கல்லாது ஒழிந்தேனல்லேன்" என்றும் அருளினர்.

"நடுவே நின்ற" என்றது, பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம் ; இயைபின்மை நீக்கிய விசேடணமாகக்கொள்ளின், அதனாற் போந்த பயன் இன்றாதல் அறிக. தொல்காப்பியத்துள்,

"மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

என்னும் சூத்திரத்தின்பின்,

"ஒருசார் விலங்கும் உளஎன மொழிப"

என்னும் சூத்திரத்தைப் பாடம் ஓதி, 'இதுவும் அது' என, கருத்துரையை மேலைச் சூத்திரக் கருத்துரையொடு மாட்டெறிந்து, 'விலங்கினுள் ஒருசாரனவும் ஆறறிவுயிராம் என்றவாறு' எனப் பொழிப்புரைத்து, 'அவையாவன, கிளியும் குரங்கும் யானையும் முதலாயின' என எடுத்துக்காட்டும் காட்டிப் போந்தார், இளம்பூரண அடிகள் ; ஆயினும் அச்சூத்திரத்தைப் பேராசிரியர் பெற்றிலாமையின், அதன் பொருளை, மேலைச் சூத்திரத்துள், "பிறப்பு" என்றதனாற் கொண்டார். இவற்றால், 'விலங்கினுள் ஒருசாரன மன உணர்வுடையன' என்பது இனிது விளங்கிற்று.

Koviloor Digital Library

938 சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியோடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்சேல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்

வெறுப்பன - வெறுக்கத்தக்க சொற்கள்; அவை, 'பொய், புறங்கூற்று, கடுஞ்சொல், பயனில்சொல்' என்பன. 'வெறுப்பனவும்' என்னும் உம்மை, 'மேலனவற்றேடு இவையும் வல்லேன்' என, இறந்தது தழுவிற்று. "மிகப் பெரிதும்" என்னும் உம்மை இழிவு சிறப்பு. 'இல்லம்' என்பது, 'இலம்' என இடைக் குறைந்துநின்றது; 'குடிமை' என்பது பொருள். 'பிறப்பால் குடிமை நல்லேனுயினும், எனது செயல்களால் அதுவும் பொல்லேனுக இகழப்பட்டேன்' என்பார், 'இலம் பொல்லேன்' எனவும், அச்செயல்கள்தாம் இவை என்பார், "இரப்பதே ஈயமாட்டேன்" எனவும், அருளிச்செய்தார். இச் செயல்களால் அறிவுடையோர், 'இவன் குலனுடையானுயின், இலன் என்னும் எவ்வம் உரைத்தலும், ஈயாமையும் உடையவன் ஆகானன்றே' (குறள் - 223.) என என் குடிமையை இகழ்வா ராயினர் என்றவாறு. "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் - தோன்றலிற் தோன்றுமை நன்று" (குறள் - 236.) என்றபடி, 'இவ்வாறு எல்லாவற்றுலும் யாவரினும் கடைமையை எய்திய யான் எதற்கு மனிதனுய்ப் பிறக்கவேண்டும்' என்பார், "என்செய்வான் தோன்றினேன் ஏழையேன்" என்று அருளினுர்.

"குலம் பொல்லேன்" முதலியன, பண்பு முதலியவற்றின் தன்மையை அதனை உடைய பொருள்மேற் சார்த்தி யுரைத்தன வாம். இதனுள், "குலம் பொல்லேன்" என்பது முதலாக, "விலங்கல்லா தொழிந்தே னல்லேன்" என்பது ஈருக உள்ளன வற்றைச் சமணரொடு கூடியிருந்த நிலைபற்றி ஓதினுர்; அதனுல், அவற்றின்கண் உள்ள வினைக்குறிப்பு முற்றுக்கள், 'பொல்லே னுகி யிருந்தேன்' என்றுற்போல இறந்தகாலக் குறிப்பினவாம். ஏனையவை, எஞ்ஞான்றும் தம்பால் உள்ள நற்பண்புகளால் தாம் அமையாது அருளிச்செய்தனவாம். இவை யாவும், 'இறைவன் தனது பெருங்கருணையால் என்னை வலிந்து ஆட்கொள்ளாதொழியின், என் நிலை யாதாய் முடியும்' என நினைந்து இரங்கியருளியனவேயாம் என்க.

938. இத் திருத்தாண்டகம், உலகியலைப் பற்றுது, மெய்ந் நெறியையே பற்றி நிற்கும் தமது உள்ள நிலையை அருளிச் செய்தது.

Koviloor Digital Library

அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. 10

திருச்சிற்றம்பலம்

சங்க நிதி - சங்கு வடிவாகக் குவிக்கப்பட்ட நிதி. பதும நிதி - தாமரை வடிவாகக் குவிக்கப்பட்ட நிதி. இனி, 'சங்கம், பதுமம்' என்பன சில பேரெண்கள்' எனவும் கூறுப. 'இந்நிதி கள் குபேரனிடத்து உள்ளன' எனவும், 'அவற்றிலிருந்து எத்துணைப் பொருள் கொள்ளினும் அதனாற் குறையாது முன்னை யளவில் நிரம்பி நிற்கும் தெய்வத் தன்மை உடையன' எனவும் சொல்லுப. தரணி - பூமி. 'வான் தருவரேனும்' என இயையும். ''இரண்டும் தந்து'' எனவும், ''தரணியொடு வான் தருவரேனும்'' எனவும் அருளியன, 'அவைகளை ஒரு சேரக் கொடுப்பினும்' என்றபடியாம். ''தருவரேனும்'' என்றது, 'மனிதருள் சிலர் தரவல்லராயினும்' என்றவாறு. மங்குவார் - நிலையின்றி அழிவார். 'மங்குவாராகிய அவரது செல்வத்தை யாம் ஒரு பொருளாக மதிப்போம் அல்லோம்' என்க. மாதேவர்க்கு - சிவபெருமானுர்க்கு. இதனை, 'மாதேவ ரிடத்து' எனத் திரித்துக்கொள்க. ஏகாந்தர் - ஒருதலையாய உணர்வுடையவர்; 'பிற தேவரிடத்துப் பலதலைப்பட்டுச் செல்லாதவர்' என்றபடி. ஒரு சாரார், ஏகாரத்தைப் பிரிநிலை இடைச்சொல்லாக்கி, 'காந்தர்' எனப் பிரித்து, 'அன்புடைய வர்' என உரைப்பர். 'அல்லாராகில் மதிப்போமல்லோம்' என இயையும்.

அங்கம் - உறுப்பு. தொழுநோய் - குட்டநோய். இதனை அருளியது, காட்சிக்கு இன்னாராதலைக் குறித்தற்கு. 'காட்சிக்கு இன்னாராவாரை அணுகிப் பணிபுரிதல்கூடாதாயினும் புரிவேம்' என்றல், திருவுள்ளம் என்க.

ஆ - பசு; இஃது, 'உயிரோடு நின்றது, உயிர் நீத்தது' என்னும் இரண்டனையும் குறித்துநின்றது. ''ஆவுரித்துத் தின்று உழலும்'' என விதந்தோதியது, 'புலையராவார் இவர்' என்பதும், 'அவர் புலையராயினமை இத் தீத்தொழிலால்' என்பதும் உணர்த்தற்கு. தூய உடம்பினவாய், பிற அனைத்தை யும் தூய்மை செய்வனவும் தேவர்கள் விரும்பி ஏற்பனவும்

Koviloor Digital Library

ஆகிய பால் முதலிய ஐந்தினையும் தருவனவாய், தேவரொடு வைத்து வழிபடப்படும் ஆவைக் கோறலாகிய தொழிலினும் தீயதொழில் பிறிதொன்று காணுமையின், அது செய்வாரைப் பிறர் யாவரும், 'புலையர்' என்றிகழ்ந்தனர் என்பதாம். புலையர் - கீழோர். வடமொழியுள் இவரை, 'சண்டாளர்' என்பர். 'இறைவன் தன்னிடத்து உண்மை அன்பு உண்டாகப் பெற்ருரிடத்துப் பிறப்பின் சார்பால் உளவாகி, பல்வேருகிய காரணங்களால் அகற்றப்படாது நிற்குங் குற்றங்களை நோக்கி அவரைக் கடிந்தொழியாது, அவர்தம் அன்பு ஒன்றையே நோக்கி அவரை உகந்தருளுவன்' என்பதும், பிறப்பு முதலியவற்ருல் உயர்ந்தோரும் அவரை வணங்கற்பாலர் என்பது இறைவன் திருவுள்ளமாதலும் கண்ணப்ப நாயஞரது வரலாற்ருல் இனிது விளங்கிக் கிடத்தலின், "புலையரேனும் - கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில், அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளார்" என்று அருளிச்செய்தார். இதனுனே, 'சிவனடியாரை, அவர்தம் பிறப்பு முதலியன நோக்கி இகழற்க' என விலக்கினமை பெற்ரும்.

'இறைவனிடத்து எத்துணைச் சிறந்த அன்பும் தொண்டும் உடையராயினும், இலராயினும் அவரை அவர்தம் பிறப்பு, தொழில் முதலியவற்றின் உயர்வு தாழ்வுகட்கேற்பக் கொள்ளுதல் உலகியல்' என்பதும், 'பிறப்பு, தொழில் முதலியவற்ருல் எத்துணை உயர்வுதாழ்வுகள் உடையராயினும், அவரை அவர்க்கு இறைவனிடத்துள்ள அன்பு, தொண்டு என்னும் இவற்றின் நிலைகட்கு ஏற்பக் கொள்ளுதல் மெய்ந்நெறி' என்பதும் இத் திருத்தாண்டகத்தால் இனிது விளங்கிக் கிடக்கின்றன.

இம் மெய்ந்நெறி முறைமை, 'சண்டாளனுய் இருப்பினும், 'சிவ' என்று சொல்வானேல், ஒருவர் அவனேடு பேசுக; அவனேடு வசிக்க; அவனேடு இருந்து உண்க' என, உபநிடதத்தினும் (முண்டகம்) கூறப்பட்டமை, பிரம சூத்திரம் நான்காம் அத்தியாயம் முதற்பாதம் பன்னிரண்டாம் அதிகரணத்துள் நீலகண்ட பாடியத்துக் காட்டப்பட்டது. "अपिवा यश्चण्डालश्शिव इति वाचं वदेत् । तेन सह संवदेत्तेनसह संवसेत्तेनसह भुञ्जीत॥" எனினும், அம்மந்திரம் இக்காலத்து அவ்வுபநிடதத்துட் காணப்பட்டிலது; அது மெய்ந்நெறிப்பற்றின்றி உலகியற்பற்றே உடையோரால் மறைக்கப்பட்டது போலும்! அஃது எவ்வாருயினும், வடநூற்கடலும் தென்றமிழ்க்கடலும் நிலைகண்டுணர்ந்த,

Koviloor Digital Library

சிவஞானபோத மாபாடிய முதல்வராகிய மாதவச் சிவஞான யோகிகள், மேற்காட்டிய உபநிடத மந்திரத்தையே, தமது கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதியில்,

“ சிவனெனும் மொழியைக் கொடியசண் டாளன்
செப்பிடின் அவனுடன் உறைக
அவனொடு கலந்து பேசுக அவனோடு
அருகிருந் துண்ணுக என்னும்
உவமையில் சுருதிப் பொருள்தனை நம்பா
ஊமரோ டுடன்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தால் ஐயனே கதிவே
றெனக்கிலை கலைசையாண் டகையே ”

என மொழிபெயர்த்துக் கூறினார். இவற்றை எல்லாம் அறிந்த பின்பும், ‘ இங்கு, ‘ சண்டாளன் ’ என்றது, ஜன்ம சண்டாளனை அன்று; கன்ம சண்டாளனையே; அஃதாவது, பிறப்பில் சண்டாளர் இனத்திற் பிறந்தவனை அன்று; உயர்ந்த வருணத்திற் பிறந்து, தனது சாதி தருமத்தில் வழுவினமையால் சண்டாளத்துவம் எய்தி நின்றவனையே ’ என, மீளவும் தம் உலகியல் முறைமையினையே நிலைநிறுத்த முயல்வர் சிலர். இக் கருத்தினை உபநிடதம் வெளிப்படக் கூறாது செல்லினும், அதனை விளக்கவே புகுந்த சிவஞான யோகிகள் தாமும் கூறாதது என்னையோ என்க. இனி, மேற்கூறிய உபநிடத மந்திரத் தினையே உபவிருங்கணம் செய்யும் (வலியுறுத்திக் கூறும்) வாசிட்டலைங்க சுலோகம் ஒன்றை, காசி வாசி செந்திநாதஐயர் அவர்கள் காட்டியுள்ளார்கள்; அது, शिवेति वाचं यो नित्यं चण्डालोऽपि वदेन्मुदा । सह तेन वदेद्वाचं सह तेन वसेत्सदा ॥ என்பது; அதனுள்ளும் சண்டாளனை, ‘ கன்ம சண்டாளன் ’ என விதந்தோதவில்லை. விதவாதவழி ‘ சண்டாளன் ’ என்னும் சொல், இயல்பாய் உள்ள உண்மைச் சண்டாளனைக் குறித்த லன்றி, ஒரு காரணம் பற்றி அவனோடு ஒப்பிக்கப்படுவானைக் குறிக்குமாறில்லை. ஆகவே, ஓரிடத்தும் இல்லாத அப்பொருளை அச்சொல்லிற்கு யாண்டும் கற்பித்துக் கூறுதல், அச்சுருதிகளா லும் அவர் மனம் மெய்ந்நெறிக்கண் செல்லாமையையே காட்டுவ தாகும். இத்தன்மையோரை நோக்கியே, “ பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்ல - ராகுதல் மாணார்க் கரிது ” (குறள் - 823.) என்றருளினர், திருவள்ளுவ நாயனர். ஆகவே, அவர் கூறும் அது, மெய்ந்நெறி முறைமை கூற எழுந்த உபநிடதங்கட்கும்,

Koviloor Digital Library

திருமுறைத் திருமொழிகட்குங் கருத்தாகாமை அறிக. "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்" என்றெழுந்த நாயனர் திருமொழி, இவ்வகை விவாதங்கட்குச் சிறிதும் இடம் செய்யாது, பிறப்பால் புலையராயினுரையே குறித்தல் இங்குக் குறிக்கொண்டு உணர்தற்பாலதாகும்.

ஆண்ட வரசும் பிள்ளையா ருடனே யங்க ணினிதமர்ந்து
பூண்ட காதல் பொங்கியெழ வாய்மூ ரடிக ளடிபோற்றி
மூண்ட வன்பின் மொழிமாலை சாத்தி ஞான முனிவரொடு
மீண்டு வந்து திருமறைக்காட் டெய்தி விமலர் தாள்பணிந்தார்.

ஆதி முதல்வர் தமைப்பணிந்தங் கான பணிசெய் தமருநாட்
சீத மதிவெண் குடைவளவர் மகளார் தென்னன் தேவியார்
கோதில் குணத்துப் பாண்டிமா தேவி யார்முன் குலச்சிறையார்
போத விட்டார் சிலர்வந்தார் புகலி வேந்தர் தமைக்காண. 284

வந்து சிவனுர் திருமறைக்கா டெய்தி, மன்னு வேணுபுரி
யந்த ணாளர் தமக்கறிவித் தவர்பா லெய்தி யடிவணங்கச்
சிந்தை மகிழ்ந்து தீதின்மை வினவத் தீங்கு முளவாமோ
விந்த வுலக முயவந்தி ரிருதா ணினைவார்க் கென வுரைப்பார்.

சைவ நெறிவை திகநிற்கச் சழக்கு நெறியைத் தவமென்னும்
பொய்வல்லமணர்செயறன்னைப்பொறுக்ககில்லோமெனக்கேட்டே
யவ்வன் றெழிலோர் செயன்மாற்றி யாதி சைவ நெறிவிளங்கத்
தெய்வ நீறு நினைந்தெழுந்தார் சீர்கொள் சண்பைத் திருமறை
யோர். 286

ஆய பொழுது திருநாவுக் கரசு புகலி யாண்டகைக்குக்
காய மாசு பெருக்கியுழல் கலதி யமணர் கடுவினைசெய்
மாயை சால மிகவல்லார் அவர்மற் றென்னை முன்செய்த
தீய தொழிலும் பல கெட்டேன் செல்ல விசையேன் யானென்றுர்.

என்று கூற வெல்லையிலா நீறு போற்று மிருவரையுஞ்
சென்று காணுங் கருத்துடையேன் அங்குத் தீங்கு புரியமணர்
நின்ற நிலைமை யழிவித்துச் சைவ நெறிபா ரித்தன்றி
யொன்றுஞ் செய்யே னுணையும தென்ரு ருடைய பிள்ளையார். 288

—அப்பர் புராணம்.

Koviloor Digital Library

96. தனித் திருத்தாண்டகம்

திருப்பதிக வரலாறு

இத் திருப்பதிக வரலாற்றினை 70 ஆம் திருப்பதிக வரலாற்றிற் காண்க.

திருச்சிற்றம்பலம்

939 ஆமயந்தீர்த் தடியேனை யாளாக் கொண்டார்
அதிகைவீ ரட்டானம் ஆட்சி கொண்டார்
தாமரையோன் சிரமரிந்து கையிற் கொண்டார்
தலையதனிற் பலிகொண்டார் நிறைவாம் தன்மை
வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார்
மானிடங்கொண் டார்வலங்கை மழுவாள் கொண்டார்
காமனையும் உடல்கொண்டார் கண்ணால் நோக்கிக்
கண்ணப்பர் பணியுங்கொள் கபாலி யாரே. 1

இங்கு, 'தனித் திருத்தாண்டகம்' என்பது, 'யாதொரு தலத்தொடும்படாது தனித்துநிற்கும் திருத்தாண்டகம்' என்னும் பொருள் உடையது.

939. ஆமயம் - நோய். தாமரையோன் - பிரமதேவன், 'அத் தலையதனில்' என. சுட்டு வருவித்துரைக்க. நிறைவு - மிக்கசெருக்கு, "வாமனனார்" என்றது. திருமால் மகாபலியிடம் மூன்றடி மண் பெறுதற் பொருட்டுக் கொண்ட குறள் வடிவத்தை. மூன்றடி மண்பெற்று திரிவிக்கிரமனாய் மூவுலகத்தையும் அளந்து மகாபலியையும் பாதலத்தில் இருத்திய பின்னர்ச் செருக்குக்கொண்டு உலகத்தைத் துன்புறுத்தினமையால், சிவபிரான், திரிவிக்கிரமனை அழித்து அவன் முதுகெலும்பைத் தண்டாயுதமாகக் கொண்டருளினான் என்பது புராண வரலாறு ஆதலின், "வாமனனார் மாகாயத்து உதிரங் கொண்டார்" என்று அருளிச்செய்தார். மா காயம் - பேருடம்பு; உலகினை அளந்த உருவம். 'மானை இடப்பக்கத்திற் கொண்டார்' என்க. "உடல் கொண்டார்" என்பது, 'அழித்தார்' என்ற பொருளதாய், "காமனை" என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று. 'கண்ணால் நோக்கி உடல் கொண்டார்' என இயையும்.

Koviloor Digital Library

940 முப்புரிநூல் வரைமார்பின் முயங்கக் கொண்டார்
முதுகேழல் முளைமருப்புங் கொண்டார் பூணச்
செப்புருவ முலைமலையாள் பாகங் கொண்டார்
செம்மேனி வெண்ணீறு திகழக் கொண்டார்
துப்புரவார் சுரிசங்கின் தோடு கொண்டார்
சுடர்முடிசூழ்ந் தடியமரர் தொழவுங் கொண்டார்
அப்பலிகொண் டாயிழையார் அன்புங் கொண்டார்
அடியேனை ஆளுடைய அடிக ளாரே. 2

"கண்ணப்பர் பணியும் கொள்" என்றது, 'விதிமார்க்கத்திற்கு முற்றிலும் மாறான பூசையையும் அவர் அன்பு காரணமாகக் கொண்டருளினர்' என்றபடி. இதனால், அன்பு ஒன்றையே இறைவர் சிறப்பாக விரும்புவது என்பது குறித்தருளியவாறும்.

"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனர் சேடறிய மெய்குளிர்ந் தங்கு
அருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ"

என ஆளுடைய அடிகளும் அருளிச்செய்தார் (திருவா. திருத்தோணோக்கம். 3).

940. வரைமார்பு - கீற்றுப் பொருந்திய மார்பு. முயங்க - பொருந்த. முதுகேழல் - பெரிய பன்றி. முளை மருப்பு - முளையாகிய கொம்பு. 'பூணக்கொண்டார்' என மாறிக் கூட்டுக. திருமால் வராக அவதாரங்கொண்டு பூமியைப் பிரளய வெள்ளத்தில் ஆழாதபடி கொம்பில் ஏற்று நிறுத்தியபின்னர்ச் செருக்குற்று உலகைத் துன்புறுத்தினமையால், சிவபிரான் அதனை அழித்து, அதன் கொம்பினை மார்பிற்கு அணிகலமாக அணிந்தனர் என்பது புராண வரலாறு. செப்பு - கிண்ணம். 'செம்மேனியின்கண்' என உருபு விரிக்க. துப்புரவு ஆர் - தூய்மை நிறைந்த. சுரி சங்கு - குவிந்த முகமுடைய சங்கு; குழையேயன்றித் தோடும் சங்கினால் ஆயது என்க. 'அமரர் சூழ்ந்து சுடர்முடியால் அடி தொழவும் கொண்டார்' என்க. பலி - பிச்சை; "அப்பலி" என்றது, 'அந்நாளில் கொண்ட பிச்சை' என்றவாறு. "ஆயிழையார்" என்றது, தாருகாவன இருடியர் பத்தினியரை.

Koviloor Digital Library

941 முடிகொண்டார் முளையிளவெண் டிங்க ளோடு
மூசுமிள நாகமுட னாகக் கொண்டார்
அடிகொண்டார் சிலம்பலம்பு கழலு மார்ப்ப
அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார்
வடிகொண்டார்ந் திலங்குமழு வலங்கைக் கொண்டார்
மாலையிடப் பாகத்தே மருவக் கொண்டார்
துடிகொண்டார் கங்காளந் தோள்மேற் கொண்டார்
சூலைதீர்த் தடியேனை யாட்கொண் டாரே.

942 போக்கணமும் புலித்தோலும் புயத்திற் கொண்டார்
பூதப் படைகள்புடை சூழக் கொண்டார்
அக்கினொடு படஅரவம் அரைமேற் கொண்டார்
அனைத்துலகும் படைத்தவையும் அடங்கக் கொண்டார்
கொக்கிறகுங் கூவிளமுங் கொண்டை கொண்டார்
கொடியானை யடலாழிக் கிரையாக் கொண்டார்
செக்கர்நிறத் திருமேனி திகழக் கொண்டார்
செடியேனை யாட்கொண்ட சிவனார் தாமே. 4

941. முடி - சடைமுடி; கொண்டார் - (அதனை) மேற் கொண்டார். முளை - முளைத்த; முதலிற் காணப்படுகின்ற. மூசுதல் - மொய்த்தல்; அது படத்தால் மறைத்தலைக் குறித்தது. உடன் ஆக - உடன் உறையும்படி; அம்முடிக்கண் கொண்டார் என்க. " சிலம்பு " என்புழித் தொகுக்கப்பட்ட எண்ணும்மையை விரிக்க. அலம்பு - ஒலிக்கின்ற. ஆர்ப்ப - ஒலிக்க. . ஒலிக்கும் தன்மை வாய்ந்த சிலம்பினையும் கழலினையும் ஒலிக்கும்படி 'அடிக்கண் கொண்டார்' என்க. 'சிலம்பலம்பக் கழலும் ஆர்ப்ப' என்பதே பாடம்போலும் ! வடிகொண்டு - கூர்மையைக் கொண்டு. " ஆர்ந்து " என்பதனை, ' ஆர ' எனத் திரிக்க. ' நிரம்ப இலங்குகின்ற ' என்பது பொருள். திருமாலை இடப் பாகத்தே கொண்டமை மேலே (பக். 557) காட்டப்பட்டது. துடி - உடுக்கை. " தோள்மேல் " என்றதுபோல, ' துடி கையிற் கொண்டார் ' என்க. கங்காளம் - பிரம விட்டுணுக்களது எலும்புக் கூடு. ' திரிவிக்கிரமனை அழித்துக்கொண்ட முது கெலும்பு ' எனவும் கூறுப.

942. பொக்கணம் - இப்பி வடிவாகச் செய்யப்பட்ட திரு நீற்றுச் செப்பு. இதனை, இக்காலத்தார், 'சம்புடம்' என

Koviloor Digital Library

943 அந்தகனை அயிற்சூலத் தழுத்திக் கொண்டார்
அருமறையைத்தேர்க்குதிரையாக்கிக்கொண்டார்
சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்
சுடுகாடு நடமாடு மிடமாக் கொண்டார்
மந்தரம்நற் பொருசிலையா வளைத்துக்கொண்டார்
மாகாளன் வாசல்காப் பாகக் கொண்டார்
தந்திரமந் திரத்தரா யருளிக் கொண்டார்
சமண்தீர்த்தென் றன்னையாட் கொண்டார் தாமே.

வழங்குவர். 'புயத்திற்கொண்டார்' என்றதனால், "பொக்கணம்" என்றது, திருநீற்றுப் பையைக் குறித்தது என்க. புலித்தோலை அரையில் உடுத்தலே யன்றி, தோளில் இடுதலும் உண்டென்க. அக்கு-எலும்பு. 'அவை அடங்கவும் கொண்டார்' என உம்மையை மாற்றியுரைக்க. அடங்க - ஒடுங்க. கூவிளம் - வில்வம். "கொண்டை" என்றது, கட்டிய சடைமுடியை. கொடியான் - சலந்தராசுரன்; அடல் ஆழிக்கு இரையாக்கியது அவனையே என்பது வெளிப்படையாகலின், "கொடியானை" என்றே அருளிப்போயினார். அடல் ஆழி - வெற்றியையுடைய சக்கரம். செக்கர் - செவ்வானம்; சிவப்புமாம். செடியேன் - கீழ்மையேன்.

943. அந்தகன் - அந்தகாசுரன். அயில் - கூர்மை. திரிபுரம் அழிக்கச் சென்ற காலத்தில் வேதத்தையே தேரிற்பூட்டும் குதிரையாகக் கொண்டமையறிக. சுந்தரன் - ஆலால சுந்தரர்; இவர் திருக்கைலையில் சிவபிரானுக்கு அணுக்கத் தொண்டுகள் செய்பவராதலின், அவரே கவரி வீசுவோருமாதல் அறிக; இவரே, நாயனார் காலத்துக்குப் பின்னர் நம்பியாரூரராய் அவதரித்தருளினமை வெளிப்படை. துணை - இரண்டு. மந்தரமும் மேருமால்வரையின் பகுதியேயாதலின், அதனையே வில்லாக வளைத்ததாக அருளினார். மாகாளரை வாயில் காவலராகக் கொண்டமையை, சிவபூசையில் மகாகாளர் துவாரபாலகருள் வைத்துப் பூசிக்கப்படுதல் கொண்டும் உணரலாம். தந்திரம் - தெய்வ வேள்வி முதலிய ஐவகை வேள்விகள். மந்திரம் - சிவ வழிபாடு. இவைகளில் பொருந்தி நின்று உயிர்கட்கு அருள் புரிதலின், "தந்திர மந்திரத்தராய் அருளிக் கொண்டார்" என்று அருளினார். 'அருளி உயிர்களை உய்யக்கொண்டார்' என்க.

Koviloor Digital Library

944 பாரிடங்கள் பலகருவி பயிலக் கொண்டார்
பவள நிறங்கொண்டார் பளிங்குங் கொண்டார்
நீரடங்கு சடைமுடிமேல் நிலாவுங் கொண்டார்
நீலநிறங் கோலநிறை மிடற்றிற் கொண்டார்
வாரடங்கு வனமுலையார் மைய லாகி
வந்திட்ட பலிகொண்டார் வளையுங் கொண்டார்
ஊரடங்க வொற்றிநகர் பற்றிக் கொண்டார்
உடலுறுநோய் தீர்த்தென்னையாட்கொண் டாரே.

945 அணிதில்லை அம்பலமா டரங்காக் கொண்டார்
ஆலால வருநஞ்சம் அமுதாக் கொண்டார்
கணிவளர்தார்ப் பொன்னிதழிக் கமழ்தார் கொண்டார்
காதலார் கோடிகலந் திருக்கை கொண்டார்
மணிபணத்த அரவந்தோள் வளையாக் கொண்டார்
மால்விடைமேல் நெடுவீதி போதக் கொண்டார்
துணிபுலித்தோ லினையாடை யுடையாக் கொண்டார்
சூலங்கைக் கொண்டார் தொண்டெனைக்
கொண்டாரே. 7

944, பாரிடங்கள் - பூத கணங்கள். கருவி - இசைக்கருவி; வாச்சியம். பளிங்கு - பளிங்குநிறம்; இது, நீற்றினால் ஆயது. கோலம் நிறை - அழகுமிக்க. வனமுலையார், தாருகாவனத்து முனிவர் பத்தினியர். வளை - அவர்களது வளைகள். 'ஒற்றி நகர் பற்றி, ஊர் அடங்கக் கொண்டார்' என இயைக்க. 'ஒற்றியாய் உள்ள ஊரை உறைவிடமாகப் பற்றிக்கொண்டு, எல்லா ஊர்களையும் தம்முடையனவாகக் கொண்டுள்ளார்' என்பது நயம். அடங்க - முழுவதும். 'எல்லா ஊர்களும் தம் ஆட்சியில் அடங்கியிருக்க, திருஒற்றியூரைத் தமக்கு இடமாகப் பற்றிக் கொண்டார்' என்பது உண்மைப் பொருள்.

945. கணிவளர்தார் - அழகுமிகுகின்ற பூக்களாகிய. பொன்இதழி - பொன்போன்ற கொன்றை. கமழ்தார் - மணம் வீசுகின்ற மாலை. காதல் ஆர் கோடி - விருப்பம் நிறைந்த கோடிக் குழகர் என்னும் தலம்; சோழநாட்டில் உள்ளது. மணி பணத்த அரவம் - மாணிக்கத்தொடு கூடிய படத்தையுடைய பாம்பு. மேல் நெடு வீதி போத - மேற்கொண்டு, நீண்ட வீதியில் வருதற்கு. மால்விடை கொண்டார் - பெரிய இடபத்தைக்

Koviloor Digital Library

946 படமூக்கப் பாம்பணையா னோடு வானோன்
பங்கயனென்றங்கவரைப் படைத்துக்கொண்டார்
குடமூக்கிற் கீழ்க்கோட்டங் கோயில் கொண்டார்
கூற்றுதைத்தோர்வேதியனைஉய்யக் கொண்டார்
நெடுமூக்கிற் கரியினுரி மூடிக் கொண்டார்
நினையாத பாவிகளை நீங்கக் கொண்டார்
இடமாக்கி யிடைமருதுங் கொண்டார் பண்டே
யென்னைஇந்நாள் ஆட்கொண்ட இறைவர்தாமே.

947 எச்சன்நிணத் தலைகொண்டார் பகன்கண் கொண்டார்
இரவிகளி லொருவன்பல் லிறுத்துக் கொண்டார்
மெச்சன்வியத் திரன்தலையும் வேறுக் கொண்டார்
விறலங்கி கரங்கொண்டார் வேள்வி காத்த
உச்சநமன் தாளறுத்தார் சந்திரனை யுதைத்தார்
உணர்விலாத் தக்கன்றன் வேள்வி யெல்லாம்
அச்சமெழ அழித்துக்கொண் டருளுஞ் செய்தார்
அடியேனை யாட்கொண்ட அமலர் தாமே. 9

கொண்டார். 'துணி தோல்' என இயையும்; 'உரித்த தோல்' என்பது பொருள். ஆடை - உத்தரீயம். உடை - அரையில் உடுப்பது.

946. 'மூர்க்கப் பாம்பு' என்பது, 'மூக்கப் பாம்பு' எனத் திரிந்து நின்றது. வானோன் - (அயன்மால்கட்கு) மேலானவன்; உருத்திரன்; இனி, 'வானுலகத்தை உடையவன்; இந்திரன்' என்று உரைத்தலும் ஆம். குடமூக்கு - குடந்தை; கும்பகோணம்; அதன்கண் உள்ளதொரு தலம், கீழ்க்கோட்டம். "ஓர் வேதியன்" என்றது மார்க்கண்டேயரை. நெடுமூக்கின் - தும்பிக்கையை யுடைய. நீக்கப்பட்டாரை, "கொண்டார்" என்றது, இல்பொருளையும், 'பொருள்' என வழங்கல்போல, எதிர்மறைவகையால் உடைமையாதல் அருளிய பான்மை வழக்கு. 'இடைமருதும் இடமாக்கிப் பண்டே கொண்டார்' என இயையும். உம்மை, 'குடமூக்கிற் கீழ்க்கோட்டமே யன்றி' என, இறந்தது தழுவிற்று.

947. எச்சன் - வேள்வித் தெய்வம். பகன் - சூரியர்களில் ஒருவன். ஒருவன் - மற்றொருவன். மெச்சன் - தன்னை வியந்தவன்; செருக்குக் கொண்டவன்; 'மெச்சனாகிய வியாத்திரன்'

Koviloor Digital Library

948 சடையொன்றிற் கங்கையையுந் தரித்துக் கொண்டார்
சாமத்தின் இசைவீணை தடவிக் கொண்டார்
உடையொன்றிற் புள்ளியுழைத் தோலுங் கொண்டார்
உள்குவார் உள்ளத்தை ஒருக்கிக் கொண்டார்
கடைமுன்றிற் பலிகொண்டார் கனலுங் கொண்டார்
காபால வேடங் கருதிக் கொண்டார்
விடைவென்றிக் கொடியதனில் மேவக் கொண்டார்
வெந்துயரந் தீர்த்தென்னை யாட்கொண் டாரே.

என்க. 'யாத்திரிகன்' என்பது. 'யாத்திரன்' எனத் திரிந்து நின்றது. 'யாத்திரிகன்' என்பது, 'வழிச்செல்வோன்' எனப் பொருள்தருமாகலின், 'வியாத்திரிகன், என்பது. 'மாறான (வழி யல்லாத) வழியிற் செல்பவன்' எனப் பொருள் தந்து, தக்கனைக் குறித்தது. 'வியாத்திரன் - தொழில் செய்வோன்' என்பது. தமிழ்ப் பேரகராதி. "வெஞ்சின வேள்வி வியாத்திரனார்தலை - துஞ்சின வாபாடி உந்தீபற" (திருவா. திருவுந்தி.10) என் றருளியது காண்க. 'அவன் தலையை வேறுக் கொண்டார்' என்றது. யாட்டின் தலையாகச் செய்தமையை. விறல் - வெற்றி. அங்கி-அக்கினிதேவன். 'தக்கன் ஏவலால் இயமன் வேள்வியைக் காத்து நின்றான்' என்பதும், 'அவன் கால் முரிக்கப்பட்டான்' என்பதும் இங்கு அறியப்படுகின்றன. 'வேள்வி காத்து' என்பது பாடம் அன்றென்க. உச்ச நமன் - வெற்றியில் மிக்க இயமன். 'சந்திரனை உதைத்தார்' எனச் சீர்கள் வேறுபட வந்தன. அச்சம் எழ - (தீநெறியில் செல்வோர் யாவர்க்கும்) அச்சம் உண்டாதற் பொருட்டு. 'வந்துகொண்டு, பேசிக் கொண்டு' என்பனபோல, "அழித்துக்கொண்டு" என்றதில், 'கொண்டு' என்பது துணைவினை. 'இவ்வாறு அழித்து' என இயைவித்துரைக்க. "அருளும் செய்தார்" என்பது உணர்த்துதலே ஈண்டுத் திருவுள்ளம் என்க. "அருளும்" என்னும் உம்மை, சிறப்பும்மை.

948. கங்கை சிவபிரானது சடைகள் பலவற்றில் ஒரு சடைக்கே போதியதாகாது புல் நுனிமேல் நீர்போல் ஆயிற்று என்ப ஆகலின், "சடை ஒன்றில் கங்கையையும் தரித்துக் கொண்டார்" என்றருளினர். உம்மை, சிறப்பு. 'வீணையைத் தடவிச் சாமத்தின் இசையைக் கொண்டார்' என்க. சாமம் - சாம வேதம். உழை - மான். "உடை" என்றது அதன்

Koviloor Digital Library

949 குராமலரோ டராமதியஞ் சடைமேற் கோண்டார்
குடமுழாநந் தீசனைவா சகனுக் கோண்டார்
சிராமலைதஞ் சேர்விடமாத் திருந்தக் கோண்டார்
தேன்றல்நெடுந்தேரோனைப்போன்றக்கோண்டார்
பராபரனேன் பதுதமது பேராக் கோண்டார்
பருப்பதங் கைக்கோண்டார் பயங்கள் பண்ணி
இராவணனேன் றவனைப்பேர் இயம்பக் கோண்டார்
இடருறு நோய் தீர்த்தேன்னை யாட்கோண் டாரே.

திருச்சிற்றம்பலம்

தன்மையை. அதனால், '' உடை ஒன்றில் '' என்றதற்கு, 'உடை என்னும் ஒரு தன்மையில்' என உரைக்க. தோலும் கொண் டார் - தோலை ஏற்றுக்கொண்டார், இவ்வும்மை, இழிவு சிறப்பு. உள்குவார் - நினைப்பார். ஒருக்கிக் கொண்டார் - தம்மிடத்து ஒருங்கிநிற்கும்படி செய்து கவர்ந்து கொண்டார். '' கடை முன்றில் '' என்பது, 'கடைக்கண் முன்றிற்கண்' என ஏழாம் வேற்றுமைப் பன்மொழித்தொகை. '' கனலும் '' என்புழி, 'கையில்' என்பது, ஆற்றலாற் கொள்ளக்கிடந்தது. ''கனலும்'' என்னும் உம்மை, ஏந்துதல் கூடாமை குறித்துநின்ற உயர்வு சிறப்பு. காபால வேடம் - 'காபாலம்' என்னும் நடனக்கோலம். 'விடையை வென்றிக்கொடியதனில் மேவுமாறு கொண்டார்' என்க.

949. 'அராவும் மதியமும் என்க. '' நந்தீசனைக் குடாமுழா வாசகனுக் கொண்டார்'' என்க, வாசகன் - வாசிப்பவன். 'வாணன்' என்பவனேயன்றி நந்திதேவரும் குடாமுழா வாசித் தல் உண்டு என்க. இனி. ''வாசகன்'' என்றது, மாணிக்க வாசகராகிய திருவாதவூரடிகளைக் குறிப்பதாக வைத்து, 'நந்தி தேவரையே அவ்வாறு அவதரிக்கச் செய்தார்' எனக்கொள் வாரும் உளர். சிராமலை - திருச்சிராப்பள்ளி மலை. தென்றல் தேரான் - மன்மதன். பொன்ற - அழிய; 'பொன்றச் சினத்தைக் கொண்டார்' என்க. பராபரன் (பரன் அபரன்) - மேலவனும், கீழவனும் ஆயினவன்; எல்லாவற்றையும் தன்னுள் அடங்கக் கொண்டவன்; '' மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க '' (திருவா. திருவண். 50) என்றருளியது காண்க. பருப்பதம், மேருமலை; 'அதனைக்கையில் வில்லாக்கொண்டார்' என்க. இனி,

Koviloor Digital Library

' திருப்பருப்பதம் ' என்னும் தலத்தை இடமாகக் கொண்டார் ' என்று உரைத்தலுமாம். பயங்கள் - அச்சங்கள். உறுப்புக் குறைதலும், உயிர் நீங்குதலும்போல்பவைபற்றி அச்சம் பலவாய்த் தோன்றினமையின், '' பயங்கள் '' எனப் பன்மையாக அருளினார். '' இராவணன் என்று '' என முன்னர் வந்தமையின், ''அவனை'' என்றது, இராவணனைச்சுட்டுதல் பொருந்துமாறறிக. ' பயங்கள் பண்ணி, இராவணன் என்று பேர் இயம்ப அவனைக் கொண்டார் ' என்க. '' கொண்டார் '' என்றது, ' ஏற்றுக்கொண்டார் ' என்றபடி ; பின்னர் வாள் முதலியன கொடுத்து அருள் புரிந்தமையின், '' கொண்டார் '' என்று அருளினார்.

போமா துணிந்து நீரங்குப் போதப் போதா வவ்வமணர்
தீமா யையினை யானேபோய்ச் சிதைத்து வருகின்றே னென்ன
வாமா றெல்லா முரைத்தவரை மறுக்க மாட்டா தரசிருப்பத்
தாமா தரவாற் றமிழ்நாட்டிற் போனார் ஞானத் தலைவனார். 289

வேணு புரக்கோ னெழுந்தருள விடைகொண் டிருந்த வாகீசர்
பூணு மன்பான் மறைக்காட்டிற்புனிதர் தம்மைப் போற்றிசைத்துப்
பேணி யிருந்தங் குறையுநாட் பெயர்வார், வீழிமிழலையமர்
தாணு வின்றன் செய்யகழல் மீண்டுஞ் சார நினைக்கின்றார். 290

சோலைமறைக்காட்டமர்ந்தருளும்சோதியருள்பெற்றகன்றுபோய்
வேலை விடமுண் டவர்வீழி மிழலை மீண்டுஞ் செல்வ னென
ஞால நிகழ்ந்த நாகைக்கா ரோணம் பிறவும் தாம்பணிந்து
சாலு மொழிவண் டமிழ்பாடித் தலைவர் மிழலை வந்தடைந்தார்.

வீழி மிழலை தனைப்பணிந்து வேத முதல்வர் தாமிருப்ப
ஆழி வலமேந் தியவரியா லாகா சத்தி னின்றிழிந்த
வாழி மலர்ந்த கோயிறனின்மன் னும்பொருளைப்போற்றிசைத்துத்
தாழு நாளிற் பிறபதியும் பணியுங் காத றலைநிற்பார். 292

பூவிற் பொலியும் புனற்பொன்னிக் கரைபோய்ப் பணிவார் பொற்பமைந்த
ஆவுக் கருளு மாவடுதண் டுறையார் பாத மணைந்திறைஞ்சி
நாவுக் கரசர் ஞானபோ னகர்க்குச் செம்பொ னுயிரமும்
பாவுக் களித்த திறம்போற்றிப் போந்து பிறவும் பணிகின்றார்.

—அப்பர் புராணம்.

Koviloor Digital Library

97. திருவினாத் திருத்தாண்டகம்

திருப்பதிக வரலாறு

இத்திருப்பதிக வரலாற்றினை 70-ஆம் திருப்பதிக வரலாற்றிற் காண்க.

திருச்சிற்றம்பலம்

950 அண்டங் கடந்த சுவடு முண்டோ
அனலங்கை யேந்திய ஆட லுண்டோ
பண்டை யெழுவர் படியு முண்டோ
பாரிடங்கள் பலசூழப் போந்த துண்டோ
கண்ட மிறையே கறுத்த துண்டோ
கண்ணின்மேற் கண்ணொன் றுடைய துண்டோ
தொண்டர்கள் சூழத் தொடர்ச்சி யுண்டோ
சொல்லீரெம் பிரானூரைக் கண்ட வாறே. 1

இத்திருப்பதிகம், இறைவன் வெளிநிற்கக் கண்ட அடியவரை நோக்கி, அவ்விறைவனது அடையாளங்கள் பலவற்றையும் பற்றி வினவுதலாக அருளிச்செய்யப்பட்டமையின், 'திருவினாத் திருத்தாண்டகம்' என்னும் பெயருடையது. இதனை, 'வினாவிடைத் திருத்தாண்டகம்' என்பாரும் உளர்.

'அறியான் வினாவும், ஐய வினாவும், அறிபொருள் வினாவும்' என்னும் மூவகை வினாவுள் இஃது அறிபொருள் வினா. 'அறிவொப்புக் காண்டலும், அவனறிவு தான்கோடலும், மெய்யவற்குக் காட்டலும்' என்னும் அதன்வகை மூன்றனுள், இஃது, அறிவொப்புக் காண்டல் என்க.

950. சுவடு-நடந்து சென்ற அடையாளம்; அஃது, இங்கு, 'அறிகுறி' என்னும் அளவாய் நின்று, அதனையுடைய, அயன் மால் தேட நீண்ட ஒளி வடிவைக் குறித்தது. "ஏந்திய ஆடல்" என வினைமுதலின் தொழில், வினைமேல் ஏற்றப்பட்டது. பண்டை எழுவர், 'அகத்தியர், புலத்தியர், அங்கிரா, கவுதமர், வசிட்டர், காசிபர், மார்க்கண்டேயர்' என்னும் முனிவர். படி - உருவம்; 'கண்ணாற் கண்டதுண்டோ' என வினவுவார், 'உருவம்' என்றார். 'பணியும் உண்டோ' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும்.

Koviloor Digital Library

951 எரிகின்ற இளஞாயி றன்ன மேனி
யிலங்கிழையோர்பாலுண்டோவெள்ளேறுண்டோ
விரிகின்ற பொறியரவத் தழலு முண்டோ
வேழத்தி னுரியுண்டோ வெண்ணூ லுண்டோ
வரிநின்ற பொறியரவச் சடையு முண்டோ
அச்சடைமேல் இளமதியம் வைத்த துண்டோ
சொரிகின்ற புனலுண்டோ சூலம் உண்டோ
சொல்லீரெம் பிரானாரைக் கண்ட வாறே. 2

952 நிலாமாலை செஞ்சடைமேல் வைத்த துண்டோ
நெற்றிமேற் கண்ணுண்டோ நீறு சாந்தோ
புலால்நாறு வெள்ளெலும்பு பூண்ட துண்டோ
பூதந்தற் சூழ்ந்தனவோ போரே றுண்டோ
கலாமாலை வேற்கண்ணாள் பாகத் துண்டோ
கார்க்கொன்றை மாலை கலந்த துண்டோ
சுலாமாலை யாடரவந் தோள்மே லுண்டோ
சொல்லீரெம் பிரானாரைக் கண்ட வாறே. 3

'போந்தது' என்றது, தொழிலை உணர்த்திய பெயர். இறையே-சிறிதே. சூழ - சுற்றிலும். தொடர்ச்சி - தொடர்தல். 'சூழ்-அத்தொடர்ச்சி' எனப் பிரித்து உரைத்தலும் ஆம்.

951. "எரிகின்ற" என்றது, 'நெருப்புப்போல ஒளி விடுகின்ற' என்னும் பொருளது. 'மேனியின் ஓர்பால் இலங்கிழை உண்டோ' என மாறிக் கூட்டுக. இலங்கிழை - விளங்குகின்ற அணியினை உடையாள்; உமாதேவி. 'உண்டு' என்பது, அஃறிணை ஒருமைகுறித்து வருதலேயன்றி, இடையில் தோன்றுது, பொருளோடு உடனுளதாய உண்மைத் தன்மை குறிக்கும் வழி, இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் வருமாதலின், "இலங்கிழை உண்டோ" என்றருளினார். விரிகின்ற - பரவுகின்ற. பொறி - தீப்பொறி. அரவம் - ஒலி. தழல் - நெருப்பு. நெருப்பை, 'குரைஅழல்' என்றலும் வழக்காதலின், "அரவத் தழல்" என்று அருளினார். வரி - கீற்று. சொரிகின்ற - ஒழுகும் தன்மை வாய்ந்த. புனல் - நீர்.

952. நிலா மாலை - பிறைக் கண்ணி. சாந்து - சந்தனம்; 'நீறுதான் சாந்தோ' என்க. கலா மாலைக்கண் - போர் செய்யும்

Koviloor Digital Library

953 பண்ணார்ந்த வீணை பயின்ற துண்டோ
பாரிடங்கள் பலசூழப் போந்த துண்டோ
உண்ணா வருநஞ்ச முண்ட துண்டோ
ஊழித்தீ யன்ன ஒளிதா னுண்டோ
கண்ணார் கழல்காலற் செற்ற துண்டோ
காமனையுங் கண்ணழலாற் காய்ந்த துண்டோ
எண்ணார் திரிபுரங்க ளெய்த துண்டோ
எவ்வகையெம் பிரானாரைக் கண்ட வாறே. 4

954 நீறுடைய திருமேனி பாக முண்டோ
நெற்றிமே லொற்றைக்கண் முற்று முண்டோ
கூறுடைய கொடுமழுவாள் கையி லுண்டோ
கொல்புலித்தோ லுடையுண்டோகொண்டவேடம்
ஆறுடைய சடையுண்டோ அரவ முண்டோ
அதனருகே பிறையுண்டோ அளவி லாத
ஏறுடைய கொடியுண்டோ இலய முண்டோ
எவ்வகையெம் பிரானாரைக் கண்ட வாறே. 5

தன்மை வாய்ந்த கண். சுலா மாலை அரவம் - வளைந்த மாலை போலும் பாம்பு.

953. கண் ஆர் கழல் - கண் நிறைதற்கு (மகிழ்வதற்கு) ஏதுவாகிய திருவடி. 'கழலானது காலனைச் செற்றது உண்டோ' என்க. அன்றி, 'கழலாற் செற்றது உண்டோ' என உருபு விரித்துரைப்பினுமாம். எண்ணார் - மதியாதவர்.

954. "பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும்" (திருவா. திருக்கோத்தும்பி. 18.) என்று அருளியவாறு, அம்மை பாகத்தில் சந்தனம் இருக்க, தன் பாகத்தில் மட்டுமே நீறுபூசி யிருத்தலின், "நீறுடைய திருமேனி பாகம் உண்டோ" என்று அருளினார். "பாகம்" என்புழி, 'பாகமாய்' என ஆக்கம் வருவித்து உரைக்க. "முற்றும்" என்பதற்கு 'முற்றுதலும் என உரைக்க. முற்றுதல் - முதிர்தல்; (நெருப்பு) மிகுதல். கூறு உடைய - கூறுபடுத்தலை உடைய. 'கூருடைய' என்பது, எதுகை நோக்கித் திரிந்தது என்றலும் ஆம். "கொண்ட வேடம்" என்பது, முன்னும் பின்னும் சென்று எல்லாவற்றோடும்

Koviloor Digital Library

955 பட்டமுந் தோடுமோர் பாகங் கண்டேன்
பார்திகழப் பலிதிரிந்து போதக் கண்டேன்
கோட்டிநின் றிலயங்க ளாடக் கண்டேன்
குழைகாதிற் பிறைசென்னி யிலங்கக் கண்டேன்
கட்டங்கக் கோடிதிண் டோள் ஆடக் கண்டேன்
கனமழுவாள் வலங்கையில் இலங்கக் கண்டேன்
சிட்டனைத் திருவால வாயிற் கண்டேன்
தேவனைக் கனவில்நான் கண்ட வாறே. 6

இயையும். "நெற்றிமேல் ஒற்றைக் கண் முற்றுதல்" முதலியன வேடத்திற்கு உறுப்புக்களாதலின், வேடம் முற்றுதல் உண்டோ. என்றது, சினைவினையை முதலொடு சார்த்தி முடித்ததாக உரைக்க. 'அளவிலாத கொடி' என இயையும். அளவிலாமை - ஒப்பாதல், உயர்வாதல் இல்லாமை. இலயம் - கூத்து.

955. "கனவில் நான் கண்டவாறே" என்றதனை, "கண்டேன்" என்றவற்றோடு முடித்து, 'நனவிலுங் கண்டேன்' எனவுரைக்க. பட்டம்-நெற்றிப் பட்டம். இதுவும், ஒருபாலே உள்ளது என்க. தோடு. இடக்காதில் மட்டும் உள்ளது. "பார்திகழ" என்றது, 'தனது செலவினால் நிலம் அழகுபெற' என்றதேயன்றி, 'அதன்கண் வாழ்வார் மெய்யுணர்வு பெற்று விளங்க' என்றதுமாம். "கொட்டி" என்றதனை, 'கொட்ட' எனத் திரிக்க; 'வாச்சியங்களைப் பூதகணங்கள் இயம்ப' என்பது பொருள். இலயங்கள் - பலவகைக் கூத்துக்கள். 'காதிற் குழையும் சென்னியிற் பிறையும் இலங்கக் கண்டேன்' என்க. ஏற்றுக் கொடியே யன்றி, கட்டங்க (மழு)க் கொடியும் சிவபிரானுக்கு உண்டென்க. 'வலக் கை' என்பது மெலிந்து நின்றது- 'வலத்திற் கையில்' எனலுமாம். சிட்டன் - மேலானவன். "சிட்டனை" என்றது. 'அவனை' என்னும் சுட்டளவாய் நின்றது. 'இறைவனை நான் இவ்வாறு கண்டேன்; நீவிரும் இவ்வாறு கண்டதுண்டோ?' எனக் குறிப்பெச்சம் வருவித்து உரைக்க. அங்ஙனம் உரையாவிடில், இத் திருப்பதிகத்தோடு இயையுமாறில்லை. இனி, இத்திருப்பதிகத்தை 'வினாவிடைத் திருப்பதிகம்' என்பார், பிற அடியார்கள், 'பட்டமுந் தோடும் ஓர் பாகம் கண்டது உண்டோ' என்பன முதலாக வினாவும் வினாவிற்கு இறுத்த விடையாகக் கொள்வர். இனிவரும் திருத்தாண்டகங்களுட் சிலவும் அன்ன.

Koviloor Digital Library

956 அலைத்தோடு புனற்கங்கை சடையிற் கண்டேன்
அலர்கொன்றைத் தாரணிந்த வாறு கண்டேன்
பலிக்கோடித் திரிவார்கைப் பாம்பு கண்டேன்
பழனம் புகுவாரைப் பகலே கண்டேன்
கலிக்கச்சி மேற்றளியே யிருக்கக் கண்டேன்
கறைமிடறுங் கண்டேன் கனலுங் கண்டேன்
வலித்துடுத்த மான்தோல் அரையிற் கண்டேன்
மறைவல்ல மாதவனைக் கண்ட வாறே. 7

957 நீறேறு திருமேனி நிகழக் கண்டேன்
நீள்சடைமேல் நிறைகங்கை யேறக் கண்டேன்
கூறேறு கொடுமழுவாள் கொள்ளக் கண்டேன்
கொடுகொட்டி கையலகு கையிற் கண்டேன்
ஆறேறு சென்னியணி மதியுங் கண்டேன்
அடியார்கட் காரமுத மாகக் கண்டேன்
ஏறேறி யிங்நேறியே போதக் கண்டேன்
இவ்வகையெம் பெருமானைக் கண்டவாறே. 8

956. அலைத்து ஓடு - அலைவீசி ஓடும் தன்மையை உடைய. "திரிவார் கை" என, உடம்பொடு புணர்த்ததனால், 'திரிதல் கண்டேன்' என்பதும் கொள்ளப்படும். "மேற்றளியே" என்புழி, 'மேற்றளிக்கண்ணே' என உருபு விரிக்க. கனல் கையில் உளதாதல் வெளிப்படை. வலித்து - இறுக்கி. மாதவன் - பெரிய தவக்கோலத்தை உடையவன். '(நான்) கண்ட வாறு இது; இவ்வாறு நீவிரும் கண்டதுண்டோ?' என்க.

957. நிகழ்தல் - உலாவுதல், "கூறேறும்" என்பதற்கு மேல், (956) "கூறுடைய" என்றதற்கு உரைத்தவாறே உரைக்க. அலகு - ஒருவகை வாள்; அவ்வகையில் சிறிதாயதனை, "கையலகு" என்று அருளினர். 'சென்னியின்கண் அணிந்த மதி' என்க. "ஆக" என்னும், செயவெனெச்சம் தொழிற் பெயர்ப் பொருள்தந்து நின்றது. "இந்நெறி" என்றது, நாயனாரும் பிற அடியவரும் உள்ள இடத்தை.

Koviloor Digital Library

958 விரையுண்ட வெண்ணீறு தானு முண்டு
வெண்டலைகை யுண்டோருகை வீணை யுண்டு
சுரையுண்டு சூடும் பிறையோன் றுண்டு
சூலமுந் தண்டுஞ் சுமந்த துண்டு
அரையுண்ட கோவண ஆடை யுண்டு
வலிக்கோலுந் தோலு மழகா வுண்டு
இரையுண் டறியாத பாம்பு முண்டு
இமையோர் பெருமா னிலாத தென்னே. 9

959 மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஒரூர னல்லன்ஒ ருவம னில்லி

958. விரை உண்ட - வாசனையை ஏற்ற; இனி, 'வாசனைப் பொருளாம் தன்மையைக் கொண்ட' என்றுமாம். சுரை - உறை. "சுரை உண்டு" என்றதில் உள்ள, 'உண்டு' என்பதனை, 'உண்ண' எனத் திரிக்க. 'சடைமுடியானது சுரைபோல உள்வாங்கும்படி சூடும் பிறை' என்றபடி. தண்டு - தண்டாயுதம்; சிறப்புப் படைக்கலங்கள் சூலமும் மழுவும் என்பதனால் ஏனைய படைக்கலங்கள் சிவபிரானுக்கு உரியவல்ல என்பது, பொருளன்று என்க. கோவண ஆடை-கீழ்வாங்கி உடுத்தப்படும் உடை. வலிக்கோல் - ஊன்றுகோல்; இது, பிரம்பும் மாத்திரைக் கோலும் ஆகும். இறைவனுக்கு அணியாய பாம்புகள். பசி, பிணி, மூப்பு முதலியன இன்றி, என்றும் ஒருபெற்றியனவாய் இருத்தலின், "இரை உண்டு அறியாத பாம்பு" என்று அருளினார். 'பசியோடிருக்கும் பாம்பு' என, நகைச்சுவையும் தோற்றியது. "இமையோர் பெருமான் இலாதது என்" என்றது, தேற்றம் பற்றி. 'உளன்' என்றதனை, எதிர்மறை முகத்தால் அருளிச்செய்தவாறு. 'வெண்ணீறு முதலியன உண்டு; அவற்றை நீவிர் கண்டது உண்டோ?' என்க.

959. "கண்ணாளும் தானும்" என்றதன் பின் "ஆகி" என்பது வருவித்து, அதனை, "மயானத்தான், வார்சடையான்" என்னும் வினைகுறிப்பு முற்றுக்களோடு முடிக்க. கச்சி மயானம், கச்சி ஏகம்பத்திற்கு அணித்தாய் உள்ள ஒரு வைப்புத்தலம். வார்சடை - நீண்டசடை. என்னின் - என்று சொல்வோம் எனில்.

Koviloor Digital Library

அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணுகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணுதே.

960 பொன்னுெத்த மேனிமேற் பொடியுங் கண்டேன்
புலித்தோ லுடைகண்டேன் புணரத் தன்மேல்
மின்னுெத்த நுண்ணிடையாள் பாகங் கண்டேன்
மிளிர்வதொரு பாம்பும் அரைமேற் கண்டேன்

அல்லான் - அத்தன்மையன் அல்லன்; என்றது, அதுவே முற்றிலும் அவனுடைய இயல்பு அன்று; அஃது அவனது பொதுவியல்பேஎன்றபடி. 'மற்று, அவனுடைய உண்மை இயல்பு யாது எனின்' என்பது எஞ்சி நின்றது. ஒப்பு உடையன் அல்லன் - இவற்றைத் தன்பொருட்டாக ஏற்றுடையவன் அல்லன். ஒருவன் அல்லன் - உலகப் பொருள்களில் ஒருவனல்லன். ஓர் ஊரன் அல்லன் - ஓர் இடத்தில் வரையறைப்பட்டு நிற்பவன் அல்லன். ஓர் உவமன் இல்லி - தனக்கு எவ்வாற்ருனும் யாதொரு பொருளும் உவமையாதல் இல்லாதவன். இங்கு, 'அதனுல்' என்பது வருவிக்க. "அப்படி" முதலிய மூன்றும், "கச்சி மயானத்தான், வார் சடையான்" என்ருற்போலும் இயல்புகளைக் குறித்தன; அவரவரும், தாம் தாம், அவன் திருவருளையே கண்ணுகப் பெற்றுக் காணின் அவைகளைக் காணலாமே யல்லது, மற்றைய பொருள்கள்போல, பிறரொருவர், இன்ன வகையுட் பட்டவன், இன்ன நிறத்தை உடையவன், இன்ன வடிவம் உடையவன் என்று, சொல்லோவியமாகவோ எழுத்தோவிய மாகவோ எழுதிக்காட்டல் இயலாது' என்க. "இறைவன்" என்புழித் தொகுக்கப்பட்ட இரண்டாம் வேற்றுமையை விரித்து, "என்று" என்றதன் பின்னர்க் கூட்டியுரைக்க.

எனவே, 'மேலைத் திருத்தாண்டகங்களினும், வருந் திருந் தாண்டகத்தினும் பலவாற்ருனும் வினுவிய இயல்புகள் யாவும் அவன் அருள் பெற்ருர்க்கன்றிக் காணவாரா' என்பதனை அறிவுறுக்கும் முகத்தால், அப்பேறு வாய்க்கப்பெற்ற தாமும், பிற அடியவர்களும் ஆகியோரது நிலையை நினைந்து மகிழ்ந் தருளியவாருயிற்று.

960. பொடி - திருவெண்ணீறு. 'தன்மேல் புணர' என மாற்றி, 'தன்னிடத்துப் பொருந்த என உரைக்க. 'பாகத்தில்

Koviloor Digital Library

அன்னத்தே ரூர்ந்த அரக்கன் தன்னை
அலற அடர்த்திட்ட அடியுங் கண்டேன்
சின்ன மலர்க்கொன்றைக் கண்ணி கண்டேன்
சிவனைநான் சிந்தையுட் கண்ட வாறே. 11

திருச்சிற்றம்பலம்

நுண்ணிடையாள் பொருந்தக் கண்டேன்' என இயையும். "பாம்பும்" என்னும் உம்மை, எச்சம். அன்னத்தேர் - அன்னம் போலும் வெண்மையாகிய விமானம்; புட்பக விமானம். சின்ன மலர்க் கொன்றை - அடையாளப் பூவாகிய கொன்றை. 'சிவனை நான் சிந்தையுட் கண்டவாறே கண்ணிலும் கண்டேன்; நீவிரும் அவ்வாறு கண்டது உண்டோ?' என்க.

செய்ய சடையார் பழையாறை யெய்த வதனிற் செல்பொழுதின்
மைய லமணர் மறைத்தவட தளியின் மன்னுஞ் சிவனரைக்
கைகள் கூப்பித் தொழுதருளக் கண்ட வாற்ற லமணர்கடம்
பொய்கொள்விமானமெனக்கேட்டுப்பொருதவுள்ளமிகப்புழுங்கி.

அந்த விமான ந் தனக்கருகா வாங்கோ ரிடத்தின் பாங்கெய்திக்
கந்த மலருங் கடிக்கொன்றை முடியார் செய்ய கழலுன்னி
அந்த வமணர் வஞ்சனையான் மறைத்த வஞ்ச மொழித்தருளிப்
பந்தங்கொண்டவமணர்திறம்பாற்றுமென்றுபணிந்திருப்பார்.

வண்ணங் கண்டு நானும்மை வணங்கி யன்றிப் போகேனென்
றெண்ண முடிக்கும் வாகீச ரிருந்தா ரமுது செய்யாதே
அண்ண லாரு மதுவுணர்ந்தங் கரசு தம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக் கனவி லருளிச் செய்கின்ருர். 296

அறிவி லமணர் நமைமறைப்ப விருந்தோ மென்றங் கடையாளக்
குறிக ளருளிச் செய்தருளி நம்மை யரசு கும்பிடுவான்
நெறியி லமணர் தமையழித்து நீக்கிப் போக்கென் றருள்புரியச்
செறிவி லறிவுற் றெழுந்தவனுஞ் செங்கை தலைமேற்
குவித்திறைஞ்சி. 297

—அப்பர் புராணம்.

Koviloor Digital Library

98. மறுமாற்றத் திருத்தாண்டகம்

திருப்பதிக வரலாறு

பெருமான் தூண்டுதவ விளக்கனையாராகிய திலகவதியார் வேண்டுகோளின் வண்ணம், சமணமதத்தைப் பற்றிநின்ற நாயனுருக்குச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்ட செய்தியறிந்த சமணர் தம் சமயம் வீழ்ந்தது என மருண்டனர். இத்திறம் அறிந்திடின் வேந்தனும் வெகுண்டு சைவனுகி நம் விருத்தியும் தவிர்க்கும் என்றஞ்சி அரசனிடம் சென்று, 'தருமசேனர் பிணியுற்ருராய்ச் சடையானுக்காளாய் நின்சமயம் அழித்தார், அவரை அலைத்தல்வேண்டும்' என்றனர். பல்லவனும் மந்திரிகளை நோக்கி 'பொருள் கொண்டு விடாது தருமசேனரைக் கொண்டு வாரும்' எனப்புகன்ருன். அரசன் பணியைச் சிரமேற்கொண்ட அமைச்சர் அதிகைப்பதி சென்று அரசன் ஆணையைத் தெரிவித்தபொழுது அதற்கு மறுமொழியாகப் பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக், பு. 93.)

திருச்சிற்றம்பலம்

961 நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னேமே. 1

இத் திருப்பதிகத்தினுல், சிவபிரானுக்கு அடியவராயினுரது பெருமை இனிது விளங்கும்.

961. "நாம்" என்றது, எடுத்தலோசையால், 'சிவபெருமானுக்குத் தமராகிய நாம்' எனப் பொருள் தந்தது. "ஆர்க்கும்" என்றதும், அவ்வாறு, 'இவ்வுலகில் எத்துணைப் பெரியார்க்கும்' எனப் பொருள்தந்தது. குடி-அடிமை. அச்சக் கிளவிக்கு ஐந்தும்

Koviloor Digital Library

962 அகலிடமே இடமாக ஊர்கள் தோறும்
அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்
புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்போய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையான் ஏன்று கோண்டான்
இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்
துகிலுடுத்துப் போன்பூண்டு திரிவார் சோல்லும்
சோற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே. 2

இரண்டும் வருமாகலின் (தொல் - சொல். 100.), "நமனை அஞ்சோம்" என, இரண்டாம் வேற்றுமை வந்தது. 'நரகத்தில் இடப்படோம்' எனவும் பாடம் ஓதுப. நடலை - பொய். யாதானும் ஒன்றுன் அச்சம் வரப்பெறுவோரே பொய்யுடையராவராகலின், அச்சம் இல்லாதார்க்குப் பொய்யும் இல்லையாயிற்று. ஏமாப்போம் - களிப்புற்றிருப்போம். பிணி அறியோம் - 'பிணியாவது இது' என அறியோம். பணிவோம் அல்லோம் - யாரிடத்தும் சென்று யாதானும் ஒன்று வேண்டி அவரை வணங்குவோம் அல்லோம். "எந்நாளும்" என்றதனை, "இன்பமே" என்றதற்கு முன்னும் கூட்டுக "இன்பமே", என்றதன்பின், 'உள்ளது' என்பது எஞ்சிநின்றது. "இன்பமே" என்ற பிரிநிலை ஏகாரத்தை, "துன்பம்" என்றதனோடுங் கூட்டுக. "துன்பம் இல்லை" என்றதன்பின், 'என்னை?' என்னும் வினவை வருவிக்க. "தாம்" என்றது, ஒருமைப் பன்மை மயக்கம். 'தன்மையன்' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. 'ஓர் காதிற் சங்கவெண் குழைக் கோமான்' என மாற்றிக்கொள்க. 'சங்கவெண் குழையை உடைய ஓர் காதினை உடைய கோமான்' என, கிடந்தவாறே உரைத்தலும் ஆம்- 'அவன் சேவடி இணை' என, சுட்டு வருவித்துரைக்க. கொய்மலர் - பறித்தற்கு உரிய மலர்; என்றது அப்பொழுது அலர்ந்து பொலிவு பெற்றிருப்பதனை. குறுகினோம் - அடைந்தோம்.

962. அகலிடம் - அகன்ற இடத்தை உடையது; பூமி. 'அது முழுதும் எமக்கு இடமாய் நிற்க' என்க. 'அகலிடமே இடமாகும்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். அட்டு உண்பார். இல்லத்தில் சமைத்து உண்பவர்; இல்வாழ்வார்; இவரது தலையாய அறம் விருந்தோம்பலும், ஈகையும் ஆதலின், 'அவர் ஐயம் விலக்கார்' என்று அருளினர். ஐயம் - பிச்சை. இதனால்,

Koviloor Digital Library

963 வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்
மாதேவா மாதேவா என்று வாழ்த்தி
நீராண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம்
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாய்க் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே. 3

'ஊர்கள் தோறும் இல்லத்தார் இடும் ஐயமே உணவு' என்றதா யிற்று. அம்பலங்கள் - பொது இடங்கள். 'அம்பலங்கள் புகலிட மாம்' என்க. புகலிடம் - தங்கும் இடங்கள். 'பூமிதேவி யாம் தன்னுடன் கிடந்தால் எம்மைப் புரட்டாள் ; இது பொய்யன்று; மெய்யே' என்க. எனவே, 'அரசரோடு எமக்கு யாதும் தொடர்பில்லை' என்றபடி. இகலுடைய விடை - போர்விடை. துகில் - சிறந்த உடை. " திரிவார் " என்றது, அரசரை; அவரை அங்ஙனம் அருளியது, தமது பெருமையும் அவரது சிறுமையும் தோன்ற. துரிசு - குற்றம். " துரிசற்றோம் " என்றதனை 'விடை யுடையான் ஏன்று கொண்டான்' என்றதன் பின்னர்க் கூட்டுக.

963. " மனையில் சேரோம் " என்றது, 'மகளிரொடு வாழும் மனைவாழ்க்கையின் நீங்கினேம்' என்றபடி; 'மனை வாழ்க்கை உடையவர் அன்றோ அரசர்க்கு அடங்கியவர்' என்பது திருக்குறிப்பு. " புரோதாயம் " என்றது, 'பூர்வோ தயம்' என்பதன் திரிபு; 'பகலவன் தோன்றுதற்கு முன்னே' என்பது பொருள் ; ஆண்ட புரோதாயம் - துயிலுணருங்கால மாகப் பயின்ற விடியற்காலத்து; 'நீர் ஆடப் பெற்றோம்' என இயையும். 'பெற்றோம்' என்றருளியன பலவும், அவை, தாம் சமணரிடை இருந்த காலத்து இல்லாதிருந்தமையைக் குறித்தன. " கோலமே " என்னும் பிரிநிலை ஏகாரம், 'உடை இல்லாமை, உறிதூக்குதல், பாய் இடுக்குதல்' முதலியவற்றைத் தவிர்ந்தமை விளக்கிற்று. இறைவனை நினையுங்கால் உருகாதிருந்த மனத்தை, 'கல்மனம்' என்றார். 'அது, மழைபோலக் கண்ணீர் சோருமாறு நன்மனமாய்க் கரையப் பெற்றோம்' என்று அருளினார். இங்கு, 'ஆகலான்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. கார் ஆண்ட- மேகம் பொழிந்த. பகடு - யானை. பணிகேட்க - ஆணையின்கண் நிற்க. " பற்றற்றோம் " என்றதனை, முதற்கண் வைத்துரைக்க.

Koviloor Digital Library

964 உறவாவார் உருத்திரபல் கணத்தி னோர்கள்
உடுப்பனகோ வணத்தோடுகீ ளுளவா மன்றே
சேறுவாருஞ் சேறமாட்டார் தீமை தானும்
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யச்சொல்ல வல்லோம் நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே.

965 என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே.

964. உருத்திர பல்கணத்தார் - சிவவேடத்தையுடைய சிவனடியார்கள். செறுவார் - வெகுள்வார்; பகைவர்; செற மாட்டார்-வெகுளமாட்டார். தீமை, தீமையாய் வாராமை மேலும், அதுதானே நன்மையாய்ச் சிறந்து நிற்கும் என்க. நறவு ஆர் - தேன் நிறைந்த. பொன் இதழி - பொன்போலும் கொன்றை. ‘ நமச்சிவாயஞ் சொல்ல ’ எனவும் பாடம் ஓதுவர். ‘நாவார் சொல்ல ’ என இயையும். சுறவு - மீன்; மீன் பொருந்திய கொடியை உடையவன், மன்மதன். சுடர் நயனம் - அக்கினி நேத்திரம். “ சோதியையே ” என்னும் தேற்றேகாரம், அவன் தொடர்தற்கு அரியனாதலை விளக்கிநின்றது. உறவும், உடுப் பனவும் வேறாய் உலகியலின் நீங்கினமையின் பகைவர் பகைமை யொழிதலும், நமச்சிவாயச் சொல்லிச் சுடர் நயனச் சோதியைத் தொடர்வுற்றதனால், தீமை நன்மையாதலும் பிறப்பிற் செல்லா மையும் உளவாயின என்க.

965. இடைதல் - பின்வாங்குதல். எதிராவார் - இணையா வார்; உம்மை, ‘ உயர்வாவாரும் இல்லை ’ என, எதிரது தழுவிற்று. இனி, ‘ எதிராக ஆரும் ’ இல்லை என்றலுமாம்.

Koviloor Digital Library

966 மூவுருவின் முதலுருவாய் இருநான் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்
தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்தும்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவமல்லோம் கடுமையோடு களவற் றேமே.

'சேர்வோம் அல்லோமாய்' என, எச்ச மாக்குக. அன்றே - அமணரை விட்டு நீங்கிய அன்றே. உறுபிணி - மிக்கநோய். செறல்-வருத்துதல். "பிணியார்" எனவும், "ஓடிப்போனர்" எனவும் உயர்திணையாக்கியருளியது, அதனது மாட்டாமை யாகிய இழிபுணர்த்தற்கு. பொன்றினர் - இறந்தவர். நண்ணிய புண்ணியம்-அடைந்த புண்ணியப் பயன். "சேரப்பெற்றேம், புண்ணியத்துளோம்" என்பவற்றை முதற்கண் வைத்து, 'அதனல்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

966. "மூவுருவின் முதல் உரு" என்றது, 'மூவுருவினுள் முதலாய உரு', 'மூவுருவிற்கும் முதலாய உரு' என இருவகை யாகவும் பொருள் கொள்ள நின்றது. இருநான்கான மூர்த்தி- எட்டுருவாய இறைவன். 'முப்பத்து மூவராய தேவர்கள்' என்க. 'நாவுடையாரே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத் தலாயிற்று. 'அன்றே' என்றது, தேற்றம் உணர்த்திற்று. அதன்பின், 'அதனல்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'சிறிது நிலத்தை ஆளும் நும் அரசனே யன்றி, நாவலந்தீவு முழுதிற்கும் தலைவராய் உள்ள அரசர் ஒருவர் தம் ஏவலரை, எம்மை அழைத்து வருமாறு ஏவி விடுத்தாராயினும், யாம் அவர் ஆணையின்வழி நிற்கும் கடமையுடையோம் அல்லோம்' என்றவாறு. "கடவம் அல்லோம்" என்றதன்பின். 'என்னை?' என்னும் வினச்சொல் வருவிக்க. கடுமை - கடிதாய செயல்; பிறரை நலிதல். 'கடுமையும் களவும் உடையாரே அரசன் ஆணைக்கு அஞ்சற்பாலர்' என்பது திருக்குறிப்பு.

Koviloor Digital Library

967 நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினொடு காற்ருகி நெடுவா னுகி
அற்பமொடு பெருமையுமாய் அருமை யாகி
அன்புடையார்க் கெளிமையதாய் அளக்கலாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமே பிழையற் ரேமே. 7

968 ஈசனையெவ் வுலகினுக்கும் இறைவன் தன்னை
இமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் ருனைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற
நேசனை நித்தலும் நினையப் பெற்ருேம்
நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லாம் மறந்தோ மன்றே
வந்தீரார் மன்னவனு வான்ரு ருரே. 8

967. நிற்பன-அசரம். நடப்பன - சரம். அற்பம் - சிறுமை; இது முதலிய மூன்று பண்புகளும் ஆகுபெயராய், அவற்றை உடைய பொருள்மேல் நின்றன. ‘அளக்கலாகாப் பரம்’ என இயையும். பரம் - மேலான பொருள். தத்பரம் - உயிருக்கு மேற்பட்டது. சதாசிவம் - சதா சிவதத்துவம். தானும்-தானே யாகியும்; யானும் - யானுகியும். இவை முறையே இறைவனது பொருட்டன்மையையும் கலப்பினையும்உணர்த்தி,இரட்டுறமொழி தலால், உடனுதலையும் உணர்த்தும். ‘ தன்மையனைப் பேசக்கட வோம்; அவனுல் முன்னமே பிழையற்ருேம்; பேயர் பேசுவன பேசுதுமோ ’ என்க. “ பேயர் ” என்றது, சிறந்த உணர்வு இல்லாமை பற்றி. “ பேசுவன ” என்றது, அரசனுக்கு வணங்கி நின்று, அவனுக்கு ஏற்பப் பேசுதலை.

968. ஈசன் - ஆள்பவன். ‘எவ்வுலகினுக்கும் ஈசன்’ என்க. இறைவன் - எங்கும் நிறைந்திருப்பவன். தேசன் - ஒளியுடையவன். ‘செம்மேனியில் வெண்ணீற்ருனை’ என்க. சிலம்பரையன் - மலையரசன். பொற்பாவை - அழகிய பாவை போல்பவள். நலம் செய்கின்ற - காதலிக்கின்ற. “நேசன்”

Koviloor Digital Library

௯௬௯ சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி
விடையுடையான் வேங்கை அதள்மேலாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மான்தோல் சார்ந்த
உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர்
உம்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோம் நாமே. ௯

